T. 2016

T. 2016
Acc. 11858

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

## உபயவேதாந்த க்ரந்தமாலை

# பெரியாழ்வார் திருமொழி.

ஸ்ரீ பரமஹம்ஸ பரிவ்ராஜக உபயவேதாந்தாசார்ய
(ஸ்ரீ கோழியாலம் ஸ்வாமி)
ஸ்ரீரங்கராமாநுஜ மஹாதேசிகன் திருவடியான

**ஸ்ரீ உத்தமூர், தி. வீரராகவாசார்யன்**

இயற்றிய

**ப்ரபந்தரக்ஷை**

என்னும் உரையுடன்

TRIPLICANE P.O., MADRAS
15 DEC 1954

ஸ்ரீ காஞ்சீபுரம் ஸ்ரீ வேங்கடேச்வர அச்சகத்தில்
அச்சிடப்பெற்றது.

விலை] 1953 [ரூ. 12

## திவ்யப்ரபந்த வெளியீட்டுக்காகத் தனியே சேர்ந்த

## ராஜபோஷகர்களும், போஷகர்களும்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | Sri | S. Parthasarathi Aiyangar, 105, Adiappa Naikan St., G. T. Madras. | 250 | 0 |
| 2 | ,, | R. Gopalaswamy Aiyangar, Advocate, 14, Vaidya Ramaiyar St., T. Nagar, Madras. | 250 | 0 |
| 3 | ,, | V. S. Sundaram Aiyangar, (Accountant General Retd.) 12, Prithvi Raj Road, New Delhi. | 100 | 0 |
| 4 | ,, | S. R. Srinivasacharya, Retd. Dy. Asst. Controller Ranganathàpuram St., Gandhi Road, Srirangam | 62 | 8 |
| 5 | ,, | V. R. Venugopalacharya, B.A., B.L., District Munsif (Cudaloor) | 50 | 0 |
| 6 | ,, | S. R. Tatacharya, Vakil Cuddaloor N. T. | 50 | 0 |
| 7 | ,, | T. R. Chakrapani Aiyangar, Advocate, Cuddaloor | 30 | 0 |
| 8 | ,, | C. R. Krishnamachariar, Advocate, Krishna Bhavan, Cuddaloor) | 25 | 0 |
| 9 | ,, | Venkatacharyar, Trazhandur (now at Tanjore) | 20 | 0 |
| 10 | ,, | N. Krishnaswami Aiyangar, Vakil, South St., Karur | 20 | 0 |

ஸ்ரீ:
ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன்திருவடிகளே சரணம்.

ஆஸ்திக மஹாசயர்களே !

**உபய வேதாந்த க்ரந்தமாலை** யென மகுடமிட்டு வடமொழியிலும் தென்மொழியிலும் மிகவும் அவசியமாயும் நீடூழிகாலம் வைத்துப் பாதுகாக்க வேண்டியவையுமான க்ரந்தங்களை அச்சிட்டுவருவதை அனைவரு மறிவர். **ஸ்ரீ. உ. வே. ஸ்ரீதேசிகதர்சந ரத்நதீபம் வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஸ்வாமி,** இந்தக் கைங்கர்யம் மிகவும் முக்கியமானதென்று தமது **முன்னுரையில்** விளங்க மொழிந்துள்ளது மட்டுமின்றி, தாமே தலைமை வஹித்து ஓர் உயர்ந்த மஹான்கள் கொண்ட கமிட்டியையும் நிறுவ வைத்துள்ளார். அந்தக் கமிட்டியின் திடமான முயற்சியினாலே இதுவரையில் பத்து உபநிஷத்துக்களும் விசிஷ்டாத்வைதபாஷ்யம் முதலானவைகளோடு நேர்த்தியாகவே நாகரிலிபியில் அச்சிடப்பெற்றன. உபய வேதாந்தத்திற் சேர்ந்த **திவ்யப்ரபந்த வெளியீடு** தமிழ்ப் பாஷையி லமைந்திருப்பதாலும், எளிய நடையி லியற்றப்பெற்ற உரையானதாலும் ஸ்ரீ தேசிக ஸம்ப்ரதாயாபிமானிகள், ஸ்திரீகள் உள்பட, தாங்களாகவே வாங்க முன்வருவார்களாகையாலே நம் முயற்சி யிராமலே நன்கு நடைபெறுமென்று அக்கமிட்டி நினைத்தது. இனி இதிலும் கமிட்டி ஊக்கம் வைக்குமென நினைக்கிறேன்.

இதுவரையில் பெரியாழ்வார் திருமொழி (5-ஸம்புடங்களில்) முழுதும் வெளியாயிற்று. உரை நன்கு அமைந்திருப்பதாகப் புகழும் பெரியார்களின் அமுத மொழிக்கு எனது நன்றி. சக்தியுமிருக்கும் ஆஸ்திக ப்ரபுக்கள் இது முக்கிய மென்பதைச் சற்று ஆராய்தல் முக்யமானது. அனேக சந்தாதாரர்களை யப்போதைக்கப்போது சேர்த்ததோடு, ராஜ போஷகர்களாயும், போஷகர்களாயும் சில மஹான்கள் சேர்ந்ததால் இவ்வளவு தூரம் அச்சாயிற்று. நான்காவது ஸம்புடம் அச்சிட ஸ்ரீ பரமஹம்ஸ பரிவ்ராஜக ஸ்ரீ கோழியாலம் ஸ்வாமி திருவடி **ஸ்ரீ. உ. வே. S. பார்த்தசாரதி ஐயங்கார்,** (105, ஆதியப்ப நாயகன் தெரு, ஜி. டி., மதராஸ்) ஸ்வாமி ரூ. 250 நன்கொடை யருளினதும், 5-வது ஸம்புடம் அச்சிட ஸ்ரீபரமஹம்ஸ பரிவ்ராஜக, ஸ்ரீ. தேரழுந்தூர் ஆண்டவன் திருவடி **ஸ்ரீ. உ. வே. ஆர். கோபாலஸ்வாமி ஐயங்கார்,** அட்வொகேட் (14, வைத்ய ராமய்யர் தெரு, டி. நகர், மதராஸ்) ஸ்வாமி ரூ. 250 நன்கொடையாக முன்னதாக அளித்து அச்சு நடக்கவேண்டு மென வருளியிருப்பதும் முக்கியமாக இங்கு யான் குறிப்பிடக் கூடியவை.

ஏறக்குறைய 500 ரூபாய் அளித்து இவ்வண்ணம் ஒவ்வொரு ஸம்புடமும் நடத்திவைக்க மஹான்கள் முன் வரவும், மற்றவர் ஒவ்வொரு ப்ரதியாவது வாங்கிக்கொள்ளவும் வேண்டுகிறேன்.

திருப்பாவை பதிப்பிக்கப்பெறுகிறது.

இங்ஙனம் ஸ்ரீ வைஷ்ணவதாஸன்,

**உத்தமூர் தி. வீரராகவாசாரியன்.**

வுள்ளனவென்றும், பொருளுக்குத் தக்கபடி அவற்றை இசையவும் விடவும் செய்யலா மென்றும் கருதுகின்றனர். ஆகவே அவற்றை விசேஷமாக ஆதரிக்காமலே சிற்சில விடங்களில் உரை செய்துள்ளேன். தமிழில் இலக்கண விலக்கியங்களில் போதுமான பயிற்சி யுள்ளவரே ப்ரபந்தத்திற்கு உரை செய்ய வல்லவரென்பது தெளிவான விஷயம். அப்படிப்பட்டவர் சரியாக உற்று நோக்கிப் பரிஷ்கரித்தபிறகாவது பதிப்பிக்கவேண்டுமென்பது இரண்டாவது கல்பம். இரண்டு படியுமின்றி அச்சிட்டால் அநேகம் பிழைகள் ஏற்படுவது ஸஹஜம். ஆயினும் பேசும் தமிழிலுங்கூட பதிப்பிக்கலாம். கூடிய வரையில் பொருட் பிழை யில்லாமலிருக்கவேண்டுமென்றே நினைத்துத் துணிந்து அச்சிடுகிறேன். ஸ்ரீமத்வேதமார்க்கேத்யாதிவிசேஷணங்களுக்கு உண்மை ஸ்தானமாய் மஹாநுபாவராய் விளங்கிவரும் ஒப்பிலியப்பன் ஸ்ரீ நவநீதம் கிருஷ்ணமாசார்யஸ்வாமியின் புதல்வராய், தமிழ் ஸமஸ்கிருதப் புலவராய், தேசிகதிவ்யபிரபந்தம் முதலியன பதிப்பித்தும் பிரசித்தரான ஸ்ரீ. உ. வே. நவநீதம் ஸ்ரீராமதேசிகாசார்ய ஸ்வாமி, இதில் சிற்சில விடங்களை அச்சிட்ட பிறகும் சில விடங்களை அச்சிடுவதற்கு முன்னமும் பார்த்துப் பரிஷ்கரித்ததற்கு யான் நன்றி பாராட்டுவதோடு, இனி வரும் வெளியீடுகளெல்லாம் அச்சிடுவதற்கு முன் அவரால் பார்த்துப் பரிஷ்காரம் செய்யப் படலாமென்பதையும் அறிவிக்கக்கடவனுயிருக்கிறேன்.

இப்போது ப்ரசுரமாயிருக்கும் பாகத்தில் திருப்பல்லாண்டு ஸ்ரீ காஞ்சி ஸுதர்சன அச்சகத்தில் அச்சிடப்பட்டது. மிகவும் ப்ரீதியுடன் அச்சிட்ட அதன் மானேஜரான ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸவரதாசார்யஸ்வாமியினிடம் க்ருதஜ்ஞனுயிருக்கிறேன். பிறகு திருப்பதி திருவேங்கடமுடையான் தேவஸ்தான அச்சகத்திலேயே பதிப்பிக்க ஸௌகர்யங்கள் அமைந்தபடியால் இங்கே அச்சிட்டுவருகிறேன். இவ்வகை கிரந்தங்களை அச்சிடுவதில் அதன் அதிகாரிகள் எல்லோரும், அதன் மானேஜராய், ஸ்ரீ தேசிக ஸம்ப்ரதாயத்தின் வளர்ச்சியிலே விசேஷச்ரத்தையும் யோக்கியதையு முள்ளவருமான ஸ்ரீ. உ. வே. திருவஹீந்திபுரம் T. R. நரஸிம்மாச்சாரியரும் ஊக்கத்துடன் இருப்பதால் அவர்களிடம் யான் எப்போதும் நன்றியுள்ளவனுவேன்.

இப் பெரும் தொண்டு பொருளுதவி விசேஷமாக விருந்தால் தான் பூர்த்தியாகு மென்பதை ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவரும் நன்குணர்ந்து, தங்களாலியன்றவரையில் உதவி செய்ய முன்வர வேண்டுமென்றும், இதற்கு உபகரிப்பதே இக் காலத்தில் நாம் செய்யவேண்டும் தர்மம் எனத் தெளிந்து அச்சிட்டவற்றில் ஒவ்வொரு ப்ரதியாவது வாங்க வேண்டுமென்றும் ப்ரார்த்திக்கிறேன். ப்ரதிகள் 500 ஏ இப்போது அச்சிடப்பட்டிருக்கின்றன. இப்படி ஓர் உரை வெளிவரவேண்டியதில் பொறுப்பு ஸ்ரீதேசிக ஸம்ப்ரதாயத்திலுள்ளவர் எல்லோருக்கும் இருக்கவேண்டுமென்பதை மீண்டும் வற்புறுத்துகிறேன்.

செய்யுள் அகராதி, ஆழ்வார் சரிதம், பல விசேஷங்கள் அடங்கிய அநுபந்தம் முதலியன ஒவ்வொரு ப்ரபந்த முடிவிலும் வெளிவரும்.

உத்தமூர். தி. வீரராகவாசார்யன்.

ஸ்ரீ:
திருவேங்கடமுடையான் திருமகளார் திருவடிகளே சரணம்.



ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

## ப்ரபந்தப் பொதுத் தனியன்கள்

ராமாநுஜதயாபாத்ரம் ஜ்ஞாநவைராக்யபூஷணம் |
ச்ரீமத்வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்ததேசிகம் ||

லக்ஷ்மீநாதஸமாரம்பாம் நாதயாமுநமத்யமாம் |
அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தே குருபரம்பராம் ||

யோ நித்யமச்யுதபதாம்புஜயுக்மருக்ம—
வ்யாமோஹதஸ் ததிதராணி த்ருணாய மேநே |
அஸ்மத்குரோர் பகவதோஸ்ய தயைகஸிந்தோ:
ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே ||

மாதா பிதா யுவதயஸ் தநயா விபூதி:
ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம் |
ஆத்யஸ்ய ந: குலபதேர் வகுளாபிராமம்
ச்ரீமத் ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா

பூதம் ஸரஸ்ய[1] மஹதாஹ்வய பட்டநாத
ச்ரீபக்திஸார குலசேகர யோகிவாஹாந் |
பக்தாங்க்ரிரேணு பரகால யதீந்த்ரமிச்ராந்
ச்ரீமத்பராங்குசமுநிம் ப்ரணதோஸ்மி நித்யம் ||

---

1. ஸரஸ்ச.

# பெரியாழ்வார் ப்ரபந்தத் தனியன்கள்.

குருமுகமநதீத்ய ப்ராஹ வேதாநசேஷாந்
நரபதிபரிக்ல்ப்தம் சுல்கமாதாதுகாம: |
ச்வசுரமமரவந்த்யம் ரங்கநாதஸ்ய ஸாக்ஷாத்
த்விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ||

மின்னார் தடமதிள்சூழ் வில்லிபுத்தூ ரென்றொருகால்
சொன்னார் கழற்கமலம் சூடினோம்—முன்னாள்
கிழியறுத்தா னென்றுரைத்தோம் கீழ்மையினிற்[1] சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமே வந்து.

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்று
ஈண்டிய சங்க[2] மெடுத்தூத—வேண்டிய
வேதங்க ளோதி விரைந்து கிழியறுத்தான்
பாதங்கள் யாமுடைய பற்று.

---

1. கீழ்மையினிச் சேரும்.
2. சங்கமெடுத்தோத. சங்கமடுத்தூத.

ஸ்ரீ:

திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

ஆழ்வார் எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

# ப்ரபந்த ரக்ஷை

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ க ॥

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ 2 ॥

ஸ்ரீய: பதியாய், ஸமஸ்த கல்யாண குணங்களுக்கும் சாச்வதஸ்தானமாய், பரம பவித்திரனாய், பரமபதத்திற்கும் ப்ரக்ருதி மண்டலத்திற்கும் பெருமானாய், உலகிலுள்ள உயிர்களை உய்விக்க நினைத்து, அநாதியாக அவற்றைக் கெடுத்துவரும் கொடிய வினைகளைக் கழிப்பதற் கேற்றவாறு ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைச் செய்கின்றவனுமான நாராயணன், ஸ்திதிகாலத்திலே, 'தன்னைத்தெளிந்து விரைந்தடைந்து விளங்கட்டு' மென்று பரிந்து, தானே நேரிலும் தன்னைச் சேர்ந்தவர்கட்கு அந்தர்யாமியாகவும் அநேக முகமாய் அவதரித்து, துஷ்டநிக்ரஹ ஸாது பரிபாலனங்களைச் செய்து உலகினை ஒழுங்கு படுத்திவருகிறானென்று ஆஸ்திகர்கள் அனைவரும் அறிவர்.

இப்படிவரும் அவதாரங்களையும், இவற்றிற்கு ஆதிமூலமாய்ப் பரமபதத்திலே உள்ள பரவாஸுதேவ ரூபத்தையும் சேர்த்து, பரம், வ்யூஹம், விபவம், ஹார்தம், அர்ச்சை என ஐந்து விதமான ரூப முள்ளவன் அவனென்று சொல்வார்கள். இவற்றுள் பரரூபத்தை ப்ரதானமாகக் கொண்டு உபதேசிக்கிறது உபநிஷத்து. வாஸுதேவ–ஸங்கர்ஷண–ப்ரத்யும்ந, அநிருத்தரூபமான வ்யூஹத்தை விசேஷித்துச் சொல்லுகிறது பாஞ்சராத்ராகமம். ராமக்ருஷ்ணாதி விபவங்களை விரிவாக விளக்குவன இதிஹாஸ புராணங்கள். ஹார்தமென்பது ஒவ்வொருவருடைய ஹ்ருதயத்திலும் அவதரித்தெழுந்தருளியிருக்கும் அந்தர்யாமிரூபம். அந்த ரூப விஷயத்திலே நின்றவை யோக சாஸ்த்ரம் முதலியனவான தத்வ சாஸ்த்ரங்கள். அர்ச்சையின் அழகை அநுபவிப்பிக்கின்றன ஆழ்வார்களின் திவ்ய ப்ரபந்தங்கள்.

இப்படி அர்ச்சாவதாரச் சிறப்பை அநுபவிப்பதோடு நிற்காமல் நான்மறையிலும், அவற்றில் முக்யங்களான உபநிஷத்துக்களிலும் மறைந்தும், ஆகமங்களிலே ஸாங்கோபாங்கமாக விதிக்கப்பட்டும், சரணாகதி சாஸ்திரமான ஸ்ரீமத் ராமாயணம், மஹா பாரதம் முதலானவற்றிலே பலவநுஷ்டானங்களைக் காட்டி மெய்ப்பிக்கப்பட்டுமுள்ள சரணாகதியை விசேஷித்து ப்ரபந்தங்கள் உபதேசிக்கின்றன.

நம் திருமால், பரிமுகன் முதலான பலவித அவதாரங்களைச் செய்து புராதன சாஸ்த்ரங்களுக்கு ப்ரசாரம் செய்து சத்வ ஹித புருஷார்த்தங்களைப் பரக்கச் சொல்லி, காலக்ரமத்திலே இவ்வளவும் வீணானமை கண்டு, மீண்டும் அபிநவமாக ஓர் தசாவதாரம் செய்து ஆழ்வார்களாகவும், பல ஆசார்யர்களாகவும் நின்று சாஸ்திரத்தின் பொருளை யுரைத்து உலகை உய்வித்தருளினானென்று பெரியோர் அருளிச்செய்வர். அதன் கருத்தென்ன வெனில்—— உபய விபூதிநாதனான ஸ்ரீமந் நாராயணன் இவ்விபூதியின் ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களைச்செய்ய வ்யூஹாவதாரம் செய்து, ஸ்திதி காலத்திலே அயோத்யா மதுராதிகளிலே ராமகிருஷ்ணாதி ரூபமாக தர்ம ஸ்தாபன ஸாதுஜன ஸம்ருத்திகளைக்கருதி அவதரித்து, உபநிஷத்துக்களிலே ஆங்காங்கு வம்சபரம்பரைகளைச் சொல்லுமிடங்களிற் கண்டபடி ஒவ்வொரு குருபரம்பரையிலும் தான் முதலிலே நின்று பற்பல பரம்பரைகளாலே வேதாந்த தத்வத்தை வெளியிட்டு, பக்தி யோகாம்ருதத்தையூட்டிவைத்தான். கால க்ரமத்திலே சேதனர்களுக்குக் கர்மாநுஷ்டான ஸாமர்த்தியமும், தாரணா சக்தியும், ஆயுராரோக்யாதிகளும் படிப்படியாகக் குறைந்து வருவதைக் கண்டு, அவர்களை உஜ்ஜீவிப்பிக்க ஸார க்ஷேத்ரங்களிலே ஸ்திரமாய் அடிக்கடி அவர்கள் அநுபவிக்கும்படி அர்ச்சாரூபமாக எழுந்தருளினான். "கலௌ வேங்கடநாயக:" என்கிறபடி திருவேங்கடமுடையானாக இருந்து தான் உபதேசிக்கும் சரணாகதிரஹஸ்யத்தையும் தன் பெருமையையும் ஸர்வவர்ண ஸாதாரணமான பாஷையிலே தெளிவிக்கத் திருவுள்ளம் பற்றி அர்ச்சாமூர்த்திகள் நிறைந்த இந்தத் தக்ஷிணபாரதத்திலே அவற்றிற்கு முதலில் ப்ரசாரம் உசிதமென்று தீர்மானித்தான்.

அநாதி கர்ம வாஸநாவசத்தாலே அற்பதேவதைகளையும், அவர்கள் அளிக்கும் க்ஷுத்ர புருஷார்த்தங்களையுமே ஆதரித்து அளவற்ற அபராதங்கள் செய்து அடியோடு தன்னிடத்தில் விமுகராய்க் கிடக்கும் ஸம்ஸாரிகளையும்—ஸார்வபௌமனாயிருக்குமொருவன் தனக்கு வச்யமாகவிருக்கவேண்டியிருந்தும் தன்னை மீறி எதிரம்பு கோத்து நிற்கும் ப்ரஜைகளை ஜயித்தடக்கப் படையொன்றைத் திரட்டியனுப்பி, பின் தானும் தகுந்த சமயத்திலே புகுந்து, தன் வசமாக்குகிறதுபோல்— ஸ்வாதீனப் படுத்துவதற்காகத் தன்னுடைய பரம பதத்திலே தனக்கு அந்தரங்கமாய் துஷ்டநிக்ரஹசிஷ்டரக்ஷணார்த்தம் ஏற்பட்டுள்ள திருவாழி திருச்சங்கு முதலிய ஆயுதங்களையும், அநந்த கருட விஷ்வக்ஸேநாதிகளையும், பிராட்டிமார்களையும் இங்கு முன்னம் அவதரிப்பித்துத் தானும் பிறகெழுந்தருளி பரிஷ்கரிக்கத்திருவுளம் கொண்டான். அவ்வவஸரத்திலே அவர்களின்

அம்சரூபிகளாய், மயர்வற மதிநலமருளப் பெற்றவராகையாலே மஹர்ஷிகளுக்கும் மேற்பட்ட மேன்மை பெற்றவருமான பொய்கையார் முதலான பல ஆழ்வார்கள் ஆவிர்ப்பவித்து, அர்ச்சைகள் நிறைந்த தேசங்களைச் சேர்ந்ததாய், அகத்தியமஹர்ஷியினாலே பரிஷ்கரிக்கப்பட்டதாய், மிருதுமதுரமாய், ஸர்வஜாதி சாதாரணமுமான செவிக்கினிய செந்தமிழ்ப் பாஷையிலே, தங்களுக்கு இயற்கையாயுள்ள பகவதனுபவத்தின் பரிவாஹமாகப் பாசுரங்கள் இயற்றி, அவ்வினிய இசைச் சொற்கள் வாயிலாகத் தத்வ ஹித புருஷார்த்தங்களைத் தெளிவுபடுத்தி ப்ரஜைகளைப் பரவசராக்கி பகவன்மயராகத் திருத்தியருளினர்.

ஆயினும் கால க்ரமத்திலே அனுதிவேதவேதாந்த சாஸ்திரங்களிலுள்ள விசேஷச்ரத்தையினாலும், அவற்றின் அர்த்தத்தையே இவை தெளிவிக்கின்றன வென்றறியாமையாலும் இவற்றைப் பின்னுள்ளார் உபேக்ஷை செய்ய, அந்தக் காரணத்தாலே இவையும் மறைந்து விட்டபோது, வேதசாஸ்த்ர பாரங்கதராய் விசிஷ்டாதிகாரிகளான சிஷ்டர்களைக் கொண்டு இவற்றிற்கு மறுபடியும் ப்ரசாரம் செய்யக்கோலி எம்பெருமான்—திருக்குடந்தை ஆராவமுதன் விஷயமான திருவாய்மொழியைக் கேட்டுக் களிக்கும்படி ஸ்ரீமந் நாதமுனிகளுக்கு ஸந்தர்ப்பம் வாய்க்க வைக்க, அவரும் அதிலிருந்து திருவாய்மொழி என்னும் ப்ரபந்தமொன்று ஆயிரம் பாசுரங்கள் கொண்டதுளதென்பதையறிந்து, முழுமையும் காண வாசைப்பட்டு, அதற்கு விரகு தேடி, ஆழ்வார் திருநகரிலே கண்ணிநுண் சிறுத்தாம்பை அத்யயனம்பண்ணி ஆவிருத்தி செய்து, தமக்குள்ள யோக சக்தியினாலே நம்மாழ்வாரை ஸாக்ஷாத்காரம் செய்து, அவர் உபதேச மூலமாக ஒரு கோவையிலே ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் அனைவற்றையும், அவற்றிலிருந்து வேதப்பொருள் வெளியாகும் விதத்தையும் தெளிந்து உபயவேதாந்தங்களுக்குமுள்ள ஒற்றுமையை வெளியிட்டு ப்ரசாரம் செய்தருளினர்.

அவதார புருஷர்களான ஆழ்வார்களாலும், அவர்களுக்குள் இந்த குரு பரம்பரைக்கு மூலமாய் ப்ரபன்னஜநஸந்தான கூடஸ்தராய் நின்ற நம்மாழ்வார் நாதமுனிகள் மூலமாகவும் தன் மனோரதம் பயன் பெற்றுவருவதைக் கண்டுகந்த எம்பெருமான் ஸர்வநித்ய ஸூரிகளிலும் ஒருபடி மேற்பட்டவராய், ஸர்வ தேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் ஸர்வவித சேஷவிருத்தியை (கைங்கர்யத்தை)ச்செய்பவராய், ராமாவதாரத்திலே இலக்குமணனாகவும் க்ருஷ்ணாவதாரத்திலே இராமனாகவும் கூடப்பிறந்தது மாத்திரமன்றி, பீதாம்பரம் போன்ற பல ரூபங்களையெடுத்தும் எப்போதும் விட்டுப் பிரியாமல் அந்தரங்க சேஷனையுள்ள ஆதிசேஷனை லக்ஷ்மணார்யரென்னும் எதிராசனாக அவதரிப்பித்து, அவர் மூலமாகத் தமிழ் மறையின் பொருளை நான்மறைகளிலும் அவற்றிற்கு வ்யாக்யானங்களான ப்ரம்ம ஸூத்ரம் முதலியவற்றிலும் நன்கு எடுத்துரைத்து உபய வேதாந்தங்களுக்கும் ஐகரஸ்யத்தை ப்ரதிஷ்டிதமாக்கி யருளினன்.

இப்படி தன்னுடைய பரிஜனங்களைக் கொண்டு தான் சீர்திருத்தின விடத்திலே தானே நேரில் எழுந்தருளித்தன் இஷ்டபூர்த்தி செய்துகொள்ள வாசைப்பட்டு, திருவேங்கடமுடையானாகிய தான் உகந்திருக்கும் ப்ரபத்தி

சாஸ்திரார்த்தத்தை இனி விளக்கியருளவேணுமென்று தாமே தூப்புல் திருவேங்கடமுடையானாக அவதரித்து, வேதாந்தாசார்யனாய் நின்று, வேதத்திற்குப் புறம்பான மதங்களையும், வேதத்திற்கு விபரீதார்த்தம் கொள்ளும் மதங்களையும் நிரஸித்து, யதிராஜர் பர்யந்தமாக உள்ளவர்களைக் கொண்டு தான் முன் உபதேசித்த உபய வேதாந்தார்த்தங்களை ஸம்ஸ்க்ருத பாஷையிலும் தமிழ்ப் பாஷையிலும் பெரிதும் சிறிதுமான பல நூல்களைச் செய்து அதிகாரிகளுக்குத் தக்கபடி அறிவித்து நிலைப்படுத்தி, ப்ரபத்திதத்வத்தைப் பரக்கப் பேசி ப்ரஜைகள் உய்ய உபாயமளித்துத் தன் மனோரதத்தைத் தலைக்கட்டியுகந்தானென்றறிக.

இதன் ஸங்க்ரஹ ச்லோகமாவது—

ஸ்ரீமாந் வேங்கடநாத கோவிதஜநமஹாயோகாவதாரஸ்ஸ்வய
ஸ்ஸத்வ்யாக்யாயுகளை꞉ ப்ரஜா வஶயிதா ப்ரேஷ்யாந்தரம் ஶாஸிஹ ।
ப்ராப்யே ப்ராப்திஷு தத்த்வதஸ்ஸமதிஶம்ஸம்ஸ்து நாதாதிஸி
ஶ்ரேஷ்டைர்யதீஶ்வரேண ஸஹித꞉ ஸ்ரீதேஶிகோ ஹந்த ஸ்வயம் ॥

இப்படி ப்ரஜைகளை வசீகரிப்பதற்காகப் பிறந்த படையிலே ஸேநேச்வரான விஷ்வக்ஸேநரின் அம்சமான நம்மாழ்வாரும், அந்தரங்கசேஷனாய், ஞானபல ஸ்தானமுமான ஆதிசேஷனுடைய அம்சமான எம்பெருமானாரும், ஸாக்ஷாத் எம்பெருமானுடைய அம்சமான சீரார் தூப்புல் திருவேங்கடமுடையானும் இப்பரம்பரையில் ப்ரதான பூதர்கள். இவ்வாழ்வார் ஆசார்யர்களிலே ஆழ்வார்களாவார்—பொய்கைமுனி, பூதத்தார், பேயாழ்வார், திருமழிசைப்பிரான், நம்மாழ்வார், மதுரகவி, குலசேகரன், விட்டு சித்தர், ஆண்டாள், தொண்டரடிப்பொடி, திருப்பாணர், கலியன் எனப்படும் பன்னிருவர். இவர்களில் ஆசார்ய பாரதந்த்ர்யத்தை அதிகமாகப் பாராட்டின ஆண்டாளையும் மதுரகவிகளையும் பிரித்துக் கணக்கிடாமல், ஆண்டாளைப்பெரியாழ்வாரிலும், மதுரகவிகளை நம்மாழ்வாரிலும் உள்ளடக்கி அபிநவதசாவதாரமென்று பெரியோர் பணிப்பர். இதை 'பூதம் ஸரச்ச' என்னும் ச்லோகத்திலும் காண்க. இவர்களில் எவர் எவருடைய அம்சமென்பதையும் இங்கே ஸங்க்ரஹிக்கிறோம்—

1. பொய்கைமுனி—பாஞ்சஜன்யம்
2. பூதத்தார்—கௌமோதகீ யென்னும் கதை
3. பேயாழ்வார்-நந்தகமென்னும்கத்தி
4. திருமழிசையாழ்வார்—திருவாழி
5. நம்மாழ்வார்—சேனை முதலியார்
6. மதுரகவி-குமுதரென்னும் கணதிபர்
7. குலசேகரர்—கௌத்துவம்
8. பெரியாழ்வார்—பெரிய திருவடி
9. ஆண்டாள்—பூமிப் பிராட்டி
10. தொண்டரடிப்பொடி—வனமாலை
11. திருப்பாணர்—ஸ்ரீவத்ஸம்
12. திருமங்கையாழ்வார்—சார்ங்கம்
13. யதிராஜன்—ஆதிசேஷன்
14. தூப்புல் பிள்ளை—திருவேங்கடமுடையான்.

1. ஸாரஸ்ய ஹரித வேதாள ஹஸ்திஸார ஶ்ரோணய꞉ ।
ஶங்க கௌமோதகீ வக்த்ர ப்ரசக்ர ஸேநேஶஸார꞉ ஶக்ராம்ஶ ॥

2. [illegible] ।
[illegible] ॥

3. [illegible] ।
[illegible] ॥

இங்கு குறித்த க்ரமமே இவர்கள் அவதாரத்திலுள்ள க்ரமமுமாம். இவ்வாழ்வார்கள் இன்ன மாதத்தில் இன்ன நக்ஷத்திரத்தில் இன்ன இடத்தில் அவதரித்தார்களென்பது மாத்திரம் ஸ்ரீ தேசிகனும் மணவாள மாமுனிகளும் குறித்தார்கள். எந்த யுகத்தில் எந்த வருஷத்தில் அவதரித்தார்களென்பது முதலான விவரங்களைத் தெரிவிக்கவில்லை. திருமழிசையாழ்வார் வரையிலுள்ளவர்கள் த்வாபரயுகத்தில் ஒரு வருஷத்திலும், மற்றவர் கலியுக ஆரம்பத்திலும் உதித்தார்கள் என்று குருபரம்பரை முதலான ப்ரபந்தங்களிலே காண்கிறோம். பெரியாழ்வார் தம் ப்ரபந்தத்தில் பாண்டிய தேசத்தரசனுடைய வல்லபதேவனுடைய புரோஹிதரான செல்வநம்பியைக் குறித்திருப்பதுபோல அவரவர் ப்ரபந்தங்களில் குறித்திருக்கும் விசேஷங்களைக் கொண்டு கால நிர்ணயம் செய்வது பொருத்தமானதென்றும், அதற்கு முரண்பாடாக ஐதிஹ்யம் சொல்வது தகாதென்றும் விமர்சகர் வாதிப்பர். 'ததிஹ நவீநம் தஷ்வி கிழ' என்கிற ந்யாயமாய், இவர்களைக் கொஞ்சம் அர்வாசீனர்களாகக் கொண்டாலும் குறையொன்று மில்லையாகிலும், உண்மையென்னவென்று தெளிய விரும்புவோர் ஊன்றியாராய்ந்து கொள்க.

இப்படி நான்கு வேதங்களின் பொருளையாராய்ந்து இவர்கள் ஸாரமாக அருளிச் செய்த ப்ரபந்தங்களின் பெயர்கள் மேலே அடைவே குறிக்கப்படும். திவ்யப்ரபந்தங்களிலுள்ள பாட்டின் தொகை நாலாயிர மென்பது ப்ரஸித்தம். உண்மையில் நாலாயிரம் பாசுரங்கள் இருக்கின்றனவா என்கிற விசாரமும் இங்குளது. தமிழ் இலக்கணப்படிக்குக் கணக்கிட்டால் நாலாயிரம் இல்லையென்கிறார்கள். ஏனெனில், திருமங்கையாழ்வார் அருளிச் செய்த ஆறு ப்ரபந்தங்களில் சிறிய திருமடல், பெரிய திருமடலென்னும் ப்ரபந்தம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பாட்டேயாம். ஆக நாலாயிர மென்கிற எண்ணிக்கை பொருந்தாததலின். ஸ்ரீ தேசிகனுக்கு முன்னோரும் மணவாளமாமுனி வரையிலுள்ள பின்னோரும் இதைப்பற்றி ஏதும் விமர்சித்ததாகத் தெரியவில்லை. மணவாளமாமுனிவரின் சீடரான அப்பிள்ளை யென்பவர் ஒவ்வொரு பாசுரமென்று தமிழர் சொன்ன இந்தத் திருமடல்களில் இரண்டடிகள் ஒரு பாட்டென்று வைத்து ஒன்றில் பாசுரங்கள் $77\frac{1}{2}$, மற்றொன்றில் $148\frac{1}{2}$ என்று பிரித்துச்சரிசமமாக நாலாயிரம் பாசுரங்களென்றாரென்கிறார்கள். இப்படி அரைப்பாசுரமாக ப்ரபந்தம் முடிகிறது யுக்தமாகாதென்றும், ஒரு கண்ணி ஒரு பாசுரமாவதும், கடைக்கண்ணி ஒன்றை ஒன்றரையாக்குவதும் எங்ஙனமென்றும் வாதிக்கின்றனர். நம் தேசிகன் ஏற்கனவே இது விஷயத்தில் ப்ரபந்த ஸாரத்தில் அருளிச் செய்திருக்கிறபடி சிறிய திருமடல் 40 பாசுரங்கள், பெரிய திருமடல் 78 பாசுரங்களென்றும், எம்பெருமானார் விஷயமாக அமுதனார் அருளிச் செய்த நூற்றந்

தாதியும் திவ்ய ப்ரபந்தங்களோடு சேர்ந்ததாகையால் அந்த 108டையும் சேர்க்கவேணுமென்றும் கொண்டு ப்ரபந்தசாரப்படி துய்ய தமிழ் இருபத்து நான்கிற் பாட்டின் தொகை நாலாயிரமென்பது நம் முன்னோர் செய்த முடிவு.

வேதங்களில் வாக்ய ப்ரமாணத்தை யனுசரித்தால் ஒரே மந்த்ரமாகத் தோற்று மிடங்களிலும் லிங்க ப்ரமாணத்தைக் கொண்டு அநேக மந்த்ரங்களாக மீமாம்ஸகர்கள் பிரிக்கிறார்கள். பகவத்விஷயமின்றி நம்மாழ்வார் விஷயமாக இருக்கும் கண்ணிநுண்சிறுத்தாம்பு போல், எம்பெருமானார் விஷயமான நூற்றந்தாதியும் ஆழ்வார்கள் அருளிச் செயல்களோடு சமமாகச் சேர்த்தகுமென்றே பூர்வர்கள் இயற்பாவோடு இதையும் சேர்த்து திவ்ய தேசங்களில் சாற்றுமுறையில் அநுஸந்திக்கிறார்கள். ப்ரபந்தம் செய்வதில் சக்தி வாய்ந்த பெரிய கோயில் நம்பியும் உடையவர் நியமனம் பெற்று இந்த நூற்றந்தாதியை இயற்றினபடியாலும், இவ்வமுதனாருக்காசார்யரான கூரத்தாழ்வான் போன்ற பெரியோர்கள் முதலாக எல்லோரும் இதை அநுஸந்திக்கும்படியிருப்பதற்காகவும் ப்ரபந்தகர்த்தாக்களை அநுஸந்திக்குமிடத்தில் இராமாநுச நூற்றந்தாதிக்காக அதற்கு ப்ரயோஜக கர்த்தாவாக ஏற்பட்ட உடையவரையே சேர்த்து அநுஸந்திப்பது ஸம்ப்ரதாயமென்றும் ப்ரபந்தசாரத்திலிருந்து தெளிவாகிறது. அந்தக்காரணத்தினாலேயே 'பூதம்ஸரச்ச' என்னும் தனியனில் 'யதீந்த்ரமிச்ரான்' என்று உடையவரையும் சேர்த்தநுஸந்தித்தார்கள். இங்கு மிச்ரபதத்துக்குள்ள ஸ்வாரஸ்யத்தைத் தக்கபடி அநுபவிப்பது ப்ராப்தமாகும். இப்படித் தேசிகன் திருமடலைப் பிரித்தருளினதுக்குக் காரணம் யாதென்பதை அதற்கு உரை செய்யும் அவஸரத்திலே விவரிப்பதே உசிதமாகும்.

பெரியாழ்வார் ப்ரபந்தம் திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி என்றிரண்டாமென்று சிலர் சொல்லுகின்றனர். திருப்பல்லாண்டு முதற்கொண்டு ஒரே ப்ரபந்தமென்று ஏனையோர் இசைகின்றனர். ஒரே ப்ரபந்தமென்றே ப்ரபந்தசாரத்தில் ஸ்ரீதேசிகன் திருவுள்ளம் மேற்படுகிறது. திருப்பல்லாண்டைப்பிரித்தால் முதற்பத்துக்குத் திருமொழிகள் ஒன்பதாகும். இதையும் சேர்த்தால் பத்து திருமொழிகளாம். ஆனால் சீதக்கடலென்னும் திருமொழியிலே 21 பாசுரங்களிருப்பதால் திருப்பல்லாண்டு சேராவிட்டாலும் நூறு பாசுரங்களுக்குக் குறைவில்லை. ஒவ்வொரு பத்துக்கும் பாசுரங்கள் நூறு தான் என்கிற நிர்ப்பந்தமும் கிடையாது. திருமொழி, திருவாய்மொழி யென்னும் ப்ரபந்தங்களிலே பாசுரங்கள் (செய்யுட்கள்) பத்துக்குக் குறைவில்லாத பாகத்தைத் திருமொழி, திருவாய்மொழி என்றும், அவை பத்து சேர்ந்த பாகத்தை ஒரு பத்து என்றும் வ்யவஹரிப்பது ஸம்ப்ரதாயம். எப்படியும் பெரியாழ்வார் ப்ரபந்தத்தில் பாசுரக்கணக்கில் ஒரு படியும் வைஷம்யமில்லை. ஆக நாலாயிரமாவது—

| | | | |
|---|---|---|---|
| 1. | பொய்கையாழ்வார் அருளிச் செய்த ப்ரபந்தம் ஒன்று | (முதல் திருவந்தாதி). பாசுரங்கள் | 100 |
| 2. | பூதத்தாழ்வார் | ,, இரண்டாம் திருவந்தாதி | 100 |
| 3. | பேயாழ்வார் | ,, மூன்றும் ,, | 100 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4. | திருமழிசையாழ்வார் | ,, | 2. நான்முகன் திருவந்தாதி (96) திருச்சந்த விருத்தம் (120) | ,, | 216 |
| 5. | நம்மாழ்வார் | ,, | 4. திருவிருத்தம் (100) திருவாசிரியம் (7) பெரிய திருவந்தாதி (87) திருவாய்மொழி (1102) | ,, | 1296 |
| 6. | மதுரகவிகள் | ,, | கண்ணிநுண் சிறுத்தாம்பு | ,, | 11 |
| 7. | குலசேகராழ்வார் | ,, | பெருமாள் திருமொழி | ,, | 105 |
| 8. | பெரியாழ்வார் | ,, | திருப்பல்லாண்டுள்பட பெரியாழ்வார் திருமொழி | ,, | 473 |
| 9. | ஆண்டாள் | ,, | 2. திருப்பாவை (30) நாச்சியார் பாசுரம் (143) | ,, | 173 |
| 10. | தொண்டரடிப்பொடி | ,, | 2. திருமாலை (45) திருப்பள்ளி யெழுச்சி (10) | ,, | 55 |
| 11. | திருப்பாணாழ்வார் | ,, | அமலனாதிபிரான் | ,, | 10 |
| 12. | திருமங்கையாழ்வார் | ,, | 6. பெரிய திருமொழி (1084) திருக்குறுந்தாண்டகம் (20) திருநெடுந்தாண்டகம் (30) திருவெழு கூற்றிருக்கை (1) சிறிய திருமடல் (40) பெரிய திருமடல் (78) | ,, | 1253 |
| 13. | அமுதனார் | ,, | இராமானுஜ நூற்றந்தாதி | ,, | 108 |
| | என்பவையாம் | | | | 4000 |

நாலாயிரம் நான்கு பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவை முதலாயிரம், திருமொழி, இயற்பா, திருவாய்மொழி யெனவாம். இவற்றில் முதலாயிரமாவது.... (1) பெரியாழ்வார்திருமொழி, (2) திருப்பாவை, (3) நாச்சியார் திருமொழி, (4) பெருமாள் திருமொழி, (5) திருச்சந்த விருத்தம், (6) திருமாலை, (7) திருப்பள்ளியெழுச்சி, (8) அமலனாதிபிரான், (9) கண்ணிநுண்சிறுத்தாம்பு என ஒன்பது ப்ரபந்தங்கள். (947 பாட்டுக்கள்). 2-வது (1) பெரியதிருமொழி, (2) திருக்குறுந்தாண்டகம், (3) திருநெடுந்தாண்டகம் எனப்படும் மூன்றும். (பா-1134.) 3-வது முதல்திருவந்தாதி, இரண்டாந்திருவந்தாதி, மூன்றாந்திருவந்தாதி, நான்முகன் திருவந்தாதி, திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி, திருவெழுகூற்றிருக்கை, சிறியதிருமடல், பெரிய திருமடல், இராமாநுச நூற்றந்தாதி என்கிற 11 ப்ரபந்தங்கள். (பா-817). 4-வது திருவாய்மொழி யொன்று மாத்திரம். (பா-1102). இங்கு இயற்பா சரம ப்ரபந்தமா, திருவாய்மொழி சரம ப்ரபந்தமா என்கிற விவாதமுமுண்டு. திருமங்கையாழ்வார் காலத்தில் திருவாய்மொழிமாத்திரம் அத்யயனோத்ஸவத்தில் பாராயணம் செய்விக்கப்பட்டது. நாதமுனிகள் காலத்தில் அதற்கு முன் பத்துநாட்களில் முதலாயிரமும், திருமொழியும் பாராயணத்தில் அமைக்கப்பெற்றன. எம்பெருமானார் காலத்திலிருந்து மறுதினத்தில் இயற்பாவும் பாராயணம் செய்யப்படுகிறது. ஆகவே இயற்பா சரமப்ரபந்தமென்பார் சிலர். திருவாய்மொழி உபநிஷத்தானபடியாலே

சரமப்ரபந்தமென்றும், அதுதவிர நம்மாழ்வார் ப்ரபந்தங்கள் மூன்றும் ருக்வேதாதிகளைப்போல் கருதப்பட்டவை இயற்பாவில் அடங்கியுள்ளனவாகையால் இயற்பா சரமப்ரபந்தமல்லவென்றும் மற்றவர் சொல்வர்.

இந்த விபாகமும், இங்கு ப்ரபந்தங்களுக்கு ஏற்படுத்தியுள்ள க்ரமமும் ஆழ்வார்களின் அவதார க்ரமத்தையோ, ப்ரபந்தங்களின் பிறப்பின் க்ரமத்தையோ பின்பற்றியவையல்ல. ஆகவே இங்கு—(முதலாயிரம் என்று பெயரிட்டு) தொள்ளாயிரத்துச் சில்வானத்தோடு ஏன் நிறுத்த வேண்டும்? திருக்குறுந்தாண்டகத்தையும் திருநெடுந்தாண்டகத்தையும் அதனுள் அடக்கலாமே. பெரிய திருமொழி மாத்திரமே 1084 பாசுரங்களுள்ளதாயிருப்பதால் அதைத் தனியாயிரமாகக் கணக்கிடலாமே. அத்துடன் இவ்விரண்டையும் ஏன் சேர்க்க வேணும்? கலியன் பெரிய திருமொழிக்குப்பிறகே இவற்றை இயற்றினதால் இவை முந்தியவாயிரத்திற்சேர்க்கப்படவில்லையெனில்,பின்னோர்களுடைய ப்ரபந்தங்களை முன்னமும், முன்னோர்களுடைய ப்ரபந்தங்களைப் பின்னையும் சேர்த்திருக்கும்போது ஒருவர் செய்தருளியவற்றில் பின்பு அருளிச் செய்ததை முன்பும், முன்பு அருளிச்செய்ததைப் பின்பும் இணைத்தல் ஏன் கூடாது. இக்ரமத்திலேயே நாதமுனிகளுக்கு இப்ரபந்தங்கள் கிடைத்தனவாகையாலும், சிறிது காலம் சென்றபிறகே ஆயிரமாயிரமாகப் பகுக்க முயன்றதாலும் இப்படி பிரிக்கப்பட்டனவெனில், நம்மாழ்வாரின் அனுக்ரஹத்தாலே நாதமுனிகள் ஒரே சமயத்தில் எல்லாவற்றையும் கண்டுகொண்டாராகையாலே இவற்றை க்ரமமாகப்பெற்றாரென்று சொல்வது கூடுமோ? இங்ஙனமே க்ரமமாக ஆழ்வார் உபதேசித்தாரென்னில், ஆழ்வார்தான் ஏன் ஆழ்வார்களின் அவதாரக்ரமத்துக்குச் சேராமல் இப்படியொரு க்ரமத்தை ஆதரித்து உபதேசிக்கவேண்டும்? இப்ரபந்தங்கள் திருவஷ்டாக்ஷரத்திற்கும் த்வயத்திற்கும் வ்யாக்யான ரூபங்களாகுகைக்காக அதற்கேற்றவாறு இக்கோவையிலே இணைக்கப்பெற்றனவென்னில், ப்ரபந்தாவதாரக்ரமத்தையொட்டி ஆயிரமென்றுமெண்ணிக்கைக் கனுகூலமாக சிலவற்றை மாற்றியமைத்தால் இதற்கு விரோதம் எங்ஙனே?—என்பனபோன்ற சங்கைகளுக்கு இடமுண்டாயிருக்கிறது. இது விஷயத்தில் பெரியவாச்சான் பிள்ளையொருவரே கொஞ்சம் மட்டும் விசாரித்திருப்பதாகத் தெரியவருகிறது. இதன் தத்வமும் கூடுமானவரையில் பிறகு விவரிக்கத்தக்கதென்று இச்சிறிய முகவுரையை வளர்த்தாமல் இவ்வளவில் நிற்கிறோம்.

இவற்றில் திருவாய்மொழி மாத்திரம் கலியன் காலத்திலேயே ஸ்ரீரங்கத்தில் அத்யயனோத்ஸவத்தில் அநுஸந்தானத்திலிருந்ததாக ஸம்ப்ரதாயம். பிறகு அதுவும் மறைந்துபோக நெடுநாட்கழித்து நாதமுனிகள் காலம் தொடங்கி தொன்றுதொட்டு ஆழ்வார்களின் ப்ரபந்தங்களெல்லாம் அனுஸந்திக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் ப்ரதானமாய் உபநிஷத்தென்று புகழ்பெற்ற திருவாய்மொழிக்கு மாத்திரம் உடையவர் நியமனத்தின்படி திருக்குருகைப்பிரான் பிள்ளான் அருளிச்செய்த ஆறாயிரப்படியாலும், அதனைப் பின்பற்றிப் பிறந்த பல வடகலை தென்கலை ஸம்ப்ரதாயங்களிலுள்ள வியாக்யானங்களாலும் விசேஷார்த்தங்கள் தெளிவாகின்றன. ப்ரம்ம ஸூத்ரத்திற்குத்தாம் இயற்றிய வ்யாக்யானங்களாலும், வேதார்த்தஸங்க்ரஹ க்ரந்தத்தினாலும் வேதாந்தமாகிய உபநிஷத்

பாகத்துக்கு உடையவர் தாமே விவரணம் செய்ததுபோல், த்ரமிடோபநிஷத் தான திருவாய்மொழிக்கும் தாமே ஏன் உரை செய்தருளவில்லையென்று சங்கித்துக்கொண்டு, சிலர் இங்ஙனம் பரிஹாரம் சொல்லுகிறார்கள்—திருவாய்மொழி அநுபவக்ரந்தமாகையால் ஒவ்வொரு பாசுரத்திலும் அநுபவிக்க அநுபவிக்க பற்பலயோஜனைகளும் பலவிதமான கருத்துக்களும் தோன்றுவதால், அவ்வளவு விசேஷங்களையும் விடாமற்சொல்லி விரிவாக உரை உரைப்பது சாத்தியமாகாதாகையால், சிலவர்த்தங்களை மாத்திரம் காட்டிச் சிறியதோர் உரை செய்தால் மற்றவிதமான பொருட்களை உடையவர் பொருட்படுத்தவில்லையென்று பின்னுள்ளார் நினைக்கும்படியாய்விடுமாகையால் தாமேயருளிச்செய்யாமல் தம் சிஷ்யர் ஒருவரைக்கொண்டு உரையொன்றைத் தலைக்கட்டியருளினர் என்றவாறு. ஆளவந்தார் நியமனத்தைப்பூர்த்தி செய்வதற்காக, அவர் திருவம்சத்திலே அவதரித்தவராய், நம்மாழ்வார் திருநாமத்தை உடையவருமான திருமலைநம்பி திருக்குமாரருக்கு அத்திருநாமத்துக்குத் தக்கபடி நம்மாழ்வாரின் அவதாரமேயென்று சொல்லும்படிக்குள்ள ஜ்ஞாநத் கர்ஷத்தையும் ப்ரபந்த ரஸாநுபவச் சிறப்பையும் கண்டு அவரையே உரை செய்ய உடையவர் நியமித்தருளினரென்கிற ஸமாதானமும் ப்ரஸித்தமே. எத்தனை வ்யாக்யானங்கள் எவ்வளவு விரிவுடன் ஏற்பட்டாலும் நாலாயிரத் திவ்ய ப்ரபந்தங்களிலுள்ள பொருள்கள் எல்லாம் பணிக்கப்பெற்றனவாகமாட்டா வென்பது எல்லோருமிசைந்த விஷயமே.

இப்ரபந்தங்களில் சிலவற்றிற்கு ப்ராசீன வ்யாக்யானங்களைப் பின்பற்றி, பல பாட பேதங்களையும் கவனித்து ஸ்ரீ தேசிக ஸம்ப்ரதாயத்துக்கிணங்கி எல்லோரும் அறிவதற்குரிய நடையிலே தெளிவாக ஒரு சிறிய உரை எழுதி வெளியிட ஆசார்யர் அருள் பொருந்திய அடியேனுக்கு அவா பிறந்ததின்பேரில் அவ்வாசார்யாநுக்ரஹத்தையே பலமாகக்கொண்டு இம்மஹாஸாஹஸத்திலே முயற்சி செய்து வருகிறேன். இது நன்று பூர்த்தி பெறும்படி பெரியோர்கள் ஆமோதித்து அருள் புரிக. சிற்சில விடங்களில் அடியேன் சிறிது வேறுவிதமாகப் பொருள் கூறினாலும், பழைய உரைகளிலும் இவ்வாறு வேற்றுமை வெகுவாகக் காண்கிறபடியால், ஸம்ப்ரதாயத்துக்கு விரோதமிராததபோது பழிக்கவேண்டிய அவச்யமில்லையென்றும், அது பலவிதமாகப் பொருட்களைத் தரும் வகையில் அமைந்துள்ள ப்ரபந்தத்துக்குப் பெருமையேயாகுமென்றும் கருதி பெரியோர்கள் உள்ளம் குளிர்ந்துகக்க ப்ராப்தம். அவசியமாய் திருத்திக் கொள்ள வேண்டிய விஷயங்களிருப்பனவாக நினைக்குமவர்கள் தாங்கள் தீர விசாரித்துத் தெளிவாகத் தனியே தெரியப் படுத்தினார்களாகில், அவ்விதம் ஸஹ்ருதயத் தன்மையோடு தெளிவிக்கப்பெற்றதை அங்கீகரித்து க்ருதஜ்ஞதையுடன் பரிஷ்கரித்து ப்ரகாசப்படுத்திக் கொள்வதே எமக்கேற்றமென்று எமது சித்தாந்தமென்பதையும் இங்கு யான் ஒடுக்கவணக்கத்துடன் உறுதிப்படுத்துகிறேன். வேறு பொருள் கூறினமாத்திரத்திலே பழைய உரையை நாம் பொருட்படுத்தவில்லையென்று நினைக்கலாகாது. இப்பொருளும் இசையுமென்பது மட்டுமேயாம் நினைப்பது. இப்படி உண்மையிருக்க, இங்கு காரணமிராமற் கண்டதெல்லாம் கண்டித்துப்பேசி பிறரை தூஷிப்பதே புருடார்த்தமாகக் கொண்டார் உண்டாகில், அவருடைய கடுஞ்சொற்களில் யாம் கவனம் செலுத்த விரும்ப

வில்லை. வாய்ந்த சமயத்தை வீணாக்காமல் ஆசார்யர்கள் அளித்த அறிவைக் கொண்டு ப்ரபந்த சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமாம்படி பொருள் தெளிந்து, தெரிந்தது மறவாதபடித் திரட்டி வைப்பதிலேயே எமக்கு முக்கிய நோக்கமிருப்பது.

இனி நாலாயிரத்துக்கும் பொதுவான தனியன்களுக்கு உரை தொடங்குகிறோம். இவற்றிற்கு ஸ்ரீ வாத்ஸ்ய அஹோபிலாசார்யர் விரிவாக உரை அருளிச்செய்திருக்கிறார். இங்கு சுருக்கமாக சிற்சிலவற்றைக் குறிக்கிறோம். தனியன் என்னும் பதத்திற்கு, அத்யயனம் செய்யும் ப்ரபந்தத்திற் சேராமல் ஆசார்ய விஷயமாய் தனியே அநுஸந்திக்கப்படும் சொல் என்று பொருள்.

𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌦𑌯𑌾𑌪𑌾𑌤𑍍𑌰𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌭𑍂𑌷𑌣𑌮𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑌨𑌾𑌥𑌾𑌰𑍍𑌯𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌦𑍇𑌶𑌿𑌕𑌮𑍍 ॥

ராமாநுஜ தயாபாத்ரம் ஜ்ஞாந வைராக்ய பூஷணம்
ச்ரீமத்வேங்கட நாதார்யம் வந்தே வேதாந்ததேசிகம்.

இத்தனியன் ப்ரம்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயர் அருளிச் செய்தது. ஒரு ஆசாரியனுக்கு ஒரே தனியன் இருக்க வேண்டுமென்றொரு கட்டுப்பாடு கிடையாது. ஆழ்வார்களுக்கும், மற்றும் சில ஆசாரியர்கட்கும் அவரவர் அருளிச் செய்த ப்ரபந்தம்தோறும் தனித்தனியாகவும் தனியனைப்பலவிடங்களிலே காண்கிறோம். அப்படி நம் தேசிகனுக்கு நயினாராசார்யன் அருளிச்செய்த 'ஸ்ரீமாந் வேங்கட நாதார்ய:' என்னும் தனியனைப் போல் இதுவும் ஒரு தனியன். அத்தனியனில் கவிதார்க்கிககேஸரீ என்று பரமதநிராஸத்தின் பெருமை தோற்றுவதாலே அதை ஸ்ரீ பாஷ்யம்போன்ற ஸம்ஸ்கிருத வேதாந்த க்ரந்தங்களின் அத்யயனத்துக்குத் தகுந்ததாக வைத்து, பகவத்விஷயம்போன்ற தமிழ்ப் ப்ரபந்தங்களில் இறங்கி பகவத்குணானுபவம் செய்யும்போது ஸ்ரீ தேசிகனிடத்தில், 'பரமாத்மநி யோ ரக்தோ விரக்தோऽபரமாத்மநி' என்கிறபடி பகவத்பக்திரூப ஜ்ஞானமும் விஷய வைராக்யமும் மேலிட்டு நிற்பதைத் தெளிவித்து அவற்றின் அநுஸந்தானத்தைப் புகட்டுகிறதோர் தனியனையும் வழங்குவது உசிதமென்று, ஆழ்வாராசாரியர்களுடையவும் அவர்களின் அர்ச்சைகளுடையவும், அவர்களின் அருளிச்செயல்களுடையவும் பெருமையைப்பிரதிஷ்டிதமாக்கியருளின இவ்வாச்சார்யவள்ளலுக்கு ப்ரம்மதந்த்ரஸ்வதந்த்ர ஜீயர் அருளிச்செய்தவித்தனியனை திவ்யப்ரபந்தத்தனியனாக நயினாராசார்யருள்பட எல்லோரும் நியமித்தருளினார்கள். நம்மாழ்வார் முதல் உடையவர் வரையிலுள்ள ஆசார்யர்கள் தங்கள் ஆசார்யர்களிடம் அத்யயனம் செய்யும்போது பத்யரூபமாகவே தனியனை யனுஸந்தித்து வந்தார்களா? இப்போது அவர்கள் விஷயமாக அநுஸந்தித்து வரும் தனியன்களெல்லாம் அவர்கள் காலத்தில் நேரில் அநுஸந்திக்கப்பட்டவையா என்று விமர்சிக்கத்தொடங்கினால் எல்லா சம்ப்ரதாயங்களிலும் இதற்கு மாறுபாடே நிலைநிற்கும். ஆகவே பிற்காலத்தில் யாராவது ஒரு பெரியோர் அருளிச்செய்த பத்யமும் பின்னுள்ளாருக்குத் தனியனாகக் குறையில்லை. நயினாராசார்யர் ஸ்ரீதேசிகனிடம் காலக்ஷேபம் செய்யும்போது இது இருந்திருக்கவில்லையானாலும் ப்ரம்ம

தந்த்ரஸ்வதந்த்ரஜீயர் முதற்கொண்டு திவ்யப்ரபந்த விஷயத்தில் தனியனாக வழங்கப்பட்டு வருகிறது. அங்கும் ஒவ்வொரு ஆசார்யருக்கும் தனித்தனியனை அனுஸந்தித்துப் பகவானளவாகக் குருபரம்பரையை ஸேவிக்கும்போது அனுஸந்திக்கப் படுவது, ‘ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய:’ என்னும் தனியனே. இப்படி பரம்பரானுஸந்தாநம் செய்த பிறகு ‘ஹ்தம் ஸரஹு’ என்று ஆழ்வார்கள் எல்லோரையும் அனுஸந்திப்பதற்கு முன்னம் ‘லக்ஷ்மீநாத’ என்று தொடங்கி சுருக்கமாய் குருபங்க்தியையும், விசேஷித்து உடைய்வரையும் நம்மாழ்வாரையும், முன் அனுஸந்தித்த தனியன் தவிர வேறு தனியனைச் சொல்லி யனுஸந்திக்கும்போது, தேசிகனுக்கு முன் ஏற்பட்டுள்ள அவ்வனுஸந்தான க்ரமத்துக்குப் பங்கமிராதபடி அவற்றிற்கு முன்னாக இந்த ‘ராமாநுஜதயாபாத்ரம்’ என்னும் தனியனையனுஸந்திப்பது ஸம்ப்ரதாயமாகையால், இது திவ்யப்ரபந்தவிஷயத்திலே உடையவர் நம்மாழ்வார் முதலானோருக்குப்போல விசேஷத்தனியன். ஸ்ரீமாந் வெஜுடநாயாயஃ என்பது எல்லா க்ரந்தங்களுக்கும் பொதுத்தனியன். அதை யனுஸந்திக்காத விடமே கிடையாது. அத்யயனம் செய்யப்படும் க்ரந்தத்தையோ, அதற்கு விசேஷ வ்யாக்யானத்தையோ இயற்றின ஆசார்யர் விஷயமாக க்ருதஜ்ஞதைக்காக விசேஷித்து அநுஸந்தானம் செய்யும்போதும் திவ்யப்ரபந்தத்திற்கு ‘ஸ்ரீமாந் வெஜுடநாயாயஃ’ என்பதை மறுபடி அநுஸந்திப்பதும் ஸம்ப்ரதாயம். ஆகவே அது எங்கும் குறிக்கப்படுகிறது. ஆக, உடையவர் முதலிய சில வாசார்யர் விஷயத்திலும் பொதுத்தனியன் வேறு; திவ்ய ப்ரபந்தத்தில் அதிகப்படி தனியனென்று. அங்ஙனமே தேசிகன் விஷயத்தில் இது என்று தெளியக்கடவது. இனி திவ்யப்ரபந்தத்திற்கேற்றவாறு இது அமைந்திருப்பதை இங்கே சுருங்கச் சொல்லுகிறோம்.

| | | | |
|---|---|---|---|
| ராமாநுஜ தயா பாத்ரம் | அப்புள்ளாரென்னப் படும் ராமாநுஜாசார்யருடைய க்ருபைக்குப் பாத்திரமாய், | ஸ்ரீமத் வேங்கட நாதார்யம் | திருவேங்கடமுடையானெனத்திருநாமம் பெற்ற ஆர்யருமான |
| ஜ்ஞாந வைராக்ய பூஷணம் | ஜ்ஞானம், வைராக்யம், இவற்றைப் பூஷணமாக வுடையராய், | வேதாந்த தேசிகம் | நிகமாந்தமஹாதேசிகனை |
| | | வந்தே | வணங்குகிறேன். |

உடையவரைப்போல் சித்திரைத் திருவாதிரையில் அவதரித்த அப்புள்ளாருக்கு ‘ராமாநுஜர்’ எனத் திருநாமமாகையாலே இப்பதம் அப்புள்ளாரைச் சொல்லுகிறது. அன்றி, உடையவரையே நேராகச் சொல்லி, அவருடைய ஸித்தாந்த ஸம்ப்ரதாய ஸம்ரக்ஷண துரந்தரரான தேசிகன், ‘தயைகஸிந்தோ: ராமாநுஜஸ்ய’ என்னப்படும் உடையவருடைய தயைக்கு அஸாதாரண பாத்ரமானவர் என்பதுமாம். இப்படி மாறன் திருவடிக் கீழ் வாழ்வதுகக்கும் இராமானுசமுனியினுடைய தயாபாத்ரமெனச் சொன்னதாலே நம்மாழ்வாரின் தயைக்குமிவர் பாத்ரமானவரென விளங்கும். அதுவன்றி, ராமாநுஜபதம் லக்ஷ்மணனைச் சொல்வதாகையால், லக்ஷ்மணனாய் அவதரித்த ஆதிசேஷன்போலே எம்பெருமானுக்குத் திருவடி நிலையாய் நின்ற சடாரியான நம்மாழ்வாரைக் குறிப்பதாகவுமாம். ரமாசிஷ்யரான விஷ்வக்ஸேநருக்கு அடுத்தவராகத் தோன்

றினதாலும் நம்மாழ்வார் ராமாநுஜராவர். ஆழ்வார்கள் எல்லோரும் தமக்கு அவயவங்களாகும்படி முக்யமாய் நின்ற நம்மாழ்வாரைச் சொன்னதாலே ஆழ்வார்கள் அனைவருடைய தயைக்குமிவர் பாத்ரமான வரென்றது தெளிவாகும். மேலும், 'ராமா' என்பது சூடிக் கொடுத்த பூமாலையாலும், பாமாலையாலும் எம்பெருமானை ரமிப்பிக்கும் ஸ்திரீரத்ந மான ஆண்டாளைச் சொல்லத் தக்கதாகையால் ராமாநுஜபதம், ஆண்டாள் எந்த ஆழ்வார்களுக்குப் பின் பிறந்தவளோ, அந்த ஆழ்வார்களை பஹு-வ்ரீஹிஸமாஸத்தாலும், த்வந்த்வ ஸமாஸத்தினாலே அவளையும் அவளுக்குப் பின் பிறந்தவர்களையும் குறிப்பதாகையாலே ஸர்வருடைய தயைக்குமிவர் பாத்ர மென்றது வ்யக்தமாகிறது. இப்படி ராமாநுஜபதம் பரதாழ்வாரைச் சொல்லி, 'பரதாய பரம் நமோ஽ஸ்து தஸ்மை, என்று தொடங்கி பாதுகாஸஹஸ்ர மருளிச் செய்த இவரிடத்தில் அவர் செய்த அநுக்ரஹத்தை யறிவிக்கும். இவ்வளவால் ஆசார்ய ப்ராவண்யமும் பாகவத ப்ராவண்யமும் இவரிடம் ப(ஃ)லபர்யந்த மானபடி ஸித்திக்கிறது.

இனி, ராமாநுஜபதம் இராமனையும் அவருக்குப் பிறகு அவதரித்த கண் ணனையும் கூறுவதாகையாலே, சரணாகதனான விபீஷணனை வ்யாஜமாக வைத்து, அபேக்ஷித்தால் ஸர்வருக்கும் அபயப்ரதானம் பண்ணத்தாம் ஸித்தமாயிருப்பதை ஸமுத்ரக் கரையிலே ஸதஸ்ஸிலே கோஷித்தருளின இராமனிடத்தில், அபயப்ர தானஸாரம் செய்தருளிய தேசிகனுக்குள்ள ஈடுபாடும், கீதோபதேசம் செய்து முடிவில், 'என்னைச் சரணமாகப் பற்று; நான் ரக்ஷிக்கிறேன்' என்று விசே ஷார்த்தங்களை விரித்துரைத்து விதித்துக்காத்தருளின கிருஷ்ணாவதாரத்திலே, 'ஹ்ருதி முக்த(ஃ)சிகண்ட மண்டந:' 'நாதாயைவ நம: பதம்' என்றவாறு ஸ்தோத்ரமும், யாதவாப்யுதயமும் செய்தருளின இவ்வாசார்யனுக்குள்ள ஈடு பாடும் கருதப்பட்டு அதற்கேற்ப அவர்களின் தயைக்கு இவர் பாத்ரமானது சொல்லப்பட்டதென்னலும் கூடும். ராமனைப் பின் பிறந்தவராகவுடைய பூர்வாவதாரங்களையும் ராமாநுஜபதம் சொல்லும். இப்படி முதற்பதம் ஆழ்வார் ஆசார்யர் முதலானோருக்கு இவரிடமுள்ள அபிமானத்தைச் சொல்லிற்று. இனி அதன் காரணத்தைக் குறிப்பன மேற்பதங்கள். அப்பதங்களிலுள்ள விசேஷங் களையும் இவ்வாறே ஆராய்ந்து கொள்க. இப்படி தேசிகன் தனியனாக அமைந்த இந்த ச்லோகமானது முதற்பதத்திலுள்ள அர்த்த கௌரவத்தாலே ஆசார்யாதி களெல்லோருடைய அநுஸந்தானரூபமானமையாலும் மிக்க மேன்மைப் பெற்று விளங்குகின்றது. இதற்குமேல் குருபரம்பரையை அநுஸந்திக்கும் தனியன் கூரத்தாழ்வான் அருளிச் செய்தது—.

𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑌾𑌥𑌸𑌮𑌾𑌰𑌮𑍍𑌭𑌾𑌂 𑌨𑌾𑌥𑌯𑌾𑌮𑌮𑌧𑍍𑌯𑌮𑌾𑌂 ।
𑌅𑌸𑍍𑌮𑌦𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌾𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌗𑍁𑌰𑍁𑌪𑌰𑌮𑍍𑌪𑌰𑌾𑌂 ॥

லக்ஷ்மீநாதஸமாரம்பாம் நாதயாமுநமத்யமாம் ।
அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம். ॥

| | | | |
|---|---|---|---|
| லக்ஷ்மீநாத ஸமாரம்பாம் | ச்ரிய:பதி தொடக்கமாய் | அஸ்மதாசார்ய பர்யந்தாம் | நமக்கு நேராக உபதேசம் செய்தவர் வரைக்குமுள்ளதுமான |
| நாத யாமுந மத்யமாம் | நாதமுனிகளையும் ஆளவந்தாரையும் இடையிலுள்ளவராகக் கொண்டதாய் | குருபரம்பராம் | குரு பரம்பரையை |
| | | வந்தே | வணங்குகிறேன். |

எம்பெருமான் ப்ரதமாசார்யன். அவன் எல்லா குருபரம்பரைக்கும் பொதுவானவன். அவனைத் தொடங்கிச் சதுர்முகன் முகமாக அனேக பரம்பரைகள் முன் இருந்தன. நம் குருபரம்பரையில் அவருக்குப் பின், நாதமுனிகளுக்கு முன் நடுவிலுள்ளவராவார்–பிராட்டியும், விஷ்வக்ஸேநரும், நம்மாழ்வாரும். ப்ரபத்தியை ப்ரதானமாகக்கொண்டு பாதிவ்ரத்யத்தைப் பூரணமாய் ஆதரிப்பவர்களின் பரம்பரையிலே தேவதாந்தரத்துக்கு ஆசார்யக ஸம்பந்தத்தை எம்பெருமான் இசையவில்லை போலும். 'நாராயணஸமாரம்பாம்' என்னுமல், 'லக்ஷ்மீநாத ஸமாரம்பாம்' என்றது இக்குருபரம்பரைக்குப் பிராட்டியின் ஸம்பந்தத்தாலேற்பட்ட சிறப்பையுணர்த்துவதற்காக, அனுக்ரஹத்தையே வடிவமாகக் கொண்ட பெரிய பிராட்டியார், ப்ரஜைகள் பரிதபிப்பதைப் பொறுக்க முடியாமல், தாமும் பெருமானும் இருவரும் சேர்ந்து பக்தருக்கும் ப்ரபந்நருக்கும் சேஷியாயும் உபாயமாயு மிருப்பது போல், ப்ரபந்நர் விஷயத்திலே தாம் புருஷகாரமாயுமிருக்கு மேற்றத்தையும், ப்ரபத்தி சாஸ்த்ரார்த்தத்தையும் ப்ரசுரப்படுத்துவதற்காகத் தாமும் பெருமானைப்போல் குருபரம்பரையில் நிற்க நினைத்து, பகவானிடத்திலே தமக்குள்ள பாரதந்த்ர்யத்திற்கேற்ப அவன் நியமநம் பெற்று, 'த்வதீயபுக்தோச்சித சேஷ போஜிநா த்வயா நிஸ்ருஷ்டாத்மபரேண, 'விஷ்வக்ஸேநே விந்யஸ்தஸமஸ்தாத்மைச்வர்யம்' என்கிறபடி ஸர்வநிர்வாஹகரான சேனைமுதலியாரைக் கொண்டு நம்மாழ்வாருக்குப் பரதத்வ பரமஹித பரம புருஷார்த்தங்களை நாட்டார் அறியும்படி நிரூபிக்க நியமித்தருளினமையால் இக்குருபரம்பரைக்கேற்ற முண்டு.

ந்யாயதத்வமென்னும் சாஸ்த்ரத்தையும், யோகரஹஸ்யத்தையும் ஜ்ஞானபக்திபரிவாஹமாக அருளிச்செய்த நாதமுனிகளுக்குப் புறமதங்களை நிரஸித்து உபயவேதாந்தஸ்தாபநம் செய்வதிலுள்ள ஸாமர்த்யம் அபாரம். அப்படியே ஆளவந்தார் எனப்புகழ் பெற்ற யமுனைத்துறைவர்க்கும். இங்கே 'ராமாநுஜார்ய பர்யந்தாம்' என்னாது 'அஸ்மதாசார்ய—' என்றது பின்னுள்ளார் தங்கள் தங்களாசார்யன் வரையில் அனுஸந்திக்க அனுகூலமாயிருக்க வேண்டுகைக்காக.

இப்படி ஸம்பூர்ண குருபரம்பரையைத் தொழுவதாயிற்று. இனி விசேஷித்து, கீதை, ப்ரம்மஸூத்ரம் முதலியவற்றின் உண்மைப் பொருட்களை வெளியிட பாஷ்யாதிகளை அருளிச்செய்து உபயவேதாந்தப்ரவசனம் பண்ணி தர்சந ஸ்தாபகரான எம்பெருமானாரைச் சரணம் புகத் தனியே ஒரு தனியனைச் செய்து முன் ச்லோகத்திலேயுள்ள 'அஸ்மதாசார்ய' என்னும் பதத்தையும் 'அஸ்மத்குரோ:' என்று விசேஷணமாக்கி விவரித்தருளுகிறார்—

யோ நித்யமச்யுதபதாம்புஜயுக்மருக்மவ்யாமோஹதஸ்ததிதராணி
த்ருணாய மேநே ।
அஸ்மத்குரோர்பகவதோऽஸ்ய தயைகஸிந்தோ: ராமாநுஜஸ்ய
சரணௌ சரணம் ப்ரபத்யே ॥

யோ நித்யம் அச்யுதபதாம்புஜயுக்மருக்மவ்யாமோஹத: ததிதராணி
த்ருணாய மேநே ।
அஸ்மத்குரோர் பகவதோऽஸ்ய தயைகஸிந்தோ: ராமாநுஜஸ்ய
சரணௌ சரணம் ப்ரபத்யே ॥

| | | | |
|---|---|---|---|
| யா: | எந்த எம்பெருமானார் | அஸ்மத்கு ரோ: | (பகவத் விஷயமான திருவாறாயிரப்படி யருளிச்செய்த திருக்குருகைப்பிரான் பிள்ளான் முதலான) நமக்கு (உபயவேதாந்தப்ரவசனம் முதலிய வற்றைச் செய்து) அஜ்ஞானம் நீக்கின வாசார்யராய் |
| நித்யம் | எப்போதும் | | |
| அச்யுத பதாம்புஜ யுக்மருக்ம வ்யாமோஹ த: | எம்பெருமானுடைய திருவடித்தாமரை யிணையாகிற ஸ்வர்ணத்திலே அளவு கடந்த வாசையினால் | | |
| ததிதராணி | மற்றவைகளை | தயைகஸிந் தோ: | தயைக்கோர் ஸமுத்ரமான |
| த்ருணாய | த்ருணத்தினும் கீழ்ப் பட்டவைகளாக | பகவதோ ராமாநுஜஸ்ய | எம்பெருமானாரென்னப்படும் பகவத் ராமாநுஜருடைய |
| மேநே | நினைத்தாரோ, | | |
| அஸ்ய | இந்த (ஜ்ஞானவைராக்ய பூஷணராய்) | சரணௌ | திருவடிகளை |
| | | சரணம் | சரணமாக |
| | | ப்ரபத்யே | பற்றுகிறேன். |

'பரமாத்மநி யோ ரக்தோ விரக்தோऽபரமாத்மநி' என்றவாறு எம்பெருமான் திருவடிகளையே ஜ்ஞான பக்தி வைராக்ய ப்ரகர்ஷத்தாலே அநுபவித்து ப்ராப்யமாகக் கொண்ட எம்பெருமானார் திருவடிகளே நமக்குக் கதியாம். 'அச்யுத' என்றமையால் எம்பெருமானிடத்திலே இவர்க்குள்ள வ்யாமோஹத்திற்கேற்ப, 'க்ஷணேऽபி தே யத்விரஹோऽதிதுஸ்ஸஹ:' என்கிறபடியே கணப்பொழுது கூட இவரை விட்டுப் பிரிந்திருப்பதை ஸஹியாதவன் அவனென்றும் சொன்னதாம்.

இனி வேதாந்தார்த்தத்தை விசதமாகத் தெளிவிக்கின்ற ப்ரபந்தங்கள் அனைவற்றையும் உபதேசித்து ப்ரபந்ந ஜநகூடஸ்தராய் நின்ற நம்மாழ்வார் விஷயமாக ஆளவந்தார் அருளிச் செய்த பத்ய ரத்நம்—

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூதி: ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம் ।
ஆத்யஸ்ய ந: குலபதேர்வகுளாபிராமம் ஸ்ரீமத்ததங்க்ரியுகளம்
ப்ரணமாமி மூர்த்நா ॥

*மாதா பிதா யுவதய: தநயா: விபூதி: ஸர்வம் யதேவ நியமேந*
*மதந்வயாநாம் |*

*ஆத்யஸ்ய ந: குலபதே: வகுளாபிராமம் ஸ்ரீமத் ததங்க்ரியுகளம்*
*ப்ரணமாமி மூர்த்நா ||*

| | |
|---|---|
| யத் ஏவ | எந்த அடியிணையே |
| மதந்வயாநாம் | என் குலத்திலுள்ளவர் (முன்னோர் பின்னோர்) கட்கு |
| நியமேந | எப்போதும் |
| மாதா | தாயும் |
| பிதா | தந்தையும் |
| யுவதய: | மனைவிகளும் |
| தநயா: | பிள்ளைகளும் |
| விபூதி: | ஐச்வர்யமும் |
| ஸர்வம் | ஸர்வ புருஷார்த்தமும் (ஆகிறதோ), |
| தத் | அந்த |
| வகுள அபிராமம் | மகிழம் பூக்களால் அழகு பெற்ற |
| ச்ரீமத் | (ஆச்ரிதர்களை உய்விக்கும்) பெருமையுள்ளதுமான |
| ஆத்யஸ்ய | முதல்வரான |
| ந: குலபதே: | நம் வம்சத்துக்கு ஸ்வாமியானவ (நம்மாழ்வார்)ருடைய |
| அங்க்ரியுகளம் | திருவடியிணையை |
| மூர்த்நா | தலையால் |
| ப்ரணமாமி | வணங்குகிறேன். |

உலகிற் பிறந்தவர்கட்குத் தங்கள் வயதுக்குத் தக்கவாறு படிப்படியாகத் தாய் தந்தை முதலானவர்களும் பல போக்யங்களும் அவச்யமாக வேண்டுமல்லவா? நம்முடைய வித்யா வம்சத்திலே பிறந்தவர்கட்கு நம்மாழ்வார் திருவடி ஸர்வகாலத்திலும் ஸர்வ விதமாய் நின்று ஸர்வோபகாரத்தையும் தந்து வருகிறது. நம்மாழ்வாருக்கு வகுள பூஷண ரெனத் திருநாமம். 'நாட்கமழ் மகிழ்மாலைமார்பினன் மாறன் சடகோபன்.' மகிழம்பூப் போலே எவ்வளவு நாட்களானாலும் அழியா மணம் பெற்று எல்லோரையும் மகிழச் செய்கிறது அவர் ப்ரபந்தமென்று அவர் அணிந்துள்ள மகிழ்மாலை அறிவிக்கிறது. திருப்புளிய மரத்தின் கீழ் வீற்றிருந்த இவர், மகிழ மரத்தின் கீழே மந்த்ரக்ரஹணம் பண்ணி தர்சநஸ்தாபநம் செய்யப்புகும் எம்பெருமானாரை அதன் பூக்களை அணிந்து அபிமானித்தார்போலும். ஸர்வகந்த ஸம்பூர்ணமான இவர் திருமேனி ஸம்பந்தத்தினாலே திருப்புளி மரத்திலிருந்து விழும் மலர்கள் கூட மணம் பெற்று மகிழம்பூக்களாக மாறிவிடுமே. ஆழ்வார் எழுந்தருளியிருந்தபோது அவர் திருவடிகளில் ஆச்ரிதர்கள் அவருக்கு அபிமதங்களான மகிழம்பூக்களை ஸமர்ப்பித்தது இங்கு உரைக்கப்படுகின்றது. அன்றி, ஆழ்வார் வகுளபூஷணராகையாலே அவருடைய திருவடி நிலைகளை நாதமுனிகள் வம்சத்திலே அப்போது தினந்தோறும் மகிழம்பூக்களைக் கொண்டு ஆராதித்து வந்தனர். ஆக அந்தப்பாதுகைகளை இங்கே அநுஸந்தித்தபடி. அதற்காகவே 'வகுளோஜ்ஜ்வலஸ்ய' என்றவாறு அவருக்கு விசேஷணமாக நேர்படச் சொல்லாமல் திருவடிக்கு விசேஷணமாக இப்படியருளினதாம். 'மூர்த்நா ப்ரணமாமி' என்றது மனத்தினாலும் வாயினாலும் செய்வதோடு நிற்காமல், தலைவணங்கி சாஸ்த்ர ஸம்மத ஸர்வப்ரக்ருஷ்ட நமஸ்காரங்களையும் செய்கிறேனென்றவாறு.

இனி நாதமுனிகளுக்கு இவ்வாழ்வார் உபதேசித்த ப்ரபந்தங்களை ஆதியில் அருளிச்செய்த ஆழ்வார்கள் எல்லோரையும் சேர்த்து ஸர்வப்ரபந்தகர்த்

தாக்களையும் அநுஸந்திப்பதற்காகத் திருக்குருகைப்பிரான்பிள்ளான் அருளிச் செய்த தனியன்—

भूतं सरश्च (स्य) महदाह्वय भट्टनाथ श्रीभक्तिसार
कुलशेखरयोगिवाहान् ।
भक्ताङ्घ्रिरेणु परकाल यतीन्द्रमिश्रान् श्रीमत्पराङ्कुशमुनिं
प्रणतोऽस्मि नित्यम् ॥

பூதம் ஸரச்ச (ஸ்ய) மஹதாஹ்வய பட்டநாத ஸ்ரீ பக்திஸார
குலசேகரயோகிவாஹாந் ।

பக்தாங்க்ரிரேணுபரகால யதீந்த்ரமிச்ராந் ஸ்ரீமத்பராங்குசமுநிம்
ப்ரணதோऽஸ்மி நித்யம் ॥

| | |
|---|---|
| பூதம் | பூதத்தாழ்வாரையும் |
| ஸரஸ்ய | பொய்கையில் அவதரித்த ஆழ்வாரையும் |
| மஹதாஹ்வய | பேயாழ்வாரையும் |
| பட்ட நாத | பட்டர் பிரானென பெரியாழ்வாரையும் |
| ச்ரீபக்திஸார | திருமழிசையாழ்வாரையும் |
| குலசேகர | குலசேகர ஆழ்வாரையும் |
| யோகிவாஹாந் | திருப்பாணாழ்வாரையும் |

| | |
|---|---|
| பக்தாங்க்ரி ரேணு பரகால யதீந்த்ர மிச்ராந் | தொண்டரடிப் பொடியாழ்வாரையும் திருமங்கையாழ்வாரையும் எம்பெருமானாரையும் |
| ஸ்ரீமத் | (இவர்களெல்லோரும் தமக்கு அங்கமாகும் படி) ஆசார்ய ஸ்ரீ பொருந்திய |
| பராங்குசமுநிம் | நம்மாழ்வாரையும் |
| நித்யம் | எப்போதும் |
| ப்ரணத: | வணங்கினவனாய் |
| அஸ்மி | ஸத்தை பெறுகிறேன். |

ஸரஸ்ய என்ற பாடமும் பழைய பதிப்புகளிலேறியிருக்கின்றது. ஆழ்வார்களை ஒவ்வொரு அவயவமாகவும் நம்மாழ்வாரை அவயவியாகவும் கற்பனை செய்பவர் பொய்கையாரையும் பேயாரையும் இரு கண்களாக ரூபணம் செய்தனர், அப்போது ஒரு கண்ணை மற்றொரு கண்ணை விட்டுப் பிரிப்பதை விட ஸரஸ்ய மஹதாஹ்வய என்றொரு பதமாகச் சேர்த்து அநுஸந்திப்பது உசிதமாம். ஆயினும் ச்லோகத்தில் 'உம்' என்னும் பொருள் தெளிவாவதற்குச் சகாரம் ஒன்று வேண்டியிருப்பதால் ஸரச்ச என்கிற பாடத்தையே வெகுவாக ஆதரித்தனர் போலும். மஹத் என்னும் பதத்துக்குப் 'பெரிய' எனப்பொருளாகையால் பெரியாழ்வாரை யன்றோ மஹதாஹ்வய ரென்னவேண்டும். ஆக மயிலையாழ்வார் மஹதாஹ்வயர் ஆனது எங்ஙனே எனில்—இவர் பகவதநுபவரஸத்திலே மூழ்கி ஆடிப்பாடி அழுது சிரித்துப் பேய் போலிருந்ததால் பேயாழ்வாரென்று பிறகு அழைக்கப்பட்டாலும் 'மஹாந்' என்று நாமகரணத்திலிட்டப் பெயராகலாம். முதலாழ்வார் மூவரில் பின்னால் அவதரித்த இவருக்கு முன் அவதரித்த அவ்விருவரைவிட சில ஏற்றங்களைக் கொண்டும் இப்பெயர் பிறந்திருக்கக்கூடும். இவர் மஹான்; பெரியாழ்வார் மஹத்தரர் என்று, 'மஹதோ மஹத்தரவதோ நமாமி' என்கிற கோதாஸ்துதி ஸூக்தியிலிருந்து தெரியவருகிறது. அன்றி—,

இந்த கோதாஸ்துதி ச்லோகத்திற்கு வேறு கருத்தும் கொள்ளலாம். அதாவது—மற்ற ஆழ்வார்களின் ப்ரபந்தங்களிற் காட்டிலும் விலக்ஷணமாய், மங்களாசாஸநிரூபமாய், இதொரு க்ருஷ்ணகர்ணாம்ருதமென்னக்கூடும் திருமொழி இயற்றியதால் பெரியாழ்வாரென்கிற பெயரை எம்பெருமான் ப்ரஸாதித்தார். ஆண்டாள் சூடிக்கொடுத்த மாலையை ஸமர்ப்பித்துவந்ததாலே மஹான் என்றதற்கு மேற்பட மஹத்தரர் என்று சொல்லவேண்டும்படி அநுக்ரஹம் ஏற்பட்டது. ஆக அவருடைய மேன்மையைப் பார்த்தபோது பெரியாழ்வார் என்ற திருநாமம்கூடப் போதாதென்று திருவுள்ளமாம். ஆனாலும் பேயாழ்வாருக்கு முன் சொன்னபடியிலே மஹதாஹ்வயரென்ற பெயர் கூடும்.

பட்டநாதர் பட்டர்பிரான். பகவானை ஸ்துதிப்பதோடு ஸர்வதோமுகமான ஜ்ஞானாதிகளையும் பெற்றதால் பட்டரெனப்பட்டவர்கட்கு நாதனிவர். இப்பெயர் பரதத்வஸ்தாபனம் செய்த இவ்வாழ்வாருக்குப் பிருதநாமமாகலாம். யோகிவாஹ:—இப்பதம் லோகஸாரங்க மாமுனி ரங்கநாதனுடைய நியமனப்படித் திருப்பாணாழ்வாரைத் தம் தோளிலேற்றி அழைத்து வந்ததால் இவர் முநிவாஹநரானமையைக் குறிக்கிறது. இங்கே ஆண்டாளையும் மதுரகவிகளையும் சொல்லாதொழிந்தது அவர்களை அடைவே பெரியாழ்வாரிலும் நம்மாழ்வாரிலும் உள்ளிட்டு, அதன் மூலம் அவர்கள் இசைந்துள்ள அதிக பாரதந்த்ர்யத்தைத் தெளிவிப்பதற்காக. 'பட்டநாத ஸ்ரீ' என்கிறவிடத்தில் ஸ்ரீபதத்தாலே அவருடைய செல்வமான ஆண்டாளையும், 'ஸ்ரீமத் பராங்குச' என்றவிடத்தில் ஸ்ரீபதத்தாலே மதுரகவிகளையும் குறிக்கலாமென்று சில வாசார்யர் கருத்து. இங்கு ஆழ்வார்கள் கோஷ்டியிலே எம்பெருமானாரைச் சேர்த்தது, அமுதனார் செய்த நூற்றந்தாதியும் நாலாயிரத்திற் சேர்ந்ததாகையால் அதற்கு ஒரு விதத்திலே ப்ரயோஜககர்த்தராக நின்றவர் எம்பெருமானாரென்கிற அபிப்ராயத்தாலே யென்று முன்னமே சொன்னோம்.

அவதாரக்ரமமாக ஆழ்வார்களை வரிசைப்படுத்தாமல் இப்படியருளிச்செய்தது ஏனென்பர் சிலர். அவதாரக்ரமத்தைப்பின் பற்றியே சொல்லவேண்டுமென நிபந்தனையேன்? நாலாயிரப்ரபந்தங்கள் அவதாரக்ரமத்திற்கிணங்க இணைக்கப்பட்டனவா? 'பொய்கைமுனி பூதத்தார்—' என்கிற பாசுரத்திலே ஸ்ரீதேசிகன் வேறொரு க்ரமத்திலே ஆழ்வார்களை அநுஸந்திக்கவில்லையா என்பர் மற்றும் சிலர். இங்குச் சொன்ன க்ரமத்திலே பூதத்தார் முதல், பாஷ்யகாரர் வரையிலுள்ளவர்களைச் சிரஸ்ஸு முதல் திருவடி பர்யந்தமான அவயவங்களாகவும், நம்மாழ்வாரை அவயவியாகவும் கற்பனைசெய்து சில ச்லோகங்கள் இருப்பதால் இதனை யநுஸரித்து இவ்விதமருளிச் செய்ததாகச் சிலர் கூறுகின்றனர். "இவ்வித கற்பனைதானும் இந்தத் தனியனைப் பார்த்தபிறகு செய்யப்பெற்றது. இல்லையேல், பூதத்தாரே சிரஸ்ஸு, பொய்கையாரே கண் என்றெல்லாம் கட்டளைப் படுத்துவதற்குக் காரணம் யாது? மேலும், மதுரகவிகளைப் போல் நேர் சிஷ்யரான நாதமுனிகளை நம்மாழ்வாரின் திருவடியாகக் கற்பனை செய்வதை விட்டு எம்பெருமானாரைச் சேர்த்ததேன்? இந்த ச்லோகத்திலே

அண்டாளையும் மதுரகவிகளையும் தனிப்பட நிர்தேசிக்காமலிருக்க, தற்பனை ச்லோகங்களிலே ஆண்டாளை விட்டு மதுரகவிகளை மாத்திரம் விசேஷித்துச் சொன்னது யுக்தமா? அந்த ச்லோகங்களின் ரசனையும் சுத்தமாய் ச்லாகநீயமாய் இல்லையே'' என்று பலர் ஆக்ஷேபிக்கின்றனர். இங்கு பூதத்தாரை மாத்திரம் பிரித்துச் சொல்வதற்கு யாதொரு காரணமுமிராமையினால், 'காஸாரஸூக்ஷஹாஹ்வய' என்றே ப்ராசீநபாடமென்றும் சிலர் வாதிக்கின்றனர். அவ்வித பாடம் எங்காவது ப்ரசாரத்தில் இருக்கிறதாவென்று ஆராய்ந்தே அதையொரு பாடமாகக் கொள்ளவேணுமென்று பிறர் கருதுகின்றனர். இம்மாதிரி விஷயங்களில் உட்புகுந்து விசேஷவிமர்சம் செய்வது ஸாவகாசரான ஸஹ்ருதயரின் கார்யமாகும்.

---

விஶ்வாஸம் ஸத்த்வதம் விதந்வாநமயம் வாஜிஸம்பவம் வந்தே ।
வ்யாவ்யாஸம் ... ப்ரத்யக்ஷம் ப்ராஹ்மணம் தேசிகம் பஜே ॥

இத்திவ்ய ப்ரபந்தங்களில் திருவாய்மொழிக்கு, திருக்குருகைப்பிரான் பிள்ளான் திருவாய்மலர்ந்தருளிய திருவாறாயிரப்படியையே பூரணமாகப் பின்பற்றி அதன் பொருட்சுவைகள் செவ்வனே வெளிப்படையாக விளங்கும்படி உடையவரின் ஓர் ஒப்பற்ற அவதாரமாகையாலே, 'ஸாக்ஷாத் ஸ்வாமி' எனப் புகழ்பெற்ற, ஜ்ஞான வைராக்யாநுஷ்டானசேவதி ஸ்ரீமத்வேதாந்த ராமாநுஜ மஹாதேசிகன் அருளிச்செய்த இருபத்தினாலாயிரப்படி சப்தார்த்தமொன்றே உள்ளதைத்தெளிய உண்மையிற்போதுமானதாகுமென்பது ப்ரபந்த ரஸிகருக்கு ப்ரத்யக்ஷம். மற்ற மூவாயிரத்துக்கும் ப்ராசீனமான உரைகள் உள. அவற்றில் முந்தியவுரையினுரைத்த படிகளில் சிலவற்றை விட்டு வேறு படிகளிலே மூலத்தை விவரித்து ஸ்ரீ ஸூக்திகளை யனுபவிப்பதையும் சில ப்ரபந்தங்களிலே காண்கிறோம். இதற்குப் பெரியாழ்வார்திருமொழிக்குத் திருவாய்மொழிப் பிள்ளை பணித்த உரையைப் பெரும்பாலும் பின்பற்றினபோதிலும் பலவிடங்களிலே பதார்த்த வாக்யார்த்தங்களை வேறுக்கி விவரிக்கும் மணவாள மாமுனி மொழிந்த வுரையே சான்றாகும். ஆகச் சிற்சில விடங்களிலே வேறுவிதமாகப் பொருள் உரைப்பதினாலே, மூலம் பலவிதமாகப் பொருள் அளிக்கும்படி அமைந்திருப்பதைத் தெளிந்து மேன்மேலும் ஆராய்ச்சி செய்து அர்த்த கௌரவத்தைக் கண்டு களிப்பதற்குக் கண்காட்டினபடியாகுமேயன்றி, முந்தியவுரைக்குக் குறைகூறினதாகாது. ப்ரபந்தமாகிற இப் பெருங்கடலிலே கிடக்கும் பலவகை மணி முத்துப்பவளங்களிலே, 'இதுவு மொன்றாகும், இதுவுமொன்றாகும்' என நினைத்து ஏதோ தோன்றினதைப் பொறுக்கி எடுக்கிறோம். இவற்றிற் சிலவற்றை நல்லவையாகக்கொண்டாலும் நம் ப்ரயாஸத்திற்குப் பலன் உண்டு.

முதலாயிரத்தின் முதலிலுள்ளது பெரியாழ்வார் ப்ரபந்தம். பெண்ணுருவங்கொண்டு பக்தர்கள் எல்லோரும் ஆசைப்படும்படி அதிமனோஹரனாய் ஸர்வாங்க ஸுந்தரனுமான ஸர்வேச்வரன் விஷயத்திலே ஆண்டாளைப்போலே மற்ற ஆழ்வார்கள் அனுபவம் பெறுவது அரிதாகும். ஏனெனில், இவள் இயற்கையிலேயே பெண். அவர்கள் ஆடவர்தன்மையைத் தங்களிடத்தில் ஏறிட்டு

அனுபவிக்கத் தொடங்கினவர்கள். ஆக அவர்கள் அவனோடு கலந்து
பரிமாறினதாகப் பாவிக்கலாம். உண்மையில் அது நடந்தேறுவதில் ச்ரமமுண்டு.
ஆகவே மஹர்ஷிகளும் கோபஸ்த்ரீகளாகப் பிறந்தே கண்ணனோடு கலந்து
களித்தனர். இதைக் கோதாஸ்துதியிலே தேசிகன் ஒருவாறு அருளிச்செய்தார்.
மேலும் ஆண்டாள் பூமிப்பிராட்டியின் அவதாரம். மற்றவர் அவளுக்கு சேஷ
பூதர்களான நித்யஸூரிகளின் அம்சம். ஆகையால் ஆண்டாள் ப்ரபந்தத்தை
முதலாகக்கொள்வது உசிதம். ஆயினும் ஆண்டாள் தன் ஸ்த்ரீஸ்வபாவத்திற்
கும், தமப்பனாருடைய ஜ்ஞான பக்தி வைராக்யங்களுக்கு மிணங்க அவருக்கு
அத்யந்தம் பரதந்த்ரையாயிருக்க இசைந்திருந்ததால் அவளுடைய ப்ரபந்தங்க
ளுக்கு முன்னமே பெரியாழ்வார் ப்ரபந்தத்திற்கு இடம் கொடுத்து எல்லா ப்ர
பந்தங்களுக்கும் முதன் முதல் இதை அமைத்தனர். அன்றி, இவர் அருளிச்
செயலின் தொடக்கத்திலுள்ள திருப்பல்லாண்டானது ஸ்ரீ வைஷ்ணவ ஸமுதா
சார ப்ரகாசகமாய், வேதத்திற்கு ப்ரணவம்போலே ஸர்வப்ரபந்தத்திற்கும் முத
லில் அநுஸந்திக்கும்படியிருப்பதாலும் இவர் ப்ரபந்தம் முதலில் நின்றது.
அன்றியும், ஆழ்வார்கள் எல்லோரும் மயர்வற மதிநல மருளப்பெற்ற நித்ய
ஸூரிகளானபடியாலே ஸர்வ வேதங்களையும் ஸாக்ஷாத்கரித்தே அவற்றின்
பொருள்களை விளக்க ப்ரபந்தங்களைச்செய்தார்களானாலும், அவ்வேதங்களையே
தாங்கள் எடுத்துரைக்கும்படி அதிகாரமோ அவகாசமோ அவர்கள் பெற்று
ரில்லை. பெரியாழ்வார் அவற்றையும் பெற்று ப்ரகாசமாகப் பணித்தருளினர்.
தம் காலத்திலே வேதவேதாந்தங்களைப் பலருக்கும் நேரில் கற்பித்து மருளினர்.
இவரைக் 'கல்பஸூத்ரவ்யாக்யாதாக்களான பெரியாழ்வார்' என்று தேசிகன்
புருஷார்த்தகாஷ்டாதிகாரத்திலே கொண்டாடினதையும் காண்க. மேலும்,
இவர் ஸர்வவேதமயமான பெரிய திருவடியின் அம்சம். மேலும், அனுபவத்
திலே இழிந்திருந்ததுமாத்திரமல்லாமல் வாதப்போரிலே வித்வான்களை ஜயித்து
வ்யாஸாதிகளைப்போலே தத்வநிர்ணயம் செய்தவர் இவர். இவை நிற்க, இவ
ருக்கு மற்றவரைப்போல் ஸர்வேச்வரனிடம் வணங்கி வழிபடுதலன்றியே அவ
னுக்குப் பல்லாண்டு பாடி மங்களாசாஸநம் பண்ணும்படிக்குள்ள ப்ரேமப்ரகர்
ஷத்தைப் பார்த்தாலும் இது ந்யாயமாக விளங்கும். இவர் எம்பெருமானுக்கு
மாமனாருமானவராகையாலே மங்களாசாஸநம் செய்ய உரிமைப் பெற்றவரு
மாவர். இப்படி இவரிடம் பூமிப்பிராட்டியார் அவதரிக்கத் தக்கவாறு 'ஏழாட்
காலும்பழிப்பிலோம் நாங்கள்' என்கிறபடி இவருக்குள்ள குல கோத்ர ஜ்ஞாந
வைராக்யாநுஷ்டாநங்களும் இவரைப் பெரியாழ்வாரெனப் பேர் பெறும்படிச்
செய்கின்றன. இவருடைய பாசுரங்கள் கர்ணாம்ருதங்கள்; எம்பெருமானைப்
பால்யபர்வம் தொடங்கி யநுபவிக்க அதன் பரிவாஹமாகப் பாலருக்கும் தெளி
வாகும்படி ஸரளமான நடையிலே ஸரஸமாய் வெளிவந்தவைகள். ஆகவே
இவர் ப்ரபந்தமே முதன் முதலாக அமைக்கப்பெற்றது. இவற்றையெல்லாம்
கருத்திற்கொண்டு இவர் விஷயத்திலே நாதமுனிகள் அருளிச்செய்த தனியன்—

𑌗𑍁𑌰𑍁𑌮𑍁𑌖𑌮𑌨𑌧𑍀𑌤𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌹 𑌵𑍇𑌦𑌾𑌨𑌶𑍇𑌷𑌾𑌨𑍍 𑌨𑌰𑌪𑌤𑌿𑌪𑌰𑌿𑌕𑍢𑌪𑍍𑌤𑌂

𑌶𑍁𑌲𑍍𑌕𑌮𑌾𑌦𑌾𑌤𑍁𑌕𑌾𑌮𑌃 |

[illegible] ஸாக்ஷாத் த்விஜகுலதிலகம் தம்
விஷ்ணுசித்தம் நமாமி ;

குருமுக மநதீத்ய ப்ராஹ வேதாந் அசேஷாந் நரபதி
பரிக்லப்தம் சுல்கம் ஆதாதுகாம: ।
ச்வசுரம் அமரவந்த்யம் ரங்கநாதஸ்ய ஸாக்ஷாத்
த்விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ॥

| | |
|---|---|
| (ய: | எந்த ஆழ்வார்) |
| நரபதி + | (வல்லபதேவனென்னும்) அரசனாலே |
| பரிக்லப்தம் | ப்ரகாசமாய் ஏற்படுத்தப் பட்ட |
| சுல்கம் | பந்தயப்பொருளை |
| ஆதாதுகாம: | ஸ்வீகரிக்க விரும்பினவராய் |
| அசேஷாந் | ஸமஸ்தமான (ருக்-யஜுஸ்-ஸாம அதர்வரூபங்களான) |
| வேதாந் | வேதங்களையும் |
| குருமுகம் | ஆசார்யன் முகமாக |
| அநதீத்ய | கற்காமலே |
| ப்ராஹ, | ப்ரவசனம் செய்தாரோ" (அர்த்தத்தை விளக்கி விசதமாகச் சொன்னாரோ), |
| ஸாக்ஷாத் | நேராகவே |
| ரங்கநாதஸ்ய | அழகியமணவாளனுக்கு |
| ச்வசுரம் | மாமனாராகவும் |
| அமர + வந்த்யம் | தேவர்களாலே வணங்கத்தக்கவரும் |
| த்விஜகுல + திலகம் | வேதமோதுபவரின் குலத்திற்குத் திலகம்போன்றவருமான |
| தம் | அந்த |
| விஷ்ணுசித் தம் | விட்டுசித்தரென்னும் பெரியாழ்வாரை |
| நமாமி | வணங்குகிறேன். |

'அநதீத்ய' என்பதே போதுமாயிருக்க குருமுக மென்றது பிழையிராமல் ஸ்வரவர்ணங்களை உச்சரிப்பதும், நிருக்த வ்யாகரணாதிகளுக்கு விரோத மிராத படி வைதிக பதங்களுக்குப் பொருள் கூறுவதும், யுக்தி ப்ரகாணாதிகளுக்கேற்ப வாக்யார்த்த நிஷ்கர்ஷம் செய்வதும் கசடறக் கற்பிக்கும் குருவின் ஸம்பந்த மின்றி சாத்தியமாகாதென்று தெளிவிக்கைக்காக. அன்றி, 'குருமுகம்' என்பதை 'ப்ராஹ' என்கிற க்ரியைக்கு விசேஷணமாக்கி, குருமுகமாயிருக்கும்படி உரைத்தார்—சிர காலம் குரு குலவாஸம் செய்தவர் உரைக்குமாறு உரைத்தார் என்று கொள்ளலாம். அல்லது 'ப்ராஹ' என்பது த்விகர்மகமாகக் கூடியதாகையால் வெஹாடு என்பதைப் போல் குருமுகம் என்பதையும் ஒரு கர்மகாரகம் என்று கொண்டு அந்தந்த வேதவேதாந்தாதிகளை அத்யாபனம் செய்யும் பலவாசார்யர்களையும், செல்வநம்பி யென்னும் புரோஹிதரையும் முகமாக்கியுள்ள பெரும் ஸதஸ்ஸைக் குறித்து ஸர்வவேதங்களையும் ஸார்த்தகமாகக் கற்பித்தாரென்றதாம்.

பாண்டிய குலத்திற் பிறந்த (வல்லபதேவனென்னும்) ஓர் அரசன் பரதத்வநிர்ணயம் செய்து உய்ய வழி தேட ஆசைப்பட்டு, தம்மிடம் புரோஹிதராய் மஹா பாகவதருமாயிருந்த செல்வநம்பியார் சொன்னபடி விசேஷமாகத் தனத்தை யெடுத்து வித்யாசுல்கமாகக் கட்டி, வித்வான்களை வரவழைத்து ஒரு பெரும் ஸபை சேர்த்து, வாதப்ரதிவாதங்களை நடத்தி வைத்தான். அப்போது

பெரியாழ்வார் அங்கே எழுந்தருளித் தாம் அத்யயனம் செய்யாத சாகைகளிலுள்ள ப்ரமாணவசனங்களையும் கூட பலபடி உத்கோஷித்துச் சைவப், சாக்தம் முதலான மதங்களை நிரஸித்து ஸ்ரீமந் நாராயணனே பரதத்வமென்பதை அந்தந்த வேத மறிந்த அவ்வாதிகள் அனைவரும் ஆமோதித்துப் பணிந்து நிற்கும்படிப் பரக்க நிரூபித்து, அக்கிழியை யறுத்து, 'அச்யுத: ப்ரீயதாம்' என்று சுல்கதனத்தை எடுத்துக் கொண்டார். ஆண்டாளை வளர்த்து நேரில் அழகிய மணவாளனோடு விவாஹம் செய்துவைத்து அவருக்கு ச்வசுரரானார். இம் மாதிரிக்குள்ள ப்ரபாவங்கள் இங்கே சுருங்க அருளிச் செய்யப் பெற்றன.

பாண்டியபட்டர் அருளிச் செய்த தனியன்கள்—

மின்னார் தடமதிள்சூழ் வில்லிபுத்தூ ரென்றொருகால்
சொன்னார் கழற்கமலம் சூடினோம்—முன்னாள்
கிழியறுத்தா னென்றுரைத்தோம் கீழ்மையினிற் சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமே வந்து.

| | | | |
|---|---|---|---|
| நெஞ்சமே | மனதே (உன் ஸஹாயத்தால்) | கிழி | கிழிக்கட்டை (நிதிப் பொதியை) |
| மின் ஆர் | ப்ரகாசம் நிறைந்த | அறுத்தான் | அறச் செய்தான் |
| தட மதிள் | பெரிய ப்ராகாரங்களாலே | என்று உரைத்தோம் | என்று சொன்னோம். |
| சூழ் வில்லி புத்தூர் | சூழப்பட்ட ஸ்ரீ வில்லி புத்தூர் | வந்து | இப்படிப் பெரியாழ்வார் ஸம்பந்தத்தோடு இருக்கவேண்டுமிடம் வந்து |
| என்று | இவ்விதமாக | கீழ்மையினில் சேரும் வழி | அதோகதியைச் சேர்ந்த மார்க்கத்தை |
| ஒரு கால் | ஒரு தரம் | அறுத்தோம். | அறும்படி செய்தோம். |
| சொன்னார் | சொன்னவருடைய | | |
| கழல் கமலம் | திருவடித் தாமரையை | | |
| சூடினோம். | சிரஸா வஹித்தோம். | | |
| முன் நாள் | முன் வல்லபதேவன் ஸபை சேர்த்த நாளிலே | | |

மின்னார் என்பதால் பலவித ரத்னங்கள் பதித்த பொன் ப்ராகாரமெனப் பாவித்தார் போலும். அஷ்டாக்ஷரஸம்ஸித்தராய் மஹாபாகரான ஆழ்வார் சிறப்புடன் எழுந்தருளியிருக்குமிடத்திலே துர்பிக்ஷத்திற்கும் தரித்ரத்திற்குமிடமுண்டோ? கழல் என்பது பாதத்தில் அணியும் ஆபரணத்துக்குப் பெயராய் அக்கழலுள்ள பாதமென்னும் பொருளிலே ப்ரஸித்தமாய் வழங்கப்பெற்றுவருகிறது. கிழியறுத்தானென்றதால் வித்யாசுல்கமாய் வைத்த தனத்தைச் சீரையிலே முடிந்து ஓரிடத்திற்கட்டிவைத்து 'வாதத்தில் ஜயித்தவர் அறுத்தெடுத்துக் கொள்க' என்று வல்லபதேவன் செய்த ஏற்பாடு என்றும், அதன்படி இவர் அதை அறுத்தெடுத்துக்கொண்டார் என்றும் அறிவிக்கப்பட்டது. கிழியறுத்தானை யுரைத்ததால் கீழ்மைவழி அறுத்தாயிற்று. பரதேவதாநிஷ்கர்ஷம் செய்து கிழியறுத்த பெரியாழ்வார் ஸம்பந்தம் பெற்றதாலே எம்பெருமான் உய்விப்பது ஸித்தமானபடியால் க்ஷுத்ரபுருஷார்த்தங்களுக்கான காம்ய கர்மங்

களைச் செய்வதோ, ப்ரகிருதிமண்டலத்திலே தேவதாந்தரங்கள் அதிகாரம் பெற்ற விடங்களுக்குச் செல்வதோ நமக்கினி இல்லை யென்று கருத்து. 'கீழ்மையினிச் சேரும்' என்கிற பாடமானால் இனி--இதற்குப் பிறகு கீழ்மை சேரும் வழியறுத்தோ மென்றுரையாம். நெஞ்சமே என்பதை விளிச் சொல்லாக்காமல், 'நல்வழி நடவாத நெஞ்சமே வந்து,' 'மனப்பூர்வகமாகவே' என்றுரைத்து எல்லா வினைச்சொற்களோடும் சேர்க்கலாம்.

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்று
ஈண்டிய சங்க மெடுத்தூத—வேண்டிய
வேதங்க ளோதி விரைந்து கிழியறுத்தான்
பாதங்கள் யாமுடைய பற்று.

| | | | |
|---|---|---|---|
| பட்டர்பிரான் வந்தான் என்று | பட்டநாதனென்று பிருதம் பெற்ற பெரியாழ்வார் எழுந்தருளினாரென்று | வேண்டிய | (வாதிகளை ஜயிப்பதற்கு வேண்டியவற்றில் குறைவற) அபேக்ஷிதங்களான |
| பாண்டியன் | பாண்டிய தேசத்தரசனை வல்லபதேவன் | வேதங்கள் | வேத வாக்கியங்களை |
| | | ஓதி | உரைத்து |
| கொண்டாட | புகழ்ந்து கூற, | கிழி | நிதிப் பொதியை |
| ஈண்டிய | திரண்ட (குவிந்த) | அறுத்தான் | அறுத்த பெரியாழ்வாரின் |
| சங்கம் | சங்குகளை | பாதங்கள் | திருவடிகள் |
| எடுத்து ஊத | (கையில்) எடுத்து நாதம் செய்ய, | யாமுடைய | எம்முடைய (நமக்கு) |
| | | பற்று | அவலம்பமாம். |
| விரைந்து | வேகமாக | | |

'சங்கமடுத்து' எனப் பாடமானால், மடுத்து—முகத்தில் உட்புகுத்து என்றர்த்தம். அடுத்து என்று பதமாகில், 'இடைவிடாமல்' என்று பொருள். 'ஓத' என்கிற பாடத்தில், திரண்டுள்ள சங்கம் ஸஜ்ஜம், பண்டித ஸமாஜமானது பூர்வபக்ஷ ச்ருதிகளை எடுத்துச் சொல்ல என்றுரைப்பது. சங்கம் என்றதுக்குப் 'புலவர்' என்னும் பொருளுமுண்டாம். எம்முடைய என்னும் பொருளிலே யாமுடைய என்றும் ப்ரயோகமிருப்பதால் இங்கும் அவ்வர்த்தம் சொன்னது. அன்றி, பற்று உடைய யாம், கிழியறுத்த பெரியாழ்வாருடைய பாதங்கள் = திருவடிகள் ஆகிறோ மென்றும் கூறலாம். பற்று-அவரிடத்தில் பக்தி. பற்றுடையவடியவர் நாமென்னதாயிற்று. அவருடைய பாதங்கள், யாம் உடைய = நாம் பெற்றுள்ள, பற்று-சரண் என்று முரைத்தல் கூடுமென்பர். ஆழ்வார் முதலில் வேதங்களை ஸதஸ்ஸில் ஓதினார். வாதிகளை ஜயித்து விட்டதால் பாண்டியன் பட்டர் பிரானென்று கொண்டாடினான். எல்லோரும் விஜயசங்குகளை ஊதினர். பிறகு இவர் கிழியறுத்தார். ஆக அறுத்தான் என்ற விடத்திலே (கொண்டாட) ஊத, என்றது அன்வயம் பெறும். ஆழ்வார் எழுந்தருளினபோதே அவருடைய மேன்மையை உணர்ந்து வரவேற்றினபடியைச் சொன்னதுமாம். அப்போது அதற்குப் பிறகே இவர் ஸதஸ்ஸில் ஓதினதுமாகும்.

விஷ்ணுவே பரதத்வமென்று வாதப்போர் புரிந்து பறைசாற்றின பெரியாழ்வாரைப் பாண்டியராஜனான வல்லபதேவன் யானை மேலேற்றி மதுரையில் ஊர்வலம் செய்வித்தான். அப்போது கருடாம்சரான விஷ்ணு சித்தரின் சித்தத்திலே எப்பொழுது மெழுந்தருளியுள்ள எம்பெருமான் வானத்தில் கருடவாஹனனாய்த் தோன்றி ஸேவையளித்தான். அவ்விதம் பெரிய திருவடியின் திருக்கைகளில் அமர்ந்துள்ள எம்பெருமான்திருவடிகள் விஷயமாக வாழ்த்தைத் தொடங்கி ஆழ்வார் பாடல்கள் பாடினார். இதை ப்ரபந்தசாரத்திலே 'வாரணமேன் மதுரை வலம் வரவே வானின் மால் கருடவாஹனனாய்த் தோன்ற வாழ்த்தும்' என்று தேசிகன் அருளிச் செய்தார். முதலில் திருப்பல்லாண்டில் எம்பெருமானுக்கு வாழ்த்துக் கூறுகிறார். பிறகு பலவாறாக அனுபவிக்கிறார். பல்லாண்டு என்றால் பல வருஷங்கள் என்று பொருளாம். பல வருஷங்கள் வாழவேண்டு மென்றபடி.

'ஸர்வசேஷியான எம்பெருமானுடைய அனுக்ரஹத்தாலே எல்லோரும் வாழ்ந்துவரவேண்டியவர்; வாழ்ந்தும் வருகின்றனர். அப்படியிருக்க எம்பெருமானுக்கு இவர் வாழ்த்துக் கூறுவது கூடுமோ? மேலும் அவனுக்கு அபாயத்திற்கு ப்ரஸக்தி யுண்டாகிலன்றோ ரக்ஷை கூறவேண்டும். இது சேஷஸ்வபாவத்துக்கு விருத்தமு மாகுமே எனவேண்டா. ஏனெனில்—ஸர்வவித பந்துவான எம்பெருமானை அனுபவிப்பவர்கள் தம் தம் சித்தத்தின் போக்குக்குத் தக்கவாறு அரசனைப் போலும், ஆசார்யனைப் போலும், மித்ரனைப் போலும், புத்ரனைப்போலும் பல படியிலும் பாவிப்பதுண்டு. எம்பெருமானே இல்லையென்று எதிர்வாதம் செய்த மதுரையிலே ஆவிர்ப்பவித்த அத்திருமாலைக் கண்டதும், தாம் இவ்வளவு வாதப்ரதிவாதங்களில் இழிந்து பெரு முயற்சி செய்து இவனைப் பெற்றதாலே அவனைப் புத்ரதுல்யனாக இவர் பாவித்தார். கௌஸல்யை, யசோதை முதலானவர்களின் மொழிகளை இதற்கு ஸாக்ஷியாக்கிக் கொள்வது. ஆழ்வாரும் யசோதையாகவும், கௌஸல்யையாகவும் தம்மைப் பாவித்திருப்பதையும் மேலே காணலாம். அவர்கள் தங்கள் புத்ரனை ஸர்வேச்ரனென்றறியாது ஈச்வரனைக் கொண்டு ரக்ஷை கூறினர். இவர் அறிந்தவராகையாலே அம்மாதிரி கூறவில்லை. மேலும் எம்பெருமான் கண்ணாரக் காணமுடியாமலிருப்பதே ஒரு விதமான அழிவாகும். ஆக அந்த நிலைமை இராமலிருக்கவேண்டுமென்று கோருவதும் கூடும். பகவானிடத்திலேயுள்ள பெரும் ப்ரேமையினாலே அவர் அழகில் ஈடுபட்டு அஸ்தானத்திலே அதிசங்கை பிறந்து பல்லாண்டு பாடுகின்றனர் நித்ய முக்தரென்றால், ப்ரக்ருதி மண்டலத்திலே யுள்ளவர்க்கு, 'என்ன தீங்கு வருமோ' என்றதிசங்கை பிறப்பதில் என்ன ஆச்சரியமென்றும் பெரியோர் பணிக்கின்றனர்.

ஸ்வபாவத்திலே சாச்வதமாயுள்ள எம்பெருமானுக்கும், அவனை அனுபவிக்க வேண்டிய ப்ரஜைகளின் கர்மங்களுக்குத் தகுந்தபடி, அவதார தசைகளிலே அவ்வவ்வவஸரத்திலுள்ள க்ரஹாதிகளின் சாரத்திற்கேற்றவாறு நன்மை தீமைகள் இருப்பனவாகத் தோன்றிவருவதால், விபவாவதாரங்களிலும் அர்ச்சாவதாரங்

களிலும் அவ்வித தோற்றம் ஏற்படுவதற்குக் காரணமான ப்ரஜைகளின் கர்மங்
கள் கழியவேண்டு மென்பதிலேயே, எம்பெருமான் நீடூழி வாழவேண்டும்'
என்பதற்குத் தாற்பர்யமென்றும் கூறுவர். மேலும் மஹாராஜனைப் பார்த்து,
'ஜய, விஜயீபவ, என்று வேலைக்காரன் முதலாக எல்லோரும் சொல்லிவருகிறார்
கள். இப்படி இவர்கள் ஆசீர்வாதம் செய்வதால் அவனுக்கு ஆகவேண்டிய
தென்ன? ஆனாலும் அவனுடைய மேன்மையையும், அழகையும், குணங்களையும்
கண்டு அவற்றிலீடுபட்டு, அவன் நீடூழி வாழ்வதே தங்களுக்கிஷ்டமாகக் கருது
கின்றனர். இப்படித் தங்களுக்குள்ள மனோரதத்தை இவ்விதமாக வெளிப்படுத்து
கின்றனர். அங்ஙனமே பரம பதத்திலும் ப்ரக்ருதி மண்டலத்திலுமுள்ள
ப்ராஜ்ஞபக்தர்கள் எம்பெருமானுடைய குணாதிகளையும், 'ஒரு படியும் அவனுக்
குத் தீங்கு கிடையாதென்பதையும் திண்ணமாயறிந்தே அவ்விதம் அவன்
இருக்கையே தமக்கு அத்யந்தம் அனுகூலமென்று நினைக்கிறார்கள். இந்நினைவு
அவ்வஸ்துஸ்வபாவத்தாலும் இவர்களின் ஸ்வபாவத்தாலும் உண்டாகிறது.
இம்மாதிரி தாங்கள் நினைத்திருப்பதைத் தமக்குள்ள ப்ரேமையினாலே ப்ரகாச
மாகச் சொல்லுகிறார்கள். ஆக, 'பல்லாண்டு நீ வாழவேண்டு' மென்றால்,
'நீ பல ஆண்டுகள் வாழ்ந்து வருவது எமக்கு மிகவும் ப்ரியமாயிருக்கிற'
தென்று சொன்னபடியாம். இதைக் காமப்ரவேதனமென்று சொல்வதுண்டு.
ஆக ஆசீர்வாதமாகக் கொள்ளாமலும் வாக்ய நிர்வாஹம் செய்யக்கூடும். ஆயி
னும் கூடுமாயின் ஆசீர்வாதமாகக் கொள்வதும் இங்குச் சாலவும் அழகென்று
அவ்வழியை யாதரிப்பர்.

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

# பெரியாழ்வார் திருமொழி

## முதற்பத்து. காப்பு

## திருப்பல்லாண்டு.

—(o)—

பல்லாண்டு பல்லாண்டு பல்லா யிரத்தாண்டு *
பல்கோடி நூறு யிரம்
மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா * உன்
சேவடி செவ்விதிருக் காப்பு.

| | |
|---|---|
| மல் ஆண்ட | மல்லர்களை அடக்கின |
| திண் தோள் | பலமுள்ள தோள்களையுடைய |
| மணிவண்ணா | நீலமணிவர்ணனே |
| உன் | உன்னுடைய |
| சே அடி | சிவந்த திருவடிகளுடைய |
| செவ்வி | அழகானது |
| பல் ஆண்டு | பல வருஷங்கள் |

| | |
|---|---|
| பல் ஆண்டு | பல (நூற்றுக்கணக்கான) வருஷங்கள் |
| பல் ஆயிரத்து ஆண்டு | பல ஆயிரக்கணக்கான வருஷங்கள் |
| பல கோடி நூறு ஆயிரம் ஆண்டு | பல கோடி லக்ஷக் கணக்கான வருஷங்கள் |
| திருக்காப்பு. | மேன்மை பொருந்திய ரக்ஷையை (பெறுக.) |

பெரியாழ்வாருக்கு எம்பெருமான் கருடவாஹனனாய் ப்ரத்யக்ஷமானான். 'எம்பெருமான் எங்கும் நடந்து செல்லலாகாது. அப்போது சேவடி செவ்விக் குக்குறையுண்டா' மென்றல்லவோ பெரியதிருவடி அவரை எப்போதும் தன் மேல் வீற்றிருக்கச்செய்து அவர் திருவடிகளைத் தம் கைகளால் பிடித்துக் கொள்வது. இது கருடாம்சராகையாலே விட்டுசித்தர் மனத்திலுமுள்ள கருத்தாகும். அக்கருத்தை வெளியிடவே இவ்வாறு 'சேவடி செவ்வி' என்றருளிச் செய்தார். ஸர்வகல்யாண குணாஸ்பதமான அவனும் அவன் திருமேனி முழுவதும் ரக்ஷை பெறவேண்டுமென்றபடியேயாம். இதனால் எப்போதும் வாஹனத்திலே எழுந்தருளியிருக்கவேண்டு மென்றதாகிறது. 'நான் எங்குச்சென்றாலும் அப்படியேதானே இருந்துவருகிறேன். கஜேந்த்ர மோக்ஷத்திற்கு விரைந் தோடும்போது கூட விடவில்லையே' என்று எம்பெருமான் நினைக்கக்கூடும். அதற்காக 'மல்லாண்ட திண்டோள்' என்றார். நீ க்ருஷ்ணாவதாரத்திலே கம்ஸனைச் சேர்ந்த மல்லர்களை முதுகு கீழாகக் கிடக்கும்படி உன் தோள் வலிவாலே அழுத்தி அடக்கி நசுக்க நகரத்திலே நடந்து சென்றாயே; அம்மாதிரி நடக்க வேண்டாமென்கிறேனென்றபடி. 'ப்ரதிபக்ஷிகளை வென்று பரதத்வ

மான தன்னை, நம்மை நிமித்தமாக்கி இவன் ஸ்தாபித்துக் கொண்டான்' என்பதைத் திருவுளம் கொண்டே திருப்பல்லாண்டில் ஒவ்வொரு பாட்டிலும் எதிரிகளை ஜயிப்பதில் அவனுக்குள்ள வலிமையை விடாமல் அநுஸந்திக்கிறார்.

இக்காப்புப் பாசுரத்திலே திருக்காப்பை விதேயமாகச் சொல்வது பொருத்தமுள்ளதென்று வைத்து 'செவ்வியானது திருக்காப்பைப் பெறவேண்டும்' என்று உரைத்தது. ஆகவே மேல் பாசுரத்திலுள்ள வாக்யங்களிலும், 'திருக்காப்பு பெறுக' என்பது சேரும். செவ்வின் திருக்காப்பானது பல்லாண்டு பல்லாண்டாக இருக்கவேணுமென்றும் அன்வயித்துரைக்கலாம். ஒருதரம் பல்லாண்டு என்று சொன்னால் போதுமாயிருக்க பல கால் சொன்னது காலமுள்ளளவும் நீடிக்கவேண்டுமென்பதற்காக. பல கோடி நூறாயிரமென்ற விடத்தில் பலவென்பதை கோடி, நூறு, ஆயிரம் மூன்றிலும் சேர்க்கலாம். அன்றி, நூறாயிரமென்று இலக்ஷத்தைக் குறிக்கலாம். ஆயிரத்தைப் பல கோடி நூறுகளைக் கொண்டு பெருக்கவும் செய்யலாம். ஆனந்த மீமாம்ஸையிலே ஆளவந்தார் திருவுள்ளங்கொண்ட ந்யாயமாய் கோடி வரையில் பெருக்கினவற்றைப் பல்லாண்டென்று முதற்படியாக வைத்து மறுபடியும் மறுபடியும் பல்லாண்டு பல்லாண்டென்று காலத்தைப் பெருக்கவேணுமென்று தெரிவிப்பதற்காகக் கோடிக்குப் பிறகு நூறாயிரத்தைச் சொன்னதென்னலாம். இங்கு பல மானுஷவர்ஷங்களும், பல தேவமானவர்ஷங்களும், பல சதுர்முகமானவர்ஷங்களும், பல ப்ரஹ்மாயுஷ்காலங்களும் முறையே கூறப்படுகின்றனவென்று திருக்குடந்தை தேசிகன் அருளிச்செய்த பொருள் சிறந்ததாகும். அன்றியும் பல்லாண்டு என்பதற்குப் பல ஆண்டுகள் என்றே நேர்ப்பொருளானாலும் வாழ்த்து என்ற பொருளும் உண்டு. 'பல்லாண்டு கூறுமினே' என்பது போன்ற விடங்களிலே அவ்வர்த்தம் கொள்ளவேணும். ஆக முதலில் பல்லாண்டு என்பதற்கு வாழ்த்து என்று பொருள் கொண்டு, பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு வாழ்த்து எனலாம். பிறகு, 'உன் சேவடி செவ்விதிருக்காப்பு' என்றது தனி வாக்யமாகும். பல்லாண்டு காலம் உனக்குப் பல்லாண்டு வாழ்த்து; உன் சேவடி செவ்விதிருக்காப்பு பல்லாயிரத்தாண்டு நீடித்திடுக என்பதுமாம். அல்லது பல்லாண்டு என்பதற்கு இத்திருப்பல்லாண்டு ப்ரபந்தமென்று பொருள். ஆக உன் சேவடி செவ்விதிருக்காப்பாகிய இத்திருப்பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு விளங்குக என்றபடி. இப்படிப் பல வகையான அன்வயங்களைக் கொள்வதற்காகவே 'பெறுக' என்றொரு வினைச் சொல்லைப் பாசுரத்திலே பணிக்காதொழிந்ததெனலாம். 'நூறாயிரமும்' என்பதைவிட 'நூறாயிரம்' என்ற பாடமே ஸாம்ப்ரதாயிகமாக விருப்பதால், ஆண்டு என்கிற பதத்தை மறுபடியும் சேர்த்துக் கொள்ளாமலே, 'பல கோடி நூறாயிரம் மல்லர்களை யாண்ட திண்டோள்' என்றுரைத்தலும் கூடும்.

செவ்வி என்றதற்குச் சித்திரை நாள் என்றும் அர்த்தமுண்டு. திருக்காப்பு என்றது ரக்ஷாபந்தனம். மேலே திருவோணத்திருவிழா பல காலும் இவ்வாழ்வாரால் அநுபவிக்கப் படுகின்றது. 'வந்து மண்ணும் மணமும் கொண்மின்' என்று உத்ஸவத்திற்கு அங்கமாக மண் எடுத்து வருவதை மொழிந்

தருளினர். திருவோணமானது விஷ்ணு நக்ஷத்ரமாகையால் வெகுவாகத் திவ்ய தேசங்களிலே திருவோண நாளை உத்ஸவம் முடிவில் அவப்ருதஸ்னான தின மாக்கி, சித்திரை நாள் முதற்கொண்டு உத்ஸவம் நடத்துவது வழக்கமானபடி யால், கருடனோடு ஸேவை சாதித்த பையுடை நாகைப்பகைக்கொடி யானுக்குக் கொடியேற்றி ப்ரம்மோத்ஸவம் கண்டருளப் பண்ணி மல்லாண்ட கண்ணன் இடமான வடமதுரைக்கு ஒத்ததாகத் தென்மதுரையையும் செய்ய முயன்றவராய், உன் சேவடியைச் சேர்ந்ததான செவ்விதிருக்காப்பு= ப்ரமோத்ஸவத்தின் தொடக்கத்திலே சித்திரை நாளிலே செய்யும் ரக்ஷாபந்தனம் (காப்புக்கட்டுதல்) பல்லாண்டு பல்லாண்டு=வருஷம் தோறும் நடைபெற வேணுமென்றென்றும் கூறலாம். 'நல்லாண்டென்று நவின்றுரைப்பார்' என்று மேலே ஆழ்வார் திருப்பல்லாண்டு பாடின வருஷத்தை நல்லாண்டென்று குறித்ததால், வருஷம் தோறும் கொண்டாடவேண்டியதொரு விசேஷம் இப்பல் லாண்டுடன் ஒரு வருஷம் தொடங்கப்பெற்றதென்று தெரியவருகிறது.

இதுவும் 'அடியோமோடும்' என்று மேலுள்ளதும் உண்மையில் தனித்தனி பாசுரங்களானாலும் எப்போதும் சேர்த்தே அநுஸந்திக்கபடுவதாலும், அடியோ மோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு என்னும் முதலடியில் எழு வாய் இன்னதென்று விளங்காமலிருப்பதாலும், செவ்விதிருக்காப்பு என்பதே அங்கு எழுவாயென்று கொண்டு, உன் சேவடியைப் பற்றினதான ப்ரம்மோத் ஸவத்திற்காகச் சித்திரை நாள் செய்யும் ரக்ஷாபந்தனமானது உத்ஸவத்தை ஸ்வீ கரித்தருள அர்ச்சையாக எழுந்தருளின உன்னோடும், கைங்கர்யம் செய்யப் பாக்யம் பெற்ற எங்களோடும் பிரிவில்லாமல் எப்போதும் நடந்து வரவேணும். அடியோங்கள் ப்ரதிவருஷம் உனது ப்ரம்மோத்ஸவ கைங்கர்யத்தில் அன்வயிக்க வேணுமென்றபடியுமாகலாம். ஆனால் இது க்லிஷ்டமாகவே தோற்றும்.

இவ்வாறு தோன்றும் அர்த்தங்களில் பொருத்தமுள்ளவற்றைப் பாராட்டி இப்பல்லாண்டு பாசுரத்தின் பெருமையைப் போற்றுக. இப்படி பல்லாண்டு தொடங்கி பகவானைத் துதி செய்யும் ஸம்ப்ரதாயத்தை, 'ஸ்வஸ்தீத்யுக்த்வா மஹர்ஷிஸித்தஸங்கா: ஸ்துவந்தி த்வாம் ஸ்துதிபி: புஷ்கலாபி:' என்கிற கீதா வசனத்திலும் காண்க. 'ஜிதந்தே' என்றது போல் பக்தாக்ரேஸரர்களுடைய மங்களாசாஸனம் 'ஸ்வஸ்தி' என்னப்பட்டதென்று தேசிகன் அங்கு அருளிச் செய்தபடி.

க.

கீழ்ப்பாட்டில் ஸ்வரூப ரூப குணங்களைச்சொல்லி எம்பெருமானுக்கு வாழ்த்துக் கூறினர். மேற்பாசுரத்திலே விபூதிகளோடு சேர்த்து அவனுக்கு வாழ்த்துக் கூறுகிறார்.

2 அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி யாயிரம் பல்லாண்டு *
வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு *
வடிவார் சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு *
படைபோர் புக்கு முழங்குமப் பாஞ்ச சன்னியமும் பல்லாண்டே.

| | |
|---|---|
| ஆயிரம் பல் ஆண்டு | அளவற்ற வர்ஷங்களாய் (அனாதிகாலமாய்) |
| வடிவாய் | வடிவம்கொண்டு |
| நின் வலம் மார்பினில் | உனது மார்பின் வலதுபக்கத்திலே |
| வாழ்கின்ற | சுகவாழ்க்கைப் பெற்றிருக்கின்ற |
| மங்கையும் | அலர்மேல்மங்கையும் |
| அடியோமோடும் | தாஸபூதர்களான எங்களோடும் |
| நின்னோடும் | (ஸர்வஸ்வாமியான) உன்னோடும் |
| பிரிவு இன்றி | பிரிவில்லாமல் |
| பல் ஆண்டு. | எப்போதும் (திருக்காப்புப்பெறுக.) |
| வடிவு ஆர் | அழகினால் நிறைந்தவரும் |
| சோதி | ப்ரகாசத்தை யுடையவரும் |
| வலத்து உறையும் | வலத்தில் (வலப்பக்கத்திலே திருக்கையிலே) வஸித்துவருகிறவரும் |
| சுடர் | ஜ்வாலாமாலியுமான |
| ஆழியும் | சக்கரத்தாழ்வானும், |

பல்லாண்டு:—

| | |
|---|---|
| படை | சேனைகளையுடைய |
| போர் | யுத்தங்களிலே |
| புக்கு | புகுந்து (படைநடுங்க) |
| முழங்கும் | கோஷம் செய்யும் |
| அப்பாஞ்சசன்யமும் | அந்தத் திருச்சங்கும் |

பல்லாண்டு:—(ஏ—ஈற்றசை)

முதலடியைத் தனிவாக்யமாகப் பிரித்துக்கொள்வதானால், ஆயிரம் பல்லாண்டு வாழவேண்டுமென்று எதைக்குறித்து வாழ்த்துச் சொல்லிற்றென விசாரம் வரும். அடியோமோடும் நின்னோடும் என்று மூன்றும் வேற்றுமையாதலால், அடியோங்கள் வாழவேண்டுமென்றோ, நீ வாழவேண்டுமென்றோ சொல்வதற்கில்லை. ஆக 'ஸம்பந்தம்' என்றொரு பதத்தைச் சேர்த்துக்கொண்டு அடியோங்களுக்கும் உனக்குமுள்ள ஸம்பந்தம் பிரிவின்றி வாழவேண்டுமென்றுரை காண்க. இப்போது 'பிரிவின்றி' என்பதற்கு 'அழிவில்லாமல்' என்று பொருள். பிரிவின்றி என்பதோடு 'இருக்கை' யென்றொரு பதம் சேர்த்து பிரிவில்லாமலிருக்கையானது எப்போதுமிருக்கவேண்டுமென்றும் உரை கொள்க. இதனால் ஜீவனுக்கும் பரமாத்மாவுக்குமுள்ள நித்ய ஸம்பந்தம் நித்யமாகவே யிருக்கவேண்டுமென்றும், பகவானுக்கு எப்போதும் தாம் அடிமை கொண்டிருக்கவேணுமென்றும் இவர் கோரினதாகும். பகவத் ஸ்வரூப ரூப குணங்களை அனுபவித்தவுடன் அவனுக்கு அடிமை செய்யாமல் அரைக்ஷணம் கூட இருக்க மனம் நிற்காமற்போனதினால், பிராட்டி முதலானோருக்குப் பல்லாண்டு பாடுவதற்கு முன்னமே தம் அடிமைக்குப் பல்லாண்டு வாழ்த்திக் கொண்டார். ஆனாலும் தம்மை வாழ்த்திக்கொண்டதாகாது. அடிமையென்பது சேஷிக்காகவாதலால் சேஷியான எம்பெருமான் ப்ரீதியே இங்கு கோரப்பட்டதாகும். இப்படி ஸர்வஸம்மதமான யோஜனையோடு கீழ் நாம் உரைத்த யோஜனையும் கொள்க. அப்போது 'ஆயிரம் பல்லாண்டு' என்றதற்கு 'வாழ்கின்ற' என்றதோடு அந்வயம். இரண்டடிகளும் சேர்ந்து ஒரே வாக்யம். நித்யமாய் உன் திருமார்பில் வாழ்ந்துவரும் பிராட்டியாரும் எங்களோடும் உன்னோடும் பிரிவின்றி பல்லாண்டு வாழ்க என்றதாயிற்று. இதனால் குற்றம் செய்த பிள்ளைகளிடத்திற் கடுமையாக நடந்துகொள்ளும் தந்தையின் கோபத்தைத் தணிக்க நினைத்த தாயானவள் வலக்கையினால் அவனையும் மற்றொரு கையினால்

மக்களையும் பிடித்துக்கொண்டு நடுவிலே நிற்பதுபோல் தாஸபூதர்களான நம்மை எம்பெருமானோடு சேர்க்க இருவரையும் விட்டுப்பிரியாமையாகிற பிராட்டியின் பெருமை இங்கே சொல்லப்பட்டதாம். இதனால் ப்ரணவத்தில் அக்ஷரங்கள் விவரிக்கப்பட்டனவாகும். 'ஆயிரம் பல்லாண்டு அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு' என்றும் அந்வயம் கொள்ளலாம். 'அடியோமோடும்' என்பதால் நித்ய முக்த பத்த ஜீவர்கள் எல்லோரும் சொல்லப்படுகின்றனர். முதலடி தனிவாக்யமாகவேண்டுமானால், 'நீ' 'அடியோம்' எனவிரண்டு பதங்களைச் சேர்த்து, நீ அடியோமோடும் அடியோம் உன்னோடும் பிரிவின்றி வாழ்க என்றுரைக்கவேண்டும். வடிவாய் என்பதால் பிராட்டிக்கும் பெருமாளுக்கும் ஆத்ம ஸ்வரூபத்திலேயுள்ள ஸம்பூர்ண ஸம்பந்தம் நித்யமானதுபோல் திருமேனிகளைக்கொண்டுள்ள ஸம்பந்தமும் நித்யமென்றறிவித்தபடியாம். ஸத்யத்வ ஜ்ஞாநத்வாதிகள் பரமாத்மஸ்வரூபத்திற்கு மாத்திரம் நிரூபக தர்மமாம். பிராட்டியானவள் தன் திருமேனியைக் கொண்டு அவனது சுபாச்ரயத்துக்கும் ஸ்வரூப நிரூபகமாயிருந்து தேவதாந்தர ப்ரமம் வாராதபடி செய்கின்றனள். மேலும், மின்னலால் மேகத்திற்குப் போலே இவளுடைய திருமேனியால் எம்பெருமான் திருமேனிக்கு ஒரு பரபா(ஹா)கம் ஸித்திப்பதும் 'வடிவாய்' என்பதினால் அறிவிக்கப்படுகிறது. 'நப்பி பிறந்தினில்' என்றவிடத்திற்போல மார்பினில் என்ற விடத்திலும் 'மார்பு இன் இல்' என்று பிரித்து மார்பாகிற இனிய இல்லிலே வாழ்கின்ற என்றுரைத்தலும் கூடுமென்பர்.

வடிவார் என்பதால் ஸுதர்சநபதத்தின் யோகார்த்தம் சொன்னதாகும். எம்பெருமான் வடிவில் வ்யாபித்த ஜ்யோதி யுடையவனென்று முரைப்பர். எதிரில் விளங்கும் பாஞ்சசன்னியத்தை ஆழ்வார் அப்பாஞ்சசன்னிய மென்று சொல்வது கூடுமோ வென்னில்—'வலது பக்கத்திலுள்ள சக்கர' மென்றதுபோல் இடது பக்கத்திலிருக்கும் சங்கமென்று சொல்ல நினைத்து இவர், தாம் வலப்புறத்தில் நின்று கொண்டு மங்களாசாஸனம் செய்யும்போது அப்புறத்திலுள்ளதை 'அந்த' என்னக்கூடும். மேலும், மல்லாண்ட திண்டோளனான கண்ணன் பாண்டவ கௌரவ யுத்தாதிகளிலே முழங்கின பாஞ்சசன்னியமானது, கடலில் இறந்த குருபுத்ரனைக் கண்டுபிடிக்கப்போய் பஞ்சஜநன் என்னும் அஸுரனைச்சம்ஹாரம் செய்து ஸ்வீகரித்த சங்கமானாலும் ப்ராக்ருதமல்ல, சக்ராதிகளைப்போலே அப்ராக்ருதமாய், நித்யஸூரியாய், வேத ப்ரதிபாத்யமுமான அப்பாஞ்சசன்னியமே கண்ணனைப் போலவதரித்ததென்ற வாறு பல பொருள்களைக் குறிப்பதற்காக இப்படி அருளிச்செய்ததென்னலாம். தம் கண்ணெச்சில் படவேண்டாமென்று முகத்தைத்திருப்பிக்கொண்டமையால் அது பரோக்ஷமாயிற்று. ஆகவே அருகிலுள்ளதையும் 'அது' என்றுமென்று முரைப்பர். 2.

இதற்குமேல்—தம்மோடு மங்களாசாஸநம் செய்ய மூன்று விதமான அதிகாரிகளை அழைப்பதற்கு மூன்று பாசுரங்கள். அவர்கள் 'வந்து சேர்ந்சோ'

யென்றதைச்சொல்ல மேல் மூன்று பாசுரங்கள். அவர்கள் பல்லாண்டு பாடினதை முறையே சொல்லுகின்றன மேல் மூன்று பாட்டுக்கள். முடிவுபாட்டொன்று — என்றிங்கு பூர்வர்கள் உரையின் ஸாரம்.

பரதத்வநிர்ணயம் பண்ணின ஆழ்வார், எதிரில் ப்ரத்யக்ஷமாய் எழுந்தருளின எம்பெருமானுக்குப் பல்லாண்டு பாடி மஹோத்ஸவம் செய்ய ஆசைப்பட, அப்போது அங்குள்ள ஸர்வஜநங்களும் இவரோடு சேர்ந்து பல்லாண்டு பாடத் திரண்டு வந்தனர். அதைக்கண்டு ஆழ்வார் களித்து அவர்களைக்குறித்து, 'அதற்கு வேண்டும் அதிகாரத்தைத் தெளிந்து வாருங்கள்' என்கிறார். ஏனெனில்— திருவேங்கடமுடையான் ஸந்நிதியில் தினந்தோறும் சாற்றுமுறை சமயத்திலே ஸ்ரீ வைஷ்ணவர்கள் தவிர வேறு யாருக்கும் உள்ளே ப்ரவேசமும் அக்கைங்கர்யத்திலே அந்வயமுமில்லை யென்பதை இப்போதும் காண்கிறோமல்லவா? அதைப்போல பகவானிடத்திலே பாதிவ்ரத்யம் கொண்டுள்ள பரமைகாந்திகள் தவிர மற்றவர்க்கு இங்கே ப்ரவேசம் கிடையாதென்று சொல்லி பாரமைகாந்த்ய தர்மத்தை உலகில் ப்ரசாரப் படுத்தவேண்டுமென்றுழ்வார் திருவுள்ளம்.

௩ வாழாட்பட்டு நின்றீருள்ளீரேல் வந்து மண்ணும் மணமுங் கொண்மின்
கூழாட்பட்டு நின்றீர்களை யெங்கள் குழுவினில் புகுதலொட்டோம்
ஏழாட்காலும் பழிப்பிலோம் நாங்கள் இராக்கதர் வாழ் * இலங்கை
பாழாளாகப் படை பொருதானுக்குப் பல்லாண்டு கூறுதுமே.

| | |
|---|---|
| வாழ் ஆள் பட்டு நின்றீர் உள்ளீர் ஏல் | நீங்கள் ஸுகவாழ்க்கையாய் ஸ்வயம் புருஷார்த்தமான அடிமைத் தொழிலில் இழிந்து நின்றிருக்கிறீர்களாகில், |
| வந்து | எங்களிடம் வந்து சேர்ந்து |
| மண்ணும் மணமும் | (உத்ஸவத்தில் அங்குரார்ப்பண நாளில் சேர்க்கவேண்டிய) மண்ணையும், அவ்வுத்ஸவ மகிழ்ச்சிப் பெருமையையும் |
| கொண்மின். | கொள்வீர்களாக. |
| கூழ் ஆள் பட்டு நின்றீர்களை | கூழுக்காக (வேறு பலனுக்காக) அடிமைப் பட்டிருக்கும் உங்களை |
| எங்கள் குழுவினில் | முமுக்ஷுக்களான எங்கள் கூட்டத்திலே |
| புகுதல் ஒட்டோம். | ப்ரவேசிப்பதற்கு ஸம்மதிக்க மாட்டோம். |
| ஏழ் ஆள் காலும் | ஏழு தலை முறை காலமுமாய் |
| பழிப்பு இலோம் நாங்கள் | (தேவதாந்தர ஸம்பந்தம், பலாந்தரத்தில் பற்று எனப்படும்) குற்ற மற்ற நாங்கள் |
| இராக்கதர் வாழ் இலங்கை | ராக்ஷஸர்கள் வாழ்ந்திருந்த லங்கையானது |
| பாழ் ஆளாக | பாழ்பட்ட (அழிந்த) ஆட்களை யுடையதாகும்படி |
| படை | சேனையுடன் |
| பொருதானுக்கு | போர் செய்த ஸ்ரீ ராமனுக்கு |
| பல்லாண்டு | முதல் இரண்டு பாசுரங்களிற் சொன்னது போன்ற வாழ்த்து |
| கூறுதும். | சொல்லுவோம். |

அங்கிருந்த திரளிலே பரமைகாந்திகளானவர்களைக் கைங்கர்யத்திற்காகச் சேர்த்துக் கொள்ளுகிறார் முதலடியால். இரண்டாவது அடியால் மற்றவர்களை விலக்குகிறார். ஆட்கள் பலவகைப்பட்டிருப்பர். பகவத் பாகவத கைங்கர்யமே பரம புருஷார்த்தமென்று அவர்களுக்கு ஆட்பட்டவர் சிலர். வேறு பலனையே விரும்பி அவர்கட்கே ஆட்பட்டவர் மற்றும் சிலர். அவர்களிடத்திலே விமுகராய்ப் பிறர்க்குத் தொண்டு செய்யும் ஆட்கள் மற்றவர். இம்மூன்றாவது வகுப்பினர் இலச்கையில் இருந்த ஆட்கள் போன்றவர். க்ஷுத்ர பலத்திற்காகத் தேவதாந்தரத்தைப் பற்றி நிற்பவரும் படிப்படியாக எம்பெருமானை அத்தேவதைக்கு ஸமனாகவும் தாழ்ந்தவனாகவும் நினைத்து ஆஸுரஸ்வபாவம் பெற்று லங்காஜனங்களாக மாறிவிடுவர். அவ்வகைப்பட்டவரை எம்பெருமான் போர் செய்தாகிலும் பரிபவிப்பான். இரண்டாம் வகுப்பினர்க்குத் தம் சுப தர்சனத்தை மாத்திரம் அளிப்பான். முதல் வகுப்பினர்க்கு நேரில் அவன் கைங்கர்யத்திலே அன்வயமுமுண்டு என்றிப் பாட்டில் தெளியவேண்டிய ஸாரமாகும். கூழ் என்று உணவுக்கும் பொருளுக்கும் பெயர். ஏழாட்காலு மென்றதற்கு 'எந்தை தந்தை தந்தை' யென்று சொல்லப் போகிறபடி ஏழு தலைமுறை காலமுமாய் என்று பொருள். இலங்கை பாழாளாக என்றதற்கு இலங்கையிலுள்ள ஆள் பாழாகும்படி என்றந்வயார்த்தமும் கூடும். ஆள்—அடிமை. அதற்கு வாழ்வாவது நித்ய ஸுக ரூபமாகை. மணம் என்பது கந்த (சந்தன)முமாம். ௩.

ப்ரக்ருதி, புருடன், ஈச்வரன் என்று தத்வம் மூன்று விதமாகிறது போல் புருஷார்த்தமும் அடைவே ஐச்வர்யம், கைவல்யம், மோக்ஷம் என மூன்று வகைப்படும். அவற்றில் மோக்ஷத்தை விரும்புவோரை மாத்திரம் அழைத்துக் கொண்டு மற்றவர்களை விலக்கவே, அவர்களும் எப்படியாவது இவருடன் சேர்ந்திருக்க ஆசைப்பட்டனர். அப்போது அவர்களையும் திருத்திப்பணி கொள்ள நினைத்து இனி அவர்கள் இருக்கவேண்டியபடியை உபதேசிக்கிறார். ஐச்வர்யகாமருக்கு மேற் பாசுரத்தில் உபதேசம் செய்யப் போகிறவராய் முதலில் கைவல்யகாமருக்கு உபதேசம் செய்கிறார்.

ச ஏடு நிலத்திலிடுவதன் முன்னம் வந்தெங்கள் குழாம் புகுந்து *
கூடுமனமுடையீர்கள் வரம்பொழி வந்தொல்லைக் கூடுமினோ *
நாடுநகரமும் நன்கறிய நமோ நாராயணாயவென்று *
பாடுமனமுடைப் பத்தருள்ளீர் வந்து பல்லாண்டு கூறுமினே.

| | | | |
|---|---|---|---|
| ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் | ஸூக்ஷ்ம சரீரத்தை மூல ப்ரக்ருதியில் லயிக்கச் சேர்ப்பதற்கு முன்னமே | கூடும் மனம் உடையீர்கள் | (நாங்கள் செய்யும் கைங்கர்யத்திலே) அன்வயம் விரும்புகின்ற நீங்கள் |
| வந்து | நாங்கள் இருக்குமிடம் வந்து சேர்ந்து | வரம்பு ஒழி(ய) | கைவல்யத்திற்கு மேற்பட்ட பலனைப் பெறுமல் கீழே நிற்பதென்னும் வரம்பான [illegible] |
| எங்கள் குழாம் புகுந்து | ஏகாந்திகளான எங்கள் கோஷ்டியிலே நுழைந்து | | |

| | |
|---|---|
| ஒல்லை | சீக்கிரமாக (இந்த ஜன்மத்திலேயே) |
| வந்து கூடுமின். | (எங்களிடம்) வந்து சேர்வீர்களாக. |
| நமோ நாராயணாய வென்று | திருவஷ்டாக்ஷரத்தைச் சொல்லி எனக்கென்ப தொன்றுமில்லை; நாராயண கைங்கர்யமே வேண்டுமென்று |
| நாடும் நகரமும் | க்ராம நகரவாஸிகள் எல்லோரும் |
| நன்கு அறிய | நன்றாக அறியும்படி |
| பாடும் மனம் உடை பத்தர் உள்ளீர் | பாட்டுக்கள் பாடிவர மனமுள்ள பக்தர்களுக்குள் சேர்ந்தவர்களாய், நீங்கள் |
| வந்து | (எம்பெருமானுக் கருகில்) வந்து |
| பல்லாண்டு கூறுமின். | பல்லாண்டு பாடுங்கள். |

'மோக்ஷம்போல் கைவல்யமும் நித்யம்; அது பெற்றவனுக்கு மோக்ஷம் கிடையாதெ'ன்பது ஏகதேசிகளின் ஸித்தாந்தம். ஆகவே கைவல்யநிஷ்டர்கள் ஐச்வர்யநிஷ்டரைப் போல் பிறகு கூட மோக்ஷம் பெறமுடியாதென்று அவர்கள் பக்கல் தயை மிகுந்து முதலில் அவர்களை அழைக்கிறாரென்றுரைப்பர். 'கைவல்யமும் அநித்யம். ஆனால் ஐச்வர்யத்தைக் காட்டிலும் சிறிது காலம் அதிகமாய் அனுபவிக்கக் கூடியதாகலாம். ஆகவே கைவல்யநிஷ்டரும் பிறகு பகவத் பக்தியாலே மோக்ஷம் பெறுவர்' என்றது ரேசிகஸித்தாந்தம். அதிக தயையினாலே கைவல்யார்த்திகளை அழைப்பதாயிருந்தால் பரமைகாந்திகளுக்கும் முன்னமே அழைத்திருக்கவேண்டும். ஆகையால், ஐச்வர்யம், கைவல்யம் இரண்டுக்கும் மேற்பட்ட மோக்ஷத்திலே ஊற்றமுள்ளவர்களை முதலில் அழைத்துவிட்டு, ஐச்வர்யத்தை விட உயர்ந்ததாய் ஜ்ஞானாநந்தரூபசுத்தாத்மஸ்வரூபாநுபவமாகிற கைவல்யத்திலே நின்றவர்களுக்கும் பலபடிகளிலுள்ள ஏற்றத்தை நினைத்து அவர்களை ஐச்வர்யகாமர்களுக்கு முன் அழைக்கிறார். மேலும் ஐச்வர்யகாமர் 'தத்³வயப்⁴வி வாத³ராயணஸ்ஸம்ஹவாக' என்கிறபடி அவ்வனுபவ காலத்திலேயே எம்பெருமானை பஜிக்கக் கூடும். கைவல்யம் பெற்றவர்க்கு அப்படியனுபவம் செய்யும்படிக்கான கரணகளேபரங்களில்லாததாலே இவர்கள் துர்தசையைக் கருதி அதனையுரைத்து இவர்களை முன்ன மழைத்தார் எனவும் கொள்ளலாமென்று இந்த ஸித்தாந்தத்தைச்சார்ந்தவர் உரைப்பர். கைவல்ய தசையிலே ஸ்தூலசரீரம் கிடையாதாயினும் ஸூக்ஷ்ம சரீரமுண்டு. அந்த ஸூக்ஷ்ம சரீரம் ப்ரளய காலத்திலே ப்ரக்ருதியிலே லயிக்கும். அதுவரையில் கைவல்யானுபவம் என்று சிலர் கூறுவர். அத்தசையிலே ஸூக்ஷ்மசரீரமும் கிடையாது. ஆத்மா தனித்து அனுபவிக்கப்படுவது போல் நிற்பதும் தனியாகவே என்பர் மற்றும் சிலர்.

இவ்விடத்தில் 'ஏடு நிலம்' என்பதற்கு, 'பொல்லாநிலம்' என்று பிள்ளையமுதனார் பொருளுரைத்தாராம். அப்போது ச்மசான பூமியென்றுரைத்தபடியென்று விவரித்தனர். இதனால் இந்த ஜன்மத்திலேயே எங்களோடு சேர விரும்புவோர் என்றிவ்வளவே ஸித்திக்கும். பொல்லாநிலமாவது கைவல்ய ஸ்தானமென்றார் சிலர். 'ஸூக்ஷ்ம சரீரமானது ப்ரக்ருதியில் லயிப்பதற்கு முன்' என்றது பெரியவாச்சான்பிள்ளைக்கு அபிமதமான அர்த்தம். பாலில்.

ஏடு போல் ஸ்தூல சரீரத்திலிருந்து ஸாரமாய் எடுக்கப்பட்டதால் ஏடு= ஸூக்ஷ்ம சரீரம். இப்படி 'ஏடு நிலத்தில் இடுவதன் முன்' என்று சொன்ன தற்குக் கருத்தென்ன வெனில்—

'நீங்கள் கைவல்யம் பெற்று ஸூக்ஷ்ம சரீரத்தோடு இருக்கும் காலத் திலே உங்களுக்கு பகவதனுபவயோக்யமான சரீரம் கிடையாது. அக்கைவல்ய பலம் பூர்த்தியாய் ஸூக்ஷ்மசரீரம் லயித்தபிறகு புனஸ்ஸ்ருஷ்டியில் உங்க ளுக்கு ஐச்வர்யத்திலே ருசியும் அதற்குத் தக்க சரீரமும் வரப்போகிற தில்லை. ஏனெனில், ஏற்கனவே நீங்கள் அவை தன்னில் விரக்தர்கள். ஆத்மாநு பவம் செய்து முடிந்துவிட்டதால் அதிலும் பற்று அற்றுவிட்டது. ஆகவே ஸநகாதி சரீரம் போலே கேவல பகவத் பக்திக்குத் தகுந்த சரீரமே வரும். அப்போது எங்களைப் போனுள்ளவரின் கோஷ்டியில் உங்களுக்கு ப்ரவேச முண்டு. ஐச்வர்யார்த்திகளுக்குத் தங்கள் பலனை அனுபவித்த பிறகு பகவத் பக்தியிலேயே பற்றுதல் என்று சொல்லமுடியாது. வேறு விதமான ஐச்வர்யத் திலும் ஆத்மாநுபவத்திலும் நசை நடமாடலாம். ஆக பிற்காலத்திலே பாகவத கோஷ்ட்யர்ஹரான நீங்கள் உங்களுடைய ஸூக்ஷ்ம சரீரம் லயிப்பதற்குள் ளாகவே முன்னமே இக்கோஷ்டியில் சேர விரும்பினால் இந்த ஜன்மத்திலேயே சேர்ந்து விடுங்கள்' என்று கருத்தென கைவல்யத்திலே ஸூக்ஷ்ம சரீரம் இசைந்தவர் உரைப்பர். இதனால் 'முமுக்ஷுக்கள் ஸூக்ஷ்ம சரீரம் லயித்த பிற கும் முன்னமும் பக்தகோஷ்டியில் புகுந்து நிற்பார்கள். ஐச்வர்யார்த்திகளும் அது ப்ரக்ருதியில் லயிப்பதற்கு முன்னமும் முமுக்ஷுக்களாகக் கூடுமாதலால் பின்னும் முன்னும் பக்தகோஷ்டியில் ப்ரவேசம் பெறுவர்கள். கைவல்யார்த்தி களுக்கு மாத்திரம் ஸூக்ஷ்ம சரீரலயத்திற்கு முன் அது கிடைக்காது. மஹா ப்ரளயத்திலே ஸூக்ஷ்ம சரீரமும் கழிந்து லயித்தவர்கள் போல் இவர்களும் மறுபடி ஸ்ருஷ்டி காலத்திலே ஸ்தூலசரீரம் பெறுவார்கள்; பக்தருமாவார்கள்' என்று குறித்ததாம். இப்போது பாசுரம் அமைந்த க்ரமத்திலேயே பதங்கள் அந்வயம் பெறுமாகையால் முன்னம் என்பது வந்து—புகுந்து என்பதோடு சேரத் தட்டில்லை.

இங்கே கைவல்யத்திலே ஸூக்ஷ்ம சரீரம் இசையாதார் கருத்தாவது— 'ஸூக்ஷ்ம சரீரம் இருந்தால்தானே நீங்கள் இந்தக் கல்பத்திலேயே பகவத நுபவயோக்யமான சரீரம் பெறலாம். அதுவும் போய் கைவல்யத்திலே நின்று விட்டால் வேறு கல்பம் வரும் வரையில் உஜ்ஜீவிக்க முடியாதே. இந்த ஸ்தூல சரீரம் போய்விட்டால் ஸூக்ஷ்ம சரீரமும் உங்களுக்குப் போய்விடும். ஆகவே அது போவதற்குள் இந்த ஜன்மத்திலேயே வாருங்கள் என்றதாம். இப்பக்ஷத் தில் நிலத்திலிடுவதாவது—இவர்களை விட்டுப் பிரிந்து ஓரிடத்தில் இருந்துவிடு வதே யன்றி ப்ருக்ருதியில் லயிப்பதன்று; லயம் ப்ரளய தசையிலேயே காரணங்களுக்கு வருமென்று ஸித்தாந்தம் என்றும், இங்கு ஸூக்ஷ்மம் ஸ்தூலம் என்கிற விபாகம் வேண்டாம். பஞ்சபூத ஸாரமான சரீரமும் ஏடு ஆகலா மென்றும் கருதுகின்றனர்.

5

பூமவித்யையிற் சொன்னபடி ஐச்வர்யத்தைக்காட்டிலும் ஆத்மாநுபவம் உயர்ந்த புருஷார்த்த மென்றவாறு கைவல்யார்த்தியை முன்னமே அழைக்கக் காரணம் பல விருந்தாலும், கீழ்ச் சொன்னபடி அநர்த்தம் பாசுரத்தில், 'படு நிலத்தில் இடுவதன் முன்னம்' என்று குறிக்கப்பட்டதால், இது முக்கியமான காரண மென்றார் பெரியவாச்சான்பிள்ளை. அந்த அநர்த்தமும்—கைவல்யாநு பவ காலத்திலே பகவதநுபவயோக்யமான சரீரம் போய்விட்டதும், கைவல்யாநுபவம் இருக்கும்போது நடுவிலே ஆர்த்தி பிறந்து ஒருக்காலும் மீளவொண்ணாமையும், ஐச்வர்யகாமன் போலே மத்யே மத்யே சில காலத்திலே பகவத் ஸம்பந்தம் பண்ண யோக்யதையில்லாமையுமாம். இதுவே அவர் நினைத்தது மென்பர்.

இக்கைவல்யாநுபவ காலத்திலே இப்படி சரீரமில்லையாகையாலே இத்தை ஜராமரணமோக்ஷமென்கிறது. கைவல்யகாமரில் பஞ்சாக்நிவித்யாநிஷ்டரெனச் சிலருண்டு. இவர் பரமாத்மாவையும் சேர்த்துக்கொண்டு ஆத்மாவை உபாஸிப்பவர். இவர்களுக்கு முதலில் கைவல்யாநுபவம். அப்போது, பகவானை யாச்ரயித்திருந்த இவ்வதிகாரிகளுக்கு ஆத்மஸ்வரூபத்திற்குள்ள குணங்களெட்டிலே அபஹதபாப்மத்வமும் அத்துடன் சேர்ந்த ஸத்யகாமத்வாதிகளும் நீங்கலாக மற்ற குணங்கள் சித்திப்பதாலே ஜராமரணாதிமோக்ஷமுண்டு. இவர்கள் கட்டளைப்படி ஆத்மாநுபவம் செய்துவிட்டு, பிறகு அபஹதபாப்மத்வாதிகளும் ஆவிர்ப்பவிக்க, பகவதநுபவரூபமான மோக்ஷம் பெறுவார்கள். மற்ற கைவல்யகாமர் மாத்திரம் மறுபடி பகவத்பக்தியை அநுஷ்டிப்பதற்குச் சரீரம்பெற்று உபாயத்தை யநுஷ்டித்த பிறகு ஜராமரணாதிகளும் பாபமும் நீங்கி பகவானைப் பெறுவரென்றும் பணிப்பர்.

வரம்பொழி என்பதின் கருத்தாவது—நீங்கள் எங்களோடு சேர்ந்தால் உங்கள் பலனுக்கு ஹானியில்லை. மோக்ஷத்தில் பகவதநுபவத்தோடு ஆத்மாநுபவமும் இருக்கிறதல்லவா. எங்களோடு சேராமலிருந்தால் ஆத்மாநுபவம் மாத்திரம் பெறுவீர்கள். அது வரம்பாகும். அதற்குமேலுள்ள பலன் இல்லையாம். ஆக ஆத்மாநுபவச்சுழலிலே அகப்பட்டுக்கொள்ளவேண்டாம் என்பதாம்.

மேல் இரண்டு அடிகளில் திருமந்த்ரத்தின் அர்த்தத்தை எல்லோரும் அறியும்படி பாடிப் பல்லாண்டு கூறச்சொல்வதால் திருப்பல்லாண்டில் திருமந்த்ரத்தின் பொருள் பொதிந்திருப்பது சொன்னபடியாம். ச

ரு அண்டக்குலத்துக் கதிபதியாகி யசுரரிராக்கதரை *
இண்டைக்குலத்தை யெடுத்துக்களைந்த விருடீகேசன் றனக்கு *
தொண்டக்குலத்திலுள்ளீர் வந்தடிதொழு தாயிர நாமஞ்சொல்லி *
பண்டைக்குலத்தைத்தவிர்ந்து பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே.

| | |
|---|---|
| பண்டை குலத்தை | பழைய கூட்டத்தை ஐச்வர்யார்த்திகளின் சங்கத்தை |
| தவிர்ந்து | விட்டு |
| தொண்டர் குலத்தில் உள்ளீர் | வாழாட்பட்டு நின்றவரின் திரளிலே புகும் நீங்கள் |
| அண்டம் குலத்துக்கு அதிபதியாகி | ப்ரம்மாண்டங்களின் ஸமூகத்திற்கு (ஸர்வ பிரம்மாண்டங்களுக்கும்) ஸ்வாமியாய் |
| (அங்குள்ள ஸத்துக்களை ரக்ஷிக்க). | |
| அசுரர் இராக்கதரை | அஸுர ராக்ஷஸர்களை |

| | |
|---|---|
| இண்டை குலத்தை எடுத்து களைந்த | நெருக்கமான வம்சத்தைப் பிடிங்கி யெடுத்து பூண்டோடு அழித்தவரான |
| இருடீகேசன் தனக்கு | ஹ்ருஷீகேசனை எம்பெருமானுக்கு |
| வந்து அடி தொழுது | அருகில் வந்து திருவடிகளை வணங்கி |
| ஆயிரம் நாமம் சொல்லி | ஸஹஸ்ரநாமமும் சொல்லி |
| பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு என்மின் | வாழ்த்துக் கூறி வாருங்கள். |

ஐச்வர்யகாமர் இருவர்—புதிதாக ஐச்வர்யம் பெறவிரும்புவோர்: இழந்ததைத் திரும்ப விரும்புவோர். அண்டத்திற்குள்ளே ஏதேனுமொரு பலனை விரும்புவோர், அண்டக்குலத்துக் கதிபதியே! என்றழைப்பர். ஐச்வர்யமிழந்தவர் அதை அபஹரித்த அஸுராதிகளைக் களைபவனே! என்று கூவுவர். அவனும் ஹ்ருஷீகேசனாகையால் அப்பலன்களையளித்து அவர்களின் இந்திரியங்கள் அவற்றை யனுபவிக்கும்படி செய்வான். இப்படி ஐச்வர்யத்தை விரும்பி இரண்டொரு நாமங்கள் சொல்வதோடு நிற்காமல் ஒரு பலனையும் கோராமல் எல்லா நாமங்களையும் சொல்லி வாழ்த்தவேணு மென்றதாயிற்று. 'இண்டைக் குலத்தை' என்று, கோடாலிக்குக் காம்புபோல் அசுரருக்குத் துணையாகி நெருங்கும் சிலரைச் சொன்னதுமாம். தொண்டக் குலத்திலுள்ளீர் என்பதற்குத் தொண்டர்களான பரமைகாந்திகளின் வம்சத்திலே பிறந்து ப்ரயோஜநாந்தரகாமரான நீங்கள் அப்பலாந்தர காமரின் கூட்டத்தைத்தவிர்ந்து வந்து சேருங்கள் என்றும் உரைத்தல் கூடும். 'பண்டைக் குலத்தைத் தவிர்ந்து' என்பதை உள்ளபடி நான்காமடியிலேயே சேர்க்கலாம். வரம்பொழி என்று மோக்ஷத்தில் ஆத்மாநுபவம் உண்டென்றதுபோல் காமபோகங்களும் உண்டென்று நினைக்க வேண்டா. 'வயஞ்ஜுகிஜ்ஞாநாவிஷெளா: யஸயதிந்த்ரியகிம்கரா:', 'நாஸ்தி ஸம்ஹதிரஹாகம் யஷாகம் ச வஸவாரழ' என்கிறபடி இதனை விட்டொழித்துப் பல்லாண்டு பாட வேண்டு மென்று கருத்து. இப்பாசுரத்திலே நாலு அடிகளாலும் சாரீரக சாஸ்த்ரத்தின் நாலு அத்யாயங்களின் பொருள் கருதப் படுகின்றதுபோலும். இம்மூன்று பாசுரங்களால் எல்லோரையும் பல்லாண்டு பாட அழைத்ததாகும். இப்படியாகில் முதல்பாகம் இதரபலனை விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் முமுக்ஷுக்களானவர்களைக் குறித்துப் பிறந்ததெனல் வேண்டும். 'மூன்று பாசுரங்களும் பகவத் பக்தர்களைப் பற்றியே வந்தன. முதலில் ஏற்கனவே பரமைகாந்திகளானவர்களை யழைத்தது. பிறகு கைவல்ய காமரான பக்தரை. பிறகு தொண்டர்களாகவேயிருந்து ஆர்த்தராயும் அர்த்தார்த்திகளாயுமிருப்பவர்களை யழைத்தது' என்கிற நிர்வாஹமும் உண்டு. ரு

சூ எந்தைதந்தை தந்தைதந்தைதம் மூத்தப்ப னேழ்படிகால்தொடங்கி *
வந்து வழிவழியாட் செய்கின்றோம் * திருவோணத் திருவிழவில்
அந்தியம் போதிலரியுருவாகி யரியை யழித்தவனை*
பந்தனைதீரப் பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே.

| | | | |
|---|---|---|---|
| ஏழ் படி | தன்னோடு ஏழு உருவம், அதாவது ஏழு தலைமுறையையுடைய | அரி உருவாகி | ஹரியின், அதாவது சிங்கத்தின் உருவம் உடையவனாய் |
| எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் | என் தந்தையின் தந்தைக்குத் தந்தையின் தந்தையார் பிதாமஹனின் | அரியை | விரோதியை (ஹிரண்யாஸுரனை) |
| கால்தொடங்கி | காலத்திலிருந்து | அழித்தவனை | ஸம்ஹரித்த எம்பெருமானைக் குறித்து |
| வழி வழி | வம்சபரம்பரையாய் | திருவோணம் திருவிழவில் | திருவோண நக்ஷத்திர மஹோத்ஸவத்திலே |
| வந்து ஆள் செய்கின்றோம். | பரமைகாந்திகளாயிருந்து வந்து அடிமை செய்கிறோம். | பந்தனை தீர | நிபந்தனை, அதாவது கட்டுப்பாடு தீரும்படி |
| அந்தியம் போதில் | ஸாயங்காலத்தில் | பல்லாண்டு பாடுதும் | வாழ்த்துப் பாட்டுக்களைப் பாடுவோம். |

வாழாட்பட்டில் அழைக்கப்பெற்ற முமுக்ஷுக்கள் வந்து சேர்ந்தவுடன், ஏழாட்காலும் பழிப்பிலாவடிமைசெய்யும் நாம், 'பரம்பரையுரிமையுள்ளவரே பாடவேண்டும்' என்கிற நிபந்தனையிராமல், பாரம்பர்யக்ரம மிராத பரமைகாந்திகளாயிருப்பவரோடும் சேர்ந்து பல்லாண்டு பாடுகின்றனம் என்றபடி.

செய்கின்றோம் என்ற பன்மை தன்னோடு தன் பரம்பரையிற் சேர்ந்துள்ள முன்னோரையும் சேர்த்துக் கொண்டதால் வந்ததாகும். பாடுதும் என்றவிடத்தில் பன்மை வேறு பரமைகாந்திகளையும் தன்னோடு சேர்த்துக்கொண்டு சொன்னதாகும். இப்பாசுரமானது, ஆழ்வார் தாம் பாடுவதைச் சொல்வதன்று; வாழாட்பட்டில் அழைத்தவர்கள் சொன்னதை அநுவாதம் செய்தது மாத்திரமென்பர். அப்போது 'எந்தை' என்பதற்கு 'நம் தந்தைகள்' என்று பொருள்; சேர்ந்தவர்களும் ஆழ்வாரைப்போல் ஏழு தலைமுறையாகப் பரமைகாந்திகள் என்று கொண்டு நிர்வாஹம் அறிவது. எந்தையினுடைய தந்தையென்றிப்படி உரைக்காமல், நானும் என் தந்தையும் அவர் தந்தையுமென்றவாறு எல்லோரையும் ஸமப்ரதானமாகக்கொண்டால் 'தொடங்கி' என்பது முதலியன சேரமாட்டா. விழவு—விழா, உத்ஸவம், (திருநாள்). திருவோணத்தைத் தீர்த்த தினமாக்கி நடத்தும் ப்ரம்மோத்ஸவமுமாம். திருவோணத்திருவிழவில் அரியுருவாகி என்றந்வயம் கூறுவர். ஸ்வாதீ நக்ஷத்திரத்திலன்றோ ந்ருஸிம்மனின் அவதாரம்; திருவோணத்திலென்றதெங்ஙனமெனில்—திருவோணம் பொதுவாய் விஷ்ணுநக்ஷத்ரமாகையால் ந்ருஸிம்மரூபியான விஷ்ணுவுக்கும் அது ஜந்ம நக்ஷத்ர

மாகலாமென்பர். பாஞ்சராத்ரத்தில் (பாத்மம்) ஸ்வாதிக்குப் பதிலாகத் திருவோணத்தை ந்ருஸிம்ஹ ஜந்ம நக்ஷத்ரமாகச் சொன்னதும் காண்க. ஏதேனுமொரு காரணத்தினால் ஸ்வாதியில் உத்ஸவத்தைக் கொண்டாடாதவர்கள் திருவோணத்தில் கொண்டாடலாமென்றே, கல்பபேதேந அதுவும் ஜன்மநக்ஷத்ரமென்றே அதன் கருத்தாகும். இங்கு திருவோணத்தில் என்னாது 'திருவிழவில்' என்றதால் உத்ஸவம் நடக்கும்போது நரஸிம்மாவதாரம் நடந்தேறினதாகக் கொள்ளவேண்டும்படியாகிறதே எனில்—ந்ருஸிம்மன் அவதரிப்பது தெரிந்து வெகு மஹான்கள் குதூஹலத்தோடிருந்ததே மஹோத்ஸவமென்க. பதவுரையிற் சொன்ன யோசனையையும் நோக்குக.

அந்தியம் - முடிவானது; முடிவுபொழுது; ஸாயங்காலம். அன்றி, அந்தி அம்போது எனப்பிரித்து அம்-அழகிய அந்திப்போது ஸாயங்காலமென்பர்.

பந்தனை என்பதற்கு அனுக்கம் என்று பொருள்கொண்டு ப்ரஹ்லாதனுக்காக ஹிரண்யனென்னும் அரிக்கு அரியாய் அவதரித்து, பிறந்த உருவம் வளர்ந்து பலிஷ்டமாகவேண்டிய காலமளவு விளம்பிக்காமல் அந்த க்ஷணத்திலேயே அஸுரனை ஸம்ஹரித்தவனுக்கு ஏதேனும் அனுக்கம்—பாலபீடை, வாட்டம் முதலானது நேரிடக்கூடுமென்று ஆழ்வார் நினைத்து, இப்போதே அஸுரஸம்ஹாரமும் அனுக்கமும் நேர்ந்ததாகத் தம் பக்திப்ரகர்ஷத்தாலே பாவித்து அனுக்கம் தீரப் பல்லாண்டு பாடவேணு மென்கிறார் என்று ரஸமாகவுரைப்பர். இப்படி மேலே பலவிடங்களிலும் இவ்வித ரஸோக்தியுண்டு. இப்படி ரஸிக்கும்படியிலே இல்லாமலிருக்கும் ஸாமான்யாதிகாரிகளும் ஸஹ்ருதயமாக க்ரஹிக்க வேண்டுமென்று நாம் பதவுரையில் பந்தனை என்னும் பதத்திற்கு வேறு பொருள் கூறினது.

சா

இப்படி ஏற்கனவே பரமைகாந்திகளானவர்களைச் சேர்த்துக்கொண்டு இனி முன் சொன்ன ஸகாமர்களும் இவர் இஷ்டப்படிச் சேர்வதற்கு ஸித்தமாயிருக்க, அவர்களுக்கு ஹிதோபதேசம் பண்ணி பஞ்ச ஸம்ஸ்காரம் செய்து வைத்து அவர்களுடன் சேர்ந்து பல்லாண்டு கூறுவதை மேல்பாட்டு சொல்லுகிறது.

எ தீயிற்பொலிகின்ற செஞ்சுடராழி திகழ்திருச் சக்கரத்தின் *
கோயிற்பொறியாலே யொற்றுண்டுநின்று குடிகுடி யாட்செய்கின்றோம் *
மாயப்பொருபடை வாணனை யாயிரந்தோளும் பொழிகுருதி
பாய * சுழற்றிய வாழிவல்லானுக்குப் பல்லாண்டு கூறுதுமே.

| | | | |
|---|---|---|---|
| குடிகுடி | குடும்பம் குடும்பமாக | ஆழி | மண்டலாகாரமாய் |
| தீயில் | ஹோமாக்னியில் | திகழ் | விளங்குகிற |
| பொலிகின்ற | சிறப்பு பெறும், | திருச்சக்கரத்தின் | ஸுதர்சனாழ்வானுடைய |
| செம் சுடர் | சிவந்த ஜ்வாலையையுடைய | | |

| | |
|---|---|
| கோயில் | ஸ்தானமாகிய (வெள்ளி முதலான உலோகத்தினுல் செய்யப்பட்ட) உருவத்தின் |
| பொறியாலே | பொறிவாலே |
| ஒற்று உண்டு | அடையாளம்பெற்று |
| நின்று | அடங்கி நின்று |
| ஆள் செய்கின்றோம். | அடிமை செய்கிறோம். (ஆகையாலே) |
| மாயம் பொரு படை வாணனை | மாயா யுத்தம் செய்யும் சேனையோடு கூடின பாணாஸுரனைக் குறித்து |
| ஆயிரம் தோளும் பொழி குருதி பாய | ஆயிரம் தோள்களும் சொரிகின்ற ரக்தம் (ப்ரவஹித்துப்) பாயும்படி |
| ஆழி சுழற்றிய | சக்ராயுதத்தைச் சுழலச் செய்த |
| வல்லானுக்கு | ஸமர்த்தன கண்ணனுக்கு |
| பல்லாண்டு கூறுதும். | வாழ்த்து சொல்லுவோம். |

'என்னையும் என் உடைமையையும் உன் சக்கரப் பொறியொற்றிக் கொண்டு, (5. 4. 1.) என்றிவர் சொல்லுகிறபடி விபரீத ஸங்க பரிஹாரத்திற்காகக் குடியிலே எல்லோரும் திருவிலச்சினை பெறவேண்டுமென்று இங்கே ஆழ்வார் கருதுகின்றனர். 'தீயில் பொலிகின்ற' என்பது கோயிலுக்கு அடைமொழி. செஞ்சுடர் என்றது அப்ராக்ருதமாய் ஸ்வபாவமாய் சக்கரத்தாழ்வானுக்குள்ள ஜ்வாலையாம். தீயில்பொலிகின்ற—தீ- அக்கினி. அது முதலான தேஜஸ்ஸுக்களைக் காட்டிலும் அதிகமாக ப்ரகாசிக்கின்ற சக்ரம் என்றும் கொள்வர். பொறி - பொறிதல், விழல் - ஆசார்யன் செய்யும் தாபஸம்ஸ்காரம். சக்ராயுதம் தரிக்காதவரின் தோள்கள் பாணாஸுரன் தோள்களுக்கொத்தவையென ஆழ்வார் கருதுகின்றனர் போலும். சக்ரதாபத்தை வெறுத்தவர்க்குச் செஞ்சுடர்ச் சக்கரத்தால் பாதை அதிகம். ஆயிரம் தோள்களும் பாதிக்கப்பட்டாலும் அவற்றில் கிருபைசெய்து விடப்பட்ட நாலு நீங்கலாக மற்றவையே அறுக்கப்பட்டன வென்றறிக. ஆழிவல்லானுக்கு என்றே சேர்த்து ஆழிக்கு ஸ்வாமி, ஆழியை வேண்டுமளவு பார்த்து உபயோகிக்கிறவனுக்கு என்று முரைக்க.

இப்படி கைவல்யகாமரும் ஐச்வர்யகாமரும் முமுக்ஷுக்களாய் பஞ்ச ஸம்ஸ்காரம் பெற்றுப் பல்லாண்டுபாடச் சேருதல் இங்கே சொன்னதாம். இப்பாசுரத்தில் கைவல்யகாமரை மாத்திரம் சொல்லி மேற்பாசுரத்திலே ஐச்வர்யகாமர் சேர்ந்ததைச்சொல்லுகிறதாகப் பெரியோர் உரைப்பர் என்பதை முன்னமே சொன்னோம். எ

அ நெய்யிடை நல்லதோர் சோறும் நியதமு மத்தாணிச்சேவகமும் *
கையடைக்காயும் கழுத்துக்குப் பூணொடு காதுக்குக் குண்டலமும் *
மெய்யிட நல்லதோர்சாந்தமுந் தந்தென்னை வெள்ளுயிராக்கவல்ல *
பையுடைநாகப் பகைக்கொடியானுக்குப் பல்லாண்டு கூறுவனே.

| | |
|---|---|
| நெய் இடை | நெய்யின் நடுவிலுள்ள |
| நல்லது ஓர் சோறும் | ஜாத்யாதி தோஷமற்றதாய் எம்பெருமான் அமுது செய்ததால் விலக்ஷணமுமான அன்னத்தையும், |
| நியதமும் | நித்யமாய் கோயிலில் நடத்திவரும் கைங்கர்யத்தையும், |
| அத்தாணி | ஆஸ்தானத்தில் (ஓலக்கத்தில்) (சிறப்பாய்ச் செய்யவேண்டிய) |
| சேவகமும் | கைங்கர்யத்தையும் |
| கை அடைக்காயும் | கைகள் நிறையும்படி ப்ரஸாதித்த வெற்றிலை பாக்கையும் |
| கழுத்துக்கு பூணோடு | கழுத்தில் இடும் ஆபரணமான மணி முத்து மாலை முதலியவற்றோடு |
| காதுக்கு குண்டலமும் | காதுகளில் இடக்கூடிய குண்டலங்களையும் |
| மெய் | உடம்பில் |
| இட | பூசுவதற்கு |
| நல்லது ஓர் சாந்தமும் | சிறந்ததொரு சந்தனத்தையும் |
| தந்து | அளித்து |
| என்னை | அடியேனை |
| வெள் உயிர் ஆக்க வல்ல | சுத்தமான ஆத்மாவாகச் செய்ய ஸமர்த்தனை |
| பை உடை நாகம் பகை கொடியானுக்கு | படத்தையுடைய பாம்பின் சத்ருவான கருடனை த்வஜமாகவுடையவனுக்கு |
| பல்லாண்டு கூறுவன் | அடியேன் பல்லாண்டு பாடுவேன். |

இந்தப் பாசுரத்தில் பல்லாண்டு பாடத் தாம் சேர்த்துவைத்த பெருந்திரளிலே தம்மிடத்திலே எம்பெருமான் பண்ணியருளின விசேஷாநுக்ரஹத்தை அநுஸந்தித்துக்கொண்டு ஆழ்வார் பல்லாண்டுபாடுவது கூறப்படுகிறது. ஆகவே பன்மையாக ப்ரயோகிக்காமல் கூறுவனே என்று ஒருமையாகச் சொன்னது சாலப்பொருத்தமுள்ளதாம். கை—திருக்கையால் அளித்த அடைக்காய் எனவுமுரைப்பர். அடை = இலை. அத்துடன் கூடிய பாக்கு அடைக்காய். 'சோறும் அடைக்காயும்' என்று சேர்த்துச் சொல்லாமலிருப்பதிலிருந்து, 'அன்னத்தை ப்ரஸாதிப்பதும், கோயிலில் நியத கைங்கர்யம் பெறுவதும் எப்போதுமுள்ளது. அத்தாணிச்சேவகம் செய்யும்போது அடைக்காய் முதலானவை உள்ளனவா'மென விளங்குகிறது. பூணோடு. இங்கு ஒடு 'உம்' என்னும் பொருளில் வந்தது. இப்பாசுரம் ஸ்தான க்ரமமாய் ஐச்வர்யார்த்திவிஷயமென்றும், நெய் என்று தொடங்கி சொன்னதெல்லாம் ஐச்வர்ய பலமென்றும் பூர்வர்கள் உரைத்தனர். அப்போது அத்தாணிச்சேவகமென்று பகவத் கைங்கர்யம் சொல்லக்கூடுமோ வென்னில்—ஐச்வர்யார்த்திகளும் இப்போது திருத்தப்பட்டிருப்பதால் கூடுமென்றனர். ஆயினும் கூறுவனே என்று ஏகவசனம் ஸங்கதமோ வென்னில்—ஐச்வர்யார்த்திகளின் திரள் மிகப் பெரிதாகையாலே ஊருக்கொருவன் ப்ரதானனாயிருந்து பேசுவதுபோல் அத்திரளுக்கு ஒருவன் ப்ரதானமாய் நின்று பேசுவதாக வைத்து ஸங்கதமாக்கலாமென்றனர். அதனையும் தெளிக.

நெய் இடை: உருக்கின நெய் அன்னத்தில் உள்ளும் மேலும் மிகப் பரவியிருப்பதால் நெய்யின் இடையில் அன்னமென்கிறது. நெய் எடை என்று பாடம்

ஸ்வைத்து நெய்யவ்வளவு நிறையுள்ள சோறு என்றதிசயித்துரைப்பர். கீழ்ப்பாட்டில் எம்பெருமான் நேரில் செய்த விரோதிநிரஸனத்தைச் சொன்னார். இங்கே கருடன் மூலமாகச் செய்ததைச் சொல்லுகிறார். பையுடை என்கிற விசேஷணத்தாலே, கருடன் என்று தெரிந்தும் துணிவு பெற்றுப் படம் விரித்துப் போர் செய்யவல்ல பெரும் நாகங்களையும் ஸம்ஹரிப்பவனென்று தெளிவித்தபடியாம். ‘வன்புற்றரவின் பகைக்கொடி’ (2. 3. 8.) என்ற விடத்தில் வன்புற்றுபோல் இது ஒரு அடைமொழியாம். அ

ஆழ்வார் முதலில் தமக்கு ப்ரஸாதித்த விசேஷங்களை வெளியிட்டு, பிறகு எல்லோருக்கும் பொதுவாக அருளினவற்றை அனுஸந்தித்துக்கொண்டு அவர்களோடு சேர்ந்து பல்லாண்டு கூறுகிறார்.

௯ உடுத்துக்களைந்தநின் பீதகவாடை யுடுத்துக் கலத்ததுண்டு *
தொடுத்ததுழாய்மலர் சூடிக்களைந்தன சூடுமித் தொண்டர்களோம் *
விடுத்ததிசைக் கருமந்திருத்தித் திருவோணத் திருவிழவில் *
படுத்தபைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப் பல்லாண்டு கூறுதுமே.

| | |
|---|---|
| உடுத்து களைந்த | (நீ முதலில்) தரித்திருந்து பிறகு (பிறர்க்காக) அவிழ்த்துவிட்ட |
| நின் பீதகம் ஆடை | உன்னுடைய பீதாம்பரத்தை |
| உடுத்து | தரித்துக்கொண்டு |
| கலத்து அது உண்டு | (நீ அமுது செய்த) கலத்தில் (பாத்ரத்தில்) உள்ளதைப் புசித்து |
| சூடி களைந்தன | நீ சாத்திக்கொண்டு கழித்து விட்டவையான |
| தொடுத்த துழாய் மலர் | திருத்துழாய் மலர் மாலைகளை |
| சூடும் | சூட்டிக் கொள்ளும் |
| இ தொண்டர்களோம் | (வெகு காலமாகத் தொண்டு செய்கின்றவரும் இப்போது முமுக்ஷுக்களாய் வந்தவர்களும் சேர்ந்து) இப்படித் தொண்டர்களாயுள்ள நாங்கள் |
| திருவோணம் திருவிழவில் | ச்ரவண நக்ஷத்ர மஹோத்ஸவத்தில் |
| விடுத்த | நியமித்து விடப்பட்ட |
| திசை கருமம் | திக்குகளிலே செய்ய வேண்டிய கார்யங்களை |
| திருத்தி | நன்றாகச் செய்து |
| படுத்த | (பள்ளி கொள்ளத் தக்கவாறு) பரவியும், |
| பை | (விதானமாக மேலே) படத்தை விரிக்கின்றதுமான |
| நாகு அணை | ஆதிசேஷனாகிற படுக்கையிலே |
| பள்ளி கொண்டானுக்கு | சயனித்திருப்பவனான உனக்கு |
| பல்லாண்டு கூறுதும் | மங்களாசாஸனம் செய்கின்றோம். |

எம்பெருமான் திக்குகளிலே எழுந்தருளும்போது கூடவே சென்று நியமித்த கைங்கர்யங்களைச் செய்துவந்து, பிறகு அவர் களைந்து அளித்தவற்றைப் பெற்று, சயனத்திற்கு எழுந்தருளும்போது பல்லாண்டு பாடுவோமென்றபடி. ௯

'நாங்கள் முமுக்ஷுக்களானாலும் எங்களுடைய கார்யம், பக்தர்களுடைய கார்யம்போல் உபாயகோடியிற் சேர்ந்ததன்று. ஸ்வயம்ப்ரயோஜந கைங்கர்ய ரூபமேயாம். ஏனெனில், ப்ரபத்தியினாலேயே மோக்ஷம் எமக்கும் எழுமைச் சேர்ந்தவர்கட்கும் சித்தித்துவிட்டதாதலின்' என்று தம் கைங்கர்யத்திற்குள்ள ஏற்றத்தை யனுஸந்தித்துப் பல்லாண்டு பாடுகிறார்.

ய எந்நா ளெம்பெருமா னுன்றனுக் கடியோமென் றெழுத்துப்பட்ட
வந்நாளே * அடியோங்க ளடிக்குடில் வீடுபெற் றுய்ந்ததுகாண் *
செந்நாள் தோற்றித் திருமதுரையுட் சிலைகுனித்து * ஐந்தலைய
பைந்நாகத்தலைப் பாய்ந்தவனே யுன்னைப் பல்லாண்டு கூறுதுமே.

எம்பெருமான்—எங்கள் தேவனே!
எந்நாள் } எந்நாளும் (எப்பொழுதும்)
உன் தனக்கு—உனக்கு
அடியோம் — அடியவர்களாகிறோம்
என்று எழுத்துப் பட்ட } என்று உடன்படிக் கையேற்பட்ட
(அல்லது)
எந்நாள் — எந்த தினத்திலே
அடியோம் — அடியவர்களாவோம்
என்று எழுத்துப்பட்ட } என்று ஆர்த்தியால் சொல் கிளம்பிய
அந்நாளே — அந்த நாளிலேயே
(அல்லது)
அம் நாளே — அழகிய நாளிலேயே
அடியோங்கள் } தாஸர்களான எங்களுடைய
அடி குடில்—அடிமைப்பட்ட குடிசை
வீடு பெற்று — மோக்ஷம் பெற்று
உய்ந்தது காண் } உஜ்ஜீவித்துவிட்டதே.
வட மதுரையுள் } வட தேசத்திலுள்ள திருமதுரையிலே
செம் நாள் } செம்மையான நாளிலே
தோற்றி — ஆவிர்பவித்து
சிலை குனித்து } கம்ஸனின் தனுர் யாகத்திலே வைத்திருந்த வில்லை வளைத்து
பை நாகம் தலை } படம் விரித்த (காளிய) ஸர்ப்பத்தின் தலைகளிலே
ஐந்து அலைய } ப்ராணிகள் ஐந்தும் திண்டாடும்படி
பாய்ந்தவனே—குதித்தவனே!
உன்னை பல்லாண்டு கூறுதும். } உன்னைப் பல்லாண்டு சொல்லி வாழ்த்துவோம்.

'எந்நாளும்' என வேண்டிய விடத்திலே 'உம்' என்பது லோபித்துக்கிடக்கிறது. இதனாலே ஏதோ பலனுக்காகக் கொஞ்சகாலம் அடிமையாயிருத்தலின்றி நித்யதாஸ்யம் என ஸித்திப்பதால் மோக்ஷபலம் கேட்டதாகிறது. 'க்ஷாஉஹஜெகாஷ்க்ஷமிதூக்ஷிம்க்ஷஃ ஹுஹ்தையிஷ்தூசி ஸநாயஜீவிதஃ' என்றாற்போலே, 'எப்பொழுது' எனப் பொருள் கொண்டு இரண்டாம் யோஜனை. இங்கே உய்ந்தது என்றதை, 'ஸநாயஜீவிதஃ' என்றருளிச்செய்தார். 'எழுத்துப் பட்டதந்நாளே' எனவேண்டுமிடத்தில், எழுத்துப்பட்ட அந்நாளே என்று குறைந்துகிடக்கிறதென்று கொண்டு, எழுத்துப்பட்டது எந்த நாளோ அந்த நாள் எனவுமுரைப்பர். எழுத்துப்பட்ட நாள் எந்நாளோ என்றும், 'நாள்' என்னும் பதத்தைக் கூட்டிக்கொண்டு பணிப்பர். 'அடியோமென்றெழுத்துப்பட்ட

அந்த அழகிய நாள் எந்நாள், எப்படிப்பட்ட நாள்? அது ஓர் ஒப்பற்ற நாள். அதுவே ஒப்பற்ற நாளானபோது, அடிமை செய்யவேற்பட்ட நாளின் பெருமையை என்னவென்று கூறுவது' என்ற வெகு ரஸமான யோஜனையும் காண்க. அந்நாளே என்பதால் 'இன்றையோ நாளையோ' என்று நகை செய்கின்ற ஈச்வரன் நம் கோரிக்கைக் கிணங்கி சரணாகதி மாத்திரத்தினாலே மோக்ஷமளிப்பது அறிவிக்கப்பட்டதாம்.

மதுரையில் கம்ஸனால் அழைக்கப்பெற்று ஆயுதசாலையிலே புகுந்து வில்லை முறிப்பதற்காக வளைத்ததை, 'கரெண வாஜெ ந ஸஂய்யெ ஊஷ்ர தம் ஸஜ்யஂ கூ கவாட நிஷ்பெஷண வபஸ்தாழ । நரணாம் விகூஷ்ய ஷூபஹம்ஜ உய்ஜெதா யயெகூஷ உம்ஸம் உதகமத்ர ஹ: ' என்கிற ஸ்ரீ பாகவதவசனத்திலே காண்க. இதற்கு முன்னமே காளியநாகமர்த்தனம் நடந்தேறியிருக்க இதை முன் நடந்ததாகச் சொன்னது சேருமோ வென்னவேண்டா. இரண்டும் செய்தார் என்றிவ்வளவே இங்குத் திருவுள்ளத்திற் கொண்டபடி. இது முன், இது பின் என்பதிலே நோக்கில்லை. இப்படி மேலே பலவிடங்களிலும் கண்டு கொள்வது. ஐந்தலையபைந்நாகத்தலை: பைத்தல்-சினத்தல், படம் விரித்தல். 'ஐந்து தலைகளையுடைய நாகத்தின் தலையில்' என்று பொருள் உரைப்பர். 'ஸஹெ கூஸீஷ்ஷ:' என்னும்' பாகவதவசனத்தோடு இவ்வர்த்தம் முரண்படுகிறது. 1, 9, 3-ல் அரும்பதவுரைக்காரர் 'ஐந்தலைய' என்றது உபலக்ஷண மென்றார். ஆக அதிகப்படியான தலைகளும் கொள்ளவேண்டியதாயிற்று. இப்படி விரோதம் சங்கியாமைக்காக 'ஐந்து அலைய' எனப்பிரித்துரைத்தோம். பஞ்சவிருத்தி ப்ராணனும், பஞ்ச ஜ்ஞானேந்த்ரியங்களும், பஞ்ச கர்மேந்த்ரியங்களும், பஞ்சபூதமயமான சரீரமும், மனஸ்ஸு புத்தி அஹங்காரம் சித்தமென நால்வகையான அந்தக்கரணமும் ஆத்மாவும் இப்படி ஐந்தும் அலையும்படி என்று இதன் பொருளாம். உண்மையில், ஐந்து தலையுள்ளவன் காளியன் என்பதற்கும் ப்ரமாண முண்டு. 'வம் ஸாஸ்ரு: வாவகொஸாஸ:,' வரய ஹி: வம் ஸுஹி வெஷானெஸ்ஹி ஸொஹி: வஸிவாஸித:' என ஹரிவம்சத்தில் வசநங்களைக் காண்கிறோம். ஆக அவ்வர்த்தத்திலும் குற்றமொன்று மில்லையென்றறிக. ௰.

இப்படித்தாம் பரதத்வஸ்தாபநம் செய்து எம்பெருமானை நேரில் கண்டு களித்து மஹோத்ஸவம் கண்டருளப்பண்ணி பல்லாண்டு பாடுவதற்கெல்லாம் மூல காரணமாயும் மஹாபாகவதருமான (ராஜபுரோஹிதரான) செல்வநம்பியாரிடத்திலே க்ருதஜ்ஞதையைப் பாராட்டும் முகத்தாலே பல்லாண்டு பாடுகிறார்.

கக அல்வழக் கொன்றுமில்லா வணிகோட்டியர் கோன் * அபிமானதுங்கன்
செல்வனைப் போலத் திருமாலே நானுமுனக்குப் பழவடியேன் *
நல்வகையால் நமோ நாராயணவென்று நாமம் பலபரவி *
பல்வகையாலும் பவித்திரனே யுன்னைப் பல்லாண்டு கூறுவனே.

| | |
|---|---|
| திருமாலே | ஸ்ரீகாந்தனே ! |
| அல் வழக்கு ஒன்றும் இல்லா | ந்யாயமில்லாத தொன்றுமில்லாத வரும் |
| அணி | அலங்காரமாயும் |
| கோட்டியர் கோன் | திருக்கோட்டியூரிலுள்ளவர்க்குத் தலைவரும் |
| அபிமானம் துங்கன் | பகவத் பாகவதாபிமானத்தாலே மிகவுத்கர்ஷம் பெற்றவருமான |
| செல்வனை போல | செல்வநம்பியைப் போல |
| நாலும் உனக்கு பழ அடியேன். | நானும் வெகு காலமாக உனக்கு தாஸனாயிருப்பவன். |
| பல் வகையாலும் | பல படிகளாலும் |
| பவித்திரனே | பரிசுத்தனே! (ஹேய ப்ரத்யநீகனே) |
| நல் வகையால் | உயர்ந்த ப்ரகாரத்தாலே |
| நம: நாராயணா என்று | திருமந்த்ரத்தின்ஸாரத்தை அநுஸந்தித்து |
| பல நாமம் பரவி | அநேகம் திருநாமங்களையும் சொல்லி |
| உன்னை பல்லாண்டு கூறுவன் | உனக்கு மங்களாசாஸனம் செய்வேன். |

அல் வழக்காவது விபரீதஜ்ஞானமும் விபரீதாசாரமும். 'கோட்டியர் கோன்' என்பதால் செல்வநம்பி திருக்கோட்டியூரைச் சேர்ந்தவரென விளங்கும். இதனால் மேல்திருமொழிபோலத் திருப்பல்லாண்டும் திருக்கோட்டியூரெம்பெருமான் விஷயமாகலாம். அணிகோட்டியர் கோன் என்பதற்கு உயர்ந்த கோஷ்டியிலுள்ளவர்கட்குத் தலைவர் என்றும் பொருள் தகும். அப்போது மதுரையிற் சேர்ந்த திறள் கூறப்பட்டதாம். ஏழு தலை முறையாகத் தாம் எம்பெருமானுக்குத் தொண்டு செய்வதால் பழவடியரான ஆழ்வார் செல்வனைப் போலே தாமிருப்பதாகச் சொன்னதால் செல்வநம்பியும் இதற்குக் குறையாமல் அடிமை செய்யும் பரம்பரையில் விளங்கினது ஸ்பஷ்டமாகிறது. "திருமால் என்பதிலிருந்து இவ்வாத்ம வஸ்து ஒரு மிதுந சேஷமென்று ஸித்தித்தது" என்று பணித்தார் பெரியவாச்சான்பிள்ளை. நல்வகையாவது.—வேறு பலனை விரும்பாமல்; தன் ஸம்பந்த மறுத்து; எம்பெருமான் கைங்கர்யமே புருஷார்த்தமென அநுஸந்தாந ப்ரகாரம். பல்வகையாலும் பவித்ரனுதலாவது- ஸ்வயம் ஹேயகுணமற்றவனுய், தன்னை யாச்ரயித்தவரின் ஹேயத்தை நீக்குகிறவனுய், தன் விரோதிகளுக்கும் உசிதமான தண்டனை செய்து சுத்தியளிப்பவனுய், தன்னுடைய குண சேஷ்டிதங்கள் எல்லாவற்றிற்குமே தன் ஸம்பந்தத்தினுலே ஹேயத்வமில்லாதபடி மங்களஸ்வபாவத்தைச் செய்துகொள்பவனுமாகை. பெரியோரின் குணங்களிலும் செயல்களிலும் கூட சிலவற்றை இவை நல்லவையல்லவென்று விடவேண்டிவரும். எம்பெருமானுடைய குணசேஷ்டிதங்கள் எவ்வகைப்பட்டவையாகிலும் (ஜாரசோர வ்யாபாரங்கள் போன்றவையும்) பாவனங்களும் மங்களகரங்களுமாம்.

இதற்கு முன்னுள்ள இரண்டு பாசுரங்கள் பரமைகாந்திகளும், கைவல்யார்த்திகளாயிருந்து திருந்தினவர்களும் செய்யும் மங்களாசாஸநத்தை முறையே சொல்வனவென்றும், இப்பாசுரம் அந்த க்ரமத்திலே புதிதாகத் திருந்திவந்த

ஐச்வர்யார்த்திகள் பல்லாண்டு கூறுவதைச் சொல்வதென்றும் முன்னோர் பணித்த யோஜனை முன்னமே குறிக்கப்பட்டது. அப்போது பழவடியேன் என்பதற்கு இதற்கு முன் தாஸனாகத் தெளிந்து நடந்துகொள்ளாவிட்டாலும் ஸ்வரூபப்ராப்தமான அநாதி தாஸத்தன்மையுடையவனான நான் என்று பொருள். இப்படி ஐச்வர்யார்த்தி சொல்லும் பாசுரமானால் 'செல்வனைப்போல' என்ற விடத்தில் தங்களைத்திருத்தியருளின 'விட்டுசித்தனைப் போல' என்றால் பொருத்தமாயிருக்குமென்னில்—உண்மையில் ஐச்வர்யார்த்தி சொல்வதானாலும் ஆழ்வார் அதனை யநுவதித்துப் பாசுரம் இயற்றுவதால் 'செல்வனைப் போல' என்பதே தகுதியுற்றது. ஐச்வர்யார்த்திகள் தங்கள் சிறந்த அபிமானத்திற்கு இடமான ஆழ்வாரையும் விட்டு செல்வநம்பியை எடுத்துக் காட்டினதிலிருந்து அம்மஹானுக்குள்ள ஏற்றம் எல்லை கடந்ததாம். கக

திருப்பல்லாண்டை ஓதுபவர்கட்குள்ள பலனையுபதேசித்து இதனை முடித்தருளுகிறார்.

கஉ பல்லாண்டென்று பவித்திரனைப் பரமேட்டியை * சார்ங்கமென்னும்
வில்லாண்டான்றன்னை வில்லிபுத்தூர்விட்டுசித்தன் விரும்பியசொல் *
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் நமோநாராயணாய வென்று *
பல்லாண்டும் பரமாத்மனைச் சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே.

| | |
|---|---|
| பல் ஆண்டு என்று | எப்பொழுதும் விளங்கவேண்டுமென்று |
| பவித்ரனை | பாவநமாயும் |
| பரமேட்டியை | பரமபதத்தில் எழுந்தருளியிருப்பவனும் |
| சார்ங்கம் என்னும் வில் ஆண்டான் தன்னை | (ரூடிசக்தியாலே) சார்ங்கமென்னப்படும் வில்லையாளுபவனுமான எம்பெருமானை |
| விரும்பிய | கருதிய |
| வில்லிபுத்தூர் விட்டுசித்தன் சொல் | ஸ்ரீ வில்லிபுத்தூரிலிருக்கும் விஷ்ணுசித்தனுடைய |

(பெரியாழ்வாருடைய) சொல்லான இத்திருப்பல்லாண்டை

| | |
|---|---|
| நல் ஆண்டு என்று | இது கிடைத்த ஆண்டு நல்லாண்டென்றுகொண்டாடி |
| நவின்று | பயின்று, அப்யஸித்து |
| நமோநாராயணாய என்று | திருமந்த்ரத்தையும் அதன் பொருளான தாஸ்யத்தையும் அநுஸந்தித்துக்கொண்டு |
| உரைப்பார் | சொல்லுகிறவர்கள் |
| பல் ஆண்டும் | எப்பொழுதும் |
| பரமாத்மனை | (பரமபதத்திலும்) எம்பெருமானை |
| சூழ்ந்து இருந்து | வலம் வந்து அதிஸ்நேஹத்தோடு குவிந்து சுற்றி நின்று |
| பல்லாண்டே ஏத்துவர். | மங்களாசாஸநஸ் துதியே செய்து வருவார்கள். |

பல்லாண்டென்று சொல் எனச் சேர்த்து, பல்லாண்டென்று சொல்லப்படுமது = திருப்பல்லாண்டு என்று முரைக்க. பல்லாண்டுரைப்பாருக்குப் பல்லாண்டு ஏத்துவதே பிறகும் பலனாகிறது. பரமபதத்தில் பல்லாண்டு பாடுபவர்களுக்கும்

இங்கு பாடுபவர்கட்கும் ஒரு வாசியுமில்லை. ஏதேனுமொரு பலனை விரும்பி எம்பெருமானிடம் நெருங்குகிறவன், தான் பல்லாண்டிஸாகப்படவேண்டியதையே கேட்டு நிற்பான். வேறு பலனை விரும்பாதவர்களும் எம்பெருமானைக் கண்டால் அவனுடைய ப்ரபாவாதிகளை நினைத்துப் பல்படி துதித்து வருவார்கள். அதற்கும் மேற்பட்டு, அவன் பல்லாண்டு விளங்குவதே புருஷார்த்தமென்று, அவனுடைய மஹிமைகளெல்லாம் தெரிந்துள்ள போதே அவனுக்கு யாதொரு தீங்கும் வராதபடி வ்யாமோஹம் கொண்டு நிற்கும் அதிகாரிகளே உத்தமர்கள். "அகில ஹேயப்ரத்யநீகனாய் அவாப்தஸமஸ்தகாமனுமாயுள்ள எம்பெருமானுக்குப் பசி, தாகம், குளிர், தாபம் என்பது போன்றவை உண்டோ என்று நினைத்திருப்பவன் பக்தனாகான். அவனுக்குள்ள சக்தியனைத்தையு மறிந்திருந்தும் அதற்கு மேற்பட்டு அவனுடைய ஸௌகுமார்யாதிகளிலீடுபட்டு, பெற்ற பிள்ளையைப் போலும் பெரிய அரசனைப்போலும் காலதேசானுஸாரமாக் ப்ரீதி பரவசனாய் உபசரிப்பவனே பக்தன்" என்றிம்மாதிரி எம்பெருமானார் பணித்தருளினாரென்பர்கள். அதுபோல் விசேஷவ்யாமோஹம் பிறந்து அவனுக்கு என்ன தீங்கு வருமோவென்று அஞ்சி பல்லாண்டு பாடுவதென்பது மஹா பாகவதர்க்கியற்கையாம். ஆயினும் பரமபதத்தில் ஸர்வஜ்ஞராயிருப்பவர்கட்கு மாயையினால் வரும் வ்யாமோஹத்துக்கு அவகாச முண்டோவென வேண்டா. அஜ்ஞானரூபமான வ்யாமோஹம் அங்கில்லை. அதிஸ்நேஹரூபமான வ்யாமோஹ முண்டு. இவ்வுலகில் அஸ்தானசங்கை பிறந்தும் பல்லாண்டு பாடுவர். அங்கு அஸ்தான சங்கைபிராவிட்டாலும் அதன் கார்யமான வாழ்த்துக் கூறுதலை அதிஸ்நேஹமே செய்துவைக்கிறது. இதுவும் பரமபதத்திலே ஆயுத த்வாரபால கணாதிபத்யாதி க்ருத்யம் போலே ஸ்நேஹக்ருதம். கைங்கர்ய ருசியாலே இல்லாத சங்கையை ஏறிட்டுக் கொள்வதற்கு எங்கும் தடையில்லை. இதனைக் கருதியே 'ஸ்ரீஹாஉவா நமகூாவஹஸநிஷி:' 'தமிழ்ப்பல்லாண்டிசையுடன் பாடுவமே,' 'பல்லாண்டே பல்லாண்டும் பாடுவோமே' என்றவாறு அருளிச்செய்தார்கள்.

பவித்திரனை என்பதற்கு 'வவித்ரம் வாரஂ ஹவாநு', 'வவித்ராணாஂ வவித்ரஂ' என்கிற விடத்திற்போல், பரிசுத்தி செய்பவனை எனப் பொருள். வில்லிபுத்தூராழ்வாருக்கு வில்லாண்டானிடத்தில் வ்யாமோஹம் வரத்தகும். திருப்பல்லாண்டைத் திருவஷ்டாக்ஷரத்தை யனுஸந்தித்துக் கொண்டு நவிலும்படி அருளிச் செய்ததால் திருமந்திரார்த்தமே இங்கும் சொல்லப்பட்டிருப்பதென்று வ்யக்தமாகிறது. எனக்கு இல்லை, நாராயணனுக்கே என்று நினைப்பவர்கள் தானே, தன்னை மறந்து எம்பெருமானுக்குப் பல்லாண்டு பாடுவார்கள். ௧௨

திவ்யப்ரபந்தமாகிற தமிழ் மறைக்குத் திருப்பல்லாண்டு ப்ரணவமென்பர். வேதார்த்தமெல்லாம் ப்ரணவத்திற்போல, ப்ரபந்தங்களின் அர்த்தமெல்லாம் இதில் அடங்கியிருக்கிறது. இம்மஹா நிதியிலே ஸ்ரீ வைஷ்ணவ ஸமுதாசாரம் பூராவும் விளக்கப்பட்டிருக்கிறது. எம்பெருமான், அவனுடைய குண விக்ரஹ விபூதிகள், பெரிய பிராட்டியாரின் பெருமை, அவனுக்கு ஸ்வயம்ப்ரயோஜநமாய்த் தொண்டு செய்வது, முமுக்ஷுக்களுக்கே அவனுடைய அந்த

ரங்க கைங்கர்யத்தில் அதிகாரம், ஐச்வர்ய கைவல்யங்களில் வைராக்யம், பஞ்சஸம்ஸ்காரம் பெற்றுக் கைங்கர்யத்தி லிழிவது, அவனுடைய ப்ரஸாதங்களையே ஊண், உடை போன்றவையாக உபயோகிப்பது, 'ஒரு குடும்பத்தில் சிலர் பஞ்ச ஸம்ஸ்காரம் பெறுவதுமாம் சிலர் யுக்தகாலத்திலும் அதில்லாமலிருப்பதுமா' மென்றபடி யிராமல் விஜாதீய ஸம்பந்தமென்கிற குறைவு வாராமைக்காகக் குடும்பத்தில் எல்லோருமே பஞ்ச ஸம்ஸ்காரம் பெற்றிருப்பது, பரம்பரையாகப் பகவத்தாஸரானவருக்கு ஆபிஜாத்ய விசேஷத்தினு லுண்டான ஏற்றம், அப்படிப் பட்டவரும் புதிய பரமைகாந்திகளையும் ஸமமாகப் பாவிக்கவேண்டிய விதம், நாமஸங்கீர்த்தநத்தின் வகை, சரணாகதி, பரமபதத்திலும் அவன் கைங்கர்ய புருஷார்த்தம் என்றிம்மாதிரி ஸாரங்களெல்லாம் அடங்கியிருப்பதாலே இது ப்ரணவமாயிருந்து அதிகாரியைத்திருத்தி நந்நெறியில் நிறுத்திவைக்கிறது. ஆக இது ஸகல வேத வேதாந்த ப்ரபந்தங்களுக்கும் முன்னமே நிற்கின்றது. இதனுல் விவரணம் செய்யப்பட்டிருக்கும் ச்ருதி ஸ்ம்ருதி வாக்யங்களை அவரவர் புத்தி பலத்துக்குத் தக்கவாறு ஆராய்ந்து கொள்க.

இவ்வாறு ஸ்ரீரங்கராமாநுஜ மஹாதேசிக திவ்ய சரணாரவிந்த ஸேவா

ஸம்ப்ராப்தோபய வேதாந்த ரஹஸ்யார்த்தனுன

உத்தமூர் தி. வீரராகவாசார்யன்

இயற்றும் ப்ரபந்த ரக்ஷையில் திருப்பல்லாண்டு உரை முற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானுர் தேசிகன் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன்திருவடிகளே சரணம்.

## பெரியாழ்வார்திருமொழி பத்து 1. திருமொழி 2.

## (அவதாரச் சிறப்பு).

# வண்ணமாடங்கள்.

'மல்லாண்டதிண்டோள் மணிவண்ணா' என்றாரம்பித்து, 'பைந்நாகத் தலைப் பாய்ந்தவனே' என்ற அளவாக ஸ்ரீ க்ருஷ்ணாவதாரத்திலே அதிகமாக அபிமானம் வைத்துத் திருப்பல்லாண்டு பாடின ஆழ்வாருக்கு, இவருக்கு அந்தரங்க மித்ரரான கோட்டியர்கோன் செல்வநம்பியின் குலதெய்வமாயுள்ள திருக்கோட்டியூரெம்பெருமான், நின்றும் இருந்தும் நடந்தும் கிடந்தும் கூத்தாடியும் பல திருக்கோலங்கள் கொண்டவனாய், இப்படி மங்களாசாஸனத்திற்குப் பாத்ரமாம்படி சிறு குழந்தையாய்க் கண்ணனாய் ஸேவை ஸாதித்தருளினான். பரத்வ ஸௌசீல்யங்களைப் பல படியிலும் பிறந்தது முதல் ப்ரகாசப்படுத்தியருளின ஸ்ரீக்ருஷ்ணாவதாரத்திலே ஸ்ரீராமாத்யவதாரங்களையும்காட்டிலும் ஆழ்வார்களுக்கு ஈடுபாடு அதிகம். அவ்விதமாய் அவனை ஸேவித்தவுடனே முன் திருவாய்ப்பாடியில் அவன் அவதரித்த காலத்திலே நடந்தவை யாவும் இவர்க்குக் கண் முன்னே தோற்றின. அந்தத்தசையிலே அவ்வநுபவபரிவாஹமாக ஆண்பாற் பிள்ளைப்பாட்டின் வகைக்கு வழி காட்டி இவர் கவிபாடலானார். இக் கவிக்கு, முன்னே அருளின திருப்பல்லாண்டானது முதல் அங்க(ம)மாயுள்ள காப்பாக நின்றது. 'பல்லாண்டு—சேவடி செவ்வி திருக்காப்பு' என்றாரிறே. இனி அக்கவியின் இலக்கணத்திற்கேற்ப, தாலாட்டுதல், செங்கீரை கூறுதல், சந்திரனையழைத்தல், சப்பாணி கொட்டல் முதலான பல வகைகளையும் விளக்கப் போகின்றவராய் முதலில் அப் பிள்ளையின் அவதாரச் சிறப்பிலே ஈடுபட்டு அதனை வெளியிட்டருளுகிறார்.—

1. வண்ணமாடங்கள்சூழ்திருக்கோட்டியூர்
கண்ணன்கேசவன்நம்பிபிறந்தினில்
எண்ணெய்சுண்ணமெதிரெதிர்தூவிட
கண்ணன்முற்றம்கலந்தளறாயிற்றே.

வண்ணம் மாடங்கள் சூழ் } பல வகை வர்ணங்களால் பூசப்பெற்று அழகுவாய்ந்த உப்பரிகைகளால் சூழப்பட்ட

திருக்கோட்டியூர் } இப்பெயர் கொண்ட திருப்பதியை (வாஸ ஸ்தானமாக) உடைய

கண்ணன் ஸ்ரீ கிருஷ்ணனாகிய

| | | | |
|---|---|---|---|
| கேசவன் நம்பி | ப்ரம்மருத்ராதிபதியான கல்யாணகுண பூர்ணன் | கலந்து | ஒன்றோடொன்று சேர்ந்து |
| பிறந்தினில் | (திருவாய்ப்பாடியிலே) அவதரித்தபோது | கண் நல் முற்றம் | விசாலமாய்ச்ரேஷ்டமுமான (நந்தகோபர் திருமாளிகை) முற்றம் (முழுதும்) |
| எண்ணெய் சுண்ணம் | (அங்குள்ளாரால்) எண்ணெயும் (மஞ்சள்) பொடியும் | | |
| எதிர் எதிர் தூவிட | ஒவ்வொருவர் எதிரிலும் தூவப்படவே | அளறு ஆயிற்று. | குழைசேறாய் விட்டது.[1] |

திருமதுரையில் அவதரித்த எம்பெருமான் வஸுதேவராலே திருவாய்ப்பாடியிலே நந்தகோபர் திருமாளிகையில் தெரியாதபடி கொண்டுவிடப்பட்ட பிறகு, நந்தகோபருக்குப்பிள்ளை பிறந்ததென்று அங்குள்ளார் அனைவரும் ஆனந்தித்துப் பழைய வழக்கப்படி மங்களகாமாய் எண்ணெயையும் மஞ்சட் பொடியையும் இறைத்துக்கொண்டனர். அவையெல்லாம் அங்கே திருமுற்றத்திலே விழுந்து மிதிபட்டுச் சேறாயிற்றென்றபடி. "ஹரித்ராசூர்ண தைலாத்பிஸ்ஸிஞ்சந்த்யோ ஜநமுஜ்ஜகு:", "மாஷா வ்ருஷா வத்ஸதரா ஹரித்ராதைலரூஷிதா:" என்றார் ஸ்ரீ சுகரும். சுண்ணமென்றது பலவகை வாஸனை த்ரவ்யங்கள் கலந்த பொடியை (கந்தப்பொடியை).

திருக்கோட்டியூர் கண்ணன் என்பதைத் திருக்கோட்டியூருக்கு நிர்வாஹகன் என்றுமுரைக்கலாம். கேசவன் என்பதற்கு க-ஈச-வன் = ப்ரம்மருத்ரர்களுக்கும் காரணமென்று பொருள். க்ருஷ்ணவதாரத்திலே கேசி என்னும் அஸுரனை ஸம்ஹாரம் செய்ததாலும் கேசவனும். அழகிய கேசங்களை உடையவனென்றும் பொருளாம். ஸூர்ய-அக்நி-சந்திரர்களின் கிரணங்களான கேசங்களையுடையவன் எனக் கேசவநாமத்தின் பொருளறிந்து ஜபித்தால் குருடனும் கண் பெறுவான் என்றது சாந்திபர்வம் (அ.329). பிறந்தினில் என்றதை, பிறந்து இன் இல் என்று பிரித்து, இனிய இல்லிற் பிறந்து என்றுமுரைப்பர். அப்போது பிறந்து என்றதற்குப் பிறந்திருக்க எனப்பொருள். கம்ஸகாராக்ருஹம் போன்றதாகாமல் ஸர்வ போக்கியமான நந்தர்திருமாளிகையிலே அவதரித்தவுடன் என்றவாறு. கண்ணன்முற்றமென்றவிடத்தில் கண் என்றது இடமாய், விசாலமுள்ள என்றதாம். கண்ணன் அவதரித்தது முதல் நந்தகோபருடைய சொத்தெல்லாம் கண்ணனுடையதாய்விட்டபடியாலே நந்தர்முற்றம் கண்ணன்முற்றமெனப்பட்டதெனவும் கூறுவர். கண்ணன் = ஆய்ப்பாடிக்கு நிர்வாஹகனான நந்தகோபன் என்றுமுரைக்க. க.

2. ஓடுவார்விழுவாருகந்தாலிப்பார்
நாடுவார்நம்பிரானெங்குற்றானென்பார்
பாடுவார்களும்பல்பறைகொட்டநின்று
ஆடுவார்களுமாயிற்றாய்ப்பாடியே.

---

1. பதவுரையே பதங்களை விட்டுப் படிக்கப்படில் பொழிப்புரையாகக் கூடுமாறு பிரித்து அமைக்கப்பட்டிருப்பதால் பாசுரங்களுக்குப் பொழிப்புரை தனியே எழுதப்படுகிறதில்லை.

| | | | |
|---|---|---|---|
| ஆய்ப்பாடி | (நந்த) கோகுலமானது | நாடுவார் | (எழுந்து) தேடிவருகிறவர்களாகவும் |
| உகந்து ஓடுவார் | (கண்ணன் அவதரித்ததைக் கேட்டு) ஆனந்தமுற்று ஓடுகிறவர்களாவும் | நம் பிரான் எங்கு உற்றான் என்பார் | நமது ஸ்வாமி எங்கே பிறந்திருக்கிறுனென்று கேட்பவர்களாகவும் |
| விழுவார் | (அப்போது மிக்க உகப்பினுலும் வழுக்கு நிலங்களிலே விரைந்து கால் வைப்பதாலும்) விழுகிறவர்களாகவும் | பாடுவார்களும் | துதி பாடுகிறவர்களாகவும் |
| | | பல் பறை கொட்ட | பல வாத்தியங்கள் கோஷிக்க |
| | | நின்று | தக்கவாறு நின்று |
| ஆலிப்பார் | (அதையும் கவனியாது) கோஷித்துக் களிப்பவர்களாகவும் | ஆடுவார்களும் ஏ | கூத்தாடுகிறவர்களாகவுமே |
| | | ஆயிற்று. | ஆய்விட்டது. |

எங்குத்தான் எனப் பாடமாகில், எங்குதான்-எங்கேதான் என்று பொருளாம். 'இருக்கிறுன்' என வினைச்சொல் அப்போது மறைந்து கிடக்கிறதென்க. ஆய்ப்பாடியிலுள்ளவர்கள் என்னும் பொருளிலே இங்கு ஆய்ப்பாடியே என்றதால் அங்குள்ளவர் எல்லோரும் இவ்வண்ணமாயினர்; இச்செயல்களைச் செய்யாதவர் அங்கில்லையென்றதாம். ஆய்ப்பாடி—இடைச்சேரி.

உ.

3. பேணிச்சீருடைப்பிள்ளைபிறந்தினில்
காணத்தாம்புகுவார்புக்குப்போதுவார்
ஆணொப்பாரிவன்நேரில்லைகாண் * திரு
வோணத்தானுலகாளுமென்பார்களே.

| | | | |
|---|---|---|---|
| பேணி | ஆசைப்பட்டு | 'ஆண் ஒப்பு ஆர் | 'ஆண்மையில் இவனுக்கு உபமானம் யார்? (யாருமில்லை). |
| சீர் உடை பிள்ளை | செல்வத்தையுடைய பிள்ளையான ஸ்ரீ கிருஷ்ணன் | | |
| பிறந்தினில் | பிறந்தஇன்பேரில் (அல்லது) | உலகு ஆளும் | உலகங்களை ஆண்டுவரும் |
| பிறந்த இன் இல் | பிறந்துள்ள இனியதான கிருஹத்தில் | | |
| | | திருவோணத்தான் | ச்ரவண நக்ஷத்ர தேவதையான விஷ்ணுவும் |
| காண தாம் புகுவார் | தாமே போய் நேரில் பார்க்கத் திருமாளிகையுட் புகுந்தவர்களாகவும், | இவன் நேர் இல்லை காண்' | உண்மையில் இவனுக்குச் சமஞக மாட்டான்' |
| புக்கு | புகுந்து | | |
| போதுவார் | குழந்தை பிறந்துள்ள அறை அருகிற் செல்பவர்களாகவும் | என்பார்கள் | என்று அறுதியிடுபவர்களும் (ஆனபடி). |

கீழ்ப்பாட்டில், ஆயிற்றுய்ப்பாடியே என்றதை இங்கும் சேர்த்து, ஆய்ப்பாடியானது இப்படிப்பட்டவர்களாகவே ஆயிற்றென உரைத்தல் பொருத்தமுள்ளதாகும். அப்போது அங்குத் தொடங்கின ஓடுதல் முதல் இங்கு, '**என்பார்களே**' என்றது வரையில் முறையே நடந்த வ்யாபாரங்களுமாம்.

பேணி என்பதை பிறந்தினில் என்பதோடு சேர்த்தால் தேவகீ வஸுதேவர்களின் தபஸ்ஸுக்குப் பயனுயவதரித்த எம்பெருமான் கோப கோபீஜநங்களிடத்திலுள்ள அன்பினுலே இங்குத் தன்னைப் பிறந்தவனுக்கிக் கொண்டது சொன்னதாகும். பேணி = மறைத்து, கம்ஸன் காணுத வண்ணம் ஒளித்து எனவுமுரைப்பர். பேணி என்றதை புகுவார் என்பதோடு சேர்க்கில் இடையர்களின் ஆசையைச் சொன்னதாம். கண்ணன் அவதரித்ததை முன்னமே பணித்திருப்பதால் இங்கு பிறந்த இன் இல் எனப் பிரித்துரைப்பது சாலப்பொருந்தும். புதுவார்—போதுவார். அப் பெருந்திரளிலே புகுந்து திருமாளிகைக்குச் செல்வதே ப்ரயாஸகார்யமாகும். திருவறையிலருகிற் செல்வது வெகு ச்ரமசாத்தியமாமென்றபடி.

போதுவார் என்பதற்கு, கண்டுவிட்டு வெளியே போவார் என உரை கூறுகின்றனர். காணப் புறப்பட்டவர்கள் காண்பதற்காகச் செய்த செயல்களையும் கண்டு களிப்பதையும் சொல்வதே யுக்தமாயிருக்க அதை விட்டுப் (புகுந்து கண்டு உகந்தார்கள் என்று சொல்லாமல்) புகுந்து வெளியே போய் விட்டார்களென்பது உசிதமாவென்று இங்கு வினவ இடமுண்டாகிறது. ஆகவே போதுவார் என்றதற்குக் குழந்தையிருக்கும் அறையில் அருகிற் செல்பவர் என உரை செய்தது. வெளியே போவார் என்ருலும், பிறரும் பார்க்க இடம் கொடுக்க இவர்கள் வெளிவந்தார்கள் எனக் கருத்தாம்.

ஆண் இத்யாதி. உலகில் இவனுக்கு உபமாநமாகக் கூடிய ஆண் கிடையாது. இவனே மஹாபுருஷன்; பரம புருஷன். அவதாரங்களுக்கு மூலமான விஷ்ணுவும் இவனுக்குச் சமனல்லனென்றபடி. ஸுதீவ ராஜஸு ஸுஹெட்திகாஜயா விஹஸ்ஃ ஸ்ரியா விஷ்ணுரிவாஜஸெபரஃ என்று இராமனுக்கு விஷ்ணுவை உபமாநமாக்கினது போல் அவதாரத்திலுள்ள நீர்மையை நினைத்து அவனுக்கு மேற்பட்டவனுகக் கூறுவதுமுண்டு. இதைத்தான் ஆழ்வாரும் அனுபவித்து வியப்புற்றுர். இவன் சீருடைப்பிள்ளை. அதாவது ஸ்ரீமானே. ஆயினும் அவனுக்கு மேற்பட்டவனுகக் கருதப்பட்டான் என்றவாறு. ஆக 'ஆணொப்பார்' என்று இவனுடைய பெருமையைச் சொல்லி, அப்பெருமையுள்ள விஷ்ணுரூபத்திற்கும் இவ்வளவு ஸௌலப்யமும் ஸௌசீல்யமுமில்லையாகையால் அவனும் இவனுக்கு நேரில்லையென்று மேலே சொன்னதாம். இதனுல் மற்றவர்களைக்காட்டிலும் போல மற்ற மூர்த்திகளைக்காட்டிலும் கூட மேன்மை கூறினதாம். 'ஆணொப்பார் இவன் நேரில்லைகாண்' என ஒரு வாக்கியமாக வைத்து, ஆண்மையொத்திருப்பவர்களில் இவனேடு ஸமமானவர் யாருமில்லை யென்றும், திருவோணத்தான் உலகாளும் என்றதற்கு, திருவோணத்தானுடைய உலகை யெல்லாம் இவன் ஆளும் என்றும், அன்றி, இவன் திருவோணத்தான்; இவன் உலகத்தையாள்வன் என்றும் உரை செய்வர். ஆணொப்பான் என்ற பாடமும் காண்கிறது. அப்போது ஆணுக்கொத்திருக்கும் தன்மையினுல் என்று பொருள் கூறுவர். ஒப்பு ஆன்-ஒப்பான். ஆன்-மூன்ரும் வேற்றுமையுருபு. ந.

4. உறியைமுற்றத்துருட்டிநின்றுடுவார்
நறுநெய்பால்தயிர்நன்றாகத்தூவுவார்
செறிமென்கூந்தலவிழத்திளைத்து * எங்கும்
அறிவழிந்தனராய்ப்பாடியாயரே.

| | | | |
|---|---|---|---|
| ஆய்ப்பாடி ஆயர் | திருவாய்ப்பாடியிலுள்ள இடையர்கள் (இப்படி எம்பெருமானைக் கண்ட பிறகு) | நறு நெய் பால் தயிர் | மணமுள்ள நெய் பால் தயிர் ஆகியவற்றை |
| எங்கும் | எல்லா வீடுகளிலும் | நன்றாக தூவுவார் | உடல் முழுதும் வாரி இறைப்பவர்களாய் |
| முற்றத்து | முற்றங்களிலே | செறி மெல் | நெருக்கமாய் மிருதுவுமான |
| உறியை | (நெய் பால் தயிர்ப் பானைகளுள்ள) உறிகளை | கூந்தல் | மயிர்முடியானது |
| | | அவிழ | அவிழ்ந்துவிடும்படி |
| உருட்டி நின்று ஆடுவார் | உருட்டிவிட்டு (பானைகளிலிருந்து பூராவும் கீழே ப்ரவஹிக்குமளவும் தொடாமல்) ஆடுகிறவர்களாய் | திளைத்து | ஆடியனுபவித்து (அவ்வனுபவத்திலே இழிந்து பரவசமாய்விட்டதாலே) |
| | | அறிவு அழிந்தனர் | பாஹ்யவிஷயங்களிலுணர்ச்சியற்றனர். |

எங்கும் அறிவழிந்தனர் என்றுள்ளபடியே அன்வயிப்பதானால், எவ் விஷயத்திலும் அறிவற்றிருந்தனர் எனவுரைக்க. நன்றாக=மங்களகரமாக எனவும் கூடும். "கோபா: பரஸ்பரம் ஹ்ருஷ்டா: ததிக்ஷீராஜ்யவாரிபி:। ஆஸிஞ்சந்தோ விலிம்பந்தோ நவநீதைஶ்ச சிக்ஷிபு:" என்கிற பாகவத ச்லோகம் இங்கு அநுஸந்திக்கத்தக்கது. ௪.

5. கொண்டதாளுறிகோலக்கொடுமழு
தண்டினர்பறியோலைச்சயனத்தர்
விண்டமுல்லையரும்பன்னபல்லினர்
அண்டர்மிண்டிப்புகுந்துநெய்யாடினார்.

| | | | |
|---|---|---|---|
| அண்டர் | (அண்டையில் வயல் வெளிகளிலே காலி காக்கும்) இடையர்கள் | பறி ஓலை சயனத்தர் | பறிக்கப்பட்ட (தாழை முதலியவற்றின்) ஓலைகளால் முடைந்த படுக்கையுடையரும் |
| தாள் கொண்ட | பருத்தும் நீண்டும் நெருங்கியுமுள்ள கால் (நெடுங்கயிறு)களையுடைய | விண்ட முல்லை | மலர்ந்த முல்லை |
| | | அரும்பு அன்ன பல்லினர் | யரும்புகள் போன்ற பற்களை யுடையருமாய் |
| உறி | உறியையும் | | |
| கோலம் கொடு மழு | அழகிய கொடுவாள் போன்றதையும் | மிண்டி | நெருங்கி |
| | | புகுந்து | (ஆய்ப்பாடியிலே) நுழைந்து |
| தண்டினர் | மேய்க்கும் தடியையுமுடையவரும் | நெய் ஆடினார். | நெய் பூசி ஸ்நானம்செய்தனர். |

கண்ணன் பிறந்தபோது திருவாய்ப்பாடிக்குள் இருந்தவர்கள் செய்தது முன் சொல்லப்பட்டது. இனி காலிமாடு மேய்த்துக் கொண்டு இரவில் வெளியிலிருந்த இடையர்களும் இம் மஹோத்ஸவத்தைக் கேட்டுத் தாங்களும் வந்து சேர்ந்து அதனைக் கொண்டாடினது இங்குக் கூறப்படுகிறது. அவர்கள் தங்க

ளுக்கு உணவையும் வெளியில் விசேஷமாய்க் கறக்கும் பாலையும் வைத்துக் கொள்ள உறிகளையும், காட்டிலே தழை முதலியன இட்டு கோக்களைக் காக்கப் பல துறட்டுக்கோல் போன்ற ஆயுதங்களையும் வைத்துக்கொள்ளுவார் போலும். ஆகவே நள்ளிரவில் நந்தகோபருக்குக் குழந்தை பிறந்ததைக் கேட்டு, அழகாகப் பாய் முடையப் பொருந்தும்படி பதம் பார்த்துப் பறித்த ஓலைகளாலான பாய் படுக்கைகளைச் சுருட்டிக்கொண்டு, கொடுமழுக்களைத் தோள்களிலேந்தி, அவற்றின் தண்டாலும் தடியாலும் பால் முதலியவை யுள்ள உறிகளை இருபுறமும் தொங்கவிட்டுக் கொண்டு, புஷ்பம் போல் வெளுத்த பற்களெல்லாம் வெளியில் தெரியும்படி களித்துக் கூடிவந்து எல்லோருடன் சேர்ந்து புகுந்து நெய்யாடினார்கள் என்றவாறு.

நெய்யாடலாவது-நெய் பூசி ஸ்நானம் செய்தல். இஃது பிள்ளைப் பேற்றுச் சடங்கினொன்றென்க. நெய்யாடினார் என்பதற்கு எண்ணெய் தேய்த்துக் கொண்டு கூடிக் கூத்தாடினார்கள் என்றும் பொருளுரைக்கின்றனர்.

கோண்டதாள் என்பதற்கு நெருக்கம் முதலியவை கொண்ட தாள்களை யுடைய என்றும் பொருள் கூறலாம். தாள் என்றது கடைப்பூட்டுமாம். அதாவது ஓரிடத்தில் மாட்டித் தொங்கவிடுவதற்கேற்ப உறிமூலையிற் செய்துள்ள உறுப்பு. இங்கு உறியினர், மழுவினர் எனப் பிரித்துச் சொல்லாததால், மழுவும் தண்டும் உறியின் தாளைக் கொண்டிருக்கிறனவென்றும், ஆகவே தாம் கொண்டுள்ள தாட்களை யுடையனவான உறிகளை உடையவைகளான, அல்லது உறியின் தாளைக் கொண்டனவான மழு தண்டுள்ளவரெனப் பொருளமையும்.

விண்டின் முல்லை யென்று பாடமாகில் விண்டு=மலை; அதன் முல்லை மலைமுல்லையென உரைக்கவேண்டும். அண்டர் விண்டு போலவும் அவர் பற்கள் அங்குள்ள முல்லையரும்பு போலவும் இருந்தபடியுமாம். அண்டராவார் இடையர். இப் பாசுரத்திலே ஸ்ரீ ஜயந்தியில் உறியடியுத்ஸவம் நடத்துவது குறித்ததாகுமாவென்றுமாராய்க. ரு.

6. கையுங்காலும்நிமிர்த்துக்கடாரநீர்
பையவாட்டிப்பசுஞ்சிறுமஞ்சளால்
ஐயநாவழித்தாளுக்கங்காந்திட
வையமேழுங்கண்டாள்பிள்ளைவாயுளே.

| | | | |
|---|---|---|---|
| கையும் காலும் | திருக்கைகளையும் திருவடிகளையும் | நா | நாக்கை |
| நிமிர்த்து | (முழுவதும்) சீர்படுத்தி | வழித்தாளுக்கு | வழித்தவளுக்கு |
| கடாரம் நீர் | கொப்பரையிலுள்ள தீர்த்தத்தினாலே | அங்காந்திட | (கண்ணன்) தன் வாயைத் திறந்திட (அப்போது) |
| பைய | மெல்ல (மிருதுவாக) | பிள்ளை வாயுள் | பிள்ளையின் வாயினுள் |
| ஆட்டி | ஸ்நாநம் செய்வித்து | ஏழு வையம் உம் | ஏழு உலகங்களையும் |
| சிறு பசு மஞ்சளால் | இளைத்த சிறிய பச்சை மஞ்சளாலே | | |
| ஐய | அழகிய | கண்டாள். | ப்ரத்யக்ஷமாகப் பார்த்தாள். |

ஆயர்கள் மங்களஸ்நானம் செய்தது சொல்லியாயிற்று. இங்கே குழந்தைக்குச் செய்விக்கும் மங்களஸ்நாநம் சொல்லப்படுகிறது. யசோதை யும் மற்றும் சில மாதர்களும் சேர்ந்து திருமஞ்சனம் செய்வித்தார்கள். அப் போது சிறு மஞ்சளை எடுத்து நாக்கை வழித்தவளுக்கு வழிக்க அநுகூலமாம் படி குழந்தை வாயைத் திறந்தது. அந்த ஸமயத்திலே யசோதை தன் பிள்ளையின் வாயினுள்ளேயே ஸர்வ லோகங்களையும் கண்ணாரக் கண்டனள். தேவகிக்குத் தன்னை ஸர்வேச்வரனாகக் காண்பித்த கண்ணன் யசோதையும் அவ்விதம் தெரிந்துகொள்ளவேணுமென்று இவ்வண்ணம் செய்தான். கண்ணன், வீட்டிற்கு வெளியே நின்று விளையாடும் பருவத்திலே, மண்ணைத் தின்றானென்று கேட்டு யசோதை அதட்டினபோது, 'நான் தின்னவில்லை' என்று வாயைத் திறந்து காண்பித்தான்; அப்போது மண்ணுலகும் மற்ற வுலகங்களுமெல்லாம் வாயினுள் காணப்பட்டன என்றும், ஒருக்கால் மடியில் வைத்துக்கொண்டு முலையூட்டினபிறகு அவன் கொட்டாவி விட்ட போது அவள் உலகங்களைக் கண்டாளென்றும் சுகர் அருளினார். முதல் மங்களஸ்நாந காலத்திலே இவ்வதிசயம் நடந்ததை ஆழ்வார் இங்குக் கூறியருளினார்.

சிறு என்றதால், 'நோக்கி யசோதை நுணுக்கிய மஞ்சளால் நாக்கு வழித்து நீராட்டும்' (1, 3-15) என்கிறபடி நாக்கு வழிக்கத் தக்கவாறு சூக்ஷ்மமாயும் கூர்மையாகவும் மஞ்சளைத் துண்டாக்கிக்கொண்டதைச் சொன்னதாகத் தோன்றுகிறது. துகைத்த மஞ்சளைக் கொண்டே வழிப்பது வழக்கமாகில் அதையே கொள்க. நாக்கு வழிப்பதில் போல் நீராட்டுவதி லும் சிறு மஞ்சளால் என்பது சேருமெனவும் கூறுவர். அப் பாசுரத்திற் போல் இங்கும் யசோதையே நாக்கு வழித்ததாகவும் கொள்வர். வழித் தவள் வேறொருவளானாலும் ஜலம் விட்டவள் யசோதை என்னலும் கூடும். முதல் மங்களஸ்நாந ஸமயத்திலே அவள் சக்தியற்று அருகில் இருந்தது மாத்திரமாய் மற்ற மாதர்களே எல்லாம் செய்தனர் என்பதும் ஸ்வரஸமாம். யசோதை செய்துவைக்க மாதர்கள் செய்வதால் எல்லாம் யசோதை செய்த தாகவே சொல்லத்தகும்.

கொட்டாவி விடுதலையும் அங்காத்தல் என்பதுண்டு. இங்கு அங்காத் தல்-வாய் திறத்தல். அங்காந்து இட=அங்காந்திட. எல்லா வினைகளோடும் 'இடுதல்' 'விடுதல்' என்னும் வினையும் இங்ஙனம் சேரும். தனிப் பொரு ளில்லாத துணைவினைகள் இவை. 'இருந்து' 'இட்டு' 'நின்று' என்ப வற்றை அசைச் சொற்களென்றனர் (நன்னூல்). சு.

7. வாயுள்வையகங்கண்டமடநல்லார்
ஆயர்புத்திரனல்லனருந்தெய்வம்
பாயசீருடைப்பண்புடைப்பாலகன்
மாயனென்றுமகிழ்ந்தனர்மாதரே.

| | | | |
|---|---|---|---|
| வாயுள் | (குழந்தையின்) வாயினுள் | பாய | (எங்கும்) பரவின |
| வையகம் | (பூமி முதலிய) உலகங்களை | சீர் உடை | குணங்களுடையவனும் |
| கண்ட | பார்த்த | பண்பு உடை | சிறந்த செயல்களையுடையனும் |
| மடம் | மடப்பத்தோடு கூடிய | | |
| நல்லார் | (அறிஞர்) உத்தமமான | | |
| மாதர் | (அந்த) ஸ்த்ரீகள் | பாலகன் | (ஸத்துக்களுக்கு வாஜகக) ரக்ஷகனுமான |
| "ஆயர் புத்திரன் அல்லன் | (இந்தக் குழந்தை) இடையரின் பிள்ளை யாகான். | | |
| | | மாயன்" | ஆச்சர்ய சக்தியுள்ளவன் |
| அரு தெய்வம் | பெற முடியாத தெய்வமாய், | என்று | எனச் சொல்லி |
| | | மகிழ்ந்தனர். | களித்தனர். |

மடமாவது மடமை-மௌக்த்யம், கபடமின்மை. இவர்கள் பரதத்துவத்தைத் தெளியும் திறமையும் பாக்யமும் வாய்ந்தவர்களாகையாலே, மூடர்களென்றெனத் தோற்ற, நல்லார் என்றார். நல் மடவார் என்று சேர்த்து நல்ல மடப்பமுடையவர்களென்றும் உரைப்பர். பாய சீருடை இத்யாதியால் அவதார வைபவமும், பலனும் சொன்னதாம். பாலகன், வாஜகன் சிறு பிள்ளை எனவும் பொருள் கொள்வர். ப்ரளயஸமுத்ரத்திலே வடபத்ரசாயியான பாலகனென்றும் சொல்லக் கூடும். அரிய தெய்வமாயிருப்பதோடு அடையக் கூடிய, சீர் உடைய பாலகனுமாயிருப்பதாலேயே இவன் மாயனென்பது வ்யக்தமாம். யசோதையைப் போல அங்கு இருந்து நீராட்டி வைத்த மாதர்கள் எல்லோரும் வையகம் கண்டமையை இப் பாசுரம் விளக்கிறது. அவன் அருளும்போது அனைவரும் காண அதிகாரிகளாவர். யசோதையைவிட மற்ற கோபஸ்திரீகளிடத்திலே அவனுக்கு அபிமானம் அதிகம் இப்படி எல்லோரும் கண்டு பேசிக் கொண்டதாலே யசோதைக்கும் இவன் பரதத்துவமென்கிற புத்தி திடமாகும். அர்ஜுநனுக்குக் காட்டின விச்வரூபத்தை அப்போது தேவாதிகளுக்கும் காட்டியருளியவனன்றோ இவன். எ.

8. பத்துநாளுங்கடந்தவிரண்டாநாள்
எத்திசையும்சயமரங்கோடித்து
மத்தமாமலைதாங்கியமைந்தனை
உத்தானஞ்செய்துகந்தனராயரே.

| | | | |
|---|---|---|---|
| ஆயர் | இடையர்கள் | மத்தம் | (பாற்கடலைக் கடைய) மத்தாயிருந்த |
| பத்து நாளும் கடந்த இரண்டாம் நாள் | பன்னிரண்டாவது நாளிலே | மா மலை | பெரிய மலையான மந்தரத்தை |
| | | தாங்கிய | (ஆமையாய் முதுகில்) தாங்கினவனை |
| எ திசையும் | எல்லா திக்குகளிலும் | | |
| சயம் மரம் | (நாட்டின) ஜயஸ்தம்பங்களை | மைந்தனை | திடமான குழந்தைக்கு |
| கோடித்து | புதுப்பித்துத் தோரணம் முதலியவற்றால் அலங்கரித்து | உத்தானம் செய்து | உத்தாநமஹோத்ஸவத்தைச் செய்து |
| | | உகந்தனர். | ஸந்தோஷித்தார்கள். |

மத்தம் மாமலை மதம் பிடித்த யானைகளை உடைய கோவர்தனமலையை என்வு முரைப்பர்.

குழந்தையைக் கண்டதும் ஆயர்கள் அரும் தெய்வமென்றே நினைத்தார்கள் கண்ணனும் மாதர்கட்கு வாயுள் வையகம் காண்பித்து அதனை மூதலிப்பித்தான். ஆகவே ஆயர்களுக்கு அவனைத் தொட்டெடுத்து ஸம்ச்லேஷிக்க அவா அதிகமாயிற்று. ஸூதகாசௌசமிருப்பதால் தொடுவது தகாதென்று பத்து நாள் பொறுத்தனர். பத்து நாள் கடந்தன. அந்தணர்க்கல்லவோ பத்து நாளில் ஆசௌசம் கழிந்துவிடும். நமக்குப் பதினைந்து நாள் வரையில் ஆசௌசமிருக்கிறதே என்செய்வதென வருந்தினர். அதற்குள் இவன் வஸுதேவருடைய புத்ரன்; ஒருத்திமகனாய்ப் பிறந்து ஒருத்திமகனாய் ஒளித்து இருக்கின்றானென்ற ரஹஸ்யம் தெரிந்த கருக்கர் போன்ற சில மஹான்கள், க்ஷத்ரியர்கட்குப் பன்னிரண்டு நாட்களே ஆசௌசமென்பதைக் கொண்டு குழந்தையை அதற்கு மேல் தொடலாமென்று தம் மனதில் தீர்மானித்து, '12 நாட்கள் கழிந்தால் யாதொரு ஸந்தேஹமுமின்றி எடுத்துக் கொள்ளலாம். இக் குழந்தை விஷயத்தில் அது தகும்' என்று பொதுவிலே சொன்னார்கள். அதைக்கேட்டு ஆயர்கள் 12 நாள் பொறுத்திருந்து உடனே உத்தானமஹோத்ஸவம் நடத்தினார்கள். உத்தானம் செய்தலாவது-மேல் இருக்கச் செய்தல், அதாவது கைகளில் எடுத்துக்கொள்ளுதலெனப் பொருள் கொண்டு இப் பாசுரத்தின் கருத்தை இவ்வண்ணமுரைத்தோம். ஆசௌசம் கழிந்த பிறகு தொடவேண்டுமானால் 13-வது நாளல்லவோ தொடக்கூடுமெனில்-கண்ணன் நடுநிசியிற் பிறந்தபடியாலே உதயத்திற்குள் ஒரு நாள் கழிந்துவிட்டது. பிறகு பத்து இராப்பகல்கள் கழிந்தபிறகே பத்து நாள் கடந்ததாக ஆயர்கள் நினைத்தனர். இன்னுமொரு நாள் கழிந்தபிறகு இரண்டாவது நாள் தொடலாமென்று பெரியோரால் தெளிந்தனரெனக் கருத்தாகையால் விரோதமில்லை.

குழந்தைக்குப் பன்னிரண்டாம் நாள் செய்யும் சடங்கொன்றுண்டு. அதாவது நாமகரணம். அதைப் பத்தாவது நாளிலாவது பன்னிரண்டாவது நாளிலாவது செய்யவேண்டுமென்றார் மனு. 10-வது நாள் ஆசௌசமிருப்பதாலே 11-வது நாள் என்று அதற்கு உரை செய்கின்றனர். ஆனால் அது உத்தான மென்கிற சொல்லுக்கு அர்த்தமாகாது. மேலும் நந்தகோபருக்கு 15 நாள் ஆசௌசமிருப்பதால் 12-வது நாள் எப்படி நடத்தினரென்றும் விவாதமேற்படும். குழந்தையைத் தொடுவதற்கே எவ்வளவோ உபாயம் தேடவேண்டி யிருக்க, நந்தகோபருக்கும் ஆசௌசம் நீங்க வழி தேடுவது சாத்யமாகாது. ஆசௌசமிருந்தாலும் செய்யலாமென்று கொண்டால் ஒருவாறு நாமகரணமும் கருதப்படலாம். ஸ்ரீபாகவதத்தில் கண்ணனுக்கும் பலராமனுக்கும் நந்தகோபர் கருக்கரைக் கொண்டு சிறிது நாள் கழித்தே நாமகரணம் செய்ததாகக் காண்கிறோம். ஆழ்வார் நாமகரணமென்று தெளிவாய்ச் சொல்லவுமில்லை. ஆக இந்த விசாரம் இங்கு வீணாகும்.

'கதாசிதௌத்தாநிககௌதுகாப்லவே ஜந்மர்க்ஷயோகே ஸமவேதயோஷிதாம்' என்று ஸ்ரீ பாகவதத்திலே நாமகரணத்தினின்றும் வேறாக உத்தான மஹோத்ஸவம் ஒன்று கூறப்பட்டுள்ளது. அங்கு 'உத்தாவந' என்கிற பாடமுமுண்டு. 'உத்தானமாவது வீட்டுவாசற்படி தாண்டிவருவது' என்று அதன் வியாக்கியான மொன்றில் விவரிக்கப்பட்டது. குழந்தை எழுந்திருப்பதை உத்தானமென்று சொல்லலாம். இதெல்லாம் 12-வது நாளில் நடக்கக் கூடியதாகத் தோன்றவில்லை. உத்தானம் அங்கபரிவர்த்தனமென்று மற்றொரு வ்யாக்யானம். முதுகுகீழாகப் படுத்திருக்கும் குழந்தை ஒரு பக்கம் உயரத் தூக்கி ஒருகணித்துப் படுத்துக் கொள்வது உத்தானமென்னலாம். ஆனாலும் ஜந்மநக்ஷத்ரமும் அந்த மஹோத்ஸவகாலத்தில் சேர்ந்ததாக அங்கே சொல்லப்பட்டிருக்கிறது. 12-வது நாள் அது சேராது. ௪-வது பாசுரத்திற் சொன்ன மங்களஸ்நானத்தை 15 நாள் கழித்து ஆசௌசம் கழியும் நாளிலே செய்வித்த ஸ்நானமாகக் கொண்டு அதற்கு மேல் பத்து நாள் கடந்த இரண்டாம் நாள் என்று இதற்குப் பொருள் கூறினால் ரோஹிணிநக்ஷத்ரமும் சேரும். அப்போது 'பத்து நாள் கடந்த விரண்டாம் நாள் என்று சொன்னதற்குக் கருத்து என்னவெனில்—மங்களஸ்நானமான பிறகு பத்தாவது நாளில் குழந்தை உத்தானம் செய்துகொண்டது. அன்றைத்தினமே சயமரம் கோடித்து உத்ஸவம் தொடங்கி 1 -வது நாளிலே ரோஹிணியும் சேர்ந்தபோது உத்ஸவத்தைப் பூர்த்திசெய்து மகிழ்ந்தனரென்றதாம். ஆக இத் திருமொழியில் அவதரித்து ஏறக்குறைய ஒரு மாஸத்திய விசேஷங்களைச் சொன்னதாகும். யுக்தமான பொருள் எதுவாயினும் இசைக. ௮.

9. கிடக்கில்தொட்டில்கிழியவுதைத்திடும்
எடுத்துக்கொள்ளில்மருங்கையிறுத்திடும்
ஒடுக்கிப்புல்கிலுதரத்தேபாய்ந்திடும்
மிடுக்கிலாமையால்நான்மெலிந்தேன்நங்காய். (21)

| | | | |
|---|---|---|---|
| நங்காய் | பூர்ணையானவளே! (இந்தப் பிள்ளை) | ஒடுக்கி புல்கில் | அடக்கி (மார்பிலே) அணைத்துக் கொண்டால் |
| கிடக்கில் | சயனித்திருந்தால் | உதரத்து | வயிற்றில் |
| தொட்டில் கிழிய | தொட்டில் பிளந்துவிடும்படி | பாய்ந்திடும் | பாய்ந்து விடுகிறான்; |
| உதைத்திடும் | உதைக்கிறான்; | மிடுக்கு இலாமையால் | சக்தி யில்லாமையினால் |
| எடுத்துக் கொள்ளில் | இடுப்பில் வைத்துக்கொண்டால் | நான் | (உன்னைப்போலில்லாத)நான் |
| மருங்கை | இடுப்பை | மெலிந்தேன் | இளைத்துவிட்டேன். |
| இறுத்திடும் | முறியும்படி செய்கிறான்; | | |

தம் நிலையிலே இருந்து அநுபவித்துவந்த ஆழ்வாருக்கு அநுபவம் மேலிட்டு யசோதையாகத் தன்னை பாவிக்கும் தசை வந்தபோது இப்பாசுரம் பிறந்தது. இங்கே, இடுப்பில் எடுத்துக்கொண்டாலும், மார்பிலே அணைத்துக்

கொண்டாலும் அவனுடைய சேஷ்டையால் தன் உடல் வருந்துவதால், 'நான் மெலிந்தேன் என்று யசோதை சொல்வது பொருந்தும். தொட்டில் கிழியும்படி உதைத்தால் இவள் உடலுக்கு என்ன? அதனால் இவள் மெலிந்து போவதெங்ஙனே யெனனில்—அப்படியாகில் எடுத்துக் கொள்வதும், அணைப்பதும் தாயின் செயலானது போல் கிடத்தலையும் அவள் செயலாகக் கொண்டு, தொட்டில் கிடக்கில்—நான் முலையூட்டுவதற்காக அவனிருக்கும் தொட்டிலிலே சயனித்தால், என்னுடைய ஆடையும் உடலும் கிழியும்படி உதைக்கிறான் என்றுரைத்தால் 'நான் மெலிந்தேன்' என்பது இணங்கும். உண்மையில் இவ்வாக்ஷேபத்தையும் உட்கருதியே பூர்வர்கள் வேறு கருத்துரைத்தனர் போலும். அதாவது—மிடுக்கிலாமையால் என்பது, 'தொட்டில் கிழிய உதைப்பதாலும் இடுப்பு முறியும்படி அழுத்துவதாலும், வயிற்றிலே விரைந்து பாய்வதாலும் என் குழந்தைக்கு என்ன நோய் உண்டாகுமோ வென அஞ்சி மனவுறுதியிராமையினால்' என்றவாறு. இப்படி இவளுக்குண்டான அதிசங்கை தோற்றுமாறு, கிழிய—காலில் அடிபடும்படி, தொட்டில் உதைத்திடும்—தொட்டிலை உதைக்கும் என்றந்வயித்துமுரைக்கலாம். சேஷ்டைகளைப் பார்த்துப் பொறுக்க வலிவற்று வருந்துகிறேனெனவே பொருளாம்.

நங்காய் என்றது நங்கை என்பதின் ஒருமை விளிச்சொல். ஆக என் மெலிந்து கிடக்கிறாயென்று கேட்ட ஒரு நங்கைக்கு இது விடையாகும். அல்லது ஒவ்வொரு நங்கைக்கும் இப்படிச் சொல்லிவருகிறாளென்றும் கொள்ளலாம். அன்றி, ஒவ்வொரு அடி ஒவ்வொரு நங்கைக்கு விடையாம். ஒவ்வொரு அடியிலும் 'நங்காய்' என்பது சேரும். அதாவது-கீழே குழந்தையை விட்டிருந்தபோது பார்த்து, 'என்! என்னைப் போல் தொட்டிலில் விடலாமே' என்றாள் ஒரு நங்கை. மற்றொருத்தி (தன் குழந்தையை இடுப்பில் எடுத்து வந்தவள்) இடுப்பிலே வைத்துக் கொள்ளலாமென்றாள். மூன்றாவது நங்கை தன் குழந்தையைப் போல் இதையும் மார்பிலே அணைத்துக் கொள்ளச் சொன்னாள். இம் மூன்று நங்கைகளுக்கும் மூன்று அடிகளால் விடை கூறி, இவற்றையே காரணமாக்கி, 'என் மெலிந்து கிடக்கிறாய்' என்று கேட்டவளுக்கும் பதிலுரைக்கின்றாள் நான்காம் அடியால் என்றவாறு. கீழே விட்டாலும் குழந்தை தரையில் படுப்பான். எதேனும் பூச்சியும் தீண்டுமென்று பயப்படுவதும் நான்காமடியிலே கருத்திலுள்ளதாம். ஆக எல்லா விதங்களிலும் கெடுதலை நினைத்து மெலிந்தாளென்று அதிஸ்நேஹத்தைக் குறித்ததாகும். க௯.

10. செந்நெலார்வயல்சூழ்திருக்கோட்டியூர்
மன்னுநாரணன்நம்பிபிறந்தமை
மின்னுநூல்விட்டுசித்தன்விரித்த * இப்
பன்னுபாடல்வல்லார்க்கில்லைபாவமே. (22)

| | | | |
|---|---|---|---|
| **செம் நெல்** | செம்மையான நெல் தானியத்தினால் | **மின்னு நூல் விட்டு சித்தன் விரித்த** | ப்ரகாசிக்கும் பூணுநூலையுடைய விஷ்ணு சித்தன் (பெரியாழ்வார்) விவரித்துச் சொன்ன |
| **ஆர் வயல்** | நிறைந்த கழனிகளால் | **பன்னு** | இசையுடன் சேர்ந்த |
| **சூழ் திருக்கோட்டியூர்** | சூழப்பட்ட திருக்கோட்டியூரில் | **இ பாடல்** | இந்தப் (பத்து) பாட்டுக்களிலே |
| **மன்னு** | நித்யவாஸம் செய்தருளும் | **வல்லார்க்கு** | ஓதவும் உரைக்கவும் ஸமர்த்தரானவர்கட்கு |
| **நாரணன்** | ஸௌம்ய நாராயணன் | **பாவம் இல்லை** | பாவம் போய்விடும். |
| **நம்பி** | கல்யாணகுண பூர்ணனான கண்ணனாக | | |
| **பிறந்தமை** | அவதரித்த ப்ரகாரத்தை | | |

இப்போது திருக்கோட்டியூரிலுள்ள நாராயணனே அப்போது க்ஷீரார்ணவத்திலிருந்து வந்து கண்ணனாய் அவதரித்தது. பன்னு என்பதற்கு 'சொல்லப்படும்' எனப் பொருளாகில், செல்வநம்பி முதலானோர் ஆதரித்துச் சொல்லுமவையான என்று கருத்துரையாம். மின்னுநூல். வேத நூல் முதலானவற்றிலுள்ள விசேஷஜ்ஞானமடியாக வெளியிலுள்ள நூலும் ப்ரகாசம் பெறுவதேயன்றி வெறும் வெண்மையாலல்ல. யஜ்ஞோபவீதத்தில் மூன்று வடங்கள் த்ரயீ என்னப்படும் மூன்று வேதங்களில் அவகாஹனத்தைக் காட்டும். க்ருஹஸ்தனுக்கு மற்றும் மூன்று வடங்கள் தர்மார்த்த காமங்களிலாவது, யாஜநம், அத்யாபநம், ப்ரதிக்ரஹமென்னும் மூன்றிலாவது அதிகாரத்தைக் குறிக்கும். யதிக்கு மோக்ஷமொன்றிலேயே நோக்கை மிகுதியான ஒற்றை வடம் விளக்குமென்றவாறு காண்க. ய.

ப்ரபந்தரக்ஷையில் வண்ண மாடங்கள் (1- 2.) உரை முற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன்திருவடிகளே சரணம்.

——: o :——

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன்திருவடிகளே சரணம்.

## பெரியாழ்வார்திருமொழி 1. 3. (திருப்பாதாதிகேசவண்ணமை).

# சீதக்கடல்.

இத் திருமொழியிலே ஆழ்வார் கண்ணபிரானைப் பாதாதி கேசாந்தம் அநுபவித்துப் பேசுகிறார். இதென்ன-ஆழ்வார் பேசுவது தம்முடைய தன்மையிலேயா? யசோதைப்பிராட்டியின் தன்மையிலா? ஆய்ச்சிமார்களின் தன்மையிலா? வேறு ஏதேனுமொரு ப்ரகாரமாகவா என ஆராய்வது அவச்யமாகும். இவற்றில் தம் தன்மையென்கிற முதற் பக்ஷமாகில், 'பவளவாயீர் வந்து காணீரே' என்றவாறு ஸ்திரீகளை வர்ணித்தழைத்துப் பேசுவது அவ்வளவு பொருத்தம் பெறமாட்டாது. மேலும் இப் பக்ஷத்தில்

இத் திருமொழியின் முடிவில், ' அசோதை முன்சொன்ன ' என்று யசோதை சொன்னதைச் சொல்வதாகக் குறித்ததும் முரண்படுமாம். யசோதையின் தன்மையில் என்னும் இரண்டாம் பக்ஷமாகில், ' கோதைக் குழலா ளசோதைக்குப் போத்தந்த, ' ' பணைத்தோளிளவாய்ச்சி பால் பாய்ந்த கொங்கை, ' ' இழந்தாள் — பழந்தாம்பாலோச்ச, ' ' நந்தன் மதலைக்கு ' ' ஆய்ச்சி மதுரமுலையூட்டி, ' ' அசோதை வளர்க்கின்ற ' என்றிப்படி யசோதையை வர்ணித்து ஒரு விதமாகப் பிறந்த பாசுரங்கள், அனேகமாய் எல்லா பாசுரங்களுமே முரண்பட்டு நிற்கும். இனி முடிவில், ' அசோதை முன் சொன்ன ' என்பதற்கு ' யசோதையின் முன்னிலையில் ஆய்ச்சிகள் சொன்ன ' என்று பொருள் கொண்டு மூன்றாவது பக்ஷத்தை ஆதரிக்கில், ' பவளவாயீர் ' என்றது முதலான விளிச் சொற்களுக்கு, சிலர் மற்றும் சிலரை அழைத்துச் சொல்வதாக ஸமாதானம் செய்தாலும், ' ஆய்ச்சியர் தங்தொண்டை வாயாற் றருக்கிப் பருகும் ' என்றது போன்ற விடங்களில் நிர்வஹிப்பதில் ச்ரம முண்டு. இம் மூன்று பக்ஷங்களிலும் குவலயாபீடத்தைக் கொன்றது போன்ற கதை இங்கு உரைக்கப்பட்டிருப்பது சேராது, பிறகன்றோ அது நடைபெற்றது.

ஆக நான்காவது பக்ஷம் உசிதமாம். அதாவது — ஆழ்வார் யசோதை சொன்னதைச் சொன்னாரென்றால், யசோதைப் பிராட்டி பாதாதி கேசாந் தத்தை எவ்விதம் அனுபவித்து வர்ணித்தாளோ, அவ்விதமே அவ்வர்ணனை யையே அநுவாதம் செய்தாரென்றதன்று. முன் யசோதையானவள், கண்ணன் தன் குழந்தையாயிருந்த போது, தனக்குத் தெரிந்த விதத்திலே அவனுடைய குண சேஷ்டிதங்களைக் கொண்டு, தன் தோழிமார்களைக் கூப்பிட்டுப் பாதாதிகேசாந்தவர்ணநம் செய்தாள். அதை நினைத்து ஆழ்வாரும், தாம் இருந்த காலத்திலேயுள்ள ஒரு ஸ்திரீயானவள் தன் தோழி மார்களை அழைத்து, யசோதை யனுபவித்த கண்ணனைப் பாதாதி கேசாந்தம் அனுபவிக்கப் புகுந்தால் எவ்விதம் அனுபவித்து வர்ணிப்பாளோ, அவ்விதம் செய்ய விரும்பினாரென்றவாறு. ஆக யசோதை, நந்தர், ஆய்ச்சிகள் முதலா னோரைப் படர்க்கையாகக் குறித்திருப்பதும், ஆழ்வார் தம் காலத்திலுள்ள ஸ்திரீயின் தன்மையிலே நின்றபடியாலே ஸ்திரீகளை அழைத்து அழகை அனுபவிக்கச் செய்வதும், கண்ணன் குழந்தைப் பருவம் நீங்கிப் பிற் காலத் திலே மதுரை முதலானவிடங்களிற் செய்தவைகளைச் சொல்லித் துதிப்பது மெல்லாம் பொருந்தக் குறையில்லை. ' அசோதை முன் சொன்ன திருப்பாத கேசத்தை ' என்பதற்கு, ' யசோதையினால் முன் தனக்குத் தெரிந்த வகை யிலே வர்ணிக்கப்பட்ட பாதாதி கேசாந்தமான திருமேனியை ' என்றே பொருள். ' முன் ' என்றதால் முன் செய்த வர்ணனைக்கும் இப்போது செய்யுமதற்கும் வேறுபாடு உண்டென்று ஸூசிதமாகிறது.

இங்கே, ' யசோதைப் பிராட்டி பேசின பாசுரத்தாலே யருளிச் செய் கிறார் ' என்று திருவாய்மொழிப்பிள்ளையைப் பின்பற்றி முதலில் பேசி,

பிறகு அதன் பொருளை, 'யசோதைப் பிராட்டி தான் அனுபவித்த அம்சத்தை ஸஜாதீயைகளாய் அநுபுபூ (ஷுஹூ) ஷுக்களாயிருப்பாரையும் (அநுபவிக்க விரும்புமவர்களையும்) ச்லாகித்துக் கொண்டழைத்துக் காட்டின பாசுரத்தாலே அருளிச் செய்தார்' என்றும், 'யசோதைப் பிராட்டியுடைய ஸ்நேஹத்தை யுடையவராய்க் கொண்டு அனுபவித்ததும், அவள் பாதாதி கேசாந்தம் அனுபவித்துப் பிறர்க்குக் காட்டின கட்டளையிலே பேசினதுமான இதுவே அவளோடு இவர்க்கு ஸாம்யம்' என்றும் மணவாள மாமுனிகள் உரைத்தது உற்று நோக்கத்தக்கது.

ஆக, கண்ணனுடைய பாதாதி கேசாந்தத்தை யசோதை தான் அநுபவித்துத் தன் ஸஜாதீயரை யனுபவிக்கும்படி செய்தது போல், இவரும் ஒரு ஸ்திரீயாக இருந்து அதனையே தாம் அநுபவித்த மாதிரி ஸஜாதீயரை யநுபவிக்கச் செய்வதுமாத்திரத்தைக் கொண்டே, 'அசோதை முன் சொன்ன' என்னதாகும். இம்மாதிரி நிர்வாஹத்தையே மற்றும் இவருடைய திருமொழிகளிலும், ஆண்டாள் ப்ரபந்தத்திலும் வேண்டுமிடங்களிலே ஆதரிப்பது நலம்.

முதலில் திருவடிகளை யனுபவிக்கத் தோழிமார்களை அழைக்கிறார்.

1. சீதக்கடலுள்ளமுதன்னதேவகி
கோதைக்குழலாளசோதைக்குப்போத்தந்த
பேதைக்குழவிபிடித்துச்சுவைத்துண்ணும்
பாதக்கமலங்கள்காணீரே பவளவாயீர்வந்துகாணீரே. (23)

| | | | |
|---|---|---|---|
| சீதம் | குளிர்ந்ததான | பேதை குழவி | அறிவில்லாத குழந்தை |
| கடல் | ஸமுத்ரத்தின் | பிடித்து | கையால் பிடித்து |
| உள் | உட்புறத்திலிருந்த | சுவைத்து | ருசி பார்த்து |
| அமுது அன்ன | அமிருதம் போன்ற | உண்ணும் | குதப்பிவரும் |
| தேவகி | தேவகிப் பிராட்டியாலே | பாதம் கமலங்கள் | தாமரை போன்ற அடிகளை |
| கோதை குழலாள் | பூ மாலையுடன் கூடின கூந்தல் முடிப்பையுடைய | காணீர் | பாருங்கள். |
| அசோதைக்கு | யசோதைக்கு | பவள வாயீர் வந்து காணீர் | பவளம் போன்ற அதரமுடையவர்களே ! வந்து பாருங்கள். |
| போத்தந்த | போகவிடப்பட்டதான | | |

கடலைச் சீதமென்று விசேஷித்ததால் சூரியனாலும் படபாக்னியாலும் வெப்பம் கொண்ட உப்புக் கடலை விலக்கிப் பாற்கடல் சொல்லப்பட்டதாம். 'கடலமுதம்' என்னாது கடலுள்ளமுதம் என்றதால் மேற்புறத்திலிருந்த தேவாமிருதத்தினும் உயர்ந்த அமிருதமான லக்ஷ்மிதேவியைக் கருதினபடியாம். 'திருவின் வடிவொக்கும் தேவகி' (1-2-17) என்றல்லவோ இவர் பாசுரம். ஆக இரண்டாமடியில் யசோதைக்கு ஒரு விசேஷணம் போல் இங்கே இது தேவகிக்கு விசேஷணமாயிற்று. அமுதம் போன்ற தேவகியின் வயிற்றில் பிறந்த குழந்தையின் பாதங்களில் சுவைத்துண்ண அமுதம்

இருக்கத்தகும். புஷ்பங்களில் வெகு விருப்பமுள்ள கோதைக்குழலாள் யசோதைக்கு இப் பாதகமலங்களிலுள்ள வ்யாமோஹம் வர்ணித்து முடியாது. ஆகவே யசோதையினிடம் இக் குழந்தை வந்து சேர்ந்தது. அமுதன்ன என்பதைக் குழவிக்கு விசேஷணமாக்கிக் கண்ணனுடைய திரு மேனியை அமுதம் போன்றதாகச் சொன்னாலும் பாதங்களைச் சுவைத்துண் ணுவதற்குப் பொருத்தமுண்டு. 'என் கடற்படாவமுதே' (2. 3. 5.) என்ற நம்மாழ்வாரும், 'நலங்கடலமுதமென்கோ' (3-4, 5) என்றும் அருளிச் செய்தார். இப்போது 'தயாஸமுத்ரமான'.தேவகி 'சீதக்கடல்; கண்ணன்' 'அங்குண்டான' அமுதம். இங்கு, 'கூபொாஷயிஸ்ஂவெஷொ ஹவதாூாঃ கா‍ணெ ஸந்தி உதூஸஂஸ்ஷாதாயாঃ சுூாதாஂபஉவெஉ திவ்யூஷெஹஂ உாதஸஜீவநஉஜநாஅ ஒூஷெூ॥ঃ' என்று ஸ்ரீதேசிகன் அருளிச்செய்தபடி 'தயையாகிற பாற்கடலினின்றும் தோன்றின அமிருதமான' எனவும் பொருளாம். கடலைச் சீதம் என்று விசேஷித்தது தயாஸமுத்ரத்தைக் கொள் வதற்காக. மற்ற ஸமுத்ரமெல்லாம் இவ்வளவு சீதமாகமாட்டா. கோதைக் குழலாள் என்று யசோதையைச் சொன்னதால் தேவகியானவள் கஞ்சன் சிறையிலே தான் படும் கஷ்டத்தைப் பார்த்துக் குழந்தை ஸுகப்படத் தகுந்தவிடம் பார்த்து அனுப்பியது தோற்றும். போத்தரல்-போக்கல். பேதை என்பதால், 'நம்முடைய உருவத்தை அம்ருதாம்ச மென்றும், நம்முடைய பாதபங்கயத்தை 'அம்ருதஸ்யந்தி' என்றும் 'தேனே மலரும் திருப்பாதம்' என்றும் சொல்லி ஆஸ்வாதனம் செய்ய ஆசைப்படுகிறார்களே. இதில் எவ்வளவு ருசி இருக்கிறது பார்ப்போம். இதை உண்டு இதன் ரஸத்தாலே நம் வயிற்றிலே உள்ள ஜீவப்ரபஞ்சத்துக்கு உணவுமளிப்போமென்று ஈச்வர னுக்குக் குழந்தைப் பருவத்திலே ஒரு மோஹம் வந்தது போலுமென்று சொன்னதாம். சுவைத்து என்பதால் ருசி பார்க்க ஆசையும், உண்ணும் என்பதால் உள்ளிருக்கும் ஜீவர்களுக்கு உணவளிக்கிற நோக்கமும் குறிப் பட்டதாம். வியப்பினால் ஆறு என்னும் பதத்தை 'ஆ' என்று குறைத்துச் சொல்வதுண்டென்பர் தமிழர். பவளவாயீர்: நீங்கள் கண்டமாத்திரத்திலே உங்கள் பவளவாய்க்கும் பாதகமலங்களைச் சுவைத்துண்ண பரபரப்புண்டா மென்றபடி. இவ்விளிச் சொல்லைச் சொல்லும் வரையில் குழந்தையையே பார்த்து வர்ணித்தாரிவர்.

க.

2. முத்தும்மணியும்வயிரமும்நன்பொன்னும்
தத்திப்பதித்துத்தலைப்பெய்தாற்போலெங்கும்
பத்துவிரலும்மணிவண்ணன்பாதங்கள்
ஒத்திட்டிருந்தவாகாணீரே ஒண்ணுதலீர்வந்துகாணீரே. (24)

| | | | |
|---|---|---|---|
| முத்தும் மணியும் வயிரமும் நல் பொன் னும் | உயர்ந்த முத்து, ரத்தினம், வைரம் பொன் இவை எல்லாம் | தத்தி | தாண்டி அதாவது மாறி மாறி (இருக்கும்படி |
| | | பதித்து | பதிவு செய்யப் பெற்று |

| | | | |
|---|---|---|---|
| தலைப் பெய்தால் போல் | ஒன்றுய்க் கூடினற்போல | எங்கும் | எல்லாவிடங்களிலும் |
| மணிவண்ணன் | நீலமணி போன்ற வர்ணமுடைய குழந்தையின் | ஒத்திட்டு இருந்த ஆ | பொருந்தி அமைந்திருந்த வைலக்ஷண்யத்தை |
| பாதங்கள் | பாதங்களின் | காணீர் | (இப்போதும்) பாருங்கள் ; |
| பத்து விரலும் | பத்து விரல்களும் | ஒள் நுதலீர் | (பலவிதமான திலகங்களாலே) ப்ரகாசிக்கும் நெற்றியுடையபெண்மணிகளே! வந்து காணீர். |

முத்து, வைரம், வைடூரியம், மரகதம், மாணிக்கம், பவழம், புஷ்பராகம், நீலம், கோமேதகம் எனப்படும் நவரத்னங்களையும் பொன்னையும் கண்ணனுடைய திருவடியில் விரல்களில் உண்மையிலேயே சாத்தியிருந்தால் 'தலைப் பெய்தால் போல்' என வேண்டா. ஆகவே திருவடிகளைச் செம்பஞ்சு ரஸம் முதலியவற்றால் அலங்கரிக்கும்போது விரல்கள் பத்துக்கும் பத்து நிறமிட்டதால் இது நவரத்னங்களும் பொன்னும் பதிந்தாற் போலிருக்கிறதென்கிறபடி. தலைப் பெய்தால் = தலை காட்டுதல், கிட்டுதல், கூடுதல். 'முத்தும் மணியும் வயிரமும் நன்பொன்னும்' என்று சொன்ன முறையிலே பதித்தாலே ஒன்றுக்கொன்று மாற்றுக் கொடுப்பதாயிருக்க, 'தத்தி' என்னும் பதம் எதற்காக வென்னில்—மணியென்று பல ரத்னங்களையும் சொன்னதால் அவற்றையும் அழகுபடும்படி மாற்றி மாற்றி அமைப்பதைத் தெளிவிப்பதற்காக. அன்றி, முத்தும் மணியும் ஒரு விரலில், வயிரமும் பொன்னும் மற்றொரு விரலில் மாறி மாறி அமைக்கப் பெற்றனவென்னலாம். இவற்றில் முத்தும் வயிரமும் நகங்கள் போன்றனவாம். அன்றியும், எம்பெருமான் திருமேனி இயற்கையிலேயே மணி வண்ணமும், முகில் வண்ணமும், மயில் தோகை வண்ணமும், பொன் நிறமும், மின்னல் போன்றதுமாகப் பலபடியாயிருப்பதாலே ஒவ்வொரு விரலும் பலவகை ஒளிகள் வீசும். ஆயினும் ஒரு விரலுக்கு மற்றொன்றால் மேன்மை ஏற்படும்படி ஒளிநிறங்கள் மாறி மாறி விளங்கினமையால் எல்லாம் ஒவ்வொரு விரலிலும் சேர்ந்திருந்தாலும் தத்திப் பதித்தவை போலிருந்தன என்றும் கருத்தாம். முன் பாசுரத்தில் உள்ளங் கால்களும், இங்கு மேலுள்ள பாகமும் அநுபவித்தபடியாகும். உ.

3. பணைத்தோளிளவாய்ச்சிபால்பாய்ந்தகொங்கை
அணைத்தாரவுண்டுகிடந்தவிப்பிள்ளை
இணைக்காலில்வெள்ளித்தளைநின்றிலங்கும்
கணைக்காலிருந்தவாகாணீரே காரிகையீர்வந்துகாணீரே. (25)

| | | | |
|---|---|---|---|
| பணை தோள் | மூங்கில் போன்ற தோள்களையுடையளும் | பால் பாய்ந்த கொங்கை (யை) | பாலை வேகமாக ப்ரவஹிக்கும் ஸ்தநத்தை |
| இள | இளமைப் பருவமுள்ளவளுமான | அணைத்து ஆர உண்டு | திருக்கையால் தழுவிக் கொண்டு நிரம்பப் புசித்து |
| ஆய்ச்சி | இடைச்சியான யசோதையின் | | |

| | | | |
|---|---|---|---|
| கிடந்த | (அதிகமாய் அமுதுசெய்த தால்) அசையாமல் படுத் துள்ள | நின்று | அசையாமல் இருந்து |
| இ பிள்ளை | இந்தப் பிள்ளையின் | இலங்கும் | ப்ரகாசிக்கும் |
| இணை காலில் | ஒன்றேடொன்று இணைந்த திருக் கால்களில் | கணைக் கால் | திருவடிகளுக்கு மேலுள்ள பாகம் |
| வெள்ளி தளை | வெள்ளியால் செய்த தண் டைகள் | | இருந்த ஆ காணீர் ; |
| | | காரிகையீர் | அழகான பெண்காள் ; வந்து காணீர். |

பணை போன்றதாவது—மூங்கில் போல் பசுமையாய் வட்டமாய் அழகா யிருக்கை. ‹‹ திஷ்ட்யா ப்ராத: ப்ரவயஸ இதாநீம் அப்ரஜஸ்ய தே ப்ரஜாஸாயா நிவ்ருத்தஸ்ய ப்ரஜா யத் ஸமபத்யத (10. 5. 23) என்று ஸ்ரீபாகவத த்திலே வசுதேவர் நந்தரை வயது முதிர்ந்தவராகச் சொல்லியிருக்க யசோதைக்கு இளமைப் பருவமென்பது எங்ஙனமெனில்—அவர் யௌவந தசையைக் கடந்தவராயினும் அவள் அத்தசையிலிருத்தல் கூடும். எம்பெரு மான் இவளுக்குத் தன்னை வளர்ப்பதற்குத் தக்க பருவத்தை அநுக்ரஹித்தது மாம். தளை நின்றிலங்கும் : பிள்ளை அசையாமற் படுத்திருப்பதால் தண்டையும் அசையாமல் நிற்கிறது. கணைக்காலோடு சேர்த்தியால் அதன் அழகினுலும் தண்டை இலங்குகிறதென்றபடி. இணைக்கால் என்று முழுக்கால்கள் இரண்டின் சேர்த்தியழகைச் சொல்லிக் கணைக்காலெனத் தண்டையுள்ள இடத்தைக் கூறினதாம். இணைக்கால் என்றது இணையடி யென்றாற்போலத் திருவடிமாத்திரமே யாகில், திருவடியில் தளை நின்று—தண்டை விழுந்து நிற்க, இலங்கும் அதற்கு மேல் ப்ரகாசிக்கும் கணைக்கால் என வுரைப்ப தாம். ௩.

4. உழந்தாள்நறுநெய்யோரோதடாவுண்ண
இழந்தாளெரிவினுலீர்த்தெழில்மத்தின்
பழந்தாம்பாலோச்சப்பயத்தால்தவழ்ந்தான்
முழந்தாளிருந்தவா காணீரே முகிழ்முலையீர்வந்துகாணீரே.(26)

| | | | |
|---|---|---|---|
| உழந்தாள் | (நெய்யை சேகரிக்க மிக்க) ப்ரயாசம் கொண்டவளும் | பழ தாம்பால் | தேய்ந்து சிதிலமான கயிற் றினுல் |
| ஓரோ தடா | ஒவ்வொரு பானையாக | ஓச்ச | (அடிக்க) ஓங்கின போது |
| நறு நெய் | மணமுள்ள நெய்யை | பயத்தால் | பயந்து |
| உண்ண | கண்ணன் விழுங்கிவிடவே | தவழ்ந் தான் | தரையிலே முழங்காலிட்டு நகர்ந்த அவனுடைய |
| இழந்தாள் | (சேகரித்ததெல்லாம்) இழந்தவளுமான யசோதையானவள் | முழந்தாள் | முழங்கால்கள் இருந்த ஆ காணீர். |
| எரிவினுல் | வயிற்றெரிச்சலாலே | | |
| ஈர்த்து | (அவனை) இழுத்து | முகிழ் முலையீர் | அங்குரித்துவரும் ஸ்தநங் களை யுடைய பெண்களே ! வந்து காணீர். |
| எழில் மத்தின் | (கயிற்றைத் தேய்த்ததாலே) ப்ரகாசிக்கும் மத்தினுடைய | | |

ஒரோ தடா : எல்லாப் பானைகளிலுள்ள நெய்யையுமுண்டான். அன்றி, இவனுக்குத் தெரியாதபடி ஒவ்வொரு நாளும் வெவ்வேறு பானைகளில் வைத்ததையும் கண்டு உண்டான். ஆக வெகு நாளைய நெய் இழந்தாள்.

இழந்தாள் என்பதற்கு நெய்யை இழந்தவள் என்னுமல், 'உண்ட நெய் ஜீர்ணமாகாதே. குழந்தையை இழந்தோமே' என்று நினைத்தவளெனப் பொருள் கொள்வர். அங்கு அவ்வளவு பொருள் கொள்ளில், உழந்தாள் என்றதற்கும் பிள்ளையைப் பெறுவதற்காக முன்னே எவ்வளவோ ப்ரயாஸப் பட்டவளெனப் பொருளாம். மத்தின் என்றதை ஐந்தனுருபாய்க் கொண்டு மத்தின் ஈர்த்து=மத்திலிருந்து தாம்பை உரித்து எனலாம். ச.

5. பிறங்கியபேய்ச்சிமுலைசுவைத்துண்டிட்டு
உறங்குவான்போலேகிடந்தவிப்பிள்ளை
மறங்கோளிரணியன்மார்வைமுன்கீண்டான்
குறங்குகளைவந்துகாணீரே குவிமுலையீர்வந்துகாணீரே. (27)

| | | | |
|---|---|---|---|
| பிறங்கிய | (வஞ்சனை வேஷத்தாலே அன்னைபோல்) பிரகாசித்தவளான | முன் | அதற்கு முன் ஓர் அவதாரத்தில் |
| பேய்ச்சி | பூதனையென்னும் பேய்ச்சியின் | மறம் கோள் | கோபம் கொண்ட |
| முலை | ஸ்தந்யத்தை | இரணியன் | ஹிரண்யாஸுரனுடைய |
| சுவைத்து | உருசித்து | மார்வை கீண்டான் | மார்பைப் பிளந்தவனுமான |
| உண்டிட்டு | புசித்துவிட்டு | இ பிள்ளை | இந்தப் பிள்ளையினுடைய |
| உறங்குவான் போலே | தூங்குகிறவன் போலவே | குறங்குகளை | திருத்துடைகளை வந்து காணீர் ; |
| கிடந்த | படுத்திருந்தவனும் ; | குவி முலையீர் | குவிந்த கொங்கையுடைய பெண்களே ! வந்து காணீர். |

பிறங்கிய—'மடநெஞ்சாற் குறைவில்லா மகள் தாய் செய்தொரு பேய்ச்சி' (திருவாய்—4. 8. 3.) என்றபடி பிள்ளைக்கும் பிறர்க்கும் தான் இன்னாளெனத் தெரியாதபடி, பரிவுள்ள யசோதை வேஷம் பூண்டு ப்ரகாசித்தவளான என்றபடி. பேய்ச்சி—பெண் பேய், பேய்க்குணமுள்ள அரக்கியென்றதாம். உறங்குவான் போலே விஷம் மிகுந்த முலைப்பாலை ரஸ்யமாக்கிச் சுவைத்துண்டதன்றி அவள் உயிரையும் உறிஞ்சி அழித்தல் செய்தும் ஒன்றுமறியாதவன்போலிருந்தானென்றவாறு. இரணியனைத் துடைகளிலே வைத்துப் பிளந்ததினால் துடைகளை வர்ணிக்கும் தருணத்திலே அவ் விருத்தாந்தம் இடம் பெற்றது. பூதகியைத் துடைகளில் இருந்து ஸம்ஹரித்தான் ; இரணியனைத் துடைகளில் வைத்து ஸம்ஹரித்தான்.

குவிமுலையீர் : பேய்ச்சி முலை தளர்ந்ததும், உங்கள் முலை குவிந்ததும் கண்ணனிடத்திலுள்ள மனநிலையின் பலனுமென்றார் போலும். ரு.

6. மத்தக்களிற்றுவசுதேவர்தம்முடை
சித்தம்பிரியாததேவகிதன்வயிற்றில்
அத்தத்தின்பத்தாநாள்தோன்றியவச்சுதன்
முத்தமிருந்தவாகாணீரே முகிழ்நகையீர்வந்துகாணீரே. (28)

| | | | |
|---|---|---|---|
| மத்தம் களிற்று | மதம் பிடித்த (களிறு)யானைகளை யுடையவரான | அத்தத்தின் பத்தாம் நாள் | ஹஸ்த நக்ஷத்திரத்திற்குப் பத்தாவதான நக்ஷத்திரத்திலே |
| வசுதேவர் தம்முடை | வசுதேவருடைய | தோன்றிய | ஆவிர்பவித்த |
| சித்தம் பிரியாத | மனதிலிருந்து வேறுபடாத | அச்சுதன் | எம்பெருமானுடைய |
| தேவகி தன் | தேவகியினுடைய | முத்தம் | அங்க விசேஷமானது இருந்த ஆ காணீர்; |
| வயிற்றில் | உதரத்திலே | முகிழ் நகையீர் | புன்சிரிப்புடைய பெண்களே ! வந்து காணீர். |

'களிறு' 'வசுதேவர்' இவை தொகையாம் போது களிற்றுவசுதேவர் எனவாம்.

உடன் பிறந்தான் உயிரே பெரிதென்று நினையாமலும், மதித்த யானைகள் நிறைந்த மிகுந்த ஐச்வர்யமுடையவராய் வசுதேவரென்று பேர் பெற்ற பர்த்தாவின் அவ்வைச்வர்யத்தை அழித்தபோதும், அதனைப் பொருட்படுத்தாதும், எப்போழ்தும் அவரை விட்டுப் பிரியாமல் அவர் மனத்துக் கிணங்க நடந்துகொண்ட பதிவ்ரதாசிகாமணியான தேவகியின் திருவுதரத்திலே அவ்வைச்வர்யம் அழியாமைக்கு, தந்தக் களிறுபோன்ற அச்சுதன் அவதரித்தருளினா னென்றவாறு.

ரோஹிணீ நக்ஷத்திரத்தை நேர்படச் சொல்லாமல் அத்தத்தின் பத்தா நாளென்றது பாட்டின் அடியின் அமைப்புக்காக மாத்திரமன்றி, எம்பெருமானுடைய ஸகல ரூபங்களுக்கும் பொதுவாயுள்ள திருவோண நக்ஷத்திரத்தையும் கொள்வதற்காக. அர்ச்சையிலும் திருவோணத்திலும் இவ் வாழ்வாருக்கு ஈடுபாடு அதிகம். ஹஸ்தத்திலிருந்து பத்தாவது நக்ஷத்ரம் அச்சுதனுடையது என்றது கீழ் நோக்கி எண்ணிலும் உண்டென்றுரைத்தபடி. பத்து நாள் கண்ணனுக்கு உத்ஸவம் செய்பவர் ரோஹிணியில் தொடங்கி அத்தத்தில் முடிப்பர். திருவோணத்தை ப்ரதானமாகக் கொண்டு அத்தத்திற்குப் பின்னும் செய்வர். அன்றி, ஆழ்வார் மங்களாசாஸநபராகையாலே அவதார நக்ஷத்திரத்தை நேர்படக் கூறினால் யாரேனும் பகைவர் ஜன்மநக்ஷத்ரம் தெரிந்து எளிதில் இவனை யழிக்க அபிசாரம் செய்துவிடுவார்களென்று அஞ்சினநெஞ்சினராய் இப்படி மறைத்து அருளிச் செய்தாரெனவும் கருத்தாம். வசுதேவரையும் தேவகியையும் ப்ரஸ்தாவித்துக் கண்ணன் அவதரித்ததைச் சொன்னபோது, அவர்கள் இவனைக் கோகுலத்திற்கு அனுப்பிய காரணம் இவர் மனதில் நடமாடினதால் பிரேமையினாலே இவருக்கும் அச்சம் பிறக்கக் குறையில்லை.

முத்தமென்றது கண்ணனின் குறியை (ஆண் குறியை) என முன் பின் ஸந்தர்ப்பங்களை யொட்டிச் சொல்லவேண்டும். முத்தமாவது முத்து. அந்த அங்கத்தை ஒரு முத்தாக இங்கே ரூபணம் செய்தார். 'வட்டு நடுவே வளர்கின்ற மாணிக்கமொட்டு' (1. 10. 1.) என்று வேறுபடியிலும் ரூபணம் செய்யப் போகிறானன்றோ. அங்கே சொட்டுச் சொட்டென்னத் துளிக்கும் சிறுநீரை முத்து என்றதால் அம் முத்துக்களுள்ள அங்கத்தை முத்தமென்று றென்னலுமாம். அல்லது முத்தம் என்றது 'முக்தம்' 'விடப்பட்டது' என்பதாகும். பாதாதிகேசாந்தம் வர்ணிப்பவர்கள்கூடப் பெரும்பாலும் கூச்சமுற்று விட்டுவிடும் அங்கம் எதுவோ, அது என்றபடி. எதற்கு வாசகமாயுள்ள சொல்லை நேர்முறையில் சொல்வதில்லையோ அது என்னலும் கூடும். இப்படி மறைத்துச் சொல்லச் செய்தேயும் பெண்கள் புன்னகை செய்யத் தொடங்கினாரானதால் 'முகிழ் நகையீர்' என்றார் போலும். முகிழ்தல்-முகுளம் போலுண்டாதல். தெரியாத வண்ணம் சிரித்தபோது அவர்கள் வாய் இவ்வண்ண மிருந்தபடியாம். சு.

'மத்தக் களிற்று' என்று நந்தரை வர்ணித்ததும் அத்தம் பெருத்த குவலயாபீடமென்னும் மத்தக்களிறு நினைவுக்கு வர, அதைப்பற்றின சரிதத்தை அடுத்த பாசுரத்தில் அருளிச் செய்கிறார். அதன் மேல் அச் சரிதம் தொடங்கிக் கீழ் நோக்கி முறையே சில லீலைகளை இத் திருமொழியில் வர்ணித்தருளுவர்.

7. இருங்கைம்மதகளிறீர்க்கின்றவனை
பருங்கிப்பறித்துக்கொண்டோடுபரமன்றன்
நெருங்குபவளமும்நேர்நாணும்முத்தும்
மருங்குமிருந்தவாகாணீரே வாணுதலீர்வந்துகாணீரே. (29)

| | | | |
|---|---|---|---|
| இரு கை | பெரிய துதிக்கையையுடைய | மருங்கும் | திருஅரையும் |
| மதம் களிறு | மதமுள்ள (குவலயாபீடமென்னும்) யானையை | நெருங்கு | (திருவரையைச் சுற்றி) நெருங்கக் கோத்த |
| ஈர்க்கின்ற வனை | (துதிக்கையை நீட்டிக் கண்ணனைக் கொல்ல) ஏவின பாகனை | பவளமும் முத்தும் | பவளங்களும் முத்துக்களும். |
| பருங்கி | கொன்று (அதற்காக யானையின் கொம்பை) | நேர் நாணும் | அழகிய அரைநாணும் |
| பறித்து | பிடுங்கி | | இருந்த ஆ காணீர் ; |
| கொண்டு ஓடு பரமன் தன் | அதை எடுத்துக்கொண்டு மல்லரங்கத்தினுள் ஓடிச் சென்ற பரமனுடைய | வாள் நுதலீர் | ஒளி வீசும் நெற்றிக் கட்டுடைய பெண்களே ! வந்து காணீர். |

கண்ணன் மதுரையுட்புகுந்து சென்று மல்லரங்கத்தின் வாயிலிலே குவலயாபீடமென்னும் யானையின் மேலுள்ள பாகனைப் பார்த்து உள்ளே புக வழிவிடும்படி கேட்டபொழுது அவன் அதனைக் கண்ணன்மேல் ஏவ, எம்பெருமானும் அதனோடு வெகு நேரம் விளையாடி முடிவில் அதன் துதிக்

கையை இழுத்து அதனைச் சுழற்றி அதன் ஒரு கொம்பைப் பிடுங்கி அப்பாகனையும், மற்றொரு கொம்பைப் பிடுங்கிக்கொண்ட பலராமனோடு சேர்ந்து அங்கிருந்த விரோதிகளையும் நிரஸித்துவிட்டுக் கொம்பும் கையுமாகவே மல்லரங்கத்தினுட் புகுந்தானென்ற வரலாற்றை இங்கறிக.

இருங்கை-பெருங்கை. இருமை-பெருமை. பருங்கி என்பதற்கு, 'கொன்று' என்று பொருள் என்றனர். 'பறித்துப் பருங்கி' என்னாது, பருங்கிப் பறித்து என்றது அடி எதுகையின் அமைப்புக்காகவும், கோண்டோடு என்பதோடு கொம்புக்கு ஸம்பந்தம் தோற்றுவதற்காகவு மென்க. எ.

8. வந்தமதலைக்குழாத்தைவலிசெய்து
தந்தக்களிறுபோல்தானேவிளையாடும்
நந்தன்மதலைக்குநன்றுமழகிய
உந்தியிருந்தவாகாணீரே ஒளியிழையீர்வந்துகாணீரே. (30)

| | | | |
|---|---|---|---|
| வந்த | (விளையாட) வந்த | நந்தன் மதலைக்கு | நந்த குமாரனுக்கு |
| மதலை | பிள்ளைகளினுடைய | நன்றும் அழகிய | மிகவும் அழகான |
| குழாத்தை | கூட்டத்தை | உந்தி | திருநாபி |
| வலி செய்து | பலாத்கரித்து, அடக்கி | | இருந்த ஆ காணீர். |
| தந்தம் களிறு போல் | தந்தம் முளைத்துவரும் இளவானை போல | ஒளி யிழையீர் | ஒளியுள்ள ஆபரணங்களை அணிந்த பெண்களே! |
| தானே விளை யாடும் | தான் தனியாக விளையாடும் | | வந்து காணீர். |

'களிறு போல்தானே' என்று ஒன்றாக்கி, களிறு போலவே எனவுமுரைப்பர். தானே விளையாடுகையாவது இடைப் பெண்களோடே தான் விளையாடப் போகும் போது பிள்ளைகள் கூட வந்தால் அவர்களை அடக்கி அப்புறப்படுத்தி ஸர்வேச்வரனை தான் தனியே விளையாடுவதாம். அன்றி, ஆயிரம் பிள்ளைகள் ஒரு பக்கமும், தான் ஒரு பக்கமுமாக நின்று சில பாலக்ரீடைகள் செய்வதுமாம். அல்லது, அவர்களை பலாத்கரித்துவிட்ட பிறகு அவர்கள் சக்தியற்றும் விருப்ப மற்றும் வெறுமனே நிற்க, தானே அவர்களையழைத்து விளையாடுவதாம். நந்தன் மதலை. இவ்வாநந்த புத்ரனாலே நந்தர் நந்தானார். மதலைக்கு. இது 'இருந்த' என்றதோடு சேரும். உந்தியென்றதோடு சேரில் மதலையினுடைய எனப் பொருள் பெறும். அ.

9. அதிருங்கடல்நிறவண்ணனையாய்ச்சி
மதுரமுலையூட்டிவஞ்சித்துவைத்து
பதறப்படாமேபழந்தாம்பாலார்த்த
உதரமிருந்தவாகாணீரே ஒளிவளையீர்வந்துகாணீரே. (31)

| | |
|---|---|
| ஆய்ச்சி | இடைச்சியான யசோதையினால் |
| அதிரும் | நடுக்கமுற்ற(அலை வீசுகின்ற) |
| கடல் | சமுத்திரத்தினுடைய |
| நிறம் வண்ணனை | நிறமும் ஸ்வபாவமுமுடைய கண்ணனை |
| மதுரம் | திருடி உண்டதிலும் மதுரமான |
| முலை | முலைப்பாலை |
| ஊட்டி | உண்ணச் செய்து |
| வஞ்சித்து வைத்து | கட்டுவதற்காக முலையூட்டுவதாக அவன் தெரிந்து கொள்ளாதபடி ஏமாற்றி |
| பதறப் படாமே | அவன் தப்பி ஓடி விடாதபடி |
| பழ தாம்பால் | பழைய தாம்பினால் |
| ஆர்த்த | கட்டப்பட்டிருந்த் |
| உதரம் | (கண்ணனின்) வயிறு |
| | இருந்த ஆ காணீர்! |
| ஒளி வளையீர் | ஒளி மிகுந்த வளைகளையுடைய பெண்களே! |
| | வந்து காணீர். |

அதிரும் என்பது 'அதிர் கடல்' 'இரைக்கும் கருங்கடல்வண்ணன்' (திருவாய்—5. 3. 11.) என்ற விடங்களிற் போலே கடலுக்கு அடைமொழி. லீலையும் லாவண்ய ப்ரஸாரமுமுள்ள திருமேனி நிறம் அதிரும் கடல் நிறத் தோடொக்கும். அடங்காதவன் என்றதுமாம்.

பதறப்படாமே பழந்தாம்பால் ஆர்த்த:—அதாவது கண்ணனைக் கூப்பிடும்போது திடமானதொரு கயிற்றைக்கூட வைத்துக்கொண்டால் அவன் விரைந்தோடித் தப்பிவிடுவானோ என்று நினைத்து முதலில் அவனை வசப்படுத்த முலையூட்ட உட்கார்ந்துவிட்டாள். பிறகு அவளுக்கு அருகில் ஒரு பழந் தாம்பே இருந்தது. அந்த ஸமயம் கையிலகப்பட்டதைக் கொண்டு கட்டினா ளென்றது. அன்றி, உறுதியான கயிற்றினால் இறுகக்கட்டி உரலிலே பிணித்தபோது இவன் மரங்களிடையில் அகப்பட்டுக் கொண்டதை நினைத்து பயந்து பழந்தாம்பைக் கொண்டே கட்டினாளென்னலுமாம்.

ஸ்ரீபாகவதத்திலே இந்தச் சரிதம் கொஞ்சம் வேறுருவு பெற்றிருக் கிறது. அதாவது-யசோதை தயிர்க்கடையும்போது கண்ணன் வந்து மத்தைப் பிடித்துப் பாலுண்ண அழுதான். உடனே இரங்கி அவனையெடுத்து அவள் ஸ்தந்யம் ஊட்டி உள்ளே காய்ச்சும் பால் பொங்கி வருவதுணர்ந்து அதனைக் கீழே இறக்கி வைக்க ஓடினாள். அப்போது கண்ணன் கோபித்துக் கல்லினால் தயிர்ப் பானையை உடைத்து வெண்ணெயை எடுத்தோடி உரலின் மேல் இருந்து, தானுமுண்டு, தன் பக்கலில் வந்த குரங்குக்கும் கொடுத்தான். திரும்பி வந்த யசோதை இதைக் கண்டு சினம் கொண்டு கயிற்றையெடுத்துக் கட்டினள் என்றவாறு. அதைப் பின்பற்றி இங்கே பொருள் கூறவேண்டுமானால்—'அதிரும்' என்பதைக் கண்ணனுக்கு அடைமொழியாக்கிப் பாலுண்பதற்குப் பசியால் கதறும் என்றும், 'வஞ்சித்து' என்பதற்கு, காய்ச்சின பாலை இறக்குவதற்காக 'ஸுதூரவ்ருத்த ஸ்தூரஜஸ்ரீ' என்கிறபடி ஏதோ சொல்லி நடுவில் அவனை ஏமாற்றி என்றும், 'வைத்து' என்றதற்கு பாலை இறக்கி வைத்து, அல்லது அவன் செய்த குற்றத்திற்காக அவன்மீது கூர்த்துக் கோபம் மிகுந்து என்றும் பொருள் கொள்ளலாம். கண்ணன் அன்றைத் தினம் பிறந்த கன்றுக் குட்டிகளை வாலைப் பிடித்திழுத்து விளையாடி

னதற்காகக் கட்டுண்டதாக ஸ்ரீவிஷ்ணு புராணத்திலிருப்பதால் அது போல் மயர்வற மதிநல மருளப்பெற்ற ஆழ்வார் அனுபவம் முதலுரைத்தபடியே உசிதமாகும். 2. 1. 5, 2. 10. 5, பாசுரங்களிற் சொல்லுகிறபடி பெருங் கள்ளனை கண்ணன் பலகால் பலபடியிலே கட்டுண்டிருப்பானாகையால் எல்லாம் உண்மையாம். கூ.

இப்படி திருவுதரத்தை அனுபவித்துவிட்டு, இனி அவன் இறுக்கக் கட்டுண்ட போது செய்ததை வர்ணித்து அவன் திருமார்பின் நேர்த்தியி லீடுபடுகிறார்.

10. பெருமாவுரலிற்பிணிப்புண்டிருந்து * அங்
கிருமாமருதமிறுத்தவிப்பிள்ளை
குருமாமணிப்பூண்குலாவித்திகழும்
திருமார்விருந்தவாகாணீரே சேயிழையீர்வந்துகாணீரே. (32)

| | | | |
|---|---|---|---|
| பெரு மா உரலில் | மிகவும் பெரிதான உரலிலே | இ பிள்ளை | இந்தப் பிள்ளையின் |
| | | குரு | கனத்ததான |
| | | மா | பெரிய |
| பிணிப்பு உண்டு | கட்டுதலைப் பெற்று | மணி பூண் | ரத்னாபரணமானது |
| | | குலாவி | ஒளியோடு அசைந்து |
| இருந்து | தாய் அப்புறம் போகும் வரையில் அசையாம லிருந்து பிறகு | திகழும் | ப்ரகாசிக்கும் |
| | | திருமார்வு | ஸ்ரீவக்ஷஸ்தலமானது இருந்த ஆ காணீர்; |
| அங்கு | அங்கே வெளியிலே | | |
| இரு மா மருதம் | இரண்டு பெரிய மருத மரங்களை | சே இழையீர் | சிவந்த ஆபரணங்களை அணிந்த பெண்களே! |
| இறுத்த | முறித்தவனை | | வந்து காணீர். |

குரு என்று மேன்மைக்கும் ப்ரகாசத்திற்கும் பெயருமாம். மணிப் பூணாவது ஸ்ரீகௌஸ்துவம் போல சிறந்து விளங்கும் ரத்ன மென்றார் திருவாய்மொழிப் பிள்ளை. ஸ்ரீகௌஸ்துவமாகிற ஆபரணமென்றார் மணவாள மாமுனிகள். திருமார்வு என்பதற்கு திருவெனப்படும் பெரிய பிராட்டியா ருடன் கூடிய மார்பு என்றும் பொருள் தரும். நாரதமஹர்ஷியினாலே சபிக்கப் பட்டு யமளார்ஜுனமாக வந்திருந்தவரும், நளகூபரன், மணிக்ரீவன் எனப் படும் குபேரபுத்ரர்களுமான ருத்ரனின் தொண்டர்களுக்குச் சாபம் நீக்கின வரலாற்றை இங்கு அருளிச் செய்தபடி. அசரங்களையும் அத்புதமாகச் சரமாக்கவல்ல இம் மாயனை அசையாமல் நிற்கச் செய்ய நினைத்தாள் அசோதை. ம.

11. நாள்களோர்நாலைந்துதிங்களளவிலே
தாளைநிமிர்த்துச்சகடத்தைச்சாடிப்போய்
வாள்கொள்வளையெயிற்றாருயிர்வவ்வினான்
தோள்களிருந்தவாகாணீரே சுரிகுழலீர்வந்துகாணீரே. (33)

| | | | |
|---|---|---|---|
| நான்கள் | நான்களாயிருந்த | வளை எயிற்றர் | வளைந்த கோரப் பற்களை யுடைய கம்ஸன், சிசுபாலன், தந்தவக்த்ரன், விதூரதன் முதலான அசுரர்களுடைய |
| ஓர் நாலு ஐந்து திங்கள் அளவிலே | ஒரு நாலு அல்லது ஐந்து மாதங்களுக்குள்ளேயே | உயிர் | உயிர்களை |
| தாளை | திருவடியை | வவ்விஞன் | வாரிக்கொண்டவனை கண்ணனுடைய |
| நிமிர்த்து | தூக்கி | | தோள்கள் இருந்த ஆ காணீர்; |
| சகடத்தை | சகடாசுரனை | சுரிகுழலீர் | சுருண்ட கூந்தலையுடைய பெண்களே! |
| சாடி | உதைத்து முரித்து | | வந்து காணீர். |
| போய் | (யுக்தவயதிலே மதுரைக்கு) சென்ற பிறகு | | |
| வாள் கோள் | கத்தியை எடுத்துக் கொண்டவர்களான | | |

நாள்கள் :—கண்ணனை யனுபவிக்கும் ஆயருக்கு நாலைந்து மாதங்களும் நாலைந்து நாட்களாகவே தோன்றின. சகடமாவது வண்டி. வண்டியின் கீழே தொட்டிலைத் தொங்கவிட்டு அதிலே கண்ணனை விட்டிருந்தனர். கம்ஸனால் ஏவப்பட்டு ஓர் அசுரன் அப்பொழுது அந்தச் சகடத்திலே புக்கு ஸமயம் பார்த்துக் கண்ணனைக் கொல்ல முயன்றான். அதை யறிந்த கண்ணன் பாலுண்ண அழுது உதைத்துக் கொள்பவன் போல் காலினால் சகடத்தை, அசுரனை அழிப்பதற்காக உதைத்தான். அவ்வளவிலே சகடம் கீழ்மேலாகக் குப்புறக் கவிழ்ந்து அசுரனும் அழிந்தானென்கிற விருத்தாந்தம் இங்கே சொல்லப்பட்டது. இனி 'மல்லாண்டதிண்டோள்' என முன் சொன்னமாதிரி தோள்களை யனுபவிப்பதற்குத் தகுந்த லீலையை உரைத்தருளுகிறார். வாள் என்பது வேறு ஆயுதங்களுக்கும் உபலக்ஷணம். வாள்கோள் என்றதைக் கோரப் பல்லுக்கு விசேஷணமாக்கில், 'ஒளி கொண்ட' என்று பொருளாம். கோகுலத்திற்குக் கம்ஸனால் ஏவப்பட்டு வந்தவர்களெல்லாம் தம் தன்மையை மாற்றி வேற்றுரு கொண்டு வந்ததால் அவர்களை வளையெயிற்றர் என்னாது மதுரைபோய் கொல்லப்பட்டவர்களை அப்படியருளிச் செய்தார். 'வளையெயிற்று ஆர் உயிர்' என்றும் பிரிக்கலாம். எயிறு உடைய அரிய ஜீவனை எனப் பொருளாகும். தந்தவக்த்ரனுக்கு வளையெயிறு இருப்பது திண்ணமாகையாலே 'வளையெயிற்றாருயிர்' என்று அவனைச் சேர்ந்தவர்களைச் சொன்னபடியென்றும் கொள்ளலாம். கண்ணனுடைய விரோதிகளிலே சிசுபாலனும் தந்தவக்த்ரனுமே ப்ரதானமானவர்கள். அவர்கள் உயிர் எம்பெருமானிடம் சேர்ந்ததும் ப்ரஸித்தம். உயிராவது ஆத்மாவும் ப்ராணனுமாம். கம்ஸவிதூரதாதிகளைச் சொல்லும்போது, "தம்வஜ்ரவாணிம் விஅறஷூாஶ", "விஉூஶஷஹ தஜிஸ்ரா ஸ்ராதரூஶொகவஙிவூஹ: । குமூ்உஷஹிஅஉஉஹூாழ" என்று அவர்கள் கத்தியெடுத்துப் போர் புரிந்ததாக ஸ்ரீபாகவதம் கூறுகிறது.

இங்கே 'எயிறு ஆர் உயிர்' எனப் பிரித்து எயிறு எனக் கோரப் பல்லைச் சொல்லும். பதம் இலக்கணையாலே அதையுள்ள பூதனையைச் சொல்லுகிறதெனக் கருதி, அவளுடைய அழிக்கவரிய உயிரை வவ்வினது கூறப்

பட்டதென்று திருவாய்மொழிப்பிள்ளை யுரைத்தார். எயிறு உள்ளவனை நேராகச் சொல்வதானால் ‘எயிற்றியாருயிர்’ எனவேண்டுமாதலால் ‘எயிறு’ என்றே பிரித்தது. அப்போது சாடிப்போய் என்றதொரு முழுச்சொல்லாம். சாடிவிட்டு எனப் பொருள். சகடாசுரவதத்திற்கு முன் நடந்த விருத்தாந்தத்தை, ‘சாடிப்போய்’ என்று அதற்குப் பிறகு நடந்ததாகக் கூறுவது பொருந்தாதே என அவர் சங்கித்துக்கொண்டு யுகபேதாநிப்ராக்ரியையாலே நிர்வாஹம் செய்தார். “மாறி யருளிச் செய்தது க்ரம விவக்ஷயா வன்று. ஹர்ஷாதிசயத்தாலே இன்னபடி சொல்லவேணு மென்றறியாமை” என்று இங்கு மணவாளமாமுனியுமுரைத்தார். ‘சொல்லிலுள்ள பௌர்வாபர்யத்தைப் பொருளிலே ஏறிட்டாவது, வேறுவிதமாகவாவது உத்தாகாலோக்தியை நிர்வஹிக்கலாம். இந்தப் ப்ரகரணத்திலே முன் முன் நடந்ததைப் பின்னே பின்னே சொல்வதாலும், உயிர் வவ்வினனென்கிற ஸ்வாரஸ்யத்தாலும் பூதனாவதத்தைச் சொல்வது யுக்தம்’ என்று திருவாய்மொழிப்பிள்ளைக்குத் திருவுள்ளமிருக்கலாம். பலவிடங்களிலே உத்தரகாலமென்னும் பொருளைக் கொள்ளாமல் இரண்டு செயல்களும் ஒருவனுடையவையே என்பதை மாத்திரம் நினைத்தும் இப்படி ஆழ்வார்கள் அருளிச்செய்வது ப்ரஸித்தம். சகடாசுரவதத்திற்குப் பிறகு பூதனாவதமென்று கூட ஹரிவம்சத்தில் காண்கிறது. ஆயினும் ப்ரசித்தமான ரீதியிலே முன்பின்னாகச் சொன்னது பொருந்துவதற்காகவும், ‘எயிற்றூர்’ என்பது சரியாக வேண்டுவதற்காகவும், ஏற்கனவே பூதனாவதத்தைச் சொல்லியாய்விட்டதாலும் கம்ஸமல்லாதிகளின் வதத்தை இங்குத் திருவுளம் கொண்டிருக்கலாமென நினைத்தோம். இப்படிச் சொல்வதில் தமக்கு நோக்குளதென்பதை, திருவாய்மொழிப்பிள்ளையைப் பின்பற்றும் மணவாளமாமுனி இங்கு தெளிவாக்காமலிருந்தாலும், இத்திருமொழிமுடிவிலே மறைமுகமாக வெளியிட்டிருப்பதால் நினைத்த வர்த்தம் நிலைபெற்றது. அதெங்ஙனமெனில்—“மறங்கொளிரணியன் மார்வை முன் கீண்டான்...சகடத்தைச் சாடிப்போய் வாள்கொள்வளையெயிற்றுருயிர் வவ்வினன் இத்தியாதிகளாலே இவனுக்கு நிரூபகமாக வருளிச்செய்த அவதாராந்தரசேஷ்டிதங்களும், இவ்வவதாரம் தன்னில் உத்தரகால சேஷ்டிதங்களும்” என்றாரிறே. பிறங்கியபேயச்சி என்றவடியை விட்டதால், ‘சாடிப்போய்’ என்ற பதஸ்வாரஸ்யம் முதலானவற்றிற்கு முரண்படாதபடி உத்தரகாலசேஷ்டிதங்களே சொல்லப்படவேண்டுமென்று இங்கே கண்டோக்தமானபடி யல்லவா? க்ருஷ்ணாவதாரவர்ணநஸமயத்திலே அவதாராந்தர வ்ருத்தாந்தத்தைத் திருத்துடையின் வர்ணனத்துக்குத் தகுதியுற்றதென்று சொல்லுமிவர் கோகுல வ்ருத்தாந்த ப்ரஸ்தாவ ஸமயத்திலே திருத்தோள்களின் வர்ணனத்துக்குத் தகுந்தபடி உத்தரகால வ்ருத்தத்தையுமெடுத்துச் சொல்வதில் குறையொன்றுமில்லை யென்றன்றோ ஜீயர் கருத்து. இப்படி மேலடிகளின் பொருளானபோது, முன்னடிகளிற் சொன்ன சகடாசுர வதமொன்றே, முன்பாட்டிற் சொன்ன லீலைக்கு முன் நடந்ததாக இங்கே கூறப்படவேண்டும் விஷமாகக் கருதப்பட்டதென்று கொள்க.

*சுரிகுழலீர் :—கண்ணனுடைய தோள்களில் தொங்கிவரும் சுருண்ட கேசத்தைக் கண்டு அனுபவித்துப் பெண்களையு மிப்படி வர்ணித்தார் போலும். ௰௧.*

*திருத்தோள்களி னருகிலுள்ள திருக்கைத்தலங்களை யனுபவிக்கிறார்—*

12. மைத்தடங்கண்ணியசோதைவளர்க்கின்ற
செய்த்தலைநீலநிறத்துச்சிறுப்பிள்ளை
நெய்த்தலைநேமியுஞ்சங்கும்நிலாவிய
கைத்தலங்கள்வந்துகாணீரே கனங்குழையீர்வந்துகாணீரே. (34)

| | | | |
|---|---|---|---|
| மை | *மையிட்ட* | நெய் | *கூர்மையான* |
| தட | *விசாலமான* | தலை | *முனைபாகத்தையுடைய* |
| கண்ணி | *கண்களையுடைய* | நேமியும் | *சக்கரமும்* |
| அசோதை | *யசோதையினாலே* | சங்கும் | *சங்கமும்* |
| வளர்க்கின்ற | *வளர்க்கப்பட்டவனும்* | நிலாவிய | *பொருந்தி ஒளி செய்த* |
| செய் தலை | *செய்கைகளாற் சிறந்தவனும்* | கை தலங்கள் | *(மேலுள்ள இரண்டு) உள்ளங் கைகளை* |
| நீலநிறத்து | *நீலவர்ணனுமான (அல்லது)* | | |
| செய்த்தலை | *ஸாரக்ஷேத்ரத்திலே (வளர்ந்துள்ள)* | | *வந்து காணீர் :* |
| நீலம் | *நீலோத்பலம் போன்ற* | கனம் குழையீர் | *பொன்னாற் செய்த குண்டலங்களை யணிந்த பெண்களே !* |
| நிறத்து | *நிறத்தையுடையனுமான* | | |
| சிறு பிள்ளை | *சிறிய பிள்ளையினுடைய* | | *வந்து காணீர்.* |

*செய்தலை செய்யும் தலைவன். ஆகவே இவன் திருவாழி முதலியவற்றைத் தரிப்பதாம். அல்லது, "செய்த்தலை யெழுநாற்றுப்போல்" (3. 7. 9.) என்கிற விடத்திற் போல செய் என்பது வயல், தலை யென்பது ஏழாம் வேற்றுமை யுருபு. செய்தலை = தலைசெய்யென தலைகீழாக்கி ச்ரேஷ்டமான வயலிலுண்டான நீலோத்பலம் போன்ற நிறமுள்ள என்று முரை செய்வர். திருப்பவளமும், திருவடித் தாமரைகளும், செந்தாமரைக் கண்களும், செய்யவளான பிராட்டியும், பல திருவாபரணங்களும், நெய்த்தலை நேமியும், கமலம் போன்ற கைத்தலங்களும் கலந்து மின்னல் பரந்த மேகம் போல் இலங்க வேண்டும் எம்பெருமான் திருமேனி மிக்க நீல நிறம் கொண்டிருப்பது மைத்தடங்கண்ணி வளர்ப்பதாலாகும். கருங்குவளை தன்னை வளர்க்கும் செயின் செழுமையினால் மிகக் கருமை பெறுவது போல் கண்ணனும் மைத்தடங்கண்ணி போரப்பார்த்து வளர்த்ததால் அந்நிறம் பெற்றான் போலும்.*

நெய்த்தலை :—*நெய்யுண்ட கையினாலே நேமியை அவன் எடுத்த போது, உலகிலுள்ள ஆயுதங்களைப் போல் அவன் சக்கரமும் நெய்ப்பூச்சு கொண்டதாயிற்று எனவுமாம். இப்படி திருமேனி நீலமாயிருப்பதாலே நேமி முதலியவற்றிற்குச் சிறப்புண்டாயிற்றென இவ்வடிகளில் கருதப்பட்டதாம்.*

*கம்ஸவதம் வரையில் சதுர்புஜ ரூபத்தை மறைத்து இரண்டு புஜங்களோடு விளங்கினதாக ஸ்ரீகீதாபாஷ்யத்தில் அருளிச் செய்திருக்க இங்கு சங்க சக்கர புஜங்களைக் கண்டு களித்ததாகச் சொல்வது எங்ஙனே தகுமென்னில்-சங்கு சக்கரங்களோடு கூடிய கைத்தலங்களை யசோதைப்*

பிராட்டி அனுபவித்ததாக இங்கே கூறவில்லை. அர்ச்சையிலீடுபட்ட ஆழ்வாரன்றோ இப்போது இவ்வண்ண மனுபவிக்கிறார். யசோதை யனுபவித்த தாகவும் சொல்லக்கூடும். வாயுள் வையகம் காண்பித்தவனாயிற்றே இவன். ஆக அப்படி சில ஸமயங்களில் அவ்விரண்டு புஜங்களையும் காண்பிப்பதில் என்னத் தட்டு? இப்படியே அடுத்த பாசுரமும் பிறந்ததாகும்.

மைத்தடங் கண்ணி என்பதால் எப்போதும் மையணிவது சொன்னதன்றி, ப்ரஸவித்த ஸ்திரீகள் ஆரோக்யத்திற்காகச் சில மாதங்கள் வரையில் அவச்யமாய் மையணிந்து கொள்வது கருதப்பட்டதாம். இதனால் ‘நாலைந்து திங்கள்’ என்று முன் சொல்லப்பட்ட காலத்திற்கு முன்னுள்ள காலம் இங்கே குறித்ததாகும். ஆக பூர்வ பூர்வ ஸந்தர்ப்பம் சொல்லும் ப்ரகாரணத்திற்கேற்பவும் இங்கே இப்பாசுரம் அமையத் தட்டில்லை. ௰௨

13. வண்டமர்பூங்குழலாய்ச்சிமகனை
கொண்டுவளர்க்கின்றகோவலக்குட்டற்கு
அண்டமும்நாடுமடங்கவிழுங்கிய
கண்டமிருந்தவாகாணீரே காரிகையீர்வந்துகாணீரே. (35)

| | | | |
|---|---|---|---|
| வண்டு | ‘ வண்டுகள் | குட்டற்கு | குழந்தையான கண்ணனுக்கு |
| அமர் | அமர்ந்த | அண்டமும் | ப்ரம்மாண்டத்தையும் |
| பூ | புஷ்பங்களுள்ள | | |
| குழல் | கேசபாசமுடையளான | நாடும் | அண்டாந்தர கோசரமான உலகங்களையும் |
| ஆய்ச்சி | இடைச்சியான யசோதையினுடைய | அடங்க | அடங்கும்படி |
| மகனைக் கொண்டு | மகன் இவன் ’ என்று நினைத்து | விழுங்கிய | சேர்த்து முழுங்கின |
| வளர்க்கின்ற கோவலர் | அவனை வளர்த்து வரும் நந்தர் முதலான இடையர்களுடைய | கண்டம் | திருக்கழுத்து |
| | | | இருந்த ஆ காணீர் ; |
| | | காரிகையீர் | அழகுடைய பெண்களே ! வந்து காணீர். |

இங்கே மகனைக் கொண்டு இத்யாதியால் யசோதையின் மகனிவன் என்று நினைத்து நந்தகோபர் முதலான புருஷர்கள் எடுத்து வளர்த்த தசையைச் சொல்வதால் இப் பாசுரம் முன் பாசுரத்திற் சொன்னதற்கு முந்திய வ்ருத்தாந்தத்தைக் கூறுவதாகும். ஆய்ச்சியால் தன் மகனாக ஸ்வீகரித்து வளர்க்கப்பட்ட நந்தகோபன்பிள்ளைக்கு என்றும் உரை செய்வர். அப்போது முன் பாசுரத்திற்போல் அவள் வளர்த்ததும், முதன் முதல் தன் பக்கலில் குழந்தை விடப்பட்டபோது தன் மகனாக அவள் நினைத்துக்கொண்டதும் சொல்லப்படலாம்.

கோவலக்குட்டற்கு: இது (3. 6. 3.) ல் ‘வைகுந்தக்குட்டன்’, ‘கோவலக்குட்டன்’ என்றது போலாகும்.

அடங்க விழுங்கிய :—கழுத்து எல்லாவற்றையும் ஒரே கபளமாக்கி ஒரே ஸமயத்தில் விழுங்கினபோது, அனேக கபளங்கள் தங்கக் கூடிய வயிற்றிலே அவை அடங்குவதில் என்ன வியப்பென்று இதன் கருத்து. ‘அண்டத்தை

*அமுக்கி உண்டையாக்கி விழுங்கினானல்ல. அப்படியாகில் நாடு நசித்துவிடுமே அதுவும் அப்படியே இருந்ததே' என்று தெளிவிக்க* நாடும் *என்றதாம். அடங்க என்பதற்கு 'எல்லாம்' என்றும் பொருளாம். ஆக அண்டாவரணங் களும் இங்கே குறிக்கப்படுகின்றன வென்றபடியாம். ௰௩.*

*இப்படி புருஷர்கள் எடுத்து வளர்ப்பதற்கு முன் பெண்கள் கொண்டா டினமையை யருளிச்செய்கிறார் :—*

14\. எந்தொண்டைவாய்ச்சிங்கம்வாவென்றெடுத்துக்கொண்டு
அந்தொண்டைவாயமுதாதரித்தாய்ச்சியர்
தந்தொண்டைவாயாற்றருக்கிப்பருகும் * இச்
செந்தொண்டைவாய்வந்துகாணீரே சேயிழையீர்வந்துகாணீரே. (36)

| | |
|---|---|
| எம் | *'எங்களுடைய* |
| தொண்டை வாய் சிங்கம் | *கோவைப் பழம் போன்ற திருப்பவளத்தையுடைய சிங்கமே !* |
| வா | *எங்களிடம் வா'* |
| என்று எடுத்துக் கொண்டு | *என்றழைத்துக் கைகளால் மேலெடுத்துக் கொள்ளப்பட்டு* |
| ஆய்ச்சியர் | *கோபஸ்திரீகளால்* |
| அம் | *அழகிய (இனியதான)* |
| தொண்டை | *குரலோசையையுடைய* |
| வாய் | *திருமுகத்திலுள்ள* |
| அமுது | *அமிருதத்தை* |
| ஆதரித்து | *ஆசைப்பட்டு* |

| | |
|---|---|
| தம் | *தங்களுடைய* |
| தொண்டை வாயால் | *கீழ்த்தொண்டை வாயினால்* |
| தருக்கி | *களித்து (அல்லது) கர்வப் பட்டு* |
| பருகும் | *பானம் செய்யப்பட்ட* |
| இ | *இந்த* |
| செம் | *சிவந்த* |
| தொண்டை வாயை | *கோவைக் கனி போன்ற கண்ணனுடைய அதரத்தை வந்து காணீர் ;* |
| சே இழையீர் | *சிவந்த ஆபரணங்களை அணிந்த பெண்களே ! வந்து காணீர்.* |

*'என் தொண்டை' எனவும் பாடமுண்டாம். அப்போது சேர்த்துச் சொல்லில் என்றொண்டை எனவாம். நாலு அடிகளிலும்* தொண்டைவாயாவது *கோவை போன்ற அதரமே யென்பதுமாம்.* செம் : *அவர்கள் எல்லோரும் எவ்வளவு பருகினாலும் அதற்கு இயற்கையிலுள்ள சிவப்பு மாறுவதில்லை என்றபடி. ௰௪.*

15\. நோக்கியசோதைநுணுக்கியமஞ்சளால்
நாக்குவழித்துநீராட்டுமிந்நம்பிக்கு
வாக்கும்நயனமும்வாயும்முறுவலும்
மூக்குமிருந்தவாகாணீரே மொய்குழலீர்வந்துகாணீரே. (37)

| | |
|---|---|
| அசோதை | *யசோதையினால்* |
| நோக்கி | *நாக்குக்கும் மஞ்சளுக்கு முள்ள நிலைமையைக் கவனித்து* |
| நுணுக்கிய மஞ்சளால் | *மிருதுவாகும்படி சிறியதாக் கப்பட்ட மஞ்சளால்* |
| நாக்கு வழித்து | *நாக்கிலுள்ள அழுக்கை நீக்கித் தள்ளி* |
| நீராட்டும் | *திருமஞ்ஜனம் செய்து வைக்கப்பட்ட* |

| | |
|---|---|
| இ நம்பிக்கு | *இந்த குணபூர்ணனுக்கு* |
| வாக்கும் | *வாக்வ்யாபாரமும்* |
| நயனமும் | *திருக்கண் கடாக்ஷமும்* |
| வாயும் | *அதரஸ்புரணமும்* |
| முறுவலும் | *புன் சிரிப்பும்* |
| மூக்கும் | *திரு மூக்கும் இருந்த ஆ காணீர் ;* |
| மொய் குழலீர் | *அடர்ந்த கூந்தலுள்ளவர்களே ! வந்து காணீர்.* |

'வாக்கு' என்பதற்கு சொல் என்றும், வாகிந்திரியமென்றும், பின் பார்வையென்றும் பல பொருளுண்டு. இங்கே காணச் சொல்லும் வாக்கு பின் பார்வையுமாகும். அதனால் காலில் விட்டுக்கொண்டு நீராட்டும்போது நாக்கை வழிக்கும் தருணத்திலே நீராட்டுகிறவரின் முகம் கொஞ்சம் பின் பக்கத்திலிருப்பதால் குழந்தை அவரை அவ்வண்ணம் பார்ப்பது சொன்ன தாகும். அப்போது அவ்வித பார்வைக்குத் தகுந்தபடி கண்கள் அமைந் திருப்பதைக் கருதி நயனமும் என்றருளினதாம். வாய் என்றதால் நாக்கு வழிக்கக் காணும் முகத்தின் உட்புறத்தையும் கருதினபடியாம். ௰௫.

இதற்கு மேலே வஸுதேவர் மகனை யெடுத்துவந்து திருவாய்ப்பாடியிற் சேர்த்தமையாகிய முந்திய விருத்தாந்தத்தை யருளிச் செய்கிறார்—.

16. விண்கோளமரர்கள்வேதனைதீரமுன்
மண்கோள்வசுதேவர்தம்மகனாய்வந்து
திண்கோளசுரரைத்தேயவளர்கின்றான்
கண்களிருந்தவாகாணீரே கனவளையீர்வந்துகாணீரே. (38)

| | | | |
|---|---|---|---|
| விண் கோள் | தேவலோகங்களைக் கொண்ட | திண் கோள் | திடம் கொண்ட |
| அமரர்கள் | தேவர்களுடைய | அசுரர் | கம்ஸாதிகள் |
| வேதனை | துக்கானுபவம் | தேய | அழியும்படி |
| தீர | தீர்ந்துவிடும்படி | வளர் கின்றான் | வளர்ந்து வராநின்ற கண் ணனுடைய |
| முன் | முதலிலே | | கண்கள் இருந்த ஆ காணீர்; |
| மண் கோள் | பூலோகம் வந்து சேர்ந்த | கனம் வளையீர் | கநகமயமான வளைகள் தரித்தவர்களே! |
| வசுதேவர் தம் | வசுதேவருடைய | | வந்து காணீர். |
| மகன் ஆய் | மகனாகவாய் | | |
| வந்து | திருவாய்ப்பாடிக்கும் வந்து சேர்ந்து | | |

விண்—வேதனை:—விண்ணுலகத்தினதிகாரமும் போகமும் நம்மை விட்டு விலகிவிடுகிறதே; அமரத்வமும் அழியும்படியாயிற்றே என்ற வேதனை சொன்னபடி. மண்கோள்:—தேவனாய் வஸுவாயிருந்தவர் மண்ணுலகம் வந்ததற்கு முக்ய ப்ரயோஜனம் எம்பெருமானை மகனாகப் பெற்றதாம். முன் என்பது மகனாய் என்பதோடு சேரும்.

திண்—தேய:—'பிறந்தவுடன் குழந்தைப் பர்வத்திலேயே அவனைக் கொன்றுவிட்டு விளங்குவோமென்று பார்த்தால் அவன் எங்கேயோ ஒளித்து வளர்கின்றானே. எப்போது வந்து என் செய்வனோ' என்று கிலி பிடித்து அசுரர் க்ஷீணித்தனரென்றபடி.

கண்கள்:—முன் பாசுரத்திலே நயனமென்றது ஒருவித அமைப்பை மாத்திரம். பாதாதி கேசாந்த வர்ணாக்ரமத்தாலே கண்களின் கீழ்ப் பாகத்

தைப் பற்றினதுமாம். அல்லது உள், வெளி, என்றவாறு ஏதேனுமொரு பேதத்தைக் கருதியுமாம். இப்படி வடமொழியிலும் பிரித்து வர்ணிப்பதை மஹாபாராதாதிகளிலே கண்டுளோம். அன்றி, புண்டரீகாக்ஷனுக்கு எந்த அவதாரத்திலும் பிராட்டியைப் போல் பிரியாதபடியுள்ளது கண்வடிவென்று அதன் சிறப்பு தோற்றக் கண்களைத் தனித்துமனுபவிப்பதாம். அசுரரை என்ற விடத்தில் வேற்றுமைமயக்கு. அல்லது, அசுரர் என்றே பதமாய் ஐ என்பது (அர்த்தமிராமற் சேர்த்த) சாரியை யாம். மிசு.

வசுதேவர் குழந்தையைக் கோகுலத்திற்குக் கொண்டு சென்றதற்கு முந்திய வ்ருத்தத்தை யருளிச்செய்கிறார்—

17. பருவம்நிரம்பாமே பாரேல்லாமுய்ய
திருவின்வடிவொக்கும் தேவகிபெற்ற
உருவுகரிய வொளிமணிவண்ணன்
புருவமிருந்தவாகாணீரே பூண்முலையீர்வந்துகாணீரே. (39)

| | | | |
|---|---|---|---|
| திருவின் | பெரிய பிராட்டியாரின் | பெற்ற | பெறப்பட்டவனும், |
| வடிவு | ஸ்வபாவத்தை | உருவு கரிய | உருவில் கறுத்ததாயும் |
| ஒக்கும் | ஒத்திருக்கும் | ஒளி | ப்ரகாசமுடையதுமான |
| தேவகி | தேவகியினால் | மணி | மணியினுடைய |
| பருவம் | யுக்த வயது | வண்ணன் | விதமுள்ளவனுமான கண்ணனுடைய |
| நிரம்பாமே | நிரம்புவதற்குள்ளேயே | | புருவம் இருந்த ஆ காணீர். |
| பார் எல்லாம் | பூமி முழுவதும், பூமியிலுள்ள சேதனர்கள் எல்லோரும் | பூண் முலையீர் | ஆபரணம் அணிந்த ஸ்தனமுடைய பெண்களே ! |
| உய்ய | உஜ்ஜீவிப்பதற்காக | | வந்து காணீர், |

யுக்கவயது வந்தபிறகு வெளியில் ஸஞ்சாரம் செய்து உலகினை உய்வித்தான் ஸ்ரீராமன். பிறந்தவுடனேயே வேறு இடங்களில் இருந்து ஆபாலகோபாலம் உஜ்ஜீவிக்கச் செய்தான் ஸ்ரீகிருஷ்ணன். பார் - பூமி. அது ஒன்றாயினும் எல்லாம் என்று அதனுடைய (அசேஷத்வம்) முழுமையைச் சொன்னபடி. “ க்ருத்ஸ்நா வஸுந்தரா ” என்றவாறு. ஆக அதிலுள்ள சராசரங்களான சேதனர்கள் எல்லோரும் கருதப்பட்டனராயினர். உய்ய :—இப்படி செய்வித்தவள் தேவகியே. எப்பொழுதுமே எம்பெருமானை ஏழை ஜனங்களைக் காக்க எழுந்தருளச்செய்வது பிராட்டிக்கு ஸ்வபாவம். அன்றி, ஸீதைப் பிராட்டி எம்பெருமானைப் பிரிந்து அசோக வனத்திலே சிறைப்பட்டிருந்து ஸர்வஜனங்களுக்கும் யோகக்ஷேமத்திற்கு வழி தேடினாள். இவளும் பிறந்த குழந்தையான பெருமானைப் பிரிந்து, தான் சிறையில் அடைபட்டிருப்பதையும் பொறுத்து கோகுலத்திற்கு அனுப்பியதாலே பாரெல்லாம் உய்வித்தவளானாள். பிறந்தவளவிலேயே கம்ஸவதம் செய்துவிடும்படி அவள் கேட்டுக்கொண்டால் இங்ஙனம் நடைபெற்றிராதல்லவா. பிறந்த குழந்தையை இவர்கள் கம்ஸனிடம் கொண்டு சேர்க்கவேண்டுமே. அப்போது அவன் தன் கையினாலெடுத்து வலிவாகச் சுழற்றி யழிக்க முயலும் தருணத்திலேயே அவன்

உயிரை அபஹரிக்கும்படி இவள் வேண்டிக்கொள்ளலாமே. ஆக இப்படி அனுகூலம் செய்வதையே உண்மையில் உட்கருதி, 'கம்ஸன் குழந்தையைக் கொன்றுவிடுவான்' என்று தான் பயப்படுவதாக நடித்தனள் போலும்.

அவதாரந்தோறும் எம்பெருமானோடு பிராட்டி வருகிறதுபோல், அவனைப்பெற மண்கோள் வசுதேவர் முன் ஸுதபஸ்ஸாயும் கச்யபராயுமிருந்த போது இவள் ப்ருச்னியாயும், அதி(தி)தியாயுமிருந்து இப்போது தேவகியாயும் பத்நியானதை நினைத்தும் திருவின் வடிவொக்கு மென்றார். இப்போது வடிவாவது ஸ்வபாவம். 'யஸ்யா வீக்ஷ்ய முகம் ததிங்கித பராதீநோ விதத்தே அகிலம்' என்கிறபடி பிராட்டியின் புருவத்தின் அசைவிலே நிச்சலும் நோக்கமுள்ள எம்பெருமான், அவ்வித புருவத்தைப் பெற வாசைப்பட்டு, அவளிடம் தான் நேரப் பிறக்க முடியாமையினால் அவள் வடிவொக்கும் தேவகிப் பிராட்டியாருக்குப் பிறந்து அப்புருவத்தின் அழகைப் பெற்றான்போலும். இங்கு வடிவாவது அழகு. யள.

மத்தக்களிற்று என்று அவதாரத்தைச் சொன்னபோது, குவலயாபீட விருத்தாந்தம் நினைவுக்கு வர, இருங்கைம் மதகளிறு என்று தொடங்கி அது முதற்கொண்டு நடுவிலுள்ள வ்ருத்தாந்தங்களைத் தலைகீழாக முறையே குறித்தருளினார். இனி இஷ்டப்படிச் சிலபெருமைகளைக் கூறி மிகுதியான அவயவங்களை அனுபவிக்கிறார். அல்லது முன் சொன்ன பூதநாஸம்ஹாரத்திற்கு மேற்பட சில லீலைகளைச் சொல்லியநுபவிப்பதாம்.

18. மண்ணும்மலையும்கடலுமுலகேழும்
உண்ணுந்திறத்துமகிழ்ந்துண்ணும்பிள்ளைக்கு
வண்ணமெழில்கொள்மகரக்குழையிவை
திண்ணமிருந்தவாகாணீரே சேயிழையீர்வந்துகாணீரே. (40)

| | | | |
|---|---|---|---|
| மண்ணும் | பூமியையும் | திண்ணம் | உண்மையாக |
| மலையும் | (அதற்கு ஆதாரங்களான) மலைகளையும் | வண்ணம் | நிறத்தையும் |
| | | எழில் | அழகையும் |
| கடலும் | (அதைச் சுற்றியுள்ள) ஸமுத்ரங்களையும் | கோள் | கொண்ட |
| ஏழ உலகு உம் | (அதற்குக் கீழும் மேலுமுள்ள) ஏழு உலகங்களையும் | மகரம் குழை | மகரகுண்டலம் சேர்ந்த கர்ணபூஷணங்களாகவே தோன்றும் |
| உண்ணும் திறத்து | பால் தயிர் அந்நம் புசிக்கும் தன்மையில் | இவை | இந்தத் திருக்காதுகள் |
| | | | இருந்த ஆ காணீர்; |
| மகிழ்ந்து | உகந்து | சே இழையீர் | சிவந்த பூஷணம் பூண்ட பெண்களே! |
| உண்ணும் | ஸம்ஹரிக்கிற | | |
| பிள்ளைக்கு | பாலமுகுந்தனுக்கு | | வந்து காணீர். |

உண்ணும் திறத்து மகிழ்ந்துண்கையாவது—ஸம்ஹரிக்கிறோமென்கிற எண்ணமிருந்தால், ஐயோ அழிக்கிறோமே என்று தயாளுவாயிருப்பவனுக்குத் தோன்றும். உண்ணுவதாக நினைத்தால் வருத்தமுண்டாகுமோ. இவ்வளவு கிடைக்கப் பெற்றோமே என்று உருசி பார்த்துக் களித்துண்ணும்.

பூதஹிதபானுக்கும் பூதத்வேஷிக்கும் இதில் வாசியொன்றுமில்லை. அன்றி, “ஸூஸ்ருஷ்டிஸங்கதாநாஸவராயாநாம் நிரோதிநீம் ஜமத:। வஞ்ஜாஸஹாய காலேணை வ்ருதிஸஞ்ஜாகெஸிஹாஅரஸி” என்று ஸ்ரீதேசிகன் அருளிச் செய்தபடி, சேதநர்கள் தாங்கள் செய்த அபராதங்களுக்குச் சிறிது காலம் பலனை யனுபவிக்காமலும் புதிய குற்றங்களைச் செய்யாமலுமிருக்க ஸமயம் தருகிறேமென்று தயாகுணத்திற்குட்பட்டே செய்வதால், ஜீவராசிகளுக்கு இவ்வளவு உபகாரம் செய்துவைக்கிறேமென்றும் மகிழ்ச்சியாம். ததம் வீணாதிகம் வாத்யம். நாட்யத்திலே வல்லமையுள்ளவள் நெடுங்காலமாய் வாத்யங்களை வாசிப்பவரிடம் ஏதேனும் குற்றம் குறை நேரிடவிருப்பதைக் கண்டு நாட்யத்தை நிறுத்தப் பின்னே நடிப்பதும் பார்ப்பவருக்கும் பரமானந்தமாயிருக்கும். அன்றி, மண்ணும்—மகிழ்ந்துண்ணும் பிள்ளைக்கு என்பதற்கு, ப்ரபஞ்சஸம்ஹாரம் பண்ணும் வகையிலே மகிழ்ந்து நெய் தயிர் பால் வெண்ணெய் முதலானவற்றை யுண்ணும் இப் பிள்ளைக்கு என்றும் பொருளாம். இப்போது முலைப்பால் குடிக்கும் தசைக்கு மேற்பட்ட தசை சொன்னதாகும். அவற்றை யுண்ணும் வகையில் இவற்றை யுண்கையாவது—பூகோளாதி பரிமாணமுள்ள நெய் முதலானவற்றையும் கொஞ்சமும் மிச்சமாகாதபடி யுண்கை; “ஸுணவத்ரவஹரதம் ஹஸ்தை: வெருண ஊ ஹஷயெஷுவ ஜெ ஹவெக” என்கிறபடி கொஞ்சமாயுள்ளவற்றையும் மலை கடல் முதலியவற்றைப் போல் பாவித்துண்கையுமாம்.

பூதநாஸம்ஹாரத்திலே ‘உண்டிட்டு’ எனச் சொல்லி இங்கே ‘உண்ணும்’ என்றதிலிருந்து அதற்கு மேற்பட்டுள்ள வ்ருத்தாந்தம் இங்கே சொல்வது ஸூசிதமாகிறது.

குழையிவை என்றவிடத்தில் இவை என்று திருக்காதுகளைச் சொல்வது அவயவங்களை வர்ணிக்கும் ஸந்தர்ப்பத்திற்குப் பொருந்தும். சுறுமீன் வடிவமாகச் செய்யப்பட்ட ஒளி மிகுந்த மகர குண்டலங்களைத் தரிக்கிறபோது காது முழுவதும் மறைந்துவிட்டபடி தோன்றுமென்கிற திருவுள்ளத்தினாலே உண்மையிலேயே மகரகுண்டலங்களிவை என்று உத்ப்ரேக்ஷித்தருளினர். ஆக திண்ணமென்பதற்குக் குழையிவை என்ற விடத்தில் அந்வயம் தெளிவாயிற்று. மகரக்குழை என்பதற்கு மகர வடிவமான குழைகளையுடைய என்று முறை தகும். அப்போது அப்படிப்பட்ட இந்தக் காதுகள் திண்மையுடன் இருப்பதைக் காணீரெனப் பொருளாம். இதை விட முன் சொன்ன பொருள் ஸ்வரஸமாகும். குழையும் மகரமும் (1. 6. 10.) என மேற் சொல்லுகிறபடி குழையென்பது பூர்ணகர்ணபூஷணமுமாம். அப்போது மகர குண்டலத்தோடு சேர்ந்த கர்ணபூஷணங்களாகவே திண்ணமாகத் தோன்றும் திருக்காதுகள் என்றுரையாம். இங்கே காதுகளைப் பற்றி ப்ரஸ்தாவமே செய்யாமல், ‘இந்த மகரகுண்டலங்களின் திண்மை இருந்தபடியைக் காணீர்’ என்றுரை செய்கின்றனர். மஅ.

இனி மூன்று வயதுக்குக் குறையாத பர்வத்தை யனுபவிக்கிறார்—

19. முற்றிலுந்தூதையும்முன்கைம்மேல்பூவையும்
சிற்றிலிழைத்துத்திரிதருவோர்களை
பற்றிப்பறித்துக்கொண்டோடும்பரமன்றன்
நெற்றியிருந்தவாகாணீரே நேரிழையீர்வந்துகாணீரே. (41)

| | |
|---|---|
| சிறு இல் இழைத்து | (விளையாட்டுக்காக) சிறிய வீட்டைக் கட்டி |
| திரி தருவோர்களை | திரியுமவர்களை (சிறு பெண்களை) |
| பற்றி | தொடர்ந்து |
| முற்றிலும் | (அவர்கள் விளையாட்டுக்கான) முற்றிலை (சிறு முறத்தை)யும் |
| தூதை(யை)யும் | சிறு கலசத்தையும் |
| முன் கை மேல் பூவை(யை)யும் | கையின் முன்பாகத்தின் மேல் வைத்துள்ள ஒரு வித பக்ஷியையும்(மைனு), |
| பறித்துக் கொண்டு | பிடுங்கிக்கொண்டு |
| ஓடும் பரமன் தன் | ஓடிப்போகும் பரம புருஷனுடைய |
| நெற்றி | திருநெற்றிக்கட்டு |
| | இருந்த ஆ காணீர். |
| நேர் இழையீர் | நேர்த்தியான ஆபரணங் கொண்ட பெண்களே! |
| | வந்து காணீர். |

விளையாடும் சிறு பெண்கள் தெருக்களிலே மண்ணாலும் மணலாலும் வீடுகளைச் செய்து அங்கே சமைத்து உண்கிறது போல் பாவனை பண்ணுவது வழக்கம். அப்படி நடந்தபோது அவர்களுக்குத் தெரியாமல் வந்து அவர்களிடமுள்ள கருவிகளைக் கொள்ளை கொள்கிறான் கண்ணனென்றதாயிற்று. தனக்கு மேற்பட்ட வயதுள்ள ஆண்பிள்ளைகளைப் பரிபவிக்கும்படி துணிவு ஏற்படுவதற்குமுன் அவ்வித பெண்பிள்ளைகளைப் பரிபவிக்கத் துணிந்தமை இங்கே கருதப்பட்டதாகும். ஓடும் பரமன் என்று ஸௌசீல்ய பரத்வங்களைச் சேர்த்து அனுபவிக்கிறார். அவனுக்குள்ள பரமத்வம், பரிஹாரம் செய்ய வொண்ணாதபடி அபஹாரம் செய்வதால் ப்ரதிஷ்டிதமாயிற்றென்னலுமாம். திருதரு என்றது ‘போதரு’ என்றாற்போலே வந்தது. திரிவோர் என்றிவ்வளவே பொருள். நெற்றியிருந்தவா: விரைந்தோடும்போது நெற்றியை நிமிர்த்து நெறித்துக் கொண்டோடுவது இயல்பு. அதனைக் கருதினபடியாம். இப்படி மற்ற விடங்களிலும் ஆராய்க. ௰சக.

20. அழகியபைம்பொன்னின்கோலங்கைக்கொண்டு
கழல்கள்சதங்கைகலந்தெங்குமார்ப்ப
மழகன்றினங்கள்மறித்துத்திரிவான்
குழல்களிருந்தவாகாணீரே குவிமுலையீர்வந்துகாணீரே. (42)

| | |
|---|---|
| அழகிய | அழகு பொருந்திய |
| பைம் பொன்னின் கோல் | பசும் பொன்னால் (மாற்றுயர்ந்த தங்கத்தினால்) செய்த கோலை |
| அம் கை | அழகிய திருக்கையில் |
| கொண்டு | வைத்துக் கொண்டு |
| கழல்கள் | கால்வீரத் தண்டைகளும் |
| சதங்கை | சலங்கைகளும் |
| கலந்து | ஒன்றோடொன்று சேர்ந்து |

| | | | |
|---|---|---|---|
| எங்கும் ஆர்ப்ப | எல்லா விடங்களிலும் த்வனிக்க | திரிவான் | திரியாநின்ற கண்ணனுடைய |
| மழ | இளமையான | குழல்கள் | தலை மயிர்கள் |
| | | | இருந்த ஆ காணீர். |
| கன்று இனங்கள் | கன்றுகளின் கூட்டங்களை | குவி முலையீர் | குவிர்ந்த ஸ்தனங்களை யுடையவர்களே ! |
| மறித்து | மடக்கி | | வந்து காணீர். |

பைமை பசுமை. அர்ச்சாவதாரத்திற் போல விபவத்திலும் அவன் விபவத்திற்குப் பொற்கோலே பொருந்தும். அவன் திருக்கை அழகுபடும்படி மேய்க்கும் கோலை வைத்துக் கொண்டது மாத்திரம். அவன் தண்டை சதங்கைகளின் த்வனியைக் கேட்டுக் கன்றினங்கள் தாமே கூடிவந்து நிற்கும். அதுவே அவன் மடக்குவதுமாம். ஆக அவன் நினைத்த விடங்களுக்கு அவை வந்து சேரவேண்டுமாகில் அவ்விடங்களில் கழல்கள் ஆர்ப்ப அவன் திரிந்து நிற்கவேண்டுமே யல்லது வேறு செய்யவேண்டியதில்லை. ஆகவே பொன்னின் கோலையே அவன் கொண்டது. உ௰.

21. சுருப்பார்குழலியசோதைமுன்சொன்ன
திருப்பாதகேசத்தைத்தென்புதுவைப்பட்டன்
விருப்பாலுரைத்தவிருபதோடொன்றும்
உரைப்பார்போய் வைகுந்தத்தொன்றுவர்தாமே. (43)

| | | | |
|---|---|---|---|
| சுரும்பு ஆர் | வண்டுகளால் நிறைந்த | விருப்பால் | (யசோதையின் அநுபவத்திற்குக் கோசரமாகாததையும் சொல்லி அவளைப்போல் வர்ணித்து அனுபவிக்க வேண்டுமென்கிற) ஆசையினால் |
| குழலி | கூந்தலை யுடையவளான | | |
| அசோதை | யசோதையினால் | | |
| முன் | கண்ணனுடைய விபவாவதார ஸமயத்திலே | | |
| சொன்ன | வர்ணிக்கப்பட்ட | உரைத்த | சொன்ன |
| | | இருபதோடு | இருபது பாசுரங்களோடு |
| திரு பாதம் கேசத்தை | திருவடிமுதல் கூந்தல் வரையிலுள்ள திருமேனி விஷயத்திலே | ஒன்றும் | இந்த நிகமனப் பாசுரமொன்றையும் |
| | | உரைப்பார் | அர்த்தவிசேஷங்களைத் தெளிவித்து ஓதுகிறவர்கள் |
| தென் | அழகிய (அல்லது) தென் தேசத்திலுள்ள | தாமே | தாமாகவே |
| | | வைகுந்தத்து | ஸ்ரீவைகுண்டத்திலே |
| புதுவை பட்டன் | ஸ்ரீ வில்லிபுத்தூரிலுள்ள பட்டநாதன் (பெரியாழ்வார்) | போய் | போய் சேர்ந்து |
| | | ஒன்றுவர் | பொருந்தி நிற்பர். |

சுரும்பு ஆர் சுருப்பார். தேனைப் பருகும் மதுபங்கள் இவள் கூந்தலில் இயற்கையிலுள்ள வாஸனையோடு, கோதைக்குழலாளாகையாலே பூக்களிலுள்ள தேனுக்காகவும் வருகின்றன வென்பது 'வண்டமர்பூங் குழலாய்ச்சி' என்றதில் தெளிவாம். பாதாதிகேசாந்தமான திருமேனியைப் பற்றிய

பாசுரங்கள் இருபது. முடிவில் பலச்ருதி வேறு எனப் பகுத்தறிவைத் தருவதற்காக 'இருபத்தொன்று' என்றொரு பதமாகக் கூறுதொழிந்தது. போய் என்பதற்கு அர்ச்சிராதிமார்க்கத்தினாலே போய் என்று பொருள் கொள்க. தாமே போய் ஒன்றுவர்—பராநுக்ரஹத்தாலே தாம் பெறுவதென்பது மாத்திரமல்ல; தமக்கே அதில் விசேஷாபிநிவேசம் பிறந்து போய்ப் பெறுவர்கள் என்றபடி. உரைப்பார் தாம் எனச் சேர்த்து, உரைப்பவர்கள் என்றிவ்வளவே கொள்வதுமாம். உக.

ப்ரபந்தரக்ஷையில் பெரியாழ்வார் திருமொழி 1. 3.

சீதக்கடல் உரை முற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன்திருவடிகளே சரணம்.

——:o:——

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன்திருவடிகளே சரணம்.

## பெரியாழ்வார் திருமொழி 1. 4. (தாலாட்டு).

# மாணிக்கங்கட்டி.

யசோதைப் பிராட்டி கண்ணனைத் தொட்டிலிலே விட்டுத் தாலாட்டினபடி இங்கே அருளிச்செய்யப்படுகிறது. ஆழ்வாருடைய அநுபவம் மேல் மேல் விஞ்சி நிற்கிறது. முதலில் ஆழ்வார் தம் தன்மையிலேயே இருந்து எம்பெருமானை மங்களாசாஸனம் செய்து அவனுடைய க்ருஷ்ணாவதாரச் சிறப்பை அநுபவித்தார். இப்படி அவதரித்தவனை ஆபாதகேசம் யசோதையனுபவித்தபடியே தாமும் அநுபவிக்கத் தொடங்கினார். அப்போது, 'யசோதையானவள் கண்ணனை எம்பெருமானாக நன்கு அறியாமையினாலும், அவன் ஸ்ரீமதுரைக்குச் சென்ற பிறகு செய்த மனோஹரலீலைகள் அவளுக்கு முன் தசையில் தெரியாதவையாகையாலும் அவனை அவள் அநுபவித்தது ஏதோ சில தாற்காலிகங்களான லீலைகளை மாத்திரம் கொண்டு நடந்திருக்கவேண்டும். அவனுடைய மேன்மையையும் நீர்மையையும் அநுபவிப்பதற்கு அது போதாது. ஆக நமக்கு அவனுடைய ஸர்வேச்வரத்வமும் ஸர்வலீலைகளும் அநுபவத்திலிருப்பதால் அவற்றை யெல்லாம் சேர்த்துச் சிறந்த முறையிலே ஆபாதகேசம் அநுபவிக்கவேண்டு' மென்று திருவுளங்கொண்டார். அப்படியே சீதக்கடலில் அநுபவித்தார். 'இவ்வண்ணம் அநுபவித்துச் சொல்ல நமக்கு முடியாமற் போயிற்றே' என யசோதை குறைபடும்படி யாயிற்று. அவள் குறையைத் தீர்ப்பது இவருக்கே தர்மமாய் முடிந்தது. ஆகவே, பிற்காலத்திலே கண்ணன் செய்தருளின அரிய பெரிய சேஷ்டிதங்களும், பாரிஜாதாபஹரணாதிகளிலே இந்த்ராதி

கள் பட்ட பாடும் நேரில் கண்ட யசோதையானவள், 'நமக்கு இவையெல்லாம் முன்னமே தெரிந்திருந்தால் ப்ரம்மாதிகளும் அவனுக்குப் பணிவிடை செய்யும் வகையைச் சொல்லிச் சீராட்டி யிருக்கலாமே' என்று நினைத்து வந்ததாகவும்—அப்படியிருந்த அவளுடைய மனோரதத்தைப் பூர்த்தி செய்வதற்காக எம்பெருமான் அவளை வேறு வடிவமாகப் பூர்வஜந்மஸம்ஸ்காரத்தோடு பிறப்பித்துத் தன்னுடைய சில அர்ச்சாரூபங்களை ஸேவிக்க ஸமயம் அளித்து அப்போது தன்னுடைய ஸர்வேச்வரத்தன்மையையும், பற்பல அவதாரசேஷ்டிதங்களையும் ப்ரகாசப்படுத்தி, அத்துடன் அந்தந்த அர்ச்சையிலேயே பழைய பாலகோபாலனாகவும் ஸேவை தந்தருளினதாகவும்—அதனால் அவளும், "கொங்கும் குடந்தையும் கோட்டியூரும் பேரும் எங்குந் திரிந்து விளையாடு மென் மகன்" (2. 6. 2.) என்கிறபடி கண்டு, தன் மகன் என்ற எண்ணத்தைத் திடமாகக் கொண்டு, இப்போது அர்ச்சையிலே இவள் அநுபவிக்கும் தசைக்கு முற்படவிருந்த ஸர்வாகாரங்களிலும் தனக்கு அபிமதங்களானவற்றைச் சேர்த்துத் தன் குழந்தையைக் கொண்டாடி தாலாட்டுதல் முதலாகப் பலவற்றைச் செய்து ப்ரீதி யடைந்ததாகவும் பாவித்து, அப்படிப்பட்ட யசோதையின் சொல்லைத் தாம் சொல்லுவதாக உரைத்துக் கொண்டு, அவ்வித யசோதையாகவே தாம் நின்று தாலாட்டுதல் முதலானவைகளைச் செய்தருளி இனியராகிறார்.

1\. மாணிக்கங்கட்டிவயிரமிடைகட்டி
ஆணிப்பொன்னாற்செய்தவண்ணச்சிறுத்தொட்டில்
பேணியுனக்குப்பிரமன்விடுதந்தான்
மாணிக்குறளனேதாலேலோ வையமளந்தானேதாலேலோ. (44)

| | | | |
|---|---|---|---|
| மாணி | ப்ரம்மசாரியான | வண்ணம் | (நீல ரத்னம் போன்ற உன் திருமேனிக்கு ஏற்றவாறு மற்றும் பல) வர்ணங்கள் பொருந்தின |
| குறளனே | வாமநனாயவதரித்த கண்ணனே! | | |
| பிரமன் | சதுர்முகனானவன் | | |
| பேணி | ஆசைப்பட்டு— | சிறு தொட்டில் | சிறிய தொட்டிலை |
| இடை | நடுவிலே | | |
| வயிரம் | வஜ்ர ரத்நங்களை | உனக்கு விடு தந்தான் | உனக்கு ஸமர்ப்பித்தான். |
| கட்டி | இழைத்து | | |
| மாணிக்கம் | (மற்ற விடங்களிலே) மாணிக்கங்களை | | |
| | | தால் ஏல் | இக் கவியை ஏற்றுக்கொள். |
| கட்டி | இழைத்து | வையம் அளந்தானே | (த்ரிவிக்ரமனாக வளர்ந்து) உலகங்களை அளந்தவனே! |
| ஆணி | முதன்மையான | | |
| பொன்னால் | தங்கத்தினாலே | | |
| செய்த | செய்யப்பட்ட | | தாலேல் ஓ. |

தாலேலோ:— ஓ என்றழைத்தல். ஓ மாணிக்குறளனே என்றவாறு சேர்த்தலுமாம். தாலாட்டுதலாவது நாவசைத்தல்; அல்லது ஒருவித கவியைச் சொல்லித் தொட்டிலை ஆட்டுதல். தாலு என்றது வட சொல்லும் தென் சொல்லுமாகும். வட சொல்லாகில் தாடையெனப் பொருள். தென் சொல்

லானபோது நாக்கு என்று பொருளாம். ஆகவே தாலாட்டாவது நாவசைத்த லென்றார் ஜீயர். அழும் குழந்தைக்கு எதிரொலி கொடுத்து அழுகை நிறுத்து வதற்காக ஸ்திரீகள் அதைத் தொட்டிலில் விட்டு, 'உளு ளு ள் ஆயீ' என்று சொல்வது வழக்கம். இச்சொல் தாடையும் நாக்கும் சேர வருவதாகையால் தால் எனப் படுகிறதாகும். இதன் பொருளாவது—தொட்டிலிலுள்ள சரீரத்தி னுள் இருக்கும் நாடியாகிற மாளிகையிலுள்ள 'புரீதத்' என்னும் கட்டிலுள் பாப்ரம்மமாகிற படுக்கையிலே நீ சேருவாயாக என்பதாகும். ஆக தூங்கக் கடவாயென்றபடி. இதைக் கொண்டு குழந்தை தூங்குவதற்காகச் சொல் லப்படும் எல்லா கவியும் தாலென வழங்கப்படும். அக் கவியை நீ ஏற்றுக் கொள் : தூங்கு என்று 'தாலேல்' என்பதின் கருத்து.

சீதக்கடலிலே, 'பிறங்கிய பேய்ச்சிமுலை சுவைத்துண்டிட்டு உறங்குவான் போலே கிடந்தவிப்பிள்ளை' யென்றபோதே, தாலாட்டினால்தான் இவன் உண்மையில் உறங்குவானென்றிவர் நினைத்தார். பிறகு யசோதையாகவே யிருந்து தனியாகத் தாலாட்டுதல் செய்யவேண்டுமென்று தீர்மானித்து, மேலே மேலே வெவ்வேறு விஷயங்களைச் சொல்லித் திருமேனி வர்ணனத்தை முடித்துக்கொண்டு இப்போது தாலாட்டுகிறார். இதனை இவர் தாமே முடிவில், 'வஞ்சனையால் வந்த பேய்ச்சிமுலையுண்ட அஞ்சனவண்ணனை யாய்ச்சி தாலாட்டிய' என வறிவித்தருளினபடி காண்க.

மாணிக்குறளனே :—நீ மாணிக் குறளனாய் மஹாபலியினிடம் சென்று மூவடி இடம் இரந்து உடனே த்ரிவிக்ரமனாய் வளர்ந்து உலகங்களை யெல் லாம் உன்னடிக்குட்படுத்தி அவ் வைச்வர்யத்தைத் தேவதைகளுக்குத் தந்தரு ளினையன்றோ. ஆகவே மறுபடியும் உன்னால் பலவித பலன்களை யடைய விரும்பி உன்னை அவதரிப்பித்த ப்ரம்மாதிகள் உன் செய்கைக்கு நன்றி பாராட்டிவருகின்றனர். ஆகவே ப்ரம்மன் உபஹாரமாய் ஸமர்ப்பித்த தொட் டில் இது என்றபடி. மாணி, குறள் இரண்டிற்கும் சிறுமையே பொருளென் பதுமுண்டு. மிகச் சிறியவனாய் நின்று அப்போதே வையமளக்கும்படி வளர்ந்தது ஒரு மாயை. உன் சொத்துக்களை ஒருவனிடம் இரந்து பெற்றுப் பிறர்க்கு அளித்து அவற்றிலிருந்து சிலவற்றை இப்போது அவர் உபஹார மாக ஸமர்ப்பிக்கப் பெறுகிறாய். என்ன உன் மாயை! எனத் தோற்ற இங்கே இவ்வவதார வ்ருத்தாந்தம் அருளினதாம். இடையில் வைரம் கட்டுவதாவ து—எம்பெருமானை விடுமிடத்தில் வைரம் கட்டுவது. அன்றி, மாணிக்கங் களைச் சுற்றி வைத்து நடு நடுவே எங்கும் வயிரம் கட்டுவதாம். க.

2. உடையார்கனமணியோடோண்மாதளம்பூ
இடைவிரவிக்கோத்தவெழில்தெழ்கினோடு
விடையேறுகாபாலியீசன்விடுதந்தான்
உடையாயழேலழேல்தாலேலோ உலகமளந்தானே தாலேலோ.(15)

| | |
|---|---|
| உடை | அரையில் (அல்லது) பீதாம்பர வுடையில் |
| ஆர் | வியாபியா நின்றுள்ள |
| கனம் மணியோடு | (கநகம்) பொன் மணிகளோடும், |
| இடை | நடு நடுவே |
| விரவி | கலந்து |
| கோத்த | கோக்கப்பட்ட |
| எழில் | அழகு பொருந்திய |
| தெழ்கினோடு | இடைச்சரிகளோடும் |
| ஒள் | ப்ரகாசிக்கும் |
| மாதளம் பூ | மாதளம்பூக்கள் போன்ற உருப்படிகளாலான திருவாபரணத்தை |

| | |
|---|---|
| விடை ஏறு | விருடபவாஹனத்தில் ஏறு கிறவனை |
| காபாலி | (ப்ரம்மகபாலம் கையிலிருந்ததாலே) கபாலி யென்னப்படும் |
| ஈசன் | சிவனானவன் |
| விடுதந்தான் | ஸமர்ப்பித்தான். |
| உடையாய் | (அதையும் அவனையும் அனைத்துலகையும்) உடையவனே ! |
| அழேல் | அழவேண்டாம். |
| | அழேல் ; தாலேலோ ; உலகம் அளந்தானே தாலேலோ. |

'தெழ்கினொடும்' என வோதுவாரு முண்டு. 'மணியோடும் தெழ்கினொடும் கூடியிருந்துள்ள மாதளம்பூக் கோவையான அரைவட' மென்றே ஜீயர் கூறின அந்வயார்த்தம். தெழ்கு இடைச்சரிகை யென்றார் ஜீயர். அதாவது உடைவாளென்றனர். 'இடைச்சரி' என்ற திருவாய்மொழிப் பிள்ளையின் உரையைப் பின்பற்றினவர் போல 'அரசிலைத் தொங்கல்' என்றார் அரும்பதவுரைக்காரர். "கச்சொடு பொற்சுரிகை" (8) என்றது போல், "பின்னல் துலங்கும் அரசிலையும்" (1. 8. 3.) என்றும் இவ்வாழ்வார் அநுஸந்தித்தருளுகிறார். இடைவிரவி என்று நடு நடுவே கோத்ததாகச் சொல்வதால் அப்படிக்கொத்த அனேகங்களைத் தெழிகு என்னவேண்டும். மேலே, "அரையில் தங்கிய பொன்வடமும் தாளநன்மாதுளையின் பூவொடு பொன் மணியும்" (1. 6. 10.) என்றவிடத்தில் மாதளம்பூவொடு பொன்மணி யெனப்பட்டது இங்கே கனமணியோடொண் மாதளம்பூ என்னப்பட்டது. அங்கே பொன்வடம் தனியே அருளிச் செய்யப்பட்டிருப்பதால், அது வேறு, இது வேறு என்பது தெளிவாயிற்று. அப் பொன்வடமாவது அரைநாணென்றார்கள். "நாணுமரைத்தொடரும்" (4) என்றவிடத்திலே அரைத்தொடர்=அரைவட மென்றார் திருவாய்மொழிப்பிள்ளை. அங்கே, 'அரைவடம்=அரையிலே கட்டி காலளவும் தொங்குகிற முத்து மாலை' என்றார் அரும்பதவுரைக்காரர். ஆக இப் பாசுரத்திற் சொன்ன திருவாபரணமும் அதைப்போன்றதொன்றாகும். திருவாய்மொழியிலும், 'உடையார்ந்த வாடையன் கண்டிகையனுடைநாணினன்' (3. 7. 4.) 'பாங்கு தோன்றும் பட்டும் நாணும்' (5. 5. 4.) என வருளினதைக் காண்க. இவ்வரைவடத்திற்கு உடைமணி யென்றும் பெயருண்டு. மணிக்குப் பொன் என்ற விசேஷணம் சேர்த்ததால், மாதளம்பூ பற்பலவிரத்னங்களைக் கொண்டு அதன் வர்ணத்திற் கேற்றவாறு செய்யப்பட்டதாகும்.

விடையேறு :—இவ்வாபரணத்தை ஸமர்ப்பிக்க, தான் இன்னவனென்று தோற்ற விருடபாரூடனாய் வந்தான். இவ்வந்வயத்தாலே ரிடபமும் தன்யமாயிற்று. கபாலத்தைச் சேர்ந்தது காபாலம். அதனால் சிறப்புற்றதால்

*சிவன் காபாலி. தன்னைப்போல் ப்ரம்மதேவனுக்கு ஐந்து தலைகளிருப்பது ஸஹியாமல் அவர் தலையொன்றைப் பறிக்க அந்தக் கபாலம் கையிலேயே நிற்க அதனால் ஏற்பட்ட தீமைத் துன்பங்களை நாராயணன் பரிஹரித்ததாலேற்றம் பெற்று அதற்கு நன்றி பாராட்டி இவ்வண்ணம் நடந்துகொள்ளுகிறானென்றபடி. ஈசன் எம்பெருமானை யாராதித்து அஷ்டைச்வர்யம் பெற்றவன்.* **உடையாய் :** *இவ்வளவு ஐச்வர்யமுடையவனே! மாவலியிடம் மூவடி ப்ரதிக்ரஹித்தவனே! உலகமளக்கும்படி உண்மையில் ஸர்வஸ்வாமியே! என்றவாறு.* அழேலழேல் : *அந்த ருத்ரன் அழுது நிற்க அவன் கேட்டபடி நாமாதிகளை யளித்து அவன் அழுகையை நீ நிறுத்தினவனல்லவா? ஆக நீ அழுவது அவனிடமொன்றைப் பெறுவதற்காகாது. உன் குழந்தைப் பர்வத்திற்கேற்றபடி பிறர் அளிப்பதைப் பெற்று விளங்குவதற்காகவே யல்லது அழுவதற்காக வன்று நீ குழந்தையா யிருப்பது.* உ.

3. என்தம்பிரானாரெழில்திருமார்வற்கு
சந்தமழகியதாமரைத்தாளற்கு
இந்திரன்றானுமெழிலுடைக்கிண்கிணி
தந்துவனாய்நின்றான்தாலேலோ தாமரைக்கண்ணனேதாலேலோ. (46)

| | | | |
|---|---|---|---|
| என் தம்பிரான் | *எனது கடவுளாய்* | இந்திரன் தானும் | தேவேந்திரனும் |
| எழில் ஆர் திருமார் வந்து | *அழகு நிறைந்த பிராட்டியை மார்பில் உடையவனையும்,* | எழில்உடை கிண்கிணி | *அழகை உடைய சதங்கைகளை* |
| | | தந்து | *ஸமர்ப்பித்து* |
| சந்தம் அழகிய | *நிறத்தினால் அழகான* | உவனாய் நின்றான். | ஒதுங்கியவனாய் நின்றான். *தாலேலோ ;* |
| தாமரை தாளற்கு | *தாமரைப் பூ போன்ற திருவடிகளை யுடையனுமான கண்ணனுக்கு (உனக்கு)* | தாமரை கண்ணனே | *செந்தாமரைபோன்ற திருக் கண்களை யுடையவனே! தாலேலோ !* |

தம்பிரான் *என்றது, 'தமக்கை' 'தமையன்' என்றாற் போலே ஒரு முழுச் சொல்லாம். கடவுள் என்றும், கட்டளைப்படி நடத்துவோன் என்றும் பொருள். 'தாமரைக்கண்ணனே தாலேலோ' இத்யாதிஸ்வாரஸ்யத்தாலே இங்கு பன்மையைவிட ஒருமையே பொருத்தமாகத் தோன்றியதால் தம்பிரானார் என்று பிரிக்காமல் 'தம்பிரான்' என்றே பிரித்தது.* ஆரெழில் *என்றதை 'எழிலார்' என மாற்றிக் கொள்ளலாம். 'எழிலார் திருமார்பிற்கு' என்றல்லவோ 5-வது பாசுரத்திலுமிருப்பது, பதங்களை மாற்றாமல், ஆர் = நிறைவு, எழில் = அழகு இவையுள்ள திருமார்பை யுடையவனென்றுரைக்கலாம். இங்கே 'எந்தம்' என்றே படித்து எம் தம் எனப் பிரித்து எமது என்று பொருள் கூறுகின்றனர். 'பிரானாரெழில் திருமார்வர்க்கு' 'தாளர்க்கு' என்று படித்து 'பிரானார்' எனப் பன்மையாகவும் பிரிக்கின்றனர்,*

திருமார்வற்கு என்றதால் போய்விட்ட ஐச்வர்யத்தைப் பிராட்டியின் கடாக்ஷத்தினாலே பெற்றான் இந்திரனென்பதைக் குறித்தபடியாம். திருமார்பையும் திருவடிகளையும் வர்ணித்ததாலே இரண்டு அவயவங்களுக்கும் ஸமர்ப்பிக்கக் கூடிய கிண்கிணிகள் இங்கே கூறப்பட்டனவாகும். உவன்—மத்தியஸ்தன். கொஞ்சதூரத்திலுள்ளவன். பூமியின் ஸ்பர்சமில்லாதபடி இந்திரன் நின்றதைக் குறித்தபடி. அன்றி, மற்ற தேவதைகள் போலே வெகு தூரத்திலும் நிற்கவில்லை ; ப்ரம்மருத்ரர்களைப் போலே நெருங்கியும் நிற்கவில்லை ; பெரியோர்கள் வந்திருப்பது கண்டு யோக்கியதைக்குத் தக்கபடி கொஞ்சம் விலகி நின்றானாகையாலே உவனானென்றதாம். ௩.

4. சங்கின்வலம்புரியுஞ்சேவடிக்கிண்கிணியும்
அங்கைச்சரிவளையும்நாணுமரைத்தொடரும்
அங்கண்விசும்பிலமரர்கள்போத்தந்தார்
செங்கட்கருமுகிலேதாலேலோ தேவகிசிங்கமேதாலேலோ. (47)

| | | | |
|---|---|---|---|
| அமரர்கள் | தேவதைகளானவர்கள் | அரை தொடரும் | அரை வடத்தையும், |
| இன் வலம் புரி சங்கு உம் | இனிய தக்ஷிணாவர்த்த சங்கத்தையும், | அம் கண் விசும்பில் | அழகியதும் விசாலமுமான ஆகாயத்திலே |
| சே அடி கிண்கிணி யும் | சிவந்த திருவடிகளுக் கொத்த சதங்கைகளை யும், | போத் தந்தார் | (உனக்காகப்)போகவிட்டார் கள். |
| அம் கை சரி | அழகிய கைகளிலே சரிந்து வரா நின்ற | செம் கண் கருமுகிலே | சிவந்த கண்களையுடையவனாய் காளமேகம் போன்றவனே ! |
| வளையும் | தோள்வளைகளையும் கங்கணங்களையும், | தேவகி சிங்கமே | தேவகியினிடம் பிறந்த சிங்கமே ! தாலேலோ தாலேலோ. |
| நாணும் | (திருமார்புக்கும் திருவரைக்கும்) நாண்களையும், | | |

சங்கின் வலம்புரியும் :—சங்கு இடம்புரி வலம்புரி என இருவகையாகும். வலம்புரியிலும் சலஞ்சலம் முதலிய பலவகைகளுண்டு. அவற்றினுள் மேன்மை பெற்ற வலம்புரி ; பாஞ்சசன்னியம் போன்றது. சங்கில்=சங்குகளில் (சிறந்த) வலம்புரிச் சங்கமும் என்று முரைப்பர். சரிவளையும் :—சரியென்பது கங்கணம், வளை=தோள்வளையென்றும் கூறுவர். அங்கை என்பதற்கு 'உள்ளங்கை' என்றும் பொருள் உள்ளது அம் கண் விசும்பில். அதாவது எல்லோரும் தேவலோகத்திலேயோ ஆகாயத்திலேயோ இருந்துகொண்டு, புஷ்பங்களை வர்ஷிப்பது போல், பலவகைப் பூஷணங்களைச் சொரிந்தனர். கோகுலம் சிறியதாயிருந்ததால் எல்லோரும் அங்கே இறங்கி நிற்கவில்லை. ஆகாசம் விசாலமாயிருந்ததால் வர்ஷிப்பது ஸுகமாயிற்று. அந்தப் பூஷணங்கள் வரும்போதிருந்த அழகு மிகவும் போக்யமாயிருந்ததென்றவாறு. ச.

5. எழிலார்திருமார்வுக்கேற்குமிவையென்று
அழகிய வைம்படையுமாரமுங்கொண்டு
வழுவில்கொடையான்வயிச்சிரவணன்
தொழுதுவனாய்நின்றான்தாலேலோ தூமணிவண்ணனேதாலேலோ. (48)

| | |
|---|---|
| வழுவு இல் கொடையான் | குற்றமில்லாத ஔதார்யமுள்ள |
| வயிச்சிரவணன் | (வைச்ரவணன்) குபேரன், |
| எழில் ஆர் | " அழகு நிறைந்த |
| திருமார்வுக்கு | (தூமணிவண்ணன்) திருமார்பிற்கு |
| இவை | இந்த ஆபரணங்கள் |
| ஏற்கும் | ஏற்றிருக்கும் " |
| என்று | என்று கொண்டாடி |
| அழகிய | அழகு பொருந்திய |
| ஐ படையும் | ஸ்ரீ பஞ்சாயுதத்தையும் |
| ஆரமும் | ஹாரங்களையும் |
| கொண்டு | எடுத்துக் கொண்டு வந்து |
| தொழுது | அஞ்சலி செய்துகொண்டு |
| உவனாய் நின்றான் | கொஞ்ச தூரத்திலிருப்பவனாய் நின்றான். |
| தூ மணி வண்ணனே | நிர்துஷ்டமான நீலரத்னத்தின் நிறமுள்ளவனே ! |
| | தாலேலோ தாலேலோ. |

ஐம்படை எம்பெருமானுடைய ஐந்து ஆயுதங்களான சங்கசக்ராதிகள் போன்றவைகளாலான ஆபரணம். வழுவில் கொடையான் :—சாஸ்த்ரங்களிற் சொன்ன விதமாய் எப்போதும் எல்லோருக்கும் தானம் செய்வதே இவன் ஸ்வபாவம். இப்போதும், ஈசத்வமும், இந்த்ரத்வமும் நிலைபெற வேண்டுமென்றாற் போலே ஒரு பலனுக்காகக் கை நீட்டாமல் அஞ்சலிபந்தம் செய்துகொண்டு விச்ரவமுனி புத்ரனானமைக்குத் தக்கபடி, 'எம்பெருமானுக்கேற்றவை இவை' என்றிவ்வளவாலே கொடுத்ததாலும் இவன் வழுவில் கொடையான் ஆனான் போலும். வயிச்சிரவணன் என்ற விடத்தில் 'வயிச்சிராவணன்' எனப் படித்து, "அரவை அரா என்னுமா போலே வைச்ரவணன் என்கிற வித்தை வயிச்சிராவணன் என்கிறது" என்றதை ஜீயர் உரையில் காண்க. இது அபபாடமென்றும் 'வயிச்சிரவணன்' என்றே பாடமென்றும் பலர் கருதுகின்றனர். மார்பிற்கு எனவு மோதுவர். வழு எனவும் பிரிப்பர்.

இந்த்ரன் தவிர மற்ற தேவதைகள் எல்லோரும் முன் பாசுரத்திலேயே சொல்லப்பட்டனர். ஆயினும் அவர்களில் தநேச்வரனான குபேரனும் ரத்நாகரத்துக்கு அரசனான வருணனும் ப்ரதானர்களாகையாலே அவர்கள் ஆபரணங்கள் கொண்டுவந்ததை விசேஷித்துச் சொல்ல இப் பாசுரமும் மேற் பாசுரமும் முறையே பிறந்தன. இதற்கு முந்தின ராமாவதாரத்திலே ஸமுத்ரராஜனும், ராவணன் அபஹரித்த புஷ்பகவிமானத்தைத் திரும்பப் பெற்ற வயிச்சிரவணனும் விசேஷமாக உபகாரம் பெற்றவர்கள். ரு.

6. ஓதக்கடலிலொளிமுத்தினாரமும்
சாதிப்பவளமுஞ்சந்தச்சரிவளையும்
மாதக்கவென்றுவருணன்விடுதந்தான்
சோதிச்சுடர்முடியாய்தாலேலோ சுந்தரத்தோளனேதாலேலோ.(49)

| | |
|---|---|
| வருணன் | வருணனுவன், |
| தக்க மா என்று | தகுந்த அழகு என்று பார்த்து |
| ஓதம் | திரை (புரண்ட) |
| கடலில் | ஸமுத்ரத்திலே |
| ஒளி | (மற்றவைகளைவிட மிக்க) ப்ரகாசமுள்ளனவான |
| முத்தின் | முத்துக்களாலான |
| ஆரமும் | ஹாரத்தையும் |
| ஜாதி பவளமும் | உயர்ந்த வகையான பவளங்களையும் |
| சந்தம் | அழகு பொருந்திய |
| சரி வளையும் | சரிந்துவரும் (அல்லது) சரியான வளைகளையும் |
| விடுதந்தான் | ஸமர்ப்பித்தான். |
| சோதி சுடர் முடியாய் | ப்ராஜ்யோதிஸ்ஸாய் உஜ்வலமான முடியுடையனுமாயிருப்பவனே ! |
| | தாலேலோ. |
| சுந்தரம் தோளனே | அழகிய தோள்களையுடையனே ! |
| | தாலேலோ. |

ஓதக் கடலிலொளி யென்பது ஜாதிப் பவளத்திலும் சேரும். ஸமுத்ர ராஜனுகையாலே ஸமுத்ரத்திலேயே முத்துக்கள் பவளங்களிருப்பவையெல்லாம் பார்த்துப் பொறுக்கிக் கொண்டுவந்தான். மாதக்க வென்பதற்கு மேன்மையும் தகுதியுமுள்ளவை எனவும், ஒளி மிக்க என்றாற் போலே தகுந்த மேன்மையையுடைய என்று முரையாம். சோதிச் சுடர் என்றது ஒரு பொருட் பன்மொழி யென்று சொல்லி, 'மிக்க ஜ்யோதிஸ்ஸை யுடைய' என்று முரைப்பர். முடி=மயிர்முடி அல்லது கிரீடம். சு.

7. கானார்நறுந்துழாய்கைசெய்தகண்ணியும்
வானார்செழுஞ்சோலைக்கற்பகத்தின்வாசிகையும்
தேனார்மலர்மேல்திருமங்கைபோத்தந்தாள்
கோனேயழேலழேல்தாலேலோ குடந்தைக்கிடந்தானேதாலேலோ. (50)

| | |
|---|---|
| தேன் ஆர் | தேன் நிறைந்த |
| மலர் மேல் | (தாமரை) மலரில் (வஸிக்கின்ற) |
| திருமங்கை | மங்கைப் பர்வத்திலுள்ள பிராட்டியானவள் |
| கான் ஆர் | கானகத்திலே நிறைந்த |
| நறு துழாய் | ஸுகந்தியான திருத்துழாய்களாலே |
| கைசெய்த | தன் திருக்கைவேலையாகச் செய்த |
| கண்ணியும் | மாலையையும், |
| வான் ஆர் | தேவலோகத்திலே நிறைந்த |
| செழு | வளமை பொருந்திய |
| சோலை | தோப்பிலுள்ள |
| கற்பகத்தின் | கற்பகப் பூக்களின் |
| வாசிகையும் | மாலையையும் |
| போத் தந்தாள் | அனுப்பிவைத்தாள் |
| கோனே | (அவளுக்கும்) ஸ்வாமியானவனே ! |
| | அழேல் அழேல் தாலேலோ. |
| குடந்தை கிடந் தானே | திருக்குடந்தையிலே கண்வளர்ந்தவனே ! |
| | தாலேலோ. |

எல்லோரும் பொன்னாலும் பல ரத்னங்களாலும் செய்த பூஷணங்களை அனுப்பினார்கள். அலர்மேல்மங்கையாருக்கு ஸுகந்த ஸுகுமார புஷ்ப மாலைகளே உபஹாரமாகத் தோன்றின. கைசெய்த என்றதால் அனுராகாதிசயத்தாலே தாமே திருக்கைவேலை செய்தது சொன்னதாகும். வானார் என்ற விடத்திற் போல கானார் என்ற விடத்திலும் காட்டில் தாமாக வளர்ந்த

திருத்துழாயைச் சொன்னதாம்; அல்லது பிராட்டியார் வளர்த்தவையுமாம். "ஓஷீகரதா: வஸு மஹெளஷதீநயதா வஸுமதாஹீ:" என்றான் சாகுந்தளகவி. வாசிகையாவது திருநெற்றிமாலை யென்பர். அழேல்: விட்டுப் பிரிந்தோமென வருத்தம் வேண்டாம். அவள் அனுப்பியவற்றைப் பார். குடந்தையில் போல் இனி சேர்ந்து களிப்பாய். எ.

8. கச்சோடுபொற்சுரிகைகாம்புகனகவளை
உச்சிமணிச்சுட்டியொண்டாணிரைப்பொற்பூ
அச்சுதனுக்கென்றவனியாள்போத்தந்தாள்
நச்சுமுலையுண்டாய்தாலேலோ நாராயணாவழேல்தாலேலோ. (51)

| | | | |
|---|---|---|---|
| அவனியாள் | பூமிப்பிராட்டியானவள், | மணி சுட்டி | ரத்னமயமான சுட்டியையும் |
| அச்சுதனுக்கு என்று | (இவை) ஆச்ரயித்தவரைக் கைவிடாத கண்ணனுக் கென்று, | ஒள் தாள் நிரை பொன் பூ | ஒளியுள்ள காம்பை யுடையதும், ஒழுங்காயுமுள்ள பொன் மலரையும் |
| கச்சோடு | (பீதாம்பரத்தின்மேல் சாத்தும்) இடைக்கட்டோடு | போத் தந்தாள் | அனுப்பினாள். |
| பொன் சுரிகை | (அதிலே சொருகப்படும்) பொன்னால் செய்த கத்தியையும், | நஞ்சு முலை உண்டாய் | விஷமுள்ள ஸ்தன்யத்தை உண்டவனே! தாலேலோ. |
| காம்பு | பட்டு வஸ்திரத்தையும், | | |
| கனகம் வளை | பொன் வளைகளையும், | நாராயணா | நாராயணனே! அழேல் தாலேலோ. |
| உச்சி | தலைக்குச் சேர்ந்தவையான | | |

கனவளை என்று பாடமாகிலும் பொருள் ஒன்றே. ஒண்டார் நிரை என்ற பாடத்தில், ஒள்தார்-ஒளியுள்ள அரும்புகளை யுடையதும் எனப் பொருளாம். நச்சுமுலையுண்டாய் என்று பூபாராபஹாரம் தெரிவித்தபடி. நாராயணா. ஸுவொ நாரா உதி வெ்ராக்தா:. ஏகார்ணவத்திலே மூழ்கிப் போன பூமியைக் கொண்டுவந்து அதன் மேல் நிறுத்தி நின்றவனல்லவா நீ. அ.

9. மெய்திமிருநானப்பொடியோடுமஞ்சளும்
செய்யதடங்கண்ணுக்கஞ்சனமும்சிந்துரமும்
வெய்யகலைப்பாகிகொண்டுவளாய்நின்றாள்
ஐயாவழேலழேல்தாலேலோ அரங்கத்தணையானே தாலேலோ. (52)

| | | | |
|---|---|---|---|
| வெய்ய | கொடிய | அஞ்சனமும் | மையையும் |
| கலைப்பாகி | ஆண்மானை வாஹநமாக நடத்தும் துர்க்கையானவள் | சிந்துரமும் | சிந்தூரத்தையும் |
| | | கொண்டு | எடுத்துக் கொண்டுவந்து |
| மெய் | திருமேனிக்கு | உவளாய் நின்றாள் | கொஞ்சம் விலகி நின்றாள். |
| திமிரும் | பூசப்படும் | | |
| நானம் பொடி யோடு | வாஸனைப் பொடியோடு | ஐயா | ஸ்வாமியானவனே! அழேல் அழேல் தாலேலோ. |
| மஞ்சளும் | மஞ்சளையும் | அரங்கத்து | ஸ்ரீரங்கத்தில் |
| செய்ய | சிவந்தும் | | |
| தட | விசாலமுமான | அணையானே | படுக்கையுள்ளவனே! தாலேலோ. |
| கண்ணுக்கு | திருக்கண்களுக்கு | | |

மெய்திமிரும் என்றது திருமஞ்சனத்திற்குப் பிறகு திருமேனியிற் பூசுகைக்குரியதென்பதைத் தெளிவிக்கவாகும். வெய்ய என்பது கலைக்கு விசேஷணம்; அல்லது துர்க்கைக்கே விசேஷணமாம். "வெம்மை = அவளுடைய ஸ்வாதந்த்ர்யமாகவுமாம்" என்றார் திருவாய்மொழிப்பிள்ளை. "நாசயெயாமி தேவஷாம் ஸ்ரநாமி அ நராஸ ஸவீ। உமெதஷதி ஸசகாஸகீ விஜயா வெஷ்ணவீதி அ" என்ற விஷ்ணு துர்க்கை இவள். 'இவள் நமக்குப் பெண்ணாகப் பிறந்தும், வசுதேவரால் கொண்டுபோகப்பட்டு, கம்ஸனால் ஓங்கிக் கல்லின்மேல் எறியப்பட்டிருந்தாலும், "கிம் மயா ஹதயா மந்த ஜாதः வமூ தவாஷகஜ் யதகுவா வமிவஷுஸுதாஃ" (என்னை ஏன் வீணே வதைக்கிறாய். உன்னைக் கொல்லுகிறவன் எங்கேயோ பிறந்திருக்கிறான்) என்றொரு கொடிய வார்த்தையை ஸ்வதந்த்ரமாய்ச் சொல்லிப் போக வேணுமா. அதனாலல்லவோ நம் கண்ணனுக்கு க்ஷணந்தோறும் விபத்துக்கள் வந்த வண்ணமிருக்கின்றன என்று மனம் கொதித்து யசோதை, 'வெய்ய' என்றாளென்று கருத்தாகும். அந்தக் குற்றத்தைக் களையவே போலும் இப்போது இங்ஙனம் அவள் நடந்து கொள்வது. கலைப்பாகி = வித்யாகலைகளை நடத்தும் ஸரஸ்வதி என்று முதலில் திருவாய்மொழிப்பிள்ளை சொன்ன பொருள். இரண்டாவது பொருள் விஷ்ணு துர்க்கை என்றது. அரங்கத்தணையானே: நன்றாய் படுக்காமல் எழுந்திருப்பவன் போலிருந்தபோது 'குடந்தைக் கிடந்தானே' என்றாள். இப்போது நன்றாகப் படுத்தானாகையாலே இப்படிச் சொன்னதாம். க௯.

10. வஞ்சனையால்வந்தபேய்ச்சிமுலையுண்ட
அஞ்சனவண்ணனையாய்ச்சிதாலாட்டிய
செஞ்சொல்மறையவர்சேர்புதுவைப்பட்டன்சொல்
எஞ்சாமைவல்லவர்க்கில்லையிடர்தானே. (53)

| | | | |
|---|---|---|---|
| செம் சொல் மறையவர் | அழகிய சொற்களையுடைய வேதங்களைக் கற்றவர் | வந்த பேய்ச்சி முலை உண்ட | வந்தவளான பூதனையின் ஸ்தன்யத்தை உண்டவனும் |
| சேர் | சேர்ந்திருக்கும் | அஞ்சனம் வண்ணனை | மையின் நிறமுள்ளவனுமான கண்ணனை |
| புதுவை | ஸ்ரீவில்லிபுத்தூரில் (இருக்கும்) | ஆய்ச்சி தாலாட்டிய சொல் | யசோதை தாலாட்டின சொற்களான இப்பாசுரங்களிலே |
| பட்டன் | பட்டநாதனு (பெரியாழ்வாரு)டைய— | எஞ்சாமை வல்லார்க்கு | சப்தஜ்ஞான அர்த்தஜ்ஞானங்களிலே குறைவிராதபடி ஸமர்த்தரானவர்கட்கு |
| வஞ்சனையால் | (ஸாது வேஷம்பூண்டு) வஞ்சிக்கும் பாவத்தோடே | இடர் | இடைஞ்சல், துன்பம் |
| | | இல்லை தான் | ஏற்படாது. |

மறையவர் சேர். எம்பெருமானுடைய விசேஷானுக்ரஹத்தாலே ஸகல வேத வேதார்த்தங்களை விசதமாக ஸாக்ஷாத்கரித்த இவ்வாழ்வாரோடு சேர்ந்திருப்பது அவர்களுக்கு மறையின் சொற்களிலுள்ள செம்மையறிய வழியா

யிற்று. முன் திருமொழியிலே ஒவ்வொரு அவயவமாகத் திருமேனியை யனுபவித்து இத் திருமொழியிலே அவற்றிற்கேற்ற அவன் திருவாபரணங்களை யனுபவித்தார். ப்ரம்ம ருத்ராதிகள் எல்லோரும் அவனுக்கு விதேயர்கள் எனச் சொல்லி அவன் மேன்மையையுமுணர்த்தியருளினார். ம.

ப்ரபந்தரக்ஷையில் பெரியாழ்வார் திருமொழி 1. 4.

மாணிக்கங்கட்டி உரை முற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன்திருவடிகளே சரணம்.

——:o:——

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன்திருவடிகளே சரணம்.

## பெரியாழ்வார்திருமொழி 1. 5. (அம்புலியழைத்தல்).

# தன்முகத்து.

மாணிக்கங்கட்டியிற் சொன்னபடியிலுள்ள யசோதைப்பிராட்டி குழந்தைக்குத் தவழ்ந்து விளையாடும் பர்வம் வந்ததும் நிலாமுற்றத்திலே நின்று அம்புலி யழைத்தல் செய்து களிக்கிறாள். அம்புலி யென்றது சந்திரன்.

1. தன்முகத்துச்சுட்டி தூங்கத்தூங்கத்தவழ்ந்துபோய்
பொன்முகக்கிண்கிணியார்ப்பப்புழுதியளைகின்றான்
என்மகன்கோவிந்தன்கூத்தினையிளமாமதீ
நின்முகங்கண்ணுளவாகில்நீயிங்கேநோக்கிப்போ. (54)

| | | | |
|---|---|---|---|
| இள மா மதீ | இளமையோடு கூடிய பூரண சந்திரனே! | பொன் முகம் கிண்கிணி | பொன்னால் செய்யப்பட்ட முகத்தையுடைய சதங்கைகள் |
| நின்முகம் கண் உளவாகில் | உன்னிடம் கண்கள் இருக்கின்றனவானால், | ஆர்ப்ப | த்வனிக்கும்படியும் |
| நீ இங்கே | நீ இவ்விடத்தில் | தவழ்ந்து போய் | முழங்காலாலே நகர்ந்து (நிலாமுற்றத்துக்குச்) சென்று |
| தன்முகத்து | தன்னுடைய திருமுகத்திலே (தொங்கும்) | புழுதி | பொடி மண்ணை |
| சுட்டி | சுட்டியென்னும் பூஷணமானது | அளைகின்றான் | அள்ளிச் சொரிகிற |
| | | என் மகன் | எனது புத்திரனை |
| | | கோவிந்தன் | கோவிந்தனுடைய |
| தூங்க தூங்க | அசைந்து கொண்டேயிருக்கும்படியும் | கூத்தினை | கூத்தை |
| | | நோக்கி போ | நன்றாய் பார்த்துப் போ. |

கிண்கிணி யென்று இங்கே, மாணிக்கங் கட்டியிற் சொன்னபடி அரையிலும் பாதங்களிலுமுள்ள சதங்கைகளை யெல்லாம் சொல்லுகிறதாம். கிண் கிண் என த்வனிக்கும் பூஷணம் கிண்கிணி எனப்படும். சப்திப்பதற்காக வெண்கலத்தினால் செய்து அழகுக்காக முகத்தில் ஸ்வர்ணபிந்து சேர்த்திருப்பதால் பொன்முகக்கிண்கிணி என்றதாம். சந்திரன் பர்வநாளிலே மஹத்தாய் பூரணமாயிருந்ததால் மாமதி. உதித்த பிறகு வெகு நாழிகை

யாகாததால் பாலசந்திரன் ; இளமை யுள்ளவனுவான். நின்முகம் என்பதற்கு உன் முகத்தில் என்றும் பொருள் கூறுவர். சந்திரனுக்குக் கண்கள் இருப்பது எப்படி தெரியவில்லையோ, அப்படி முகமிருப்பதும் தெரியவில்லையே ; கண்கள் பெரும்பாலும் முகத்தில் இருப்பவை யாகையால் முகமென்பது வீணுகுமென்றெல்லாம் நினைத்து வேறு விதமாக உரை செய்தது. 'புழுதியளை வதற்காக முற்றத்திலே தவழ்ந்து சென்றவன் இப்போது உன்னைப் பார்த்துக் கூத்து செய்கிறுன். இதைப் பார்த்துவிட்டுப்போ' என்றனள். க.

2. என்சிறுக்குட்டனெனக்கோரின்னமுதெம்பிரான்
தன்சிறுக்கைகளாற்காட்டிக்காட்டியழைக்கின்றுன்
அஞ்சனவண்ணனேடாடலாடவுறுதியேல்
மஞ்சில்மறையாதேமாமதீமகிழ்ந்தோடிவா. (55)

| சொல் | பொருள் |
|---|---|
| மா மதீ | அழகிய சந்திரனே ! |
| என் சிறு குட்டன் | எனது சிறிய குழந்தையும் |
| எனக்கு ஓர் இன் அமுது | எனக்கு ஒப்பற்றதும் இனியதுமான அம்ருதமும் |
| எம் பிரான் | எங்களுக்கு உபகாரகனுமான கண்ணனுனவன் |
| தன் சிறு கைகளால் | தன்னுடைய சிறிய கைகளினுலே |
| காட்டி காட்டி அழைக் கின்றன் | உன்னையே பல முறை சுட்டிக் காட்டியழைக்கிறுன். |
| அஞ்சனம் வண்ணனேடு | மையின் நிறமுள்ள அவனேடு |
| ஆடல் ஆட | விளையாட்டுக்கள் செய்ய |
| உறுதி ஏல் | பொருந்துகிறுயாளுல் |
| மஞ்சில் | மேகத்தில் |
| மறையாதே | மறைந்து விடாமல் |
| மகிழ்ந்து ஓடி வா | நல்ல ஸமயம் வாய்த்ததென்று மகிழ்ச்சியுடன் ஓடி வருவாயாக. |

குழந்தை சந்திரனை யழைத்துத்தரவேணுமென்று கூத்து செய்தது. சந்திரன் இறங்கி வரக் கூடியவனல்லன் என வுணர்ந்தவளாகையாலே யசோதையானவள், குழந்தைக்காக அவனைக் கூப்பிட்டு, பார்க்கச் சொல்லத் தொடங்கி, நோக்கிப்போ என்று சொல்லிவிட்டாள். போகச் சொல்லுகிறுளே; போய் விடுவனே என்று குழந்தை நினைத்தது. நிமிர்ந்து பார்த்தது. ஆகாயத்தில் அவனுக்குக் கீழே மேகங்கள் ஸஞ்சரியா நின்றன. அப்போது சந்திரனே போய் விடுவதாக நினைத்தது. கனத்த மேகத்திஞல் மூடப்பட்டபோது போய்விட்டானென்றே எண்ணிற்று. பிறகு மெலிந்த மேகங்கள் வந்தபோது இஷ்டமிராமல் சந்திரன் ஒளித்து வருகிறுனென்று கொண்டது. ஆயினும் அதிக ஆவலினுலே நேரில் காட்டிக் காட்டி, அவனையுமழைக்கச் செய்துத் தானும் நேரில் கையால் அழைத்தது. இத் தருணத்திலே யசோதை இவ் வண்ணம் சொல்லி அழைக்கிறுள். அஞ்சனவண்ணன் :—நீ வந்து சேருவாயாளுல் உங்களிருவருக்கும் சேர்த்தி அழகாயிருக்கும். விளையாடலாம். மஞ்சு-மேகம். அது அஞ்சன வண்ணமாயினும் உன்னை மறைக்கும். உறுதி-உறு என்னும் வினையினுலான இ விகுதி பெற்ற முன்னிலை யொருமை வினைமுற்று. உ.

3. சுற்றுமொளிவட்டஞ்சூழ்ந்துசோதிபரந்தெங்கும்
எத்தனைசெய்யிலுமென்மகன்முகம்நேரொவ்வாய்
வித்தகன்வேங்கடவாணனுன்னைவிளிக்கின்ற
கைத்தலம்நோவாமேஅம்புலீகடிதோடிவா. (56)

| | | | |
|---|---|---|---|
| அம்புலீ | சந்திரா ! | நேர் ஒவ்வாய் | ஸமனாகவே மாட்டாய். |
| ஒளி வட்டம் | ப்ரபாமண்டல (பரிவேஷ) மானது | | |
| சுற்றும் | எல்லா பக்கங்களிலும் | வித்தகன் | விசித்ர சக்த்தியுள்ளவனும் |
| சூழ்ந்து | (உன்னைச்) சூழ்ந்து கொண்டும் | வேங்கடம் | திருவேங்கட மலையிலே |
| சோதி | (உன்) நிலவொளியானது | வாணன் | (வாழ்நன்) வாழ்வோனுமான (என் மகன்) |
| எங்கும் | பூமி ஆகாசம் முழுதும் | உன்னை விளிக்கின்ற | உன்னை ஸம்ஜ்ஞை செய்து கூப்பிடுகின்ற |
| பரந்து | பரவியும் | | |
| எத்தனை செய்யிலும் | இவற்றுடன் நீ எவ்வளவு குளிர்ந்தவனாகவும் உயர்ந்தவனாகவும் உன்னைச் செய்து கொண்டாலும் | கைத்தலம் | கரதலமானது |
| | | நோவாமே | நோவாதபடி |
| என் மகன் முகம் | எனது மகனின் திருமுக மண்டலத்திற்கு | கடிது ஓடி வா | (கடுமையாக) விரைவாக ஓடி வா. |

வானத்தில் மஞ்சுகள் விலகிவிட்டன. சந்திரன் மண்டலம் கட்டி நிலவுடன் வெகு அழகாக விளங்குகிறான். ஆனால் இறங்கி வரவில்லை. அதைப் பார்த்தாள். சந்திரன் பின் வருமாறு சொல்வதாக நினைக்கும் தசையிலே நின்றாள். அதாவது—உன் குட்டன், உன் அமுது, உங்கள் பிரானால் நான் வரவேண்டுமா? உன்னுடைய தாக்ஷிண்யமும் எனக்கு எதற்கு? உன் மகன் எங்கே; நான் எங்கே! என்னுடைய மண்டலத்தையும், நிலவையும், குளிர்ச்சியையும் பார், இப்படி யுயர்ந்துள்ள என்னை இவன் கூப்பிட்டாலும் எனக்கு ஒப்பாகாதவனோடு விளையாட என் மனம் ஒப்புமா என்றவாறு. இதற்கு விடையளிக்கின்றனள். ஒளி வட்டம் சூழாமலும் சோதி பரவாமலுங் கூட நீ இருப்பதுண்டே. பிறரிடமிருந்து பிச்சை யெடுத்த சோதியல்லவா இது. உன்னுடையதன்றே. ஒருக்கால் எல்லாம் எப்போதும் உனக்கே இயற்கையாம்படி செய்து நிஷ்களங்கனுமானாலும் என் மகன்திருமுக மண்டலமென்னும் ஓர் அவயவத்திற்குக் கூட நீ ஒவ்வாய். முகம் உனக்கு மிகவும் மேலானபோது நீ எப்படி அதற்கு உவமானமாவாய். வித்தகனிடத்திலுள்ள விலாஸத்திலே உனக்கு எள்ளளவும் கிடையாதே. இதோ பார். இந்த நிலா முற்றத்திலே இருக்கிற வண்ணமாய்த் தோன்றி இப்போது திருவேங்கடத்தில் நின்றான். நீ எவ்வளவோ உயரத்திலிருக்கிறாயென்று உன்னை விரைவில் அடைவதற்காகத் தானும் திருமலையேறி நின்று உன்னைக் கூப்பிடுகிறான். இன்ன இட முன்னுடையதென்றது இராதபடி எப்போதும் திரியு முனக்கு இந்த வித்தகன் வேங்கடவாணனா குறைந்தவன். உன்னைப் போல் அவன் அலைகிறவனல்லன். ஆக ஸுகுமாரமான கைத்தலத்தைப் பார்த்து அது நோயுறாதபடி, அவன் வேண்டாமென்று சொல்லுவதற்குள் ஓடி வா.

இரவும் பகலும் ஏழ்லகும் இத் திருவேங்கடமுடையானுடைய திருவடியைப் பற்றி யல்லவா ஸர்வ ஸம்பத்தையும் பெறுவன. ஆக இரு வினையும் கடியும் இத் திருவேங்கட வாணனிடம் நீ கடிதோடிவா. வித்தகன்=ஸாமர்த்யமும் ஸர்வகாரணத்வமுமுடையவன் என்றார் திருவாய்மொழிப்பிள்ளை. (அழகாலும் குணசேஷ்டிதங்களாலும்) ஆச்சர்யப்படத் தக்கவனென்றார் மணவாளமாமுனிகள். கைத்தலம். கையை விரித்து நிமிர்த்தி யழைக்கும் போது சந்திரனுக்கு உள்ளங்கை விசேஷமாகத் தோற்றுவதால் இங்ஙன மருளிச்செய்ததாம். ௩.

4\. சக்கரக்கையன்தடங்கண்ணால்மலரவிழித்து
ஒக்கலைமேலிருந்துன்னையேசுட்டிக்காட்டுங்காண்
தக்கதறிதியேல்சந்திராசலஞ்செய்யாதே
மக்கட்பெறாதமலடனல்லையேல்வாகண்டாய். (57)

| | |
|---|---|
| சந்திரா | சந்திரனே ! |
| சக்கரம் கையன் | திருச்சக்கரத்தைக் கையிலுடைய (என் மகன்) |
| ஒக்கலைமேல் | (எனது) இடுப்பின்மேல் |
| இருந்து | இரா நின்று கொண்டு |
| தட கண்ணால் | விசாலமான கண்ணாலே |
| மலர விழித்து | (கண்) மலரும்படி திறந்து பார்த்து |
| உன்னையே சுட்டிக் காட்டும் காண் | உன்னையே குறித்துக் காண்பித்து வருவன். |
| தக்கது | (இச்சமயம்) செய்யத் தகுந்ததை |
| அறிதி ஏல் | அறிகிறாயாகில் |
| சலம் செய்யாதே | கபடம் செய்யவேண்டாம் |
| மக்கள் பெறாத | பிள்ளைகளைப் பெற்றிராதவனை |
| மலடன் | மலடனாக |
| அல்லை ஏல் | நீ இல்லையானால் |
| வா கண்டாய் | வந்து சேர். |

ஒக்கலை மேல் :—திருவேங்கடத்தில் ஏறி நின்றதோடு நிற்காமல் அதன் மேலுள்ள என் இடுப்பிலும் ஏறி நின்றான். உன்னையே : எதையோ காண்பித்து அவன் மனம் மாற்றப் பார்த்தாலும் உன்னையே வானத்தில் குறிக்கிறான். தக்கது. அவன் ஒரு கையில் ஜ்வாலாமாலியான திருச் சக்கரத்தைத் தரிப்பதற்கேற்ப மற்றொரு கையில் அம்ருதசீதமாய் சக்ராகாரமான நீ வந்து நின்றால் நன்றாகவிருக்கும். அன்றி அவன் கையில் சக்கரமிருப்பது தெரிந்து இனி இன்னது தகுந்ததென்றறிவாயானால், நீ சாக்குப் போக்கு செய்வதற்கில்லை. மக்கள் பெறாத மலடன் : ஒன்றிரண்டு பெற்றும் மலடராவாருண்டு. அழைக்கும் குழந்தையை அலக்ஷ்யம் செய்து போகிறாயாகில் பிள்ளை பெறாத முழு மலடனாகவே நீ இருக்கவேண்டும். பெரியோர்கள் இருக்கும்போது சிறு வயதில் பிள்ளை பெற்ற சில புருடர் சில காலத்திலே வெட்கப்பட்டுத் தன் குழந்தையோடு விளையாடாமல் மலடர் போலிருப்பதுண்டு. அவரும் பல மக்களைப் பெற்ற பிறகு அவ்வண்ணமிருக்கமாட்டார். சிலர் தாம் மலடரானாலும் பிறர் மக்களைப் பரிவுடன் சீராட்டி மகிழ்வதுண்டு. அவரும் ஒரு விதம் மக்களைப் பெற்றவரே யாவர். ஆக, தேவகிசிங்கத்தை

நான் சீராட்டி மகிழ்வது போல் நீயும் மகிழவேண்டுமாகையால், அவன் சக்கரத்திற்குப் பயப்பட்டு வருவதோ, வாராமற் சலம் செய்வதோ வின்றி பரிவுடன் வருவாயென்றவாறு. செய்யாதே = செய்யாமல் எனவு முரைப்பர்.

அறிதி. இது முன்பாசுரத்தில் உறுதி என்றது போன்ற வினைமுற்று. அல்லே. அல்லன் என்பது முன்னிலை யொருமையில் இவ்வாறாகும். காட்டும். காட்டுவன்; (செய்யும்) இருதிணைக்குமுரிய வருகால வினைமுற்று. காண், கண்டாய். இவை ஓர்வகை இடைச் சொற்கள்; பொருள் கொள்ள வேண்டா வென்றே பெரும்பான்மையோரின் கொள்கை. ச.

5. அழகியவாயிலமுதவூறல்தெளிவுரு
மழலைமுற்றாதவிளஞ்சொல்லாலுன்னைக்கூவுகின்றான்
குழகன்சிரீதரன்கூவக்கூவநீபோதியேல்
புழையிலவாகாவேநின்செவிபுகர்மாமதீ. (58)

| | | | |
|---|---|---|---|
| புகர் | அழகு பொருந்திய | இள | (குழந்தைப் பர்வத்திற்குத் தக்க) இளமையுடையது மான |
| மா மதீ | பூர்ண சந்திரனே! | சொல்லால் | சொல்லைக் கொண்டு |
| குழகன் | கலந்திருக்கிறவனாய் | உன்னை கூவுகின்றான் | உன்னைக் கூப்பிடுகிறான். |
| சிரீதரன் | ஸ்ரீநிவாஸனான (என் மகன்) | கூவ கூவ | பன்முறை கூப்பிடும் போதும் |
| அழகிய வாயில் | அழகு பொருந்திய திருமுகத்தில் | நீ போதி ஏல் | நீ போகிறாயாகில் |
| அமுதம் ஊறல் | அமிருதத்தின் ஊற்றினாலே | நின் சேவி | உன் காதுகள் |
| தெளிவு உறு | (சொல்லும் சில எழுத்திலுங்கூட தெளிவு பெறாததும் | புழை இல ஆகாவே | துளையில்லாதவைகளாகாவோ? |
| மழலை | நன்றாக உச்சரிக்கப்படாததும் | | |
| முற்றாத | (சில வக்ஷரங்களை விட்டு விடுவதாலே) முடிவு பெறாததும் | | |

சந்திரனே! நீ பதினாறு கலைகளும் புகரும் பெற்றுப் பூர்ணன் போலிருக்கலாம். ஆகிலும் நீ உறுப்புக்குறை யுள்ளவன். இத்தனை தரம் என் மகன் கூவுவது உன் காதிற்படவில்லை யென்றால் நீ செவிடனன்றோ? அல்லது சிரீதரன் கூவுவது கேளாது போலிருந்தால் இனியாவது செவிடனாவாய். 'நான் மக்கள் பெறாத மலடனல்லேன். வருவேன். ஆனால் சில குழந்தைகள் பிறருடன் கலந்திருப்பதில்லை. இது லோகாந்தரமாகிய தேசாந்தரத்திலிருந்து விசித்ரவடிவனான நான் வந்தால் என்னோடு கலந்திருக்குமா' என்று உனக்கு ஸந்தேஹம் வேண்டாம். என் மகன் எடுத்தார்க்கைப்பிள்ளை என்றபடி. போதி. இது முன்பாசுரத்தில் அறிதி என்றதைப் போன்றது. மழலை முற்றாத = முற்றா மழலையான; மழலைத் தனத்துக்குள்ள முற்றுதல் தானுமில்லாத மிக விளஞ்சொல் எனவு முரைப்பர். ஆகாதே எனவும் பாடம். ரு.

6. தண்டொடுசக்கரஞ்சார்ங்கமேந்துந்தடக்கையன்
கண்டுயில்கொள்ளக்கருதிக்கொட்டாவிகொள்கின்றான்
உண்டமுலைப்பாலறாகண்டாயுறங்காவிடில்
விண்டனில்மன்னியமாமதீவிரைந்தோடிவா. (59)

| | | | |
|---|---|---|---|
| விண் தனில் | ஆகாயத்தில் | கொட்டாவி கொள்கின்றான் | கொட்டாவி விடுகிறான். |
| மன்னிய | எப்போதுமுள்ள | உறங்காவிடில் | (அவன்) தூங்காவிட்டால் |
| மா மதீ | பூர்ண சந்திரனே! | உண்ட முலை பால் | (அவன்) பருகின ஸ்தன்யமெல்லாம் |
| தண்டொடு | கதையென்னும் ஆயுதத்தோடு | அறா கண்டாய் | ஜீர்ணமாக மாட்டா. |
| சக்கரம் சார்ங்கம் | சக்கரத்தையும், சார்ங்கமென்னும் வில்லையும் | | விரைந்து ஓடி வா. |
| ஏந்தும் தடக்கையன் | தாங்கும் விசாலமான திருக்கைகளையுடைய என் மகன் | | |
| கண் துயில் கொள்ள கருதி | (உன்னைப் பார்க்கும்) கண்ணுக்கு நித்திரை கொள்ள நினைத்து | | |

இப்படி இவள் சந்திரனை யழைத்துவந்தபோது குழந்தை கொட்டாவி விட்டது. 'கொட்டாவி விட்டு வயிற்றிலே வையகம் காண்பிப்பவனுயிற்றே இவன். இப்போது சந்திரனுக்கு இவன் வையகம் காண்பித்தால் இவன் பக்கல் வையகத்தினுள்ளே ஒரு சந்திரனைப் பார்த்து விண்தனில் மன்னிய சந்திரன் வாராதொழிவான்' என நினைத்தாள். பிறகு குழந்தை கண்துயில் கொள்ள விருப்பதைக் கண்டு தெளிந்து கூறுகின்றாள். பூ ஏந்தினாற்போல் பல ஆயுதங்களைச் சேர்த்துத் தரித்துத் தக்க ஸமயத்திலே ப்ரயோகிக்கும்படி விசாலமான திருக்கையுடைய என் மகன் நித்திரை செய்ய நினைத்து, அதனையே நமக்குக் கொட்டாவியைக் கொண்டு குறிப்பிடுகிறான். உலகில் நித்திரை செய்கிறவர்கள் தாங்கள் அதைக் கருதி, வாராத கொட்டாவியை வரச்செய்துகொள்வது கிடையாது. இது இவனுக்குள்ள ஏற்றம். இதுவும், உறங்காவிடில் உண்ட பால் ஜீர்ணமாகாதே என நான் அஞ்சுவதைக் கண்டு அவன் ஸங்கல்பித்துக்கொண்டதாகும். இப்படியே உறங்கும்போதே ஆயுதங்களையும் ஏவ வல்லவன். ஆக ஸத்யஸங்கல்பனான இவன் உனக்காக விழித்துக் காத்திருக்கமாட்டானாகையாலே விரைந்தோடி வா என்றவாறு. ௬.

7. பாலகனென்றுபரிபவஞ்செய்யேல்பண்டொருநாள்
ஆலினிலைவளர்ந்தசிறுக்கனவனிவன்
மேலெழப்பாய்ந்துபிடித்துக்கொள்ளும்வெகுளுமேல்
மாழைமதியாதேமாமதீமகிழ்ந்தோடிவா. (60)

| | | | |
|---|---|---|---|
| மா மதீ | பூர்ண சந்திரனே! | பண்டு ஒரு நாள் | முன் ஒரு காலத்திலே (ப்ராளயத்திலே) |
| பாலகன் என்று | (இவன்) சிறுவனென நினைத்து | ஆலின் இலை | ஓர் ஆலிலையின் மேல் |
| பரிபவம் செய்யேல் | (இவனை) அவமதிக்க வேண்டாம் | வளர்ந்த | கண்வளர்ந்த (பள்ளி கொண்ட) |

| | | | |
|---|---|---|---|
| சிறுக்கன் | சிறுவனை | பிடித்துக் கொள்ளும் | (உன்னைப் போகாதபடி) பிடித்துக் கொள்வான். |
| அவன் | அந்த முகுந்தன் | | |
| இவன் | என் மகனாயுள்ள இவன். | மாலை | (அவனது) பெருமையை |
| வெகுளும் ஏல் | (இவன்) கோபம் கொள்வனாகில் | மதியாதே | புரஸ்கரியாமல் (அஞ்சி வாராமல்) |
| மேல் எழ | (இவன் திருமேனி) மேலே எழும்ப | மகிழ்ந்து ஓடி வா | (அழைக்கிறவனுடைய ஸௌந்தர்ய ஸௌஜன்யாதிகளிலே ஈடுபட்டு) களித்து ஓடி வா. |
| பாய்ந்து | (உன்மேல்) பாய்ந்து | | |

உண்ட பாலைத் தூங்காமல் ஜரிப்பித்துக் கொள்ள முடியாதபடி பாலகனாய்விட்ட பிறகு இவனுக்கு ஆயுதங்கள் எங்கே? இவன் என்ன செய்ய முடியுமென்று நினைத்துவிடாதே. மோசம் போவாய். அண்ட சராசரங்களை அடங்க விழுங்கி ஒரு சிறிய ஆலிலை மேல் பள்ளிகொண்டவனல்லவோ இவன். அந்த ரூபத்தை விட ஸ்தன்யத்தை உண்ட இந்த ரூபம் சிறியதா? விரைந்தோடி வா. உனக்கு வர எத்தனை நிமிஷம் வேண்டுமோ, அவற்றிற்கும் குறைவான காலவளவுக்குள்ளேயே எழும்பி உன்னைப் பிடித்து இழுத்து வந்து, தான் கருதின காலத்திலேயே உறங்கவும் செய்யுமென்றவாறு. மாலை மதியாதே=எம்பெருமானை அவமதியாமல் எனவு முரைப்பர். மாலை பாலகனென்று மதியாமல் = நினைக்காமல் என்றுமன்வயம் செய்வர். எ.

8. சிறியனென்றென்னிளஞ்சிங்கத்தையிகழேற்கண்டாய்
சிறுமையின்வார்த்தையைமாவலியிடைச்சென்றுகேள்
சிறுமைப்பிழைகொள்ளில்நீயுமுன்தேவைக்குரியைகாண்
நிறைமதிநெடுமால்விரைந்துன்னைக்கூவுகின்றான். (61)

| | | | |
|---|---|---|---|
| நிறைமதி | மாமதியே! | கேள் | கேட்டுத் தெரிந்துகொள். |
| என் இள் சிங்கத்தை | எனது சிங்கக்குட்டியான குழந்தையை | சிறுமை | இவனது சிறுமையானது |
| சிறியன் என்று | (இவன்) சிறுவனென்று | பிழை கொள்ளில் | தவறுதலைக் கொள்ளுமாகில் |
| இகழேல் கண்டாய் | பரிபவிக்காதே. | நீயும் | (ஸ்வதந்த்ரனல்லாத) நீயும் |
| சிறுமையின் | (இவனது) பால்யத்தினுடைய (அது செய்துள்ள) | உன் தேவைக்கு | உனக்கு வேண்டியதற்கு |
| வார்த்தையை | செய்தியை | உரியை காண் | அர்ஹனாவாய். |
| மாவலி இடை | மஹாபலியினிடம் | நெடுமால் | (நீண்ட பெருமையும் வ்யாமோஹமுமுடைய) விஷ்ணுவானவன் |
| சென்று | போய் | | விரைந்து உன்னை கூவுகின்றான். |

இவன் ஆலினிலையிற் கண்வளர்ந்த சிறுவனானாலென்ன? சிறுவனாயிருந்தும் பாய்ந்து பிடித்துக் கொள்வன் என்பதை அப்போதும் கண்டதில்லையே என நினைக்க வேண்டாம். மதி நிறைந்த நன்னாளிலுள்ள இந்த யசோதை யிளஞ் சிங்கமே அந்திப்போதில் அவதரித்து அவ்விளமை மாறாதபோதே அஸுரனைப் பிளந்த சிங்கம். சிங்கம் குட்டியானாலும் சீறுவதிற் குறைவில்லை. சிறுமையின் என்றவிடத்தில் சிறுமையில் எனப் பிரித்து 'சிறுமையில்

நடந்த' எனவும் சிலருரைப்பர். சிறுமை இத்யாதி: அவன் விளையாட உன்னை அழைத்துவிட்டுச் சிறுமையாலேயே அதினின்று தவறி வேறொன்றை வேண்டினல் நீயும் உனக்கு வேண்டியபடி இருக்கலாம். அப்படி யில்லையே. அவன் மதியுடன் பரிவுடன் கூவுகின்றனே என்றவாறு.

அல்லது, சிறுமைப் பிழை = அவன் சிறுமையினல் வந்த உன் குற்றத்தை, கொள்ளில் = நீ அறிந்தாயாகில் என்று பொருள். ஒரு ஸமயத்திலே இவன் ஸாதுச்சிறுவனயிருந்து மாவலியை மயக்கி மாவுருவெடுத்துச் செய்த செய்கையை அவனிடமே கேட்டுத் தெளிந்துகொள். (அதற்கும் நீ மண்ணுலகம் வழியாகவே பாதாளம் போகவேணும்.) அவனிடம் போனல், சிறுமையைக் கண்டு நீ செய்தது குற்றமென்பது விளங்கும். பிறகாவது மாவலியைப்போல் நீயும் மேதாவியாயிருந்து உன் இஷ்டத்தைப் பெறலாம் என்றபடி.

'அவன் சிறுமையை மாற்றிக்கொண்டால் நீ உன் தேவைக்கு அர்ஹனவாயே' என்று பரிஹாஸோக்தியுமாம். பிறகு திண்டாட்டம் தான் எனக் கருத்து. 'சிறுமை = சிறுமையென்று நீ நினைத்தது, பிழை = பெருங்குற்றம் என்று நீ தெளிந்தாயாகில், நீ உன் தேவைக்கு = அவன் விஷயத்தில் செய்யக்கூடிய ஏவல்தேவைக்கு அர்ஹனவாய்' என்று வ்யாக்யானிப்பது முணர்க. பிழை கொள்ளில் = நீ அவனிடம் குற்றம் செய்தால், சிறுமை = இது சின்னத்தனம். ஏனெனில், நீயும் 'ஸீக்ஷாஹுாஸ வாத: வவதெ' என்றபடி இதர தேவதைகளைப் போலவும் மாவலி முதலான வசுரரைப் போலவும், உன் தேவைக்குரியை = அவனிடம் கைங்கர்யம் செய்யப் பாத்யதை யுள்ளவன் என்று முரைக்க. நீ இறங்கி வந்தால் தான் நீ இப்போது செய்யும் தொழிலும் உனக்கு நிற்குமெனவும் கருத்தாம். உரியை: இது 4-ம் பாசுரத்தில் 'அல்லே' போன்றதாம். நிறைமதி: நெடுமாலும் நிறைமதி = ஸர்வஜ்ஞன். அ.

9. தாழியில்வெண்ணெய்தடங்கையாரவிழுங்கிய
பேழைவயிற்றெம்பிரான்கண்டாயுன்னைக்கூவுகின்றான்
ஆழிகொண்டுன்னையெறியுமையுறவில்லைகாண்
வாழவுறுதியேல்மாமதீமகிழ்ந்தோடிவா. (62)

| | | | |
|---|---|---|---|
| மா மதீ | பூர்ண சந்திரனே! | உன்னை கூவுகின்றன் கண்டாய் | உன்னைக் கூப்பிடுகிறான். |
| தாழியில் | குடத்திலுள்ள | ஆழி கொண்டு | (இனி நீ வராமலிருந்தால்) திருச்சக்கரத்தை யெடுத்து |
| வெண்ணெய் | வெண்ணெய் முழுவதும் | உன்னை எறியும் | உன்னை அழிக்கும்; |
| தட கை ஆர | விசாலமான கையில் பொருந்த (அதனை) | ஐயுறவு இல்லை | ஸந்தேஹம் இல்லை. |
| விழுங்கிய | விழுங்கினவனும் | வாழ | வாழ்வதற்கு |
| பேழை | பெருமையுள்ள அல்லது பெட்டி போன்ற | உறுதி ஏல் | கருதுகிறாயானல் |
| வயிறு | வயிற்றையுடையனுமான | | மகிழ்ந்து ஓடி வா. |
| எம் பிரான் | எமக்கு உபகாரன இவன் | | |

இவ்வளவு சொல்லியும் வாராததினால் கடுமையாகப் பேசுகிறாள். 'இவன் இஷ்டப்படி நாம் இருக்கவேண்டு' மென்று தீர்மானித்துக் குழந்தைக்குப் புசிப்பது ஜரிக்கமாட்டாதே என நினைக்காமல் கோகுலத்திலுள்ள வெண்ணெய் எல்லாம் விழுங்கும்படி பார்த்து நிற்கிறோம். ஆகவே இவன் எமக்குப் பிராணனாகிறான். இப்படி நாங்கள் உபசரிக்கும் கண்ணனிடம் உனக்கு வந்து போவதில் கூட விருப்பமில்லை யாகில் இவன் சக்ராயுதமே உன்னைத் தாழி யைப்போல் உடைக்கும். உனக்காக இவன் எழும்பிப் பாய்வதோ, த்ரிவிக்ர மாவதாரம் செய்வதோ வேண்டுவதில்லை. ஆகையால் ஜீவனோஜ்ஜீவனங்களை யபேக்ஷிக்கிறாயாகில் நல்ல காலம் பிறந்ததென்று மகிழ்ந்தோடி வா என்ற வாறு. கூ.

10. மைத்தடங்கண்ணியசோதைதன்மகனுக்கிவை
ஒத்தனசொல்லியுரைத்தமாற்றமொளிபுத்தூர்
வித்தகன்விட்டுசித்தன்விரித்ததமிழிவை
எத்தனையுஞ்சொல்லவல்லவர்க்கிடரில்லையே. (63)

| | |
|---|---|
| மை தட கண்ணி அசோதை | மையிட்ட விசாலமான கண்களையுடைய யசோதையினால் |
| தன் மகனுக்கு | அவளுடைய மகனாகத் தோன்றின எம்பெருமானுக்கு |
| ஒத்தன இவை | ஒத்திருப்பனவான இவ் விஷயங்களை |
| சொல்லி | விளக்கி |
| உரைத்த மாற்றம் | உச்சரிக்கப்பட்ட சொற்களான, |
| ஒளி | ப்ரகாசமுள்ள |
| புத்தூர் | ஸ்ரீவில்லிபுத்தூரைச்சேர்ந்த |
| வித்தகன் விட்டு சித்தன் | ஜ்ஞானியான விஷ்ணு சித்தன் |
| விரித்த | விரித்துச் சொன்ன |
| தமிழ் இவை | இத் தமிழ்ப் பாசுரங்களை |
| எத்தனையும் | எவ்வளவு முடியுமோ அவ்வளவு |
| சொல்ல வல்லவர்க்கு | சொல்ல ஸமர்த்தரானவர்கட்கு |
| இடர் | இடைஞ்சல், துன்பம் |
| இல்லை | வருவதில்லை. |

இதென்ன அஞ்சனவண்ணனை எப்போதும் பார்ப்பதால் ஏற்பட்ட வர்ணமோ என்னும்படி இட்ட மை கலந்து கண் முற்றிலும் பாவும்படி, புழுதியளைந்த மகனுக்குப் போதுபோக்காக ஆயாஸப்பட்டு அம்புலியழைத்து யசோதைப் பிராட்டி சொன்ன சொற்களே இவை. தமிழில் இப்படிப் பாட்டுக்களாக அமைந்திருப்பதே இங்குள்ள விசேஷம். இப்படி ஜ்ஞான பக்தி ப்ரகர்ஷபரிவாஹமாயுள்ள பாசுரங்களை ஓதுகிறவர்கட்கு இடரொன்றுமில்லை யென்றபடி. ய

ப்ரபந்தரக்ஷையில் பெரியாழ்வார் திருமொழி 1. 5.

தன்முகத்து உரை முற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

—:o:—

ஸ்ரீ :

ஆழ்வார் எம்பெருமானர் தேசிகன் திருவடிகளே சரணம்.

## பெரியாழ்வார் திருமொழி 1. 6. (செங்கீரையாடுதல்)

# உய்யவுலகு.

தவிழ்தலுக்குப் பிறகு செங்கீரையாடுதல், அதாவது பிள்ளை தனது கைகளையும் முழந்தாள்களையும் ஊன்றித் தலையை நிமிர்த்துக்கொண்டு ஆடுதல். இது தானே ஆடுவதுமாம், பெரியோர் ஆட்டுவிப்பதால் ஆடுவது மாம். (செம்மையான கீரை செங்கீரை. குழந்தையின் கைகால்கள் சேர்ந்த வொரு செய்கையைச் சொல்லும்போது கீரை யென்னும் பதத்திற்கு ப்ரயோகம் உண்டு போலும். குழந்தையின் கால்கைகளைச் சேர்த்துப் பிடித்துத் தொங்கவிட்டு ஊசலாட்டும் விளையாட்டை, 'கீரைக்குத் தண்ணீ ரிறைத்தல்' என்கின்றனர். செம்மையாவது கைகால்கள் கீழ்மேலாகாது தரையிற் பதிவது போன்றது?) இப்படி ஸஞ்சரிக்கத் தொடங்கி ஆடும் குழந்தையை மேன்மேல் ஆடச் செய்வதற்காகத் தாய் முதலானோர் சொல் லும் சொற்களும் இதைப் பற்றினவையாகையாலே செங்கீரையாம். ஆக பிள்ளைக்கவியில் ஒரு பாகமும் செங்கீரை எனப்படுகிறது. இங்குப் பாசுரங் களில் 'ஆடுக செங்கீரை' என்னுமிடத்தில் ஆடுவதே அதன் பொரு ளாகும்.

1. உய்யவுலகுபடைத்துண்டமணிவயிறு
   ஊழிதோறூழிபலவாலினிலையதன்மேல்
   பையவுயோகுதுயில்கொண்டபரம்பரனே
   பங்கயநீணயநத்தஞ்சனமேனியனே
   செய்யவளின்னகலஞ்சேமமெனக்கருதிச்
   செல்வுபொலிமகரக்காதுதிகழ்ந்திலக
   ஐயவெனக்கொருகாலாடுகசெங்கீரை
   ஆயர்கள்போரேறே யாடுகவாடுகவே. (64)

| | | | |
|---|---|---|---|
| உய்ய | (சேதநர்கள்) உஜ்ஜீவிப்பதற்காக | ஆலின் இலை அதன் மேல் | ஆலிலையின் மேலே |
| உலகு படைத்து உண்ட | உலகத்தை ஸ்ருஷ்டித்து உட்கொள்ளுகிற | பைய | மெள்ள |
| மணி வயிறு | அழகிய திருவுதரத்தை யுடையவனே! | உயோகு துயில் கொண்ட | யோக நித்திரை செய்கிற |
| ஊழி | நெடுங்காலமாய் (அநாதியாய்) | | |
| பல ஊழி தோறு | ஒவ்வோர் அவாந்தர ப்ரளயத்திலும் | பரம் பரனே | ஸர்வோத்க்ருஷ்டனே! (கடவுளே) |

| | |
|---|---|
| பங்கயம் நீள் நயனத்து | தாமரையிதள் போல் நீண்ட திருக் கண்களை யுடைய |
| அஞ்சனம் | மை போன்ற |
| மேனியனே | திருமேனியுடையவனே ! |
| ஐய | ஸ்வாமியே ! |
| நின் அகலம் | உன் திருமார்பானது |
| செய்ய வள் | செந்தாமரையாளான பிராட்டிக்கு |
| சேமம் | க்ஷேமஸ்தானம் |
| என கருதி | என்று நினைத்து |
| செல்வு பொலி மகரம் | செல்வத்தினால் சிறப்புற்ற மகரகுண்டலங்களை யுடையவையான |
| காது | திருக்காதுகள் |
| திகழ்ந்து இலக | ஒளி செய்து பிரகாசிக்க |
| எனக்கு | எனக்காக |
| ஒரு கால் | இன்னும் ஒரு தரம் |
| செங்கீரை ஆடுக | செங்கீரை யென்னுமாட்டத்தைச் செய். |
| ஆயர்கள் | இடையர்களுடைய |
| போர் ஏறே | (ஸமரபுங்கவனே) சண்டை செய்து ஜயம்பெறும் ரிடபம் போன்றவனே ! ஆடு க. ஆடுக. |

*முதலில் ஊழி யென்பது இதற்குமுன் நடந்த ப்ரம்மகல்பங்களனைவற்றையும் குறிக்கும். ஊழிதோறு என்றதே போதுமாயிருக்க 'பலவூழிதோறு' என்றது ஒரே ஸமயத்தில் பல ப்ரம்மாண்டங்களுக்குத் தனித்தனியேற்படும் அவாந்தரப்ரளயங்களை யெல்லாம் குறிப்பதற்காம். 'ஊழி தோறூழி' (திருவாய். 2. 1. 4—5; 7. 3. 11.) என்ற விடங்களிற்போல் பல ஊழி ஊழி தோறு என ஏகாந்வயமும் செய்வர்.*

*உயோகு—யோகம். துயில்—நித்திரை. அவாந்தர ப்ரளயத்திலே எம்பெருமான் அனைவற்றையும் வயிற்றிலே வைத்து அந்தர்முகமாக அவற்றின் க்ஷேமத்தைச் சிந்திப்பதாலும், அப்போது பாஹ்யவ்யாபாரங்களுக்கு அவகாசமில்லையாகையாலும் அவன் வ்யாபாரத்தை யோகநித்ரை யென்கிறது. பரம்பரன். பராத்பரன். அன்றி பரம்பதம், பரஞ்சுடர், பரம்புருடன் என்றாற்போல இப்பதம் தனக்குமேற் பரனிராத பரனைச் சொல்லுகிறதாம். கருதி என்றது ஆடுக என்பதோடு சேரும். பிராட்டிக்கு ஸ்தானமென்று நினைத்து ஆடு என்பதால் திருமார்பு பலபடி அசையாதபடி முன்னும் பின்னுமாகவே ஆடு எனக் கோரினதாம். முழந்தாள்களையும் கைகளையும் கீழ் ஊன்றி முகத்தை நிமிர்த்துக்கொண்டிருக்கும் தருணத்தில் ஏறு போலிருப்பதாகையாலே ஏறே என்றது. விருடபாசுரன் முதலாகப் பல பகைவரை யழித்து ஆயர்களுக்கு க்ஷேமம் செய்துவருவதால் போரேறு என்றதாம். க.*

2. கோளரியின்னுருவங்கொண்டவுணனுடலங்
குருதிகுழம்பியெழக்கூருகிராற்குடைவாய்
மீளவவன்மகனைமெய்ம்மைகொளக்கருதி
மேலையமரர்பதிமிக்குவெகுண்டுவர
காளநன்மேகமவைகல்லொடுகால்பொழியக்
கருதிவரக்குடையாக்காலிகள்காப்பவனே
ஆளவெனக்கொருகாலாடுகசெங்கீரை
ஆயர்கள்போரேறே யாடுகவாடுகவே. (65)

| | |
|---|---|
| அவன் மகனை | அந்த ஹிரண்யனுடைய மகனான ப்ரஹ்லாதனை |
| மீள | மீளும்படி (ரக்ஷை பெறும் படி) |
| மெய்ம்மை கொள | ஸத்யவாக்கைக் கொள்ளும்படி |
| கருதி | ஸங்கல்பித்து |
| கோள் | வலிமை பொருந்திய |
| அரியின் | சிங்கத்தின் |
| உருவம் | ரூபத்தை |
| கொண்டு | எடுத்து |
| அவுணன் உடலம் | ஹிரண்யாஸுரனுடைய சரீரத்தை |
| குருதி | (அதன்) ரக்தமானது |
| குழம்பி எழ | கலங்கிக் கிளம்பும்படி |
| கூர் உகிரால் | கூர்மையுள்ள நகங்களாலே |
| குடைவாய் | துளைத்தவனே! (கோவர்த்தன பூஜை செய்வித்த போது) |
| மேலை | மேலேயுள்ள |
| அமரர் பதி | தேவர்களின் அதிபதியான இந்திரனானவன் |
| மிக்கு வெகுண்டு வர | மிகவும் கோபித்து வந்த போது (அவன் ஆஜ்ஞையாலே) |
| காளம் | கறுத்த |
| நல் | சிறந்த |
| மேகம் அவை | மேகங்கள் |
| கல்லொடு | ஆலாங்கட்டிகளோடு |
| கால் பொழிய | கால் வாங்கி வர்ஷிக்கும் போது |
| கருதி | பூஜை பெற்ற மலையால் காக்க ஸங்கல்பித்து |
| வரை | கோவர்த்தன மலையானது |
| குடை ஆ | குடையாக, |
| காலிகள் | கோக்களை |
| காப்பவனே | காத்தவனே! |
| ஆள | தலைவனே! |
| | எனக்கு—ஆடுக ஆடுக. |

கோளக் கருதி என்பதற்கு கொண்டு என்றதோடும், உடலம் என்றதற்கு குடைவாய் என்பதோடும் அந்வயம். மகனை என விரண்டாம் வேற்றுமை கருதி என்பதோடு அந்வயத்தால் வந்ததாகும். அவன்மகன் மீளும்படி மெய்ம்மை கொள்ளும்படி எம்பெருமான் கருதி என்றபடி. ஆக 'எங்கு உளன்' என்று கேட்ட இரணியனிடம், 'யான் உபாஸிக்கும் ஹரி எங்குமுளன்' எனவிடை தந்த ப்ரஹ்லாதனுடைய வாக்கை ஸத்யமாக்கவேண்டும். அவ்வண்ணம் செய்து, பிறந்தது முதல் நம்மைக் கண்ணாரக் காணப் பேராவல் கொண்டு வருந்தும் ப்ரஹ்லாதாழ்வானை அவ்வருத்தத்திலிருந்து மீட்கவேண்டும். இப்படி ப்ரத்யக்ஷமாக வந்தபோது மனம் மாறினால் இரணியனையும் மீட்கப் பார்க்க வேண்டும். அவன் போர் புரியவே நின்றால் அப்போது அவனை வதித்தே மீட்க வேண்டும் எனக் கருதி, 'ஸத்யம் விதாதும் நிஜப்ருத்யபாஷிதம்' என்கிறபடி செய்யுமவதாரத்தை ப்ரம்மாவினிடம் இரணியன் பெற்ற வரங்களுக்கு விரோதம் வாராதபடியே செய்து அவனை முடிப்பதற்காக எம்பெருமான் தனக்கு இயற்கையிலுள்ள மானிட உருவத்திலே ப்ரஹ்லாதன் சொன்ன ஹரி என்னும் பதத்திற்குப் பொருளாய் மிருகேந்த்ரமான சிங்கத்தின் உருவத்தைச் சேர்த்தவதரித்து இரணியனுடலைப் பிளந்தானென்றதாம்.

உடலைக் கிழித்து, மீள—மீண்டும் குடைவாய்—தேங்கின ரத்தத்தைத் திறந்து விடுவாய் என்றார் திருவாய்மொழிப்பிள்ளை. அந்த விரணியன், நாம் சொன்னது சரியல்லவென்று மனது புரிந்து, மகனை மெய்ம்மை கொளக் கருதி=தன் மகனை ஸத்யவாதியாக அவன் நினைக்கும்படிக் கருதி என மணவாளமாமுனியின் உரையாம். இவ்வளவு செய்தும் இரணியன் உள்ளம்

எம்பெருமானுக்கு அநுகூலமாக மாறவில்லையென்பதை 1. 7. 9-ல் காண்க. மகனே—இத்யாதிக்கு முன் பதவுரையில் சொன்ன பொருளானது 'ஸதீர்வியாதாம் நிஜஹரதீஹாஷிதம்' என்பதை நோக்கப் பின்பற்றினதுமாம். மீளவவன் மகனே. இதனை 'ஹத்வா ஹிரண்யகசிபோ: வக்ஷோதாரணாய' எனவருளிச்செய்தார். அவுணன்=அசுரன். இப்பதம் வெகுவாய் இரண்யனை வழங்கும். அசுரர்களுக்கு என்னும் பொருளிலே 'அவுணர்க்கு' எனப் பெரிய திருமொழி 1. 8. 'கருதி' என்பதை 'மெய்ம்மை கொளக் கருதி' என்றவிடத்தில் முன்பதத்துடன் சேர்த்தது போல், பொழிய கருதி என்ற விடத்திலும் சேர்க்கலாம். அப்போது வர, பொழிய கருதி=வரும்படியும் வர்ஷிக்கும்படியும் ஸங்கல்பித்து எனப் பொருள். புல்லும் தழையும் தண்ணீரும் நிழலும் கொடுத்துக் காத்துவருவது மாத்திரமின்றி, இந்திரனுக்கு மேற்பட்ட மேன்மையு முடையது கோவர்த்தனம் என்று தெளிந்தாலொழிய கோபர்களுக்கு இந்திரனிடத்திலுள்ள மதிப்பு நன்றாக மாறாதெனத் திருவுளங்கொண்டு, 'ஹயகூர்த்யதாஹபதி:' என்கிற கணக்கிலே, இந்திரன் விவேகியாய் வெறுமனே இருந்துவிடாமல் கோபித்து வரும்படிக்கும், புஷ்கலாவர்த்தாதிகளான பெரிய மேகங்கள் பூரணமாக வர்ஷிக்கும்படிக்கும் ஸங்கல்பித்து கோவர்த்தனத்தைக் குடையாக நிற்கச் செய்தவன் என வுரைத்தவாறு. வரை குடையா. கோபரிடம் பூஜை பெற்ற கோவர்த்தனமானது தானே தனக்குப் பூஜை செய்வித்த கண்ணனைக் கைநீட்டச் செய்து அவன் விரலிலே நின்று குடையாயிருந்ததென்க. அன்றி இப்படியுமவன் கருதினனென்க. 'கல்லொடு கால்பொழிய' வென்றவிடத்தில் கால் காற்றாய் காலொடு கல் பொழிய எனவும் அந்வயம் செய்வர். கால் என்பதற்குப் பல பொருளுண்டாகையாலே உள்ளபடியே அந்வயம் கொண்டும் ஏதேனும் பொருள் காண்க. இங்கே ஷ்ஷீணாஷ்ஷீரா வஷர்யாரா: என்றது ஸ்ரீபாகவதம். 'கார் பொழிய' எனப் பாடமானபோது மழை பொழிய எனவே பொருளாம். ஆள: இத் திருமொழியில் மற்ற பாசுரங்களில் இவ்வடியிலுள்ளவை போல இங்கு இதுவும் விளி. இதனால் கோவர்த்தநதாரணத்திற்குப் பிறகு தேவேந்திரன் செய்வித்த கோவிந்தபட்டாபிஷேகம் கருதப்பட்டதாம். குடைவான் என்பது, நீ என்பதற்கு விசேஷணமாம்போது குடைவை எனவாம். அதன் விளிச்சொல் குடைவாய். வெகுண்டு: வெகுளுதல்=கோபித்தல். உ.

3. நம்முடைநாயகனேநான்மறையின்பொருளே
  நாவியுணற்கமலநான்முகனுக்கொருகால்
தம்மனையானவனேதரணிதலமுழுதும்
  தாரகையின்னுலகுந்தடவியதன்புறமும்
விம்மவளர்ந்தவனேவேழமுமேழ்விடையும்
  விரவியவேலைதனுள்வென்றுவருமவனே
அம்மவெனக்கொருகாலாடுகசெங்கீரை
  ஆயர்கள்போரேறே யாடுகவாடுகவே. (66)

| | |
|---|---|
| நம்முடை நாயகனே | எங்களுக்கு ஈச்வரனே ! |
| நால் மறையின் பொருளே | நான்கு வேதங்களின் ப்ரதாநார்த்தமே ! |
| நாவியுள் நல் கமலம் நான் முகனுக்கு | திருநாபியிலுண்டான சிறந்த தாமரைப் பூவிற் பிறந்த ப்ரம்மாவுக்கு |
| ஒரு கால் | மதுகைடபர் வேதாபஹாரம் பண்ண காலத்திலே |
| தம்மனை ஆனவனே | (அன்னை) தாயானவனே ! |
| தரணி தலம் முழுதும் | பூ ப்ரதேசம் பூராவும் |
| தாரகை யின்உலகும் | நக்ஷத்ரலோகமான அந்தரிக்ஷமும் |
| தடவி | ஸ்பர்சித்து |
| அதன் புறமும் | அந்த அந்தரிக்ஷத்திற்கு வெளியில் ப்ரம்மலோகம் வரைக்குமுள்ள விடமும் |
| விம்ம | பூரித்துப்போம்படி |
| வளர்ந்த வனே | (த்ரிவிக்ரமாவதாரத்திலே) திருமேனிவளர்ச்சி பெற்றவனே ! |
| வேழமும் | (குவலயாபீடமென்ற) யானையையும் |
| ஏழ் விடையும் | ஏழு ரிடபங்களையும் |
| விரவிய வேலை தன் உள் | அவைகள் போரில் கலந்த வேளைக்குள்ளே |
| வென்று வருமவனே | ஜயித்து வருபவனே ! |
| அம்ம | ஸ்வாமியே ! |
| | எனக்கு—ஆடுக ஆடுக. |

இப்பாசுரத்தில் எம்பெருமானுடைய ஸர்வேச்வரத்வமும், அதுவே ஸர்வ வேதங்களுக்கும் பொருள் என்பதும், அதனை மூதலிப்பித்தன அவன் அவதாரவிசேஷங்களென்பதும் பணிக்கப் பெற்றன. நம்முடை என்றதாலே ஸர்வஸ்ருஷ்டிகர்த்தனான பிரமனும், அவனுக்குப் பின்னுள்ள தேவர்களும், ஆபாலகோபாலமாக அனைவரும் க்ரஹிக்கப்படுகின்றரென மூன்றவதாரங்களைக் கூறினதினின்று விளங்கும். நாம் எம்பெருமானுக்குப் பொருள். எம்பெருமான் வேதங்களின் பொருள். வேதம் நமக்குப் பொருள். நம் பொருள் நமக்கு நிலைக்கவேண்டுமென்று சதுர்முகனை விபத்திலிருந்து விடுவித்தார். மாநஸம், சாக்ஷுஷம், வாசிகம், ச்ராவணம், நாஸிக்யம், அண்டஜம், பத்மஜம் என்ற பல ப்ரம்ம ஜன்மங்களிலே பத்மஜ ப்ரம்ம ஜன்மத்திலே வேதாபஹார வ்ருத்தாந்தமாகையாலே நற்கமலநான்முகனுக்கு என்றார். அந்த ஜன்மத்திலும் பிரமனுக்கு எம்பெருமான்திருமேனியினின்று ஜன்மம் தோற்ற நாவியுள் என்றதாம். ஆராதனங்களான கர்மங்களும், ஆராத்யர்களாய்த் தோன்றின தேவர்களும், மற்றும் வேதத்தின் பொருட்களெல்லாம் தனக்குச் சேஷபூதங்களாகையாலே தானே நான்மறையின் முக்யமான பொருள் என்பதை விளக்கும் த்ரிவிக்ரமாவதாரத்திலே தன் திருவடி ஸம்பந்தத்தை எல்லாவற்றிற்கும் செய்யக் கருதினதாலும், ஏதாவது ஓர் இடம் விடப்பட்டால் அது மூன்றுவது அடிக்கு இடமாய்விடுமென்று மேடுபள்ளம் மூலைமுடக்குகளில் எங்கும் திருவடி படும்படித் தக்கவாறு வளர்ந்தானகையாலும் விம்ம என்றது. ௩.

4\. வானவர்தாம்மகிழவன்சகடமுருள
வஞ்சமுலைப்பேயின்நஞ்சமதுண்டவனே
கானகவல்விளவின்காயுதிரக்கருதிக்
கன்றதுகொண்டெறியுங்கருநிறவென்கன்றே

தேனுகனும்முரனுந்திண்டிறல்வெந்நரகன்
என்பவர்தாம்மடியச்செருவதிரச்செல்லும்
ஆனையெனக்கொருகாலாடுகசெங்கீரை
ஆயர்கள்போரேறே யாடுகவாடுகவே. (67)

| | | | |
|---|---|---|---|
| வானவர் தாம் | ஆகாயத்திலுள்ள தேவர்கள் | கொண்டு எறியும் | எடுத்து (விளாமரத்தின் மேல்) வீசினவனும் |
| மகிழ | மகிழ்ச்சி பெறும்படிக்கும் | கரு நிறம் | கறுத்த நிறமுள்ளவனுமான |
| வல் சகடம் | வலிமையுள்ள சகடாஸுரன் | என் கன்றே | எனது மகனே! |
| உருள | உருண்டு அழியும்படிக்கும் | தேனுகனும் | தேனுகாஸுரனும் |
| வஞ்சம் முலை | மாயமான ஸ்தநத்தையுடைய | முரனும் | முராஸுரனும் |
| | | திண் | திடமான |
| | | திறல் | தைரியம் பொருந்திய |
| பேயின் | பூதனையென்னும் ராக்ஷஸியின் | வெம் | க்ரூரத்தன்மையுள்ள |
| | | நரகன் | நரகாஸுரனும் |
| நஞ்சம் அது | அந்த விஷத்தை | என்பவர் தாம் | தேனுகாதிகளின் பேர் சொல்லி நின்றவர்களும் |
| உண்டவனே | புசித்தவனே! | | |
| கானகம் | காட்டிலிருந்த | மடிய | மடிந்து விடும்படி |
| வல் விளவின் காய் | வலிமையுள்ள விளாமரத்தின் காய்களை | செரு | யுத்தத்திற்கு |
| உதிர கருதி | உதிர்ந்துவிட வேண்டுமிவை என நினைத்து | அதிர செல்லும் | பூமியும் பிறரும் அதிர்ச்சி பெறும்படிப் போகும் |
| கன்று அது | அந்த (அசுரனான) கன்றை | ஆனை | யானையே! |
| | | | எனக்கு—ஆடுக ஆடுக. |

வன்சகடமுருள :—"இவன் ஜயித்து வந்தது இவனை இன்னுமொன்றிலே மூட்டும்" என்று முன் பாசுரத்தில் திருவாய்மொழிப்பிள்ளை உரைத்தபடி இவன் பூதநாஸம்ஹாரம் செய்தது பிறகு சகடாஸுரவதத்திற்கு அவகாசமளித்ததாகையாலே 'சகடம் உருளும்படி' என்றதாம். பூதனையின் நஞ்சுண்டு பருத்துக் கொழுத்து சகடத்தை உடைக்கும்படி திடம் பெற்றானென்பதுமாம். சகடமுருள—சகடாஸுரனைச் சிதறி உருளப்பண்ணி எனவுமுரைப்பர்.

நஞ்சமது. கன்றது என்ற விடத்திற் போல இங்கும் அது என்றதால் நஞ்சத்தின் கொடுமை கூறினதாம். நஞ்சமுது என்கிற பாடமாகில் நஞ்சு=விஷத்தை அமுது-அம்ருதமாக உண்டவனே என வுரைப்பது. ஸ்தந்யம் தத்விஷஸம்மிஶ்ரம் ரஸ்யமாஸீஜ்ஜகத்குரோ: என்றார் ஸ்ரீசுகர். 'விஷமப்யம்ருதம் க்வசித்பவேதம்ருதம் வா விஷமீஶ்வரேச்சயா' என்றான் ரகுவம்சகவி.

வல் விளவின் :—விளாமரத்திற்கு வலிமையாவது அஸுராவேசத்தினாலேற்பட்ட திண்மை. கன்று போல் விளாவும் அஸுரனே. ஒன்றின் மேல் ஒன்றை யெறிந்து இரண்டையும் இலகுவாய் முடித்தது கண்ணனின் சாதுர்யமென்பர். விளாமரத்திலும் அஸுராவேச முண்டென்கிற ஸம்ப்ரதாயமுண்டாகிலும் ஸ்ரீ பாகவதத்திற் போல் பெரியாழ்வார்பாசுரத்திலும் அதற்கு ஸாதகம் கிடையாது. வயல்களிலே காய்க் கதிர் செந்நெலைக் கன்றுகள் மண்டித் தின்றும்போது விரும்பாதிருந்த கன்றொன்றைக் கண்டு இது

அசுரனெனக் கருதி, பனங்கனி வேண்டிப் பனைமரத்தில் தேனுகாசுரனை எறிந்தாற் போல் விளாங்கனிக்காக அக் கன்றை யெறிந்து அதனை யழித்தது மாத்திரமே இவர் பாசுரங்களில் காண்கிறதென்பாருமுண்டு. அப்போது வத்ஸாஸுரனை எறிந்தபோது கனிகள் போலே மாமும் விழாதபடியும் அது பட்டு வத்ஸாஸுரன் முடியும்படியும் அதற்கு எம்பெருமான் அளித்த வலிமை இங்கு 'வல்விளா' என்றவிடத்தில் கருதப்பட வேண்டும். என் கன்றே, உன்னையும் கன்றே என விளிக்கும்படி கன்றுகளிடத்திலே அபிமானமுள்ள இடைச்சியான எனக்கு விரோதியான கன்று அது—அசுரக் கன்று அதனைக் கொன்று குலம் காத்த நீ என் கன்று. இப்போது நீ கன்று; நரகாதிகளை நசிப்பிக்கச் சென்றபோது நீ ஆனை. தேனுகனும் :—இவ்வஸுரனும் இவன் தாயாதிகளும் ஒரு பனங்காட்டிலே புகுந்துக் கழுதைகளாக இருந்து மேய்ந்து வளர்ந்து வந்தனர். அதனால் மனிதரும் மிருகங்களும் ப்ரவேசியாத அக் காட்டினின்று பனங்கனிகளின் நறுமணம் வீச அதனை யொருநாள் முகர்ந்த இடைப் பிள்ளைகள் பலராமனையும் கண்ணனையும் அங்கு அழைத்துச் சென்றனர். எல்லோரும் மரங்களிலேறிக் கனிகளை உதிர்த்தனர். அப்பொழுது தேனுகக் கழுதை பின்னங்கால்களாலே பலமாகப் பலராமனை யுதைக்க அவர் அதனை அக் கால்களைப் பிடித்தெடுத்துச் சுழற்றி மரத்தின் மேலெறிந்து அசுரனை அழித்தருளினர். பிறகு அவன் ஜ்ஞாதிகளும் இவர்களோடு போர் புரிந்து மடிந்தனர். இப்படி இவர்களைக் கொல்ல பலராமாதிகளோடு சேர்ந்து கண்ணன் சென்றதைக் கருதியே 'செருவதிரச் செல்லும்' என்றதாம்.

முரன் நரகாசுரனைச் சேர்ந்தவன். ப்ராக்ஜோதிஷமென்ற நரகாசுர நகரத்தைச் சூழ்ந்தபோது முரனே முதலில் படையோடு பாழ்படுத்தப்பட்டவன். என்பவர் என்பதாலே தேனுகாதிகளுடைய ஜ்ஞாதிகளும், முரனுடைய மகன்களும், நரகனைச் சேர்ந்த மற்றனைவரும் குறிக்கப்பட்டனராவர். ச.

5. மத்தளவுந்தயிரும்வார்குழனன்மடவார்
வைத்தனநெய்களவால்வாரிவிழுங்கி * ஒருங்கு—
ஒத்தவிணைமருதமுன்னியவந்தவரை
ஊருகரத்தினொடுமுந்தியவெந்திறலோய்!
முத்தினிளமுறுவல்முற்றவருவதன்முன்
முன்னமுகத்தணியார்மோய்குழல்களலைய
அத்தவெனக்கொருகாலாடுகசெங்கீரை
ஆயர்கள்போரேறே யாடுகவாடுகவே. (68)

| | | | |
|---|---|---|---|
| வார் குழல் | நீண்ட கேசபாசத்தை யுடையவரான | நெய் | (தோய்ந்த) நெய் வெண்ணெயையும் |
| நல் மடவார் | நல்ல மடமையுள்ள ஸ்திரீகளால் | மத்து அளவும் தயிரும் | மத்தினால் கலக்கப்பட வேண்டும் தயிரையும் |
| வைத்தன | வைக்கப்பட்டவையான | களவால் | திருட்டு வழியாலே |

| | |
|---|---|
| வாரி | கைகளாரக் கொண்டு |
| விழுங்கி | விரைந்துண்டு (அதனால் உரலிற் கட்டுண்ட) |
| ஒருங்கு | ஒன்றாகச் சேர்ந்து நிற்றலில் |
| ஒத்த | ஏகமனதான |
| இணை | இரட்டையான |
| மருதம் | மருத மரங்களாக |
| உன்னிய வந்தவரை | (உன்னைக் கொல்வதில்) மனம் வைத்தவராய் வந்த வசுரர்களை |
| ஊரு கரத்தி னேடும் | துடைகளையும் கைகளையும் கொண்டு |
| உந்திய | தள்ளின |
| வெம் திறலோய் | கடிய ஸாமர்த்தியமுடைய வனே ! |
| முத்து | முத்துக்கள் போன்ற பற் களாலே |

| | |
|---|---|
| இன் | இனியதான |
| இள முறுவல் | மந்தஹாஸமானது |
| முற்ற | முற்றிலும் |
| வருவதன் முன் | வருவதற்கு முன்னமே |
| முன்னம் முகத்து | முகத்தின்மேல் பாகத்தில் |
| அணி | அலங்காரமாயிருக்கும் |
| ஆர் | கீழே வியாபியா நின்ற |
| மொய் | நெருங்கியுள்ள |
| குழல்கள் | கூந்தல்கள் |
| அலைய | அசையும்படி |
| அத்த | அப்பனே ! |
| | எனக்கு--ஆடுக ஆடுக. |

வார்குழல். நெருங்கி நீண்ட கூந்தல்களை யுடையவராகையாலே கூந்தல் கலைந்து அலைந்து விழாமைக்காக வாரி முடித்துப் பூமாலைகளால் முழுதும் அலங்கரித்துக் கொண்டே தயிர் கடைவது முதலான தொழில்களிலிழிவது வழக்கம். ஆகவே வண்டமர் பூங் குழலாய்ச்சி, வாசநறுங்குழலாய்ச்சியர் என்ற வாறு வர்ணிப்பதாம். நன்மடவார். மடமையுடையாராகையாலே அவர்களுக் குக் களவு போகாதபடி காக்கவேண்டுமென்கிற கருத்தும் கிடையாது. போனாலும் பாராதவரையில் ஒருவர் மீது பழி சுமத்தத் துணிவும் கிடையாது.

விழுங்கி—உந்திய. யமளார்ஜுநங்களை உந்துவதற்குச் சமயம் வாய்க்க வேண்டுமென்றே திருடி விழுங்கினான் போலும்.

உன்னிய வந்தவரை. இங்கொரு வினாவிற்கு இடமுண்டு. அதாவது— இம் மருத மரங்களை அசுரர்களாக ஆழ்வார் நினைத்தாரென்பதற்கு ப்ரமாணம் யாது? நாரதமஹர்ஷியின் சாபாநுக்ரஹத்தினாலே குபேரபுத்ரர்களிருவர், கண்ணனின் ஸந்நிதானத்தாலே தம் ஸ்வரூபத்தைத் திரும்பப் பெறுவதற் காக இரு மருத மரங்களாக வந்திருந்தனர் என்றிவ்வளவே யன்றோ ஸ்ரீ பாகவதத்திலுள்ளது. ஹரிவம்சத்திலே (விஷ்ணுபர்வம், சிசுசர்யை, அ. 6.) ஸதோவயாஅநள, வொஷகுமூாணகாரிணள, நடிமொவவ்ஸநௌ என்று ஆய்ப்பாடிக்கு ஹிதைஷிகளாகவே, க்ஷேமகரங்களாகவே அவை துதிக்கப்பட்டன. ஆக ‘உன்னிய வந்தவரை’ என்பதற்கு, வந்த= தமக்குக்கிட்டிவந்த, வரை=நாரதர்குறித்த எல்லை(சாபாவதி)யில், உன்னிய= கவனம் செலுத்திய என்றோ, அல்லது வந்தவரை=தங்களை யாச்ரயித்த இடையர் விஷயத்திலே, உன்னிய—நல்லது செய்ய கவனம் செலுத்திய, என்றவாறோ பொருள் கொள்ளலாமே என்றதாம். இதற்கு விடையாவது— மருதமரங்கள் குபேர புத்திரர்களே. ஆகிலும் அவை முறிந்து விழுந்ததைக் கண்டபோது அஸுரர்களுக்கு அங்கிடமிருந்ததாகவே ஆயர்கள் நினைத்திருந்

தனென்பது பாகவத ஸ்ரீவிஷ்ணு புராணங்களிலேயே நன்கு விளங்கும். ஆயர்களைப்போல் எம்பெருமானிடத்தில் மிகப் பரிவு கொண்ட ஆழ்வார்களுக்கும் அவ்வித பாவனை வரத்தகும். உண்மையில் குபேரபுத்ரர்களுக்குச் சாபம் தீர்க்கக் கண்ணன் அவ்விடம் அவசியம் வருவானென்பதை யுணர்ந்து சில வசுரர்கள் அச்சமயத்தில் அவனை யழிக்க நினைத்து அம்மரங்களில் புகுந்திருந்தனென்றும், ஆகவே எம்பெருமான், தான் அவற்றின் அருகில் வந்திருந்தது மாத்திரமின்றி அவற்றை முறிக்கவும் முன்வந்தானென்றும் சொன்னால் அது யுக்தமே. ஆகவே, 'பொய்ம்மாய மருதானவசுரரை' (3. 1. 3.) என இவர் தாமே அருளிச் செய்வர். இங்ஙனே 'ஸஹிதநாஶகடயஶோதாஜஸூந—' என்ற கீதாபாஷ்யாதிஸூக்திசைலியையும் காண்க. ஸ்ரீதேசிகன் கோபால விம்சதியில், 'விடவிசவதிராஸகம் கடோயாஸ்ரிக,' என்றும் 'யஶோதாஜஸூநு தடீரஷவாணுகௌஷிழ' என்றும் இரு தரம் இதனைக் கூறினதும், குபேரபுத்ர மோக்ஷம், அசுரரை முறித்தது என இரு பொருட்களைக் கருதியென்னலாம். இவற்றிற்கிணங்க இப் பாசுரந்தன்னிலும், 'உன்னிய வந்தவரை' என்பது எம்பெருமானை நலிய நினைத்து மருதமரங்களிலே வந்து புகுந்திருந்தவரைக் கூறுமென்பதே பொருத்தமாகு மென்றவாறு.

முத்து இத்யாதி. புன்முறுவல் முற்றிலும் வந்தால் முத்துக்கள் போன்ற பற்கள் தெரிந்து அது மிகவும் இனியதாகும். அப்படி அது வருவதற்கு முன்னமே, திருப்பவளம் சற்றசைந்து கபோலங்களில் ஒளி வீசுவதற்குள்ளாகவே முன்முகத்தில் அழகாயுள்ள நெருக்கமான குந்தலங்கள் தொங்கிப் பரவுகின்றன. அக் குந்தலங்கள் அலைந்து இடையில் அம் மந்தஹாஸமும் முற்றிலும் தோன்றும்படி செங்கீரையாட வேண்டுமென்று கோரினபடி. ரு.

6. காயமலர்நிறவா கருமுகில்போலுருவா
கானகமாமடுவிற்காளியனுச்சியிலே
தூயநடம்பயிலுஞ்சுந்தரவென்சிறுவா
துங்கமதக்கரியின்கோம்புபறித்தவனே
ஆயமறிந்துபொருவானெதிர்வந்தமல்லை
அந்தரமின்றியழித்தாடியதாளிணையாய்
ஆயவெனக்கொருகாலாடுகசெங்கீரை
ஆயர்கள்போரேறேயாடுகவாடுகவே. (69)

காய மலர் நிறவா } காயாம்பூவின் நிறமுள்ளவனே!
கருமுகில் போல் உருவா } கறுத்த மேகம் போன்ற வடிவமுடையவனே!
கானகம் மா மடுவில் } காட்டில் இருந்த பெரு மடுவிலே
காளியன் உச்சியிலே } காளிய ஸர்ப்பத்தின் சிரஸ்ஸுகளிலே
தூய நடம் பயிலும் } சுத்தமான ந்ருத்தத்தைக் கற்கும்
சுந்தர என் சிறுவா } அழகான என் சிறு பிள்ளையே
துங்கம் மதம் கரியின் } உயர்ச்சியும் மதமுமுள்ள வானையின் (குவலயா பீடத்தின்)
கோம்பு தந்தத்தை
பறித்தவனே பெயர்த்தெடுத்தவனே!

| | | | |
|---|---|---|---|
| ஆயம் அறிந்து | ஆதாய மார்க்கங்களை உணர்ந்து | ஆடிய | (கஞ்சன் மஞ்சத்தின்மேல் துள்ளி குதிக்கத் தக்கவாறு) ஆடிவந்த |
| பொருவான் | போர் செய்வதற்காக | தாள் இணையாய் | இரட்டையாய்ச் சேர்ந்த திருவடிகளை யுடையவனே! |
| எதிர் வந்த மல்லை | எதிரில் வந்துநின்ற மல்லர்களை | ஆய | இடையர் ஜாதியிற் பிறந்தவனே! |
| அந்தரம் இன்றி | (அவர்களுக்கு) இடமிராதபடி | | எனக்கு—ஆடுக ஆடுக. |
| அழித்து | நாசம் செய்துவிட்டு | | |

காய: இது காயா என்பதின் குறுக்கல். தூய:—உலகில் நர்த்தனம் சாஸ்த்ர முறைபடி சுத்தமாய் நிர்துஷ்டமாய் அமையாது. அமைந்தாலும் அநுசிதமான பாத்ரங்களாலே செய்யப்பட்டு அனர்த்தங்களை விளைவிக்கும். இவனுடைய நர்த்தனம் சாஸ்த்ரமர்யாதைக்கு மூலமாயும், காளியனுக்கும், கண்டும் கேட்டுமிருப்பவர்க்கும் பாபம் போக்குவதாயு மிருந்ததாம். பயிலும் என்பதால் ஒவ்வொரு படத்தின் மேலும் பன்முறை இவன் அடிவைத்து வந்தது தோற்றும். பின்னர் மல்லரையும் கம்ஸாதிகளையும் தலை கவிழ்த்தழிக்கச் செய்த தாளிணை யாட்டத்திற்கு மூலமாகப் பயின்ற காளியன் படநடனத்திற்கும் முன்னே முதலாயுள்ளது செங்கீரையாடுதலே. பொருவான்= பொருதல். போர் செய்தல். 'வான்' என்பது பொரு என்னும் வினையின் மேல் வந்த எதிர்காலவினையெச்ச விடைச் சொல்.

ஆடிய தாளிணையாய் :— 'கஞ்சனைக்கால் கொடு பாய்ந்தாய்' "மற்பொருதெழப்பாய்ந்தரையனை யுதைத்த' (2. 7. 6, 4. 7. 7.), 'ஜவிஜேந்த்ர தந்த்ராவா உஂஅ உ–த்–ஜாா–ஹக' என்றவற்றை நோக்குக. கா.

7\. துப்புடையாயர்கள்தம்சொல்வழுவாதோருகால்
தூயகருங்குழனற்றேகைமயிலனைய
நப்பினைதன்திறமாநல்விடையேழவிய
நல்லதிறலுடையநாதனுமானவனே
தப்பினபிள்ளைகளைத்தனமிகுசோதிபுகத்
தனியொருதேர்கடவித்தாயொடுகூட்டியவென்
அப்பவெனக்கோருகாலாடுகசெங்கீரை
ஆயர்கள்போரேறேயாடுகவாடுகவே. (70)

| | | | |
|---|---|---|---|
| ஒரு கால் | கோபிகளோடு விளையாடும் காலத்திலே | துப்பு உடை | ஸாமர்த்திய முள்ள |
| தூய | பரிசுத்தையானவளும் | ஆயர்கள் தம் | (கும்பர் முதலிய) இடையர்களுடைய |
| கரு குழல் | கறுத்த கூந்தல்களை யுடையளாய் (அதனலே) | சோல் வழுவாது | சொல் தவறாதபடி |
| நல் தோகை மயில் அனைய | நல்ல தோகைகளை யுடைய மயிலைப் போன்றவளுமான | நல் ஏழ விடை அவிய | மஹத்தான வேழு ரிடபங்கள் அழியும்படி |
| நப்பினை தன் திறம் ஆ | நப்பின்னைப் பிராட்டியின் விஷயமாக | நல்ல திறல் உடைய | மிகுந்த வலிமையைப் பெற்றவனும் |

| | | | |
|---|---|---|---|
| நாதனும் ஆனவனே | (விவாஹபூர்வகமாய் நப்பின்னைக்குக்) கணவனுமானவனே! | புக | ப்ரவேசிக்க |
| | | தனி | தனியாக |
| | | ஒரு | ஒப்பற்ற (திவ்யமான) |
| | | தேர் | ரதத்தை |
| தப்பின பிள்ளை களை | தவறிவிட்ட வைதிகன் புத்ரர்களை | கடவி | செலுத்தி (சென்றெடுத்து வந்து) |
| தன | தன்னுடைய | தாயொடு கூட்டிய | தாயான வைதிகன்மனைவியிடம் சேர்த்து வைத்த |
| மிகு சோதி | மிகுந்த ஜ்யோதிஸ்ஸாயுள்ள பரமபதத்திலே | என் அப்ப | என் அப்பனே! |
| | | | எனக்கு— ஆடுக ஆடுக. |

துப்பு :—'நாணெத்தனையுமிலாதாய்! நப்பின்னை காணில் சிரிக்கும், (2. 4. 9.) என்றபடி குழந்தைப் பர்வத்திலிருந்தே கண்ணனை நப்பின்னைக்கு நாதனாக ஆயர்கள் நினைத்திருந்ததால், வெகு அழகான விவளை வேறு யாரும் மணம்புரிந்துகொள்ள நிர்ப்பந்தியாமைக்காக யாதவாப்யுதயத்தில் 4. 98. ச்லோக வ்யாக்யானத்திற் கண்டபடி அஸுராம்சங்களான விடையேழு அழித்தலை சுல்கமாகவேயாக்கின ஸாமர்த்தியம். விடைகளின் வன்மையையும் இவன் மென்மையையும் பாராதே அவற்றைத் தழுவவேணு மென்றவரின் நெஞ்சுரம் துப்பென்பது முண்டு. தூய :—விடையேழு அழித்தாலும் அழிக்காவிட்டாலும் இவனே தனக்கு நாதன் என்ற மனச்சுத்தி தூய்மை. அழிக்க வல்லானோ அல்லனோ வென்ற கலக்க மில்லாமையுமாம். நப்பினை=நப்பின்னை. இவள் 'மண்மகள் பூமகள் ஆய்மகள்' என்றவாறு நீளாதேவியின் அவதாரமாகையாலே நீளையெனப்பட்டாள். இவளைப் பின்னை யென்றே சொல்வது முண்டு. ந என்பது சிறப்புணர்த்தும் முன்னிடையான சொல்லாகையாலே, நப்பின்னை=சிறந்த பின்னை எனப் பொருளாம். பின்னை யென்ற பதத்திற்கு லக்ஷ்மீ என்றும் இளையவளென்றும் பொருளுண்டு. பின்னை நீளை. அவளுடைய அவதாரமான ஆய்மகள் நப்பின்னை யென்னலாம். தப்பினவித்யாதி. பரமபதத்திலுள்ளவர்கள் இவ்விபவ வாஸுதேவனை கண்ணனைத் தம்மிடத்திலே எழுந்தருளப்பண்ணி அனுபவிக்க ஆசைப்படவே பரவாஸுதேவன் இவரை அழைப்பதற்காக த்வாரகையில் ஒரு வைதிகப்ராம்மணனுடைய பிள்ளைகளை யெல்லாம் பிறந்த க்ஷணத்திலேயே பரமபதம் சேர்த்து வந்தான். வைதிகனும் சவமாய்க் கிடந்த குழந்தையை ராஜத்வாரத்தில் கொண்டு வைத்து ராஜதூஷணம் செய்யவே அர்ஜுனன் தான் காப்பதாக வாக்களித்து, பத்தாவது ப்ரஸவத்திலே ப்ரஸவகிருஹத்தின்மேல் வானத்தில் காத்து வர, அப்போது பிறந்த குழந்தை அடியோடு உருவே யிராதபடி பிறந்தவுடனே மறையவே அர்ஜுனனும் ப்ரதிஜ்ஞைப்படி அக்நிப்ரவேசம் செய்ய முன்வர, கண்ணன் அவனைத் தடுத்து, அவனுடன் திவ்யரதமேறி ஸ்ரீவைகுண்டம் சென்று அங்குள்ளவரை யனுக்ரஹித்துப் பிள்ளைகளை யெடுத்து வந்தார் என ஸ்ரீபாகவதத்திலே யுள்ளது. 'இடரின்றியே ஒரு நாள் ஒரு போழ்தில் எல்லா வுலகுங் கழியப் படர்புகழ் பார்த்தனும் வைதிகனுமுடனேறத் திண்தேர் கடவிச் சுடரொளியாய் நின்ற தன்னுடைச் சோதியில் வைதிகன்பிள்ளைகளை

உடலொடுங் கொண்டு கொடுத்தவனைப்பற்றி என்றும் துயரிலேனே (திருவாய். 3. 10. 5.) என்ற விடத்திலும் இதன் விரிவு காண்க. தனி மிகு சோதி என்ற பாடமாகில், தனி—தனிமையான அதாவது சுத்தமான எனப் பொருளாம். தத: பரம் பரம் ஜ்யோதி: என்றார் ஸ்ரீசுகர். மிகு சோதி புக: இதற்கு பிள்ளைகள் பரமபதத்தில் புகுந்திருந்தபோது என்றும், அவர்களைக் கொண்டுவர தான் புகுவதற்காக என்றும் பொருளாம். ஆகவே கூட்டிய வென்ற பதத்தோடு சேரும் பிள்ளைகளை என்னும் பதத்தை முன்னே மொழிந்ததாம். இப்போது தனி என்ற பாடத்தில், பிள்ளைகள் தனியே புகுந்தனர். அதாவது மற்ற ஸம்ஸாரிகளைப் போலே பரமபதம் போகாமலுமில்லை. முக்தர்களைப் போல் அர்ச்சிராதி மார்க்கத்தினாலே போகவுமில்லை. இவர்கள் புகுந்தது தனிப்பட்டதொன் றென்றதாம். எ.

8. உன்னையுமொக்கலையிற்கொண்டுதமில்மருவி
உன்னோடுதங்கள்கருத்தாயினசெய்துவரும்
கன்னியரும்மகிழக்கண்டவர்கண்குளிரக்
கற்றவர்தெற்றிவரப்பெற்றவெனக்கருளி
மன்னுகுறுங்குடியாய் ! வெள்ளறையாய் ! மதிள்சூழ்
சோலைமலைக்கரசே ! கண்ணபுரத்தமுதே !
என்னவலங்களைவாய் ! ஆடுகசெங்கீரை
ஏழுலகுமுடையாய் ! ஆடுகவாடுகவே. (71)

| | |
|---|---|
| மன்னு | ஸ்திரமாயுள்ள |
| குறுங் குடியாய் | திருக்குறுங்குடி யென்னும் திவ்யதேசத்தானே ! |
| (மன்னு) வெள் ளறையாய் | திருவெள்ளறை யென்னும் திவ்ய தேசத்தானே ! |
| மதிள் சூழ் | ப்ராகாரம் சூழ்ந்துள்ள |
| சோலை மலைக்கு | திருமாலிருஞ்சோலையின் திருமலைக்கு |
| அரசே | அரசனே ! |
| கண்ண புரத்து அமுதே | திருக்கண்ணபுரத்திலே போக்யமா யிருப்பவனே ! |
| என் அவலம் களைவாய் | எனது க்லேசத்தைப் போக்குகிறவனே ! |
| உன்னையும் | (என்னால் விடப்படாமலிருக்கும்) உன்னையும் |
| ஒக்கலை யில் கொண்டு | (தம்) இடைப்பக்கத்தில் வைத்துக் கொண்டு |
| தம் இல் மருவி | தங்கள் க்ருஹங்களை யடைந்து |
| தங்கள் கருத்தா யின | தங்களுக்கு இஷ்டங்களான வற்றை |
| உன்னோடு | (அவர்கள் இஷ்டப்படிக் கானவனான) உன்னோடு |
| செய்து வரும் கன்னியர் மகிழ உம் | செய்துவிட்டு வருகிறவர் களாய் கன்னிகைகளா யிருப்பவர் மகிழ்ச்சி பெறும்படியும் |
| கண்டவர் கண் குளிர | அந்த ஸமயத்திலே பார்த்து வருகிறவர்களின் கண்கள் குளிர்ந்து ஸுகப்படும் படியும் |
| கற்றவர் தெற்றி வர | கவி பாடும் புலவர் பாடத் தடுமாறி வரும்படியுமாக |
| பெற்ற எனக்கு அருளி | உன்னைப் பெற்றவளான என்னிடத்திலே க்ருபை வைத்து |
| | செங்கீரை ஆடுக. |
| ஏழ் உலகும் உடையாய் | ஏழு லோகங்களுக்கும் ஸ்வாமியானவனே ! |
| | ஆடுக. ஆடுக. |

நான், வேண்டாம் வேண்டாமென்ற போதே கன்னிகைகள் உன்னை இடுப்பில் எடுத்துச் சென்றனர். ஆனால் நீ அப்போதும் என்னை விட்டாயல்லை. ஓரே ஸமயத்தில் பல கன்னிகைகள் பரஸ்பரம் தெரிந்துகொள்ளாமலே கொண்டு கிரஹத்திலே ப்ரவேசித்து விடுவர். அங்கு நீ உன் சைசவ தசையை மாற்றிக் கொள்வாய். அவர்களையும் தகுந்தபடி செய்து வைப்பாய்: அவர்கள் இஷ்டப்படி அனுபவிப்பர். அப்போதும் நீ என்னிடமிருப்பதைக் கேட்டு அவர் நேரில் பார்க்க வரும்போது கன்னியராவர். இவ் வண்ணமிருந்து நீ ஆடும் காட்சியைக் கண்டவர்கள் கண்ணன்றோ கண்ணாகும். எத்தனைக் கற்ற வரும் இத்தனை யாச்சர்யத்தை விரிக்க வல்லாரல்லர். அரசனுயும் அமுதாயும் பல திவ்ய தேசங்களிலே பல உருவங்களை இப்போதெடுத்துள்ள உன்னைப் பார்க்கும்போது இதற்கும் மேற்பட்டுப் பலபடியாய் நீ முன்னிருந்த நிலை முழுதும் நினைவில் வந்து நிற்கின்றன. கன்னிகைகளிடத்தில் நீ எப்படி வேணுமானாலும் நடந்து கொள். பெற்ற தாயான என்னிடம் பிள்ளையாய்த் தோன்றி முன்னிருந்த இருப்பைக் காண்பித்து ஆடியருள வேணும். இல்லையேல் என் க்லேசம் தீராதென்றபடி.

மன்னு என்றதால் குறுங்குடியிலிருக்கு மிவ்வளவு காலம் கோகுலத்தில் உன்னைப் பெற்றேனல்லேன் என்று தனக்குள்ள குறையைக் குறித்ததாம். கீழ்ப் பாட்டுக்களில் ஸம்ஹார ப்ரஸ்தாவமிருந்ததாலே 'ஆயர்கள் போரேறே' என்று முதலில் தொடங்கினபடியே சொல்லி வந்து இனி மூன்று பாசுரங்களில் அது இராததினால், 'என்னவலம்' இத்யாதிக்கேற்ப அனுப்ராஸமும் தோற்ற ஏழுலகும்—என்றதாம். அ.

9\. பாலொடுநெய்தயிரொண்சாந்தொடுசெண்பகமும்
பங்கயநல்லகருப்பூரமுநாறிவர
கோலநறும்பவளச்செந்துவர்வாயினிடைக்
கோமளவெள்ளிமுளைப்போல்சிலபல்லிலக
நீலநிறத்தழகாரைம்படையின்நடுவே
நின்கனிவாயமுதமிற்றுமுறிந்துவிழ
ஏலுமறைப்பொருளேயாடுகசெங்கீரை
ஏழுலகுமுடையாயாடுகவாடுகவே. (72)

| | | | |
|---|---|---|---|
| ஏலும் | பொருந்தியுள்ள | நாறிவர | (நீ ஆடி வரும்போது) வாசனை வீசிவரும்படியும், |
| மறை | வேதத்தின் | கோலம் | அழகாய் |
| பொருளே | பொருளானவனே ! | நறு | நன்மணமுள்ளதும் |
| பாலொடு நெய் தயிர் | (நீ புசித்த) பாலும் நெய்யும் தயிரும் | பவளம் செம் துவர் | பவளம்போல் செம்மையாகச் சிவந்ததுமான |
| ஒண் சாந்தொடு சேண்பகமும், பங்கயம், நல்ல கருப்பூரமும் | (நீ தரிக்கும்) அழகிய சந்தனமும், செண்பகப் பூவும், தாமரைப் பூவும், உயர்ந்த பச்சைக்கர்ப்பூரமும் | வாயின் இடை | திருமுகத்தின் நடுவிலே |
| | | கோமளம் | மிருதுவாய் |
| | | வெள்ளி முளை போல் | வெள்ளியினால் செய்யப் பட்ட சிறிய முளைகள் போன்றவையுமான |

| | | | |
|---|---|---|---|
| சில பல் | ஏதோ முளைத்த சில பற்கள் | நின் கனி வாய் அமுதம் | உனது (கோவைப்) பழம் போன்ற வதரத்தினின்று பெருகும் அமிருதமானது |
| இலக | ப்ரகாசிக்கும்படியும், | | |
| நீலம் நிறத்து | (திருமேனியின்) நீல நிறத்தின் | | |
| அழகு ஆர் | அழகு நிறைந்த | இற்று | வடிந்து |
| ஐம் படையின் நடுவே | பஞ்சாயுத பூஷணத்தின் நடுவிலே | முறிந்து விழ | பிரிந்து விழும்படியும் செங்கீரை ஆடுக—ஆடுக. |

கோலம், நறு என்ற விரண்டும் வாய் என்பதோடு இயையும். முன்னடியில்—சேர்ந்த வஸ்துக்களின் பரிமளமும், இங்கே இயற்கையில் வாயின் பரிமளமும் சொல்லப்பட்டன. கோலமென்பது இலந்தைக் கனியாய் அது போல் மணமுள்ளதும், பவளம் போல் சிவந்ததுமான வாய் என்னவுமாம். நறுபவளம் நற்பவள மென்றனர் சிலர். நறு=பரிமளிதமான என்றனர் பூர்வர். 'கர்ப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ திருப்பவளச் செவ்வாய்' என்ற நாய்ச்சியார்பாசுரத்தைக் கொண்டு இங்கும் பங்கயம் நல்ல கருப்பூரமும் என்ற வித்தாலே திருப்பவளத்தின் பரிமளமே பணிக்கப்படுவதாகவுமுரைப்பர். நீல நிறத்தழகார்=அழகார்ந்த நீல நிறத் திருமார்பிலே என்னவுமாம். செங்கீரை யாடும்போது ஐம்படை திருமார்பிலிருந்து கொஞ்சம் பிரிந்துத் தொங்கிவரும். நீல நிறத்தையுடைய ஐம்படை என்றும் சொல்வர். 'இற்று என்றதற்கும் முறிந்து எனவே பொருள். இற்று முறிந்து=இற்றிற்று' எனவு முரைப்பர். ஏலும்:—ஏலுகை தகுதியாகை. இது பொருளுக்கு அல்லது மறைக்கு விசேஷணம். வேதம் உத்கிருஷ்ட ப்ரமாணம்; எம்பெருமான் உத்க்ருஷ்டமான ப்ரமேயம். வேதம் நித்யம்; எம்பெருமானும் நித்யன். வேதம் துரவகாஹம்; தாய் தந்தைகள் பலவாயிரத்தினும் மேற்பட்ட வாத்ஸல்யமுள்ளது. எம்பெருமானு மிவ்வண்ணமே பாத்வ ஸௌலப்யங்களுடையவன். எம்பெருமான் ராமகிருஷ்ணதிரூபமாய் அவதரிப்பது போல் வேதமும் ராமாயணதி ரூபமாய் அவதரிக்கிறது. அன்றி, அவ்வவ அதிகாரிகளுக்குத் தக்கபடி ஆராத்யர்களையும் ஆராதனங்களையும் ஓதும் மறையிலெங்கும் பொருளாய் நிற்பவனே என்றபடியாம். அன்றியும், எம்பெருமானுடைய அனுபவத்தில் ஈடுபடுவதற்குத் தமிழ்மறையே முக்கியமானதால் ஏலும் மறை—தமிழ் மறையாய் இதன் பொருளே என்றதாம். கூ.

10. செங்கமலக்கழலிற்சிற்றிதழ்போல்விரலிற்
சேர்திகழாழிகளுங்கிண்கிணியும் * அரையில்
தங்கியபொன்வடமுந்தாளநன்மாதுளையின்
பூவொடுபொன்மணியும்மோதிரமுங்கிறியும்
மங்களவைம்படையுந்தோள்வளையுங்குழையும்
மகரமும்வாளிகளுஞ்சுட்டியுமொத்திலக
எங்கள்குடிக்கரசேயாடுகசெங்கீரை
ஏழுலகுமுடையாயாடுகவாடுகவே. (73)

| | |
|---|---|
| எங்கள் குடிக்கு அரசே | ஆயர்களான எங்களுடைய குலத்திற் கதிபதியே! |
| செம் கமலம் கழலில் | செந்தாமரைப் பூ போன்ற திருவடிகளிலே |
| சிறு இதழ் போல் விரலில் | சிறிய தளங்கள் போன்ற விரல்களில் |
| சேர் திகழ் ஆழிகளும் கிண் கிணியும் | பதிந்து சேர்ந்து ப்ரகாசிக்கும் வட்டமான விரலணிகளும் சதங்கைகளும் |
| அரையில் | இடையில் |
| தங்கிய பொன் வடமும் | நிலைத்துள்ள பொன் அரை நாணும் |
| தாள | காம்புகள் உள்ளவையும் |
| நல் | நல்லவையுமான |
| மாதுளை யின் பூவொடு | மாதளம்பூக்கள் போன்ற வாபரணங்களோடு சேர்ந்த |
| பொன் மணியும் | பொன் மணிகள் கோத்த ஆபரணமும் |
| மோதிரமும் கிறியும் | கைவிரலணிகளும் முன்கையிலுள்ள ஒரு வகைப் பூஷணமும் |
| மங்களம் ஐம்படை யும் தோள் வளையும் | மங்களகரமான ஸ்ரீ பஞ்சாயுத பூஷணமும் அங்கதங்களும் |
| குழையும் மகரமும் | கீழ்க்காதில் சேர்த்துத் தரிக்கக்கூடிய ஆபரணங்களும் |
| வாளிகளும் சுட்டியும் | மேற் காதுகளிலுள்ள ஆபரணங்களும், நெற்றியில் தொங்கிவரும் அணியும் |
| ஒத்து இலக | ஒன்றுக்கொன்று இசைந்து ஒளி வீசும்படி |
| | செங்கீரை ஆடுக—ஆடுக. |

ஒத்திலகுகையாவது—ஒன்றோடொன்று நெருங்கியுள்ளதினால் இவ்விரண்டாகச் சேர்த்துச் சொல்லப்பட்ட அணிகளில் ஓரணி மற்றொன்றோடு இசைந்து ப்ரகாசிக்கை. காலிற் சொல்லப்பட்டவை விரலாழியும் கிண்கிணியுமான இரண்டு. அரையிற் சொன்னவை பொன்வடமும் பொன்மணியும். இவ்வாறு காண்க. இதனால் மோதிரமும் கிறியுமென்ற விடத்தில் கிறியாவது முன் சொன்ன காற் கிண்கிணி போல் முன்கையிலுள்ளது ஏதேனுமாகும். அதாவது மணிக்கட்டிலுள்ள பவளவடம் அல்லது பிறைமுகப்பணி (அர்த்தசந்த்ராகாரமானதோர் அணி ?). ஐம்படையும் தோள்வளையும் நேருக்கு நேராக விருப்பதாலே ஒத்திலகும். இப்படி இவ் விரண்டாகப் பிரிக்காமல், ஒத்திலக=எல்லாம் சேர்ந்து விளங்க என்று முரைக்கின்றனர். ம.

11\. அன்னமுமீனுருவுமாளரியுங்குறளும்
ஆமையுமானவனேயாயர்கணுயகனே
என்னவலங்களைவாயாடுகசெங்கீரை
ஏழுலகமுடையாயாடுகவாடுகவென்று—
அன்னநடைமடவாளசோதையுகந்தபரிசு—
ஆனபுகழ்ப்புதுவைப்பட்டனுரைத்ததமிழ்
இன்னிசைமாலைகளிப்பத்தும்வல்லாருலகில்
எண்டிசையும்புகழ்மிக்கின்பமதெய்துவரே. (74)

| | |
|---|---|
| அன்னமும் | ஹம்ஸமாகவும் |
| மீன் உருவும் | மத்ஸ்யரூபமாகவும் |
| ஆள் அரியும் | நரசிங்கமாகவும் |
| குறளும் | வாமனனாகவும் |
| ஆமையும் | கூர்மமாயும் |
| ஆனவனே | அவதரித்தவனே ! |
| ஆயர்கள் நாயகனே | இடையர்களுக்கு ஈச்வரனே ! |
| என் அவலம் களைவாய் | எனது துன்பத்தை நீக்குகிறவனே ! |

| | |
|---|---|
| செங்கீரை ஆடுக | இவ்வாட்டத்தை யாடக்கடவாய். |
| ஏழ உலகம் உடையாய் | ஸப்தலோக ஸ்வாமியே! |
| ஆடுக ஆடுக என்று | மேன் மேலாடி வா யென்று |
| அன்னம் நடை | ஹம்ஸத்தின் நடைபோன்ற நடையுடைய |
| மட வாள் | மடப்பமுடைய |
| அசோதை | யசோதையினால் |
| உகந்த பரிசு ஆன | அபேக்ஷிக்கப்பட்ட ப்ரகாரத்தை யுடையனவாய் |
| புகழ் | கீர்த்தியுள்ள, புகழப்பட்ட |
| புதுவை பட்டன் | ஸ்ரீ வில்லிபுத்தூரிலிருக்கும் பட்டனாலே (பெரியாழ்வாராலே) |
| உரைத்த | உரைக்கப்பட்டனவும் |
| தமிழ் | (ஸர்வஸுகமான) தமிழ்ப் பாஷையிலுள்ளனவும் |
| இன் இசை | இனிய ராகத்தோடு கூடியவையுமான |
| இ பத்து மாலை களும் | கீழ்ச்சொன்ன பத்து பதகும்ப (வஹுமூஹ)ங்களையும் |
| வல்லார் | கற்று ஸமர்த்தரானவர்கள் |
| உலகில் | உலகத்திலே |
| எண் திசையும் | எட்டு திக்குகளிலும் |
| மிக்கு புகழ் | மிகுந்த கீர்த்தியையும் |
| அது இன்பம் | அந்த ஸுகத்தையும் |
| எய்துவர். | பெறுவர். |

**அன்னமும்:** இவ்வவதார வ்ருத்தாந்தத்தை 1. 9. 10-ல் காண்க. மீனுமென்றது மீனுருவுமென்றது—த்ரவிடதேசத்தாசனான ஸத்யவ்ரதனுடைய அஞ்ஜலியில், அவன் க்ருதமாலை யென்னும் நதியில் தர்ப்பித்த போது, சேர்ந்து பிறகு தன் நியமனத்திற்கிணங்கி அவனால் கலசத்திலும், பானையிலும், தடாகத்திலும், பெரு மடுக்களிலும், மஹாஸமுத்திரத்திலும் விடப்பட்டு ஆங்காங்கு தகுந்தபடி வளர்ந்துவந்த அம்மீனத்தின் உருவங்களையெல்லாம் உள்ளத்திற் கொண்டதினாலென்க. 'ஆயர்கள் நாயகனே' என்றதால் 'ஆயர்கள் போரேறே' என்றது கொண்ட பாசுரங்களும், 'என்ன வலம்—ஏழுலகமுடையாய்' என்றதால் மேற்பாசுரங்களும் குறிக்கப்பட்டன. எண்டிசைப் புகழைக் குறிக்கும் இப் பாட்டிற் சொன்ன விளிச்சொற்களும் எட்டு. இன்பமது: அது என்பது அப் புகழுக்கேற்ப இவ்வுலகினில் இன்பத்தையும் குறிக்கும். 'பரிசு=ப்ரகாரத்தை. இது, 'உரைத்த' என்றதோடு சேரும்' என்றும், 'ஆன புகழ்—என்பதற்கு யசோதைக்கு மேலான புகழை யுடையயான எனப் பொருள்' என்றும் உரைப்பதும் காண்க. ௰க.

ப்ரபந்தரக்ஷையில் பெரியாழ்வார் திருமொழி 1. 6.

உய்யவுலகு உரை முற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன்திருவடிகளே சரணம்.

—:o:—

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

## பெரியாழ்வார் திருமொழி 1. 7. (சப்பாணி கொட்டல்)

# மாணிக்கக் கிண்கிணி.

குழந்தை படுத்திருக்கும் பருவத்திலே தாலாட்டு. பிறகு எழுந்திருக்கத் தொடங்கி கைகளையும் முழங்கால்களையும் ஊன்றி அசையும்போது செங்கீரைப் பருவம். நன்றாக வெழுந்து, சுவரைக் கூடப் பிடிக்க அபேக்ஷையின்றி, இரு கைகளையும் குவித்துச் சேர்த்துக்கொள்ளும் தசை சப்பாணிப் பருவம். ஆகவே சப்பாணி என்னும் பதத்தை 'ஸஹ பாணி' என்ற வடசொல்லின் திரிபாய் வைத்துச் சேர்ந்துள்ள பாணிகள் என்று பொருள் கூறுவதாகும். பாசுரத்தில், கைகளால் சப்பாணி என்று சப்பாணிக்குக் கைகளைக் கருவியாகக் குறிப்பதால் சப்பாணி என்பதற்குக் கைகொட்டுதல் என ப்ரஸித்தமான பொருளுமாம். இச் சப்பாணியை யசோதை முதலானோர் அபேக்ஷித்தபடி ஆழ்வாரும் அபேக்ஷித்து அநுபவித்து அருளுகிறார்.—

1. மாணிக்கக்கிண்கிணியார்ப்பமருங்கின்மேல்
ஆணிப்பொன்னாற்செய்தவாய்ப்பொன்னுடைமணி
பேணிப்பவளவாய்முத்திலங்க,பண்டு
காணிகொண்டகைகளாற்சப்பாணி
கருங்குழற்குட்டனே ! சப்பாணி. (75)

| | |
|---|---|
| மருங்கின் மேல் | அரையில் |
| ஆணி பொன்னால் | உயர்ந்த தங்கத்தினால் |
| செய்த வாய் | செய்யப் பெற்ற முகங்களை யுடையனவான |
| பொன் | அழகிய |
| உடைமணி | அரைமணிகளை |
| பேணி | ஆதரித்து, (அல்லது) அவற்றிற்குக் கீழ்ப்படிந்து |
| மாணிக்கம் கிண்கிணி | சப்திப்பதற்காக உள்ளே மாணிக்கக் கற்களை வைத்துச் செய்த கிண்கிணிகள் |
| ஆர்ப்ப | த்வனிக்கும்படியும் |

| | |
|---|---|
| பவளம் வாய் | பவளம் போன்ற வாயும் அதிலுள்ள |
| முத்து | முத்து போன்ற பற்களும் |
| இலங்க | ப்ரகாசிக்கும்படியும் |
| பண்டு | முன் (வாமநாவதாரத்திலே மாவலியினிடம்) |
| காணி | நிலத்தை |
| கொண்ட கைகளால் | ப்ரதிக்ரஹம் செய்த திருக் கைகளால் |
| சப்பாணி கொட்டாய் | கொட்டுதலைச் செய்வாயாக. |
| கரு குழல் குட்டனே | கறுத்த குந்தலங்களை யுடைய பிள்ளாய் ! சப்பாணி (கொட்டாய்). |

கிண்கிணி மாணிக்கத்தால் செய்யப்படில் சப்தியாதாகையாலே வெண்கலம் முதலானவற்றால் செய்யப்பட்டு, அதனுள் சப்திப்பதற்கு நாவாக

ஏதேனுமொன்றைப் போடாமல் ஐச்வர்யத்திற்குத் தக்கபடி மாணிக்கத்தைப் போட்டிருப்பதால் மாணிக்கக் கிண்கிணி எனப் படுகிறதென்பர். அரையில் அரைநாண் என்றும், அரைவடமென்றும், கிண்கிணியென்றும் மூன்று வகை யணிகளுண்டு. இவற்றில் அரைநாண் சப்தியாது. ஆகவே மேற்பாசுரத்தில், 'பொன்னரை நாணொடு மாணிக்கக் கிண்கிணி தன்னரை யாட' என வருளிச் செய்வர். அரைவடமாவது, 'உடையார் கனமணியோடொண்மாதளம்பூ' என முன்சொன்னது போலுள்ள அரைத்தொடர். உடைமணி என்று அரைவடத்திற்குப் பெயர். இதில் மணிகள் நிறைந்திருக்கின்றன வென்றும், அவற்றில் சப்தம் உண்டாவதற்காக முழுமையும் உயர்ந்த பொன்னால் செய்யப்படாமல் ஒவ்வொரு மணியின் வாய்ப்புறம் மட்டும் உயர்ந்த தங்கத்தினுலும், மற்ற பாகம் வேறுபடியாலும் செய்யப்பட்டிருக்கின்றன வென்றும் அறிவிக்கவே, அரைவடமென்னாது உடைமணி என்றும், ஆணிப் பொன்னாற் செய்தவாய் உடைணி யென்றும் அருளிச் செய்ததாம். பேணி : 'உடன் கூடிக் கிண்கிணி யாரவாரிப்ப உடைமணி பறை கறங்க' (1. 8. 1.), 'உடைமணி கணகணென' (1. 6. 7.) என்றபடி உடைமணி வோசை கணகணவென்றும், கிண்கிணி வோசை அதற்குத் தாழ்ந்து சலார் சலாரென்றுமிருக்கும்.

செய்தவாய் என்றதை செய்த ஆய் எனப் பிரித்து ஆய்தல் தெரிதலாய் பழிப்பறுதலைச் சொல்லுகிறதென்றும், உடைமணி என்பதை மணி உடை எனவாக்கி மணியுடைத்தான எனப் பொருள் என்றும் கூறி அதனை மருங்குக்கு விசேஷணமாக வைத்து, பழிப்பற்று அழகிய அரைவடத்தையுடைய மருங்கின் மேல் என்றுரைகின்றனர். இபோது பேணி என்பது சப்பாணி கொட்டாயென்பதோடு சேரும். பேணி=விரும்பி, அல்லது ஆயாஸப்படாமல் என்றதாம். காணி கொண்ட கைகளால் என்பதால் கொள்வதற்குக் குவித்தாற்போல் குவித்துக்கொண்டு கொட்டவேணுமென்று சொன்னதாகும். கொட்டாய் என்னும் பதம் மேற் பாசுரத்திலிருப்பது இங்கும் சேரும். ஒரு தூக்கம் தூங்கு, ஓர் ஓட்டம் ஓடு என்றாற் போலே கைகொட்டுதல் கொட்டு எனப் ப்ரயோக மென்க. க.

2. பொன்னரைநாணொடுமாணிக்கக்கிண்கிணி
தன்னரையாடத்தனிச்சுட்டிதாழ்ந்தாட
என்னரைமேனின்றிழிந்துங்கள்ஆயர்தம்
மன்னரைமேற்கொட்டாய்சப்பாணி
மாயவனே ! கொட்டாய் சப்பாணி. (76)

| | | | |
|---|---|---|---|
| மாணிக்கம் கிண்கிணி | உள்ளே மாணிக்கத்தோடு கூடிய சதங்கையானது | தனி சுட்டி | தனிமையான சுட்டியானது |
| பொன் அரை நாணொடு | பொன்னால் செய்யப்பட்ட திருவரைநாணோடு கூட | தாழ்ந்து ஆட | (நெற்றியில்) தொங்கி ஆடும்படியும் |
| தன் அரை ஆட | தானிருக்கும் அரையிலேயே ஆடும்படியும் | என் அரை மேல்நின்று இழிந்து | எனது மடியிலிருந்து இறங்கி |

| | | | |
|---|---|---|---|
| உங்கள் ஆயர் தம் மன் | உன்னுடைய தந்தையாரான இடையரின் மன்னரான (நந்தகோபருடைய) | அரை மேல் | மடி மேல் (தங்கி) சப்பாணி கொட்டாய். மாதவனே ! சப்பாணி. |

இடுப்பில் உட்கார்ந்து சப்பாணி கொட்ட வியலாதாகையாலும், குழந்தை நிற்கும் பர்வத்தைச் சொல்ல வேண்டுகையாலும் அரையாவது இங்கு மடி. உங்கள் : ஒருமையிற் பன்மை. இது உலக நடையை யொற்றிருக்கும். ஒரு பிள்ளையைப் பார்த்துப் பேசும்போது கூட, 'உங்கள் அப்பன் எங்கே' என்றவாறு உலகில் வழங்குவர். 'என் மடியினின்றிழிந்து' என்ற போதே கண்ணன் அம் மடியிலிருந்து இழிய மனம் வாராமல், பலர் மடிகளில் சப்பாணி கொட்ட பல ரூபங்களை எடுத்துத் தோன்றினதால் அத்தனை ரூபங்களையும் கண்டு 'உங்கள்' என்றுளென்னலுமாம். இது யசோதை சொல்லன்று, ஆழ்வாரின் ப்ரார்த்தனையே என்ற பக்ஷமாகில், உங்கள் ஆயர் தம் என்பதற்கு ஆயரான உங்களுடைய எனப் பொருளாம். ஆக பன்மையும் பொருந்தும். உ.

3. பன்மணிமுத்தின்பவளம்பதித்தன்ன
என்மணிவண்ணனிலங்குபொற்றோட்டின்மேல்
நின்மணிவாய்முத்திலங்கநின்னம்மைதன்
அம்மணிமேற்கொட்டாய்சப்பாணி
ஆழியங்கையனே சப்பாணி. (7)

| | | | |
|---|---|---|---|
| பல் மணி | பல ரத்னங்களும் | மணி வாய் | அழகிய முகத்திலுள்ள |
| முத்து | முத்தும் | முத்து இலங்க | முத்து ப்ரகாசிக்கும்படி |
| இன் பவளம் | இனிய பவளமும் | நின் அம்மைதன் | உன் தாயின் |
| பதித்து அன்ன | பதித்தாற் போலுள்ள | அம் மணி மேல் | மடியின் மேல் நின்று கொண்டு சப்பாணி கொட்டாய். |
| என் மணி வண்ணன் | என்னுடையவனும் மணிவர்ணனை நீ | ஆழி அம் கையனே | மோதிரங்கள் உள்ள அழகிய திருக்கைகள் உடையவனே ! சப்பாணி. |
| இலங்கு | (பிரதிபிம்பமாக) விளங்கும் | | |
| போன் தோட்டின் மேல் | பொன்னால் செய்யப்பட்ட (உன் அம்மையின்) காதணி மேல் | | |
| நின் | உன்னுடைய | | |

கண்ணன் திருமேனியினுடையவும் திருவாபரணங்களுடையவும் வர்ணங்களாலே நவ ரத்னங்கள் பதிக்கப்பட்டுள்ள ஒரு வஸ்து போல் விளங்குகிறான். இவன் யசோதையின் மடியில் நிற்கும்போது அவளுடைய பொன்தோடுகளில் இவனுடைய நிழல் விழுகிறது. அவள் முகத்துக்குச் சேர இவன் இருப்பதாலே அவளுடைய காதிற்கு ஏறக்குறைய சரியாக இவன்முகமிருக்க இவன் வாய்முத்து தோட்டின்மேல் இலங்கும். வாய் முத்தாவது—முகத்திலுள்ள சிறு பல், அல்லது திருவதரத்தைப் பர்சித்து நிற்கும் பிலாக்கு முத்து.

பன் மணியாவது—மாணிக்கம், மரகதம், வைரம், நீலம், கோமேதகம், வைடூரியம் என்ற மணிகளாம். பவளம் பதித்தன்ன இதை 'அருவிகள் பகர்ந்தனைய' (1. 8. 8.) என்றதைப் போல் கொள்க. பதித்து அன்ன என்ற

வண்ணமே உரைகளிலும் பிரித்து, ‘அன்ன’ என்பதற்கு மட்டும் பொருள் வேறு கூறினர். ‘பதிந்த அன்ன’ எனவும் பிரிப்பர். மணிவண்ணன் :—‘நீ’ என்னுது ‘மணி வண்ணன்’ என்றது நவரத்னம் பதித்தன்ன என்று சொன்னதற்கிணங்கச் சொல்வதற்காக. இது படர்க்கையானும் முன்னிலைப் பொருள் தோன்றுமென்று ‘தந்தை சொற் கொள்ளாது’ (1. 7. 6.) என்ற விடத்திற் கொண்டது போல் கொள்க. அம்மணியென்றும் அம்மணமென்றும் அரைக்குப் பெயர் என்கிறனர். நேமியங்கையனே என மேலே கூறுவதால் இங்கு மோதிரத்தை ஆழி யென்றது.

இப் பாட்டிற்கு உரையாளர் ஆதரித்துள்ள உரையாவது—‘என் மணிவண்ணன் = எனது மணிவண்ணனே! பன்மணி முத்து இன் பவளம் பதிக்கப்பெற்று, அன்ன = அப்படிப்பட்ட (அழகான) இலங்கு பொன் தோட்டின்மேல் = உன்னுடைய பொற்காதணியின் அழகுக்குமேல் அழகாய், நின் பவளவாய் முத்து இலங்க நீ சப்பாணி கொட்டாய்’ என்றது. இவ் வுரைப்படி தோடு கண்ணனுடையது. அதற்கும் பவளவாய்முத்துக்கும் வேறு ஸம்பந்தமிராவிடினும் அதன் அழகுக்கு மேல் இதன் அழகு என்பதிலே நோக்காம்.

முதற் பாசுரத்தில் யசோதையின் மடியில் சப்பாணி கொட்டினதும், பிறகு நந்தகோபர்மடியிலே நின்று சப்பாணி கொட்டினதுமானபிறகு, இங்கு நந்தகோபர் அவள் மடியிலே சப்பாணி கொட்டச் சொல்லி யனுபவித்ததை இப்பாசுரம் வெளியிடுகிறது. அன்றி, இத் திருமொழியிலே ஆழ்வார் தாமும் யசோதையும் நந்தகோபர் முதலானோரும் சேர்ந்திருந்து எம்பெருமானை அநுபவித்ததாகப் பாவித்து, முதற் பாசுரத்திலே தம் மடியிலும், பிறகு நந்தகோபர்மடியிலும், இங்கு யசோதைப்பிராட்டியின் மடியிலும் அவர் சப்பாணி கொட்டக் கேட்டதாகக் கொள்ளலாம். ஆக இத் திருமொழி முழுவதும் ஆழ்வார் தாமே ப்ரார்த்தித்தது சொல்லப்படுகிறதென்க. ௩.

4. தூநிலாமுற்றத்தேபோந்துவிளையாட
வானிலாவம்புலீ! சந்திரா! வாவென்று
நீநிலாநின்புகழாநின்றவாயர்தம்
கோநிலாவக்கோட்டாய்சப்பாணி குடந்தைக்கிடந்தானே சப்பாணி. (78)

| | | | |
|---|---|---|---|
| தூ | பரிசுத்தமான | நின் நிலா | (சந்திரனுக்கு மேற்பட்டுள்ள) உனது நிலாவை |
| நிலா முற்றத்தே | நிலாவில் உலாவுதற்காக அமைத்த வெளிமுற்றத்திலே | புகழாநின்று | புகழ்கின்ற |
| போந்து விளையாட | வந்து விளையாடுவதற்காக—, | ஆயர் தம் கோ | இடையரின் நாதரானவர் (நந்தகோபர்) |
| ‘வான் நிலா அம்புலீ | ‘வானத்தில் நிலவுகின்ற அம்புலியே! | நிலாவ | நிலைபெறும்படி நீ சப்பாணி கொட்டாய். |
| சந்திரா | சந்திரனே! | குடந்தை கிடந்தானே | திருக்குடந்தையில் சயனித்திருப்பவனே! |
| வா’ என்று | வந்து சேர்’ என்றழைத்து | | சப்பாணி (கொட்டாய்). |

ஆயர்கோவானவர் தம் வேலையெல்லாம் விட்டு உன்னைப் புகழ்ந்துநிற்கிறார். அவர் இங்கே மகிழ்ந்து நிலைநின்று விளங்கும்படி நீ நிலாமுற்றத்திலே விளையாடுவதற்காகச் சந்திரனை யழைத்துச் சப்பாணி கொட்டாய் என்றவாறு. அம்புலி - சந்திரன். அம் = அழகிய—அல்லது நீர்மயமான புலமுடையவன், சந்திரன்—கண்டவர்களைக்

களிக்கச் செய்கிறவன் என்றவாறு குணங்கள் தோற்ற இருபெயரையும் கொண்டழைத்ததாம். கீழ் (1. 5.) அம்புலியழைத்தலிற் சொன்னபடி சந்திரனுக்கும் மேற்பட்ட அழகு வாய்ந்தவனுகையாலே கண்ணன்நிலாவை நந்தகோபர் புகழ்கின்றதாகச் சொன்னது. நின் புகழாநின்ற என்பதை உன்னைப் புகழ்கின்ற எனவுரைத்து நிலா என்பதை நில்லா என்ற செய்யா வாய்பாட்டின்படியுள்ளதின் தொகுத்தலாகக் கொண்டு, 'நீ போந்து, நீ அழைத்து, நீ (நிலா) நின்று' எனவும் யோஜித்து உரைப்பர். நீ என்று சந்திரனைச் சொல்லி, வா என்பதோடு சேர்ப்பர் சிலர். விளையாட வென்பது என்று என்பதோடு சேரும். இதை வா என்றதோடும் இணைப்பர். போந்து, விளையாட வா எனச் சேர்ப்பர் சிலர். இங்கே கண்ணன் அழைப்பதாகவன்றி, நந்தகோபர் அழைப்பதாகவும் சொல்லக் கூடும். அப்போது என்று என்பது புகழாநின்ற என்றதோடு சேரும். போந்து என்பதையும் அத்தோடு சேர்க்கலாம். அப்போது விளையாட என்பது வா என்றதோடு இணையும். அப்போது சந்திரா என்று கண்ணனையே சந்திரனுகப் பாவித்தழைத்ததுமாகலாம். வேறு சந்திரனைச் சந்திரனுக மதிக்காமல், நீயே அம்புலி, நீயே சந்திரன் என்று அவர் சொல்வதாகக் கொள்ளலாம். அப்போது வானிலா அம்புலீ என்பதற்கு 'வான் இலா' வானில் இல்லாத அம்புலீ என்றே, 'வான் நிலா' பரமபதத்திலே விளங்கும் அம்புலீ என்றே பொருள் கூறலாம். ஆக இவனுக்கே நிலா உண்டு, சந்திரனுக்கில்லை யாகையாலே 'நின் நிலா புகழாநின்ற' என்றதும் பொருந்தும். ஆகத் தூநிலாமுற்றம் கண்ணன்நிலாமுற்றமாம். நிலாவ. நிலாவுதல்—விளங்குதல். நிலைபெறுதலுமாம். பள்ளிகொள்ளும்போது நந்தகோபர் வந்ததால், குடந்தைக் கிடந்தானே என்றார்.
ச.

5. புட்டியிற்சேறும்புழுதியுங்கொண்டுவந்து
அட்டியமுக்கிஅகம்புக்கறியாமே
சட்டித்தயிரும்தடாவினில்வெண்ணெயுமுண்
பட்டிக்கன்றேகொட்டாய்சப்பாணி பற்பநாபா கொட்டாய் சப்பாணி.(79)

| | | | |
|---|---|---|---|
| புட்டியில் | புட்டிலில் (புட்டுக் கூடையில்) | தடாவினில் வெண்ணெயும் | பானையிலுள்ள வெண்ணெயையும் |
| சேறும் | சேற்றையும் | அறியாமே | தெரியாதபடி |
| புழுதியும் | மண் தூளியையும் | உண் | உண்கிற (அதனாலே) |
| கொண்டு வந்து | சேர்த்துக் கொணர்ந்து (அல்லது) கொண்டு உவந்து | பட்டி கன்றே! | களவு மேயும் கன்று போலிருப்பவனே! |
| அட்டி | கொட்டி | | கைகளால் சப்பாணி கொட்டாய் |
| அழக்கி | நெருக்கித் தட்டி, (அதற்குள்ளாகவே) | பற்பநாபா! | சமலத்தை நாபியிலுடையவனே! சப்பாணி கொட்டாய். |
| அகம் புக்கு | கிருஹத்திற்குட் புகுந்து | | |
| சட்டி தயிரும் | சட்டியிலுள்ள தயிர் முழுவதையும் | | |

புட்டியில் சேற்றையும் புழுதியையும் கொண்டு வரவும், கொட்டவும், அமுக்கவும், தயிர் வெண்ணெய் உண்ணவும் உபயோகித்த கைகளால் சப்பாணி கொட்டு என்ற பொருள் இங்கே தெளிய விருக்கிறது. புட்டியாவது ஜகனபார்ச்வம் என்றும், திருவரையென்றும், நீர்ச்சொட்டாலே புழுதி சேறுயிற்றென்றும், அதைத் தாயை அணையும் போது அவள்மேலே அட்டியமுக்கினுனென்றும் உரை கூறுவர். சேறும் புழுதியும்

அவனிடம் சொல்லப்பட்டபோது, "ததோ விப்ர! வஸுந்தரா பத்மாகாரா ஸமுத்பூதா பர்வதாப்த்யாதிஸம்யுதா" என்றது மனதிற் பட்டதாலும், வயிறு நிறைய வெண்ணெய் தயிர் உண்டதாலே நாபி மலர்ந்ததாலும் பத்மநாபா என்றார் போலும். அகண்ட ப்ரஹ்மாண்டம் நாபியினின்று வெளிப்படும்படி வெண்ணெய் தயிர் உண்டாய் என்றதுமாம். ரு.

6. தாரித்துநூற்றுவர்தந்தைசொல்கொள்ளாது
போருய்த்துவந்துபுகுந்தவர்மண்ணுளப்
பாரித்தமன்னர்படப்பஞ்சவர்க்கன்று
தேருய்த்தகைகளால்சப்பாணி தேவகிசிங்கமே சப்பாணி. (80)

| | |
|---|---|
| மண் ஆள | பூமியை(முழுவதும் நிலைத்து) ஆள்வதற்கு |
| பாரித்த மன்னர் | மனோரதங் கொண்ட அரசர்களாயும் |
| தந்தை சொல் கொள்ளாது | தம் க்ஷேமத்தையே தேடும்பிதாவான த்ருதராஷ்ட்ரனின் உபதேசத்தைக்கூட ஸ்வீகரிக்காமல் |
| தாரித்து | (பொய்ச் சூதில்) முழுமையும் பெற்று (அல்லது) (கர்ணாதிகளோடு) நிர்த்தாரணம் செய்து |
| போர் உய்த்து | யுத்தத்தை வைத்து (நடத்துவதாக அரசருக்கு ஆஜ்ஞை செய்து) |
| வந்து புகுந்தவர் | யுத்த பூமியான குருக்ஷேத்திரத்திலே தாமும் புகுந்தவராயுமுள்ள |
| நூற்றுவர் பட | துர்யோதனாதிகள் நூறுபேரும் பட்டுப் போம்படி |
| பஞ்சவர்க்கு | ஐவர்க்கு (பஞ்ச பாண்டவர்களுக்கு) |
| அன்று | யுத்தம் செய்தேயாகவேண்டியிருந்த ஸமயத்திலே |
| தேர் உய்த்த | பார்த்தஸாரதியாய்த் தேர் நடத்தின |
| கைகளால் | (கோலும் கடிவாளுமேந்தின) திருக் கைகளால் சப்பாணி (கொட்டாய்). |
| தேவகி சிங்கமே | (பார்த்தரின் பந்துவாய்) தேவகியினிடம் பிறந்த சிங்கமே! சப்பாணி (கொட்டாய்). |

தாரித்து என்றது யாரயதி என்ற வடசொல்லிலிருந்து வந்ததாகும். தரித்து என்றவிடத்தில் தாரித்து என நீட்டல் விகார மெனவும் கூறுவர். தந்தை சொல்—"ப்ரயச்ச ராஜ்யார்த்த(ம-உ) மபேதமோஹ: ஸவாஹநம் த்வம் ஸபரிச்சதஞ்ச। ததோஉவசேஷம் தவ ஜீவிதஸ்ய ஸஹாநுஜஸ்யைவ பவேத் நரேந்த்ர" (பா. 7. 149. 36.) இத்தியாதியாம். இவ்வண்ணம் பலகாலும் கேட்டும் துர்யோதனன், "ப்ரயாத வை குருக்ஷேத்ரம் புஷ்யோத்யேதி புந: புந:" என்றே அரசர்களுக்கு ஆஜ்ஞை யிட்டான். **தந்தை** = ஸர்வலோக பிதாவான ஸ்ரீ கிருஷ்ணன் எனவுமுரைப்பர். போர் என்றவிடத்தில் தார் என்ற பாடமான போது, தார் உய்த்து - படைவகுப்பைச் செய்து நடத்தி என்றதாம். உய்த்து உவந்து எனப் பிரித்து போர் உய்த்து உவந்து புகுந்தவர் படத் தேர் உய்த்தா யென்னலுமாம். சு.

7. பரந்திட்டுநின்றபடுகடல்தன்னை
இரந்திட்டகைம்மேல்எறிதிரைமோதக்
கரந்திட்டுநின்றகடலைக்கலங்கச்
சரந்தொட்டகைகளால்சப்பாணி சார்ங்கவிற்கையனே சப்பாணி. (81)

| | | | |
|---|---|---|---|
| பரந்து | (ஸகர புத்திரர்கள் வெட்டினதாலே) விஸ்தாரமாகப் பரவி | கரந்திட்டு நின்ற | தன்னை மறைத்துக் கொண்டு வெளிவராமலே நின்றுவிட்ட |
| இட்டு | வேண்டியவற்றை அளித்து | கடலை | ஸமுத்ர ராஜனைக் குறித்து |
| நின்ற | ப்ரஸித்தி பெற்று நின்றதான | கலங்க | (அவனும் அவனுடைய படுகடலும்) கலங்கும்படி |
| படு கடல் | ஆரவாரமுள்ள ஸமுத்ரமானது | சரம் தொட்ட | அம்பைத் தொட்டிருந்த |
| தன்னை இரந்து | வழிவிட வேணுமென்று (ப்ராதிசயநம் பண்ணித்) தன்னை ப்ரார்த்தித்து | கைகளால் | திருக்கைகளால் |
| இட்ட | நீட்டிவைத்த | | சப்பாணி (கொட்டாய்) |
| கை மேல் | (உன்) திருக்கைகளின் மேல் | | |
| எறி திரை மோத | பட்டதையெல்லாம் தூரத்தில் எறிந்துவரும் அலைகள் வீசி அடிக்கும்படி | சார்ங்க வில் கையனே ! | சார்ங்கமென்னும் வில் அணிந்த கையை யுடையவனே ! சப்பாணி (கொட்டாய்). |

**இட்டு :** இதை எங்கும் துணைவினையாகவே கொண்டு வேறு பொருள் கூறுமவிருப்பது முண்டு. முன்னோரான ஸகரபுத்திரரால் தனக்கேற்பட்ட வளமையை நினைத்துத் தானே ராமதூதனை ஹநுமானுக்கும் இளைப்பாற மைநாகத்தை அனுப்பியதாகிலும் நேரில் இரந்தபோது மோதவே துணிந்து சரணாகத த்ரோஹியாயிற்று. ஆக, பரந்திட்டு நின்ற என்பது அதன் நற்குணத்தை சொல்வதுபோல் அதன் கொழுப்பைக் கூறுவதுமாய். **மோத.** எல்லாவற்றையும் அடித்தெறியும் திரைகளால் இத் திருக்கைகளை மோதினது மாத்திரமேயன்றி அசைக்கமுடியவில்லை **சரந்தொட்ட கைகளால் :** ஸவ்யஸாசியல்லனோ இராமன். அன்றி ஒரு கையால் சரமெடுத்து நாணேற்றின வில்லிலே தொடுத்துநிற்கும்போது இரு கைகளும் சரம் தொட்டனவாம். **எ.**

8. குரக்கினத்தாலேகுரைகடல்தன்னை
நெருக்கிஅணைகட்டிநீணீரிலங்கை
அரக்கர்அவியஅடுகணையாலே
நெருக்கியகைகளால்சப்பாணி நேமியங்கையனே சப்பாணி. (82)

| | | | |
|---|---|---|---|
| குரை கடல் தன்னை | கோஷித்துக் கொண்டிருந்த ஸமுத்திரத்தை | நீள் நீர் இலங்கை(யை) | நீண்ட சமுத்திரமாகிய அகழ் உடைய லங்கா நகரத்தை |
| நெருக்கி | ஒடுக்கி | நெருக்கிய | நிறைத்த |
| குரங்கு இனத்தாலே | குரங்குகளின் கூட்டத்தைக் கொண்டு | கைகளால் | திருக்கைகளால் |
| அணை கட்டி | ஸேதுவைக் கட்டிவைத்து | | சப்பாணி (கொட்டாய்). |
| அரக்கர் | ராக்ஷஸர்கள் | நேமி அம் கையனே | திருவாழி ஏந்தின அழகிய கையுடையவனே ! |
| அவிய | அழிந்து போம்படி | | சப்பாணி (கொட்டாய்). |
| அடு கணையாலே | அழிக்கவல்ல சரங்களாலே | | |

குரங்கு இனத்தாலே—குரக்கினத்தாலே. **நெருக்கி.** சரம் தொடுத்ததைக் கண்டு நடுங்கி ஸமுத்ரராஜன் அணை கட்டலாம்படி அசையாமே நின்றதைச் சொன்னபடி. ஆகவே அணைக்கு இருபுறமும் ஜலம் தேக்கமாய் நின்றுவிட்டதாம். இலங்கையென்பதை நெருக்கிய என்பதன் செயப்படுபொருளாகக் கொள்க. இலங்கையிலுள்ள அரக்கர் அவிய நெருக்கிய = நெருங்கப் போர் செய்த என்றுமுரைப்பர். **அ.**

9. அளந்திட்டதூணைஅவன்தட்டவாங்கே
வளர்ந்திட்டுவாளுகிர்ச்சிங்கவுருவாய்
உளந்தொட்டிரணியன்ஒண்மார்பகலம்
பிளந்திட்டகைகளால்சப்பாணி பேய்முலையுண்டானே சப்பாணி. (83)

| | | | |
|---|---|---|---|
| அளந்து | (இரணியன் தானே தனக்கும் தன் கிருகத்திற்கும் அநுகூலமாம்படி) அளவு செய்து | இரணியன் உளம் | ஹிரண்யாஸுரனுடைய (உள்ளம்) நெஞ்சை |
| | | தொட்டு | பரீக்ஷித்து |
| இட்ட தூணை | வைத்த ஸ்தம்பத்தை | ஒண் | (ஹிரண்யம் போலே) தேஜிஷ்டமான |
| அவன் | அந்த ஹிரண்யாஸுரனே | | |
| தட்ட | தட்டின போதே | | |
| ஆங்கே | அவன் தட்டின இடத்திலேயே | | |
| வாள் உகிர் | (பஞ்சாயுதங்களுக்கும் மேற்பட) ஒளி பொருந்திய நகங்களை யுடைய | அகலம் மார்பு | அகன்ற மார்பை |
| | | பிளந்திட்ட | (நகங்களாலே) கிழித்தெறிந்த |
| சிங்கம் உருவாய் | (நர)ஸிம்மரூபனாய் | கைகளால் | திருக்கைகளால் சப்பாணி (கொட்டாய்)! |
| வளர்ந்திட்டு | (ஹிரண்யனைத் தொடையில் அமர்த்துவதற்குத் தக்கவாறு) விருத்தியடைந்து வெளிப்பட்டு | பேய் முலை உண்டானே | பேயான பூதனையின் ஸ்தன்யத்தைப் புசித்தவனே! சப்பாணி (கொட்டாய்). |

தானே அளந்து நட்ட தூணுகையாலே, 'இங்கு விஷ்ணு இல்லை' என நினைத்தான் அவன். வேறிடத்திலாவது வேறு ஸமயத்திலாவது வெளிக் கிளம்பினால் எங்கும் உளன் என்னும் ப்ரஹ்லாதவாக்யம் ஸத்யமாகத் தடையுண்டாமென்று எம்பெருமான் அப்பொழுதே அவ்விடமே ஆவிர்ப்பவித்தான். இப்போதாவது உண்மை யுணர்ந்தோ பயந்தோ அநுகூல தசையிலிருந்தால் விட்டுவிடலாமென்று நெஞ்சு தொட்டுப் பார்த்தான். ஆகிலும் திடுக்கிடாமல் மிக்க க்ரோதத்தாலே ஜ்வலித்துநின்ற அவன்மார்பைப் பிளந்தே தீரவேண்டிற்று. **தட்டவாங்கே வளர்ந்திட்டு:** தன்னைக் காணுமையால் தன்னைத் தட்டுவதற்குப் பதிலாகத் தூணைத் தட்டினுனென்று எம்பெருமான் நினைக்கும்படி யிருந்தது. தட்டினவன், திவ்யாத்ம ஸ்வரூபமே எங்கும் வ்யாபித்துள்ள தென்றும், அதைத் தட்ட முடியாதென்றும் நினைக்காமல் எம்பெருமானது உருவமே எங்கும் நிரம்பினதாக நினைத்தான். அதுவும் உண்மையே என்று உருவத்தையே காண்பித்து விளக்கவேண்டியதாயிற்று. அவன் தட்டினதால் ஹாநி யொன்றுமில்லை; வளர்வதற்கே அது அநுகூலமாயிற்று. கையால் தட்டினவனைக் கைகளாற் பிளந்திடவும், ஹரியே தான் என்பதை ரூபிக்கவும் வாளுகிர்ச் சிங்கவுருவானது. **உளந்தொட்டு:—** "உன்னைச் சிந்தையினாலிகழ்ந்த விரணியனகன்மார்வங் கீண்ட" (திருவாய். 2. 6. 6.) என்று அப்போதும் அவன்நெஞ்சின் கொடுமையை நம்மாழ்வார் அருளிச்செய்தார். **பேய்முலை யுண்டானே:—** ஒருவன்மார்பைக் கையுகிரால் கீண்டு ஸம்ஹரித்தான். ஒருத்திமார்பைக் கூர்நகமுள்ள கையால் அழுத்தி ப்ராணபஹாரம் செய்தான். ஒருவனைத் தொடையில் வைத்து ஸம்ஹரித்தான். ஒருத்தியை அவள்தொடையில் இருந்து ஸம்ஹரித்தான். இப்படி சேர்த்துச் சொல்வதை 1. 3. 5—லும் காண்க. கூ.

10. அடைந்திட்டமரர்கள்ஆழ்கடல்தன்னை
மிடைந்திட்டுமந்தரம்மத்தாகநாட்டி
வடம்சுற்றிவாசுகிவன்கயிறுகக்
கடைந்திட்டகைகளால்சப்பாணி கார்முகில்வண்ணனே சப்பாணி. (84)

| | |
|---|---|
| அமரர்கள் | இப்போது அமரத்வம் பெற்றுள்ள தேவர்கள் (அதற்காகவே) |
| மிடைந்து | (அசுரர் முதலாக எல்லோருமாக) நெருங்கி |
| ஆழ்கடல்தன்னை | ஆழமான (பாற்) கடலை |
| அடை ந்திட்டு | போய்ச் சேர்ந்து |
| இட்டு | (அக்கடல் தோய்வதற்காக அதில் ஓஷதிகளைச்) சேர்த்து |
| மந்தரம் | மந்தர பர்வதத்தை |
| மத்தாக நாட்டி | (கடல்மேல்) மத்தாக நிறுத்தி |
| வாசுகி | வாஸுகி என்னும் ஸர்ப்பமாகிற |
| வல் கயிறு | திடமான கயிற்றை |
| வடம் சுற்றி | வட்டமாகச் சுற்றி |
| ஆக | தீர்ந்துவிட (கடைந்து ஓய்ந்துவிட) |
| கடைந்து | (தானே நேரில் இருபுறமும் வாசுகியைப் பிடித்துக்) கடைந்து |
| இட்ட | அமரர்க்கமுதளித்த |
| கைகளால் | திருக்கைகளால் |
| | சப்பாணி (கொட்டாய்). |
| கார் முகில் வண்ணனே | கரிய மேகத்தின் நிறமுள்ளவனே ! |
| | சப்பாணி (கொட்டாய்). |

மந்தர பர்வதத்தை எடுத்துப் போனது முதல், எல்லாச் செய்கைகளிலும் எம்பெருமான் அனேக உருவமெடுத்து அவர்களுக்கு உதவினாலும் விஷ்ணுபுராணத்தின்படி அவர்களும் கூட அவற்றைச் செய்தார்களாகையாலே ஆக என்ற வரையில் அவர்கள் செயல்களைச் சொன்னதாகும். இங்கு ஆழ்கடல் தன்னை அடைந்திட்டு என்ற விடத்தில் கடல்போலே கம்பீரமாய் அறிய முடியாத அபிப்பிராயம் கொண்டவனையும், பிராட்டி முதலாகப் பல ஸம்பத்துக்களாலே தனக்கும் மூவுலகுக்கும் ஸுகம் கருதியவனுமான எம்பெருமானை அவர்கள் சரணமடைந்ததும் கருத்திலுள்ளதாம். கார்முகில் என்றதால பல ரூபங்களெடுத்து, மலையைச் சுமக்கவும், அமுக்கவும், கடையவும், அமிருதம் அளிக்கவும் நின்ற பரமோதாரனுடைய கல்யாண குணங்களும் மின்னற் போன்ற பிராட்டியைச் சேரத் தகுந்த திருமேனிகுணமும் தெரிவித்தபடி. இங்கு அடைந்திட்டு என்பதற்கு எம்பெருமானைச் சரணமடைந்து என்று உரை கூறி, கடல் தன்னை யென்பதை மிடைந்து என்பதில் சேர்த்து, மிடைத்து எனப் பிறவினைப் பொருளையும் கொள்வர். கயிறுக என்றவிடத்தில் கயிற்றை வடமாக = மத்துக் கயிறுகச் சுற்றி என வுரை செய்வர். ‘அடைந்திட்டு’ என்பதை, அடைந்திட என எச்சத்திரிபாகக் கொண்டு மிடைத்தது முதலாகக் கடைந்தது வரையில் எம்பெருமான் செயல்கள் என்றும் சொல்வர். ௰.

11. ஆட்கொள்ளத்தோன்றியஆயர்தம்கோவினை
நாட்கமழ்பூம்பொழில்வில்லிபுத்தூர்ப்பட்டன்
வேட்கையால்சொன்னசப்பாணியீரைந்தும்
வேட்கையினாற்சொல்லுவார்வினைபோமே. (85)

| | |
|---|---|
| நாள் | நாள்தோறும், எல்லா நாளிலும் |
| கமழ் பூ | மணம் வீசும் பூக்களையுடைய |
| பொழில் | சோலைகளுள்ள |
| வில்லிபுத்தூர் | ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த |
| பட்டன் | பட்டநாதனெனவர் |
| வேட்கையால் | ஆசையாலே—, |
| ஆள் கொள்ள தோன்றிய | அடிமை கொள்வதற்காக ஆவிர்ப்பவித்த |
| ஆயர் தம் கோவினை | இடையர்களின் ஸ்வாமியான கண்ணனை |

| | | | |
|---|---|---|---|
| சொன்ன சப்பாணி ஈர் ஐந்தும் | சொல்வதற்குச்செய்த சப்பாணி விஷயமான $2\times5=$பத்து பாட்டுக்களையும் | சொல்லுவார் | அநுஸந்திப்பவர்களின் |
| வேட்கை யினால் | இப் பாசுரங்களின் ரஸத்தை யனுபவிக்க ஆசையினாலே | வினை | பாபமெல்லாம் |
| | | போம் | போய்விடும். |

**கோவினை.** இது கோ என்ற பதத்தின் இன்சாரியை பெற்ற இரண்டாம் வேற்றுமை. கோவினைச் சொல்ல வினை போம். ஈர் ஐந்தும்—முதல் ஐந்து பாசுரங்கள் கோபால பாலதசையைப் பற்றினவை. மற்றவற்றில் வேறு விதமாக வர்ணனம் என்ற வாசி தோற்ற இப்படிச் சொன்னதாம். எல்லோரையும் அடிமை கொள்ள ஆவிர்ப்பவித்தவன் முதலில் ஆயர்கோவானான். பிறகு மதுரை முதலான இடங்களிலுள்ளவரையும் ஆட்கொண்டான். விபவத்தில் செய்ததோடு நிற்காமல் அவ்வநுபவத்திலே இறக்கி ஆழ்வாரை ஆட்கொண்டான். அவர் பாசுரங்களிலே ஈடுபட வைத்து நம்மையுங்கூட ஆட்கொள்ளுகிறான். இதுவன்றோ சப்பாணி கொட்டிச் சிரிக்கும் கண்ணனது நீர்மையின் மேன்மை. ௰௧.

ப்ரபந்தரக்ஷையில் பெரியாழ்வார் திருமொழி 1. 7.

மாணிக்கக்கிண்கிணி உரை முற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

—:o:—

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

## பெரியாழ்வார் திருமொழி 1. 8. (தளர்நடை)

# தொடர்சங்கிலிகை.

எழுந்து நின்று கைகொட்டுதலை யனுபவித்துவிட்டு, நடையை யனுபவிக்கிறார். முதன் முதல் குழந்தை நடக்கும் நடை தளர்நடை, மிருதுவான நடை. 'தன்னைப் பெற்றேற்குத் தன் வாயமுதந் தந்தென்னைத் தளிர்ப்பிக்கின்றான்' என்றதால் இத் திருமொழியும் தாயின் பாவனையிலே இருந்து ஆழ்வார் அருளினார் என்பது வ்யக்தமாகும்.

1\. தொடர்சங்கிலிகைசலார்பிலாரென்னத்தூங்குபொன்மணியொலிப்பப்
படுமும்மதப்புனல்சோரவாரணம்பையநின்றூர்வதுபோல்
உடன்கூடிக்கிண்கிணியாரவாரிப்பஉடைமணிபறைகறங்கத்
தடந்தாளிணைகொண்டுசார்ங்கபாணிதளர்நடைநடவானோ. (86)

| | | | |
|---|---|---|---|
| வாரணம் | யானையானது | தூங்கு | (வயிற்றின் கீழ் இருபுறமும்) தொங்கும் |
| படும் | உண்டாய்க் கொண்டிருக்கும் | | |
| மும்மதம் புனல் | மூன்று மத ப்ரவாஹங்கள் | | |
| சோர | விழவே | பொன் மணி | அழகிய கண்டைகள் |
| துடர் | விலங்காயுள்ள | ஒலிப்ப | நாதம் செய்ய |
| சங்கிலிகை | சங்கிலிகள் | நின்றூர் | நின்று நின்று |
| சலார் பிலார் என்ன | அவ்விதம் சப்திக்க | பைய | மெள்ள |
| | | ஊர்வதுபோல் | நடப்பது போல்— |

| | | | |
|---|---|---|---|
| சார்ங்கபாணி | கையில் சார்ங்கமேந்தின கண்ணனவன் | பறை கறங்க | பறைபோல் ஒலி யுண்டாக்க |
| கிண்கிணி | சதங்கைகள் | தட இணை தாள்கொண்டு | விசாலமாய் ஒன்றுக்கொன்று ஸமமுமான பாதங்களினால் |
| உடன் கூடி | ஒன்று கூடி | தளர் நடை | தள்ளாட்ட நடையை |
| ஆரவாரிப்ப | சப்திக்க | நடவானோ | செய்ய மாட்டானோ (நடக்க வேணும்). |
| உடை மணி | அரைமணிகள் | | |

ச்ருங்கலிகா' என்னும் வட சொல்லின் திரிபு சங்கிலிகை. 'சங்கிலிகள்' எனவும் பாடமுண்டாம். தறியை முறித்துக்கொண்டு சங்கிலியோடு வந்ததாற் சங்கிலி சப்திக்கிறதென்றாவது, மதித்த யானையானபடியாலே அது வேகமாக ஓடாதபடி நாலு கால்களுக்கும் சேர்ந்து விலங்காகச் சங்கிலி இட்டிருப்பதால் அது காலோடு கால் சேர்த்துவைக்கும்போது ஒன்றுபட்டுச் சப்திக்குமென்றாவது கொள்க. தூங்கு பொன்மணி யென்றதை 'பொன் தூங்குமணி' என வைத்துப் பொன் கயிற்றில் தொங்கவிட்ட மணியென்று முரைப்பர். பொன்னாற் செய்த மணியாகில் சப்தியாதென்பர். மும்மதமாவது—இரண்டு காதுகளிலும் தலையிலும் பாய்கிற ஜலமென்றார் திருவாய் மொழிப் பிள்ளை. 'கபோல த்வயம், மேட்ரம், மஸ்தகம்' என்னும் ஸ்தான த்ரயத்தினின்றும் வடிகிற ஜலமென்றார் மணவாளமாமுனிகள். இங்கே மும்மதப் புனலுக்கு எதை ஒப்பிட்டபடி யென்னில்—அது யானைக்குத் தொடர்சங்கிலி ஏற்படவும், அதை இழுக்கவும் காரணமாகைக்காகவே குறிக்கப்பட்டதென்க. அன்றி, நெற்றியிலும் கபோலங்களிலும் உண்டாம் வேர்வையை ஒப்பிடலாம். பறை ஒரு வாத்யம் (மேளம்). தாளிணை பாதங்களிரண்டென்னவுமாம். யானைக்கும் பொதுவாகைக்காக இணைந்த அடிகள் என்றுரைப்பர். தாளால் என்னாது தாள்கொண்டு என்றதால் நடப்பதிலுள்ள ச்ரமம் தோற்றும். க.

4. செக்கரிடைநுனிக்கொம்பிற்றோன்றுஞ்சிறுபிறைமுளைப்போல்
நக்கசெந்துவர்வாய்த்திண்ணைமீதேநளிர்வெண்பல்முளையிலக
அக்குவடமுடுத்தாமைத்தாலிபூண்டவனந்தசயனன்
தக்கமாமணிவண்ணன்வாசுதேவன்தளர்நடைநடவானோ. (87)

| | | | |
|---|---|---|---|
| அக்கு வடம் | சங்குமணி வடத்தை | நுனி கொம்பில் | (மரக்கிளையில்) கொம்பு நுனியில் |
| உடுத்து | அரையில் சாத்திக்கொண்டு | தோன்றும் | காணப்படும் (ப்ரகாசிக்கும்) |
| ஆமைதாலி | கூர்மாகாரமான தாலியை | சிறு பிறை | பால சந்திரனின் |
| பூண்ட | (கழுத்தில்) அணிந்துகொண்டவனும் | முளை போல் | அங்குரம் போல |
| அனந்த சயனன் | திருவனந்தாழ்வான் மேலே சயனிப்பவனும் | நக்க | சிரித்ததான |
| தக்க மா மணி வண்ணன் | (அவ்வாபரணங்களாலும் படுக்கையாலும் பரபாகமேற்பட்ட) தகுந்த நீலமணி நிறமுள்ளவனுமான | செம் துவர் வாய் | சிவந்த பவளம் போன்ற வாயின் |
| வாசுதேவன் | வசுதேவ புத்திரனான கண்ணன், | திண்ணை மீது ஏ | மேடை போன்ற திருவதரத்தின் மேலேயே |
| செக்கர் இடை | செவ்வானத்தில் (இருந்து கொண்டு) | நளிர் வெண் பல் முளை | குளிர்ந்தும் வெளுத்துமுள்ள பல்லின் முளைகள் |
| | | இலக | ஒளி செய்ய |
| | | | தளர்நடை நடவானோ. |

செவ்வானத்தைச் செந்துவர்வாய் எனப்படும் வதனத்திற்கும், நுனிக்கொம்பை அதன் திண்ணை போன்ற திருவதரத்திற்கும் ஒப்பிட்டபடி. வாய் என்பது அதரமாய் அதாகிய திண்ணை யெனவுமுரைப்பர். 'சாகா சந்த்ர' ந்யாயப்படி சந்திரப்ரபை உண்மை

யில் கொம்பிற் படாமலே கொம்பிற் ப்ரகாசிப்பது போல் திருவதரத்திற் படாமலே அங்கே திருமுத்து ப்ரகாசிக்கிறது. எப்போதும் பிறை தோன்றுவது வானத்திலேயே யல்லது கொம்பிலன்று. அது போல் இங்கு திருப்பல்லும் வதனத்திற்குள்ளே எப்போதும் இலகும். துவர்—பவளம். மா என்பதற்குக் கறுப்பு எனப் பொருள். உ.

3. மின்னுக்கொடியுமோர்வெண்டிங்களுஞ்சூழ்பரிவேடமுமாய்
பின்னல்துலங்குமரசிலையும்பீதகச்சிற்றுடையொடும்
மின்னிற்பொலிந்ததோர்கார்முகில்போலக்கழுத்தினிற்காறையொடும்
தன்னிற்பொலிந்தவிருடீகேசன்தளர்நடைநடவானோ. (88)

| | | | |
|---|---|---|---|
| தன்னில் பொலிந்த | தானே சிறந்தவனான | அரசிலையும் | அப் பெயர் கொண்டதொரு பணியும் |
| இருடீகேசன் | ஹ்ருஷீகேசனென்ற கண்ணன் | பீதகம் சிறு ஆடை உம் ஒடு | சிறு பீதாம்பரமுமென மூன்றோடும் |
| மின் கொடியும் | கொடி போல் நீண்டு விளங்கும் மின்னலும் | கார்முகில் போல | வர்ஷாகால மேகம் போலுள்ள |
| ஓர் | விலக்ஷணமான (குறையற்ற) | கழுத்தினில் | திருக்கழுத்தில் |
| திங்களும் | சந்திரனும் | மின் இல் பொலிந்தது | மின்னற் போல் சிறந்ததாய் |
| சூழ் பரிவேடமும் ஆய் | (அச் சந்திரனைச்) சூழ்ந்ததான ஒளி வட்டமும் போன்ற வைகளான | ஓர் | விலக்ஷணமுமான |
| பின்னல் துலங்கு உம் | பின்னிச் செய்யப்பட்டு ப்ரகாசிக்கும் ஆபரண (பொன்னரை வட)மும் | காறை யொடும் | கண்டாபரணத்தோடும் |
| | | | தளர்நடை நடவானோ. |

தன்னிற் பொலிதலாவது, 'ஸ்வே மஹிம்நி ப்ரதிஷ்டித:' என்றபடி யிருக்கை. இவன் ஆபரணங்களைச் சிலவற்றிற்கு ஒப்பிட்டுரைத்தாற் போல இவன் ஒன்றோடு ஒப்பிட முடியாதபடி யிருக்கையுமாம். ஆபரணங்கள் வீண் என்னும்படியும் அவற்றிற்கும் ஒளி யளிக்கும்படியும் விளங்குகையுமாம். மின் + கொடி மின்னுக் கொடி. துலங்குதல்—ப்ரகாசித்தல். பின்னல்—அரைவடம். மின்னல் போன்ற பூஷணம் பூண்ட மயிர்ப் பின்னலென்பது முண்டு. பின்னல் துலங்கும். துலங்கு பின்னலும். துலங்கும் என்றும் பிரிக்க. அது அரசிலைக்கும் அடைமொழியாம். மின்னில் என்றதை ஏழாவது வேற்றுமை யாக்கி மூன்றாம் வேற்றுமைப்பொருள் கொண்டு மின்னாலே விளங்கப் பட்டதோர் காளமேகம் போன்ற கழுத்து என்று அந்வயம் செய்வர். இங்கு மின் உவமானம். காறை உபமேயம். ஆக மின்னில் என்ற விடத்தில் இல் என்பதற்கு, 'அழலிற் பிறழ்மணி' என்ற விடத்திற்போல் உவமைப் பொருளாம். ஆகப் பத வுரைப்படி அந்வயம் கொள்க. இது ஒப்புப்பொருளில் வந்த ஐந்தாம் வேற்றுமை. ஙு.

4. கன்னற்குடந்திறந்தாலொத்தூறிக்கணகணசிரித்துவந்து
முன்வந்துநின்றுமுத்தந்தருமென்முகில்வண்ணன்திருமார்வன்
தன்னைப்பெற்றேற்குத்தன்வாயமுதந்தந்தென்னைத்தளிர்ப்பிக்கின்றான்
தன்னேற்றுமாற்றலர்தலைகள்மீதேதளர்நடைநடவானோ. (89)

| | | | |
|---|---|---|---|
| ஊறி | ஊறுதல் பெற்று | கண கண சிரித்து | கணகணவென்று சிரித்து |
| கன்னல் குடம் | கருப்பஞ்சாறு நிறைந்த குடம் | உவந்து | களித்து |
| திறந்தால் | ஓட்டை யிட்டால், (அதற்கு) | முன் வந்து நின்று | எதிரில் வந்திருந்து |
| ஒத்து | ஸமமாகி | | |

| | | | |
|---|---|---|---|
| முத்தம் தரும் | (எனக்கு) முத்தங் கொடுக்கும் | என்னை | (அதனை உருசித்துவரும் தாயான) என்னை |
| என் | எனது அருமைக் குழந்தையான | | |
| முகில்வண்ணன் | நீலமேக வர்ணனாய் | | |
| திருமார்வன் | (மின்னற் போன்ற) லக்ஷ்மியை மார்பிலுடையனுமான கண்ணன் | தளிர்ப்பிக் கின்றான் | செழிப்பிக்கின்ற வனாய் |
| தன்னை பெற்றேற்கு | தன்னைப் புத்திரனாக உடைய எனக்கு | தன் எற்றும் | தன்னை எதிர்க்கும் |
| | | மாற்றலர் | பகைவர்களுடைய |
| தன் வாய் அமுதம் தந்து | தன் திருவதரத்தினின்று பெருகும் அமிருதத்தை யளித்து | தலைகள் மீது | சிரஸ்ஸுகளின்மேல் தளர்நடை நடவானோ. |

கரும்பைச் சொல்லும் கன்னல் என்னும் பதம் இங்குக் கருப்பஞ்சாற்றைக் குறிக்கும். ஊறிப் புரசலிட்டுத் திறந்த குடத்தினின்று கருப்பஞ்சாறு பெருகுவது போல் குழந்தை சிரிக்கும்போது அமுதநீர் ஊற்றெடுத்துப் பெருகுகிறது. ஊறி என்பதை அமுதநீர் பெருகி என்றுமுரைக்க. அப்போது வினைக்குறையாய் ஊற என்று பொருளாகும். சிரிக்காமல் முன்வந்தால் முத்தம் மாத்திரம் தருமவன் சிரித்து வந்ததால் அமுதநீர் பெருகுவதால் வாயமுதம் தந்தவனாகிறானென்று கொள்க. தான் அனுபவிக்கும் முத்ததையும் அமுதையும் அவனுடைய சைசவத்திலே தாயுமனுபவிக்குமாறு செய்தவள் பெரிய பிராட்டியாரென்று திருமார்வன் என்றார். தளிர்ப்பிக்கின்றான் என்பது மேலுடன் சேர்ந்து ஒரே வாக்கியம். இதை வினைமுற்றாகவும் கொள்வர். 'தலைகள் மீது' என்று காளியமர்தனாதிகளை நினைத்தபடியாம். ௪.

5\. முன்னலோர்வெள்ளிப்பெருமலைக்குட்டன்மோடுமோடுவிரைந்தோடப்
பின்னைத்தொடர்ந்ததோர்கருமலைக்குட்டன்பெயர்ந்தடியிடுவதுபோல்
பன்னியுலகம்பரவியோவாப்புகழ்ப்பலதேவனென்னும்
தன்னம்பியோடப்பின்கூடச்செல்வான்தளர்நடைநடவானோ. (90)

| | | | |
|---|---|---|---|
| ஓர் | ஒப்பற்ற | அடி இடுவது போல் | அடி வைப்பது போல் |
| வெள்ளி | வெண்மையான | பன்னி | நெருங்கி |
| பெரு | பெரிய | உலகம் பரவி | உலகெல்லாம் வ்யாபித்து |
| மலை குட்டன் | மலைக் குன்றானது | ஓவா புகழ் | ஒழியாத கீர்த்தியை யுடைய |
| முன்னல் | முன்னே | பலதேவன் என்னும் | பலராமன் எனப்படும் |
| மோடு மோடு | மட மட வென்று | தன் நம்பி | தனக்குச் சிறந்தவனானவன் (மூத்தவன்) |
| விரைந்து ஓட | வேகம்கொண்டோடும்போது | ஓட | ஓடிக்கொண்டிருக்க |
| பின்னை அது தொடர்ந்து | அதனைப் பின்பற்றி | பின் கூட செல்வான் | கூடவே பின் செல்லுகிறவனாய் (அல்லது) செல்வதற்காக தளர்நடை நடவானோ. |
| ஓர் | ஒப்பற்ற | | |
| கரு | கரிய | | |
| மலை குட்டன் | குன்றானது | | |
| பெயர்ந்து | புறப்பட்டு | | |

முன்னல். அல் சாரியை. (அடுத்த அடியிற் பின்னை யென்றிருப்பதால் முன்னை யெனப் பாடமிருக்கலா மென்பர்.) முன் நல் எனப் பிரித்து நல் நன்றாயுள்ள என்றுரைத்து மலைக்குட்டனுக்கு விசேஷணமுமாக்குவர். பன்னி இத்யாதிக்கு, பன்னி ஆராய்ந்து, பரவி ஸ்துதி செய்தும் ஓவா முடிவு காணவொண்ணாத என வுரைசெய்வர். செல்வான் செல்லும் கண்ணன் என்றுரைப்பது முண்டு. (ரு)

6\. ஒருகாலிற்சங்கொருகாலிற்சக்கரமுள்ளடிபொறித்தமைந்த
இருகாலுங்கொண்டங்கங்கெழுதினாற்போலிலச்சினைபடநடந்து
பெருகாநின்றவின்பவெள்ளத்தின்மேற்பின்னையும்பெய்துபெய்து
கருகார்க்கடல்வண்ணன்காமர்தாதைதளர்நடைநடவானோ. (91)

| | |
|---|---|
| கரு | கறுத்தும் |
| கார் | இருண்டுமுள்ள |
| கடல் | ஸமுத்திரத்தின் |
| வண்ணன் | வர்ணம் போன்ற வர்ணமுடையனும் |
| காமர் தாதை | மன்மத (ப்ரத்யும்ந)னுக்குப் பிதாவுமான கண்ணன் |
| உள் அடி | உள்ளங் கால்களில் |
| ஒரு காலில் சங்கு | ஓர் அடியிற் சங்கமும் |
| ஒரு காலில் சக்கரம் | மற்றோர் அடியிற் சக்கரமும் |
| பொறித்து | (ஸ்வபாவமாய்) ரேகையாகப்பட்டு |
| அமைந்த | (தன் பெருமைக்குப்) பொருந்தியுள்ள |
| இரு காலும் கொண்டு | இரண்டு கால்களினாலும் |
| எழுதினால் போல் | எழுதி வைத்தால் வருவன போல் |
| அங்கு அங்கு | அடி வைத்த விடமெல்லாம் |
| இலச்சினை பட | சங்க சக்ர சின்னம் படும்படி |
| நடந்து | ஊன்றி அடிகளை வைத்து |
| பெருகா நின்ற | ப்ரவஹித்து வரும் |
| இன்பம் வெள்ளத்தின் மேல் | ஆனந்த ப்ரவாஹத்தின் மேலே |
| பின்னையும் | மேன் மேலும் |
| பெய்து பெய்து | ஆனந்த வர்ஷம் செய்து |
| | தளர்நடை நடவானோ. |

*கண்ணன்வடிவைக் கண்டு பிறந்த இன்ப வெள்ளம் அவன் தளர்நடை நடக்கும் போது பெருகி வந்தது. சங்க சக்கரச் சின்னங்கள் படுவதைக் கண்டபோது மேன் மேல் ஆனந்த வர்ஷம் ஏற்பட்டபடி. இலச்சினைபட என்றதால் அவன் வீதியில் நடக்கத் தொடங்கினது உரைத்ததாம். கருகார் கடல்வண்ணன்: கறுத்த மேகமும் கடலும் போன்றவன் எனவுமுரைத்தலுண்டு. கடலானபடியாலே ஆனந்தவெள்ளமளித்தது. காரானபடியாலே மேலும் பெய்தது என்க.* ௬.

7\. படர்பங்கயமலர்வாய்நெகிழப்பனிபடுசிறுதுளிபோல
இடங்கொண்டசெவ்வாயூறியூறிஇற்றிற்றுவீழநின்று
கடுஞ்சேக்கழுத்தின்மணிக்குரல்போலுடைமணிகணகணென
தடந்தாளிணைகொண்டுசார்ங்கபாணிதளர்நடைநடவானோ. (92)

| | |
|---|---|
| சார்ங்கம் பாணி | சாரங்கத்தைத் திருக்கையில் கொண்ட கண்ணன் |
| படர் | படர்ந்துள்ள |
| பங்கயம் மலர் | தாமரைப் பூவின் |
| வாய் | வாய்ப்புறமானது |
| நெகிழ | தளர்ச்சி பெற்ற போது (அங்குள்ள தேனின்) |
| பனி படு சிறு துளிபோல் | குளிர்ச்சி பெற்ற சிறிய திவலைகள் போல—, |
| ஊறி ஊறி | அமுதநீரால் மிகவும் நனைவுற்று |
| இடம் கொண்ட | விரிவு பொருந்திய |
| செவ்வாய் | சிவந்த வாயானது |
| நெகிழ | மலரும் போது |
| (பனிபடு சிறு துளி) இற்று இற்று விழ | (அமுதின்) குளிர்ந்த சிறு துளிகள் முறிந்து முறிந்து விழும்படி |
| நின்று | (சார்ங்கபாணி) நின்று |
| கடு சே | கடுமை பொருந்திய (கொடிய) ரிஷபத்தின் |
| கழுத்தின் | கழுத்தில் கட்டின |
| மணி | மணியின் |
| குரல் போல் | த்வனியைப் போல |
| உடைமணி கண கண என | திருவரை மணியானது இந்த த்வனியை யுண்டாக்க |
| தட தாள் இணை கொண்டு | விசாலங்களான திருவடிகள் இரண்டினால் |
| | தளர்நடை நடவானோ. |

படர் பங்கயம் : பங்கமாவது சேறு. அதன் வாய்ப்பினால் தாமரை மிகப் படர்ந்து வளரும். அம்மலரில் தேன் பெருகும். தேன் என்னாமல் பனிபடுசிறுதுளி என்றிவ் வளவே சொன்னது வாயமுதத்திற்கும் அது பொதுவாகைக்காக. எ.

8\. பக்கங்கருஞ்சிறுப்பாறைமீதேயருவிகள்பகர்ந்தனைய
அக்குவடமிழிந்தேறித்தாழஅணியல்குல்புடைபெயர
மக்களுலகினிற்பெய்தறியாமணிக்குழவியுருவின்
தக்கமாமணிவண்ணன்வாசுதேவன்தளர்நடைநடவானோ. (93)

| | | | |
|---|---|---|---|
| மக்கள் உலகினில் | மனித வுலகில் (பூலோகத்தில்) | அருவிகள் | மலையின் வீழ்நீர் வெள்ளங்கள் |
| பெய்து | (இன்பத்தை) வர்ஷித்து | பகர்ந்து அனைய | பகர்ந்திருக்குமா போல (ப்ரகாசிப்பது போல்) |
| அறியா | ஒன்றுமறியாத | அக்கு வடம் | சங்குமணி வடமானது |
| மணி குழவி | அழகிய குழந்தை | இழிந்து | தாழ்ந்து |
| உருவில் | ரூபத்தில் (இருக்கும்) | ஏறி | உயர்ந்து |
| தக்க மா மணி வண்ணன் | தகுந்த நீலமணி வர்ணனை | தாழ | மறுபடியும் தாழ்ந்திருக்கும்படி |
| வாசுதேவன் | பரவாஸுதேவன்,— | அணி அல்குல் | அழகிய (அல்லது) அக்குவடத்திற்கும் அலங்காரமான நிதம்பமானது |
| கரு சிறு பாறை மீது | கரிய சிறிய கற்பாறையின் மேலும் | புடை பெயர | கீழ் மேல் செல்ல |
| பக்கம் | அதன் பக்கத்திலும் | | தளர்நடை நடவானோ. |

நடக்க அடியெடுத்து வைக்கும்போது நிதம்ப பாகம் ஒரு பக்கம் அசையும். அப்போது மேலும் கீழுமாகச் சங்குமணி வடம் விளங்கும். அது பாறையிலும் பக்கத்திலும் மலையருவி விழுவதுபோல் விளங்கினபடி சொன்னதாம். பாறை கற்பாறை அல்லது மேடு. பக்கம் பாறை என விரண்டினால் பள்ளமும் மேடும் சொல்லப்பட்டன. பாறை மலையாக மலையின் பக்கத்தில் எனவுமுரைப்பர். மூன்றாம் அடிக்கு, 'உலகத்தில் மனிதர் பெற்றறியாத அழகிய குழந்தையின் வடிவுடைய' எனவுமுரை செய்வர். உலகினில் மக்களைப் பெய்து = ஸ்ருஷ்டித்து, ஒன்றுமறியாத (மக்களால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட) குழந்தை போலவே யிருப்பவனென வுரைத்தலுமாம். அ.

9\. வெண்புழுதிமேற்பெய்துகொண்டளைந்ததோர்வேழத்தின்கருங்கன்றுபோல்
தெண்புழுதியாடித்திரிவிக்கிரமன்சிறுபுகர்படவியர்த்து
ஒண்போதலர்கமலச்சிறுக்காலுறைத்தொன்றும்நோவாமே
தண்போதுகொண்டதவிசின்மீதேதளர்நடைநடவானோ. (94)

| | | | |
|---|---|---|---|
| திரிவிக்கிரமன் | (உலகமாக்க) மூன்றடி வைத்த இவன் | தெள் | தெளிவான |
| | | புழுதி | புழுதி மண்ணை |
| வெண் புழுதி | வெண்மையான புழுதி மண்ணை | ஆடி | தன் மேல் சொரிந்தளைந்து |
| மேல் பெய்து கொண்டு | தன் மேல் அள்ளிச் சொரிந்து கொண்டு | சிறு புகர் பட | (வியர்வையால் புழுதி கலந்த விடத்திலே தன் திருமேனியின்) காந்தி சிறிது காணப் படும்படி |
| அளைந்தது | (துதிக்கையால்.) அதனை அளைந்ததான | | |
| வேழத்தின் ஓர் கரு கன்று போல் | ஒரு கரிய குட்டியானை போல் | வியர்த்து | வேர்வை யுள்ளவனாகி |
| | | போது அலர் | உரிய காலத்திலே மலரும் |
| | | ஒள் கமலம் | அழகிய தாமரைப்பூ போன்ற |

| | | | |
|---|---|---|---|
| சிறு கால் | சிறிய பாதங்கள் | தண் போது கொண்ட | குளிர்ந்த புஷ்பங்கள் நிறைந்துள்ள |
| உறைத்து | (எங்காவது) அழுந்தி | தவிசின் மீது | மெத்தையின் மேலே |
| ஒன்றும் | சிறிதும் | | தளர்நடை நடவானே. |
| நோவாமே | நோவாதபடி | | |

முன்னொருகால் மண்ணெல்லாம் தன் அடியின் கீழ் அடங்கும்படியிருந்து அநாயாஸமாய் உலகமளந்த பிரானுக்கு இப்போது உடலெல்லாம் மண் பெய்துகொண்டு வியர்க்கும்படியாயிற்றே. இவன் கல்லும் முள்ளும் எல்லாம் உறுத்தும்படி முன் உலகளந்ததும் இப்போது புழுதியளைவதும் தகா எனத் திருவுளங்கொண்டார், மெத்தையின் மீது மலர்ந்த புஷ்பங்களைப் பெய்து அவற்றின் மேலே தளர்நடை நடக்கவேணுமென வேண்டுகிறார். வெண் தேள் என விரண்டையும் இரண்டிடத்திலும் சேர்க்க. ஒன்றும் நோவாமே: இது 3. 11-ல் 'ஒன்றும் நோவாமே' என்ற விடத்திற் போல் ஆகும். ஒன்று உறைத்து நோவாமே எனவுமுரைப்பர். ௯.

10. திரைநீர்ச்சந்திரமண்டலம்போற்செங்கண்மால்கேசவன்றன்
திருநீர்முகத்துத்துலங்குசுட்டிதிகழ்ந்தெங்கும்புடைபெயர
பெருநீர்த்திரையெழுகங்கையிலும்பெரியதோர்தீர்த்தபலம்
தருநீர்சிறுச்சண்ணந்துள்ளஞ்சோரத்தளர்நடைநடவானே. (95)

| | | | |
|---|---|---|---|
| செம் கண் | சிவந்த திருக்கண்களை யுடையவனாய் | திகழ்ந்து | ஒளி வீசி |
| மால் கேசவன் | கருமை பொருந்திய கேசவனான இவன் | புடை பெயர | பக்கங்களில் போக்கு வரவு செய்ய |
| தன் | தன்னுடைய | பெரு நீர் | பெருமை பொருந்திய தீர்த்தமாயும் |
| திரு நீர் | மேன்மையான லாவண்யத்தை யுடைய | திரை எழு | அலைகள் எழும்பியதாயுமுள்ள |
| முகத்து | திருமுகத்திலே | கங்கையிலும் | (ப்ரவஹித்த வண்ணமேயுள்ள) கங்கா நதியைவிட |
| திரை நீர் | அலைகளோடு கூடிய ஜலத்திலே (பிரதிபலித்த) | பெரியது | குணத்திற் சிறந்ததும் |
| சந்திரன் மண்டலம் போல் | சந்திரபிம்பம் போலே | ஓர் தீர்த்தம் பலம் தரும் | அத்விதீயமான தீர்த்தபலம் அளிப்பதும் |
| துலங்கு | விளங்குகின்ற | சிறு சண்ணம் | சிறிய சண்ணத்திலுள்ளதுமான |
| சுட்டி | நெற்றியணியானது | நீர் | நீரானது |
| எங்கும் | எல்லாவிடத்திலும் | துள்ளம் | துளியாக |
| | | சோர | சொட்டி வர |
| | | | தளர்நடை நடவானே. |

திருநீர்முகத்தைத் திரைநீருக்கும் சுட்டியைச் சந்திரனுக்கும் ஒப்பிட்டபடி. திரைநீர். இங்கு நீர் கடலுமாம். கடல்வண்ணன் திருமுகத்தைக் கடலோடு ஒப்பிட்டதாம். திருவடியின்நின்று பெருகின கங்கையைக் காட்டிலும் திருவுதரத்தின்நின்று ஸாரங்களோடு வெளிவரும் நீரே பெரும் தீர்த்தமாகும். கங்கையில் நீராடவேண்டியதுண்டு. இதனைப் பர்சிப்பது அல்லது பார்ப்பதே போதுமானது. கோமூத்திர ப்ரபாவம் கண்டு மஹாயோகீச்வரனான கோவிந்தன்நீர்மஹிமையை ஆராய்க. சோர: நீரைச் சிறு சண்ணமானது துளியாகச் சோர எனவு முரைக்கலாம். சண்ணம் என்றது ஆண் குறியை யென்பர். ஶிஶ்நம் என்ற வடமொழியின் திரிபு இது எனலாம். ௰.

11. ஆயர்குலத்தினில்வந்துதோன்றியவஞ்சனவண்ணன்றன்னை
தாயர்மகிழவொன்னார்தளரத்தளர்நடைநடந்ததனை
வேயர்புகழ்விட்டுசித்தன்சீரால்விரித்தனவுரைக்கவல்லார்
மாயன்மணிவண்ணன்ருள்பணியும்மக்களைப்பெறுவர்களே. (96)

| | | | |
|---|---|---|---|
| சீரால் | சிறப்புடன் | மகிழ | கண்டும் கேட்டும் களிக்கும் படியும், |
| வேயர் புகழ் | வேயர்வம்சத்தார் புகழ்கின்ற | ஒன்னார் | (ஒன்றுபடாதவர்) பகைவர் |
| விட்டு சித்தன் | ஸ்ரீ விஷ்ணுசித்தன் (பெரியாழ்வார்) | தளர | தளர்ச்சி பெறும்படியும் |
| வந்து | (திருமதுரையிலிருந்து தெரியாமலே) வந்து | தளர்நடை நடந்ததனை | அஞ்சனவண்ணன் தள்ளாட்ட நடை செய்து வந்ததை—, |
| ஆயர் குலத்தினில் | இடையரின் குலத்திலே | விரித்தன | விவரித்துச் சொன்ன இத் திருமொழிப் பாசுரங்களை |
| தோன்றிய | ஆவிர்பவித்த | உரைக்க வல்லார் | சொல்ல ஸாமர்த்தியம் பெற்றவர்கள் |
| அஞ்சனம் வண்ணன் தன்னை | மையின் நிறமுள்ள கண்ணபிரானை—, அதாவது | மாயன் | ஆச்சர்யபூதனும் |
| தாயர் | யசோதை ரோஹிணி தேவகி முதலான தாய்மார் | மணி வண்ணன் | நீலமணி நிறத்தனுமான இவனுடைய |
| | | தாள் பணியும் | திருவடிகளைத் தொழும் |
| | | மக்களை | பிள்ளைகளை |
| | | பெறுவர்கள் | பெற்றிருப்பார்கள். |

அஞ்சனவண்ணனை விரித்துச் சொல்வதாவது அவனுடைய தளர்நடையை விவரிப்பதே. ஆக முதலடியிற் சொன்னதை விவரிப்பது இரண்டாம் அடி. ஆதலால் அஞ்சனவண்ணன் தன்னை, நடந்ததனை என விரண்டிடத்திலும் இரண்டாம்வேற்றுமை இருத்தல் தகும். ஆகவே முன்னோர் அஞ்சனவண்ணன் எனப் பிரித்து அஞ்சனவண்ணனவன் தன்னை தன்னைக் கண்டு தாயர் மகிழ என்றுரைத்தனரல்லர். (அன்றி தன்னையாவது மூத்தோன், அல்லது தாய். தாயர் தாயத்தார், தாயாதிகள் = யதுக்களும் இடையர்களும். இவர்கள் மகிழ, பகைவர் தளர அஞ்சனவண்ணன் நடந்ததனை எனவும் சேர்த்துரைக்கலாம்.)

தொட்டில்பருவம் தொடங்கித் தாங்கள் செய்த தீங்கெல்லாம் நீங்கத் தளர் நடை நடக்கும் பருவம் வந்ததைக் கேட்டு அதுவரையில் கோகுலம் புகாமற் பிழைத்திருக்கும் கஞ்சன் முதலானோர், நம்மை இனி இவன் இங்கே வந்து அழித்துவிடுவான் என்றஞ்சித் தளர்ச்சி கொண்டனர். தேவகி முதலானோர் கேட்டு மகிழ்ந்தனர். இப்படி மனிதபாவனை செய்யுமிவன்நடையைச் சொல்லும் இப் பாசுரங்களைக் கற்போர் மஹாபாகவதர்களான மக்களைப் பெற்று மகிழ்வர் என இத் திருமொழியின் பலன்.

ப்ரபந்தரக்ஷையில் பெரியாழ்வார் திருமொழி 1. 8.

தொடர்சங்கிலிகை உரை முற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன்திருவடிகளே சரணம்.

——:o:——

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன்திருவடிகளே சரணம்.

## பெரியாழ்வார் திருமொழி 1. 9. (அச்சோபருவம்)

# பொன்னியற் கிண்கிணி.

தளர்நடை நடந்த குழந்தைக்குக் கொஞ்சம் வேகமாக நடக்கும் பருவம் வந்தவளவிலே எதிரில் ஓடிவந்து அணைத்துக் கொள்ள யசோதை அழைத்த வண்ணம் ஆழ்வார் அழைப்பது இத் திருமொழியில்—

1. பொன்னியற்கிண்கிணிசுட்டிபுறங்கட்டித்
தன்னியலோசைசலன்சலனென்றிட
மின்னியல்மேகம்விரைந்தெதிர்வந்தாற்போல்
என்னிடைக்கோட்டராவச்சோவச்சோ எம்பெருமான் வாராவச்சோவச்சோ. (97)

| | | | |
|---|---|---|---|
| சுட்டி | சுட்டியை | விரைந்து | வேகமாக |
| புறம் | நெற்றியின் ஒரு புறத்தில் | எதிர் வந்தால் போல் | எதிரிலே வருமா போலே |
| கட்டி | அணிந்துகொண்டு (நீ) | என் இடைக்கு | எனது இடுப்புக்காக |
| பொன் இயல் | பொன் பொருந்தியுள்ள | ஓட்டரா | ஓடிவந்து |
| கிண்கிணி | சதங்கையானது | அச்சோ அச்சோ | அணைத்துக்கொள். |
| தன் இயல் | தனக்கு ஸ்பாவமாயுள்ள | | |
| ஓசை | த்வனியை | | |
| சலன் சலன் என்று இட | சலன்சலனென்ற விதமாய் உண்டுபண்ண | எம்பெருமான் | எமது பிரானே ! |
| | | வாரா | வந்து |
| மின் இயல் | மின்னல் பொருந்திய | அச்சோ அச்சோ | அணைத்துக்கொள். |
| மேகம் | வர்ஷிக்கும் மேகமானது | | |

பொன்னியல். கிண்கிணி பொன்னாற் செய்யப்பட்டால் சப்தியாது என்பராகையாலே பொன்னில் தோய்த்துச் சமைத்ததும் பொன்வடத்திற் கோத்ததும் கொள்க. கிண்கிணியையும் சுட்டியையும் அவற்றுக்கு அடைத்த இடத்திலே கட்டி என முதலடியை உரைத்து, கிண்கிணிக்கு இயலான ஓசையானது சலன்சலனென்றொலிக்க என்று இரண்டாம் அடியை வ்யாக்யானிப்பர். இங்கு பொன்னியற் கிண்கிணியே மின்னலுக்கு உவமேயமா யிருக்க, நெற்றிச்சுட்டிக்கு ஓசையுமிராமலிருக்க, மேலே தன் என்ற விடத்திலும் கிண்கிணியையே கொள்ளவேண்டியிருக்க, சுட்டியின் ப்ரஸ்தாவமின்றியே ஒரு யோஜனை யுசிதமெனக் கருதினால், 'சுட்டிப் புறங்கட்டி' என்று சுட்டியென்றதை வினையெச்ச மாக்கி, புறம் சுட்டிக்கட்டி = கிண்கிணியானது பக்கங்களை நெறித்துக் குறித்து அணைத்து, அதாவது திடமாகப்பட்டுச் சலன்சலனென வொலிக்க எனப் பொருள் கூறலாம். தன்னியல் என்பதற்குக் கண்ணனின் இஷ்டப்படி என்று திருவாய்மொழிப்பிள்ளை கொண்ட பொருள் போலும். அப்போது தன் என்றதால் மேகத்தையும் கொண்டு இரண்டாமடியை உபமேயத்திலும் உபமானத்திலும் சேர்க்கலாம். எதிர் வந்தாற்போலென்றதால் முன் பக்கம் ஓடிவந்து அணைவதை யபேக்ஷித்தது தோற்றும். இடைக்கு = உட்கார்ந்திருக்கும் எனது இடை மேல் ஏறுவதற்கு. ஓட்டரா

என்ற பதம் ஓட்டம் தார என்ற பொருளிலே பாட்டுகளில் ப்ரயோகிக்கப்படுகிறது. 'ஓட்டரும்' (பெரியாழ்வார் திருமொழி 4. 3. 9.); "ஓட்டந்து" (பெரிய திருமொழி 10. 4. 6.). இப்படிப் பொருள் கூறினால்தான் 'விரைந்து வந்தாற்போல்' என்றது இங்கே சேரும். ஓட்டரா, வாரா இரண்டும் 'செய்யா' வாய்பாட்டில் வந்த இறந்த கால வினையெச்சம். அச்சோ. வேறுவகையான ப்ரயோகமிராவிடினும் சில விடங்களில் இது அதிசயக் குறியாயினும், இங்கு இதற்கு, அணைத்துக்கொள் என்னும் பொருளை ஸந்தர்ப்பத்தால் கொள்ளவேணு மென்பர். நான்காவது அடிக்கு இனி வேறு பொருள் கொள்ளலாம். அதாவது என் இடை கோட்டராவச்சோ.—என் இடை கோட்டு = எனது இடையை வளையச் செய். அரா அல்லது அராவு = அழுத்து. அச்சு = அசைத்தாட்டு. மேலே 'தழுவாவந்தச்சோ' என்பதால் தழுவுதலைவிட 'அச்சோ' என்பது வேறாகும். ஓ என்பது 'பொன்னுலகாளீரோ', 'பாலொடு மேவீரோ' (திருவாய்மொழி 6. 8. 1, 2.) என்ற விடத்திற் போல் அநுநயத்தைக் குறிக்கும் என்றதாம். இப்போது வந்தார் போல் என்பதை வாரா என்றதோடு சேர்க்க வேண்டும். இதைவிட 'இடைக்கு' 'ஓட்டரா' எனப் பிரிப்பதே பொருந்தும். க.

2. செங்கமலப்பூவில்தேனுண்ணும்வண்டேபோல்
பங்கிகள்வந்துன்பவளவாய்மொய்ப்பச்
சங்குவில்வாள்தண்டுசக்கரமேந்திய
அங்கைகளாலேவந்தச்சோவச்சோ ஆரத்தழுவா வந்தச்சோ வச்சோ. (98)

| | | | |
|---|---|---|---|
| செம் கமலம் பூவில் | சிவந்த தாமரைப் பூவில் | வில் | சார்ங்கத்தையும் |
| தேன் உண்ணும் | மதுவைப் பானம் செய்யும் | வாள் | நந்தகத்தையும் |
| வண்டு போல் | வண்டுகளைப் போல | தண்டு | கௌமோதகியையும் |
| உன் பங்கிகள் | உனது திருக்குழல்கள் | சக்கரம் | ஸுதர்சநத்தையும் |
| உன் | உன்னுடைய | ஏந்திய | தம் மேல் இருக்கும்படி செய்த |
| பவளம் வாய் | பவளம் போன்ற திருவதரத்திலே | அம் கைகளால் | அழகிய திருக்கைகளால் அச்சோ அச்சோ; |
| வந்து மொய்ப்ப | சேர்ந்து நிபிடமாகும்படி | வந்து | வந்துசேர்ந்து |
| வந்து | நீ நெருங்கி வந்து | ஆர | பூரணமாக |
| சங்கு | பாஞ்சசன்னியத்தையும் | தழுவா | கட்டியணைத்து அச்சோ அச்சோ. |

தழுவாய் என்பதை விட தழுவா என வினையெச்சமே வாரா என்றாற் போலே கீழ்மேற் பாசுரங்களோடு பொருந்தும். உ.

3. பஞ்சவர்தூதனாய்ப்பாரதம்கைசெய்து
நஞ்சுமிழ்நாகங்கிடந்தநற்பொய்கைபுக்கு
அஞ்சப்பணத்தின்மேற்பாய்ந்திட்டருள்செய்த
அஞ்சனவண்ணனேயச்சோவச்சோ ஆயர்பெருமானே யச்சோ வச்சோ. (99)

| | | | |
|---|---|---|---|
| பஞ்சவர் | பஞ்ச பாண்டவர்கட்கு | நஞ்சு உமிழ் | விஷத்தைக் கக்கும் |
| தூதனாய் | தூத க்ருத்யம் செய்தவனாகி (பிறகு) | நாகம் | காளிய சர்ப்பமானது |
| | | கிடந்த | வஸித்து வந்த |
| பாரதம் | பாரத யுத்தத்திலே | நல் | அதற்கு முன் நல்லதான |
| கை செய்து | படைவகுத்தலைச் செய்தும், (அதற்கு முன்) | பொய்கை | மடுவிலே |
| | | புக்கு | புகுந்து |

| | | | |
|---|---|---|---|
| அஞ்ச | (அதைக் கண்டு எல்லோரும்) பயந்த போது | அருள் செய்த | (பஞ்சவர்க்கும் கோபகாளியாதி களுக்கும்) அநுக்ரஹம் செய்த |
| பணத்தின் மேல் | படங்களின் மேலே | அஞ்சனம் வண்ணனே | மை போன்ற வர்ண முடையவனே அச்சோ அச்சோ ; |
| பாய்ந்து | குதித்து | ஆயர் பெருமானே | கோபராஜனே! அச்சோ அச்சோ. |
| இட்டு | (முடிவில் அங்கு உன் திருப் பாத முத்ரையை) வைத்தும் | | |

கைசெய்து என்றதைப் பாய்ந்திட்டு என்றதோடு சேர்த்தால் கைசெய்தது முன், பாய்ந்தது பின் எனத் தேறும். இது உண்மைமுறைக்கு முரண்படுவதால் அதை நிர்வஹிக்க வழி தேடவேண்டும். ஆக அதை விட்டு இரண்டு வினையெச்சங்களையும் அருள்செய்த என்றதோடே சேர்த்து ஸமஞ்ஜஸமாக்குக. பாரதம்: பாரதவம்சத்திற் பிறந்தவர்கட்குப் பரஸ்பரம் ஏற்பட்டதைச் சொல்லுவதாகையாலே மஹாபாரதம் பாரதமெனப்படுகிறது. ப்ரபந்தங்களில் இப் பதத்தை பாரதயுத்தம் என்ற பொருளில் வழங்குவர். ௩.

4. நாறியசாந்தம்நமக்கிறைநல்கென்ன
தேறி யவளுந்திருவுடம்பிற்பூச
ஊறியகூனினையுள்ளேயொடுங்கவன்று
ஏறவுருவினையச்சோவச்சோ எம்பெருமான் வாரா வச்சோவச்சோ. (100)

| | | | |
|---|---|---|---|
| நமக்கு | எங்களுக்கு | அன்று | அந்நாள் (அப்பொழுதே) |
| நாறிய | நன் மணமுள்ள | ஊறிய | பல மாம்சம் சேர்ந்து வளர்ந்துள்ள |
| சாந்தம் | சந்தனத்தை | கூனினை | அவளுடைய கூனை |
| இறை | கொஞ்சம் | உள்ளே ஒடுங்க | (அது அவள் உடலின்) உள்ளே அடங்க |
| நல்கு | கொடு | ஏற | அவளுடல் உயர்ந்து நிமிர்ந்து விடும்படி |
| என்ன | என்று நீ கேட்ட போது | உருவினாய் | உருவினவனே! அச்சோ அச்சோ ; எம்பெருமான் வாரா அச்சோ அச்சோ. |
| அவளும் | அத் திரிவக்ரையும் | | |
| தேறி | (அச்சம் கூச்சமின்றி நன்மை யுண்டெனத்) தீர்மானித்து | | |
| திருவுடம்பில் | உனது திருமேனியில் | | |
| பூச | சந்தனத்தைச் சாத்த | | |

ஸ்ரீ மதுரையில் ராஜமார்க்கத்திலே போகும்போது சந்தனம் கொண்டுபோகும் த்ரிவக்ரையைப் பார்த்து, நீ யார்? யாருக்கு இந்தச் சந்தனம் என்று அன்புடன் கண்ணன் கேட்க, அவளும் அவனுடைய மந்தஸ்மித மதுராலாப மநோஹர ரூபகுணசேஷ்டிதங்களைக் கண்டு மோஹித்து அன்புடனே விடை கூறினாள். பிறகு, 'எங்களுக்கு உயர்ந்த சந்தனம் கொடு. உடனே உனக்கு நன்மை யுண்டாம்' என்றானவன். இப்படித் துணிந்து பேசும் சிறந்த அழகனிடத்திலே மோஹித்துக் கம்ஸனிடத்திலே பயமும், நடுவீதியில் நேரில் பூசுகிறோமென்ற நாணமும் நீங்கியிருந்த அவளிடத்தில் கிருபை கூர்ந்து அவள் நுனிக்கால்களின்மேல் தன் திருவடிகளை வைத்து அவள்மோவாய்க் கட்டையில் தன் கைவிரலிரண்டைக் கொடுத்துத் தூக்கி நிமிர்த்து அவள்கூனை யழித்ததாகப் புராணம் கூறிற்று. கூனை உருவினதாக இங்கு அருளிச் செய்தது, உலகில் சுளுக்கு இருக்குமிடத்திலேயே உருவியாவது, அதன் ஸம்பந்தமுள்ள வேறோர் அவயவத்தை உருவியாவது சுளுக்கை நீக்குவதுண்டாகையாலும் அப்போது சுளுக்கு உருவினதாகச்

சொல்லுவதுண்டாகையாலும். கால்களை மிதித்து மோவாய்க்கட்டையில் கைவிரலிட்டுக் தூக்கினாலும் கூனுக்காக உருவினதால் கூனை உருவினதாகச் சொன்னதென்க. எம்பெருமானிடத்திலே ஆனுகூல்யம் உண்டானபோது நமக்குள்ள கஷ்டங்களை அவனே நீக்க முயல்வானென்பது த்ரிவக்ரையின் விருத்தாந்தத்தில் தேறினதாம். அன்று உருவினாய். அந்நாள் அவளுக்கு ஏற்பட்ட ச்ரேயஸ்ஸு நீ உருவி நிமிர்த்தது மாத்திரம். அப்படி நிமிர்ந்த ஒழுங்கான உடல் உனக்குச் சேஷமாம்படி மனோரதித்து அவள் உனது உத்தரீயத்தைப் பிடித்திழுத்ததற்கிணங்கி அவளுடன் கலந்துபரிமாறினதுமொன்றுண்டு. அது பின்னொரு நாள் என இங்கே குறித்ததாம். ஊறிய = உறைத்துப் புறப்பட்ட; வெகுநாளாயிருக்கிற; ஏற = நிமிர்த்த என்று முரைப்பர். ௪.

5. கழல்மன்னர்சூழக்கதிர்போல்விளங்கி
எழலுற்றுமீண்டேயிருந்துன்னைநோக்கும்
சுழலைப்பெரிதுடைத்துச்சோதனனை
அழலவிழித்தானே அச்சோவச்சோ ஆழியங்கையனே அச்சோவச்சோ. (101)

| | | | |
|---|---|---|---|
| கழல் மன்னர் | (கௌரவஸதஸ்ஸிலே பாதத்தில்) வீரக்கழல் அணிந்த அரசர் எல்லோரும் | மீண்டு | (கர்ண துச்சாஸநாதிகளோடே கலந்து ஆலோசித்து) மறுபடியும் |
| சூழ | உன்னைச் சூழ்ந்து நிற்க | இருந்து | (விதுராதிகள் அழைத்து வந்தாற்போல் வந்து) இருந்து |
| கதிர்போல் விளங்கி | நீ சூரியனைப் போல் ப்ரகாசித்து | உன்னை | ஸர்வேச்வரனை உன்னை |
| பெரிது சுழலை உடை | (பாண்டவர்களைப் பல்லைப் பிடுங்கின பாம்புபோல் ஆக்க உன்னை வந்தவிடத்திலே கட்டிப் போட நீ தூது வருவதற்கு முன்னமே சூழ்ச்சி செய்து அது விஷயத்திலே) பெரியதோர் சுழற்சியை (உபாயாபாய சிந்தையாகிற (மனக்கலக்கை) யுடையுனும், | நோக்கும் | (கட்டிப் போடக் கருதிப்) பார்த்து வருபவனுமான |
| எழல் உற்று | (நீயும் மஹர்ஷிகளும் பீஷ்ம த்ருதராஷ்ட்ராதிகளும் செய்த உபதேசத்தைக் கேட்டுச் சபையை விட்டு வெளியே) எழுந்து போவதைச் செய்து | துச்சோதனனை | துர்யோதனனை |
| | | அழல விழித்தானே | அத்யுஷ்ணமாய்ப்பார்த்தவனே! அச்சோ அச்சோ; |
| | | ஆழி அம் கையனே | (விச்வரூபத்தில்) திருவாழியாழ்வானைத் திருக்கையிலேந்தினவனே! அச்சோ அச்சோ. |

சுழல் பெரிது என்றதால் (பா. உத். 88) 'ஊஷம்த ஸுமஹத் கார்யம்' என்று ஸ்ரீ கிருஷ்ணனைக் கட்டிப்போட நினைத்ததும், 'அத்ரோபாயாந் யதா ஸம்யக் ந புத்யேத ஜநார்த்தந:। நசாபாயோ பவேத் கஸ்சித் தத் பவாந் ப்ரப்ரவீது மே'. என்று த்ருதராஷ்ட்ரனிடம் அவன் கலக்கங் கொண்டு சொன்னதும் குறிக்கப்பட்டனவாம். அன்றி, பாசுரம் அமைந்த முறையிலேயே, 'முதலில் உன்னை நோக்கினவனும், பிறகு ஸ்ரீ கிருஷ்ணனைச் சார்ந்த ஸாத்யகி முதலானோராலே தன் ரஹஸ்யம் வெளியானதைக் கண்டு பெருங் கலக்கம் கொண்டவனுமான துர்யோதனனை' என்றுரைத்தலும் கூடும். கழல்மன்னர் சூழக் கதிர்போல் விளங்கி என்று துர்யோதனனைச் சொன்னதென்பர். ஸர்வராஜஸேவிதனாய் அவன் ஸபையில் விளங்கினானன்றோ. கண்ணனையும் சொல்லக் கூடும். கண்ணன்

கதிர்போல் விளங்கினுலன்றோ மேல் அழுல விழித்ததாகச் சொன்னதுமமையும். துர்யோதந விஷயமாகில் கதிர்போல் விளங்கினவனையும் அழலவிழித்தான் கண்ணனெனக் கொள்ளலாம். கண்ணன் கதிர்போல் விளங்கினது பாரதத்திலும் சொல்லப்பட்டுள்ளது.

ஆக நகரத்திற் புகுந்து முதலில் த்ருதராஷ்ட்ரபவனத்திற்குப் போய் அங்கே ஸத்கரிக்கப்பட்டு விதுராக்ருஹம் சென்று, பிறகு துர்யோதனனுல் ப்ரார்த்திக்கப்பட்டு அவன்மாளிகைக்கு எழுந்தருளி அவனுலே மிக்க ஆதர கௌரவங்களோடு பூஜிக்கப்பட்டு விதுராக்ருஹத்திற்கே சென்று அமுதுசெய்து, இராப்போது கழிந்தவாறே சந்தியாகாலச் சடங்குகளை முடித்துக்கொண்டு, துர்யோதனனுலே வந்து ப்ரார்த்திக்கப்பட்டுக் கௌரவ ஸதஸ்ஸுக்கு எழுந்தருளி இருந்தபோது 'பாணௌ க்ருஹீத்வா விதுரம் ஸாத்யகிம் ச மஹாயசா: | ஜ்யோதீம்ஷ்யாதித்யவத் ராஜந் குரூந் ப்ராச்சாதயத் ச்ரியா' என்றபடி இவன் கதிர்போல் விளங்க, இவன் எதிரில் துர்யோதநாதிகள் பகலிலுள்ள நட்சத்திரங்கள் போல் ஒளியற்றிருந்தது கழல் மன்னர் சூழ எனப்படலாம். இதைவிட விச்வரூப தசையை முதலடியிற் சொல்வது சாலப் பொருந்தும். கண்ணபிரான் துர்யோதனனைப் பார்த்து, 'நான் ஏகாகியாயிருப்பதாகவும் என்னை இலகுவாகக் கட்டிப்போடலாமென்றும் நீ நினைக்கிருய். இங்கேயே, பார், எல்லோரும் இருக்கின்றனர். (பா. உத். 131) 'இஹைவ பாண்டவா: ஸர்வே ததைவாந்தகவ்ருஷ்ணய:' என்றவாறு கூறி, அவர்களையும் அக்னிபோல் ப்ரகாசிக்கும் ஸர்வதேவயோநிகளையும், திவ்யாயுதங்களையும், 'நேத்ராப்யாம் நாஸிகாப்யாம் ச ச்ரோத்ராப்யாம் ச ஸமந்தத:| ப்ராதுராஸந் மஹாரௌத்ரா: ஸதூமா: பாவகார்ச்சிஷ:| ரோமகூபேஷு சததா ஸூர்யஸ்யேவ மரீசய:' என்றபடி சூரியனைப் போலே தன்னைக் காணச் செய்தானன்றோ.

இங்கு—விராடநகரத்திலே யிருந்த பாண்டவர்களை இங்கே யிருப்பதாக எம்பெருமான் காட்டினது எங்ஙனே பொருந்தும்? இங்கு நடந்த வாலாற்றை யெல்லாம் இனி இவர் அங்கே போய் அவர்களுக்குச் சொல்லப்போகிருரே. இது என்ன இந்திரஜாலமா வென வினவினபோது, அஸ்மதாசார்யன் அருளிச்செய்த விடையாவது—நம் ஸித்தாந்தத்திலே ஸ்வப்னத்தில் ஸ்ருஷ்டி வாஸ்தவமென்று ஸாதிக்கப்பட்டுள்ளதன்றோ. அது போல் எம்பெருமான் பாண்டவ ரூபங்களைத் தாத்காலிகமாக ஸ்ருஷ்டித்துக் காண்பித்து அதனுல் தன்னிடம் உண்மையில் அவர்களெல்லாம் இருப்பதைத் தெளிவிக்கிருன். இவ்வித ஸமாதானத்தைக் கீதையில் விச்வரூபாத்யாயத்தில் துர்யோதனுதி ஸம்ஹாரத்தைக் காண்பிக்கு மிடத்திலும் கொள்க என்றவாறு.

இப்படி மஹாபாரதத்திற் கிணங்க உரை கூறினம். இங்குப் பொய்யாஸனம் இட்டது முதலான சூழ்ச்சிகள் செய்த துர்யோதனனை அழுல விழித்தது சொல்லப்படுகிறதெனவுரைப்பர். சுரங்கம் ஒன்று செய்து அதை மறைத்து அதன் மேல் பொய்யாஸனமிட்டு, கண்ணன் உட்காரும்போது அவ்வாஸனம் முறிந்து அவன் உள்ளே விழும்போது சுரங்கத்தில் பல மல்லர்களால் அவனை வதைக்கத் துர்யோதனன் ஆலோசித்திருந்ததும், கண்ணன் அவ்வாஸனத்திற்கு நெருங்கினபோது விச்வரூபம் எடுத்து அவன் சூழ்ச்சியை வீணுக்கினதும் வில்லிபுத்தூரார்பாரதத்திலே யுள்ளன. பாரதவெண்பாவிலுமாம். 'அரவுநீள் கொடியோன் அவையுள் ஆசனத்தை அஞ்சிடாதே யிட அதற்குப், பெரிய மாமேனி அண்ட மூடுருவப் பெருந்திசை யடங்கிட நிமிர்ந்தோன்' என

(9. 1. 8) பெரிய திருமொழியிலும் காண்க. முன்னோர்கள் உரையில் சூழ்ச்சி என்றதைச் சுழலை யென்பதின் பொருளாகக் கொண்டு சூழல் சுழலாய் சுழலையாயிற்றென்பர். இங்கு (5. 3. 1.) "துக்கச் சுழலையை" என்றருளிச் செய்தபடி சுழலை யென்ற பதம் சுழன்று வருமொன்றை (மனதை)ச் சொல்லுமாகிலும் 'சுழலைப் பெரிது' என்ற சந்திக்கேற்ப சுழலை யென்பதை 'சுழல்' என்றதின் இரண்டாம் வேற்றுமையாகக் கொண்டோம். ஏதேனும் ஆருக. துச்சோதனனை: துர்யோதனனை என்பது இப்படித் திரிந்து கிடக்கிறது. சோதனம் செய்ய முடியாதவன் அவன். எம்பெருமானும் மற்ற மஹான்களும் செய்த ஸரஸோபதேசமே பயன்படாதபோது அவன் மனத்தைத் தெளிவிக்க வழியேது என்று தெரிவிக்க இங்ஙனம் ப்ரயோகித்தது போலும். ரு.

6. போரோக்கப்பண்ணியிப்பூமிப்பொறைதீர்ப்பான்
தேரோக்கவூர்ந்தாய்செழுந்தார்விசயற்காய்
காரொக்குமேனிக்கரும்பெருங்கண்ணனே
ஆரத்தழுவா வந்தச்சோவச்சோ ஆயர்கள்போரேறே யச்சோவச்சோ. (102)

| | |
|---|---|
| போர் | யுத்தத்தை |
| ஒக்க பண்ணி | சமமாயிருக்கச் செய்து |
| இ பூமி | இந்த பூமியினுடைய |
| பொறை | பாரத்தை |
| தீர்ப்பான் | தீர்ப்பதற்காக |
| செழ தார் | செழுமை பொருந்திய மாலையை யுடைய |
| விசயற்கு ஆய் | அர்ஜுனனுக்குச் சேஷபூதனாய் |
| தேர் | அவனது தேரை |
| ஒக்க | பொருந்த |
| ஊர்ந்தாய் | செலுத்தினவனே! |
| கார் ஒக்கும் | மேகத்துக்கு ஸமானமான |
| மேனி | திருமேனியோடு |
| கரு பரு கண்ணனே! | கரிய பெரிய திருக்கண்களுமுடையவனே! |
| வந்து | (என்னிடம்) வந்து |
| ஆர | பூரணமாக |
| தழுவா | அணைந்து |
| | அச்சோ அச்சோ; |
| ஆயர்கள் போர் ஏறே! | இடையர்களைச் சேர்ந்த போர் வீரனே! |
| | அச்சோ அச்சோ. |

(தீர்ப்பான்: பான், பாக்கு, வான் என வினையெச்ச விகுதிகள்.) அக்ஷௌஹிணியின் எண் ஏறத்தாழ விருந்தாலும் இருதர்த்தாருக்கும் பலம் ஏறக்குறைய ஸமமாக விருக்க வேண்டும். இல்லையேல், ஜய பராஜயங்கள் சீக்கிரமே ஏற்பட்டுவிடும். வலிய பக்ஷத்திலுள்ள சேனைக்கு அதிகமாய் அழிவு ஏற்படாது. ஆகவே பூபாரம் தொலையாத படியாமென்று யுத்தம் ஸமமாகும்படி செய்தாய். பீஷ்ம த்ரோணாதிகளின் வதத்துக்கு வ்யாஜம் தேடியும் அதைச் சமமாக்கினாய். நீ திருக்கையில் ஆயுதங் கொண்டு ஒரு பக்கம் நின்றால் போர் ஸமமாக வாகாதென்று நிராயுதபாணியாய் நின்று போரொக்கப் பண்ணாய். ஆயினும் வெளியிலே நின்று விடாமல், யுத்தம் செய்ய மாட்டேனென்று வில்லை விட்டு வீற்றிருந்த அர்ஜுனனுக்குத் தத்துவோபதேசம் செய்து போர் (ஒக்கப் பண்ணி) பழுதுபடாதபடி செய்து விஜயனான அவன் விஜயலக்ஷ்மி பொருந்திய மாலையை மார்பில் அணியும்படி அவனுக்குச் சேஷபூதனாயிருந்து பூபாரம் கழிக்கத் திருவுளங் கொண்டு அவன் தேரை மாத்திரம் நடத்தினாய். இப்படி பூபாரத்தைக் கழித்த நீ எனது ஆர்த்திபாரம் கழியும்படி அணைந்து அசைத்தாட்டவேணு மென்றவாறு. செந்தாமரைக் கண்ணனுக்குக் கண் கறுத்திருப்பது கருவிழியிலாகும். இதனால் குளிர்ந்த பார்வை தாயிடம் குறிக்கப்பட்டதாம். கருமை பெருமையாய் மிகப் பெரிய கண்களுடையவனென்னலுமாம். தழுவாய் என்றும் படிக்கின்றனர். சு.

7. மிக்கபெரும்புகழ்மாவலிவேள்வியில்
தக்கதிதன்றென்றுதானம்விலக்கிய
சுக்கிரன்கண்ணைத்துரும்பாற்கிளறிய
சக்கரக்கையனே யச்சோவச்சோ சங்கமிடத்தானே யச்சோவச்சோ. (103)

| | |
|---|---|
| மிக்க பெரு புகழ் | ஸர்வ விஷயத்திலும் ஸர்வதேச வ்யாபியா யிருந்ததாலே மிகுந்த பெருங் கீர்த்தி பொருந்திய |
| மாவலி | மஹத்துவம் பெயரை விட்டுப் பிரியாதபடியுள்ள மஹாபலி சக்ரவர்த்தியின் |
| வேள்வியில் | யஜ்ஞத்திலே (நீ வாமனனாய்ப் போய் மூவடி யாசிக்க, பிறகு அவனும் இசைந்த போது) |
| இது தக்கது அன்று என்று | இப்படி ஆத்மநாசகரமான தானம் விவேகிக்குத் தகாதென்று சொல்லி, |
| தானம் விலக்கிய | அதனைக் கேளாது தானமே செய்யக் கெண்டிகையி னின்று மாவலி உன் திருக் கையிலே தீர்த்தம் சேர்க்கும் போது கெண்டிகை த்வாரத்தைக் காமரூபியாய்த் தானே அடைத்துநின்று தானத்தை விலக்கின |
| சுக்கிரன் | (மாவலியின் புரோஹிதனான) சுக்ராசார்யனுடைய |
| கண்ணை | (த்வாரம் வழியாகப் பார்த்திருந்த) கண்ணை |
| துரும்பால் கிளறிய | தீர்த்தம் விழுவதற்காக அடைப்பை யெடுக்கும் வ்யாஜத்தாலே தன் திருக்கைப் பவித்ரத்தினாலே த்வார சோதனம் செய்வது போல் கீண்டிவிட்டவனான |
| சக்கரம் கையனே | சக்கரத்தை வலக்கையில் ஏந்தினவனே! அச்சோ அச்சோ; |
| சங்கம் இடத்தானே | இடது கையில் சங்கம் உடையவனே! அச்சோ அச்சோ. |

துரும்பிற் சக்ராயுதம் ப்ரவேசித்துக் கண்ணை யழித்ததென, 'கிளறிய சக்கரக் கையனே' என்ற விடத்தில் தோற்று மென்பர். இவன் மாயாவாமனனபடியாலே உனக்குள்ளவை யெல்லாம் அளித்தும் இவனுக்கு மூவடி யளித்ததாகாதாகையாலே இந்தத் தானம் முறைப்படி நடைபெறாது நரகமுண்டா மென்றெல்லாம் சுக்கிரன் சொல்லியும், தர்மத்திலுள்ள நெறியாலும் விஷ்ணுவினிடம் வைத்த கௌரவத்தாலும் தன் புகழ் போகாதபடியும் பெருகும்படியும் மாவலி நடந்து கொண்டான். மாவலியினிடம் விசேஷாபிமானத்தாலும் அசுரைச்வர்யம் அழியக் கூடாதென்ற கருத்தினாலும் சுக்ராசார்யர் கமண்டலுத்வாரத்திலே தெரியாமற் புகுந்து அடைத்தார். இப்படி தானத்தைக் கண்ணழிவு செய்ய முயன்ற சுக்கிராசிரியருக்குக் கண்ணழிவு இவன் அறியாது போல் செய்த சிக்ஷை. தக்கதிதன்றென்று என்றதற்குத் துரும்பால் கிளறிய என்ற விடத்திலும் அந்வயம் கொள்க. மாவலி பக்தனானாலும் தேவர்களிடத்தில் அபசரித்து அவர்கள் செல்வத்தை எடுத்துக் கொண்டது தகாதென நினைத்து 'நான், ப்ரஹ்லாதனுக்குப் பேரனாய் பக்தனுமான இவனை அழிக்காமே சிக்ஷித்து அவனிடமிருந்து செல்வத்தை விலக்க உபாயம் செய்திருக்க நீ இதற்குத் தடை செய்வது தகாது' எனத் திருவுளங் கொண்டு கண்ணைக் கிளறினனென்றபடி. எ.

8. என்னிதுமாயமென்னப்பனறிந்திலன்
முன்னைய வண்ணமே கொண்டளவாயென்ன
மன்னுநமுசியைவானிற்சுழற்றிய
மின்னுமுடியனே யச்சோவச்சோ வேங்கடவாணனே யச்சோவச்சோ. (104)

| | | | |
|---|---|---|---|
| என் | என்ன ? | என்ன | என்று சொல்லுவதற்கு |
| இது | வாமநரூபத்தைவிட்டு வேறுருவமெடுத்தளப்பது | மன்னும் | நிலை நின்றவனை |
| மாயம் | மாயச் செயல். | நமுசியை | மாவலியின் மகனை நமுசி என்பவனை |
| என் அப்பன் | எனது தந்தையான மாவலி | வானில் | ஆகாயத்தில் |
| அறிந்திலன் | (தானம் செய்த போது இவ்வுருவத்தை) அறிந்தானல்லன். | சுழற்றிய | சுழலச் செய்தவனை |
| முன்னைய | பழைய | மின்னு முடியனே | ப்ரகாசமான கிரீடமுடையவனே |
| வண்ணமே | வடிவையே | | அச்சோ அச்சோ ; |
| கொண்டு | (மறுபடி) ஸ்வீகரித்து | வேங்கடம் வாணனே | திருவேங்கடத்தில் வாழ்கின்றவனே ! |
| அளவாய் | மூவடி அளந்து கொள்ளக் கடவாய் | | அச்சோ அச்சோ |

"இது என்ன மாயம். மெய்யடியைக் கொண்டு அளக்கவேணும்." "மாயமானால் அசுரர்களுக்குத் தெரியாதோ. என்ன மாயமென்கிறாயே" நான் என்ன மாயமென்று தெளியக் கேட்கிறேனல்லேன். உண்மையானதல்ல. மாயமே. இப்படி யளக்கலாமோ என்கிறேன்" "நீ சொல்வதை உன் அப்பன் ஏற்றுக்கொள்ள முடியுமா? கேள்." "தர்மம், தானம், ஸத்யம், விஷ்ணுபக்தி, ப்ராஹ்மணசேவை யென்றே போது போக்கும் என்னப்பனுக்கு என்ன மாயம் தெரியும்? அவரை ஏன் கேட்கவேணும்?" "இது மாயவுருவன்று. உலகில் ஒவ்வொருவர் உடலும் ஒவ்வொரு விதமாய் வளர்வதுண்டு. தானம் பெற்று அளப்பதற்குள் உண்டாம் வளர்ச்சியை இசைந்தே தானம் எல்லோரும் செய்வர். எனது தேஹம் இவ்வண்ணம் வளர்கிறது என்னடியால் தானே நான் மூன்றடி அளந்து கொள்வதாகச் சொன்னேன். இனித் தாமதித்தால் உங்களுக்குச் சங்கடம் இன்னும் அதிகமாகலாம்." "ஒரு க்ஷணத்திலே இவ்வளவு வளர்த்தி கொள்பவனுக்குக் குறைத்துக் கொள்ளவும் சக்தி யிருக்கலாமே. ஆக நீ பழைய சிற்றடியால் அளந்துகொள்" என மேன்மேல் உரைத்துத் தடுக்க முயன்றான் நமுசி. "ஓஹோ நீ நமுசியல்லவா. உன் பெயரைக் கேட்டாலே நீ விடமாட்டாயெனத் தெரிகிறது. இனி நான் மன்னிய வுன்னை நின்ற விடத்தில் நிற்காதபடி செய்கிறேன்" என்று திருவுளங் கொண்டாய். அவன் நினைத்ததைச் சொல்லக் கூட முடியாதபடி சுழற்றி எறிந்தாய். மின்னு முடியனே! திருவடியைத் தகைத்த நமுசி, விட்டெறிந்த வேகத்தில் திருமுடிக்குமேல் போய்ச் சேர்ந்தான் போலும். தன்னுலகெல்லாம் தன்னடிக் குட்படுத்தித் தான் தேவதா ஸார்வபௌமனென்பதை விளக்கினதாலுண்டான முகச்சோதி முடிச்சோதியாய் மலர்ந்ததென்றதுமாம். இப்படித் திரிவிக்ரமாவதாரத்திலே திருவடி முதல் திருமுடிவரை எம்பெருமானை யனுபவித்த ஆழ்வாருக்கு அவ்வழகும் உயர்ந்த திருமுடியும் திருவேங்கடத் திருமலையிலேயே யனுபவிக்க முடிந்ததால் வேங்கட வாணனே என்றார். அன்று ஞாலமளந்த பிரானன்றோ திருவேங்கட மாமலை வந்து சேர்ந்துள்ளன்.

அ.

9. கண்டகடலுமலையுமுலகேழு
முண்டத்துக்காற்றா முகில்வண்ணா ஓஓவென்று
இண்டைச்சடைமுடியீசனிரக்கொள்ள
மண்டைநிறைத்தானே யச்சோவச்சோ மார்வில்மறுவனே யச்சோவச்சோ. (105)

| | |
|---|---|
| கண்ட | ப்ரஹ்மகபாலத்தை நிரப்புவதற்காக எங்கும் திரிந்து நான் கண்டு கொண்ட |
| கடலும் மலையும் | ஸமுத்ரங்களும் மலைகளும், (விரித்துச் சொல்வதென்?) |
| ஏழ உலகு உம் | ஏழு உலகங்களும் |
| முண்டத்துக்கு ஆற்று | இந்தக் கபாலத்தை நிறைக்கப் போதா. |
| முகில் வண்ணா | மேகவண்ணனை எம்பெருமானே! |
| ஓஒ | கஷ்டம் |
| என்று | என்று கதறி |
| இண்டை | நெருங்கிய |
| சடை முடி | ஜடையின் முடிப்பை யுடைய |
| ஈசன் | ருத்ரனானவன் |
| இரக்கொள்ள | பிச்சை கேட்ட போது |
| மண்டை | அந்தக் கபாலத்தை |
| நிறைத்தானே | நிறைத்து உடைத்துப் பாபவிமோசனம் செய்தவனே! |
| | அச்சோ அச்சோ; |
| மார்வில் மறுவனே | திருமார்வில் ஸ்ரீவத்ஸமறு உடையவனே |
| | அச்சோ அச்சோ. |

'ஏழுலகும் திரிந்து எல்லாம் கண்டு வந்தேன். எங்கும் இம்மண்டை நிறைந்த பாடில்லை. நிறையாத போது இது என்னை விடாது. முகில்வண்ணனுடைய கையாலே நீ தான் பிச்சை பெய்து இதை நிரப்பவேண்டு' மென ஈசன் இரக்க எம்பெருமான் கிருபை கூர்ந்து தன் திருமேனியின் ஒரு பக்கத்தில் தானே தன் நகநுனியால் கீறி இரத்தத்தைப் பெருக்கி அதனால் நிறைக்கக் கபாலம் பல சுக்கலாக நொறுங்கிற்று. "தத: தேந ஸ்வகம் பார்ச்வம் நகாக்ரேண விதாரிதம். மஹதீ ஸ்ரவதீ தாரா ததோ ரக்தஸ்ய நிஸ்ஸ்ருதா. விஷ்ணு ப்ரஸாதாத் ஸுச்ரோணி கபாலம் தத் ஸஹஸ்ரதா. ஸ்புடிதம் பஹுதா யாதம் ஸ்வப்நலப்தம் தநம் யதா." (மாத்ஸ்ய. 182. 87.)

முண்டம். இப்பதம் கபாலம் என்னும் பொருளிலேயே பெரியதிருமொழியிலும் (5. 1. 8.) இருக்கின்றது. உலகேழும் ஆற்ற. ஏழுலகும் இதில் வைக்கப்பட்டாலும் இது நிறைவதாயில்லை. அன்றி ஏழுலகில் எங்கும் யாவரும் இதை நிறைக்க வல்லரல்லர். இங்கு 'உண்டத்துக்கு' என வைத்து, உண்டு அத்துக்கு எனப் பிரித்து, அத்துக்கு என்பதை 'அதுக்கு' என்றாக்கி, ஆற்ற என்பதை ஆற்றாது என்று கொண்டு உலகேழிலும் பிச்சை யெடுத்து உண்டு அதுக்கு ஆற்றாது ஈசன் உன்னை இரக்க எனவும் பொருள் கூறினர். உண்டத்துக்கு = உண்பதற்கு என்றார் ஒருவர். ஓஒ. ஓ என்பது ப்லுதமாய் மாத்திரை வளர்த்தி ஓஒ எனப்படுகிறது. ௯.

10. துன்னியபேரிருள்சூழ்ந்துலகைமூட
மன்னியநான்மறைமுற்றுமறைந்திட
பின்னிவ்வுலகினிற்பேரிருள்நீங்கவன்று
அன்னமதானானே யச்சோ வச்சோ அருமறைதந்தானே யச்சோவச்சோ. (106)

| | |
|---|---|
| துன்னிய | அடர்ந்ததாயும் |
| பேர் | பெரியதாயுமுள்ள |
| இருள் | இருட்டானது |
| சூழ்ந்து | வியாபித்து |
| உலகை | லோகங்களை |
| மூட | மறைத்துவிட, |
| மன்னிய | அழிவற்றவையான |
| நால் மறைகள் | நான்கு வேதங்களும் |
| முற்றும் | முழுமையும் |
| மறைந்திட | மறைந்து போகவே—, |
| அன்று | அந்நாளில் |
| பின் | அதற்கு மேலுள்ள காலத்தில் |
| இ உலகினில் | இந்த உலகங்களில் |
| பேர் இருள் நீங்க | பெரிய அந்தகாரம் போம்படி |
| அது அன்னம் ஆனானே | அப்படிப்பட்ட ஹம்ஸமானவனே! |
| | அச்சோ அச்சோ; |
| அரு மறை தந்தானே | அருமையான வேதங்களை உபதேசித்தவனே! |
| | அச்சோ அச்சோ. |

பெரிய திருமொழியில் (11. 4. 8.) மத்ஸ்யாவதாரம் தொடங்கி க்ருஷ்ணாவதாரம் வரை கூறும் போது பலராமாவதாரத்தை விட்டு ராம க்ருஷ்ணாவதாரங்களுக் கிடையிலே இந்த ஹம்ஸாவதாரம் இப் பாட்டின் வியாக்யான மென்னலாம்படி இவ்வாறு அருளிச் செய்யப்பட்டுள்ளது—"முன்னுலகங்க ளேழும் இருள் மண்டி யுண்ண முதலோடு வீடு மறியாது என்னிது வந்ததென்ன இமையோர் திசைப்ப எழில்வேத மின்றி மறைய, பின்னையும் வானவர்க்கும் முனிவர்க்கும் நல்கி இருள் தீர்ந்து இவ் வையம் மகிழ அன்னமதாயிருந்து அங்கு அறநூல் உரைத்த அது நம்மை ஆளும் அரசே." இதனால் உலகங்களெல்லாம் ஸ்ருஷ்டிக்கப்பட்ட பிறகு பேரிருள் சூழ்ந்து வேதங்கள் மறைந்து சதுர்முகன் முதலாக வெல்லோரும் வழி திகைத்து நின்றபோது எம்பெருமான் ஹம்ஸாவதாரமெடுத்து வேதங்களை மீட்டு உபதேசித்து அவ்விருளை நீக்கினது விளங்கும். ஸ்வர்ண மயமாய் சூர்யகோடி ப்ரகாசமாய் சுத்த ஸத்வமான ஹம்ஸம் அவதரித்தவுடனே வெளியிருளனைத்தும் விலகிற்று; பிறகு அருமறை தந்ததால் உள்ளிருளும் போயிற்றென இங்கருளினதாகும். மத்ஸ்ய ஹயக்ரீவாவதாரங்கள் போலவே ஹம்ஸாவதாரமும் வேதோபதேசத்திற்கானதென்றதை 'வேதோதந்வத் விபஜநவித:' என ஹம்ஸஸந்தேசத்திலே ஸ்ரீ தேசிகன் அருளிச் செய்தார். அதன் உரையில் இதன் விரிவு காண்க. அன்னம் அது என்றது வேத ப்ரஸித்தி தோற்ற. ம.

11. நச்சுவார் முன்னிற்கும்நாராயணன்றன்னை
அச்சோவருகவென்றுஆய்ச்சிஉரைத்தன
மச்சணிமாடப்புதுவைக்கோன்பட்டன்சொல்
நிச்சலும்பாடுவார்நீள்விசும்பாள்வரே. (107)

| | | | |
|---|---|---|---|
| நச்சுவார் முன் | (தன்மேல்) மிக்க விருப்பம் கொண்டவர்களின் எதிரில் | அணி | அழகிய |
| நிற்கும் | தானே அவதாராதிகள் செய்து வந்து நிற்கும் | மாடம் | உப்பரிக்கைகள் உள்ள |
| நாராயணன் தன்னை | ஸ்ரீமந் நாராயணனை | புதுவை | ஸ்ரீ வில்லிபுத்தூருக்கு |
| ஆய்ச்சி | இடைச்சியான யசோதை | கோன் | நிர்வாஹகரான |
| அச்சோ வருக என்று | அச்சோ; வருவாயாக என்று சொல்லி | பட்டன் | பட்டநாதருடைய |
| உரைத்தன | சொன்னவையான (சொன்ன பொருள்களைப் பொதிந்து கொண்டுள்ள) | சொல் | சொற்களை (இப்பத்துப் பாசுரங்களை) |
| மச்சு | மேல் நிலைகளோடு கூடின | நிச்சலும் | எப்பொழுதும் |
| | | பாடுவார் | பாடுகின்றவர் |
| | | நீள் விசும்பு | நீண்ட ஆகாசத்தை (பரமபதத்தை) |
| | | ஆள்வர் | ஆண்டு வருவர். |

'ஏஷ நாராயண: ஸ்ரீமாந் க்ஷீரார்ணவநிகேதந:' எனப்பட்ட நாராயணன் ஆய்ச்சியின் முன் வந்து நின்றது அவளும் நச்சுவாரிற் சேர்ந்தவளானமையாலே. நாராயணனே சொற்படி நடக்க ஸித்தமான பிறகு நீள்விசும்பில் அவனுக்குச் சேஷமானவரெல்லோரும் இவளுக்கு சேஷவ்ருத்தி செய்வதில் என்ன ஸந்தேஹம்? ஆக அவள் உரைத்தவற்றை நாம் சொன்னபோது நமக்கும் அவன் விதேயனாகையாலே அவனுடைய நீள் விசும்பும் நமக்கு சேஷமாயிற்று. இச்சொற்களை உபதேசித்த ஆழ்வார் புதுவைக் கோனானதும் புதுவையிலுள்ள வடபத்ரசாயி நாராயணன் இவருக்குப் பரதந்த்ரனானமையாலே. நீள்விசும்பு நமக்கு சேஷமானால் நாம் அதை நியமிக்க விரும்பு

வது எவ்வண்ண மென்னில்—எம்பெருமானுக்கு எப்போதும் சேஷமாயிருந்து வரவேணு மென்றிவ்வாறே யாம். **நீள் விசும்பு:** நித்ய விபூதிக்கு ஊர்த்வ பரிச்சேதம் கிடையாதாகையாலே அது நீண்டதாயிற்று. விசும்பு—ஆகாசம். ஜ்ஞாநாநந்த ஸ்வரூபம். **ஆள்வரே.** அங்குள்ளவரில் ஒவ்வொருவரும் ஸ்வராட் ஆகையாலே எம்பெருமானுடைய கைங்கர்ய ஸாம்ராஜ்ய துரந்தரராவர். அதற்குத் தக்கபடி நீள் விசும்பைப் பயன்படுத்திக் கொள்வரென்றதாம். ௰க.

ப்ரபந்தரக்ஷையில் பெரியாழ்வார் திருமொழி 1. 9.

பொன்னியற்கிண்கிணி உரை முற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

—: o :—

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

## பெரியாழ்வார் திருமொழி 1. 10. (புறம்புல்க வழைத்தல்)

# வட்டுநடுவே.

முன் பக்கம் வந்து தழுவி யசைத்தாட்டுவதை யபேக்ஷித்து அது தலைக்கட்டின பிறகு பின்பக்கம் வந்து சார்ந்துக் கொள்வதை யவள் அநுபவித்த வண்ணம் அநுபவித்து இனியராகிறார்.

1. வட்டுநடுவேவளர்கின்றமாணிக்க
மொட்டுநுனையில்முளைக்கின்றமுத்தேபோல்
சொட்டுச்சொட்டென்னத்துளிக்கத்துளிக்கவென்
குட்டன்வந்தென்னைப்புறம்புல்குவான் கோவிந்தனென்னைப் புறம்புல்குவான்.(108)

| | |
|---|---|
| என் குட்டன் | எனது மகனான கண்ணன் |
| வட்டு நடுவே | (நீல ரத்ன மயமாய்) வட்ட வடிவங்களான இரண்டின் நடுவிலே |
| வளர்கின்ற | வளர்ந்து வராநின்ற |
| மாணிக்கம் மொட்டு நுனையில் | நீல மாணிக்கத்தால் செய்யப் பெற்ற அரும்பின் முனையிலே |
| முளைக்கின்ற முத்து போல் | உண்டாகி வரும் முத்துக்கள் போலவே |
| சொட்டு சொட்டு என்ன | சொட்டு சொட்டென ஒலிக்கும்படி |
| துளிக்க துளிக்க | நீரின் பிந்துக்கள் துளி துளியாய் விழ |
| வந்து | நெருங்கி வந்து |
| என்னை புறம் புல்குவான் | என்னைப் பின்பக்கத்தில் அணைந்து கொள்வான்; |
| கோவிந்தன் | கோவிந்தன் என பிருதம் பெற்றவன் |
| | என்னைப் புறம் புல்குவான். |

**வட்டு.** திரட்சி; உண்டை. கண்ணனுடைய குறியினின்று சொட்டி வரும் நீர்ப்பிந்துக்கள் முத்துக்கள் போலிருக்கின்றன வென்று வ்யக்தமாக வருளிச் செய்தார். அம் முத்துக்களுக்கு உற்பத்தி ஸ்தானமான மொட்டுக்கும் அதற்கு இருபுறமுள்ள வட்டுக்களுக்கும் கண்ணனின் குறியையும் பீசங்களையும் முறையே உபமேயமாக்கிக் கொள்க. நிகமநத்தில், 'புறம் புல்கிய வேய்த் தடந்தோளி' யென்பதால் என்னை

யென்பது புல்குவான் என்றதோடு சேருமென்க. புறம் என்பதற்குப் புறத்திலெனப் பொருள். சீரின் மகிமையை நினைத்து கோவிந்தன் என்றார். கோமூத்ரத்திற்கு மஹிமை இவனால் வந்தது. கோவிற்கு மஹிமையை அடைவித்தவன் கோவிந்தனென்க. க.

2. கிண்கிணிகட்டிக்கிறிகட்டிக்கையினிற்
கங்கணமிட்டுக்கழுத்தில்தொடர்கட்டித்
தன்கணத்தாலேசதிராநடந்துவந்து
என்கண்ணனென்னைப்புறம்புல்குவான் எம்பிரானென்னைப் புறம்புல்குவான்.(109)

| | |
|---|---|
| என் கண்ணன் | எனது கண்ணன் |
| கிண்கிணி கட்டி | அரையிலும் திருவடிகளிலும் சதங்கைகளைக் கட்டிக்கொண்டு |
| கிறி கட்டி | திருப்பவள வடங்களையும் கட்டிக் கொண்டு |
| கையினிற் கங்கணம் இட்டு | திருக்கைகளில் வளைகளையும் தரித்துக் கொண்டு |
| கழுத்தில் தொடர் கட்டி | திருக்கழுத்தில் சங்கிலிகளைச் சாத்திக் கொண்டு |
| தன் கணத்தாலே | தனது க்ஷணத்தினாலே |
| சதிர் ஆ | சாதுர்யமாக |
| நடந்து வந்து | நடந்து (என்னிடம்) சேர்ந்து என்னைப் புறம் புல்குவான். |
| எம்பிரான் | எனக்கு உபகாரகன் என்னைப் புறம் புல்குவான். |

கிறி என்று முன்கையிலுள்ள திருப்பவள வடத்தைச் சொன்னதால் கங்கணமென்றது தோள்வளை யென்பர். 'வண்ணப்பவள மருங்கினிற் சாத்தி' (2. 3. 2) என்கிறபடி பவளவடம் அரையிலும் சாத்தப்படும். கணமாவது க்ஷணம். இதற்கு நிர்வ்யாபாரஸ்திதி, காலவிசேஷம், உத்ஸவம் என வடமொழியிற் பொருள்கள். இங்கு ஏதேனும் கொள்க. ஆக வாராதவன் போல் நின்று சடக்கெனத் தானே இஷ்டப்பட்டு வா என்றதாம். இதனால் அப்பூச்சி காட்டுவதைத் தானே செய்வது போல் தானாகப் புறம்புல்குவதைக் குறித்ததாமாம். கடைப் பாசுரத்தில் இது வ்யக்தமாகும். தம் கணத்தாலே எனப் பாடம் கொண்டு, தம்முடைய (அதாவது) ஆபரணங்களுடைய கணத்தாலே கூட்டத்தோடு என்றும், தன் கணத்தாலே என்னும் பாடத்தில் கண்ணன் தனது கண்ணாலே என்று முரை செய்கின்றனர். உ.

3. கத்தக்கதித்துக்கிடந்தபெருஞ்செல்வம்
ஒத்துப்பொருந்திக்கொண்டுண்ணாதுமண்ணாள்வான்
கொத்துத்தலைவன்குடிகெடத்தோன்றிய
அத்தன்வந்தென்னைப்புறம்புல்குவான் ஆயர்களேறென்புறம்புல்குவான். (110)

| | |
|---|---|
| கத்த | எனக்கெனக்கென்று எல்லோரும் அபஹரிக்கக் கத்தி வரும்படி |
| கதித்து கிடந்த | அதிகரித்து வேறொருவர் அடைய முடியாதபடி இருந்த |
| பெரு செல்வம் | ஸாம்ராஜ்ய ஸம்பத்தை |
| ஒத்து | உரிமையுள்ள பாண்டவர்களுக்கும் ஸம்மதித்து |
| பொருந்திக் கொண்டு உண்ணாது | அவர்களோடு கலந்து பரிமாறிக்கொண்டு அனுபவியாமல் |
| மண் ஆள்வான் | பூமி முழுமையும் தானே ஆளும் |
| கொத்து தலைவன் | திரளுக்குத் தலைவனான துர்யோதனன் |
| குடி கெட | குடும்பத்தோடு அழிவதற்காக |
| தோன்றிய | ஆவிர்பவித்த |
| அத்தன் | ஸர்வேச்வரனான கண்ணன் |
| வந்து | ஓடி வந்து என்னைப் புறம் புல்குவான் ; |
| ஆயர்கள் | இடையர்களின் |
| ஏறு | விருடபம் போன்ற வீரன் |
| என் புறம் | எனது முதுகை புல்குவான். |

**கத்தக் கதித்து.** ஐச்வர்யத்தைப் பார்த்த அரசரெல்லோரும் சண்டையிட்டு அபஹரிக்க ஆசைப்படும்படி வளர்ந்த ஸம்பத்து அது. இது 'மிகவும் அதிகரித்து' என்னும் பொருளிலே வந்த ஒரு முழுச்சொல் என்றும் சொல்வர். **கிடந்த.** அதைப் பிறர் அபஹரிக்காமலிருந்தது, 'பரை: பரிபவே ப்ராப்தே வயம் பஞ்சோத்தரம் சதம்' என்கிறபடி பாண்டவர்கள் சேர்ந்து வதைப்பார்கள் என்று பயந்தே என்க. **கோத்துத் தலைவன்.** உடன் பிறந்தோர் நூறும் மற்றவரும் சேர்ந்த கொத்துக்குத் தலைவன். துர்யோதனாதிகளோடு சேர்ந்து பாண்டவர்களை அழித்துவிட்டால் பிறகு துர்யோதனாதிகளைத் தொலைத்து நாமே ஐச்வர்யம் பெறலாமென்ற பேராசையாலே துர்யோதனனிடம் பலர் சேர்ந்தனர் போலும். **கேடத் தோன்றிய.** அவதரிக்கும் போதே இவ்வித பூபாரத்தை அழிக்கக் கருதினானன்றோ. **அத்தன்.** உடையவன் உடைமையை ரக்ஷிக்க வேண்டியது கடமையாயிற்றே. ங.

4. நாந்தகமேந்தியநம்பிசரணென்று
தாழ்ந்ததனஞ்சயற்காகித்தரணியில்
வேந்தர்களுட்கவிசயன்மணித்திண்டேர்
ஊர்ந்தவனென்னைப்புறம்புல்குவான் உம்பர்கோனென்னைப் புறம்புல்குவான். (111)

| | | | |
|---|---|---|---|
| நாந்தகம் | நந்தக மெனப்படும் வாளை | உட்க | அஞ்சும்படி |
| ஏந்திய | (பூவேந்தினாற் போலே திருக் கையிலே பூஷணமாகக்) கொண்ட | விசயன் | அர்ஜுனனது |
| | | மணி திண் தேர் | அழகும் திடமும் பொருந்திய ரதத்தை |
| நம்பி | புருஷோத்தமனே | | |
| சரண் | சரணம் (ரக்ஷகன்) | ஊர்ந்தவன் | நடத்தின கண்ணன் |
| என்று தாழ்ந்த | என்றத்யவஸித்துக் கீழ்ப்படிந்த | | என்னைப் புறம் புல்குவான்; |
| தனஞ்சயற்கு | அர்ஜுனனுக்கு | | |
| ஆகி | பாதந்த்ரனாயிருந்து | உம்பர் கோன் | விண்ணுலகத்திற்கு நிர்வாஹகன் |
| தரணியில் வேந்தர்கள் | பூமியிலுள்ள அரசர்கள் எல்லோரும் | | என்னைப் புறம் புல்குவான். |

நந்தகமே தமிழில் நாந்தகமெனப்படும். இங்கு, 'நாந்தகஞ் சங்கு தண்டு நாணொலிச் சார்ங்கந் திருச்சக்கரம் ஏந்து பெருமை' (4. 1. 2.) என்கிறபடி பஞ்சாயுதத்தையும் குறித்ததாகக் கொள்க. **ஏந்திய:** இவன் ஆயுதங்களைப் போரில் ப்ரயோகிக்காவிட்டாலும் இவனை விட்டுப் பிரியாத இவற்றின் ஸந்நிதானமே நம் ஆயுதங்களுக்கு பலம் கொடுக்குமென அர்ஜுனன் நினைத்தான்போலும். **நம்பி சரண்:** யுத்தம் செய்ய இசையாத கண்ணனை விட்டு அவன் அளித்த சில சைன்யங்களை ரக்ஷகங்களாக நினைத்தான் துர்யோதனன். எம்பெருமான் எழுந்தருளி வெறுமனே இருந்தாலும் போதுமெனத் தெளிந்தான் தனஞ்சயன். **தாழ்ந்த:** துர்யோதனனும் தனஞ்சயனும் தனித்தனியே கண்ணனிடம் உதவியைப் பெறச் சென்றார்கள். கண்ணன் அப்போது பள்ளிகொண்டிருக்க அவர் தலைப்பக்கம் போய் உட்கார்ந்தான் துர்யோதனன். திருவடிக்கீழ் அமர்ந்தான் அர்ஜுனன்; ஆகவே எழுந்திருக்கும்போது முதலில் எம்பெருமான் கடாக்ஷத்திற்கு இலக்கானான். நம்பி யென்றது விளிச்சொல் என்பதுமுண்டு. **மணி** = மணிகள் அமைந்த எனவுமாம். தனஞ்சயன், விசயன் என விரண்டும் அர்ஜுனன் பெயர். ச.

5. வெண்கலப்பத்திரங்கட்டிவிளையாடிக்
கண்பலபெய்தகருந்தழைக்காவின்கீழ்
பண்பலபாடிப்பல்லாண்டிசைப்பபண்டு
மண்பலகொண்டான்புறம்புல்குவான் வாமனனென்னைப் புறம்புல்குவான். (112)

| | | | |
|---|---|---|---|
| பண்டு | முன்னே (த்ரிவிக்ரமனாய் வளர்ந்தபோது) (அநுகூல ரெல்லோரும்) | பெய்த கரு தழை | கீழே சேர்க்கப்பட்ட கரிய இலைத் தழைகளையுடைய வையுமான |
| பல பண் பாடி | பலவிதங்களான இசைப் பாட்டுக்களைப் பாடி | காவின் | சோலைகளின் |
| பல்லாண்டு இசைப்ப | வாழ்த்துக்களைக் கூறி வரும்படி | கீழ் | நிழலிலே |
| பல மண் கொண்டான் | (மூவடி யென்று சொல்லி) முழு உலகங்களையும் கொண்டவனான இவன் | வெண் கலம் பத்திரம் கட்டி | (அரையில்) வெண்கலத்தால் செய்த உடைவாளைக் கட்டிக் கொண்டு |
| கண் | விசாலங்களாய் | விளையாடி | விளையாடி வந்து |
| பல | அனேகங்களாய் | | புறம் புல்குவான் ; வாமனன் என்னை புறம் புல்குவான். |

விளையாடி என்னும் பதஸ்வாரஸ்யத்தையொட்டி, முன் இரண்டடிகள் கண்ணனின் விளையாட்டை வர்ணிப்பனவென்க ; பின் அடிகள் வாமனாவதார வரலாற்றைக் கூறுவது. இங்ஙனமே முன்னோரும் கருதினர். பத்திரமாவது சொட்டைக்கத்தி யென்றார் அரும்பத வுரைக்காரர். இது விளையாடக் கருந்தழை கழித்துப்போடக் கருவியாம். கண் பல பெய்த : விளையாடுவதற்காகப் பல பீலிக்கண்களிட்ட என்னவுமாம். பெய்த வென்ற விடத்திலே ‘பெய்து’ என்றும் பாடம் கொண்டு பல பீலிக்கண்களைத் திருமுடியிலே தரித்து என்றுமுரைப்பர். முன் சொன்னபடி கருந்தழை பெய்த கா என்றோ கருந்தழை பெய்து விளையாடி என்றோ பொருள் கொள்ளலுமாம். கா என்பது சோலையாகையாலே அதைச் சேர்ந்த தழை இலை யென்றார் திருவாய்மொழிப்பிள்ளை. தழை பீலிக்குடையாய் அதுவே ஒரு சோலையென ரூபித்தார் மணவாளமாமுனிகள். பெய்த வென்றவிடத்தில் ‘செய்து’ என்னும் பாடம் பழைய உரைகளில் காணவில்லை. பத்திரம் என்பது இலையாய் இலைவடிவமாய் வெண்கலத்தால் செய்யப்பெற்று அரையில் தரிக்கும் ஆபரணம் வெண்கலப்பத்திரமாகு மென்றுமுரைப்பர். முதலிரண்டு அடிகள் கூட வாமனாவதாரத்தைப் பற்றினவையாய், அவ்வணியை அணிந்து பல பீலிக்கண்களால் செய்யப்பட்ட பெரிய பீலிக்குடையின் கீழே வாமனனாய் மாவலியிடம் எழுந்தருளினது இவ்வடிகளின் பொருளாகுமென்று கூறுபவருமுண்டு. ‘விளையாடிக்கண்’ என ஸந்தியில்லையாகில் விளையாடி என்பது விளையாடுகிறவன் எனப் பொருள் தரும். ஆக விளையாடும் கண்ணன் புறம்புல்கவேணுமென்றபடியாம் ‘எத்தவங்கெென்னைப் புறம்புல்குவான்’ என்றவிடத்திற்போல் ‘பல்லாண்டிசைப்பப் புறம் புல்குவான்’ எனவும் அந்வயமாம்.

ரு.

6. சத்திரமேந்தித்தனியொருமாணியாய்
உத்தரவேதியில்நின்றவொருவனை
கத்திரியர்காணக்காணிமுற்றுங்கொண்ட
பத்திராகாரன்புறம்புல்குவான் பாரளந்தானென்புறம்புல்குவான். (113)

| | |
|---|---|
| உத்தர வேதியில் | யஜ்ஞத்திற்காகவுள்ள உத்தர வேதி யென்னு மிடத்திலே |
| நின்று | எம்பெருமானைக் கண்டு நின்றிருந்த |
| ஒருவனை | சீல வ்ருத்த விக்ரம ஔதார்யங்களிலே ஒப்பற்ற மாவலியை |
| கத்திரியர் | க்ஷத்ரியர் எல்லோரும் |
| காண | கண்டு ஸேவித்திருந்த போது |
| சத்திரம் ஏந்தி | குடையை திருக் கையில் பிடித்துக் கொண்டு |
| தனி | ஏகாகியாய் |

| | |
|---|---|
| ஒரு | அத்விதீயனான |
| மாணியாய் | ப்ரஹ்மசாரியாய் |
| காணி முற்றும் கொண்ட | முழு நிலமும் ப்ரதிக்ரஹித்த |
| பத்திர ஆகாரன் | திவ்ய மங்கள விக்ரஹமுள்ளவன் |
| | புறம் புல்குவான்; |
| பார் அளந்தான் | பூமியை யளந்தான் |
| | என் புறம் புல்குவான். |

ஒருவனை யென்பது காண என்றதோடு இணையும். பத்திராகாரன். இது வடமொழித்தொடர். தனக்கு நிவாஸமாகவன்றோ மூவடிமண் கேட்டது. வாமனன் திருவடியால் மூவடியாகில் இவனுக்கு நல்ல நிவாஸமில்லையாம். ஆகக் காணி முற்றும் கொண்டதாலே ஸுஸ்தாநனென் என்னவுமாம். ஸுஸ்தாநமாவது வாஸஸ்தானம். பலி கொடுத்ததைத்தானே இவன் கொள்ளவேண்டும். காணி முற்றும் உமக்கென்று அவன் கொடுத்தானு என வேண்டாம். உன் அடியால் மூவடி கொடுத்தேனென்றான் அவன். மூன்றடிகளுக்கு வஸ்து இராமையால் காணிமுற்றும் மாத்திரமே யுளதென்று இருந்தவரையில் இவன் கொண்டான். ஆகக் கொடுத்ததை விடக் கொண்டது குறைவாம். ஆயினும் பலிக்கு மங்களமே இவன் செய்தவனுகையாலும் பத்ராகாரனிவன். ௬.

7. போத்தவுரலைக்கவிழ்த்ததன்மேலேறித்
தித்தித்தபாலுந்தடாவினில்வெண்ணெயும்
மேத்தத்திருவயிறாரவிழுங்கிய
அத்தன்வந்தென்னைப்புறம்புல்குவான் ஆழியானென்னைப் புறம்புல்குவான். (114)

| | |
|---|---|
| பொத்த உரலை | ஓட்டையிட்ட உரலை |
| கவிழ்த்து | தலைகீழாக்கி |
| அதன் மேல் ஏறி | அந்த உரலின்மேற் பக்கத்திலேறி நின்று எட்டி |
| தித்தித்த | (சுண்டக் காய்ச்சினதால்) மிகவும் இனிப்பான |
| பாலும் | பாலையும் |
| தடாவினில் | மிடாக்களிலிருந்த |
| வெண்ணெயும் | வெண்ணெயையும் |
| திரு வயிறு | மேன்மையுள்ள வயிறானது |

| | |
|---|---|
| ஆர | நிறையும்படி |
| மேத்த | மிகவாக |
| விழுங்கிய | புசித்தவனான |
| அத்தன் | (அவற்றிற்கெல்லாம்) ஸ்வாமியான கண்ணன் |
| | வந்து என்னைப் புறம் புல்குவான்; |
| ஆழியான் | சக்கரக்கையன் அல்லது வஞ்சகன் |
| | என்னைப் புறம் புல்குவான். |

பொத்தவுரலை என்ற விடத்திலே போத்தவுரலை என்று உலக வழக்கத்தைத் தழுவிச் சொன்னதாம். நல்ல உரலை விட்டுப் பொத்த வுரலை எடுத்தது யாரும் இதைத் தேடிவர மாட்டாரென்ற கருத்தினால். நல்ல உரல்களைக் கண்ணனுக்குக் கிடைக்கா வண்ணம் யசோதை மறைத்து வைத்துவிட்டதனாலுமாம். அன்றி, உரலேறியும் உறியிலுள்ள பானையின் மேற்புறம் கைக்கெட்டாதது கண்டு பானைகளைப் போத்த—பொத்தவிட ஏறி என்னவுமாம். அதற்காக அவன் திருக்கையில் வைத்திருப்பது திருவாழி. ஆகவே ஆழியான் என்றதாம். தடாவினில்: வெண்ணெய் தடாவினிலிருக்கும்போது அவ்வளவு வெண்ணெயைக் கொடுக்கும் பால் பெரிய பானைகளிலிருக்க வேண்டும். எ.

8. மூத்தவைகாணமுதுமணற்குன்றேறிக்
கூத்துவந்தாடிக்குழலாலிசைபாடி
வாய்த்தமறையோர்வணங்கவிமையவர்
ஏத்தவந்தென்னைப்புறம்புல்குவான் எம்பிரானென்னைப் புறம்புல்குவான். (115)

| | | | |
|---|---|---|---|
| அவை | சபையானது | ஏத்த | ஸ்தோத்திரம் செய்ய |
| மூத்து | முதிர்ந்து (தேர்ச்சி பெற்று) | உவந்து | (எல்லோரும் சேர்ந்ததற்குக்) களித்து |
| காண | காணும்படி | | |
| முது | பழமையா(ய்த்திடமா)ன | கூத்து ஆடி | (பல) நர்த்தனங்கள் செய்து |
| மணல் குன்று | மணல் மேட்டிலே | குழலால் | இடையர் ஊதும் குழலால் |
| ஏறி | மேற் சென்றிருந்து | இசை பாடி | ராகங்களை யெல்லாம் ஆலாபனம் செய்து (பிறகு) |
| வாய்த்த | (நேரிற் காண) பாக்யம் பெற்ற | | |
| மறையோர் | வேத வித்துக்கள் | வந்து | ஓடி வந்து |
| வணங்க | ஸேவித்து நிற்க | | என்னைப் புறம் புல்குவான் ; |
| இமையவர் | தேவதைகளும் | எம் பிரான் | எனக்கு உபகாரகன் |
| | | | என்னைப் புறம் புல்குவான். |

தெரியாதவர் கூடத் தெரிந்து ரஸிக்கும்படி இருக்கும் கண்ணனுடைய ஆடலும் பாடலும். இவற்றைப் பலகால் அனுபவித்துத் தேர்ச்சி பெற்றுள்ளனர் கோபரும் கோபஸ்திரீகளும். எல்லோரும் ஒன்று கூடி ஸபையாகச் சேர்ந்து கண்டு கேட்டுக் களிக்கவேண்டுமென்று பெரு மணற் குன்றின் மேலேறிக் குழலூதிக் கூப்பிடுவான். கூப்பிட்டும் வர முடியாத சில தௌர்பாக்கிய ஜனங்கள் நீங்க எல்லோரும் சேர்ந்து விடுவர். ந்ருத்த கீதங்கள் சாஸ்த்ரமுறை தப்பாமே யிருப்பதை யனுபவிக்க மறையோரும் சேருவர். இவற்றிலே வெகு ப்ரஸித்தி பெற்ற இமையவர் எல்லோரும் தங்களுக்குமெட்டாத வகைகளைக் கண்டு ஏத்தி வருவர். அது கண்டு உவந்து மேன்மேல் ஆடலும் பாடலுமா யிருப்பான் கண்ணன். இப்படி எல்லோரையும் இன்ப வெள்ளத்திலே மூழ்கடிக்கும் குழந்தை என்னைப் புறம்புல்க வேணுமென்றபடி. மூத்தவை என்றொரு பதமாக்கி விருத்த ஜனங்கள் என்றும், மூத்த அவை என்று பிரித்து தொகுத்தல் விகாரமாகக் கொண்டு விருத்தஜந ஸபை என்றும் உரைப்பர். முதுமணற் குன்றேறி மண்ணோர் விண்ணோர் வணங்கி ஏத்தும்படி அன்று நின்ற கண்ணன் இன்று அப்படியிலே திருவேங்கடமேறி நிற்கும் நம் பிரானென்க. பாடி பாடுகிறவனுமாம். அ.

9. கற்பகக்காவுகருதியகாதலிக்கு
இப்பொழுதீவனென்றிந்திரன்காவினில்
நிற்பனசெய்துநிலாத்திகழ்முற்றத்துள்
உய்த்தவனென்னைப்புறம்புல்குவான் உம்பர்கோனென்னைப் புறம்புல்குவான். (116)

| | | | |
|---|---|---|---|
| கற்பகம் காவு கருதிய | பாரிஜாதமென்ற கற்பக விருட்சத்தைக் கொண்டுபோக விரும்பின | நிற்பன செய்து | நிற்கப் போகின்றனவாகச் செய்து |
| | | நிலா திகழ் | நிலவு விளங்கும் |
| காதலிக்கு | அன்புற்ற ஸத்யபாமைக்கு | முற்றத்துள் | (ஸத்யபாமையின் இல்லத்து) முற்றத்தினுள்ளே |
| இப்பொழுது ஈவன் | இந்த ஸமயம் கொடுப்பேன் (பிறகு நந்தநவனத்திலேயே சேர்ந்து நிற்கும்) | | |
| என்று | என இந்த்ரனுக்குச் சொல்லி அனுக்ரஹித்து | உய்த்தவன் | கற்பகத்தை நட்டு உஜ்ஜீவிப்பித்தவனை இவன் |
| | | | என்னைப் புறம் புல்குவான் ; |
| இந்திரன் காவினில் | (தன் காலத்திற்குப் பிறகு) இந்திரனுடைய பூந்தோட்டத்தில் | உம்பர் கோன் | விண்ணுலகத்திற்கு நிர்வாஹகன் |
| | | | என்னைப் புறம் புல்குவான். |

'சசீ ச ஸத்யபாமாயை பாரிஜாதஸ்ய புஷ்பகம்| ந ததௌ மாநுஷீம் மத்வா ஸ்வயம் புஷ்பைரலங்க்ருதா' (வி. பு. 5. 30. 29) 'என்னுதன் தேவிக்கன்றின்பப்பூ வீயாதாள்' (3. 9. 1.) என்றும் சொன்னபடி இந்திராணியின் குற்றத்திற்காக ஸத்யபாமையின் இஷ்டப்படி கற்பகத்தைக் கருடன்மேல் எடுத்துக்கொண்டு புறப்பட்டபோது இந்திராதிகள் அப்போதே யுத்தத்திற்கு நின்று பரிபவப்பட்டு க்ஷமை கொண்டபிறகு இந்திரனவன்—, 'கடலைக் கடைந்தபோது கிடைத்ததாலும், மற்றும் பல வகைகளாலும் ஸர்வத்திலும் சிறந்ததான இப்பாரிஜாத விருட்சம் தேவரீர் மண்ணுலகினை விட்ட பிறகாவது இவ்விடம் வந்து சேரும்படி அனுக்ரஹிக்க வேணும்' என்று வேண்டிக்கொண்டான். 'ததேத்யுக்த்வா ச தேவேந்த்ரமாஜகாம புவம் ஹரி:' கண்ணபிரானும் அப்படியே ஆகக் கடவதென்றருளினர். அந்தத் தசையை இப்பாசுரம் உணர்த்துகின்றது. இப்பொழுது என்பதிலிருந்து, 'இப்பொழுது கொடுக்கிறேன். சாச்வதமாய் அங்கேயே நின்றுவிடாது. திரும்பவும் நந்தனவனம் சேரும் எனக் குறித்தபடி. இதனையே, 'இந்திரன் காவினில் நிற்பன செய்து' என்று விவரித்தருளினர். நிற்கப்போகிறனவாகச் செய்வதாவது, 'பிறகு அங்கே சேரவேண்டு' மென்று ஸங்கற்பிக்கை. ஆகவே முன்னோர்களும், நிற்பன செய்து என்பதை ஸங்கல்பபரமாக யோஜித்தனர். ஈவன் என்றவரையில் இந்திரனுடன் சொன்ன சொல்லாகும். ஸத்யபாமையுடன் சொன்ன சொல்லுமாகலாம். அப்போது 'இப்பொழுதீவன்' என்றிவ்வளவு மட்டுமே சொல்லின் உருவமாம். 'இந்திரன் காவினில் உள்ள கற்பகக்காவு கருதிய' என்றும், 'முற்றத்துள் நிற்பன செய்து' என்றும் அங்வயம் கொள்கின்றனர்.

கா என்றே சோலைக்கும் பூந்தோட்டத்திற்கும் பெயர். காவினில் என்றவிடத்தில் கா என்றே பகுதியாகும். கற்பகக்காவு என்றவிடத்தில் காவு என்றதுபோல், பெய்தகாவு கண்டீர் (6. 3. 5.) எனத் திருவாய்மொழியிலுமுள்ளது. உ என்பது உருக்கம் முதலியன காட்டும் அவ்யயமென்னலாம். அறிவு, ஈவு என்றாற்போல கா என்னும் வினைக்குமேல் வந்த தொழிற்பெயர் விகுதி யென்னலுமாம். அப்போது ரக்ஷிக்கப்படும் வஸ்து என்றாற்போல் பொருள் தேறும். காவுதல், சுமத்தல், கொண்டு போகுதலுமாம். இது நிற்க. பாரிஜாதமொன்றையே கொண்டுபோயிருக்க நிற்பன என்ற பன்மை எங்ஙனே யென்னில், அப் பெரும் விருட்சத்தோடு கற்பக்கொடியும், 'ஸுக்ஷ்மாணூ-ஆ்ஞா: ஷட்பதா: ஸஹ-ஆக ததுஂஸ்யாஸவலுப்தா:' (ஸ்ரீபா. 10. 60. 40.) என்கிறபடி விருட்சத்தை யாச்ரயித்துள்ள அநேகங்களும் வந்ததால், ஒன்றுவிடாது எல்லாம் மறுபடி நந்தனவனம் வந்து நிற்கும்படி ஸங்கல்பித்ததைத் தோற்றுவிக்கவென்க. உய்த்தவன்: எம்பெருமானது முகசந்திரனின் நிலவும் கடாக்ஷமும் நிறைந்த திரு முற்றத்தின் சேர்க்கையாலே முன்னிருந்ததை விடச் செழிப்புடன் விளங்கினது மாத்திரமின்றி ஜன்ம ஸாபல்யமும் பெற்றது பாரிஜாதம். அன்றி அவ்விருட்சம் இங்கு வந்ததால் அதனிடம் நெருங்கிய பலர் பூர்வ ஜன்ம ஸ்மரண மேற்பட்டு உய்ந்தனர் என்றபடி. உம்பர்கோன். நந்தன வனத்திற்குக் குறையாதபடி மண்ணுலகிலும் பெருமை யளிக்க ஸர்வ சக்தி பெற்றவன்; நந்தநமும் இவன் தோட்டமாகையால் இதனை அங்கே மறுபடி வைக்க இவன் இசைவது பொருந்தும். கூ.

10. ஆய்ச்சியன்றாழிப்பிரான்புறம்புல்கிய
வேய்த்தடந்தோளிசொல்விட்டுசித்தன்மகிழ்ந்து

ஈத்ததமிழிவையீரைந்தும்வல்லவர்
வாய்த்தநன்மக்களைப்பெற்றுமகிழ்வரே. (117)

| | | | |
|---|---|---|---|
| அன்று | கண்ணனின் விபவ தசையிலே | மகிழ்ந்து | (அவளைப் போல்) களித்து |
| ஆழி பிரான் | திருவாழியோடு கூடிய ஸ்வாமி யான கண்ணனாலே | ஈத்த | அளித்த |
| | | தமிழ் | தமிழ்ப் பாஷையிலுள்ள |
| புறம் புல்கிய | பின்பக்கத்திலே அணையப்பட்ட | இவை ஈர் ஐந்தும் | இப் பத்துப் பாசுரங்களிலும் |
| வேய் தட தோளி | மூங்கில் போல் விசாலமான தோள்களையுடைய | வல்லவர் | வல்லமை பொருந்தியவர் |
| ஆய்ச்சி | இடைச்சியான யசோதையி னுடைய | வாய்த்த | (பகவத் விஷயத்திலும்) பாக்யம் பெற்ற |
| சொல் | சொற்களான (அவள் சொன்ன வற்றைச் சொல்லுகின்ற)—, | நல் மக்களை | நல்ல ஸந்தானங்களை |
| | | பெற்று | அடைந்து |
| விட்டுசித்தன் | ஸ்ரீ விஷ்ணுசித்தன் (பெரியாழ்வார்) | மகிழ்வர். | ஆனந்திப்பர். |

இங்கு 'வேய்த்தடந்தோளி யாய்ச்சி ஆழிப்பிரான் புறம் புல்கிய சொல்லை விட்டுசித்தன் ஈத்த இவை' என்றந்வயம் கூறில், புல்கிய சொல்லாவது - புல்கினதைச் சொல்லும் சொல் என வுரைக்க. 'ஈந்த' என வேண்டுவது செய்யுளின்பம் நோக்கி 'ஈத்த' எனத் திரிந்ததென்பர். ஈதல் போல் ஈத்தல் தனி வினை யென்பார்க்கு 'ஈத்த' என்றதும் ஸாசப்தமாம், புறம் புல்கிய வேய்த்தடந்தோளி என்றது அவன் புல்கும் போது இவள் தோள்களில் திருக்கைகளை வைத்தணைத்தது தோன்றுவதற்காக. புல்கி யவள் சொன்ன சொல் என விளக்குவதால் இவள் சொல்வதற்கு முன்னமே அவன் புல்கினது தோற்றும். ஆக, 'புறம்புல்குவான்' என்று முன் சொன்னதெல்லாம் இவள் பிரார்த்தித்தபடி யன்று. இவளுடைய அபேக்ஷைக்கு முன்னமே அவன் உவந்து செய்ததை யனுபவித்துக் களித்துச் சொன்னவாறு. இப்பாசுரத்தில் திருவாய்மொழிப் பிள்ளையைப் பின்பற்றி யுரைத்தாலும், இத்திருமொழி முதற்பாசுரத்தின் முடிவிலே; இது 'ஆழிப்பிரான் புறம் புல்கிய' என்கிற நிகமநத்துக்கு மிகவும் சேரும்' என்று மணவாளமாமுனி யுரைத்ததற்கு இதுவே கருத்தெனக் கொள்க. அங்ஙனன்றிக்கே புறம் புல்குதலை ப்ரார்த்தித்ததே இங்கு இதன் முன்னுள்ள திருமொழிகளில்போல் சொல்லப்படுகிறதென்று கொள்ளில் மேற்கூறிய அந்வயமாம். ம.

வட்டு நடுவே உரை முற்றிற்று.

இப்படி இப்ரபந்தத்தில் பல்லாண்டு தொடங்கி வட்டு நடுவே இறுதியாகப் பத்துத் திருமொழிகள் கொண்ட இப்முதற்பத்திலே பெரியாழ்வார் தமக்கு ஸேவை ஸாதித்த எம்பெருமானுக்குப் (1) பல்லாண்டு பாடி, அவன் திருவவதாரம் தொடங்கி யனுபவிக்க விசைந்து, (2) அவதாரச் சிறப்பு, (3) திருப்பாதகேச மனுபவித்தல், (4) தாலாட்டுதல், (5) அம்புலி யழைத்தல், (6) செங்கீரையாடுதல், (7) சப்பாணி கொட்டல், (8) தளர் நடை நடத்தல், (9) முன்வந்தணைத்தல், (10) புறம் புல்குதல் என்றிவற்றை ப்ரதான மாகக் கொண்டு எம்பெருமானுடைய கல்யாணகுண சேஷ்டிதங்களைப் பெரும்பாலும் யசோதைப் பிராட்டியின் பாவனையிலே யிருந்து அநுபவித்து அருளிச்செய்தார். இதற்கு மேலுள்ள வநுவபங்களை மேலுள்ளவற்றில் அருளிச்செய்வர்.

ப்ரபந்தரக்ஷையில் பெரியாழ்வார் திருமொழி முதற்பத்து முற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

சுபமஸ்து.

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

# இரண்டாம் பத்து

## பெரியாழ்வார் திருமொழி 2. 1. (அப்பூச்சி காட்டுதல்)

# மெச்சூது.

கண்ணபிரான் நன்கு நடந்து ஓடியாடக் கூடிய பருவம் பெறும் வரைக்கு முன்னுள்ள அநுபவங்களை முதற்பத்தில் வெளியிட்டருளி, இனி இரண்டாம் பத்தில் யசோதை அவனுக்கு முலை கொடுக்காது நிறுத்திக் கொண்ட வயது வரைக்குமுள்ள வற்றில் தாம் அனுபவித்த வகைகளை யருளிச் செய்கிறார். இது மூன்றும் பத்தில் 'அஞ்சுவன் அம்மம் தரவே' என்ற முதற் திருமொழியிலிருந்தே விளக்கமாகும். இங்கு முதற் திருமொழியிலே அவன் பூச்சி காட்டி விளையாடுவது அனுபவிக்கப்படுகின்றது. பிள்ளைகள் பூச்சி காட்டி விளையாடுவதென்பது பெரும்பான்மையாய் அதைப் பார்த்துப் பயப்படக் கூடிய சிறு பிள்ளைகளிடத்திலேயே பொருந்தும். ஆக ஆழ்வார் தம்மை அவ்வித இடைப் பெண்களாகப் பாவித்துக் கொண்டு அவ்வனுபவத்தில் ஈடுபடுகிறார். பூச்சி காட்டுவதாவது—கூட விளையாடுவோர் பயப்படும்படித் தன் உருவத்தை விகாரப் படுத்திக் காட்டுவது—முகத்தை நெறித்தல், தலைமயிரைப் பிரித்து மீசை தாடியாகக் கட்டிக் கொள்ளல் போன்றவை யாம்.

1. மெச்சூதுசங்கமிடத்தான்நல்வேயூதி
போய்ச்சூதில்தோற்றபொறையுடைமன்னர்க்காய்
பத்தூர்பெறாதன்றுபாரதங்கைசெய்த
அத்தூதனப்பூச்சிகாட்டுகின்றான் அம்மனேயப்பூச்சிகாட்டுகின்றான். (118)

| | | | |
|---|---|---|---|
| மெச்சு | (எல்லோரும்) மெச்சுகின்ற | மன்னர்க்கு | அரச(ரான பாண்டவ)ர்க்கு |
| ஊது சங்கம் | ஊதும் சங்கத்தை | ஆய் | அனுகூலனாயிருந்து |
| இடத்தான் | இடது திருக்கையிலே யுடைய வனும் | பத்து ஊர் பெறாது | பத்து க்ராமங்களைக் கூடப் பெறாமல் (பெற முடியாததால்) |
| நல் வேய் ஊதி | நல்ல மூங்கிற் குழலை ஊதுகிற வனும், | அன்று | அந்த நாளில் |
| போய் சூதில் | கபடமான சூதாட்டத்திலே | பாரதம் | பரத வம்சத்தாருக்கே அந்யோந்யம் யுத்தத்தை |
| தோற்ற | தோல்வி யுற்றவரும் (எல்லாவற்றையு மிழந்தவரும்) | கை செய்த | அணிவகுத்து ஏற்படுத்தின |
| | | அ தூதன் | அப்படி ஸர்வ சக்தனான தூதனுமான பாலகன் |
| பொறை உடை | (இழந்தவற்றைப் பராக்ரமத்தாலே பெற வல்லமையிருந்தும் பரிபவப்படச் செய்தேயும்) பொறுமை யுடையவருமான | அ பூச்சி காட்டுகின்றான் | அந்தப் பயங்கர உருவைக் காட்டுகின்றான்; |
| | | அம்மனே! | ஓ அம்மா! அப்பூச்சி காட்டுகின்றான். |

மெச்சு. எல்லோரையும் மெச்சுகின்றதும் எல்லோராலும் மெச்சப்படுகிறதுமாம். **ஊது சங்கமிடத்தான் நல்வேயூதி.** சங்க சக்ர தாரியானவன் வேய்ங்குழலூதும் இடையனாய் அவதரித்துத் தூதனுமாய் அப்பூச்சியும் காட்டுகிறான். வேய்ங்குழல் வலக்கையி

லும் சங்க மிடக்கையிலுமாக எல்லோரும் மெச்சும்படி ஒரே ஸமயத்தில் ஊதுபவன் இவன். ஊதி யென்றது வினை யெச்சமாகில் ஊதிப்போய் என இரட்டிக்கும். (இரட்டிக் காமல் வினையெச்சங்களை யோதுவது பெரும்பாலு முண்டாகிலும்) இங்கு ஊது என்றது தின் மேல் கருத்தாப் பொருளில் வந்த 'இ' விகுதி யென்பது பொருந்தும். மெச்ச ஊது = மெச்சூது. தொகுத்தல் விகாரமென்பர். மெச்சு என்றதை, ஊது சங்கம் என்றதோடு சேர்த்து 'அடியோங்கு நூற்றுவர்' (திருவாய். 3. 7. 11.) என்றது போன்ற வினைத்தொகை யென்னலாம். பூச்சி காட்டுதல் என்றுமே அப்பூச்சி காட்டுதல் என்றது உலகிலுள்ள பிள்ளைகள் பூச்சி காட்டுவது போலன்றி, தனக்கு இயற்கையிலுள்ளதும் பார்ப்பவருக்குத் தெரியாததுமான ஈச்வரத் தன்மையைக் காட்டுதல் என விளக்க.

இப் பாசுரத்தில் ஓர் ஐதிஹ்யம் சொல்வர். 'நம்பெருமாள்ஸந்நிதியில் உய்ந்த பிள்ளை என்னுமோர் அரையர் இப் பாட்டைக் கொண்டு அபிநயிக்கும் போது, அவருக்குத் தெளிவிக்க உடையவர்கோஷ்டியிலே எழுந்தருளியிருந்த எம்பார் திருக்கைகளைத் திருத்தோள்களோடு சேர்த்துக்காட்டி, கண்ணபிரான் சங்கசக்கரங்களைத் தரித்துக் காட்டுவது இங்கு அப்பூச்சிகாட்டுதல் எனத் தோற்றுவித்தார். அதனைக் கண்டு எம்பெருமானாரும் உகந்தருளினர்' என்றது. ஆக ஈச்வரத் தன்மையைக் காட்டுதல் இது என்றதாயிற்று. தூதனாயிருந்து துர்யோதந ஸதஸ்ஸிலே விச்வரூபம் காண்பித்ததும் இங்குத் திருவுளத்திற் கொண்டதாகலாம். அன்றி, அப்பூச்சி யென்றது அந்தந்தப் பாட்டில் குறிப்பிட்ட விலக்ஷண ஆகாரம். ஒரு தரம் அவன் பூச்சி காட்டும்போது சங்கம் ஊதுவதும் குழலூதுவதும், பாரதப் கைசெய்ததும் எல்லாம் தோற்றும். அதனை முதற் பாசுரம் சொல்லிற்று. மற்றொரு ஸமயத்தில் அவன் செங்கண் அலைவலையாயிருந்து, பார்த்தன்தேர் ஊர்ந்தது தோற்றுமாறு அங்கங்களை அசைத்துப் பூச்சி காட்டுவான். பிறவுமிங்ஙனம் கொள்க. இப்படி நீர்மையைக் கண்டு அலட்சியம் செய்பவருக்குப் பயம் தோற்ற, நடந்ததும் நடக்கப் போவதும் காட்டித் தன் ஈச்வரத் தன்மையைத் தெரிவித்தருளுவன் என்றவாறு. க.

2. மலைபுரைதோள்மன்னவரும்மாரதரும்மற்றும்
பலர்குலையநூற்றுவரும்பட்டழியப்பார்த்தன்
சிலைவளையத்திண்டேர்மேல்முன்னின்றசெங்கண்
அலைவலைவந்தப்பூச்சிகாட்டுகின்றான் அம்மனே யப்பூச்சிகாட்டுகின்றான். (119)

| | | | |
|---|---|---|---|
| மன்னவரும் | ராஜாக்களா யிருப்பவரும் | வளைய | வளைந்திருப்பதற்காக |
| மாரதரும் | மஹாரதர்களும் | திண் தேர் | (அவனுடைய) திடமான |
| மற்றும் | பிறருமான | மேல் | தேரின் மேலே |
| மலை புரை | மலை போலுள்ள | முன் நின்ற | (சாரதியாய்) முதலில் நின்ற |
| தோள் | தோள்களை யுடைய | | வனும் |
| பலர் | பல சூரர்கள் | செம் கண் | சிவந்த திருக்கண்களை யுடைய |
| குலைய | நேராக அழியும்படியும் | | வனும் |
| நூற்றுவரும் | துர்யோதனாதிகள் நூறுபேரும் | அலைவலை | ஆரவாரிப்பவனுமான |
| பட்டு அழிய | (பீமஸேநன் கையில்) | | கண்ணன் |
| | அகப்பட்டு அழியும்படியும் | வந்து | நெருங்கி வந்து |
| பார்த்தன் | அர்ஜுனன் வில்லான | | அப்பூச்சி காட்டுகின்றான் |
| சிலை | (காண்டிவமான)து | | அம்மனே அப்பூச்சி காட்டுகின்றான். |

அலைவலையாவான் அர்ஜுநன்வெற்றியைப் புகழ்பவன் என வுரைத்தனர். 4. 3. 5-ல் அலைவலைமை அற்பத்தனம் என்றார்கள். (அலவை ஜல்பாகை) தோன்றிற்று சொல்லுமவள். (4. 6. 3.) எனத் திருவாறுயிரப்படி. 'அலைவு' 'அலவு' என அலைதலுக்குப் பெயர். அலை=கடல். அலையும் கடல், எப்போதும் இரைந்துவரும் சமுத்திரமெனப் பொருளாய், வரம்பு கடந்து பேசுகிறவனென்னும் பொருளிலே ஆகு பெயராகக் கூடும். அலைவலை. பஹு ஜல்பாகன், வ்யாஜம் பார்த்து வேத வேதாந்தார்த்தங்களை யெல்லாம் (கீதை) உபதேசித்தவன் என்னலுமாம். கண்ணபிரான் தேரில் முன் நிற்காமலிருந்தால் பார்த்தன் வில் வளையாது. வளைந்தாலும் பகைவர் எல்லோரும் அழியும்படி வளையாது. பிறரால் அழிந்த சிலர் உண்டானாலும், பார்த்தனாலேயே பலரும் அழிந்தனர். எதிரிகளின் அம்புகள் தன்னைத் தாண்டிப் பார்த்தனிடம் போய்ப் பயன் படாதபடி தானே முன் நின்று பூபார ஸம்ஹார ஸங்கல்பத்தாலே மிகச் சிவந்துள்ள திருக்கண்ணாலே பார்வை யிட்டு அலையும் கடல் போல் மோதி அர்ஜுநன் தர்ம வீர்யங்களையும் எதிரிகளின் அநீதி அசக்திகளையும் பேசி வந்ததால் அர்ஜுநன் நிமித்த மாத்திரமாயிருந்து விஜயம் பெற்றான். உ.

3. காயுநீர்புக்குக்கடம்பேறிகாளியன்
தீயபணத்திற்சிலம்பார்க்கப்பாய்ந்தாடி
வேயின்குழலூதிவித்தகனாய்நின்ற
ஆயன்வந்தப்பூச்சிகாட்டுகின்றான் அம்மனே யப்பூச்சி காட்டுகின்றான். (120).

| | | | |
|---|---|---|---|
| **கடம்பு ஏறி** | (காளிய மடுவின் கரையிலிருந்த) கடம்ப மரத்தின் மேல் ஏறி | **பாய்ந்து** | துள்ளிக் குதித்து |
| **காயும் நீர்** | (காளிய விஷத் தீயினால்) காய்ச்சல் பெற்ற மடு நீரிலே | **சிலம்பு ஆர்க்க ஆடி** | திருக்காற் கிண்கிணிகள் சப்திக்கும்படி நர்த்தனம் செய்து |
| **புக்கு** | (முழு நீரும் கரையில் மோதும்படி) குதித்துப் புகுந்து | **வேயின் குழல்** | மூங்கிற் குழலை |
| **காளியன்** | (உள்ளிருந்து கொத்தளித்துக் கிளம்பிய) காளிய நாகத்தின் | **ஊதி** | (அதற்கொத்தவாறு) வாசித்து |
| **தீய பணத்தில்** | தீமைக்கிடமான படத்திலே | **வித்தகனாய் நின்ற** | ஜ்ஞான சக்திகளாலே ஆச்சர்யமாய் விளங்கின |
| | | **ஆயன்** | இடையனான இவன் |
| | | **வந்து** | (எங்களிடம்) வந்து |
| | | | **அப்பூச்சி—காட்டுகின்றான்.** |

விஷ்ணுபுராணத்திலும், பாகவதத்திலும் முதலிற் கடம்பேறி, பிறகு அதினின்று மடுநடுவிற் குதித்துக் காளியனைக் கிளப்பி அதன் பணங்களிற் பாய்ந்தாடினதாகக் கூறப்பட்டுள்ளதைப் பின்பற்றி, 'கடம்பேறி காயுநீர் புக்கு' என அந்வயம் கூறினம். ஆடி, ஊதி, சிலம்பார்க்க என்று ந்ருத்த கீத வாத்திய ரூபமான நாட்டியம் அருளிச் செய்ததாகக் கொள்க. ௩.

4. இருட்டிற்பிறந்துபோயேழைவல்லாயர்
மருட்டைத்தவிர்ப்பித்துவன்கஞ்சன்மாள,
புரட்டியந்நாளெங்கள்பூம்பட்டுக்கொண்ட
அரட்டன்வந்தப்பூச்சிகாட்டுகின்றான் அம்மனே யப்பூச்சி காட்டுகின்றான். (121)

| | | | |
|---|---|---|---|
| வல் கஞ்சன் | க்ரூரனான கம்ஸன் | புரட்டி | பொய்யனும் |
| மாள | மாண்டு போம்படி | அ நாள் | அந்த மார்கழி நீராட்ட நாளிலே |
| இருட்டில் | இருளிலே | எங்கள் | (தன்னைப் பதியாகப் பெற நோம்பு நூற்ற கோப கன்னிகைகளான) எங்களுடைய |
| பிறந்து | (மதுரையில்) அவதரித்து | பூ | அழகு பொருந்திய |
| போய் | கோகுலம் வந்து சேர்ந்து, | பட்டு | பட்டாடைகளை |
| ஏழை | அறிவில்லாதவரும் | கொண்ட | கவர்ந்து கொண்ட |
| வல் | தங்கள் மனதிற் கொண்டதில் உறுதியுள்ளவருமான | அரட்டன் | மிடுக்கையுடையனுமான இவன் வந்து அப்பூச்சி—காட்டுகின்றான். |
| ஆயர் | இடையர்களுடைய | | |
| மருட்டை | ஏய்ப்பை | | |
| தவிர்ப்பித்து | போக்கி | | |

இப் பாசுரத்திற் பல விருத்தாந்தங்கள் பொதிந்து கிடக்கின்றன. மருட்டாவது ஏய்ப்பு; அவிவேகச் செயலுமாம். இவன் எம்பெருமானெனத் தெரிந்து கொள்ளாமலும், அவிவேகிகளுமானதாலே இவனுக்கே எல்லாம் ஸமர்ப்பிக்காமலும், தங்களுக்கே எல்லாமென்று கொண்டு பால் வெண்ணெய் முதலியவற்றைக் கூட மறைத்தும், இந்திராதிகளைப் பூஜிக்க முயன்றும், இவனிடம் காதல் கொண்ட கன்னிகைகளையு மடக்கியும் பல பிழைகளைச் செய்தனர் இடையர். அவற்றை யெல்லாம் பல செய்கைகளாலே இவன் தவிர்ப்பித்தான். புரட்டி. புரட்டன், பொய்யன். தானே ஜாரசோர க்ருத்யங்களைச் செய்து, இல்லை யென்பவன். அரட்டன் அரட்டுடையவன். அரட்டாவது தீம்பு. மிடுக்குமா மென்பர். தான் கொண்ட பூம்பட்டுகளைத் தனக்கு அஞ்ஜலி பண்ணுலொழியக் கொடுக்க விசையாமற் பேசினவனென்றபடி. இங்கு மருட்டைத் தவிர்ப்பித்து என்பதற்கு, கண்ணனிடத்திலுள்ள அபிமானத்தாலே, அவனை நலிய நினைத்த கப்ஸாதிகளைத் தாங்களே கொல்வதாக இடையர் மருள்வார்த்தை சொன்னதாகவும், இப்படி இவர்கள் தன்னை விட்டுக் கொடுக்காமல் சொன்ன வார்த்தைகளைத் தவிர்ப்பித்துத் தானே விரோதி நிரஸநம் செய்ததாகவும் சொல்லிப் பொருள் உரைப்பர். வன் கஞ்சன் மாளப் புரட்டி என முன்னின்ற வடியோடு சேர்த்து, மாளும்படி கஞ்சனைப் புரட்டினவனென்று வ்யாக்யானிப்பர். ௪.

5. சேப்பூண்ட சாடுசிதறி—திருடி நெய்
காப்பூண்டுநந்தன்மனைவிகடைதாம்பால்
சோப்பூண்டுதுள்ளித்துடிக்கத்துடிக்கவன்று
ஆப்பூண்டானப்பூச்சிகாட்டுகின்றான் அம்மனே யப்பூச்சி காட்டுகின்றான். (122)

| | | | |
|---|---|---|---|
| சே பூண்ட | வேண்டும் போது எருதுகள் கட்டும்படியான (பாரமாயும், கட்டுக்கோப்புகுலையாததுமான) | நந்தன் | (கொள்ளை கொலை யிராதபடி கோகுலத்தை காக்கும்) நம்முடைய |
| சாடு | (தன்னைக் காக்க வைத்த) சகடத்தை | மனைவி | பத்னியான யசோதையின் |
| சிதறி | (அசுராவேசத்தாலே மேலேவிழ வந்த போது) சிதறடித்து | கடை தாம்பால் | தயிர் கடையும் கயிற்றினால் |
| நெய் திருடி | சைசவம் கழிந்த தசையிலே கோகுலத்தில் எங்கும்) நெய்யைக் கொள்ளை கொண்டு | துள்ளி துடிக்க துடிக்க சோப்பூண்டு | வேதனை ஸஹிக்க மாட்டாமல் எழும்பிக் குதித்து அங்கங்களை அசைத்துக் கொள்ளும்படி அடி பட்டு |
| காப்பூண்டு | காவலில் அகப்பட்டு | அன்று | இரு மரங்களை முறித்த நாளிலே |
| | | ஆப்பூண்டான் | கட்டுண்டவனான இவன் அப்பூச்சி—காட்டுகின்றான். |

சேப் பூண்ட வண்டியின் கீழே கண்ணனது தொட்டில் தொங்கிக்கொண்டிருந்ததாக "சகடஸ்ய து அத: ஸுப்த: ...... விஷ்ணு பு. " என்ற விஷ்ணு புராண வாக்கியத்தினின்று விளங்கும். ஆக அந்த வண்டி பெரிய எருதுகள் கட்டி இழுக்கும்படி திடமாய்க் கட்டுக்கோப்பு குலையாதிருந்ததைத் தெளிவிக்க இங்ஙனம் அருளிச் செய்ததல்லது, எருதுகள் கட்டின வண்டியே சாமான்களோடு தொட்டில் ஸமீபம் ஒரு சமயம் வந்து நிற்க அதில் சகடாசுரன் புகுந்துகொண்டு பக்கத்திலுள்ள தொட்டிலின் பேரில் தாழ்ந்தானென ஆழ்வார் திருவுள்ளமல்ல. இப்படி குழந்தைப் பர்வத்திலிருந்து சகடாஸுராதிவதம் செய்துச் சிறப்புடன் விளங்கினவனுகையாலே இவனிடம் உள்ள பரிவினாலும் கௌரவத்தாலும், பிறர் திருடினதாகச் சொன்னாலும் சடக்கென அதை இசையாமல் அவர்கள் காவல் இருந்து கையும் பிடியுமாகப் பிடித்துக் காண்பிக்கும் வரை யசோதை பொறுத்திருந்தனள் என்பது தோற்ற இதனையும் இங்கே சேர்த்தது. காப்பூண்டு. கா—காவல். சேப்பூண்ட என்றவிடத்திற் போலே பகரம் இரட்டித்திருக்கிறது. காப்பு எனவும் பிரிக்கலாம். நெய்க்காப்பூண்டு எனவே பாடமாகில் 'நெய்க்கு' 'ஆப்பூண்டு' எனப் பிரிக்க. நெய்க்குத் திருடி = நெய்க்கு ஆசைப்பட்டுத் திருடி என்பர். ஆப்பூண்டு என்றதை நான்காமடியிற் போல் 'ஆப்பு உண்டு' எனவே பிரிக்க. ஆப்பு—யாப்பு,கட்டு—ஆப்பூண்டு—பிடிபட்டு என்றபடி. நீட்டல் விகாரம். மேலடிகளிலும் நீட்டல் விகாரமே. சோப்பு—அடி. நந்தன் மனைவி: இடைச்சிகள் கைபிடித்துக் கொடுப்பது மாத்திரம். ஆயர்கோவான நந்தனின் மனைவியானபடியாலே இவளே சிக்ஷித்தனள். அப்போது தாய் என்ற பாவனையே இராமல் கோபராஜன்மனைவி என்ற பாவமே யுள்ளவளாயிருந்தனள் என்றபடி. ரு.

6. செப்பிளமென்முலைத்தேவகிநங்கைக்குச்
சோப்பட த்தோன்றித்தோறுப்பாடியோம்வைத்த
துப்பமும்பாலுந்தயிரும்விழுங்கிய
அப்பன்வந்தப்பூச்சிகாட்டுகின்றான் அம்மனே யப்பூச்சி காட்டுகின்றான். (123)

| | | | |
|---|---|---|---|
| செப்பு | கலசமான (கலசம் போன்ற), | தோறுபாடி யோம் | கோகுலத்திலுள்ள நாம் |
| இள மேல் | இளமையும் மென்மையுமுள்ள | வைத்த | எடுக்க முடியாதபடி ரக்ஷித்து வைத்த |
| முலை | ஸ்தனங்களையுடைய | துப்பமும் | நெய்யையும் |
| தேவகி நங்கைக்கு | குண பூர்ணையான தேவகியாருக்கு | பாலும் தயிரும் | பாலையும் தயிரையும் |
| சோப்பட | செவ்வனே (ஈச்வரனாகவும் புத்ரனாகவும்) | விழுங்கிய | உண்டவனான |
| தோன்றி | ஆவிர்ப்பவித்து | அப்பன் | ஸ்வாமியான இவன் |
| | | | வந்து அப்பூச்சி—காட்டுகின்றான். |

ஸர்வேச்வரனே நமக்குப் புத்திரனானெனத் தெரியும்படி முதலில் சங்க சக்ராதிகளோடு சதுர்புஜனாகவே நன்றாகத் தோன்றினான், பிறகு சிறு குழந்தையாகவும் தோன்றினான். ஈச்வரனாய்த் தோன்றிய போது முலைப் பாலுண்பது கூடாதாகிலும் குழந்தையாகவானபிறகு அதனை உண்டு அங்கே வளருவது அவனுக்கு உரியதாம். ஆகப் பால் நிறைந்துச் செப்பு போன்றனவும், இளமை யுள்ளனவும், இவனுடைய திருப் பவளம் படுவதற்குத் தக்கபடி மென்மை யுடையனவுமான, ராஜஸ்திரீயான தேவகியின், ஸ்தனங்களை உண்ண வேண்டியிருக்க, அதை விட்டு அப்படி மென்மையிராத கலசங்

களிலே கேவலமான ஆய்ச்சிகள் வைத்திருந்தவையும், ஜரிக்க மாட்டாதவையுமான நெய் பால் தயிர்களை அக் கலசங்களைத் திருப்பவளத்தில் எடுத்து வைத்து விழுங்குகிறான் இவன். குழந்தையாய்த் தன்னைக் காண்பித்த பிறகு அவள் பசியோடு அனுப்ப இஷ்டப்படாமல் ஒரு தரமாவது முலையூட்டி யிருக்க வேண்டும். (ஆகவே 'வீதசேஷம் மஹாஹரதா என்றனர் ஸ்ரீ சுகர். 'வஸைஷெவவயஷுநநயழ' என ஸ்ரீ தேசிக ஸூக்தி.) இப்படி அதனை உண்டு அனுபவித்த பிறகு அதை விட்டு அவன் கோகுலம் சேர்ந்தது கல்யாணகுண பூர்ணையான தேவகி செய்வித்த மஹோபகாரம். நாமே அவனுக்கு நிவேதநம் செய்ய வேண்டியிருக்க, நாம் அவன் எடுக்காதபடி சேமித்து வைத்தாலும் எடுத்துண்கிறான். இது அப்பனாகிய அவன் செய்யும் அனுக்ரஹமென்றவாறு.

தோறு (கோ) பசு. தோறுப்பாடி கோகுலம். சோப்பட. செவ்வைபட என்பது சொப்பட என விகாரப்பட்டிருக்கலாம். துப்பம். துப்பகமென்று நெய்க்குப் பெயராம். ௬.

7. தத்துக்கொண்டாள்கொலோதானேபெற்றாள்கொலோ
சித்தமனையாளசோதைஇளஞ்சிங்கம்
கோத்தார்கருங்குழற்கோபாலகோளரி
அத்தன்வந்தப்பூச்சிகாட்டுகின்றான் அம்மனே யப்பூச்சி காட்டுகின்றான். (124)

| | | | |
|---|---|---|---|
| தத்து கொண்டாள் கொல் ஒ | யாரேனும் தத்தாகக் கொடுத்த பிள்ளையை ஸ்வீகாரம் செய்து கொண்டவளாகவும் | கொத்து | பூங்கொத்துகளால் |
| தானே பெற்றாள் கொல் ஒ | தானே தன் வயிற்றிலிருந்து பெற்றவளாகவும் சந்தேஹிக்கப் படுகிறவளும் | ஆர் | நிறைந்த |
| சித்தம் அனையாள் | கண்ணன் மனதுக்கு ஒத்தே யிருப்பவளுமான | கரு குழல் | கரிய கூந்தல்களை யுடையவளையும், |
| அசோதை | யசோதைப் பிராட்டிக்கு | கோபாலர் | இடையர்க்கு |
| இளஞ் சிங்கம் | பால ஸிம்ஹமாயும், | கோள் அரி | வலிமை பொருந்திய பெருஞ் சிங்கமாயுமுள்ள |
| | | அத்தன் | கடவுள் |
| | | | வந்து அப்பூச்சி— காட்டுகின்றான். |

உலகினில் ஏதேனுமொரு பிள்ளையை வேண்டுமென்று தத்தாகக் கொண்டவள் பிள்ளைமனம் கோணுதபடி நடந்துகொள்வதுண்டு. வயிற்றிலே பிறந்த பிள்ளையாகில் அதை விட பதின்மடங்கு அபிமானம் இருக்கும். கண்ணனுக்கும் யசோதைக்கும் அவ்வித ஸம்பந்தம் ஒன்றும் கிடையாது. ஆகிலும் அவ்வண்ணம் அபிமானித்து அவன் மனம் போனபடிக்கெல்லாம் ஒத்து நடந்து வருகின்றாள். அவன் அவளுக்கு அபிமானத்தாலே சிங்கக் குட்டிபோல் தோன்றினாலும் இடையர்களுக்குப் பெருஞ் சிங்கமாகவே இராநின்றான். அவன் கருங்குழலுக்கேற்ப அலங்காரம் அவளும் செய்கிறாள்; கோபாலரும் தங்கள் ஸ்வாமியானபடியாலே பலவகைப் புஷ்பங்களால் அலங்காரம் செய்து ஸேவிக்கின்றனர். இப்படி யுள்ளவனே அப்பூச்சி காட்டுகிறா னென்றபடி. கொல் என்பது ஐயத்தைக் கூறும் இடைச்சொல். கொண்டாள், பெற்றாள் என விவை வினை முற்றல்ல. பெயரெச்ச வினையாய் யசோதைக்கு அடைமொழிகளாம். ஆக முதலடி தனி வாக்யமன்று. கோபால கோளரி என்றதற்குத் தாய்க்கு அடங்காதவன் ஊருக்கு அடங்கானெனக் கருத்துரைப்பர். இவன் 'கோளரியின் உருவங் கொண்டு' (1. 6. 2.) என வருளிச் செய்தபடி யின்றி, நரஸிம்மாவதார விலக்ஷணமாய் கோபால

ஞன் கோளரி யென்னலுமாம். இப்படி கோளரியாயிருக்கு மிவன் அவளிடம் (இளஞ் சிங்கமாக) அடங்கியிருப்பதாகத் தோன்றுகிறதும் அவள் இவன் இஷ்டப்படியே இருந்து விடுவதாலென்க. எ.

8. கோங்கைவன்கூனிசோற்கோண்டுதுவலயத்
துங்கக்கரியும்பரியுமிராச்சியமும்
எங்கும்பரதற்கருளிவன்கானடை
அங்கண்ணனைப்பூச்சிகாட்டுகின்றான் அம்மனே யப்பூச்சி காட்டுகின்றான். (125)

| | | | |
|---|---|---|---|
| வல் | கொடிய— | கரியும் | யானையையும் |
| கோங்கை | (முன் பக்கம்) ஸ்தநங்களோடு கூடிய | பரியும் | குதிரையையும் |
| கூனி | (முதுகில்) கூனுமுள்ள மந்தரை (கற்பித்த) | இராச்சியமும் | ராஜ்யத்தையும் |
| சோல் | பரத ராஜ்யமும் ராமவநவாஸமுமே வரன்களென்கிற சொல்லை | எங்கும் | எல்லா விடத்திலும் |
| கோண்டு | (கைகேயி சொன்ன போது) ஸ்வீகரித்து | பரதற்கு | பரதனுக்கே |
| துவலயம் | பூமண்டலத்திலே | அருளி | அநுக்ரஹ புத்தியாலே அளித்து |
| துங்கம் | உயர்ச்சி பெற்றுள்ள | வல் கான் அடை | கொடிய காட்டை அடைந்தவனும் (அப்போதும்) |
| | | அம் கண்ணன் | அழகிய கண்களையுமுடைய ஸ்ரீராமபிரானை இவன் |
| | | | அப்பூச்சி—காட்டுகின்றான். |

மந்தரையின் மருட்டலுக்குட்பட்டு மயக்குற்ற கைகேயி மந்தரையின் அங்கங்களை மார்பு முதலாக மிக்க ஆதரவுடன் வர்ணித்தனள். அபிமானம் விஞ்சின போது அழகும் தோற்றும் போலும். முதுகு பக்கம் கூன் வளர்ந்துள்ளதற்காக முன் பக்கத்தில் மார்பில் யாதொரு குறையுமில்லை. அதுவும் தோட்களிலிருந்து பரந்து வளர்ந்திருந்தது. அது எவ்வளவு வளர்ந்ததோ அவ்வளவு உள்ளடக்கமாய்க் குறுகி நின்றது வயிறுதான். இப்படிப்பட்ட மார்பின் மேல் முலைகளும் வலிமை பொருந்தி விளங்கின. இங்ஙனம் முன்னும் பின்னுமாயுள்ள கூடுகளிலே எவ்வளவோ மாயா வித்தியைகளை மந்தரை வைத்துக் காக்கிறாளென கைகேயி வியப்புண்டாள். தண்டகாரண்யத்திலே தசரதரோடு சென்றுச் சம்பராசுரன் போர் புரிந்தபோது அவனிடமிருந்த மாயைகளையெல்லாம் நேரில் கண்ட கைகேயிக்கு அவை இவளிடமுள்ளவற்றில் ஆயிரத்திலொன்றாக மாட்டா வெனத் தோன்றிற்று. 'உரஸ்தேஹி நிவிஷ்டம் தெ யாவத் ஸ்கந்தாத் ஸமுந்நதம்............ஸுவீநள அ வயொயரள :...........தவெஷம் ஸுமுந்யதீ வடும் ரயவொணஉவாஉஉயதழ। மதய : க்ஷத்ர வித்யாச்ச மாயாச்ச அத்ர வஸந்தி தே.' என்றாள். இப்படியுள்ள இவள்கொடுமை தோற்ற கோங்கைவன் கூனி என்றது. அன்றி, 'காஉாஷ: வுரதெுபிகாகுஅதழகாஙிந்ஹவஷ: வஞா:,' 'வாஂடூஹிகுஅவஹடஷி கஙிநா: வஸூஷி தொயூடும் வஞா:' என்கிறபடி, பாண்டிய தேசத்தில் அவதரித்த ஆழ்வாருக்குக் கூனியின் சொல்லும் கூனியுமெல்லாம் கொங்கைபோற் கொடியனவாகவே தோற்றின போலும். கோங்கைவன் கூனி. கொங்கை போன்ற (முதுகிலே முலை புறப்பட்டாற் போலுள்ள) கூனை யுடையவள் எனவு முரைப்பர்.

கூனி சோல். தசரதற்கு உண்மையில் இது சம்மதமன்று. கைகேயிக்கும் முன் போல பிறகு மனம் தெளிந்து விட்டதால் இது அஸம்மதமாகவே ஆய்விட்டது. ஆகக்

கூனிக்காகவே இராமன் எல்லாம் நடத்தினதாகவேண்டுமென்றதாம். கோண்டு : இது வ்யாஜம். கானடைந்தது அவதார கார்யத்தைப் பூர்த்தி செய்வதற்காக, கரியும் பரியும். அவ்வரங்களின் விவரம் அறிவதற்குக் கைகேயியினிடம் சென்ற போது இராமன் ஏறினது பெருங்கரி. அறிந்த பிறகு வேகமாய்க் கங்கை சேர்வித்தன பரிகள். அவற்றையும் விட்டார். தசரதர், ஸைன்யமாவது கொஞ்சமனுப்ப வேண்டுமென விசைந்ததையும் வேண்டாமென்றார். பரதன் சித்ரகூட மெழுந்தருளின போது தூரத்தில் சேனையைக் கண்டு இராமன் வர்ணித்தது தசரதரின் குதிரைகளையும் யானையையும். "ஏதௌ தௌ ஸம்ப்ரகாசேதே கோத்ரவந்தௌ மநோரமௌ. வாயு வேகஸமௌ வீர ஜவநௌ துரகோத்தமௌ ஸ ஏஷ ஸுமஹாகாய: கம்பதே வாஹநீமுகே நாம: சத்ருஞ் ஜயோ நாம வ்ருத்தஸ் தாதஸ்ய தீமத:". எங்கும். அயோத்தியில் அருளினது மாத்திரமன்றி, சித்திர கூடத்தில் பரதனே அன்னையுடன் அநேகம் தரம் ப்ரார்த்தித்த போதும் அவனுக்கே அருளினார். எங்குமுள்ள கரியும் பரியும் என்று மந்வயிப்பர். அயோத்யா ராஜ்யம் மட்டுமின்றி கிஷ்கிந்தா ராஜ்யம், லங்கா ராஜ்யமெல்லாங்கூட, தாம் அபிஷேகம் செய்து கொள்ளும் வரையில், பரதனுடையவை என்றே இராமனின் கருத்து எனக் கூறலாம். ஆகவே வாலியோடு வாதிக்குமிடத்திலே 'இக்ஷ்வாகூணாமியம் பூமி ஸஸைல வநகாநநா' என்றும், 'ஸ தாஜ்ஞாம் வயமஸ்ய ஸூர்யத:' என்றும் அருளினார். ஆகில், 'ஸ்வம் ராஜா பரத பவ ஸ்வயம் நராணாம் வந்யாநாமஹமபி ராஜராண்ம்ருகா ணாம்' எனத் தனக்கும் பரதனுக்கும் பங்கு பிரித்துச் சொன்னது எங்ஙனமெனில்—இதுவும் பரதனுக்கு எங்கும் ராஜ்யமிருப்பதைச் சொல்லுகிறதென்க. இங்கே ஸ்வயம் என்றும் ராஜராட் என்றும் பதங்கள் உள்ளன. ஆக பரதா! நீ மக்களுக்கு நேராகவே அரசனாவாய். காட்டிலுள்ள மிருகங்களுக்கு நான் ஸ்வயம் ராஜனாயுள்ள உன்னை மேல் அரசனாக உடையவனாய்க் கொண்டு ராஜாவாகிறேனென்றதால், இவற்றிற்கும் பரதனே முக்கிய வாசன் எனச் சொன்னபடி. ராஜராட் என்றது பஹுவ்ரீஹிஸமாஸமாம். அருளி. பரதனுக்கு இஷ்டமிராமலிருக்க அவனுக்கு அளித்தால் இது அருளினதாகு மோவெனவேண்டா. பரதன் ஒருபடியும் ராச்சியத்தை யிசையாவிட்டால் தசரதரின் வாக்கு அஸத்யமாய் பரதனுக்கு அதர்மம் ஏற்படும். தசரதருடைய நிக்ரஹமும் பரதனைப் பீடிக்கும். ஆகவே ஸ்ரீ பாதுகைகளை வ்யாஜமாகக் கொண்டாவது பரதன் இராச்சியம்பெற வருளினது.

கானடை அங்கண்ணன். சோகமேனும் பயமேனும் விகாரமேதேனு மின்றி வனத்தில் நுழைந்தது மட்டுமின்றி அங்கே இராச்சியத்தைப் பெறுதற்கு மேற்பட்ட முகமலர்ச்சியுடனு மிருந்ததை அருளினபடி. "ஸ்யிகம் வநவாஸாத்", "நாயெரயஸ்யாயெ ந ராஜ்யாய ஸப்ருஹயே" என்றல்லவோ இவர் தம் திருவுள்ளத்தைச் சித்திரகூடத்திலே ஸீதையுடன் ஏகாந்தத்திற் சொன்னது.

கண்ணனைக் கரியை விட்ட கானடை அங்கண்ணனாக அனுபவித்த போது களிறு கண்ணாவெனக் கதறினது நினைவுற அதனில் ஈடுபட்டு அருளிச் செய்கிறார்.

9. பதகமுதலைவாய்ப்பட்டகளிறு
கதறிக்கைகூப்பியென்கண்ணாகண்ணாவென்ன
உதவப்புள்ளூர்ந்தங்குறுதுயர்தீர்த்த
அதகன்வந்தப்பூச்சிகாட்டுகின்றான் அம்மனே யப்பூச்சி காட்டுகின்றான். (126)

| | |
|---|---|
| பதகம் | (பாதகம்) கொடும் பாவியான |
| முதலை | (ஒரு) முதலையின் |
| வாய் பட்டு | வாயில் அகப்பட்டு நின்ற |
| களிறு | ஸ்ரீ கஜேந்த்ர ஆழ்வான் |
| கதறி | (பறித்த பூ வீணாயிற்றே எனக்) கூச்சலிட்டு |
| கை கூப்பி | துதிக்கையைத் தூக்கி வளைத்துக் கொண்டு |
| என் கண்ணா கண்ணா | எனது கண்ணா! கண்ணா! |
| என்ன | என்று கூவினபோது |
| உதவ | (அப் பூவைப் பெற்று அதற்கு) இஷ்ட பூர்த்தி செய்வதற்காக |
| அங்கு | அந்த இடத்திற்கு |
| புள் | பக்ஷி ராஜனை |
| ஊர்ந்து | நடத்தி வந்து |
| உறு துயர் | மிகுந்த க்லேசத்தை (ஸம்ஸார பந்தத்தை)யும் |
| தீர்த்த | போக்கின |
| அதகன் | அடியார் துயரத்தை ஸஹியாத பரமௌஷதமான ஸமர்த்த காருணிகன் |

வந்து அப்பூச்சி—காட்டுகின்றான்.

இந்த்ரத்யும்நன் என்னும் அரசன் பக்த சிகாமணியாய் எம்பெருமானின் ஆராதனத்தில் ஈடுபட்டு, தன்னிடம் வந்த அகத்திய முனிவரை, அவர் வந்தமை யறியாமே உபசரிக்காமலிருந்துவிட, முனிவர் தம்மை அநாதரம் செய்ததாக நினைத்து முனிந்து, அவனை மதித்த யானையாகப் பிறக்கும்படி சபித்திட்டார். அவனும் தனக்குள்ள பக்தி குன்றாதபடி ஸ்ரீ கஜேந்திர ஆழ்வானாகப் பிறந்து நாள்தோறும் நல்ல கமலங்களைக் கொண்டு எம்பெருமானை ஆராதித்து வந்தான். ஒரு நாள் ஒரு பொய்கையிலே பூவைப் பறித்துக் கொண்டு புறப்படும் தருணத்தில் அங்கொரு முதலையால் வலிவாகக் கௌவப்பட்டு மீள்வதற்கு முயன்றான். முன்பொரு காலத்திலே ஆங்கு நீராடி தபஸ்ஸிலே நின்ற தேவல முனிவரை முதலையுருவெடுத்துக் காலைக் கௌவின ஹூஹூ கந்தர்வன் அம் முனிவரால் சபிக்கப்பட்டு அவ்வித முதலையானபடியாலே, அம் முதலை தனக்கிது சாபம் தீர ஸமயமெனத் தெளிந்து யானையை விடாமலிருக்க, அது எம்பெருமானைக் கதறிக் கூப்பிட்டது. எம்பெருமானும் கனவேகமாய்த் தனது பரத்வம் தோன்றும்படி கருடன் மேலேறிக்கொண்டு அதனையும் வேகமாக இழுத்துக் கொண்டு அரை க்ஷணத்தில் அவ்விடம் எழுந்தருளி முதலையைத் திருவாழியால் துண்டித்து, கஜேந்திரனின் துயரம் தீரும்படி பறித்த பூவைப் பெற்றுப் பிறகு அவ்வாழ்வானுக்கு அவன் கோலின இடையறாவடிமைக்கனுகூலமாம்படி மோக்ஷமுமளித்தருளினானென்றது வரலாறு.

பதகம்: முதலைகளெல்லாவற்றிற்குமே பட்டவரைப் பாதிக்கும் ஸ்வபாவமுண்டு. இம் முதலைக்குத் தேவலர் சபிக்கும்படிப் பாதகியாயிருந்தமை விசேஷமாம். ஆகவே அது இக் களிற்றை விடாமற் பிடித்திருந்தது. கதறி. பறித்த பூ வீணாகிறதே என்று கதறினதல்லது உயிர் தப்பக் கதறினதன்று. கண்ணா கண்ணா வென்று இரு தரம் கூப்பிட்டது அதனுக்கிருந்த துயரத்தின் மிகுதியாலே. ஒரு தரம் கூப்பிட்டதே அவன் அதை ரக்ஷிக்க அமையும். என் கண்ணா = எனக்கு ஆராத்யனாயுள்ள என் நாதனே! கண்ணா = கண்ணனெனப் பெயர் பெற்றவனே! யசோதாநந்தநனுக்கே யன்றி எம்பெருமானுக்குப் பொதுவாகவே கண்ணனெனப் பெயர். கண்ணழகு பெற்றவன் புண்டரீகாக்ஷனே யாவான். எல்லோரையும் கடாக்ஷிப்பவனே! என்றபடி. எனக்கு மாத்திரமல்ல, இம் முதலைக்கும் உன் கடாக்ஷம் வேணுமென்றறிவிக்க மறுபடி 'கண்ணா' என்றதென்னனுமாம். அவனுடைய சக்ராயுதம் பட்டல்லவோ அதன் சாபம் தீர்ந்தது.

'மூலமே' என்றழைத்ததாகச் சில புராணங்களிற் சொல்வதுண்டு. அப் பெயராலும் ஸ்ரீமந்நாராயணனையே ஸ்ரீ கஜேந்திராழ்வான் அழைத்ததாக நமக்குத் தெளிவிக்க ஆழ்வார்கள் இப்படி விவரித்துச் சொன்னதாம். மூலமே என்றழைத்தாலும், கண்ணனே, நாராயணனே என வழைத்ததே யாம் எனத் தெளிவித்தபடி. ஆக 'ஸ்ரீமந் நாராயணனை யழைக்க' என்றிவ்வளவே கருத்திலுள்ளதால், 'அந்தப் பதம் யாது, அன்றியும் ஸம்ஸ்கிருதமா, வேறு பாஷையா' இத்யாதி சங்கைக்கு இடமில்லை.

அதகன். இது ஹதக என்னும் வடமொழி யென்பர். அப்பதத்திற்குக் 'கெட்டுப் போனவன்' என்னும் பொருளே சரியானது. ஹதம் பண்ணுகிறவன் எனப் பொருள் சொல்வதற்கு ப்ரயாஸப்பட வேண்டும். ஆக ஔஷதத்தின் பெயரான அதகம் என்ற தமிழ்ச் சொல்லே புருஷோத்தமனை ஔஷதமாகச் சொல்லும் போது அதகன் என வாயிற்று எனலாம். அன்றி, தாமஸம்—தாமதம், அஸப்யம்—அதப்யம் என ஸகாரம் தகரமாக மாறினவாறு அஸஹன் என்பது அதகன் என வாயிருக்கலாம். அப்போது ஆச்ரிதர் துக்கத்தை ஸஹியாதவன் என எம்பெருமானின் காருண்யம் கூறப்பட்டதாம்.

௯.

10. வல்லாளிலங்கைமலங்கச்சரந்துரந்த
வில்லாளனைவிட்டுசித்தன்விரித்த
சொல்லார்ந்த வப்பூச்சிப்பாடலிவை பத்தும்
வல்லார்போய்வைகுந்தம்மன்னியிருப்பரே. (126)

| | | | |
|---|---|---|---|
| வல் ஆள் | வலியுள்ள ஆட்களையுடைய | விரித்த | விரிவாகக் கூறின |
| இலங்கை | லங்கா நகரமானது | சொல் | சொற்களால் |
| மலங்க | கலங்கும்படி | ஆர்ந்த | நிறைந்த |
| சரம் துரந்த | (ஜநஸ்தாநம், கிஷ்கிந்தை, கடற்கரை, இலங்கை என்றவிடங்களிலே) கணை கடத்திய | அப்பூச்சி பாடல் இவை பத்தும் | அப்பூச்சி காட்டுதலைப் பற்றிய இப் பத்துப் பாசுரங்களையும் |
| வில் ஆளனை | வில்லைச் சிறப்பாகக் கொண்டாண்ட ஸ்ரீராமபிரானை | வல்லார் | கற்றவர் |
| விட்டு சித்தன் | ஸ்ரீவிஷ்ணுசித்தன் (பெரியாழ்வார்) | வைகுந்தம் போய் மன்னி யிருப்பர் | க்ரமமாக வைகுந்தத்திற்குச் சென்று அங்கு நிலையுற்றிருப்பர். |

எட்டாவது பாசுரத்தில் ஸ்ரீராமாயணத்தின் முந்திய செய்தியும், இங்கு 'வில்லாளனை என்ற வளவால் மற்ற விருத்தாந்தமும் சுருங்க முழுதும் கூறப்பட்டிருப்பதால் இது ஸ்ரீராமபிரானை விரித்துச் சொன்னதாம். கோபிகள் பேச்சைப் பேசும் ஆழ்வார்பாசுரங்களிலே எம்பெருமானுடைய பூர்வ விருத்தாந்தமும் சேர்த்துப் பேசுவது ஒரு விசேஷமெனத் தெரிவிக்கக் கருதி, 'கண்ணனை விரித்த' என்னாது, 'வல்லாள்—வில்லாளனை விட்டுசித்தன் விரித்த சொல்' என்றதாம். பத்துப் பாசுரங்களும் விட்டுசித்தருடையவையாயிருக்க வில்லாளன்விஷயமான சொல்லை மட்டும் விட்டுசித்தருடையனவாகச் சொன்னது, கண்ணனையே நேராகச் சொல்லும் அம்சங்களிலே பழைய கோபிகளின் பேச்சுக்கு அநுவாதமாத்திரமென்று தெளிவிப்பதற்காக. இப்படி கண்ணபிரானைப் பற்றின அப்பூச்சிப் பாடல்களிவை இராமபிரானைச் சேர்ந்த சொல்லார்ந்து விளங்குகின்றன. ராமனே கண்ணனாகையாலே முற்றும் ராமனைச் சொன்னவையே யென்றதுமாம். அப்பூச்சி காட்டுதலைக் கண்டு அஞ்சி நிற்குமவர்கள் ஆனந்த

மாய் நிலை பெற்று அனுபவிக்கும் ஸ்தானம் வைகுந்தமென்றது, முன்பாசுரத்திலே 'உதவப் புள்ளூர்ந்தங்குறுதுயர் தீர்த்த' என்று அங்கிருந்து புள்ளூர்ந்து வந்து வீடு செய்வித்ததை யருளிச் செய்ததாலும் வ்யக்தமாயிற்று. ஆக முன் பாசுரத்திற் சொன்னதை நன்குணர்ந்து அவனுடைய பாத்வஸௌலப்யங்களில் இழிந்தவர்க்கு இப் பலன் பெறுவது ஸுலபமெனத் தெளிவித்ததாம். ம.

ப்ரபந்தரக்ஷையில் பெரியாழ்வார் திருமொழி 2. 1.

மேச்சூது உரை முற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன்திருவடிகளே சரணம்.

——:o:——

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன்திருவடிகளே சரணம்.

## பெரியாழ்வார் திருமொழி 2. 2. (அம்மமுண்ணவழைத்தல்).

# அரவணையாய்.

அப்பூச்சி காட்டி எல்லோரையும் விரட்டி நெய்யும் பாலுமெல்லாம் உண்டு உறங்கிவிடவே குழந்தைக்குப் பால் கொடாமல், 'அவனே வந்தபோது ஆகட்டும்' என்றிருந்த யசோதையானவள், மறு நாள் நடுப்பகல் வரையில் ஒன்றும் வேண்டாமென்று வயிறசைந்தும் உறங்கும் கண்ணனை ஸ்தந்யமுண்ண வேண்டி யழைப்பதை நினைத்து ஆழ்வார் அநுபவித்த வண்ணம் கூறுவது மேல் திருமொழி—

1. அரவணையாயாயரேறேயம்மமுண்ணத்துயிலெழாயே
இரவுமுண்ணாதுறங்கிநீபோயின்றுமுச்சிகொண்டதாலோ
வரவுங்காணேன்வயிறசைந்தாய்வனமுலைகள்சோர்ந்துபாயத்
திருவுடையவாய்மடுத்துத்திளைத்துதைத்துப்பருகிடாயே. (127)

| | | | |
|---|---|---|---|
| அரவு அணையாய்! | ஸர்ப்பத்தை (ஆதிசேஷனை)ப் படுக்கையாக உடையவனே! | வயிறு அசைந்தாய் | வாடிப்போன வயிற்றனுனாய். (மிகப் பசியுள்ளவனுனாய்.) |
| ஆயர் ஏறே! | கோபரின் தலைவனே! | வனம் முலைகள் | (பால் நிரம்பியுள்ளதாலே) பருத்துள்ள (என்) முலைகள் |
| அம்மம் உண்ண | முலை யுண்பதற்கு | சோர்ந்து | தளர்ந்து (அதனால்) |
| துயில் எழாய் | தூக்கத்தினின்று எழுந்திரு. | பாய | பால் தாராளமாகப்பெருகும்படி |
| நீ உண்ணாது உறங்கி | நீ ஸ்தன்ய முண்ணாமலே தூங்கின பிறகு | திரு உடைய வாய் | மேன்மை பொருந்திய உனது வாயில் |
| இரவும் போய் இன்றும் உச்சி கொண்டது | நேற்று இராத்திரி பூராவும் கழிந்து இன்றைய தினத்திலும் உச்சிவேளை வந்து விட்டது. | மடுத்து | உட்கொண்டு |
| ஆல் ஓ | மிகவும் வருத்தம். | திளைத்து | நிறைந்து (பலம் கொண்டு) |
| வரவும் காணேன் | நீயாக வருவதையும் நான் காணவில்லை. | உதைத்து | கால்களால் (எனது வயிற்றில்) உதைத்து |
| | | பருகிடாய் | பால் குடிக்கக் கடவாய். |

அரவணையாய். நீ (ராமவபத்ரம்கைஸந்தூஜத்) ஆதிசேஷனாகிய படுக்கையை விட்டு அவதரித்தாலும் அவன் இங்கும் அணையாய் வந்துவிட்டான் போலும். இல்லாவிடில் பசிகூடத் தெரியாமல் படுக்கும்படி மென்மையும், மணமும், குளிர்த்தியும் எந்தப் படுக்கைக்கு உண்டு. மதுரையினின்று நீ இங்கு ஒளித்திருக்க வரும்போது, 'சென்றால் குடையா'மென்றபடி மழைத் துளிகளைத் தடுத்து வந்தவன் இங்கே நீ ஆயனாக நின்ற போது இவ்வணையாக அவதரித்தேயிருக்க வேண்டும். ஏறு. விருஷபம்; ச்ரேஷ்டனென்றபடி. அம்மம் = பாலுள்ள ஸ்தநம். இது சந்திரனைச் சொல்லும் அம்புலியென்ற பதம் போல் குழந்தைக்குத் தகுந்த சொல் என்பர். அழுதுக்கொண்டே முலை யுண்ணும்போது அம் அம் என வரும் குழந்தையின் குரலைக் கொண்டு இப்பதம் ஸ்தனத்திற்குப் பெயராயிற்றெனலாம். உணவுக்கும் அம்மமெனப் பெயர் வேறு இடத்திலாகுக. திருவுடைய. இவ்வளவு அழகான வாயோடு எனது ஸ்தநத்தைச் சேர்க்காமல் இருந்தது எனக்கன்றோ அபாக்யம். எவ்வளவு இருந்தாலும் உண்ணும் திறமுள்ளது இத் திருவாயென்னலுமாம். ஆல் ஓ. இரண்டும் அதிக வருத்தத்தைக் குறிக்குமென முன்னோரு முரைத்தனர். வாய் மடுத்து. 'என் முலைத் தடத்தன்னை வாங்கி நின் வாயில் மடுத்து' (பெரிய திருமொழி. 10. 4. 1.) என்றதைக் காண்க. இங்கும், 'ஒரு முலையை வாய் மடுத்து' என்றார். ஆக வாயில் மடுத்து எனப் பொருளாம். முலைகள் = முலைகளை என்னவுமாம். க.

அவன் செய்ததைக் குற்றமாகக் கொண்டு இரவில் அவனை உண்ணச் செய்யவில்லை யெனத் தெரிந்து அவன் கோபித்துத் துயிலெழாமலிருப்பதாகக் கொண்டு ஸமாதானம் செய்து அழைக்கிறாள் —

2. வைத்தநெய்யும்காய்ந்தபாலும்வடிதயிரும்நறுவெண்ணெயும்
இத்தனையும்பெற்றறியேனெம்பிரான்நீபிறந்தபின்னை
எத்தனையுஞ்செய்யப்பெற்றாயேதும்செய்யேன்கதம்படாதே
முத்தனையமுறுவல்செய்துமூக்குறிஞ்சிமுலையுணாயே. (128)

| | |
|---|---|
| எம்பிரான் | எங்கள் உபகாரகனே! |
| நீ பிறந்த பின்னை | நீ அவதரித்த பிறகு |
| வைத்த நெய்யும் | ஸர்வ ஸம்ஸ்காரங்களையும் செய்த பிறகுச் சேமித்து வைத்த நெய்யையும் |
| காய்ந்த பாலும் | இரண்டுவருமாறு காய்ச்சல் பெற்ற பாலையும் |
| வடி தயிரும் | நீர் வடிந்து கட்டியாய் நின்ற தயிரையும் |
| நறு வெண்ணெயும் | மணமுள்ள வெண்ணெயையும் |
| இத்தனையும் | ஒரே சமயத்தில் இவை யெல்லாவற்றையுங் கூட |
| பெற்று அறியேன் | மறுபடி நான் பெற்றதாகக் கண்டதே யில்லை. |
| எத்தனை உம் | (இவற்றை யுண்பது மட்டுமின்றி இதற்கு மேலும்) எத்தனையோ தீமைகளை |
| செய்யப் பெற்றாய் | செய்யும்படி விடப்பட்டாய். |
| ஏது உம் செய்யேன் | நான் உன்னை ஒருபடியும் சிக்ஷிக்க மாட்டேன். |
| கதம் படாது | கோபம் கொள்ளாமல் |
| முத்து அனைய | முத்தைப் போன்ற (வெளுத்த) |
| முறுவல் செய்து | புன் நகையைச் செய்து |
| மூக்கு உறிஞ்சி | மூக்கையும் உறிந்துகொண்டு |
| முலை உணாய் | ஸ்தந்யத்தைப் பருகக் கடவாய். |

காய்ந்த, வடி, நறு, என்றவை போல், வைத்த என்பதை நெய்க்கு ஒரு விசேஷணமாகக் கொள்க. அன்றி வைத்த என்பது எல்லாவற்றிற்கும் விசேஷணமுமாம். நீ பிறந்த பிறகு இவற்றைப் பெறுவதிற் குறையில்லை. பெற்றுச் செல்லவப் படுத்தி

வைத்தவை மொத்தம் உண்டுவிடுகிறாய் என்றதாயிற்று. 'கறந்த நற்பாலும் தயிரும் கடைந்துறி மேல் வைத்த வெண்ணெய் பிறந்ததுவே முதலாகப் பெற்றறியேனெம்பி ரானே' (2. 4. 7.) என்பதும் காண்க. ஆக இவ்வளவு நாள் ஒன்றும் செய்யாதவ ளுக்கு இப்போது கோபம் வரக் காரணம் யாது மில்லை. ஏதும் செய்யேன். 'பேய்ச்சி முலையுண்ட பின்னை யிப்பிள்ளையைப் பேசுவதஞ்சுவனே' 'ஓடுஞ் சகடத்தைச் சாடிய பின்னை உரப்புவ தஞ்சுவனே' (பெரிய திருமொழி 10. 7. 8; 9.) என்றல்லவோ இவ ளிருப்பு. கதம் படாதே. 'இப்படி நான் சொல்வதே உனக்குக் கோபத்திற் கிடமாகுமோ. வைத்தவையெல்லாம் இல்லையென்றேனே யல்லது நீ உண்டதாகச் சொல்லவில்லை. உண் டாலும் உனக்காக அவைகளை நான் வைத்ததால் அது இஷ்டமென்றே சொல்லுகிறேன் எம் பிரானே!' என்கிறாள். மூக்கு இத்யாதி. முலை யுண்ணும்போது மூக்கு உறிதல் இயல்பு. மூக்கின் வாயிலாகப் பெருகிவரும் பாலையும் பெருகாதபடி உறிந்து என்னலு மாம். மூக்கைத் தேய்த்து எனவுமுரைப்பர். உ.

நெய் தயிர் உண்டதற்காக நீ ஒன்றும் செய்யாவிடினும், அப்பூச்சி காட்டியும், மற்றும் பல படிகளிலும் பிறர் மக்களைத் துன்பப்படுத்துவதாகக் கேட்டு நீயும் தந்தையும் என்னை ஏதாவது செய்வீர்கள் என்று கண்ணன் சொல்ல நிற்பதாக நினைத்து அதற்குப் பரிஹாரம் சொல்லும் பாசுரம்—

3. தந்தம்மக்களழுதுசென்றால்தாய்மாராவார்தரிக்ககில்லார்
வந்துநின்மேற்பூசல்செய்யவாழவல்லவாசுதேவா!
உந்தையாருன்றிறத்தரல்லர்உன்னைநானொன்றுரப்பமாட்டேன்
நந்தகோபனணிசிறுவாநான்சுரந்தமுலையுணாயே. (129)

| | | | |
|---|---|---|---|
| தாய்மார் ஆவார் | தாயர்களாயிருப்பவர்கள் | உன்தையார் | உனது தந்தையார் |
| தம் தம் மக்கள் | தங்களுடைய பிள்ளைகள் | உன் திறத்தர் அல்லர் | உன் விஷய மறிந்தவர் அல்லர். |
| அழுது சென்றால் | (நீ தீம்பிழைப்பதாக) அழுது கொண்டு நெருங்கினால் | நான் உன்னை ஒன்று உரப்ப மாட்டேன் | நானும் உன்னைச் சிறிதும் அதட்ட சக்தியுள்ளவளல்லேன். |
| தரிக்க கில்லார் | (பெற்ற பிள்ளைகள் வருந்து வதைத்) தாங்க முடியாதவர் களாய் | | |
| வந்து | (பிள்ளைகளோடு நம்மிடம்)வந்து | நந்தகோபன் அணி சிறுவா! | நந்தகோபரின் நன்மைச் சிறுவனே! |
| நின் மேல் பூசல் செய்ய | உன் மேல் குற்றமேறிட்டுச் சண்டை செய்ய | நான் சுரந்த முலை | அன்பினால் நான் சுரக்கும் ஸ்தன்யத்தை |
| வாழ வல்ல வாசுதேவா | (அதனால்)வாழத்திறமை பெற்ற வனான வசுதேவர் குமாரனே! | உணாய் | உண்பாயாக. |

நந்தகோபன் என மேலே ஒருமையிற் சொல்லும் போது உந்தையார் எனப் பலர் பாலாகச் சொன்னது வாசுதேவா என்ன நினைக்கப்பெற்ற வசுதேவரையும் கருதினதா லென்க. உன் திறத்தர். திறம் = பிரகாரம் அல்லது தத்துவம், அதையுடையவர், அல்லது அதனை யறிந்தவர் திறத்தர். "நின் திறத்தேனல்லேன்" (2. 4. 8.) என்பதையுங் காண்க. உலகில் தாய்மார்கள் பிள்ளைகளிடமுள்ள பரிவினால் பிறரோடு பூசல் செய்ய வருவது இயல்பு. ஆகவே நான் உன்னிடமுள்ள அன்பினாலே அவர்கள் ஏதோ இல்லாததை உன்மேல் பூசப் பார்ப்பதாகத்தான் பாவிப்பேன். உனக்குப் பிறர்தீம்பே வாழ்க்கையானபடியாலே அதை எப்படித் தடுப்பேன். பகைவர்க்குத் தீங்கு செய்யப் பழகுவதற்காக இப்படி இங்குத் தீம்பு செய்து வருகிறாய் போலும். உன் தந்தையாரன

வசுதேவர் எப்படியோ, அப்படியே உன் அருகிலிருக்கும் தந்தையான நந்தகோபரும் உன்னைச் சீர்திருத்தச் சமயம் பெருகிறவரல்லர். என்னால் உன்னை அதட்ட முடியாது. என் மனம் மிக்கப் பரிவுள்ளது. நான் உன்னை இரப்பேனே யன்றி உரப்ப மாட்டேன். நந்தகோபனுக்கும் நீ அருமைக் குழந்தை. சிறு பிள்ளை செய்வது குற்றமா என்றிருப்பர் அவர். ஆகக் கதம் படாமே முத்தனைய பற்கள் சிறுகத் தெரிய முறுவல் செய்து முலையுணாய் என்றவாறு. ௩.

இனி அவனால் ஏற்பட்ட உபகாரங்களைப் பல பாசுரங்களாலே வர்ணித்து எம்பிரான் என்று கீழ்ச் சொன்னதை விவரித்தும், இப்படியுள்ள அவனிடம் தனக்குள்ள வாத்ஸல்யத்தைத் தெளிவித்தும் பால் பருக வழைக்கிறாள்—

4. கஞ்சன்றன்னாற்புணர்க்கப்பட்டகள்ளச்சகடுகலக்கழியப்
பஞ்சியன்னமெல்லடியாற்பாய்ந்தபோதுநொந்திடுமென்று
அஞ்சினேன்காணமரர்கோவேயாயர்கூட்டத்தளவன்றாலோ
கஞ்சனையுன்வஞ்சனையால்வலைப்படுத்தாய் ! முலையுணாயே. (130)

| | |
|---|---|
| அமரர் கோவே ! | நித்யஸூரி நிர்வாஹகனே ! |
| உன் வஞ்சனையால் | (ஒளித்து வளர இங்கு வந்துள்ள) உனது வஞ்சனையினாலே |
| கஞ்சனை உன் வலை படுத்தாய் | கம்ஸனை உன் வலையில் அகப்படச் செய்தவனே ! |
| | (அதனாலே) |
| கஞ்சம் தன்னால் புணர்க்கப் பட்ட | கம்ஸனால் தந்திரமாய் ஏற்படுத்தப்பட்ட |
| கள்ளம் சகடு | மாயச் சகடத்தை |
| கலக்கு அழிய | (அதன் கோப்பு) அழியும்படி |
| பஞ்சி அன்ன | (நீ) பஞ்சுக்கு ஸமானமாய் |
| மெல் | மிருதுவான |
| அடியால் | திருவடியினாலே |
| பாய்ந்த போது | (தொட்டிலிற் படுத்தபடியே) நீட்டி உதைத்த போது |
| நொந்திடும் என்று | பாதத்தில் நோவு உண்டாகுமே என்று |
| அஞ்சினேன் காண் | நான் பயந்தேன். |
| | (அந்த அச்சமானது) |
| ஆயர் கூட்டத்து அளவு அன்று. | இடையரெல்லோருடையவும் ஒன்று சேர்த்து நின்ற அச்சத்திற்கும் மேற்பட்டது. |
| ஆல் ஓ | மிக்க வருத்தம். |
| | முலையுணாய். |

கலக்கு = சேர்க்கை. இக் குழந்தை உதைத்த உதையில் சகடம் அச்சு வேறு, ஆணி வேறு, இலை வேறு, வட்டம் வேறு என்னும்படிச் சின்னமும் பின்னமும் ஆய்விட்டதென்றபடி. 'கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி' என்றாள் இவர் திருமகள். கள்ளச் சகடுக்கு இவன் கள்ளக் குழவியெனத் தெரியாது போலும். நித்யஸூரிகளான அமரர்களால் ஸேவிக்கப் பட்டுள்ளவன் தேவதைகளான அமரர்களுக்கு அநுகூலனாயிருந்து அவதரித்து, அஸாராம்சமாய், தன்னை யழிக்கும் நோக்கங் கொண்ட கஞ்சனுக்குத் தெரியாமலே ஆய்ப்பாடி வந்து வளர்ந்து கொண்டு அவனை வலைப்படுத்திக் கொண்டு செய்யும் சூழ்ச்சி யெல்லாம் இடையர்களுக்கு இவன் செய்யும் உபகாரமாம். மேற் பாசுரத்தில், 'கஞ்சன் உன்னைப் பிடித்துக் கொள்ளாதபடி யிருக்க வேணு'மென வேண்டிக் கொள்ளப் போகிறாள். ஆக இங்கு வலைப்படுத்தினதாவது அவன்மித்திரர்களைக் கொன்று அவனையும் அழிக்க வளர்ந்து வருகையாம். ௪.

5. தீயபுந்திக்கஞ்சனுன்மேற்சினமுடையன்சோர்வுபார்த்து
மாயந்தன்னால்வலைப்படுக்கில்வாழகில்லேன்வாசுதேவா!
தாயர்வாய்ச்சொல்கருமங்கண்டாய்சாற்றிச்சொன்னேன்போகவேண்டா
ஆயர்பாடிக்கணிவிளக்கேயமர்ந்துவந்தென்முலையுணாயே. (131)

| | |
|---|---|
| வாசுதேவா! | வசுதேவரின் மகனே! |
| தீய புந்தி | தீதான புத்தியையே யுடையனும், |
| உன் மேல் சினம் உடையன் | உன்னிடம் கோபம் கொண்டவனுமான |
| கஞ்சன் | கம்ஸனானவன் |
| சோர்வு பார்த்து | (பசித்துக் களைத்துள்ள உன்) தளர்ச்சியைக் கண்டு |
| மாயம் தன்னால் | மாயத்தினால் |
| வலைப் படுக்கில் | (உன்னைத்) தப்பாதபடி உட்படுத்திக் கொள்ளில் |
| வாழ கில்லேன் | ஜீவித்திருக்க மாட்டேன். |
| தாயர் வாய் சொல் | தாயாரா யிருப்பவர்கள் வாயினால் சொல்வது |
| கருமம் கண்டாய் | (பிள்ளைகள் செய்ய வேண்டும்) கடமையாம். |
| ஆயர் பாடிக்கு | இடையர் வசிக்கும் இச்சேரிக்கு |
| அணி விளக்கே! | நன்மை யளிக்கும் விளக்கே! |
| சாற்றி சொன்னேன் | எல்லோரையும் கூட்டிச் சொன்னேன். |
| போக வேண்டா | நீ வெளியே போக வேண்டாம். |
| அமர்ந்து | பொருந்தி |
| | வந்து என் முலை உணாய். |

இப்படி ஆயர் கூட்டதினளவுக்கு மேற்பட்ட அச்சமுள்ளவளான இவள் ஸ்தன்யமுண்ண அழைத்த போதும் அவன் இதை மதியாது வெளியே புறப்பட்டுப் போம் போது வருந்தி யழைக்கின்றனள். (அப்போது ஆயர் கூட்டமும் கூடிவிட்டது.) 'கண்ணா! ஆயர்பாடிநல்விளக்கே! எல்லோரும் உன்னை யழைப்பதைப் பார். கஞ்சனிடம் பயந்துள்ள வசுதேவர் உன்னை இங்கு ஒளித்து வளர வைத்தார். வாசுதேவா! நீ வெளியே போகலாமோ! இராமாவதாரத்திலே யன்றி, இவ்வவதாரத்திலும் தாயின் வாய்ச்சொல் கருமங் கண்டவன் நீ. தேவகியின் சொற்படி நீ பிறந்த போதே நடந்தவனாயிற்றே. (ஆகவே கண்டாய் என்பது கண்டவனே என விளிச் சொல்லுமாம்.) அவள்சொல்லுக் கிணங்கியே இங்கு வந்தாய். நானும் ஒரு தாய். பிறந்தது முதல் பரிவுடன் வளர்க்கும் என் வாய்ச் சொல் கருமமெனத் தெரிந்து நீ எப்படிப் போவது? தேவகி ஏகாந்தத்திலே சொன்னாள். நான் எல்லோரும் கேட்கச் சொல்லுகிறேன். அவர்களும் சொல்லுகிறார்கள். ஆக வசுதேவர், தேவகி, நான், இங்குள்ள ஆயர்கள் எல்லோர்க்கும் நன்மை யளித்து நாங்கள் ஜீவித்திருக்கும்படி வந்து ஸ்தன்ய முண்பாயாக. அமர்ந்துவந்து. போக வேண்டாமென விருப்பதால் 'வந்து' எனப் பிரித்தது. உவந்து எனவும் பிரிக்கலாம். ரு.

ஸ்ரீ வில்லிபுத்தூரிலே யசோதைப் பிராட்டியாய் நின்று வடபெருங் கோயிலுடையானை அனுபவித்துவரும் ஆழ்வார், அதற்கேற்றவாறு, 'ஆயர்பாடிக் கணி விளக்கே! போக வேண்டா. அமர்ந்து முலையுணாய்' என வழைத்து, பிறகு அவன் ஆய்ப் பாடியை விட்டுப் போனாலும் தனக்குத் தகுந்த, தன் தாயுள்ள விடமான வில்லிபுத்தூரிலே வந்து அமர்ந்தானென வுகந்து அழைக்கிறார்—

6. மின்னனையநுண்ணிடையார்விரிகுழல்மேனுழைந்தவண்டு
இன்னிசைக்கும்வில்லிபுத்தூரினிதமர்ந்தாயுன்னைக்கண்டார்
என்னநோன்புநோற்றாள்கொலோவிவனைப்பெற்றவயிறுடையாள்
என்னும்வார்த்தையெய்துவித்தவிருடீகேசாமுலையுணாயே. (132)

| | |
|---|---|
| மின் அனைய | மின்னற் கொடியைப் போன்ற |
| நுண் இடையார் | ஸூக்ஷ்மமான இடுப்பை யுடைய ஸ்திரீகளின் |
| விரி குழல் மேல் | விரிந்த கூந்தலின் மேலே |
| நுழைந்த வண்டு | புகுந்த வண்டுகள் |
| இன் இசைக்கும் | (பருகிக் களித்து) இனிதாக இராகம் பாடிவரும் |
| வில்லி புத்தூர் | ஸ்ரீ வில்லிபுத்தூரிலே |
| இனிது அமர்ந்தாய்! | (விட்டுப் போகாதபடி) மதுரமாய் நிலை நின்றவனே! |
| இவனை பெற்ற வயிறு உடையாள் | 'இவனைப் பிறப்பித்த திருவயிற்றை யுடையவள் |
| என்ன நோன்பு நோற்றாள் கொல் ஓ | எவ்வகையான தபஸ்ஸைச் செய்திருந்தாளோ' |
| உன்னை கண்டார் என்னும் | என்றிப்படி உன்னைப் பார்த்தவரெல்லாரும் சொல்லிவரும் |
| வார்த்தை | புகழ்தலை |
| எய்துவித்த | (என்னை) அடைவித்த |
| இருடீகேசா | கண்டார் இந்திரியங்களைக் கவரும் ஹ்ருஷீகேசனே. |
| | முலையுணாய். |

மின்னனைய வென்பது இடைக்கும் இடையாருக்கும் சேரும். குழல் மேல் நுழைந்த. 'வண்டுலாம் பூங் குழலினர்' என்னப் போகிறபடி இங்கு மேல் என்பது பூவினில் என்பதைக் குறிக்கும். என்ன இத்யாதி. எம்பெருமானைப் புத்ர பாவனையிலே இப்படி யநுபவிக்கும்படி ஆழ்வார் நோற்ற நோன்பு தான் என்னவோ என்றும் வியப்பு கொள்க. கொல் என்பது ஐயக்கிளவி; இன்ன நோன்பு எனத் தெரியாமையையும், பிரமாணங்களைக் கொண்டறிய வியலாமையையும் காட்டுகிறது. அ.

எழுந்து வெளியே புறப்பட்டுப் போன குழந்தை இனிது அமர்ந்து நிற்கவே தாமதமின்றி முலை யுண்ண வேண்டுகிறாள்—

7. பெண்டிர்வாழ்வார்நின்னொப்பாரைப்பெறுதுமென்னுமாசையாலே
கண்டவர்கள்போக்கொழிந்தார்கண்ணிணையாற்கலக்கநோக்கி
வண்டுலாம்பூங்குழலினருன்வாயமுதமுண்ணவேண்டி
கொண்டுபோவான்வந்துநின்றார் கோவிந்தா நீமுலை யுணாயே. (133)

| | |
|---|---|
| கோவிந்தா! | கோவிந்தனே! |
| கண்டவர்கள் | (உன்னைப்) பார்த்தவர்களான |
| வாழ்வார் பெண்டிர் | பர்த்தாக்களோடு வாழ்ந்து வரும் யுவதிகள் |
| நின் ஒப்பாரை பெறுதும் | 'உன்னைப் போன்ற மக்களை பெறுவோம்' |
| என்னும் | என்கிற |
| ஆசையாலே | ஆசையினால் |
| கண் இணையால் கலக்க நோக்கி | (நீ மனதிற் பதியும்படி) தங்கள் பார்வை உன் அங்கமெங்கும் கலந்து நிற்கும்படி இரு கண்களாலும் ஊன்றிப் பார்த்து |
| போக்கு ஒழிந்தார் | அப்பால் போகாமல் நின்று விட்டார்கள். |
| வண்டு உலாம் பூ குழலினர் | வண்டுகள் உலாவும் புஷ்பங்களைக் கொண்ட கூந்தலை யுடையவர் (சிறு பெண்கள்) |
| உன் வாய் அமுதம் | உனது திருவதரத்திலுள்ள அமிருதத்தை |
| உண்ண வேண்டி | பானம் பண்ண ஆசைப்பட்டு |
| கொண்டு போவான் | (உன்னை இடுப்பில்) எடுத்துப் போவதற்காக வந்து (கண்ணிணையாற் கலக்க நோக்கி) |
| நின்றார் | நின்று விட்டார்கள். (ஆக வேகமாய் வந்து) நீ முலையுணாய். |

(வேண்டி. இங்கு இ விகுதி கருத்தாப் பொருளில் வந்ததாகில் இப்படியே நோக்கி என்பதுமாம். ஆகப் போக்கொழிந்து நின்றவர் நின்ற ஸமயம் முழுமையிலும் நோக்குவது சொன்னதென்க) போக் கொழிந்துநின்றவர்களுக்கு உனது நற்குணத்தையும் கண்டு ஆசை வளரும்படியும், வாயமுதம் விரும்புவோருக்கு உன்னை விரைவில்

அழைத்துச் செல்லலா மென்று தோன்றும்படியும் சடக்கென ஸ்தன்யம் உண்பாய் என்றபடி. இங்கு ஸ்வாரஸ்யத்தாலும், போக்கொழிந்தார், நின்றார் எனத் தனித் தனியாகவுள்ள ப்ரயோகத்தினாலும் முன்னடிகளும், பின்னடிகளும் வெவ்வேறு வாக்யம். அன்றி, உன் வாயமுத முண்டு உன்னோடு கலந்திருந்து உன்னைப் போன்ற மக்களைப் பெற வேண்டுமென வாசையாலே உன்னை எடுத்துச் செல்ல நின்றுள்ளனர், பிள்ளை பெற்றுக் கொள்ளும்படி வாழ்ந்து விளங்கும் பெண்டிர் என்று ஒரு வாக்யமாகக் கொண்டாலும் கொள்க. எ.

*அருகில் அமர்ந்த குழந்தை அல்குல் ஏறியிருந்து அம்மமுண்ண வேண்டுகிறாள்—*

8. இருமலைபோலெதிர்ந்தமல்லரிருவரங்கமெரிசெய்தாயுன்
திருமலிந்துதிகழுமார்வுதேக்கவந்தென்னல்குலேறி
ஒருமுலையைவாய்மடுத்தொருமுலையைநெருடிக்கொண்டு
இருமுலையும்முறைமுறையாயேங்கியேங்கியிருந்துணாயே (134)

| | |
|---|---|
| இரு மலை போல் | பெரிய மலை போல |
| எதிர்ந்த | எதிர்த்து வந்த |
| மல்லர் இருவர் | இரண்டு மல்லர்களுடைய |
| அங்கம் | உடலை |
| எரி செய்தாய் | உன் ப்ரதாபாக்நியில் சேர்த்தவனே! |
| உன் | உனது |
| திரு மலிந்து திகழும் | அழகு நிறைந்து விளங்கும் |
| மார்வு | திருமார்பானது |
| தேக்க | (தனது காந்தியை என்னிடம்) தேக்கும்படி |
| வந்து என் அல்குல் ஏறி | நீ வந்து என் மடியில் ஏறிக் கொண்டு |
| ஒரு முலையை வாய் மடுத்து | ஸ்தனம் ஒன்றை வாயில் வைத்துக் கொண்டு |
| ஒரு முலையை நெருடிக் கொண்டு | மற்றொரு ஸ்தனத்தைக் கையினால் நுனியில் திருத்தியுறுத்திக் கொண்டு |
| ஏங்கி ஏங்கி இருந்து | (போதுமென்றிரங்கி விடாமல்) ஸாத்மித்து அபேக்ஷித்து இருந்து கொண்டு |
| இரு முலையும் | இரண்டு ஸ்தனங்களையும் |
| முறை முறை ஆய் | க்ரம க்ரமமாய் (மாறி மாறி) |
| உணாய் | உண்ணக் கடவாய். |

இரு மலை. இரண்டு மலைகளென்னலுமாம். இருவர் மதுவும் கைடபனும் என்றார் திருவாய்மொழிப் பிள்ளை. மல்லர் இருவர் என விருப்பதால் கம்ஸவதத்திற்குப் பூர்வாங்கமாய் வதை பெற்ற சாணூரன், முஷ்டிகனென்ற இருவரையே கொண்டார் மணவாள மாமுனிகள். எப்படியும் எரி செய்தாய் என்பதற்கு வதைத்தாய் என்பதே கருத்தாகும். ஆக எரி எம்பெருமானின் தேஜஸ்ஸு எனலாம். முஷ்டிகனைப் பலராமன் வதைத்தாராகிலும், அவரும் இவரது அம்சமாகையாலே இப்படிச் சொன்னதாம். அன்றி, கண்ணனாலேயே கொல்லப்பட்ட சாணூரன், தோஸலன் என்ற இருவர்களைக் கொள்க (வி. பு.). இருவரங்கம் என்பதை இரு அரங்கம் எனப் பிரித்து, 'பெரிய ரங்க ஸ்தலத்திலே' என்று பொருள் கொண்டால் எதிர்ந்த மல்லோர் எல்லோரையும் எரி செய்தது சொல்லப்படும். திரு = பிராட்டியுமாம் தேக்க—மார்பு பாலால் நிறைய எனவுமுரைப்பர். நெருடி. ஒன்றை யுண்ணும் போது மற்றொன்றை நெருடுவது இயல்பு. ஸ்தந்யம் சுரக்க இதுவுமொரு விரகுமாம். அ.

*இனி மற்றொரு ஸமயம் அம்மமுண்ண அழைத்ததைச் சொல்லுகிறது—*

9. அங்கமலப்போதகத்திலணிகொள்முத்தஞ்சிந்தினாற்போல்
செங்கமலமுகம்வியர்ப்பத்தீமைசெய்திம்முற்றத்தூடே
அங்கமெல்லாம்புழுதியாகவளையவேண்டாவம்மவிம்ம
அங்கமரர்க்கமுதளித்தவமரர்கோவேமுலையுணாயே. (135)

| | |
|---|---|
| அம் | அழகிய |
| கமலம் போது | தாமரைப் பூவின் |
| அகத்தில் | உட்புறத்தில் |
| அணி கொள் முத்தம் | அழகை (அல்லது) அலங்காரத் தைக் கொண்ட முத்துக்கள் |
| சிந்தினால் போல் | இறைந்திருந்தால் போல் (கமலம் முத்துக்கள் கொண்டது போல்) |
| செம் கமலம் | செந்தாமரை போன்ற |
| முகம் | திரு முகமானது |
| வியர்ப்ப | வேர்வைத் துளிகளைக் கொள் ளும்படி |
| தீமை செய்து | தீம்புகளைச் செய்து |
| அங்கம் எல்லாம் | முழு உடலும் |
| புழுதி ஆக | புழுதி படியும்படி |
| இ முற்றத்து ஊடே | இப்படிப்பட்ட முற்றத்திலேயே |
| அளைய வேண்டா அம்ம | (புழுதியை) அள்ளிச் சொரிந்து கொள்ள வேண்டாம் அப்பா ! |
| அந்து | அங்கே (முன் அவதாரத்திலே) |
| அமரர்க்கு | தேவர்களுக்கு |
| விம்ம | வயிறு நிரம்பும்படி |
| அமுது அளித்த | அமிருதத்தைப் பங்கிட்டுக் கொடுத்த |
| அமரர் கோவே | தேவ தேவனே ! |
| | முலையுணாய். |

தீமை செய்து என்ற வரையிலுமுள்ளது அமுதளித்த என்பதோடும் சேரும் அப் போது க்ஷீர ஸமுத்திரத்தைக் கடையும் போது அவன் பட்ட பாடும், அசுரர்களை ஏமாற்ற அவன் செய்த செயல்களும் கருதினபடியாம். அம்ம. இது ஓர் அசைச் சொல். கேள் எனப் பொருளுமாம். ஸ்வாமியே என்னவுமாம். அமரர்கோ. அமரர்க்கு அளித்ததாலே அமரர் கோவானான். தேவ ப்ரகிருதிகளிடத்தில் சிறந்த அபிமானமுள்ளவனாகையாலே அமரர்க்கே யளித்தான். 'அமரர்களுக்கெல்லாம் அமுதம் அளித்து அமரர்கோவாயு மிருந்து நீ உண்ணாமலிருப்பதென்? அதற்கு மேலான இந்த அம்மமமுதை உனக்கு விம்ம நான் அளிப்பன்' என்று வேண்டினவாறு. கூ.

மற்றொரு ஸமயம் கண்ணன் வெகு தூரத்திலிருந்து இல்லத்திற்கு ஓடி வருகிற போது அம்மமுண்ண அழைத்த விதத்தை மேற் பாசுரம் சொல்லுகிறது—

10. ஓடவோடக்கிண்கிணிகளோலிக்குமோசைப்பாணியாலே
பாடிப்பாடிவருகின்றாயைப்பற்பநாபனென்றிருந்தேன்
ஆடியாடியசைந்தசைந்திட்டதனுக்கேற்றகூத்தையாடி
ஓடியோடிப்போய்விடாதேயுத்தமா நீ முலையுணாயே. (136)

| | |
|---|---|
| ஓட ஓட | (உன் பருவத்திற் கேற்பவும், ஓசையில் ஆசையாலும்,) ஓடிக் கொண்டே வரும்போது |
| ஒலிக்கும் | ஓசைப்படும் |
| கிண்கிணிகள் | சதங்கைகளின் |
| ஓசை பாணியாலே | ஒலியாலான ஸங்கீதத்தினாலே |
| பாடி பாடி வருகின்றாயை | அவ்வொலியை ஸங்கீதமாக வமைத்து அப் பாட்டுடன் வருகின்ற உன்னை |
| பற்பநாபன் என்று | இப்படி வருகிறவன் நம் கண்ணன் பத்மநாபன் தானெனஊஹித்து |
| இருந்தேன் | (முலை யுண்ணச் சொல்லவும், அவ்வழகைக் காணவும்) இருந்தேன் |
| உத்தமா ! | புருஷோத்தமனே ! |
| ஆடி ஆடி | ஆடும் முறையிலே அடிகளை வைத்துக் கொண்டு |
| அசைந்து அசைந்திட்டு | இடமும் வலமுமாகத் திரு மேனி அசைந்து (அதனால் கிண்கிணிகள் ஒலிக்க) |
| அதனுக்கு ஏற்ற | அவ்வோசைப்பாணிக்குத்தகுந்த |
| கூத்தை | ஆட்டத்தை |
| ஆடி | செய்து |
| நீ ஓடி ஓடி போய் விடாது | இப்படிச் செய்து கொண்டே நீ ஓடி விடாமல் |
| | முலையுணாய். |

நீ வாயாற் பாடும் பருவம் பெறுமலிருக்கும் போது, ஓடும்போது ஒலிக்கும் கிண்கிணிகளின் ஓசையைச் சங்கீத வகையில் அமைத்து வருகிறாய். இப்படி வருகிறவன் பற்பநாபன் தவிர வேறு எந்தப் பிள்ளையாக இருக்க முடியுமென யோசித்து நீயென்றே நிச்சயித்து ஸ்தன்யம் உண்ண வருகிறதாகவும் கொண்டு அவ்வழகையுங் காண இங்கு இருந்த வண்ணமுளேன். நீ கிண்கிணி ஒலிப்பதற்காக ஓடுவதும் அசைவதுமாய் அவை ஒலிக்கும் போது அதற்குத் தக்கபடி நடனம் செய்வதெல்லாம் விரும்பத்தக்கதே. ஆகிலும் அதிலுள்ள விருப்பத்தாலே கடைசியில் ஓடிப் போகிறாயோவென அஞ்சுகிறேன். உன்னைப் பார்ப்பதில் ஈடுபட்ட நானும் உன்னை அழைக்காது இருந்துவிட, நீயும் ஓடிவிடக் கூடாது. ஆக நீ ஆடி முலையுணாய் என்றபடி. மூன்றாமடியிலுள்ள பதங்களை மாற்றி முன்னடியில் 'வருகின்றாயை' என்பதோடு இணைத்துரைப்பர். என்றிருந்தேன் = என்று நினைத்தேனென்பர். ௰.

11. வாரணிந்தகொங்கையாய்ச்சிமாதவாவுண்ணென்றமாற்றம்
நீரணிந்தகுவளைவாசம்நிகழநாறும்வில்லிபுத்தூர்
பாரணிந்ததொல்புகழான்பட்டர்பிரான்பாடல்வல்லார்
சீரணிந்தசெங்கண்மால்மேற்சென்றசிந்தை பெறுவர் தாமே. (137)

| | |
|---|---|
| வார் அணிந்த கொங்கை | கச்சையைக் கொண்ட ஸ்தனங்களை யுடைய |
| ஆய்ச்சி | (யசோதை யென்னும்) கோபியானவள் |
| 'மாதவா உண்' என்ற | 'மாதவனே! ஸ்தன்யம் உண்பாயாக' என்று சொன்ன |
| மாற்றம் | சொல்லாயும்—, |
| நீர் அணிந்த | நீரை அலங்கரிக்கும் |
| குவளை | செய்தல் புஷ்பங்களின் |
| வாசம் | வாஸனையானது |
| நிகழ | நிலைத்திருக்க (அதனால்) |
| நாறும் | பரிமளிக்கும் |
| வில்லிபுத்தூர் | ஸ்ரீ வில்லிபுத்தூரிலிருக்கும், |
| பார் அணிந்த தொல் புகழான் | முழுப் பூமியும் தரித்த பழமையான புகழ் உடைய, |

| | |
|---|---|
| பட்டர் பிரான் | பட்டநாத(விட்டு சித்த)ருடைய |
| பாடல் வல்லார் தாம் | பாட்டுக்களாயுமுள்ள இத் திருமொழியை மட்டும் திறமையோடு அப்யஸிப்பவர்களும் |
| சீர் அணிந்த | கல்யாண குணங்களை யுடையவனும் |
| செம் கண் | சிவந்த திருக் கண்களை யுடையனுமான |
| மால் மேல் | வ்யாமோஹகனான திருமாலின் விஷயத்திலே |
| சென்ற | சென்று நின்ற |
| சிந்தை | மனது |
| பெறுவர் | பெற்றிருப்பர். |

வார் அணிந்த பால்பெருக்காலே அடங்காதபடியுள்ளவற்றைக் கச்சினால் கட்டி அடக்கி வைத்தனள் என்றபடி. ராஜாக்களுக்கு போக்யமானதை வேலைக்காரர்களும் மற்றும் யாவரும் காணாதபடி மூடி வைப்பது போல் கண்ணனுக்கான ஸ்தன்யஸ்தானத்தைப் பிறர் காணாதபடி மறைத்திருந்தனள் என்றும் கருத்துரைப்பர்.

குவளை குவலயம். ௰௧.

ப்ரபந்தரக்ஷையில் பெரியாழ்வார் திருமொழி 2. 2.

அரவணையாய் உரை முற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன்திருவடிகளே சரணம்.

—:o:—

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானுர் தேசிகன் திருவடிகளே சரணம்.

## பெரியாழ்வார் திருமொழி 2. 3. (கடிப்பிடல்)

# போய்ப்பாடு.

இத் திருமொழி யசோதைப் பிராட்டி கண்ணனை, காது குத்தவும், காதில் திரியிடவும், குழையிடவும் அழைத்த வண்ணம் கூறுவது. குழந்தைகளுக்குப் பன்னிரு மாதம் செல்லக் காது குத்துவது பெரும்பாலும் வழக்கமாகையால் பன்னிரண்டு பாட்டுக்களை இயற்றி இத் திருமொழிப் பலனைப் பதின் மூன்ருவது பாசுரத்திற் கூறக் கருதி, பன்னிரண்டு மாதங்களுக்குப் பன்னிரண்டு வ்யூஹாந்தரங்களான கேசவாதிமூர்த்திகள் அபிமானிகளாகையாலே அம் மூர்த்தித் திரு நாமங்களை அடைவாகப் பாசுரங்களில் சேர்க்கத் திருவுளங் கொண்டு, விபவத்திலிருந்து வ்யூஹம் புகுந்து அங்கிருந்து பரவாசுதேவனிடம் சில முக்தர் போகும் ப்ரகாரத்தை ஸ்ரீ பாஷ்யத்தில் அருளிச் செய்தபடி, ஸ்ரீ கிருஷ்ணனென்ற விபவாவதாரமும் வ்யூஹத்திலிருந்து வந்ததாமாகையால் வ்யூஹாந்தரங்களும் கண்ணனுமொன்றென அத் திருநாமங்களாலேயே கண்ணனைக் காது குத்த வழைக்கிருர். தொடர்ந்து மாதங்களை எண்ணிக் காது குத்துவவது தோற்ற இத் திருமொழியை அந்தாதித் தொடராகவும் அமைத்துள்ளனர் போலும். குழந்தைக்குக் கேசவாதிகளைக் கொண்டு ரக்ஷை செய்வர். இவனே கேசவாதிமூர்த்திகளாகையால் இவனை இவனே ரக்ஷித்துக் கொள்ளவேண்டுமென்பதுமிங்கே தோற்றும். முதற் பாசுரம் காதுகுத்த வழைப்பதைப் பணிப்பது. காது பெருக்கத் திரியிடுவது பலதரமாகையாலே அது விஷயத்திலே பல பாசுரங்கள் இயற்றப் பெற்றன. குழையிட்டுக் காண வாசையாலே திரியிட வேண்டும் தருணத்திலும் குழையிட முயன்று வந்தாளாகையாலே நடு நடுவே கடிப்பிடுவதைப் பற்றியும் பணிப்பதாம்.

1\. போய்ப்பாடுடையநின்தந்தையுந்தாழ்த்தான்பொருதிறற்கஞ்சன்கடியன்
காப்பாருமில்லைகடல்வண்ணாவுன்னைத்தனியேபோயெங்குந்திரிதி
பேய்ப்பால்முலையுண்டபித்தனேகேசவநம்பியுன்னைக்காதுகுத்த
ஆய்ப்பாலர்பெண்டுகளெல்லோரும்வந்தாரடைக்காய்திருத்திநான்வைத்தேன். (138)

| | | | |
|---|---|---|---|
| கடல் வண்ணா | கடல் போன்ற வடிவு உடையவனே! | நின் தந்தையும் | உனது தகப்பனும் |
| பேய் பால் முலை உண்ட | பேய்ச்சியான பூதனையின் முலைப்பாலை யுண்டவனாய் | தாழ்த்தான் | வராமல் தாமதித்தான். |
| பித்தனே | பித்துப் பிடித்தவனே! | உன்னை காப்பாரும் | (தகப்பன் தவிர) உன்னைக் காத்து வருபவரும் |
| பொரு திறல் | யுத்தம் செய்யும் திறமை யுள்ள | இல்லை | (வேறு வேலையிலிருப்பதால் உன்னைக் காக்கும்படி) இல்லை. |
| கஞ்சன் | கம்ஸன்! | தனியே போய் | (அப்படியிருக்க நீ) தனியாக வெளியிற் சென்று |
| கடியன் | கடுமையானவன். | எங்கும் திரிதி | யாரும் காணாத விடமெல்லாம் திரிகிருய். |
| போய்ப்பாடு | வெகு தூரம் போயுள்ள (அதிக மான) பாட்டை | கேசவ | கேசவனே! |
| உடைய | உடையவனை | | |

நம்பி — குணம் நிரம்பியவனே !
உன்னை காது குத்த — உனக்குக் காது குத்தல் என்னும் உத்ஸவத்தை நடத்த
ஆய் பாலர் பெண்டுகள் எல்லோரும் — இடைப் பிள்ளைகளும் ஸ்திரீகளும் மற்றும் எல்லோரும்
வந்தார் — வந்து நின்றார்கள்.
நான் — நானும்
அடைக்காய் — வெற்றிலை பாக்கை
திருத்தி வைத்தேன் — சீர்படுத்தி வைத்தாய் விட்டது.

காது குத்துவதற்கு வேண்டும் ஏற்பாடுகளிலே ஈடுபட்டிருந்த யசோதைப் பிராட்டி, அதற்குள் நந்தகோபரும் வாராதிருக்க, கண்ணனையும் காணாமல் கதறிக் கூப்பிடுகிறாள்—போய்ப்பாடு. ‘போய்பாடுடையனவே சாலப் பெரும்பறையே’ என ஆண்டாளும் இப் பதத்தைச் சேர்த்தது காண்க. பாடு பெருமையும், வெளி வேலையுமாம். குழந்தைகளுக்குக் காது குத்தச் செய்யும் வேலைகளுமாம். தந்தையும் காப்பாரும் என்ற உம்மையாலே யாருமில்லாமையாலே நீ தனியே திரிகிறாய் என்று சொல்வதோடு அவர்கள் வாராததாலும் காது குத்தத் தாமதெனக் குறித்ததுமாம். கடல் வண்ணா : அலையும் ஸ்வபாவமானபடியாலே ஒரு க்ஷணம் நிற்பதில்லையே. உன் வர்ணத்தைக் கண்டாலே நீ கண்ணனெனக் கஞ்சன் அறியுமே என்றபடி. தனியே. உன்னோடு விளையாடும் ஆய்ப் பாலரும் இங்கு வந்துவிட்டார்களே என்றதாம். பித்தனாவான் கள்வனும் பைத்தியக் காரனும். பூதனையின் ப்ராணாபஹாரத்திற்காக நீ கள்ளத்தனமாக அவள்முலையுண்டதாக நினைக்கின்றனர். அப் பாலை யுண்ண வைத்து உன்னைக் கண்டவிடம் திரியும் பித்தனுக்கிக் கஞ்சன் கடிய நினைக்கின்றான் போலுமென இவள் கருதினள். கண்ணன் எங்கேயோ வெகு தூரம் போய் விட்டானென்று கடல்வண்ணா ! பித்தனே ! என்றாள். பிறகு அவன் வெகு தூரம் போகவில்லை யென்பதைக் கண்டு கேசவ நம்பி என அண்மை விளிச் சொற்களால் விளித்து அவனுடைய குண பூர்த்தியைக் கூறித் தன் ஸந்தோஷத்தை வெளியிட்டனள். ‘கேசவன் நம்பி பிறந்தினில்’ என்றார் முன்னும். உன்னைக் காது குத்த = உன் காதைக் குத்த என விகுதி மாற்றி அந்வயம் கொள்வதுமாம். காது குத்தல் என்னும் ஸம்ஸ்காரத்திற்கு உன்னை என்பது கர்மாவுமாம். உருபுமயக்குமாம். க.

2. வண்ணப்பவளமருங்கினிற்சாத்திமலர்ப்பாதக்கிண்கிணியார்ப்ப
நண்ணித்தொழுமவர்சிந்தைபிரியாதநாராயணாவிங்கேவாராய்
எண்ணற்கரியபிரானேதிரியையெரியாமேகாதுக்கிடுவன்
கண்ணுக்குநன்றுமழகுமுடையகனகக்கடிப்புமிவையா. (139)

நண்ணி தொழுமவர் — நெருங்கி வணங்கி யிருப்பவருடைய
சிந்தை — மனத்திலிருந்து
பிரியாத — பிரிந்திராத
நாராயணா — நாராயணனே ! (நீ)
மருங்கினில் — இடுப்பில்
வண்ணம் பவளம் — நல் வர்ணமுள்ள பவழ வடத்தை
சாத்தி — அணிந்து கொண்டு
மலர் பாதம் — (தாமரைப்) பூப்போன்ற பாதங்களிலுள்ள
கிண் கிணி — சதங்கைகள்
ஆர்ப்ப — த்வனிக்கும்படி
இங்கே வாராய் — இவ்விடத்திற்கே வருவாயாக.
எண்ணற்கு — நினைப்பதற்கு
அரிய — அருமையான (முடியாத)
பிரானே — ஸ்வாமியே !
காதுக்கு — (உனது) காதுகளுக்கு
திரியை — நூல் திரிகளை
எரியாமே இடுவன் — எரிச்சலுண்டாகாதபடி இடுவேன்.
கண்ணுக்கு நன்றும் அழகும் உடைய — பார்ப்போர் கண்ணுக்குப் பிரியமான வர்ணத்தையும் அழகையும் உடைய
கனகம் கடிப்பும் — பொற் காதணிகளும்
இவை — (இதோ பார்) இவைகளே.
ஆ — என்ன ஆச்சர்யமானவை (பார்).

குத்தின காதில் கடிப்பு இடுவதற்கு முன் வலியிராமைக்காகச் சுடர் பட்ட திரி யிடுவது வழக்கமென அதற்கு அழைக்கிறாள். அது எரியுமென்று அவன் அஞ்சுகிறான். ஆகவே எரியாமே என்றனள். நாராயணா. நாரங்களெனப்படும் ஜீவர்களுக்கு அயநமான வனே! நான் பரமாத்மா. அவனைச் சேர்ந்தவை யாகையாலே சேதநாசேதநங்க ளெல்லாம் நாரங்கள். அவற்றிற்கு இவன் ஆதாரமானவன். இப்படியிருக்க இவனை ஜீவர்களுக்கு மட்டும் அயநமென்றது அவர்களுக்கு இவன் கதியாய் (ப்ராபகனும் ப்ராப்யனுமாய்) இருப்பதனால். இப்படி ஸர்வ வ்யாபியாய் ஸர்வ ஜீவர்க்கும் கதி யாகக் கூடியவனாகிலும் இவன் சிலர்க்கு எண்ணற்கரிய பிரானாகிறான். இதனை, 'தத்தூரே தத்வந்திகே' என்ற வேதத்திற்கு உபப்ரும்ஹணமாயுள்ள சௌநக பகவானின் வாக்யம் விவரித்தது—"பராங்முகாநாம் கோவிந்தே விஷயாஸக்தசேதஸாம். தேஷாம் தத் பரமம் ப்ரஹ்ம தூராத் தூரதரே ஸ்திதம். தந்மயத்வேந கோவிந்தே யே நரா: ந்யஸ்தசேதஸ:. விஷயத்யாகிந: தேஷாம் விஜ்ஞேயம் ச ததந்திகே" இவ் வர்த்தம் இங்கே எண்ணற்கரிய பிரானே, நண்ணித் தொழுமவர் சிந்தை பிரியாத என விளக்கப் பெற்றது. நண்ணித் தொழுமெனக்கு நீ அகப்படாமலிருக்கலாமோ வென்று கருத்து. அன்றியும், எண்ணற்கரிய பிரானே அளவில்லாத பெருமையுள்ளவ னாகையாலே, 'அவிஜ்ஞாதம் விஜாநதாம்' என்கிறபடி நண்ணித் தொழுமவர்க்கும் எண்ணற்கரிய பிரானென்ற படியாம். பிரான். இவன் செய்துவரும் உபகாரங்களும் எண்ணி முடியாதவை. உபகார விசேஷங்களை ஸ்ரீ தேசிகன் அருளிச் செய்த உபகார ஸங்க்ரஹத்திலே காண்க. கண்ணுக்கு இத்யாதி. கனகக் கடிப்பைக் கண்டாவது திரியிட்டுக் கொள்ள இசைவனோ என்று அதைக் காண்பித்தனள். 'நன்று பெரி தாகும்' என்ற இலக்கணப்படி, 'நன்றுமழகிய' என்ற விடத்திற் போல நன்று மழகு = மிகவும் அழகு என்னலாம். அப்போது அழகும் என்ற உம் வீணாம். ஆக 'வண நன்று' என மேற்சொல்லும் நல்ல வர்ணம் கண்ணுக்கு நன்று மெனப்பட்ட தென்க. இவையா. இவையாம் எனவும் பாட மென்பர். உ.

இப்படி யழைத்துத் திரியிட, அது எரியவே மறுபடி அவன் வாராமலிருக்க, பொற் கடிப்புக்கு மேற்பட்டு மிகவும் உயர்ந்த மகரக் குழையைக் காண்பித்து, தான் இடும் திரியால் வெப்பம் உண்டாகுமே யல்லது எரிதல் ஒன்று மிராதெனச் சொல்லி அழைக்கிறாள்—

3. வையமெல்லாம்பெறும்வார்கடல்வாழும்மகரக்குழைகொண்டுவைத்தேன்
வெய்யவேகாதில்திரியையிடுவன்நீவேண்டியதெல்லாந்தருவன்
உய்யவிவ்வாயர்குலத்தினில்தோன்றியவொண்சுடராயர்கொழுந்தே
மையன்மைசெய்திளவாய்ச்சியருள்ளத்துமாதவனேயிங்கேவாராய். (140)

| | | | |
|---|---|---|---|
| உய்ய | (நாங்கள் உட்பட எல்லோரும்) உஜ்ஜீவிக்கும்படி | மாதவா | திருமாலே! |
| இ ஆயர் குலத்தினில் | இந்த இடையர்களின் குலத்திலே | வையம் எல்லாம் | எல்லா வுலகங்களையும் |
| தோன்றிய | அவதரித்து வந்தவனாய் | பெறும் | தம் விலைக்குட்படுத்து கின்றனவும் |
| ஒள் சுடர் ஆய் | ஒளியோடே கூடின தேஜஸ்ஸாகவான | வார்கடல் வாழும் மகரம் | நீண்ட கடலிலே வாழ்ந்து வளர்ந்துள்ள மீன் போலே விளங்குகின்றனவுமான |
| ஆயர் கொழுந்தே | இடையரின் இளங் குழந்தையே! | குழை | காதுப் பணிகளை |

| | |
|---|---|
| கொண்டு வைத்தேன் | செய்து, கொண்டு வந்திருக்கிறேன். |
| வெய்யவே | கொஞ்சமாகவே உஷ்ணம் உறைக்கும்படி |
| | காதில் திரியை |
| இடுவன் | இடுவேன். |
| நீ வேண்டியது எல்லாம் | நீ அபேக்ஷிக்கிறது எதுவாயினும் |
| தருவன் | கொடுப்பேன். |
| இள ஆய்ச்சியர் | இடைப் பெண்களின் |
| உள்ளத்து | மனத்திலே |
| மையன்மை செய்து | வ்யாமோஹத்தைச் செய்து கொண்டு இங்கே வாராய். |

மாதவனே. உன்னிடத்தில் அத்திருவே மோஹித்து இறையும் அகலகில்லேனென வுறைந்திருக்கப் பிறர் மோஹிப்பதில் என்ன வியப்பு. உன்னைக் காணாத குற்றமே ப்ரஜைகள் மோஹிக்காதது. நீ ஆயர்குலத்தில் தோன்றினதால் ஆய்ச்சிகள் மோஹிக்க முடிந்தது. ஆயர்கொழுந்தானபடியாலே உன் பர்வமுள்ள இளவாய்ச்சியருக்கு மோஹம் மிக வளர்ந்தது. இப்படித் தோன்றினதாலே சுடராயிருக்கும் உனக்கும் ஒளி வீசிற்று. ஆயர் குலத்தினிற் பிறந்து, உப்பளத்திற் கிடந்த கட்டை போலே கெட்டால் பிறர்க்கு உய்ய வியலாது. நீ அகிலஹேய ப்ரத்யநீகனாய் சுடர்போலிருப்பதாலே எங்களுடைய ஹேயங்களும் நீங்கும். அந்தர்யாமி ரூபமாயிருந்து, "அநச்நந் அந்யோ அபிசாகசீதி" என்றபடி புசிக்காமல் விளங்குவதற்கு மேற்பட்டது உன் மஹிமை. ஏனெனில்—வேண்டியதெல்லாம் தருவன் என்று நான் தருமவற்றையெல்லாம் புசித்தும் அவற்றிற்கு வசமாகாதபடி ஒண் சுடராய் விளங்குகிறு யாதலின். இப்படி நீயே சுடராயிருக்கும் போது நான் வெய்யவே காதில் திரியிட்டாலும் உனக்குச் சுடுகையுண்டோ என்றனள்.

வார்கடல் வாழும் மகரக்குழை. முதற் பாசுரத்திலே கடல் வண்ணு என்ருர். (கடலுக்கு வர்ணம் ஏற்பட்டதும் இவன் அங்கே உறைவதாலே என்று, 'ஆபோ நாரா இதி ப்ரோக்தா :............தா யதஸ்யாயநம் பூர்வம்' என்ற வ்யுத்பத்தியுள்ள நாராயண பதத்தாலே அழைத்து விளக்கினர். கடலில் வஸித்தது ப்ரம்ம ருத்ராதிகளை ஸ்ருஷ்டிப்பதற்காக வென்பது கேசவ பதத்தாலே குறிக்கப்பட்டது. "த்ஸ்ய ஸுப்தஸ்ய தேவஸ்ய நாபௌ பத்ம மஜாயத" என்றல்லவோ ப்ரமாணம். கடல் இவருக்கு ஸுகமாகப் பள்ளி கொள்ள வனுகூலமானது இவர் கடலிற் பிறந்த திருமா மகள் கேள்வனுனதாலென இங்கே மாதவா என்றதால் குறித்ததாம்.) இப்படிக் கடல் வண்ணனை இவன் காது குழை பெற்ருல் அது கடலில் வாழும் மகரம் போல் இவனிடம் விளங்கும். கடலை விட்டு வெளியிற் கிடந்த மகரம் போலே, ஒளி மிகுந்த இக் குழை கூட இவன் சேர்க்கை யிராமற் துடிக்கின்றது எனவும் இப் பதத்தின் கருத்து. ௩.

இப்படித் திரியிட்டுப் பெருக்கின காது கடிப்பிடும்படி யமைந்தனவா என்று பார்க்கக் கருதிக் கடிப்பிட வேண்டுகிருள்—

4\. வணநன்றுடையவயிரக்கடிப்பிட்டுவார்காதுதாழப்பெருக்கிக்
குணநன்றுடையரிக்கோபாலபிள்ளைகள்கோவிந்தாநீசோல்லுக்கோள்ளாய்
இணைநன்றழகியவிக்கடிப்பிட்டாலினியபலாப்பழந்தந்து
சுணநன்றணிமுலையுண்ணத்தருவனுன்சோத்தம்பிரானிங்கேவாராய். (141)

| | |
|---|---|
| கோவிந்தா ! | கோவிந்தனே ! |
| இ கோபாலர் பிள்ளைகள் | (உன்னைப் போன்ற) இந்த இடைப் பிள்ளைகள் |
| நன்று வணம் உடைய | நல்ல நிறமுள்ள |
| வயிரம் கடிப்பு | வயிரம் பதித்த காதணியை |
| இட்டு | அணிந்து (அதனால்) |
| வார்காது தாழ பெருக்கி | நீண்ட காதுகளைக் குழையிடும் படி தாழச் செய்து கொண்டு |
| நன்று குணம் உடையர் | நல்ல குணம் பெற்றிருக்கிறார்கள். |
| நீ | (அவர்களைப்போல்) நீயும் |
| சொல் | (தாய்) வார்த்தையை |
| கொள்ளாய் | கேட்பாயாக. |
| இணை | ஒன்றோடொன்று ஒத்தனவாய் |
| நன்று அழகிய | மிகவும் அழகான |
| இ கடிப்பு | இந்தக் கடிப்புகளை |
| இட்டால் | (நீ) அணிந்தால் |
| இனிய | தித்திப்பான பலாப்பழம் தந்து நான் |
| சுணம் நன்று அணி முலை | சுணமுள்ள நல்ல அழகிய முலையை |
| உண்ண தருவன் | உண்பதற்குக் கொடுப்பேன். |
| பிரான் | உபகாரகனே ! |
| சோத்தம் | அஞ்சலி (செய்கிறேன்). இங்கே வாராய். |

திரியிட்டுப் பெருக்கி, கடிப்பிட்டுத் தாழப் பெருக்கிக் குழையிடுவது வழக்கமெனப் பாசுரம் அமைந்துள்ள முறையில் தோன்றினதாம். இப் முறையையே முன்னோர்களும் ஆதரித்தனரல்லது தாழப்பெருக்கிக் கடிப்பிட்டதாகக் கூறினரல்லர். தாழப் பெருக்குவதாவது—குழையிடத் தக்கபடி தாழ்த்துவது. கடைப் பாசுரத்திலே, 'வார்காது தாழப் பெருக்கி யமைத்து மகாக் குழையிட' என்றானன்றோ. அல்லது காதைத் தாழப் பெருக்குவது சில தேச வழக்கமாம். ஆக மகாக்குழையும் மிகவும் நீண்டிருக்கும்.

(வண நன்று. வர்ணத்தில் நல்லது. இப்படி குண நன்று, சுண நன்று என்ற விடத்திலும் கொள்க.) சுணம். சுணங்கு என்றது சுணமாய் ஒருவிதமான நிறம், தேமல் என்றுரைப்பர். அழகுதேமலுள்ள முலை யென்றபடி. வண்ணம் வணமாவது போல் சுண்ணம் சுணமாவதாகையாலே சுணமாவது ஒருவகை வாஸனைப் பொடியாம். இது கண்ணன் உண்ணும் பாலுள்ள பயோதரத்திற்கு அவள் செய்யும் பரிஷ்காரம். இனிய பலாப் பழத்திற்கும் சில துர்குண முண்டு. இவ்வித மணத்தோடு மதுரமான இந்த ஸ்தன்ய முண்டால் ஆரோக்கியம் அதிகமாமெனவும் கருத்தாம்.

இப்படி கடிப்பிட வழைத்துக் காது வளராததால் அதை வைத்துவிட்டுத் திரியையே இட நினைத்தனள். அதற்குள் கண்ணன் கிளம்பிவிட்டான். அப்போது சோத்தம்பிரான் இங்கே வாராய் என்றனள். சோத்தம். அஞ்ஜலி பண்ணுமவர் தாழ்ச்சி தோற்றச் சொல்லும் பதம் இது என்றனர் முன்னோர். இது ஸ்தோத்ரம் என்ற வட மொழியின் திரிபெனத் தமிழர் கொண்டனர். அதில் ச்ரமம் அதிகம். 'ஸாஹஸ்தம்' என்றதின் திரிபாகவும் இருக்கக் கூடும். போஅஹம், போஹம் என்றவாறு பதங்களுமுள. பெரிய திருமொழியிலே (9. 5. 9.) 'சோத்தென நின்று தொழ' என்று சோத்து என்ற பத ப்ரயோகமும் காண்க. பலாப் பழத்திற்கும் ஸ்தன்யத்திற்கும் மேற்பட்டது பிரானுக்குச் சோத்தம். 'பிரானே' என்னாமல் 'பிரான்' என்றே விளித்தது அவன் தன்னிட மிருந்து தற்போது அகன்றாலும் ஸமீபத்திலிருப்பதனாலென்க. ச.

வெகு தூரம் விலகிச் சென்றவனைத் திரியிட்டுக் கொள்ளவே வரும்படி மேலும் வேண்டுகிறாள்—

5. சோத்தம்பிரானனென்றிரந்தாலுங்கொள்ளாய்சுரிகுழலாரொடுநீபோய்
கோத்துக்குரவைபிணைந்திங்குவந்தாற்குணங்கொண்டிடுவனோநம்பீ
பேர்த்தும்பெரியனவப்பந்தருவன்பிரானேதிரியிடவொட்டில்
வேய்த்தடந்தோளார்விரும்புகருங்குழல்விட்டுவேநீயிங்கேவாராய். (142)

| | | | |
|---|---|---|---|
| பிரான் சோத்தம் | பிரானே! உனக்கு அஞ்ஜலி | பிரானே! | உபகாரகனே! |
| என்று இரந்தாலும் | என்று சொல்லி வேண்டினாலும் | திரி இட ஒட்டில் | திரியிடவாவது இசைந்தால் |
| கோள்ளாய்! | சொல்லைக் கேட்காதவனே! | பெரியன அப்பம் | பெரிய அப்பங்களை |
| நீ போய் | நீ ஓரிடம் போயிருந்து | பேர்த்தும் | மறுபடியும் |
| சுரி குழலா ரோடு | சுருண்ட கூந்தலுடைய பெண் களோடு | தருவன் | கொடுப்பேன். |
| கோத்து | கோத்துக் கொண்டு | வேய் தடம் தோளார் | மூங்கில் போன்ற விசாலமான தோள்கள் உடைய ஸ்திரீகள் |
| குரவை பிணைந்து | கலந்து கும்மியிட்டுக் கூத்தாடி விட்டு இங்கு வந்தால், | விரும்பு | விரும்பக் கூடியவனை. |
| நம்பீ | கல்யாணகுண பூர்ணனே! | கரு குழல் விட்டுவே | கறுத்த கூந்தல் உடைய ஸ்ரீ விஷ்ணுவே! |
| குணம் கோண் டிடுவனோ | (உனக்கு) குணமிருப்பதாகக் கொள்வேனோ | | நீ இங்கே வாராய். |

'சோத்தம் பிரான்' என்றபோதும் அவன் போய்க்கொண்டே யிருந்தான். இது உனக்குத் தகாதென்றாள். இப்போதே வந்துவிடுகிறேனென்று சொல்லிக் கொண்டே போய்க் கொண்டிருந்தான். நீ போவது எதற்காகவென எனக்குத் தெரியும். குரவை (ராஸக்ரீடை போன்ற தொன்று) யாட வல்லவோ நீ போகிறாய். நீ சீக்கிரம் வர முடியாதே. அப்படியாயின் கோபால பிள்ளைகள் போல் நீ குணமுள்ளவனாக முடியுமா? நம்பி யென்ற பெயரும் போய்விடுமே. உனக்கும் உன்னோடு குரவையாடும் எல்லோர்க்கும் ஆகும்படி பெரிய பெரிய அப்பங்களை மேன் மேல் தருவேன். பிறகு போய் ஆடலாம். ஏனெனில்—அந்தச்சுரி குழலார் கருங்குழல் விட்டுவான உன்னை விடாமல் உன்னோடு வேய்த்தடந்தோள் வீணாகாதபடி குரவையாட விரும்பி யுள்ளனர். நீ விஷ்ணு வாயிற்றே. ஸர்வ வ்யாபியான நீ ஒவ்வொரு ஸ்திரீக்கும் ஒவ்வொரு கண்ணனாய் நின்று ராஸ க்ரீடை செய்ய விரும்பினாயே. என்னை விட்டு அகலாமல் என்னிடம் ஒரு ரூபத்தோடிருந்து, இத் திரியு மிட்டுக்கொள்ள லாகாதா என்றனள். (ரு)

அழைத்து ஸ்தன்யம் உண்ணச் செய்து கொண்டு கடிப்பிடப் பார்க்கிறாள்—

6. விண்ணெல்லாங்கேட்கவழுதிட்டாயுன்வாயில்விரும்பியதனைநான்நோக்கி
மண்ணெல்லாங்கண்டேன்மனத்துள்ளேயஞ்சிமதுசூதனேயென்றிருந்தேன்
புண்ணேதுமில்லையுன்காதுமறியும்பொறுத்திறைப்போதிருநம்பி
கண்ணாவென்கார்முகிலேகடல்வண்ணாகாவலனேமுலையுணாயே. (143)

| | | | |
|---|---|---|---|
| நம்பி | குணபூர்ணனே! | என் மனத்து உள்ளே அஞ்சி | இதென்ன? எப்படி ஜரிக்கும் என முதலில் மனத்தினுள்ளே பயமுற்று |
| நான் விரும்பி | (நீ மண் தின்றிருக்கிறாயா வென) நான் பார்க்க விருப்பம் கொண்டு | மது சூதனே என்று இருந்தேன் | பிறகு, இவன் உலக முண்ட பெருவாயனான மதுசூதனன் அன்றி வேறல்லன் என அப்போதே தேறிநின்றேன். (இப்படிப்பட்ட நீ நான் கடிப்பிடும் போது) |
| உன் வாயில் | நீ திறந்துகாட்ட உன்வாயினுள் | | |
| அதனை நோக்கி | தின்ற சுவடை நாக்கில் கவனித்து விட்டு (நீ நன்றாகத் திறந்தவாறே | | |
| மண் எல்லாம் கண்டு | அங்கு) எல்லா உலகங்களையும் பார்த்து | விண் எல் லாம் கேட்க அழுதிட்டாய் | ஆகாசம் அடங்கலும் கேட்கும்படி அழுது விட்டாயே. |

| | |
|---|---|
| புண் ஏதும் இல்லை | (இப்படி நீ அழும்படி உன் காதில்) புண் ஒன்றுமில்லையே. |
| உன் காது மறியும் | உனது காது (கடிப்பிடும் போது) மடங்குவது மாத்திரம். (அதையும்) |
| இறை போது | க்ஷண காலம் |
| பொறுத்து இரு | பொறுத்துக் கொண்டு ஓடாமலிரு. |
| என் கண்ணா | எனது கண்ணனே ! |
| கார் முகிலே | வர்ஷாகால மேகம் போன்றவனே ! |
| கடல் வண்ணா | ஸமுத்ரத்தின் வர்ணமுள்ளவனே ! |
| காவலனே | காப்பதில் வல்லவனே ! |
| முலை உணாய் | (கடிப்பிடுவதைக் கவனியாது) ஸ்தன்யம் உண்ணக் கடவாய். |

விரும்பியதனை என்றது ஒரு பதமாய், விரும்பியதை = நான் உன் வாயில் பார்க்க விரும்பிய சுவடை(ப் பார்த்து) என்றபடியுமாம். முன் பின் பாசுரங்களிற் கேசவாதி நாமங்கள் விளிச் சொற்கள். இங்கு மதுசூதனே என்ற விடத்தில் ஏ என்பது தேற்றக் குறிப்பாம். அன்றி மதுசூதனே என்று மதுசூதா என்று விளித்து என வுரைக்க. நான் அப்போது அஞ்சி 'அப்பா, மதுசூதா இதென்ன மாயை' என்று சொல்லிக் கொண்டு இருந்தே னென்றபடி.

கட்டியணைத்துக் கடிப்பிடத் தொடங்கினபோது அழுதான். அதை நிறுத்த முலை யுண்ணச் செய்தாள். அழுகையை நிறுத்தி அதனை உண்ணும்போது கடிப் பிடுகிறாள். அப்போது அவன் அழாமலும் எழாமலுமிருப்பதற்காக முன்னொரு ஸமயம் நடந்த வாலாற்றை நினைப்பூட்டி அவன் மேன்மையைச் சொல்லித் துதித்து உண்பதில் ஊக்கம் வைக்க வேண்டுகிறாள். அழுதிட்டாய் என்பதற்கு முன் ஒரு கால் நீ மண் உண்டதை நான் நோக்க முயன்றபோது அழுதாயே என்றும் பொருளாம். இங்குக் கடிப்பிட முயன்றபோதே அவன் மண்ணைத் தின்றதாகவும் அதற்கு அவள் அடித்த தாகவும் அதற்காக அவன் அழுததாகவும் அச்சமயம் உலகங்களை அவன் வாயிற் கண்டு அஞ்சினதாகவும் அதனை யப்போதே சொல்லிக் கொண்டே கடிப்பிடுவதாகவும் உரை செய்வர். நோக்கி நோக்க என்பர். இருந்தேன் என முன்னோர் கொண்ட பாடம். 'அறிந்தேன்' என்று படித்தனர் சிலர். சு.

இப்படி மடியில் உட்காரவைத்து மார்பில் அணைந்து முலையுண்ண வைத்துக் கொண்டே கஷ்டப்பட்டுக் கடிப்பிட்டனள். அதை நன்றாக அணிந்து கொள்வதற்குள் ளாகவே கண்ணன் வலி பொறுக்காததாலும் உரோஷத்தாலும், முலையும் வேண்டாம், ஒன்றும் வேண்டாமென விலகி யோடிக் காதிலிட்ட கடிப்பையும் களைந்தெறிந்து விட் டான். அப்போது சொல்லுகிறாள் —

7. முலையேதும்வேண்டேனென்றோடிநின்காதிற்கடிப்பைப்பறித்தெறிந்திட்டு
மலையையெடுத்துமகிழ்ந்துகன்மாரிகாத்துப்பசுநிரைமேய்த்தாய்
சிலையொன்றிறுத்தாய்திரிவிக்கிரமாதிருவாயர்பாடிப்பிரானே
தலைநிலாப்போதேயுன்காதைப்பெருக்காதேவிட்டிட்டேன்குற்றமேயன்றே. (144)

| | |
|---|---|
| திரிவிக்கிரமா | த்ரிவிக்கிரமனே ! |
| சிலை ஒன்று | ஒப்பற்ற (சிவ) தனுஸ்ஸை |
| இறுத்தாய் | முறித்தவனே ! |
| திரு ஆயர்பாடி பிரானே ! | திருவாய்ப்பாடிக்கு உபகாரகனே ! |
| முலை | ஸ்தன்யத்தையும் |
| ஏதும் | மற்றும் எதையும் |
| வேண்டேன் | நான் விரும்புகிறேனல்லேன் (எனக்கு வேண்டா) |
| என்று | என்று சொல்லிக் கொண்டே |
| ஓடி | விரைந்தோடி (இட்ட கடிப் பைச் சரியாக இடப் பின் தொடருமென்னை நிறுத்த)

| | |
|---|---|
| நின் காதில் கடிப்பை பறித்து எறிந்திட்டு | உன் காதில் நானிட்ட காதணியைக் களைந்து எறிந்துவிட்டு |
| மகிழ்ந்து | (இந்திரன் வெகுண்டு மேகங்களை ஏவினபோது கண்டு) உகந்து |
| | மலையை எடுத்து |
| கல் மாரி | கல் மழையினின்று |
| காத்து | (எங்களை யெல்லாம்) ரக்ஷித்து |
| பசு நிரை | பசுக்களின் கூட்டத்தை |
| மேய்த்தாய் | மேய்த்தவனே ! |
| உன் காதை | உனது காதுகளை |
| தலை நிலா போதே | உன் தலை நிமிர்ந்து நிற்க முடியாமலிருந்த பருவத்திலேயே (நீ உத்தான சயநனாயிருந்த போதே) |
| பெருக்காதே விட்டிட்டேன் | குத்தி வளர்க்காமல் இருந்து விட்டேன். |
| குற்றமே அன்றே | (இது எனது) குற்றமே யன்றோ ? |

மூவுலகளந்ததும், மா பெரும் வில்லை முறித்ததும், இருட்டில் ஆயர்பாடிக்கெழுந்தருளி அசுரர்களை மாய்த்து ஆயர்களைக் காத்ததும், பசு நிரை மேய்த்ததும், அப்பொழுது ஒருகால் அமரர்பதி வெகுண்டு வரக் காள மேகங்கள் கல்லொடு கார்பொழிய அவ்வளவு வர்ஷத்திலும் விழாதபடி விரலாலேயே மலையெடுத் தேந்தினதும் செய்து மகிழ்ச்சியே பெற்றுள்ள உனக்குக் குத்தின காதிற் கடிப்பிடும்போதுள்ள கஷ்டமா தாங்க முடியவில்லை. இப்படிப்பட்டவனென்று தெரிந்திருந்தால் நீ பச்சைக் குழந்தையாயிருக்கும்போதே குத்தி வளர்த்துக் கடிப்பிட்டுக் கண்டு மகிழ்ந்திருப்பேன். பிறந்து 12, அல்லது 16-ம் நாளில் கூடக் காதுகுத்தலாமே என்றவாறு.

இதென்ன, பறித்தெறிந்திட்டு மாரி காத்து என்றாரே. ஓடிக் கடிப்பைப் பறித்தெறிந்தவன் மாரி காத்து மாடுகள் மேய்க்கும் வரையிலா கடிப்பிட்டுக் கொள்ளாமலிருந்தான். இவ்வளவு காலமான பிறகா மறுபடி திரியிட அடுத்த பாசுரத்திலே அழைக்கிறது என்னில்—முலை யுண்ணும் பிராயத்திலேயே மலை யெடுத்துக் காத்ததாக இங்கு ஆழ்வார் அனுபவம் ஆகுக. அன்றி சீதக்கடலிலே விவரித்தவாறு ஆழ்வார் தம்மைத் தம் காலத்திலுள்ள யசோதையாகப் பாவித்திருப்பதால் கண்ணன் இப்போது குழந்தையாயிருப்பதாகக் கண்டு கடிப்பிட முயன்று, முன் கடிப்பைப்பறித்தெறிந்திட்டதும், கல் மாரி காத்ததுமெல்லாம் சொல்லிக் குறை படுகிறாரென்க. நாடோடி என்றாற்போலே ஓடி எனக் கருத்தாப் பொருளில் வந்த 'இ' விகுதியாய் அண்மை விளியாக வைத்து, முலையேதும் வேண்டேனென்று சொல்லி நின் காதிற் கடிப்பைப் பறித்தெறிந்திட்டு ஓடினவனே எனவும் பொருள் கூறலாம். பிறகு வெகு தூரம் ஓடிவிட்டதால் சேய்மை விளி. விட்டிட்டேன் குற்றமே. நீ ஓடுவது உன் குற்றமன்று. முன்னமே காதைப் பெருக்காதது என் குற்றமே யென்றபடி. விட்டிட்டேன் குற்றமே. இங்கு விட்டிட்டேன் என்னுமது தன்மைவினையாலணையும் பெயராம். ஆக விட்டிட்ட எனது குற்றமே யன்றோ இது எனவும் பொருளாம். எ.

முன் மண் உண்டதை நினைப்பூட்டி, குழந்தையாய்ப் படுத்திருந்தபோதே காதைப் பெருக்காதது குற்றமாக அவள் சொன்ன போது, மண் உண்டதாக வைத்து நீ என்னைப் படுத்தினதே குற்றம் அதனை நினைப்பூட்டவே உரோஷத்தால் கடிப் பெறிந்து ஓடினேன் என்று அவன் கூற, அதையும் அதன்மேல் யசோதை சொன்னதையும் முறையே ஈரிரண்டு அடிகளிற் சொல்லி ஆழ்வார் அநுபவிக்கிறார் இப் பாட்டில்—

8. என்குற்றமேயென்றுசொல்லவும்வேண்டாகாணென்னைநான்மண்ணுண்டேனாக
அன்புற்றுநோக்கியடித்தும்பிடித்துமனைவர்க்குங்காட்டிற்றிலையே.
வன்புற்றரவின்பகைக்கொடிவாமனநம்பியுன்காதுகள்தூரும்
துன்புற்றனவெல்லாந்தீர்ப்பாய்பிரானே திரியிட்டுச்சொல்லுகேன்மெய்யே. (145)

| | |
|---|---|
| நான் மண் உண்டேன் ஆக | 'நான் ஒரு ஸமயம் ஏதோ மண் உண்டவனாயிருக்க (அப்போது) |
| அன்பு உற்று | உண்டது ஜரிக்காதே என என்னை வளர்க்கும் அன்பிலே அழுந்தி |
| நோக்கி | மண் உண்ட சுவடைக் கண்டு (வெகுண்டு) |
| என்னை அடித்தும் | நீ வளர்க்கும் அன்பு மீறிக் கண்டபடி யெல்லாம் என்னையடித்தும் (அதோடு நிற்காமல்) |
| அனைவர்க்கும் | விலக்க வந்தாரெல்லோர்க்கும் |
| பிடித்தும் காட்டிற்று இலையே | என்னை விடாமற் பிடித்துக் கூட மண் உண்டதாகக் காண்பித்ததில்லையா? |
| என்? | இதென்ன? |
| குற்றமே | உன் குற்றமே |
| என்று சொல்லவும் வேண்டா | என்றிப்படி சொல்லவே வேண்டாம். (உனக்கே தெரியும்.) (இப்படி உன்னிடம் குற்றமிருக்க) |
| என் குற்றமே என்று சொல்லவும் வேண்டா | இப்போது நான் ஓடுவதையும் எறிவதையும் எனது குற்றமாக உன் சொல்லாற் குறிக்கவும் வேண்டா.' |
| வல் புற்று அரவின் பகை கோடி | 'வலிய புற்றிலுள்ள பாம்பையும் பகைக்கும் கருடனைக் கொடியிலுள்ள |
| வாமன | வாமனனே! |
| நம்பி | குண பூர்ணனே! |
| உன் காதுகள் தூரும் | இப்படி உன் காதிலிடாமலிருந்தால் அவை தூர்ந்துவிடும். |
| பிரானே | உபகாரகனே! |
| திரி இட்டு | திரியை அணிந்துகொண்டு |
| உற்றன துன்பு எல்லாம் | நேரும் துன்பங்களையெல்லாம் |
| தீர்ப்பாய் | தீர்க்கக் கடவாய். |
| மெய்யே சொல்லுகேன் | திரிதான் இடுவேன்; கடிப்பு இடுவதில்லை; மெய்யே சொல்லுகிறேன்.' (காண்—அசை) |

தீர்ப்பாய்—தீர்ப்பவனே! திரியிட்டுச் சொல்லுகேன் மெய்யே—என ஒரு வாக்யமாக்கி நீ வந்தாயானால் திரியிட்டு விட்டுப் பிறகு இனி அடிக்கமாட்டேனென ஸத்யம் செய்வேனெனவு முரைப்பர். பதவுரை நோக்குக. அ.

கடிப்பிடாமல் திரியிடுவதாகச் சொல்லவே கண்ணன் ஓடாமல் நின்று சிரித்தான். அதனைக் கண்டு அங்குள்ள பெண்கள் எல்லோரும் சிரித்தனர். அப்போது அவன் சொல்லுவதும் அவள் சொல்லுவதும் முறையே இப் பாட்டில்—

9. மெய்யென்றுசொல்லுவார்சொல்லைக்கருதித்தொடுப்புண்டாய்வெண்ணெயையென்று
கையைப்பிடித்துக்கரையுரலோடென்னைக்காணவேகட்டிற்றிலையே.
செய்தனசொல்லிச்சிரித்தங்கிருக்கில்சிரீதராவுன்காதுதூரும்
கையில்திரியையிடுகிடாயிந்நின்ற காரிகையார்சிரியாமே. (146)

| | |
|---|---|
| மெய் என்று சொல்லுவார் சொல்லை | 'உண்டது மெய்தான் என்று வெறுமனே சொல்லுபவரின் பேச்சை |
| கருதி | ப்ரமாணமாகக் கொண்டு |
| வெண்ணெயை தொடுப்பு உண்டாய் என்று | வெண்ணெயை நீ களவாகப் புசித்தவனே என அதட்டி |
| கையை பிடித்து | ஓடாதபடி என் கையைத் திடமாகப் பிடித்துக் கொண்டு |
| கரை உரலோடு | விளிம்புகள் உள்ள உரலோடு சேர்த்து |
| காணவே | எல்லோரும் அப்படி என்னைக் காணும்படி (தாமோதரன் எனச் சிரிக்கும்படி) |

| | |
|---|---|
| என்னை கட்டிற்று இலையே | என்னை நீ கட்டினதில்லையா?' |
| சிரீதரா | 'ச்ரீதரனே! |
| செய்தன சொல்லி | முன் நான் தவறிச் செய்தவற்றைச் சொல்லி |
| சிரித்து | அவற்றை நான் இசைவது கண்டு சிரித்து |
| அங்கு இருக்கில் | அங்கேயே நின்றால் |
| உன் காது தூரும் | திரியிடாவிட்டால் காதுகள் தூர்ந்துவிடும் (ஆக) |
| நின்ற இகாரிகையார் சிரியாமே | நின்று கொண்டிருக்கும் இப் பெண்கள் பார்த்துச் சிரிக்காதபடி |
| கையில் திரியை இடுகிடாய் | என் கையிலுள்ள திரிகளை தரித்துக் கொள்ளக் கடவாய்.' |

சொல்லுவார் சொல்லை. நான் உண்மையில் மண் உண்டது இருக்கட்டும். நான் வெண்ணெய் உண்ணாமலிருக்க, உண்ணவில்லை யென்றும் பலகால் சொல்ல, வாயிலும் சுவடு கூட விராமலிருக்க, சொல்லுவார் சொல்லைக் கேட்டுச் செய்தது அதற்கு மேற்பட குற்றமன்றோ என்றவாறு. தொடுப்பு தந்திரம்—களவு. கையில் திரியை. இதோ பார் கையில் திரியே யிருக்கிறது; கடிப்பில்லை. சிரியாமே—ச்ரீதரா. பிறர் கண்டு சிரிப்பதை ஸஹியாதவனாகில், வெறுங் காதையும், நீ கட்டுக்கு அடங்காததையுங் கண்டு சிரியாதபடி நின்று அணிந்துகொள். இல்லையேல், ச்ரீதரா! உன் திருவும் சிரிக்கும். கூ.

கண்ணபிரான் கொஞ்சம் கொஞ்சமாக இசைகிறான். ஆகவே மேற் பாட்டில் ஓர் அடி மாத்திரம் அவன் பேசுவது. நீ திரியைக் காண்பித்துக் கடிப்பே யிடப்போகிறாய் என்றல்லவோ காரிகையார் சிரிப்பு எனக்கு விளக்குகிறது என்று தோற்ற அவன் சொல்லுவதும், அதற்குமேல் யசோதை சொல்லுவது மிங்குள.

10. காரிகையார்க்குமுனக்குமிழுக்குற்றென்காதுகள்வீங்கியெரியில்
தாரியாதாகில்தலைநோந்திடுமென்றுவிட்டிட்டேன்குற்றமேயன்றே
சேரியிற்பிள்ளைகளெல்லாருங்காதுபெருக்கித்திரியவுங்காண்டி
ஏர்விடைசெற்றிளங்கன்றெறிந்திட்டவிருடீகேசாவென்றன்கண்ணே. (147)

| | |
|---|---|
| காதுகள் | "(என்) காதுகள் |
| வீங்கி எரியில் | இடுவதைத் தாங்காது வீங்கி எரிச்சலுங் கொண்டால் |
| காரிகையார்க்கும் | (சிரிக்கும்) பெண்களுக்கும் |
| உனக்கும் | (சிரிப்பை அடக்கிக் கொண்டு கடிப்பிடக் கூப்பிடும்) உனக்கும் |
| இழுக்கு | நஷ்டம் (குற்றம்) |
| என் உற்று | வருவது என்ன?" |
| தாரியாதாகில் | "இடுவதைச் சுமக்க மாட்டாமை யுண்டாகில் |
| தலை நோந்திடும் | தலை உட்புறம் நோவுண்டாம் |
| என்று விட்டிட்டேன் | என்று எண்ணி இளம் பருவத்திலேயே குத்தி வளர்க்காம லிருந்து விட்டேன். |
| குற்றமே அன்றே | எனது குற்றம் அன்றோ அது. |
| ஏர் விடை | கொழுத்த விருடபாசுரனை |
| செற்று | அழித்து |
| இள கன்று எறிந்திட்ட | (விருடபாசுரனைவிட வலிவின் குறைவாலே) கன்றாய் நின்ற அசுரனை (விளாமரத்திலே) விட்டெறிந்த |
| இருடீகேசா! | ஹ்ருஷீகேசனே! |
| என் தன் கண்ணே | எனக்குக் கண்ணாயிருப்பவனே! |
| சேரியில் | இடைச் சேரியில் உள்ள |
| பிள்ளைகள் எல்லாரும் | எல்லா இடைப் பிள்ளைகளும் |
| காது பெருக்கி | காதுகளை வளர்த்தி |
| திரியவும் | திரிவதையும் |
| காண்டி | காண்கிறாய். |

நீ என் கண்ணாயிற்றே. கடிப்பிட்டு உனக்குக் காது வீங்கி எரியுமானால் அது எனது நோவன்றோ? அதனாலல்லவோ நான் தலை நோவாமைக்காக இளம் பருவத்திலே காது பெருக்காமலிருந்தது. இப்போது வீங்கா: எரியவும் செய்யா. ஆக நீ ஏன்

கடிப்பை எறிந்து விட்டாய். இது வத்ஸாஸுராதிகளைப் போல் அசுரனுமன்றே என்றனள். காண் + டி = காண்டி. டி. முன்னிலை யொருமை விகுதி. ஏர் அழகு என்பர். எதிர்ந்த எனவுரைத்தனர் முன்னோர். எழுச்சி யென்னலாம். 'ஏரி' எனப் பாடமிருக்கலாம். இது முன்னடிகளோடும் இணையும். ஏரியாவது எருத்தின் முரிப்பு. (கூகூஷ்) விருடபாசுரனுக்கு இதுவே சிறப்பாகப் புராணம் கூறும். ம.

இப்படி வருத்தமும் விருப்பமும் தோன்ற இரந்த தன் அன்னையின்பால் இரக்கம் கொண்டு கண்ணன் தன்னைக் காணும் காரிகையாரையும் குளிரக் கலந்து கடாக்ஷித்து நிற்க, அத்தசையிலே அவ்வாராவமுதை அனுபவித்து உள்ளதை வெளியிட்டுக் கடிப்பிட ஆவல் கொண்ட யசோதையின் பாசுரமிது—

11. கண்ணைக்குளிரக்கலந்தெங்கும்நோக்கிக்கடிகமழ்பூங்குழலார்கள்
எண்ணத்துளென்றுமிருந்துதித்திக்கும்பெருமானேயெங்களமுதே
உண்ணக்கனிகள்தருவன்கடிப்பொன்றும்நோவாமேகாதுக்கிடுவன்
பண்ணைக்கிழியச்சகடமுதைத்திட்ட பற்பநாபாவிங்கேவாராய். (148)

| | | | |
|---|---|---|---|
| குளிர | கண்டு குளிர்ந்திருக்க, (தான் அவர்களை அன்புற்று நோக்குவதை அவர்கள் தெரிந்து கொள்ளும்படி) | பெருமானே | மஹாபுருஷனே ! |
| கண்ணை | தன் திருக்கண்ணை | எங்கள் அமுதே | மற்றவர்களுக்குங்கூட போக்யமானவனே ! |
| கலந்து | அவர்கள் கண்களோடு முதலிற் கலந்து | உண்ண | நீ உண்பதற்கு |
| | | கனிகள் | (அமுதான உனக்கும் போக்யமான பல வகைப்) பழங்களை |
| | | தருவன் | நான் கொடுப்பேன். |
| | | கடிப்பு | காதணியை |
| எங்கும் நோக்கி | அவர்களின் அங்கங்களையு மணிகளையு மெல்லாம் உற்று நோக்கி | ஒன்றும் நோவாமே | கொஞ்சங்கூட நோவாதபடி |
| | | காதுக்கு இடுவன் | திருக்காதுக்கு அலங்காரமாக்குவேன். |
| கடி கமழ் | வாசனையை வீசுகின்ற | சகடம் | சகடத்தை |
| பூ | புஷ்பங்களை (அணிந்த) | | |
| குழலார்கள் | கூந்தல் உடைய காரிகைகளின் | பண் கிழிய | அதன் அமைப்பு குலையும்படி |
| எண்ணத்துள் | மனத்திற்குள்ளே | உதைத்திட்ட | திருவடியால் தூரத்தள்ளியருளின |
| என்றும் இருந்து தித்திக்கும் | (நீ கடாக்ஷித்த வண்ணமே) எப்பொழுதுமிருந்து போக்யமாயுள்ள | பற்பநாபா | பத்மநாபனே ! இங்கே வாராய். |

என்றுமிருந்து தித்திக்கும். மனத்தில் பாவனையால் தோற்றித் தித்திக்கும் மற்றவைகள் உண்மையில் மனத்தில் வீற்றிருக்க மாட்டா. பெருமான் இருந்தே தித்திப்பது சிறப்பு.

பண்ணை. 'ஐ' என்பது 'அசுரரைத்தேய வளர்கின்றான்' என்ற விடத்திற் போல் அசை. அல்லது, சகடம் கிழியும்படி அதன் பண்ணை உதைத்து என இரண்டாம் வேற்றுமையாம். இட்ட என்பதைத் துணைவினையாக்காமல் பிரித்தனர் முன்னோர். ஆக, உனக்கு ரக்ஷகமாக வைத்த சகடம் அசுராவேசத்தாலே நலிய வர அதை யழித்துத் தன்னை எமக்குத் தந்தருளின என்றதாம், 'திரியிட்டுச் சொல்லுகேன் மெய்யே' என்ற விடத்திலும் கடிப்பிடவே அழைத்தாள் என்பது இங்கே வ்யக்தமாயிற்று. மக.

நீ கடிப்பிட்டால் இடு. ஆனால் கையைப் பிடித்து பலாத்காரமாய் இடாதே. காது கடிப்பிடும்படி பெருகி யிருந்தால் நான் ஒன்றும் தடை செய்வதில்லை என்று

*தோற்றக் கண்ணன் மொழிந்ததையும், யசோதை யழைத்ததையும் சொல்லுவது மேற் பாசுரம்—*

12. வாவென்றுசொல்லியென்கையைப்பிடித்துவலியவேகாதிற்கடிப்பை
நோவத்தரிக்கிலுனக்கிங்கிழுக்குற்றென்காதுகள்நோந்திடுங்கில்லேன்.
நாவற்பழங்கோண்டுவைத்தேன்இவைகாணுய்நம்பீமுன்வஞ்சமகளைச்
சாவப்பாலுண்டுசகடிறப்பாய்ந்திட்டதாமோதராவிங்கேவாராய். (149)

| | |
|---|---|
| வா என்று சொல்லி | "நோவாமே கடிப்பிடுவேன் வா வென அழைத்து |
| கடிப்பை | காதணியை |
| என் காதில் | எனது காதுகளில் |
| நோவ | காது நோவு பெறும்படி |
| வலிய | வலிவாக அழுத்தி |
| என் கையை பிடித்து | நோவு தாங்காமல் தடுக்கும் என் கையையும் பிடித்துக் கொண்டு |
| தரிக்கில் | இடுவாயாகில் |
| இங்கு | இச் செயலில் |
| உனக்கு இழுக்கு உற்று என் | உனக்கு என்ன (வருத்த) குற்றமுண்டாவது ? |
| காதுகள் நோந்திடும் | எனக்கே காதுகள் நோவு பெறும். |
| கில்லேன் | நான் தாங்கவல்லேனல்லேன்." |
| நம்பீ | "(இவ்வளவு சம்மதித்து இரங்கின) குண பூர்ணனே ! |
| முன் | முன்னே |
| வஞ்சம் மகள் | வஞ்சனையுடன் வந்த பூதனையென்னும் ஸ்திரீயானவள் |
| சாவ | மாண்டு போம்படி |
| பால் உண்டு | அவள் முலைப் பாலைப் புசித்து |
| சகடு இற | சகடாசுரன் முறியும்படி |
| பாய்ந்திட்ட | பரம்பின (காலைத் தூக்கின) |
| தாமோதரா | தாமோதரனே ! |
| நாவற் பழம் கொண்டு வைத்தேன் | (உனக்கு இஷ்டமான) நாவற் பழங்களை முன்னமே கொண்டு வைத்திருக்கிறேன். |
| இவை காணுய் | அவை இவை ; பார். இங்கே வாராய். |

மகளை. *முன் பாசுரத்தில் 'பண்ணை' என்றவிடத்திற் போல் 'ஐ' அசை. இப்படி யழைத்து எம்பெருமான் எழுந்தருள அவன் இஷ்டப்படி கடிப்பிட்டுகந்தாளென முடித்துக் கொள்க.* ௰௨.

13. வார்காதுதாழப்பெருக்கியமைத்துமகரக்குழையிடவேண்டி
சீராலசோதைதிருமாலைச்சொன்னசொற்சிந்தையுள்நின்றுதிகழ
பாரார்தோல்புகழான்புதுவைமன்னன்பன்னிருநாமத்தாற்சொன்ன
ஆராதவந்தாதிபன்னிரண்டும்வல்லாரச்சுதனுக்கடியாரே. (150)

| | |
|---|---|
| அசோதை | யசோதையானவள் |
| திருமாலை | தன் மகனாய் நின்ற திருமாலைக் குறித்து |
| வார் காது தாழ பெருக்கி | (அவனது) நீண்ட காதுகளை தாழ்த்தி வளர்த்தி |
| அமைத்து | குழையிடலாம்படி செய்து |
| மகரக்குழை இட | |
| வேண்டி | அபேக்ஷித்து |
| சீரால் சொன்ன | சிறப்பு தோன்றச் சொன்ன |
| சொல் | சொற்கள் |
| சிந்தையுள் | மனத்தில் |
| நின்று திகழ | நிலை நின்று விளங்க |
| பார் | பூமியில் |
| ஆர் | பரவிய |
| தோல் | பழைமையான |
| புகழான் | புகழுடைய |
| புதுவை மன்னன் | ஸ்ரீ வில்லிபுத்தூருக்கு நிர்வாஹகன் (பெரியாழ்வார்) |
| பன்னிரு நாமத்தால் | பன்னிரண்டு பாட்டுகளில் முறையே பன்னிரு நாமங்களை வைத்து |
| சொன்ன | பணித்த |
| அந்தாதி | அந்தாதித் தொடரான |
| ஆராத | போது மென்னும்படி யிராத |
| பன்னிரண்டும் | இதற்கு முன்னுள பன்னிரண்டு பாசுரங்களையும் |
| வல்லார் | அநுஸந்தித்து ஸமர்த்தரானவர் |
| அச்சுதனுக்கு | எம்பெருமானுக்கு |
| அடியார் | கிங்கரராவர். |

வேண்டி—விரும்பி. அல்லது வேண்டிச் சொன்ன = திருமாலைக் கெஞ்சிக் கேட்டிக் கொண்டு சொன்ன. திகழ. ஆழ்வாரின் சிந்தையில் விளங்கினதால், அல்லது, இப் பாசுரங்களை யநுஸந்திக்கும் பக்தர்களின் சிந்தையில் திகழும்படி. ஆராத—அவன் ஆராதவமுதனுகையாலே அவன் விஷயத்தில் அமைந்த சொற்களும் அவ்வண்ணமாயின. அச்சுதன். கேசவாதி வ்யூஹங்களுக்கும் மூலமாயுள்ள வாஸுதேவனான பரவாசு தேவன். அந்தத் திருமேனிக்கு எப்போதும் மறைவு கிடையாதாகையாலும், அங்கே திருமாமணி மண்டபத்திற் சிங்காசனத்தினின்று எப்போதும் இறங்காமலே வீற்றிருப்பதாலும் அவன் தன் நிலைமையினின்று எப்போதும் நழுவாதவன். ந ச்யவதி இதி அச்யுதः என்னப்படுபவன். ஆச்ரிதரையும் நழுவாதபடி செய்வதால் ந ச்யாவயதி இதி அச்யுதः என்னப்படுபவன். ஆக அடியார் ஒழிவில் காலமெல்லா முடனாய் வந்து வழுவிலா வடிமை செய்யும்படி இவ்வளவு ஆராத அனுபவத்திற்குக் காரணமாயுள்ளது பன்னிரண்டு திருநாமங்களைப் பொதிந்து கொண்டிருக்கும் இப் பன்னிரண்டு பாசுரங்களிலுள்ள வல்லமையென இத் திருமொழியின் பலனும். ௰௩.

ப்ரபந்தரக்ஷையில் பெரியாழ்வார் திருமொழி 2. 3. போய்ப்பாடு உரை முற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

—: o :—

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

பெரியாழ்வார் திருமொழி 2. 4. (மஞ்சனமாட்டுதல்)

## வெண்ணெயளைந்த.

பகலெல்லாம் விளையாடித் திரியும் கண்ணபிரானை ஒரு திருவோணத் திருநாளிலே அவ் வழுக்கோடே பள்ளி கொள்ளாதபடி நீராட்டிப் பலவகைப் பணியாரங்களும் கனிகளு முண்ணவைக்க விரும்பின யசோதை சொன்ன சொற்களை ஆழ்வார் அவளாக விருந்து அருளிச் செய்தது நான்காந் திருமொழி—

1. வெண்ணெயளைந்தகுணுங்கும்விளையாடுபுழுதியுங்கொண்டு
திண்ணெனவிவ்விராவுன்னைத்தேய்த்துக்கிடக்கநானொட்டேன்
எண்ணெய்புளிப்பழங்கொண்டிங்கெத்தனைபோதுமிருந்தேன்
நண்ணலரியபிரானே நாரணா நீராட வாராய். (151)

நண்ணல் — கிட்டுதலுக்கு
அரிய — அருமையான (முடியாத)
பிரானே — ஸ்வாமியே!
நாரணா — நாராயணனே!
எண்ணெய் புளிப் பழம் — (தேய்த்துக்கொள்வதற்கு) எண்ணெயையும் புளிப் பழத்தையும்
கொண்டு — எடுத்துக் கொண்டு
எத்தனை போதும் — (உன்னை நீராட்டுவதற்காக) எவ்வளவோ நாழிகையாக்

இங்கு இருந்தேன் — இங்கேயே காத்திருந்தேன்;
(நீ வரவில்லை. ஆயினும்)
வெண்ணெய் அளைந்த குணுங்கும் — (தடாவினில் தடந்தோள்களுள்ளவும் கைவிட்டு வாரி உண்ண) வெண்ணெயை அளைந்ததாலுண்டான (முடையையும்) பசையையும்

| | | | |
|---|---|---|---|
| விளையாடு புழுதியும் | விளையாடும் போது படிந்த புழுதியையும் | திண் என தேய்த்து கிடக்க | திண் என வொலிக்கத் தேய்த்துக் கொண்டே படுத்திருக்கும்படி |
| கொண்டு | உன் உடம்பில் வைத்துக் கொண்டு (அதனால் தின வுண்டாக அதற்காக) | நான் உன்னை ஒட்டேன் | நான் உன்னை இசைய மாட்டேன் |
| இ இரா | உன் திருவோண நாளாகிய இன்றைய இரவில் | நீராட | ஸ்நானம் செய்தற்கு |
| | | வாராய் | வருவாயாக. |

குணுங்கு ஒருவித துர்க்கந்தமென்பர். குணுங்குதல் அனுங்குதல், ஆபாஸமாதல். தோள்களளவு தடாவினிற் கைகளை விட்டு வாரி விழுங்கும்போது வெண்ணெய் எங்கும் ஒட்டிக் கொண்டு உலர்ந்து கிடக்கிறதென்க. திண்ணென என்பது தேய்த்து என்றதோடு சேரும். ஒட்டேனென்றதோடு ஒட்டி, திண்ணமாக ஸம்மதியேனெனவுமுரைக்க. புளிப் பழம். எண்ணெயின் பிசுக்குப் போம்படிப் புளிப்புள்ள பழம். யசோதையாக நின்ற ஆழ்வார் விபவாவதாரத்தையும் அர்ச்சையையும் ஐக்யப்படுத்தியநுஸந்திப்பதால் அர்ச்சையின் திருமஞ்சனத்திற்கு வேண்டிய புளி எலுமிச்சை முதலிய புளிப்பழத்தை யருளிச் செய்ததுமாம். நண்ணலரிய. நண்ணித் தொழுமவர் சிந்தை பிரியாத நாராயணா (2. 3. 2.) என்றேன். சிந்தை பிரியாதிருந்தாற் போதுமோ. உடலுக்கும் அருகே இருக்க வேண்டாவோ. நான் நீ இருக்குமிடம் வந்து கிட்டுவது அரிது. நீயே இப்படி யழைக்கும் போது வரவேண்டுமென்றபடி. க.

இப்படி யழைக்கும் போது கண்ணபிரான் கட்டெறும்பு பிடித்துக் கொண்டு அவற்றைக் கன்றுகளின் காதிலிட ஓடுகிறான். அதனைத் தடுத்து அழைக்கின்றனள்—

2. கன்றுகளோடச்செவியிற்கட்டெறும்புபிடித்திட்டால்
தென்றிக்கெடுமாகில்வெண்ணெய்திரட்டிவிழுங்குமாகாண்பன்.
நின்றமராமரஞ்சாய்த்தாய்நீபிறந்ததிருவோணம்
இன்றுநீநீராடவேண்டுமெம்பிரானோடாதேவாராய். (152)

| | | | |
|---|---|---|---|
| கட்டெறும்பு பிடித்து | பெரிய எறும்புகளைக் கையால் எடுத்து, | மராமரம் | (ஏழு) ஸால விருட்சங்களை |
| கன்றுகள் ஓட | பசுக்களின் கன்றுகள் (எறும்பு குடைவதால்) வருந்தி யோடும்படி | சாய்த்தாய்! | (விட்ட பாணத்தின் வேகம் தடை படாதபடியுள்ள பராக்ரமம் காண்பிக்க) வீழ்த்தினவனே! |
| செவியில் | அவற்றின் காதுகளில் | | |
| இட்டால் | விட்டாயானால் | | |
| தென்றி கெடுமாகில் | சிதறி ஓடிப்போய் அகப்படாமலிருந்தால் | நீ பிறந்த திருவோணம் இன்று. | இப்படிப் பல அவதாரங்களைச் செய்யும் விஷ்ணுவான உனது ஜந்ம நக்ஷத்ரமான திருவோண மின்றைத்தின முள்ளது. |
| வெண்ணெய் திரட்டி விழுங்கும் ஆ காண்பன் | நீ வெண்ணெயைக் குவித்து விழுங்கும் வகையை நான் காண்பேன். | | (ஆகவே) நீ நீராட வேண்டும். |
| | | எம்பிரான் | எமது உபகாரகனே! |
| நின்ற | (வாலி பலகால் குலுக்கும் போதும்) விழாதபடி நின்ற | ஓடாது | ஓடிவிடாமல் |
| | | வாராய். | |

தென்றி. இப் பதம் அரிதானது. தென்றுதல்= இனம் பிரிதலென்பர். காண்பன். கன்றுகள் கெட்டுப்போன போது கறப்பது கிடையாதாகையாலே பாலே யில்லாத

போது வெண்ணெய் எது விழுங்குவதற்கு என்றபடி. திருவோணம். விஷ்ணுவின் அவதாரமாகையாலே கண்ணனுக்கு இந்த நக்ஷத்ரமும் பிறந்த நாளாம். உ.

விளையாடி வெய்யிலில் திரியும் என்னை அகாலத்திலே நீராட்டி வைத்தால் எனக்கு சளி பிடித்து அநாரோக்யமாமென்று அவன் கேட்க, நான் உன்னிடம் எவ்வளவோ அபிமானமுள்ளவளாகையாலே உனக்கு அநுகூலமாகவே நான் செய்வேன். நீரை நெல்லித் தழையிட்டுக் காய்ச்சியல்லவோ வைத்திருக்கிறேன் என்கிறாள்—

3. பேய்ச்சிமுலையுண்ணக்கண்டுபின்னையும்நில்லாதென்னெஞ்சம்
ஆய்ச்சியரெல்லாருங்கூடியழைக்கவும்நான்முலைதந்தேன்
காய்ச்சினநீரொடுநெல்லிகடாரத்திற்பூரித்துவைத்தேன்
வாய்த்தபுகழ்மணிவண்ண மஞ்சனமாட நீவாராய். (153)

| | |
|---|---|
| பேய்ச்சி முலை | பூதனையின் ஸ்தநத்தை |
| உண்ண கண்டு பின்னையும் | (அப்பேய்ச்சியே மாளும்படி) நீ உண்டது கண்டிருக்கச் செய்தேயும், |
| ஆய்ச்சியர் எல்லாரும் | என்மீது பரிவுள்ள இடைச்சிகள் எல்லோரும் |
| கூடி அழைக்கவும் | முலை கொடுக்க வேண்டாமென்று பயந்து ஒன்று சேர்ந்து அழைத்திருக்கச் செய்தேயும் |
| என் நெஞ்சம் நில்லாது | (அவற்றை மதியாது) எனது மனம் நிலை கொள்ளாமலிருக்கவே (உனக்கு யாதொரு தீங்கு மிராமலிருந்தாற் போதுமென விரும்பி அதையறிந்து கொள்ள) |

| | |
|---|---|
| முலை தந்தேன் நான் | முலை தந்தவளான நான் |
| காய்ச்சின நீரொடு | நன்றாகக் காய்ச்சி குளிர்நீர் கலக்காத நீருடன் |
| கடாரத்தில் | சருவத்தில் |
| நெல்லி | நெல்லித் தழையையும் |
| பூரித்து வைத்தேன் | மேலே நிறைத்து வைத்தேன் |
| வாய்த்த புகழ் | விபத்துக்களையெல்லாம் விலக்க ஏற்பட்ட புகழை உடைய |
| மணி வண்ண | நீல மணிவர்ணனே! |
| | மஞ்சனமாட நீ வாராய். |

'நெல்லியோடு நீரைப் பூரித்து' எனவும் கூட்டுவர். மணிவண்ண. நீராடினால் நன்கு விளங்கும் வர்ணம் மணிவர்ணம். ௩.

நீராடிய பிறகு அலங்காரமாகச் சாத்த வேண்டியவற்றையும் சேகரித்து வைத்ததாகச் சொல்லி யழைக்கிறாள்—

4. கஞ்சன்புணர்ப்பினில்வந்தகடியசகடமுதைத்து
வஞ்சகப்பேய்மகள்துஞ்சவாய்முலைவைத்தபிரானே!
மஞ்சளுஞ்செங்கழுநீரின்வாசிகையும்நாறுசாந்தும்
அஞ்சனமுங்கொண்டுவைத்தேனழகனேநீராடவாராய். (154)

| | |
|---|---|
| கஞ்சன் | கம்ஸனுடைய |
| புணர்ப்பினில் | ஆலோசனையின் கீழ் |
| வந்த | வந்தவனும், |
| கடிய | ஸ்வபாவமாகவே க்ரூரனுமான |
| சகடம் | சகடாசுரனை |
| உதைத்து | திருவடியால் அடித்து, |
| வஞ்சகம் | (தாய் வேஷம் பூண்டு) வஞ்சனையாக வந்த |

| | |
|---|---|
| பேய் | (இயற்கையில்) பேய்ச்சியான |
| மகள் | ஸ்திரீயானவள் |
| துஞ்ச | முடியும்படி |
| வாய் | (உனது) வாயை |
| முலை | அவளது ஸ்தநத்திலே |
| வைத்த | வைத்தவனை |
| பிரானே! | உபகாரகனே! |

| | |
|---|---|
| மஞ்சளும் | (அழுக்குப் போக நீராட்டின பிறகு நிறம் பெறச் சாத்தும்) மஞ்சளையும் |
| செங்கழநீரின் வாசிகையும் | செங் குவளைப் பூ மாலையையும் |
| நாறு சாந்தும் | வாஸிக்கும் சந்தனத்தையும் |
| அஞ்சனமும் | மையையும் |
| | கொண்டு வைத்தேன் அழகனே! நீராட வாராய். |

அழகனே! அலங்காரங்கள் செய்து அவைகள் அழகு பெறும்படி யிருக்கும் உன் அழகைப் பார்க்க வேணுமென்றபடி ௪.

'பிறந்த நாள் திருவோணமின்று என்று நீராட அழைக்கிறாயே யன்றி உண்ணத் தருவதொன்றையுங் காணோம்' என்று அவன் சொல்ல, நீராடினால் பணியாரம் தருவேன். சொப்பட சுட்ட அவை வேண்டுமாகில் சொப்பட நீராட வா என்கிறாள்.

5. அப்பங்கலந்தசிற்றுண்டியக்காரம்பாலிற்கலந்து
சொப்படநான்சுட்டுவைத்தேன்தின்னலுறுதியேல்நம்பி!
செப்பிளமென்முலையார்கள்சிறுபுறம்பேசிச்சிரிப்பர்
சொப்படநீராடவேண்டுஞ்சோத்தம்பிரானிங்கேவாராய். (155)

| | |
|---|---|
| நம்பி | குண பூர்ணனே! (திருவோணத் திருநாளுக்காக) |
| பாலில் அக்காரம் கலந்து | பாலில் வெல்லத்தைச் சேர்த்து (அதனால் மாவைப் பிசைந்து) |
| கலந்த | கொப்பறை, பரிமளம் முதலியன சேர்ந்த |
| அப்பம் சிற்றுண்டி | அப்பம் முதலிய பணியாரங்களை |
| சொப்பட | நன்றாக |
| நான் சுட்டு வைத்தேன் | (உன் இஷ்டப்படி) நானே பாகம்செய்து வைத்திருக்கிறேன். |
| தின்னல் உறுதி ஏல் | நீ அவற்றை உண்ண விரும்புகிறாயாகில் |
| சொப்பட நீர் ஆட வேண்டும் | நன்றாக (அழுக்குப் போக எண்ணெய் தேய்த்து) மஞ்சனம் செய்ய வேணும். (இல்லையேல்) |
| செப்பு | கலசம் போன்றவையும் |
| இள மென் | இளமையாய் மிருதுவுமான |
| முலையார்கள் | ஸ்தனங்களுள்ள (இந்த) ஸ்திரீகள் |
| சிறுபுறம் | பின் பக்கத்திலே |
| பேசி சிரிப்பர் | உன்னையு மென்னையும் பற்றிப் பேசிப் பரிஹஸிப்பர்கள். |
| சோத்தம் பிரான் | பிரானே! அஞ்சலி செய்கிறேன், இங்கே வாராய். |

**சிற்றுண்டி.** சிறு தின்பண்டம் (சீடை போன்றவை). சிற்றுண்டி கலந்த அப்பம் சுட்டு வைத்தேன், பாலிலும் அக்காரம் கலந்து வைத்தேன் என்றார் திருவாய்மொழிப் பிள்ளை. **சிறுபுறம்** என முதுகுக்குப் பெயர். நின்றவர்கள் முகத்தைத் திருப்பிக்கொண்டு தம் முதுகு பக்கமாய்ப் பேசிச் சிரிப்பார்கள் என்றபடி. அன்றி, நமது பின் பக்கத்திலே பேசிச் சிரிப்பர் என்றதாம். சிறு சிறுமை; புறம் பேசுவது மறைவிற் பேசுவது. ஆகச் சிறிய குற்றங்களை மறைவிற் பேசிச் சிரிப்பர் எனவு முரைப்பர். புறம்பு ஏசி எனவும் பிரிக்கலாம். ௫.

இப்படி எண்ணெய் தேய்த்து நீராட்ட அழைக்கப் பெற்ற கண்ணன் எண்ணெய்க் குடம் உருட்டவே, அவன் செய்யும் ... ம்புகளைச் சொல்லி, கனிகளும் கொடுப்பதாகக் கூறி வேண்டி யழைக்கிறாள்—

6 எண்ணெய்க்குடத்தையுருட்டியிளம்பிள்ளைகிள்ளியெழுப்பிக்
கண்ணைப்புரட்டிவிழித்துக்கழகண்டுசெய்யும்பிரானே!
உண்ணக்கனிகள்தருவனொலிகடலோதநீர்போலே
வண்ணமழகியநம்பீமஞ்சனமாடநீவாராய். (156)

| | |
|---|---|
| எண்ணெய் குடத்தை உருட்டி | எண்ணெய் நிறைந்த குடத்தை (அது முழுதும் கொட்டி விடும்படி) உருட்டி (அதை வாரி எடுக்காதபடி) |
| இளம் பிள்ளை கிள்ளி எழுப்பி | தூங்கும் சிறு குழந்தைகளை நகத்தாற் கிள்ளி யெழுப்பி அழவைத்து (இதற்காக வந்து கேட்பவர்களை) |
| கண்ணை | தன் கண் இதழை |
| புரட்டி விழித்து | உள் வெளியாக மாற்றிக் கண்ணை உருட்டிப் பார்த்துப் பூச்சி காட்டி |
| கழகண்டு செய்யும் | (இப்படி) பொறுக்க மாட்டாத தீம்புகளைப் பண்ணும் |
| பிரானே | ஸ்வாமியே! |
| வண்ணம் | வண்ணத்தாலே |
| ஒலி கடல் | கோஷிக்கும் கடலின் |
| ஓதம் நீர் போலே | அலை ஜலம் போலே |
| அழகிய | அழகான |
| நம்பீ | குண பூர்ணனே! |
| உண்ண | புசிப்பதற்கு |
| கனிகள் | பழங்களை |
| தருவன் | கொடுப்பேன். |
| | மஞ்சனமாட நீ வாராய் |

கண்ணைப் புரட்டி என்பதற்குக் கருவிழியை உள்ளே மறையும்படி சுழற்றி எனவும் பொருளாம். கழைகண்டு எனவும் பாடம். ஸ்ரீ.

'பழமும் பணியாரமும் கொடுப்பதாகச் சொல்லுகிறாய். 'வெண்ணெய் கொடுக்க விரும்புவதில்லை. வெண்ணெயுருட்டி விழுங்குமா காண்பன்' என்கிறாய்' என, நானென்ன செய்வேன். வீட்டில் வெண்ணெய் நின்றால் தானே தரலாம் என்று அவள் சொல்ல, இதுவரையில் பிறரகத்திலே புகுந்து விழுங்கினதாக என்னைப் பழித்து வந்தாய். இப்போது வீட்டிலும் திருடினதாகச் சொல்லுகிறாயோ என, நான் சொல்லக் கூடாதென்றே இவ்வளவு நாள் இப்படிச் சொல்லவில்லை யென்கிறாள்—

7. கறந்தநற்பாலுந்தயிருங்கடைந்துறிமேல்வைத்தவெண்ணெய்
பிறந்ததுவேமுதலாகப்பெற்றறியேனெம்பிரானே!
சிறந்தநற்றாயலர்தூற்றுமென்பதனாற்பிறர்முன்னே
மறந்துமுரையாடமாட்டேன்மஞ்சனமாடநீவாராய். (157)

| | |
|---|---|
| எம் பிரானே | எமக்கு உபகாரகனே! |
| கறந்த | (உன் கடாக்ஷத்தாலே விசேஷமாகக்) கறக்கப்பட்ட |
| நல் பாலும் | மதுரமான பாலையும் |
| தயிரும் | தயிரையும் |
| கடைந்து | வெகு ப்ரயாஸப்பட்டுக் கடைந்து |
| உறி மேல் வைத்த | (உனக்கு வேண்டும்போது தரவேணுமென்று) உறியில் உயர வைத்த |
| வெண்ணெய் | வெண்ணெயையும் |
| பிறந்ததுவே முதலாக | நீ அவதரித்த நாள் முதற் கொண்டே |
| பெற்று அறியேன் | மறுபடி கண்டதேயில்லை. (இப்படி நீயே புசித்திருந்தும்) |
| சிறந்த | உயர்ந்த செல்வமுடைய |
| நல் | (குழந்தையினிடத்திலே) பரிவுமுள்ள |
| தாய் | தாயானவள் |
| அலர் தூற்றும் | பகிரங்கமாகப் பழி கூறுவள் |
| என்பதனால் | என்பர் பிறர் என நினைப்பினால் |
| மறந்தும் | வார்த்தை பராக்கிலும் |
| பிறர் முன்னே | உன்னைப் பழித்து வருமவர் எதிரிலுங் கூட |
| உரை ஆட மாட்டேன் | சொல்லைக் கிளப்ப மாட்டேன் |
| | மஞ்சன மாட நீ வாராய். |

இவளுக்கென்ன செல்வமில்லையா. சில நாள் பாலுந் தயிரும் போனால்தானென்ன. இக்குழந்தை நமக்குண்டாகில் நாம் ஒரு காலுமிப்படிப் பழிக்கமாட்டோமென்று சிலர் என்னை நிந்திப்பர். பிள்ளை யென்று கூடப் பாராமல் பழியைப் பழியாகச் சொல்லுமிவளே சிறந்தவள், நல்லவள். இப்படியல்லவோ தாயிருக்க வேண்டும். அப்போது தான் குழந்தை குணம் பெறுமென்று உன்னைச் சிலர் நிந்திப்பர். ஆகவே நான் சொல்லேன். ஆயினும் நீ பெரும்பாலும் பாலையே உண்டுவிடுவாய். எப்போதாவது மிகுந்தால் தயிராகும். அதுவும் ஒருக்கால் நின்றால் வெண்ணெய் உறியில் வைக்கப்படுவதுண்டு. பிறகு நான் பார்த்ததில்லை. அவ்வப்போதே புதிதாக வைத்த நறு வெண்ணெயை நீ விழுங்கிவிடுவதால் நெய் ஏது? நீ கேட்டபடியால் இவ்வளவுஞ் சொன்னேன். இனிச் சொல்லேன். மஞ்சனமாட நீ வாராயென்றபடி. **பிறந்ததுவே முதலாக.** பிறப்பதற்கு முன் பெற்றிருந்தேனென்றபடி. அன்றி பிறந்தது முதலாகவே; ஒரு நாள் தவறாமல் பிறந்தது முதல் நீ உண்டு வருகிறாயென்றதாம். எ.

ஓடிப்போய் கன்றுகளை ஓட்டிக்கொண்டு வருகிறேனே; வெளியிலே மடுவிலே நீராடியும் வருகிறேனே என, முன்செய்த சிலவற்றைச் சொல்லி, நீ இங்கேயே நன்கு நீராட வேண்டுமென்கிறாள் —

8. கன்றினைவாலோலைகட்டிக்கனிகளுதிரவெறிந்து
பின்றொடர்ந்தோடியோர்பாம்பைப்பிடித்துக்கொண்டாட்டினாய்போலும்
நின்றிறத்தேனல்லேன்நம்பிநீபிறந்ததிருநன்னாள்
நன்றுநீநீராடவேண்டும்நாரணாவோடாதேவாராய் (158)

| | |
|---|---|
| வால் | கன்றின் வாலிலே |
| ஓலை கட்டி | பனை யோலையைக் கட்டி |
| கனிகள் உதிர | (விளாம்) பழங்கள் விழும்படி |
| கன்றினை | வத்ஸாஸுரனை அக்கன்றை |
| எறிந்து | விளாமரத்தின் மேல் சுழற்றி வீசிப்போட்டு |
| பின் | அதற்குப் பிறகு |
| தொடர்ந்து | கோக்களையும் கோபர்களையும் பின் பற்றி |
| ஓடி | (மடுவுள்ளவிடம்) ஓடிப்போய் |
| ஓர் பாம்பை | (காளியனென்ற) ஓர் ஒப்பற்ற நாகத்தை |
| பிடித்துக் கொண்டு | பிடித்துத் தலையில் ஆக்ரமித்து |
| ஆட்டினாய் போலும் | பாடுபடுத்தினதாகவே தோன்றுகிறது. |
| நின் திறத்தேன் அல்லேன் | நான் உன் விஷயம் அறிந்தவளல்லேன் நம்பி, நாரணா! |
| நீ பிறந்த நல் திருநாள் | நீ அவதரித்த திருவோணத் திருநாள் இது. |
| நன்று | நன்றாக (எண்ணெய் தேய்த்தும் சுத்தமான வெந்நீர் கொண்டும்) நீ நீராடவேண்டும். ஓடாது வாராய். |

கன்றினை யென்பதை எறிந்து என்றதோடு சேர்க்க. வத்ஸாஸுரனை விளாவின் மேலெறிவதற்கு முன்னே அதனை எல்லோரும் உற்றுநோக்கும்படி அதன் வாலில் ஓலை கட்டினதாக ஆழ்வார் கருதினார் போலும். ஓலை கட்டின கன்று வேறு, கனிகள் உதிர வெறிந்த கன்று வேறு என வைத்து 'கன்றினைவால்' கன்றினுடைய வால் என உருபு மயக்கமென்பதுமுண்டு. கன்றின் வாலில் ஓலையை என விகுதி மாற்றலுமாம். போலும் என்றது—எறிந்தது, ஆட்டினதெல்லாம் இவள் நேரில் காணாதே சொல்லுவார் சொல்லக் கேட்டு, இவன் செய்யும் பெருந்தீம்புகளைக் கொண்டு, அவற்றையும் செய்திருப்பானென விவள் ஊஹித்ததை (யும், குழந்தை இவ்வளவு செய்யுமா, ஏதோ நமக்கு இப்படித்

தோற்றுகிறதத்தனை யெனக் கொஞ்சமிவள் ஐயமுற்றிருப்பதையும்) விளக்கும். ஊஹ மாவது ஸம்பாவனை. ஆகவே மணவாளமாமுனிகளும், 'நீ இப்போது செய்கிற தீம் பால் அவையும் செய்தாயாக நான் கேட்டதுவும் கூடுமிறே' என இவளுக்குள்ள ஸம் பாவனையைக் கூறி, போலும் என்பதை விளக்கினுர். அ.

தீம்பொன்றுஞ் செய்யாமல் தொழுவிலே விளையாடி வருகிறேனென்று அவன் சொல்ல, நீ இப்படியே ஸஞ்சாரம் செய்தால் கண்டார் பழிப்பார். முக்கியமாய் நப் பின்னை சிரிப்பாள். அப்போதாவது உனக்கு வெட்கமிராதா. ஆக இப்போதே வந்து நீராடு என்கிறுள் —

9. பூணித்தொழுவினிற்புக்குப்புழுதியளைந்தபொன்மேனி
காணப்பெரிதுமுகப்பனுகிலுங்கண்டார்பழிப்பர்
நாணெத்தனையுமிலாதாய்நப்பின்னைகாணிற்சிரிக்கும்
மாணிக்கமேயென்மணியேமஞ்சனமாடநீவாராய். (159)

| | | | |
|---|---|---|---|
| பூணி தொழுவினில் | மாட்டுக் கொட்டகையில் | நாண் எத்தனையும் இலாதாய் | கொஞ்சமும் லஜ்ஜை யிராதவனே! |
| புக்கு | புகுந்து | | |
| புழுதி அளைந்த | அங்குள்ள புழுதியிலே விளையாடின | நப்பின்னை | (உன்னை வரனுகக் கொண்டு தான் அலங்காரத்தோடுள்ள) நப்பின்னையானவள் |
| பொன் மேனி | (உனது) உஜ்ஜ்வலமான திருமேனியை | | |
| காண | பார்ப்பதாலே | காணில் | (உன் பொன்மேனிக்கு நீ செய்துள்ள விகாரத்தைக்) கண்டால் |
| பெரிதும் உகப்பன் | நான் மிகவும் களிப்பேன். | | |
| ஆகிலும் | ஆனாலும் | | |
| கண்டார் பழிப்பர் | (நன்கு மஞ்சனம் செய்விக்காத என்னைப்) பார்ப்போர் நிந்திப்பர். | சிரிக்கும் | உன்னைப் பரிஹஸிப்பள். மாணிக்கமே! என் மணியே! மஞ்சனமாட நீ வாராய். |

உகப்பனுகிலும். உன்னிடத்திலுள்ள ப்ரேமையினுலே நீ செய்வதெல்லாம் எனக்கு ப்ரியமாய் நீ உகப்பதை யெல்லாம் கண்டு நான் உகக்கும்போது, என்னை யாரா வது பழித்தால் அதில் எனக்கு வெட்கமுண்டாகில் உனக்கும் அது வேண்டாவோ. அதில்லையே. இது கிடக்கட்டும். உன்னையே நேரில் பரிஹஸிப்பாளே நப்பின்னை. அதற் காகவாவது மஞ்சனமாட வாராய் என்றபடி. பூணி - பசு (பூணப் படுவன. பூணுதல் = கட்டுதல்). சு.

10. கார்மலிமேனிநிறத்துக்கண்ணபிரானையுகந்து
வார்மலிகொங்கையசோதைமஞ்சனமாட்டியவாற்றைப்
பார்மலிதொல்புதுவைக்கோன்பட்டர்பிரான்சொன்னபாடல்
சீர்மலிசெந்தமிழ்வல்லார்தீவினையாதுமிலரே. (160)

| | | | |
|---|---|---|---|
| வார் மலி | கச்சுக்கு அதிகமான (அடங்காத) | கண்ண பிரானை | உபகாரகனை கண்ணனை |
| கொங்கை | ஸ்தனத்தையுடைய | | |
| அசோதை | யசோதையானவள் | மஞ்சனம் ஆட்டிய | நீராட்டி வைத்த |
| உகந்து | பரிவுற்று | | |
| கார் மலி | மேகத்திற்கு மேற்பட்ட | ஆற்றை | ப்ரகாரத்தை |
| மேனி நிறத்து | திருமேனியின் நிறமுள்ள | பார் | பூமியிலே |

| | |
|---|---|
| மலி | மேலாக விளங்கும் |
| தொல் | தொன்மை (பழமை)யான |
| புதுவை கோன் | ஸ்ரீவில்லிபுத்தூருக்கு நிர்வாஹகனை |
| பட்டர் பிரான் | ஸ்ரீபட்டநாதன் (பெரியாழ்வார்) |
| சொன்ன | (அவ்வாற்றைச் சொல்வதற்காகச்) செய்த |
| சீர் மலி | குணங்களால் மேலான |
| செந்தமிழ் | செந்தமிழான |
| பாடல் | இத் திருமொழிப்பாட்டுக்களை |
| வல்லார் | கற்றவர் |
| யாதும் தீ வினை இலரே | தீய வினை (பாவம்) எதுவும் இல்லாம விருப்பர். |

தொல்புதுவை, பழமையாயினும் புத்தூராவது க்ஷணந்தோறும் நவநவமாக விளங்குவதால். அன்றி, தொல் புகழ் எனக் கருத்தாய் பட்டர்பிரானுக்கு அடைமொழியாம். இனி, பழமையாவது ப்ராசீனஸந்மார்க்கத்திலேயிருந்து பழமையான ஸம்ப்ரதாயம் பெற்றிருக்கையுமாம். அன்றி, இது பாடலுக்குச் சேரும். 'முந்தையாயிரத்துள்' (திருவாய். 6-5-11.) என்றாற் போலே. பழைய வேதவேதாந்தார்த்தத்தைச் சொல்வதால் இவை பழமையானவையாம். ௰.

ப்ரபந்தரக்ஷையில் பெரியாழ்வார் திருமொழி 2. 4.

வெண்ணெயளைந்த—உரை முற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன்திருவடிகளே சரணம்.

——:o:——

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன்திருவடிகளே சரணம்.

பெரியாழ்வார் திருமொழி 2. 5. (குழல்வாருதல்)

# பின்னைமணாளனை.

இப்படி வேண்டி மஞ்சனமாட்டியபின்பு கண்ணனுக்குக் குழல்வாரினபோது யசோதை சொன்னதை யனுபவித்தவண்ணம் கூறுவது மேற்றிருமொழி.—இதுவும் இதன்மேலுள்ள திருமொழியும் தான் செய்வதற்குத் தடைசெய்யாதபடிக்குக் குழந்தை பராக்காயிருப்பதற்காகக் காக்கையைக் கூப்பிட்டுச் சொல்வதாக அமைந்துள்ளன—

1. பின்னைமணாளனைப்பேரிற்கிடந்தானை
முன்னையமரர்முதல்தனிவித்தினை
என்னையுமெங்கள்குடிமுழுதாட்கொண்ட
மன்னனைவந்துகுழல்வாராயக்காக்காய்மாதவன்றன்குழல்வாராயக்காக்காய். (161)

| | |
|---|---|
| அக்காக்காய் | அந்தக் காக்கையே! நீ |
| பின்னை | நப்பின்னைக்கு |
| மணாளனை | வல்லபனும், |
| பேரில் | திருப்பேர் நகரில் |
| கிடந்தானை | அர்ச்சையாய்ப் பள்ளிகொண்டிருப்பவனும், |
| முன்னை | முன்னமேயிருக்கிற (அநாதியான) |
| அமரர் | தேவர்களான நித்திய ஸூரிகளுக்கு |
| முதல் | முதலாய் |
| தனி வித்தினை | தனிக் காரணமுமானவனும், |
| என்னையும் | தாயான என்னையும் |
| எங்கள் குடி முழுது | நப்பின்னை, தேவகி என்றாற் போலுள்ள எங்கள் குலத்திலே முக்காலத்திலுள்ளவரோடு |
| ஆள்கொண்ட மன்னனை | அடிமையாய் ஸ்வீகரித்தருளின ஸ்வாமியுமான கண்ணனை |
| வந்து குழல் வாராய் | கிட்டிவந்து கூந்தல் வாருவாயாக; |
| மாதவன்தன் குழல் | ச்ரிய: பதியினுடைய கூந்தலை |
| | வாராய் அக்காக்காய்! |

காக்கையை உண்மையிற் குழல் வாரக்கூப்பிடவில்லை. இது 'அக்காக்காய் கோல் கொண்டுவா' என்றாற் போல வெறுமனே சொன்னது மாத்திரம். அன்றி, அது வந்து குழல்வாருகையாவது—யசோதை குழல்வாரும்படி அவன் பாக்காயிருத்தற்குத் தக்கவாறு கண்ணன் கண்ணுக்கிலக்காக அது வந்திருக்கிறதுமாம். அக்காக்கையாவது அந்தக் காக்கை. அதாவது தூரத்திலுள்ள காக்கை. தூரத்தில் மறைவிலிருக்கிறாயே! ஸமீபத்தில் எதிரில் வா என்றதாம். கூந்தல் வாரும்படி யிருப்பதற்குக் காரணம், அது கலைந்திருப்பதும், மஞ்சனமாடினதில் நெறித்துக் கொண்டிருப்பதுமே யாம். ஆயினும் ஒவ்வொரு பாசுரத்திலும் வெவ்வேறு காரணம் உத்ப்ரேக்ஷிக்கப்படுகிறது. இவன் பின்னை மணாளனாய் அவளோடு சேர்ந்து பேரிற் பள்ளிகொண்டதால் மிகவும் கலைந்திருப்பதாக இங்கே நினைத்தபடி. பேரில். இல் இடம். பின்னையோடு இல்வாழ்க்கை கொண்டவனுக்குப் பேரில் - பெரிய இல் (வீடு) கிடப்பதற்கு வேண்டியதாயிற்றெனவுமாம்.

முன்னையித்யாதி. 'யத்ர பூர்வே ஸாத்யாஸ் ஸந்தி தேவா:' என்கிறபடி முன்னமேயுள்ள தேவர்கள் நித்யஸூரிகள். முன்னை—வித்தினை. இவர்கள் அநாதியாயிருப்பினும் இவர்களுக்குமிவன் காரணமாகிறான். "ஸாக்ஷாத் ஸ்வஷ்டா நித்யஸுஷுப்தாசைவ தஸாகவஸ்தாநம்" "ஸ்வாயத்தநித்யஸ்திதிப்ரவ்ருத்திபேதம்" என ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச்செய்தாரிறே. ப்ராக்ருதலோகத்திலுள்ள இந்திராதிகளான அமரர்களுக்கு ப்ரஹ்மாவும், ப்ராசீன கர்மமும் இவனுக்குட்பட்டு இவனுடன் காரணமாக நிற்கும். முன்னை யமரர்களுக்கு இவனே தனிக்காரணம். ப்ரஹ்மாதிகள் காரணமல்ல. ஏனெனில் அவர்கள் கர்ம வச்யரல்லர்; நித்ய ஸூரிகள். அன்றி, தனிக் காரணமாவது—நிமித்தம், உபாதாநம், ஸஹகாரி எனப்படும் ஸர்வவித காரணமுமிவனே யென்பதுமாம். முதல் வித்தாவது மூலகாரணம். தனக்கொரு காரணமின்றியே தான் காரணமாயிருக்கிற படி. முதலாய் ஸ்வாமியாயுள்ள வித்து முதல் வித்து என்றதுமாம். 'அமரர் முன்னை = உபகாரம் செய்ய அமரர் முன்வருபவனை. முதல்தனிவித்தினை: ப்ரக்ருதி மண்டலத்திற்கு ஸர்வவித காரணமாயிருப்பவனை' என்றார் திருவாய்மொழிப் பிள்ளை. வித்தினையென்ற இரண்டாம் வேற்றுமையை முதல் என்பதோடும் சேர்த்து முதலானவனை—தலைவனை என்று முரைப்பர்.

இவ்வளவு பரத்வமுள்ளவன் நீசரான எங்களுக்கும் ஸுலபனானானென்றாள் மூன்றாமடியால். மன்னன் மன்னியிருப்பவன், நிலைபெற்றவனென்றார் திருவாய் மொழிப்பிள்ளை. மன்னனை = மன்னனுக்கு உருபு மயக்கம். இனி, குழல்வாராய் என்றதற்குக் குழலில் வாராய் எனப் பொருள் கூறி மன்னனை யென்கிற இரண்டாம் டாம் வேற்றுமையை நிர்வஹிக்க. அன்றி குழல்வாருதலாது—ஒருவித ஸம்ஸ்காரம். இதொரு முழுப்பதம். அதற்குக் குழலும் கர்மாவாகும், புருஷனும் கர்மாவாகலாம். பின்னையோடு புணர்ந்தது மாத்திரமல்ல, இவ்வளவு ஸுலபனாயிருப்பதைக் கண்டு களித்துக் கூடின பெரியபிராட்டியாரோடு புணர்ந்ததும் கூந்தல் கலைந்ததற்குக் காரணமென்கிறாள் மாதவன்தன்குழல் என்று.

க.

2. பேயின்முலையுண்டபிள்ளையிவன்முன்னம்
மாயச்சகடும்மருதுமிறுத்தவன்
காயாமலர்வண்ணன்கண்ணன்கருங்குழல்
தூய்தாகவந்துகுழல்வாராயக்காக்காய்தூமணிவண்ணன்குழல்வாராயக்காக்காய்(162)

| | |
|---|---|
| முன்னம் | முதன் முதல் |
| பேயின் | பூதனை யென்னும் பேய்ச்சியின் |
| முலை | ஸ்தனத்தை |
| உண்ட பிள்ளை | புசித்த பச்சைக் குழந்தையாயும், |
| மாயம் சகடும் | கள்ளத்தனமான சகடாசுரனையும் |
| மருதும் | மருதமரங்களையும் |
| இறுத்தவன் | முறித்தவனும், |
| காயா மலர் வண்ணன் | காயாம்பூ நிறமுள்ள வனுமிருக்கிற |
| கண்ணன் இவன் கரு குழல் | இந்தக் கண்ணனுடைய கரிய கூந்தலானது |
| தூய்து ஆக | சுத்தமாகும்படி |
| | வந்து குழல் வாராய் அக்காக்காய்! |
| தூ மணி வண்ணன் | நிர்மலமான நீலமணி நிறத் தானுடைய |
| | குழல் வாராய் அக்காக்காய். |

இவன் என்றது முன்போலவன்றிக்கே இவ்வவதாரத்தில் இப்போது இவன் செய்ததையே இப் பாசுரத்திற் கூறிக் குழல்வார அழைக்கிறேனென்று தெளிவிக்க. ஒவ்வொரு அடியையும் தனித் தனி வாக்யமாக முடித்துவிட்டு, 'குழல்வாராய்' என்ற விடத்தில் இவனுடைய என வொரு பதத்தைப் புதிதாகச் சேர்த்துமுரைப்பர். கருங் குழல். கரிய குழலைக் குழல்வாராய் என வுரைப்பதுமுண்டு. தூய்தாக வந்து எனவும் சேர்க்கலாம். தூமணிவண்ணனனபடியாலே நீ தூய்தாக வரவேண்டும். மனோவாக் காயங்கள் உனக்குச் சுத்தமாயிருக்க வேண்டு மென்றபடி. முதல் இரண்டு அடிகளில் குழல்வாரக் காரணம் கூறினதாகக் கொள்க. இப்படி மேற் பாசுரங்களிலும் காண்க. உ.

3. திண்ணக்கலத்திற்றிரையுறிமேல்வைத்த
வெண்ணெய்விழுங்கிவிரையனுறங்கிடும்
அண்ணலமரர்பெருமானையாயர்தம்
கண்ணனைவந்துகுழல்வாராயக்காக்காய் கார்முகில்வண்ணன்
குழல்வாராயக்காக்காய். (163)

| | |
|---|---|
| திரை உறிமேல் | புரிகள் அடர்ந்த உறியிலே |
| திண்ணம் கலத்தில் | திடமான (மண் கலமாகாததும் மூடி போட்டதுமான) பாத்திரத்திலே |
| வைத்த வெண்ணெய் | வைக்கப்பட்டிருந்த வெண்ணெய் முழுதும் |
| விரையன் | விரைந்தவனாய் |
| விழுங்கி | (அவ்வுறியும் கலமும் அவ் வண்ணமசையாமலே யிருக்க) உட்கொண்டு |
| உறங்கிடும் | தூங்கிவிடுகிற |
| அண்ணல் | ஸ்வாமியும், |
| அமரர் பெருமான் | நித்ய ஸூரிகளுக்கு மிகப் பெரியவனும், |
| ஆயர் தம் கண்ணனை | இடையர்களுக்குக் கண்ணா யிருப்பவனுமான குழந்தையை |
| | வந்து குழல் வாராய் அக்காக்காய்! |
| கார் முகில் வண்ணன் | கரிய மேகநிறமுள்ளவ னுடைய |
| | குழல் வாராய் அக்காக்காய்! |

உறியில் குறுக்கும் நெடுக்குமாகப் பின்னிய பிரிகளும் பிரிவதில்லை. திடமான பாத்திரமும் மூடிபோட்ட வண்ணமே யிருக்கும். இதென்ன தெய்வம் உண்டதோ வென வியக்கும்படி செய்வான். உண்மையில் இவனே அதற்கும் அதை வைத்தவர்க் கும் ஸ்வாமியானாலும் தன்னுடையதன்றென வைத்துப் பயந்து விரைந்து விழுங்கும். இவன் விழுங்கியிருக்க மாட்டானென்று அவர்கள் எண்ணும்படி மெய்யாகவே தன் சக்தியால் உறங்கிடும். இப்படி 'நைநதீ தேவா ஆப்நுவந்' என்றபடி தேவர் களுக்கும் அறிய வரிதான பெருமையுடன் இடையரிடையிலே தோன்றி விளங்குகின் றான். இவ்வளவு செய்தாலும் அவனை ஆயரெல்லோரும் தம் கண்ணாக அபிமானிப்பது

முகில்வண்ணமாய தன் உருவத்தாலும் உபகாரச் செய்கைகளாலும் இவன் அவர்கள் மனத்தைக் கவர்ந்து இருத்தலான். ஆகக் கண் கெட்ட நீயும் அவனையே கண்ணாக நினைத்துக் குழல்வாரு என்றவாறு. கலத்து எனவும் விரைய எனவும் படிப்பர். திரையுறிமேல் வைத்த திண்ணக் கலத்து வெண்ணெய் எனவும் சேர்ப்பர். ௩.

4. பள்ளத்தில்மேயும்பறவையுருக்கொண்டு
கள்ளவசுரன்வருவானைத்தான்கண்டு
புள்ளிதுவென்றுபொதுக்கோவாய்க்கீண்டிட்ட
பிள்ளையைவந்துகுழல்வாராயக்காக்காய் பேய்முலையுண்டான்
குழல்வாராயக்காக்காய். (164)

| | | | |
|---|---|---|---|
| பள்ளத்தில் | (நீரோரம்) தாழ்ந்த நிலத்திலே | பொதுக்கு | பொதுவில் (தன்னோடுள்ள இடையர் கூட்டத்துக்கு |
| மேயும் பறவை | இரை தேடியெடுக்கும் பக்ஷியின் (கொக்கின்) | இது புள் | 'இது ஒரு பக்ஷி' |
| உரு கொண்டு | உருவத்தை யெடுத்துக்கொண்டு | என்று | என்றே சொல்லி |
| வருவான் | வருபவனான | வாய் கீண்டிட்ட | அதன் மூக்கைக் கிழித்து விட்ட |
| கள்ளம் அசுரனை | மாயை பொருந்திய அஸுரனை (பகாசுரனை) | பிள்ளையை | சிறு பிள்ளையான கண்ணனை |
| தான் கண்டு | (இவன் அசுரனெனத்) தனக்குள்ளே கண்டுகொண்டு | | வந்து—பேய்முலையுண்டான்—குழல் வாராய் அக்காக்காய். (ஏ - அதிசயக்குறி.) |

கன்றுகளை மேய்த்துத் தண்ணீர் காட்ட மடுவிற்குச் சென்ற விடத்திலே நீரோரத்தில் மேய்ந்து கொண்டிருந்த பகாசுரன் ஸமயம் பார்த்துக் கண்ணனைச் சடக்கென விழுங்க, உடனே தன் வாயின் உட்புறத்தைக் கண்ணனுடல் எரிக்க, அதைத் தாங்காது கக்கிவிட்டு மூக்கால் குத்த முயன்றபோது, எம்பெருமான் அவனை அசுரனெனத் தான் கண்டும், வெளியாருக்கு அச்சமுண்டாகாமைக்காக, இது புள் எனச் சொல்லி விளையாட்டாக இரு கைகளாலும் ஈரிதழ்களையும் பிடித்து மூக்கைக் கிழித்து மாய்த்தினான். பேய்ச்சியின் விஷத்தையே ஜரிப்பித்துக் கொள்ளும் பெருஞ் சுடரான கண்ணனைக் கொக்கு ஜரிப்பித்துக் கொள்ள மாட்டுமோ.

போதுக்கோ. சடக்கென வென்று இதற்குப் பொருள் கூறுவர். 'பொதுக்கென' என்பது 'சடக்கென' என்ற பொருளிலே அரிதாக ப்ரயோகிக்கப்படுவதால் பொதுக்கோ என்பதும் அங்ஙனமாகுமென அவர் கருத்து. (சடக்கென என்பதைக் கடக்கென எனச் சிலர் சொல்வது போல்) 'பிதுக்கென' என்பது பொதுக்கென என்பதின் திரிபு என்று சிலர் கற்பனை. பொது என்பது சபை, வெளி என்ற பொருள் பெறும். தான் அசுரனெனக் கண்டாலும் வெளியாருக்கு அவ்வண்ணம் சொல்லவில்லை ; வெறும் புள்ளே என்றே சொன்னான் என்றபடி. இங்கே தான் கண்டு என்பதற்கு அங்யபரனாயுள்ள தான் பார்த்து புள் என்று—அசுரனென நினைக்காமல் புள்ளெனவே நினைத்து என வுரை செய்வர். பொதுத்தல் துளைத்தலாய், போதுக்க அக்கொக்கானது மூக்கால் இவனைத் துளைக்க அப்போது வாய் கீண்டான் என்னலுமாம். பொதுக்க ஓ-பொதுக்கோ என விகாரப்பட்டுள்ளது. பொதுவர் இடையராகையால் போதுக்கோ என்று இடையர் தலைவனான கண்ணனைச் சொல்லுமென்றார் ஒரு தமிழர். அப்போது கொக்கின் வாய் கீண்டு மீண்டதாலே இவன் இடையர்கோவாக நின்றான் என்றதாம்.

*ப்ரதிகூல வ்ருத்தி செய்து அந்தப் புள்ளைப் போலின்றி நீ அநுகூல வ்ருத்தி செய்து உய்வாயாக எனக் காக்கைக்கு உபதேசம் செய்தபடி.* ௪.

5. கற்றினம்மேய்த்துக்கனிக்கோருகன்றினைப்
பற்றியெறிந்தபரமன்திருமுடி
உற்றனபேசிநீயோடித்திரியாதே
அற்றைக்கும்வந்துகுழல்வாராயக்காக்காய் ஆழியான்றன்
குழல்வாராயக்காக்காய். (165)

| | |
|---|---|
| நீ உற்றன பேசி | நீ வாராமலிருப்பதற்குத் தகுந்த காரணங்களைப் பிதற்றிவிட்டு |
| ஓடி திரியாதே | வேகமாய்ப் பறந்து கண்ட விடம் திரியாமல் |
| அற்றைக்கும் வந்து | அன்று கூட (நீ ஓடிப்போகக் காரணமிருக்கும் நாளிலும்) வந்து—, |
| கன்று இனம் மேய்த்து | கன்றுகளின் திரளை மேய வைத்து |
| ஒரு கன்றினை | அப்போது மேயாதிருந்த அசுரக் கன்றொன்றை |
| பற்றி | பிடித்து |
| கனிக்கு | விளங்கனியின் மேலே |
| எறிந்த | வீசிப்போட்ட |
| பரமன் | ஸர்வோத் க்ருஷ்டனான கண்ணனுடைய |
| திரு முடி | திவ்யமான தலைமுடியை |
| குழல்வாரார் | வாரிப் பரிஷ்கரிப்பாய். |
| ஆழியான் தன் | திருவாழி யுடையவனுடைய |
| குழல் | திருக்குழலை வாராய் அக்காக்காய். |

கற்றினம் மேய்த்து ஒரு கன்றினை. *கன்றுகளை மேய்ப்பவனே கன்றைக்கொன்றான். ‘த்யஜேதேகம் குலஸ்யார்தே’ என்று நினைத்தான் போலும். அக்கன்று பிழைத்திருந்தால் இக்கன்றுகள் அதற்கு இறையாம்.* மேய்த்தொரு கன்றினை. *கண்ணன் திருக்கண்கள் பட்டுச் செழித்துள்ள புற்களை ஆவலுடன் கன்றுகள் மேய அதைக் கண்டுகக்கும் கண்ணன், ஒரு கன்று மேயாமலிருக்கவே, ஓகோ! நாம் வளர்க்குமவற்றிலே த்வேஷம் கொண்ட துஷ்டனெனத் தெளிந்தான். ‘கருப்பார் நீள் வயற் காய் கதிர்ச் செந்நெலைக் கற்றாநிரை மண்டித்தின்ன விரும்பாக் கன்றொன்று கொண்டு’* (3. 1. 6.) *என்றது காண்க.*

கனிக்கு. *கனிமேலெறிந்தானே யல்லது கனி வேண்டுமென் றெறிந்தானில்லை. கன்று போல் விளாவும் அசுரனாகையால் அதன் மேலெறிந்தானென்பர். ‘விளாவான வசுரர்கள்’ என்ற திருவாய்மொழிப் பிள்ளையின் வாக்யத்தையும், ‘அந்த விளங்கனி உதிருகைக்காக வெறிந்து’ என்ற ஜீயர் வாக்யத்தையும் ஒன்றுபடுத்தி ஒவ்வொரு விளங்கனியும் ஒவ்வோரசுரன்; அவற்றை யெல்லாம் ஒற்றைக் கன்றினாலே உதிர்த்தழித்தானெனவும் கொள்ளலாம். இப்போது ‘வல்விளவின் காயுதிரக் கருதி’* (1. 6. 4.) *என்ற விடத்திலும் விளங்காய்க்கே வலிமை சொன்னதென வேண்டும். இனி, கூட விருக்கும் இடைப் பிள்ளைகள் விளங்கனி கேட்டபோது அவற்றை யுதிர்ப்பதாக வ்யாஜங் கட்டிக் கன்றைக் கொன்றானென்றாலென்ன வென்பாருமுண்டு. விளாம் பழங்கள் விழுந்த பிறகு பிள்ளைகள் எடுத்துக் கொண்டதாக எங்கும் வர்ணிக்கவில்லையே யெனில்—அசுரப் பிணமான கன்று பட்டுகிடந்ததாலே யாரும் கனியைத் தொடவில்லை. கண்ணனின் திவ்ய சேஷ்டித ரஸாநுபவத்திலே மூழ்கினரென்க.*

பரமன். *கன்றின் தன்மையை யறியவும் அழிக்கவும் முடிந்தவன்.* திருமுடி. *முடிவதற்குத் தகவுள்ள திருக்குழல். கன்றைப் போல் அவன் கைக்கு அகப்படும்படி*

யிருந்தாலன்றே அவன் அடித்தெறிவது. நான் வெகு தூர மோடிப்போய்விடுகிறே னென்றவாறு ஏதேனுமுற்றன பேசவேண்டா. அவன் அருகில் நீ இல்லையாகிலும், நீ எங்குத் திரிந்தாலும் அவன் ஆழி உன்னருகில் வந்து வதைக்குமெனத் தெளிவிக்க ஆழியான் தன் என்றதாம். ரு.

இப்படி ஆழியான் தன் என்றருளினவாறே ஆழியால் அவன் வெகு தூரத்திற் செய்துள்ள செய்தியை வெளியிட்டு அழைக்கிறாள்—

6. கிழக்கிற்குடிமன்னர்கேடிலாதாரை
அழிப்பான்நினைந்திட்டவ்வாழியதனால்
விழிக்குமளவிலேவேரறுத்தானைக்
குழற்கணியாகக்குழல்வாராயக்காக்காய் கோவிந்தன்
றண்குழல் வாராயக்காக்காய். (166)

| | | | |
|---|---|---|---|
| கிழக்கில் | கிழக்கு திக்கில் | விழிக்கும் அளவிலே | மூடின கண் திறப்பதற்குள்ளாகவே (ஒரு நொடிப் பொழுதிலே) |
| குடி மன்னர் | பரிஜந பரிகரங்களோடு குடி கொண்டு அரசு புரிந்தவராய் | | |
| கேடிலா தாரை | (ஆகவே இந்திராதிகளும் பயப் படும்படி யிருந்ததாலே) அழிவில்லாமலே யிருந்தவர் களான நரகாதி அசுரரை | வேர் அறுத் தானை | வேரோடு அழித்தவனை |
| அழிப்பான் | அழிப்பதற்காக | குழற்கு அணி ஆக | அவன் திருக்குழலுக்கழகு ஏற்படும்படி |
| நினைந்திட்டு | ஸங்கல்பித்து | | |
| அ ஆழி அதனால் | முன் நான் சொன்ன திரு வாழியினாலேயே | | குழல் வாராய்—அக்காக்காய்! கோவிந்தன் தண் குழல்—காக்காய். |

அவ்வாழி. ‘அ’ என்பது உலகமறிந்ததாகையாலே ப்ரசித்தியைக் காட்டு மென்பர். முந்திய பாசுரத்தில் நீ பயப்படும்படி சொன்ன ஆழியெனவும் கொள்க. கேடிலாதாரை—இந்திராதிகளை அழிப்பான் நினைந்திட்டு(ட) கிழக்கில் குடிமன்னர் விழிக்குமளவிலே எனவும் இரண்டாவது யோஜனையாக முன்னோர் கொண்டது. ‘நினைந் திட்ட ஆழியதனால்’ எனவும் பாடமென்பர். நரகாசுரனுடைய பட்டணத்திற்கு ப்ராக் ஜ்யோதிஷ மெனப்பெயர். ப்ராக் என்பது அது கிழக்கே இருத்தலைச் சொல்லும். ஜ்யோதிஷம் என்னும் பதஸ்வாரஸ்யத்தாலும், கண்ணன் அந்நாகநகரத்திற்கு ஸத்ய பாமையோடு, ரதத்திலேறிச் செல்லாது, கருடன் மேலேறிச் சென்றதாலும் அது கிழக்கில் வானத்தில் நக்ஷத்ரப்ரகாசமாயிருந்ததென்றும், இப்போதும் அது நக்ஷத்ரமய மாகக் காணப்படுகிறதென்றும் சில வானஞானிகள் சொல்லுகின்றனர். வானத்திற் பறந்தோடும் காக்கைக்கு வானத்திலே வீறு பெற்ற ஆழியைக் கொண்டு பயமுறுத்து வது பொருந்தும். கோவிந்தன் என்றது அவ்விடம் சென்று நரகாதிகளை நசிப்பித்து ஸ்வர்கலோகமும் போய்த் திரும்பிப் பாரிஜாதத்தோடு பூமிக்கு வந்தவன் எனத் தோன்ற வருளினதாம். கோ = பூமி. அதை யடைந்தவன் கோவிந்தனென வுரைக்க. தண். முன் பின் பாசுரங்களிலே தன் எனவே யிருப்பினும் இங்குமட்டும் தண் என ஓதுகின்றனர். தண் = குளிர்ந்த. (இது மஞ்சன மாட்டினவுடன் குளிர்ந்திருக்கும் போதே சிக்கெடுக்க வாருதலாகலாம்.) கூ.

7. பிண்டத்திரளையும்பேய்க்கிட்டநீர்ச்சோறும்
உண்டற்குவேண்டிநீயோடித்திரியாதே
அண்டத்தமரர்பெருமானழகமர்
வண்டொத்திருண்டகுழல்வாராயக்காக்காய் மாயவன்றன்
குழல்வாராயக்காக்காய். (167)

| | | | |
|---|---|---|---|
| பிண்டம் திரளையும் | பிண்டத்தின் உருண்டையையும் | அண்டத்து அமரர் | ப்ரஹ்மாண்டத்திலுள்ள தேவர்களுக்கு |
| பேய்க்கு | பிசாசத்தைக் குறித்து | பெருமான் | பெரியவனான மஹா புருஷனுடைய |
| இட்ட | விடப்பட்ட | அழகு அமர் | அழகு நிலைத்துள்ளவையும் |
| நீர் சோறும் | நீர் கலந்த சோற்றையும் | வண்டு ஒத்து இருண்ட | வண்டுகளுக்குச் சமமாய் கறுத்துள்ளனவுமான |
| உண்டற்கு | உண்பதற்கு | குழல் | திருமுடிக்குழலை |
| வேண்டி | ஆசைப்பட்டு | | |
| நீ ஓடி | | | |
| திரியாது | திரியாமல் | | |

வாராய் — மாயவன் தன்—அக்காக்காய்.

சோறு என்பது போல் இங்கு திரளை யென்பதே பெயர்ச் சொல்லன்றி இது திரள் என்பதின் இரண்டாம் வேற்றுமையன்று. அண்டத்தமரர் என்பதற்கு நித்ய விபூதியிலுள்ள ஸூரிகள் என முன்னோர் மொழிந்த பொருள். அண்டம் ஆகாயமாய் பரம வ்யோமாவைச் சொல்வதென அவர் கருத்தாம். மாயவன். மாயையுள்ளவன். நித்யஸூரிநிர்வாஹகனானவன், 'ஸம்ஹவாம்யாத்மமாயயா' என்றபடி தன் ஸங்கல்பத்தாலே தானே அவதரித்தது சொன்னதாம். அன்றி மாயை ப்ரகிருதியாய் லீலா விபூதியு முடையவன் என்றதாம். முதற் பாட்டிலே நித்ய ஸூரி நிர்வாஹகனுய் ஸர்வ காரணமாயுமுள்ளவனெனச் சொல்லி மேற் பாசுரங்களிலே இவ்வவதாரத்திலே அவன் செய்த துஷ்ட நிக்ரஹங்களை வர்ணித்து சிஷ்டர்களான தேவர்களுக்கும் தேவ ஜ்யேஷ்டனான சதுர்முகனுக்கும் இவன் பரமோபகாரி யென்பதை அடைவாக இப் பாசுரத்திலும் மேற் பாசுரத்திலும் விளக்குகிருரென்றதுமாம்.

இங்கு இப்பாட்டு அமைந்த ரீதியிலே ஆழ்வார் கருத்துப் பின்வருமாறு இருக்கத் தகும்—பரமைகாந்திகளைக் கொண்டே எம்பெருமான் பணியாற்ற நினைத்து அவர்களையே அவன்கைங்கர்யத்திற்கு அழைப்பவர் இவராகையாலே இவராயுள்ள யசோதை இக் காக்கையை எம்பெருமான்குழல் வார வழைக்கும்போது பரமைகாந்தியாயிருந்து வா என வழைக்கிருள்—இவன் உண்மையில் எம்பெருமானுகிலும் இப்போது இடையன் தானே என்றும், பித்ருக்கள், தேவதைகள் போன்றவரெல்லாம் இவனுக்கு மேற்பட்டவரென்றும் நினைக்க வேண்டா. 'தேவாந் தேவயஜோ யாந்தி பித்ரூந் யாந்தி பித்ருவ்ரதா:. பூதாநி யாந்தி பூதேஜ்யா: யாந்தி மத்யாஜிநோऽபி மாம்' என்றும், அவர்களெல்லாம் தனக்கு உடலானவரென்றும் அருளினவன் இவன். ஆக நீ பலி பீடாதிகளிற் போட்ட பிண்டம் முதலியன தின்னும் நீசஸ்திதியில் இருப்பதை விட்டு, அத்துடன்—அந்தந்த பூதபிசாச பித்ரு தேவர்களுக்கிட்டவற்றைப் புசிக்கும்படி அவர்களை வேண்டிக் கொண்டு அவர்கள் தம்மையே யாராதிக்க ஓடித் திரியாமல், அவர்கள் ஆராதன சேஷத்தைப் புசிப்பதிலும் அவர்களை யநுபவிப்பதிலும் மனம் வைக்காதவாய், பித்ராதிகளுக்கும் மேற்பட்ட தேவர்களுக்கும் மேலுள்ள எம்பெருமானின் அழகிலேயே அமர்ந்து அதனையே யனுபவித்து வரும் வண்டுகளுமான பரமைகாந்திகளுக்

கும் நீ ஒத்திருந்து அதிகாரியாகி அவனது இருண்ட குழலை வார வருவாயாக. மாயாவியான அவனை வெறும் மனிதனைப் போல் நினைத்துவிடாதே என்றதாம். எ.

8. உந்தியெழுந்தவுருவமலர்தன்னில்
சந்தச்சதுமுகன்றன்னைப்படைத்தவன்
கொந்தக்குழலைக்குறந்துபுளியட்டித்
தந்தத்தின்சீப்பால்குழல்வாராயக்காக்காய் தாமோதரன்றன்
குழல்வாராயக்காக்காய். (168)

| | | | |
|---|---|---|---|
| உந்தி | திருநாபியினின்று | கொந்தம் குழலை | நெறிப்புடன் கூடிய கூந்தலை |
| எழுந்த | வெளிக் கிளம்பின | புளி குறந்து அட்டி | புழுகு முதலிய வாஸனை யூறின தைலத்தை வார்த்துத் தடவி |
| உருவம் மலர் தன்னில் | உருவத்தில் தாமரைப் பூவாயிருந்ததில் | தந்தத்தின் சீப்பால் | தந்தத்தினுல் செய்த சீப்பினலே |
| சந்தச் சது முகன் தன்னை | வேதம் ஓதும் ப்ரஹ்மாவை | | குழல் வாராய்—தாமோதரன் தன்—அக்கார்க்காய். |
| படைத்தவன் | ஸ்ருஷ்டித்தவனை இவனுடைய | | |

உருவமலர். யதம்பு₃ வைஷ்ணவ: காய: ததோ விப்ர வஸுந்த₄ரா பத்₃மாகாரா ஸமுத்₃பூ₄தா. தஸ்ய ஸர்வஸ்ய தே₃வஸ்ய நாபௌ₄ பத்₃மமஜாயத. நாஸ்யாம் ஜாதஸ்ய ஊர்த்₄வ இத்யாதிகளை நோக்குக. உருவமாவது அழகுமாம். சந்தச்சதுமுகன். சந்தஸ்ஸு என்றது சந்தமெனவாம். அன்றி ச₂ந்த₃ஶ்சதுர்முக₂: என்ற ஸமாஸபதத்தின் திரிபாமிது. இதனல் யோ ப்₃ரஹ்மாணம் வித₃தா₄தி—வேதா₃ம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை । என்பது பூரணமாக அருளப்பெற்றதாம். சந்தம் அழகாய், அழகான ப்ரஹ்மா, எம்பெருமானுக்கு ஸமமாய் நின்ற ப்ரஹ்மா என்றுமுரைப்பர். கொந்தக்குழலை இத்யாதி. எண்ணெய் போகத் தேய்த்து நீராட்டினதாலே நெறித்துள்ள குழலைத் தைலம் தடவி வார வேண்டும். அப்போது உயர்ந்த தைலமும் சிறந்த சீப்பும் இவனுக்கு உபயோகிக்க வேண்டுமென்றபடி. குறந்து. இப்பதம் அரிதானது. இதற்கு வார்த்து என்னும் பொருளே மணவாளமாமுனியின் உரையிற் காண்கின்றது. 'புளி குறந்தட்டி', 'புழுகைக் குறந்தட்டி' என வுரைத்தாரன்றே. 'புண்ணில் புளிப்பெய்தால்' (2. 9. 1.) என்றவிடத்திலும், 'புண்ணிலே புளியைக் குறந்திட்டால்' எனவே பணித்தார். ஆக இப்போது வழங்கப்படாத பதத்திற்கு முன்னோர்கொண்ட உரையே கொள்ளத்தகும். குறந்து = சிக்கு விடுத்து எனவுமுரைக்கின்றனர் சிலர். புளி யென்ற விடத்தில் புழுகு என்ற பாடமும் பெரியோர் கொண்டனர். புழுகாவது புனுகுபூனை குறந்த வாசனையாம். புளி யென்பதை 'எண்ணெய் புளிப்பழங்கொண்டு' என முன் சொன்ன புளியாகக் கொண்டு, எண்ணெய் தேய்த்துப் புளிப்பழம் குறந்தட்டி ஸ்நாநம் செய்வித்ததால் கொந்தம் பெற்ற குழலை வாராய் எனவுமுரைப்பர். இவ்வர்த்தம் பதங்களை யொருவிதம் மாற்றி அமைத்துப் பெறப்படவேண்டும். தந்தம் யானையின் கொம்பு. 'ஸௌவர்ண குண்டலம் ஸுவர்ணஸ்ய குண்டலம்' என்றாற்போல் தந்தத்தின் சீப்பு என ப்ரயோகம். குழல்வாராய் என்றது முழுப்பதமாய் ஒருவித ஸம்ஸ்காரத்தைச் சொல்வதாகையாலே குழலைக் குழல்வாராய் என்ற அன்வயமும் கூடும். சந்தச்சதுமுகனையும் படைக்கும் உருவமலர் எழுந்த உந்தியையுப் நான் ஒரு போது கயிற்றினுல் கட்டிவைத்தேனே என்று அவனுடைய பாத்வல்லப்யங்களைச் சேர்த்து அனுபவிக்கிறுள் தாமோதரன் என்று. அ.

9. மன்னன்றன்தேவிமார்கண்டுமகிழ்வெய்த
முன்னிவ்வுலகினைமுற்றுமளந்தவன்
பொன்னின்முடியினைப்பூவணைமேல்வைத்துப்
பின்னேயிருந்துகுழல்வாராயக்காக்காய் பேராயிரத்தான்
குழல்வாராயக்காக்காய். (169)

| | | | |
|---|---|---|---|
| மன்னன் தன் | அரசனாய் நின்ற மாவலியினுடைய | அளந்தவன் | இரண்டடிகளுக் கிலக்காக்கின இவனுடைய |
| தேவிமார் | பத்நியான விந்தியாவளி யென்பவளும் | பொன்னின் | அழகிய |
| | | முடியினை | குடுமியை |
| கண்டு | வாமநவேஷ பாஷைகளைக் கண்டு | பூ அணை மேல் | அழகிய (அல்லது பூக்களாலான) தலையணையின் மேலே |
| மகிழ்வு எய்த | மகிழ்ச்சி பெறவே (மகிழ்ந்து தானம் செய்ததாலே) | வைத்து | பதிய வைத்து |
| முன் | மாவலி யாண்ட காலத்திலே | பின்னே இருந்து | இவனுக்கும் தலையணைக்கும் பின்புறத்தில் இருந்து கொண்டு குழல் வாராய் அக்காக்காய். |
| இ உலகினை முற்றும் | இந்த உலகங்களை யெல்லாம் | பேர் ஆயிரத்தான் | ஆயிரம் பெயர் உள்ளவனுடைய குழல்—அக்காக்காய். |

மன்னன்றன் தேவிமார். சுக்ராசார்யர் எவ்வளவு தடுத்தபோதிலும், ஸர்வ பல ப்ரதனான ஸர்வேச்ரன் கை தாழ்த்தி நிமிர்த்திக் கேட்கும் போது கொடாமலிருப் பேனா என்று உறுதியாய் நின்ற மாவலிக்கும் உத்ஸாஹ முண்டாம்படி அவன் பத்நி யான விந்தியாவளியானவள் தானத்திற்குத் தீர்த்தம் சேர்க்கக் கமண்டலுவை எடுத்து வந்தனள். ஆகவே இருவரும் சேர்ந்ததால் தானம் நன்கு நடைபெற்றது. இதனை ஸ்ரீ பாகவதத்தில் (8 ஸ்கந்தம்) காண்க. அப்படி அவர்கள் தானம் செய்யாவிடில் மூவுலகளப்பதென்பது எங்ஙனம் நடைபெறும். அப்போது மாவலியினிடமிருந்து உல கினைக் கொள்ள வேறு வழி யல்லவோ தேடவேண்டி யிருக்கும். இங்கு எய்த என்றது எய்தினதாலே என்ற பொருளில் வந்ததாம். எய்த = பெறும்படி என வுரைப்பர். உலக மளந்ததைக் கண்டு மாவலியின் தேவிக்கு என்ன மகிழ்ச்சி யென வினவிக்கொண்டு த்ரிவிக்ரமாவதாரத்திற்குப் பூர்வமான வாமனாவதாரத்தையும் வேஷத்தையும் வார்த்தை யையுங் கண்டு தான் மகிழ்ச்சி. ஆகவே தேவிமார் கண்டு மகிழ்வெய்த வாமனரூப மெடுத்து என்றவாறு சில பதங்களைச் சேர்த்துரைக்க வேண்டுமென்பர். 'மன்னனை வந்து குழல் வாராய்' என்று முன் கூறியபடி மன்னன் என்பது அளந்தவன் என்பதற்கு அடை மொழியாய் எம்பெருமானைச் சொன்னதுமாம். அப்போது தன் தேவிமார் என்றது பெரிய பிராட்டியாரும் பூமிப் பிராட்டியாரும் என்ற பொருள் தரும். 'இதென்ன நாமித்தனை பேருமிருக்க இவன் ப்ரஹ்மசாரியாவது' என்றும், 'ப்ரஹ்மசர்யத்தை நீடிக்க வைக்காமல் நாம் அவனிடம் ப்ரகாசமாய் விளங்கும்படி ஸ்வரூபத்தைக் காண்பித் தானே' யென்றும், ஸுரர் அசுரர் எல்லோருக்கும் பொதுவான தேவதையா யிருந்தும் அசுரரை மாய்ப்பது என்ற முறையை விட்டு, அவ்வித துன்பங்கள் விளையாதபடி சாதுர்யமாய் உலகினை வசீகரித்து மநோரத பூர்த்தி செய்தானே என்றும், பரம்பின பூமியிற் பலவிதமாய் வஸிக்கும் நம் ப்ரஜைகள் எல்லோருக்கும் சிரஸ்ஸிற் படும்படி பதம் வைத்து அளந்தானே என்றும் 'க்ருஷ்ணாஜிநேந ஸம்வ்ருண்வந் வயஸ்யம் வக்ஷஸ்ஸ்ருஷாக்ஷியாம்' என்ற பெரிய பிராட்டியார் முதலானோர் மகிழ்ச்சி பெறும்படி யிருந்தது இவன் உலக மளந்ததென்றபடி.

பொன்னின். இன். அசையென்னலுமாம். பூவணை. அணை படுக்கை யென்பர். இவ்வாறு அளவற்ற ப்ரஜைகளுக்கும் அளந்து உபகரிக்குமிவனுக்குப் பேர் ஆயிரமும் தகும், அதற்கு மேலுமுண்டு. ஆகிலும் தேவோ நாமஸஹஸ்ரவாந் எனப் ப்ரஸித்தியைக் கொண்டு பேராயிரத்தான் என்றார். விஷ்ணுவுக்கு மாத்திரமே மஹா பாரதத்தில் ஸஹஸ்ரநாமம் சொல்லப்பட்டதென்று இந்த ப்ரஸித்தியினால் விளங்கும். ஆயிரம் என்பது அநந்தம் என்ற பொருளிலுமாம். 'ஆயிரநாமம் சொல்லி' என்றபடி ஸஹஸ்ரநாம பாராயணத்திலும் ஸஹஸ்ரநாமார்ச்சனையிலும் ஆழ்வாருக்கு அதிக நோக்கு. கூ.

10\. கண்டார்பழியாமேயக்காக்காய்கார்வண்ணன்
வண்டார்குழல்வாரவாவென்றவாய்ச்சிசொல்
விண்டோய்மதிள்வில்லிபுத்தூர்க்கோன்பட்டன்சொல்
கொண்டாடிப்பாடக்குறுகா வினைதாமே (தானே). (170)

| | | | |
|---|---|---|---|
| அக்காக்காய் | அங்கேயுள்ள காக்கையே! | தோய் | கலந்து நின்ற |
| கார் வண்ணன் | மேகவர்ணனை கண்ணனுடைய | மதிள் | மதிள்களையுடைய |
| வண்டு ஆர் | வண்டு நிறைந்த | வில்லிபுத்தூர் | ஸ்ரீ வில்லிபுத்தூருக்கு |
| குழல் | கூந்தலை | கோன் | நிர்வாஹகரான |
| கண்டார் பழியாமே | பார்த்தவர்கள் பழிக்காதபடி | பட்டன் | பட்டநாதருடைய (பெரியாழ்வாருடைய) |
| வார வா | வாருவதற்கு வா | சொல் | சொற்களுமான இத் திருமொழியை |
| என்ற ஆய்ச்சி சொல் | என்று இடைச்சியான யசோதை சொன்ன வார்த்தையாயுள்ள— | கொண்டாடி பாட | சப்தார்த்த மாதுர்யங்களைக் கண்டு ச்லாகித்துப் பாடினால் |
| விண் | ஆகாயத்திலே | வினை தாமே குறுகா | பாபங்கள் தாமாகவே அணுகா. |

கண்டார் பழியாமே. திருமஞ்சனம் செய்விக்காதபோது 'புழுதி யளைந்த பொன்மேனி—கண்டார் பழிப்பர்' என்றாற் போலே, குழல்வாராத போதும் பிறர் பழிப்பரென்று பயப்படுகிறாள். வண்டார். ஆர்தல் நிறைதல். 'சுருப்பார் குழலி,' 'விரி குழல் மேல் நுழைந்த வண்டு,' என்றாற்போல் இதுவாம். ஆகக் கண்ணன் குழலும் இயற்கையாலும், எப்போதும் பூவணிவதாலும் வண்டு வரும்படியாம். வண்டு ஆர் - வண்டுக்கொத்த எனவுமுரைப்பர். கொண்டாடிப் பாட. திருமொழியைக் கொண்டு - கற்று அநுஸந்தித்து, ஆடிப்பாட வென்னவுமாம். குறுகா. மஞ்சன மாட்டினால் குணுங்கும் புழுதியும் போவது போல் முன் திருமொழி யோதினால் தீவினை யாதுமிலாரவர்— என்றார். அவ்வாறே குழல்வாரினால் சிக்கும் கொந்தமும் போவது போல் இத் திருமொழி யோதினால் வினைகள் குறுகா வென்றருளினர். வினையாவது முன் சொன்ன தீவினை. அது அவ்வோ அதிகாரிக்குத் தகுந்தபடி வெவ்வேறா யிருக்கும். ஐஹிகாமுஷ்மிகபோகங்களிலே ஈடுபட்டவருக்கு நரகாதிகளை விளைவிக்கும் வினையே தீவினையாம். முமுக்ஷுக்களாய் மற்ற பலன்களிலே வைராக்யமுள்ளவருக்கு ஸ்வர்காதிகளை அளிக்கும் புண்யங்களும் தீவினையே. வினை தாமே என்றது போல் வினை தானே என்றும் பாடம். வினைகள் தாமாகவே விலகிவிடும். நாம் அவற்றை விலக்க விசேஷமாகச் செய்ய வேண்டிய தொன்றில்லை யென்றபடி. இப்படிக் கண்ணனுக்குக் குழல்வாருதலை யனுபவித்தார். ௰.

ப்ரபந்தரக்ஷையில் பெரியாழ்வார் திருமொழி ௨. 5.

பின்னைமணாளனை உரை முற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

## பெரியாழ்வார் திருமொழி 2. 6.

# வேலிக்கோல்வெட்டி

கண்ணனுக்குக் கையிலொரு கோல் கொணர்ந்துகொடுக்கும்படி இங்கே காக்கையைக்கேட்கிறாள். மஞ்சனமாட்டிக்குழல்வாரினவள் அடுத்தபடி செய்யவேண்டியது பூச்சூட்டல். அது செய்வது மேல்திருமொழியிலே விளக்கமாகும். ஆக நடுவிலே இதற்குச் சந்தர்ப்பம் எங்ஙனமென்னில்—இது உண்மையில் கோல் கொடுத்துக் கன்று மேய்க்க அவனை அனுப்புவதற்கிசைந்து சொன்னதன்று. பூச்சூட்டமுயன்றபோதே, காலி மேய்க்கப்போக விரும்பி அழுத குழந்தைக்கு அவன் ஓடாமல் நிற்கச்சொன்ன மருள்வார்த்தை. முன் காக்கையைக் குழல்வாரச் சொல்லிக்கொண்டு, தானே குழல் வாரினாள். பின்பக்கத்தில் இருந்து தலைமேல் மயிர் வாரும்போது 'காக்கைதான் வாருகிறது' என்றுகூட அவன் நினைக்கக் கூடும். அது போல் அதுவே கோலும் கொண்டு கொடுக்குமென அறிவித்துத் தான் பூச்சூட்ட முயன்றாள். அல்லது குழல்வாரும்போது கோலுக்கு அழுத கண்ணனுக்குக் குழல்வாருதல் கெடாதபடிக்கு அதற்காகக் கூப்பிட்ட காக்கையிடமே கோல்கொணரச் சொல்லுகிறாளென்னவுமாம். இவள் உண்மையில் மாடு மேய்ப்பதற்காகவே கோல் கொடுக்க நினைத்தனளல்லள் என்பது இவ்வளவு சிறுபர்வத்திலே அவன்மேய்க்கமுடியாதாகையாலும் 'காலிப்பின் போவாற்கு' 'சிறுகன்றுமேய்ப்பாற்கு' 'கன்றுகள் மேய்ப்பது' எனப் பலவிதமாகச் சொல்வதிலிருந்தும் தெரியவரும். மேலும் இவள் அக்கோலை மேய்க்கும் கருவியாகமட்டும் நினைத்தவளல்லள். பின் என்னவெனில், கண்டவிடத்திலும் அலையும்போது கையில் துணைக்கோலாகவும், தேர்க்குதிரையோட்டும் சவுக்குக்கோலாகவும், அழகுக்குத் தரிக்கும் கோலாகவும், செங்கோலாகவும்கூட நினைத்தனளென்று 2, 5, 6, 8-வது பாசுரங்களின் கருத்தை ஆராயும்போது தோற்றும். இப்படிக் கோல் கொடுப்பதாகச் சொன்னது பூச்சூட்டுவதற்கேயன்றி 'கோலப்பிரானுக்கு' 'மின்னிலங்காரற்கு,' என்றபடி பல கலன்களைப் பூணுவதற்காக வென்னவும் கூடும். ஆக இத்திருமொழிக்கு ஆபரணமிடல் பொருளெனலாம். அலங்கரித்துப் பூச்சூட்டுவதுதானே அர்ச்சையிலும் அனுபவத்திலுள்ளது.

1. வேலிக்கோல்வெட்டி விளையாடுவில்லேற்றித்
தாலிக்கொழுந்தைத் தடங்கழுத்திற் பூண்டு
பீலித்தழையைப் பிணைத்துப் பிறகிட்டுக்
காலிப் பின்போவாற்கோர் கோல்கொண்டுவா,
கடல்நிறவண்ணற்கோர் கோல்கொண்டுவா. (171)

| | |
|---|---|
| வேலி கோல் | வேலிக்காலில் கிடக்கும் கோலை |
| வெட்டி | (கத்தியால்) வெட்டி யெடுத்து |
| விளையாடு வில் ஏற்றி | விளையாடுவதற்குரிய வில் லாம்படி நாண்போல் கயி ற்றை ஏற்றிக்கொண்டும், |
| தாலி (தாளி) | பனையின் |
| கொழுந்தை | வெண்குருத்தை |
| தட கழுத்தில் | விசாலமான திருக்கழுத்திலே |
| பூண்டு | (முன்பக்கத்தில்) அணிந்து கொண்டும், |
| பிறகு | பின்புறத்திலே |
| பீலி தழையை | மயில்தோகைகளை |
| பிணைத்து | சேர்த்து |
| இட்டு | அணிந்துகொண்டும் |
| காலி பின் போவாற்கு | பசுக்கூட்டத்தின் பின்னே போவானான கண்ணனுக்கு |
| (அக்காக்காய்!) ஓர் கோல் கொண்டுவா. | |
| கடல் நிறம் வண்ணனுக்கு | சமுத்திரத்தின் நிறம் போன்ற நிறமுள்ள இவனுக்கு |
| ஓர் கோல் கொண்டுவா. | |

வேலியாவது வயல். அல்லது அதற்குக் காவலாக ஓரங்களில் வரிசையாக வைக்கப்பட்டிருக்கும் முள், செடி முதலியன. இதனால் மரம் ஏறும் திறமையிரா தார்க்குக்கோல் ஸுலபமாகக்கிடைக்குமிடம் சொன்னபடி. வேலியென்று வளைவுக்குப்பெயராய் வளைவான கோல் வேலிக்கோலென்பதுமாம். தாலிக் கொழுந்து சிறந்த ஆமைத்தாலியுமாம். இவை யெல்லாம் தரித்து மாடு மேய்க்கப் போவது இடைப்பிள்ளைகளுக்கு இயல்பு. இப்படி யாபரணங்களைச் சொன் னது இப்போது கண்ணனுக்குப் பலபடி ஆபரணங்களை யிடப் புகுந்ததாலென் றறிக. கோல்கொண்டுவா. இக்கோலை இவன் மேய்க்கவோ, வில்லுக்கோ வைத் துக்கொள்ளட்டு மென்பதாம். (க)

2. கொங்கும் குடந்தையுங் கோட்டியூரும் பேரும்
எங்குந் திரிந்து விளையாடுமென் மகன்
சங்கம்பிடிக்கும் தடக்கைக்குத் தக்கநல்
அங்கமுடையதோர் கோல் கொண்டுவா,
அரக்குவழித்ததோர்கோல் கொண்டுவா. (172)

| | |
|---|---|
| கொங்கும் | கொங்கு என்றவிடத்திலும் |
| குடந்தையும் | திருக்குடந்தையிலும் |
| கோட்டியூரும் | திருக்கோட்டியூரிலும் |
| பேரும் | திருப்பேரிலும் |
| எங்கும் | இதுபோன்ற விடங்களி லெல்லாம் |
| திரிந்து | சென்று |
| | விளையாடும் |
| என் மகன் | எனது மகனை கண்ண னுடைய |
| சங்கம் பிடிக்கும் | பாஞ்சசன்னியத்தை உள் ளங்கையில் அடக்கிப் பிடிக்கிற |
| தட கைக்கு | விசாலமான கைக்கு |
| தக்க | தகுந்த |
| நல் | நல்லதான |
| அங்கம் உடையது | வடிவுள்ளதான (பருத்த) |
| ஓர் கோல் கொண்டுவா. | |
| அரக்கு வழித்தது | நற்சாயம்பூசப்பெற்றதான |
| ஓர் கோல்கொண்டுவா. | |

கொங்கும் குடந்தையும்—கொங்கு பரிமளம். அதை யுடைய குடந்தை யென்பர். அப்போது, 'கொங்குக் குடந்தை' எனவேண்டும். ஆகிலும் செய்யு ளின்பம் நோக்கி கொங்கும் என்றதெனக் கொள்வர். ஆழ்வார்காலத்திலே குடந்தை முதலானவை போல் கொங்கும் ஒரு திவ்யதேசமாயிருக்கவேண்டும்.

மலையாளக்கரையில் சேரராசன் ஆண்ட தேசம் கொங்கு என்பது ப்ரஸித்தம். ஸ்ரீதேசிகனும் பரமதபங்கத்திலே, (53) 'கோதவமொன்றில்லாத தகவே கொண்ட கொண்டலென வந்துலகில் ஐவர்க்கன்றோர், தூதுவனாய் ஒரு கோடி மறைகளெல்லாம் தொடர்ந்தோடத் தனியோடித் துயரந் தீர்த்த, மாதவனார் வடகொங்கில் வானியாற்றின் வண்ணிகை நன்னடம் கண்டு' என்று கொங்குநாட்டின் வடபுறத்திலே பவானி நதிக்கரையிலே பாண்டவதூதனை கண்ணபிரான் மாதவன் கோயில் கொண்டெழுந்தருளியிருந்தமையை யருளிச் செய்துள்ளனர். இவ்வாசார்யன் பரமதபங்கமெனும் க்ரந்தத்தை யருளிச்செய்யத் தொடங்கி திருவயிந்தைநகரை விட்டு ஸத்யமங்கலத்தில் எழுந்தருளியிருந்தபோது அதனைப் பூர்த்திசெய்தருளினர் என்பதைக் கோங்குமண்டல சதக மென்ற நூலினும் காண்க. ஆகவே கொங்கு மண்டலத்தில் இருந்த பல திருப்பதிகளைக் கூறவோ, கொங்கு என்றே அப்போது விளங்கியதொரு திருப்பதியைக் கூறவோ ஆழ்வார் கோங்கும் எனவருளினாரெனக்கொள்ளற்பாலது.

சங்கம் பிடிக்கும்—பெரும் சங்கு உள்ளே யடங்கும்படி திருக்கையின் அகலமிருப்பதைக் குறிப்பதற்காக வல்லது, இட்துகை யெனத் தெளிவிப்பதற்காக இது கூறினதன்று. ஊதும்போது வலக்கையிலும் அது நிற்கக் குறையில்லை. ஆக வலக்கையிலேயே கோல் தரிப்பதானாலும் குற்றமில்லை.

அரக்கு வழித்தது—இத் திருமொழியிலே நான்காமடியின் நடுவே முன்னும் பின்னும் எங்கும் எம்பெருமான்திருநாமத்தைப் பணிக்கும் ஆழ்வார் இங்கு இவ்வண்ணம் கோலுக்கு அடமொழியே யருளினாராகில் அதற்கொரு காரணம் இருக்கவேண்டும். இல்லையேல் 'அரக்கரை யழித்தாற்கு' என்றாற் போன்றதொரு பாடமிருக்குமாவென வாராய்க. (உ)

3\. கறுத்திட்டெதிர்நின்ற கஞ்சனைக் கொன்றான்
பொறுத்திட்டெதிர்வந்த புள்ளின்வாய்கீண்டான்
நெறித்த குழல்களை நீங்க முன்னோடி
சிறுக்கன்று மேய்ப்பாற்கோர் கோல் கொண்டுவா,
தேவபிரானுக் கோர்கோல் கொண்டுவா. (173)

| | | | |
|---|---|---|---|
| கறுத்து | கோபித்து | வாய் | மூக்கை |
| எதிர் இட்டு | தன்னை எதிரியாக்கிக் கொண்டு | பொறுத்திட்டு | தன்னை மூக்கால் கொந்துமளவும் பொறுத்திருந்து |
| நின்ற | (பலரை அனுப்பித் தான் மட்டும்வராமலே மதுரையிலே) நின்றிருந்த | கீண்டான் | பிளந்தவனும், |
| கஞ்சனை | கம்ஸனை | நெறித்த குழல்கள் | நீண்டு அசையாமல் நின்றுள்ள குந்தளங்கள் |
| கொன்றான் | (அவனைக்காணத் தருணம் வாய்த்தபோதே) கொன்றவனும், | நீங்க | அசையும்படி |
| எதிர்வந்த | தனுக்கு எதிரில் தானுள்ள விடம் வந்த | முன் ஓடி | கன்றுகளுக்கு எதிரில் ஓடி |
| புள்ளின் | பக்ஷியின் (பகாசுரனுடைய) | சிறுகன்று மேய்ப்பாற்கு | சிறிய பசுவின்கன்றுகளை மேய்ப்பவனுமான இக் கண்ணனுக்கு ஓர் கோல்கொண்டுவா. தேவபிரானுக்கு ஓர் கோல்கொண்டுவா. |

கறுத்து.—கறுப்பு=சீற்றமாம். இது கஞ்சனுக்கு அல்லது கண்ணனுக்கு மாம். அன்றி 'பயாத் கம்ஸ:' என்றபடி பயத்தினால் கறுத்த நிறம் கொண்டு என்று கஞ்சனைச் சொன்னதாம். முன்னோடி. எதிர்ப்பவரை யழிப்பதை முன்னே யருளிச்செய்தார்; எதிரில் தான் வந்து காப்பதை இங்கே யருளினார். பொறுத்திட்டு. இதன்பொருளை (2-5-4) பாசுரத்திலே காண்க. (௩)

4. ஒன்றே யுரைப்பானொரு சொல்லே சொல்லுவான்
துன்றுமுடியான் துரியோதனன்பக்கல்
சென்றங்குப் பாரதம் கையெறிந்தானுக்குக்
கன்றுகள்மேய்ப்பதோர் கோல்கொண்டுவா,
கடல்நிறவண்ணற் கோர்கோல்கொண்டுவா. (174)

ஒரு சொல் ஏ சொல்லுவான் } (ஊசிமுனையத்தனையும் கொடேன் என்ற) சொல் ஒன்றையே சொல்பவனும்,
துன்று முடியான் } நெருங்கின கிரீடத்தை யுடையனுமான
துரியோதனன்பக்கல் } துர்யோதனனிடம்
ஒன்று ஏ உரைப்பான் } 'பாண்டவர் எவ்வண்ணமாவது இராஜ்யம் பெற வேண்டு' மென்றதொன்றையே உரைப்பதற்காக
சென்று தூதனாய்ப்போய்ச்சேர்ந்து
அங்கு } துர்யோதனனது தௌஷ்ட்யம் தெரிந்த வவ்விடத்திலே
பாரதம் பாரதயுத்தத்திற்கு
கை எறிந்தானுக்கு } கைநீட்டி உறுதிகூறின கண்ணனுக்கு
கன்றுகள் மேய்ப்பது } கன்றுகளை மேய்க்குங் கருவியான
ஓர் கோல்கொண்டுவா கடல்நிறம் வண்ணனுக்கு ஓர் கோல்கொண்டுவா

முதலடி முழுவதையும் துர்யோதனனுக்கு அல்லது கண்ணனுக்கு அடைமொழி யாக்குவதைவிடப் பதவுரையிற் கூறினபடி இருவருக்கும் பிரித்து அந்வயிப்பது யுக்தமென்று கொள்க. இப்போது உரைப்பான் என்பது சென்று என்றவிடத்திற் சேருமாகையால், 'உரைப்பதற்காக' என்று பொருள் கொண்டது. உரைக்கின்றவன் என்னலும் கூடும். 'ராமோ த்விர் நாபிபாஷதே' 'ந மே மோகம் வசோ பவேத்' என்றாற் போலுள்ளதும் ஒன்றேயுரைப்பான் என்பதின் பொருளாம். எதிரிலொன்று, மறைவிலொன்று சொல்வது கிடையாது. 'பாண்டவர்களை த்வேஷிப்பதாலே எனக்கும் நீ பகைவனே' என்று, ('த்விஷதந்நம் ந போக்தவ்யம் த்விஷந்தம் நைவ போஜயேத். பாண்டவாந் த்விஷஸே ராஜந் மம ப்ராணா ஹி பாண்டவா:') என்று எதிரிலே சொன்னவனன்றோ இவன். துன்று முடியான். கிரீடம் நெருங்கியிருப்பதாவது சிரஸ்ஸில் அழுத்தமாய் இருப்பது. இதனால் 'தன் கிரீடம் விழாது. தானே அரசன். மற்றவருக்கு இதில் பங்கில்லை யென்ற பிடிவாதமுள்ளவனென்றதாம். துன்று இரத்னங்களால் நெருக்கப்பட்ட எனவு முரைப்பர். கையெறிந்தானுக்கு. இதற்கு அணிவகுத்துப் போர் நடத்தினவனென்று கூடப் பொருள் கொள்ளலாம். ஆனால் அது மேற் பாசுரத்திலே சொல்லப்படுகிறது. (௪)

போர் புரிந்தே தீரவேணுமென்று தீர்மானித்த பிறகு அவன் செய்ததைக் கூறிக் கோல் கேட்கின்றது மேற் பாசுரத்தில்.

5\. சீரோன்று தூதாய்த் துரியோதனன்பக்கல்
ஊரோன்று வேண்டிப் பெறாதவுரோடத்தால்
பாரோன்றிப் பாரதங் கைசெய்து பார்த்தற்குத்
தேரோன்றை யூர்ந்தாற்கோர் கோல்கொண்டுவா,
தேவபிரானுக்கோர் கோல்கொண்டுவா. (175)

| | |
|---|---|
| பார் | பூமியில் |
| ஒன்றி | பொருந்தி |
| சீர் | சிறந்த குணம் |
| ஒன்று | பொருந்திவிளங்கின |
| தூதாய் | பாண்டவதூதனாய் (சென்று) |
| ஊர் ஒன்று | ஓர் ஊரைமாத்திரம் |
| துர்யோதனன் பக்கல் வேண்டி | பாண்டவர்க்குக் கொடுத்தாலும்போதுமென்று துர்யோதனனிடம் விரும்பிக் கேட்டு |
| பெறாத | அதைக்கூடப் பெறாததால் பிறந்த |
| உரோடத்தால் | கோபத்தினாலே |
| பாரதம் கைசெய்து | பாரதயுத்தத்திற்கு அணி வகுத்து |
| பார்த்தற்கு | அர்ஜுனனுக்கு |
| தேர் ஒன்றை | ஓர் ஒப்பற்ற தேரை |
| ஊர்ந்தாற்கு | நடத்தினவனுக்கு |

ஓர் கோல் கொண்டுவா. தேவபிரானுக்கு ஓர் கோல்கொண்டுவா-

**தேவபிரான்**, 'வைகுண்டே து பரே லோகே' என்றபடி வைகுண்டத்திலே வீற்றிருக்குமவன் பரவாஸுதேவன். அவனே இஹவாஸுதேவனாய்ப் பாரொன்றினதின் பலன் பாரதம் கைசெய்ததாலே கூடி வந்ததாகையால், 'பாரொன்றிப் பாரதம் கைசெய்து' எனச் சேர்த்தருளினாரல்லது ஊரொன்று வேண்டினபிறகு பாரதம் கைசெய்வதற்கு முன் பாரொன்றினதாலன்று. ஆக, பூமியிலவதரித்ததே பாரொன்றுதலாம். உரோடத்தாலென்றது, 'பாரதம் கைசெய்து' என்றதோடு சேரும். ஆகவே, 'உரோடத்தால் பாரொன்றி என்றதெங்ஙனே? ரோஷமுள்ளவன் கால் பூமியிற் பொருந்தாதே' எனவேண்டா. அன்றி, பாரோன்றி, பூதேவியோடு ஒத்து. பூமியானவள் தேவர்களோடு சேர்ந்து சென்று தன் பாரம் தீர்க்கும்படி அழுது கேட்டுக்கொண்டபடி தேவப்பிரானை இவன் தேவிக்கிணங்கி என்றதாம். இப்படி இணங்கினது ஓர் ஊரும் கொடாத போது ரோஷத்தாலெனவாம். அல்லது பார்முழுதும் பாண்டவர்க்கே யளிக்க வேண்டுமென்று ஊரொன்றைவிட்டுப் பாரிலே பொருந்தினானென்பதாம். முதலில் ரோஷமிருந்தாலும் பிறகு, 'வீரபோக்யா வஸுந்தரா' என்று வீரனை தனக்கே பூமியென்ற கருத்துடன் துர்யோதனன் கூறினதைக்கேட்டு, 'வீர போக்யையாகில் பார் பாண்டவர்க்கே யாம்' என உவந்தானாகையாலே அவன் திருவடிகள் பூமியிற் பதிந்தன. இதனை நோக்கிப் பாரோன்றி என்றதெனவு முரைப்பர்.

பதினெட்டு இரஹஸ்ய க்ரந்தங்களை எழுதியருளின பிள்ளைலோகாசிரியர், தேசிகன் அருளிச்செய்த அனந்த க்ரந்தங்களையும் பார்த்தும், கேட்டும், அதிவாதமும், அபலாபமுமின்றி பழைய நூற்களின் உண்மைப் பொருள்கள் எங்கும் ஒரே ப்ரகாரமாய்த் திகழும் அழகை அனுபவித்து அருளிச்செய்த தனியன்——

'சீரொன்று தூப்புற்றிருவேங்கட முடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள்—ஓரொன்று

தானே யமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு.' என்றது.

இதில் சீரொன்றுதலும் பாரொன்றுதலும் இப்பாசுரத்தின் நினைவிற் சொன்ன வையாம். எம்பெருமான் கண்ணனாய் அவதரித்துத் தூதானபோது சீர் பொருந்தி விளங்கினன். தேசிகனே அவதாரம்முதல் வாழ்நாள் பூராவும் அங்ஙனம் சீரொன்றி விளங்கினரென்றார் 'சீரோன்று தூப்புல் திருவேங்கட முடையான்' என்றதால். அவ்வவதாரத்தில் அவனது தூதுவார்த்தைகள் மதிக்கப் படாமற்போகச் சீர்பொருந்தினவனே சீற்றம் கொண்டு தான் பாரொன்றிப் பாரதம் கைசெய்து அளவு கடந்து அழித்தொழிந்தான். அவனே திருவேங்கட முடையானாகி, பிறகு தூப்புல்திருவேங்கடமுடையானாகத் தோன்றினபோது அவன் திருவாய் மலர்ந்து செய்தருளிய ஒவ்வொரு மொழியும் பாரொன்றும்படியும் வாழ்நாள் பூராவும் அதன் சுவை யுண்டு களிக்கும் வகையிலும் அமைந்தது. ஒவ்வொரு மொழியும் பூர்வப்ரமாண ஸம்ப்ரதாயங்களுக் கிணங்கினதாகையாலே பழமொழியே. அம்மொழி பழைய உருவிலே பாரொன்றச் சொல்லப்பட்டதாகாமலிருந்து, தூப்புல்திருவேங்கடமுடையான் திருமுகத்திலிருந்து பிறந்தபோது 'வேத: ப்ராசேதஸாத் ஆஸீத் ஸாக்ஷாத் ராமாயணாத்மநா' என்கிற கணக்கிலே பாரிலுள்ள எல்லோரும் போற்றி ஒன்றும்படியான வடிவு கொண்டு உலகினை உய்விக்கின்றது.

கண்ணனாயிருந்த ஆதிராமானுசன் பார்த்தற்கு அக்னிதேவன் அளித்த ஹநுமத்த்வஜமான தேரொன்றை ஊர்ந்து அபார்த்தபங்கம் செய்ததுபோல், நம் தேசிகன் பகவத்ராமாநுஜ தர்சனமாகிற ஒப்பற்ற தேரை ஊர்ந்து தாம் அருளிச்செய்த பலவகை வடமொழி தென்மொழி க்ரந்தங்கள் வாயிலாக அதனை நடத்தி அபார்த்தங்களையெல்லாம் அழித்து இந்தத் தர்சனத்திலிறங்கினவர்க்கு வானேறப் போமளவும் விஜயவாழ்வை அளித்தருளினர். அத்தனை செய்து கண்ணன் தேவபிரானானதுபோல் இத்தனை செய்த இத்தூப்புல் திருவேங்கடமுடையானே தார்சநிகஸார்வபௌமன். ஆக இவருக்கே கவிதார்க்கிகஸிங்கம், ஸமஸ்யாஸஹஸ்ரீ, ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர் வேதாந்தாசார்யர் என்றாற் போலுள்ள பிருதுகள் விளங்காநின்றன. ஆக தூப்புல் திருவேங்கடமுடையான் ஆதி திருவேங்கடமுடையானாக வந்தருளின கண்ணனே என்றெல்லாம் இதன் பொருளை ஆராய்க. இது நிற்க.

இப்பாசுரத்தில் தேரொன்றை யூர்ந்தாற்கென்றதால் நீ கொடுக்கும் கோல் ஒரு காலத்தில் குதிரைகளை நடத்தக்கூடியதாகவுமிருக்கவேண்டுமென்றாள் போலும். (ரு)

6. ஆலத்திலையானரவினணைமேலான்
நீலக்கடலுள் நெடுங்காலம் கண்வளர்ந்தான்
பாலப்பிராயத்தே பார்த்தற்கருள்செய்த
கோலப்பிரானுக்கோர்கோல் கொண்டுவா,
குடந்தைக்கிடந்தாற்கோர்கோல் கொண்டுவா. (176)

| | |
|---|---|
| **நீலம் கடலுள்** | நீலவர்ணமான (ஏகோதக) ஸமுத்ரத்தில் |
| ஆலத்து இலையான் | ஆலமரத்தின் இலையிலிருப்பவனும், |
| அரவின் அணை மேலான் | அனந்த சயனத்தின் மேலிருப்பவனுமாய் |
| நெடுகாலம் | நீடுழிகாலம் |
| கண்வளர்ந்தான் | யோகநித்திரை செய்தவனும், |
| பாலம் பிராயத்து ஏ | பால்ய தசையிலேயே |
| பார்த்தற்கு | அர்ஜுனனுக்கு |
| அருள் செய்த | கிருபைபண்ணினவனுமான |
| கோலம் பிரானுக்கு | அலங்காரம்பெறுமிறைவனுக்கு |

ஓர் கோல் கொண்டுவா, குடந்தைகிடந்தானுக்கோர் கோல்கொண்டுவா.

அர்ஜுனனுக்கருள் செய்தது யுக்த வயது வந்த பிறகே யன்று. பாலப்ராயத்தே யருள் செய்தானிவன். அவனுக்கும் இவனுக்கும் வயது ஸமமாகையாலே அவனுக்குப் பால்யமாகில் இவனுக்கும் பால்யமே. ஆக, கோல் கொண்டு கன்று மேய்க்கும் பர்வத்திலேயும் இவன் அவனுக்கு அருள் செய்வான். பாலனாயிருப்பவன் அருள்செய்வதெங்ஙனே எனவேண்டா. இவன் ஆலிலைப் பாலனாயிருந்தபோது எத்தனை செய்திருக்கிறான். ஆக இதிலென்ன ஆச்சர்யம் என்று கருத்தாம். ஆலிலை யென்னுமே ஆலத்திலையென்றது இதொரு தனி இலை யன்று. ஆலமரமே அங்கிருந்தது. அதில் ஓர் இலையில் பள்ளி கொண்டிருந்தானென்றறிவிக்க. ஆதிசேஷனே ஆலமரமாக நின்றானென்பர். கடலின் நடுவிலே ஆலிலையிலே அரவணையிற் பள்ளி கொண்டதால் ஸமுத்ரசாயியென்றும், ஆலிலையானென்றும், அனந்தசாயியென்றும், சொல்வதென இங்கு முதலடிகளில் விளங்கும். ப்ராஸாத கட்வா பர்யங்கந்யாயமும் இங்கு நினைக்கத்தக்கதாம். இது தெளிவாகைக்காகவும், நீலக்கடலுள் என்றதைத் தொடங்கிப் பதவுரை கூறினம். இது முன்னோரும் இசைந்ததே. 'நீலக்கடலுள் நெடுங்காலம் கண் வளர்ந்தான்' என்பது மூன்றாவது விசேஷணமென்று மேலே மாத்திரம் சேர்த்துரைப்பதுமுண்டு. நீலக்கடலாவது ப்ரளயகாலத்திலுள்ள ஏகோதகமான ஸமுத்திரமென்பது ஸந்தர்ப்பத்தாலே விளங்கும். பாற்கடல், அல்லது உப்புக்கடல் என்றுமுரைப்பர். நீலநிறம் உப்புக்கடலுக்கே யுள்ளதெனல் வேண்டா. எக்கடலும் எம்பெருமானின் நீலநிறப்ரபைகளின் பரப்பினாலே நீலமாகவே தோற்றுமென்பது ப்ரமாண ஸம்ப்ரதாய ப்ரஸித்தமானது. அரவின்அணை. ஆதிசேஷனுடைய (போகமாகிற) உடலாகிற சயனம். இனி 'இன்' என்பது அசையாய் அரவணையென்னவுமாம். கண்வளர்தல் நித்திரை கொள்ளல். ஆயாஸப்பட்டுள்ள கண்களை மூடிக்கொண்டு அவற்றிற்குச் சிறிது காலம் வேலை கொடாமலிருப்பதே அதற்கு நாம் செய்யும் வளர்ச்சி. ஆகவே நித்திரையைக் கண்வளர்தலென்பது. வளர்ந்த கண்ணன் என்னுமே கண்வளர்ந்தானென்று புருஷனை வளர்தலுக்குக் கர்த்தாவானாற்போல் சொல்லுவது தமிழ் நடைக்கிணங்கியதே. பாலப்ராயத்தே. அர்ஜுனன் நராவதாரமாயும் கண்ணன் நாராயணவதாரமாயும் இருத்தலால் பாலப்ராயத்திலேயே அவனை இவன் அருளினது கூடும். தன் புத்திரனை ரக்ஷிக்கும்படி இந்திரன் கேட்டுக்கொண்டதால் பாலப்ராயத்திலிருந்து காக்கிறானெனவு முரைப்பர். கோலப்பிரானென்றதரலே அசோதை இப்போது கண்ணனுக்கு ஆபரணங்களிட்டலங்கரிப்

பது குறித்ததாம். அப்போது கோலும் ஓர் அலங்காரம். கோல மென்று அழகுக்கும் பெயர். குடந்தைக்கிடந்தான். ஆலத்திலையானென்று தொடங்கின வருக்கு அர்ச்சாவதார சயனமும் மனதில் நடமாடிற்று. இப்படி ஆலத்திலை யான் என்றபோது இவ்வாழ்வார் தம் திவ்ய தேசத்தெம்பெருமானை வடபத்ர சாயியை மனதிற் கொண்டேயிருப்பர். அங்கு ஆதிசேஷன்மேற் பள்ளிக் கொண்டிருப்பது கண்கூடு. (சு)

இப்படிச் சொல்லி வரும்போது ஒரு காக்கை கண்ணனைச் சாய்த்துப் பார்த்தது. அப்போது சொல்லுகிறாள்——

7. பொற்றிகழ் சித்திர கூடப்பொருப்பினில்
உற்றவடிவிலொரு கண்ணுங்கொண்ட, அக்
கற்றைக்குழலன் கடியன் விரைந்துன்னை
மற்றைக்கண் கொள்ளாமே கோல்கொண்டுவா,
மணிவண்ணநம்பிக்கோர்கோல்கொண்டுவா. (177)

பொன் — அழகியதும்
திகழ் — உஜ்ஜ்வலமுமான
சித்திரகூடம் பொருப்பினில் — சித்ரகூடபர்வதத்திலே
உற்ற — அபராதம் செய்யப்பொருந்தின
வடிவில் — உன் அழகிய உருவத்திலே
ஒரு கண்ணு — உனது கண் ஒன்றை
கொண்ட — (தன் த்ருணப்ரம்மாஸ்த்ரத்திற்கு இலக்காக்கிய) பறித்துக்கொண்ட (ஆகவே)
கடியன் — கொடியனும்
அ — அப்படி இராமாவதார மெடுத்தவனும்
கற்றை குழலன் — (உன்னை அழைத்துக் குழல் வாரினதாலே) நெருங்கிச் சேர்ந்துள்ள குழலுடையனுமான இவன் (நீ பூர்வாபராதியென்று)
உன்னை விரைந்து — உன்னைத் தண்டிக்க வேண்டி
மற்றை கண் உம் — மற்றொரு கண்ணையும்கூட
கொள்ளாமே — பறித்துவிடாதபடி
கோல் கொண்டுவா. (நீல) மணிவண்ண நம்பிக்கோர் கோல்கொண்டுவா.

மரக்கிளையில் உட்கார்ந்திருந்து கண்களால் உற்றுப்பார்த்துப் பறந்து வந்து பிராட்டியின் ஸ்தனத்தை மூக்கினால் கிண்டி மாம்ஸம் பறித்த அக் காக்கை யின் உடல் பூராவும் குற்றத்தில் ஈடுபட்டதே. ஆகிலும் அது சரணடைந்த தாலே அது கேட்டுக்கொண்டபடி உயிர் கொடுத்து ஒரு கண்ணை மட்டும் அழித்தார். முதன் முதல் கண்ணால் பார்த்துப் பிறகுதானே குற்றம் செய்யத் தோன்றி விரைந்தது. ஆகவே கண்ணை முன் எடுத்துவிடுவதற்கு ந்யாயமுண்டு; அன்றி, அப்போது ஒரு புல்லை ப்ரம்மாஸ்திரமாக உபயோகித்ததாலே புல்லுக்கு உடலிலுள்ள அங்கங்களுக்குள் வெகு நுட்பமான கண்ணை யழிக்கவே திறமை இயற்கையிலுள்ளதாலும் அதனால் அதைப் பறித்தது சாலவும் பொருந்தும் என்று கருத்து. பொற்றிகழ். 'ஸுபக: சித்ரகூடோஸௌ கிரிராஜோபமோ கிரி:' என்றவிடத்திலுள்ள அடைமொழிகளின் ஸாரமிது. இக் காகாஸுரவிருத்தாந் தத்தை இராமாயணத்திலே ஸீதை ஹநுமானிடம் அடையாளங்கள் கூறுமிடத் திலே காண்க. உற்றவடிவில். இந்த்ரபுத்ரன் பிராட்டியினிடத்தில் அபராதப்படு

வதற்கே இந்த ரூபமெடுத்தானென்று இதனால் தோற்றும். **வடிவில்.** உன் உடலே வெகு அழகானது. அதில் இரு கண்ணும் போனால் வெகு அத்புதமா யிருப்பாய் என்றதாம். இங்கு, 'வடிவில் உற்ற ஒரு கண்' என அந்வயம் கூறுவர். அப்போது வடிவாவது பிராட்டியின் திருமேனியாம். அப்போது இரு கண்களாலுமே பிராட்டியைப் பார்த்திருக்குமாதலால் உற்ற என்பது ஒரு கண், மற்றைக்கண் என்ற விரண்டிடங்களிலும் சேரும். ஒரு கண்ணும் என்ற விடத்திலுள்ள 'உம்' என்பதை மற்றைக் கண் என்றவிடத்தில் சேர்க்க. **கற்றைக்குழலன்.** அப்போது ஜடாதாரியான அவனுக்குப் புல் ப்ரம்மாஸ்த்ரமா யிற்று. இப்போது வாரினபோது விழுந்த குழலிலொன்றே அத்தகையதா மென்றதாம். காக்கைகளுக்கு இரண்டு கண்கள் இயற்கையில் இருந்தன வென்றும் இராமபிரான் ஒரு காக்கையின் கண்ணொன்றைப் பறித்த பிறகு அதற்கு அடையாளமாக அந்தச் சாதிக்கே ஒரே கண்ணை ஸங்கல்ப்பித்தாரென வும் பெரியோர் சொல்வர். (எ)

காகாஸுர விருத்தாந்த மெடுத்தபோது, 'எனது உடலினின்று ஏதோ மாம்ஸம்மட்டும் எடுத்த காக்கைக்கே பரமாஸ்த்ர ப்ரயோகம் செய்த போது எனது உடலையே கெடுத்துவிடக் கருதியுள்ள பரம க்ரூரனான ப்ரத்யக்ஷ ராக்ஷஸனான இராவணனை யழிக்கப் பார்க்காமலிருப்பது ந்யாயமா' என்று ஸீதை சொன்னது திருவுள்ளத்திலே பட்டது. ஆக அந்தப்படி ராமன் அனுஷ்டித்ததையும் சொல்லியருளி, 'அப்படி யுன்னையுமழிக்க வல்லவனே யவன். நீ உயிருக்குச் சரணாகதி செய்திருப்பதாலே, உனக்கு அழிவு இல்லையாகிலும், முன்போல் மற்றொரு கண்ணழிவுக்குத் தடையில்லை. ஆதலால் சரணாகதிக் கிணங்க அனுகூலனாயிருந்து கோல் கொண்டுவா என்ற கருத்துடன் சொல்லு கிறாள்.—

8. மின்னிடைச் சீதைபொருட்டா விலங்கையர்
மன்னன் மணிமுடி பத்துமுடன் வீழ
தன்னிகரொன்றில்லாச் சிலை கால்வளைத்திட்ட
மின்னுமுடியற்கோர் கோல்கொண்டுவா,
வேலையடைத்தாற்கோர்கோல்கொண்டுவா. (178)

இலங்கையர் — லங்கா வாஸிகளுக்கு
மன்னன் — ஈச்வரனை ராவணனுடைய
மணி முடி பத்தும் — மணிமய கிரீடங்களுள்ள பத்துத் தலைகளும்
உடன் வீழ — ஒன்று சேர்ந்து விழும்படி,
(அவன் அபஹரித்துப்போன)
மின் இடை — மின்னல் போன்ற மருங்குல் உடைய
சீதை பொருட்டா — ஸீதா தேவியைப் பெறுவதற்காக

தன் நிகர் ஒன்றில்லா — தனக்கு ஸமமான தொன்றில்லாத
சிலை — தனது வில்லை
கால் வளைத்து — வளைத்து
இட்ட — அம்பை ப்ரயோகித்த
(பிறகு அயோத்தியில்)
மின்னு முடியற்கு — விளங்கின கிரீடம் தரித்த இவனுக்கு
ஓர் கோல் கொண்டுவா;
வேலை (யை) — ஸமுத்ரத்தை
அடைத்தாற்கு — அணையால் அடைத் தவனுக்கு
ஓர் கோல் கொண்டுவா.

மின்னிடைச் சீதைபொருட்டா என்பது வேலையடைத்தாற்கு என்ற விடத்திலும் சேரும். 'யதர்த்தம் அப்போதிரமந்த்தி அபந்தி ச' என்றல்லவோ ஆளவந்தார் அருளிச்செய்தார். உடன் வீழ. தனித்தனியே தலையை யறுத்த போது கிளம்பினவண்ண மிருந்தபடியாலே ஒரு பாணத்தாலே மூலஸ்தானமான ஹ்ருதயத்தை முறித்துத் தலையத்தனையும் சேர்த்துத் தள்ளினரென்றபடி. சிலைகால் வளைத்து. சிலையை அடியிலிருந்து நன்ருக வளைத்தென்றபடி. சிலையையும் தன் திருக்காலையும் வளைத்தென்னவுமாம். வில் வளைத்து நாண்கயிற்றைக் காதளவு இழுத்து அம்பைப் பலமாக ப்ரயோகிக்கும்போது ஒவ்வொரு காலையும் ஒவ்வொரு விதமாய் வளைப்பதுண்டல்லவா காலபாகமே 'வளைத்து அவலீலையாக' என்ன லுமாம். கால் முனையுமாம். 'கைசெய்து' என்றவிடத்தில் கை போல், காலும் ஒரு தமிழ் உபஸர்க்கம். ஆகவே அதற்குத் தனிப்பொருளில்லை என்றும் கொள்க. (கம்பர். யு—அதிகாயன்—103; திருமொழி 8—6—4.)

மின்னிடைச்சீதை பொருட்டா—மின்னிடையான அவள் அழகில் மோஹித்து அபஹரித்தான் மன்னன் ராவணன். அப்படியிருந்தும் அவள் ஸீதையானபடியாலே, பூமியிலிருந்து அயோநிஜையாய்ப் பிறந்தமையால் தனக்குள்ள ஸீதையென்ற பெயருக்கும் பரிசுத்திக்குமேற்பக் கொண்டிருக்கும் பாதிவ்ரத்யத்திலே ஈடுபட்டு அணை கட்டி அரக்கனையழித்தானென்றபடி. (அ)

ப்ரதிகூலருக்கு வரும் கேட்டைக் கேட்ட நீ எப் பிறவியிலும் எச் சாதியிலும் அனுகூலர்க்கு வரும் பெருமையையும் கேட்டுத் தெளிந்து நடந்து கொள் என்கிருள்.—

9. தென்னிலங்கைமன்னன் சிரந்தோள் துணிசெய்து
மின்னிலங்குபூண் விபீடணநம்பிக்கு
என்னிலங்கு நாமத்தளவுமரசென்ற
மின்னிலங்காரற் கோர்கோல்கொண்டுவா
வேங்கடவாணற்கோர் கோல்கொண்டுவா. (179)

| | |
|---|---|
| தென் | நமக்கும் தெற்கிலுள்ள (அல்லது) அழகிய |
| இலங்கை | லங்கா நகரத்திற்கு |
| மன்னன் | நாதனை ராவணனுடைய |
| சிரம் | தலைகளையும் |
| தோள் | தோள்களையும் |
| துணி செய்து | துண்டித்து, |
| மின் இலங்கு | மின்னல்போலே ப்ரகாசிக்கின்ற |
| பூண் | பூஷணங்களையுடைய |
| விபீடணன் நம்பிக்கு | விபீஷணனென்னும் குணபூர்ணனுக்கு, |
| என் | 'எனது |

| | |
|---|---|
| இலங்கும் | இப்போது விளங்கும் |
| நாமத்து | இந்த ராமநாமத்தினுடைய |
| அளவும் | ப்ரசார காலம்வரையிலும் |
| அரசு | ராஜ்யம் (ஆண்டுவா) |
| என்ற | என்று முன்னே நிர்பந்தித்து நியமித்தருளின |
| மின் இலங்கு ஆரற்கு | மின்னல் போல் ப்ரகாசிக்கும் ஹாரங்களைத்தரிக்கும் கண்ணனுக்கு கோல் கொண்டுவா; |
| வேங்கடம் வாணற்கு | திருவேங்கடத்திலே வாழ்ந்து வருமவனுக்கு ஓர் கோல் கொண்டு வா. |

இராமபிரான் ஸீதையின்பொருட்டே ராவணனைக் கொன்ருரல்லது தனக்கு ராஜ்யத்திற்காக வன்று. ஆக மின்னுமுடியனென்று முன் சொன்னது

அயோத்திக்குச் சென்று அபிஷேகம் செய்து கொண்டதைப்பற்ற. லங்கா ராஜ்யத்தை என் செய்தார் என்னில், அவன் தம்பி நம்பியாயிருந்ததால் அவனுக்கே அளித்தார். அவன் நம்பியாய் மோக்ஷமே அபேக்ஷித்தபோது இராஜ்யத்தை யளிப்பானேனென்னில், 'சரீராரோக்ய மர்த்தாம்ச்ச போகாம்ச்சைவாநுஷங்கிகாந்! ததாதி த்யாயிநாம் நித்யம் அபவர்க்கப்ரதோ ஹரி:' (மோக்ஷமளிக்கும் பகவான் அபேக்ஷியாமற் போனாலும் பக்தனுக்குச் சரீரத்திற்கு ஆரோக்யத்தையும், பணத்தையும், போகத்தையும் தானே யளிக்கிறான்) என்கிற கணக்கிலே யளித்தாரத்தனை. இல்லையாகில் ராக்ஷஸராஜ்யம் அராஜகமாய் உலகுக்கே தீங்காம். இப்படி விபீஷணனை மின்னிலங்குபூணனாக்கினதோடு நிற்காமல், அவன் வெகு காலம் ஆண்டபிறகுகூட, தான் தன்னடிச்சோதிக்கு எழுந்தருளினபோது தன்னோடு வர அவன் முயன்றபோது, 'யாவத் ப்ரஜா தரிஷ்யந்தி தாவத் த்வம் வை விபீஷண —— ப்ரஜா: ஸம்ரக்ஷ தர்மேண நோத்தரம் வக்துமர்ஹஸி' (ப்ரஜைகள் இங்கு இருக்கும்வரையில் நீ இருந்து தர்மநெறி தவறாது ப்ரஜைகளைக் காத்துவரவேணும். மறுமொழி கூறாதே) என்று நியமித்தருளினான். இவ்வளவு தர்மஸ்தாபன ச்ரத்தை யுள்ளவனிடத்திலே தர்மப்படி நடந்துகொள் என்று காக்கைக்குச் சொன்னதாம். 'மின்னலங்காரற்கு' என்ற பாடமே ஜீயர் முதலில் ஆதரித்தது. இப்படி ஹாராதிகளான அளவற்ற அலங்காரங்களாலுள்ள அழகுடன், ஜாதி மத பேதத்தைப் பாராட்டாமே ஆச்ரயித்தவருக்கெல்லாம் ஐச்வர்யத்தையும் மோக்ஷத்தையும் அளிக்கும் பெருமையை அர்ச்சையிலே காண விரும்புவோர்க்கு வேங்கடவாணனன்றி வேறில்லையெனக்கருதி வேங்கடவாணற் கெனவருளினர். (கூ)

10. அக்காக்காய்நம்பிக்குக் கோல்கொண்டுவாவென்று
மிக்காளுரைத்தசொல் வில்லிபுத்தூர்பட்டன்
ஒக்கவுரைத்த தமிழ்பத்தும் வல்லவர்
மக்களைப்பெற்று மகிழ்வரிவ்வையத்தே. (180)

அ காக்காய்! காக்கையே!
நம்பிக்கு { குணபூர்ணனான கண்ணனுக்கு
கோல் கொண்டு வா என்று
மிக்காள் மிகுந்தவளான அசோதை
உரைத்த சொல் } சொன்ன சொற்களான,
ஒக்க { அவளோடு ஒத்த படியிலே (அவளுடைய பாவனையிலே)
வில்லிபுத்தூர் பட்டன் } ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ள ஸ்ரீ பட்டர் பிரான்
உரைத்த சொன்ன
தமிழ் பத்தும் { தமிழ்ப் பாஷையிலேயுள்ள இப்பத்துப் பாசுரங்களையும்
வல்லவர் கற்பவர்
(இவ்வல்லமையுள்ள பிள்ளைகளைப் பெற்று)
இ வையகத்தே } இந்தப் பூமியிலே
மகிழ்வர்.

மிக்காள். எம்பெருமானாகிய பிள்ளையை ப்ரத்யக்ஷத்தில் பெறப் பாக்யமற்ற நம்மையும், அந்தப் பாக்யமுற்ற தேவகியையும்விட மிகுந்த பாக்யம் பெற்றவள். வசப்படாத கண்ணனையும் வசப்படுத்தும் வழி தெரிந்தவளென்னவுமாம். (ய)

ப்ரபந்தரக்ஷையில் 2, 6, வேலிக்கோல்வெட்டிஉரை முற்றிற்று.

ஸ்ரீ :

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

## பெரியாழ்வார் திருமொழி 2, 7 (பூச்சூட்டல்)

# ஆனிரைமேய்க்க

இனி, கண்ணனுக்கு மஞ்சனமாட்டிக் குழல்வாரிக் கோலம் செய்த பிறகு பூச்சூட்ட வழைத்தபோது யசோதை சொல்லி யழைத்தபடி யனுபவித்து ஆழ்வார் இனியரானமையைத் தெரிவிக்கும் திருமொழி.

1. ஆனிரைமேய்க்க நீ போதி யருமருந்தாவதறியாய்
கானகமெல்லாம் திரிந்துன் கரிய திருமேனி வாட
பானையிற் பாலைப்பருகிப் பற்றாதாரெல்லாம் சிரிப்ப
தேனிலினியபிரானே செண்பகப்பூச் சூட்டவாராய். (181)

| | |
|---|---|
| தேனில் இனிய | தேனைக்காட்டிலும் மதுரமான |
| பிரானே | உபகாரகனே! நீ |
| பற்றாதார் எல்லாம் | உன்னிடம் பற்றுதலில்லாதவர் எல்லோரும் |
| சிரிக்க | பரிஹாஸம் பண்ணும்படி |
| பானையில் பாலை | பானைகளிற் கறந்து வைத்த பாலையெல்லாம் (காலையிலே) |
| பருகி | அருந்திட்டு |
| உன் கரிய திருமேனி வாட | ஏற்கனவே கறுத்த நிறமான உனது திருமேனி வாடும்படி |
| கானகம் எல்லாம் திரிந்து | காடு முழுக்க அலைந்து |
| ஆன் நிரை மேய்க்க | பசுக்கூட்டத்தை மேய்ப்பதற்காக |
| போதி | போகிறாயே; |
| அரு மருந்து ஆவது அறியாய் | நீ அரிய மருந்தாயிருப்பதை அறிகிறாயில்லை. |

(ஆகவே நீ போகாமல்)
செண்பகப்பூவைச்சூட்ட
வருவாயாக.

ஆநிரை என்பதைவிட ஆனிரை என்ற பாடம் எதுகைக்குச் சிறந்தது. ஆன் பசு.

தான் செய்யும் அலங்காரத்திற்கு இடம் கொடாமல் கோல் வேணுமென்றழுத கண்ணனுக்குக் கோலைக் கொடுக்கக் காக்கையைக் கூப்பிட்டவண்ணமாய் யசோதை தான் செய்ய நினைத்ததைச் செய்துவர, கண்ணன் அதற்குள்ளே பசு மேய்க்கப் புறப்பட்டான். அதற்குள்ளே அண்டை யகங்களிலிருந்து பலர் வந்து, 'எங்கள் வீட்டில் கறந்த பாலையெல்லாம் குடித்து வந்தான் உன் பிள்ளை. ஏனென்று வினவினால் நான் காடெல்லாம் திரிந்து மாலை வரையில் மாடு மேய்க்கவேணுமே என்கிறான். என்னவிது' என்று கூறவே, உண்மையில் மாடு மேய்க்கவே போய்விடுவான்' என்றஞ்சி மறுத்துக் குழந்தையைப் பூச்சூட்ட வழைக்கின்றனள் யசோதை.

கண்ணா! பூச்சூட்டிக்கொள். பூவே வெளியிற் சென்றால் வாடிப்போம். பூவினின்று ஸாரமாய் வந்த தேனிலும் இனிய உன் திருமேனி வாடாமலிருக்குமா? உன் கறுத்த திருமேனியைப் பார்க்கும்போது எப்போதுமே வாடின

தாக எனக்குத் தோன்றுகிறது. இப்படிப்பட்ட நீ பசுக்கூட்டத்தை மேய்ப்பதும், கானகம் போவதும், கானகத்திலும் கண்ட விடமெல்லாம் திரிவதும் எங்ஙனம் கூடுவது. நீ அருமருந்தென்பதை யறியவில்லையோ? மருந்துகளில் தேனென்றே இனியதாயும் ரோகங்களை நீக்குமதாயுமுள்ளது. அதற்கு மேற்பட்ட இனிமையும் குணமும் உன்னிடமுள. நீ மறைவிலிருந்தால் எனக்கு எத்தனையோ பயமும், மனோவ்யாதிகளும், உடலில் நோய்களும் உண்டாய் விடுகின்றன. உன்னைக் கண்டுகொண்டே யிருந்தால் இவை யொன்றுமிருப்பதில்லை. இப்படிக் கண்டமாத்திரத்திலே நோய்கள் தீருவதும் மனோவ்யாதிகள் மாள்வதும்வேறு மருந்தாலாகுமா? ஆக நீ அருமருந்து. அன்றி ஸம்ஸ்ருதி க்லேசம் பெற்றார்க்குப் பரமௌஷதம் நீ. உன்னைச் சமதமாதிகளான பல புஷ்பங்களாலே அர்ச்சனை செய்கின்றனர் அறிஞர். ஆக நீ போகாமே பூச்சூட்ட வாராய் என்றபடி. (க)

2. கருவுடைமேகங்கள்கண்டாலுன்னைக் கண்டாலொக்கும்கண்கள்
உருவுடையாயுலகேழுமுண்டாக வந்துபிறந்தாய்
திருவுடையாள்மணவாளா திருவரங்கத்தேகிடந்தாய்
மருவிமணங்கமழ்கின்ற மல்லிகைப்பூச்சூட்டவாராய். (182)

| | |
|---|---|
| கண்கள் | (பார்ப்பவருடைய) கண்களானவை |
| கரு உடை | கர்ப்பத்தையுடைய |
| மேகங்கள் | மேகங்களை |
| கண்டால் | பார்த்தால் |
| உன்னை கண்டால் ஒக்கும் | உன்னையே நேரில் கண்டாற் போலிருக்கும்படியான |
| உரு உடையாய் | திருமேனியுடையவனே! |
| ஏழு உலகு உம் | எல்லா உலகமும் |
| உண்டாக | ஜன்ம ஸாபல்யம் பெறும்படி |
| வந்து பிறந்தாய் | இவ்வாயர் குலத்திற்கு எழுந்தருளி ஆவிர்ப்பவித்தவனே! |
| திரு உடையாள் | ஸம்பத்தின் எசமானிக்கு (பிராட்டிக்கு) |
| மணவாளா | நாதனே! |
| திரு அரங்கத்தே | ஸ்ரீரங்கத்திலே |
| கிடந்தாய் | சயனித்திருப்பவனே! |
| மருவி | நின்று |
| மணம் | வாசனை |
| கமழ்கின்ற | வீசுகின்ற |

மல்லிகைப் பூ சூட்டவாராய்.

முதலடிக்கு 'நீலமேகச்யாமளமான' என்று கருத்துப்பொருள். அன்றி, உன்னைக் கண்டுகொண்டிருந்தால் நீர் கொண்ட மேகங்களைக் கண்டாற் போல் ஸகலதாபமும் தீர்ந்து குளிர்ந்து களித்திருக்கும் கண்கள். அப்படிப்பட்ட உருவுடைய உன்னைக் காணாமலெங்ஙனமிருப்பேன் ஆக நீ எங்கும் போகலாகாதென்னவுமாம். அப்போது, உன்னைக் கண்டால் கருவுடை மேகங்கள் கண்டாலொக்கும் என அந்வயம். 'கண்கள் ஒக்கும்' என வினைமுற்றுமாம். அல்லது ஒக்கும் என்றதில் வாக்யம் முடிந்து மேல் தனி வாக்யமாய், கண்கள் உரு உடையாய் கர்ணாந்த தீர்க்கமான பெரிய அழகிய திருக்கண்கள் உடையவனே! என்றதாம். உண்டாக வந்து என்றதற்கு உண்டானதும் வந்து எனவும் பொருளாம். உண்டானது முதல் யுகேயுகே அவதரித்த வண்ணமிருப்பவனே! என்றபடி. அன்றி, உலகேழும் உண்டு ப்ளய காலத்திலே மறைத்து, ஆக மறுபடி அது ஆவிர்ப்பவித்த பிறகு வந்து பிறந்தாய்

என்றதாம். ஜகத்ஸம்ஹார-ஸ்ருஷ்டி-ஸ்திதி—அந்த:ப்ரவேசாதிலீலனே! என்றவாறு. திரு உடையாள். உலகின் ஸம்பத்தெல்லாம் பெரிய பிராட்டிக்கே அதீனம். 'அபாங்கா பூயாம்ஸ:' என்கிற ச்லோகமும் கண்டுகொள்வது. அல்லது 'க: ஸ்ரீ: ச்ரிய:' என்றபடி திருவுக்கும் திருவான எம்பெருமானை உடையாளான பிராட்டிக்கு நாயகனே! என்று திவ்ய தம்பதிகளுக்குப் பரஸ்பரம் உள்ள ஏற்றமும் ஒற்றுமையும் சொன்னதாம். திருவரங்கத்தே கிடந்தாய். இப்படி அர்ச்சையாய்க் கிடந்து விளங்கினால் கண்டு களித்த வண்ணமிருக்கலாமே. விபவமாயிருப்பதாலன்றோ நீ போவதும், உன்னை 'வாராய்' என்று நான் வேண்டி யழைப்பதும் என்றவாறு. மருவி என்றதால் இரவில் அதிகமாய் மலர்ந்து பரிமளம் போகாதபடி சேமித்திருந்ததைச் சொன்னதாம். (உ)

கீழ்ப் பாட்டிலே எம்பெருமான் உலகு உஜ்ஜீவிக்க அவதரித்ததற்குக் காரணமாய்த் திருவுடையாள் மணவாளனானதை யருளி மேற்பாட்டிலே திருவின் அவதாரங்களான கோபஸ்திரீகளோடு அவன் அவதார காலத்திற் களித்தமையை யருளுகிறார்.—

3. மச்சோடு மாளிகையேறி மாதர்கள் தம்மிடம் புக்கு
கச்சோடுபட்டைக் கிழித்துக் காம்பு துகிலவை கீறி
நிச்சலும் தீமைகள் செய்வாய் நீள் திருவேங்கடத்தெந்தாய்
பச்சைத்தமனகத்தோடு பாதிரிப்பூச்சூட்டவாராய். (183)

| | | | |
|---|---|---|---|
| மச்சொடு | வீட்டில் உயரவுள்ள நடு நிலத்திலும் | | கிழித்து |
| மாளிகை | அதற்குமேலுள்ள நிலத்திலும் | காம்புதுகில் அவை | (அரையில் உள்ள) பலவித பட்டாடைகளையும் |
| | ஏறி | கீறி | பிளந்து |
| மாதர்கள் தம் இடம் புக்கு | யுவதிகள் இருக்குமிடத்திலே புகுந்து, | நிச்சலும் | நித்யமாய் |
| | | தீமைகள் செய்வாய் | தீம்புசெய்து வருபவனே! |
| பட்டை | அவர்களுடைய பட்டாடைகளையும் | நீள் திரு வேங்கடத்து | நீண்ட திருவேங்கட மலையிலேயுள்ள |
| | | எந்தாய் | எங்கள் ஸ்வாமியானவனே! |
| கச்சொடு | (அவற்றால் மறைக்கப்பட்டிருந்த) ஸ்தந கஞ்சுகங்களையும் | பச்சை தமனகத்தோடு | புதிதாய் பசுமையான தவனத்தோடு கூடிய |
| | | | பாதிரிப்பூ சூட்டவாராய். |

மச்சோடு மாளிகை. இவன் செய்யும் தீம்பு பொறுக்காமலோ, இவனுக்குத் தங்களிடமுள்ள ஆசையை யறிவதற்கோ, கோபர்களின் கோபத்திற்கஞ்சியோ எங்கோ அவர்கள் ஒளித்தவாறு இருந்தாலும் இவன் விடானென்றதாம். மலை யேறி ஒளித்திருந்தாலும் விடாயெனத் தோற்ற திருவேங்கடத்தெந்தா யென்றது. காம்புதுகில். விளிம்பில் பணி செய்த சேலை யென்றனர்.

கச்சோடுபட்டை, காம்புதுகில் என்றதால் அரைக்கு வேறு, கஞ்சுகம் வேறு, உத்தரீயம் வேறாக மூன்று முற்காலத்திலிருந்தமை தோற்றும். அவை என்று அவர்களின் அங்கங்களையும் மறைத்துக் குறித்ததாம். செய்வாய் என்றது அதரபாநாதிகளான தீமைகளைச் செய்யும் திருமுகத்தையுடைய என்றதாய்த் திருவேங்கடத்தெந்தைக்கு அடைமொழியுமாம்.

இவ்வளவு தீம்பு செய்து, யாராவது பிடிக்க வந்தால் ஒளியுமிடம் இத் திருவேங்கடம். அன்றி, இவ்வளவு விஹாரங்களுக்குக் கோகுல ப்ருந்தாவனங் கள் போதாவென்றல்லவோ நீ நீள் திருவேங்கடமெழுந்தருளின தென்றதாம். எந்தாய். மற்றவரோடு உன் உறவு எதேனுமாகுக. எமக்கு உன்னோடுள்ள உறவு இது. தந்தையும் தாயுமாய் ஸ்வாமியாயிருப்பவன் நீ. (௩)

அகங்களிற் புகுந்து யுவதிகளிடத்திலே செய்யும் தீம்பைச் சொல்லி, இனி தெருக்களிலே சிறு பெண்களிடத்திற் செய்வதைச் சொல்லி யழைக் கிறாள்.—

4. தெருவின் கணின்றிளவாய்ச்சிமார்களைத்தீமை செய்யாதே
மருவுந்தமனகமுஞ்சீர்மாலை மணங்கமழ்கின்ற
புருவங்கருங்குழல் நெற்றி பொலிந்த முகிற்கன்றுபோலே
உருவமழகிய நம்பி யுகந்திவை சூட்டவாராய். (184)

| | |
|---|---|
| புருவம் கரு குழல் | புருவத்தாலும் கரிய குந்தளத்தாலும் விளங்கும் |
| நெற்றி | நெற்றியாலே |
| பொலிந்த | ப்ரகாசிப்பவனும், |
| முகில்கன்று போலே | குட்டி மேகம் போன்ற |
| உருவம் | திருமேனியினால் |
| அழகிய | அழகனையுமுள்ள |
| நம்பி | குணபூர்ணனே! நீ |
| தெருவின் கண் | —நடுத்தெருக்களிலே |
| நின்று | நின்று கொண்டிருந்து |
| இள ஆய்ச்சி மார்களை | சிறிய இடைப் பெண் களுக்கு |

| | |
|---|---|
| தீமை செய்யாதே | தீம்பு செய்யவேண்டாம். |
| மருவும் | மருக்கொழுந்தையும் |
| தமனகமும் | தவனத்தையும் |
| சீர் | இரு பக்கததிலும் சீராக வுடைய |
| மாலை | பூ மாலையின் |
| மணம் | பரிமளங்கள் |
| கமழ்கின்ற | வீசுகின்றன |
| உகந்து | மகிழ்ந்து |
| இவை | இவற்றை சூட்ட வாராய். |

கமழ்கின்ற வென்பது 'அன்'சாரியை பெறாத வினைமுற்று. அன்றி, இப்பாசுரத்தை ஒரே வாக்யமாகவும் கொள்ளலாம். அப்போது செய்யாதே என்பதற்குச் செய்யாமல் எனப்பொருளாய், நீ தீமை செய்யாமல் மணம் கமழ்கின்ற சீர்மாலையும் மருவும் தமனகமுமான இவை சூட்டவாராய் என அந் வயமாம். புருவம் கருங்குழல் நெற்றி, தீம்புசெய்யும்போது புருவம் நெறிப்பதும், கருங்குழல் நெற்றியில் விழுவதுமுண்டு. அன்றி, நெற்றிக்கு ஒரு புறம் அடர்ந்த புருவமும் மற்றொரு பக்கம் குழலும் இருப்பது மாலைக்கு நெடுகே இருபுறமும் மருவும் தமனகமுமிருப்பது போலுள்ளதென அனுபவித்த படி யாம். நெற்றி பொலிந்த என்றதை முகில் கன்றுக்கு அடைமொழியாக்கில் அபூதோபமை என்று கொள்ளவேண்டும். (௪)

5. புள்ளினைவாய்பிளந்திட்டாய் பொருகரியின் கொம்பொசித்தாய்
கள்ளவரக்கியைமூக்கொடு காவலனைத்தலைகொண்டாய்
அள்ளிநீவெண்ணெய்விழுங்க வஞ்சாதடியேன்அடித்தேன்
தெள்ளியநீரிலெழுந்த செங்கழுநீர்சூட்டவாராய். (185)

| | |
|---|---|
| வாய் பிளந்து | வாயைக் கிழித்து |
| புள்ளினை | பகாசுரனை |
| இட்டாய் | விட்டெறிந்தவனே! |
| பொரு | யுத்தம் செய்யும் |
| கரியின் | (குவலயாபீடமென்ற) யானையினுடைய |
| கொம்பு | தந்தத்தை |
| ஒசித்தாய் | பறித்தவனே! |
| கள்ளம் | மாயை பொருந்திய |
| அரக்கி | ராக்ஷஸியான சூர்ப்பணகையின் |
| மூக்கொடு | மூக்கையும் |
| காவல் | அவளுக்குக் காவலாக இருந்த |
| அனைத்து | (அவ்வளவு) ஸமஸ்தமான |
| அலை | அலைபோல் குவிந்தெழுந்த படையை |
| கொண்டாய் | அபஹரித்தவனே! |
| | இப்படிப் பரமனை நீ |
| வெண்ணெய்—வெண்ணெயை | |
| அள்ளி | வாரி |
| விழுங்க | (அஞ்சி) விழுங்கினபோது |
| அஞ்சாது | பயப்படாமல் |
| அடித்தேன் | முன் அடித்த நான் |
| அடியேன் | இனி அடிக்கமாட்டேன். (ஆக) |
| தெள்ளிய | தெளிவான |
| நீரிலே | தண்ணீரிலே |
| எழுந்த | செழித்துக் கிளம்பின |
| செங்கழுநீர் | இப்பெயர்கொண்ட பூவை சூட்டவாராய். |

கள்ளவரக்கியை. சூர்ப்பணகை அப்போது கள்ளத்தனமாக ஒன்றும் செய்யாவிடினும் அவளுக்கு அது இயற்கைக் குணமானபடியாலே கள்ள மென்றது. அன்றி, தனக்கு அழகு இருப்பதாயும், ஸீதை குரூபிணியென்றும் தப்பாகச்சொல்லிச் சித்தாபஹாரமும் பிறகு ஸீதாபஹாரமும் செய்ய முயன் றதைக் குறித்ததாம். மேலும் இவள் தனக்குள்ள பலமும் ப்ரபாவமுமுள்பட தன் வரலாற்றைச் சொல்லும்போது, தான் ஒரு விதவையென்பதைச் சொல் லாமே மறைத்தனள் என்று கள்ளமென்றதாம். இனி இவள் இராமனுடைய அழகைக் கண்டு ஆசைப்பட்டதும் கபடமாக ஓர் அழகிய உருவம் எடுத்தே வந்தனள் என்றும், இராமனும் இலக்ஷ்மணனும் இருவரும் கை விட்ட பிறகே சுய ரூபத்தைக் காண்பித்தனள் என்றும், இவளுடைய இயற்கை ரூபமாகை யாலே குரூபத்தையே வால்மீகி முதலில் கூறினொன்றும், 'ந ஹி தாவந் மநோஜ் ஞாங்கீ ராக்ஷஸீ ப்ரதிபாதி மே,' என்ற இராமன் வாக்கியத்திற்கு, 'நீ அழகிய ரூபமுள்ளவளாயிருப்பதால் ராக்ஷஸியல்லளென்று எனக்குத் தோன்றுகிறதே. இந்த இடம் ராக்ஷஸர்கள் வஸிக்குமிடமென்று முன் சொன்னையே. நீ ராக்ஷ ஸியா' என்றது பொருளாகுமென்றும், இவர் தாம் உண்மையைச்சொல்லி ப்ரீதியாகக் கேட்டதாலே அவள் தன்னை ராக்ஷஸியாகவே உள்ளபடி சொல்லிக் கொண்டாளென்றும் கம்பராமாயணத்திற்கிணங்க இராமாயணத்தைக் கொள் வதுண்டு. இவ்வாழ்வார்தாமும், 'நுடங்கிடை சூர்ப்பணகாவை' (3—9—8) என மேலே யருளிச்செய்வர். அப்போது கள்ளமென்றது இவள் கபடரூபம் தரித்ததாலாம்.

காவலனைத்தலே. மூக்கையறுத்தவுடனே, அவளுக்கென்றே அங்குக் காவலாக வைக்கப்பட்டிருந்த முழுப்படையும் போருக்கு வந்தழிந்ததைச் சொல் வது எந்த விதத்திலும் பொருத்தமுள்ளதாயிருப்பதால் காவல், அனைத்து, அலை எனப்பதங்களைப் பிரித்து உரைத்தனம். இதை விட்டு இதற்குப் பிறகு நடந்த ராவண வதத்தை மட்டுமே குறிப்பதாக உரைப்பர். அப்போது காவ லன் இவளுக்கு ப்ரதானமான பாதுகாவலாயிருந்த இராவணனுடைய தலே கொண்டாய் தலையை யறுத்தவனே! எனப்பொருளாம். அப்போது காவலனை

என்ற விடத்தில் உள்ள ஐ என்பதைத் தலை என்ற பதத்தோடு சேர்த்து ‘தலையை’ என்க. அரக்கியை என்ற ஐ சாரியையாம்.

அடியேன். முன் ப்ரபாவம் தெரியாத நாளிலே அடித்தேன். இப்போது எல்லாம் தெரிந்துள்ள யசோதையானபடியாலே அடிக்கமாட்டே னென்ற வாறு. இதிலுள்ள ஆதரத்தாலே அடியேன் என்று நடுவிற்சொல்லி, பிறகு முன்தொடங்கின வாக்யத்தை, ‘அடித்தே’னென்று முடித்தபடி. அடியேன் என்பதற்கு உண்மையில் அடிமைசெய்யவேண்டியவளாய் அறியாமலிருந்த நான் என்று பொருள் கொள்ளில், அடித்தேன் என்றதற்குப்பிறகு, அப்பிழை யைப் பொறுத்துக்கொள் என்றவாறு சேர்த்துக்கொள்ள வேண்டும். (ரு)

6. எருதுகளோடுபொருதி யேதுமுலோபாய்காண் நம்பி
கருதியதீமைகள்செய்து கஞ்சனைக்கால்கொடுபாய்ந்தாய்
தெருவின்கண் தீமைகள்செய்து சிக்கெனமல்லர்களோடு
பொருதுவருகின்றபொன்னே புன்னைப்பூச்சூட்டவாராய். (186)

| | |
|---|---|
| நம்பி | குணபூர்ணனே! |
| எருதுகளோடு | விருடபங்களோடு |
| பொருதி | தன்னைப்பொருந்தவைத்து |
| ஏதும் உலோபாய் | எதிலும் ஆசையற்றவனே! |
| கருதிய | செய்ய நினைத்த |
| தீமைகள் செய்து | கொடுமைகளைச்செய்து |
| கால் கொடு | உன் கால்களைக்கொண்டு (கால்களால்) |
| கஞ்சனை பாய்ந்தாய் | துள்ளியெழும்பித்தள்ளி மேல்விழுந்து கம்ஸனை யழித்தவனே! |
| தெருவின் கண் | தெருக்களிலே |
| தீமைகள் செய்து | தீமைகளைச்செய்வது போலிருந்து |
| சிக்கென மல்லர்களோடு | அந்தக்ஷணமே பெரும் வீரர்களோடு |
| பொருது வருகின்ற | போர் செய்து பெருமை யோடு வரும் |
| பொன்னே | அழகும் அருமையுமான வனே! |
| புன்னைப்பூ | புன்னைப்பூவை சூட்டவாராய். |

பொருதி. இங்கு முன்னிலையொருமையிலுள்ள ‘இ’ விகுதியென்று கொண்டு, நப்பின்னையை மணம்புரிய ஏழு விருடபங்களோடு போர் செய்கிறாய் என வுரைப்பர். பூச்சூட்டுங்காலத்திலே போர்செய்யவில்லையானாலும் பொருதி என நிகழ்காலமாகச் சொன்னது அநுபவபரவசமாய்க் காலாந்தரத்தைத் தற்கால மாக்கிக்கொண்டதாலே என்பர். பொருதியென்பது மேலுள்ளவைபோல் வினையெச்சமாம். பொருதுதல் = பொருத்துதல், பொருந்தச்செய்தல். போர் செய்யும்போது தன்னை விருடபங்களுக்குப் பொருந்தவைத்து என்றதாம். அல்லது ஆஹார நித்ரைகளிலே ஊக்கமற்று, கோகுலத்திலுள்ள வலிய விருட பங்கள்போலே எங்கும் திரிந்தவண்ணமிருந்ததாலே இவன் தன்னை எருதுக ளுக்குச் சமமாக்கினனென்றதாம். உழைத்துவரும் விருடபங்களுக்கு ஒத்து இடைச்சேரிக்கு உபகாரம் செய்துவந்ததால் இங்ஙனம் சொன்னதுமாம். இனி, பொருதி என்றது கருத்தாப்பொருளில் வந்த இ விகுதி எனவாகிலும் கொள்க. உலோபாய் என்றதும் விளிச்சொல்லாம். அல்லது வினைமுற்று.

ஏதுமுலோபாய். நப்பின்னையினிடமுள்ள நோக்கிலே வேறொன்றிலும்பற்றில்லாமலிருந்தாய்; எங்களுக்கு உழைப்பதே பெரிதாய் உனக்கு யாவரும் செய்துவரும் பூசை புரஸ்காரங்களிலே பற்றற்றவனுனாய். எருதுகளோடு பொருதி நப்பின்னைக்கும் எங்களுக்குமாகவே நின்றிருந்த நீ மதுரைக்குச் செல்லும் ஸமயம் வந்தபோது இங்கெல்லாவிதத்திலும் பற்றற்றவனானா யென்றவாறு. கருதியதீமைகள். நீ அவனுக்குச் செய்ய நினைத்திருந்த தீமைகள். அல்லது அவன் உனக்குச்செய்ய நினைத்திருந்த தீமைகளை அவனுக்கே நீ செய்து என்றதாம்.

தெருவின்கண் இத்யாதி. 'இது மதுரையில் நடுத்தெருவில் அவன் வண்ணனை வதைத்தது போன்றவற்றைச் சொல்வதாகில், வருகின்ற என்ற பதத்திற்கு அவ்வளவு பொருத்தம் இல்லை. மேலும் அவ்வித துஷ்ட ஸம்ஹாரங்கள் யசோதையின் புத்திக்குத் தீமைகளாகத்தோன்ரு' என்னில், இடைச்சேரியில் விளையாட்டுப்பிள்ளையாய்த் தெருவின்கண் இளவாய்ச்சிமார்களுக்குத் தீமைகள் செய்தும், அவ்வண்ணமே யிருந்தாற்போல் இருந்து விரைவிலே ப்ரலம்பாதிகளான பல மல்லரான விரோதிகளோடும் மல்லரான இடைப்பிள்ளைகளோடும் பொருதும்வந்தமையைச் சொன்னதாகுக. (சு)

7. குடங்களெடுத்தேறவிட்டுக் கூத்தாடவல்லவெங்கோவே
மடங்கொள்மதிமுகத்தாரை மால்செய்யவல்லவென்மைந்தா
இடந்திட்டிரணியனெஞ்சை யிருபிளவாகமுன்கீண்டாய்
குடந்தைக்கிடந்தவெங்கோவே குருக்கத்திப்பூச்சூட்டவாராய். (187)

| | |
|---|---|
| குடங்கள் | பல பால் தயிர்க்குடங்களை |
| எடுத்து | ஏறவிட்டு (தலையிலும் தோள்களிலும் கைகளிலும் ஒரேசமயம் எடுத்துவைத்துக்கொண்டு) |
| கூத்து ஆட வல்ல | கைகளால் உயரவெறிந்து விழாதபடி பிடித்து விரைந்து ஆட்டம் ஆடுவதிலே ஸமர்த்தனை |
| எம் கோவே | எங்கள் நாதனே! |
| மடம் | மடப்பத்தை |
| கொள் | கொண்ட |
| மதிமுகத் தாரை | சந்திரன் போன்ற முகமுள்ள ஸ்திரிகளை |
| மால் செய்ய | மோஹித்தவராக்கும் சாமர்த்தியமுள்ள |
| என் மைந்தா | எனது புதல்வனே! |
| முன் | முன் ஓர் அவதாரத்திலே |
| கிடந்து இட்டு | (நகங்களை) ஊன்றிச் சொருகி |
| இரணியன் நெஞ்சை | ஹிரண்யாஸுரனுடைய மார்பை |
| இரு பிள வாக | இரண்டு கூறுக |
| கீண்டாய் | விண்டவனே! |
| குடந்தை | திருக்குடந்தையில் |
| கிடந்த | பள்ளிகொண்டுள்ள |
| எம் கோவே | எமது மன்னனே! |

குருக்கத்திப் பூ சூட்டவாராய்.

குடங்கள்—கூத்தாட. குடக்கூத்து என்பதோர் ஆட்டம் விநோதமாய் வெகு லாகவமாக இடையர் ஆடுவது என்பர். அதை யாடும்போது அனுபவித்தவர் ஆய்ப்பாடியிலுள்ளவர் எல்லோருமாகையாலே எம்கோவே என முதலில் அருளினது. குடந்தை கிடந்திருப்பதை அவர்களில் ஆழ்வாராயுள்ள யசோதையும் மற்றும் பலரும் அனுபவித்தல்பற்றி மேலேயும் எம்கோவே என்றது. நடுவில் என்மைந்தா என்றது இவன் யசோதைக்குமட்டுமே புத்ரனுகையாலும், எல்லோரும் யசோதைமகன் நம்மை மால் செய்கிறுனென்று சொல்லி

வந்ததாலுமாம். இப்பாசுரத்தில் அடைவே எம்பெருமான் நிற்பது, வீற்றிருப்பது, பள்ளிகொள்வதென மூன்று தசைகளும், ஹாஸ்யம், அத்புதம், கருணை, வீரம், சிருங்காரம் என்றாற்போலுள்ள பல ரஸங்களின் அநுபவத்தை யூட்டும் ப்ரகாரத்திலே பணிக்கப்பெற்றன. இரணியன் நெஞ்சிலே திருவுகிர்களை ஊன்றவைத்தது உளந்தொட்டுப்பார்த்து அவன் நற்குணம்பெறும் தறுவாயி லிருந்தால் விட்டுவிடலாமென்று. ஆகவே கருணையும் தோற்றும். (எ)

8. சீமாலிகனவனோடுதோழமை கொள்ளவும்வல்லாய்
சாமாறவனை நீயெண்ணிச் சக்கரத்தால்தலைகொண்டாய்
ஆமாறறியும்பிரானே யணியரங்கத்தேகிடந்தாய்
ஏமாற்றமென்னைத்தவிர்த்தா யிருவாட்சிப்பூச்சூட்டவாராய். (188)

| | |
|---|---|
| ஸ்ரீ | அதாவது பெருமை; அதனையுடைய |
| மாலிகன் அவனோடு | மாலிகன்என்பவனோடு |
| தோழமை(யை) | ஸ்நேஹத்தை |
| கொள்ளவும் வல்லாய் | பெறவும் ஸமர்த்தனாய், |
| அவனை | அந்த மாலிகனை, |
| சாம் ஆறு எண்ணி | சாகும் வழியை (தானே அவன் அழிய உபாயத்தை) ஸங்கல்பித்து |
| சக்கரத்தால் | (சக்ராயுத ப்ரயோகம் பயிலமுயன்று அவன் எடுத்து ப்ரயோகித்த) சக்ரத்தினாலே |
| தலை கொண்டாய் | அவன் தலையை வாங்கினவனே! |
| ஆம் ஆறு | ஆகும் விதத்தை |
| அறியும் | அறிந்துள்ள |
| பிரானே | உபகாரகனே! |
| அணி | அழகிய |
| அரங்கத்து | ஸ்ரீ ரங்கத்திலே |
| கிடந்தாய் | பள்ளி கொண்டவனே! |
| ஏமாற்றம் | மோசம் போவதிலிருந்து |
| என்னை தவிர்த்தாய் | என்னை நீக்கினவனே! |

இருவாட்சிப் பூ சூட்டவாராய்.

**சீமாலிகன்.** மாலிகவிருத்தாந்தம் ஆழ்வார் அநுபவத்தினின்றே உலகில் விளங்கினதென்பர். மாலிகனென்பானொருவன் கண்ணனிடம் ஆயுதங்கள் பயின்று தன் திறமையாலும் கண்ணனது தோழமையாலும் அச்சமற்று அஹங்காரமுற்று ஸாதுக்களையும் விரோதித்திருந்தபோது, கண்ணன், ஸ்நேஹிதனாயிருந்து அவனை நேரில் கொலை செய்வது தகாதென்று, அவனே தன்னை யழித்துக்கொள்ள வழி தேடினார். நீ பயிலவேண்டியன இன்னும் பல உள வென்றார். ஆகவே மாலிகனும் சக்ராயுதப்ரயோகமும் பயிலுவிக்கும்படி கண்ணனை நிர்பந்தித்தான். அது அவனுக்கியலாதெனப் பல தரம் சொல்லியும் அவன் கேட்காதபோது அதனைக் கற்பிக்க முன் வந்தார். அப்போது அவன் சக்கரத்தைத் தன் தலையோரம் சுழற்ற, அது சுழல இடம் பெறாமல் அவன் தலையைக் கரகரவென்று அறுத்தெறிந்தது என்றிங்கு வரலாறென்பர்.

ஆமாறு இத்யாதி. ஆமாறறிவதாவது சக்தி அசக்தி, யுக்தாயுக்தம், ஹிதாஹிதம் எல்லாம் அறிவதுமாம். 'எங்ஙனம் இது கை கூடுவது' என்று வேண்டியதைப்பற்றி ஆராய்ந்து தெளிவதுமாம். ஆ, மாறு எனவும் பிரிக்கலாம். ஆ ஆச்சர்யம். மாறு முரணான தன்மை. தன்னிடம் ஸ்நேஹமும் தன்னைச் சார்ந்தோரிடம் பகையும் கொண்டுள்ள மாலிகனுடைய தன்மையென்றவாறு ஆராய்க. இப்படியெல்லாம் ஆகவேண்டியவற்றை ஆக்கிவைப்

பவனாகையாலே என் மனோரத பூர்த்திக்காக விபவத்தோடு நிற்காமல் அர்ச்சையாயும் அவதரித்தாய். அதிலும் குடந்தை கிடந்ததற்கும் மேற்பட்டு, அசையாத வண்ணமாய் அரங்கத்திற் கிடந்து அதிஸௌலபனானாய். இனி எனக்குப் பூச்சூட்ட ஏமாற்றம் ஏது என்றவாறு. (அ)

குடந்தையிற் கிடந்தவன், அதற்கு முன்னாகவே அரங்கத்திற்கிடந்தவன், அதற்கும் முன்னாக ஆலிலையிற் கிடந்தவனாகையாலே அவ் வண்ணமும் விளித்து அழைக்கிறாள்—

9. அண்டத்தமரர்கள்சூழ வத்தாணியுள்ளங்கிருந்தாய்
தொண்டர்கள்நெஞ்சிலுறைவாய் தூமலராள்மணவாளா
உண்டிட்டுலகினையேழு மோராலிலையிற்றுயில்கொண்டாய்
கண்டுநானுன்னையுகக்கக் கருமுகைப்பூச்சூட்டவாராய் (189)

| | | | |
|---|---|---|---|
| அண்டத்து அமரர் | ப்ரம்மாண்டத்திலுள்ள ப்ரம்மாதிகளான எல்லாத் தேவர்களும் | ஏழு உலகினை | ஏழு லோகங்களையும் |
| சூழ | சூழ்ந்திருக்கும்படி | உண்டிட்டு | திருவயிற்றில் அடக்கிக் கொண்டு |
| அங்கு அத்தாணியுள் | அங்கே (மேலுலகில்) ஆஸ்தானத்திலே (திருவோலக்கத்திலே) | ஓர் ஆலிலையில் | ஒற்றையான வடதளத்தில் |
| இருந்தாய் | வீற்றிருந்தவனே! | துயில் கொண்டாய் | யோக நித்திரை செய்பவனே! |
| தொண்டர்கள் | பக்தர்களுடைய | நான் | நீராட்டி அலங்கரித்து வரும் நான் |
| நெஞ்சில் | மனதில் | உன்னை | பூ அணிந்துவிளங்கும் உன்னை |
| உறைவாய் | வசிப்பவனே! | கண்டு | பார்த்து |
| தூ மலராள் | பரிசுத்தமான (தாமரை) மலரிலுள்ள பிராட்டிக்கு | உகக்க | களிக்கும்படி |
| மணவாளா | நாதனே! | | கருமுகைப் பூ சூட்டவாராய். |

தூமலராளோடு உலகினிற் புகுந்து அண்டத்தமரர்கள் சூழ விளங்கியும், அவ்வண்ணமே தொண்டர்களுடலுக்குள்ளே நெஞ்சிலே உறைந்தும், இப்படி உனக்கு ஆதாரமாகத் தோன்றின அவர்களையும் அனைத்துலகையும் உண்டு உன் வயிற்றில் வைத்துக்கொண்டு ஒற்றை ஆலிலையிற் பள்ளிகொண்டும், 'எனக்கு அவைகள் ஆதாரங்களல்ல, இவ்வாலிலை யொன்று எவ்வளவு ஆதாரமாகக் கூடுமோ, அவ்வளவே அவையுமாம். உண்மையில் நானே அவைகளுக்கு ஆதாரம். இதோர் அந்தர் வ்யாப்தி பஹிர்வ்யாப்திப்ரகாரம் எனக்குள்ளதைக் காண்க' என வுணர்த்தும் விசித்திர லீலைகள் செய்யும் வித்தகனே! மலரிலே பிறந்தவளுக்கு மணவாளனான உனக்கு இலையிலே பள்ளிகொள்வது பொருந்தினதாம். பூச்சூட்டவாராய். என்றதாம்.

கருமுகைப்பூ இங்குச் சிறுசெண்பகப்பூவாம். அண்டத்து அத்தாணியுள் என்றார் திருவாய்மொழிப்பிள்ளை. உள் என்பதைப்பிரித்து, 'அண்டத்துள்' அத்தாணியமரர். அத்தாணி அருகிருப்பை யுடையரான' என ஜீயர் உரையாம். 'அத்தாணிச்சேவகமும்' என்று முன்னமும் இப்பதமுள்ளது. (கூ)

**10.** சேண்பகமல்லிகையோடு செங்கழுநீரிருவாட்சி
எண்பகர்பூவுங்கோணர்ந்தேனின்றிவைசூட்டவாவேன்று
மண்பகர்கோண்டானையாய்ச்சி மகிழ்ந்துரைசெய்தவிம்மாலை
பண்பகர்வில்லிபுத்தூர்க்கோன் பட்டர்பிரான்சோன்னபத்தே. (190)

| | | | |
|---|---|---|---|
| செண்பகம், மல்லிகை, செங்கழுநீர், இருவாட்சி ஓடு | கீழ் (ஒன்பது பாசுரங்களில்) சொன்ன புஷ்பங்களோடு | கொண்டானை | (மாவலியினிடமிருந்து) ஸ்வீகரித்தருளின எம்பெருமானைப்பற்றி |
| எண் பகர் பூவும் | நினைக்கப்படுவனவும் சொல்லப்படுவனவுமான எல்லாப் புஷ்பங்களையுமே | ஆய்ச்சி | இடைச்சியான யசோதை |
| இன்று | இன்றைத் தினம் | மகிழ்ந்து | களித்து |
| கொணர்ந்தேன் | கொண்டு வந்தேன். | உரை செய்த | சொன்னவை, |
| இவை | இவற்றை | பண் | கானமாகவே |
| சூட்ட | (நான் உனக்கு) சூட்டும்படி | பகர் | சொல்லும் |
| வா என்று | | வில்லிபுத்தூர் | ஸ்ரீ வில்லிபுத்தூருக்கு |
| பகர் மண் | சொல்லப்பட்ட மண்ணை | கோன் | நிர்வாஹகனை |
| | | பட்டர் பிரான் | பட்டநாதன் (பெரியாழ்வார்) |
| | | சொன்ன இ பத்து மாலை | சொன்ன இப் பத்துப் பாசுரங்களுமாம். |

எண்பகர். நீ வேண்டுமென ஆசைப்பட்டவையும் சொன்னவையுமென்றதாம், அன்றி, எனக்கு ப்ரியமும் சாஸ்த்ரோக்தமுமானவையுமென்க. எண்பகர் எண்ணிச்சொல்லப்பட்ட, அல்லது இன்னதின்னதென்று கணநம் செய்யப்பட்டும் சாஸ்த்ரோக்தமுமான எனவுமுரைப்பர். இன்று. எல்லாப் புஷ்பங்களையும் கொணர்ந்துள்ளேன். இப்படியெல்லாம் கிடைக்கும் நன்னாள் அறிதென்றபடி. இன்று என்பதை 'இவைசூட்ட' என்றதோடும் சேர்ப்பர். மண்பகர். மூவடி மண் வேண்டுமென வாமனனாய் கேட்ட மண், அல்லது மாவலி கொடுத்த மண், அல்லது தேவதைகள் தன்னை இரந்த மண். உரைசெய்த. அன்சாரியையில்லாத 'அ' விகுதிபெற்ற பலவின்பால் இறந்தகால வினையாலணையும்பெயர் முதல் வேற்றுமை. யசோதை சொன்னவையும் ஆழ்வார்சொன்னவையுமொன்றென்றபடி. கீழ் ஒன்பதுபாசுரங்கள் முழுமையும், பத்தாவது பாசுரம் முதல் பாதியும் யசோதை சொன்னவை என்றது. உரைசெய்த என்பதை இரண்டாம் வேற்றுமையாகக் கொண்டு, சொன்னவற்றைப் பட்டர்பிரான் சொன்ன எனவுமுரைப்பர். பண்பகர். ஸ்ரீவில்லிபுத்தூரிலேயுள்ளவர் யாவரும் இராகமாகவே சொல்ல வல்லவர் என்றபடி. இந்தப் பலச்ருதிபாசுரத்திலே பலன் ஏன் சொல்லப்பட வில்லையெனில்—எங்கும் வக்தாவையும் விஷயத்தையும் சொல்வதிலேயே கடைப்பாசுரத்திற்கு நோக்கென்க. அன்றி, பலன் சொல்லாதவிடத்தில் எல்லாப் பலனுமுளவென்றதாம். (ய)

ப்ரபந்த ரக்ஷையில் 2. 7. ஆனிரைமேய்க்க உரை முற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

## பெரியாழ்வார் திருமொழி 2, 8. (திருவந்திக்காப்பிடல்)

# இந்திரனோடு பிரமன்

நீராட்டிக் குழல்வாரிக் கோலம்செய்து பூச்சூட்டின பிறகு கண்ணன் வெளியிலே பிள்ளைகளோடு விளையாடிக்கொண்டிருக்க அந்திப்போது வந்தது கண்டு அழகனுக்குத் திருஷ்டிதோஷ பரிஹாரமாகக் காப்பிட நினைத்து யசோதை யழைத்ததை அனுபவித்து அருளுகிறார். எம்பெருமான் வீதிபுறப்பாடான பிறகு திரும்ப எழுந்தருளினதும் திருவந்திக்காப்பிடுவது எங்கும் அர்ச்சையிலே கண்டதே. அப்போது அந்திக்காப்பாவது உத்ஸவத்தின் அந்தியில் முடிவில் செய்யும் காப்பு என்றதாம். இத்திருமொழி முழுதும் திருவெள்ளறை நின்ற எம்பெருமான் விஷயமாக ஆழ்வார் அருளிச்செய்ததாகிறது.

1. இந்திரனோடு பிரமனீசனிமையவரெல்லாம்
மந்திரமாமலர்கொண்டு மறைந்துவராய்வந்துநின்றார்
சந்திரன்மாளிகைசேருஞ் சதுரர்கள்வெள்ளறைநின்றாய்
அந்தியம்போதிதுவாகு மழகனேகாப்பிடவாராய். (191)

| | |
|---|---|
| சந்திரன் | வானத்திலுள்ள சந்திரனவன் |
| மாளிகை | வீட்டுமேனிலைகளிலே |
| சேரும் | சேரும்படியுள்ள (வானமளாவும்மாளிகைகளுள்ள) |
| சதுரர்கள் | (ஸமர்த்தர்கள்) வித்வான்களான பரமைகாந்திகளையுடைய |
| வெள்ளறை | திருவெள்ளறை க்ஷேத்ரத்திலே |
| நின்றாய் | அவதரித்து நின்றுள்ளவனே! |
| அழகனே | திருஷ்டிபடும்படி அழகு வாய்ந்தவனே! |
| இது அந்தியம்போது ஆகும் | இது சாயங்காலம்; |
| இந்திரனோடு | நந்தனவனத்தைக்காக்கும் தேவேந்திரனோடு சேர்ந்து |
| பிரமன் | ப்ரஹ்மாவும் |
| ஈசன் | ருத்திரனும் |
| இமையவர் | (இவர்களுடைய பரிஜனங்களான) மற்றதேவர்களும் |
| எல்லாம் | எல்லோரும் |
| மந்திரம் மா மலர் | வேதமந்த்ரங்கள் ஓதி அளிக்கப்படும் ச்லாக்கியமான புஷ்பங்களை (கற்பகப்பூக்களை) |
| கொண்டு | பறித்து எடுத்துக்கொண்டு |
| வந்து | இவ்விடம் வந்துசேர்ந்து |
| மறைந்து | மனிதருக்குத்தெரியாதபடி இருந்து |
| உவராய் நின்றார் | கொஞ்சம் விலகிநின்று விட்டார்கள்; (ஆகவே) |
| காப்பிட | திருக்காப்புக் கொள்ள (ரக்ஷைபெறும்படி) |
| வாராய் | வருவாயாக. |

சந்திரன் மாளிகைகள் வாயிலாகவே கிழக்கிலிருந்து மேற்குக்குப் போம்படி ஓங்கியுள்ள திருமாளிகைகள் நிறைந்ததாயும், அத்யயன அநுஷ்டானாதி வைதிக தர்மங்களிலே சதுரர்களாய் சந்திர ஸூர்யர்களைப்போல் விளங்கும்

ஸாத்விக பரமைகாந்திகளுக்கென்றே ஏற்பட்டுத் திருவெள்ளறை எனத் திருநாமமும் பெற்றுள்ள க்ஷேத்திரத்திலே உன்னை எங்கும் போகாமல் நிற்கும்படி ப்ரார்த்தித்து, அம்மாளிகைகள் வாயிலாகவே உன்னைத் தொழுதெழ இறங்கி வரும் தேவர்கள் எல்லோரும் இப்போது நான் அலங்கரித்துப் பூச்சூட்டினவுடனே வெளியே ஓடி விளையாடித் திரிவதைக்கண்டு, 'அந்தியம் போதாயிற்றே. இவனுமழகனுயிற்றே. நாம் ப்ரார்த்தித்தபடி நிற்காமல் திரிகிறானே. என்ன திருஷ்டிதோஷ மேற்பட்டதோ' என அஞ்சி உனக்குக் காப்பிடவேணுமென்று எனக்குமேல் ஆசை கொண்டு தங்களுக்கு இயற்கையிலேயே ப்ரத்யக்ஷமாய்த் தோற்றியுள்ள மஹா மந்த்ரங்களாலே மந்த்ரித்துக்கொடுக்க உயர்ந்த கற்பக மலர்களைக் கொண்டுவந்து நிற்கிறார்கள். ஆக நீ காப்பிட்டுக்கொள்ளவேணுமென்றபடி.

இந்திரனோடு. கல்பவிருக்ஷங்கள் நிறைந்த நந்தநவநம் இந்திரனுக்கு அதீனமாகையாலே அவன் தன் கைகளால் பரிசுத்தமாகப் பறித்துக்கொண்டு வருமளவு எதிர்பார்த்து அவனுடன் சேர்ந்து வருவதாலே இங்கு 'ஓடு' என்று மூன்றும் உருபு அமைத்ததாம். மந்த்ரங்கள் ஓதுவதற்குச் சதுர்முகன் முக்கியமானவன். எல்லாம். பெரியோர்கள் போய்வந்தால் போதுமென்று நிற்காமல் எல்லோரும் வந்தது, இவன் திரிவதைக்கண்டு திருஷ்டி பரிஹாரத்திலே உள்ள ஆவலினால். மந்திரமாமலர். மாமலர் ச்லாக்யமானபுஷ்பம் என ஜீயர் உரை. மாமந்திரம்மலரெனவும் சேர்ப்பர். மாமலர் கொண்டு மந்திரம் வந்து எனவு முரைக்கலாம். இப்போது மந்திரமாவது எம்பெருமான்கோயில். உவராய். அவர்கள் எல்லோர் கண்ணுக்கும் இலக்காகமாட்டாராகையாலே மறைந்திருப்பதாலே உவரென்றது. அல்லது அதூர விப்ரக்ருஷ்டர் உவர். அதாவது கொஞ்சம் விலகி நிற்பவர். உவராவந்து எனவும்பாடம். உவரா உவராக. அவர்கள் விலகி நிற்பதும், அவர்களைப் போலே போகபரர்களாய் புபுக்ஷுக்களன்றிக்கே கேவலம் முமுக்ஷுக்களாய், 'தஸ்மை தேவா பலிமாவஹந்தி,' 'முப்போதும் வானவரேத்தும் முனிவர்' என்றபடி அவர்களால் கௌரவிக்கப்படும் சதுரர்கள் இங்கே நித்யவாஸம் செய்து நிறைந்து குவிந்திருப்பதாலாம். சதுரர்கள் நிபுணர்கள். விளம்பித்துப் பலனை யளிக்கும் பக்தி யோகத்தில் இழியாமே ஆசார்யமுகமாக முதிர்ந்த விவேகமும் வைராக்யமுமுற்று ப்ரபத்தியை யனுஷ்டித்தவர். அதிலும், இருந்த நாள் முழுதும் எம்பெருமான்கைங்கர்யம் இடையற்று நடக்கும்படி அதனையும் கோலி அடியிலே ப்ரபத்தி பண்ணிக்கொள்ளும்படி சிறந்த ஸாமர்த்தியம் பெற்றவர். ஸ்ரீ தேசிகன், 'நிபுணருக்கு பரஸமர்ப்பணம் ஆசார்யக்ருத்யம்' என்று ஸாரஸாரத்தில் அருளிச்செய்ததும், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் அபராதபரிஹாராதிகாரத்திலே அருளிச்செய்த விசேஷமும் காண்க. இவரே மங்களாசாஸனபரராவர். (க)

தேவதைகளிடத்திலும் என்னிடத்திலுமுள்ளதற்கு மேலாக உனக்குப் பால் தருவனவும், நீ ஆசையோடு மேய்த்து வருவனவுமான பசுக்களிடத்திலும் கன்றுகளிடத்திலும் உள்ள நேசத்தினாலாவது காப்பிட வரவேணுமென்கிறாள்—

2. கன்றுகளில்லம் புகுந்து கதறுகின்ற பசுவெல்லாம்
நின்றொழிந்தேனுன்னைக்கூவி நேசமேலொன்றுமிலாதாய்
மன்றில்நில்லேலந்திப்போது மதிள்திருவெள்ளறை நின்றாய்
நன்றுகண்டாயென்றன்சொல்லு நானுன்னைக்காப்பிடவாராய். (192)

மதிள் திரு — மதிளாலுண்டான மேன்மையுடைய
வெள்ளறை நின்றாய் — திருவெள்ளறையிலே நின்றுள்ளவனே!
கன்றுகள் இல்லம் புகுந்து — கன்றுகளைக்கட்டியிருக்கும் இடங்களிலே உள்ளே நுழைந்து
பசு எல்லாம் — எல்லாப்பசுக்களும்
கதறுகின்ற — (கன்றுகளை ஊட்டவைத்துக்கறப்பவரில்லாமையாலே) கத்துகின்றன.
(அவற்றைச்செய்யவேண்டிய நான்)
உன்னை கூவி — அந்தியம்போதில் நாற்சந்தியிலிருக்கும் உன்னைக் கூப்பிட்டுக்கொண்டு
நின்றொழிந்தேன் — நின்றுவிட்டேன். (நாழிகையாய்விட்டது)
மேல் ஒன்று நேசம் உம் இலாதாய் — மேலுக்காகவரும் நேசம் கூட இராதவனே!
அந்தி போது — சாயங்காலத்திலே
மன்றில் — வெளியில்
நில்லேல் — நிற்கவேண்டா.
என்தன் சொல்லு நன்று — நான் சொல்வது உனக்கு ஹிதமானது.
நான் உன்னை காப்பிட வாராய்.

நீ வெளியே திரியாதபடி நிற்க மதிள் சூழ்ந்த திருவெள்ளறையில் விளங்க வைத்திருக்க, அந்திப் போதில் நாற்சந்தி முதலான விடங்களில் நிற்பதும், கன்றுகளும் பசுக்களும் கதறுகின்றதைக் கூட மதியாமல் உன் மேல் நேசம் வைத்து நான் கூவி நிற்கும்போது நீ மட்டும் நேசமேதுமிராமல் அங்கு நின்றபடியேயிருப்பதும் தகுமோ? 'தாயர்வாய்ச்சொல் கருமம் கண்டாய்.' நான் காப்பிட வருவாயாக.

கதறுகின்ற. அன்சாரியை பெறாத வினைமுற்று. இல்லம் புகுந்து கன்றுகளும் பசுக்களும் ஆக எல்லாம் கதறுகின்றன எனவுமுரைக்க. நேசமேல். இங்கு, 'உறவேல் நமக்கிங்கு' என்றவிடத்திற் போல் 'ஏல்' அசையாய் நேசம் ஒன்றும் சிறிதும் இலாதாய்! எனலுமாம், மேல்=என்மேல் நேசமொன்று மிலாதாய் எனவுரைப்பது கூடுமாகில் கொள்க. (உ)

3. செப்போதுமென் முலையார்கள் சிறுசோறுமில்லுஞ்சிதைத்திட்டு
அப்போது நானுரப்பப்போயடிசிலுமுண்டிலையாள்வாய்
முப்போதும்வானவரேத்தும் முனிவர்கள் வெள்ளறை நின்றாய்
இப்போது நானொன்றுஞ்செய்யே னெம்பிரான் காப்பிடவாராய். (193)

மு போதும் — காலை, உச்சி, மாலை யென்ற மூன்று காலங்களிலும்
வானவர் — தேவதைகள்
ஏத்தும் — ஸ்தோத்திரம் செய்யும்
முனிவர்கள் — பரமைகாந்தி யோகிகள் வசிக்கும்
வெள்ளறை நின்றாய் — திருவெள்ளறையிலே நின்றுள்ளவனே!
செப்பு ஓது — கலசமாக ரூபித்துக் குறிக்கப்பட்டும்,
மெல் — மெல்லியவையுமான
முலையார்கள் — ஸ்தநங்கள் உடைய பெண்களுடைய
சிறு சோறும் இல்லும் — விளையாட்டில் சோருகவும் வீடாகவும் பாவிக்கப் பெற்றவைகளை

சிதைத்து இட்டு — அழித்து எறிந்து விட்டு
அப்போது — அவர்கள் கூச்சலிடும்போது
நான் உரப்ப — நான் உன்னை அதட்டினதால்
போய் — வீட்டிற்கு வராமலே வெளியேபோய்
அடிசிலும் — அன்னத்தையும்
உண்டிலை — இதுவரையில் நீ உண்ண வரவில்லை.
ஆள்வாய் — ஆள்பவனே ! (அல்லது) என்னை ஆளக்கடவாய்
இப்போது — இப்படி நீ களைத்து வெளியில் கஷ்டப்படும்போது
ஒன்றும் — உனக்கு இஷ்டமல்லாதது ஒன்றும்
நான் செய்யேன் — நான் செய்ய மாட்டேன்.
என்பிரான் — எனது உபகாரகனே ! காப்பிடவாராய்.

தேவதைகளைப்போன்ற பெரியோர்களுக்கும், பசுக்கள்போன்ற ஜந்துக்களுக்கும் இரங்காமற்போனாலும் உன் பசியைப் போக்கவாவது வந்தாற் போதுமென்று கருத்து. சிறு சோறு. சிறுமை = இளமை. சோறல்லாததைச் சோறென்றும், இல் அல்லாததை இல்லென்றும் இளம் பிள்ளைகள் விளையாட்டாகப் பாவிப்பது வழக்கம். பெரும்பான்மை இவை தெருவில் மணலாற் செய்யப் பெறுவதால் 'மணற் சோறு' 'மணல் வீடு' என்னப்படுவதுமுண்டு. சிறுசோறும் சிற்றில்லும் அழித்ததற்கு அதட்டவே, சோறு முண்ணாமல் இல்லத்திலும் நுழையாமல் வெளியிலே போய் வாடி நின்றாய். உனக்கு இஷ்டமானவை யெல்லாம் நான் செய்து கொடுக்கிறேன். இனி என்னை நீயே ஆள்வாயாக. நீ அப்பாற் போய் அந்தச் செப்போதுமென்முலையார்களை ஆள நினைத்து என் வலிச்சண்டைக்கு வழி வைக்கிறாய். ஏத்தும். வானவர், வெள்ளறையைப்போல் முனிவரையும் வத்துவர். 'அமீ ஹி த்வா ஸுரஸங்கா: விசந்தி' என்றபடி எம்பெருமானிடம் எதற்கோ நெருங்கிவரும் தேவர்களைக் காட்டிலும், 'ஸ்வஸ்தீத்யுக்த்வா மஹர்ஷி ஸித்த ஸங்கா:' என்றபடி வைராக்யம் உற்று, பகவானுக்கு நாம் நித்ய தாஸரென்பதைத் தெளிந்து, தம் க்ஷேமத்தை மறந்து, பகவானுக்கே பல்லாண்டு பாடி மங்களாசாஸனம் செய்யும் மஹா பரமைகாந்திகளான முனிவரல்லரோ மிக்கராவர். வானவரேத்தும் முனிவர்கள். வானவரும் முனிவரும் ஏத்தும் என்பதுமாம். ஏத்த எனவும் பாடமுண்டு. (௩)

4. கண்ணில் மணற்கொடுதூவிக் காலினாற்பாய்ந்தனை யென்றென்று
எண்ணரும் பிள்ளைகள் வந்திட்டிவரார் முறைப்படுகின்றார்,
கண்ணனே வெள்ளறைநின்றாய் கண்டாரோடே தீமைசெய்வாய்
வண்ணமே வேலையதொப்பாய் வள்ளலே காப்பிடவாராய். (194)

எண் அரு — எண்ணுவதற்கு அருமையான (கணக்கில்லாத) பிள்ளைகள் வந்திட்டு,
மணல் கொடு — நீ மணலைக் கொண்டு வந்து
கண்ணில் தூவி — கண்ணுள்ளே போட்டு
காலினால் பாய்ந்தனை — காலினாலும் உதைத்தாய்'
என்று என்று — என்றவாறெல்லாம் (என்னிடம்) சொல்லி
முறைப் படுகின்றார் — முறையிடுகின்றனர். (குறை கூறுகின்றனர்)
இவர் ஆர் — இப்பிள்ளைகள் யார் ? சொல்லு.

| | |
|---|---|
| கண்டாரோடு | கண்ட பிள்ளைகளோடும் (நமக்குப் பழக்கமில்லாதவர்களோடும்) |
| தீமை செய்வாய் | தீம்புகளைச் செய்பவனே! |
| வெள்ளறை நின்றாய் | திருவெள்ளறையில் நின்றருளினவனே! கண்ணனே! |
| வண்ணம் | வர்ணத்தில் |
| வேலை அது ஒப்பாய் | ஸமுத்திரத்திற்கு ஸமனானவனே! |
| வள்ளலே | உதாரனே! |
| | காப்பிட வாராய். |

இவரார். இன்னாரென்று நினைப்பதற்கே முடியாத வெகு தூரத்திலுள்ள பிள்ளைகளோடெல்லாம் தீம்பு செய்கிறாயே. இவர் யார்? உன்னிடம் பட்டவர்களா? அல்லது உன்னைப் படுத்தினவர்களா? இவர்கள் இத்தனை பேர் சேர்ந்து உன்னை என் படுத்தியிருக்கிறார்களோ? தெரியவில்லையே. நீ எப்போது காப்பிட வருகிறது. கண்ணனே!. அவர்கள் உன் அழகிய கண்களில் மணல் தூவிவிட்டார்களா என்ன என்று கருத்து. கண்டாரோடே தீமை. கண்டாருக்குத் தீமை என்னுததால் கண்டாரோடு கலந்து நின்று நீ தெரிந்தவர்களுக்கே தீமை செய்தாலும் கூட விருக்கும் அவர்கள் உனக்குத் தீமை செய்வர் என்று நினைத்தனள் போலும். இவரால் எனவும் படிக்கின்றனர். உரை விளக்கமிராவிடினும் இவரார் என்ற பாடமே பழைய உரைகளிற் காண்கிறது. 'கண்டாரோடே என்றதற்குப் பொருந்தியு மிருக்கிறது. இவரால் என்ற பாடமாகில், பிள்ளைகள் இவர்=இப்பிள்ளைகள் எனவேண்டும். ஆல் அசையாம். (௪)

5. பல்லாயிரவரிவ்வூரிற் பிள்ளைகள் தீமைகள் செய்வார்
எல்லாமுன் மேலன்றிப் போகா தெம்பிரான்நீ யிங்கேவாராய்
நல்லார்கள் வெள்ளறைநின்றாய் ஞானச்சுடரே யுன்மேனி
சொல்லாரவாழ்த்தி நின்றேத்திச் சொப்படக் காப்பிடவாராய். (195)

| | |
|---|---|
| தீமைகள் செய்வார் பிள்ளைகள் | தீம்புகளைச் செய்யும் பிள்ளைகள் |
| இ ஊரில் | இந்த ஆய்ப்பாடியிலே |
| பல் ஆயிரவர் | பல்லாயிரக் கணக்காக வுள்ளனர். |
| | (ஆயினும்) |
| எல்லாம் | யார் செய்த தீம்பும் |
| உன் மேல் அன்றி போகாது | உன்பேரிலல்லாமல் வேறு பிள்ளையின் மேற் செல்லாது. |
| | (ஆகவே) |
| எம் பிரான் | எமக்கு உபகாரகனே! |
| | நீ இங்கேவாராய். |
| நல்லார்கள் | உன்மேல் குற்றம் கொள்ளாது குணமே கொள்ளும் பெரியோர்களுடைய |
| வெள்ளறை நின்றாய் | திருவெள்ளறையிலே அவதரித்துள்ளவனே! |
| ஞானச் சுடரே | ஞானரூபமான ஜ்யோதிஸ்ஸே! |
| உன் மேனி | உனது திருமேனிக்கு |
| சொல் ஆர | (முடிந்தவரையில்) சொல் நிறையும்படி |
| வாழ்த்தி | பல்லாண்டு பாடி |
| நின்று | திருஷ்டிதோஷ மறுமென அச்சமற்று நின்று |
| ஏத்தி | தோத்திரம் செய்து |
| சொப்பட | நன்றாக |
| | காப்பிட வாராய். |

போகாது. செய்தது யாராயிருந்தாலும் நீ செய்ததாகத்தான் சொல்லி வருவர். இல்லையென்று எவ்வளவு எடுத்துச் சொன்னாலும் ஏற்கமாட்டார்.

ஆக வந்துவிடு என்றபடி. இங்கே போகா வென்று பாடமாகில் பன்மை; அது பொருத்த முள்ளதே.

ஞானச் சுடரே. ஞானமென்றபோது (ஸ்வயம் ப்ரகாசம்) தானாகவே ப்ரகாசிக்குமது என விளங்கா நிற்க, சுடர் என்பது என்னெனில், ஒரு தோஷமும் அவ்வாத்மசொரூபத்தை யண்டாது (அகிலஹேயப்ரத்யநீகன்) என விளக்கவாம். அன்றி, சுடராவது ஜ்யோதிஸ்ஸு; தேஜஸ்ஸு. ஸூர்யாதி தேஜஸ்ஸுக்கள் ஞான ஸ்வரூபங்களல்ல. எம்பெருமானின் திருமேனியாயுள்ள தேஜஸ்ஸானது அப்ராக்ருதமாகையாலே ஜ்ஞானானந்த ஸ்வரூபமென்ற வாசியைத் தெரிவித்ததாம். (௫)

2-வது பாட்டில், இவன் பெண்களிடத்தில் தீம்பு செய்வதைச் சொன்னாள். 3-வதில் ஆண்பிள்ளைகளிடம் தீம்பு இவன் செய்தானோ, அவர்களே செய்து முறையிடுகிறார்களோ என ஐயமுற்றாள். இப் பாசுரத்திலே, பிறரே தீம்புகள் செய்வது; படுவது கண்ணன் என்று தீர்மானித்தாள். இனி வெளியிலுள்ள அசுரர்களால் இவனுக்கு வரும் தீம்பைக் கூறி அழைக்கிறாள்—

6. கஞ்சன்கறுக் கொண்டுநின்மேற் கருநிறச்செம்மயிர்ப்பேயை
வஞ்சிப்பதற்கு விடுத்தானென்பதோர் வார்த்தையுமுண்டு.
மஞ்சுதவழ் மணிமாடமதிள் திருவெள்ளறை நின்றாய்
அஞ்சுவன் நீ யங்குநிற்க வழகனே காப்பிடவாராய். (196)

கஞ்சன் — 'கம்ஸனே
நின்மேல் — உன்மேல்
கறு கொண்டு — கோப முற்று
வஞ்சிப்பதற்கு — உன்னை ஏமாற்றுவதற்காக
கரு நிறம் — கறுத்த நிறமுள்ளவளும்,
செம்மயிர் — சிவப்பு நிறமான மயிர்களை யுடையவளுமான
பேயை — பேய்ச்சியை (பூதனையை)
விடுத்தான் — அனுப்பிவைத்தான்
என்பது ஒரு வார்த்தையுமுண்டு.
(ஆகையால்) நீ
அங்கு நிற்க — தூரத்திலே வெளியே நின்றால்
அஞ்சுவன் — (இன்னும் யார் வருவார்களோ வென்று) பயப்படுவேன்.
(ஆகவே)
அழகனே — திருஷ்டிதோஷம் வரும்படி அழகு பெற்றவனே!
மஞ்சு — மேகங்கள்
தவழ் — பரந்து பிடித்தேறுகின்ற
மணி — ரத்நமயமான
மாடம் — உப்பரிக்கைகளாலும்
மதிள் — ப்ராகாரங்களாலும்
திரு — அழகையுடைய
வெள்ளறை — திருவெள்ளறையில்.
நின்றாய் — அவதரித்து நிற்பவனே!
காப்பிட வாராய்.

(கருநிற செம்மயிர்ப்பேய்) செங்நிறக் கருமயிர்ப் பெண்மணிகள் எடுத்தானை முன்னை யழிக்க வந்த இப்படிப்பட்டவள் தானாக வந்தவளல்லள்; கஞ்சனால் அனுப்பப்பட்டுத்தான் வந்தனள் என்று சொல்லுகின்றனர். இன்னும் எவரெவர் அங்ஙனம் வருவார்களோ. உள்ளே வந்துவிடு என்றதாம். (௬)

7. கள்ளச்சகடுமருதுங் கலக்கழிய வுதைசெய்த
பிள்ளையரசே நீ பேயைப்பிடித்து முலையுண்டபின்னை
உள்ளவாறோன்றுமறியே னொளியுடை வெள்ளறைநின்றாய்
பள்ளிகோள் போதிதுவாகும் பரமனே காப்பிடவாராய். (197)

| | |
|---|---|
| கள்ளம் | கள்ளத்தனமுடைய |
| சகடும் | சகடாசுரனையும் |
| மருதும் | இரு மருதமரங்களையும் |
| கலக்கு அழிய | அவற்றின் அமைப்பு குலையும்படி |
| உதை செய்த | திருக்காலினல் தட்டிய |
| பிள்ளை அரசே | சிறந்த சிறு பிள்ளையே! |
| நீ பேயை பிடித்து | நீ பூதனையை அமுக்கி |
| முலை உண்ட பின்னை | ஸ்தனத்தைப் பானம் செய்த பிறகே |
| உள்ள ஆறு | உனது உண்மை வரலாற்றை |
| ஒன்றும் அறியேன் | சிறிதும் அறியாதவளானேன். |
| ஒளி உடை | பலபடியிலே ப்ரகாசம் பெற்றுள்ள |
| வெள்ளறை | திருவெள்ளறையிலே |
| நின்றாய் | அவதரித்தவனே! |
| பரமனே | ஸர்வஸ்மாத் பரனே! |
| இது பள்ளி கொள் போது ஆகும் | இது படுத்துறங்கும் காலமாகும். (ஆக) |

காப்பிட வாராய்.

கள்ளச்சகடு மருது. சகடத்திற் போலே மருதிலும் கள்ளத்தனமாய் மறைந்து அசுரனிருந்தது இதனல் தோற்றும். மேன்மேல் நாழிகை யாகிவருகிறது. சிறு பிள்ளைகள் சீக்கிரமே உண்டு உறங்கப் பள்ளிகொள்வது வழக்கம். ஆக நீ படுத்துறங்கும் காலமாயிற்றே. இன்னும் காப்பிடக் கூட வரவில்லையே என்றனள்.

இனி, பயங்கரர் ஸஞ்சரிக்கும் வேளையிலே வெளியிலே யிருக்கலாகாதென்று சொல்லி யழைக்கிருள்—

8. இன்பமதனையுயர்த்தா யிமையவர்க்கென்றுமரியாய்
கும்பக்களிறட்டகோவே கொடுங்கஞ்சன் நெஞ்சினிற்கூற்றே
செம்பொன்மதிள் வெள்ளறையாய் செல்வத்தினல் வளர்பிள்ளாய்
கம்பக்கபாலி காணங்குக்கடிதோடிக் காப்பிடவாராய். (198)

| | |
|---|---|
| இன்பம் அதனை உயர்த்தாய் | உண்மையான இன்பத்தை மேன்மேல் உயர்த்தி யளிப்பவனே! |
| இமையவர்க்கு—தேவதைகளுக்கு | |
| என்றும் | எப்போதும் |
| அரியாய் | அருமையானவனே! (அறிய வியலாதவனே) |
| கும்பம் | உயர்ந்த கும்பஸ்தலங்கள் உள்ள |
| களிறு | (குவலயாபீடமென்ற) யானையை |
| அட்ட | கொன்ற |
| கோவே | அரசே! |
| கொடு | கொடுமையுடைய |
| கஞ்சன் | கம்ஸனுடைய |
| நெஞ்சில் | மனத்தில் |
| கூற்றே | ம்ருத்யுவா யிருப்பவனே! |
| செம்பொன் | சிவந்தபொன்னல் (உருக்கின தங்கத்தால்) ஆன |
| மதிள் | ப்ராகாரத்தையுடைய |
| வெள்ளறையாய் | திருவெள்ளறையில் நின்றவனே! |
| செல்வத்தினல் | ஸம்பத்தின் பெருக்கினல் |
| வளர்பிள்ளாய் | நன்றாக வளர்ந்துள்ள சிறு பிள்ளையே! |
| அங்கு | நீ நிற்குமிடத்திலே |
| கம்பம் கபாலிகாண் | நடுக்கம் தரும் வயிரவன் உண்டு. |
| கடிது ஓடி | விரைந்தோடி |

காப்பிட வாராய்.

இன்பமித்யாதி. புற்பாமுதலாப் புல்லெறும்பாதிகளான சராசரங்கள் அனைத்துக்கும் பேரின்பமளித்தவன் நீ இங்கு அவதரித்து என் மனோரதப்படி இதுவரை நடந்து எனக்கும் பேரின்பம் இங்கே அளித்து வந்தாய். இமையவர்

இத்யாதி. கண்ணிமை கொட்டுவதுகூட இராமல் உன்னையே கண்டு களிப்பதற்குப் போல ஆயிரங்கண்ணனான தேவேந்திரன் போன்ற ரூபங்கள் எடுத்தும் சிற்றின்பத்திலே எல்லாம் உபயோகிக்குமவருக்கு நீ எப்போதும் வெகு தூரத்திலே யுள்ளவன். ஆகவே நீ அவ்விடம் நிற்காமல் திருவெள்ளறையில் நிற்பது போலும். கபாலி வயிரவன், அல்லது கபாலமெடுத்துவரும் பிக்ஷை(பிச்சை)க்காரன், நீ கூற்றா யிருந்தாலும் கபாலி ம்ருத்யுஞ்ஜயன் எனக் கேட்டிருப்பதால் எனக்கு நடுக்க மேற்படுகிறது. ஓடி வந்துவிடு என்றதாம். (அ)

'நீ அழைப்பதற்காகவும், இந்திராதிகளான இமையவர் வந்ததற்காகவும் நான் வருவேனோ. 'சதுரர்கள் வெள்ளறை', 'நல்லார்கள் வெள்ளறை', 'வானவரேத்தும் முனிவர்கள் வெள்ளறை' என்று புகழ்பெற்ற திருவெள்ளறையானையிற்றே நான். அப்படிக்கொத்த பரமைகாந்திகளல்லவோ காப்பிடவேணும். அவர்கள் எல்லோரையும் அழைத்துவா. அதுவரையில் விளையாடுகிறேன். கஞ்சனைச் சார்ந்தவராயினும், கபாலியாயினும் இருக்கட்டும். எனக்குக் கம்பம் (நடுக்கம்) இல்லை யென்று கண்ணன் தருக்குடன் சொல்வதாக வைத்துச் சொல்லுகிறாள்.—

9. இருக்கொடுநீர் சங்கிற்கொண்டிட் டெழில்மறையோர் வந்துநின்றார்
தருக்கேல்நம்பிசந்தி நின்றுதாய் சொல்லுக்கேளாய் சிலநாள்
திருக்காப்பு நானுன்னைச்சாத்தத் தேசுடை வெள்ளறைநின்றாய்
உருக்காட்டு மந்திவிளக்கின் றொளிகொள்ள வேற்றுகேன்வாராய். (199)

| | |
|---|---|
| எழில் | பாரமைகாந்த்ய ப்ரகாச முள்ள |
| மறையோர் | வேதமோதினவர்கள் |
| இருக்கொடு | மந்தரங்களில் ச்ரேஷ்டங்களான ருக்குகளோடே, |
| சங்கில் | சங்கத்திலே |
| நீர் | தீர்த்தத்தையும் |
| கொண்டிட்டு | எடுத்துக்கொண்டு |
| வந்து நின்றார் | திருக்காப்பிட வேண்டுமிடத்திலே வந்து நிற்கின்றனர். |
| நம்பி | குணம் நிரம்பியவனே! |
| சந்தி நின்று | நாற்சந்தி முதலான விடத்திலே இருந்து கொண்டு |
| தருக்கேல் | (எனக்கென்ன தீங்கென்று) செருக்குக் கொள்ளாதே |
| சில நாள் | சிறு பிள்ளையாயிருக்கும் நாளிலே |
| தாய் சொல்லு | தாயின் பேச்சை |
| கொள்ளாய் | ஏற்கவேண்டும். |
| தேசு உடை | தேஜஸ்ஸை உடைய |
| வெள்ளறை | திருவெள்ளறையில் |
| நின்றாய் | நிற்பவனே! |
| நான் உன்னைத் திருக்காப்பு | |
| சாத்த | இடுவதற்கு |
| உரு | உருவத்தை |
| காட்டும் | காண்பிக்கும் |
| அந்தி விளக்கு | திருவந்திக்காப்பான விளக்கை |
| இன்று | இன்றைய தினம் |
| ஒளி கொள்ள | ப்ரகாசமாக |
| ஏற்றுகேன் | ஏற்றப்போகிறேன். |
| | வாராய். |

இருக்கொடு நீர். ருக்குகளைக் கொண்டு அபிமந்த்ரணம் செய்யப்பெற்ற (மந்த்ரித்த) தீர்த்த மென்னலுமாம். நம்பி. நீ கல்யாணகுண பூர்ணனாகையாலே அகங்கரிக்கலாகாது. தாயின் சொல்லைக் கேட்கவேண்டும். நம்பி யென்பதற்குத் தீம்புகள் நிறைந்தவனே என்றுரை செய்வர். சில நாள். 'புத்ரஸ்து ஸ்த்தாவிரே பாவே ந ஸ்த்ரீ ஸ்வாதந்த்ரயமர்ஹதி' என்பது உனக்கு என்னை

இரக்ஷிக்கும்படி யுக்த வயது வந்தபிறகு தானே. அதுவரையில் கேட்பாயாக. உரு காட்டும். அந்தி விளக்கின் உரு பெரிதாயிருப்பதால் இங்ஙனம் சொன்னதாம். அன்றி, அந்தி விலக்கின் ஒளி பட்டு அங்கங்களிலுள்ள தோஷங்கள் விலகினல் உருவின் மேனி காண வமையும் என்று கருத்தாம். இந்த வ்யாஜத்திலே இவனுடைய அங்க ப்ரத்யங்கங்களை நன்கு ஸேவிக்கத் தானும் மறையோரும் மிக்க ஆவல் கொண்டிருப்பதாலும் இஃது உரைத்ததாம். அங்கங்களுக்கு யாதொரு படியும் அடியோ காயமோ ஏற்படாமலிருக்கிறதா வென்றுங் காண நினைத்தாள் போலும். இன்று. இத்தனை நாட்களைப் போலின்றி இன்று நீ வெகு நேரம் வெளியிலிருந்துவிட்டதாலும், இது திருவோண நாளாகையாலும், நீ நீராடிக் குழல்வாரி ஆபரணமணிந்து பூச்சூட்டிச் சென்றதாலும் ஒளி கொள்ள விளக்கேற்றுவேன் இன்று. இந்த வேடிக்கையைக் காணவாவது வாராயென்றபடி.

10. போதமர் செல்வக்கொழுந்து புணர்திருவெள்ளறையானை
மாதர்க்குயர்ந்தவசோதை மகன்றன்னைக் காப்பிட்டமாற்றம்
வேதப்பயன் கொள்ளவல்ல விட்டுசித்தன் சொன்னமாலை
பாதப்பயன் கொள்ளவல்ல பத்தருள்ளார் வினைபோமே. (200)

| | |
|---|---|
| மாதர்க்கு | உலகிலுள்ள மக்களின் மாதர்களிலும், எம்பெருமான் மாதர்களிலும் |
| உயர்ந்த | பாக்யத்தில் உயர்ந்தவளான |
| அசோதை | யசோதைப் பிராட்டியானவள் |
| போது | பூவில் |
| அமர் | வாசம் செய்யும் |
| செல்வம் கொழுந்து | ஸ்ரீ என்னும் பிராட்டி |
| புணர் | சேர்ந்துள்ள |
| திருவெள் ளறையானை | திருவெள்ளறை யென்ற திருப்பதியிலிருக்கும் எம்பெருமானை |
| மகன் தன்னை | தனது மகனை |
| காப்பிட்ட மாற்றம் | திருக்காப்பிட அழைத்த சொற்களான |
| வேதம் பயன் கொள்ள வல்ல | வேதத்தின் பயனை யளிக்கக் கூடிய |
| விட்டு சித்தன் | ஸ்ரீ விஷ்ணு சித்தன் (பெரியாழ்வார்) சொன்ன |
| சொன்ன மாலை | இத்திருமொழிப் பாசுரங்களின் |
| பாதம் பயன் | ஒவ்வொரு பாதமும் அமைந்ததற்குள்ள பலனை |
| கொள்ள வல்ல | க்ருஹிக்கக் கூடிய |
| பத்தர் உள்ளார் | பக்தரா யிருப்பவருடைய |
| வினை | பாபமானது |
| போம் | தானே போய்விடும். |

போதமர் செல்வக்கொழுந்து. பங்கயச்செல்வி யெனத் திருவெள்ளறைப் பிராட்டியின் திருநாமமாம். அவள் போதில் அமர்வதை விட்டு அங்கு அமர்ந்ததாலே அது திருவெள்ளறையாயிற்று. கொழுந்து. கொடியிலுள்ள கொழுந்தே வெகு ம்ருதுவாயிருக்கும். பூவிலிருந்தே கொழுந்து உண்டாகில் அதன் குணம் எவ்வண்ணமிருக்குமென வாராய்க. 'கோலில் கொடியேறி வளர்ந்தால் கொடியே ப்ரதானமா யிருப்பதுபோல் திருவெள்ளறையானை இறையு மகலகில்லே னென்றுறையும் பங்கயச்செல்வியே அவ்வூருக்கு ப்ரதானை யென்ரு ஜீயர். வேதப்பயன் இத்யாதி. விட்டுசித்தருக்கு அடைமொழி. பல்லாண்டு பாடின ஆழ்வாருக்கே வேதத்தின் கருத்து உணர முடிந்ததென்க.

இப்போதன்றோ சேஷத்வ ஜ்ஞானம் ப்ரதிஷ்டிதமாகும். 'யஸ்யாஸ்மி, ந தமந்த ரேமி,' 'தவாஸ்மீதி ச யாசதே,' 'உனக்கே நாமாட் செய்வோம்' என்றல்லவோ ப்ரமாணங்கள் உள. இனி வேத மோதுவதின் பலனைத் தரும் இத்திருமொழி யென்று மாலைக்கும் இது (வேதப்பயன் கொள்ளவல்லவென்பது) அடைமொழி யாம். பாதப்பயன் இத்யாதி. பாட்டுக்கள் தோறும் பின்னடியிற் சொன்ன காப்பிடுகை யென்ற ப்ரயோஜனத்தைக் கைகொள்ள வல்ல என வுரைத்தனர் ஜீயர். திருப்பல்லாண்டின் முதற்பாட்டின் முதலடியிற் சொன்ன ப்ரயோ ஜனத்தைக் கொள்ளவல்ல என்றார் திருவாய்மொழிப்பிள்ளை. ஒவ்வொரு பாசு ரத்தின் ஒவ்வொரு அடிக்குமே பலன் உண்டென விளங்குகிறதென்றும் சொல்வர். ஒவ்வோர் அடியும் அமைந்திருப்பதற்குள்ள ஸ்வாரஸ்யத்தோடு இத் திருமொழியை ஓதவல்லார் என்னும் பொருள் படும்படி பதவுரையில் சொன் னதையும் நோக்குக. (யி)

ப்ரபந்தரக்ஷையில் 2–8 இந்திரனோடு பிரமன் உரை முற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

---

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

## பெரியாழ்வார் திருமொழி 2, 9

# வெண்ணெய் விழுங்கி

'வெண்ணெயளைந்த' வென்றது முதற்கொண்டு, 'வெண்ணெய் விழுங்கி' என்றவிதின் முன் வரையிலுள்ள ஐந்து திருமொழிகளால் கண்ணனுக்கு நீராட் டுவது முதல் திருவந்திக்காப்பிடும் வரையிலுள்ள அநுபவங்களை அருளிச் செய்து, இப்படி அகம் புகுந்த கண்ணனை இரவில் பக்கத்திலே பள்ளிகொள்ளச் செய்து உறங்கி விடிந்தவாறே எழுந்து இருக்க, திருவாய்ப்பாடியிலுள்ள பல பெண்மணிகள் அதற்குள் கண்ணன் செய்திருக்கும் தீமைகளைப் பொறுக்க மாட்டாமே தாயான யசோதையிடம் முறையிட்டுக் கொள்வதையும், அவள் அவனைக் கூப்பிட்டுக்கொள்வதையும் இத்திருமொழியிலே அநுபவித்தருளுகி றார். ஒரு பாசுரம் முறையிடும் நங்கையின் பேச்சும், மற்றொரு பாசுரம் அசோதை கண்ணனை அழைப்பதுமாக அமைந்த திருமொழி இது.

1, வெண்ணெய்விழுங்கி வெறுங்கலத்தை வெற்பிடையிட்டதனோசைகேட்கும்
கண்ணபிரான்கற்ற கல்விதன்னைக் காக்ககில்லோமுன் மகனைக்காவாய்
புண்ணிற்புளிப்பெய்தா லொக்குந்தீமை புரைபுரையாலிவை செய்யவல்ல
அண்ணற்கண்ணா னோர்மகனைப்பெற்ற யசோதை நங்காயுன்மகனைக்கூவாய்.

| | |
|---|---|
| (அசோதை நங்காய் | சிறந்த யசோதாய்!) |
| வெண்ணெய் | (கலத்திலுள்ள) வெண்ணெயை |
| விழுங்கி | பூரணமாக உண்டிட்டு |
| வெறு கலத்தை | ஒன்றுமில்லாத அந்தப் பாத்திரத்தை |
| வெற்பு இடை இட்டு | பாறையின் மேல் எறிந்து |
| அதன் ஓசை கேட்கும் | அப்போது அதில் உண்டாம் ஓசையைக் கேட்டு உவக்கும் |
| கண்ண பிரான் | கிருஷ்ணனென்னும் ப்ரபு |
| கற்ற | தானே அப்யஸித்துள்ள |
| கல்வி தன்னை | தனி'வித்தையை |
| காக்ககில்லோம் | நீடித்திருக்கச் செய்ய அல்லது தடுக்கமாட்டிலோம் (ஆக நீயே) உன் மகனை |
| காவாய் | காவல்வைத்துப் பார்த்துக் கொள்வாயாக; தடுப்பாயாக. |
| புண்ணில் புளி பெய்தால் ஒக்கும் | புண்ணிலே புளிச்சாறிடுவதற்குச் சமங்களான |
| தீமை இவை | இவ்வண்ணம் தீமைகளை |
| புரை புரை | வீடு தோறும் |
| செய்யவல்ல | (ஒரே ஸமயத்தில்) செய்ய ஸாமர்த்தியமுள்ளவனும், |
| அண்ணல் | ஸ்வாமியை |
| கண்ணன் | கருதாதவனுமான |
| ஓர் மகனை | ஒப்பற்ற பிள்ளையை |
| பெற்ற | பெற்றிருக்கும் |
| அசோதை நங்காய் | சிறந்த அசோதாய்! |
| | உன் மகனை |
| கூவாய் | உன் இல்லத்திற்கு அழைத்துக்கொள்வாயாக. |

வெண்ணெய் இத்யாதி. திருடி உண்கிறவன் உண்டது தெரியாதபடி போய்விட்டால் அதைத் திருட்டுவித்தை யென்னலாம். நாம் செய்தது தெரிந்து வீட்டுக்காரிகள் ஓடிவந்து பார்க்கவேண்டுமென்றே வெறுங்கலத்தைப் பாறையில் எறிந்து ஓசை கேட்டு உவக்கிறான். இதென்ன வித்தை ? காக்ககில்லோம். எத்தனை நாள் பொறுப்பது. அதை அவன் விடும்படி செய்யவேணும். ஆகட்டும் என்று சொல்லிவிடாதே இப்போதே கூப்பிட்டுக்கொள். வெண்ணெய் போவது பெரிதன்று. பாத்திரமே போய்விடுகிறது. இது புண் உண்டு பண்ணினதோடு நிற்காமல் அதில் புளியும் பிழிகிறதா யிருக்கிறது. இங்கு நான் வந்து சொல்வதற்குள் இன்னும் என்னென்ன தீமை செய்திருக்கிறானோ ? ஓர் அகத்தில் ஓசை கேட்டு அங்குள்ளார் கூச்சலிட அதனைப் பார்க்க யார் போகிறாரோ, அவர் வீட்டிலும் அவ்வண்ணம் செய்கிறான். புருஷரிடம் சொல்லலாமென்றால், இவன் எசமானர்க்கு அகப்படுவதுமில்லை; அடங்குவதுமில்லை. எல்லோருக்கும் ஸ்வாமியான நந்தகோபருக்கும் அடங்காதவன் போலும். உன் மகனைப் போன்ற மகன் யாருக்கும் இலன். இவன் தனக்குத் தானாகவாவது தெளிவதும் கிடையாது. பெற்றவளிடம் சொல்வது தவிர்த்து வேறொன்றும் செய்ய முடியவில்லை. எப்படியாவது நல்வார்த்தை சொல்லி அருமையாக வாவது அழைத்துக் கொள்வாயாக' என்றனள் ஓர் இடைநங்கை.

இங்குக்கலம் என்றது மட்கலமாகலாம். அதைப் பாறையின் மீதெறிந்தால் நிற்குமா? அத்தனை வெண்ணெய் போனபோது மட்கலம் போனாலென்னவெனவேண்டா. பால், தயிர், நெய், வெண்ணெய் இவற்றை வைக்கப் பழகின மட்கலங்களே வேண்டும். வெகு நாள் பழகாமலிருந்தால் வைத்த வஸ்துக்கள் கெடும். இங்கு—குருபரம்பரையிலே விளங்கிவரும் ஆண்டிகாட்டு ஸ்வாமி என்னும் ஸ்ரீ வேதாந்தராமானுஜ மஹாதேசிகன், பூர்வாச்ரமத்தில் தம் திருமாளிகையில் தீர்த்த யாத்திரையாய் எழுந்தருளின பாகவதத்திரளுக்குச் சிறந்த

பரத்வாஜாதித்தியம் செய்துவைத்து, தமக்கு ஏராளமாகப் பசுக்கள் இருந்ததாலே, அவ்விருநூறு பாகவதர்க்கும் மார்க்கங்களில் வெகு நாள் உபயோகிக்குமாறு பால், தயிர், நெய் எல்லாம் பெரிய பெரிய பானைகளிலே பரிவுடன் கொடுத்து இப் பாத்திரங்களை மட்டும் போகாதபடி காத்துத் திரும்பச் சேர்ப்பித்தருளவேணுமென்று ஸாதித்தருளினர் என்று எமது ஆசார்யன் அருளிச்செய்தது குறித்தற்பாலது.

அண்ணற்கண்ணன். ஸ்வாமித்வ ஸூசகமான கண்களை யுடையவனென்றும், அண்ணற்கு அண்ணன்: அண்ணனான பலராமனுக்கு அண்ணியனாகாதவன் = ஒவ்வாதவன், அவனைப் போல் நற்குண மில்லாதவன் என்றும் உரைப்பதும் கொள்க. பதவுரையும் காண்க. (க)

'நம் மகனுடைய பெருமையை இவ் விடைச்சிகள் அறியார் போலும். அறிந்தும் தற்சமயம் அவன் செய்வது பொறுக்கமாட்டாமே முறையிடுகிறார் போலும்' எனக் கருதி, அவனைப் பெருமையுடனும் பரிவுடனும் அழைத்து, அவன் அருமையை அவளுக்கு முணர்த்தித் தனக்குள்ளதொரு பாவத்திற்கும் தான் வருந்தி யசோதை கண்ணபிரானைக் கூப்பிடுகிறாள்—

2. வருக வருகவருகவிங்கே வாமனநம்பீ வருகவிங்கே
கரியகுழற் செய்யவாய்முகத்துக்காகுத்த நம்பீவருகவிங்கே
அரியனிவ னெனக்கின்று நங்காயஞ்சனவண்ணா வசலகத்தார்
பரிபவம் பேசத்தரிக்ககில்லேன் பாவியேனுக்கிங்கே போதராயே. (202)

இங்கு ஏ — இந்த விடத்திற்கே (நம் அகத்திற்கே)
வருக வருக வருக — அவசியம் விரைந்து வந்து விடு;
வாமன நம்பீ — வாமனாவதாரம் செய்த குணபூர்ணனே! இங்கே வருக;
கரிய குழல் — கருநிறமான கூந்தலை யுடையனும்,
செய்ய வாய் முகத்து — சிவந்த திருப்பவளம் சேர்ந்தமுகமுடையனுமாய்
காகுத்த நம்பீ — ககுத்த வம்சத்திலே இராமனாய் அவதரித்த குணபூர்ணனே! இங்கே வருக.
நங்காய் — (என்னிடம் இவன் செய்கையைச் சொல்ல வந்த) சிறந்தவளே!
இன்று — இப் பிறப்பிலே
இவன் — இப்படி யவதரித்துள்ள இவன்
எனக்கு
அரியன் — அருமையானவன்.
அஞ்சன வண்ணா — மை நிறம் போன்ற நிற முள்ளவனே!
அசல் அகத்தார் — பிற வீட்டுக்காரர்கள்
பரிபவம் — அவதூறான பேச்சை
பேச — உன் மேல் பேசும் போது
தரிக்க கில்லேன் — எனக்குத் தாங்கமுடிய வில்லை.
பாவியேனுக்கு — பாவம் செய்திருக்கும் என்னிடம்
இங்கே போதராய் — இங்கு வந்து விடுவாயாக.

கண்ணா! இதற்கு முன் நீ செய்த சிறந்த அவதாரங்களில் மீன், ஆமை போன்ற தசைகளிலே இத்தகைய அவதூறுகளுக்கு அவகாசமே கிடையாது. வாமனாவதாரம், ஸ்ரீராமாவதாரம் இரண்டும் இதைப்போல் ஊனும் உடையுமுள்ள அவதாரங்கள். அவற்றில் வாமனாவதாரத்தில் ஏதாவது அவதூறு

உண்டா? வாமனன் கல்யாணகுண பரிபூர்ணன்—மூவுலகும் தன்னுடையன வாக இருந்தும் தானே முன் ஆக்ரமிக்காமே, தன் மஹேந்திரனுக்கு மாற்றான மாவலியினிடம் தான் அணுகிக் குறுகிக் குறைந்து நின்று கேட்டு வாங்கிக் கொண்டானென்பர். இருக்கட்டும் இந்தத் தேவாவதாரம். அடுத்த பூர்ணாவ தாரம் ஸ்ரீராமாவதாரம். அதில் நீ அத்தனை பெரிய அயோத்தியில் எங்காவது நுழைந்து ஏதாவது எடுத்ததாகவோ உடைத்ததாகவோ யாராவது சொன்ன துண்டோ? உனக்கு மிகவும் போக்யமான இன்னமுதத் திருமகளை யொருவன் திருடிக் கொண்டுபோனபோதும் நீ உனது கருத்த வம்சத்திற் கொத்த படி யில் நடந்து நேரில் சண்டையிட்டு அவனைச் சாகவடித்து, அவளை மீட்டு வந்தாயே யல்லது திருட்டுத்தனமாகத் திருப்பக் கொண்டுவரவில்லையே. அந் தந்தத் தாய்களைப் போல் நானும் பேர் பெறவேண்டாமோ? இந்தக் குலம் இடைக்குலமானாலும் திருட்டுக் குலமன்றே. ஓடிவந்துவிடு என்று அழைத்து, இம் முகத்தாலே இவன் அரும் பெரும் தெய்வமென்று, முறையிட வந்த நங்கைக்கு மறைமுகமாகக் கூறி, நேரிலும் சொல்லுகிறாள்—'நங்காய்! நீயும் தெரிந்துகொண்டே யிருப்பாய். இந்த ஜன்மத்திலே பாவியேனுக்கு இவன் கிடைக்கத் தகுந்தவனா? இவனது வீரச் செயல்களை நீங்கள் வேண்டு மானவரையில் கண்டு மிருக்கிறீர்களே' என்றவாறு. 'இருக்கட்டும்; தற்சமயம் தீப்புபோல் தோன்றினதொன்றைக் கொண்டு இப்படிச் சொல்லுகிறாய்' என்று கொண்டு மறுபடியும் கண்ணனைக் கூப்பிடுகிறாள். அஞ்சனவண்ணா என்று தொடங்கி.

'இவன் இன்று எனக்கு அரியன். ஏதோ நீங்கள் என்னிடம் சொல்ல வந்திருப்பதால் இன்றைத்தினம் என்னிடம் வரவேமாட்டான் என்று நினைக்கி றேன். பிறகாவது வரவேண்டுமே. வாமனாவதாரமும் ஸ்ரீராமவதாரமும்போல் இவ்வவதாரமும் இந்த ஜன்மத்திலே இனி எனக்கு அரிதாய்விடுமோ' என்றெல் லாம் பொருள்படக் கூறும் தாயின் வருத்தம் நீங்க விரைவிலே வந்து கொண் டிருக்கும் அவனை நேரில் கண்டு அனுபவிக்கிறாள் அஞ்சன வண்ணா என்று. மை போல் கறுத்த மெய்யனே! மையின் ஸ்வபாவமாவது தொட்டவரிடம் ஒட்டிக் கொள்வதாம். ஆகவே என்னிடம் பரிவோடு வருகிறாயென்றதுமாம். உனக்கு வேண்டுவன வெல்லாம் நம் அகத்திலே யிருக்க எதற்கு நீ அசலகம் புகவேண் டும். இல்லாததை அவர்கள் ஏற்றிச் சொல்வதாகவே எனக்குத் தோன்று கிறது. யான் பாவியேன். மகன் சில தவறுதல்கள் செய்யவும் செய்யாததையும் சொல்லிப் பிறர் குறை கூறவும் மனம் தபிக்கும்படி ஏதோ நான் பாவம் செய் திருக்கிறேன். எனக்கு வேறு மகனில்லாததால் மிக்க மேன்மை யுடைய உன் முகமாகவே அதை நான் அனுபவிக்க வேண்டியிருக்கிறதுபோலும். இப்படிக் குறை கூறுபவர் நடுவே உன்னை வளர்க்க நான் என்ன பாவம் செய்தேனோ. அவர்களுக்காக உன்னை நானும் பழிக்க என்ன தான் பாவம் செய்துள்ளேனோ என்றெல்லாம் சொல்லி அழைத்தனள்.

செய்ய வாய்முகத்து. வாயென்பது திருப்பவளம்; முகமென்பது உள்வா யென்னில் செய்யவென்பது இரண்டிலும் சேரும். முகத்து என்றதைப் பிரித்துத்

திரு முகமண்டலத்தை முகமென்று கொள்ளில் மேலே கறுத்த கூந்தலும் கீழே சிவந்த திருவதரமும் சேர்ந்ததால் நடுவில் அதற்கு ஏற்பட்ட நிறத்தை இன்னதென நிரூபிக்கமாட்டாதே அனுபவித்ததாம். இதற்காக முகத்து—ஒப்பற்ற முகத்தையுடைய என வுரைப்பர். பதவுரைப் படியையும் நோக்குக. ஸ்ரீராமனுக்கு இதைச்சொன்னது, எல்லாம் அவனுக்கும் உனக்கும் ஒத்திருக்க பிறர் பழிக்கும்படி குணம்மட்டும் ஏன் வேறுபடவேண்டுமென்கைக்காகவாம்.

போதராய். போ என்ற வினை தா என்ற துணைவினையுடன் சேர்ந்து, வா என்ற பொருளிலே 'போதருமாபோலே' என்றாற்போலே ப்ரயோகிக்கப் படுவதுண்டென்பர். இங்கு அதுவாகில் போதருவாய் எனவாகும். மேலே போதர் கண்டாயென்றும் ப்ரயோகம் காண்கிறது. ஆகவே தரு என்றதுபோல் தர் என்னும் துணைவினை முன்னே ப்ரயோகத்தி லிருந்ததாகக் கொள்ளலாம். தந்தான் என்னும் பொருளிலே தர்ந்தான் என்ற உலகவழக்குமுள்ளது. ஆனால் இதைத் தமிழர் இசையார். 'போ என்றதற்கு வா யென்ற பொருள் வாராது. புகு என்பதே போ என விகரித்த' தென்றும் சொல்வர். (உ)

ஒருவிதம் வெண்ணெய் விழுங்கினது சொல்லியாயிற்று. இனி, புதிய நெய்யைப் புசித்துப் பானையை உடைத்துப் பக்கத்தில் வந்த இடைப் பெண்களிடத்திலே தனக்கு வேண்டினபடி நடந்து, இதனைச் சொல்ல யாராவது தாயிடம் வருவதற்குள் தானே தன் அகம் புகுந்துவிட வேணுமென்று விரைந்துவந்து கொண்டிருக்கும்போது, அவனுக்கும் முன்னே, அவன் எம்பெருமான் என்ற தெளிவுடனேயே ஒருத்தி முறையிட வந்துவிட்டதைக் கண்டு கொஞ்ச தூரத்திலே மறைவாக நின்றுவிட்டான் கண்ணன். இப் படியைச் சொல்லி மகனைக் கூப்பிடக் கோருகிறது மேல் பாசுரத்தில்—

3. திருவுடைப் பிள்ளைதான் தீயவாறுதேக்க மொன்றுமிலன் தேசுடையன்
உருகவைத்தகுடத்தொடுவெண்ணெயுறிஞ்சி(ச்சி)யுடைத்திட்டுப் போந்துநின்றான்
அருகிருந்தார்தம்மையநியாயஞ் செய்வதுதான் வழக்கோ வசோதாய்
வருகவென்றுன் மகன்றன்னைக்கூவாய் வாழவொட்டான் மதுசூதனனே (203)

| | |
|---|---|
| அசோதாய் | யசோதை நங்காய்! |
| தீய ஆறு | தீதான நடத்தையிலே |
| ஒன்றும் | சிறிதும் |
| தேக்கம் இலன் | நிதானிப்பதில்லாதவனும் |
| தேசு உடையன் | செய்த பிறகும் பிறரைப் பரிபவிக்கும் தேஜஸ்ஸை உடையவனும், |
| திரு உடை | செல்வத்தையும் பிராட்டியையும் உடையனுமான |
| பிள்ளை தான் | (உனது) பிள்ளையேதான், |
| உருக | உருகுவதற்காக |
| வைத்த | (அடுப்பில்) வைத்திருந்த |
| வெண்ணெய் | வெண்ணெயை |
| குடத்தொடு | குடத்தையே யெடுத்து |
| உறிஞ்சி | பூரணமாக உறிந்து விட்டு |
| இட்டு உடைத்து | குடத்தையும் எறிந்து உடைத்து |
| போந்து நின்றான் | வந்து நின்றுவிட்டான். |
| அருகு இருந்தார் தம்மை | உடைத்தவிடத்திலே பக்கத்தில் இருந்தவர்களை |
| அநியாயம் செய்வது தான் | (அதர பயோதராதிகளைத் தொட்டுக்) கெடுப்பதுதான் |
| வழக்கோ | ந்யாயமாகுமோ. |
| உன் மகன் தன்னை | உனது மகனாகவுள்ளவனை |
| வருக என்று கூவாய் | வரவழைத்துக் கொள். (இல்லையாகில்) |
| மதுசூதனன் | இவ்வெம்பெருமான் |
| வாழ ஒட்டான் | (எங்களை) குலத்திலே வாழ விடமாட்டான். |

திருவுடை-மதுசூதனனே. திருவுடைப்பிள்ளைக்கு ஒரு குறைவுமிராததால் அவன் ஒன்றும் செய்யான் என்று நினைக்க வேண்டா. அவனே தான் தீம்பு செய்வது. இவன் வாமநாத்யவதாரங்கள் எடுத்த எம்பெருமானுயிற்றே என்று நீ ஒருத்திக்குச் சொன்னுய். அது எங்களுக்கும் தெரியும். அதற்கு முன்னே ஸ்ருஷ்டியின் துவக்கத்திலேயே பிரமனிடமிருந்து வேதங்களை அபஹரித்துக்கொண்ட மதுகைடபர்களை யழிக்க லக்ஷ்மீஹயக்ரீவனுகக் கூட அவதரித்தவனே இவன். இம் மதுசூதனன் மூலமாகத் தான் வித்யைகள் கற்பதும் விவேகம் பெறுவதும். இப்போது இவன் இருப்பது எங்ஙனம் தெரியுமா? வேதத்தில் வேண்டாமெனச் சொன்ன தீய வழிகளை யெல்லாம் தயங்காதபடி நடத்துகிறவன். ஏன் செய்கிருயென்று கேட்பார் உண்டாகில், அவர்களைக் கண்டபடித் தீண்டிப் பரிபவிக்கச் சாமர்த்திய முள்ளவன். வெண்ணெயும் பாலேயும் போனது போகுக. பக்கத்தில் வந்த குலஸ்திரீகளை இப்படித் தீண்டலாமா? இது நியாயமா? இவன் தான் திருவுடையனுயிற்றே; இவனுக்கு அகத்திலே புசிக்க என்னகுறைவு? இவன் செயல்களை இவனுடைய மணமகளான பிராட்டியினிடம் காண்பித்துக் கொள்ளலாமே. ஏன் எங்களைப் பரிபவிக்க வேண்டுமென்றபடி.

அருகிருந்தார் இத்யாதிக்கு, 'உன் அருகில் வசித்துவரும் எங்கள் விஷயத்திலே தீம்பு செய்ய நீ அவனை விடுவது நியாயமா வென்று ஆசோதையைக் குறை கூறுவதாகப் பொருள் கொள்வர். (௩)

இப்படி விபவமளவாக அவதரித்துள்ள எம்பெருமானின் மேன்மையைக் கண்டிருக்கும் இடைச்சிகளிடத்திலே, அர்ச்சையாக அவதரித்து விளங்குகிறவனுமிவனே என யசோதை யுணர்த்தி அவனை யழைத்துச் சொன்ன படியைக் கூறும் பாசுரம்.—

4. கொண்டல்வண்ணு விங்கேபோதராயே கோயிற்பிள்ளாயிங்கே போதராயே
தெண்டிரைசூழ்திருப்பேர்க் கிடந்த திருநாரணு விங்கே போதராயே
உண்டுவந்தேனம்மமென்று சொல்லி யோடியகம்புக வாய்ச்சிதானும்
கண்டெதிரேசென்றெடுத்துக்கொள்ளக்கண்ணபிரான்கற்றகல்விதானே. (204)

கொண்டல் வண்ணு } மேக வர்ணனே!
இங்கே போதராய்;
கோயில் பிள்ளாய் } ஸ்ரீரங்கத்திலிருக்கும் எனது மகனே!
இங்கே போதராய்;
தெள் திரை வீசும் அலைகளாலே
சூழ் சூழப்பெற்ற (மோதப்படும்)
திருப் பேர் { திருப்பேர் என்ற திருப்பதியிலே
கிடந்த பள்ளி கொண்டுள்ள
திரு நாரணு ஸ்ரீமந் நாராயணனே!
இங்கே போதராய்.

கண்ண பிரான் } கண்ணபிரானே!
(நான் உன்னை யம்மமுண்ணக் கூப்பிட்டுக் கொண்டிருக்கும்போது நீ)
அகம் ஓடி வேறு இல்லத்திற்கு ஓடி
உண்டு வந்தேன் அம்மம் என்று சொல்லி புக } நான் உண்டுதான் வருகிறேன் அம்மம் என்று சொல்லிக்கொண்டே அவ்வகம் புகுவதற்கும், (அங்கே)
ஆய்ச்சி தானும் } என்னைப் போன்ற வோர் ஆய்ச்சியே
கண்டு உன்னைக் கண்டதுமே
எதிரே சென்று—உன் எதிரிலே போய்

எடுத்துக் கொள்ள { உன்னைப் பரிவுடன் எடுத்து மருங்கில் வைத்துக்கொள்வதற்கும் | கற்ற கல்வி தான் ஏ { நீ பயின்ற கல்வி எவ்வகையதோ.

வந்தவன் உள்ளே வராமல் ஒளித்து நிற்பதாக ஒருத்தி சொன்னபோது, 'என் மகன் திருப்பதிகளில் பள்ளிகொண்டிருக்கிறானல்லனோ? அவனை நான் அம்ம முண்ண அழைக்கவேணு மென்றெண்ணியிருக்கும் தருணத்திலே நீ ஏதோ சொல்லுகிறாயே' என்று நினைத்துத் திருப்பதிகளிலிருந்தே அவனை யசோதை அழைத்தனள். அப்போது அவன், 'நான் எங்கும் ஒளித்து நிற்க வில்லை. தாயின் அகத்திலேயே புகுந்துள்ளேன்' என்று சொல்லிக்கொண்டே தான் இருக்குமிடத்திலேயே தான் அகம்புகுவதாகவும் யசோதை தன்னைப் பரி வோடு எடுத்துக் கொள்வதாகவும் ஒரு தோற்றமளித்தான். முறையிட்டுக் கொண்டவளுக்கு, இதை யசோதையகமா அல்லது அதுவா, இவள் யசோ தையா அல்லது அவளா என ஐயம் ஏற்பட்டது. யசோதையும் இதென்ன விந்தை; நான் இங்கேயிருக்க அங்கே என்னைப் போலொரு தாயும் இவ்வகம் போன்ற வகமுமெல்லாம் காண்கிறனவே யெனத் திகைத்து, இது இவன் செய்யும் வித்தை யென்று தெளிந்தனள். இப்படி நான் பரிவுடன் எடுத்துக் கொள்ளவேணுமே யல்லது, அதட்டக் கூடாதென்று இவன் எனக்கு உணர்த் துகிறான் போலும் எனவும் நினைத்தனள். இங்ஙனம் ஆச்சர்யப்பட்டு யசோதை சொன்ன வார்த்தையே உண்டு இத்யாதியான இரண்டடிகளும். கண்ணபிரான் என்பது விளிச்சொல்லாகவேண்டா. இது முறையிடுகிறவளோடு சொன்னதே யாம். உண்மையில் பரிவால் இவளே நேரில் அவனை எடுத்துக் கொண்டதைச் சொல்வதாகில் கண்ணபிரான் கற்ற கல்வி யென்ற விசேஷம் ஏது? 'இப்பாசுரத் தின் முதற்பாதியே யசோதையின் பேச்சு; மேற்பாதி யசோதையாகத் தம்மைப் பாவிக்காமல் தம் படியிலே நின்று ஆழ்வார்தாமே, ஆய்ச்சிக்குக் கண்ணன் பவ்யமானதையும் கண்ணனிடம் அவள் பரிவு கொண்டிருப்பதையும் கொண் டாடின தத்தை. ஆகவே, 'ஆய்ச்சிதானும் கண்ணபிரான் கற்ற' என்றது ஸமஞ் ஜஸமாகிற' தென்று முதலில் திருவாய்மொழிப்பிள்ளையைப் போல் தாமும் பொருள் கூறி, இப்படியாகில் யசோதையும் இடைச்சியுமே சொன்ன வகை யிலே யமைந்த இத்திருமொழியில் இங்கு மட்டும் ஆழ்வார் தந்நிலையிற் சொன் னதாக ஒரு பாகத்தைச் சொல்வது முன்பின் ரீதிக்கு முரணாகுமென்று பிற் பகுதியையும் யசோதையின் பேச்சாகவே வைத்து ஜீயரும் யோஜித்தனர். எங்ஙனமென்னில், 'முற் பகுதியில் கூப்பிட்ட வளவிலே கண்ணன் வந்து தன் னகம் புகுந்துவிட்டான். இவளும் பரிவோடு எடுத்துக்கொண்டாள். பிறகு தன் செயலைத் தானே பிறர் சொல்லுமா போலே சொல்லித் தன்னிலே ச்லா கித்து ப்ரீதையாகிறாள். ஆகவே 'நான் தானும்' என்னுமே, ஆயச்சிதானும் என்ன தும், நீ கற்ற என்னுமே, கண்ணபிரான் கற்ற என்னதும்' என்றவாறு.

உண்டுவந்தேன் அம்மம். அம்மமாவது உணவு. அதனை உண்டு வந்தே னென வுரைப்பர். நீ சொன்னபடி திருப்பதிகளிலிருக்கும் நான் அங்கே உண்டுதான் வந்தேன். இனி எனக்கு வேண்டுவது உணவன்று, அம்மம் ஸ்தன்யம் வேணும் என்றும் பொருள் கூறலாம். அப்போது பரிவுடன் எடுத்து மருங்கில் வைத்துக் கொள்வது மிகவும் பொருந்தும். (௬)

வெண்ணெய் விழுங்கி வுருகின நெய்யை உறிஞ்சவன் பாலைப் பருகின படியைச் சொல்வது மேற்பாசுரம். இப்படி யரங்கன் முதலான அர்ச்சாரூபங்களை யசோதை உணர்த்தினபோது, நீ சொல்லும் புருஷரூபமான அர்ச்சைக்கும் மேற்பட புருஷரூபமின்றியே ஸாளக்ராமத்திலே திருவாராதனத்தையும் எதிர்பாராமல் நித்யஸாந்நித்யம் செய்பவனுமிவனே என்றுகூட நாங்கள் அறிந்திருக்கிறோம். ஆகிலும் குற்றத்தை எங்ஙனம் கூறுதொழிவதென்கிறாள் மற்றொருத்தி—

5. பாலைக்கறந்தடுப்பேறவைத்துப் பல்வளையாளென்மகளிருப்ப
மேலையகத்தேநெருப்புவேண்டிச் சென்றிறைப்பொழுதங்கேபேசிநின்றேன்
சாளக்கிராமமுடையநம்பி சாய்த்துப்பருகிட்டுப்போந்துநின்றான்
ஆலைக்கரும்பின்மொழியனைய வசோதைநங்காயுன்மகனைக்கூவாய். (205)

ஆலை கரும்பு அனைய } ஆலையாடும் கரும்பு (முதிர்ந்த கரும்பு) போன்ற
இன்மொழி { இனிமையான பேச்சு உடைய
அசோதை நங்காய் } குணபூர்ணையான யசோதாய்!
பாலை கறந்து—நான் பாலெல்லாம் கறந்து
அடுப்பு ஏற வைத்து } அடுப்பின் மேல் வைத்து விட்டு,
(அதற்குக் காவலாக நான் வைத்த)
பல் வளையாள் } பல வகையான வளைகளைத் தரித்திருக்கும்
என் மகள் எனது பெண்
இருப்ப அங்கேயே இருக்கவே,
நெருப்பு வேண்டி } (பாலைக் காய்ச்ச) நெருப்பு வேணுமென்று
மேலை யகத்தே } மேற்கிலுள்ள வீட்டிற்கே
சென்று போய்
இறை போது ஒரு க்ஷணகாலம் அங்கே பேசி நின்றேன்;
சாளக்ராமம் உடைய நம்பி } சாளக்ராமத்திலே நித்யஸாந்நித்யம் செய்யும் குணபூர்ணனான கண்ணன்
சாய்த்து { கீழே உட்கார்ந்து பானையை வாயில் சாய்த்துக்கொண்டு
பருகிட்டு பாலைக் குடித்துவிட்டு
போந்து நின்றான் } வெளியே வந்து நின்று விட்டான்.
உன் மகனை கூவாய்.

பாலை யடுப்பில் வைத்தவள் தாய். காவலிருப்பது பெண். பெண்ணே வைத்ததாகவும் உரைப்பர். சாளக்ராமமுடைய நம்பி. அகங்களில் சாளக்ராமமாகவுள்ள வெம்பெருமான் அமுது செய்விக்காவிடினும் தானே அமுதுசெய்து அனுக்ரஹிக்கும்படி குணம் நிறைந்தவனென்று சிலர் சொல்வதுண்டு. இவனும் அங்ஙனமே யாகுக. ஆயினும் ஸாளக்ராமம் இப்படிச் சாய்த்துப் பருகிக் கலத்தை வெறுங்கலமாக்காதே என்றபடி. இம் முறையீட்டுக்கு இவள் பிள்ளையின்மேல் பரிவால் ஏதோ மறுமொழி கூற, அதன்மேல் அவள் மீண்டும் சொல்லுகிறாள் கரும்பின்மொழியனைய. இத்யாதி. மொழி கரும்பு போன்றதாவது, கரும்பின் சாறு போல் மொழியின் ஸாரமான பொருளும் மதுரமாயிருப்பது. மொழியின் சப்தஸ்வரூபத்திலுள்ள மாதுர்யம் 'இன்' என்பதால் கூறப்பட்டதாம். நீ என்னென்னமோ தேனொழுகப்பேசி எங்களையனுப்பிவிடுகிறாய். இப்படியெல்லாம் நடக்கிறது. இப்பொழுதே கூப்பிடுவாயாக என்றபடி. ரு

சாளக்ராமமுடைய நம்பி—நின்றான் என்று ஓர் இடைச்சி சொன்னதைக் கேட்டு ஸாளக்ராமமூர்த்தியாய் வேங்கடத்தில் நின்றவன் நினைவுக்கு வர அவனாய் அவதரித்த கண்ணனை யசோதை யழைக்கும் பாசுரம்—

6. போதகர்கண்டாயிங்கேபோதர்கண்டாய் போதரேனென்னுதேபோதர்கண்டாய்
ஏதேனுஞ்சொல்லி யசலகத்தா ரேதேனும்பேச நான்கேட்கமாட்டேன்
கோதுகல முடைக்குட்டனேயோ குன்றெடுத்தாய் குடமாடுகூத்தா
வேதப்பொருளேயென் வேங்கடவா வித்தகனே யிங்கேபோதராயே. (206)

| | |
|---|---|
| கோதுகலம் உடை குட்டனே | சீராட்டுதலைப்பெறும் வாராய் மகனே! |
| குன்று எடுத்தாய் | கோவர்த்தனத்தைக் கையிலெடுத்து ஏந்தியவனே! |
| குடம் ஆடு கூத்தா | குடங்களுடன் ஆடப்படும் கூத்தையுடையனே! |
| வேதம் பொருளே | ஸர்வேத ப்ரதிபாத்யனே! |
| என் வேங்கடவா | எனது திருவேங் கடத்தானே! |
| வித்தகனே | ஆச்சர்ய மயனே! |
| போதர் கண்டாய் | வந்து சேர் |
| இங்கே போதர் கண்டாய் | நம் அகத்திற்கு வந்து சேர். |
| போதரேன் என்னுதே | வரமாட்டேன் என்னுமே போதர்கண்டாய். |
| அசல் அகத்தார்—பிற வீட்டுக்காரிகள் | |
| ஏதேனும் சொல்லி | வாசாமகோசரமான உன் மேன்மையைச் சொல் வது போல் தொடங்கி |
| ஏதேனும் பேச | சொல்லத்தகாதவை யெல்லாம் ஏறிட்டுப் பேசும்போது |
| நான் கேட்க மாட்டேன் | எனக்குக் காதால் கேட்க மனம் தாங்கவில்லை |
| இங்கே போதராய். | |

சொல்லி, பேச என்னும் பதங்களையுற்று நோக்குங்கால், 'திருவுடை, மது சூதனன், ஸாளக்ராமமுடைய நம்பி' என்றாற்போல் வர்ணிப்பதும், பிறகெல்லாம் பரிபவிப்பதிலேயே முடியும்படி அவதூறாகப் பேசுவதும் அடைவே கருதப் பட்டிருப்பது தோற்றுகிறது. கோதுகலமித்யாதி. சீராட்டுதலுக்குரிய நீ பழிக்கப்படலாமா; குன்றெடுத்து யாரைக்காத்தாயோ, அவரையே அவமதிக்க லாமா; குட மாடுகிறவன் குடங்களையுடைப்பதா; கர்மகாண்டம் உன்னையே ஆராதிக்கப்படுபவனாகச் சொல்லுகிறது; ஜ்ஞானகாண்டம் ஜகத்காரணமாயும் பலனளிப்பவனாயும், உபாஸ்யனாகவும், பரமபுருஷார்த்தமாயும் பணிக்கிறது. ஆக, நீ ஸர்வஸமாராத்யனான ஸர்வேச்வரனாயிற்றே! அவை யெல்லாம் நீ திரு வேங்கடத்தில் நின்ற நிலையிலேயே தோற்றுகிறதே. அப்படிப்பட்ட நீ இப் படியெல்லாம் பிறர் பரிபவிக்கும்படி நடந்துகொள்வது வித்தகனான உனக்கே தகும். ஆகிலும் என்குட்டனானபடியாலே நான் சொல்லுகிறபடி இங்கு வரு வாயாக. குட்டனே வேங்கடவா. யசோதைதானே வகுளமாலிகையாக வந்து திருவேங்கடமுடையானை யவதரித்துள்ள கண்ணனைத் தாய் போல் நின்று வளர்த்து, அப்போது, முன்னே தான் செய்துவைக்கப்பெறாத விவாஹத்தையும் செய்துவைத்தமை அவனது மாஹாத்ம்ய க்ரந்தத்திலே காணலாகும். ஆக வேங்கடவன்தானும் யசோதையின் குட்டனாவான். (சு)

இனி சமைத்தவைகளை அவன் எடுத்துண்பதைப் பற்றின பாசுரங்கள். அவற்றில் பாயஸாந்நம்போன்ற அன்னத்தைப்பற்றின பாசுரம் முதலில். பக்ஷ யங்களைப் பற்றினது மேலே யாம்.

7. செந்நெலரிசிசிறுபருப்புச் செய்தவக்காரம்நறுநெய்பாலால்
பன்னிரண்டுதிருவோணமட்டேன் பண்டுமிப்பிள்ளைபரிசறிவன்
இன்னமுகப்பனனென்றுசொல்லி எல்லாம்விழுங்கிட்டுப்போந்துநின்றான்
உன்மகன்றன்னையசோதைநங்காய் கூவிக்கொள்ளாயிவையுஞ்சிலவே. 207

| | |
|---|---|
| **அசோதை நங்காய்** | குணம் நிரம்பிய யசோதாய்! |
| **செய்த** | எம்பெருமானுக்கென்று சுத்தமாய்ச் செய்த |
| **செம் நெல் அரிசி** | சிவந்த நெல்லைச் சேர்ந்த அரிசி |
| **சிறு பருப்பு** | சிறு பயிற்றம்பருப்பு |
| **அக்காரம்** | கருப்புக்கட்டி |
| **நறு நெய்** | மணமுள்ள நெய் |
| **பால்—** | பசுவின் பால் |
| **ஆல்** | இவைகளைக் கொண்டு |
| **பன்னிரண்டு திருவோணம்** | பன்னிரண்டு மாஸத் திருவோண நன்னாள்களிலே |
| **அட்டேன்** | சமைத்த நான் |
| **பண்டும்** | முன்னமே |
| **இப்பிள்ளை** | இந்தப் பிள்ளையின் (கண்ணனின்) |
| **பரிசு** | நடத்தையை |
| **அறிவன்** | அறிந்திருக்கிறேன். |
| **இன்னம் நான் உகப்பன்** | இதற்கு மேலும் மகிழ்ச்சியுறுவேன் |
| | என்று சொல்லி |
| **எல்லாம்** | இப்போது செய்து வைத்தவை யத்தனையும் |
| **விழுக்கிட்டு** | விழுங்கி விட்டு போந்து நின்றான். |
| **உன் மகன் தன்னைக் கூவிக்கொள்ளாய்** | |
| **இவை உம் சில வே** | இப்போது நான் சொன்னவையும் சிலவேயாகும் |

(இன்னும் சொல்லவேண்டுவன பல உள.)

திருவோணம் விஷ்ணு நக்ஷத்திரமாகையாலே எந்த அவதாரத்தில் ஈடுபட்டிருந்தாலும் பொதுவாகத் திருவோணம் கொண்டாட வேண்டியதொரு நாளாகையாலே அதிலே எம்பெருமானுக்குப் பக்ஷ்ய போஜ்யங்கள் கண்டருளப் பண்ணுகிற வழக்கம் திருவாய்ப் பாடியிலுமிருந்தது. இப்படித் திருவோணத்திற்கென்றே முதலிலிருந்து செம்மையாகச் சேகரித்துப் பரிசுத்தமாகச் செய்யப்பட்டிருப்பனவற்றை அவர்களிடத்திலுள்ள ப்ரேமாதிசயத்தாலே கண்ணன் தானே நேரில் எடுத்து அமுதுசெய்துவிடுவான். அவர்கள் இவனது உள் அபிப்ராயத்தை யறியாமே, அந்தோ! எம்பெருமானுக்குக் கண்டருளப் பண்ணவில்லையே யென்று வருத்தப் படுவார்கள். இப்படி ஒன்றன்று, இரண்டல்ல, பன்னிரண்டு திருவோணங்களிலே இவன் புசிக்கும் வரை ஒரு வருஷம் முழுதும் பொறுத்திருந்தாள் ஒருத்தி அதற்குமேல் மனம் தாளாமே யசோதையினிடம் வந்து இவ்வண்ணம் முறையிட்டுக்கொண்டனள் என்க. ஏதோ காரணத்தினால் மாதந்தோறும் செய்யமுடியாமலிருந்து பன்னிரண்டு திருவோணத்திற்கும் சேர்த்துச் சமைத்ததாகவும் கொள்வர். அட்டேன் இது வினைமுற்றென்பர்.

செய்த வென்பது அக்காரத்திற்குப் போலவே எல்லாத்திலும் சேரும். இன்னமுகப்பன். உண்பதனாலுண்டாம் மகிழ்ச்சி எனக்கு இதற்கு மேலுமுண்டு என்றதால், 'இதற்கு மேல் அதிகமாகச் செய்து வைத்தாலும் உண்பேன்; இனி வரும் திருவோணத்திற் கூட எவ்வளவு காவலிருந்தாலும் உண்பேன்' என்று குறித்ததாம். இவையும் சிலவே என்பதற்கு வேறுவிதமாக வுரை செய்வர். அதாவது—'நீங்கள் ஏதேதோ செய்ததாகச் சொல்லுகிறீர்கள். அவனோ செய்யவே யில்லை யென்கிறான். எதை நான் நம்புவன்' என்று யசோதை சொன்னதைக் கேட்டு மேலே முறையிடுபவள் சொன்னாள்—, அவன் தீம்பு செய்தது ஒரு பக்கமிருக்க, நீ சொன்னவிவையும் சில எங்களுக்குத்திருப்தி யளிக்கு மவை' என்றவாறு. 'இவையும் சில பிள்ளைவளர்ச்சியின் வகைகளோ' என்றும் உரைத்தனர் ஜீயர்.

எ.

திருவோணத் திருவிழாவில் எம்பெருமானுடைய பரத்வத்தை ஸ்தாபித்தருளிய ஆழ்வாராக வந்துள்ள யசோதையானவள், ஒருத்தி திருவோணத்தில் விசேஷாராதனம் செய்வதைக் கேட்டு எம்பெருமானின் பரத்வத்திலே ஈடுபட்டு அழைக்கிறாள்.—

8. **கேசவனேஇங்கே போதராயே கில்லேனென்னாதே யிங்கேபோதராயே**
**நேசமிலாதாரகத்திருந்து நீ விளையாடாதே போதராயே**
**தூசனுஞ்சொல்லுந் தொழுத்தைமாருந்தொண்டரும் நின்றவிடத்தினின்று**
**தாய்சொல்லுக் கொள்வதுதன்மங் கண்டாய் தாமோதரா விங்கேபோதராயே.**

**கேசவனே** } ப்ரம்மருத்ரர்களையும் ஸ்ருஷ்டித்தவனே! **இங்கே போதராய்.**
**கில்லேன் என்னாது** } மாட்டிலேன் என்று சொல்லாமல் **இங்கே போதராய். நீ**
**நேசம் இலாதார்** } அன்பு இல்லாதவர்களின்
**அகத்து** வீடுகளிலே
**இருந்து**
**விளையாடாதே**-விளையாடாமல் **போதராய்.**
**தாமோதரா** } வயிற்றில் கட்டுண்ட தாமோதரனே!
**தாய் சொல்லு**-தாயின் சொல்லை
**கொள்வது** கேட்டு நடப்பது
**தன்மம் கண்டாய்** } தர்மமென வறிந்தவனே!
**தூசனம் சொல்லும்** } உன்மேல் தூஷணங்களைச் சொல்லிவரும்
**தொழுத்தை மாரும்** } அடிமைப் பெண்களும்
**தொண்டரும்** -அடியாரும்
**நின்ற இடத்தில் நின்று** } இருக்குமிடத்திலிருந்து **இங்கே போதராய்.**

‘**கேசவனே** = அழகிய குழலனே. வரும்போது அசைந்துவரும் குழலழகைக் காண வாசைப்பட்டு இங்ஙனம் சொன்னது’ என்பர். **தொழுத்தைமாரும் தொண்டரும்.** இவர்கள் யாருக்கு அடிச்சிகளும் அடியருமா யிருப்பவரென்னில்,—ஊரிலுள்ள இடைச்சிகளுக்கும் இடையர்க்கு மென்பர். ஆக தூசனம் சொல்ல விரும்புவோர் நேரில் வந்து சொன்னால் ஒருக்கால் பொறுக்கலாம். கூலிக்கு உழைப்போரைக் கொண்டு சொல்லிவைப்பதால் மனம் மிகவும் நொந்திருக்கிறதென்க. ஆனால் கீழே அடிச்சிகளல்லாமல் அவர்களே நேரில் வந்து சொன்னதாகவே காண்கிறதே யென்னில், சொன்னவள் கூலிக்குச் சமைக்குமவள் என்று கொள்க. அன்றி, திருவோணத்திற்குச் சமைத்ததாகச் சொல்லுகிறார்களே கேசவா! ஆகில் உண்மையில் உனக்கு அடிச்சிகள் தாமே யவர்கள். அவர்கள் தெரியாமல் தூஷிக்க வந்தாலும் தொண்டரான புருஷர் எங்ஙனம் வெறுமனே பார்த்திருப்பது. மேலும் இவர்கள் நாயகனாய் நின்ற நந்தகோபனைச் சேர்ந்த நமக்கெல்லோர்க்குமே அடிச்சிகளும் அடியரும். அப்படியிருக்க எங்ஙனம் இப்படித் துணிந்து தூஷிக்கிறார்களோ, தெரியவில்லை. ஆக அவர்கள் அகங்களில் அன்றி அவர்கள் நின்றவிடத்தில் கூட நீ நிற்கலாகாது என்றபடி. மூன்றாம் அடி, நான்காமடியிலுள்ள **போதராயே** என்பதோடு சேருவதுதான் யுக்தம். ஆக ஒரே வாக்யமாகுகை உசிதமென்று **கண்டாய்** என்பதை விளியாகக் கொண்டது. வயிற்றில் கட்டுண்ட உனக்கு அவ்வடு கூட

மாறவில்லையே. தாய்சொல் தர்மம் என்று முன் அவதாரத்திலிருந்தே கூட உனக்குத் தெரியுமே என்றபடி. (அ)

இவன் பக்ஷ்யங்களைத் திருடி உண்டதை உரைக்கும் பாசுரம்.—

9. **கன்னலிலட்டுவத்தோடு சீடை காரெள்ளினுண்டை கலத்திலிட்டு
என்னகமேன்று நான்வைத்துப் போந்தேனிவன் புக்கவற்றைப்
பெறுத்திப்போந்தான்
பின்னுமகம் புக்குறியைநோக்கிப் பிறங்கொளி வெண்ணெயுஞ் சோதிக்கின்றான்
உன்மகன்றன்னை யசோதைநங்காய் கூவிக்கொள்ளாயிவையுஞ் சிலவே.** 209.

**அசோதை நங்காய்! நான்**

| | |
|---|---|
| கன்னல் | **சக்கரையால் செய்த—** |
| இலட்டுவத்தோடு | **லட்டு என்ற பக்ஷ்யத்தையும்,** |
| சீடை | **சீடை யென்னும் பக்ஷ்யத்தையும்,** |
| கார் எள்ளின் உண்டை | **கறுத்த எள்ளினாலான உண்டையையும்** |
| கலத்தில் | **பாத்திரங்களில்** |
| இட்டு | **அடக்கி வைத்து** |
| என் அகம் என்று | **இது எனது வீடு (யாரும் வாரார்) எனத்தீர்மானித்து** |
| | **(அங்கே தகுந்த விடத்திலே)** |
| வைத்து | **வைத்துவிட்டு** |
| போந்தேன் | **வீட்டைவிட்டுப்போனேன்** |
| | **(அப்போது) இவன்** |
| புக்கு | **(என் அகம்) புகுந்து** |
| அவற்றை | **எல்லாப் பக்ஷ்யங்களையும்** |
| பெறுத்தி | **பெறும்படி செய்துகொண்டு** |
| போந்தான் | **வீட்டிற்கு வெளியே வந்துவிட்டான்,** |
| பின்னும் | **(நான் வீட்டிற்கு உடனே வரமாட்டேன் என்று தெரிந்து) மறுபடியும்** |
| அகம் புக்கு | **(எனது) வீட்டிலே புகுந்து** |
| உறியை நோக்கி | **உறிகளை யெல்லாம் அண்ணாந்து பார்த்து** |
| பிறங்கு ஒளி வெண்ணெய் உம் | **நேர்த்தியாய் பளபளப்பான வெண்ணெயையும்** |
| சோதிக்கின்றான் | **எதிலே இருக்கிறதென்று ஆராய்ந்துபார்க்கிறான்.** |

**உன் மகன் தன்னைக் கூவிக் கொள்ளாய். இவையும் சிலவே.**

**என் அகம் என்று.** *அடிக்கடி கண்ணனைக் கூப்பிட்டு வழக்கப்படுத்தி அவஸ்தைப் படுகிறவர்கள் போலல்லாமல், என்றும் அவனை யழைக்காத எனது வீடு எனக் கருதினள். ஆகவே அவன் அங்கே நுழையான் என்ற தேர்ச்சி இவளுக்கு.* **பெறுத்திப் போந்தான்.** *பக்ஷ்யங்கள் மிகவாயிருந்ததாலும், ஒருக்கால் நான் வந்துவிடுவேனோ என்ற பயத்தினாலும் எடுத்துத் தன் தோழர்களைக் கொண்டு அவைகளை வேறிடம் சேர்க்கச் செய்து, அவர்கள் தான் பிறகு பெறும்படி கொண்டு வைப்பதைப் பார்க்கவும், நான் வராமலிருக்கிறேனோ வென்பதை யறிவதற்காகவும் வெளியே வந்தானென்றபடி.* **'பெறுத்திப் போந்தான்.** *நான் பெறும்படி பண்ணிப் போந்தான். அதாவது, விபரீதலக்ஷணையாலே, நான் ஒன்றும் பெறாதபடியே புசித்துப் போந்தானென்றபடி' என வுரைப்பர்.* **பெறுத்தி** *என்பதற்கு இங்கே 'பெற்று' என்றவ்வளவே பொருளெனவும் கூறுவர்.* **பிறங்கு ஒளி.** *இவ்விரண்டு பதங்களுக்கும் பொருள் ஒன்றே யாகிலும், சிறிது வேறுபாடு கொள்க. அன்றி, மிக்க ப்ரகாசமுள்ள என்றதாம். பல உறிகளில் பார்த்து எது பக்குவமாகக் காய்ச்சித் தோய்த்துக் கடைந்தெடுத்து வைத்த புதிய வெண்ணெய் என்று சோதிக்கின்றானென்றவாறு.* **இவையும் சிலவே** *என்றதின் பொருள் ஏற்கனவே ஆராய்தலுற்றது.* (கூ)

**இவையும் சில** வெனச் சொன்னதைக் கொஞ்சம் விரித்துரைக்கிறாள்—

**10. சொல்லிலரசிப் படுதிநங்காய் சூழலுடையனுன் பிள்ளைதானே**
**இல்லம்புகுந்தென் மகளைக்கூவிக் கையில்வளையைக் கழற்றிக்கொண்டு**
**கொல்லையினின்றுங் கொணர்ந்துவிற்றவங்கொருத்திக் கவ்வளைகொடுத்து**
**நல்லனநாவற் பழங்கள்கொண்டு நானல்லேனென்று சிரிக்கின்றானே. 210.**

நங்காய் — குணபூர்ணையான யசோதாய் !
சொல்லில் —நிறுத்திவிடாமற் சொன்னால்
அரசிப்படுதி — அப்ரீதி யடைவாய்.
(அல்லது)
சொல்லில் — (எனது) வார்த்தையில்
அரசிப்படுதி — அப்ரீதியடைகிறாய்
சூழல் — சூழ்ச்சியை
உடையன் — உடையவனை
உன் பிள்ளை தானே — உனது மகனே
இல்லம் புகுந்து—என் வீட்டில் நுழைந்து
என் மகளை — எனது பெண்ணை
கூவி — அழைத்து
கையில் வளையை கழற்றிக் கொண்டு — அவள் கைகளிலிருந்த வளைகளைக் கழற்றிக் கொண்டு
கொல்லையின் நின்றும் — தோட்டத்திலிருந்து
கொணர்ந்து — (பழங்களை) கொண்டுவந்து
அங்கு விற்ற — அங்கே விற்றுக்கொண்டிருந்த
ஒருத்திக்கு — எவளோ ஒருத்திக்கு
அவ்வளை கொடுத்து — அந்த வளைகளைக் கொடுத்து (அதற்காக)
நல்லன நாவற் பழங்கள் — நன்றாகவுள்ள நாவல்ப்பழங்களை
கொண்டு — வாங்கிக்கொண்டு (இப்போது)
நான் அல்லேன் — 'நான் செய்யவே யில்லை'
என்று — என்று சொல்லி சிரிக்கின்றான்.

ஏதோ நாங்கள் சொல்வதில் உனக்குச் சீற்றம் வருகிறது. இதற்கு மேலும் சீற்றம் கொள்வாய். ஆனால் நடந்ததைக் கேட்பாயாக. உன் பிள்ளை மிகவும் சூழ்ச்சி=ஆராய்தல் உடையவன். முன் சொன்னதற்குமேல் அவன் செய்ததைச் சொல்லுகிறேன் கேளாய். அவன் பின்னு மகம் புகுந்தானே. அப்போதங்கே உறிகளில் வெண்ணெயைப் பார்த்திருக்கும்போது என் மகள் அங்கே போக, 'அம்மா எங்கே' என்று கேட்டான். 'தெருவில் வந்துகொண்டிருக்கிறாள்' என்று உள்ளதை அவள் சொல்லிவிட்டாள். இனி இங்கு இருக்கலாகாதென்று கொல்லைப்புறம் ஓடிப்போனான். அங்கருகே ஒரு நாவற்பழக்காரியைக் கண்டான். பழம் வாங்க அவனிடம் ஒன்றுமில்லை. ஆகவே எனது சிறுமியைப் பேர் சொல்லிக் கூப்பிட்டு, 'பழம் வாங்கித் தருகிறேன் வா' என்றழைத்தான். அவள் கைகளிலிருந்த வளைகளைக் கழற்றிக்கொடுத்துப் பழங்களும் வாங்கினான். நான் வீட்டிற்கு வந்ததும் பக்ஷ்யம் முதலியன காணாமையாலே புறக்கடைப் பக்கமும் கதவு திறந்திருக்கச் சடக்கென வங்கே போய்ப் பழக்காரியினிடம் அவ் வளைகளைப் பார்த்துவிட்டுப் பெண்ணாலும் அவளாலும் இதைத் தெரிந்துகொண்டேன். உன் பிள்ளையோ கையில் பழங்களை வைத்துக் கொண்டே, 'நான் செய்யவே யில்லை. உன் மகளே கொடுத்திருப்பாள்' என்று சொல்லி உள்ளதை மறைக்கமாட்டாமே, அச்சமும் கூச்சமு மிராமே சிரிக்கவும் சிரிக்கிறான் என்றனள். இப்படி இவள் சொல்லிக் கொண்டிருக்கும்போது கையில் பழங்களோடே கண்ணனே அங்குத் தாயிடம், 'நானல்லேன்' என்று சொல்லிக்கொண்டு வந்துவிட்டான். அதனாலும் நானல்லேனென்று சிரிக்கி

றனே; நீயே பார் என்றனளெனவும் கூறலாம். இப்படி அவன் அருகில் வந்து விட்டதாலே தாயும் அவனைக் கூவாது நின்றனளென்க.

'**அரசிப் படுதி** என்றதற்குச் சீறுகின்றாயென வெங்ஙனம் பொருளெனில், அரசியாவாள் அரசன் மனைவி. அவள் ஸ்வபாவத்தைப் பெறுவது அரசிப் படுதல். அதாவது அடிச்சிகளிடம் சீற்றம் கொள்ளுதல்' என்பர். எங்களுக்கு அரசியான நீ இப்போது தான் இப்படி அரசியின் தன்மையைக் காண்பிக்கிறாயென்றவாறு. அன்றி, ரஸமாவது ப்ரீதி. அரஸம் அப்ரீதி. அரஸிப்படுதல் அதிருப்திபடுதல் அப்ரீதியுள்ளவளாதல் எனவுமுரைக்கலாம். கொல்லை யென்பது தோட்டமும் புறக்கடையும். ஆக வீட்டிற்குள் செய்ததோடு நிற்காமல் கொல்லையிலும் நின்றுகொண்டு அங்குப் பழக்காரி யொருத்தியைக் கூப்பிட்டு அவள் கொணர்ந்து விற்ற பழங்களைக் கொண்டானென்று, புறக்கடையென்ற பொருள் கொண்டு முரைக்கலாம். **கொல்லையினின்றும்.** கொல்லையிலும் நின்று என்றபடி. (௰)

இப்படி ஜாரசோரசிகாமணியான கண்ணன் சிறுவயதிலிருந்தே செய்யக்கூடிய சோரவிருத்தாந்தத்தை யசோதையாய் நின்று பலபடி யனுபவித்தருளித் தம் தன்மையிலே நின்று இத் திருமொழியின் பலனை அருளிச்செய்கிறார்.—

**11. வண்டுகளித்திரைக்கும் பொழில்சூழ்வருபுனற் காவிரித்தென்னரங்கன்**
**பண்டவன்செய்த கிரீடையெல்லாம் பட்டர்பிரான் விட்டுசித்தன்பாடல்**
**கொண்டிவை பாடிக்குனிக்கவல்லார் கோவிந்தன்றன் னடியார்களாகி**
**எண்டிசைக்கும் விளக்காகி நிற்பாரிணையடியேன் றலைமேலனவே.** 211.

**பட்டர் பிரான்**—பட்டநாதனை
**விட்டுசித்தன்** — விஷ்ணு சித்தனென்ற என்னுடைய
**பாடல் இவை கொண்டு** — இந்தப் பத்துப் பாட்டுக்களைக் கொண்டு
**வண்டு** — வண்டுகள்
**களித்து** — தேனைப் பருகினதால் பரவசப்பட்டு
**இரைக்கும்** — எங்கும் ரீங்காரம் செய்யும்
**பொழில்** — சோலைகளை
**சூழ் வரும்** — சூழ்ந்ததாய் ஓடிவரும்
**புனல்** — ப்ரவாஹத்தையுடையதான
**காவிரி** — காவிரி நதியையுடைய,
**தென்** — அழகிய
**அரங்கன்** — ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருக்கும்எம்பெருமான்
**பண்டு** — முற்காலத்திலே
**அவன்** — அவ் வவதாரமுள்ளவனை (கண்ணனை)
**செய்த கிரீடை எல்லாம்** — செய்தருளிய திருட்டு விளையாட்டுகள் யாவற்றையும்
**பாடி** — இசையுடன் அனுபவித்து
**குனிக்க வல்லார்** — கூத்தாடத் தெரிந்தவர்களான
**கோவிந்தன் தன்** — கோவிந்தனுக்கு
**அடியார்கள் ஆகி** — தாஸபூதர்களாயிருந்து
**எண் திசைக்கும்** — எட்டு திக்குகளும் ப்ரகாசிக்கும்படி
**விளக்கு ஆகி**—பெரிய தீபங்களுமாகி
**நிற்பார்** — நிற்பவர்களான பெரியார்களின்
**இணை அடி** — திருவடி யிரண்டும்
**என்** — பாட்டுகளைச் செய்த எனது
**தலை மேலன** — முடியின் மேல் விளங்குமவைகளாம்.

ஸ்ரீரங்கமானது ஆழ்வார் எழுந்தருளியிருந்த ஸ்ரீ வில்லிபுத்தூருக்குத் தெற்கில் இல்லையாகிலும், **காவிரித் தென்** எனக் குறையில்லை; **தென்** = அழகிய,

என்றதால். காவிரியால் சிறந்த அழகு பெற்ற என்னலுமாம். **பொழில் சூழ் வரு புனற் காவிரி** என்றதற்குப் பொழில்களாலும், வருகின்ற காவிரியாலும் சூழப்பெற்று எனவும் பொருள் உரைப்பர். **எண்டிசைக்கும் விளக்காகி.** நம்மிடமுள்ள வினைகள் அனைத்தையும் நமக்குத் தெரியாமலே திருடிக்கொண்டு போவனவான கண்ணபிரானுடைய திருட்டு விளையாட்டுகளை அழகாக அனுஸந்திப்பவர்கள் எங்கு மொளிக்கும் விளக்கானபோது உலகிலுள்ள திருட்டுக்கு இடமே கிடையாது. 'யத்ராஷ்டாக்ஷர ஸம்ஸித்தோ மஹாபாகோ மஹீயதே ந தத்ர ஸஞ்சரிஷ்யந்தி வ்யாதிதுர்பிக்ஷ தஸ்கரா:'. திருவஷ்டாக்ஷரத்தின் ஸித்தி பெற்ற மஹான் உள்ளவிடத்தில் வ்யாதி, துர்பிக்ஷம், திருடு இவை இரா.

**கோவிந்தன் அடியார்கள் இணையடி யென்தலைமேலன.** 'கண்ணன் அவதரித்துச் செய்த அரும் பெரும் கார்யங்கள் பல உள. ஆயினும் அவன் பல வகைத் திருட்டுத் தொழிலி லிழிந்தது ந்யாயமன்று. ஆகவே யன்றோ அவனை அநுபவிக்கவே அவதரித்துள்ள இடைச்சிகளும் அசோதையிடம் வந்து முறையிட்டுக்கொண்டது' என்றவாறு ஏதேனும் பழிகளை யவன்மேல் சுமத்தாமல், 'மஹாபாகவதரும், ப்ரக்ருதி ஸம்பந்தமடியாகத் தாற்காலிகமாகப் புத்தியில் சில மாறுதல்கள் ஏற்பட்டாலும் இடைச்சிகளைப் போலே அவனிடம் பேரன்பு கொண்டவராகில் அவன் கைவிடான். ப்ரக்ருதிமண்டலத்தில் துக்கத்துடன் கலக்காத ஸுகமும், தூஷணத்துடன் கலப்பில்லாத ச்லாகனமும் எங்கும் எப்பொழுதும் இரா என்றவாறு பல தத்துவங்களை வெளிப்படுத்துகிறன அவன் லீலைகள். அவையெல்லாம் அவனுக்குக் கெடுதியை விளைவிக்கமுடியாத வண்ணமிருக்கின்றனவென்றது மாத்திரமின்றி அவற்றின் பெருமையை உணர்ந்தவர் மூலம் உலகத்திற்குள்ள கெடுதியை யெல்லாம் விலக்கக் கூடியனவாயு மிருக்கின்றன' வென்று தெளிந்து ஆடிப் பாடி கோவிந்த னசையிலும் அவனுக்கடியார்களாகில் அவர்கள் திருவடியிணை சென்னிமேல் சிறப்புடன் சுமக்கக் கூடியவை. என் பாட்டைப் பாடி யாடினதாலே அவர் எனது சிஷ்யராகிவிடுவரோ? சிறியவன் சொல்லுமதை யுவந்து அனுஸந்தித்துக் களிக்கும் பெரியார்களும் உண்டே. ஆக நாம் சொன்னதைத் தானே இவர்கள் இங்ஙனம் அனுபவிக்கிறார்களென்று அஹங்கரிக்காமல், எதற்காகக் கொண்டாடுகிறார்களோ அந்த வெம்பெருமானுடைய விசித்ர க்ரீடைகளின் வைபவத்தைக் கண்டு, அதில் ஈடுபட்டுள்ளவரிடத்தில், தலைமேல் அவர்கள் திருவடிகளைத் தரிக்குமளவாகத் தக்கப்படி கௌரவிப்பதே சிறப்பென்றபடி. இதனால் ஆழ்வாருக்குப் பெரியாரானவரும் அவர் பாடல்களில் அப்போது ஈடுபட்டிருந்தமை விளங்கும்.

**ப்ரபந்தரக்ஷையில் வெண்ணெய்விழுங்கி உரை முற்றிற்று.**

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

## பெரியாழ்வார் திருமொழி 2, 10.

# ஆற்றிலிருந்து

கீழ்த் திருமொழியில் ஜாரசோரசிகாமணியான எம்பெருமானுடைய சௌர்ய சேஷ்டைகளிலே ஈடுபட்டு இனியரான ஆழ்வார் இத் திருமொழியிலே அவன் இடைச்சிகளிடத்திலே நடந்துகொண்டதை யநுஸந்தித்தருளுகிறார்— கீழே முறையிட்ட ஸ்திரீகள் அந்தந்த வீட்டு எசமானிகள்; இங்கே முறையிடுபவர் இவனோடு விளையாடப் பிறந்த பெண்பிள்ளைகள். ‘மங்கை நல்லார்கள்’ என முடிவிற் கூறியுமுள்ளது நோக்குக. ஆக ஜாரசிகாமணி யென்பதும் இங்கே சொல்லப் பெற்றதாம்.

1. ஆற்றிலிருந்து விளையாடுவோங்களை
சேற்றாலெறிந்து வளைதுகிற்கைக்கொண்டு
காற்றிற்கடியனா யோடியகம்புக்கு
மாற்றமுந்தாரானாலின்றுமுற்றும் வளைத்திறம் பேசானாலின்றுமுற்றும்.

| | |
|---|---|
| ஆற்றில் | ஆற்றங்கரையில் |
| இருந்து | அதிக நாழிகை விளையாட நினைத்து நின்று |
| விளையாடுவோங்களை | இவனோடு சேராமல் தனியாக விளையாடுமெங்களை |
| சேற்றால் எறிந்து | சேற்றை யெடுத்து அடித்து |
| வளை துகில் | (விளையாட வைத்திருந்த) வளைகளையும் பட்டுகளையும் |
| கை கொண்டு | தான் அபஹரித்து (அவற்றுடன்) |
| காற்றில் | காற்றைக் காட்டிலும் |
| கடியனாய் ஓடி | விரைந்தவனாகி ஓடிப் போய் |
| அகம் புக்கு | வீட்டிலே புகுந்து கொண்டு |
| மாற்றமும் | மறுமொழி கூட |
| தாரானால் | அளிக்காதவனை கண்ணனால் |
| இன்று | இன்றைத் தினம் |
| முற்றும் | எல்லாம் முடிந்துவிடும்; |
| வளை திறம் | அபஹரித்துக் கொண்ட வஸ்து விஷயத்தை |
| பேசானால் | பேசாமலே யிருக்கும் இவனால் இன்று முற்றும். |

‘இவனோடு சேராமல் தனியாக நாங்கள் எங்கோ ஆற்றங்கரையில் ஒன்று சேர்ந்து விளையாட்டுக் கருவிகளைக் கொண்டு போய் மணலால் சிற்றில் கட்டிச் சிறு ப்ரதிமையும் ஏற்படுத்தி ஆடை யுடுத்தி யலங்கரித்து வெகுகாலம் விளையாடி யிருக்க விருந்தபோது இவன் தானாக வந்து எங்கள்மேல் சேற்றை வாரி யிறைத்து, அதை நாங்கள் துடைத்துக் கொள்ளும்போது கீழே வைத்திருந்த வளை முதலானவற்றை யெடுத்துக்கொண்டு வீடு வந்து புகுந்துவிட்டான். பின்னே வந்து எவ்வளவு வேண்டி வணங்கிக் கேட்டாலும் மறுமொழியே

யளிப்பதில்லை. பேசினாலும் எதெதோ பேசுகிறானே யல்லது எடுத்த வஸ்துக் களைப் பற்றி யொன்றும் பேசுவதே யில்லை. மறுமொழியே யிராதபோது கொடுப்பது ஏது? இவனோடு படுவதிலேயே எங்கள் உயிர் உடல் எல்லாம் இன்றே முடிந்து விடுவன போலாயின' என்று சிறு வயதிலிருக்கும் பெண் பிள்ளைகள் யசோதைப் பிராட்டியிடம் முறையிட்டனர்.

இங்கே முன்போல் யசோதையைப் பேர் சொல்லி யழைக்கா தொழிந் ததும், 'உன் மகனைக் கூவா' யென்றவாறு கூறுதொழிந்ததும் இவர்கள் தங்கள் வயதிற்குத் தக்க நிலையிலே நின்று கௌரவித்து விண்ணப்பித்தலா லென்க.

மேற் பாசுரத்திலே, இவர்கள் அணியும் துகில்களைக் கைக்கொண்டது கூறப்படுகிறதாகையாலே இங்கே துகில் விளையாட்டுக்கு வைத்துக்கொள்ளப் பட்டவையாம். ஆக வளையும் அப்படிக் கொத்தவையே யாமென வாராய்க.

**முற்றும்.** இவ் வினைமுற்று இத் திருமொழிமுற்றிலு முள்ளது. எங்கும் எழுவாய் காணக்கிடக்கவில்லை. இவை யெல்லாம் மங்கை நல்லார்களின் முறை யீடென்று மேலே விளக்குவதால் அவர்கள் தாங்கள் முடிவதைச் சொல்லுவதே பொருந்துமாகையாலே **நாம்** என எழுவாயைச் சேர்ப்பர். அப்போது **முற்றும்** என்ற செய்யுமென் முற்று கூடாதொழியும். 'பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையிற் செல்லாதாகும் செய்யுமென் முற்றே' (348) என்றது நன்னூல். ஆகவே 'நாம் முற்றுதும்' என்றே இருக்கவேண்டும்; துகரம் குறைந்துள்ளதென் பர். இந்த நன்னூல் விதிப்படி முற்றுமென்பதற்குப் படர்க்கையில் ஒருமை யிலும் பலவின் பாலிலும் எழுவாய் கூடுமாகையால் உள்ள வினைமுற்றுக்குத் தக்கபடி எழுவாய் சேர்த்துக்கொள்வதே சிறந்ததாகும். ஆக 'நாம்' என்றதை விட்டு எங்கள் உடல் உயிரெல்லாம் என்றாற் போல் எழுவாயைக் கூட்டிக் கொள்க. மேலும் இங்கு எழுவாய் அருளிச்செய்யாததிலிருந்து, எதெது எழு வாயாகக் கூடுமோ அவை யெல்லாம் கருதப்பட வேண்டுமெனக் கருத்தென்ன லாம். ஆக, கண்ணனுக்கும் எங்களுக்குமுள்ள ஸ்நேஹமே முடிந்துவிடும், உங்களிடத்திலிருக்கும் கௌரவமே முடிந்துவிடும், கோகுலத்திலுள்ளவ ரெல் லாம் உங்களோடு சேர்ந்து வாழ்வதே முடிந்துவிடும், கோகுலமே முடிந்து விடுமென்றாற்போல் அநேகம் பொருள் கொள்ளலாமாகையாலே **முற்றும்** என்ற தில் குற்றமில்லை யென்க.

*இனி வயதுவந்த பெண்பிள்ளைகள் முறையிடுவதைச் சொல்வதாம்—.*

2\. குண்டலந்தாழக்குழல் தாழ நாண்டாழ
எண்டிசையோரு மிறைஞ்சித் தொழுதேத்த
வண்டமர்பூங்குழலார் துகில்கைக்கொண்டு
விண்டோய்மரத்தானாலின்று முற்றும்,
வேண்டவுந்தாரானாலின்று முற்றும். 213.

(துகில்களை எடுக்கக் குனிந்தபோது)
குண்டலம் — காதில் தரித்துள்ள குண்டலங்கள்
தாழ — தாழ்ந்து திகழ
குழல் — குந்தளங்கள் தாழ
நாண் — திருக்கழுத்தில் தொங்கும் நாணும் தாழ
இந்த அழகைக் கண்டு
என் திசையோரும் — எட்டுத் திக்குகளிலுமுள்ளவரெல்லோரும்
இறைஞ்சி — இவனே ஸர்வோதக்ருஷ்டன் என்று தெளிந்து
தொழுது — விழுந்து நமஸ்கரித்து
ஏத்த — (வாக்கினாலே) ஸ்தோத்ரமும் செய்ய

வண்டு அமர் பூ — வண்டுகள் அமர்ந்துள்ள புஷ்பங்களைத் தரிக்கும்
குழலார் — கூந்தல்களையுடையவர்களான எங்களுடைய
துகில் — வஸ்திரங்களை
கை கொண்டு — கையால் வாரி எடுத்துக் கொண்டு
விண் தோய் மரத்தானால் — ஆகாசம் அளாவும் மரத்திலேறி உட்கார்ந்தவனான இவனால்
இன்று முற்றும்;
வேண்டவும் — எவ்வளவோ வேண்டிக் கேட்ட பிறகும்
தாரானால் — கொடாதவனால்
இன்று முற்றும்.

கண்ணனே தங்களுக்குக் கணவனாக வேண்டுமென வேண்டித் திருவாய்ப் பாடிப்பெண்கள் எல்லோரும் மார்கழிமாதத்திலே விடிவதற்கு முன்னே எழுந்து யமுனைக்குச் சென்று குளித்து ஒரு நோன்பு நோற்றார்கள். அப்பொழுது தான் நேரில் நின்று அவர்கள் செய்யும் பூசையைப் பெறத் திருவுளங்கொண்டு அங்கே எழுந்தருளி அவர்களிடமுள்ள ப்ரேமையின் பெருக்கத்தினாலே, அவர்கள் துகில்களைக் களைந்து கரையிலே வைத்துக் குளித்துவரும் தருணத்திலே சென்று அத் துகில்களை யெல்லாம் வாரி எடுத்துக்கொண்டு அருகிலிருந்த ஒரு கடம்ப மரத்தின் நுனியிலே துகில்களைத் தொங்கவிட்டு மறைந்து வீற்றிருந்து, 'என் செய்வார்' எனப் பார்த்திருந்தான். அவர்களும் அவன் எடுத்தது முதல் அவனைப் பார்த்தே யிருந்தனர். அவர்கள் மாத்திரமல்லர்; எண் திசையிலுள்ள வானவரும் முனிவரும் மண்ணவரான மஹான்களும் அவன் குனிந்து துகில்களை யெடுக்கும்போது குண்டலம் தாழக் குழல் தாழ நாண் தாழ அவன் இருந்த அழகிலே ஈடுபட்டு இப்பெருமானுடைய ஸௌசீல்யத்திற்கு மெச்சி மனோ வாக் காயங்களாலே பாராட்டி வந்தனர். அப்போது அவர்கள் குள்ளக்குளிரக் குடைந்து நீராடும் வண்ணமே பொழுது போக்கவும் முடியாமே, கரை யேறி வரவும் கூச்சமுற்று, இடுப்புமட்டுமான ஜலத்திலே நின்று, அவனுக்கெதிராக நின்றால் அவனுடைய கண்கள் தங்கள் முகிழ்முலைகளிலே விழுமென்று எதிர்திக்கிலே முகம்வைத்து மயங்கி நின்றனர். அப்போது அவன் இவர்களுடைய வண்டமர் பூங்குழல்களிலே கண்ணூற்றிருந்தான். பிறகு அவர்கள் அவன் இஷ்டப்படி அவன் முகமாக முகத்தைத் திருப்பிக்கொண்டு வேண்டிக் கேட்டுக் கரையு மேறி இரு கையும் கூப்பித் தொழுது துகில்களைப் பெற்று நோன்பையும் நேர்த்தியாக நோற்றுவந்தனரென வரலாறு. அப்போது அவர்களுக்கிருந்த அநுராகம் கலந்ததொரு குழப்பத்தை இங்குக் கூறி அவர்கள் முறையிடுகிறபடி.

ஒருத்தியாயிருந்தால் துகில் இல்லையாகிலும் சிறிது கூச்சமிராமலிருக்கலாம். பிறர்கள் நடுவே அவ் வண்ணம் செய்தது பொறுக்க முடியுமா? அக்

துடன் தன்னைக் கண்டு எண்டிசையோரு மிறைஞ்சித் தொழுதேத்தி நிற்க அவர்கள் எதிரில் இப்பாடு படுவதிலுள்ள கஷ்டத்தை எவ்வளவென்று கூறுவது. என்னென்னவோ சொல்லி வேண்டினாலும் துகிலைத் தராமல், 'நீங்கள் துகில் இராமல் ஸ்நானம் செய்யலாமோ? நதியில் நீராடும்போது இது மிகவும் தவறானதே. இதுதானோ நோன்புக்காக நடத்தும் நீராட்டம்' என்றும், 'நீரினின்று கரையேறிக் குற்றத்திற்கு ப்ரணாமமே செய்யவேண்டு மென்றால், ஒரு கையால் ப்ரணாமம் செய்கிறீர்கோள். இதுவும் சாஸ்திரத்துக்கு விரோதமானது. இரு கைகளையும் சேர்த்தாலல்லவோ அஞ்ஜலி யாகும். அஞ்ஜலி யிராமற்கூட ப்ரணாமம் உண்டோ' என்றவாறும் வாதிக்கிறதொழிய வேறில்லை. பெண்மணிகள் ஏகாந்தமாக நீராடும்போது புருஷன் இப்படி வந்து செய்வதெல்லாம் மட்டும் சாஸ்த்ரத்திற்கு இசைந்ததோ என்று ஸர்வேச்வரனுன் அப் பிரானைக் கேட்க வாயேது என்றவாறு இவர்கள் முறையிட்டனர்.

இங்கே ஸ்ரீதேசிகன் **கோபால விம்சதியில்** அருளிச் செய்த ச்லோகமும் அனுஸந்திக்கத் தக்கது. அது,

'வாஸோ ஹ்ருத்வா திநகரஸுதாஸந்நிதௌ வல்லவீநாம்
லீலாஸ்மேரோ ஜயதி லளிதா மாஸ்தித: குந்தசாகாம்।
ஸவ்ரீடாபிஸ் ததநு வஸநே தாபிரப்யர்த்யமாநே
காமீ கச்சித் கரகமலயோ ரஞ்ஜலிம் யாசமாந:' என்றது.

இதிலுள்ள ரஸமொன்றையும் நோக்குக. ஸுதா, லீலா, சாகா என மூன்றும் ஸ்திரீலிங்கம். பிறர் எதிரிலே பரிபவப்படுவதற்கு அவர்கள் வெட்க முற்றிருக்க, அசேதனங்களான குணகுணிக ளெல்லாம்கூட ஸ்திரீயா யிருந்து வேடிக்கை பார்க்கச் சேர்ந்தன போலும். அப்போது கண்ணனும் அங்கு யமுனை யென்ற ஸ்திரீக்குப் பக்கத்திலிருப்பதும், லீலையை நோக்கிப் புன்சிரிப்புக் கொள்வதும், சாகையினிடம் ஆஸ்தை யுறுவதுமாய் இப்படிப் பல ஸ்திரீகளிடத்திலும் ஒரே ஸமயத்தில் பலவிதமாக நடந்துகொள்ளும் பொல்லாத காமியாயிருந்து கோபஸ்திரீகளையும் கை கூப்பி நிற்கச் சொன்னானென்றதே அது.

**வண்டமர் பூங் குழலார்.** துகில்களை அவன் எடுக்கும்போது இவர்கள் கண்டாரல்லரெனத் தெளிவித்தபடி. வேறு பக்கம் முகம் வைத்திருந்ததால் அவர்கள் கூந்தல்களே அவன் கண்ணிற் கிலக்காயின. 'குண்டலம் தாழக் குழல் தாழ அவன் எடுத்ததை இவர்களும் கண்டார்க' ளென்னில், அப்போது, முன் சொன்னபடி பிறகு அவர்கள் வேறுபக்கம் முகமாக நின்றது கூறினதாகுக.

இவ்விரண்டு பாசுரங்களால் பெண்மணிகளிடத்திலே அவன் நடந்து கொண்ட விதம் கூறப்பட்டது. இதற்குமேல் அவனிடத்திலே தங்களுக்குள்ள காதல் தோற்றக் காளியமர்த்தனம், தேனுகாஸுரவதம் முதலான செய்கைகளைக் கூறி இப்படிச் செய்த விவனாலே இன்று முற்றும் என்கிறார்கள். அவையெல்லாம் இவர்களுக்கு அனுகூலமாகவே யிருக்க அவற்றைக் கொண்டு 'முற்

றும்' என்றது எங்ஙனே யென்னில், 'ஆச்ரிதரக்ஷணத்திற்காக இவ்வளவு அனுகூலம் செய்பவனே எங்கள் திறத்திலே அபகாரங்களைச் செய்யாநின்றான்' என வறிவிப்பதிலே நோக்கு என ஜீயர் உரைத்ததைக் கொள்க. அன்றி, அவன் காளியமர்த்தனாதிகளைச் செய்யும்போது ஏறி மிதித்தும் எடுத்தடித்தும் என்னென்ன செய்துவந்தானோ, அவ்வண்ணமாகப் பல வகையில் எங்களைப் படுத்தி வருகிறான். அங்கே சீற்றமுற்றுச் செய்தான். இங்கே அளவற்ற ப்ரேமையோடு செய்கிறா னென்கிற பேதமே யொழியச் செய்யும் தொழிலாலுண்டாம் ஹிம்ஸை எங்கும் ஒரே விதமாகவே காண்கிறதெனவும் கருத்தாம். அவன் செய்த காமச் செயல்களை இன்னதின்னதெனக் கூறக் கூச்சமுற்று, வேறு பல கார்யங்களைக் கூறி மறைமுகமாக வெளியிடுகின்றனர் என்றபடி. பிறவும் ஆராய்க. (உ)

**3.** தடம்படுதாமரைப் பொய்கை கலக்கி
விடம்படுநாகத்தை வால்பற்றியீர்த்து
படம்படுபைந்தலை மேலெழப்பாய்ந்திட்டு
உடம்பையசைத்தானலின்று முற்றும்,
உச்சியினின்றானலின்று முற்றும். (214)

தடம் படு — விசாலமாயிருப்பதை யுடைய
தாமரை — காளியன் இராத காலத்திலே தாமரை விளங்கும்
பொய்கை(யை)—மடுவை
கலக்கி — உள்ளிருக்கும் காளியன் வெளிவரும்படி குதித்துக் கலங்கச்செய்து
விடம் படு நாகத்தை — அப்போது வெளிக் கிளம்பின, விஷத்தைக் கக்கும் காளியனை
வால் பற்றி — வாலில் பிடித்து
ஈர்த்து — இழுத்து
படம் படு பை — படத்தையுடையனவும் பெரிய பைகள் போன்றனவுமான
தலை — அதன் தலைகள்
மேல் எழ — மேலே கிளம்பினபோது
பாய்ந்து இட்டு — அவற்றிலே பாய்ந்து அகப்பட்டிருந்து
(கரையிலிருப்பவர் பயந்து அழுதபோது,
உடம்பை அசைத்தானல் — விஷம் இவனை யொன்றும் செய்யவில்லை, பிழைத்திருக்கிறானெனத் தெளியும்படி தன் திருமேனியை அசைத்தருளினவனாலே
இன்று முற்றும்;
உச்சியில் நின்றானல் — பிறகு அதன் படங்கள் மேலேறி ஆடியிருந்தவனால்
இன்று முற்றும்.

**பைந்தலை.** பையின் தன்மையுள்ள தலை. நாகம் தலை தூக்கி வாய் திறந்திருந்தபோது அத் தலை பெரும் பையாகவே தோற்றமுற்றதெனப் பதவுரைப் பொருள். கோபத்தினால் விஸ்தரிக்கப்பட்ட தலையென்றும், மெத்தென்றிருந்த தலை யென்றும்கூட உரை செய்வர். **உடம்பை யசைத்தானல்.** முதலில் கண்ணன் காளியன் கடித்துக் கக்கின விஷத்தினால் மூர்ச்சை யுற்றவன்போல் அசையாமற் கிடந்ததும், பிறகு கோகுலத்தினின்று எல்லோரும் வந்து கதறியழுததையும் பலராமனுடைய ப்ரார்த்தனையையும் கேட்டுத் தன் உடம்பை அசைத்து விழித்தெழுந்ததும், பிறகு படத்தின் மேலேறி நின்றதும் புராணத்தில் ப்ரஸித்தமானவை. இங்கே, 'தலையின்மேலே தானேறி நின்று உடம்பை

யசைத்துக் கூத்தாடினவனுலென்றும், காளியன் இளைத்துச் சரணம் புகுமளவு அதன் உச்சியில் நின்ருனல்' என்றும் அடைவாக உரைப்பதும் காண்க. (ரு)

**4. தேனுகனுவிசெகுத்துப் பனங்கனி**
**தானெறிந்திட்ட தடம்பெருந்தோளினல்**
**வானவர்கோன்விட வந்த மழைதடுத்து**
**ஆனிரைகாத்தானலின்று முற்றும்,**
**அவையுய்யக்கோண்டானலின்று முற்றும்.** (215)

| | |
|---|---|
| **தேனுகன்** | தேனுகாசுரனுடைய |
| **ஆவி** | பிராணனை |
| **செகுத்து** | அழித்து |
| **பனங் கனி தான் எறிந்திட்ட** | பனம் பழங்கள் எறிந்த |
| **தட** | விசாலமான |
| **பெரு** | பெரிய |
| **தோளினல்** | தோளின் பலத்தினல் |
| **வானவர் கோன்** | தேவேந்திரன் |
| **விட** | நியமித்ததாலே |
| **வந்த மழை** | பெய்த மழையை |
| **தடுத்து** | கோவர்த்தன மலையை விரலால் ஏந்தி விலக்கி |
| **ஆன் நிரை** | பசுக்கூட்டத்தை |
| **காத்தானல்** | காத்தருளினவனலே இன்று முற்றும்; |
| **அவை** | அப் பசுக்கள் |
| **உய்ய கொண்டானல்** | உஜ்ஜீவிக்க அதிகாரம் கொண்டருளினவனலே இன்று முற்றும். |

கண்ணபிரான் செய்த ஒவ்வொரு செயலும் விரோதிகளை யடக்குவதும் ஆச்ரிதர்களை ஆனந்திக்கச் செய்வதுமான இரு பலன்களையும் பெற்றிருந்தது. அதில் இரண்டாவது பலனுக்காகவே முதற்பலனும் கருதப்பட்டதென இங்கே விளக்கினபடி.

**பனங்கனி யெறிந்திட்ட.** தேனுகாசுரவதம் செய்தது பலராமனுயிருக்கக் கண்ணனுக்கு இப் பெருமையைச் சொன்னதென்? இரண்டவதாரங்களையும் செய்த எம்பெருமான் ஒருவனுகையாலென்னில், ஆகிலும் மூர்த்தி வெவ்வேருகையாலே கோவர்த்தனம் தாங்கிய தோள் தேனுகனை யெறியவில்லை யாதலால் இதெங்ஙனம் கூடுவதென்னில், கண்ணனே தேனுகாசுரவதம் செய்ததாக ஆழ்வார் திருவுள்ள மென்னலாம். அன்றி, பலராமன் மூலமாகத் தேனுகனைச் செகுத்துத் தான் பனங்கனிகளை மரத்திலிருந்து பறித்தெறிந்த (வெட்டி வீசித் தள்ளின) கண்ணன்தோள் என்று பொருள் கொள்ளலாம். இப்போது **தான்** என்றதும் வீணுகாமே நின்றது. கண்ணன் தோளானது தானே கனிகளை யெறிந்ததென்ருல் தேனுகனைச் செகுத்தது வேருென்றின் வாயிலாக வெனத் தோற்றுமன்ருே. ஆக, **கனி எறிந்திட்ட** என்றதற்குக் கனிகளின்மேல் தேனுகனை யெறிந்த என்னுமே, 'கனிகளை எறிந்த' எனப் பொருள் கொள்க. ஸ்வரஸமாய் இப் பதத்திற் தோற்றும் பொருளும் இதுவே. இப்படிக் கனி எறிவதற்கு இடையூருன தேனுகனை முன்னம் அழித்துவிட்டதால் இப்போது **செகுத்து** என்றதற்குச் செகுக்க எனப் பொருள் வேண்டாம். தான் என்பதும் அசையன்று. தேனுகவிருத்தாந்தத்தை (1—6—4)லே காண்க.

**உய்யக்கோண்டானல்** என்றது கோவிந்த பட்டாபிஷேகம் செய்விக்க அதனை உவந்து ஆனிரை காக்கும் அதிகாரம் கொண்டதைக் கருதியாம்.

இந்தப் பாரம் தாங்குவதும் தோளே. அபிஷேகம் செய்துகொண்டு அரசர் இராஜ்ய பாரம் ஏற்பது தோளிலன்றோ ? ஆகக் காமதேனுவின் சந்ததியான பசுக்கள் உஜ்ஜீவிக்கக் காமதேனு செய்வித்த அபிஷேகத்தை உவந்து ஸ்வீகரித் தருளியவனுலென விதன் பொருளாயிற்று. (௪)

இப்படிப்பட்ட தோள் உடைய எம்பெருமானையும் அடக்கிவைக்கும் தோள்களுள்ள இடைச்சிகளும் அங்கு உண்டென்கிறது மேலே—

5. ஆய்ச்சியர்சேரி யளைதயிர் பாலுண்டு
பேர்த்தவர் கண்டு பிடிக்கப் பிடியுண்டு
வேய்த்தடங் தோளினர் வெண்ணெய் கொள்மாட்டாது, அங்
காப்புண்டிருந்தானலின்று முற்றும்,
அடியுண்டழுதானலின்று முற்றும். (216)

| | |
|---|---|
| ஆய்ச்சியர் சேரி | இடைச்சிகளின் சேரியான திருவாய்ப்பாடியிலே |
| அளை | குழைந்துள்ள |
| தயிர் | தயிரையும் |
| பால் | பாலையும் |
| உண்டு | பருகி |
| பேர்த்து | (வெண்ணெய்க்காக வேறிடம் போகத்) திரும்பி (அப்போது) |
| வேய் தட தோளினர் அவர் | மூங்கில்போல் பருத்து அகன்ற தோள்களை யுடைய அவ்வாய்ச்சியர் |
| கண்டு | பார்த்து |
| பிடிக்க | பிடித்துக்கொண்ட போது |
| பிடி உண்டு | தப்பமாட்டாமே அகப்பட்டுக்கொண்டு |
| வெண்ணெய் கொள் மாட்டாது | வெண்ணெயைத் திருட முடியாமல் (அதற்குப்பதிலாக) |
| அங்கு | அவர் அகங்களிலே |
| ஆப்புண்டு | கட்டப்பட்டு |
| | இருந்தானல் இன்று முற்றும் |
| அடி உண்டு | அடிக்கப்பட்டு |
| | அழுதானல் இன்று முற்றும். |

ஆய்ப்பாடி என்னுமே **ஆய்ச்சியர்சேரி** என்றது தயிர் பால் நெய் வெண்ணெயெல்லாம் அவர்களுக்கதீனம்; அவ்விஷயத்திலே அவர்களே ஊருக்கு எசமானிகள். ஆகவே அவர்கள் என்ன செய்தாலும் அவர்களைச் சிக்ஷிப்பவர் கிடையார் என வறிவிக்கவாம். **அளை தயிர்.** கடைந்ததால் குழைந்துள்ள தயிர். மேன்மேல் நன்றாகக் கொதித்துச் சுண்டினதால் குழம்பான பாலுக்கும் **அளை** யென்றது சேருமாகில் கொள்க. 'அளை தயிராவது மத்தை நாட்டி உடைத்த தயிர், அல்லது கண்ணன் கையை உள்ளே புகுரவிட்டு அளையும் தயிர்' என்று முரைப்பர். **உண்டு** என்னும் பதத்தைப் பல கால் அருளிச்செய்தது, உண்ண வேண்டுமென்று போனவனுக்குப் பிடியுண்டு ஆப்புண்டு அடியுண்டிருந்ததால் உண்கைக்குக் குறைவில்லை என்கைக்குப் போலும். இப்பாசுரத்தில், ச. த. ப. வென வெழுத்துக்கள் வேறாயினும் வல்லின எதுகைக்குக் குறையில்லை. (ரு)

6. தள்ளித் தளர்நடை யிட்டிளம் பிள்ளையாய்
உள்ளத்தினுள்ளே யவளையுற நோக்கிக்
கள்ளத்தினல் வந்த பேய்ச்சி முலையுயிர்
துள்ளச் சுவைத்தானலின்று முற்றும்,
துவக்கற வுண்டானலின்று முற்றும். (217)

| | |
|---|---|
| இள பிள்ளையாய் | சின்னஞ் சிறு குழந்தையாய், (பூதனையானவள் மடியில் எடுத்து வைத்துக்கொள்வதற்கு முன்னே) |
| தள்ளி | தடுமாறி |
| தளர் நடை இட்டு | தளர்ந்த நடை நடந்து |
| அவளை | தாய் போல் காணப்பட்ட பூதனையை |
| உள்ளத்தின் உள்ளே | மனத்துக் குள்ளே |
| உற நோக்கி | நிதானத்துடன் பார்த்து |
| கள்ளத்தினால் வந்த | கபடமாய் மாறுவேஷம் பூண்டு வந்த |
| பேய்ச்சி | உண்மையில் பேய்ச்சியான அவளுடைய |
| முலை | ஸ்தனத்தை— |
| உயிர் துள்ள | அவள் பிராணன் துடிக்கும்படி |
| சுவைத்தானால் | ருசியுடன் உறிஞ்சவனால் இன்று முற்றும்; |
| துவக்கு | ஸம்பந்தமானது |
| அற | போம்படி |
| உண்டானால் | உண்டவனால் இன்று முற்றும். |

'நாள்களோர் நாலைந்து திங்களளவிலே' சகட முதைத்த கண்ணன் அதற்கும் முன்னமே பூதநாஸம்ஹாரம் செய்தருளினானென்பதே பெரும்பாலும் ப்ரமாணங்களிற் கண்டதென முன்னே (1—3—11.) விளக்கப் பட்டுள்ளது. ஆயினும், இக்காலத்தில் எட்டு மாதங்களில் குழந்தைகள் நடக்கும் போது, எல்லா ஸௌகர்யங்களும் பெற்றுள்ள விடத்திலே எம்பெருமான் நான்கு மாதங்களிலே பூதனையானவள் கையில் எடுத்து மடியில் வைத்துக்கொள்வதற்கு முன் தரையில் நிற்கவைத்தபோது தள்ளித்தளர்நடை யிடக் குறையில்லை. **அவளை.** பூதனையைக் கீழே குறிக்காமல், 'கள்ளத்தினால் வந்த பேய்ச்சி' என மேலேயே சொல்லா நிற்க அவளை யெனப்போமோ வென்னில்—செய்யுளாதலின் சுட்டு முதற் கூறப்படுவதுமாம். அன்றி, இவ் விருத்தாந்தம் பேசும் இடைச்சிக்கும் யசோதைக்கும் தெரிந்து நெஞ்சில் எப்போதும் இருந்துவருவதால் பேரைச் சொல்லாமே பேசும் வழக்கில் 'அவள்' என்றபோதே பூதனையெனத் தெளிவாம். **உள்ளத்து** இத்யாதி. மேலொடு நோக்கின போது அருமைத்தாய் போல் இருந்தவளை மனதை நன்கு பதியவைத்து நோக்கி இவள் கள்ளத்தினா லிங்ஙனம் வந்த பேய்ச்சி யெனத் தெரிந்து கொண்டான். ஆகிலும் அதற்காக அழுவதோ முலையுண்ணா மறுப்பதோ செய்யாமே மனத்துக்குள்ளேயே வைத்துக்கொண்டு அதற்குத் தக்கபடி செய்தானென்றபடி.

**சுவைத்தான்.** அம் முலைப்பாலிலுள்ள விஷமும் அவனுக்கு ரஸயமாய், அதாவது ருசிகரமாயும் அதனால், 'ரஸ்யா: ஸ்நிக்தா: ததா ஹ்ருத்யா: ஆஹாரா: ஸாத்விக ப்ரியா:' என்ற பகவத் கீதையின்படி ஆயுராதிகளை அதிகப்படுத்தும்படி சிறந்த ரஸதாதுவாய்ப் பரிணமம் பெறும்படியும் இருந்ததென்றதாம். **துவக்கற.** உண்மையில் அப்ராக்ருதமான இவன்திருமேனிக்கு இதனால் அழிதலோ வளர்தலோ கிடையாதாகையாலே துவக்கில்லை யென்றது. அன்றி அப் பூதனையின் உடலுக்கும் ஆத்மாவுக்குமுள்ள ஸம்பந்தம் போயிற்று. எம்பெருமான் உறிஞ்சதாலே அவளுக்குக் கஞ்சனோடிருந்த ஸம்பந்தமும் தீர்ந்தது. ஆகையாலே கோகுலம் போன்ற விடங்களிலுள்ள மற்றைக் குழந்தைகளுக்கும் இவனுக்கும் நேரக்கூடும் ஸம்பந்தமும் அற்றுவிட்டதென்க. (௩)

7. மாவலிவேள்வியில் மாணுருவாய்ச்சென்று
மூவடிதாவென் றிரந்தவிம் மண்ணினை
ஓரடியிட்டிரண்டாமடி தன்னிலே
தாவடியிட்டா னலின்றுமுற்றும்
தரணியளந்தா னலின்று முற்றும். (218)

| | | | |
|---|---|---|---|
| மாவலி | மஹாபலியின் | ஓர் அடி | ஒரே அடிவைப்பபால் |
| வேள்வியில் | யாகத்திலே, | இட்டு | அலங்கரித்து |
| மாண் | ப்ரம்மசாரியின் | இரண்டாம் அடிதன்னிலே | இரண்டாவது அடிவைப்பிற்கே |
| உரு ஆய் | வேஷம் கொண்டவனாய் | தாவடி இட்டானல் | வேறிடம் அடிவைத்தவனை கண்ணனலே இன்று முற்றும்; |
| சென்று | மாவலியிடம் போய்நின்று | தரணி அளந்தானல் | இரண்டடிக்கே ப்ரமாண்டபூமி யனைத்தையும் அளந்தவனலே இன்று முற்றும். |
| மூ அடி தா | 'என் அடி மூன்றுள்ள இடத்தைக் கொடு' | | |
| என்று இரந்த | என்று யாசித்தவனை— | | |
| இ மண்ணினை | இந்தப் பூலோகத்தை | | |

**இரந்த** என்றது தாவடி**யிட்டானல்** என்றதின் அடைமொழி. **இரந்த** இரக்கப்பெற்ற எனப் பொருள் கொள்ளில், அது 'மண்ணினை' யென்பதை அடையும். அப்போது எல்லாமே இரக்கப்பெற்றதாகையாலே மண் என்றது முழுவுலகுமாம். ஆகில் இம்மண்ணினை என்ற விடத்தில் 'இ' என்றதற்கு ஸ்வரஸமாகப் பொருளில்லையாம். முழுவுலகையும் ஓரடியில் அளக்கவில்லை யாகையாலே மண்ணினை அளக்கிறவளவிலே பூவுலகை ஓரடியிட்டு என்றாற் போல் இடையில் பதங்களைச் சேர்த்துக்கொள்ளவேண்டியும் வரும். **தாவடி.** இங்கே 'தாவி அடி' எனப் பிரிக்கில் தொகுத்தல் விகாரமென வேண்டும். தாவு அடி தாவடி. வினைத்தொகையாம். அன்றி, தாவடி யென்பதற்கே ப்ரயாணம் என்றும் போர் என்றும் பொருள் உண்டு. ப்ரயாணமாவது அடியைத் தூக்கி வேறிடம் வைப்பது. **தாவு** என்றது ஒதுக்கிடமுமாம்: முன் உபயோகிக்கப் பட்ட இடம் போக மிருந்தவிடம். அதை யடியிட்டானல் என்றபடி. **தரணி.** ப்ரம்மாண்டம் பூராவும் ப்ருதிவியானபடியாலே தரணி யெனப்பட்டது. தாவடி யிட்டானென்றால் எவ்வளவு இடம் அதனல் அளந்தாயிற்றென்னில் அதனைத் தெளிவிக்கத் **தரணி யளந்தானல்** என்றது. இதனல் எல்லா உலகு மளந்ததைச் சொன்னதாம்.
(எ)

8. தாழைதண்ணாம்பல்தடம்பெரும் பொய்கைவாய்
வாழுமுதலை வலைப்பட்டு வாதிப்புண்
வேழந்துயர்கெட விண்ணோர் பெருமானய்
ஆழிபணி கொண்டானலின்று முற்றும்,
அதற்கருள் செய்தானலின்று முற்றும். (219)

| | | | |
|---|---|---|---|
| தாழை | கரைகளில் தாழைச் செடிகளோடும் | தட | விசாலமாயும் |
| தண் ஆம்பல் | நீரில் மிகக் குளிர்ந்த ஆம்பல் முதலிய கொடிகளோடும் கூடியும் | பெரு | நீண்டு முள்ள |
| | | பொய்கைவாய் | -தடாகத்திலே |
| | | வாழும் | வாழ்ந்திருந்த |
| | | முதலை | ஒரு முதலையினிடம் |

வலைப்பட்டு — அகப்பட்டுக் கொண்டு
வாதிப்பு உண்- பாதைப்பட்ட
வேழம் — ஸ்ரீ கஜேந்த்ராழ்வானின்
துயர் — வருத்தமானது
கெட — போம்படி—,
விண்ணோர் பெருமானாய் — ஸர்வ தேவதேவனாயிருந்து
ஆழி பணி — திருவாழி யாழ்வானுடைய கைங்கர்யத்தை
கொண்டானல் — நியமனம்பெற்று நடத்த உகந்தருளினவனை கண்ணனாலே
இன்று முற்றும்;
அதற்கு — அவ்வேழத்திற்கு
அருள் செய்தானல் — சாபம் தீர்த்து மோக்ஷமளித்தவனால்
இன்று முற்றும்.

தாழைதண்ணாம்பல் என்று நீர் நிரம்பி ஆழமாயிருந்ததைச் சொன்னதாம். விண்ணோர் பெருமானாய். விண்ணோராவார் நித்ய ஸூரிகளும் தேவர்களும். எப்போதுமே விண்ணோர் பெருமானாயிருக்க இப்போது அவன் அவ்வண்ணமானது எங்ஙனமெனில், இவன் விண்ணோர் பெருமான் என்று முன்னே தெரியாமலிருந்தது; இவ் வேழம் மூலமாக இது தெரியவந்ததென்க. வேழமானது முதலே! முதலே! என விளித்துக் கூவினபோது, நான் முதலல்லேன், நான் முதலல்லேன் என்று எல்லாத் தேவர்களும், வேழம்துயர் கெடத் திறமையற்று விலக, முதல்தனிவித்தான இவன் தானே நேரில் எழுந்தருளித் திருவாழியை ப்ரயோகித்துத் தன்னை முதலாக நிரூபித்தருளினான். இவன் வாராமே திருவாழியைத் தனித்தனுப்பினால் திருவாழியே முதலென வுலகம் மயங்கும். இவர்கள் எதிரே திருவாழி இவனுக்குப் பணி செய்து திருக்கை சேர்ந்து விளங்க, இவனே ப்ராக்ருதர் அப்ராக்ரதர் என்ற வெல்லா விண்ணோர்க்கும் பெருமானெனவ் விளங்கிற்று. இங்குள்ள தேவர்களுக்கு மாத்திரமன்றி இவர்க்கு மேலுள்ள ஸாத்யதேவர்களுக்கும் நானே பெருமான் என வறிவிக்கவே கருடனையும் திருவாழியையும் இவன் கொண்டெழுந்தருளினது. முதலையின் சாபமோசனமும் வேழம் பறித்த பூவை ஸ்வீகரித்ததாலே வேழம்துயர் கெடச் செய்ததும் அருளிச்செய்து, இனி இடையற்று எப்போதுமுள்ள வழுவிலா வடிமை செய்ய வருளினதை யருளிச் செய்கிறார். அதற்கருள் செய்தானலென்று.

ஆழிபணிகொண்டானல் என்பதற்கு ஆழியால் முதலையைத் துண்டித்து எனப் பதங்களைச் சேர்த்துக்கொண்டு, பணி கொண்டானல் = ஸ்ரீ கஜேந்த்ராழ்வானுடைய புஷ்ப ஸமர்ப்பண கைங்கர்யத்தை ஸ்வீகரித்தருளினவனாலெனப் பொருள் கொள்வர். (அ)

9. வானத்தெழுந்த மழைமுகில்போல், எங்கும்
கானத்து மேய்ந்து களித்து விளையாடி
ஏனத்துருவா யிடந்த விம்மண்ணினை
தானத்தே வைத்தானா லின்றுமுற்றும்,
தரணியிடந்தா னாலின்று முற்றும். (220)

வானத்து — ஆகாயத்திலே
எழுந்த — கிளம்பின
மழை முகில்போல் — மழை பெய்ய விருக்கும் மேகம் போன்றவனும்,
கானத்து — காட்டிலே
எங்கும் மேய்ந்து — நிர்பயமாய் எல்லாவிடங்களிலும் ஸஞ்சரித்து உண்டு

களித்து — அனைத்துமுற்று
விளையாடி — விளையாடுகின்ற
ஏனத்து — ஒரு பெரும் வராஹத்தினுடைய
உரு ஆய் — உருவத்தை எடுத்துக்கொண்டு
இடந்த — (கீழ் அண்டச் சுவரில் ஹிரண்யாக்ஷன் இப்பூமியை அழுத்தி வைத்திருந்தபோது தன் கோட்டால்) குத்தி எடுக்கப்பெற்ற
இ மண்ணினை - இந்தப் பூமியை
தானத்து ஏ — அது இருக்க வேண்டுமிடத்திலே
வைத்தானால் — வைத்தவனுமான கண்ணனாலே
இன்று முற்றும்;
தரணி — பூமியை
இடந்தானால்—பேர்த்தெடுத்தவனால்
இன்று முற்றும்,

பூமி கடலிலே அமிழ்ந்திருக்க, அப்போது இவன் கானத்து மேய்ந்து களித்து விளையாடின தென்னை யென்னில், 'விளையாடி வைத்தானால் என்றதற்கு வைத்து விளையாடினவனாலென்று கருத்து; வைத்தானாலென்ற மூன்றும் வேற்றுமையுருபை விளையாடி என்ற வினையெச்சத்தோடு சேர்ந்ததாகப் பாவிக்க, இக்கருத்து பெறப்படுமென்பர். விளையாடி என்பதைக் கருத்தாப் பொருளில் வந்த ' இ ' விகுதி கொண்ட பெயராக்கி ஏனத்திற்கு அடைமொழியாகக் கொண்டு அப்படிக் காட்டிற் கோரைக் கிழங்கு'போன்றன மேய்ந்து வளர்ந்த வராஹம் போன்ற உருவமுள்ளவனென்றது பதவுரைப் பொருள். இதனால் வநவராஹமெனச் சொல்லிற்றும். தரணியிடந்தானால் என்று மறுதரம் சொன்னது, இவ்வவதாரத்திற்குப் பூமியைத் தானத்தில் வைத்தது முக்கிய ப்ரயோஜநமன்று, கோட்டால் இடந்ததே என விளக்க வாம். மண்ணினை யெடுத்ததை முன்னே சொல்லி, அப்போது வியசனப்பட்டுப் படுத்திருந்த தனது பூதேவியாரையும், தனக்கு இடது பக்கத்தில் வீற்றிருக்கச் செய்து தழுவிக் கொள்வதற்காகக் கோட்டால் கிளப்பி எடுத்தது இங்கே சொல்லிற்றெனவுமாம். (கூ)

10. அங்கமலக்கண்ணன்றன்னை யசோதைக்கு
மங்கைநல்லார்கள் தாம்வந்து முறைப்பட்ட
அங்கவர் சொல்லைப் புதுவைக் கோன்பட்டன் சொல்
இங்கிவை வல்லவர்க்கேத மொன்றில்லையே. (221)

இவை — இவ்விடத்தில் இப்போது இப்படிச் செந்தமிழாலான
புதுவை — ஸ்ரீ வில்லிபுத்தூருக்கு
கோன் — நிர்வாஹகனான
பட்டன் — ஸ்ரீபட்ட நாதனுடைய
சொல் — (பத்துப்) பாசுரங்களாகவான,
அந்து — அப்போது கோகுலத்திலே
மங்கை — சிறு பெண்களாய்
நல்லார்கள் தாம் — நற்குணம் பொருந்தினவர்களே
வந்து — நேரில் வந்து
அம் — அழகிய
கமலம் — தாமரைப் பூ போன்ற
கண்ணன் — கண்களையுடையனை கண்ணனைப் பற்றி
அசோதைக்கு — தாயான யசோதைத் தேவியினிடம்
முறைப் பட்ட — கவலைப்பட்டு விண்ணப்பித்துக்கொண்ட
அவர் சொல்லை — அம்மஹானுபாவைகளின் சொற்களை
வல்லவர்க்கு — கற்றவர்க்கு
இங்கு — இவ்வுலகில்
ஏதம் ஒன்று இலை — கொஞ்சமும் கேடில்லை.

**மங்கை நல்லார்கள்.** கீழ்த்திருமொழியில் முறையிட்ட வீட்டு எசமானிகள் நல்லார்களென நினைக்கமுடியாது. அவர்கள் இம் மங்கை நல்லார்களின்

சேர்க்கையினால் கொஞ்சம் தெரிந்திருந்தும் தங்கள் சொத்துக்களிலுள்ள வபிமானத்தாலே எம்பெருமானை ஏசியே பேசினர். அவற்றையும் ஆழ்வார் அனுபவித்தவண்ணம் எம்பெருமானின் அவதார விசேஷங்களும் லீலைகளும் சேரச் சேர்த்து அனுபவிக்க வல்லார்க்குச் சிறப்பு கீழே கூறப்பட்டுள்ளது. இவர்களோ நல்லார்களாகையாலே எம்பெருமானிடத்திலே தங்களுக்குள்ள மிகுந்த மதிப்பை வெளிப்படுத்திக்கொண்டு, முறையிடும் வகையிலே சொல்லி மகிழ்ந்துள்ளனர். இவர்கள் எம்பெருமானை நீ கூப்பிட்டுக்கொள்ளவேண்டுமென்று சொன்னாரல்லர். ஒருக்கால், 'அவனை விட்டுப்பிரிந்து தவிக்கிறோம். அவன் செய்த செய்கைகளை நினைத்துப் போது போக்குகிறோம். நாங்கள் இப்படியே முடிந்துவிடாதபடி அவனை அனுப்பித்தரவேண்டும்' என்றே கேட்பதாகவும் கருத்துரைக்கலாம். ஆகவே அவர் சொற்களை நாம் மாற்றினதொன்று மில்லையெனவும் அவர்களிடத்திலே தமக்கு மதிப்பு அதிகம் என்றும் தோற்ற, மீண்டும் அவர் சொல் என்றருளினர். இப்படி யெம்பெருமானுடைய ஸௌசீல்யத்தை யநுபவிப்பார்க்குக் குற்றம், கேடு துன்பம் ஒன்றும் இங்கு இல்லையாம்.

இவ் விரண்டு திருமொழிகளாலே இவன் சோரஜாரசிகாமணியா யிருந்தமையின் பெருமை கூறினபடி. இப்படி யிவன் செய்யத்தகாதவற்றைச் செய்ய அதை நன்மையாகக் கொண்டாடுவதென் என்னில்—,

ஜாரசோரசிகாமணி யென்று உலகுக் குண்டான தோற்றத்தைச் சொன்னோமே யன்றி, உண்மையில் அவன் ஜாரனு மல்லன்; சோரனு மல்லன். சோரனுவான் பிறர் சொத்தைக் களவால் கொள்கிறவன்; ஜாரனுவான் பிறர்மனைவியைப் பரிக்ரஹிப்பவன். இடைச்சிகள் வீட்டிலுள்ளவை உண்மையில் இவனுடைய சொத்துக்களா, அவர்களுடையனவா வென வாராய்க. இவனது சொத்தை இவனே யனுபவிக்க நேரில் வந்தபோதுகூட இவனுக்கு அளிக்காமலும் எடுத்துக் கொண்டால் முறையிட்டுக்கொண்டு மிருப்பவர்களே திருடர்கள். திருடு என வேறுபட்ட பிறகு அக்ரமமான வ்யவஹாரங்கள் செய்து தம் பக்ஷத்திலே தீர்ப்பைக் கோரினவர்களல்லரோ அவர்கள். இவன் உபேக்ஷித்து விட்டாலல்லது அவற்றில் அவர்களுக்கு யாதொரு ஸம்பந்தமும் கிடையாதே. இப்படியுலகிலுள்ள ஸ்திரீகள் எல்லோருக்கும், புருஷர்களுக்கும் இவனே நிருபாதிக ஸ்வாமி. இவன் உவப்பிற்காகவே இவன் ஸங்கல்ப்பிக்க அவர்கள், 'மனைவி, கணவன்' என்ற முறையைப் பெற்றிருப்பது. தனது தாஸர்களைத் தன் இஷ்டப்படி உபயோகிக்குமவனிடம் குறை கூறுவது அவ்வுண்மை யறியாமையால் வந்ததத்தனை. எவ் வஸ்துவும் இறைப்பொழுது கூட அவனுக்குச் சொத்தாகாமல் இருக்க முடியாதே. ஒவ்வொரு ஆத்மாவும் அததன் உடலுமெல்லாம் அவனுக்கு உடல். ஆக ஸ்திரீகளுக்கும் அவர்களின் சரீரங்களுக்கும் அவனே ஆத்மா வாகிறுன். ஆத்மாவின் இஷ்டப்படி உபயோகப் படுவதற்காகவே சரீரம் பிறப்பது. ஆக அவன் தனக்காக இவற்றை யுபயோகித்துக் கொண்டால் இதில் தவறு ஏது? இதை நன்கு ஆராய்ந்து தெளிக.

மேலும் கண்ணபிரான் தன்னுடைய அவதார சேஷ்டிதங்களாலே உலகுக்கு வெளியாக்கும் தத்துவங்கள் பல வுள.

சேதநர்கள் எக் காலமும் சாஸ்திரத்திற்குட்பட்டவரல்லர். பின் எப்போதென்னில், சில பிறப்பிலேயே. அவற்றிலும் சாஸ்த்ரம் குறித்த காலத்திலிருந்தே அதற்குட்பட்டவராவர். உபநயனத்திற்குரித்தான வயதிற்கு முன்னே, கண்டபடி புசிப்பதும் பேசுவதும் நடப்பதும் சாஸ்திரம் இசைந்ததாம். அன்றி, ஸம்ஸாரபந்தம் தீர்ந்தார்க்குப் புண்ணியம் பாபமென்ற பய மில்லை. இப்படி யிருக்க ஸர்வேச்வரனுக்கு இதேது? இந்த நிர்பயமான தசையைப் பெறவே எல்லோரும் முயன்றுவரவேண்டும். துரபிமானத்தாலே இப்போதே அப் பெருமை பெற்றிருப்பதாக ப்ரமிப்பார்க்கு எப்போதும் பயமே. மேன்மேல் பல முகமாக ப்ரபாவங்களைப் பெற்றுவருபவருக்குப் பாபபயம் தக்கவாறு குறைதலுறும். பாபகார்யங்கள் செய்ய நேரிட்டாலும் அவற்றிற்குப் பலன் நேராதபடி இலகுவாக விலக்கிக்கொள்ளும் வல்லமை யவர்களுக்கு வாய்த்திருக்கும். இப்படி யெல்லோர்க்கும் பயத்தைப் போக்கும் ஸர்வேச்வரனுடைய சக்தியை அளவிடக் கூடுமோ? அவன் தன் தாஸர்களான ஜீவர்களுக் கென்றேற்படுத்திய ஆக்ஞை அவனையே பாதிக்க வல்லதாமோ? இப்படி மோக்ஷஸ்தானத்திலே பரமானந்தத்திலே மூழ்கியிருக்கும் மஹான்களும் பரமாத்மாவின் கருத்தை யறிந்து அவன் இவ் வுலகில் அவதரிக்கும்போது அவனுடனும் தனியாகவும் பலராமாதிகளைப் போலே பிறந்திருப்பதுண்டு. அவர்களைப் புண்ய பாபங்கள் ஒன்றும் செய்யா. ஆனபோது எம்பெருமான் மேன்மையை என்னவென்று சொல்வது. 'இப்படி எனது வல்லமையைக் கண்டு என்னை நம்புவீர்களாகில் நீங்களும் என்னைப் போலாவீர்க' ளென்று அவன் இவ் வவதாரத்தில் அறிவிக்கும் உபதேசமாம்.

மேலும் கண்ணன் கோபஸ்திரீகளுக்குப் பல படியிலும் தான் ப்ரியனுயிருந்து, 'பரமாத்மநி யோ ரக்தோ விரக்தோபரமாத்மநி' என்றபடி அவர்களுக்கு வேறு விஷயங்களில் வைராக்யத்தையே வளர்த்துவந்தான். இப்படிப்பட்ட கண்ணபிரானிடம் உள்ள சக்திகளைப் பல வாறு அவன் காண்பித்திருந்தும் அவற்றை மறந்து அவன் செயல்களில் சிலவற்றிலே ஏதேனும் குற்றம் குறை யேறிடுவதோ வெனத் தெளிந்து அவன் பெருமையைப் போற்றுமவர்களே உண்மை யறிந்து உலகை உய்விப்பவர்களாய் எண்டிசைக்கும் விளக்காகி நிற்பர்; ஏதமொன்றுமிராமலும் விளங்குவர்.

இவ் விரண்டாம்பத்திலே பத்துத் திருமொழிகளிலே அடைவாக— (1) அவன் பூச்சிகாட்டி விளையாடுவது, (2) அவனை முலையுண்ண வழைப்பது (3) கடிப்பிடல் (4) மஞ்சனமாட்டுதல் (5) குழல்வாருதல் (6) ஆபரணமிடல் (7) பூச்சூட்டல் (8) திருவந்திக்காப்பு (9) திருட்டுத் தொழில் (10) கோபீஜந வல்லபத்வம் என்றவற்றை யருளிச் செய்தார். இனி இதற்கு மேலுள்ள பர்வத்தின் லீலைகளை ப்ரதானமாக வநுபவிக்க மேலுள்ள பாகமாம்.

**ப்ரபந்தரக்ஷையில் ஆற்றிலிருந்து உரை முற்றிற்று.**

**பெரியாழ்வார் திருமொழி இரண்டாம்பத்து முற்றிற்று.**

ஆழ்வார் எம்பெருமானர் தேசிகன் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

## பெரியாழ்வார் திருமொழி மூன்றும் பத்து 1

# தன்னேராயிரம்.

கண்ணபிரானுடைய விசித்திர லீலைகளை விசேஷித்தனுபவிக்கப் புகுந்தாரிவ் வாழ்வார் கீழிரண்டு பத்துக்களிலும் அவனது முலையுண்ணும் வயது வரையிலுள்ள விளையாட்டுக்களை யனுஸந்தித் தினியரானார். இங்ஙனமாகில் முடிவிலே ஜாரவிருத்தாந்தத்தை யனுபவித்த தெங்ஙன மெனவேண்டா. அவன் செய்த திருட்டுச் செயல்களை யனுபவித்து வரும்போது சிறுமிகள் விளையாடுமிடங்களிலே புகுந்து விளையாட்டுக்கான வளைதுயில்களை யபஹரித்து வந்தமையைச் சொல்லப்புக, அப்போது ஆற்றங்கரையிலவர்களின் விளையாட்டை யெடுத்தபோது ஆற்றில் அவர்கள் குளித்திருந்தபோது துகில் கைக்கொண்டது நினைவுற, சோரஜாரச் செயல்களுக்குள்ள ஒரு விதமான ஒருமைப்பாட்டையும் கருதி, அங்ஙன மொருங்க வருளிச் செய்தபடி யல்லது மேல்வயதின் அனுபவத்தி லீடுபட்டங்ஙனம் சொன்னதன்று. ஆகக் கீழே அநேக விடங்களில் காளியமர்த்தனாத்யனுபவங்கள் போலே இதுவும் ஒருவித நினைவால் வந்ததென்க. இப்படி யொன்றிலும் பொறுப்பிராது விளையாடும் வயதை யனுபவித்து, இனி பொறுப்புடன் கன்று காலி மேய்ப்பது போன்றவற்றி லிழுந்துள்ள அவனழகையும் திறலையு மனுபவிக்கப் போகின்றவராய், அதற்கு முன்னாக அவனுக்கு முலையுண்ணும் தசை மாறினதைக் கண்டு யசோதை அவனை அதிலிருந்து விடுவிக்கச் சொன்ன வார்த்தைகளை அவளாகவே யிருந்து சொல்லி யினியராகிறார் முதற் திருமொழியில்—

1. தன்னேராயிரம் பிள்ளைகளோடு தளர்நடையிட்டு வருவான்
பொன்னேய்நெய்யொடு பாலமுதுண்டொரு புள்ளுவன் பொய்யேதவழும்,
மின்னேர்நுண்ணிடை வஞ்சமகள்கொங்கை துஞ்சவாய் வைத்தபிரானே
அன்னேயுன்னையறிந்துகொண்டேனுனக்கஞ்சுவனம்மந்தரவே, (222)

| | |
|---|---|
| தன் | தனக்கு |
| நேர் | சமமான |
| ஆயிரம் பிள்ளைகளோடு | |
| தளர் நடை இட்டு | இளம் பருவத்து நடை நடந்து |
| வருவான் | வருபவனே! |
| பொன் | பொன்னுக்கு |
| ஏய் | ஒப்பான |
| நெய்யொடு | நெய்யையும் |
| பால் அமுது | இனிப்பான பாலையும் |
| உண்டு | (மறைவிலே) உண்டிட்டு |
| பொய் ஏ தவழும் | (எதிரில்) கபடமாகத் தவழ்ந்துவரும் |
| ஒரு புள்ளுவன் | ஒப்பற்ற வஞ்சகனே! |
| மின் நேர் | மின்னல் போன்றதாய் |
| நுண் | ஸூக்ஷ்மமான |
| இடை | மருங்குலை யுடையளாய் |
| வஞ்சம் மகள் | கபடமாய் வந்த ஸ்திரீயின் (பூதனையின்) |
| கொங்கை | ஸ்தனத்தில் |
| துஞ்ச | அவள் சாம்படி |
| வாய்வைத்த பிரானே! | |

| | | | |
|---|---|---|---|
| அன்னே | தாயே! | | (ஆக இனி) உனக்கு |
| உன்னை அறிந்து கொண்டேன் | எம்பெருமான் என்று தெளிந்தேன். | அம்மம் தர | ஸ்தன்யம் கொடுக்க |
| | | அஞ்சுவன் | அச்சமுள்ளவளாவேன். |
| | | | (ஏ. ஈற்றசை) |

கண்ணபிரான் வயதையும், தனக்கு ஸ்தன்யம் கொடுக்க வியலாதபடியுள்ள மாறுதலையும் கண்ட யசோதை அதிலிருந்து அவனைத் தடுக்க முயன்ற போது பரிவினால் ஏதோ சில காரணங்களைக் காட்டி யழகாகச் சொல்லுகிறாள்— 'நீ அவதரிக்கும்போது பிறந்த இவ் வாய்ப்பாடியிலுள்ள வாயிரம் பிள்ளைகளோடு நீ கலந்து விளையாடும்போது அவர்களைப் போல் தளர் நடை நடக்கிறாய். யாருமிராத சமயம் பார்த்து எங்கும் புகுந்து ஓடி யேறி உறிகளிலுள்ள உயர்ந்த பால் நெய் முதலியன திருடி யுண்கிறாய். என்னிடம் வரும்போது எழுந்து நிற்கக் கூட வியலாத விளங்குழந்தையாய் தவழுதல் செய்து வந்து அம்மமென்கிறாய். நீ அவ் வஞ்சமகளின் கொங்கையில் வாய் வைத்துறிஞ்சி அவளைத் துஞ்ச வைத்தானாயிற்றே. அவள் உன்னை வஞ்சிப்பதற்காக மின்னேர்நுண்ணிடையளாய் வந்தனள். அவளைத் துஞ்சவைத்து வஞ்சித்தாய் நீ. தவழ்ந்து என்னை இங்ஙனம் வஞ்சிக்கும் அப்படிப்பட்ட வுன்னை நான் நன்கு அறிவேன். இனி அம்மம் தாரேன். நீ முலை கொடுத்தவளை மாள வைத்ததும் பெருமானாயிருப்பதும் எனக்கு அச்சம் விளைவிக்கின்றன' வென்றவாறு.

**அன்னே** என்பது ஆச்சரியக் குறிப்பல்லாது, மேற்பாசுரங்களின் நான்காமடியின் தொடக்கத்திலே போல வொரு விளிச் சொல்லாயிருக்க வேண்டும். ஆக அன்னையே என்றது அன்னே யென மருவிற்றென்னலாம். திருவாய்மொழிப்பிள்ளை இங்கு 'அன்னே அம்மே என வதிரேகத்தி' என்றாராகிலும், 5-வது பாசுரத்தில் இப்பதத்தையே யெடுத்து அன்னை யென்ற பொருளையுரைத்திருக்கின்றார். இப்படி 'அன்னையே!' என்ற பொருளில் 'அன்னே யுன்னையல்லால் இனி யாரை நினைக்கேனே' (சுந். தே) என ப்ரயோக முளதென்றும் சொல்லுகின்றனர். நான் அன்னை யல்லேன். நீயே அன்னை. ஆக யார் யாருக்கம்மம் தருவதென விதன் கருத்து. (க)

பூதநாஸம்ஹாரத்திற்குப் பிறகு நடந்த சகடாஸுர ஸம்ஹாரத்தையும், சோர விருத்தத்திற்குப் பிறகான, வயது வந்து செய்யக்கூடிய ஜாரவிருத்தத்தையும் சொல்லி விலக்குவது மேற் பாசுரத்தில்—

2. பொன்போல் மஞ்சனமாட்டியமுதூட்டிப்போனேன் வருமளவிப்பால்
வன்பாரச்சகடமிறச்சாடி வடக்கிலகம்புக்கிருந்து
மின்போல்நுண்ணிடையாளொரு கன்னியை வேற்றுருவஞ் செய்துவைத்த
அன்பாவுன்னையறிந்துகொண்டேனுனக்கஞ்சுவனம்மந்தரவே. (223)

| | | | |
|---|---|---|---|
| பொன் போல் | பளப்பளப்பாக | போனேன் வரும் அளவு இ பால் | (யமுனைக்கு நீராடப்) போன நான் வருவதற்காம் காலவளவிற்குள்ளே, |
| மஞ்சனம் ஆட்டி | நீராட்டி வைத்து | வல் | வலிமையுள்ளதும் |
| அமுது ஊட்டி | ஸ்தன்யமும் கொடுத்துவிட்டு | பாரம் | பாரமுடையதுமான |

சகடம் — சகடத்தை (அசுரனை)
இற சாடி — முறியும்படி உதைத்துவிட்டு
வடக்கில் — (நம்மகத்திற்கு) வடக்கிலுள்ள
அகம் — வீட்டிலே
புக்கு இருந்து — புகுந்து சமயம் பார்த்திருந்து
மின் போல் — மின்னல் போன்று
நுண் இடையாள் — ஸூக்ஷ்மமான மருங்குல் உடையளான

ஒரு கன்னியை — கன்னிகைப் பருவத்திலுள்ள வொரு பெண்ணை
வேறு உருவம் செய்து வைத்த — மாற்றுருவம் (யௌவன வுருவம்) செய்து வைத்த
அன்பா — அன்புள்ளவனே!
உன்னை அறிந்துகொண்டேன்,
உனக்கு அம்மம் தர அஞ்சுவன்.

**வன்பாரச்சகடம்.** தான் வலிவுள்ளதும் தன்மேல் அனேக பாண்டங்கள் வைத்திருந்ததாலே பாரமுள்ளதுமான சகடம். **இற.** இறுதல்—கெடுதல், முறிதல். **வேற்றுருவம் செய்துவைத்த.** அக் கன்னிகையைத் தான் காதலுற்றுத் தன் கலவிக்கிணங்க அவள் உருவத்தை மாற்றிவைத்தான் கண்ணன். இதைப் பிறகு அவளைக் கண்டு எல்லோரு மறிந்தனர்போலும். கண்ணன் இதுவும் செய்யக் கூடியவனே. இவ் வாக்யமுந்தானும் இப்பொருள் பெறக்கூடியதே. அன்றி, கன்னியாவாள் நவயௌவனமுள்ள ஸ்திரீ. அவளுக்கு வேற்றுருவமாவன புணர்ச்சியுண்டனளெனத் தெரியும்படியான நிறம் முதலியனவென்பது முண்டு. பொன் போல் மஞ்சனமாட்டினது இப் புணர்ச்சிக்குப் போக்யமா யிருந்தது போலும். அமுதூட்டிவிட்டுப் போனதாலே கொஞ்சம் தாமதித்துவர இவளுக்குத் துணிவிருந்த தென்னலாம். சகட மிறச் சாடினதில் எல்லோரும் அந்த வாச்சரியத்திலே திகைத்து நின்றது இவனுக்குக் கலவிக் கனுகூலமா யிருந்ததென்க. (உ)

தொட்டில் பருவத்திற்குப் பிறகு தவழ்ந்துபோம் பருவத்தில் மாய மருதமரங்களை மாய்த்தமையைச் சொல்லி விலக்குகிறாள்—

3. கும்மாயத்தோடு வெண்ணெய் விழுங்கிக்குடத்தயிர் சாய்த்துப்பருகிப்
பொய்மாய மருதான வசுரரைப் பொன்றுவித்தின்று நீ வந்தாய்
இம்மாயம் வல்லபிள்ளை நம்பீயுன்னையென்மகனே யென்பர் நின்றார்
அம்மாவுன்னை யறிந்துகொண்டேனுனக்கஞ்சுவனம்மந்தரவே. (224)

கும்மாயத்தோடு — கும்மாய மென்னு மொருவகை சிற்றுண்டியோடு
வெண்ணெய் விழுங்கி,
குடம் தயிர் — குடம் நிறைந்துள்ள தயிரை யெல்லாம்
சாய்த்து பருகி — குடத்தைச் சாய்த்து முகத்தில் வைத்துக் குடித்து
(அதற்காகப் பெருமாவுரலிற் பிணிப்புண்டிருந்தபோது)
பொய் — உண்மையில் மரமல்லாது
மருதான — மருதமரங்களான
மாயம் — வஞ்சகமுள்ள
அசுரரை — அசுர (இருவ) ரை
பொன்றுவித்து — (நடுவே நுழைந்து) அழித்து

நீ இன்று வந்தாய்.
இ மாயம் — இவ்வளவாச்சரியச் செயல்
வல்ல பிள்ளை — செய்யச் சக்தியுள்ள சிறு பிள்ளாய்!
நம்பீ — கல்யாண குணங்கள் நிறைந்தவனே!
உன்னை — இப்படிப்பட்ட உன்னை
என் மகனே என்பர் — என் மகனென்றே இதற்கு முன் சொன்னவர்கள்
நின்றார் — அப்படிச் சொல்லிவராமே நின்று விட்டார்கள்.
அம்மா — இப்படி யெல்லோராலும் ஸர்வேச்வரனை வறியப் பெற்றவனே!
உன்னை அறிந்துகொண்டேன்.
உனக்கு அம்மம் தர அஞ்சுவன்.

கும்மாயமாவது குழையச் சமைத்த பருப்பென்பர்.

**பொய்மாயமருதானவசுரரை.** மருதுக்குப் பொய்மையாவது, கண்ணபிரான் மூலமாகச் சாபம் தீர்த்துக்கொள்ள, நளகூபரன், மணிக்ரீவன் என்ற இரு கிந்நரர்கள் மருதாக நின்று மற்ற மரங்களைப் போல வறிவின்மையின்றியே அவன் வரவை யெதிர்பார்த்தவண்ணமிருத்தலால் மரத்தின் தன்மை யற்றிருத்தலாம். இப்படி யெம்பெருமான் மானிட வுரு வெடுத்தபோதிலும் தன் ஸர்வேச்வரத்தன்மை யங்கும் மாறுதிருப்பதைக் கொண்டன்றோ அவனை 'மாயா மாநுஷவிக்ரஹன்' என்பது. உண்மையில் அப்ராக்ருதமான அவன் திருமேனிக்கு மனிதஜாதியென்பதே யில்லையென்பது மொரு விசேஷமாம். மாயவசுரரென்பதின் கருத்தை (1—6—5) ல் காண்க. **என் மகனே யென்பர் நின்றார்.** இவ்வளவு நாள் வரை நான் என்ன சொன்னாலும் தெரியாமல், 'உன் மகனைக் கூவாய்' என்ற வண்ணமே முறையிட்டுவந்தவரெல்லோரும்கூட உன்னை நன்றாகத் தெரிந்துகொண்டனர் போலும். ஏனெனில் அவர்கள் வாராமே நின்றனர். இனி நான் அம்மம் தந்தால் அவர்களும் சிரிப்பரே. இவ்வளவு பெரியவனை நீ அம்மம் கேட்கலாமோ வென்றபடி. இங்கு, 'நின்றார் உன்னை யென் மகனே யென்பர்' என மாற்றி அந்வயம் செய்து, 'நின்றார் உன் வாசி யறியாமே நின்றவர்கள் உன்னை யென் மகன்தானென்கிறார்கள்' எனப் பொருள் கூறுவதும் காண்க. (௩)

இனி ஓடித் திரியும் வயது வந்த பிறகு பெண்களைப் பரிபவித்ததைச் சொல்லி விலக்குகிறாள்—

4. மையார்கண்மடவாய்ச்சியர் மக்களை மையன்மை செய்தவர் பின்போய்
கோய்யார்பூந்துகில்பற்றித்தனி நின்று குற்றம் பலபல செய்தாய்
போய்யாவுன்னைப் புறம்பலபேசுவ புத்தகத்துக்குள கேட்டேன்
ஐயாவுன்னையறிந்து கோண்டேனுனக்கஞ்சுவனம்மந்தரவே. (225)

| | |
|---|---|
| மை ஆர் கண் | மை நிறைந்த கண்களையுடைய |
| மடம் | மடப்பம் (மௌக்த்யம்) உள்ள |
| ஆய்ச்சியர் மக்களை | இடைப் பெண்களை |
| மையன்மை செய்து | (உன்னிடம்) மோஹமுள்ளவராகச் செய்து |
| | (அவர்கள் ஓரிடம் போக) |
| அவர் பின் போய் | அவர்களுக்குப் பின்னே (யாருமறியாமல் போய்) |
| | (அவர்களுடைய) |
| கொய் | கொய்யப்பட்ட |
| ஆர் | நேர்த்தியான |
| பூ துகில் | மெல்லிய மெதுவான சேலைகளை |
| பற்றி | கையில் கொண்டு |
| தனி நின்று | தனியாக நின்று |
| பல பல குற்றம் | எத்தனையோ குற்றங்களை |
| செய்தாய் | செய்தவனே ! |
| பொய்யா | செய்தவற்றை மறுப்பவனே! |
| பல | பல வகையான |
| உன்னை புறம் பேசுவ | உன்னை மறைவில் தூஷிப்பவையான |
| புத்தகத்துக்கு உள | புஸ்தகத்திற்கு ஆம்படியான பேச்சுக்களை |
| கேட்டேன் | கேட்டுள்ள நான் |
| ஐயா | அப்பா! |
| | உன்னை அறிந்துகொண்டேன். |
| | உனக்கு அம்மம் தர அஞ்சுவன். |

முதலிரண்டடிகள் இவன் கன்னிகைகளின் துகில்களை அவர்கள் குளிக்கும்போது கைப்பற்றிக் கடப்பமர மேறிச் செய்ததைச் சொன்னதாம்.

அன்றி, அலங்கரித்து நின்ற சில இடைப்பெண்களைத் தன்னிடம் மோகம் கொள்ளும்படி செய்து ஸங்கேதமாய் ஓரிடம் அனுப்பிப் பின்னே தானும்போய் அவர்களின் துகில்களைப் பிடித்து ஒவ்வொரு பெண்ணுக்குமாகத் தனித்தனியாக நின்று பல செய்ததாகச் சொன்னதுமாம். **'மையன்மை,** மையல் என்பதின் மேல் **மை** யென விகுதி. இது விகுதி மேல் விகுதி' யென்பர். மையல்= மோகம், மை=இருள்: மையன்மை=மோஹாந்தகார மெனவும் கூடும். ஏற்க னவே மையார்கண்களாய் மடப்பமுள்ள அவர்கள் இங்ஙனம் மை பெறுவது எளிதிலாம். **கோய்யார் பூந்துகில்.** வினைத் தொகை. கொய்தலே கொசுவத லென வழக்கிலுள்ளது. ஆர்பூ என்றதை மாற்றி அந்வயித்துப் பலவகைப்பூப் போட்ட எனவும் பொருள் கூறலாம். **பேசுவ, உள** இரண்டும் அன் சாரியை பெறாத வினைமுற்று, இங்கு வினையாலணையும் பெயராம். **புத்தகத்துக்கு உள.** ஒரு சில சொற்களா யிருந்தால் இவை இவை யெனச் சொல்ல வியலும். எல் லாம் நினைவுக்கு வரவேண்டுமென்றால் புத்தகத்தில் எழுதிவைத்தாலன்றி வழி யில்லை யென்றதாம். இவை யெல்லாம் எம்பெருமான் லீலையாகையால் புத்தகத் தில் எழுதிப் பாராயணம் செய்யத்தக்கவை என இங்கு உட்கருத்துமாம். (௪)

இடைப் பெண்களிடம் அவன் செய்தவற்றைக் கீழே சொன்னார். இடை யர்களையே யவன் அடக்கிச் செய்ததைச் சொல்லி விலக்குகிறாள்—

5. முப்போதும் கடைந்தீண்டிய வெண்ணெயினோடு தயிரும் விழுங்கிக்
கப்பாலாயர்கள் காவிற்கோணர்ந்த கலத்தோடு சாய்த்துப் பருகி
மெய்ப்பாலுண்டழு பிள்ளைகள்போல நீ விம்மிவிம்மியழுகின்ற
அப்பாவுன்னையறிந்துகோண்டேனுனக்கஞ்சுவனம்மந்தரவே. (226)

| | |
|---|---|
| **மு போதும்** | மூன்று காலங்களிலும் |
| **கடைந்து ஈண்டிய** | கடைந்து கூட்டி வைக்கப்பட்ட |
| **வெண்ணெயினோடு** | வெண்ணெய்யையும் |
| **தயிரும்** | தயிரையும் |
| **விழுங்கி** | உண்டு விட்டு (இதன் இடையிலே) |
| **ஆயர்கள்** | (வெளிகளிலே காலி மேய்க்கும்) இடையர்கள் |
| **கப்பால்** | இருதோள்களாற் சுமக்கும் வகையினால் |
| **காவில்** | காவடியில் |
| **கோணர்ந்த** | கொண்டு வந்தவற்றை (பாலை)யும் |
| **கலத்தொடு சாய்த்து பருகி** | காவடி பாத்திரத்தையே வாயில் சாய்த்து வைத்துக் குடித்துவிட்டு, |
| **மெய்ப்பால்** | அருமையினால் அதட்டாமல் புகழப் படுவதனால் |
| **உண்டு அழு** | வயிறு நிறைய உண்டும் அழுது கொண்டிருக்கும் |
| **பிள்ளைகள் போல** | மற்ற பிள்ளைகளைப் போலவே |
| **விம்மி விம்மி அழுகின்ற** | மிகவும் பொருமி அம்மத்திற்கு அழுகின்ற |
| **அப்பா** | அப்பனே! |
| **நீ** | (என்னை) விட்டுவிடு; |

உன்னை அறிந்துகொண்டேன்; உனக்கு அம்மம் தர அஞ்சுவன்.

மூன்று காலங்களாவன காலையும் உச்சியும் மாலையும். **முப்போதும்** என்பதை **விழுங்கி** என்றதோடு சேர்க்க. ஒரு வேளையாவது நீ உண்ணாமலிருந் தால் அப்போது அம்மம் தரலாம்; அதில்லையே என்றபடி. **கடைந்து** என்ற தோடு சேர்க்கில் கறவை யதிகமா யிருப்பதாலே மூன்று காலங்களிலுமாகக் கடைதல் சொன்னதாம். **ஈண்டிய.** ஈண்டல்=கூட்டல். **கப்பால்.** கப்பு

என்றதற்குத் தோள் என்றது நேர்ப் பொருளன்று. **கப்பு.** கவர்கொம்பு. அதாவது இண்டாகப் பிரிந்து வளர்ந்த கொம்பு. அதில் ஏதேனும் வைத்தால் விழாமலிருக்கும். இங்குக் காவடி சுமக்கும் இடையரின் தோள்கள் திருக்கச்சித் தேவப்பெருமான் ஸ்ரீபாதம் தாங்கிகளின் தோள்கள் போல் பக்கத்திலும் பருத்துக் காவின் தடி வைக்கப் பாங்காயிருப்பதாலே அத் தோளைக் கப்பென்ற தென்னலாம். அன்றி, **கப்பு** கவர். கப்புத்தோளென்று வலத்தோளு மிடத் தோளுமாக மாற்றிக் காவுதலுக்குப் பெயராகையாலே அதே இதற்கும் பொருளெனக் கொள்க. காவில் பல பானையிற் கொணர்ந்ததாலேயே பால் அதிகமெனத் தேறும். தோள் மாறிக் கொணர்ந்ததென்றால் கேட்கவேண்டுமோ? **கா:** காவடி. **கோணர்ந்த.** வினையாலணையும் பெயர். பால் என்று சந்தர்ப்பத்தினால் தோற்றும். ஊரிலுள்ள வெண்ணெயையும் கட்டித்தயிரையும் விரைவில் விழுங்கினதால் தொண்டைக்குண்டான வலி தீரக் காவடிப் பாலை யெல்லாம் பருகுவதுபோலும். உண்டவுடன் பருகுவதும் வேணுமாயிற்று. **கலத்தோடு பருகி.** ஏதாவது கொஞ்சமாகப் பருகுவதாகில் வேறு பாத்திரம் வேண்டும். அந்தப் பாத்திரத்தையே தூக்கச் சக்தியற்ற வயிறுதாரியானாலும் வேறு பாத்திரம் வேண்டுமாகும். இங்கு அவையில்லை. **கோணர்ந்த** என்பதைக் கலத்திற்கு அடைமொழியாக்கில் **மெய்ப் பால்** என்பதற்குக் கலப்பில்லாத பாலெனப் பொருள் கூறி, அதைப் பருகி என வங்வயித்துரைக்கலாம்.

**மெய்ப்பால்.** மெய்ப்பாவது மெய்ச்சிக்கொள்ளப்படல். அதிகமாய் அருமையாக வளர்க்கப்படும் பிள்ளைகள் உண்டபிறகும் ஏதாவது கேட்ட வண்ணம் அழுதுகொண்டே யிருக்கும். அம்மமுண்டே திருப்தி யடையும். அப்படி நீ அழுகிறாயலலாது பசியினா லழுகிறையல்லை. நீ விழுங்குவதும் பருகுவதும் எனக்குத் தெரியுமே. ஆக வேன் அம்மம் என்றபடி. **மெய்ப்பால்** என்பதற்கு முலைப் பால் எனவும் பொருளுரைப்பர். அப்போது, 'வேறொன்று முண்ணுமே முலைப்பாலையே யுண்டுவளரும், அதனை யுண்ணுதபோது அதற்காக அழும் பிள்ளைகளைப் போலே' எனவாம் பொழிப்புரை. அப்போது **உண்டழு** என்ற விடத்தில் உண்டே வளர்ந்து தற்சமயம் உண்ணுமையினாலழும் என்றவாறு சேர்த்து அப் பொருள் கொள்ளவேண்டும். முலைப் பால் மெய்ப்பாலாவது எங்ஙனமென்னில், மெய் என்றது உடம்பாய் முலையைக் குறிக்கிற தென்பர். பசுவின் உடம்பும் மெய்யன்றோ வெனில், அதன் மடியுங் கூட முலையாம். ஆகிலும் முலைப்பாலென்றது முலையிலிருந்தே பிள்ளைகள் பருகும் பாலாமா போலே மெய்ப்பாலு மங்ஙனமா மென வேண்டும். அன்றி, பிள்ளைகள் முக்கியமாகப் பருகவேண்டும் பால் முலைப்பாலே. அஃதில்லாதபோது ஏதேனுமொரு பாலைத் தேடுவது. ஆகப் பிள்ளைகளுக்கு மெய்யான பால் மெய்ப்பால் எனவுமாம். ஏதேனுமாருக.

**நீ.** இது முன்னிலையொருமைப் பெயராகில் இங்குப் பொருந்தாது. ஆக நீக்கல் என்பதின் பகுதியான ஏவல்வினைமுற்று. துணியைப் பிடித்து அம்மமென்றிழுக்கின்றவனை விட்டுவிடென்கிறாளென்க. இதற்கு யாரும் பொருளுரைத்திலர்.

இடைச்சேரியினுள்ளே நடமாடிக்கொண்டிருந்தபோது செய்ததைச் சொன்ன பிறகு, வெளியிலே கன்றும் கறவையும் மேய்த்தபோது செய்ததைச் சொல்லி விலக்குகிறாள்—

6\. கரும்பார் நீள்வயற்காய்கதிர்ச் செந்நெலைக் கற்றாநிரை மண்டித்தின்ன
விரும்பாக்கன்றொன்று கொண்டு விளங்கனிவீழ வெறிந்தபிரானே
சுரும்பார் மென்குழற்கன்னியொருத்திக்குச் சூழ்வலை வைத்துத் திரியும்
அரம்பாவுன்னை யறிந்துகொண்டேனுனக்கஞ்சுவனம்மந்தரவே. (227)

| | |
|---|---|
| கரும்பு | கரும்பஞ் செடிகளாலே |
| ஆர் | நிறைந்தும் |
| நீள் | நீண்டுமுள்ள |
| வயல் | கழனிகளிலே |
| காய் | காய்த்த |
| கதிர் | கதிர்களையுடைய |
| செந் நெல் | செந்நெற் பயிரை |
| கன்று ஆ நிரை | கன்றுகளுடையவும் பசுக்களுடையவும் கூட்டமானது |
| மண்டி | மிகவும் விரும்பி |
| தின்ன | மேய்ந்தபோது |
| விரும்பா | மேய விருப்பமிராமலிருந்த |
| கன்று ஒன்று | ஓர் அசுரக் கன்றை |
| கொண்டு | கையிலெடுத்துக்கொண்டு |
| விளங்கனி வீழ | விளாமரத்தின் பழங்கள் விழும்படி (மரத்தின்மேல்) |
| எறிந்த | வீசிப்போட்டவனான |
| பிரானே | உபகாரகனே! |
| சுரும்பு ஆர் | வண்டுகள் நிறைந்த |
| மெல் குழல் | மெல்லிய கூந்தல் உடைய |
| கன்னி ஒருத்திக்கு | ஒரு பெண்ணுக்கு |
| சூழ் வலை வைத்த | அவள் விலக மாளாதபடி சூழும் வலையை வைத்த |
| அரம்பா | குறும்பனே! |

உன்னை யறிந்து கொண்டேன்; உனக்கு அம்மம் தர அஞ்சுவன்.

**கரும்பார். செந்நெல்** செம்மையான நெல். இப்பயிரை மண்டித்தின்னும் கற்றாநிரை யென மேலே சொல்லா நிற்க, கரும்பங்கே நிறைந்திருப்பதைச் சொன்னது வீணென்னில், இது வீணாகாமைக்காகவும், கவிகள் வர்ணிக்கும் வழக்கைப் பின்பற்றியும் **கரும்பார்** என்பதற்குக் கரும்பு போலே கிளர்ந்துள்ள வெனச் செந்நெலுக்கே அடைமொழியாக்கி நீள் வயல் கரும்பார் செந்நெல் என மாற்றி அந்வயித்துப் பொருள் கூறுவர்.

அன்றி, கரும்பினால் நிறைந்த வயல் என்றே உரைத்தலும் தகும். அதற்குக் கருத்தென் எனில், செந்நெலைக் காக்கவேண்டியிருக்க மண்டித்தின்ன விட்டதற்குக் கருத்தென்? மூன்றாமடியிலே கன்னிக்குச் சூழ்வலை வைத்ததைச் சொன்னதற்கிங்கே கருத்தென்? இவன் இடைக்கன்னிகள் எல்லோரையும் வலைப்படுத்துகிறவனா யிருக்க, **கன்னியொருத்திக்கு**, என்று சொன்னதின் கருத்தென் எனவும் வினவலாம். எல்லாத்திற்கு மாவதொரு கருத்து இவ்வாறாகுக—

இங்கே மஹாகவி ரகுவம்சத்திலே, 'இக்ஷுச்சாயநிஷாதிந்ய: தஸ்ய கோப்துர் குணோதயம்। ஆகுமாரகதோத்காதம் சாலிகோப்யோ ஜகுர் யச :॥', (கரும்பு நிழலிலே உட்கார்ந்துகொண்டு நெற்பயிரைக் காக்கும் பெண்கள் சிறு வயது தொடக்கமாயுள்ள அந்த ரக்ஷகனுடைய புகழைப் பாடிக்கொண்டிருந்தனர்) என்று சொன்னது நினைவுறுகிறது. வயலில் செந்நெற்பயிர் கதிர் வந்து காய்த்து வளமையோடிருந்தபோது மாடு மேயாதபடிக் காத்துவருவதற்காக

வங்கே கன்னி யொருத்தி இருந்தாள். இப்படி ஸமயத்தில் காவலிருப்பதற்கு அநுகூலமாம்படி பக்கத்திலே கரும்பும் பயிரிடுவது வழக்கம். கருப்பஞ்சோலை யின் குளிர்ந்த நிழலிலே உட்கார்ந்து காத்துவருவர். இங்ஙனம் கரும்பு ஒரு புறம் செந்நெல் ஒரு புறமாக விருந்த நீள் வயலிலே அச் சாலிகோபி அங்கே ஏகாந்தத்திலே கண்ணனைப் பாடிக் களித்திருந்தனள். அது தெரிந்து கண்ணன் கன்றுகளையும் பசுக்களையும் அங்கே கொண்டு சென்று கூடினபோது அவன் சூழ்வலையிற்சிக்கி அவள் செந்நெல் காத்தலையும் மறந்தனள். இவளைப் பரிபவிக்க வேணும், காக்கவும் வேண்டுமென்று கருதிக் கண்ணன் எல்லாப் பசுக்களையும் செந்நெற் பயிரை மேய விட்டான். எம்பெருமான் மனத்திற்கு உவப்பாக நடக் கும் பசுக்களின் நடுவிலே புகுந்திருந்த வத்ஸாஸுரன், கண்ணன் நினைத்ததை நாம் செய்யக் கூடாதென்று மேயாமே நின்றிருந்தான். இதனைக் கண்டு கண் ணன் அவனை மாய்த்து விளாமரத்தின் மேலெறிந்து அனைவருக்கும் அவன் தன் மையை விளக்கினன். இவ் வத்புதச் செயலைக் கண்ட கன்னிக்கு இவன்மேல் மோகம் வளர்ந்தேறியது. ஏதோ வத்ஸாஸுரன் வந்தானுமென்றிந்த வர லாற்றைக் கேட்டு, 'ஆகில் அதுதான் செந்நெல்லை மேய்ந்திருக்க வேண்டும்' என்று பெரியோர்கள் நினைக்கும்படியானதாலே கன்னியைக் கேட்பார் யார்? அச்சுரும்பார்மென்குழலாளை அவ் வஸுரனிடமிருந்து கண்ணன் காத்ததாக வும் நினைத்திருப்பரே அவர். இப்படி யெல்லாம் சேரச் செய்துவைத்த அரம்ப னிவனென்றபடி.

இங்ஙனம் ஆழ்வார் அநுபவத்திற் கிணங்கியுள்ள ரகுவம்ச கவியைப் பின்பற்றியே ஸ்ரீதேசிகன் ஹம்ஸஸந்தேசத்திலே யருளிச்செய்த ச்லோகம் (1—20)—,

"இக்ஷுச்சாயே கிஸலயமயம் தல்பமாதஸ்துஷீணாம்
ஸல்லாபைஸ்தைர் முதிதமநஸாம் சாலிஸம்ரக்ஷிகாணாம்
கர்ணாந்த்ரவ்யதிகரவசாத் கர்புரே கீதிபேதே
முஹ்யந்தீநாம் மதநகலுஷம் மௌக்த்யமாஸ்வாதயேதா: ॥"

என்றதாம்.

**காய்கதிர்.** காய்க்கதிர் என விராததால் காயென்பது பெயர்ச்சொல் லன்று. ஆக விது வினைத்தொகை. பயிரில் கதிர் முன்னே வரும். அது பால் கொண்டு காய்க்கும்போது உருசி யதிகம். ஆகவே காய்க்கும் கதிர் உடைய எனப் பொருள் கொள்க. வத்ஸாஸுர விருத்தாந்தத்தை (1—6—4.) லே காண்க. (சு)

வெளியிடங்களிலே வயற்புறத்திலே பகலிலே செய்ததைச் சொன்ன பிறகு இரவிலே சோலைகளுள்ள விடத்திலெ செய்ததைச் சொல்லி விலக்கு கிருள்—

7. **மருட்டார்மென்குழல் கொண்டுபொழில்புக்குவாய் வைத்தவ்வாயர் தம்பாடி**
**சுருட்டார்மென்குழற்கன்னியர் வந்துன்னைச் சுற்றுந் தொழநின்றசோதி**
**பொருட்டாயமிலேனெம்பெருமானுன்னைப் பெற்றகுற்றமல்லால் மற்றிங்**
**கரட்டாவுன்னையறிந்துகொண்டேனுனக்கஞ்சுவனம்மந்தரவே.** (228)

| | |
|---|---|
| மருட்டு | மயக்குவதும் |
| ஆர் | சேர்த்தியானதும் |
| மெல் | (காதுக்கினிதாம்படி) மெது வான ஓசையுமுள்ள |
| குழல் | ஊது குழலை |
| கொண்டு | எடுத்துக் கொண்டு |
| பொழில் | சோலையிலே |
| புக்கு | புகுந்து |
| வாய் | திருப்பவளத்தில் |
| வைத்து | அதனை வைத்துக் கொண்டு—, |
| சுருள் | சுருண்டதும் |
| தார் | பூவுடன் கூடினதும் |
| மெல் | மென்மை பொருந்தியது மான |
| குழல் | கூந்தலையுடைய |
| அ ஆயர் தம் பாடி கன்னியர் | இடையரின் சேரியிலுள்ள அந்தப் பெண்கள் |

| | |
|---|---|
| வந்து | எல்லோரையும் விட்டு ஓடி வந்து |
| சுற்றும் | நாலு பக்கத்திலும் |
| உன்னை தொழ | உன்னை ஸேவித் திருக்கும்படி |
| நின்ற | அசையாமல் ஊதின வண்ணமே நின்றிருந்த |
| சோதி | தேஜோ ராசியாயும் விளங்கின பரஞ்சுடரே! |
| எம்பெருமான் | எமது பெருமானே! |
| உன்னைப் பெற்ற | உன்னை மகனைப் பெற்றுக்கொண்டதாகிய |
| குற்றம் அல்லால் | குற்ற மொன்று தவிர |
| இங்கு மற்று பொருள் | வேறு ஒரு ஆதாயமும் |
| தாயம் இலேன் | பாகமாக நான் பெற்றிலேன். |
| அரட்டா | குறும்பனே! |

உன்னை அறிந்து கொண்டேன்; உனக்கு அம்மம் தர அஞ்சுவன்.

மருட்டு என்பதும் குழலுக்குச் சேரும். வினைத்தொகையாம். 'கொண்டு தார் பொழில்' எனத் திருவாய்மொழிப் பிள்ளையின் பாடம் போலும். **வைத்து** என்ற வினையெச்சத்திற்கு **நின்ற** என்றதோடு அந்வயம் கொள்க. திருப்பவளத்தில் குழல்வைத்தவன் ஆய்ப்பாடிக் கன்னிகள் எல்லோரும் சுற்றுந் தொழும் வரை நின்ற வண்ணமே ஊதினான் எனத் தெரிவிக்க, **தொழ** வென்றவரையிலுள்ள அம்சம் நடுவிலே சேர்த்தது. **ஆயர்தம்பாடி** யென்றது ஆயர்கள் தடுத்தும் வந்தனரென்கைக்காக. **சோதி.** இங்கு, சரத்காலத்திலே எங்கும் மல்லிகை முதலிய புஷ்பங்கள் மலர்ந்து மணம் கமழ, பருவச்சந்திரனும் நிறங்கொளி பரப்பித் திகழ, கன்னிகள் வந்து சேருமளவு நின்றிருந்து பிறகு 'அங்கநா மங்கநா மந்தரே மாதவ:' என்றபடி பல ரூப மெடுத்து, நடுவிலே குழலூதிநின்று ராஸக்ரீடை செய்தருளினபோது அச் சேர்த்தியிலுண்டான ஒரு பெருஞ் சோதிமண்டலத்தைக் கருதினதாகும். **பொருள் தாயம்.** உலகில் பிள்ளை பெற்றோர் எல்லோர்க்கும் தாயபாகம் ஈச்வரன் அளிப்பதொன்றுண்டு. அதாவது பெற்றோர் நரகமொன்று புகாததோடு குலத்தாரையு முத்தரிப்பதென்றதாம். இத்துடன் இங்கிருந்த காலம் பந்துக்கள் புகழ்வதும் பல புதிய பந்துக்களும் ஏற்பட்டு ஸந்தோஷமாக வாழ்வதும் தாயமாம். இவைகள் கிடைக்க வழியில்லை யிப்பிறப்பில் என்றபடி. **இங்கு**=இவ்வுலகில் என்னவுமாம். அப்போது கருத்தாவது முன் சொன்னவற்றில் பரலோகவிஷயமான தொருக்கால் இருக்கலாம். அது கண்ணுக்குத் தெரியாத விஷயம். இவ்வுலகிற் பெறவேண்டியவைகளில் ஒன்றும் பெற்றேனல்லேன். அவற்றிற்குப் பதிலாகப் பெருங் குற்றமே பெற்றிருக்கிறேன் என்றதாம்.

வேய்ங்குழலூதினபோது அவர்களே வந்தால் யானென்ன செய்வதென வேண்டா. நீயே அவர்களிடம் போய்ச் செய்தது முண்டே யென்று சொல்லி வருந்தி விலக்குகிறாள்—

8. **வாளாவாகிலுங்காணகில்லார் பிறர்மக்களை மையன்மைசெய்து**
**தோளாலிட்டவரோடு திளைத்து நீ சொல்லப்படாதன செய்தாய்**
**கேளாராயர்குலத்தவரிப்பழி கெட்டேன் வாழ்வில்லை நந்தன்**
**காளாயுன்னையறிந்துகொண்டேனுனக்கஞ்சுவனம்மந்தரவே.** (229)

| | |
|---|---|
| வாளா ஆகிலும் | ஒன்றும் செய்யாமலே இருக்கும் சமயத்தில் கூட |
| காண கில்லார் | உன்னைப் பார்க்கப் பிடிக்காதவர்களான |
| பிறர் | அயலாருடைய |
| மக்களை | பெண்களை |
| மையன்மை செய்து | மோகாந்தகாரத்திலே வைத்து |
| தோள் இட்டு | —தோளோடு தோள் கலந்து |
| அவரோடு திளைத்து | அப் பெண்களோடு விளையாடி |
| சொல்லப் படாதன | சொல்லக்கூடாத சிலவற்றை நீ செய்தாய். |
| ஆயர் குலத்தவர் | இடையரின் குலத்திற்குத் தக்கவாறுள்ளவர் |
| இ பழி | இந்த நிந்தையை |
| கேளார் | கேட்டிருக்க மாட்டார்கள். |
| கெட்டேன் | நன்மை பெற முடியாதபடி கெட்டு விட்டேன்; |
| வாழ்வு இல்லை | கௌரவமா யிருந்த வாழ்வும் போய்விட்டது. |
| நந்தன் | நந்தகோபரின் |
| காளாய் | ஆண் மகனே! |
| | உன்னை அறிந்து கொண்டேன். |
| | உனக்கு அம்மம் தர அஞ்சுவன். |

**காண கில்லா**ரென்றது வினையன்று. பிறர் என்பதோடு சேரும். **தோளால்** என்ற விடத்தில் **ஆல்** அசை. தோளால்=தோளினால் **இட்டு** அணைத்துக் கொண்டு எனவு முரைப்பர். **நந்தன்காளாய்** எனவே ப்ரஸித்தமான பாடம். நான்காமடி தொடக்கத்திலே முன் **செங்கீரையாடு**தலிற் சொன்ன பதங்களை யெல்லாம் ப்ரயோகித்துவரும் ஆழ்வார் அருளினபாடம் ஆளாவென்பதே எனவும் கூடும். மோனையின்பத்திற்கு இணங்கினது மிதுவே. ஆகையால் 'நந்தற் காளா' வென்ற பாடம் சிலர் கொண்டது முண்டாகில் கொள்க. அப்போது தாய்க்கும் தந்தைக்கும் ஆயர்குலத்திற்குத் தக்க விருப்பில்லை யென்று சொல்வது பொருந்தக் கூடியதானதாலே **நந்தற்கு** என்பதை **வாழ்வில்லை** யென்றதோடு சேர்க்கலாம். இப்படியெல்லோருக்கும் ஆளனே என மேலே சொன்னதாகும். நந்தற்கு ஆளா வெனச் சேர்ப்பது முண்டு. 'தெய்வத்தலைவனைப் போக்கினே னெல்லே பாவமே', 'கொடியேனென் பிள்ளையைப் போக்கினே னெல்லே பாவமே' என்ற விடங்களை நோக்குங்கால் மோனையின்பத்துக்கிணங்காமலும் ஆழ்வார் அருளிச்செய்வதறியலாகும். (அ)

எண்ணிறந்த ஆண்களும் பெண்களும் நிறைந்த விடைச்சேரியிலே இப்படி அவர்களின் கன்னிகளோடு கட்டிப் புரள வாய்ப்பதுண்டோ வென அவன் சொல்வதாக வைத்து, மேலே சொல்லி விலக்குகிறாள்—

9. **தாய்மார்மோர் விற்கப்போவர்தமப்பன்மார்கற்றுநிரைப்பின்புபோவர்**
**நீயாய்ப்பாடியிளங்கன்னிமார்களை நேர்படவே கொண்டுபோதி**
**காய்வார்க்கென்று முகப்பனவேசெய்து கண்டார் கழறத்திரியும்**
ஆயாவுன்னையறிந்துகொண்டேனுனக்கஞ்சுவனம்மந்தரவே. (230)

| | | | |
|---|---|---|---|
| தாய்மார் | கன்னிகளின் தாய்மா ரானவர் | | (இப்படி) |
| மோர் விற்க போவர் | (வெளியூரிலே) மோர் விற்று வரப் போவார்களே; | காய்வார்க்கு | (நீ கெட்டே போகவேண்டு மென்று உன்னை) வெறுத்திருப்பவர்க்கு |
| தமப்பன்மார் | - தந்தைகளும் | உகப்பன ஏ | இஷ்டமான இவ்வகைச் செயல்களையே |
| கன்று ஆ நிரை | கன்றுகளுடனுள்ள பசுக் கூட்டங்களின் | என்றும் | எப்போதும்—, |
| பின்பு போவர் | பின்னே (அவற்றை மேய்த்து வரப்) போவார் களே; (ஆக) நீ | கண்டார் | இவற்றைக்கண்ட உனது ஹிதைஷிகள் |
| நேர்பட ஏ | இப்படிச் சமயம் வாய்த்துச் சந்தித்ததாலே | கழற | இடித்துரைக்கும் போதும், |
| ஆய் பாடி இள கன்னி மார்களை | இடைச்சேரியிலுள்ள யௌவன முறும் பெண்களை | செய்து திரியும் | செய்துகொண்டு அச்சம் கூச்சமின்றி வெளியில் திரிந்து கொண்டிருக்கும் |
| கொண்டு போதி | நினைத்தவிடம் கொண்டு போகிறாய். | ஆயா | ஆயர் குலத்தானே! |
| | | | உன்னை அறிந்து கொண்டேன்; உனக்கு அம்மம் தர அஞ்சுவன். |

வீட்டில் கறந்து கடைந்தெடுத்த மோரை வீணாக்காமே தங்கள் விருத்திக்குத் தக்கபடி விற்றுவரப் பெண்டுகள் வெளியூர் போகவேண்டியதும் தவிர்க்கமுடியாதது. அவ்வண்ணம் பால் தரும் பசுக்களை மேய்ப்பது புருஷருக்குப் பொறுப்பான வேலை. அவர்கள் கூடவே சிறு பெண்களை அழைத்துப் போகக்கூடுமோ? வீட்டைக் காக்கவும் யாராவது வேண்டுமே. இப்படியிருக்க உனக்கு அவர் பெண்களோடு சேரத் தானே சமயம் வாய்க்கிறது. ஆகவே இப்படி நேர்படும் கன்னிகளைப் பார்த்தாக் கூடுகிறாய். வீட்டிலேயிருந்தால் வருவார் போவார் ஏதேனும் சொல்வர். மேலும் எல்லாக் கன்னி மார்களும் ஒன்று சேருவது அவ்விடத்தில் கூடாது. அதனால் எங்கேயோ ஏகாந்தமானவிடத்திற்குக் கொண்டுபோய்விடுகிறாயென முதலிரண்டடியின் கருத்து. **நேர்படுத**லாவது இவன் அவர்களைச் சந்தித்தல்; அவர்கள் சம்மதித்தலுமாம். நேர்பட என்றதற்கு 'நீ நினைத்தபடி' என வுமுரை செய்வர். (கூ)

அப் பெண்கள் தனித்தனியே பகலில் ஏதோ வேலையாக எங்கோ போயிருக்கலாம். நானு மெங்கேயோ போயிருப்பன். இப்படியிருக்க நீ ஏதாவது வேறாக நினைத்து உனக்கு ஒத்தாரிடம் ஏதேனும் சொல்வதும் அதைக் கேட்டுக் கண்டவரும் என்னைக் கழறுவதும் ந்யாயமோவென அவன் சொல்லுவதாக வைத்து, இரவு முழுவதும் ஒருத்தியோடிருந்ததை நினைவூட்டி விலக்குகிறாள்—

10. **தொத்தார் பூங்குழற் கன்னியொருத்தியைச் சோலைத்தடங்கொண்டுபுக்கு**
**முத்தார்கொங்கை புணர்ந்திரா நாழிகை மூவேழுசென்றபின் வந்தாய்**
**ஒத்தார்க்கொத்தன பேசுவருன்னை யுரப்பவே நானொன்று மாட்டேன்**
**அத்தாவுன்னையறிந்துகொண்டேனுனக் கஞ்சுவனம்மந்தரவே.** (231)

| | | | |
|---|---|---|---|
| தொத்து ஆர் | கொத்துக்கள் நிறைந்த | கன்னி ஒருத்தியை | ஒரு பெண்ணை |
| பூ குழல் | பூவை யணிந்த கூந்தல் உடைய | சோலை தடம் | சோலை சேர்ந்துள்ள ஸ்தலத்திற்கு |

| | |
|---|---|
| கொண்டு புக்கு | அழைத்துக்கொண்டு போய் அதனுள் நுழைந்து |
| முத்து ஆர் | ஹாரமாயுள்ள முத்துக்களாலே நேர்த்தியான |
| கொங்கை | அவளது தனங்களை |
| புணர்ந்து | சேர்ந்தணைத்துக் கொண்டு |
| இரா மூ ஏழு நாழிகை | ஓர் இரவாகிய மூன்று யாமங்களும் |
| சென்ற பின் | கழிந்த பிறகு |
| வந்தாய் | வந்தாயே. |
| ஒத்தார்க்கு | தங்களோடு மனம் ஒத்திருப்பவருக்கு |
| ஒத்தன | ஒப்புதற்குரியனவைகளை |
| பேசுவர் | பேசி வருவர் (உலகில் ஜனங்கள்). |
| | நான் உன்னை |
| ஒன்றும் | சிறிதும் |
| உரப்ப | அதட்டிப் பேச |
| மாட்டேன் | சக்தி யற்றவள். |
| அத்தா | தைவமே! |

உன்னை அறிந்து கொண்டேன். உனக்கு அம்மம் தர அஞ்சுவன்.

**கன்னியொருத்தியை.** அனேகம் கன்னிகைகள் இருப்ப, அங்கங்கே ஒருத்தி யென்று சொல்வதிலிருந்து கண்ணன் விசேஷித்துக் காதலுற்றிருந்தது அந்தக் கோபஸ்த்ரீகளில் ஒருத்தியை யென வேற்படுகிறது. அவள் நப்பின்னை யல்லள். ஏனெனில் நப்பின்னை கோகுலத்தில் வேறொரு வீட்டிலே யிருக்கும் கன்னிகையாகாள். (திருப்பாவையும் நோக்குக.) ஆக, 'ராதாமாதவயோர் ஜயந்தி யமுநாகூலே ரஹ:கேளய:' என்றபடி வட தேசத்தியர் விசேஷமாகக் கொண்டாடும் ராதையையே கருதி யிங்ஙனம் அருளிச்செய்திருக்கலாம். **சோலைத்தடம்.** மோனையின்பத்திற்கு இணங்க, தடஞ்சோலை யென்றே சொல்லவாயிருக்க, சோலைத்தடம் என்றதால் சோலை சேர்ந்து விளையாடுவதற்குத் தகுந்தபடி யமைந்துள்ள விடமெனப் பொருள் விளங்குகிறது. தடஞ் சோலை யென மாற்றிச் சோலை விசாலமாயிருப்பதாகவு முரைப்பர். **ஒத்தார்க்கு.** இங்கே பேசுவர் என்பதற்கு எழுவாய் ஜனங்களென்பது சொல்லாமலே விளங்கும். வேண்டு மென ஏதேனும் தூஷணமாக உலகம் சொல்வதென்றால், அவ்வண்ணம் தூஷிப்பதற்கே யிணங்கி யிருப்பவரிடமே அப்படிச் சொல்ல உலகம் முன் வருவது. என்னைப் போல் அபிமானமுள்ளவரிடம் அங்ஙனம் சொல்லாதென்ற படி. ஆகவே என்னிடம் ஏதாவது உன்னைப் பற்றிச் சொன்னார்களாகில், அது உண்மையாக நடந்ததேயா மலலது ஏறிட்டுச் சொன்னதாகாது. அதற்காக நான் உன்னைச் சிக்ஷிப்பது கிடையாது. உன்னைச் சிக்ஷிக்கும்படி எனக்குச் சக்தி தான் ஏது? அத்தா! நீ உண்மையிற் கடவுளல்லையோ. நீ என்னைப் பிடித்துக்கொண்டு அம்மம், அம்மம் என்று வருத்துவதாலே உன்னை விலக்க ஏதோ உன்னை எல்லோரும் தூஷித்துவரும் மாற்றத்தைச் சொன்னேன். தூஷித்ததற்காக விலக்கவில்லை. நீ ஸர்வசக்தனாய் ஸர்வர்க்கும் மேலான அத்தனானபடியாலே உண்மையில் உன் தன்மை உணர்ந்தே அம்மம் கொடுக்க வஞ்சியே இவ்வண்ணம் சொல்லுகிறேனென்றவாறு. (ம)

இப்படி யசோதைப் பிராட்டியின் பாவனையாலே யவனை விலக்கி ஆழ்வார் தம் தன்மையைப் பெற்று, இச் சொல்லை யிசையுடன் கற்றார்க்குப் பலன் அருளிச் செய்கிறார்—

11. கார்மேனிநிறத்தெம்பிரானைக் கடிகமழ்பூங்குழலாய்ச்சி
ஆராவின்னமுதுண்ணத்தருவன் நானம்மந்தாரே னென்னமாற்றம்
பாரார்தொல்புகழான்புதுவைமன்னன்பட்டர்பிரான் சொன்னபாடல்
ஏராரின்னிசைமாலை வல்லாரிருடீகேசனடியாரே. (232)

| | |
|---|---|
| கார் ஆர் | மேகத்தோடு பொருந்திய |
| மேனி நிறத்து | திருமேனியின் நிறமுடைய |
| எம் பிரானை | பகவானை (கண்ணனை) |
| கடி | வாசனை |
| கமழ் | வீசும் |
| பூ | பூவை யணிந்த |
| குழல் | கூந்தலையுடைய |
| ஆய்ச்சி | யசோதையானவள்—, |
| உண்ண | உண்ணுவதற்கு |
| ஆரா | த்ருப்தி பெற முடியாத |
| இன் | இனிய |
| அமுது | உயர்ந்த ஆஹாரத்தை |
| தருவன் | கொடுப்பேன்; நான் |
| அம்மம் | ஸ்தன்யம் |

| | |
|---|---|
| தாரேன் | கொடேன் |
| என்ற மாற்றம் | என்று சொன்ன வார்த்தையாயுள்ள, |
| பார் ஆர் தொல் புகழான் | பூமியில் நிறைந்த பழமையான கீர்த்தியுள்ளவனும் |
| புதுவை மன்னன் | ஸ்ரீ வில்லிபுத்தூருக்கு நிர்வாஹகனுமான |
| | பட்டர்பிரான் சொன்ன |
| பாடல் | பாட்டுக்களாகிய |
| ஏர் ஆர் | அழகு நிறைந்த |
| இசை மாலை | இசைத் தொடரை |
| வல்லார் | கற்றோர் |
| இருடீ கேசன் | ஹ்ருஷீகேசனுக்கு |
| அடியார் | அடிமை செய்பவராவர். |

எம்பெருமானைப் பிள்ளையாகப் பெற்றோமே யென்ற பெருமையினாலே யசோதைப் பிராட்டி அவனுக்குத் தாயாரென்னலாம்படி தன்னைச் சிறப்பாக அலங்கரித்துக்கொண்டு, நீர் கொண்ட மேகநிறம் கொண்டு நந்தகோகுலத்திலுள்ள ஸ்திரீ புருஷ ரெல்லோரையும் தனக்கு வசமாக்கிக்கொண்டு அவர்களுக்குத் தானே ஸகல புருஷார்த்தமாய் நின்ற கண்ணபிரானுக்கு அம்மமுண்ணும் வயது கடந்ததைக் கண்டு, இனி அம்மமில்லை, அதற்கும் மேலான ஆராதவமுத மளிக்கிறேன்; உண்ணென உரைத்ததை உரைக்கும் இப்பாசுரங்களின் இசையும் சுவையுமறிந்தோர் அவ்விடைச்சிகளின் ஸர்வேந்திரியங்களையும் தனக்கே வசமாக்கின அப் பெருமானுக்கு அடிமை செய்யும் பலனைப் பெறுவரெனப் பெரும்புகழராய் பரமைகாந்திச்ரேஷ்டருமான பெரியாழ்வார், தாம் சொல்வது உண்மையென ரூபிக்கைக்காகத் தமக்கு எம்பெருமான் அளித்த பெருமையை விளக்கி யிங்ஙனம் அருளிச் செய்தனர்.

**ஆராவின்னமுத முண்ணத்தருவன்** என்பதற்கு, த்ருப்தி பிறவாத ஸ்தன்யத்தை இதுவரையில் கொடுத்துவந்தேனென இறந்த காலப் பொருளை யேற்றி யுரை செய்வதுண்டு. (௰௧)

**ப்ரபந்தரக்ஷையில் தன்னேராயிரம் உரை முற்றிற்று.**

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

## பெரியாழ்வார் திருமொழி 3, 2.

# அஞ்சனவண்ணனை

இடைச்சேரியுள் எங்கும் திரிந்து எல்லோரையும் அறிந்து வர வயது வந்துள்ள கண்ணனுக்கு அம்மம் தருவதை நிறுத்திக்கொண்டு இனி இவனைக் கன்று மேய்க்க வெளியிலே அனுப்பலாமென்று தெளிந்து இப்படிச் செய்தால் ஊராரின் முறையீடும் ஒழியு மெனக் கருதி அவ்வண்ணமே செய்த யசோதை அந்நெடுங்காலம் அவனை விட்டுப் பிரிந்ததாலான ஆற்றாமையாலே பேசினதை யாழ்வாரனுபவித்தங்ஙனமே யருளிச் செய்து இனியராகிறார்—

1. அஞ்சனவண்ணனையாயர்கோலக்கொழுந்தினை
மஞ்சனமாட்டிமனைகடோறுந்திரியாமே
கஞ்சனைக்காய்ந்தகழலடி நோவக்கன்றின்பின்
என்செயப்பிள்ளையைப்போக்கினேனெல்லே பாவமே. (233)

| | | | |
|---|---|---|---|
| அஞ்சனம் வண்ணனை | மையின் நிறம்போன்ற நிறமுடையனும் | திரியாமே | அலையாதபடி, |
| ஆயர் கோலம் | இடையரின் வேஷம் பூண்டுள்ளவனும் | கஞ்சனை | கம்ஸனை |
| கொழுந்தினை | கொழுந்துமான | காய்ந்த | உதைத்த |
| பிள்ளையை | மகனை (கண்ணனை) | கழல் | தண்டை யணிந்த |
| மஞ்சனம் ஆட்டி | நீராட்டம் செய்து வைத்து (நான்) | அடி | திருவடிகள் |
| என் செய | என்ன செய்வதற்காக—, | நோவ | நோவு பெறும்படி |
| மனைகள் தோறும் | ஒவ்வொரு வீட்டிற்கும் (அவன்) | கன்றின் பின் போக்கினேன் | கன்றுகளைத் தொடர்ந்து போகச் செய்தேன். |
| | | எல்லே | கஷ்டம்; |
| | | பாவம் | பாபம். |

கண்ணன் அப்ராக்ருதமான திருமேனியுடைய னென்பது அந்த அஞ்ஜனவண்ண ரூபத்திலிருந்தே விளங்கும். ஆக அவனை இடைய னென்ன வொண்ணாது. இடையர் உடம்பில் தரிக்கின்ற சில வேஷங்களைத் தரிப்பது மாத்திரமுண்டு. அதிலும் கொழுந்தாயிருப்பதால் காலுக்குக் கழலிடுவது வரையிலான வேஷம் அதிகம். இதனாலே அவனை இடையனென்கிறது. கொழுந்து தானாகச் சிறுகச் சிறுகக் காற்றிலாடினால் அதற்கொரு வாட்டமும் வாராது. எவரேனு மொருவர் ஆட்டினால் கசங்கிவிடும். அதுபோல் இவன் தானாக மனைகள் தோறும் திரிவதில் ஒரு நோவுமிராது. கன்றின் பின் நான் போக்கினதால் வாட்டம் மிக்கதாம். நீரில்லாமல் நிலக்கொதிப்பினாலே வேரிலே வாட்ட முண்டாகில் அது கொழுந்திலே உடனே தெரியும். அது போல் நமக்கு ஏதேனும்

கஷ்டமுண்டாகில் அது அவன் முகத்திலே காண்கிறது. ஆகவே யன்றோ அவன் நமக்காகக் கஞ்சனைக் காலால் காய்ந்தது. அக் காலுக்கு நாம் ஏதேனும் உபசாரம் செய்யவேண்டி யிருக்கக் கன்றின் பின்னே நாமே போகவிடுவதோ? அதனால் மனத்துக்குக் கஷ்டம். இது மாத்திரமோ? இப்படி யவன்நோவைப் பார்க்காமே அவன்செய்த உபகாரத்திற்குப் பதிலாக அவனுக்கு மேலும் நோவுண்டாக்குவது மஹாபாபமுமாமென்றபடி.

**மனைகள்தோறும் திரியாமே.** அவன் மனைகளில் திரியவேண்டு மென்கிற கருத்துடையாளல்லள் இவள். கன்று மேய்க்கப்போகிறேன் என்று அவன் சொன்னபோது, இங்கே திரிந்து நாலுபேர் வாயில் அகப்படுவதை விட அதே மேலானதென நினைத்து மஞ்சனமாட்டி யனுப்பினாள். இப்போது பூராப் பகலும் அவனைக் காணாததிலுள்ள கஷ்டத்தாலே அவன் கன்றுமேய்க்கப் போவதை விட எல்லா மனைகளிலும் திரிந்தாலு மிதுவே மேலானதெனத் தீர்மானித்து இங்ஙனம் சொன்னதாம். **என் செய.** என்ன பலன் பெற? ஸுகமா? கஷ்டமா? அனுப்பாம லிருந்தாலே ஸுகமிருந்திருக்கு மென்றபடி. (க)

2. **பற்றுமஞ்சள்பூசிப் பாவைமாரோடுபாடியில்**
**சிற்றில்சிதைத் தெங்குந்தீமைசெய்து திரியாமே**
**கற்றுத்தூளியுடைவேடர் கானிடைக்கன்றின்பின்**
**எற்றுக்கென்பிள்ளையைப் போக்கினேன் எல்லே பாவமே.** (234)

| | |
|---|---|
| பற்று மஞ்சள் | -நிறமிடும் மஞ்சளை |
| பூசி | திருமேனி நிறம் பட நன்றாகப் பூசி (நான்) |
| பாடியில் | ஆய்ப்பாடியில் |
| பாவை மாரொடு | பெண்களோடு |
| சிற்றில் | விளையாட்டுக்காகச் செய்யும் வீடுகளை |
| சிதைத்து | அழித்து |
| தீமை செய்து | -தீம்பையே செய்துகொண்டு |
| எங்கும் | எல்லாவிடங்களிலும் |
| திரியாமே | அவன் திரிந்திராதபடி |
| என் பிள்ளையை | எனது அருமைப் பிள்ளையை |
| எற்றுக்கு | எதற்காக |
| கன்று தூளி உடை | கன்றுகள் கிளப்பிய தூள்களை யுடையதான |
| வேடர். கான் இடை | வேடர்களை யுடைய காட்டிற்குள்ளே |
| | கன்றின் பின் போக்கினேன். |
| | எல்லே பாவம். |

**பற்று மஞ்சள் பூசி.** நிறமேற்படுவதற்காகப் பற்றுகிற மஞ்சளைப் பூசுவது. பூசினது பாவைமார்களா, யசோதையா வென்னில், பாவைமார்களே தாங்கள் ஸ்நானம் செய்யும்போது இவனுடம்பிலே பூசிப் பற்றுப் பார்ப்பர்களென்பர். அப்போது **பூசி** என்ற வினையெச்சம் சேரத் தக்க வினைச் சொல் மேலில்லை. ஆக இதற்குப் பூசப்பட்டு எனப் பொருள் கொள்ளவேண்டும். இதனால் அவ்வளவு தண்மை பொருந்தி அவர்களோடு பழகுவது சொன்னதாம். முன்னே, மஞ்சனமாட்டி யென்றது போல் ‘பற்றுமஞ்சள் பூசி’ என்றதும் யசோதை செய்ததாகவே கூடும். அப்போது **பூசிப் போக்கினேன்** என்ற ஸ்வரஸமான அந்வயமே இருப்பது. யசோதை எதற்காகப் புருஷப்பிள்ளைக்கு மஞ்சள் பூசுவதென்னில், சிறுபிள்ளைகளுக்குப் பூசுவதுண்டென வேண்டும். மேலு மிவள்

தனக்குப் பெண் இல்லையென்கிற குறையினாலே பெண்கோலம் கண்ணனுக்குச் செய்வதுண்டாம். பாவைமாரொடு விளையாடவைக்க இவனையுமொரு பெண்ணாக்கி அதற்கேற்பவும் மஞ்சள் பூசுவதாம். இது கீழே 2—4—4, 1—3—15 1—2—6, பாசுரங்களில் இவனது சிறு பர்வத்திலேபோல, மேற்பர்வத்திலும் 3—2—4-ல், அருளிச்செய்யப் பட்டிருக்கிறது. இங்கு, 'குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும் மஞ்சளழகு மழகல்ல—கல்வி யழகே யழகு (நாலடியார். 14—1)' என்ற விடத்திற் போலாகு மென்கின்றனர். அங்கே மஞ்சள் என்பது ஒருவகை மெய்ப்பூச்சு. இது மஞ்சள்நிறம்பற்றி வந்த ஆகு பெயரென்க. இது மஞ்சள் மாட்டின பிறகு பூசப்படுவதுமாம். மஞ்சன மாட்டிக் காட்டிற்கனுப்பினதற்கு முன்னே வருந்தினாள். மஞ்சளைப் பூசித் தூள்களைப் படியவைத்ததற்கு இங்கே வருந்தினள்.

ஆய்ப்பாடியிலுள்ள சிறு பிள்ளைகளெல்லாரும் கன்று மேய்க்கப் பெரும் பாலாகப் போய்விடுவர். புருஷர்கள் மாடு மேய்க்கவும் வேறு பல தொழிலுக்காகவும் வெளியே போய்விடுவர். ஆக அங்கே ஸ்திரீகளே இருப்பாராகையால் ஒவ்வொரு பாசுரத்திலும் அனேகமாக ஸ்திரீகளையே சொல்லப்போகிறார். அவரில் சிறிய பெண்களை முதலில் நினைத்துச் **சிற்றில் சிதைத்து** இத்யாதியைச் சொன்னதாம்.

**கற்றுத்தூளி யுடை.** கூட்டம் கூட்டமாகக் குதித்தோடும் கன்றுகளால் வழிகளிற் போலே புல் நிறைந்த காட்டிலும் தூள்கள் அளவற்றுக் கிளம்பி எங்கும் பரவிவிடும். இப்படிப்பட்ட கானகத்திற்குப் பிள்ளையை யனுப்பினேனே. தூள் இராமலிருந்தால் திருடர்கள் வருவது தெரிந்தொளித்துக் கொள்வான். வேடத்திருடர்கள் இப்போது வருவது கூடத் தெரியாதே. என் செய்தானோ? பாவம். சிற்றில் சிதைத்தால் என்னிடம் வந்து சொல்வார்களேயல்லது அவனை யவர்கள் ஒன்றும் செய்யமுடியாது. வேடர்கள் கையிலகப்பட்டால் இங்ஙனம் நிர்பயமாய் இருக்கக்கூடுமோ வென்றஞ்சினள். (உ)

3. நன்மணிமேகலைநங்கைமாரொடு நாடோறும்
பொன்மணிமேனி புழுதியாடிததிரியாமே
கன்மணிநின்றதிர்கானதரிடைக்கன்றின்பின்
என்மணிவண்ணனைப் போக்கினேனெல்லேபாவமே. (235)

| | |
|---|---|
| நல் மணி | உயர்ந்த ரத்னங்கள் இழைத்த |
| மேகலை | ஒட்டியாணம் அணிந்த |
| நங்கை மாரொடு | குணவதியான பெண்களோடு |
| நாள் தொறும் | ப்ரதிதினம் |
| பொன் மணி | பொன்னும் மணியும் போன்ற |
| மேனி | திருமேனியிலே |
| புழுதி ஆடி | புழுதி முழுமையும் படியவைத்து |
| திரியாமே | திரியாதபடி, |
| கல் மணி | கற்களாகிற மணிகளாலே |
| நின்று | நெடுங்காலம் நின்று |
| அதிர் | சப்திக்கும் |
| கான் அதர் இடை | காட்டு வழியிலே |
| என் மணி வண்ணனை | மணியைப் போன்ற ஸ்வபாவமுள்ள என் மகனை |

கன்றின் பின் போக்கினேன்.
எல்லே பாவம்.

**நன்மணி**—நங்கைமாருடைய மேகலையிற் பொன்னும் மணியும் கலந்திருக்கும். இவன் திருமேனி பொன்னும் மணியுமாயுள்ளது. இத் திருமேனியின் நிழல்பட்டுத்தான் அம் மேகலையும் நன்மணியானது போலும். எம்பெருமான் திருமேனி ஹிரண்யவர்ணமாகவே நீல வர்ணமாயும் ப்ரஸித்தமானது. முன் சிற்றில் சிதைத்தது அப்பெண்கள் இவனோடு விளையாடச் சேராததாலாம். இவர்கள் தெளிவு பெற்ற நங்கைமார்களானதாலே கூடித் தெருவில் புழுதிபடிய ஆடித் திரிகிறார்களென்றபடி. **நாடோறும்**. ஒருநாள் காட்டிற்குப் போனதால் நாள்தோறும் இங்கே விளையாடித் திரிவதென்பது போயிற்றே யென்றது. **கன்மணி**. இங்கே மேகலையில் நல்மணிக்குப் பதிலாக அங்கே கானில் கல்மணிகள் தாமுண்டு. கல்லாவது மலை, அல்லது பெரும்பாறை. மேகலையில் கிண்கிணியோசை போக்யமா யிருக்கும். நாலு திக்கிலும் மணிகளைப் போலே இரைந்தொலிக்கும் பெருங்கற்கள் நிறைந்திருப்பதாலே ஒரு பக்கத்திலுண்டாம் சத்தத்திற்கு நாலு பக்கத்திலும் ப்ரதித்வனி உண்டாவதால் மிகவும் பயங்கரமா யிருக்குமதென்றபடி. சப்தம் முதலில் உண்டாவதெனெனில், கற்றுத்தூள் கிளம்பியதாலே கன்றுகளும், கூடப்போன தோழர்களு முள்ளவிடம் தெரியாமே கூவியழைப்பதாலும், காட்டிலுண்டாம் பல காரணங்களாலு மஃதுண்டாம். இங்கே **கன்மணி** இத்யாதிக்கு மணிக்கல் மணியாம் பருக்கைக்கல். அசையாமல் நின்று அதிர்ச்சி கொடுக்கும் பருக்கைக்கற்கள் நிறைந்த காட்டிலே யெனவும் பொருள் கொள்ளலாம். ஆனால் இது, ‘உடையுங் கடியனவூன்று வெம்பரற் களுடைக்கடிய வெங்கானிடை’ யென மேலே கூறப்படும்.

**என் மணிவண்ணனை**. மணியைப் போலே முன்தானையில் முடிபோட்டு வைத்துக் கொள்ளும்படி யிருப்பவனை; அல்லது கண்டாநாதம் போன்ற நாதமுள்ளவனாகையாலே மணிவண்ணனா யிருப்பவனை. இதனால் இவன் சப்திக்க இங்கே ப்ரதித்வனி யுண்டாகிறதென்றதாம். வண்ணமாவது ஸ்வபாவம். நீலமணி நிறம் பெற்றவனை யென்ற பொருள் **பொன்மணிமேனி** என இரண்டா மடியிலேயே சொல்லப் பெற்றதாகையாலே இங்கு இப் பொருள் கொண்டது. (௩)

4. **வண்ணக்கருங்குழல் மாதர்வந்தலர் தூற்றிடப்**
**பண்ணிப்பல செய்திப்பாடி யெங்குந்திரியாமே**
**கண்ணுக்கினியானைக்கானதரிடைக்கன்றின் பின்**
**எண்ணற்கரியானைப் போக்கினேனெல்லேபாவமே.** (236)

எண்ணற்கு — நினைப்பதற்கு
அரியானை — முடியாதவனும்
கண்ணுக்கு — கண்களுக்கு
இனியானை — போக்யனுமுள்ள கண்ணனை—,
வண்ணம் — நிறத்திலே
கரு குழல் — கருமை பொருந்திய கூந்தலையுடைய
மாதர் — பெண்மணிகள்
வந்து அலர் தூற்றிடப் பண்ணி — என்னிடம் வந்து ப்ரகாசமாய்ப் பழி கூறும்படி பண்ணி விட்டு
பல செய்து — (அந்த ஸமயத்திலே அவர் அகங்களிலேயே மேலும்) பல செய்துகொண்டு
இ பாடி — இந்த ஆய்ப்பாடியில்
எங்கும் திரியாமே கானதரிடை கன்றின் பின் போகினேன். எல்லே பாவமே.

**எண்ணற்கரியானை.** இன்னது செய்வான் இன்னது செய்யமாட்டானென நினைக்கமுடியாதவன். அன்றி, 'காட்டிற்குப் போனாலென்ன? அவனை மனத்தினால் த்யானம் செய்துகொள்ளலா' மென்றால் த்யானத்திற்கு வராதவன். ப்ரம்ம ருத்ராதிகளுக்கும் பரமயோகிகளுக்குங்கூட த்யானத்திற்கு அரியனானவன் கண்ணுக் கினியனாய் வந்தபோது கண்டு கொண்டே யிருப்பதா, காட்டிற்கனுப்புவதா? இராமாவதாரத்திலே தசரதர் சொல்லத் துணியவில்லை. நேர் தாயான நான் துணிந்தேன். எல்லே பாவம். இதைவிட யாராவது அலர் தூற்றினால் கூட இங்கே இருத்தல் நலமாயிருக்கும். ஏனெனில், காதினாலாவது அவனைக் கேட்கலாமே. ச்ரவணம் செய்துதானே மநநாதிகள் செய்யவேணும்.

ச்ரவணத்திற்கு முன்னே எம்பெருமானைத் தர்சிப்பது 'த்ரஷ்டவ்ய: ச்ரோதவ்ய:' என வேதத்தில் ஓதப்பட்டுள்ளது. நமக்கு அவனுடைய தர்சனம் தானே முன்னாகிறது. விபவத்தில் பார்க்க வியலாதார் அர்ச்சையில் பார்த்துப் பாபம் நீங்க, பிறகு ச்ரவணம் செய்வர். இப்படியும் அவ் வேதத்தின் உட்கருத்து போலும். **கருங்குழல்.** அவர்கள் குழல் நிறத்தைப் பார்க்கும் போதே கருநிறவண்ணனான கண்ணன் நினைவுக்கு வர, 'அவனைத் தூற்ற வருகிறார்கள். சந்தோஷம். கேட்போ' மென்றிருப்பேனே என்றபடி. (ச)

5. அவ்வவ்விடம் புக்கவ்வாயர் பெண்டிர்க்கணுக்கனாய்
கோவ்வைக் கனிவாய்கொடுத்துக் கூழைமை செய்யாமே
எவ்வுஞ்சிலையுடை வேடர்கானிடைக் கன்றின்பின்
தெய்வத்தலைவனைப் போக்கினேனெல்லே பாவமே. (237)

| | |
|---|---|
| அ அ இடம் | பெண்டிர் தனியாகவிருக்கும் அந்தந்த இடங்களில் |
| புக்கு | புகுந்து |
| அ ஆயர் பெண்டிர்க்கு | அந்த இடைப்பெண்களுக்கு |
| அணுக்கனாய் | நெருங்கிய சிநேகிதனாய் |
| கொவ்வை கனி | கொவ்வைப் பழம் போன்ற |
| வாய் | (தன்) திருப்பவளத்தை |
| கொடுத்து | அவர்களுக்கு அனுபவிக்க அளித்து |

| | |
|---|---|
| கூழைமை | விடாமல் பிடித்திருப்பதை |
| செய்யாமே | செய்துகொண்டிராதபடி |
| எவ்வும் | அம்பைச் செலுத்தும் |
| சிலை(யை) | வில்லை |
| உடை | உடைத்தாயிருக்கிற |
| வேடர் | வேடர்கள் இருக்கும் |
| கான் இடை | காட்டிலே |
| தெய்வம் தலைவனை | தேவ தேவனை |

கன்றின் பின் போக்கினேன் எல்லே பாவமே.

**அவ்வவ்விடம் புக்கு.** மச்சொடு மாளிகை யேறி மாதர்கள் தம்மிடம் புக்கு' (2—7—3.) என்றாற் போலுள்ள விடம் புகுந்து. **ஆயர் பெண்டிர்** ஆயரின் பெண்களுமாம், மனைவிகளுமாம். **கூழைமை** கூழையின் தன்மை. கூழை = சேறு. கூழைமை செய்வதாவது பேச்சாலும் செய்கையாலும் பரதந்த்ரனாயிருப்பதும் அவர்களைத் தன்னிலே ஆழங்கால்படச் செய்வதும். **எவ்வும்.** எவ்வமென்ற சொல்லுக்குத் துன்பம் பொருளானமையைக் கொண்டு இதற்குத் துன்பம் பயக்குமெனப் பொருள் கூறுவர். அம்பைச் செலுத்துவதென்ற பொருளிலே இது வழங்கப்படும். 'கவ்வுநீக்கணை மேருவைக் கால்வளைத் தெவ்

வினன்' (கம்ப ரா. சு. ஊர்தே. 177) என்றது காண்க. ஏவுதலே எவ்வுதலென்பது முண்டு. இது சிலை யென்பதோடும் வேடரென்பதோடும் சேரும். 'ஏ = பாணம். ஆக **எவ்வும்** ஏவும்: பாணத்தையும்' எனவு முரைப்பர். .... (௫)

6· மிடறுமெழுமெழுத்தோட வெண்ணெய்விழுங்கிப்போய்ப்
படிறுபலசெய்திப்பாடி யெங்குந்திரியாமே
கடிறுபலதிரிகானதரிடைக் கன்றின்பின்
இடறவென்பிள்ளையைப் போக்கினேனெல்லே பாவமே. (238)

| | |
|---|---|
| வெண்ணெய் | வெண்ணெயை; |
| மிடறு | கழுத்திலே |
| மெழு மெழுத்து | மெழுமெழு வென்று அது |
| ஓட | தடை யின்றி ஓடுவதால் |
| விழுங்கி | புசிப்பது தெரியாதபடி விழுங்கிவிட்டு |
| போய் | வேறிடம் சென்று |
| பல படிறு | பலவிதமான வஞ்சகங்களை |
| செய்து | செய்துகொண்டு |
| இ பாடி எங்கும் | இந்த வாய்ப்பாடி முழுதும் |
| திரியாமே | திரிந்து கொண்டே யிராதபடி, |
| பல கடிறு | பல (களிறு) யானைகள். |
| திரி கான் அதர் இடை | திரியும் காட்டு வழியிலே |
| இடற | தடைபட்டுக்கொண்டேசெல்ல |

கன்றின் பின் என் பிள்ளையை போக்கினேன். எல்லே பாவம்.

மற்ற பக்ஷ்யபோஜ்யங்களைப் போலே கடித்து மென்று விழுங்கவேண்டும்படி யிராததால் வெண்ணெயை யெடுத்தது தெரியாமே வேகமாய் விழுங்கி, வெவ்வேறிடம் புகுந்துகொண்டு இங்ஙனம் களவுத் தொழிலின்றி எத்தனையோ வஞ்சகமான வேலைகளையும் செய்துகொண்டு திருவாய்ப்பாடி முழுதும் திரிந்திருந்தால் கூட எனக்கு நலமாயிருக்குமே. களிறுகள் மதம் பிடித்துத் திரியும் காட்டிற்கு அனுப்பிவிட்டேனே யென்கிறாள். **கடிறு**. களிறு. ளகரத்திற்குப் பதிலாக டகரம் எதுகைக்காக வந்தது. வடமொழியிலும் இதுண்டு. (௬)

7. வள்ளிநுடங்கிடைமாதர் வந்தலர்தூற்றிடத்
துள்ளிவிளையாடித்தோழரோடு திரியாமே
கள்ளி யுணங்குவெங்கானதரிடைக்கன்றின்பின்
புள்ளின்தலைவனைப்போக்கினேனெல்லே பாவமே. (239)

| | |
|---|---|
| வள்ளி | (வல்லி) கொடிபோலே |
| நுடங்கு | வளைதலுறும் |
| இடை | இடையையுடைய |
| மாதர் | பெண் மணிகள் |
| வந்து அலர் தூற்றிட | வந்து பகிரங்கமாய்ப் பழிகளைப் பேச |
| தோழரோடு | சினேகிதரான பிள்ளைகளோடு சேர்ந்து |
| துள்ளி விளையாடி | குதித்து விளையாடிக் கொண்டு |
| திரியாமே | திரியாதபடி, |
| கள்ளி | கள்ளிச் செடிகள் கூட |
| உணங்கு | உலர்ந்துவிடும்படியான |
| வெம் | உஷ்ணத்தை யுடைய |
| கான் அதர் இடை | காட்டு வழியிலே |
| புள்ளின் தலைவனை | பக்ஷியின் (பெரிய திருவடியின்) மேல் இருப்பவனை |

கன்றின் பின் போக்கினேன். எல்லே பாவம்.

**வள்ளிநுடங்கிடை**யென்று மாதர்கள் அலர்தூற்றவரும் வேகத்தைக் குறித்தபடி. 'அவன் எங்கேயோ யிருக்கிறானே. இம் மாதர்களிடத்திற்குச் சென்றிருப்பானோ' வென நினைக்கும்படியும், தூற்றவதை யுகந்தும் துள்ளியோடு

கிறவன் இவன். **தோழர்களோடு.** தனியாக விளையாடினால் தூற்ற வாரார் போலும். தூற்றிடும்படி இவர்களோடு விளையாடின பிறகு தோழர்களோடு சேருவதுமாம். **புள்ளின் தலைவனை.** இவனேறிப்போம்போது இவன்வாஹனம்கூட அக் காட்டில் நடக்கவொண்ணாது. ஆக நடக்கும் வாஹனத்தில் ஏறிப்போகமுடியாத காட்டில் கால் நடையாக நடக்கச் செய்தேனே என்றனள். புள்ளுக்கு இனிமையான தலைவன் புள்ளின் தலைவனென்னலுமாம். (எ)

8. **பன்னிருதிங்கள் வயிற்றிற்கொண்டவப்பாங்கினால்**
**என்னிளங்கொங்கையமுதமூட்டியெடுத்தியான்**
**பொன்னடிநோவப்புலரியே கானிற்கன்றின்பின்**
**என்னிளஞ்சிங்கத்தைப் போக்கினேனெல்லே பாவமே.** (240)

| | | | |
|---|---|---|---|
| பன்னிரு திங்கள் | பன்னிரண்டு மாதக் காலம் | என் இள சிங்கத்தை | சிங்கக்குட்டி போலே கொழுத்து வளர்ந்த எனது சின்னஞ்சிறு பிள்ளையை (இப்போது) |
| வயிற்றில் கொண்ட | கர்ப்பத்திலே வைத்து வளர்த்ததால் வந்த | பொன் | பளபளப்பான |
| அ பாங்கினால் | —அந்த இணக்கத்தாலே | அடி | பாதங்கள் |
| யான் | நான் | நோவ | நொந்து வாடும்படி |
| என் இள கொங்கை அமுதம் | எனது இளமை பொருந்திய முலையின் பாலை | புலரி ஏ | விடியற் காலமே |
| ஊட்டி எடுத்து | ஊட்டி மருங்கில் வைத்துக் கொண்டேயிருந்து | கானில் | காட்டிலே |
| | | | கன்றின் பின் போக்கினேன். எல்லே பாவம். |

**பன்னிரண்டி**த்யாதி. இராமபிரானைப் போலே கண்ணபிரானும் பன்னிரண்டு மாதம் கர்ப்பவாஸம் செய்தது இதனால் விளங்கும்போலும். யசோதையின் வயிற்றில் இவன் பிறக்காமலிருக்க இங்ஙனம் அவள் கூறக்கூடுமோவென்னில், இவன் ஒருத்திமகனாய்ப் பிறந்து வந்து இவளிடம் ஒளிர்த்து வளருவதறியாமே தன் வயிற்றிலே பிறந்த குழந்தை இவன் தான் என்கிற எண்ணத்தினால் இங்ஙனம் சொல்லக்கூடும். இவ் வஞ்சனவண்ணனை இப்படி யாழ்வாராக அவதரித்துள்ள வாய்ச்சி தாலாட்டினது முதலியன செய்யும்போதே ‘தேவகி சிங்கமே தாலேலோ’ என்றவாறு பலபடியில் வசுதேவர் தம்முடைய சித்தம் பிரியாத தேவகி தன் வயிற்றில் தோன்றினவனைத் தெளிந்திருக்க, அறியாமே சொன்னாளென்பதெங்ஙனமெனில்—அப்போது, ‘உண்மையில் ஒருத்தி பன்னிரு திங்கள் வயிற்றிற்கொண்டிருந்தால் எவ்வளவு உரிமையும் இணக்கமுமவளுக்கு அக் குழந்தையினிடம் இருக்குமோ, அவ்வளவில் எள்ளளவும் குறையாமே’ என முதலடிக்குக் கருத்தாகுக. ஆகவே, ‘கொண்ட பாங்கினால்’ என்னாமே, **கொண்டவப் பாங்கினால்** என்றது. இப்போது இராமனைப் பெற்ற கௌஸல்யா தேவிக் குண்டான அவ்வளவுரிமையோடு தான் வளர்த்ததையே சொல்வதாகுமாகையாலே கண்ணபிரானும் பன்னிரண்டு மாதம் கழித்துப் பிறந்தது தேறமாட்டாது. **இளங்கொங்கை.** பால் நிறைந்துள்ளபோது கொங்கை, இளம் பருவத்திலே வளர்ந்துவராநிற்கும் கொங்கை போல் தளராமலிருக்குமாகையாலே இங்ஙனம் சொன்னதாம். இதனால் வேறு ஆஹாரம் வேண்டாதபடி

இதைக் கொண்டே வளர்த்ததுரைத்ததாம். 'பிள்ளை யொரு முலை யுண்ணும் போது மற்றொரு முலையை நெருடும். அப்போது வரக்கென்றிராமே குழைந் திருந்தமையை விளக்க இளங்கொங்கை யென்ற' தெனவும் கூறுவர். எடுத்து யான் **எடுத்தியான்.** குற்றியல் உகரமானது யகரம் மேல் வரும்போது இய்யாம். **புலரி.** விடியல். (அ)

9. **குடையுஞ்செருப்புங்கொடாதே தாமோதரனை நான்**
**உடையுங்கடியன வூன்றுவெம் பரற்களுடை**
**கடியவெங்கானிடைக்காலடி நோவக்கன்றின் பின்**
**கொடியேனென்பிள்ளையைப் போக்கினேனெல்லே பாவமே.** (241)

| | |
|---|---|
| கொடியேன் நான் | க்ரூரையான நான் |
| தாமோதரனை | தாமோதரனை என் பிள்ளையை |
| உடையும் | வெப்பம் தாங்காமே அவ்வப் போது உடைந்துவரும் (ஆகவே) |
| கடியன | கூர்மையான |
| ஊன்று | உறுத்துகின்ற |
| வெம் | உஷ்ணமான |
| பரற்கள் | பருக்கைக் கற்களை |
| உடை | உடைத்தானதும் |
| கடிய | கடினமானதும் |
| வெம் | சூர்யவெப்பத்தால் உஷ்ண மானதுமாயுள்ள |
| கான் இடை | காட்டிலே |
| காலடி | உள்ளங்கால் |

நோவக் குடையும் செருப்பும் கொடாதே பொக்கினேன். எல்லே பாவம்.

'குடையும் செருப்புங் கொடாதே' என்றதென்? 'போக்கினேன்' என்றே பாசுரந்தோறும் சொல்வதால் இவளே அனுப்பியிருப்பது தெளிவாகை யாலே அவற்றையும் கொடுத்திருக்கலாமே யென்னில், முதலில் ஜாதி குலாசாரப் படி வாழ்வுகந்து அனுப்பவேண்டி யிருந்தும் பிள்ளையைக் கால் நோவ அனுப்ப மனம் வராமலே சில நாள் கழித்தாள். அவன் போகவேண்டு மென்றே யிருந் தான். 'ஊரில் எங்குந் திரிந்து தீமை செய்தவண்ண மிருந்தால் அதைச் சகிக் காமே அனுப்பி விடுவள்' என்று கொண்டு அதை அதிகமாகச் செய்து வந்தான். மாதரெல்லோரும் வந்து அலர் தூற்றினர். அப்போது, 'நான் புருஷப்பிள்ளைக ளோடல்லவோ விளையாடுகிறதெல்லாம்' என்று சொல்வதற்காகச் சில தோழர் களையும் எங்கும் போகாமே கூடவே யிருக்கும்படி ஏற்படுத்திக் கொண்டான். இனி இவனைக் கன்று மேய்க்க அனுப்பித்தானுகவேண்டுமெனத் தீர்மானித்து அதையும் சொல்லி விட்டாள். முதன்முதல் அனுப்பும்போது புதுக்குடையும் புதுச்செருப்பும் கொடுத்தனுப்ப நினைத்து அவற்றை வாங்கித்தர ஏற்பாடு செய்த னள். அவனுக்கிருந்த உத்சாஹத்திலே அவ்வளவு பொறுக்காமலே இவன் தான் உகந்த குடை முதலியனவற்றைக் கூட விட்டோடிவிட்டான். இது மேற்றிருமொழியில், 'நீயுகக்கும் குடையுஞ் செருப்புங்குழலுந் **தருவிக்கக்** கொள்ளாதே போனுய்' என்றதால் விளக்கமாம். இப்படி யவன் செய்யும் தீமைகளைப் பொறுக்கமாட்டாமே அனுப்பினதால் தான், 'அவற்றைக் கூடப் பொறுக்கலாமே. கானத்தில் திரியும்போது அவனுக்குண்டாம் கஷ்டத்தை நினைத்தால் பொறுக்கமுடியவில்லையே' யென்று கீழ்ப் பாட்டுக்களிலே சொன்

னாள். இப்படிப் பெண்களை விட்டுப் பிள்ளைகளோடு திரியும் வரையிலான தீம்புகளைச் சொல்லி அவற்றை நிறுத்திக்கொண்டு, தான் முதன்முதல் எக்காரணத்தினால் அனுப்ப இஷ்டப்படாமலிருந்தனளோ அதனை, 'இடுப்பிலிருந்து இறக்காமலே வளர்த்த பிள்ளையை எப்படி யனுப்புவ' தென்று முன் பாசுரத்திலே சொன்னாள். இப் பாசுரத்திலே, அவன்தான் தாமோதரனாயிற்றே. அவன் என்னிடம் கட்டுண்டதுண்டே. ஆக வெளியில் தீம்பு செய்கிறானென்ற போதே கட்டிப்போட்டிருந்தால், அனுப்பவேண்டுமென்று தோன்றினபோது குடையும் செருப்பும் கொடுத்துக் கட்டை யவிழ்த்து அனுப்பியிருக்கலாமே யென்கிறாள். **வெம்பரற்கள், வெம்கான்** என்றதால் நகம் முதல் நடுத்தலை வரையில் வெப்பத்தின் பாதை சொன்னதாம். குடை வெம்மையை விலக்கும். செருப்பு, கீழ் வெம்மையையும் பரலூன்றுதல் போன்றனவற்றையும் விலக்கும். (௯)

**10.** **என்றுமெனக்கினியானை யென்மணிவண்ணனைக்**
**கன்றின்பின்போக்கினேனென்றசோதைகழறிய**
**பொன்றிகழ்மாடப்புதுவையர்கோன் பட்டன்சொல்**
**இன்றமிழ்மாலைகள் வல்லவர்க்கிடரில்லையே.** (242)

| | |
|---|---|
| என்றும் | எப்போதும் |
| எனக்கு இனியானை | எனக்கு இனிப்பாயுள்ள |
| என் மணி வண்ணனை | நீலமணி வர்ணனான எனது மகனை |
| கன்றின் பின் போக்கினேன் என்ற அசோதை | |
| கழறிய | சொன்ன விஷயத்திலே பிறந்த |
| பொன் | பொன் மயமாய் |
| திகழ் | விளங்குகின்ற |
| மாடம் | உப்பரிகைகளையுடைய |
| புதுவையர் | ஸ்ரீவில்லிபுத்தூரில் வஸிப்பவருக்கு |
| கோன் | ஸ்வாமியான |
| பட்டன் | பட்டநாதனுடைய (பெரியாழ்வாருடைய) |
| சொல் | சொற்களாயும் |
| இன் | இனியனவாயும் |
| தமிழ் | தமிழ் பாஷையிலுள்ளனவுமான |
| மாலைகள் | பாசுரங்களை |
| வல்லவர்க்கு | கற்றவர்க்கு |
| இடர் இல்லை | துன்பமில்லை. |

**என்றும்.** தீம்புசெய்யாத காலத்தோடு தீம்புசெய்த காலத்தோடு (குடையும் செருப்பும் பெறாதேயோடின காலத்தோடுகூட) வாசியற எப்போதும் இனியான் என்றதாம். **என்றும்** என்றதற்கு **இனியானை** என்றதோடும், **இடரில்லையே** என்றதோடும் அந்வயம் கொள்க. (௰)

**ப்ரபந்தரக்ஷையில் 3, 2 அஞ்சனவண்ணனை யுரை முற்றிற்று.**

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

## பெரியாழ்வார் திருமொழி 3. 3.

# சீலைக் குதம்பை.

கண்ணபிரானைக் கன்று மேய்க்கக் கானத்திற்கு அனுப்பிய வசோதை பகல் முழுதும் அவனைப் பிரிந்த வாற்றாமையாலே பலபடி பேசிப் போதைக் கழித்ததைக் கீழே யருளிச்செய்து, மாலையில் அவன் திரும்பி வரும்போதே பார்க்கப் பேராவல் கொண்டு வீட்டிற்கு வெளியே வந்து நின்று அவன் வருவதைக் கண்டு அவள் அநுபவித்துச் சொன்னதை யருளிச்செய்கினிய ராகிறார் இத்திருமொழியில்—

1. **சீலைக்குதம்பையொருகாதொருகாது செந்நிறமேற்றோன்றிப்பூ
கோலப்பணைக்கச்சுங்கூறையுடையுங் குளிர்முத்தின்கோடாலமும்
காலிப்பின்னே வருகின்ற கடல்வண்ணன் வேடத்தை வந்துகாணீர்
ஞாலத்துப்புத்திரனைப் பெற்றார்நங்கைமீர் நானேமற்றாருமில்லை. (243)**

| | |
|---|---|
| நங்கை மீர் | பெண்மணிகளே! |
| காலி பின்னே வருகின்ற | பசுக்கூட்டத்தின் பின்னாக வந்துகொண்டிருக்கிற |
| கடல் வண்ணன் | சமுத்திரத்தின் நிறமுடைய கண்ணனின் |
| ஒரு காது | ஒரு காதில் |
| சீலை குதம்பை | துணியால் செய்யப்பெற்ற தக்கையும், |
| ஒரு காது | மற்றொரு காதில் |
| செம் நிறம் ஏல் தோன்றிப் பூ | சிவப்பு நிறம் பொருந்திய காந்தள் பூவும், |
| கோலம் | அலங்காரமாய் |
| பணை | அகன்றுமுள்ள |
| கச்சு உம் | உடை விழாமைக்குக் கட்டும் கச்சுப்பட்டையும், |
| கூறை உடை உம் | வஸ்திர உடுப்பும், |
| குளிர் | குளிர்ந்த |
| முத்தின் | முத்துக்களாலான |
| கோடு | வளைந்த |
| ஆலமும் | ஹாரமுமாகிய |
| வேடத்தை | வேஷத்தை |
| வந்து காணீர் | இங்கே வந்து பாருங்கள்; |
| ஞாலத்து | பூவுலகில் |
| புத்திரனை | உயர்ந்த பிள்ளையை |
| பெற்றார் | பெற்றிருப்பவர் |
| மற்று ஆரும் இல்லை | வேறு யாருமில்லை. |
| நான் ஏ | நான் ஒருத்தியே புத்திரனைப் பெற்றவள். |

கண்ணபிரான் கன்றுகளை மேய்த்துவிட்டு மாலையிலே அவற்றை முன்னே ஓட்டிக்கொண்டு பின்னே வரும்போது, போகும் போதவள் இட்டதும் புதியதுமாக வொரு வேஷத்துடன் வருவதைக் கண்டுகந்து, தானொருத்தியாய் நின்றனுபவித்தலில் த்ருப்தி பெறாமே, 'ஏகஸ் ஸ்வாது ந புஞ்ஜீத' என்கிற ந்யாயமாய், அங்கங்கே நின்றிருந்த நங்கைமார்களைத் தனக்கருகே அழைத்து அனுபவித்து அவ் வனுபவபரிவாஹமாகப் பேசிப் போந்ததைச் சொல்வது இப் பாசுரம். மேற்பாசுரங்கள் அவனையே கூவியழைத்துச் சொன்னவற்றைச் சொல்வனவாம்.

**குதம்பை.** காதில் இடும் தக்கை அணியுமாம். இது காது பெருகுவதற்காகச் சீலையால் செய்து யசோதையே யிட்டதென்பர். அவனே சாத்திக்கொண்டது மேற்சொல்லிய பூவாம். **செங்கிறமேல்.** இங்கே செங்கிறம் மேல் தோன்றிப்பூ எனப் பிரிப்பர். தோன்றியெனவே காந்தள்பூவுக்குப் பெயர். ஆக **மேல்** தோன்றி என்றதென்னெனக் கொண்டு பதவுரையில் வேறு விதம் கூறினது. **மேல்**= மேன்மை பொருந்திய என்றவாறுவது கொள்க. முதலிரண்டடியும் வேடமென்றதோடு இயைவது யுக்தமாம். **ஆலம்** ஹாரம். **ஆர**மென்ற பாடமு முண்டென்பர். **காலிப் பின்.** கன்றைக் காலி யென்றது ஒரே ஜாதியாகையாலென்பர். ஒரு நாள் கண்ணன் மேய்த்ததிலேயே கன்று காலியாய் வளர்ந்தவாறு தோற்றிற்றுப் போலும். **ஞாலத்து.** ஞாலத்தில் எனவும் பாடமாம். (க)

வெகு தூரத்திலே பார்த்தபோது நங்கைமார்களை யழைத்துக் காண்பித்துவிட்டு, கண்ணன் கொஞ்சம் கிட்டினபோது அவனைக் கூவி யழைத்தணைத்துச் சொல்லும் பாசுரம்—

2. **கன்னிநன்மாமதிள்சூழ்தருபூம்பொழிற் காவிரித்தென்னரங்கம்**
**மன்னியசீர்மதுசூதனாகேசவா பாவியேன்வாழ்வுகந்து**
**உன்னையிளங்கன்றுமேய்க்கச்சிறுகாலேயூட்டியொருப்படுத்தேன்**
**என்னில்மனம்வலியாளொருபெண்ணில்லை யென்குட்டனே முத்தந்தா. (244)**

| | |
|---|---|
| கன்னி | அழிவில்லாத |
| நல் | நன்மை பொருந்திய |
| மா | பெரிய |
| மதிள் | ப்ராகாரங்களாலே |
| சூழ் தரு | சூழப்பட்டும் |
| பூ பொழில் | பூஞ்சோலைகள் உள்ளதும் |
| காவிரி | வட திருக்காவிரிக்கு |
| தென் | தெற்கிலுள்ளதுமான |
| அரங்கம் | திருவரங்கத்திலே |
| மன்னிய | நிலைபெற்ற |
| சீர் மது சூதனா | கல்யாணகுணங்கள் பொருந்திய மதுசூதனனே! |
| கேசவா | ப்ரம்மருத்ர ஸ்வாமியே! |
| பாவியேன் | பாவம் செய்த நான் |
| வாழ்வு | ஜாதித் தொழிலை |
| உகந்து | பெரிதாக அபிமானித்து |
| உன்னை | |
| சிறு கால் ஏ | விடியற்காலத்திலேயே |
| ஊட்டி | உண்ண வைத்து |
| இள கன்று | சிறு கன்றுகளை |
| மேய்க்க ஒருப் படுத்தேன் | மேய்த்துவரச் சம்மதிக்கச் செய்தேன். |
| என்னில் | என்னை விட |
| மனம் வலியாள் | நெஞ்சுரப் புள்ளவள் |
| ஒரு பெண் | பெண் ஜாதியிலே யொருத்தி கூட இல்லை. |
| என் குட்டனே | எனது மகனே! |
| முத்தம் தா | எனக்கு முத்தம் கொடு. |

**கன்னி.** அழிவின்மை. கற்களாலே திடமாகக் கட்டப்பட்ட வென்றதாம். **தென்.** புதுவைக்குத் திருவரங்கம் தெற்கிலில்லையாகிலும் வடதிருக் காவிரிக்குத் தெற்கிலுள்ளதால் **காவிரித்தென்** என்றது. இதே பழமையானது. தெற்கிலுள்ள காவிரி பிற்காலத்தில் சோழவரசன் பிரித்துண்டாக்கின கிளையாம். **தென்** அழகிய என்னலுமாம். **அரங்கம்.** கண்ணன் வெகு தூரத்திலிருந்து வரும்போது ஸ்ரீரங்கத்திலிருந்து வருகிறதாகப் பாவித்தனள் போலும். நீ ஸர்வேச்வரனாயிருந்து பள்ளி கொண்டே திருவரங்கத்தில் ஸர்வரக்ஷணகுணபரிபூர்ணனாய் விளங்கா நிற்கிறாய். ப்ரளய ஸமுத்ரத்தில் ஸ்ரீஹயக்ரீவனாயிருந்து மதுகைடபஸம்ஹாரம் செய்த போதும் ப்ரம்மருத்ரர்களை ஸ்ருஷ்டித்தபோதும்

அரவணையில் இங்ஙனமே பள்ளி கொண்டிருந்தாய். இப்படி இருக்கவேண்டிய உன்னைக் கானமெல்லாம் திரியச்செய்த பாவியேனென்றபடி. **வாழ்வுகந்து.** அவதார புருஷனுன வுனக்கு ஜாதி ஏது? எனது ஜாதியை உன் மேலேறிட்ட பாவியேன் நான் என்றதாம். **இளங்கன்று.** புல்லைப் பறித்துக் கசக்கித் தீத்தும்படியான இளமையைச் சொன்னதென்பர். பசுவின் இளங்கன்றுகள் ஓரிடத்தில் நிற்காமல் எங்கும் குதித்தோடினபடியிருக்குமாகையாலே அவற்றை ஒன்றுசேர்த்து மேய்ப்பதில் அலைத்தல் அதிகமென்றதுமாம். **ஒருப்படுத்தேன்.** எதிர் மறையிங்கே பொருந்தாதாகையாலே உடன்பாட்டேயாம். ஒருப்படுதல் ஒருமனப்படுதல். இங்கு ஒருப்படுத்தலெனவேண்டுகையாலே ஸம்மதிக்கச் செய்தேன் எனப் பொருளாம். இல்லையேல் ஒருப்படேன் ஒருப்பட்டேன் எனவாம். ஊரிலேயே விளையாடிக் கொண்டிருக்க விருந்த வுன்னை வாழ்வை நினைத்து இதைச் சம்மதிக்கச் செய்தேன் என்றபடி. தன்னைப் பாவியாக நினைத்த விவளுக்குத் தானே பலாத்காரமாய் அனுப்பினதாகப் பாவமிருந்தது. **முத்தந்தா** வென்றதால், அவன் நெருங்கி வந்ததும் இவள் அணைத்துக்கொண்டதும் தோற்றுகின்றன— **சூழ்தரு.** தருவென்றது துணைவினை. (உ)

'சிறுகாலே யூட்டி' என்றவளுக்கு உடனே உண்ணச் செய்யவேண்டுமென்று தோன்றினதால், நீராடாமே உண்பது கூடாதாகையால் அதனைச் செய்துண்ண வழைக்கிருள்.

3. **காடுகளூடுபோய்க்கன்றுகள் மேய்த்துமறியோடி, கார்க்கோடற்பூச்**
**சூடிவருகின்றதாமோதரா கற்றுத்தூளிகாணுன்னுடம்பு**
**பேடைமயிற்சாயற்பின்னைமணாளா நீராட்டமைத்துவைத்தேன்**
**ஆடியமுதுசெய்யப்பனுமுண்டிலனுன்னோடுடனே யுண்பான். (245)**

| | |
|---|---|
| காடுகள் ஊடு | காடுகளின் உள்ளே |
| போய் | அங்கு மிங்கு மலைந்து கன்றுகள் மேய்த்து |
| மறி ஓடி | (மாலையில் மேய்வதிலிருந்து) மறிக்கைக்காக வோடி |
| கார் கோடல் பூ சூடி | நடுவே பெரிய வெண்காந்தள் பூவைப் பறித்துச் சூட்டிக் கொண்டு |
| வருகின்ற தாமோதரா! | |
| உன் உடம்பு | உனது திருமேனி முழுதும் |
| கன்று தூளி | கன்றுகளால் கிளப்பப்பட்ட தூளியாகவே யிருக்கிறது. |
| பேடை மயில் | பெண் மயிலின் |
| சாயல் | சாயலை யுடைய |

| | |
|---|---|
| பின்னை | நப்பினனைக்கு |
| மணாளா | மணவாளனே ! |
| நீராட்டு | ஸ்நானத்திற்கு வேண்டுவன |
| அமைத்து வைத்தேன் | சேர்த்து வைத்து விட்டேன். |
| ஆடி | நீராடி |
| அமுது செய் | உண்பாயாக; |
| அப்பனும்-உனது தகப்பனும் | |
| உன்னோடு உடனே உண்பான் | உனனோடே சேர்ந்தேயுண்பதற்காக |
| உண்டிலன் | புசிக்கவில்லை. |

**மறியோடி.** மறிக்கை = கண்ட விடம் போகாதபடி மேயவேண்டுமிடத்திலே திருப்புகை யெனக் கொள்வதுமுண்டு. மறியோடி கன்றுகள் மேய்த்து எனவும் அந்வயம் கூறுவர். மேய்த்த பிறகு வீட்டிற்குத் திருப்புகையும் மறிக்கையாம். **கற்றுத்தூளி காண் உன் உடம்பு.** உடம்பே தெரியாதபடி தூளி

யெங்கும் பரவ, தூளியே காணப்படுவதால் இங்ஙனம் அதுவே இது என்றது. **பின்னை மணாளா.** நீராடினால் இரவில் நப்பின்னைக்கும் போக்யமாயிருக்கு மெனக் கருத்தாம். **உண்பான்** பான் வினையெச்ச விகுதி. (௩)

4. **கடியார்பொழிலணிவேங்கடவாகரும்போரேறே, நீயுகக்குங்**
**குடையுஞ்செருப்புங்குழலுந் தருவிக்கக்கொள்ளாதே போனாய்மாலே**
**கடியவெங்கானிடைக்கன்றின் பின்போனசிறுக்குட்டச்செங்கமல**
**வடியும் வெதும்பியுன்கண்கள் சிவந்தாயசைந்திட்டாய் நீயெம்பிரான்!** (246)

| | |
|---|---|
| கடி | பரிமளம் |
| ஆர் | நிறைந்த |
| பொழில் | சோலைகளாலே |
| அணி | அழகான |
| வேங்கடவா | திருவேங்கடத்தில் நின்றவனே ! |
| கரு போர் ஏறே | யுத்தம் புரியும் கரிய விருடபமே! |
| மாலே | வ்யாமோஹ முள்ளவனே! |
| நீ உகக்கும் | நீயே வேண்டுமென்று விரும்பக்கூடிய குடையும் செருப்பும் |
| குழலும் | ஊதுகுழலும் |
| தருவிக்க | நான் கொடுக்க ஏற்பாடு செய்திருந்தும் |
| கொள்ளாதே | பெறுமலே |
| போனாய் | ஓடிவிட்டாயே. |
| எம் பிரான் | எமது உபகாரகனே! நீ, |
| கடிய | கடினமாய் |
| வெம் | உஷ்ணமுமான |
| கான் இடை | காடுகளிலே கன்றின் பின்போன உன் |
| சிறு குட்டன் | சிறு பிள்ளை யுருவத்தி னுடைய |
| செம் கமலம் | செந்தாமரை போன்ற |
| அடி | திருவடிகளிலே |
| வெதும்பி | வாட்டமுற்று |
| கண்கள் உம் சிவந்தாய் | திருக்கண்களிலும் சிவப்புற்றவனாய்; |
| அசைந்திட்டாய் | ஆயாசமுற்றவனா மானாய். |

தென் தேசத் திருப்பதிகளிலே ப்ரதானமான திருவரங்கத்தை முன்னே சொல்லி வடதேசத் திருப்பதிகளில் ப்ரதானமான திருவேங்கடத்தை யிங்கே சொன்னதாலே எல்லாத் திருப்பதிகளிலுமுள்ள எம்பிரானே வென வருளின தாம். மற்ற திருப்பதிகளிலே காடுகள் கிடையா. ஏழுமலையானைச் சொன்னது எவ்வளவு கன்றுகளானாலும் மேய்க்கப் பாங்கான விடமுண்டென்கைக்காக. திருவேங்கடம் வரையில் போய் மேய்த்துவந்தவனாகத் தோன்றுகிறது உனது திருமேனியைப் பார்க்கும்போதென்றதாம். **நீ யுகக்கும்.** பிள்ளைகளுக்குக் குடை முதலானவற்றில் அவற்றிலும் புதியனவற்றில் விருப்பம் மிகும். அவ் விருப்பத்திற்கும் மேலாயிருந்தது அவனுக்குக் கன்று மேய்ப்பதில் மோஹமென **மாலே** என்றது. **தருவிக்க.** தரச்செய்ய. புதியன பெற்றுத் தர ஏற்பாடு செய்திருக்க. நீ வேங்கடவனாய் கரும்போரேறாயிருப்பதாலே கானிடை எப்போதும் இருக்கப் பாங்கானவனே. ஆகிலும் நீ இப்போது கொண்டருளின இச் சிறிய பிள்ளையான உருவத்திற்கு இது பொருந்ாதென்கிறாள் **போன சிறுக்குட்ட** வென்றதால். **செங்கமலம்** என்றது அடியிலும் கண்களிலும் சேரும். சிவப்பது இவையெல்லாம். இங்கே, 'அடிவெதும்பியும் கண்கள் சிவந்தாயெனவும் அந்வயமாம். வெயிலில் விழிப்பதன்றியே திருவடி வெதும் பினதாலும் கண்கள் சிவக்கு மென்க. **எம் பிரான்.** எனது ஜாதிக்குத் தகுந்த தொழில் செய்து எனது குலத்தை உத்தரிக்கிறவனென்றபடி. (௪)

5. பற்றார்நடுங்கமுன் பாஞ்சசன்னியத்தைவாய்வைத்த போரேறே, என்
சிற்றாயர்சிங்கமே சீதைமணாளா சிறுக்குட்டச்செங்கண்மாலே !
சிற்றாடையுஞ்சிறுப்பத்திரமுமிவைகட்டிலின்மேல் வைத்துப்போய்
கற்றாயரோடுநீகன்றுகள் மேய்த்துக்கலந்துடன்வந்தாய் போலும். (247)

| | |
|---|---|
| பற்றார் | பற்றில்லாதார் (த்வேஷிகள்) |
| நடுங்க | நடுங்கும்படி |
| முன் | முன் அனேக ஸமயங்களிலே பாஞ்சசன்னியத்தை |
| வாய் வைத்த | முகத்தில் வைத்தூதின |
| போர் ஏறே | யுத்தத்திற்கான விருடபம் போன்றவனே! |
| என் | எனது |
| சிறு ஆயர் சிங்கமே | சிறிய விடையரில் சிங்கமா யிருப்பவனே! |
| சீதை மணாளா | ஸீதா தேவியின் நாயகனே! |
| சிறு குட்டன் | சிறு பிள்ளையாய் வந்த |
| செம் கண் | செந்தாமரைக் கண்ணனான |
| மாலே | ஸர்வேச்வரனே! நீ |
| சிறு ஆடையும் | சிறிய மேல் வஸ்த்ரமும் |
| சிறு பத்திரமும் | சிறிய உடைவாளுமான |
| இவை | இவை யிரண்டையும் கட்டிலின் மேல் வைத்து |
| போய் | இவை யில்லாமலே காட்டிற்குப் போய் |
| கன்று ஆயரோடு | கன்று மேய்க்கும் இடைப் பிள்ளைகளோடு |
| கலந்து கன்றுகள் மேய்த்து | சேர்ந்திருந்து கன்றுகளை மேய்த்து |
| உடன் | அவர்களுடனேயே |
| வந்தாய் | வந்து சேர்ந்தாய் |
| போலும் | இப்படி நினைக்கிறேன். |

முதலடியால் நாராயணனாயிருந்து அஸுரஸம்ஹாரம் செய்ததும், இவ்வவதாரத்திலே நரகதுர்யோதனாதிகளை நசிப்பித்ததும் சொன்னதாம். இரண்டாமடியால் கோபனாய் நின்ற அவனுடைய நரசிங்க ராம வாமனாவதாரங்கள் சொல்லப் பெற்றனவாம். ஏழாம் பாசுரத்திலே மத்ஸ்ய கூர்ம வராஹாவதாரங்களையும் அருளிச்செய்வர். **போரேறே, ஆயர்சிங்கமே** என்று அவன் சத்ருஹந்தாவாயும் ஆச்ரிதஸுகாவஹனாயு மிருப்பதை யருளிச்செய்தபோது 'தம் த்ருஷ்ட்வா சத்ருஹந்தாரம் மஹர்ஷீணாம் ஸுகாவஹம் । பபூவ ஹ்ருஷ்டா வைதேஹீ பர்த்தாரம் பரிஷஸ்வஜே' என்றபடி ஸீதை தானாக விவனை மெச்சி யாலிங்கனம் செய்துகொண்டது நினைவுறச் சீதைமணாளா என வருளினார்.

**போலும்** என்றது அனுமானசந்தேஹப் பொருளுணர்த்தும் அசைச் சொல் என அறிஞர் சொல்லுவர். ஆக ஸம்பாவனை யென்ற ஊஹம், **போலும்** என்றதால் தோற்றும். இங்குக் கன்று மேய்த்து அவன் வந்தது நிஸ்ஸந்தேஹமாயிருக்க, எங்ஙனம் இச் சொல் கூடுவதெனில்—கேண்மின். கானத்தில் கன்று மேய்த்து வந்ததையும் அதனால் அவன் திருமேனி அசைதலுற்றது முதலானவற்றையும் முன்னமே சொன்னாள். மேலே காளியமர்த்தனம், வத்ஸாஸுரவதம், கோவர்த்தநாந்ந போஜன மென்ற சில அதிமாநுஷவ்யாபாரங்களைச் சொல்லி, 'உண்மையில் அவன் காலி மேய்ப்பதற்கென்றே போகிறவனல்லன், ஏதோ சில வேலைகளைக் கருத்திற்கொண்டு போகிறான்' னென்று நினைத்து இங்ஙனம் செய்யவேண்டா மென்னப் போகிறாள். ஆக இவளுக்கொருவித ஸந்தேஹமுண்டானதாலே இங்கே **போலு** மென்றது. அதாவது—நீ உகக்கும் குடையும் செருப்பும் குழலும் தருவிக்கக் கொள்ளாதே போனாயே. அதிலிருந்து கன்று மேய்க்கப் போனாயோ, இல்லையோ என ஐயம் எழுந்தது. பிறகு நேரில் கையால் கொடுத்த சிற்றாடையும் சிறு பத்திரமும் கட்டிலிலே வைத்திருந்ததைக் காண

அவ்வையம் கிளர்ந்தது. மேல் வஸ்திரங்கூட இராமல் குடையுமிராமல் எப்படிப் பகல் முழுதும் வெயிலில் நின்று மேய்க்கமுடியும். சிறுகத்தியுமில்லாதபோது கன்றுகளுக்கு வேண்டும் புல் தழைகளை எங்ஙனம் பறித்துக் கொடுக்கலாகும். ஆக பல அவதாரங்களிலே பல வேலைகள் செய்யும் நீ இப்போது எதற்காகப் போனாயோ வென யோசிக்கலானேன். இதற்காகவும் வெளியிலே வந்து நின்றேன். இப்போது நீ கன்றுகளின் பின்னே இவ் வேடம் பூண்டு அடிகள் வெதும்பிக் கண்கள் சிவந்து அசைந்து வந்ததைக் கண்டபோது அவ் வெண்ணங்களையெல்லாம் மாற்றிக்கொண்டு, சிற்றாடையும் சிறுப்பத்திரமுமில்லாவிட்டாலென்ன? அநுபவமில்லாததால் அவை அவசியம் வேண்டுமெனத் தெரியாது. கற்றாயரோடு கலந்து மேய்த்ததாலே அவர்களுடைய சிற்றாடைகளும் உடைவாள்களுமே உனக்கும் உன் கன்றுகளுக்கும் வேண்டுவன சித்திப்பதற்கு உபயோகப்பட்டிருக்கும். ஆகக் கலந்துமேய்த்து வந்திருக்கலாமென்று நினைக்கிறேன். ஒருக்கால் அவர்களோடு கலக்காமலே (முதலிரண்டடிப்படி) உன்னுடைய ஆச்சர்ய சக்தியாலேயே தனியே ஒரு கருவியு மிராமலே எல்லாம் சாதித்து மேய்த்தாயோ வென்று கூட கொஞ்சம் நினைக்கவேண்டியிருக்கிறதென்றதாம். ஸந்தேஹமுண்டாவதற்கு இடமுண்டென்பதையே மேற் பாசுரமும் குறிக்கும். ஆகவே பெரியோர்களும் **வந்தாய் போலும்** என்றதற்கு 'வந்தாயோதான்' என்று ஓகாரத்தைச் சேர்த்து உரை செய்தனர். (ரு)

**6. அஞ்சுடராழியுன்கையகத்தேந்துமழகாநீ பொய்கைபுக்கு
நஞ்சுமிழ்நாகத்தினோடு பிணங்கவும் நானுயிர்வாழ்ந்திருந்தேன்
என்செய்யவென்னைவயிறுமறுக்கினாயேது மோரச்சமில்லை
கஞ்சன்மனத்துக்குகப்பனவே செய்தாய்காயாம் பூவண்ணங்கொண்டாய்.(248)**

| | |
|---|---|
| அம் | (உன் திருமேனி ஸம்பந்தத்தாலே) அழகு பொருந்தின |
| சுடர் | ஜ்வாலைகளையுடைய |
| ஆழி | திருவாழியை |
| உன் கை அகத்து | உனது உள்ளங்கையிலே |
| ஏந்தும் அழகா | ஏந்துவதிலுண்டாம் அழகையுடையவனே! நீ |
| பொய்கை புக்கு | மடுவிலே குதித்துப் புகுந்து |
| நஞ்சு | விஷத்தை |
| உமிழ் | கக்கும் |
| நாகத்தினோடு | காளியஸர்ப்பத்தோடு |
| பிணங்க உம் | பின்னிக்கொண்டிருந்த போதும் |
| | நான் |
| உயிர் வாழ்ந்து இருந்தேன் | உயிரோடு ஸுகப்பட்டிருந்தேன். |
| என் செய்ய | என்ன செய்வதற்காக என்னை |
| வயிறு மறுக்கினாய் | வயிற்றில் குழப்பமுள்ளவளாக்கினாய். |
| ஏது ஓர் அச்சம் உம் | ஏதேனு மொருவிதமான பயமும் |
| இல்லை | உனக்கில்லை. |
| காயாம் பூ | காயாம் பூவின் |
| வண்ணம் | நிறத்தை |
| கொண்டாய் | பெற்றவனே! |
| கஞ்சன் | கம்ஸனுடைய |
| மனத்துக்கு உகப்பன ஏ | மனஸ்ஸுக்கு ப்ரீதிகரமானவற்றையே |
| செய்தாய் | அப்போது செய்துவந்தாய். |

குடையும் செருப்பும் குழலும் கொள்ளாமலும், சிற்றாடையும் சிறுபத்திரமும் கொடுத்திருக்க அவற்றை வைத்து விட்டும் போனால் கன்று மேய்க்கப் போகவில்லையோ வென ஸந்தேஹிக்கக் கூடாதா? நீ நடுமடுவில்

குதித்து நாகத்தோடுச் சண்டையிட்டது நினைவிலிருக்கிறதே. மேலாடை முதலியன விட்டுப் போனான் என்றால் நீரில் குதிக்கப்போயிருப்பான் எனத் தோன்றுமே. அதனால் முன் காளியத்தோடு பட்டதுபோல் என்பட எங்கே போனானோவென்று குடல் குழப்பம் எனக்கு அப்போது போல் இப்போதும் உண்டாய் விட்டதே. ஆழியானான வுன்னை யழிக்க யாரும் வல்லாரல்லராகை யாலே உனக்கு அப் பகைவரிடம் அச்சமிராமலிருக்கலாம். என் போன்ற வர்க்கு வயிற்றுக்குழப்பம் ஏற்படுமே யென்றாவது அஞ்சவேண்டாமா. நீ என்ன பலனுக்காக இங்ஙனம் செய்யவேண்டும். நீ செய்வதில் பகைவருக்குத் தானே தற்காலத்தில் ஒரு ப்ரீதி நடமாடும். 'கண்ணன் காளியனிடம் அகப் பட்டுக்கொண்டான்' என்று சில நிமிஷம் உவந்திருப்பர். இதைத் தவிர்த்து வேறு பலனைக்காணோம். வேண்டினவர் வருந்தி யழவும் வேண்டாதவ ருகக்கவும் செய்வது ந்யாயமோ? இதற்காவது அஞ்சவேண்டாமா. பகைவரை யழிக்க வேண்டுமானால் திருக்கையிலிருக்கும் திருவாழியை யனுப்பலாமே. நீ எதற்கு நேரில் போய்ப் படாதன பட்டு எங்களுக்குத் துன்பம் விளைவிக்கவேண்டும்? காளியனது விஷம் புகுந்துதான் அந் நிறம் கொண்டாய், கறுத்துவிட்டா யென் றல்லவோ உன்னை யப்போது நான் ஓடி வந்து கண்டபோது நினைத்துவிட்டேன். உனக்கு இயற்கையிலுள்ள காயாம்பூவண்ணம் தான் இது. விடத்தினாலில்லை யென்ற தெளிவு பிறகுதானே ஏற்பட்டது. இப்படி நீ செய்வதை நினைத்த போது நீ என் செய்ய எங்கே போனாயோ வென்று ஸந்தேஹிக்காமலிருக்க முடியுமா? ஆழியங்கையனே! அழகா! காயாம்பூவண்ணனே! இப்போது நேரில் கண்டவகையிலே கற்றாயரோடு கலந்து மேய்த்துவந்தாயெனவே ஆராய்ந்து வருகிறேனென்றபடி. முன்னே செங்கீரையாடுதலில் காளியவிருத்தாந்தத்திலும் காயமலர் நிறவா' என்றருளினது காண்க. (சு)

**7.** **பன்றியுமாமையுமீனமுமாகிய பாற்கடல்வண்ணாவுன்மேல்**
**கன்றினுருவாகிமேய்புலத்தேவந்தகள்ளவசுரர்தம்மை**
**சென்றுபிடித்துச்சிறுக்கைகளாலே விளங்காயெறிந்தாய்போலும்**
**என்றுமென்பிள்ளைக்குத்தீமை செய்வார்களங்ஙனமாவர்களே.** (249)

| | |
|---|---|
| பன்றியும் ஆமையும் மீனமும் ஆகிய | வராஹ கூர்ம மத்ஸ்யா வதாரங்களைச் செய்த |
| பால் கடல் வண்ணா | க்ஷீர ஸமுத்ர வர்ணனான எம்பெருமானே! |
| கன்றின் உரு ஆகி | ஒரு பசுக்கன்றின் உருவம் கொண்டு |
| மேய் புலத்து ஏ | கன்றுகள் மேயுமிடத்திலே |
| உன் மேல் வந்த | உன்னை நலிவதற்காக வந்தவரான |
| கள்ளம் அசுரர் தம்மை | வஞ்சக ஸ்வபாவரான அசுரரை |
| சென்று | கிட்டி |
| சிறு கைகளாலே பிடித்து | (உனது) சிறிய விரு கைகளாலும் பிடித்தெடுத்து |
| விளங்காய் எறிந்தாய் போலும் | விளாமரத்திலுள்ள காய்களின் மேல் எறிந்தாயென நினைக்கிறேன். |
| | என பிள்ளைக்கு |
| தீமை செய்வார்கள் | கேடு நினைப்பவர்கள் |
| என்றும் | எப்பொழுதும் |
| அங்ஙனம் ஏ ஆவர்கள் | கெட்டே யழிவர்கள். |

காலி மேய்க்கப் போனவன் காளியமர்த்தனம் செய்தது கீழே கூறவேண்டியதாயிற்று. இனிக் காளியன் போலன்றி, கஞ்சனே அனுப்பின வசுரர் விஷயமாகச் சொல்ல நினைத்து மற்றொரு சமயம் வத்ஸாஸுரவதம் செய்ததை மாலையில் கன்றுகளுடன் வந்த கண்ணனைக் கண்டு சொல்லுகிறாள் இப் பாசுரத்தில். **போலும்.** நேரில் பார்க்காததால் பிறர் சொல்லக்கேட்டுச் சொல்லும் போது கார்யத்தின் பெருமையையும் இவன் சிறுமையையும் கண்டு சங்கித்தனள். அன்றி, நம் கன்றுகளன்றி, தனிக்கன்றொன்று அங்கே வந்து நின்றதென்றால் அது அசுரனாகத் தானிருக்கவேண்டும். அசுரனும் உன் மேல் வந்தவனாகத்தானிருக்கவேண்டும். இல்லையேல், கன்றுகளைக் காக்கும் நீ அதனையேன் கொன்று விளாவின் மேலெறியவேண்டுமென்ற வாராய்ச்சி இப் பதத்தால் குறித்ததாம். வேறு கன்றெனக் கண்டுபிடிக்க உனக்கு நன்றாகத் தெரியுமென்று குறிப்பிடப் **பன்றியுமித்யாதி**களைச் சொன்னதாம். 'இது நம் இனத்தைச் சேர்ந்தது, இது சேராதது' எனவு, முகர்ந்துணரும்படியான பகுத்தறிவு, திர்யக்கென்ற சாதிக்கு இயற்கையிலுள்ளது. நீ எத்தனையோ திர்யக் ரூபங்களை வேண்டும்போதெல்லாம் எடுக்கிறவன். ஆக நீ அநாயாஸமாய் அவ் வேற்றுமை யறிவாயென்றதாம்.

**பாற்கடல் வண்ணா.** நீலக்கடல் வண்ணனைப் பாற்கடல்வண்ணாவென்றது எங்ஙனமெனில், பன்றி முதலான இம் மூன்று அவதாரங்களில் வெண்மை நிறம் இருத்தல் கொண்டென்க. நீரிலே பெரும்பாலுமிருக்கும் ஆமை, மீன்களுக்கும் வெண்மை யுண்டாம். அன்றி, பாற்கடல் வண்ணம் சுத்தஸத்வம். தந்மயனென்றதாம். பால் வண்ணமும் கடல் வண்ணமுமென்றதுமாம். எம்பெருமானுக்குக் கிருதயுகத்தில் வெண்மை நிறமும் ப்ரமாணஸித்தம். 'பார்க்கடல்' என்ற பாடம் கொண்டு பூமியைச்சுற்றியுள்ள கடலின் நிறமுள்ளவனே யெனவு முரைப்பர். வண்ணம் = ஸ்வபாவம். பார்வண்ணம் பொறுமை; கடல்வண்ணம் காம்பீர்யம். பாலின்வண்ணம் மதுரமாய் புஷ்டியளிப்பதாயிருத்தல். இவையுள்ளவனே யென்னலுமாம். **அசுரர் தம்மை.** சிறு கன்றாக வந்த வசுரன் என்றால் அவனை ஸாமான்யமாக நினைத்துவிடலாகாது. பல வசுரர் சேர்ந்து ஆன வொரு பெருமசுரனே யென வறிவிக்க விங்கே பன்மை யாம். (எ)

8. **கேட்டறியாதனகேட்கின்றேன்கேசவா கோவலரிந்திரற்குக்**
**காட்டியசோறுங்கறியுந்தயிருங்கலந்துடனுண்டாய்போலும்**
**ஊட்டமுதலிலேனுன்றன்னைக் கொண்டொருபோது மெனக்கரிது**
**வாட்டமிலாப்புகழ்வாசுதேவாவுன்னை யஞ்சுவனின்றுதோட்டும்.** (250)

| | | | |
|---|---|---|---|
| கேசவா | தேவாதிதேவனே! | | (அவைபாவன) |
| கேட்டு அறியாதன | காதால் கேட்டு உண்மையென வறிய வியலாதவற்றை | கோவலர் | கோபாலர்கள் |
| | | இந்திரற்கு | இந்திரனுக்கு |
| | | காட்டிய | வெளிப்படுத்தின |
| கேட்கின்றேன் | பிறர் சொல்லக் கேட்கிறேன் | சோறும் | அன்னத்தையும் |
| | | கறியும் | காய் கறிகளையும் |

| | |
|---|---|
| தயிரும் | பலவித தயிரையும் |
| உடன் கலந்து | ஒன்றாகச் சேர்த்து |
| உண்டாய் போலும் | நீயே உண்டுவிட்டாயென்பது போன்றனவாம். |
| ஊட்ட | இப்படி ஆஹாரமளிக்க |
| முதல் இலேன் | எனக்கு மூலதனமில்லை. |
| உன் தன்னை கொண்டு | இப்படிப்பட்ட உன்னை ரக்ஷயனாகக் கொண்டு |
| ஒரு போதும் | ஒரு வேளை கூட |
| எனக்கு அரிது | எனக்கு நடத்த முடியாது: |
| வாட்டம் இலா | குறையற்ற |
| புகழ் | கீர்த்தி யுற்ற |
| வாசுதேவா | பரவாசுதேவனே! |
| இன்று தொட்டும் | இன்று முதல் |
| உன்னை அஞ்சுவன் | உன்னைப்பற்றி பயப்படுவேன். |

இடையர்கள் இந்திரனுக்கு வருஷந்தோறும் செய்வது போல் பூசை செய்ய வெல்லாம் சேகரித்த பிறகு, 'இவற்றை நம்மைக் காக்கும் கோவர்த்தன மலைக்கே இடுங்கோள்' என்று அவர்களுக்கு அழகாக உபதேசித்து அங்ஙனம் அவர்கள் செய்தபோது, மலையின்மேல் உட்கார்ந்து இவனே அனைத்துமுண்டான்' என்று எல்லோரும் சொல்லக்கேட்டு யசோதையானவள் சொல்லுகிறாள்—கண்ணா! சிறுகாலே யூட்டி யனுப்பிய உன்னைச் சீக்கிரமே உண்ணச் செய்யவேண்டு மென்றழைப்பதற்கு நான் வெளியிலே நின்று பார்த்திருக்க, இவர்களெல்லோரும் இவ்வண்ணம் சொல்லுகின்றனரே. இதுவுமுண்டோ. இது வுண்மையாகில் எனக்குள்ள மூலதனத்தை யெல்லாம் செலவு செய்து ஆஹாரம் சேகரித்தாலும் அது உனக்கு ஒரு வேளைக்குக் கூடக் காணாதே. உனக்கு எங்ஙனம் ஆஹாரம் கொடுத்து நான் வளர்ப்பது. நான் எவ்வளவு ஆஹாரமளிக்கப் போவதாக வைத்து உன்னை யழைப்பதென்றவாறு. **கேட்டறியாதன.** நீ யவற்றை யுண்டாயென்ற பொருளிலே அவர்கள் சொல்லும் சொற்களை மட்டும் கேட்கிறேன். ஆனால் அதன் பொருள், 'நெருப்பினால் நனைக்கிறான்' என்ற சொல்லுக்குப் போலே இயைந்திருக்கவில்லையாகையாலே அறியவியலாமலிருக்கிற தென்றபடி. **கேசவா.** இந்திரனுக்கு மேற்பட்ட ப்ரம்மருத்ரர்களாலும் ஆராதிக்கப்படுபவனை யருகிலே வைத்துக்கொண்டு வேறொரு தெய்வம் தொழுவது பெருங்குற்றமே யாம். **வாட்டமிலாப் புகழ் வாஸுதேவா.** எப்போதும் நித்யஸூரிபரிஷத்துபசியமாக புண்ய ச்லோகனென்றபடி. அன்றி, ஆஹாரமொன்றுமிராதபோதும் வாட்டமிராதவனும் புகழப்படுபவனுமான பரவாஸுதேவன் நீ என்றதாம். (அ)

இங்ஙனம் கன்று மேய்க்கக் கானத்திற்கு அனுப்பி மாலையில் நின்றழைத்துக்கொள்ளு மசோதை திருநாளுக்காக அவனை நிறுத்திக்கொண்டதைக் கூறும் பாசுரம்—

9. திண்ணார்வெண்சங்குடையாய்திருநாள் திருவோணமின்றேழுநாள், முன்
பண்ணேர்மொழியாரைக்கூவி முளையட்டிப்பல்லாண்டு கூறுவித்தேன்
கண்ணாலஞ்செய்யக்கறியுங்கலத்தரிசியுமாக்கி வைத்தேன்
கண்ணாநீநாளைத்தோட்டுக் கன்றின்பின்போகேல்கோலஞ்செய்திங்கேயிரு. (251)

திண் — தீவ்ரமான
ஆர் — ஒலித்தலை யுடைய
வெண் — வெண்ணிறமுமான
சங்கு உடையாய் — சங்கை யுடையவனே!
கண்ணா — கண்ணனே!
திருவோணம் திருநாள் — திருவோணமென்னும் சிறந்த நக்ஷத்திரம்
இன்று — இன்றிலிருந்து
ஏழு நாள் — ஏழாவது நாள் ஆகிறது.
முன் — முன்னதாக
பண் — இசையுடன் கூடின
ஏர் — அழகான
மொழியாரை — பாட்டுக்களைச் சொல்பவரை
கூவி — அழைத்து
முளை அட்டி — முளைக்காக (நவதான்ய விதைகளைப்பாலிகை களில்) சேர்த்து
பல்லாண்டு கூறுவித்தேன் — அனுக்ரஹமொழியைச் சொல்லிவைத்தேன்.
(ஆகவே)
கண்ணாலம் செய்ய — சிறப்பாகக் கொண்டாடுவதற்காக
கறி உம் — கறி யமுதுகளையும்
அரிசி உம் — அமுதுபடிகளையும்
கலத்து — தகுந்த பாத்திரங்களில்
ஆக்கி வைத்தேன் — சீராக்கி வைத்திருக்கிறேன்.
நீ
நாளை தொட்டு — நாளையிலிருந்து
கன்றின் பின் — கன்றுகளை மேய்ப்பதற்காக அவற்றின் பின்னே
போகேல் — கானத்திற்குப் போகாதே.
கோலம் செய்து — அலங்காரம் செய்து கொண்டு
இங்கே இரு — கோலம் கலையாதபடி அகத்திலேயே தங்கியிரு.

**திண் ஆர்.** ஆர்=ஆர்த்தல் ஒலித்தல் முதனிலை தொழிற் பெயர். திருவோணத்திற்கும் ரோஹிணியிற் பிறந்த எனக்கும் என்ன ஸம்பந்த மென்னுமைக்காகத் திண்ணார் வெண்சங்குடையாயெனத் திருவோணத்தான் பெயரால் விளித்ததாம். **முன்.** முதன் முதலானவங்கமாக. **கண்ணாலம்.** கல்லியாணம். இது வழக்குச்சொல். இந்த முளையட்டுதலும் கண்ணாலமும் கீழே திருப்பல்லாண்டிலே, 'மண்ணும் மணமும் கொண்மின்' என வருளப்பெற்றன. **கறி.** காய் முதலியன. **நாளைத்தொட்டு.** 'திருவோணம்' வரையில் என்பது சொல்லாமலே விளங்கும். அன்றி, இவளுக்கு அதற்குப் பிறகும் போகாமே இருப்பதும் இஷ்டமானதாலே அதைச் சொல்லவில்லை யென்க. ஆகில் ஊரில் திரியலாமென நினைக்காதே என்கிறாள் **கோலமித்யாதியால். இங்கே.** நான் கண்டு களிக்குமிடத்திலே. இத் திருமொழியில் இதுவும், காடு என்ற மூன்றும் பாசுரமும் 'வெண்ணெ யளைந்த' திருமொழியோடு திருமஞ்சனத்திலே அநுசந்திக்கப்படுவன. (௯)

10. பற்றரவல்குலசோதைநல்லாய்ச்சிதன்புத்திரன் கோவிந்தனைக்
கற்றினம் மேய்த்துவரக்கண்டுகந்தவள் கற்பித்தமாற்றமெல்லாம்
செற்றமிலாதவர்வாழ்தருதென்புதுவை விட்டுசித்தன்சொல்
கற்றிவைபாடவல்லார்கடல்வண்ணன் கழலிணைகாண்பர்களே. (252)

புற்று — புற்றிலுள்ள
அரவு — பாம்பு போன்ற
அல்குல் — அல்குலையுடைய
நல் — நல்லவளான
அசோதை ஆய்ச்சி — யசோதை யென்ற இடைச்சியானவள்
தன் புத்திரன்—தனது மகனும்
கோவிந்தனை — கோவிந்தனென்ற பேர் பெற்றவனை
கன்று இனம் — கன்றுகளின் கூட்டத்தை
மேய்த்து வர — அவன் மேய்த்துவரும்போது
கண்டு — பார்த்து
உகந்தவள் — ப்ரீதியுற்றவளாய்
கற்பித்த — அவனை நியமித்த

| | |
|---|---|
| மாற்றம் எல்லாம் | எல்லா வார்த்தைகளாயும், |
| செற்றம் இலா தவர் வாழ்தரு | த்வேஷம் இல்லாதவர் வாழா நின்ற |
| தென் | தெற்கிலுள்ள |
| புதுவை | ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ள |
| விட்டு சித்தன் | விஷ்ணு சித்தனுடைய (பெரியாழ்வாருடைய) |
| சொல் | சொற்களுமான |
| இவை | இப் பத்துப் பாசுரங்களை |
| கற்று | அப்யஸித்து |
| பாட வல்லார் | பாடுவதற்கு வல்லமை யுள்ளவர் |
| கடல் வண்ணன் | கடல் நிறத்தனனான கண்ணனுடைய |
| கழல் இணை | ஒத்துள்ள திருவடிகளிரண்டையும் |
| காண்பர்கள் | கண்டு ஸேவித்துகப்பர்கள். |

**புற்றரவல்குல்.** அல்குல் என்பது இடையின் முன்பாகமாகில் அது அரவின் படம் போன்றதாம். பின்பாகமாகில் **அஹி**குண்டலம் அதாவது மேன்மேல் சுற்றுண்ட ஸர்ப்பவுடல் போன்றதுமாம். **புற்று** என்றதால் அரவு மறைந்து வளருவதால் ஒளியும் அழகும் மென்மையும் மேலிட்டுப் பிறருக்குப் புலப்படாம லிருக்கை குறித்ததாம். **நல்லாய்ச்சி.** சீலம், வ்ருத்தம், பாக்யம் எல்லாம் உள்ளவளாய் எம்பெருமானுடைய ஸௌசீல்யத்தை நாட்டாருக் கறிவிப்பதற் காக அவனை வளர்க்க வாய்ச்சியாக வந்தவள். **கோவிந்தனை.** கோவிந்த பட்டாபிஷேகம் செய்யப்பெற்றவனை. இதற்குக் **கண்டு கற்பித்த** வென விரண் டிலும் அந்வயம். **உகந்தவள்** என்றதை உகந்து அவள் எனப் பிரிக்கின்றனர். ஒரே பதமுமாம். **எல்லாம்.** முத்தந்தா, ஆடி யமுதுசெய், கன்றின் பின் போகேல் கோலம் செய்திங்கே யிரு என நேராக விதித்த சொற்கள். 'குடை முதலானவற்றைத் தருவிக்க இனி கொண்டே போகவேண்டும். சிற்றாடையும் சிறுபத்திரமும் வைத்துவிட்டுப்போனது போன்றதையும் செய்யக்கூடாது. கஞ்சன் மனத்துக்குகப்பன செய்யாதே. போனவிடத்தில் காளியமர்த்தனம், வத்ஸாஸுர ஸம்ஹாரம் போன்ற கார்யங்களும் செய்யாமலிருத்தல் நலம். எல்லோர் எதிரிலும் மலை யன்னத்தை யுண்டது போல் உண்ணாதே' யென்றன போன்ற சில விதிகளும் இங்கே குறிக்கப்பெற்றன. இவை யெல்லாமென்றபடி. **தென்.** வடதேசத்தில் பிறந்த யசோதை மாற்றம் தெற்கில் இம் மொழியாக மாறினவென்றபடி. **கழலிணை காண்பர்கள்.** கானங்களில் திரிந்து வெதும்பின வடிகளைக்கண்டு மனம் நொந்து அவனைக் கானம் போகாதபடி நிறுத்தி யாரா தித்துவந்த யசோதையின் மாற்றத்தைக் கற்பார்க்குக் கடல்வண்ணன் தன்னை யாராதித்தனுபவிக்க வனுகூலமாம்படி நிலைநின்று தன் கழலிணையைக் காண்பித் தருள்வானென்றபடி. (௰)

**ப்ரபந்தரக்ஷையில் சீலக்குதம்பை உரை முற்றிற்று.**

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ :

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

## பெரியாழ்வார் திருமொழி 3, 4. (காமுறுதல்)

# தழைகளுந் தொங்கலும்

கீழ், கன்று மேய்த்துவரும்போது யசோதை யனுபவித்தவண்ணம் அனுபவித்தருளினார். இங்ஙனம் சிறிது காலம் சென்றபிறகு தக்க வயதில் அவன் காலிமேய்த்துவரும் காலத்திலே கண்டு கன்னிமார் காமுற்ற வண்ணத்தைத் தம் தன்மையிலே தொடங்கி அவர்களுடையவும் அவர்களின் பெற்றோர்களுடையவும் தன்மையிலே நின்றனுபவித்தினிய ராகிறார் இத்திருமொழியில்—

1. **தழைகளுந்தொங்கலுந் ததும்பி யெங்குந் தண்ணுமை யெக்க மத்தளிதாழ்பீலி**
   **குழல்களுங்கீதமுமாகியெங்குங் கோவிந்தன்வருகின்றகூட்டங்கண்டு**
   **மழைகொலோவருகின்றதென்று சொல்லிமங்கைமார்சாலகவாசல்பற்றி**
   **நுழைவனர்நிற்பனராகியெங்குமுள்ளம் விட்டூண்மறந்தொழிந்தனரே. (253)**

| | | | |
|---|---|---|---|
| எங்கும் | எல்லா விடத்திலும் | கண்டு | பார்த்து |
| தழைகளும் | பீலிக் குடைகளும் | மழை கொல் ஓ வருகின்றது | மேகமண்டலம் தான் வருகின்றதோ |
| தொங்கலும் | வெண் குடையும் | என்று | என்று சொல்லி |
| ததும்பி | நிறைந்திருக்க | எங்கும் | எல்லாவிடத்திலும் |
| எங்கும் | எல்லா விடமும் | சாலகம் வாசல் | சன்னற் சந்துகளிலே |
| தண்ணுமை | பேரிகைகளும், | பற்றி | சேர்ந்து |
| எக்கம் | ஒற்றைத் தந்தி யுள்ள வாத்யங்களும், | நுழைவனர் நிற்பனர் ஆகி | முகங்களை நுழைத்தும் நின்றுமிருந்து |
| மத்தளி | மத்தளங்களும் | உள்ளம் விட்டு | மனத்தை வெளி விட்டு |
| தாழ் பீலி | நீண்ட திருச்சின்னங்களும், | ஊண் | அன்னத்தை |
| குழல்களும் | ஊது குழல்களும் | மறந்தொழிந்தனர் | மறந்துபோய் விட்டனர். |
| கீதமும் | ஸங்கீதமும் | | |
| ஆகி | நிறைந்திருக்க. | | |
| | கோவிந்தன் வருகின்ற | | |
| கூட்டம் | இடைப்பிள்ளைக் கூட்டத்தை | | |
| மங்கைமார் | இடைப் பெண்கள் | | |

இது ஆழ்வார் தம் தன்மையிலே யருளின பாசுரம். கண்ணனைக் காண்பதற்கு முன்னே அக் கூட்டத்தில் மஹாப்ரவாஹத்திலே மேலே மிதப்பன போலுள்ள குடைகளைக் கண்டனர். பிறகு பலவகை வாத்யங்களையும் அவற்றையுடைய கூட்டத்தையும் கண்டனர். பீலிக்குடைகளும் முழக்கமும், இதென்ன மேகமண்டலமோ வருகிறதெனச் செய்தன. கண்ணனைக் காண, நான் முன்னே நான் முன்னேயென வெங்கும் சன்னற்சந்தில் முடிந்தவரையில் மங்கைமார் உடலை நுழைத்து நின்றனர். அவர்கள் அதற்குமேல் வரமுடியாமல் நின்றாலும் அவர்கள் மனத்தை அனுப்பிவிட்டு மெய் மறந்து நின்றதால் ஊண் மறந்தொழிந்தனராயின ரென்பதாம்.

**தொங்கலென்பதற்கும்** பீலிக்குடை யென்ற பொருளுமுண்டு. ஆகிலும் **தழைகளும்** என்று அந்தக் குடைவகைகளை யருளிச்செய்து விட்டதால் வெண்

குடையென்ற பொருள் இதற்காம். தண்ணுமை, எக்கம், மத்தளி இம்மூன்றும் வெளிவாத்யங்கள். தாழ்பீலியும் குழலும் சாரீரத்வனி கலந்த வாத்யம். கீதமென்பது சாரீரம். வாத்யத்தின் நடுவிலே நின்றதாலே தாழ்பீலி என்றது திருச்சின்னமே யன்றி விசிறி யன்று. **குழல்** வேய்ங்குழலும் இலைக்குழலும். **ஊண் மறந்தொழிந்தனர்.** மாலையில் சிறிது நாழிகை பார்க்கிறவர்கள் ஊண் மறந்தவ ராவரோ வென்னில், இவர்கள் முழுப்பகலும் இவனையே நினைத்திருந்து ஊண் மறந்து, மாலையிலே கூட்டங்கண்டு சென்று உள்ளம் விட்டொழிந்தனர் எனக் கூறலாம். அன்றி, அன்னம் செய்துகொண்டிருக்கும்போது இவன் வருவதறிந்து வெளியேவந்து நின்றவர் செய்யும் அன்னத்தை மறந்தன ரென்னலாம். இனி, மாடுகன்றுகள் வருவதற்குள்ளே அந்திப்பொழுதுக்கு முன்னே உண்ணும் வழக்கத்தினாலே உண்ண உட்கார்ந்தவர் எழுந்து வந்து அதை மறந்தன ரென்பதுமாம். முதலில் சாலக வாசலில் நிற்பனராகிப் பிறகு அவன் போகு மிடமெல்லாம் போகவேணுமென்று மனதை விட்டு அவன் பின்னே போயொழிந்தனர்; ஆஹாரத்திற்கு வருவதையும் மறந்தன ரென்றும் கூடுமாகில் கொள்க. (க)

இப்படிக் கூட்டமிருக்கும் விதம் சொல்லப் பெற்றது. இனி அதில் கண்ணன் எழுந்தருளும் வகையை ஒவ்வொரு பாசுரத்திலும் வர்ணித்து அவனிடம் மங்கைமார் காமுற்ற வண்ணமும் கூறப்படுகிறது.

2. **வல்லிநுண்ணிதழன்னவாடைகொண்டு வசையறத்திருவரைவிரித்துடுத்து**
**பல்லிநுண்பற்றாகவுடைவாள் சாத்திப்பணைக்கச்சுந்திப்பலதழைநடுவே**
**முல்லைநன்றுமலர்வேங்கைமலரணிந்து பல்லாயர்குழாநடுவே**
**எல்லியம்போதாகப்பிள்ளை வருமெதிர்நின்றங்கினவளையிழவேன்மினே.**

| | |
|---|---|
| வல்லி | உயர்ந்த கொடியின் |
| நுண் இதழ் அன்ன | மெல்லிய இதழ் போன்ற தான |
| ஆடை | பீதாம்பரத்தை |
| கொண்டு | எடுத்து |
| திரு அரை | அழகிய இடுப்பிலே |
| வசை அற | குற்ற மொன்றிராதபடி |
| விரித்து உடுத்து | திருவடிவரையில் தொங்கும்படி சாத்திக்கொண்டு (அதன்மேல் |
| பணை | பெரிதான |
| கச்சு | கச்சுப்பட்டையை |
| சாத்தி | கட்டிக்கொண்டு |
| உடைவாள் | சிறு கத்தியை |
| பல்லி | பல்லியின் |
| நுண் பற்று ஆக | பதிந்த பற்றுதல் போல வாம்படி |
| உந்தி | (கச்சுக்கும் ஆடைக்கும் நடுவே) செலுத்திவிட்டு |
| நல் | ச்ரேஷ்டமான |
| நறு | மணம் வீசுகின்ற |
| முல்லை மலர் | முல்லைப் பூவையும் |
| வேங்கை மலர் | வேங்கைப் பூவையும் |
| அணிந்து | சாத்திக் கொண்டு |
| பல தழை நடுவே | பல பீலிக்குடைகளின் நடுவே |
| பல் ஆயர் | பல இடைப்பிள்ளைகளின் |
| குழாம் நடுவே | கூட்டத்தின் நடுவிலே, |
| அம் | அழகிய |
| எல்லி போது | ஸாயங்காலமானது |
| ஆக | வந்தவளவிலே |
| வரும் பிள்ளை | எழுந்தருளும் பிள்ளையின் |
| எதிர் | எதிரிலே |
| நின்று | நின்று கொண்டு |
| அங்கு | நின்ற விடத்திலே |
| இனம் வளை | பலவகை வளைகளை |
| இழவேல் மின் | இழந்து விடாதீர்கள். |

கண்ணனைக் காண வாசைப்பட்டுப் பெரிய பெண்டிரும் புருஷரும் சேர்ந்தெல்லோரும் பல தெருக்களிலிருந்து வந்து அவன் எழுந்தருளும் தெருவிலே திரளாக நின்றுவிட்டார்கள். ஆகவே வெகு கன்னிமார்கள் தெருவிலே புகமுடியாமல் சாலகவாசலாலே அவனைக் காண நின்றனரென முன்னே

சொல்லியாயிற்று. இங்ஙனம் சாலகத்தின் கீழே நின்ற கன்னிகள் வெளியே நிற்கும் தோழிமார்களைப் பார்த்துச் சொன்னதாமிது. 'தோழிகாள்! அப் பிள்ளையின் ஆடையழகையும் அவன் அதை உடுத்திருக்கும் வகையையும் அதன் மேல் கச்சையும், அதனுள், சுவரில் பல்லி விழாது பற்றியிருப்பது போல்; உடைவாள் படியவைக்கப்பட்டிருப்பதையும், அவன் சாத்திக்கொண்டுள்ள மலரின் மேனியையும் அக் குழாத்தின் நடுவேகண்ட பிறகு அவனைக்கிட்ட வொண்ணுததாலும் அவன் நம்மை விட்டுப்போன வண்ணமே யிருப்பதாலும் மெய் மெலிந்து வளைகளெல்லாம் கீழே விழுந்து இருக்கக் கண்டார் சிரிக்கும்படியாம். ஏன் அங்கே நிற்கிறீர்கள்? எங்களைப்போல் உள்ளே யிருந்தால் யாரும் சிரிக்கும் படி யிராதன்றே? நமக்குப் போல் அவனுக்கும் ஆடையும் கத்தியும் கச்சும் கழன்றால் கண்டு களிக்கலாம். அஃதில்லையே. நீங்களும் உறுதியுடனிருங்கள்.' என்றவாறு.

**வரும்.** என்பதை வினைமுற்றாக்கி, 'பிள்ளையானவன் **வரும்.** வருவான். அப்போது அவனெதிர் நின்றினவளை யிழவேன்மின் எனவு முரைக்கலாம்.

3. **சுரிகையுந்தெறிவில்லுஞ்செண்டுகோலும் மேலாடையுந்தோழன்மார்கொண் டோட**
**ஒருகையாலொருவன்றன்றோளையூன்றி யாநிரையின மீளக்குறித்தசங்கம்**
**வருகையில்வாடியபிள்ளைகண்ணன் மஞ்சளும்மேனியும்வடிவுங்கண்டாள்**
**அருகேநின்றளென்பெண்ணோக்கிக்கண்டாளது கண்டிவ்வூரொன்று புணர்க்கின்றதே.** (255)

| | |
|---|---|
| வருகையில் | மேய்த்துத் திரும்பிவரும் போது |
| வாடிய | வாட்டமுற்ற |
| பிள்ளை | சிறு பிள்ளையான |
| கண்ணன் | கண்ணனுடைய |
| சுரிகை உம் | கத்தியையும் |
| தெறிவில் உம் | கல் எறியும் வில்லையும் |
| செண்டு கோல் உம் | சவுக்குக் கோலையும் |
| மேல் ஆடை உம் | உத்தரீயத்தையும் |
| தோழன்மார் | தோழர்கள் |
| கொண்டு ஓட | எடுத்துக்கொண்டு பசுக் கூட்டத்தைப் பிரிக்க ஓடினபோது |
| ஒரு கையால் | ஒரு திருக்கையினால் |
| ஒருவன் தன் தோளை | அருகில் இருந்த தோழரொருவனின் தோளை |
| ஊன்றி | ஊன்றிக் கொண்டு |
| ஆ நிரை | பசுக்களின் பெருங்கூட்டத்தில் உள்ள |
| இனம் | வகுப்புகள் |
| மீள | தனித்தனியே தங்கள் இடங்களுக்குத் திரும்பு வதற்காக |
| குறித்த | அடையாளமாக ஊதின |
| சங்கம் | சங்கத்தையும் |
| மஞ்சள் உம் | அவன் பூசியிருந்த மஞ்சளையும் |
| மேனி உம் | காந்தியையும் |
| வடிவு உம் | வடிவத்தையும் |
| கண்டாள் | பார்த்தவளுடைய |
| அருகே | சமீபத்திலே |
| நின்று | இருந்து கொண்டு |
| என் பெண் | எனது பெண்ணானவள் |
| நோக்கி கண்டாள் | கூடவிருப்பவள் பார்ப்பதைக் கண்டு, தானும் பார்த்தாள். |
| அது கண்டு | இவள் பார்த்ததைக் கவனித்து |
| இ ஊர் | இந்த ஊரிலுள்ளவர் எல்லோரும் |
| ஒன்று | இல்லாத தொன்றை |
| புணர்க்கின்றதே | இருப்பதாகச் சேர்த்து வைக்கின்றனரே. |

கீழே. 'இன வளை யிழவேல்மின்' எனவொருத்தி சொன்னதைக் கேட்டு நடுத்தெருவில் நின்றிருந்தாள் ஒரு ஸ்திரீயானவள், ஏற்கனவே தன் பெண்மேல்

வந்த அபவாதத்தை நினைத்து, 'தன் பெண்ணை மனத்தில் வைத்துக்கொண்டு தான் இவள் இவ்வண்ணம் சொல்லுகிறாள்' என்று தனக்குள் பாவித்துக் குற்ற மிருப்பதாலே குறுகுறுத்த நெஞ்சினளாய் தன் பெண்ணின் மேல் சொல்வது தவறென்று தானேசொல்லுவதாமிது. 'என்ன என் பெண் செய்துவிட்டாள்? பாவம்; பெற்றவள் அருமையோடு மஞ்சள் பூசி மஞ்சனமாட்டும்படிச் சிறுபிள்ளை யான கண்ணன் காடுகளில் அலைந்துவிட்டுத் தன் வஸ்துக்களைக் கூடத் தான் எடுத்துவரமாட்டாதே வாட்டமுண்டு, அவன் தோழன்மார்கள் ஒவ்வொருவர் ஒவ்வொன்றாக அவன் வஸ்துக்களைக்கொண்டு தாங்களே ஆநிரையை மடக்கி யோட்டும்போது தானும் ஓடமுடியாமல், 'கையில் இருக்கும் சங்கத்தை யாவது ஊதுவன். இதைக்கேட்டு இவ்வாநிரை தெருத்தோறும் இனமினமாகப் பிரிந்து தங்கள் இடம் மீண்டு செல்லும்' என நினைத்து, அதை யூதுவதற்காகவும் அதற் குமேல் நடந்து வருவதற்காகவும் தன்னை யழைத்துவரும் தோழனின் தோளி லே ஒரு கை வைத்து ஊன்றி மற்றொரு கையால் சங்கமும் ஊதி வந்துகொண் டிருந்தான். இப்படி வாடிவரும் வகையை யொருத்தி பார்த்தவண்ணமே யிருந் தாள். அவளுடைய அருகிலே இருந்ததாலே அவளென்னதான் பார்க்கிறாள் என்று அறிந்துகொள்வதற்காக என் பெண்ணும் பார்த்தாள். இதிலென்ன இவள் குற்றமிருப்பது. நன்றாகப்பார்த்தவள் வேறொருத்தி. இவனோ சிறுபிள்ளை, வாடி வதங்கி வருகிறவன் இவளைக்காணும் தசையிலேயே யில்லை. கூடவிருந்த தாலே இவள் கண்ணுமங்கே சென்ற மாத்திரத்தைக்கொண்டு தங்களுக்குத் தோன்றின வாறு இவ்வூர் சொல்லுவதுதான் விசித்ரமாயிருக்கிறது' என்றபடி. முன்பின் பாசுரங்களிற்போல இங்கு அவன் அலங்காரங்களைச் சொல்லாமே இங்ஙனம் சொன்னது 'மோஹந்தருமுருக்களைப் பெண் காணவில்லை. ஏங்கின வடிவைப்பார்த்தால் என்ன மோஹம்' என்பதற்காக.

**செண்டு கோலாவது** பூச்செண்டு சொருகின விளையாட்டுக்கோலென் பர். **செண்டு** சவுக்காகையாலே சுரிகை முதலியன போலிதுவுமொரு மேய்க்கும் கருவி யாகலாம். **சங்கம்**. இதற்குத் தனியே யொரு வினை யில்லையாகையாலே **ஊன்றி** என்றதையே இதனுடனும் சேர்த்துச் சங்கம் ஊன்றிச் சங்கத்தைப் பிடித்துக்கொண்டு எனவுரைப்பர். சங்கம் குறித்த கண்ணன், அதாவது, சங்கத் வனியைக்குறிப்பாகச் செய்த கண்ணன் எனப்பொருளும் கொள்ளலாம். இங்கே 'உம்' என்பதில்லாவிடினும், 'பாடவுமாடக்கண்டேன்' என்ற விடத்திற் போல 'உம்' என்பதைச் சேர்த்துக்கொண்டு **மஞ்சளு** மித்யாதியோடு சேர்த்து அந்வயம் கூறலாம். **நிரை இனம்** என விரண்டு பதங்களின் பலனைப் பணித் துள்ளோம். **கண்டாள்** என்பதையும் வினைமுற்றாக்கி, என் பெண் முதலில் கண்டாள்; பிறகு நோக்கியும் கண்டாளென்றுரைப்பர். **அருகே நின்றாள்** என் றதற்கு அப்போது கண்ணனுக்கு அருகிலே நின்றனள் எனப்பொருள்கொள்வர். பதவுரைப்படியையும் பார்க்க. **அதுகொண்டு** என்ற சிறந்தபாடமே ஸ்ரீயரிசை தந்தது போலும். **கண்டு** என்பதற்குக் கொண்டு எனவாவது பொருள் கொள்க.

(ரு)

இவள் தன் பெண்ணை ஒன்று மறியாதவளாக நினைத்தாலும் அப்பெண்ணின் இருப்பு அப்போது எங்ஙனமெனில், அதை விளக்க மேற்பாசுரம்.—

**குன்றெடுத்தாநிரைகாத்தபிரான்கோவலனாய்க்குழல் ஊதியூதிக்**
**கன்றுகள்மேய்த்துத்தன்தோழரோடுகலந்துடன்வருவானைத்தெருவிற்கண்டு**
**என்றுமிவனையொப்பாரைநங்காய் கண்டறியேனேடிவந்துகாணாய்**
**ஒன்றுநில்லாவளைகழன்று துகிலேந்திளமுலையுமென்வசமல்லவே.** (256)

| | |
|---|---|
| நங்காய் | நற்குணம் நிறைந்தவளே! |
| ஏடி | தோழீ! |
| குன்று | (கோவர்த்தன) மலையை |
| எடுத்து | கையில் எடுத்து(க்குடையாக்கி) |
| ஆ நிரை | பசுக் கூட்டத்தை |
| காத்த | ரக்ஷித்தருளின |
| பிரான் | உபகாரகனும், |
| கோவலனாய் | இடைப்பிள்ளையாயிருந்து |
| குழல் | வேய்ங்குழலை |
| ஊதி ஊதி | பல படி ஊதிக்கொண்டு |
| தன் தோழரோடு கலந்து கன்றுகள் மேய்த்து | |
| உடன் வருவானை | கூட வருபவனுமானவனை |
| தெருவில் | அவன் வருமித் தெரு நடுவே |
| கண்டு | பார்த்ததும் |
| வளை ஒன்றும் நில்லா | இன வளைகளெல்லாம் கொஞ்சங்கூட நிற்கவில்லை |
| துகில் | (எனது) சேலையும் |
| கழன்று | தளர்ந்து |
| ஏந்து | உயர்ந்துவரும் |
| இள முலை உம் | இளமை பொருந்திய ஸ்தனங்களும் |
| என் வசம் அல்ல | எனக்கு அடங்கி நிற்கவில்லை. |
| இவனை ஒப்பாரை | இவனுக்கொத்திருப்பவரை |
| என்றும் | எப்போதும் |
| கண்டறியேன்—கண்டதில்லை | |
| வந்து காணாய் | நீயும் இங்கே வந்து காண்பாயாக. |

**கண்டறியேன்.** கண்டு நினைப்பதில்லை. கண்டிருந்தால் நினைப்பேன். கண்டதுமில்லை, அதனால் இப்போது நினைப்பதுமில்லை யென்றபடி. அன்றி, கண்ணாற் கண்டதும் பிறகு ஒப்பாரென மனத்தினால் தீர்மானிப்பதுமில்லை யென்றதாம். முதலில் சாலகவாசல் பற்றி நின்ற மங்கை யொருத்தி சொன்னதைக் கேட்டவளாய்த் தெருவிலே நிற்குமவள் இங்ஙனம் சொல்லுகிறாள். தோழீ! நீ 'இனவளையிழவேல்மின்' என்றாய். எனக்கு அதுவும் ஏற்பட்டது. உடுத்துள்ள துகிலும் கழன்றது. அவனைப் போல் நீயும் மனவுறுதி பெற்றிருக்கக் கூடாதோ வென்று நீ சொல்லலாம். ஸர்வ தேவஸமாராத்யனாய் மலையையே கையில் எடுத்து மாடுகளைக் காக்கும் மஹா புருஷன் இடைப்பிள்ளைகளோடு இடைப்பிள்ளையாகவே வந்து கன்று மேய்த்துக் குழலூதி வருமதனைக் கண்டமாத்திரத்திலே அவனைக் கிட்ட முடியாததாலும் அவன் நம்மைத் தாண்டி மேலேசென்று விடுவதாலும் மனம் நொந்து மெய் மெலிந்துவிட்டது. நான் என் செய்வேன். வளைகள் தாமாகவே அவனைக் கண்டு விழுந்தன. துகிலும் அவனைக் கண்டு கழன்று விடுகிறது. இப்படி மெய் மெலியும் சமயத்திலேயே ஸ்தனங்கள் மட்டும் கச்சைக் கிழித்துக் கிளர்ந்துபோகா நின்றன. கச்சினால் இறுக்கிக் கட்டப்பட்டும் கிளர்ந்தால் இனி அவை என் வசமாகுமோ?. நீயும் சாலகவாசலில் நிற்காதே இங்கே வந்து எதிரே நின்றுகாணாய். உனக்கு மிங்ஙனமே யாம் என்றபடி. **ஏந்திளமுலை.** ஏந்துகையாவது உயர்ச்சி. அன்றி, **ஏந்து** ஏந்தப்படவேண்டிய; அதாவது குன்றை யெடுத்தாற் போலே அவனெடுத்தேந்த வேண்டியவையான இவ்விள முலைகள் அவன் வசமே யன்றி என் வசமல்ல வென்றதாம். (சு)

'ஏடி! நீ உன் தாயின் பேச்சுக்கு நேர்விரோதமாகப் பேசுகிறாயே. உன் தாய் உன்னை யாருக்கோ கொடுக்க நினைத்து, உன்மேல் ஏதேனும் அபவாதம் வளர்ந்தால் அது தடைப்படுமோ வென்றஞ்சி உனக்குக் கண்ணனிடம் நோக்கில்லை யென்றாளே. நீ அவளெதிரிலே இங்ஙனம் பேசுகிறாயே' யென்று சிலர் கேட்க, உடனே அவள் தனக்குள்ள மனவுறுதியை அங்கு வந்துள்ள பெற்றோர் முதலான பந்துக்களிடம் விளக்கிக் கூறுகிறாள்.—

5. சுற்றிநின்றாயர்தழைகளிடச்சுருள் பங்கிநேத்திரத்தாலணிந்து
பற்றிநின்றாயர்கடைத்தலையே பாடவுமாடக்கண்டேனன்றிப்பின்
மற்றொருவற்கென்னைப்பேசலொட்டேன் மாலிருஞ்சோலையெம்மாயற்கல்லால்
கொற்றவனுக்கிவளாமென்றெண்ணிக் கொடுமின்கள்கொடீராகிற்கோழம்பமே

| | |
|---|---|
| அன்றி | கலந்துடன்வருவதைக் கண்டதேயன்றி |
| ஆயர் | இடைப்பிள்ளைகள், |
| சுற்றி நின்று | அவனுக்கு நாற்புறமும் நின்றுகொண்டு |
| தழைகள் | பீலிக்குடைகளை |
| இட | பிடித்துவர |
| (இக் குன்றெடுத்தாநிரை காத்தபிரான்) | |
| சுருள் | சுருண்ட |
| பங்கி | குந்தளங்களை |
| நேத்திரத்தால் | மயிற்றோகைகளால் |
| அணிந்து | அலங்கரித்து |
| ஆயர் | இடையர்களுடைய |
| கடைத்தலை ஏ | முன்புறத்திலேயே |
| பற்றி நின்று | பற்றுதலோடு இருந்து |
| பாட ஆட உம் | பாடிக்கொண்டு ஆடுவதையும் |
| கண்டேன் | பார்த்தேன். |
| பின் | இனி |
| மாலிருஞ் சோலை | திருமாலிருஞ்சோலையில் வசிக்கும் |
| எம் மாயற்கு அல்லால் | எமது ஆச்சர்யமானவனைத் தவிர்த்து |
| மற்றொருவற்கு | வேறொருவனுக்கு |
| என்னை பேசல் | என்னைக் கொடுப்பதாகப் பேசுவதை |
| ஒட்டேன் | சம்மதிக்கமாட்டேன். |
| கொற்றவனுக்கு | ஜயங்கொண்டவனுக்கே |
| இவள் ஆம் | இவள் ஆகக்கூடியவள் என்று எண்ணி |
| கொடுமின்கள் | இவனுக்கே கொடுங்கோள். |
| கொடீராகில | கொடுக்கப்போகிறீர் அல்லீராகில் |
| கோழம்பம் ஏ | குழப்பமே. |

அப் பிரான் கன்றுகள் மேய்த்துத் தன் தோழரோடு கலந்துடன் வருவதைக் கண்டது மாத்திரமன்றி, அவன் பாடியாடுவதையும் மயில்கண்கள் அணிந்த அவனது சுருள்பங்கியையும் கண்டு அவனை நான் காதலுற்றிருக்கிறேன். ஆகவே நீங்கள் உங்கள் இஷ்டப்படி என்னை எவனுக்கோ கொடுப்பதற்காக ஏதேனும் பேசுவதை இனி நான் ஸம்மதிக்கமாட்டேன். குன்றெடுத்து ஆநிரை காக்கும்படியுள்ள பெருமையும், ப்ரேமமும், ஆயரோடு ஆடிப்பாடுவதிலுள்ள ஸௌசீல்யமும், வடிவழகும், ஒப்பனையழகும் கொண்டு என்னை வளைகள் விழ துகில் கழற ஸ்தனங்கள் கிளர்ந்து குதுகலிக்கப் பண்ணித் தன் வசமாக்கின இக் கொற்றவனுக்கே யாவனென்பதை நன்குணர்க. ஆகவே வேறொருவனுக்குக் கொடுப்பது வேண்டாமாகில் வீட்டிலேயே சிறிது காலம் வைத்துக் கொள்ளுகிறோமென்று கூட நினைக்காமல் உடனே இவனுக்கென்னைக் கொடுமின்கள். இல்லையேல் வாழகில்லேன் என்று வெறு துணிவுடன் விளக்கினாள்.

**அன்றி.** இதை, **கண்டேன்** என்ற முன்வாக்யத்தோடு சேர்த்துப் பொருள் கூறினதை நோக்குக. பின் வாக்யத்திலே சேர்த்து, **அன்றி** அவனையன்றி என உரைத்து இதன் விவரணமேயாம் **மாலிருஞ்சோலை யெம்மாயற் கல்லால்** எனதென்பர். **மாலிருஞ்சோலை** யென்பதற்கு யமுனை யாற்றின் கரையிலே வ்யாமோஹிக்க எம்பெருமான் ஸங்கற்பித்துள்ள பெருஞ்சோலைகள் என்றும், திருமாலிருஞ் சோலையென்ற திவ்யதேச மென்றும் இரு பொருள் கொள்க. **எம்மாயற்கு** என்றதை எம் மாயற்கு, எம் ஆயற்கு என இருவிதமாகப் பிரித்துப் பொருள் உரைக்க. **கோழம்பம்.** இதொரு வழக்குச் சொல்லாயிருக்க வேண்டும். கோறம்பமே கோழம்ப மென்றும் சொல்வர். (ரு)

இனி வேறு வீதியில் தூரத்தில் நின்று கொண்டிருக்கும் கன்னிமார் அப் பெருங்கூட்டத்திலே யுட்புகுந்து அவனருகே சென்று பேசத் துணிந்து செய்யும் தீர்மானத்தைச் சொல்வது மேற்பாசுரம்—

6. **சிந்துரமிலங்கத்தன்திருநெற்றிமேல்திருத்திய கோறம்பும்திருக்குழலும்**
**அந்தரமுழுவத்தண்தழைக்காவின் கீழ்வருமாயரோடுடன்வளைகோல்வீச**
**அந்தமொன்றில்லாதவாயப்பிள்ளை யறிந்தறிந்திவ்வீதிபோதுமாகில்**
**பந்துகொண்டானென்றுவளைத்துவைத்துப் பவளவாய்முறுவலுங்காண்போந்**
**தோழீ.** (258)

| | |
|---|---|
| தன் திரு நெற்றிமேல் | தனது அழகிய நெற்றியிலே |
| சிந்துரம் | சிந்தூரப்பொடியும் |
| திருத்திய | சீர்படுத்திய |
| கோறம்பு உம் | அம்புபோன்ற திலகமும் |
| திருக்குழல் உம் | குந்தளங்களும் |
| இலங்க | ப்ரகாசிக்க |
| ஆயரோடு | இடைப்பிள்ளைகளோடு |
| உடன் | சேர்ந்து |
| வளைகோல் வீச | வளைந்தகோலை வீசுவதற்கு |
| அம் | அழகிய |
| தரம் | சிறப்பான |
| முழவம் | மத்தளங்களையுடைய |
| தண் | குளிர்ந்த |
| தழை காவின் கீழ் | மயிற்றோகைகளாலான சோலையின் கீழே |
| வரும் | வந்துகொண்டிருக்கும் |
| அந்தம் ஒன்று இல்லாத | ஒருவித குறைபாடுமில்லாத (அனந்தனை) |
| ஆயர் பிள்ளை | கோபகிசோரனை இவன் |
| அறிந்து அறிந்து | அங்கங்கேபோய் அனுக்ரஹிக்கவேண்டுமென்று நினைத்து நினைத்து |
| இ வீதி | இந்தத் தெருவிலும் |
| போதும் ஆகில் | செல்வானே யானால், |
| தோழீ! | (நாமெல்லோரும் சேர்ந்து) |
| பந்து கொண்டான் என்று | இவன் எங்கள் பந்தைக் கொள்ளை கொண்டான் எனச் சொல்லி |
| வளைத்து வைத்து | சுற்றிவளைத்து நிறுத்தி வைத்து |
| பவளம் வாய் | பவளம் போன்ற திருப்பவளத்தின் |
| முறுவல் உம் | புன்சிரிப்பையும் |
| காண்போம் | காணவேண்டும். |

**கோறம்பு.** கோறுதல் கொல்லுதல். காமிநிகளை வதைக்கும் கூர்மையுள்ளதோர் அம்பு போன்ற திலக மென்னலாம். குந்தளங்களும் திருநெற்றி மேல் விளங்குவதாம். **அந்தரமுழவம்.** அந்தரமாவது ஆகாசம்; 'முழங்க' என வொரு பதம் சேர்த்துக்கொண்டு முழவம் ஆகாசத்திலே முழங்க எனவு முரைக்கின்றனர். **வீச.** வளைகோல் வீசுவதற்கு இவ் வீதி வழியாகப் போவா னென்றதாம்.

**வீசா** என்கிற பாடம் ப்ராமாணிகமாகில், வீசிக்கொண்டு எனப் பொருள். செய்யா வாய்பாடு. **அந்த** மித்யாதி. இவனை 'அநந்தன்' ஓரளவுமில்லாதவன் என வேத மோதித்து. இவன் வளைகோல் வீசி விளையாடுகிற வ்யாஜமாய் நம்மைக் காண வருவான். கொங்கை போன்ற நம் பந்து கொண்டானென்ற கற்பனையையும் அதன் கருத்தையு மாராய்ந்தபோது அவனுக்கு முறுவல் பிறக்கும். **(இவ்வீதி.)** ஒரு வீதியிலுள்ளாரை மாத்திரம் இவன் மோஹிப்பதில்லையே. எல்லா வீதியிலும் எல்லோரையும் வசப்படுத்துகிறவனுயிற்றே. ஆகவே தன் கோலத்தோடு இங்கும் வருவானென்றபடி. **போதும்.** போதல் என்றது போல் போதுதல் என்ற வினையு முண்டு. செல்லுதல் அதன் பொருளாம். (கூ)

இனி, கண்ணனுக்கே மகளைக் கொடுக்க நினைத்திருந்த தம்மைப் போன்ற பெற்றோரின் மொழியை யாழ்வார் அருளிச்செய்கிறார்—

**7. சாலப்பன்னிரைப்பினே தழைக்காவின் கீழ்த்தன்திருமேனி நின்றொளிதிகழ**
**நீலநன்னறுங்குஞ்சிநேத்திரத்தாலணிந்துபல்லாயர் குழாநடுவே**
**கோலச்செந்தாமரைக்கண் மிளிரக்குழலூதியிசைபாடிக்குனித்தாயரோ**
**டாலித்துவருகின்றவாயப்பிள்ளையழகுகண்டேன் மகளயர்க்கின்றதே.** (259)

| | |
|---|---|
| சால | மிகவான |
| பல் | பல்வகையான |
| நிரை பின்னே | பசுக்கூட்டங்களின் பின்புறத்திலே |
| தழைகாவின் கீழ் | பீலிக்குடைகளாலான சோலைகளின் கீழே |
| தன் திரு மேனி | தனது திவ்யமங்களவிக்ரஹத்தின் |
| ஒளி | காந்தியானது |
| நின்று திகழ | நிலைபெற்று ப்ரகாசிக்க |
| நீலம் | நீல நிறமான |
| நல் | நன்மைபொருந்திய |
| நறு | மணம் கமழ்கின்ற |
| குஞ்சி | ஆண்மயிரை |
| நேத்திரத்தால் | மயிற்றோகைகளால் |
| அணிந்து | அலங்கரித்துக்கொண்டு |
| பல் ஆயர் குழாம் நடுவே | பல இடையரின் கூட்டத்தின் நடுவிலே |

| | |
|---|---|
| கோலம் செம் தாமரை கண் | அழகிய செந்தாமரைப்பூ போன்ற திருக்கண்கள் |
| மிளிர | ஒளிவிட |
| குழல் | வேய்ங்குழலை |
| ஊதி | ஊதிக்கொண்டும் |
| இசை பாடி | பாட்டைப் பாடிக்கொண்டும் |
| குனித்து | ஆடிக்கொண்டும் |
| ஆயரோடு | இடைப்பிள்ளைகளோடு |
| ஆலித்து | கோஷித்துக்களித்தும் |
| வருகின்ற ஆயர் பிள்ளை | வருகின்ற இடைப்பிள்ளையின் (கண்ணனின்) |
| அழகு கண்டு | (கீழ்ச்சொன்ன வகைகளிலுண்டான) அழகைப்பார்த்து |
| என் மகள் | எனது பெண்ணானவள் |
| அயர்க்கின்றது | (அனுபவிக்கப்பெறாததால்) பிரஜ்ஞையிழந்தவள்போலச் சோர்ந்துவிட்டாள். |

**நின்று திகழ.** நின்று திகழ்வதாவது கண்ணன் வந்து கொண்டேயிருந்தாலும் எங்கும் பரவி விளங்கும் ஒளி மட்டும் நிலைபெற்றிருப்பதாம். 'ஒளி திகழ நின்று' என மாற்றி அந்வயம் கூறில், அதற்கு 'வருகின்ற' என்றதோடு அந்வயமாம். அப்போது நிற்றலும் வருதலும் எங்ஙனம் சேருமென்ற சங்கைக் கிடமுண்டு. 'திருமேனியானது நின்றொளி விளங்க' என ஜீயருரை. **நல்.** குஞ்சிக்கு நன்மையாவது சுருட்சியும் நீட்சியும். **கண்மிளிர.** தோழரை மாறி மாறிக் காண்பதிலும் குழலூதுவதிலும் ஏற்படும் பலவித பார்வையைக் கருதி **மிளிர** வென்றதாம். இதுவும், ஆலித்தலும் இவன் தலைவனை விளங்கு

கின்றமையைக் குறிக்கிறன. **அயர்க்கின்றதே**- அயர்க்கின்றனள் என்னுமே அஃறிணையாகக் கூறினது, மகள் அசேதநப்ராயமாய்விட்டதைக் கொண் டென்க. (எ)

ஒருத்தி, தன் மகள் அல்லது தோழியான நங்கை அவன் எதிரில் வந்த போது பட்டதை அங்குள்ளார்க்குக் காண்பித்துச் சொல்வது மேற்பாசுரம்—

8. **சிந்துரப்பொடிக்கொண்டு சென்னியப்பித்திருநாமமிட்டங்கோரிலையந்தன்னால்**
**அந்தரமின்றித்தன்னெறிபங்கியை யழகிய நேத்திரத்தாலணிந்து**
**இந்திரன்போல்வருமாயப்பிள்ளையெதிர்நின்றங்கினவளை யிழவேலென்னச்**
**சந்தியில்நின்றுகண்டீர் நங்கைதன் துகிலொடுசரிவளை கழல்கின்றதே** (260)

| | |
|---|---|
| சிந்துரம் பொடி கொண்டு | சிந்துரப் பொடியால் |
| சென்னி | நெற்றியை |
| அப்பி | நன்றாகப்பூசிக்கொண்டும், |
| அங்கு | அச் சென்னியிலே |
| ஓர் இலை (அம்) தன்னால் | சிறந்ததொரு தளிரைக் கொண்டு |
| திருநாமம் | ஊர்த்துவ புண்டரத்தை |
| இட்டு | சாத்திக்கொண்டும், |
| தன் | தனக்கு அஸாதாரணமான |
| நெறி | நெறித்துள்ள |
| பங்கியை | குந்தளத்தை |
| அழகிய நேத்திரத்தால் | அழகான மயிற்றேகைகளால் |
| அந்தரம் இன்றி | இடைவிடாமல் |
| அணிந்து | அலங்கரித்துக்கொண்டும் |
| இந்திரன் போல் | தேவேச்வரனைப்போலே |
| வரும் | (வீதியில்) வருகின்ற |
| ஆயர் பிள்ளை | கோபகுமாரனை கண்ணனுக்கு |
| எதிர் நின்று | எதிரிலே (அவனைப்பார்க்க) நின்று |
| இனம் வளை | பலவகை வளைகளையும் |
| இழவேல் | இழந்துவிடாதே |
| என்ன | என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே |
| நங்கை | இந்தக் குணபூர்ணையானவள் |
| சந்தியில் நின்று | அவன் சந்திக்கும் இடத்திலே நின்று (அப்போது) |
| தன் | தனது |
| துகிலொடு | சீலையும் |
| சரிவளை | கைவளைகளும் |
| கழல்கின்றது | —கழன்றவளாயிருப்பதை |
| கண்டீர் | நீங்களே பார்த்தீர்கள். |

நெற்றியில் சிந்தூரமிலங்கினது ஆறும் பாட்டில் சொல்லப்பட்டிருப்பதால் இங்கே **சென்னி** யெனத் திருமுடியைச் சொன்னதாகுமென்றும், ஆகத் திருமுடியிலே அழகுக்காகச் சிந்தூரம் அப்பிக்கொண்டது பொருளாமென்றும் கூறுவர். அப்போது **அங்கு** என்பதற்கு முன் சொன்ன சென்னியில் எனப் பொருள் கொள்ள வியலாதாகையாலே திருநெற்றியை மனத்தால் நினைத்து **அங்கு** என்றார் எனவேண்டும். 'சுருள் பங்கி நேத்திரத்தாலணிந்து' என முன் சொன்னதைச் சொல்வது போல், சென்னியில் சிந்தூரமிலங்குவதும் முன் சொன்னதே என்றும் கொள்ளலாம். முன்னே சிந்துரம் என்று சிந்தூரப் பொட்டையும், இப்போது பூசும் சிந்தூரத்தையும் சொன்னதாகவும் கொள்க. கோறம்பு சாத்திக்கொண்டதை முன்னே சொல்லியிருக்கத் திருநாமம் சாத்திக் கொண்டதாக இப்போது சொல்வது எங்ஙனமெனில்—ஒரு தரம் வந்தபோது அதைச் சாத்தி வந்தான்; மறு தரம் திருநாமமிட்டு வந்தானென்னலாம். அல்லது மங்கைகள் அவன் வருவதற்கு முன்னமே அவன் கோலத்தைத் தாங்களே பாவித்துப் பலவகையாகச் சொல்லிக்கொண்டிருந்ததைப் பாசுரத்திற் கூறினதத்

தனே யெனவுமாம். **இலேயம்.** அம்—சாரியை. **கண்டீரென்பது** பொருளில்லாச் சொல்லாகில் **கழல்கின்றது** என அஃறிணைவினை வந்ததற்கு, முன் பாசுரத்திற் போல் கருத்தாம். இல்லேயேல், **கண்டீர்** பார்த்தீர் என்பதற்கு இது செயப் படுபொருளாம். **சரிவளே.** தோள்வளே யசையாது. கைவளேகள் சரியுமாதலால் சரிவளேயாம். (அ)

9. வலங்காதின்மேல்தோன்றிப்பூவணிந்து மல்லிகைவனமாலேமௌவன்மாலே
சிலிங்காரத்தால் குழல்தாழவிட்டுத்தீங்குழல்வாய்மடுத்தூதியூதி
அலங்காரத்தால் வருமாயப்பிள்ளேயழகுகண்டேன்மகளாசைப்பட்டு
விலங்கிநில்லாதெதிர்நின்றுகண்டீர் வெள்வளேகழன்றுமெய் மேலிகின்றதே. (261)

| | |
|---|---|
| என் மகள் | எனது பெண்ணானவள்—, |
| ஆயர் பிள்ளே | கண்ணன் |
| வலம் காதின் மேல் | தனது வலது திருக்காதின் மேற்புறத்தில் |
| தோன்றிப்பூ | செங்காந்தற் பூவையும், (திருமார்பிலே) |
| வனம் மல்லிகை மாலே | காட்டுமல்லிகளின் மாலேயையும் |
| மௌவல் மாலே | முல்லே மாலேயையும் |
| அணிந்து | சாத்திக்கொண்டும், |
| சிலிங்காரத்தால் | அழகுக்காக |
| குழல் | திருக்குழலே (மயிர்முடியை) |
| தாழவிட்டு | தொங்கவிட்டுக்கொண்டும், |
| தீம் குழல் | மதுரமான வேய்ங்குழலே |
| வாய்மடுத்து | திருப்பவளத்தில் வைத்து |
| ஊதி ஊதி | மேன்மேல் ஊதிக்கொண்டும் |
| அலங்காரத்தால் | (பெருந்திரளுக்கு) அலங்காரமாக |
| வரும் | வருவதிலிருக்கும் |
| அழகு கண்டு | அழகைப்பார்த்து |
| ஆசை பட்டு | அதிக வாசை கொண்டதால் |
| விலங்கி நில்லாது | கொஞ்சம் ஒதுங்கி நிற்காமல் |
| எதிர் நின்று | அவன் எதிரிலேபோய் நின்று |
| வெள் வளே | வெண்மை நிறம்கொண்ட வளேகள் |
| கழன்று | கைகளிலிருந்து நழுவப்பெற்று |
| மெய் | உடலும் |
| மெலிகின்றது | மேன்மேல் இளேத்து வருகிறதை |
| கண்டீர் | நீங்களே பார்த்தீர். |

செங்காந்தல் பூவுக்குத் தோன்றி யென்றே பெயராகையாலே **மேல்** என்பது முன்பதத்தோடு இயையும். இப்போது ஒரு காதில் இட்டுக்கொண்டவன் மற்றொரு காதில் ஏன் இடவில்லே யென்ற சங்கைக்கு இடமில்லே. காது குத்தின விடத்திலே சாத்திக்கொண்டது இங்கே சொல்லப்பட்டாலன்றோ அவ்வித சங்கை பிறப்பது. காதின் மேல் கர்ணவதம்ஸமாகச் சாத்திக்கொண்டது இங்கே கருதப்பெற்றதாம். சீலேக்குதம்பைப் பாசுரத்தில் இருகாதிலு முள்ளதாகச் சொல்லியிருப்பதாலே இப் பொருள் கொள்ளாமே நின்றது. **மல்லிகைவனமாலே.** அழகுக்கும், மிகுதிக்கும், துளசிக்கும் கூட வனமென்று பெயருண்டாகையால் இங்கேதேனும் பொருள் கொள்க. **மௌவலாவது** முல்லே. மல்லிகை வேறு, முல்லே வேறு. **சிலிங்காரம்.** ச்ருங்காரம். இவன் குழல் விட்டிருந்த வழகு மங்கைமார்களுக்கு ச்ருங்கார ஸம்ருத்திக்குக் காரணமாயிருந்தது. **ஊதியூதி** என இருதரம் சொன்னது பலவகை ப்ராணிகளேயும் பரவசமாக்கும் பலவகைப் பாட்டின் படிகளேக் குறிக்க வாம். **வரும்.** இதை ஆயப்பிள்ளே யென்ற பதத்தோடேயே சேர்க்கலாம்; **அழகு** என்றதோடு சேர்க்கவேண்டுமென்பதில்லே. **தீம்.** குழலே மதுர மென்றது அதன் ஓசையின் இனிமையைக் கொண்டு. **வெள்வளே** சங்குவளே. **மெய் மெலிகின்றது.** வளே கழன்று விடும்படி மெலிந்ததோடு நிற்காமல் அவன் செல்லச் செல்ல உருமே

தெரியாதபடிக்கு மேன்மேல் மெலிந்து வருகிறதென்றவாறு. **கண்டீர்.** என் மகளானவள் எதிர்நின்று வளைகழலுதலும் மெய்மெலிதலுமுற்றதைக் கண்டீர். முன் பாசுரத்திற்போலவே இங்கும் **கண்டீர்** என்பதைக் கொள்க. (௯)

10. **விண்ணின்மீதமரர்கள் விரும்பித்தொழ மிறைத்தாயர்பாடியில்வீதியூடே**
**கண்ணன்காலிப்பின்னேயெழுந்தருளக்கண்டிளவாய்க்கன்னிமார் காமுற்ற**
**வண்ணம், வண்டமர்பொழிற்புதுவையர்கோன்விட்டுசித்தன் சொன்ன மாலை பத்தும்**
**பண்ணின்பம்வரப்பாடும்பத்தருள்ளார் பரமானவைகுந்த நண்ணுவரே.** (262)

| | |
|---|---|
| அமரர்கள் | தேவர்களானவர்கள் |
| விரும்பி | கண்ணனிடத்திலே வ்யாமோஹங்கொண்டு |
| விண்ணின் மீது | ஆகாயத்திலே இருந்து |
| தொழ | ஸேவித்திருக்கும்படி |
| | கண்ணன் |
| மிறைத்து | ஆயாஸமுற்று |
| ஆயர்பாடியில் | இடையரின் சேரியில் |
| வீதி ஊடே | தெருவிலே |
| காலி பின்னே | பசுக்களுக்குப் பின்னாக |
| எழுந்தருள கண்டு | திரும்பி யெழுந்தருளுவதைப்பார்த்து |
| இள ஆய் கன்னிமார் | யௌவனம் பெறும் இடைப்பெண்கள் |
| காமுற்ற வண்ணம் | காதல்கொண்ட விதத்தைப் பற்றி |

| | |
|---|---|
| வண்டு அமர் பொழில் புதுவையர் | வண்டுகள் நிலைத்திருக்கும் சோலைகள் உள்ள ஸ்ரீ வில்லிபுத்தூரில் வஸிப்பவர்க்கு |
| கோன் | நாதனான |
| விட்டுசித்தன் | ஸ்ரீவிஷ்ணுசித்தன் (பெரியாழ்வார்) |
| சொன்ன | இயற்றிய |
| மாலை பத்தும் | பத்துப்பாசுரங்களையும் |
| பண் இன்பம் வர | இசையின் இனிமை மேலிடும்படி |
| பாடும் | பாடுகின்ற |
| பத்தர் | மஹாபக்திமான்களை |
| உள்ளார் | பெற்றுள்ளவர்கள் |
| பரமான | எல்லாவிதத்திலும் மேலான |
| வைகுந்தம் | ஸ்ரீவைகுண்டத்தை |
| நண்ணுவர் | சேர்வர். |

விண்ணின் மீதமரர்களென்று பரமாகாசத்திலுள்ள நித்ய ஸூரிகளைச் சொன்னதுமாம்; ஸ்வர்கலோகத்திலுள்ள ப்ரம்ம ருத்ராதிகளைச் சொன்னதுமாம். எம்பெருமானுக்கு விண்ணே போகஸ்தானமாகவும் அமரர்கள் ஸேவகர்களாகவுமிருந்தும், ஆய்ப்பாடியையும் ஆய்க்கன்னிமாரையும் அவன் ஆதரித்தான் என அவனுடைய நீர்மை யிங்கே தோற்றும். 'அமரர்கள் விண்ணின் மீது விரும்பித் தொழ' என வந்வயம் கொள்ளில், தங்கள் இருப்பிடத்திலேயே இருந்து இவனை யனுபவிக்கக் கூடுமாயினும் இவ்வளவு ஸுலபமான இவனது திருமேனியின் அருகே நிற்கவும் இவன் பெருமையைப் பூலோகத்தார்க்கு விளக்கவும் விரும்பி இங்கு ஆகாசத்திலே வந்து தொழுதனரென்க. **மிறைத்து.** அவர்களை யநாதரித்து என வுரைப்பர். மிறைதல் துன்பப்படுதலாகையாலே பூவுலகிலுள்ளவரும் அவர்களைப் போல் தன்னை யநுபவிக்கவில்லையே யென வருத்தமுற்று எனப் பொருளாம். அன்றி, காலிப் பின்னே யெழுந்தருளுவது காலையிலா மாலையிலா வென்று ஐயப்படாதபடி மாலையில் எழுந்தருளும்போது கண்டு காமுற்றதை யிங்கே சொன்னதெனத் தெளிவாகைக்காக **மிறைத்து** என்றதாம். 'வருகையில் வாடிய பிள்ளை கண்ணன்' என்று கீழே சொன்னதைக் காண்க. **வண்டமர்.** புதுவையில் வண்டுகள் கூட இங்ஙனம் பாடி வரும் என்றதாம். பண்ணின்பம் வரப் பாடும் = இன்பம் வரப் பண் பாடும்

எனவும் அந்வயமாம். **இன்பம்வர.** தங்களுக்கு இன்பம் மேலிட; அல்லது கேட்பவருக்கு இன்பம் உண்டாகும்படி. **பத்தருள்ளார்** என்றதற்குப் பத்தரா யிருப்பவர் என்றதை விடப் பத்தரைப் பெற்றவர் எனப் பொருள் கொண்டால் ஸம்பந்தி பர்யந்தமாக எல்லோர்க்கும் நற்கதி கிடைக்கும் என்றதாம். **பரமான வைகுந்தம்.** 'எம்பெருமான் காலிப்பின்னே எழுந்தருள வாய்ப்பாடி வந்தபிறகு வைகுந்தத்தில் நமக்கென்ன வென்ன வேண்டா. அது பரமானது. அவன் இங்கு எழுந்தருளினுனென்றால் அங்கே அவன் அனுபவம் இல்லை யென்று நினைக்காதீர்கள். அங்குச் சென்றால் இங்குள்ளவனையு மனுபவிக்கும்படி ஸ்வரூபம் பெறலாமென்று அருளிச்செய்தபடி. இப்படி ஸ்த்ரீகள் பசுக்கள் வரையிலுள்ள ஸர்வப்ராணிகளிடத்திலும் கண்ணனுக்குள்ள ஸ்நேஹம் சொன்னதாம். கீழ்ப் பாசுரங்களிலே கண்ணன் வருவதைக் கண்டனர் ஆய ரென்பது மட்டும் சொல்லி, இங்கே விண்ணோர் விரும்பி அப்போது தொழுததை யும் சொன்னதாலே இப் பத்தாவது பாசுரமும் அது விஷயமாக வொரு விசே ஷத்தைக் குறித்துக்கொண்டு முதற்பாதியால் கன்னிமார் காமுற்றதைக் கூறுவ தால், 'சொன்ன மாலை பத்தும்' என்றது பொருந்தும். (ய)

**ப்ரபந்தரக்ஷையில் 3. 4. தழைகளும் தோங்கலும் உரை முற்றிற்று.**

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

---

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

## பெரியாழ்வார் திருமொழி 3, 5 (கோவர்த்தனக்குடை)

# அட்டுக்குவி.

கண்ணன் கோகுலத்திற் செய்தருளின பலவகை லீலைகளில் கோவர்த்த நோத்தாரணமென்பது மிகவும் சிறந்தது. ப்ராப்தமான பகவதாராதனத்தை யிழந்து தேவதாந்தரங்களை ஆராதித்துவந்த இடையரின் மதியின்மையைப் போக்கினதின் பலனுகை வேறுபட்ட திது. இது மற்ற லீலைகள் போல் அஸுர ஸம்ஹாரரூபமானதன்று. தேவதைகளுக்கு முள்ள அஸுரஸ்வபாவத்தை யழிக்கக்கூடியதாயிருந்தது. சிறிய குட்டன் தனது கையால் பெயர்த்தெடுத்து விரல் நுனியில் ஏழு நாள் பூராவும் இடைவிடாமல் வாட்டம் ஆட்டமின்றிக் கோவர்த்தனத்தைத் தரித்ததென்பதைவிட வீரச்செயல் எது பெரிதாம்? ஆகவே இதன் பெருமையைக் கண்டு பரமைகாந்திச்ரேஷ்டரான பெரியாழ்வார் இதனைத் தனியே தம் தன்மையிலேயே யனுபவித்தினியராகிறார் இத்திருமொழி யில்.

இதில் ஒவ்வொரு பாசுரத்திலும் பூர்வார்த்தம் கண்ணன் மலை யெடுத்ததைக் காரணத்துடன் சொல்வது. உத்தரார்த்தமானது பெரும்பாலும் மான்,

யானை, சிங்கம், குரங்கு முதலான பல ப்ராணிகளும், மனிதரும் மன்னியிருக்கும்படி பெரிய காடுகளும் நீரருவிகளும் நிறைந்து ஆநிரை காக்கக் கூடியதாகவே அம் மலை யியற்கையிலிருந்தமையைக் கூறுவதும், கண்ணன் கையினால் தாங்கி நின்ற காலத்திலும் அது அனேகமாய் அவ் வண்ணமிருந்ததாகக் கூறுவதுமாகும். மலை முழுவதும் ஏழு நாளும் மழை வெள்ளம் மிகவாகியிருக்க, கோ கோபர்கள் கீழேயிருக்க, அப்போது அது எங்ஙனம் ப்ராணிகளுக்கு அனுகூலமாயிருந்ததாமென வேண்டா. எம்பெருமான் மலையை யெடுத்துக் கவிழ்த்தன்றோ குடையாகப் பிடித்தது. ஆகவே மலையின் அடிப்பாகமே மழையில் அடிபட்டது. தலை கீழாக விருந்ததாலே அக் காலத்தில் அங்குள்ள ப்ராணிகளுக்கும் அபாயமொன்றும் நேராமலிருந்தது. பசுக்களும் பசியின்றி மேய்ந்துறங்க அனுகூலமாயிற்று. இடையர்களும் கோகுலத்திற் போலே அங்குக் குகைகளில் புகுந்து பரமாநந்தத்துடன் வஸித்து வந்தனர். இதற்காகவே எத்தனை நாளானாலும் எல்லாம் ஸுகப்பட அதை அவன் தலைகீழாக்கித் தாங்கி யருளினான். எனவே **மறித்தமலை, கவித்தமலை** யென இங்கே ஆழ்வாரும்,

'அதோமுகாவஸ்திதமேருகல்பம் சைலம் த முத்காய சரண்யகோப: ।
உதஞ்சயந் ஸத்வர மூர்த்வமூலஞ் சக்ரே மஹேந்த்ரம் சமிதார்த்தகர்வம் ॥

𑌅𑌧𑍋𑌮𑍁𑌖𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍇𑌰𑍁𑌕𑌲𑍍𑌪𑌂 𑌶𑍈𑌲𑌂 𑌤𑌮𑍁𑌤𑍍𑌥𑌾𑌯 𑌶𑌰𑌣𑍍𑌯𑌗𑍋𑌪𑌃 ।
𑌉𑌦𑌞𑍍𑌚𑌯𑌨𑍍 𑌸𑌤𑍍𑌵𑌰𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌮𑍂𑌲𑌂 𑌚𑌕𑍍𑌰𑍇 𑌮𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌶𑌮𑌿𑌤𑌾𑌰𑍍𑌥𑌗𑌰𑍍𑌵𑌮𑍍 ॥

என்று யாதவாப்யுதயத்தில் (7) ஸ்ரீ தேசிகனும் அருளிச்செய்தபடி.

1. **அட்டுக்குவி சோற்றுப்பருப்பதமுந்தயிர்வாவியுநெய்யளறுமடங்கப்**
**பொட்டத்துற்றுமாரிப்பகைபுணர்த்த பொருமாகடல்வண்ணன்பொறுத்தமலை**
**வட்டத்தடங்கண்மடமான்கன்றினைவலைவாய்ப்பற்றிக்கொண்டு குறமகளிர்**
**கோட்டைத்தலைப் பால்கொடுத்துவளர்க்குங் கோவர்த்தனமென்னுங்**
**கொற்றக்குடையே.** (263)

அட்டு — சமைத்து
குவி — குவிக்கப்பெற்ற
சோறு பருப்பதமும் — அன்ன மலைகளையும்,
தயிர் வாவி உம் — தயிர் ஓடைகளையும்,
நெய் அளறு உம் — நெய்யாகிற சேற்றையும்
அடங்க — முழுதும்
பொட்ட — விரைவாக
துற்று — புசித்து
மாரி பகை — மழையை விளைவிக்கும் த்வேஷத்தை
புணர்த்த — உண்டாக்கினவனாய்
பொரு மா கடல் வண்ணன் — அலை மோதும் பெருங்கடலுக்குச் சமனுமான கண்ணன்
பொறுத்த மலை — தாங்கிய மலையானது—;
வட்டம் — வட்டவடிவமாய்
தட — விசாலமான
கண் — கண்களை யுடையனவும்
மட — மடமையுடையனவுமான
மான் கன்றினை — மான் கன்றுகளை
வலைவாய் — வலைமுகமாக
பற்றிக் கொண்டு — பிடித்துக்கொண்டு
குறமகளிர் — குறவச்சாதிப் பெண்கள்
கொட்டைத் தலை — பஞ்சின் சுருளின் நுனியால்
பால்கொடுத்துவளர்க்கும் (இடமாய் இப்படிப் பெரிய காடுகள் நிறைந்திருப்பதாலே)
கோவர்த்தனம் என்னும் — எப்போதும் கோக்களைக் காத்து இப்பெயர் பெறுவதான
கொற்றம் குடை — ஜயசீலமான குடையாயிருந்தது.

**அட்டு.** வினையெச்சம். அடுதல் சமைத்தல். அன்னமலைகள் அனேகங்கள் இருந்தன வென்பதை, 'ஸமேகைகலாஸங்கை ரஸங்க்யை: ஸவ்யஞ்ஜனை: ஸாதரமந்நகூடை:' என்ற ச்லோகத்திலே ஸ்ரீ தேசிகன் அருளிச்செய்தார். **போட்ட** வென்பது விரைவாக வென்ற பொருளிலே ப்ரயோகிக்கப்படுகிறது. **போட்டெ**னல் சீக்கிரக்குறிப்பு. **துறுதல்.** புசித்தல். **துற்றி** எனவும் படிக்கின்றனர். **போருமா கடல்வண்ணன்.** அலைமோதுவதுபோன்றதாவது 'வானத்திலுள்ளீர் வலியீருள்ளீரேல் அறையோ வந்து வாங்குமின்' என்பவன் போலிருப்பதாம். கடலில் பல மலைகளும், ஓடைகளும், சேறும் இருக்குமிடம் தெரியாமே மறைந்து விடும். இங்ஙனமே இவனுள் இவை யெல்லாம் மறைந்ததாலும் கடல்வண்ணனென்றதாம். முழுவுலகினை ம்ருத்யுவுடன் சேர்த்து விழுங்கு மிவனுக்கு இவை எவ்வளவாம்? **பால் கொடுத்து.** குறமகளிர் மான்குட்டியைப் பிடிப்பது தங்களுக்காகவேயாம்; கூட வந்திருக்கும் கோபர்களுக்குப் பிடித்துக் கொடுத்துப் பசுவின் பாலைக் கொண்டு வளர்ப்பதுமாம். ஆகக் குறமகளிர்க்குப் பாலேதென்ன வேண்டா. பசுக்கன்றுக்குப் போலே மான்கன்றுக்கும் வாயில் இலையால் வார்க்கலாமே; பஞ்சுச்சுருளால் கொடுப்பதென் எனில், மிகவும் சிறிய குட்டியானது முலையுண்ணும் வகையிலே பால் அருந்தவேண்டியிருப்பதால் பஞ்சுச்சுருள் கருவி யாவதென்க. அன்றி, பருத்திக்கொட்டையிலிருந்து பால் பிழிந்து பிராணிகளுக்குக் கொடுப்பதுண்டென்பர். கொட்டையைக் கொடுப்பது பெரிய மாடுகளுக்காம்; ஆகத் தன்னைப் பால் கொடுத்து வளர்க்கும் தாயைப் பிரிந்த கன்றுக்குத் தாய்ப்பாலில்லையாகிலும் கொட்டைத்தலைப்பால் கொடுக்கப் பெற்றதென்றதாம். **கொட்டைத்தலைப்பால்** பருத்திக் கொட்டையை இடமாகவுடைய பால்; அதன் பாலென்றபடி. **கோற்றம்** ஜயம். கோக்களை வளர்ப்பதுமட்டு மின்றி பேராபத்திலிருந்தும் காத்துத் தேவேந்திரனையும் ஜயித்ததிதென்றபடி. (க)

2. வழுவொன்றுமில்லாச் செய்கைவானவர்கோன் வலிப்பட்டு முனிந்து விடுக்கப்பட்ட
மழைவந்தெழுநாள்பெய்துமாத்தடைப்ப மதுசூதனெடுத்துமறித்தமலை
இழவுதரியாததோரீற்றுப்பிடி யிளஞ்சீயஞ் தொடர்ந்துமுடுகுதலும்
குழவியிடைக்காலிட்டெதிர்ந்து பொருங் கோவர்த்தனமென்னுங்கோற்றக் குடையே. (264)

| | |
|---|---|
| வழு ஒன்றும் இல்லா | குறை கொஞ்சங்கூட இராத |
| செய்கை | செயல்களை யுடைய |
| வானவர் கோன் | தேவேந்த்ரனானவன் |
| வலிப்பட்டு | வலியானுகி |
| முனிந்து | கோபித்து |
| விடுக்க பட்ட | ஆஜ்ஞை செய்ததின்மேல் கிளம்பின |

| | |
|---|---|
| மழை | மேகங்கள் |
| வந்து | மலைக்கு நேராக மேலே வந்து குவிந்து |
| மாத்து எழுநாள் பெய்து | வரிசையாக எழுநாள் விடாமற் பெய்து |
| அடைப்ப | (இடையரையும் பசுக்களை யும் எங்கும்போகாதபடி) தடுத்தபோது |

| | | | |
|---|---|---|---|
| மதுசூதன் | எம்பெருமான் (கண்ணன்) | குழவி | தன் குட்டியை |
| எடுத்து மறித்த | கையாலெடுத்துத் தலைகீழாகத் திருப்பின | கால் இடை | தன்னுடைய நாலுகால்களின் நடுவே |
| மலை | மலையானது, | இட்டு | நிறுத்திக்கொண்டு, |
| இழவு | கஷ்டத்தை | எதிர்ந்து பொரும் | எதிர்த்துப் போர் செய்யுமிடமாய் (ஆகவே) |
| தரியாதது | தாங்காததாகிய | கோவர்த்தனம் என்னும் | கோவர்த்தனமென்ற பேர் பெறும்படி பெரிதான |
| ஓர் | ஒரு | கொற்றம் குடை | ஜயசீலமான குடையாயிருந்தது. |
| ஈற்று பிடி | ப்ரஸவித்திருக்கும் பெண்யானையானது | | |
| தொடர்ந்து | பின்புறம்வந்து | | |
| இள சீயம் முடுகுதலும் | சிங்கக்குட்டி எதிர்ப்பதையும், | | |

**வழுவொன்றுமில்லாச் செய்கை.** தான் இந்திரப்பதம் பெறுவதற்குச் செய்யவேண்டும் சடங்குகளைப் குறைவறச் செய்தவன். இந்த்ரபதம் பெற்ற பிறகு அவனுடைய செயல்களிலும் ஒரு குறையுமிருந்ததில்லை. நினைத்தபடியே எல்லாச் செயல்களையும் நடத்திவந்தவன். இது வானவரென்பதோடும் சேரும். அவர்களே இவ்வண்ணமான செய்கை யுடையரென்றால், அவர்களின் கோனை யிவனுக்குக் கேட்கவேண்டுமோ? ஆகவே அவன் இதையும் செய்ய வலிப்பட்டான். **வலிப்பட்டு** இந்திரன் வலியில் அகப்பட்டு என்று மழையை விசேஷிப்பர். **முனிந்து** என்பதற்குப் போலே, அதற்கு முன்னுள்ள **வலிப்பட்டு** என்பதற்கும் இந்திரனே கருத்தாவாகலாம். வலிப்படுதல் = வலிதாதல். **விடுக்கப்பட்ட** என்பதை ஒரே பதமாகவும் கொள்வர். **மாத்தடைப்ப** என்ற பாடமே ஜீயருரையிலும் காண்கிறது. மாத்து = வரிசை. மேகங்கள் வரிசை க்ரமமாகப் பெய்தன வென்னவுமாம்; இடைவிடாமல் வரிசையாக ஏழு நாள் என்னவுமாம். **அடைப்ப.** அடைத்தல் தடுத்தல். பசுக்களையும் இடையரையும் இடைச்சிகளையு மென்றது சொல்லாமலே விளங்கும். **மாத்தடுப்ப** என்ற பாடம் கொண்டு மா என்பது விலங்கின் பொதுவென்று பசுக்களைத் தடுக்கவே எனப் பொருள் உரைப்பர் சிலர். **மாற்றடைப்ப** என்ற பாடம் வைத்து மாற்று = புறம்புபோக்கற்கையை அடைப்ப என்பர் மற்றும் சிலர். **இழவு தரியாதது.** ப்ரஸவக் கஷ்டம் தாங்காதது, குழவியின் அழிவை நினைத்து மனம் தாங்காததென்றவாறுமாம். **முடுகுதல்.** விரைதல், கிட்டுதல். தொடர்ந்து முடுகும் இளஞ்சீயத்தை என்றபடி. 'முடுகுதரும்' எனப் பாடமிருக்குமாகில், தரு என்றது துணைவினை. இது சிங்கத்திற்கு, அல்லது குழவிக்கும் விசேஷணமாம். 'முடுகுதலும்' என்றதற்கு முடுகினவளவிலே எனவு முரை செய்வர். இப்படிச் சிங்கங்களும், அவற்றோடு போர் புரியும் யானைகளும் நிறைந்த பெரிய காடுகள் கொண்ட மலையாகையாலே கோக்கள் நன்கு மேய்ந்து வளரும்படி யிருந்ததாலும் கோவர்த்தனமாயிற்றென்றபடி. (உ)

3\. அம்மைத்தடங்கண்மடவாய்ச்சியரு மானையருமாநிரையுமலறி
எம்மைச்சரணே(ணே)ன்று கொள்ளேன்றிரப்ப விலங்காழிக்கையேந்தை
யெடுத்தமலை
தம்மைச்சரணென்றதம்பாவையரைப் புனமேய்கின்றமானினங்காண்மினென்று
கோம்மைப்புயக்குன்றர் சிலைகுனிக்கும் கோவர்த்தனமென்னுங்கொற்றக்
குடையே. (265)

| | |
|---|---|
| அ | அந்த (கண்ணனுக்கிணங்கியே நடந்துவருகின்ற)— |
| மை | மையை யணிந்த |
| தட கண் | விசாலமான கண்களை யுடைய, |
| மடம் | மடப்பமுமுள்ள |
| ஆய்ச்சியரும் | கோபஸ்திரீகளும் |
| ஆன் ஆயரும் | கோரக்ஷணத்தை விருத்தியாகக்கொண்ட கோபரும் |
| ஆநிரை உம் | பசுக்கூட்டமும் |
| அலறி | கதறிக்கொண்டு |
| எம்மை | எங்களை |
| சரண் என்று | உனது திருவடியாக (ஆச்ரயித்தவர்களாக) |
| கொள் | திருவுள்ளம் பற்றவேண்டும் |
| என்று இரப்ப | என ப்ரார்த்திக்க (சரணாகதி செய்ய), |
| இலங்கு ஆழி | ஒளிவீசும் மோதிரங்கள் உள்ள |

| | |
|---|---|
| கை | திருக்கையை உடைய |
| எந்தை எடுத்த மலை | எனது ஸ்வாமியான கண்ணன் எடுத்த மலையானது, |
| கொம்மை | திரட்சி யுற்ற |
| புயம் | புஜங்களை யுடைய |
| குன்றர் | மலைவாசிகள் (குறவர்) |
| தம்மை சரண் என்ற | தங்களை அடைக்கலமாகச் சேர்ப்பித்திருக்கும் |
| தம் பாவையரை | தமது பெண்களைக் குறித்து |
| புனம் மேய்கின்ற | வயல்களை மேய்ந்துவரும் |
| மான் இனம் | மான்களின் கூட்டத்தை |
| காண்மின் என்று | பாருங்கோள் என்று சொல்லி |
| சிலை | தங்கள் வில்லை |
| குனிக்கும் | வளைக்குமிடமான கோவர்த்தனமென்னும் கொற்றக்குடையே. |

**அம்மைத்தட.** அகரச் சுட்டு ஆய்ச்சியர் ஆனாயர் ஆநிரை இம் மூன்றிலும் சேரும். அம் எனப் பிரித்து அழகிய கண் எனப் பொருளும் கொள்வர். ஆனாயர் ஆயருக்குப் பணத்தை விருத்தி செய்வது, வர்த்தகம், பசுக்களைக் காப்பது எனத் தொழில்கள் பல. இவர்கள் மூன்றும் தொழிலைக் கொண்ட குலத்தினர் என்றதாம். 'எம்மைச் சரணென்று கொள்' என ஏகாரபாடம் ஜீயர் ஆதரித்ததாகும். எங்கள் விஷயத்திலே ரக்ஷகனாய்ப் பொருந்தியருளவேணுமென்றது அதன் பொருளாம். 'என்று கொள்' என்கிற பாடத்தில் சரண் என்பதற்கு ஶரணம் = அடைக்கலம் எனப்பொருள். எங்களை ரக்ஷ்யவஸ்துவாகக் கொள் என்றபடி. சரண் என்பதற்கு ஶரணம், ரக்ஷகன் என்ற பொருளிலும் சரண் என்று = நானே ரக்ஷகனென்று நீ நினைத்து, எம்மைக் கொள் எனவுரைக்கலாம். 'சரணென்றுகொள்' என்ற பாடத்திலும் அர்த்தக்லேசமுண்டு.

**இலங்காழிக்கை.** ஆழியாவது திருவாழி = சக்கிரம் எனவுங் கூடுமாகிலும், கண்ணன் தற்சமயம் திருவாழி யேந்தி நிற்கவில்லையாகையாலும், மோதிரங்கள் அணிந்திருக்கக் கூடுமாகையாலும், ஆரும்பாட்டின் அர்த்தத்தை யருளிச் செய்தபோது ஸ்ரீதேசிகன், 'ரத்நோர்மிகா ரச்மி சலாகம்' என்று மோதிரங்கள் இலங்கினமையைக் குறித்திருப்பதற்கேற்பவும் ஆழியாவது மோதிரம் என்றது.

திருவாழிக்கையன் எடுத்த மலையெனப் பொருள்கொள்ளில், இவன் திருக்கையில் எடுத்த மலை திருவாழியின் சிறப்பைப் பெற்றதென்ற கருத்தைக் கொள்க. இதனையும் ஸ்ரீ தேசிகன் அருளிச் செய்தனர்.—

'[illegible] ।
[illegible] ॥

' ப்ரஸூததாராப்ரதிபந்நசைத்யம் ப்ராப்தாரமத்ரிம் ப்ரபுரத்புதாநாம் ।
ஸுதர்சநாதப்யதிகாமநைஷீத் பவித்ரதாம் பாணிஸரோஜயோகாத்'

ச்லோகங்களின் பொருளை அப்பய்யதீக்ஷிதர் உரையிற் கண்டுகொள்க. பவித்ர பதத்திற்கு, 'சரணம் பவித்ரம் விததம் புராணம்' என்கிற ச்ருதிப்படியில் ஸுதர்சந விஷயத்திலே ப்ரயோகமும் கவனிக்கத் தக்கதாம்.

**தம்மைச் சரண்.** தம்மை யென்பதற்குப் பாவையர் தங்களை யெனப் பொருள். **தம்மை**=குன்றரை யெனக் கொள்ளில், **சரணென்ற** என்றதற்கு நீங்களே ரக்ஷகர் என்று தம்மை யிரந்த எனப்பொருளாம். ஜீயருரைப்படி **தம்மை** இத்யாதிக்குக் கருத்தாவது—புனத்திலுள்ள பாவையரின் கண்களைக் கண்டு அவை மான்கண்களைப் போலிருந்ததால் அவர்களை மானாக நினைத்து இவர் நம்மை யண்டின பெண்கள் எனத் தெளியாமல் அவர்கள் மேலே சிலை வளைத்தனர் குன்றரென்றதாம். திருவாய்மொழிப்பிள்ளையுரைப்படியைப் பரிஷ்கரித்தால், வில்லும் கையுமாக நின்ற தங்களைக் கண்டு, ஏதோ புலியோ சிங்கமோ வந்ததென நினைத்துப் பயந்து சரணடைந்த பாவயரைப் பார்த்து, 'பயப்பட வேண்டாம். புனத்தில் நுழைந்து, உங்கள் கண்ணைப்போன்ற கண் உள்ளதாலே கர்வம் கொண்ட மான்கள் இவை' என்று தேறவைத்துச் சிலை வளைத்ததாகக் கூறலாம். (௩)

4. கடுவாய்ச்சினவெங்கட்களிற்றினுக்குக் கவளமெடுத்துக்கொடுப்பானவன்போல்
அடிவாயுறக்கையிட்டெழப்பறித்திட் டமரர் பெருமான்கொண்டு நின்றமலை
கடல்வாய்ச்சென்றுமேகங்கவிழ்ந்திறங்கிக் கதுவாய்ப்படநீர்முகந்தேறியெங்கும்
குடவாய்ப்படநின்றுமழைபொழியுங் கோவர்த்தனமென்னுங்கொற்றக்
குடையே (266.)

| | |
|---|---|
| கடுவாய் | கடிய வாயை யுடையதும் |
| சினம் | கோபத்தினால் |
| வெம் | அத்யுஷ்ணமான |
| கண் | கண்களை யுடையதுமான |
| களிற்றினுக்கு | யானைக்கு |
| கவளம் எடுத்து | அதன் வாய்க்குத் தகுந்த பிண்டத்தைக் கையில் எடுத்து |
| கொடுப்பான் அவன் போல் | கொடுக்கும் பாகனைப் போல் |
| அடிவாய் | கீழ்ப்பாகத்திலே |
| உற | சேரும்படி |
| கை இட்டு | கையை நுழைத்து |
| எழ பறித்து இட்டு | உண்டையாக மேலே வரும்படி எடுத்து |
| அமரர் பெருமான் | அந்த இந்திராதிகளுக்கும் ஸ்வாமியான கண்ணன் |
| கொண்டு நின்ற | கையில் வைத்துக்கொண்டு நின்றிருந்த |

| | |
|---|---|
| மலை | மலையானது, |
| மேகம் | மேகமானது |
| கடல் வாய் சென்று | கடலுள்ள விடம் போய் |
| கவிழ்ந்து இறங்கி | கீழ்முகமாய் இறங்கி |
| கது வாய்பட | வெடிப்பானது, முகந்த வாயில் உண்டாம்படி=வயிறு கொள்ளாதபடி |
| நீர் முகந்து | கடல்நீரை உறிஞ்சி |
| ஏறி | மலையிலேறி |
| எங்கும் | எல்லாவிடத்திலும் |
| நின்று | பரவி நிலைத்து |
| குடம் வாய் பட | குடத்தின் வாயைப் போன்ற வாய் உண்டாக |
| மழை பொழியும் | மழையை வர்ஷிக்கும் |

கோவர்த்தனம்—குடையே.

**கடுவாய்** இத்யாதி. யானைப்பாகன் மதித்துப் பசித்துள்ள யானையின் வாய்க்குத் தக்கதொரு கவளத்தை ஒரு கையைக் கீழும் மற்றொரு கையை மேலுமாக வைத்துப் பெயர்த்துக் கவிழ்த்தேந்திக் கொடுப்பது போலிருந்தது கண்ணன் கோவர்த்தனத்தைக் கீழும் மேலும் கைவைத்துத் தலைகீழாகத் தூக்கின தென்றபடி. இதனால் மதித்த யானை போன்ற இந்திரனுக்கும் அவன் ஐராவதத்திற்கும் இனி வாயில் மண் தானென்று சொன்னது போலாகும். மலையை யானைக்கு ஆஹாரமாக வர்ணித்த ஆழ்வாருக்கு மேலே நின்று வர்ஷிக்கும் மேகம் ஒரு யானையாகக் கருத்திலுள்ளது என்றது ஜீயருரை. **கதுவாய்ப்பட**. முடிந்தவரையில் குறைவர நீர் கொண்டதைச் சொன்னபடி. கதுவாய்ப்படுதல் வடுப்படுதல் குறைபடுதலாய் கடல் குறைய என்னவுமாம். கடல் கொதிப்புண்டு குறைவுபட அங்கே வெப்பம் கிளம்பி பெரும்மேகங்களாமென்பர் ஆராய்ச்சிக்காரர். இங்கும் உத்தரார்த்தமானது இயற்கையாகக் கோவர்த்தனத்திலேறி மேகம் வர்ஷிப்பதைச் சொன்னதே யன்றி தற்சமயம் இந்திரன்கோபத்திற்கஞ்சி பெய்த மழையைச் சொன்னதன்று என்றால் யுக்தமாம். அது 2-ம் பாசுரத்திற் பணிக்கப்பெற்றது. (ச)

5. வானத்திலுள்ளீர்வலியீருள்ளீரே லறையோவந்துவாங்குமினேன்பவன்போல்
ஏனத்துருவாகியவீசனெந்தை யிடவனெழவாங்கியெடுத்தமலை
கானக்களியானைதன்கோம்பிழந்து கதுவாய் மதம்சோரத்தன்கையெடுத்துக்
கூனற்பிறைவேண்டியண்ணாந்துநிற்குங் கோவர்த்தன
மென்னுங்கோற்றக்குடையே. (267)

| | |
|---|---|
| வானத்தில் | 'ஸ்வர்க்கத்தில் |
| உள்ளீர் | இருக்கும் தேவதைகளே! |
| வலியீர் உள்ளீர் ஏல் | வலிவுள்ளவர்களாகிறீர்களாகில் |
| வந்து | இங்கே சேர்ந்துவந்து |
| வாங்குமின் | இம் மலையை என்கையிலிருந்து நீக்குங்கோள். |
| அறையோ | பறையடித்துக்கூவுகிறோம்' |
| என்பவன் போல் | என்று சொல்லுகிறவன் போல் தோற்றமளிப்பவனும், |
| ஏனத்து உரு ஆகிய | முன் வராஹத்தின் உருவாய் அவதரித்தவனுமான |
| ஈசன் எந்தை | ஸர்வேச்வரனை எமது ஸ்வாமி (கண்ணபிரான்) |
| இடவன் | மண்கட்டி (போலே) |
| எழ | மேலே கிளம்ப |
| வாங்கி எடுத்த மலை | பெயர்த்து எடுத்துநின்ற மலையானது, |
| கானம் | காட்டிலிருக்கும் |
| களி யானை | களித்த(தன் நிலைதெரியாத) யானையானது |
| தன் கொம்பு இழந்து | (குன்றைக்குத்துவதால் ஒடிந்ததாலே) தந்தம் இழந்ததால் |
| கூன் | வளைந்த |
| நல் | நன்றாகவுள்ள |
| பிறை | சந்த்ரலேகையை |
| வேண்டி | (தந்தமென நினைத்து) ஆசைப்பட்டு (அதைப் பெற), |
| கதுவாய் | வெடிப்பிலே |
| மதம் | மதஜலமானது |
| சோர | பெருகிவர |
| தன் கை எடுத்து | தனது துதிக்கையைத் தூக்கி |
| அண்ணாந்து நிற்கும் | மேல் நோக்கி நிற்கும்படி மிக உயரமான கோவர்த்தனம்—குடையே. |

**வாங்குமின்**. 'நீங்கள் பெய்யும் மழையைத் தடுக்க மலையை எடுத்து நின்றேன். எங்கள்மேல் மழை பொழியவேண்டு மென்றுள்ள நீங்கள் எல்லோரும் ஒன்றுபட்டாவது இம் மலையை அதற்காக என் கையிலிருந்து வாங்குங்கோள். உங்கள் வல்லமையைப் பார்க்கிறேன்' என்றபடி. **அறையோ** வென்று தனது வீரத்தை வெளியிடக் கூவிக்கூறும் சொல்லாம். **ஏனத்துருவாகிய**. 'உத்த்ருதாஸி

வராஹேண க்ருஷ்ணேந சதபாஹுநா. பூமிர்தேநுர்தரணீ லோகதாரிணீ’ எனக் கண்ணன் வராஹ ரூபமெடுத்ததை வேதமோதியது. வராஹாவதாரத்தில் கோட்டிலே பூமி யடங்கலும் இடந்தெடுத்தவனுக்குப் பூமிதேவியின் ஸ்தநம் போன்ற இம் மலையை யெடுப்பதில் என்ன வியப்பு என்று கருத்தாம். இடவ னென்று மண்கட்டிக்கும் இடக்கப்பட்டதற்கும் பெயர். உத்தரார்த்தம் சந்த்ர மண்டல மளாவிய மலையென்று அதன் வளர்ச்சியைக் கூறுவதாய் அது கோக் களுக்குப் போஷகமாகும்படி யிருந்ததைக் குறிக்கிறது. (ரு)

6. செப்பாடுடைய திருமாலவன்றன் செந்தாமரைக் கைவிரலைந்தினையும்
கப்பாகமடுத்து மணிநெடுந்தோள் காம்பாகக் கொடுத்துக் கவித்தமலை
எப்பாடும்பரந்திழிதெள்ளருவி யிலங்குமணிமுத்துவடம் பிறழக்
குப்பாயமென நின்றுகாட்சிதரும் கோவர்த்தனமென்னுங் கொற்றக்குடையே.

| | | | |
|---|---|---|---|
| செப்பாடு உடைய | செவ்வைக்குணம் உடையவனும் | கவித்த மலை | அதன் மேல்சிலைப்போர்வையாக மூடின மலையானது, |
| திருமால் | ச்ரிய:பதியுமான | எப்பாடும் | எல்லாப் பாகங்களிலும் |
| அவன் | முன் தேவதைகளால் ப்ரார்த்திக்கப்பட்டு அவதரித்த எம்பெருமான் | பரந்து | வ்யாபித்து |
| | | இழி | சுற்றும் சொரிகின்ற |
| | | தெள் | தெளிந்த |
| தன் | தன்னுடைய | அருவி | நீர்வீழ்ச்சியானது |
| செம் தாமரை கை | செந்தாமரைப்பூபோன்ற திருக்கையின் | இலங்கு | விளங்குகின்ற |
| | | மணி | மணிகளாலும் |
| விரல் ஐந்தினையும் | ஐந்து விரல்களையும் (மலர வைத்து) | முத்து | முத்துக்களாலுமான |
| | | வடம் | ஆரம் போல் |
| கப்பாக மடுத்து | குடைக்கம்பிகளாகவைத்துச் சொருகி | பிறழ | ப்ரகாசிப்பதாலே |
| மணி | அழகிய | குப்பாயம் என | உயர்ந்த கவசம் என்னலாம்படி |
| நெடு தோள் | நீண்ட தோள்வரையிலான புஜத்தை | நின்று | நிலைத்து |
| காம்பாக கொடுத்து | குடையைத் தாங்கும் தண்டாக அமைந்து | காட்சி தரும் | தோற்ற மளித்ததாய் கோவர்த்தனம்—குடையே. |

**செப்பாடு.** தன்னை நம்பின இடையரைக் கைவிடலாகாது. இடைய ரால் ஆராதிக்கப்பட்ட மலைக்குக் கோவர்த்தனம் என்ற பெயர் சிறந்து விளங்க வேண்டும். அதே இவர்களை இவ்வாபத்தில் காத்ததாயிருக்கவேண்டும். தேவேந்திரன் இவ்வளவு அநர்த்தம் விளைவிப்பவனாயிருந்தாலும், இது தனக்கு வழக்கமாயிட்டுவந்த ஆஹாரம் கிடைக்காததால் கிளர்ந்த பசியின்பயனாக வந்த தத்தனையென்று அவனையும் நலியாமே நற்புத்தி பெறும்படி செய்யவேணுமென் றாராய்ந்ததைச் சொன்னபடி. **திருமாலவன்.** ‘ஏஷ நாராயண: ச்ரீமாந் க்ஷீரார் ணவ நிகேதந:’ என்றப்பட்டவன். தேவதைகளாலே அவதரித்தருளும்படி ப்ரார்த்திக்கப்பட்டவன் அவர்களின் க்ஷேமத்திற்காக வந்து நடுவில் அவர்கள் செய்த சிறுகுற்றத்திற்காக அவர்களை யழிப்பானோ வென்றபடி. உத்தரார்த்த மிங்கே அப்போது பெய்யும் மழையைப் பற்றினதாம். இப் பாசுரத்தைக் கருத் திற்கொண்டு ஸ்ரீ தேசிகன் அருளிச்செய்த ச்லோகமாவது—

[illegible] ।
[illegible] ॥

அபுக்நரக்தாங்குளி பஞ்ஜரம் தத் ரத்நேர்மிகாரச்மிசலாகமந்த: ।
நவோதககௌக்ஷளமவ்ருதம் வ்யபாஸீச்சத்ரப்ரகாண்டம் ஹரிபாஹுதண்டே ॥

இங்கே, 'நவோதக கௌக்ஷளமவ்ருதம்' என்றதாலே மலையில் ஏற்கனவே யுள்ள சுனைநீர்கள் கீழ்ப்பக்கத்தில் நின்றுவிட மேலே புதிதாகப் பெய்துவரும் மழையானது மலையின் சுற்றுப்பக்கங்களினின்று வழியும்போது குடைக்குச் சுற்றுப்புறம் தொங்கவிட்ட பட்டு முதலானவைபோல் விளங்கிற்றென்றார். இப்படி மலையிலிருந்து பூமிவரையில் மழை சொரிந்திருக்க, மலையானது கோகுலத்திற்குச் செய்தமைத்த ஒரு கவசம் போல் விளங்கிற் றென்று கொள்க. இங்கே—

'𑌸𑌗𑍈𑌰𑌿𑌕𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌗𑌿𑌰𑍇𑌃 𑌸𑌮𑌨𑍍𑌤𑌾𑌤𑍍 𑌵𑌿𑌲𑌮𑍍𑌬𑌿𑌤𑍋 𑌵𑌰𑍍𑌷𑌪𑌯𑌃𑌪𑍍𑌰𑌵𑌾𑌹𑌃।
𑌵𑌿𑌤𑌾𑌨𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌜𑍁𑌷𑍋 𑌵𑌿𑌤𑍇𑌨𑍇 𑌵𑌿𑌡𑌮𑍍𑌬𑌨𑌾𑌂 𑌵𑌰𑍍𑌣𑌤𑌿𑌰𑌸𑍍𑌕𑌰𑌿𑌣𑍍𑌯𑌾𑌃'

ஸகைரிகஸ் தஸ்ய கிரே: ஸமந்தாத் விலம்பிதோ வர்ஷபய:ப்ரவாஹ: ।
விதாநபர்யந்தஜுஷோ விதேநே விடம்பநாம் வர்ணதிரஸ்கரிண்யா: ॥

என்ற ச்லோகத்தையுமநுஸந்திப்பது. (சா)

7. படங்கள்பலவுமுடைப்பாம்பரையன் படர்பூமியைத் தாங்கிக்கிடப்பவன் போல்
தடங்கைவிரலைந்தும்மலரவைத்துத் தாமோதரன்தாங்குதடவரைதான்
அடங்கச்சென்றிலங்கையையீடழித்த வனுமன்புகழ்பாடித்தங்குட்டன்களைக்
குடங்கைக்கொண்டுமந்திகள்கண்வளர்த்துங் கோவர்த்தனமென்னுங்
கோற்றக்குடையே. (269)

| | |
|---|---|
| படங்கள் பலவும் உடை | படங்களைப் பூர்த்தியாக உடைய |
| படர் | படர்ந்துள்ள |
| பூமியை | பூமண்டலத்தை |
| தாங்கி கிடப்பவன் | தாங்கிக்கொண்டு படுத்திருக்கிறவனை |
| பாம்பு அரையன் போல் | ஸர்ப்பராஜன்போலே |
| தட கை | விசாலமான திருக்கையின் |
| விரல் ஐந்தும் | ஐந்து விரல்களையும் |
| மலர வைத்து | அவை மலரும்படி பிரித்து வைத்து |
| தாமோதரன் | கண்ணபிரான் |
| தாங்கு | திருக்கையில் ஏந்தின |
| தட வரை தான் | அகன்ற மலையே, |
| சென்று | கடல் கடந்து சென்று |
| இலங்கை | லங்காநகரத்தை |
| அடங்க | முழுதும் |
| ஈடழித்த | சீர்கெடச் செய்த |
| அனுமன் | (தங்கள் கூடஸ்தரான) ஹனுமானுடைய |
| புகழ் | கீர்த்தியை |
| பாடி | பாடிக்கொண்டு |
| மந்திகள் | பெண் குரங்குகள் |
| தம் குட்டன்களை | தன் பிள்ளைகளை |
| குடங்கை கொண்டு | உள்ளங்கைகளில் வைத்துக்கொண்டு |
| கண்வளர்த்தும் | உறங்கச்செய்ய இடமான |

கோவர்த்தனம்—குடையே.

கண்ணபிரான் தன் புஜத்தை நீட்டி உள்ளங்கை மலர்த்தி விரல்களை விரித்து மலை ஏந்தினது ஆதிசேஷன் தன் படங்கள் அடங்கலும் விரித்துப் பரம்பின பூமியைத் தாங்குவதுபோலிருந்தது. இதனையும் ஸ்ரீதேசிகன் இங்ஙனம் அருளிச்செய்தார்—.

ஹணாஹிராஉவூஸர தாம் ஹ~ுஷீகः ஷியாஜூராஹவஹ்திஷம்ஹவாம்ஙு~ுः ।
ஹ~ுஜஷ்தீயொ ஗ிரிணா வஹாஸெ ஹூமண்ணுலெநெவ ஹ~ுஜஜூராஜः ॥

பஞ்சப்ராமப்ரஸ்ருதாங்குளீக: ப்ரியாங்கராகவ்யதிஷங்கபாண்டு: ।
புஜஸ் ததீயோ கிரிணா பபாஸே பூமண்டலேநேவ புஜங்கராஜ: ॥

**பலவும்** என்கிற உம்மையானது, எத்தனை படங்கள் இருக்கக்கூடுமோ அத்தனை யுமுடையவன் என்பதைக் குறிக்கிறது. பின்னடிகளின் கருத்காவது—அங்கே குரங்குகள் தங்கள் குட்டிகளை யுள்ளங்கைகளில் ஏந்திக்கொண்டு சீராட்டி உறங்கவைக்கின்றன. அப்போது அவைகளுடைய கிலிகிலாசப்தத்தை ஒரு பாட்டாக ரூபித்து ஆழ்வார் உத்ப்ரேக்ஷிக்கிருர். உலகில் மனிதர்கள் குட்டன் களை உறங்கவைக்கும்போதுத் தாலாட்டிப் பெரியோர் பெருமையைப் புகழ்ந்து பாடுகிற வழக்கமாயிற்றே. ஆக அவைகளும் தம் குலத்தில் முன் உதித்த மஹாநுபாவரான ஹநுமாரைப் புகழ்ந்தன போலும். ‘அப்படிப்பட்ட மஹான் பிறந்த குலத்திலே பிறந்த நீயும் அவரைப்போல் விளங்கவேண்டும்’ என்று ஒவ் வொரு மந்தியும் தன் குட்டியை நினைத்ததுபோலும். எனவே வேதவேதாங்கங் களை யறிந்த வீரகேஸரியான அனுமனைப் போலாகவேணுமென நினைத்ததாலே குட்டி யென்ளுமே குட்டன் என உயர்திணையாக யருளினதாம். இதனுல் திர்யக்குகள் உள்பட எல்லா ப்ராணிகளும் எம்பெருமான்கைங்கர்யத்திலே இழியவேண்டும் என்று ஆழ்வாரின் ஆசை யென விளங்குகின்றது. (எ)

8. சலமாமுகிற்பல்கணப்போர்க்களத்துச் சரமாரிபொழிந்தெங்கும்பூசலிட்டு
நலிவானுறக்கேடகங்கோப்பவன்போல் நாராயணன்முன்முகங்காத்தமலை
இலைவேய்குரம்பைத்தவமாமுனிவரிருந்தார் நடுவேசென்றணர்சோறிய
கோலைவாய்ச்சினவேங்கைகணின்றுறங்கும் கோவர்த்தனமென்னுங்
கோற்றக்குடையே. (270)

| | |
|---|---|
| சலம் | தணியாக்கோபம்கொண்ட |
| மா முகில் | பெரிய மேகங்களானவை |
| பல் கணம் | பல வகை வில்லாளிகளின் |
| போர் களத்து | யுத்தபூமியைச் சேர்ந்த |
| சரம் | அம்புகளைப்போன்ற |
| மாரி | (அளவற்ற)மழைகளை |
| பொழிந்து | வர்ஷித்து |
| எங்கும் பூசலிட்டு | மேன்மேல் பொழியவும் கர்ஜித்துக்கொண்டு |
| நலிவான் உற | ஹிம்ஸிக்கப் புகுந்தபோது |
| கேடகம் கோப்பவன் போல் | கேடயமென்ற ஆயுதத்தை நீட்டிப் பிடிப்பவன் போல் |
| நாராயணன் | கண்ணபிரான் |
| முன் முகம் | முகபாகத்தை |
| காத்தமலை | காப்பதற்கு எடுத்த மலை யானது |
| இலை வேய் குரம்பை | இலைகளால் வேயப்பெற்ற குடில் (பர்ணசாலை)களிலே |
| இருந்தார் | வஸித்திருந்த |
| தவம் மாமுனிவர் நடுவே | தபஸ்விகளான பெரிய முனிவர்கள் நடுவிலே |
| கொலைவாய் | கொலைசெய்யும் வாயை யுடைய |
| சினம் | கோபம் கொள்ளுகின்ற |
| வேங்கைகள் | புலிகள் (வெகுசாந்தமாய்) |
| சென்று | போய்ச்சேர்ந்து |
| அணர் சொறிய | (அவர்களால்) கழுத்து சொறியப்பெற்றதாலே |
| நின்று | மேன்மேல் சொறியும்படி நின்று |
| உறங்கும் | ஸுகித்து நித்திரை பெறு மிடமான |

கோவர்த்தனம்—குடையே.

**சலம்** ஜலமென்பர். அது முகிலுக்குச் சொல்லாமலே விளங்குமாகை யாலே சரமாரி பொழிவதற்கிணங்க இந்திரனுக்குமேனுண்டாம் கோபத்தைச்

சொல்வது பொருந்தும். மாமுகில் என ஸம்வர்த்தக கணத்தைச் சொன்ன தாம். பல்கணப்போர்களத்து. பல முகிற்கண மென்றதைக்காட்டில், கணப்போர் என்ற இணைப்புக்கேற்ப, ரதகஜதுரகபதாதிக்கணங்கள் பலவுள்ள போர்க்களத்தி லுள்ளார் எல்லோரும் சேர்ந்து சரவர்ஷம் வர்ஷித்தாற்போலிருந்தது தீக்ஷ்ண வர்ஷதாரைகள் வீழ்ந்ததென்று உபமானத்திலே செய்யும் வர்ணநம் உபமேயத் திற்கும் சிறப்பைக் குறிக்கும். மாமுகிற் பல் கணங்களென முகிற்கணங்களையும் மேலே யருள்வர். நலிவான். எதிர்கால வினையெச்சம். முன்முகம். கேடயத் தைப் பிடித்தவர் சேனையின் முன்னணியில் முன்னே அதை நீட்டி நிற்பர். அப்போது சேனையில் எங்கும் சரம் விழாதபடி தடுக்கப்படும். அதுபோல் கண்ணன் எல்லோரையும் கீழ் அமர்த்தித் தான் உயர நின்று அதன்மேல் மலை யைத் தூக்கி வெகுதூரத்திலே மழையைத் தடுத்தானென்றபடி: இலைவேய் இத்யாதி. பர்ணசாலைகளிலே புலிகள் நுழைந்து கழுத்தைச் சொறியத் தூக்கிக் காண்பிப்பதும், ஸர்வ பூதாநுகூலமாக நடந்துகொள்ளும் அவர்கள் அவற் றின் கழுத்தைச் சொறிவதும் அவர்களுடைய யோகத்தின் மேன்மையைக் குறிக்கும். யோகிகளின் ஸந்நிதானத்திலுள்ள ப்ராணிகளின் ஜாதிவைரம் கூட விடுபடும். இது அவர்களுக்குள்ள யோகசித்தியின் குறியாம் என்றது யோக நூல். இருந்தார். பெயரெச்சம். சென்று. இந்தஇறந்தகாலவினையெச்சம் நின்றுறங் கும் என்றதோடு சேரும். அணர். அணல் என்று கீழ்வாய்க்கும் கழுத்துக்கும் பெயர். இது இங்கு அணரென்னப்பட்டதாம். இயற்கைப்பகையையே போக் கும் பரமயோகிக ளிருக்கும் மலையை யோகேச்வரனான எம்பெருமான் கையில் எடுத்துத் தூக்கினதை நன்குணர்ந்த பிறகு முகில்களுக்கும் மஹேந்திரனுக்கும் முன்னுண்டான தாற்காலிகமான கோபம் தணியாமலிருக்கக்கூடுமோ? இங் குப் பாசுரத்தின் கருத்திலே பிறந்த ஸ்ரீதேசிகன் ஸூக்தியை யநுஸந்திக்க—.

[illegible]
[illegible]

*இரம்மதார்ச்சிர்வ்யதிஷங்கதீப்த: பாணௌ ஹரேரத்ரிபதிச் சகாசே।*
*ப்ரத்யஸத்ரமிந்த்ரேண முமுக்ஷிதாநாம் ப்ரயுக்தமுத்காத இவாசநீநாம்॥*

**9.** வன்பேய்முலையுண்டதோர் வாயுடையன்வன்தூணென நின்றதோர் வன்பரத்தைத்
தன்பேரிட்டுக்கொண்டு தரணிதன்னில் தாமோதரன் தாங்குதடவரைதான்
முன்பே வழிகாட்ட முசுக்கணங்கள் முதுகிற்பெய்து தம்முடைக் குட்டன்களைக்
கோம்பேற்றியிருந்து குதிபயிற்றுங் கோவர்த்தனமென்னுங் கொற்றக்குடையே.**(271)**

வல் பேய் முலை } வலிய பூதனை யென்னும் பேய்ச்சியின் முலையை
உண்டது ஓர் உண்டதான ஒப்பற்ற
வாய் உடையன் } முகமுடையவனான
தாமோதரன் கண்ணபிரான்—,
வல் தூண் என நின்று } வலியதொரு தூண் இது என்னும்படி நிலத்து நின்று
அது அம்மலையானது
ஓர் ஆராய்ந்து பெறவேண்டும்,

வல் பரத்தை பலமான பாரத்தை—,
தன் பேர் இட்டு } மலைக்குத் தனது கோவர்த்தன நாமத்தை இட்டு
கொண்டு தான் ஸ்வீகரித்துக்கொண்டு
தரணி தன்னில்-பூமியிலே
தாங்கு தாங்கின
தட வரை தான்-அகன்ற மலையே,
முசு கணங்கள் } முசு வென்ற சாதிக் குரங்குகள்
தம்முடை குட்டன்களை } தமது குட்டிகளை
முதுகில் பெய்து } முதுகில் இருக்கச் செய்து
கொம்பு கிளைகளிலே
ஏற்றி ஏற வைத்து
முன்பே } குட்டிகள் குதிப்பதற்கு முன்னம்
வழி காட்ட } குதிக்கும் முறையைத் தாங்கள் செய்து காட்ட அப்போதே
இருந்து } தவறாமல் குதிக்கும்படி பார்த்திருந்து
குதி பயிற்றும் } அவற்றிற்குக் கிளையிலிருந்து கிளை தாவுதலைக் கற்று வைக்க இடமான
கோவர்த்தனம்—குடையே.

வன் பேய் முலை யுண்டதோர் வாயுடையன் என்றவிடத்தில் ஓர் என்பது அவளை மாளவைத்த வரையிலுள்ள பெருமையைக் காட்டும். தாமோதரன்· பொய்த்தாய்க்குப் பொல்லானும் மெய்த்தாய்க்கு மிகவும் பவ்யனு் நல்லானு மானவன் என்றபடி. எனவே தனக்கு அபிமதமானதொரு மலை யாகிய அசேதந வஸ்துவுக்குத் தன் பெயரை யிட்டு அதற்கிட்ட வற்றைத் தான் அதுவாக உட்கொண்டு அதற்குத் தக்கபடி அது செய்யவேண்டும் பாரமெல்லாம் தன்மேல் ஏறிட்டுக்கொண்டு அசையாத் தூணாக நின்று அதன் மூலமே ஆநிரையைக் காத்தான். தரணியில் எத்தனையோ மலைகளும், மற்றும் பலவும் இருக்க இஃதொன்றன்றோ அவன் தாங்கி யருளும்படியான மேன்மையைப் பெற்றது என்று பூர்வார்த்தத்தின் கருத்தாம். நின்றதோர் என்பதை நின்று அது ஓர் எனப்பிரிக்க. ஓர் என்பது வினைத்தொகையாதலால் அது என்பது அந்த வினையோடு சேரும். செய்யுள்வழக்கைப் பின்பற்றி மேலே சொல்லப்படும் மலையை அது என முன்னே சொல்வதில் குற்றமில்லை. அது என்பதற்குத் தூண் என்ற பொருள் கொண்டு ஒருவன் தூண் தாங்கவேண்டும் பாரத்தைத் தான் கொண்டென்றுரைத்தாலும் விரோதமில்லை. பரத்தை என்ற செயப்படுபொருளானது கோண்டு என்பதோடு இயையும். ஆகவே இட்டு, கோண்டு எனவிரு வினையெச்சங்களாகப் பிரிக்க. இங்ஙனமுரைக்காமல், 'வலிய பாரத்தைத் தரித்து நின்றதொரு வலிய தூணைப் போலே' என வுரைக்கில், தரித்து என்ற பதத்திற்கு அத்யாஹாரமும், என என்ற பதத்திற்குப் பின்னுள்ள நின்றது என்ற பதத்தை முன்னே சேர்ப்பதும் கொள்ளவேண்டிவரும். தரணிதன்னில் என்பதற்குப் பூமியிலுள்ளவரும் நேரிற் கண்டு களிக்கும்படி என்ற கருத்துமாம். முன்பே வழி காட்ட. முதுகிற் பெய்து முசுக்கள் கிளைகளில் ஏற்றிவைத்து முதலில் தாம் குதித்துக் காண்பித்து அங்ஙனம் குதிக்கும்படி குட்டிகளைப் பழக்குகின்றன வென்றபடி. ஏற்றியிருந்து, ஏற்றி, இருந்து என இரண்டு வினையெச்சங்களாகப் பிரிக்க. இருந்து என்பதற்குத் தவறி விழுந்துவிடாதபடி கவனித்துக்கொண்டிருந்தெனப் பொருள். (கூ)

**10.** கொடியேறு செந்தாமரைக்கைவிரல்கள் கோலமுமழிந்தில வாடிற்றில
வடிவேறு திருவுகிர்நொந்துமிலமணிவண்ணன் மலையுமோர் சம்பிரதம்
முடியேறியமாமுகிற் பல்கணங்கள் முன்னெற்றிநரைத்தனபோல வெங்கும்
குடியேறியிருந்து மழைபொழியுங் கோவர்த்தன மென்னுங் கொற்றக்குடையே.

| | |
|---|---|
| கொடி | த்வஜம் முதலான ரேகைகள் |
| ஏறு | அமைந்திருக்கின்றனவும் |
| செந்தாமரை | செந்தாமரை போன்றனவுமான |
| கை விரல்கள் | கைத்தலமும் விரல்களும் |
| கோலம் உம் அழிந்தில | அழகு கூட அழியாமலிருந்தன; |
| வாடிற்றில | வாட்டமும் பெறவில்லை. |
| வடிவு ஏறு | உருவம் பொருந்திய |
| திரு உகிர் உம் | அழகிய நகங்களும் |
| நொந்தில | நோவுறவில்லை. |
| மணி வண்ணன் | நீலமணி நிறமுள்ள கண்ணனது |
| மலை உம் | (கையிலிருந்த) மலையும் |
| ஓர் சம்பிரதம் | ஒரு அதிசயமாயிருந்து கொண்டு, |
| முடி ஏறிய | சிகரங்களிலேறின |
| மாமுகில் பல் கணங்கள் | பெரிய மேகங்களின் பலவகைக் கூட்டங்கள் |
| எங்கும் குடி ஏறி இருந்து | எல்லா விடங்களிலும் அசையாமல் தங்கியிருந்து |
| முன் நெற்றி | மலையின் முன்பாகங்கள் |
| நரைத்தன போல | நரைத்துவிட்டன போலாகும்படி |
| மழை பொழியும் | பூரணமாகவும் வர்ஷிக்குமிடமான |
| கோவர்த்தனம் | —குடையே. |

ஏழுநாள் இடைவிடாமல் கையில் மலையை வைத்தபடியே நின்றான் கண்ணன். அவன் செந்தாமரைக் கைக்குள்ள மார்த்தவத்தை நோக்குங்கால் அது உரு தெரியாதபடி போயிருக்கவேண்டும். கொடி முதலிய ரேகைகளில் கூட ஒன்றுக்கும் மாறுதலில்லை. மலையை வஹித்ததால் வந்த இரேகை ஒன்று கூட இல்லை. பழைய ரேகைகள் ப்ரகாசமாய் விளங்கின. விரலழகு கூட அழியாமலிருந்தது. வாடிற்றில. உள்ளிடத்திலும் ஒருவிதமாகவும் சைதில்யம் ஏற்படவில்லை. நகங்களுடைய வடிவமும் அங்ஙனமே யிருந்தது. இவையே இங்ஙனமிருந்தால் மணிவண்ணன்மேனியில் மாறுதல் எங்ஙனம்? இதனைப் பார்க்கும்போது, சிறிய விடைப்பிள்ளை செந்தாமரைபோன்ற கையால் மலையை யெடுப்பதாவது, சுமப்பதாவது, ஏழு நாள் எள்ளளவும் தளராமல் நிற்பதாவது? இதோர் இந்திரஜாலம் என்பார் சிலரும், 'உண்மையில் அங்ஙனமன்று. இது இந்த்ரஜாலமாகில் இந்திரன் விட்ட மழையெல்லாம் இடையரையும் கோக்களையும் அழித்திருக்க வேண்டுமே. மலையிருந்த விடம் நீங்கலாக எல்லாம் மழையில் மூழ்கிக்கிடந்ததே. இந்திரனும் ஆச்சர்யப்பட்டு இறங்கி வந்து நமஸ்கரித்துக் கோவிந்தபட்டாபிஷேகம் பண்ணிவைத்துப் புகழ்ந்தானே' என்றவாறெல்லாம் கவனித்த பிறகு, இது ஓர் உண்மையான ஆச்சர்யச்செயலே யன்றி வெறும் தோற்றமன்றெனத் தெளிவர். இதனால் ஸர்வஜகத்தையும் தரிக்கும் எம்பெருமான் லோக விலக்ஷணமான வகையிலே அநாயாஸமாகத் தரிப்பது அறியலாயிற்று. முடியேறி இத்யாதி முன் பாசுரங்களிற் போலே மலைக்கு இயற்கையிலுள்ள விசேஷத்தைச் சொல்லுகின்றதே. ஆறும் பாட்டின் பின்னடிகள் கவிழ்ந்துள்ள மலையின் மேல் அப்பொழுது பெய்ந்த புதுமழையைப் பற்றியதாகையாலே அத்தோடு புநருக்தி தோஷத்திற்கிடமே யில்லை யென்க. முன்னெற்றி நரைத்தனபோல. நீர்கொண்ட மேகம் கறுத்திருக்கும். நன்கு பெய்த பிறகு அது வெளுத்துப் பரவியிருப்பதாலே மலையின் தலை நரைத்தாற்போலிருந்த தென்றபடி. (ம)

11. அரவிற்பள்ளிகொண்டரவந் துரந்திட்டரவப்பகையூர்தி யவனுடைய
குரவிற்கொடிமுல்லைகணின்றுறங்கும் கோவர்த்தனமென்னுங் கொற்றக்குடைமேல்
திருவிற்பொலிமறைவாணர் புத்தூர்த்திகழ்பட்டர்பிரான் சொன்னமாலை பத்தும்
பரவும்மனநன்குடைப்பத்தருள்ளார் பரமானவைகுந்தம் நண்ணுவரே. (273)

அரவில் — ஆதி சேஷனில்
பள்ளி கொண்டு — சயனித்திருந்து
(இவ் வவதாரத்திலே)
அரவம் — காளிய ஸர்ப்பத்தை
துரந்திட்டு — அப்பால் ஓட்டிவிட்டு
அரவப் பகை — ஸர்ப்ப சத்ருவான கருடனை
ஊர்தி — வாஹநமாக நடத்தும்
அவனுடைய — கண்ணபிரான் தாங்கிய—,
குரவில் — குரவு மரத்தில்
கொடி முல்லைகள் — முல்லைக் கொடிகள்
நின்று உறங்கும் — அழியாமல் ஸுகித்திருக்கு மிடமான
கோவர்த்தனம் என்னும் — கோவர்த்தனம் என்று பேர் பெற்ற
கொற்றம் குடைமேல் — ஜயசீலமாய் விளங்கின குடையைப் பற்றி,
திருவில் — ஸ்ரீவைஷ்ணவ ஸம்பத்தாலே
பொலிகின்ற — பரமை காந்திகளாய் ப்ரகாசிக்கின்ற
மறைவாணர் — வேத மோதினவர்களுக்கு (இடமான)
புத்தூர் — ஸ்ரீ வில்லிபுத்தூரில்
திகழ் — விளங்கா நிற்கிற
பட்டர்பிரான் — பட்டநாதனால்
சொன்ன — சொல்லப்பெற்ற
பத்துமாலைஉம்-பத்துப் பாசுரங்களையும்
பரவும் — ஸ்தோத்திரம் செய்யும்
மனம் — மனத்தை
நன்கு — நன்றாக
உடை — உடையவரான
பத்தர் உள்ளார் — பக்தருள்ளவர்கள்
பரமான — எல்லாவற்றிற்கும் மேலான
வைகுந்தம் — ஸ்ரீ வைகுண்டத்தை
நண்ணுவர் — கிட்டுவர்.

எம்பெருமானுக்கு ஒரு சாதியில் அபிமானம், ஒரு சாதியில் துவேஷம் என்பன கிடையா. ஸர்ப்பத்தைத் தனக்கு அந்தரங்கசயநமாக வுடையவன் ஸர்ப்பத்தையே விரட்டி யோட்டினான். ஸர்ப்ப சத்ருவைபும் மேலேறி நடத்து கிறான். 'கஜம் வா வீக்ஷ்ய ஸிம்ஹம் வா வ்யாக்ரம் வாபி வராநநா' நாஹாரயதி ஸந்த்ராஸம் பாஹூ ராமஸ்ய ஸம்ச்ரிதா என்றபடி எம்பெருமானையே யாச்ர யித்து நின்றவர்களுக்கு எந்த தேவதையாலும் யாராலும் எங்கும் தீங்கில்லை. குரவிற் படர்ந்து நிர்ப்பயமாய்க் கிடந்துறங்கின கொடிக்குக் குரவின் ஸம்ச்லே ஷத்திற்குக் குறை வாராதபடி அதற்கு ஆதாரமாய், தனக்கு மிகவும் அபிமத மான கோவர்த்தனத்தைத் தலைகீழாகக் குடையாக வெடுத்துக் கோகோபர் களைக் காத்துத் தேவர்களின் அகங்காரத்தை யடக்கி யருளினனே. ஆனிரை மேய்ப்பவர் எங்கே; அமராதிபதி யெங்கே? ஆயினும் அவர்களிடம் அவன் பவ்யனாகும்படி யிருந்தது ஆச்ரயபலம். இப்படிப் பரமைகாந்திதர்மங்களை விளக்கும் வேதேதிஹாஸ புராணார்த்தங்களைத் தெளிந்த மஹான்கள் மன்னும் ஸ்ரீவில்லிபுத்தூரில் அவர்களுக்கெல்லாம் திலகமாய் விளங்கின பட்டநாதரென்ற பேர் பெற்ற ஆழ்வாரின் ஸ்ரீஸூக்தியான இக் கோவர்த்தனத் திருமொழியிலே எவ்வளவோ விசேஷார்த்தங்கள் கருத்திலுள்ளன வாயிருக்கும். இத் திருமொழி மாத்திரத்திலன்றி எல்லா விடங்களிலுமே ஏதேனும் பரமாத்ம—ஜீவாத்ம— ஆசார்ய—சிஷ்ய ஸம்பந்தம் போன்ற வெவ்வேறு கருத்துப் பொருள் ஆராய் பவரும் பலபடி கூறுபவருமுண்டு. அவரவர்கள் புத்திக்குத் தக்கபடி அவற்றை யாராய்ந்து அனுபவித்து ஆனந்திக்குமாறு நினைந்து அன்வயார்த்தத்தைமட்டும் உள்ளபடி இங்கே உரையிற் கூறினம். ஸுஜநஸார்வபௌமனான எம்பெருமா னின் கொற்றக் குடையின் நிழலிலே அடங்கினவர்க்கு எங்கும் ஜயமே. இப்படி யிவன் தேவதாஸார்வபௌம னென்றறிந்தபிறகுத் தேவதாந்தர பரதந்த்ரரா யிருக்க மனது நினைக்காதாகையாலே இவ்வதை யறிந்தவர் வைகுந்தம் நண்ணுவது

திண்ணம். முன்திருமொழியிலே ஸ்வர்க்காதிகளான ஆமுஷ்மிக பலன்களை விட்டொழிந்த பரமைகாந்திகளுக்கும் இந்த ஜன்மத்தில் தங்கள் உடலமைப்புக்குத் தக்கபடி சிற்றின்பப்பற்று விடாமலிருக்க, கோபஸ்திரீகள் அதற்காக வேறு புருஷரை நாடாதபடி கண்ணனையே காமத்திற்கும் கோசரமாக்கிக் கொண்டு மகா பரமைகாந்திகளாக நின்றிருந்தார்களாகையாலே அவர்கள் தன்மையைத் தெளிந்தவர்க்கும் வைகுந்தம் பலனுமென்றருளினரென்க. (கக)

ப்ரபந்தரக்ஷையில் அட்டுக்குவி உரை முற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

---

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

## பெரியாழ்வார் திருமொழி, 3, 6 (குழலமுதம்)

# நாவலம் பெரிய

கண்ணபிரான் கோபர்களுக்குத் தேவதாந்தரப் பற்றை யறுத்துப் பாரமைகாந்த்யத்தை நிலைநாட்டக் கருதி கோவர்த்தநோத்தாரணம் செய்ததைக் கீழே அருளிச்செய்து, தேவமனுஷ்ய திர்யக் ஸ்தாவரங்களான நால்வகைச் சேதநர்களையும் குழலூதித் தனக்கே வசமாக்கின அவன் திறமையை யனுபவித் தினியராகிறார் இத் திருமொழியில்.

**1.** நாவலம் பெரியதீவினில் வாழும்நங்கைமீர்களிதோரற்புதங் கேளீர்
தூவலம்புரி யுடையதிருமால் தூயவாயிற்குழலோசை வழியே
கோவலர் சிறுமியரிளங்கொங்கை குதுகலிப்பவுடலுளவிழ்ந்து, எங்குங்
காவலுங்கடந்து கயிறுமாலையாகிவந்து கவிழ்ந்துநின்றனரே. **(274)**

| | |
|---|---|
| நாவல் | ஜம்பூ எனப்படும் |
| அம் | அழகிய |
| பெரிய | விசாலமான |
| தீவினில் | த்வீபத்திலே |
| வாழும் | பிறந்து வளரும் |
| நங்கை மீர்கள் | குணபூர்ணைகளான பெண்மணிகளே ! |
| இது | இந்த (இப்போது நாம் சொல்லும்) |
| ஓர் | ஒப்பற்றதான |
| அற்புதம் | ஆச்சர்யத்தை |
| கேளீர் | கேட்கக் கடவீர். (எதெனில்) |
| தூ | பரிசுத்தமான |
| வலம்புரி | சங்கத்தை |
| உடைய | உடையவனான |
| திருமால் | ச்ரிய: பதியினுடைய |
| தூய வாயின் | பரிசுத்தமான திருப்பவளத்தினின்று பிறந்த |
| குழல் ஓசை வழி ஏ | வேணுகானத்தின் வழியாக |
| கோவலர் சிறுமியர் | கோபாலரின் கன்னிமார்கள் |
| இள கொங்கை | (தங்கள்) இளமை பொருந்திய ஸ்தனங்கள் |
| குதுகலிப்ப | கிளர்ந்து ஆரவாரிக்க |

| | | | |
|---|---|---|---|
| உடல் உள் | உடலும் மனமும் | கயிறு மாலை ஆகி வந்து | கயிற்றிற் கோத்த மாலைகள் போல் வரிசை வரிசையாக வந்து |
| அவிழ்ந்து | சிதிலமாகப்பெற்று | கவிழ்ந்து நின்றனர் | குனிந்து நின்றனர். |
| காவல் உம் | தடையையும் | | |
| கடந்து | மீறி | | |
| எங்கும் | எல்லாப் பக்கங்களிலும் | | |

'இடைப் பெண்களுக்குப் பிறகு எம்பெருமானிடத்திலே ஊரறிய பெருங் காதல் கொண்ட பெண் தமது பெண்ணான கோதை யொருத்தியே. ஏன் இங்ஙனம் எல்லோரும் இருக்கலாகாது?' என்ற கவலையுடன் ஆழ்வார் உலகிலுள்ள பெண்மணிகளை யெல்லாம் விளித்துக் கதறுகிறார் நாவலித்யாதியால். ஸ்திரீகளாகப் பிறந்தர்களென்றால் புருஷனைப் பெற்றனுபவிக்கப் பாக்யம் பெற்றாரென்றதாயிற்று. உயர்ந்த புருஷனைப் பெற விரும்புவது உலகில் எல்லாருக்கும் இயற்கை யிலுள்ளது. ஆகப் புருஷோத்தமனைப் பெற்றனுபவிக்க வேன் முயற்சி செய்யக்கூடாது? அவன் என்ன, ஸ்திரீகளைக் காண விரும்பாத விரக்த சிகாமணியா? திருமாலாயிற்றே. கோவலர் சிறுமியர்களையும் கொண்டவனாயிற்றே. எம்பெருமானைப் பற்றி எங்களுக்குச் சொல்லுவார் யார் என வேண்டா. நீங்கள் பிறந்தது ஜம்பூத்வீபத்திலன்றோ? எம்பெருமான் யுகந்தோறு மவதரித்து வேண்டி யழைக்குமிட மாயிற்றே இது. இது புண்யபூமியான படியாலே இதில் நீங்கள் தவம் செய்தால் அது பலித்தாக வேண்டுமே. ஆகப் புருஷோத்தமனைப் பெற்றனுபவிக்கத் தகுதியுற்ற நங்கைமார்களே! நீங்கள் அவனிடம் பற்றுதல் வைத்தால், 'ததாமி புத்தியோகம் தம் யேந மாமுபயாந்தி தே' என்றபடி அது கைகூடுவதற்கு வேண்டியவற்றை யெல்லாம் அவனே செய்து கொள்வான். கோவலர் சிறுமியர்களைக் கண்ணனிடம் அண்டாதபடி செய்து எத்தனையோ காவலும் வைத்திருந்தார்கள். அவர்களும் நாணத்தோடு அவனைத் தாமாகவும் பிறர் எதிரிலும் பேச வியலாமலிருந்தனர். அவன் அவர்களை விட்டானா? மெச்சூது சங்கமிடத்தான் இடையனாகப் பிறந்தபோது 'ஆத்மயா [illegible]' 'ஆத்மபயா மாஸ ஸச்ருங்கமக்ரயம் சங்கம் ததாபூதமிவாத்மயோகாத்' (பாத-8-53) என்றபடி. தன் சாதிக்கேற்ப அதனையும் ஒரு வேய்ங்குழலாக அவதரிப்பித்து யாருமில்லாத யமுநாரண்யத்திலே நடுங்கியிற் குழலூதி நின்றான். நந்தகோகுலத்திலுள்ள சிறுமியரும் மற்ற நங்கைகளும் யாவரும் நாணமு மச்சமு மின்றி, 'பரபுருஷபராங்முகராய் பதிவ்ரதாமணிகளாக விருப்பார் பாரதப் பெண்மணிகள்' என்ற தேசப்பெருமைக்கும் மாறுபாடாகத் தங்களை யற்று உடலும் உள்ளமு மெல்லாம் சிதிலமாக அவன் ஊதும் குழலோசை கயிறாகத் தாங்கள் அதில் கோத்த மாலையாகி அது பிறக்குமிடமே வரிசைவரிசையாகப் போய், தங்களை வசீகரித்த அவன் திறமையைக் கண்டு, 'நாங்கள் தோற்றோம். உனக்கே ஜயம்' என்று அவனிடம் குனிந்து அசையாமே நின்று விட்டனரே. ஆக நீங்களுமவ்வண்ணமாகக் கூடுமவராகையாலே உங்கள் பெருமையே பெருமையென்று களிக்கிறாரென்க.

பூமியிலுள்ள ஏழு த்வீபங்களில் ஜம்பூத்வீபத்திற்குப் பலவகையில் ஏற்றமுண்டு. மற்ற த்வீபங்களைவிட இதுவே சிறந்த தர்மங்களை எளிதிற்

செய்து ஆமுஷ்மிகபலன்களையு மடைவதற் குறுப்பாக எம்பெருமான் ஸங்கல்பித்த இட மென்பதெல்லாம் விஷ்ணுபுராண(2-3)திகளிலே விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது. இங்குப் பாரதவர்ஷத்தின் சிறப்பைக் கீழ்க்கண்ட நமது ஸ்ரீவேங்கடேச கல்யாணசரித ச்லோகங்களிலும் காண்க—

"அஸ்தி கல்வகிலப்ரார்த்யம் ஐஹிகாமுஷ்மிகப்ரதம் ।
சிவங்கர மஹாதீர்த்த விஷ்பணுத்யாதி விச்ருதம் ॥
நிதிமத் நாதிசிதோஷ்ணம் நிச்சேஷர்த்துபலப்ரஸூ।
வேதப்ரப்ருதிவித்யாட்யம் வர்ஷம் பாரதமுஜ்ஜ்வலம் ॥ "

எம்பெருமான் முதன்முதல் ப்ரஜைகளை ஸ்ருஷ்டித்தது மிங்கே. அவன் அடிக்கடி அவதரிப்பதுமிங்கே யெனவும் தெளிக. (1)

குழலூதும்போது கண்ணனின் திருமேனி யமைப்பின் அழகையும் கோபிகள் நின்ற வழகையும் ஒருங்கே மனதில் நிறுத்தி யருளுகிறார்.—

2. இடவணரை யிடத்தோளொடு சாய்த்திருகைகூடப்புருவம்நெரிந்தேறக்
குடவயிறுபட வாய்கடைகூடக் கோவிந்தன் குழல்கொடுதினபோது
மடமயில்களொடுமான்பிணை போலேமங்கைமார்கள் மலர்க்கூந்தலவிழ
உடைநெகிழவோர்கையால் துகில்பற்றியொல்கி யோடரிக்கண்ணோட நின்றனரே

| | |
|---|---|
| இட அணரை | இடமோவாய்க்கட்டையை |
| இட தோளொடு சாய்த்து | இடது தோளுக்குச் சாய்த்துக்கொண்டு, |
| இரு கை கூட | இரண்டு கைகளும் ஒன்றுக் கருகே மற்றொன்றாக எதிர்ப்பட்டுக்குழலின் மேல் விரல்கள் படச் சேர்ந்திருக்க |
| புருவம் | திருப் புருவங்கள் |
| நெரிந்து ஏற | நெறிக்கப்பட்டு மேலே வளைந்து கிளர |
| வயிறு குடம் பட | (மூச்சை அடக்குவதால்) திருவயிறு குடம் போல் குவிந்து விளங்க |
| வாய் கடை கூட | திருப்பவளங்களின் ஓரங்கள் குழலிற்சேர |
| | (இந்நிலையிலே) கோவிந்தன் |
| குழல் கொடு | வேய்ங்குழலைக்கொண்டு ஊதினபோது |
| மங்கை மார்கள் | வரும் இடைப் பெண்கள் |
| மலர் கூந்தல் | மலரணிந்த கூந்தல்கள் |
| அவிழ | அவிழ்ந்து பரவவும் |
| ஓடு அரி | ஓடும் செவ்வரி கருவரிகளை யுடைய |
| கண் | கண்களானவை |
| ஓட | கண்ணன் மேல் விரைந்த வண்ணம் திகழவுமிருந்ததாலே |
| மட மயில்களோடு | பெண் மயில்களும் |
| மான் பிணை போலே | பெண் மான்களும் போலே |
| ஒல்கி | மெலிந்து |
| உடை நெகிழ | (ஓடிவரும் வேகத்திலே ஒட்டியாணம் முதலானவை தளர்ந்து) உடுத்தின துகிலும் முடியவிழும்படி யாக |
| ஓர் கையால் | ஒரு கையினாலே |
| துகில் பற்றி | அவிழும் உடையைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு நின்றனர். |

குழலூதுவது அவன் சாதிக்கும் வ்ருத்திக்கு மேற்றதென கோவிந்தனென்றார். கோக்களும் அதனைக்கேட்கக் குவிந்தன வென்னவுமாம்.

மடமயில்கள். மடப்ப மென்பது பெண்குணத்திலொன்றானதாலே பெண் மயிலெனக் குறித்ததாம். மலர்க்கூந்தல் அவிழ்ந்ததாலே தோகை விரிந்திருக்கும்

பெண்மயில்போலிருந்ததாகவும், ஒடரிக்கண்களைக் கொண்டு மான்பேடைகளைப் போலிருந்ததாகவுமருளினர். அன்றி, குழலூதுமிடத்திலே மயில்களும் மான்களும் சேர்ந்தன. அவைகளுக்கும் அவர்களுக்கும் வேறுபாடு முதலில் தோற்றாமலிருந்தது. நெகிழ்ந்த துகிலைத் தூக்கி நின்றதிலிருந்து அவர்கள் மங்கைகளென விளங்கிற்றென்றதாம். இங்கே கண்ணன் நிற்கும் நிலையில்,

> அவஸ்திதம் க்வாபி கதம்பமூலே வல்குஸ்மிதம் வாதிதமஞ்ஜுவேணும் ।
> ஸாசீக்ருதாக்ஷம் தத்ருசுஸ் தருண்ய: ஸ்வாத்யம் ஸதாம் ஸ்வஸ்திக சாருஜங்கம் ॥ (8—62)

என்றபடி கோணும் கண்ணோட்டமும் கால்களை மாற்றிவைத்துள்ளவகையுமான சில விசேஷங்களையும், 8 முதலான பாசுரங்களின் முன்னடிகளிற் சொன்னவற்றையும் கொள்க. இங்குக் கூறின மங்கை நிலையையும்—

> 'த்ருதாகதி (த்ருதாகதி) வ்யாகுல பூஷ்ணஸ் தா: கிஞ்சித் ஸமுச் வாஸித நீவிபந்தா: ।
> பர்யாகுலாக்ஷ்ய: பரிவார்ய தஸ்து: (தஸ்து:) க்ருஷ்ணம் க்ருபாதீன த்ருசம் க்ருசாங்க்ய: ॥ (8—64)

என்றது போன்ற ஸ்ரீதேசிக ச்லோகங்களில் கண்டு தெளிக. (2)

3. வானிளவரசு வைகுந்தக்குட்டன் வாசுதேவன் மதுரைமன்னன் நந்தர்
கோனிளவரசு கோவலர்குட்டன் கோவிந்தன் குழல்கொடுதினபோது
வானிளம்படியர் வந்துவந்தீண்டி மனமுருகிமலர்க் கண்கள் பனிப்பத்
தேனளவுசெறிகூந்தலவிழச் சென்னிவேர்ப்பச் செவிசேர்த்து நின்றனரே. (276)

| | |
|---|---|
| வான் | பரமாகாசமான நித்ய விபூதிக்கு |
| இள அரசு | யுவ ராஜனும் |
| வைகுந்தம் | வைகுண்டத்தில் |
| குட்டன் | சிறு பிள்ளையும் |
| வாசுதேவன் | வ்யூஹவாஸுதேவனும் (அல்லது வசுதேவரின் புத்திரனும் |
| மதுரை மன்னன் | மதுரைக்கு நாதனும் |
| நந்தர் கோன் | நந்தராகிய கோப ராஜனுக்குட்பட்ட |
| இள அரசு | யுவராஜனும் |
| கோவலர் | கோபாலர்களில் |
| குட்டன் | சிறியவனுமான |
| கோவிந்தன் | கண்ணபிரான் |
| குழல்கொடு | குழலை எடுத்துக்கொண்டு |
| ஊதினபோது | கானம் செய்தபோது |
| வான் | தேவலோகத்திலுள்ள |
| இள படியர் | யௌவன தேஹமுற்ற ஸ்த்ரீகள் |
| வந்து வந்து ஈண்டி | மேன்மேல் வந்து குவிந்து |
| மனம் உருகி | ஹ்ருதயம் த்ரவிக்கப் பெற்று |
| மலர் கண்கள் | மலர்போன்ற கண்களானவை |
| பனிப்ப | ஆனந்தநீர் பொழிய |
| தேன் | அணிந்த பூவிலிருந்த தேன் |
| அளவு | கலந்துள்ள |
| செறி | நெருங்கின |
| கூந்தல் | குழல் |
| அவிழ | அவிழ்ந்து விழ |
| சென்னி | நெற்றியும் |
| வேர்ப்ப | வேர்த்துக் கொட்ட |
| செவி | காதுகளை |
| சேர்த்து | குழலோசையோடு சேர்த்து |
| நின்றனர் | மற்றொன்றும் அறியாமே நின்று விட்டனர். |

கோபஸ்திரீகள் குவிந்ததி லென்ன வியப்பு? வானத்திலுள்ள இளமை பொருந்திய ஸ்த்ரீகளெல்லாரும் கூட வரிசை வரிசையாக வந்து சேர்ந்து அந்த ரஸாநுபவத்தில் ஈடுபட்டு அவ்வநுபவம் தாங்காமே மனமுருகக் கண்ணீர்பெருகத் தலையாட்டி ச்லாகித்துக் கூந்தலவிழ நெற்றி வேர்க்க அவை யொன்று மறியாமே மெய் மறந்து செவி சாய்த்துக் கேட்டுக் களித்தவண்ணமே சலியாமே நின்று விட்டனரென்றபடி. வானிளவரசு. யௌவராஜ்யமாவது இராஜ்யத்திலே மேலரசன் இருக்கும்போதே அவன் சுமையெல்லா மேந்திநின்று அரசனாயிருப்பது. ஸ்ரீராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்யப் புகுந்த தசரதர், 'யௌவராஜ்யே நியோக்தாஸ்மி' என்றார். முன்னோர்களைப் போலே தாம் காட்டிற்குப் போய் விடாமல் இராமனோடு கூட ராஜராஜனா யிருக்கவேண்டுமென அவர் நினைத்தார் போலும். இராமன் தனக்குப் பட்டாபிஷேகமானவுடன், 'யௌவராஜ்யே ததோ ப்யஷிஞ்சத் பரதம் மஹாத்மா' என்றபடி பரதனை யுவராஜனாக்கிக்கொண்டதும் காண்க. இப்படி மேலே யொரு அரசனிருக்க அவன்கீழ் இளவரசு கொண்டதை, நந்தர் கோனிளவரசு என்றிங்கேயே அருளிச்செய்கிறார். வானிளவரசென்பது அத்தகையதன்று. உபய விபூதிநாதனான ஸ்ரீமந் நாராயணனுக்கு மேற்பட அரசனில்லை. ஆகவே இளவரசு என்பது நித்ய யுவராஜன் என்றபடி. இவன் எப்போதாவது வயது முதிர்ந்து சக்தியற்று நிற்கிறானென்பதில்லை யென்றபடி.

இந்த யௌவனமும் கௌமாரத்தோடு கலந்ததாகப் பாவிக்கப்பட வேண்டும். அதாவது கௌமார யௌவந ஸந்தியிலுள்ள திருமேனி யமைப்பு அவனுக்கு அங்குள்ளது எனத் தெளிவிக்க வைகுந்தக்குட்ட னென்றது. அவதரித்த விடத்திலே, குசலவர்கள்காலத்தில் இராமன்போலே குட்டனாகாமலிருக்கலாம். வைகுண்டத்தில் அங்ஙனமில்லை. அங்கே இளவரசும் குட்டனாயிருப்பதும் எப்போது முள்ளனவென்றபடி. கோவலர்குட்டன் என்றாற்போலே வைகுந்தர்குட்டன் என்னுமையால் வைகுந்தம் குட்டனெனப் பிரித்தோம். வைகுந்தர்குட்டன் என்பதே வைகுந்தக்குட்டனென விகரித்ததென்றும் சொல்வர். வைகுந்தர் = நித்யஸூரிகள்; அவர்களுக்கு இவன் குட்டனாகையாவது ஸர்வப்ரகாரத்தாலும் இவன் ஆச்ரிதபரதந்த்ரனாகை. சேனைமுதலியாரின் கோலுக்குக் கீழ்ப்பட்டு, ஆதிசேஷனது மடியிலே வளர்ந்து இவ்வாறு ஸர்வபரதந்த்ரனாயிருப்பவன். அவர்களாலே மங்களாசாஸனம் பண்ணப்படுகிறவனென இவன் ஸௌஜந்யத்தை விரித்துரைப்பர்.

இங்கே மேன்மேலுள்ள பதங்களாலே அளவற்ற பரத்வமுள்ள எம்பெருமான் தனது பரத்வத்தை யடக்கி ஸௌசீல்யத்தை அதிகமாகக் காண்பிக்கும் படிகளை அடைவாகக்குறித்தபடி. வானிளவரசென்றால் பரமாகாசத்துக்கெல்லாம் நித்ய வரசன். அங்குள்ள வைகுண்ட ஜநபதத்திலே நித்யஸூரி நாதனாயிருப்பதைமட்டும் குறித்தார் முன்னே. பிறகு அவன் வ்யூஹவாஸுதேவ

னுகவோ வஸுதேவ புத்ரனுகவோ வந்ததைச் சொன்னூர். அந்தத் தேசத்தி லும், ஸர்வலோகாதிபதி அயோத்யாதிபதியானுற் போலே மதுராநாதனுய் நின் றுன். அதற்கும் கீழாகிக் கோபராஜனுக்குட்பட்ட இளவரசனுனன். கோபர் களெல்லோருக்கும் ஏவல் தொழில் செய்யும்படி கோவலர்குட்டனுனன். அதற் கும் கீழாகக் கோக்களுக்கும் பின்னுனன். இப்படியாகி அனுக்ரஹிக்கக் குழ லூதினபோது மேற்பட்டவரெல்லோரும் கீழ்ப்படிந்து வசப்பட்டொழிந்தனர். என்ன விவன் குழலோசையினினிமையும் தூய்மையுமென்றபடி. இளம்படியர்.— படியாவது உருவம். தேனளவுசெறிகூந்தல். அளவுதல் கலத்தல். அளவு செறி கூந்தலென இருவினைத்தொகை. இங்ஙனமே 'மெச்சூது சங்கமிடத் தான்' என்றதும். தேனளவு என்றதால் ஓடிவந்த வேகத்தில் அணிந்த பூ விழுந்தாலும் பெருகின தேன் கலந்து நிற்கக் குறையில்லை யென்றதாம். சென்னி வேர்ப்ப. தேவதைகளுக்கு வேர்ப்புண்டாமோ வென்னில், இங்ஙனம் நினைத்துத் தான் போலும் திருவாய்மொழிப்பிள்ளை, 'தேனுக்கும் வேர்ப்புக்கும் வாசி தெரியுமோதான்' என்றுர். பூத்தேன் வேர்ப்பு போல் காணப்பெற்ற தெனவிப்போது இதன் கருத்து. வேறுவகையில் வேர்ப்பு கிடையாதாகிலும் எம் பெருமானுடைய திவ்யகானத்திற்கு எல்லோர்க்கும் எல்லா விகாரங்களையு முண்டுபண்ணும் சக்தி யுண்டாகையாலே காத்ரம் சிதிலமாய் வேர்க்கக் குறை யில்லை யென்றனர் ஜீயர். (௩)

*இவனுடைய சூரத்தன்மையையும் சேர்த்து அனுபவிக்கிறுர்—*

4. தேனுகன்பிலம்பன் காளியனென்னுந் தீப்பப்பூடுகளடங்கவுழக்கிக்
கானகம்படி யுலாவியுலாவிக் கருஞ்சிறுக்கன்குழலூதினபோது
மேனகையொடுதிலோத்தமையரம்பை யுருப்பசியரவர்வெள்கிமயங்கி
வானகம்படியில் வாய்திறப்பின்றி யாடல்பாடலிவைமாறினர்தாமே. (**277**)

| | |
|---|---|
| தேனுகன் | தேனுகாசுரன் |
| பிலம்பன் | பிரலம்பாசுரன் |
| காளியன் | காளிய நாகம் |
| என்னும் | என்னப்பட்ட (அல்லது) என்னலாம்படியிருந்த |
| தீப்பப் பூடுகள் | தீம்பு செய்யும் பூண்டுகளை |
| அடங்க | முழுதும் |
| உழக்கி | மிதித்து |
| கானகம்படி | காட்டிற்குத் தக்கபடி |
| உலாவி உலாவி | நடமாடிக் கொண்டே |
| கரு சிறுக்கன் | கருநிறனை சிறுவன் (கண்ணன்) |
| குழல் ஊதினபோது | |
| மேனகை ஒடு | மேனகையென்பவளும் |
| அவர் | அப்படி ப்ரஸித்திபெற்ற |
| திலோத்தமை அரம்பை உருப்பசியர் | திலோத்தமை, ரம்பை, ஊர்வசி யென்னப்பட்டவரும் |
| வெள்கி | வெட்கப்பட்டு |
| மயங்கி | மயக்க முற்று |
| வான் அகம் | ஸ்வர்க்கத்திலுள்ள |
| படியில் | வகைகளிலும் |
| வாய் திறப்பு இன்றி | வாயைத் திறந்து சொல்வது ஒன்றில்லாமல் |
| தாமே | தாமாகவே |
| ஆடல் பாடல் இவை | ஸகலவிதமான ஆட்டமும் பாட்டும் |
| மாறினர் | இல்லாதவராயினர். |

குழலூதுவதைச் சொல்லுமிடத்திலே தேனுகாசுராதி வதத்தைச் சொல்வது பொருந்துமோ வென்னில், மேற்பாசுரத்திலே முன்நடந்த நரசிங்க விருத்

தாந்தத்தையே யருளும்போது இவ் வவதாரத்திலே கோகுலத்திலே நடந்ததைச் சொன்னா லென்ன வென்க. உண்மையில் இது அவ்வவ் வஸுரஸம்ஹாரம் கானகத்தில் பூண்டுகளை மிதித்தழிப்பதற் கொத்ததா யிருந்ததைக் குறித்ததாம். அன்றி, கண்ணன் கானகத்திற் குழலூதினபோது, 'இதனைக் கேட்டுக் கோபஸ்த்ரீகளும் மாடுகளும் மற்றுமெல்லாம் கூடும்படி யிருக்குமே. இங்கே முள்ளும் புல்லுமான பூண்டுகள் உள்ளவிடத்தில் உடல் கெடாதபடி யிருக்க வேணுமே. எனவே நாமெல்லாவற்றையும் நடமாடி மிதித்தழித்துத் தக்கவா றமைக்க வேண்டுமென நினைத்து அவைகளை மிதித்துக்கொண்டே உலாவி யுலாவிக் குழலூதினான். அப் பூண்டுகள் ஸாமான்யமானவையல்ல. அவ்வப் போது கோகோபாதி ஹிம்ஸைக்காகவே வந்திருந்த தேனுகன் ப்ரலம்பன் காளியன் போன்ற பற்பல தீம்பர்களே இங்ஙனம் பூண்டாக நின்றுள்ளனர் என்னும்படி யிருந்தன. புல் பூண்டெல்லாம் ஒவ்வொரு அசுரனாக நினைக்கப் பட விருந்த காலமன்றோ அது என்றதாம். ஜீயருரையும் இங்ஙனே பொருந்து மெனவுந் தெளிக. ஆக இங்கே தேனுகாதிகளைப் பூண்டுகளாக உரூபித்தா ரென்னாமே பூண்டுகளை இவை தேனுகாதிகளென்றோ, தேனுகாதிகளைப் போன்ற தீம்பரென்றோ உரூபித்தாரென்க. உழக்குதல் மிதித்தல். மிதித்துவந்தால் நுனி யழிந்துவிடுமாகையாலே உழக்கி=தலை யழித்து எனவுரைப்பதாம். கானகம்படி. வானவரும் வெள்கி நிற்கும்படி செய்யவேண்டு மென்கிற விசேஷ ஸங்கற்ப மின்றியே, கானகத்தில் நம்மைக் காண்பவர் யார் என நினைத்தே, நன்றாயிருக்க வேண்டுமென்கிற நோக்கு மின்றியே தோன்றினபடி என்னல். அன்றி, கானகத்தில் மிதிக்கப்பட வேண்டும் பூண்டுகள் முளைத்திருக்கு மிடத்திற்கும் அவற்றின் உருவத்திற்கும் தக்கபடி யென்னல். உலாவியுலாவி. இவன் நடமாடின விதம் நடம் ஆடும் அப்ஸரஸ்ஸுக்கள் வெள்கும்படி யமைந்தது; குழலூதினது பாடலை யவர் விடும்படி யிருந்தது. ஊதினபோது என்பதற்கு வெள்கி என்றதோடு அந்வயம். ஊதினபோது வெள்கினவர்கள் பிறகு ஒருபோதும் ஆடவோ பாடவோ ப்ரவர்த்திக்கவில்லை யென்றபடி. இங்ஙனமே யன்றி, ஊதினபோது மாறினர், பிறகு ஊதி நின்றதும் ஆடல்பாடல் செய்ய முன் வந்தனர் எனப் பொருளன்று. உருப்பசியரவர் என்றதை உருப்பசி அரவர் எனப் பிரித்து அரவராவார் அப்ஸரஸ்ஸுக்கள் என்றனர் சிலர். பதவுரைப் பொருள் ப்ரஸித்தமானதும் பழையவுரைப்படியுமாம். வெள்கி. கண்ணன் உலாவினதையும் குழலூதினதையும் உணர்ந்தவர் நம்முடைய ஆடல் பாடலைப் பரிஹஸிப்பர்கள் என்று வெட்கப்பட்டு. நமக்குமேல் யாருமில்லை யென்று அகங்கரித்தோமே யென்று வெள்கி யென்னவுமாம். வானகம் படியில். சிற்சில ஆடல்பாடல்படிகள் இராவிட்டாலும் இந்தப் படியில் ஆடுவேன் பாடுவேன் என்று ஒரு படியிலும் வாய்திறக்காம லிருந்தனரென்றபடி. வானகம்படிக்கு மேற்பட்டிருந்தது கானகம்படி நடத்தினதே யென்றால், தரமாக நடத்தத் திருவுள்ளம் கொண்டு நடத்தினால் அதன் பெருமையை என்னென்று சொல்வதென்க. வானகம்—ஆகாயத்திலும், படியில்=பூமியிலும் எனவுமுரைப்பர். தாமே. ஒருவர் பரிஹஸித்த பிறகு நிற்கும்படியிருப்பது எப்போது நேரும்? ஒருபடியில் நாமும் அழகாக

ஆடவும் பாடவும் முடியுமென்று நினைத்தால்தானே. அப்படி நினைக்காமல் வெள்கினதாலே தாமே நிறுத்திக் கொண்டனரென்றதாம். கீழ்ப்பாட்டிலே வானிளம்படியரென்று, ஆடல் பாடல்களில் பேர்பெற்றிராதவர் உள்பட எல்லோரும் நின்றது சொல்லிற்று. இங்கே அகங்கரித்த சிலர் ஆடல் பாடல்களையே விட்டொழிந்ததைச் சொல்லிற்று.

தீப்பப்பூடுகள். தீப்பூடுகள் என்றதே அமையும். தீம்பர் பூடுகள் எனப் பிரித்தாலும் இங்ஙனம் புணர்வது சாத்யமாகாது. ஆக இதொரு வழக்குச் சொல்லாகவேண்டும். அன்றி தீப்பு அப்பூடுகளெனப் பிரிக்கலாம். தீப்பு= எரிப்பு எரிப்பதற்குரிய அப்படிப்பட்ட பூடுகளெனப் பொருளாம். அன்றி, தீப்ரம் என்ற வடசொல் தீப்ப என மருவிற்றெனலாம். உஜ்ஜ்வலமான என வதன் பொருள். (௪)

இனி அப்ஸரஸ்ஸுக்களுக்குமேல் பேர்பெற்ற தேவர்ஷிகளும் கிந்நரர்களும் பெற்ற தசையை அருளிச் செய்கிறார்.—

5. முன்னரசிங்கமதாகி யவுணன்முக்கியத்தைமுடிப்பான் மூவுலகில்
மன்னரஞ்ச(சும்), மதுசூதனன்வாயிற்குழலினோசை செவியைப்பற்றிவாங்க
நன்னரம்புடையதும்புருவோடு நாரதனுந்தந்தம் வீணைமறந்து
கின்னரம்மிதுனங்களுந்தந்தங்கின்னரம் தொடுகிலோமென்றனரே. (278)

| | | | |
|---|---|---|---|
| மூ உலகில் | மூன்று லோகங்களிலுமுள்ள | ஓசை | த்வநியானது |
| மன்னர் | அரசர்கள் | செவியை | காதுகளை |
| அஞ்ச | பயந்தபோது (அல்லது) | பற்றி வாங்க | பிடித்திழுத்த போது |
| அஞ்சும் | அஞ்சும்படி யிருக்கும் | நல் நரம்பு | நல்ல வீணைத் தந்தியை |
| அவுணன் | அசுரனை இரண்யகசிபுவினுடைய | உடைய | விரலிட்டவண்ணமாய் உடைய |
| முக்கியத்தை | பெருமையை | தும்புருவோடு- | தும்புருமுனிவரும் |
| முடிப்பான் | முடிப்பதற்காக | நாரதனும் | நாரத முனிவரும் |
| முன் | முன்னொரு சமயத்திலே | தம் தம் | தங்கள் தங்கள் |
| நரசிங்கம் அது ஆகி | அந்த அழகிய லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ ரூபனாகி, | வீணை | வீணைகளை |
| மது சூதனன் | (ஹயக்ரீவ ரூபியாய்) மதுவையும் ஸம்ஹரித்த எம்பெருமானின் (கண்ணனது) | மறந்து | மறந்துவிட |
| வாய் இல் | திருப்பவளத்தை இடமாக வுடைய | கின்னரர் மிதுனங்களும் | தம்பதிகளாகவே யுள்ள கின்னரர்களும் |
| குழலின் | வேய்க்குழலினுடைய | தம் தம் கின்னரம் | தங்கள் தங்கள் கின்னர வாத்யங்களை |
| | | தொடுகிலோம் | தொட மாட்டிலோம் |
| | | என்றனர் | என்று சொல்லிவிட்டனர். |

மன்னரஞ்சும் (ச), என்றதை மதுசூதனன் என்பதோடே சேர்க்கலாம் ஆகிலும் அதற்குப் பிறகு நிறுத்தியோதும் ஸம்ப்ரதாயத்திற்கிணங்க முன்னே சேர்த்துரைத்தது. அஞ்சும் என்றது உரையாளர் ஆதரித்த பாடம். அஞ்ச என்பதும் வெகு பதிப்புகளிலேறின பாடமாகும். இரண்யனைக் கண்டு சூரர்களெல்லோரு மொன்றும் செய்ய முடியாமே பயந்திருந்தபோது என்றதாம். முடிப்

பான் என்பதற்கு முடித்தான் எனப்பொருள் கொள்வதிலுள்ள ப்ரயாஸம் வேண்டாமென்று இதைப் பான்விகுதியாகக்கொண்டு அந்வயம் சொன்னது. மதுசூதனன் என்றது, 'வேதாநாம் ஸாமவேதோஸ்மி' என்றது மட்டுமன்றியில், முன் மதுவை ஸம்ஹரிக்க ஹயக்ரீவனாய் அவதரித்தவனை ஸர்வவேதரூபியாயும் உத்கீதஸ்வரூபனாயும் ப்ரமாணம் சொல்வதாலே ஸங்கீதமெல்லாம் அவனிடம் பிறந்ததைத்தெளிவிக்க. எனவே ஹயக்ரீவனென்ற விசித்ரரூபத்தை நினைத்த போது அங்ஙனம் இருவகையுருவம் கலந்துள்ள நரசிங்கவுருவம் நினைவுறவே முன்னரசிங்க மித்யாதி யருளினதாம். மறந்து மறந்துவிட வென்றபடி.. அன்றி, நாரதனும், மிதுனங்களும் மறந்து, எல்லோரும் தம். தம் வீணை தம் தம் கின்னரம் இனித் தொடுகிலோமென்றனர் எனவும் அந்வயம் கூடும். (ரு)

6. செம்பெருந்தடங்கண்ணன் திரடோளன் தேவகிசிறுவன் தேவர்கள்சிங்கம்
நம்பரம னிந்நாள்குழலூதக் கேட்டவர்களிடருற்றனகேளீர்
அம்பரந்திரியுங்காந்தப்பரேல்லா மமுதகீதவலையாற்சுருக்குண்டு
நம்பரமன்றென்றுநாணி மயங்கி நைந்துசோர்ந்து கைமறித்து நின்றனரே. (279)

| | |
|---|---|
| செம் பெரு தட கண்ணன் | சிவந்த பெருத்த விசாலமான திருக்கண்களை யுடையவனும் |
| திரள் தோளன் | திரண்ட தோள்களை யுடையவனும் |
| தேவகி சிறுவன் | தேவகிக்குச் சிறுவனாகத் தோன்றினவனுமான |
| தேவர்கள் சிங்கம் | தேவர்களுக்கும் மேற்பட்டவனுமான |
| நம் | நமது |
| பரமன் | ஸர்வஸ்மாத்பரன் |
| இ நாள் | கண்ணனாயவதரித்த காலத்திலே |
| குழல் | வேய்ங்குழலை |
| ஊத | ஊதினபோது |
| கேட்டவர்கள் | அதில் செவியுற்றவர்கள் |
| இடர் உற்றன | இடைஞ்சலுற்ற வகைகளை |
| கேளீர் | கேளுங்கள்— |
| அம்பரம் | ஆகாயத்திலே (கானத்திற்காக) |
| திரியும் | திரிந்தவண்ணமிருக்கும் |
| காந்தப்பர் எல்லாம் | எல்லாக்கந்தர்வர்களும் |
| அமுதம் கீதம் வலையால் | அம்ருதம்போலே போக்கியமான கீதமாகிற வலையிலே |
| சுருக்கு உண்டு | கட்டுப்பட்டு |
| நம் பரம் அன்று என்று | இனி கானத்தைக்காப்பது நமது பாரமன்று என்று தீர்மானித்து |
| நாணி | வெட்கப்பட்டு |
| மயங்கி | மயக்கமுற்று |
| நைந்து | மனமுருகி |
| சோர்ந்து | தளர்ந்து |
| கை மறித்து | கையை மடக்கிக்கொண்டு |
| நின்றனர். | பாடாமலே இருந்துவிட்டனர். |

வாத்தியங்களைக்கொண்டு கானம்செய்யும் தேவர்ஷிகள் கின்னரர்கள் முன்னே சொல்லப்பெற்றனர். சாரீரகானத்திலே கரைகண்ட கந்தர்வர்களின் கதி இங்கே கூறப்பெற்றது. சுருக்குண்டது முதல் கைமறித்து நின்றதுவரையி லுள்ளவை யெல்லாம் இடருற்ற வகைகளாம். இடர்உற்றன உற்றனவான இடர்களை யென்னவுமாம். (சு)

7. புவியுள்நான்கண்டதோரற்புதங்கேளீர் பூணிமேய்க்குமிளங்கோவலர்கூட்டத்
தவையுள்நகத்தணையான் குழலூதவமரலோகத்தளவுஞ் சென்றிசைப்ப
அவியுணாமறந்துவானவரெல்லா மாயர்பாடிநிறையப்புகுந்தீண்டிச்
செவியுணாவின்சுவை கொண்டுமகிழ்ந்து கோவிந்தனைத்தொடர்ந்தென்றும்விடாரே.

| | |
|---|---|
| புவியுள் | பூமியில் |
| நான் கண்டது | நான் பார்த்திருக்கும் |
| ஓர் | ஒப்பற்ற |
| அற்புதம் | ஆச்சர்யத்தை |
| கேளீர் | கேளுங்கள். (அதாவது) |
| நாகத்து அணையான் | நாகபர்யங்க சாயியானவன் |
| பூணி மேய்க்கும் | பசுக்களை மேய்க்கின்ற |
| இள கோவலர் | கோபால யுவர்களுடைய |
| கூட்டத்து அவை உள் | கூட்டமாகிற ஸபையில் |
| குழல் ஊத | வேணுகானம் செய்ய, (அந்தக் கானமானது) |
| அமரலோகத்து அளவும் | ஸ்வர்க்கலோகம் வரையில் |
| சென்று இசைப்ப | போய் ராகமாக த்வனிக்க |
| வானவர் எல்லாம் | ஆகாயத்திலுள்ள தேவதைகளெல்லாரும் |
| அவி உணு மறந்து | ஹவிஸ்ஸாகிற உணவை மறந்துவிட்டு |
| ஆயர்பாடி | இடையரின் சேரியில் |
| நிறைய | நிறைந்துவிடும்படி |
| புகுந்து | அதனுள் ப்ரவேசித்து |
| ஈண்டி | திரண்டு |
| செவி நா உள் | காதாகிற நாக்கினுள் |
| இன் சுவை | இனிய ரஸத்தை |
| கொண்டு | ஸ்வீகரித்துக்கொண்டு |
| மகிழ்ந்து | களித்து |
| கோவிந்தனை தொடர்ந்து | கோவிந்தன் போமிடமெல்லாம் பின்னே சென்று |
| என்றும் | எப்போதும் |
| விடார் | விடாமலிருந்தனர். |

பூமியில் எத்தனையோ அற்புதங்களுண்டு. நான் நன்கு ஆராய்ந்து ஒப்பற்றதாகக்கண்ட அற்புதமென்னெனில் இதுதான். பாற்கடலில் நாகபர்யங்க சாயியான எம்பெருமான் மாடுமேய்க்குமிடையரின் கூட்டத்திலே பிறந்து அவர்களின் ஸபையில் விண்ணுலகம் வரையிற்கேட்கும்படி வெகு மனோஹரமாகக் குழலூத அதை வானவரெல்லோரும் கேட்க விழிந்தினர். பூமியில் ஆங்காங்கு யஜ்ஞங்களிலே ஹவிஸ்ஸுக்களைப் புசிக்கத் தேவர்களை அழைப்பதும், அப்போது ஒரே சமயத்தில் பல வுருவங்களெடுத்துக்கொண்டு அழைத்த விடங்களுக்கெல்லாம் அவர்கள் செல்வதும் வழக்கமல்லவா? அங்ஙனமழைத்தபோது அவர்கள் எடுத்துக்கொண்ட அனைத்துடனும் கண்ணன் குழலூதுவதைக் கேட்பதிலேயே யிழிந்ததால் அத்தனை ரூபத்தோடும் ஆயர்பாடியே வந்து சேர்ந்தனர். ஆயர்பாடியாவது ஆயரிருக்கும் சேரி. அது கோகுலமுமாம்; ப்ருந்தாவனமுமாம். நாவினால் ஹவிஸ்ஸை உண்பதற்குப் பதிலாகக் காதாகிற நாக்கினாலே அமுதகீதத்தை உட்கொண்டனர். அவ்வளவோடு நிற்காமல் கண்ணன் போமிடமெல்லாம் கூடவே சென்றனர், அவன் எங்கே பாடினாலும் அருகிலே நின்று கேட்கவும், அவனுக்குப் பணிவிடை செய்யவுமாசைகொண்டு.

புகுந்து. பூமியை மிதிக்காத தேவர்கள் எம்பெருமான் திருவடி பட்டவிடத்தை ஸ்பர்சித்துப் பாவன மாக நினைத்து அதனுட்புகுந்தனரென்றபடி. செவியுணவின்சுவை. செவியின் உள்ளாகிற நா=நாவினாலே இன்சுவை= இனிய சுவையை எனவும் பொருளாம். நாவின்=நாவினாலே எனவுமாம். இதனைக் கேட்குமிவர்க்குத் தனியே நாவினால் ஒரு சுவைகொள்ள மனம் போகவில்லை; பசிதாகமின்றி யிருக்கலாயிற்றென விளக்கச் செவியை நாவாக ரூபித்ததே யன்றி, செவியுள் நாவொன்றிருப்பதாகக் கொண்டன்று. "ச்ரவணரஸநயா—ஸ்ரக்த்ராதுக்தாஸி:" என ஸ்ரீ தேசிகனும் அருளிச்செய்தபடி. அன்றி, செவி உணு—செவிக்கு உணவான இன்சுவை என உரைத்தலுமாம். (எ)

இவ்வளவால் கோகுலஸ்திரீகளும், வானத்திலுள்ள ஸ்திரீகளும், ஆடல் பாடல்களில் ப்ரஸித்தரான அப்ஸரஸ்ஸுக்களும், வாத்யங்களிலே விசேஷமாகப் பேர்பெற்ற தேவர்ஷிகின்னரர்களும், கானத்திலே க்யாதி வாய்ந்த கந்தர்வர்களும், சுவையறிவதில் ஸமர்த்த சிகாமணிகளான வானவரெல்லோரும் வந்து மகிழ்ந்தது சொல்லியாயிற்று. இனி திர்யக்ஸ்தாவர ஜாதிகளுக்கிருந்த விருப்பையருளிச்செய்ய மேற்பாசுரங்கள். இப்பாசுரங்களிலே குழலூதும்போது அவனுக்கிருந்த அங்க வமைப்பும் ஒப்பனையழகுங்கூட முதலடிகளிலே விளக்கப்படுவதுமொரு விசேஷமாம்.

8. சிறுவிரல்கள்தடவிப்பரிமாறச் செங்கண்கோடச்செய்யவாய்கோப்பளிப்பக்
குருவியர்(வெயர்)ப்புருவங்கூடலிப்பக் கோவிந்தன்குழல்கொடுதினபோது
பறவையின்கணங்கள் கூடுதுறந்துவந்து சூழ்ந்துபடுகாடுகிடப்பக்
கறவையின்கணங்கள் கால்பரப்பிட்டுக் கவிழ்ந்திறங்கிச்செவியாட்டகில்லாவே.

| | |
|---|---|
| சிறுவிரல்கள் | சிறிய விரல்களானவை |
| தடவி | (குழலைத்) தடவிக்கொண்டு |
| பரிமாற | துவாரங்களில் மாறிமாறி நடமாட |
| செம் கண் கோட | சிவந்த கண்கள் (குழல் துளைகளைக்காண) வளைய |
| செய்ய வாய் | சிவந்த முகமானது |
| கொப்பளிப்ப | குமுழிக்க |
| குறு வியர் | சிறிய வேர்வைப்பிந்துக்கள் உள்ள |
| புருவம் | புருவங்கள் |
| கூடலிப்ப | நெறித்து விளங்க |
| கோவிந்தன் | கண்ணபிரான் |
| குழல்கொடு | குழலைக்கொண்டு ஊதினபோது— |
| பறவையின் கணங்கள் | பல வகைப் பக்ஷிகளின் கூட்டங்கள் |
| கூடு | தங்களிருப்பிடங்களை |
| துறந்து | விட்டுவிட்டு |
| வந்து | ஊதுமிடம் வந்து |
| சூழ்ந்து | கண்ணனைச்சூழ்ந்து கொண்டு |
| படுகாடு | பட்டுப்போய்க்கிடந்த செடிகள் போல |
| கிடப்ப | விழுந்திருக்க, |
| கறவையின் கணங்கள் | கறக்கும் மாடுகளின் கூட்டங்களும் |
| கால் பரப்பு | கால்களைப் பரப்பிக் கொள்வதை |
| இட்டு | செய்துகொண்டு |
| கவிழ்ந்து | தலை தாழ்த்தி |
| இறங்கி | கீழ்நோக்கி |
| செவி | காதுகளை |
| ஆட்டகில்லா | ஆட்டமாட்டாமலிருந்தன. |

கோட. கோடுதல் வளைதல். வாய் திருப்பவளமும் உள்வாயும். கோப்பளித்தல் கொப்புளித்தல். உள்ளே காற்றைப்பிடித்து மெல்ல விடுவதால் மலரும் தருணத்திலுள்ள முகுளம்போலாக்கல். குறுவியர். குறுமை சிறுமை. வியர்-வியர்ப்பு முதனிலைத் தொழிற்பெயர். சிறுவிரல் என்றாற்போலே குறுவியர் என 'வி'யே அமையுமாகிலும், வெயர் எனவே பாடமாகில் வேர் அல்லது வியர் வெயரென மருவிற்றென்க. பறவை. பறக்குமவையெல்லாம் பறவையாம். கறவை. மாட்டின் பொது. அன்றி, கறக்கும் பசுக்களும் கன்றையும் மறந்து கிடந்ததைச் சொன்னதாம். கால்பரப்பு. கிடந்து காலை நீட்டிப் பரப்புதல். நின்ற வண்ணமே காலைப் பறப்பினதாகவும் கொள்வர். பரப்பென முதனிலைத் தொழிற்பெயர். இல்லையேல் 'பரப்பியிட்டு'யெனவாம். (அ)

பக்ஷிகள் பசுக்கள்போன்ற திர்யக்குகளைக் கீழே கூறி, காட்டிலே வசிக்கும் திர்யக்குகளைத் தனியே கூறியருளுகிறார். பசுக்கள் பரிசயம்பெற்றவை

யாகையாலே கண்ணனருகில்வந்து கிடந்து கால்பரப்பிக் கவிழ்ந்திருந்தன. மான்கள் எப்போதும் வெருண்டோடுவதாயிருந்தும் குழலோசையைக்கேட்டு மருண்டு சித்திரத்தில் எழுதினவைபோல் நின்றொழிந்தன என்கிற மாறுபாட்டைக் கொண்டு இதனைத் தனியே யருளினதாம்.

9. திரண்டெழுதழைமழைமுகில்வண்ணன் செங்கமலமலர்சூழ்வண்டினம்போலே
சுருண்டிருண்டகுழல்தாழ்ந்தமுகத்தானூதுகின்ற குழலோசைவழியே
மருண்டுமான்கணங்கள்மேய்கைமறந்து மேய்ந்தபுல்லுங்கடைவாய்வழிசோர
இரண்டுபாடுந்துலுங்காப் புடைபெயரா வெழுதுசித்திரங்கள்போலநின்றனவே.

| | |
|---|---|
| திரண்டு | குவிந்து |
| எழு | மேலே கிளம்பினதும் |
| தழை | பருத்ததும் |
| மழை | மழைக்கும் தருவாயிலுள்ளதுமான |
| முகில் | மேகத்தின் |
| வண்ணன் | நிறம்போன்ற நிறமுடையவனும், |
| செம் கமலம் மலர் | செந்தாமரைப் பூவை |
| சூழ் | சூழாநிற்கும் |
| வண்டு இனம் போலே | வண்டின் கூட்டம் போலே |
| சுருண்டு | சுருட்சி பெற்று |
| இருண்ட | கறுத்து மிருக்கிற |
| குழல் | குந்தளங்கள் |
| தாழ்ந்த | தாழுமிடமான |
| முகத்தான் | திருமுக மண்டல முடையவனுமான கண்ணன் |
| ஊதுகின்ற | ஊதின |
| குழல் | வேய்க்குழலின் |
| ஓசை வழியே | த்வனிகேட்டவிடத்திலே |
| மருண்டு | மதி யழிந்து |
| மான் கணங்கள் | கூட்டங் கூட்டமாகவிருக்கும் மான்கள் |
| மேய்கை மறந்து | மேய்ந்து வருவதை மறந்து |
| மேய்ந்த புல்லும் | ஏற்கனவே முகத்தில் எடுத்த புற்களும் |
| கடை வாய் வழி | வாயின் ஓரத்திலிருந்து |
| சோர | கீழே விழுந்து விட |
| இரண்டு பாடும் துலுங்கா | இரு பக்கங்களிலும் அசையாமல் |
| புடை பெயரா | எவ்வாறும் செல்லாமல் |
| எழுது | மாளுக எழுதப்பட்ட |
| சித்திரங்கள் போல | பதுமைகளைப் போல |
| நின்றன | நிற்றலுற்றன. |

எழுதழைமழைமுகில் எனப் பலவினைத்தொகை. முகில்வண்ணனென்றதும் தாழ்ந்த முகத்தானென்றதும் கண்ணனுக்கியற்கையிலுள்ளனவாம்; முன் பாசுரத்திற்போல் குழலூதுவதற்கு வேண்டுவனவல்ல. செங்கமலமலர் திருமுகத்திற்கு உவமை. சுருண்டு. இருண்டதோடு சுருண்டு சுருண்டுமிருப்பதாலே ஒவ்வொரு சுருளும் ஒவ்வொரு வண்டின் உருவம் கொண்டிருந்ததென்க. ஊதுகின்ற என நிகழ்காலம் மான் நின்றகாலமும் ஊதுங்காலமும் ஒன்றானமை கொண்டு வந்ததெனக் கொள்க. துலுங்கா, புடைபெயராவென்ற விரண்டும் செய்யாவாய்பாட்டின்படி அசைந்து என்ற பொருள் பெறக்கூடுமாகிலும் அப் பொருள் இங்கே இணையாததைக்கொண்டு எதிர்மறைப்பொருள்கொள்வது. துலுங்காமல், புடை பெயராமல் என்கிற வினையெச்சமே ஈறுகெட்டிங்ஙனமாயினவெனவேண்டும். துலுங்காதவைகளாய் புடைபெயராதவைகளாய் எனவுரைத்து 'ஆ' என்னுமெதிர்மறை விகுதிபெற்ற பதமாக்கில் துலுங்காப்புடைபெயரா வெனப் பகரவொற்று மிகாதென்கிறனர். (௯)

இப்படி திர்யக்குகள் இருந்தவண்ணம் சொல்லியாயிற்று. ஸ்தாவரங்களுக்கு இவ் விசையின் அனுபவத்திலுண்டான சிறந்த சைதந்யப்ரகாசத்தை யருளிச் செய்கிறார்.

**10.** கருங்கண்டோகைமயிற்பீலியணிந்து கட்டிநன்குடுத்தபீதகவாடை
அருங்கலவுருவிலா(ன)யர்பெருமானவனொருவன் குழலூதினபோது
மரங்கள்நின்றுமதுதாரைகள்பாயும்மலர்கள்வீழும் வளர்கொம்புகள்தாழும்
இரங்குங்கூம்புந்திருமால்நின்றநின்றபக்கம் நோக்கியவைசெய்யுங்குணமே. **(283)**

| | |
|---|---|
| ஆயர் பெருமான் | இடையருக்கு ஈச்வரனை |
| அவன் ஒருவன் | அந்த ஸர்வேச்வரனை கண்ணன், |
| கட்டி | கச்சுப் பட்டையைக் கட்டி |
| நன்கு உடுத்த | வீழாதபடி அழகாய் உடுக்கப்பெற்ற |
| பீதகம் ஆடை- | பீதாம்பரத்தையும் |
| அரு கலம் | அருமையான ஆபரணங் களை யுமுடைய |
| உருவு இன்(ல்) | திருமேனி உடையவனாய் |
| கரு கண் | கறுத்த கண்களை யுடையனவான |
| தோகை | தோகைகளை யுடைய |
| மயில் பீலி | மயிலிறகுகளையும் |
| அணிந்து | ஆபரணமாகச் சாத்திக்கொண்டு |
| குழலூதினபோது | |
| மரங்கள் நின்று | மரங்களானவை ஏவி நின்றதாலே |
| மது தாரைகள்- | தேன் பெருக்குகள் |
| பாயும் | ப்ரவஹித்தன; |
| மலர்கள் | புஷ்பங்கள் |
| வீழும் | விழுந்தன ; |
| வளர் கொம்புகள் | மேற்புறம்வளர்ந்துபோம் கொம்புகளும் |
| தாழும் | கீழ்ப்புறமாகத் தாழ்ந்தன ; |
| இரங்கும் | தவித்தன; |
| திருமால் | ச்ரிய: பதியான கண்ணன் |
| நின்ற நின்ற பக்கம் | எங்கெங்கு நின்றானோ, அந்தந்தப் பக்கமெல்லாம் |
| நோக்கி | பார்த்து |
| கூம்பும் | குவிந்தன; இங்ஙனம் |
| அவை | அந்த அசேதநங்களான மரங்கள் |
| செய்யும் குணம் ஏ | செய்துவந்த சேஷவ்ருத்திகள் ஆச்சர்யமானவை. |

தேவமனுஷ்ய திர்யக்குகளைவிட மரங்களின் ஈடுபாடு மிகவும் மெச்சத் தக்கதாயிருந்தது. தேவாதிகள் தங்கள் செயலை விட்டு எம்பெருமானுள்ள விடம் வந்து விழுந்தததனை. இம்மரங்கள் செய்த உபசாரங்கள் வாசாமகோசரங்கள். பருக மதுவையளித்தன. புஷ்பங்களால் அர்ச்சனை செய்தன. தலை குனித்து நின்றன. மனமிரங்கித் திருவடி தொடத் தவித்துத் தங்கள் நிஸ்திதியை விளக்கித் தங்களுக்கருகே எங்கெந்த பக்கத்தில் அவன் வந்தானோ அந்தந்த பக்கத்திலுள்ள கிளைகளைச்சேர்த்துக் கைக்கூப்பி எங்களைக் காக்க வேண்டுமென இரங்கினவைபோலாயின.

உருவின். உருவினன், உருவினில் இருக்கிற என்றபடி. உரு உடையவன் என்றதாம். உருவில் என்ற பாடத்திலுமங்ஙனே.

பாயும், வீழும், தாழும் என்றவையெல்லாம், கீழே 'இன்று முற்றும்' (2-10) என்ற விடத்திற்போல் செய்யுமென் முற்றில் வந்த வினைகள். நின்று என்றதற்கு நிற்க எனப் பொருள். இறந்தகால வினையெச்சமாக்கி, பாயும் இத்யாதி வினைகளுக்குப் 'பாய்ச்சும் என்றவாறு பிறவினைப் பொருளும் கொள்வர். பாயும் என்பதற்குமட்டும் மரங்கள் என்பதை எழுவாயாக்கி மரங்களானவை

நின்றிருந்து மதுதாரைகளைப்பெருக்கின எனவுமுரைப்பர். 'மலர்கள் வீழும்' இத்யாதிகளிற்போலே இங்கும் மதுதாரைகளையே எழுவாயாகக்கொள்ளலாம். 'எல்லா விடங்களிலும் மரங்களையே எழுவாயாக்கி மலர்களை வீழ்த்துமென்றவாறு பொருள்கொள்ளவேண்டும். மரங்களின் செயல்களல்லவோ சொல்லப்பட வேண்டு'மெனில்—ஸ்வரஸமான அர்த்தத்தையே கொண்டாலும் மரங்கள் செய்ததாகத்தானே ஸித்திக்குமாகையாலும், அவைசெய்யுமென்று மரங்கள் செய்ததாக மேலே சொல்வதாலும் இங்குப் பாயும் வீழுமித்யாதிகளுக்குப் பிறவினைப்பொருள் உரைக்கவேண்டிய அவசியமில்லையாம். எனவே பதவுரைப்படியு மாம்; பிறவினையாக்காமல் ஜீயருரைப்படி மரங்கள் தம் உருவில் நின்றிருந்து உள்ளுருகி மதுதாரைகளாகப் பாய்ந்தன வென்னலுமாம். நோக்கி என்பதைக் கூம்பும் என்றதோடு சேர்த்து ஜீயரும் உரைத்தனர். முன் க்ரியைகளிலும் கூடுமாகில் கொள்க. அப்போது பொதுவாக, நோக்கி என்பதைச் செய்யுமென்றதோடும் சேர்ப்பதாம்.

மரங்களுக்குள்ள ஈடுபாடு இராமாயணத்திலே இராமன் விஷயத்திலும் கூறப்பட்டது 'விஷயே தே மஹாராஜ ராமவ்யஸநகர்சிதா: அபி வ்ருக்ஷா: பரிம்லாநா: ஸபுஷ்பாங்குரகோரகா:' (மொட்டும் முளையும் பூவுமுன்பட முழுதும் வாடிநின்றன மரங்கள் இராமனைப்பிரிந்த வ்யஸனம் தாங்காமல்) என்று. அவை செய்யுங்குணமே. நாம் தோஷமே செய்து நிற்க, அசேதனங்கள் செய்யும் குணத்தைப்பாரீர் என்று வியந்தருளுகிறார். (கo)

**11.** குழலிருண்டுசுருண்டேறியகுஞ்சிக் கோவிந்தனுடையகோமளவாயில்
குழல்முழஞ்சுகளினூடுகுமிழ்த்துக் கொழித்தெழுந்தவமுதப்புனல்தன்னைக்
குழல்முழவம்விளம்பும்புதுவைக்கோன் விட்டுசித்தன்விரித்ததமிழ்வல்லார்
குழலைவென்றகுளிர்வாயினராகிச் சாதுகோட்டியுள்கொள்ளப்படுவாரே. **(284)**

| | |
|---|---|
| குழல் | சிரஸ்ஸில் படிந்த மயிர்களை |
| இருண்டு சுருண்டு ஏறிய | இருட்சியும் சுருட்சியும் பெற்று ஏறிவிளங்கும் |
| குஞ்சி | ஆண் மயிரையுடைய |
| | கோவிந்தனுடைய |
| கோமளம் | ம்ருதுவான |
| வாயில் | திருப்பவளத்தில் இருந்த |
| குழல் | வேய்ங்குழலினுடைய |
| முழஞ்சுகளின் | —துளைகளின் |
| ஊடு | வழியாக |
| குமிழ்த்து | மூகுளம்போலே குவிந்து |
| கொழித்து | சிரித்துவிடப்பட்டு |
| எழுந்த | கிளம்பின |
| அமுதம்புனல் தன்னை | அமிருத ஜலத்தை |
| குழல் | ஊது குழலும் |
| முழவம் | மூரசு முதலானவையும் |

| | |
|---|---|
| விளம்பும் | வாசிக்கப் பெற்ற |
| புதுவை | ஸ்ரீவில்லிபுத்தூருக்கு |
| கோன் | நாதனை |
| விட்டுசித்தன் | ஸ்ரீவிஷ்ணுசித்தன் (பெரியாழ்வார்) |
| விரித்த | விவரித்துச் சொன்ன |
| தமிழ் | தமிழ்ப்பாஷையிலமைந்த இப்பாசுரங்களை |
| வல்லார் | அப்யஸித்தவர் |
| குழலை வென்ற | குழலுக்கு மேற்பட்ட குணமுள்ள |
| குளிர்வாயினர் ஆகி | குளிர்ந்த குரலுடையவராய் |
| சாது கோட்டியுள் | ஸத்துக்களின் கோஷ்டியிலே |
| கொள்ளப் படுவார். | ப்ரவேசம் பெறுவிக்கப் படுவர். |

மரங்கள் கூட மதுதாரையை ப்ரவஹித்து இங்ஙனமானதற்கு மூல காரணம் எம்பெருமான் ஸர்வபூதானுக்ரஹம் செய்ய விரும்பித் தன் வாத்ஸல்ய

வமுதைத் திருப்பவளத்தின் அமுதுடன் அதில் வைத்த குழல்வழியே இசை யமுதமாக ப்ரவஹிப்பித்ததே யென வருளினபடி.

கடலின் நீரையும் கொண்டு இருண்டு அதினின்று வானமேறிய கார் முகில்மின்னல் வாயிலாக மலையின் குகைகளில் விழுந்தெழுந்த மஹா ஜலப்ரவாஹம் போலே கண்ணன் திருப்பவளத்திலிலங்கின ஊதுகுழல் துளைவழி யுண்டான இசையமுதை விரித்துரைக்கும் இத்திருமொழி வல்லார் அவ்வண்ணமினிய வாக்குள்ளவராய் ஸத்துக்கள் கேட்டுக்களித்து அநுக்ரஹிக்கும்படியாம் குணம்பெற்று விளங்குவரென்றபடி. குழல்முழஞ்சு. முழஞ்சென்பது துளையாம். (முழைஞ்சு = மலையின் குகை) குழல்முழவம் விளம்புமென்பதை புதுவைக்கு விசேஷணமாக்கியுரைத்தனம். புனல்தன்னையென்றது விரித்த வென்றதோடு சேரும். விளம்பும் என்றதோடு சேர்த்து, விளம்பும் என்பதை விட்டுசித்தனுக்கு விசேஷணமாக்கி, முழவம் என்பதற்கு ஓசையெனப் பொருள்வைத்து 'புனல்தன்னைக் குழலின் ஓசையாகச்சொன்ன விஷ்ணுசித்தன்' எனவுமுரைப்பர். பதவுரைப்படி கொள்ளில் விரித்த என்பதும் வீணாகாமே யிருக்கும்; பல நிகமனப் பாசுரத்திற்கு மொத்ததாயிருக்கும். (கக)

ப்ரபந்தரக்ஷையில் பெ. தி. 3. 6. நாவலம் பெரிய உரை முற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

---

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

## பெரியாழ்வார் திருமொழி 3.7.

# ஐய புழுதி

ஆழ்வார் தம் தன்மையிலே திருப்பல்லாண்டு தொடங்கிச் சில திருமொழிகள் அருளிப் பிறகு பெரும்பான்மை யசோதைப்பிராட்டியின் தன்மையிலேயிருந்து கண்ணபிரானுடைய குழந்தைப் பருவம் முதல் கற்றுநிரை மேய்த்து வருவது வரையில் அவனை யநுபவித்து, நடு நடுவே பல கோபஸ்திரீகள்தன்மையிலே பல பாசுரங்களை யருளிச்செய்த வகையிலே, இனி இரண்டு திருமொழிகளாலே, கண்ணனிடத்தில் தன்மகள் பிறந்தது முதல் பற்றுள்ளவளாயிருப்பதைத் தன் தோழிகளிடத்திலே சொல்லித் திகைத்திருக்கும் தாயான ஒருத்தியின் தன்மையிலே தம்மை நிறுத்தி யருளிச்செய்கிறார். இவ்வாழ்வாருக்குத் திருக்குமாரத்தியாக அவதரித்து இயற்கையிலிருந்த சிறப்பாலே அவதாரம் முதல் கண்ணபிரானையே காதலுற்றுக் கல்யாணம் செய்து கலந்த கோதையின் திவ்ய சரித்திரம் திருத்தமப்பனரான இவருக்குக் கண்ணெதிரே நின்றதாலும், தற்சம

யம் இவர்தம்முடைய சித்தவிருத்தி யிருந்த வகை இவருக்கே விசதமாகையாலும் கண்ணனைக் காமுற்றவொரு கன்னியின் தாயின் நிலைமையிலே நின்று அவள் சொல்லுமாறு விளக்கியருளுவது இவருக்கு வெகு ஸுகமாயிருந்தது. ஆக இவ்வளவு காலத்திற்குப் பின்னே பிறந்த கோதை இங்ஙனமிருக்கக் கண்டு, இங்ஙனமே முன்னும் கன்னியொருத்தி இருந்திருக்கக்கூடுமாகையாலே அவளை வ்யாஜீகரித்து ஆண்டாளின் நிலைமை யிருந்தமையை நமக்கு விளக்கியருளுகிறு ரென்று கொள்க. ஆக மாமியார் முறையிலே யிங்கு ஆழ்வார் நின்றதாம்.

இவ்வாழ்வார் தம்மைச் சிறு பிராயத்திலுள்ள ஒரு மணமகளாக வைத்துத் தமக்கு உபதேசிக்கும் ஜ்ஞானிகளான அன்பரைத்தாயாராகக் கற்பித்துத் தாம் எம்பெருமானிடம் காமுற்றிருப்பதையும், தமக்கு ஜ்ஞானம், பக்தி முதலியன வில்லாமையைப் பல்லெழாமை, மயிர் கூடாமை, கொங்கை குவியாமை போன்ற சில குறைகளாகவும் தாயின் பாசுரமாக்கி வெளியிடுவதாக வைத்து இத் திருமொழிக்கு ஸ்வாபதேசார்த்தம் உரைப்பர்.

1. ஐயபுழுதியுடம்பளைந்திவள்பேச்சுமலந்தலையாய்
செய்யநூலின் சிற்றாடை செப்பனுடுக்கவும்வல்லளல்லள்
கையினிற்சிறுதூதையோடிவள் முற்றில் பிரிந்துமிலள்
பையரவணைப்பள்ளியானொடுகைவைத்திவள்வருமே. **(285)**

(வட்டவார் குழல் மங்கைமீர்!)

| | |
|---|---|
| ஐய | (ஓர்) ஆச்சர்யம் (இது)— |
| இவள் | (என் மகளான) இவள் |
| உடம்பு | உடலில் |
| புழுதி | தெருமண்ணை |
| அளைந்து | எடுத்து விளையாடிப் பூசிக் கொண்டு |
| பேச்சு உம் | பேசும் வார்த்தையும் |
| அலந்தலை ஆய்—தெளிவற்றதாயிருக்க | |
| செய்ய நூலின் | சிவந்த நூற்களைக் கொண்டு ஆன |
| சிறு ஆடை உம் | சிறிய புடவையையும் |
| செப்பன் | செவ்வன் |
| உடுக்க வல்லள் அல்லள் | உடுத்துத் தாங்க மாட்டாதவள்; இவள் |
| கையினில் | தனது கைகளில் |
| சிறு தூதை ஓடு | சிறிய விளையாடு கலசத்தையும் |
| முற்றில் | சிறிய முறத்தையும் |
| பிரிந்து மிலள் | பிரிந்திருந்தவளுமல்லள். |
| | (இப்பருவத்திலே) இவள் |
| பை அரவு அணை பள்ளியானொடு | (மேலே விரித்த) படங்களையுடைய ஆதிசேஷனாகிற படுக்கையிலேபள்ளிகொண்டவனுடன் |
| கை வைத்து வருமே | கையோடு கை வைத்து வருகிறாளே. |

என்மகளின் இருப்பை என்னவென்று யான் சொல்லுவது. உலகில் புருஷன், மனைவி என்பதைத் தெரிந்துகொள்ளும் தசை வந்தபிறகு பெண்கள் புருஷர்கள்மேல் காதலுறுவர். அப்போது அவர்கள் உடம்பை அழகுபடுத்திக் கொள்ளவும், விநோதமாகப்பேசவும், விதம் விதமான வஸ்திரங்களை யுடுக்கவும் பார்ப்போருக்கு ப்ரேமையுண்டாம்படிக்குப் பாங்கான வேலைகள் செய்யவும் குதூஹலிப்பர். அந்தத்தசை வந்திருந்தால் வடிவாலும், வாக்காலும், வஸ்திரத்தாலும், வேலையாலும் வசீகரிப்பதற்கிடமுண்டு. இப்படியிருக்க இது வெகு ஆச்சர்யமாயிருக்கிறது. நடுத்தெருவில் புழுதிமண்ணை எடுத்து விளையாடும்

வயதிது. உடம்பெல்லாம் ஒரே புழுதி. இன்னது பேசுகிறுளென்று எனக்கும் தெரியாது. இன்னும் வாய் திருந்தவில்லை. படும் அழுக்கு தெரியாமலிருக்கவேண்டுமேயென்று பலவர்ணவாடைகளை வாங்காமல் செந்நிறச்சிற்றுடை வாங்கிக்கொடுத்தால் அதை உடுக்கவோ சுமக்கவோ மாட்டிலள். எப்போதும் சமையல்விளையாட்டுக்காக ஒரு கையில் சிறு கலசமும் மற்றொரு கையில் சிறு முறமும் வைத்தவண்ணமேயிருக்கிறவள் இவள் எப்படி அந்த அநந்தசாயியின் கையோடு கை சேர்த்துவருகிருள்? அரவைக் கண்டும் அகன்றிலளே. அப்போது கையிலிருக்கும் கலசமும் முறமும் எங்கே வைத்தனளோ? இப்பருவத்திற்கும் இந்தக் காதலுக்கும் எங்ஙனம் பொருத்தமென வியப்பாயிருக்கிறதென்றபடி. ஐய புழுதி — அழகான புழுதியெனவு முரைப்பர். பேச்சுமலந்தலையாய் அலந்தலையான பேச்சையுடையவளாய். (க)

2. வாயிற்பல்லுமெழுந்திலமயிரும் முடிகூடிற்றில
சாய்விலாதகுறுந்தலைச்சிலபிள்ளைகளோடிணங்கி
தீயிணக்கிணங்காடிவந்திவள் தன்னன்னசெம்மைசொல்லி
மாயன்மாமணிவண்ணன் மேலிவண்(ள்)மாலுறுகின்ருளே. (286)

| | | | |
|---|---|---|---|
| வாயில் பல்லும் | | இணக்கு ஆடி | பிசாசம் பிடித்தாடி |
| எழுந்தில | எழுந்தபாடில்லை; | இவள் | என் மகளாள இவள் |
| மயிரும் | தலை மயிரும் | இவண் | இவ்விடம் |
| முடி கூடிற்றில | முடியாகக் கூடவில்லை; | வந்து | வந்து சேர்ந்து |
| சாய்வு இலாத | வெட்கமும் வணக்கமுமில்லாத | அன்ன | அவ் பிணக்கத்திற்கொத்த |
| குறுந்தலை | சிறியவராயினும் தலைவரான, நீசமான தலைமை கொண்ட (பிஞ்சில் பழுத்த) | தன் செம்மை | தன்னுடைய நன்னடத்தைகளை |
| சில பிள்ளைகளோடு | சில பெண்பிள்ளைகளோடு | சொல்லி | (நம்மிடமும்) நேராகச் சொல்லி |
| இணங்கி | சேர்ந்து | மாயன் | இப்படி அகடித கடனம் செய்விக்கும் |
| தீ இணக்கு | அந்தத்தீதான சேர்க்கையாகிற | மா மணி வண்ணன் மேல் | நீலமணி நிறத்தனனை கண்ணன் மேலே |
| | | மால் உறுகின்ருள் | மோஹ மடைந்திருக்கிருள். |

குறுந்தலை. 'தண்மையில் தலைநின்ற' என ஜீயருரை. 'நீசர் வகுப்பிலே முதல் நின்ற' எனச் சிலர் விரிவுரை. 'துர்வ்யாபாரத்திலே ச்ரேஷ்டர்களான' என அரும்பதவுரை. பதவுரைப்படியும் பார்க்க. தலைமைக்குக் குறுமையாவது அதற்குவேண்டும் அதிகாரம் பெறுமலே இருக்கையென்க. இணங்காடி. இணங்கு-பிசாசு. இணங்கிஞலாடி இணங்காயாடி எனப்பொருள்தரும். இணங்கி எனவுமுரைப்பர். இவள் தன்னன்ன. மேலே சில பாசுரத்திற்போலே இங்கும் 'இவள் மாலுறுகின்ருளே' எனவே நான்காமடியில் முன்னேர் கொண்ட பதவிபாகம். அப்போது மூன்றுமடியில் இவள் என்பது அதிகமாம். இது சேரத்தகும் வினைமுற்று வேறில்லை. வினையெச்சத்திற்குத் தனியே இவ் வெழுவாய் வேண்டாம். ஆக இவள் தன் இவளுடைய எனப்பொருள் கொள்ளவேண்டும். ஜீயருரையிலும் 'இவள் தன்னோடு' எனவுரை

புள்ளது. சாலாமடியில் இவண் எனப் பதம்கொள்ளில் மூன்றாமடியில் இவள் என்பது தனிப்பதமாம். இவண் என்பதற்கு இவ்விடம் எனப்பொருள். சில பிள்ளைகளோடிணங்கியாடினவிடத்திலே மாலுறுகினது இருக்கட்டும். இங்கே என்னிடம் வந்து வாயாற்சொல்லி மாலுறுகின்றாளே. இதெல்லாம் சாய்விலாத சில பிள்ளைகளோடிணக்கத்தால் வந்ததென்றபடி. இவண் இப்பருவத்திலென வுரைப்பர். இவள் என்றது முதலான பதங்களில் தேறினதே அது. தன்னென்ன செம்மை. இங்குத்தன்னையொத்த செம்மை—அதாவது தானும் தகுந்தபடி நடக்காமல் விபரீதமாய் நடந்ததுபோல் நடந்தபடி சொல்லாமல் விபரீதமாய்ப் பொய் சொல்லுதலென வுரைப்பர். உண்மையில் இது தாயின் புத்திக்குத் தீயிணக்காகப் பட்டாலும், மகள் தான் செய்ததை மறைக்காமல் தான் செய்ததே நல்லது=ந்யாயமானதென்று சொல்லி மாலுறுகின்றாளென்றே கொள்ளலாம்; சாய்விலாக் குறுந்தலை யானபிறகு என் மறைக்கவேண்டுமென்று கொண்டு பதவுரையில் செம்மை யென்பதின் பொருளைச் செம்மையாகவே சொன்னது. தன் என்பது செம்மை யென்பதோடு சேரத் தகும். (உ)

3. பொங்குவெண்மணற்கொண்டு சிற்றிலும் முற்றத்திழைக்கலுறில்
சங்குசக்கரந்தண்டுவாள்வில்லுமல்லதிழைக்கலுறாள்
கொங்கையின்னங்குவிந்தெழுந்தில கோவிந்தனோடிவளைச்
சங்கையாகியென்னுள்ளம்நாடோறுந்தட்டுளுப்பாகின்றதே. (287)

| | | | |
|---|---|---|---|
| முற்றத்து | இல்லத்தில் நடுமுற்றத்திலே | இழைக்கல் உறாள் | செய்கிறவளல்லள். |
| வெண் பொங்கு மணல் | வெண்ணிறமான நொதி மணலை | கொங்கை | ஸ்தனமானது |
| கொண்டு | வெளியிலிருந்து கொண்டு வந்து | இன்னம் | இப்போதும் |
| சிற்றில் | விளையாட்டுருக்களை | குவிந்து எழுந்தில | முகுளித்துக் கிளர்ந்து வரவில்லை. (ஆகிலும்) |
| இழைக்கல் உறில் உம் | செய்வதிலீடுபட்டபோது கூட | என் உள்ளம் | எனது மனமானது |
| சங்கு சக்கரம் தண்டு வாள் வில் உம் அல்லது | எம்பெருமானின் பஞ்சாயுதங்களைத் தவிர்த்து வேறு பிள்ளைவிளையாட்டுருவை | சங்கை ஆகி | இவள் கலவியைச் சங்கித்து கோவிந்தனோடு இவளை |
| | | தட்டு | இசைந்து |
| | | நாள்தொறும் | நிச்சலும் |
| | | உளுப்பு ஆகின்றது | உளுத்து வருகின்றது. |

வெளியிலே சென்று தீயிணக்கிணங்காதபடி வீட்டிலே நிறுத்தின போதும், விளையாட்டுப் புத்தி விடாமல் பிள்ளைகள் இழைக்கும் சிற்றில் செய்ய நொதிமணலைக்கொண்டு முற்றத்திலே சிற்றிலிழைக்கிறவள், மற்ற பிள்ளைகள் போல வேதேனு முலக வழக்குக் கொத்த சிற்றிலைச் செய்யாள். எம்பெருமானுடைய பஞ்சாயுதங்களை இழைத்துவருவள். அலந்தலைப் பேச்சும் ஆடையுடுக்கமாட்டாமையுமாயிருந்தது முதலே கண்ணனைக் காமுற்ற இவளுக்கு வெளியில் பிள்ளைகளோடு திரியும் வயது வந்தாலும், கொங்கை யெழும் பருவத்திற்கு வரும் தருவாயிலிவளிருந்தாலும் இன்னம் அவை குவிந்தெழும் வயது வரவில்லையே. இப்படியிருக்க இவளுக்கு இவ்வள விணக்கமா? இவள் எம்பெருமானைச் சேர்ந்த சிற்றில் இழைப்பது ஒரு பக்க மிருக்கட்டும்; பஞ்சாயுதங்

களை யிழைக்கிறாளே. இதன் கருத்தைக் காண்மின். நாமெல்லாம் இவளை வெளியே யனுப்பாமே விரோதமாயிருப்பதாகவும் விரோதிநிரஸநம் செய்ய வல்லவனைக் கேட்பதும் காண்பிப்பதுமாக வுமன்றோ விவள் செயலிருக்கிறது. இங்ஙனம் சங்கித்து இவளை அவனோடு சேர்க்க நானு மிசைந்தேன். எவ்விதம் சேர்ப்பதெனவறியாமே நாள்தோறு மிதனையே நினைத்து நினைத்து நெஞ்ச முளைத்துக் கிடக்கிறே னென்றபடி.

தட்டு. வினையெச்சம். தடுதல் = இசைதல். இவளை யென்பதை சங்கை யாகி என்பதோடே சேர்ப்பர். தட்டுளுப்பு எனவொரு பதமாக்கித் தடுமாற்றம் அதன் பொருளென்பர். (௩)

4. ஏழைபேதையோர்பாலகன்வந்தேன்பெண்மகளையேள்கித்
தோழிமார்பலர்கொண்டுபோய்ச் செய்தசூழ்ச்சியை யார்க்குரைக்கேன்
ஆழியானென்னுமாழமோழையிற்பாய்ச்சியகப்படுத்தி
மூழையுப்பறியாததென்னும் மூதுரையுமிலளே. (288)

| | |
|---|---|
| தோழிமார் பலர் | பல தோழிகள் |
| வந்து | கிட்டி வந்து |
| என் பெண் மகளை | எனது மகளை |
| ஏழை | பாக்கியமில்லாதவளாகவும் |
| பேதை | அறிவில்லாதவளாகவும் |
| ஓர் பாலகன் | ஒரு புருஷப்பிள்ளை யென்றும் |
| ஏள்கி | நிந்தித்து |
| கொண்டு போய் | தாங்கள் நினைத்தவிடம் அழைத்துப்போய் |
| ஆழியான் என்னும் | திருவாழியைத் தரிப்ப வன் (எம்பெருமான்) என்னப்படும் |
| ஆழம் | ஆழமான |

| | |
|---|---|
| மோழையில் | கீழூற்றில் |
| பாய்ச்சி | தள்ளி |
| அகப்படுத்தி | மீள வொண்ணாதபடியாக்கி |
| செய்த சூழ்ச்சியை | ஏமாற்றிச் செய்த இச் செயலை |
| யார்க்கு | யாரிடம் |
| உரைக்கேன் | உரைப்பேன். |
| மூழை | 'அகப்பையானது |
| உப்பு | தான் கிளறும் வஸ்து விலுள்ளசுவையை |
| அறியாதது | அறியமாட்டாது' |
| என்னும் மூதுரை உம் | என்கிற பழமொழிகூட |
| இலள் | கற்காதவள் (என் மகள்.) |

ஓர் பாலகன் என்பது பெண்ணுக்குச் சேராதாதலின் மூன்றாமடியில் ஆழியானென்பதோடு சேர்த்து ஆழியான் ஓர் பாலகனெனப்படும் மோழை யென்றார் திருவாய்மொழிப்பிள்ளை. 'பாலகன் என்பதற்குப் பாலிகை யென விங்கே பொருள். பால்வழுவமைதி' யென்று கொண்டனர் ஜீயர். 'ஏழை—சபலை; ஏள்கி—எத்தி, வஞ்சித்து' என்றனர்.

பதவுரைப்படி யாம் கருத்தாவது—தோழிகள் எப்படியாவது இவளைக் கொண்டுபோகவேண்டு மெனத் தீர்மானித்து இவளை ஏள்க அதாவது நிந்திக்கத் தொடங்கினார்கள். நிந்தையின் ஆற்றைச் சொல்வது, ஏழை பேதையோர் பாலகன் என்றவரை. இவள் அவனோடு கலந்து பரிமாறக் கொடுத்து வைக்காத ஓர் ஏழை யென்றாள் ஒருத்தி. அவன்மேன்மையையும் அழகையும் அறியாளிவளென்றாள் மற்றொருத்தி. 'ஏடி! பெண்ணாயிருந்தால் இந்த வயதுக்கு இவ்வறிவு கூட விராமலிருக்குமோ? உண்மையில் ஆணைப் பெண்ணாக

நாம் நினைத்தோம். என் கூப்பிடவேண்டுமென்றனர் ஏனையோர். இப்படிச் சொல்லி இவளைக் கொண்டுபோய் மோழையிலகப்படுத்திவிட்டார்கள் என்றது, வந்தேன் என்பதற்கு ஆனை இவள் நம்மோடு வந்து என்?—என்ன பலன் எனவும் பொருளாம். மகளை யென்பதே போதுமாயிருக்கப் பெண்மகளை யென்றது, இவ்வளவு பெண்தன்மை அவர்களுக்குக் கூட இராதென்று மகளைப் புகழவாம். பெண்மகள் என்பதற்கு ஸ்திரீ யெனப் பொருள். எள்கி. இதற்கு நிந்தித்து என்றே நேரான பொருள். எங்ஙனம் நிந்தித்தென்றபோது கீழ்ச் சொன்ன விதம் சேரும்.

ஆழியான். அவன் சக்கரத்தில் அகப்பட்ட பிறகு மீள்வதுண்டோ என்றபடி. ஆழி யெனக் கடலுக்கும் பெயர். ஆழியையே யுடையானை ஆழமோழையாகச் சொல்வது பொருந்து மெனக் கருத்து. மோழை கீழாறு, கீழாற்று. அந்தச் சுழியில் உள்ளே சொருகப்பட்டால் கீழே போய்க்கொண்டிருக்கவேண்டுமே யன்றி மீள்வதில்லை என்றதாம். மூழை யித்யாதி. பதார்த்தங்களைச் சமைக்கும்போதும் பரிமாறும்போதும் ஒவ்வொன்றிலும் புகுந்து புறப்படுகிறது, உட்கொள்ளுகிறது அகப்பை. ஆனால் அப் பதார்த்தத்தின் சுவையை யது அறியுமோ வென்பர் முன்னோர். அவ் வகப்பையாகக் கூட இவளை நினைக்கவொண்ணாது. தான் சுவை யறியாவிட்டாலும் சுவை யுண்டாம்படி வஸ்துவைப் பக்குவப்படுத்தவும், சுவை யறிவோர்க்குப் பங்கிடவும் அகப்பை வல்லதாகும். இவள் ஒன்றும் வல்லளல்லள். (7-வது பாட்டின்படி) மூழை கோல் கழிந்தால் இங்ஙனம் செய்ய வல்லதாமோ என்றவாறு. (௪)

சூடிக்கொடுத்த நாய்ச்சியாரின் பெருமை யறியாதார், இதென்ன? மானிடவற்கென்று பேச்சுப்படில் வாழகில்லே னென்கிறாளென்று கொண்டு வயது வந்த பெண்ணை ஒரு வரனுக்குக் கொடுக்காமலிருக்கிறதா என்று பலர் சொன்னதையும், கேசவனோடு சேர்க்கப் பார்க்கும் பெரியோர் இருந்ததாலே துணிவுடன் தாமிருந்ததையு மொருவாறு குறிக்கும் படியிலருளுகிறார்—

5. நாடுமூருமறியவேபோய் நல்லதுழாயலங்கல்
சூடி, நாரணன்போமிடமெல்லாஞ் சோதித்துழிதருகின்றாள்
கேடுவேண்டுகின்றார் பலருளர்கேசவனோடிவளைப்
பாடுகாவலிடுமினென்றென்று பார்தடுமாறினதே. (289)

| | |
|---|---|
| நாடும் | தேசத்திலுள்ளாரும் |
| ஊரும் | தன்னூரிலுள்ளாரும் |
| அறியவே | அறியும்படியாகவே பகிரங்கமாக |
| போய் | எல்லாவிடமும் போய் |
| நல்ல | மணமுள்ள |
| துழாய் அலங்கல் | திருத்துழாய் மாலையை(த் தான்) |
| சூடி | அணிந்து கொண்டு, |
| நாரணன் போமிடமெல்லாம் | |
| சோதித்து | தேடிக்கொண்டு |
| உழிதருகின்றாள் | திரிந்து வருகின்றாள். |
| | (அதனால்) |
| பலர் | உலகில் அனேகம் பேர் |
| கேடு வேண்டுகின்றார் | குடியைக் கெடுக்கப் பார்க்கிறவர்களாய் |
| உளர் | இருக்கின்றனர். |
| | (எங்ஙனமெனில்) |
| பார் | பூமியிலுள்ளோர் பெரும்பாலும் |
| கேசவனோடு | கண்ணனையும் |

ரஸ்யமானதே. ஆனால் எடுத்தேனுக்கு என்றதற்கு 'பவ்யையாக' என்றாற்போல் ஒரு பதம் சேர்க்கவேண்டியதாகும். வளர்த்தெடுத்தேனுக்கென்னோடு என்பதற்கு வளர்த்த என்னோடென்றிவ்வளவே பொருளென்பதும் யுக்தமாகாது. இதை விட இஷ்டமாக வென்பதை மறுபடி 'எடுத்தேனுக்கு' என்பதோடும் கூட்டிக் கொள்ளலாம். வளர்த்து என்றவிடத்தில் அதைச் சேர்த்தாகவேண்டிய நிர்ப்பந் தமுமில்லை. ஆகையாலே எடுத்தேனுக்கிஷ்டமாக என யோஜித்தது. 'பெற்று வளர்த்தேனுக்கு' என்னாமே 'வளர்த்தெடுத்தேனுக்கு' என்றதாலே திருத்து ழாய்த்தோட்டத்திலே தோன்றினவளும், தம்மால் வளர்த்தெடுக்கப்பட்டவளு மான ஆண்டாளை இங்கே ஆழ்வார் கருத்திற்கொண்டாரெனலாம். எடுத்துவளர் த்தேன் என்னாதே வளர்த்தெடுத்தே னென்றதாலே ஒக்கலையில் எடுத்து வளர்த் ததுவன்றி இவளுக்குரிய எல்லா யோகக்ஷேமபாரத்தையு மேற்றுக்கொண்டது விளங்கும். இவளை யபிமானித்து வளர்த்து வேண்டுமாபரணங்களையெல்லா மிட்டு இவள் பொறுப்பையெல்லா மேற்றுக்கொண்டு இவளை என் பரமாக எடுத் திருக்குமென்னை யுகப்பிக்க என்னோடு கூட விருக்கக்கூடாதோ? இவள் கண்ண னைக் கூப்பிடவேண்டுமாகில் என்னருகிலேயே நின்று கூவக்கூடாதோ? என்னை விட்டுப்போய் ஏனிப்படிச் செய்யவேண்டும்? இவள் அவனை, அவன் உள்ள விடமே போய்ப் பெறலாமென்று போனாள்போலும். அவன் அங்கே இராமற் போகவே பூவைப்பூவண்ணாவென்று ஊர் அறியக்கூவினாள். இவளுக்கு மோகம் மிகுந்தேறியதென்னவேண்டுமென்றதாம். மங்கைமீர் என்று சிறு வயதிலுள்ள பெண்களை விளித்து, நீங்கள் தாய்மார்க்குப் பவ்யையாயிருக்க, இவளொருத்தி ஏன் இங்ஙனமானாள் எனக் கருத்துரைப்பதுமாம்; தன்னைப்போன்ற யுவதிகளை விளித்து உங்கள் பெண்களுமிப்படித்தான் இருக்கின்றார்களோ என்றவாறு கருத்துரைப்பதுமாம். (சு)

7. பேசவுந்தெரியாதபெண்மையிற் பேதையேன்பேதையிவள்
கூசமின்றிநின்றார்கள் தம்மெதிர்கோல்கழிந்தான்மூழையாய்
கேசவாவென்றுங்கேடிலீயென்றுங் கிஞ்சுகவாய்மொழியாள்
வாசவார்குழல்மங்கைமீரிவள் மாலுறுகின்றாளே. (292)

| | |
|---|---|
| வாசம் | வாசனை பொருந்திய |
| வார்குழல் | நீண்ட கேசபாசத்தை யுடைய |
| மங்கைமீர் | ஸ்திரீகளே! |
| இவள் | |
| பேதையேன் | ஏழையான என்னுடைய, |
| பேச உம் | நடந்துகொள்வதற்குப் போல் பேசுவதற்கும் |
| தெரியாத | தெரிந்தவளல்லாதவளும் |
| பெண்மை இல் | அமைதித்தன்மை யற்றவளுமான |
| பேதை | பெண்ணாவாள். |
| கூசம் இன்றி | கூசுதல் இல்லாமல் |

| | |
|---|---|
| நின்றார்கள் தம் | நின்று பார்ப்பவரின் |
| எதிர் | எதிரிலேயே—, |
| கோல் | பிடியை |
| கழிந்தால் | விட்டுவிட்டாலிருக்கும் |
| மூழை ஆய் | அகப்பை போல் இருந்து |
| கிஞ்சுகம் | கிளியைப்போன்ற |
| வாய் மொழி யாள் இவள் | வாயும் பேச்சுமுள்ளவளான இவள் |
| கேசவா என்றும் | கேசவனே என்றும் |
| கேடு இலீ என்றும் | அழிவற்றவனேஎன்றும் மொழிகின்றவளாய் |

மாலுறுகின்றாள்.

இவளை அடக்கியாளும் வல்லமையில்லாதவளான நானொரு பேதை. அமைதியாக நடந்துகொள்ளவும், தகுந்தபடி பேசவும் தெரியாத இவளொரு பேதை. பல பேர் நின்றிருக்க அவர்களெதிரிலே நாணமென்ற பெண்தன்மையு மின்றி, கேசவாவென்றவாறு கிஞ்சுகவாயினின்று வரும்மொழியாளிவள். கிளியின் வாயைப்போலழகான வாயும் அதன் மொழியைப்போன்ற மொழி யுமுள்ளவள்தான் இவள். கிளி பேசுமா போலே யாரோ சொல்லிக்கொடுத் ததைச் சொல்லுகிறாளத்தனைபோலும். எனக்கு அடங்கியிருந்தாளேயானால் நான் இவளுக்கு நல்ல வழி கற்பிப்பேன். இவள்தான் கோலைக்கழித்த மூழை யாயிருக்கிறாளே. கோலிருமல் மூழை எங்ஙனம் தன் வேலையைச் செய்யும்? மூழைக்குக் கோல் போல் இவளுக்கு நான் அநுகூலை யென்பதையு மிவள் கண் டாளல்லள். பெரியோர்கள் தனக்கிணங்கியுள்ளபோது அவர்மூலம் வரனைப் பெறுவதே வதூவிற்கு ச்ரேயஸ்கரமாம். (ஆகவே பலபடித் தானே ப்ரயத்னம் செய்தவாண்டாளும், நல்லவென்தோழி நாகணைமிசை நம்பரர் ——— விட்டு சித்தர் தங்கள் தேவரை வல்ல பரிசு வருவிப்பரேல் அது காண்டுமே' எனத் தேறி நின்றாள்.) பழுதற்ற பாரமைகாந்த்யமுள்ள சிஷ்யன் ஐகாந்தயம் குலைந்த ஆசார்யனை விடினைக்குமா போலே பெற்றோர் நல்வழி தவறி நடந்தால் பெண் அவரைக் கழித்துப் பிரிந்து நடந்துகொள்ளலாம். அநு கூலராயிருக்கும்போது, 'யே நாதவந்தோ ஹி பவந்தி லோகே தே நாத்மகார் யாணி ஸமாரபந்தே' என்கிறபடி தானாகத் தன் க்ஷேமத்தைத் தேடுவது கூடா தொழியும். உலகில் சிக்ஷை பெறுமலே ஸ்திரீகள் சாமர்த்தியமாயிருப்பர் என்று சொல்வர். இவளுக்கொருவிதத்திலும் பெண்மையிருப்பதாகவே தெரியவில் லையே. நாலுபேர் நடுவில் கூவிப்பேசாமலேகூட அவனைக்கொள்ளலாமே யென்றபடி.

இங்கே பெண்மையில் (ன்) என்பதற்குப் பெண்தன்மையான, நாண், மடப்பம் முதலான குணங்களையுடையவள் என்று பொருள்கொள்வர். இவள் செயலெல்லாம் இத்தன்மையை மீறி இருப்பதாலும், 'பேசவும் தெரியாத பேதை' யென்பதற்கு மிணங்கவும், பெண்மையில்லாதவளெனப் பொருள் உரைத்தனம். இல்லையேல், பெண்மை பூரணமாகவிருந்தும் தான் காதலுற்ற பெருமானிடமுள்ள குணங்கள் இவளுடைய தன்மையையு மழித்தன வெனக் கருத்தைக் கொள்ளவேண்டும். பேசவும்தெரியாத என்றே ஓதும் பாடம். ஜீயரு ரையை நோக்குங்கால், பேசவும் தரியாத=பிறர் ஏதேனும் தன்னைப் பற்றிப் பேசில் தரிக்கமாட்டாதவென்ற பாடமும் பொருளுமாமென்பர் சிலர். அவ்வு ரையில் 'மாந்தும்படியான ஸ்த்ரீத்வத்தை' என்றதைக்கொண்டு, யாரேனுமொரு வார்த்தை சொல்லில் இவளுக்கு ஸ்த்ரீத்வம் இருப்பது அழிந்து விடுகிறது= தெரியாதபடியாகிறதென்று பொருளாகையாலே, 'பேசவும் தெரியாத' என்ற பழைய பாடத்தையே பிறர் ஆதரிப்பர். பதவுரையிற் சொன்ன பொருளையும் கொள்க. பெண்மையில்(ன்)=பெண்மையுள்ளவள். பெண்மையுள்ளவர்கள் உலகில் பேசுவதற்குமாத்திரம் நன்கு படுத்துவம் வாய்ந்திருப்பர். இவள் பேசவும் தெரியாதவளாய் பெண்மையை நிரம்பப் பெற்றனள் என்றதுமாம்.

| | | | |
|---|---|---|---|
| இவளை | இக் கன்னிகையையும் | என்று என்று | என்றவாறு பல விதமாகச் சொல்லி |
| பாடு காவல் இடுமின் | ஒருவரோடொருவர் சேராதபடி பக்கத்திற் பக்கத்திற்காவலிடுங் கோள் | தடுமாறுகின்றதே | குழப்பம் கொள்ளுகின்றனரே. |

நாடும் ஊரும். நாடெல்லா மறிவது ஊரில் எல்லாவிடமு மிவள் திரிவதாலே யென வறிவிக்க ஊரும் என வதிகம் சொன்னதாம். துழாய் அலங்கல் சூடி. துழாய்மாலை சூடாமலிருந்தால் இவளுக்கு எம்பெருமானோடு சேர்க்கையிருப்பதாக யாரும் தீர்மானிக்கமுடியாது. அதைச் சூடியிருந்ததால் அவனோடு கலந்த காலத்திலே இவளுக்கு அவன் அநுக்ரஹித்ததென விளங்கும்.

இங்கே தான் சூடிக்கொண்டு எம்பெருமானுடைய எல்லா மூர்த்திகளுக்கும் அளித்து அவன் களிப்பதைக் கண்டுகந்த ஆண்டாளின் சரித்திரம் குறித்ததாம். ஸ்ரீ தேசிகனும்,

"வேயர்புகழ் வில்லிபுத்தூ ராடிப்பூர மேன்மேலு மிக விளங்க விட்டுசித்தன்
தூயதிருமகளாய்வந்தரங்கனார்க்குத்துழாய்மாலை முடிசூடிக்கொடுத்தமாதே"

என வருளிச் செய்தார். வேறேதேனும் பூமாலையாகில் உலகத்தாரைப்போலே பூச்சூட்டிக்கொள்ள வாசைப்பட்டு அங்ஙனம் செய்தா ளென்று நினைக்கலாம். துழாய்மாலையை யன்றோ அவள் சூடினது. அது எம்பெருமானுகப்பிற்கே யாமத்தனை. ஆகவே 'சூடி' என்பதை வினையெச்சமாக முன்னோருரைத்ததில் ஸ்வாரஸ்ய முண்டென்க. அன்றி, சூடி என்பதில் கருத்தாப் பொருளில் வந்த 'இ' விகுதியை இசைந்து, நல்லதுழாய் அலங்கல் சூடின நாராயணன் எனவு முரைக்கலாம். அப்போது நாறுதுழாய் முடியனை படியாலே அவனிருக்கு மிடத்தை அவன் துழாய்நறுமணத்தைக் கொண்டே காணலாமே யென்று நினைத்து அவ்விடத்தைச் சோதித்துத் திரிகிறாள் என்றதாம். உழிதருதல்= திரிதல். கேடு இத்யாதி. பரமைகாந்திகளின் குடியிற் பிறந்தவள் பெண்தன்மைக்கு அவசியமான பாணிக்ரஹணத்திற்குக் கூட வேறொருவன் ஸம்பந்தத்தை யிசையாமல் காமத்தையும் எம்பெருமான் விஷயத்திலேயே வைத்து மஹாபாரமைகாந்த்யம் பெற்றால் குலத்திற்குப் பெரும் பேரும் பேறுமிருக்க, அறியாமல் குலத்தைக் கெடுத்துவிடப் பார்க்கிறார்களே. பெண்ணின் நடவடிக்கை அசாஸ்த்ரீயமாயிருந்தாலன்றோ நாம் அதை மாற்ற முயலவேண்டுமென்றபடி.

பலர் என்றதிலிருந்து ராக்ஷஸராஜதானியில் த்ரிஜடாவிபீஷணாதிகளைப் போல் மனம் தேறும்படி பண்ணும் ஸத்துக்களுமிருந்தது தேறும். இதனால் ஆண்டாளினுடையவும் ஆழ்வாருடையவும் தன்மை யறியாத வுலகம் சில வார்த்தை சொல்லிவந்ததும், ஆழ்வார் அதற்கு வருத்தமுற்றிருந்ததும் தோற்றும். பாடு காவல். பாடு=பக்கர். இவனும் இவளும் சேர்ந்ததற்காக இப்படிக் காவலிடப்பட்டனரென உலகமறியுமாறு ஒருவர்பக்கத்திலே மற்றொருவரை, பார்த்

துக்கொள்ளமாட்டாதபடி, காவலிடுவதென்றபடி.—அன்றி, பாடுகாவல்= வினைத்தொகை. பாடுதல்=கொண்டாடுதல். காவலிது ந்யாயமா மெனப் புகழ் தலுறும் காவல். சிலிங்காரத்தால் குழல்தாழவிட்டுத் தன் கேசத்தின் அழகைக்கொண்டு இப்படி வேண்டுமென்று கெடுத்துவரும் கேசவனை கோபேச்வர குமாரனுயிற்றே யென்று விட்டு விடலாமோ. ராஜகுமாரனானாலும் குற்றமுள்ளபோது தண்டித்தாகவேண்டுமென்ற கருத்தினாலே கேசவனோடென்றதாம். தடுமாறுகின்றதே. விவேகமிராமல் இவர்க்கு ஏன் இப்படித் தடுமாற்றமென்றபடி.

இங்ஙனம் ப்ரதிகூல ஜனங்களைப் பற்றி யருளினதாகவே யோஜனை செய்தோம். ப்ரதிகூல விஷயமாக, 'கேடு வேண்டுகின்றார் பலர் உளர்' என்பதை உரைத்துவிட்டு, கேசவனோடு இத்யாதியை அநுகூலஜநவிஷயமாகவே யோஜிப்பர். ப்ரதிகூலர் ஒரு புறமிருக்க அநுகூலர் சொல்வதாவது—எவனை யிவள் காதலுற்றாளோ, அந்தக் கேசவன் பக்கத்தில் அவளே போனாளென்னாதபடி நீங்களே சேர்த்துக் காவலிடுங்கள் என்றவாறு. இங்குத் தடுமாற்றமாவது, குடிக்குப் பழி வாராமலிருக்கவேண்டுமே யென்கிற குழப்பமென்க.

அவாவின் மிகுதியாலே பாகவதபுருஷகாரத்தையுங் கொள்ளாமல் நேராக எம்பெருமானை ஆழ்வார் பற்றினதாகவும், இது ஸ்வரூபவிருத்தமென்று பலர் சிக்ஷித்ததாகவும் இப்படி ஆழ்வாருக்கு அநேகம் குறைகளை யித்திருமொழியில் ஸ்வாபதேசமாகக் கட்டியுரைப்பர். அவற்றின் நிலைமையை அறிஞர் தாங்களே ஆராய்ந்துகொள்க. (ரு)

6. பட்டங்கட்டிப்பொற்றோடுபெய்திவள் பாடகமுஞ்சிலம்பும்
இட்டமாகவளர்த்தெடுத்தேனுக்கென்னோடிருக்கலுறாள்
பொட்டப்போய்புறப்பட்டுநின்றிவள்பூவைப்பூவண்ணாவென்னும்
வட்டவார்குழல்மங்கைமீரிவள்மாலுறுகின்றாளே. **(291)**

| | |
|---|---|
| வட்டம் | சுருட்சி பொருந்திய |
| வார் | நீண்ட |
| குழல் | கூந்தலை யுடைய |
| மங்கைமீர் | இள நங்கைகளே! |
| இவள் | இந்தப் பெண்ணானவள்— |
| பட்டம் | நெற்றியணியை |
| கட்டி | (இவளுக்கு) இட்டு, |
| பொன் தோடு | பொன்னால் செய்த காதணியையும் |
| பாடகம் உம் | பாதகடகத்தையும் |
| சிலம்பு உம் | கால்சதங்கையையும் |
| பெய்து | இட்டு |
| வளர்த்து எடுத்தேனுக்கு | வளர்த்து எல்லாம் தாங்கி வருமெனக்கு |
| இட்டமாக | இஷ்டமானபடி |
| என்னோடு இருக்கல் | என்னுடனே கூடியிருப்பதை |
| உறாள் | இசைந்தாளல்லள். |
| | இவள் |
| பொட்ட | விரைவாக |
| போய் | என்னிடமிருந்து அகன்று |
| புறப்பட்டு | வெளியே சென்று |
| நின்று | கண்ணன் வரவேண்டுமிடத்திலே நின்று |
| பூவைப்பூ வண்ணா | காயாம்பூ நிறம் பொருந்தினவனே! |
| என்னும் | என்கிறாள். |
| | (இங்ஙனமாக) இவள் |
| மால் உறுகின்றாள் | மோகம் கொண்டிருக்கிறாள். |

இட்டமாக வளர்த்தெடுத்தேனுக்கு என்பதற்கு இவள் இஷ்டப்படியெல்லாம் இருந்து வளர்த்த எனக்கு எனப்பொருள் கொள்வர். இது ஸ்வா

என்ன பலனெனில், பெண்ணை ஒருவனுக்கு மனைவியாக வைத்ததுதான். பெண்ணுக்குக் கண்ணனிடத்திலேயே நோக்கானபடியாலே புக்ககத்திலுள்ளவரும் இவளைக் காலக்ரமத்தில் ஸம்மதியார். பெண்ணும் அங்கே புக விசையாள். ஆகவே வீட்டிலேயே வைத்துக்கொள்ளவேண்டும். இதிலென்ன பலன்? பாருங்கள். இத்தோடு நமக்கெல்லார்க்கும் கெட்ட பெயர். ஆகையால் கண்ணனிடம் விடுவது நல்லது. தானம் செய்தாவது விடுங்கள். வெறுமனேயிருந்தாவது விடுங்கள். அவனோ முகில்வண்ணன் ஸாக்ஷாத் ஸ்ரீமந்நாராயணன். நல்ல இடத்திலே நாம் விடுகிறபடியாலொரு குற்றமுமில்லை. பெண்ணும் வளர்ந்து வாழ்வாள். நிலத்தில் எழுந்த நாற்றை, அது வளருமிடத்தில் தானே நடவேண்டும். வேறு இடத்தில் நடுவதோ, நடாமலே யிருப்பதோ நேர்மையாமோ? அவனிடம் விட்டுவிட்டால் அவன் என்னவேண்டுமானாலும் செய்துகொள்ளட்டும். பலரறியப் பெருத்த கண்ணாலம் நடத்தினாலும் சரி; நடத்தாமலே கொண்டாலும் சரி. நமக்கென்ன செலவு? இது எல்லா விதத்திலும் ஸுகமானதாகையாலே கண்ணனுக்குக் கொடுங்கள்' என்று இங்ஙனம் கொடுக்குமதிகாரியாய் முதலாளியான கொழுநன் போன்றார்க்குச் சொன்னாளென்க.

வைத்து வைத்துக்கொண்டென்பதற்கு, நியமித்துக் காவலில்வைத்துக் கொண்டெனப் பொருளுரைப்பர். இங்கே வேறொருவனுக்கு மணம் செய்வதிலுள்ள கஷ்டத்தைச் சொல்லுகிறாளென்பதை யுணர்க.

வாணிபம்: ஒன்றைக்கொண்டு பல பெறச்செய்யும் வாணிஜ்யத்திலே, விருத்தி பலன் இருப்பதாலே வாணிபம் பலனுக்கு ஆகுபெயர். கண்ணனை நேராக மணந்துபெறாமல் வேறு வழியாகப்பற்றினால் இதொரு பண்யஸ்திரீ வியாபாரமாகுமேயெனவும் குறித்ததாம். வாணிபமென்பதற்கு சிக்கனமென்ற பொருளுமுண்டு. கைத்தலத்தில் உள்ளங்கையில் மறைத்துவைத்தனவெல்லாம் செலவழித்தால் இது நாம் ஆதரித்துவரும் செட்டாகுமோவென்றபடி. செய்த்தலை. தலை ஏழனுருபு. அல்லது 'செய்த்தலையிலே' என்ற ஜீயருரைப்படி செய்யின் தலைப்பாகத்திலே முன்பாகத்திலே என்றதாம். முதன் முதல் நாற்று விடுவதென்பது கிணற்றோரம் தலைநிலத்திலன்றோ. நாற்று. ஓரிடத்தில் எழும் பெண் வேறிடத்தில் வளர்ந்து விளங்கவேண்டியிருப்பதால் நாற்றுக்குச் சமானமாவாள். ஆக வளருமிடத்திலே நடவேண்டும். முகில்வண்ணன். வண்ணமாவது நிறமுமாம்; ஸ்வபாவமுமாம். மைத்தடமுகிலைப்போல் வேண்டுவன வர்ஷிக்கப் பொருள் நிறைந்தவனாகையாலே அவனே செய்வன செய்துகொள்வானென்றதாயிற்று. (௯)

**10.** பெருப்பெருத்த கண்ணாலங்கள்செய்துபேணி நம்மில்லத்துள்ளே
இருத்துவானெண்ணினாமிருக்கவிவளுமோன் றெண்ணுகின்றாள்
மருத்துவப்பதம் நீங்கினாளென்னும் வார்த்தைபடுவதன்முன்
ஒருப்படுத்திடுமினிவளை யுலகளந்தானிடைக்கே. (295)

| | | | |
|---|---|---|---|
| நாம் | நாம் எல்லோரும் | | (ஆகவே) இவளை—, |
| பேணி | (இவளிடம்) அன்புவைத்து | மருத்துவன் பதம் | மருந்து செய்யும் வைத்ய னைப்போல் நாம் பார்க்க வேண்டும் பதத்தை |
| பெரும் பெருத்த | மிகப் பெருமை பொருந்திய | நீக்கினள் என்னும் | இவள் நீங்கிவிட்டாள் என்கிற |
| கண்ணாலங்கள் | கல்யாணங்களை | வார்த்தை படுவதன் முன் | ஊராரின் சொல்லுண்டாதற்கு முன்னமே |
| செய்து | நடத்தி | உலகளந்தான் இடைக்கே | த்ரிவிக்ரமாவதாரம் செய்தவ னிடத்திலேயே |
| நம் இல்லத்துள் ஏ | நமது வீட்டி லேயே | ஒருப்படுத்து இடுமின் | ஒன்றித்து விடுங்கள். |
| இருத்துவான் | இருக்கச் செய்வதற்கு | | |
| எண்ணி இருக்க | நினைத்திருக்கும் போது | | |
| இவளும் | நாம் செய்வதில் விருப்ப மில்லாத இவள் | | |
| ஒன்று எண்ணுகின்றாள் | வேறொன்று செய்ய நினைத்து வருகிறாள். | | |

கீழே மகளின் தாய் சொன்னதைக் கேட்ட கொழுநன், 'நாம் நல்ல வரனைப் பார்த்து எவ்வளவு பெருத்த கண்ணாலம் செய்ய நினைத்தோமோ, அதற்கும் மேலாகப் பெருப்பெருத்த கண்ணாலம் செய்யவேண்டி வந்தாலும் சம்மதமே. கைத்தலத்திலுள்ளதைச் செலவழிப்பதோடு நிற்காமல் கடனும் வாங்கிக் கல்யாணம் செய்வோம். வரன் ஏழையாயிருந்தால் அவன் செய்ய வேண்டும் செலவுகளையும் நாமே பரிப்போம். ஓர் ஏழையைப் பார்த்துப் பெண்ணைக் கொடுத்து விடுவோம். பெண்ணை யவன் வைத்துக்கொள்ள மாட்டானென வேண்டா. அவனோடு சேர்த்து நம்மில்லத்திலேயே காவல் வைத்து வைத்துக்கொள்வோம். ஒரு லோகத்திற்கும் குறையில்லை. கண்ண னுக்குக் கொடுப்பதென்பது வேண்டாம்' என்று சொல்ல, அதற்கு மறு மொழி சொல்லுகிறாள்—'நாம் நினைப்பதெல்லாம் சரி; செய்யலாம். ஆனால் பெண் இவ் வளவு செய்யும் வரையில் நமக்கடங்கி நிற்கிறாளா என்பதுதான் ஆராய வேண் டிய விஷயம். அவள் இப்போதே தன்னிஷ்டப்படி வெளிப்புறப்பட வெண்ணி யிருக்கிறாள். எப்போது எவ்விதம் செய்தெடுத்தால் மருந்து பதமாக வரு மென்று மருத்துவன் பார்ப்பதுபோல் பிறந்த பெண் பதமாவது எங்ஙனம் எங்ஙனம் நாம் நடந்துகொண்டாலென்பதை நாமும் பார்க்க வேண்டும். இல்லா விட்டால், 'அந்தப்பெண் இஷ்டப்படியே கண்ணனுக்குக் கொடுத்தால் என்ன இவர்களுக்கு நஷ்டம்? செலவு அதிகமா? அவன் மாட்டேனென்கிறானா? அவ னென்ன ஐச்வர்ய மில்லாதவனா? உருவில்லாதவனா? ஈனசாதியா? உலகளந்தா னயிற்றே' என ஊரார் சொல்லப்புறப்படுவார்கள். ஆகவே, ப்ராணநாதா! நீங்கள் அவனிடம் இவளைச் சம்மதித்துச் சேர்த்து விடுங்கள்' என்றவாறு.

**11.** ஞாலமுற்று முண்டாலிலைத்துயில் நாராயணனுக்கிவள்
மாலதாகி மகிழ்ந்தனளென்று தாயுரை செய்ததனைக்
கோலமார் பொழில்சூழ் புதுவையர் கோன்விட்டுசித்தன் சொன்ன
மாலைபத்தும் வல்லவர்கட்கில்லை வருதுயரே. **(296)**

இவள் என விரு தரம் பாசுரத்திற் காண்பதால் முன்னடியைத் தனிவாக்யமாகக் கொண்டோமென்பதும் காண்க. (எ)

8. காறைபூணுங்கண்ணாடிகாணுந்தன் கையில்வளைகுலுக்கும்
கூறையுடுக்குமயர்க்குந்தன் கொவ்வைச்செவ்வாய்திருத்தும்
தேறித்தேறிநின்றாயிரம்பேர்த்தேவன் திறம் பிதற்றும்
மாறில்மாமணிவண்ணன் மேலிவள்மாலுறுகின்றாளே. (293)

| | |
|---|---|
| | இவள் |
| காறை | கண்டிகையை |
| பூணும் | (கழுத்தில்) இட்டுக் கொள்ளுகிறாள். |
| கண்ணாடி | கண்ணாடியில் |
| காணும் | அது அமைந்த அழகைக் காண்கிறாள். |
| தன் கையில் வளை குலுக்கும் | பலவகை வளைகளைத்தன் கைகளில் இட்டுக்கொண்டு அவற்றைக் குலுக்குகிறாள். |
| கூறை | பட்டுப் புடவையை |
| உடுக்கும் | உடுக்கிறாள். |
| அயர்க்கும் | ஆயாஸப்படுகிறாள். |
| தன் | தனது |
| கொவ்வை | கொவ்வைக் கனி போன்ற |
| செம் வாய் | சிவந்த அதரத்தை |
| திருத்தும் | தாம்பூலராகத்தாலே சிராக்குகிறாள், |
| தேறி தேறி | தன் அழகு முதலியனவைகளையும் அவன் குணம் முதலியனவைகளையும் நினைத்துத் தைர்யமுற்று |
| நின்று | அவனை எதிர்பார்த்து நின்று |
| ஆயிரம் பேர் | ஸஹஸ்ரநாமங்களை யுடைய |
| தேவன் திறம் | அவன் விஷயமாகவே |
| பிதற்றும் | கண்டபடி வர்ணித்து வருகிறாள். |
| மாறு இல் | ஒப்பு இல்லாத |
| மாமணிவண்ணன் மேல் | நீலமணி நிறைத்தனன் மேலே |
| | மாலுறுகின்றாள், |

தாய்க்குத் தெரியாமல் தனியே புறம் போய் நின்று தோழிகளோடு கூடிக் கண்ணனுடன் கலந்து வருமிவள், தாயின் மனோபாவத்தை யுணர்ந்து இனிக் கோல் கழிந்த மூழை போல வாகாமல் தன் அகத்திலே தாய்க்குத் தெரிந்தே கண்ணனை வரவழைக்கும் பாக்கியத்தைப் பெற்றனள். இத் தசையில் இவளிருப்பைப் பணிக்கிறாள்—பட்டம், பொற்றோடு, பாடகம், சிலம்பு என்றாற் போல நான் நேரிலிட்ட வாபரணங்களோடு மற்றும் பெட்டியில் செய்து செய்து வைத்த பலவகை அணிகளையும் அணிந்து அழகு பார்த்துக்கொண்டு அதனால் பூரித்துப் பூரிப்பினால் சிக்குண்டவைபோலான வளைகளைக் குலுக்கி, காதலனை வசீகரிக்கும் அவ்வோசை யினிமை கண்டுகந்து, உயர்ந்த கூறையைக் களைவது முடுப்பதுமாய்ப் பலகால் உடுத்து, அதனாலும், இன்னம் வரவில்லையே யென்றும் ஆயாஸமுற்று, மேலும் பலபடி செய்துகொண்டு மோஹித்துக் கிடக்கிறாளென்றபடி. (அ)

இதுவரையில் ஹிதபரைகளாய்த் தன் தோழிகளான பிறநங்கைமங்கையர்களிடம் தன் பெண்ணின் திறத்தைப் பேசி, இனித் தன் கொழுநன் முதலான இல்லத்தாருடன் கலந்து இவள்திறத்திற் செய்யவேண்டியதை யாராய்ந்து பேசுகிறாள். ஆகவே முன்னே, என் பெண் என்றும், மங்கையீர் என்றும் சொன்னவள் இப்போது, 'நம்மை' 'நம்மில்லத்துள்' என்றவாறு சொல்வதாம். ஆகவே 'தாயுரை செய்ததனை' என இத்திருமொழி முழுதும் தாயுரையாகச் சொன்னது செவ்வனே பொருந்தும். இங்ஙனன்றி, இப்பாசுரத்தையும் மேற்

பாசுரத்தையும் பிறமங்கைகளின் பேச்சாக வைத்து, தாயுரைத்த வென்பதைப் பொருத்துவதற்காக, 'என்றிப்படி பந்துக்கள் சொன்னார்கள்' என்று சேர்த்துக்கொண்டு, பிறர் சொன்னதைத் தாய் அனுவதித்துக் கொண்டதாக ஜீயர் யோஜித்தது. இரண்டு பாசுரங்களிலும் பூர்வார்த்தம் தாயின்பேச்சு; உத்தரார்த்தம் பிறரின்பேச்சு. ஆக இப்படி நான் சொல்ல இதனைக்கேட்டுப் பிறர் இப்படிச்சொன்னார்களென்று தாய் சொல்லுகிறாளென்று சேர்த்துப் பூர்வோத்தரார்த்தங்களை யோஜிப்பதென்றனர் சிலர்.

9. கைத்தலத்துள்ளமாடழியக் கண்ணாலங்கள்செய்திவளை
வைத்துவைத்துக்கொண்டென்ன வாணிபம்நம்மைவடுப்படுத்தும்,
செய்த்தலையெழுநாற்றுப்போலவன் செய்வனசெய்துகொள்ள
மைத்தடமுகில்வண்ணன் பக்கல்வளரவிடுமின்களே. **(294)**

| | |
|---|---|
| **கைத்தலத்து உள்ள** | கையினுள்ளே இருக்கும் |
| மாடு | தனம் எல்லாம் |
| **அழிய** | அழியும்படி |
| **கண்ணாலங்கள்** | கல்யாண விபவ க்ரமங்களை |
| **செய்து** | நடத்தி |
| **இவளை** | நம்பெண்ணை |
| **வைத்து** | மற்றொருவனுக்கு மனைவியாக்கி |
| **வைத்துக் கொண்டு** | வீட்டிலே காவல் வைத்துக்கொண்டு |
| என்ன வாணிபம் | என்ன லாபம்? (இவள் அல்லது இது) |
| நம்மை | நமக்கு |
| வடுப் படுத்தும் | குற்றத்தை விளைவிக்கும். |
| மை தட முகில் | கருநிறமான பருத்த மேகத்தின் |
| வண்ணன் பக்கல் | வர்ணமுள்ள கண்ணனிடத்திலே—, |
| அவன் | அந்தக் கண்ணனே |
| செய்வன | கல்யாணம் முதலானவற்றை |
| செய்து கொள்ள | செய்து கொள்ளும்படி |
| செய் தலை | நிலத்தின் முன் பாகத்திலே |
| எழு | எழுந்த |
| நாற்று போல் | நாற்றைப் போல (இவளை) |
| வளர விடுமின்கள் | வளரும்படி கொடுத்து விடுங்கள். |

மகளின் தாய்க்கு இவளைக் கண்ணனுக்கே கொடுத்துவைக்கவேண்டும் என்ற தீர்மானம் ஏற்பட்டது. அகத்தில் புருஷனுக்கு அபிப்ராயம் வேறாயிருந்தது. அவனை எவ்வண்ணம் வசப்படுத்திக் கார்யத்தைப் பூர்த்திசெய்வதென வாராய்ந்தாள். பணச்செலவில்லாத வழியைக் காண்பித்தால் புருஷன் பெரும்பான்மை இசைவானென்று நினைத்தாள். அவன் நினைத்தபடி நடந்து கொண்டால் பின்னால் வரும் கஷ்டங்களையுமுணர்த்தவேண்டுமென்றெண்ணினாள். எனவே இங்ஙனம் சொல்லலானாள்—'நீங்கள் பெண்ணை வேறு யாருக்குக் கொடுப்பதாயிருந்தாலும் பலவகையான கல்யாணச்செலவுகள் வந்தே தீரும். வரனுக்குச்செய்வது, பெண்ணுக்குச்செய்வது, வந்த பந்துக்களுக்குச்செய்வது, விசேஷமாகப் போஜநமளிப்பது, அடிக்கடி வரன் முதலானோருக்குப் பல காரணங்களைக்கொண்டு ஸன்மானங்கள் நடத்துவதென்றவாறு செலவுகள் பலவுள. சிக்கனமாகக் குடித்தனம்செய்து உள்ளங்கையில் மூடி வைத்திருக்கும் முடியெல்லா மவிழ்த்தழித்தாகவேண்டும். இவ்வளவு செய்தாலும் ஏதேனும் ஸுகமுண்டா, பார்க்கவேண்டும். இவ்வளவு செலவுக்கு

| | | | |
|---|---|---|---|
| ஞாலம் முற்றும் | முழு வுலகையும் | கோலம் ஆர் | அழகு நிறைந்த |
| உண்டு | ப்ரளய காலத்திலே புசித்து | பொழில் | சோலைகளாலே |
| ஆல் இலை துயில் | வட பத்திரத்திலே யோக நித்ரை செய்தருளும் | சூழ் புதுவை யர் கோன் | சூழப்பெற்ற ஸ்ரீவில்லி புத்தூரிலுள்ளவர்க்கு நாதனை |
| நாராயண னுக்கு | எம்பெருமான் விஷயத்திலே | விட்டு சித்தன | விஷ்ணு சித்தன் (பெரியாழ்வார்) |
| மால் அது ஆகி | அப்படிப்பட்ட மோஹம் கொண்டு | சொன்ன | பணித்த |
| இவள் | | பத்து மாலை உம் | இப் பத்துப் பாசுரங்களையும் |
| மகிழ்ந் தனள் | (பெற்றோரு மிசைந்து நடந்ததாலே) மகிழ்ச்சியுற்றனள் | வல்லவர் கட்கு | அறியவல்லவர் களுக்கு |
| என்று தாய் உரை செய்ததனை | என்று தன்மகளைப்பற்றித் தாயான வொருத்தி சொன்னதைக் குறித்து | வரு துயர் இல்லை | வரவிருக்கும் துன்பமெல் லாம் வராமற்போய்விடும். |

பலவகைப் பணியாரங்களுக்கும் பஞ்சுமெத்தைக்கும் காத்திருக்கும் ப்ராக்ருத புருஷரை விட்டு ஞாலமுற்று முண்டாலிலையிற் பள்ளிகொள்ளும் நாராயணனையே நாடினள். வடபத்ரசாயியே நாராயணன்; 'ஆபோ நாரா இதி ப்ரோக்தா: ஆபோ வை நரஸூநவ: தா யதஸ்யாயநம் பூர்வம் தேந நாராயண: ஸ்ம்ருத:' என்றபடி ஏகோதக ஸமுத்ரத்திலே இருந்தவ னவனே யாவான்' ஆண்டாளும் 'நாராயணனே நமக்கே பறைதருவான்' என வாரம்பித்து, 'ஆலி னிலையாய் அருள்' என முடித்தாள். இப்படி யவனிடம் மாலுற்றவளுக்குப் பெற் றோர் படிந்துவாராததா லிருந்த வருத்தமும் நீங்கிற்று. தாய் அனுகூலமாக வந்து தகப்பனையு மனுகூலமாக்க முயன்றாளென்று முன் பாசுரத்திலே தேறிற்றே. ஆகவே மிக மகிழ்ந்தனள். இங்ஙனம் நடைபெற்றதை யருளின ஆழ்வார் திருமொழியை யறிந்தார்க்கு எவ்வித மகிழ்ச்சியு முண்டென்றவாறு.

ப்ரபந்தரக்ஷையில் பெ. தி. 3. 7. ஐயபுழுதி உரை முற்றிற்று.
ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

---

ஸ்ரீ:
ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

## பெரியாழ்வார் திருமொழி 3.8.

# நல்லதோர் தாமரைப் பொய்கை.

இப்படித் தாய் தனக்கு அனுகூலையாய் நின்றிருப்பதைக் கண்டு மகிழ்ந்த மகள் கண்ணனோடு தனக்குக் கல்யாணமே நன்கு நடைபெறு மென்று சிறிது காலம் பார்த்திருந்து, அது கைக்கூடாமலிருக்கவே, தன்னிடம் அப்போ தைக்கப்போது கலந்துவரும் கண்ணனிடம் தாயின் நோக்கத்தைத் தெரிவித்தன

விளைகளாம். "மைத்தடமுகில்வண்ணன் பக்கல் அவன் செய்வன செய்து கொள்ள இவளை வளரவிடுமின்களே' என்றன்றோ இவள் தாய் தந்தையினிடம் முன் சொன்னது. ஆகவே, 'இனி நாம் அழைத்துக்கொண்டு போகாமல் எத்தனை நாள் இங்ஙனம் பகலிற் கலந்தும் இரவிற் சேராமலுமிருப்ப'தென அவன் நினைத்துக்கொண்டான். ஒரு நாள் வழக்கம்போல் பகலில் இல்லத்திலுள்ள புருஷர் வெளியில் வேலையின் மேற் சென்றிருக்கக் கண்ணன், வந்து கலந்தாற் போலிருந்து இவளை அழைத்துச் சென்றான். ஆகவே மகள் காணாமற்போகத் தாய் அவளைத் தேடியலைந்தும், சென்றுகேட்டுப் புகுந்த வந்தும் குழம்பிக் கூறி யதைக் கூறும் வகையில் அமைந்தது இத்திருமொழி——.

1. நல்லதோர்தாமரைப் பொய்கைநாண்மலர்மேற்பனிசோர
அல்லியுந்தாதுமுதிர்ந்திட் டழகழிந்தாலொத்ததாலோ.
இல்லம்வெறியோடிற்றாலோ வென்மகளையெங்குங்காணேன்
மல்லரையட்டவன்பின்போய் மதுரைப்புறம் புக்காள்கொல்லோ.(297)

| | | | |
|---|---|---|---|
| நல்லது | எல்லாக் குணங்களும் பொருந்திய | ஆல் ஓ | மிகவும் கஷ்டம்! |
| ஓர் | ஒரு | இல்லம் | வீடானது |
| தாமரை பொய்கை | தாமரை நிறைந்த குளமானது, | வெறி ஓடிற்று | சூன்யமாய் விட்டது. |
| நாள் மலர் மேல் | காலத்தில் மலர்ந்த பூக்களின் மேல் | ஆல் ஓ | மிகவும் கஷ்டம்! |
| பனி சோர | பனி பெய்ததால் | எங்கும் | எவ்விடத்திலும் |
| அல்லியும் தாதும் | பூவிதழ்களும் கேஸரங்களும் | | என் மகளை காணேன். |
| உதிர்ந்திட்டு | பிரிந்து விழப் பெற்று | மல்லரை | மல்லயுத்தம் செய்பவரை |
| அழகு அழிந்தால் | (பொய்கை தன்) அழகு போய்விட்டதென்றால், | அட்டவன் | வதைத்த கண்ணனை |
| இல்லம் | என் வீடானது | பின் போய் | தொடர்ந்து போய் |
| ஒத்தது | (அப்பொய்கைக்குச்) சமமாய்விட்டது | மதுரை புறம் | மதுராநகரியின் பக்கங்களிலே |
| | | புக்காள் கொல் ஓ | புகுந்து விட்டாளா என்ன ? |

வெறியோடுதல்=ஒன்றுமில்லாதபடி யாதல். மகள் ஒருத்தி விலகிப் போனது ஒன்றுமே யில்லாதபடியாயிற் றிவளுக்கு. எங்குங்காணேன். இவ்வூரில் கூடக் காணேன். மல்லரை இத்யாதி. மல்லர்களோடு யுத்தத்திற்கழைக்கப் பெற்று முன் கண்ணன் கம்ஸ நகரியில் ப்ரவேசித்ததை நினைத்துச் சொன்னதா மிது. 'என் பெண்ணோடு கலந்திருந்தவனைச் சில மல்லர்களோடு போர் புரிய வந்தழைத்தனர் போலும். ஆகவே விரைவில் சொல்லிக் கொள்ளாமலே அவன் சென்றுவிட்டான். அவனை விட்டுப்பிரிய வியலாத பெண்ணும் கூடவே போக, அவளைப் போர்க்களத்திற்கு அழைத்துச் செல்லக்கூடாதென்று அம் மதுரை யின் ப்ராந்தத்திலே எங்காவது தகுந்தவிடம் பார்த்து அவன் விட்டுப் போயிருப் பானோ' வென்றபடி. இவ்வாறு மதுரைப்புறம் என்றதற்குக் கருத்தை யாராய்க. மதுரைப்புறமாவது திருவாய்ப்பாடி யெனவும் கொள்வர்.

கோல் என்பது ஐயக்கிளவி. ஐயமானது, இப்படியோ அப்படியோ வென இரு(கோடி) வகைகளை விஷயமாகக் கொள்ளும். அது ஸாதாரணமான ஐயம்,

ஸம்பாவனை யெனப்படும் ஐயம் என இருவிதமாகும். அதில் இரண்டாவதான ஐயத்தில் உண்மையில் இரு கோடிகளிருந்தாலும், ஐயப்படுகிறவனுக்கு ஒரு பக்ஷத்திலே நோக்கு அதிகமானபடியாலே அதை மட்டும் சொல்வது மரபு. ஆகவே இத்திருமொழியில் இரு கோடிகளைச் சொல்லாத விடங்களிலெல்லாம் ஸம்பாவனை யென்ற ஐயத்தைச் சொல்லும் கோல் என்னும் பதமென்க. (க)

2. ஒன்றுமறிவொன்றில்லாத வுருவறைக் கோபாலர்தங்கள்
கன்றுகால்மாறுமாபோலே கன்னியிருந்தாளைக்கொண்டு
நன்றுங் கிறிசெய்துபோனான் நாராயணன் செய்ததீமை
என்றுமெமர்கள் குடிக்கோரேச்சுக் கொலாயிடுங் கோல்லோ! (298)

| | |
|---|---|
| ஒன்றும் | பொருந்தக் கூடிய |
| அறிவு | தெளிவு |
| ஒன்று இல்லாத | கொஞ்சமுமில்லாதவரும் |
| உரு அறை | உருவில் ஈனமாயிருப்பவருமான |
| கோபாலர் | இடையர் |
| தங்கள் | தங்களுடைய |
| கன்று | கன்றுகளை |
| கால் மாறுமா போலே | இடம் மாற்றி வைப்பது போலவே |
| நன்று | நல்லதான |
| கிறி உம் செய்து | உபாயத்தையும் செய்து |
| கன்னி இருந்தாளை | இங்கிருந்த என் மகளை |
| கொண்டு போனான் | (தான் நினைத்த விடம்) அழைத்துப் போனவனான |
| நாராயணன் | கண்ணன் |
| செய்த தீமை | செய்த தீய வேலையானது |
| என்றும் | எக்காலத்திற்கும் |
| எமர்கள் | எங்களுடைய |
| குடிக்கு | குடும்பத்திற்கு |
| ஓர் | ஒரு |
| ஏச்சு ஆயிடும் கொல் | பழியா யிடுமோ. |

(கொல்—அசை)

ஒன்றுமித்யாதி. அறிவும் அழகு மில்லாத விடையர் செய்யும் வேலையையங்கு வளர்ந்தாலே அவர்களைப் போலே இந்த நாராயணனும் செய்வதோ வென்றபடி. தங்கள் என்றது கன்று என்றதோடே சேரும். மாறும் என்றதோடு சேர்த்துத் தங்கள் என்பதற்குத் தாங்கள் எனப் பொருள் கொள்கின்றனர்.

கால்மாறுகையாவது. இடமாற்றம். பிறர் கன்று நன்றாயிருப்பதைக்கண்டு தம் கன்றைக் கொடுத்து அதை மாற்றிக் கொள்வதுமாம்; தெரியாமல் களவு கொள்வதுமாம்; மேய்ந்து இல்லம் புகும் கறவை யறியாதபடி அதன் கன்றை ஊட்டக் கொடாதபடி அதற்குத் தெரிந்தவிடத்தினின்று வேறிடம் மாற்றுவதுமாம்; ஊட்டுமாறின கன்றைக் கன்றுகளினின்று மாற்றிப் பெருங் கால்நடையோடு சேர்ப்பதுமாம். இங்கே கூடுமானபடி கொள்க. நன்று. இவன் அழைத்துப் போகாமற் போனால் இல்லத்தார் இவளை யிவனோடு சேர்ப்பது ஸந்தேஹம். ஆகவே செய்தது நன்று. சொல்லாமல் அழைத்துச் சென்றதும், ஊரார் ஏச்சுக்கு இடமாக்கினதும் தவறுகையாலே இச் செயல் தீமையுமாம். ஏச்சுக் கோல்என்ற விடத்தில் 'கொல்' என்பது" அசைச் சொல்லாம். (வருத்தமெனப் பொருளுமுண்டாம்). கோல் என்ற விரண்டு சொற்களையும் ஐயக்கிளவியாக வைத்து, ஆயிடுங்கோல்லோ என்பதற்கு, ஏச்சன்றியே புகழாயிடுங்கொலோ வெனவும் உரை செய்வர். அப்போது பாட்டிலில்லாத புகழ் என்ற பதத்தைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

(உ)

முதற்பாசுரப்படி, என் பெண்ணைக் கண்ணன் எங்குக் கொண்டு போனானோ வென்றேங்கின தாயானவள் அவனைக் காண வெளிக்கிளம்பி வழியிற் கண்டாரிடம் நாராயணன் செய்த தீமையைச் சொல்ல அவர்கள் மூலமாக ஆயர்கள்சேரிக்கு அவன் கொண்டுபோனதை யங்கங்கே வழியி லிருப்பார் மூலம் தெரிந்துகொண்டு அச் சேரியினுட் புகுந்து இவளிடம் இரக்கம் கொண்டவரான அங்குள்ளாரிடம் சொல்லுகிறதை விளக்குவன மேற் பாசுரங்கள். இங்ஙனம் பாசுரங்கள் அமைந்திருப்பது கடைப்பாசுரத்தை நோக்குங்கால் விளக்கமாகும்.

3. குமரிமணஞ்செய்துகொண்டு கோலஞ்செய்தில்லத்திருத்தித்
தமரும்பிறருமறியத் தாமோதரற் கென்றுசாற்றி
அமரர்பதியுடைத்தேவி யரசாணியைவழிபட்டுத்
துமிலமெழப்பறைகொட்டித் தோரணம்நாட்டிடுங் கொல்லோ. (299)

| | |
|---|---|
| | (என் மகளை) |
| குமரி மணம் | கன்னிகைக்கு விவாஹத்திற்கு முன் செய்யும் சுபத்தை |
| செய்து | தானே செய்து கொண்டு |
| கொண்டு | ஸ்வீகரித்து |
| கோலம் செய்து | அலங்காரங்கள் செய்து |
| இல்லத்து | இல்வாழ்க்கையில் |
| இருத்தி | நிறுத்தி |
| தமரும் | தன் குலத்தாரும் |
| பிறரும் | நாடுநகரத்தாரும் |
| அறிய | தெரிந்து கொள்ளும்படி |
| தாமோதரற்கு | தாமோதரனுக்கா மிவள் |

| | |
|---|---|
| என்று சாற்றி | என ப்ரகாசப்படுத்தி |
| அமரர் பதியுடை | தேவராஜனுடைய |
| தேவி | மனைவியான |
| அரசாணியை | அரசாணி யென்னப் படுவதை |
| வழி பட்டு | தொழுது |
| துமிலம் எழ | பேராவம் கிளம்பும்படி |
| பறை | வாத்யங்களை |
| கொட்டி | முழக்கி |
| தோரணம் | மாவிலை முதலிய வற்றாலாம் தோரணங்களை |
| நாட்டிடும் கொல் | எங்கும் கம்பம் நட்டு இடுமோ? |

குமரிமணம் செய்வதாவது பெற்றோர் பெண்ணுக்கு மங்களஸ்நாநாதிகள் செய்துவைத்து மணச்சிற்றாடை உடுத்தல் போன்றது. கோலம் செய்தல் புக்ககத்தார் அளித்த புஷ்பங்கள் ஆபரணங்களாலே அலங்கரித்தல். இல்லத்திருத்தல் நாத்தனார், மைத்துனன், கணவன் முதலாக வெல்லோரையும் ஆளும் பெருமையோடு இல்வாழ்க்கையிலிருக்கும்படி மந்த்ரத்தைக்கொண்டு அநுக்ரஹிப்பது. கல்யாண க்ருஹத்திலே இருத்தி எனவுமுரைப்பர். இருத்துதல் உட்காரவைத்தலுமாம். தாமோதரற்கு என்றதாலே வரனுக்குள்ள குணவிசேஷம் சொன்னபடி. பெரியோரிடத்தில் பணிந்திருப்பது படித்தும் வைப்பெறாத தொன்று. அதிலும் ஆசார்யன் முதலானோரிடம் பக்தி யுண்டாம்; பெற்றோரிடத்தில் பக்தி யேற்படுவது அரிது. பிதாவினிடத்திலும் பக்தி உண்டாகலாம்; மாதாவினிடத்தில் பக்தனாயிருப்பது மிக வரிது. அதிலும் தாயானவள் சீற்றம் கொண்டு கயிற்றினால் கட்டி யடிக்கும்போதும் அவளை மீறிப்போகும்படி சக்தியும் பால்யமும் சேர்ந்திருக்கும்போதே அவளுக்கனுகூலமாக நடந்துகொண்டான் என்றால் இவனைவிட விச் சிறந்த குணமுள்ளவன் உலகிலுண்டோ வென்றதாம்.

அமரரித்யாதி. இங்கு இந்திராணி யென்ற பொருள் ஸூசகமாய்த் தோறச் செய்தேயும் இங்ஙனம் கூறில் பாரமைகாந்த்யம் குலையு மென்று வேறு

பொருள் கொள்வர்—'அமரர்பதி=தேவநாதன், எம்பெருமான். அவனுடைய தேவியான என் பெண்ணானவள், அரசாணியை அரசங்கிளையை' யென்றவாறு. அப்போது வழிபட்டு என்பதற்கு வழிபட்டிருக்க எனப் பொருள் கொள்ள வேணும். இதைவிட அமரர்பதியினுடைய தேவியான பெரிய பிராட்டியை வழி பட்டு எனத் திருவாய்மொழிப்பிள்ளையின் உரை ச்லாக்யமாம். இத்துடன் அரசாணி யென்பதற்கு அம்மியென்றும் பொருளுரைத்து அம்மி மிதிப்பதையும் தோரணம் நாட்டுவதற்கு முன்னமே இவர் சேர்த்துள்ளார். பார்வதியை நமஸ்க ரிப்பது ருக்மணிதேவி முதலானோர் இதிஹாஸத்திலே ப்ரஸித்தம். அரசாணியாவது அலங்கார பீடத்தின் மேலே நாட்டும் அச்வத்ததண்டம் (அரசங் கொம்பு) என ஜீயருரை. அரசங்கால் நாட்டும் மேடையே அரசாணி யென்பது முண்டு. ஏழு கணுக்கள் உள்ள மூங்கிலில் அரசவிலை மாவிலைகளைச் சொருகி அலங்கரித்து விவாஹ மண்டபத்திற்கு முன்னே நட்டு வழிபடுதலாக இது வழக்கத்தி லுள்ள தென்றும் சொல்லுகின்றனர். நாராயணஸ்வரூபமான அரசமரத்திலே லக்ஷ்மியின் ஸாந்நித்யமும் ப்ரமாணத்திற் சொல்லப்பட்டுள்ள தாகையால் லக்ஷ்மீ நாராயணாத்மகமான அரசாணியை அமரர்பதியுடைத் தேவி யரசாணி யென்று சொல்லலுமாம்.

நாட்டிடும் என்பது செய்யுமென் முற்றாகையாலே பலர்பாலை விட்டு மேற்பாசுரங்களிலுள்ள அசோதை போன்ற ஒன்றன்பாலெழுவாயைச் சேர்த் துரை செய்வதே தகுமென்க. (௩)

இனி மாமியார் அருமையோடு சுபங்களைச் செவ்வனே நடத்துவாரா வென்று ஆராய்வது சொல்லப்படுகிறது.

4. ஒருமகள்தன்னை யுடையேனுலகம் நிறைந்தபுகழால்
திருமகள்போலவளர்த்தேன் செங்கண்மால்தான் கொண்டுபோனான்
பெருமகளாய்க்குடிவாழ்ந்து பெரும்பிள்ளை பெற்றவசோதை
மருமகளைக்கண்டுகந்து மணாட்டுப்புறஞ்செய்யுங் கொல்லோ. (300)

| | |
|---|---|
| ஒரு மகள் தன்னை | ஒரே பெண்ணை |
| உடையேன் | உடையவளான நான் |
| உலகம் | லோகத்தில் |
| நிறைந்த | எங்கும் பரவின |
| புகழால் | கீர்த்தியாலே |
| திருமகள் போல | பெரிய பிராட்டியைப் போல (நினைத்து) |
| வளர்த்தேன் | அருமையோடு வளர்த்து வந்தேன். |
| | அதற்குத் தக்கபடி |
| செங்கண் மால் தான் | செந்தாமரைக் கண்ணனை (திரு)மால்தானே |
| கொண்டு போனான் | அழைத்துக்கொண்டு சென்றான். |
| பெரு மகளாய் | பெருமை பொருந்திய ஸ்திரீயாய் |
| குடி வாழ்ந்து | குடித்தனத்தில் நடத்த வேண்டுவன வறிந்து வாழ்ந்து |
| பெரும் பிள்ளை | ஒப்பற்ற பெருமையுள்ள பிள்ளையை |
| பெற்ற அசோதை | பெற்றுள்ள யசோதை யானவள் |
| மருமகளை கண்டு | மருமகளாக வந்துள்ள என் மகளைப் பார்த்து |
| உகந்து | திருமாலுக்குத் தகுந்த திருவென மகிழ்ந்து |
| மணாட்டு புறம் | விவாஹத்திற்கு வெளிப் படையாகச் செய்வன வற்றை |
| செய்யும் கொல் | செய்வாளா? |

எனக்கு மகள் ஒருவளே யாகையாலே அபிமானித்திருந்ததோடு, அவளை உலகமெங்கும் புகழ்ந்ததாலே இவள் ஸாக்ஷாத் பெரிய பிராட்டியின் அவதாரமே யென நினைத்து அவ்வித வபிமானத்தோடு நான் வளர்ப்பதையும் உலகும் புகழும்படி வளர்த்தேன். ஆகவே யசோதைக்கும் இது தெரிந்திருக்கும். திருமகளைத் திருமால்தானே பெறவேண்டும். ஆகவே அந்தப் புண்டரீகாக்ஷனே ஸமயம் கண்டு தானாகவே, எங்களுடைய ப்ரார்த்தனையை யெதிர்பாராமலும் வேறுயாருக்காவது கொடுத்துக் கெடுத்து விடுவோமோ வென்றஞ்சியும் நேரில் வந்து கொண்டுபோனான். யசோதையோ செய்ய வேண்டுவன தெரிந்து நடத்துகிறவள். பெருமை பொருந்தியவள். அவளுக்கு மோரே பிள்ளை. அவனும் ஸாமாந்யமானவனல்லன். 'வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம்' என்னப்பட்டவன். அவனுக்கு இந்த லக்ஷ்மி பத்னியாக வமைவதைக் கண்டு உவந்தே யிருக்க வேண்டும். அங்ஙனமுகந்து கல்யாணத்தை எல்லோரும் கண்டு களிக்கும்படி நடத்திக்கொண்டால் நன்றாக விருக்கும். செய்வாளா? ஒருக்கால் நாங்கள் ஸந்தோஷமாக முன்னின்று கொடாததாலே வருத்தத்தோடு, செய்யாமல் விட்டு விடுவாளோ என்று கொஞ்சம் ஐயப்படவேண்டி யிருக்கிறது என்றபடி. (௪)

இனி மாமனார் பார்த்துகப்பதை யொரு வண்ணம் சொல்லுகிறது.—

**5.** தம்மாமன்நந்தகோபாலன் தழீஇக்கொண்டென்மகள்தன்னைச்
செம்மாந்திரே யென்றுசொல்லிச் செழுங்கயற்கண்ணுஞ் செவ்வாயும்
கொம்மைமுலையுமிடையுங் கொழும்பணைத் தோள்களுங்கண்டிட்டு
இம்மகளைப் பெற்றதாயரினித்தரியா ரென்னுங் கொல்லோ. **(301)**

| | |
|---|---|
| என் மகள் தன்னை | எனது மகளை |
| தன் மாமன் | அவளுக்கு மாமனாராக வேண்டும் |
| நந்த கோபாலன் | கோபாலனான நந்தன் |
| தழீஇக் கொண்டு | அன்பினால் தழுவிக் கொண்டு |
| (அங்கங்களின் அழகை நன்றாகக் காண விரும்பி) | |
| செம்மாந்து இரு ஏ | நிமிர்ச்சி பெற்றே நில் |
| என்று சொல்லி | என வெட்கம் விட்டிருக்க வேண்டி |
| | இவளுடைய |
| செழு கயல் கண் உம் | செழுமைபொருந்திய மீன் போன்ற கண்களையும் |
| செம் வாய் உம் | சிவந்த அதரத்தையும் |
| கொம்மை முலை உம் | குவிந்த ஸ்தனங்களையும் |
| இடை உம் | மிகச் சிறிய மருங்குலையும் |
| கொழு பணை | கொழுத்த மூங்கில்போன்ற |
| தோள்கள் உம் | தோள்களையும் |
| கண்டிட்டு | ஊன்றிப் பார்த்து |
| இ மகளை | இவ்வண்ண மழகிய பெண்ணை |
| பெற்ற | பெற்றவளான |
| தாயர் | தாயானவள் |
| இனி | பெண் நம்மகத்திற்கு வந்த பிறகு |
| தரியார் | தனியே ஜீவித்திருக்க மாட்டிலள் |
| என்னும் கொல் | என்பாரா? |

தன்மாமன் என்பது செய்யுளின்பமும் எதுகையும் நோக்கித் தம்மாமன் என்னப்பட்டது. தழீஇ. தழுவியென்பது செய்யுளின் அளபெடை (நீட்டொலித்தல் முறை) கொண்டிங்ஙனமாயிற்று. செம்மாந்து. செம்மாத்தல் நிமிர்ச்சியடைதல். வெட்கத்தாலே தலைகுனிந்திருத்தலால் முகம் முதலியன

காணக்கூடாமையாலே மிமிர்ச்சிபெறச் சொன்னது. ஏ— அவதாரணம். கோம்மை வட்டம். கோழும்பணை. கொழுமை பெருமையும் அழகும். தாயர். அழகான பெண்ணைப்பெற்றளித்த ஸம்பத்தியம்மாளிடமுள்ள கௌரவத்தாலே இப் பன்மை. தரியாரேன்னும். இங்ஙனம் நினைத்து நந்தகோபாலர் அழைத்தால் பெண்ணிருக்குமிடமே போய்ச் சேர்ந்துவிடவேண்டுமென விவளின் பேராவல். இங்ஙனம் அழைத்துவைத்துக்கொள்ள அசோதையைவிட நந்தகோபருக்கே அதிகாரம் பூரணமாகையாலே அவர் தன் பெண்ணின் அழகைக் கண்டு களிக்க வேண்டுமென்றனள். (ரு)

6. வேடர்மறக்குலம்போலே வேண்டிற்றுச் செய்தென்மகளைக்
கூடியகூட்டமேயாகக்கோண்டு குடிவாழுங்கோல்லோ,
நாடுநகருமறிய நல்லதோர் கண்ணாலஞ்செய்து
சாடிறப்பாய்ந்தபெருமான் தக்க வா கைப்பற்றுங்கோல்லோ. (302)

| | |
|---|---|
| சாடு | சகடாசுரனை |
| இற | முறியும்படி |
| பாய்ந்த | திருவடியால் உதைத்த |
| பெருமான் | ஸ்வாமியான கண்ணன், |
| வேடர் | வேடரைச் சேர்ந்த |
| மறம் குலம் | பாவம் செய்யும் குலத்தை |
| போலே | போலவே |
| வேண்டிற்று | தனக்கு இஷ்டமானபடி |
| செய்து | நடத்தி |
| கூடிய கூட்டமே | சேர்ந்த சேர்த்தியே |
| ஆக | போதுமாகும்படி (விவாஹம் நடத்தாமலே) |

| | |
|---|---|
| என் மகளை | எனது பெண்ணை |
| கொண்டு | ஸ்வீகரித்து |
| குடி வாழும் கொல் | குடியில் வாழ்க்கையை நடத்துவனே? |
| | (அல்லது) |
| நாடும் நகரும் | தேசத்தாரும் நகரத்தாரும் |
| அறிய | அறியும்படி, |
| | நல்லது ஓர் கண்ணாலம் செய்து |
| தக்க ஆ | தனக்கும் தான் பிறந்த குலத்திற்கும் தகுந்த ப்ரகாரத்திலே |
| கை பற்றும் கொல் | பாணிக்ரஹணம் செய்து கொள்வானே? |

கூட்டம். கூடுதல். எ என்பது பாணிக்ரஹணம் செய்யாமையைக் குறிக்கும். இதுவே இங்கு ப்ரதானமாம். கண்ணன் தானே தனக்கு வேண்டியதும், அவனுக்கு வேண்டியதும் செய்து பந்துக்களை எதிர்பாராமல் கூடிவிட்டபடியால் வேடர் குலத்தைச் சேர்ந்த பாவிகள் நடக்குமாபோலே நடந்து கொண்டு, 'ஏற்கனவே கூடின எனக்கு இனி என்ன பாணிக்ரஹணம்' என் பானோ, அல்லது இங்ஙனம் செய்வது தனக்கும் தன் குலத்திற்கும் தகாதென்று தெளிந்து எல்லோருமறிய விவாஹமஹோத்ஸவத்தை ஏற்படுத்தி யப்போது பாணிக்ரஹணம் செய்வானோ என்று ஸந்தேஹப்பட்டாள். முன்போலே இங்கு ஸம்பாவனை எனப்படும் ஸந்தேஹமன்றிக்கே ஸமகோடிகமான ஸந்தேஹமான படியாலே இரு தலையையும் முன்பின்பாதிகளாலே வெளிப்படச்சொன்னதாம். பாணிக்ரஹணம் செய்யாமல் குடிவாழ்ந்தால் அவன் பேர்கூடச் சொல்லத் தகாதவனுவா னென்று முதலில் எழுவாயைக்கூறுது, பாணிக்ரஹணம் செய் வானுகில் புகழக்கூடியவனென்று பின்னடியிலே சாடிறப்பாய்ந்தபெருமான் எனப் பெரிதாகச்சொன்னதாம். வேடர் மறக்குலம். மறவர்குலமென்னுமை மறக்குல மென்றதால் மறம் பாவமாய் வேடரின் மறக்குலமென்று பொருளுரைத்தனம். வேடரையும் மறக்குலத்திலுள்ளாரையும்போலே எனவுமுரைப்பர். மறவரும் வேடரேயாவர். (சா)

பெருமான் என்றவுடன் பெருமானாயிருத்தல் திமைக்குமாம், நன்மைக்குமாமென நினைத்து ஐயப்படுகிறாள்——

7. அண்டத்தமரர் பெருமானாழி யானின்றேன்மகளைப்
பண்டப்பழிப்புக்கள் சொல்லிப்பரிசறவாண்டிடுங்கொல்லோ;
கொண்டுகுடிவாழ்க்கை வாழ்ந்துகோவலப்பட்டங்கவித்துப்
பண்டைமணாட்டிமார்முன்னே பாதுகாவல்வைக்குங்கொல்லோ. **(303)**

| | |
|---|---|
| அண்டத்து | ப்ரம்மாண்டத்திலுள்ள |
| அமரர் | எல்லாத் தேவர்களுக்கும் |
| பெருமான் | தலைவனும் |
| ஆழியான் | திருவாழி யேந்தும் (வைகுண்டநாதனுமான) கண்ணன் |
| இன்று | இப்போது (புக்ககம் அழைத்துப்போன பிறகு) |
| பண்டம் பழிப்புக்கள் | வஸ்துக்களிலே சில தோஷங்களை |
| சொல்லி | எல்லாரிடமும் சொல்லிக் கொண்டு |
| பரிசு அற | வெகுமானமின்றி (வேலைக்காரியைப்போல்) |
| என் மகளை | எனது பெண்ணை |
| ஆண்டிடும் கொல் | ஆள்வானோ |
| | (அல்லது) |
| கொண்டு | ப்ரீதியாக அங்கீகரித்து |
| குடி வாழ்க்கை வாழ்ந்து | இவளுடன் கலந்து குடித்தன ஸௌகங்களை யனுபவித்துக் கொண்டு |
| பண்டை மணாட்டிமார் முன்னே | பழைய தன் மனைவிகளின் எதிரிலேயே |
| கோவலர் பட்டம் | இடையரை யாளும் கிரீடத்தை |
| கவித்து | (இவள் சிரஸ்ஸில்) வைத்து |
| பாதுகாவல் | அந்தப்புரக் காவலிலே |
| வைக்கும் கொல் | வைப்பானோ? |

அண்டத்தமரர் = பரமபதத்திலேயுள்ள நித்ய ஸூரிகள் எனவு முரைப்பதுண்டு. என் இல்லத்திற்குக் கண்ணன் வந்துகொண்டிருந்தபோது மிக்க அன்புடன் நடந்து வந்தான். அதனாலன்றோ வசப்பட்டு என் மகளும் சென்றது. உண்மையில் அவன் கோவலப்பெருமான் மாத்திரமல்லன்; அண்டத் தமரர் பெருமான். தேவேந்திரனைப் போலே சில தேவதைகளுக்கும் பெருமான் அன்றி, ப்ரம்மருத்ராதிகளான ஸர்வ ப்ரம்மாண்டத்தேவர்களுக்கும் பெருமான். மேலும் ஆழியான். திருவாழி முதலான நித்யஸூரிகளுக்கும் நிர்வாஹகன். அவனுக்குள்ள பெருமையைப் பார்க்கும்போது இவளுடைய ரூபகுண வ்யாபாரங்களிலும் ஆடையாபரணங்களிலும் எவ்வளவோ தாழ்வு தோற்றும். அதைச் சொல்லிக்கொண்டு அவன் இவளை மதிக்காது ஒரு வேலைக்காரியை ஆளுமா போலே ஆள்வானோ, அல்லது முதன் முதலில் இருந்த அன்புக்கும் நடவடிக்கைக்கு மேற்பக் கௌரவம் வைத்து, கூடிக் கலந்து வாழ்ந்து தனக்கு முன்மணாட்டிகளான நப்பின்னை, ராதை, முதலானவர்கள் முன்னே இவளுக்கே பட்டமஹிஷியென்ற பிருதம் அளித்து அவர்களின் அஸூயைக்காளாகாத படிக்கும் மரியாதைக்கும் தக்கதொரு பாதுகாவலிலே செவ்வனே பார்த்து கப்பானோ? என்றபடி.

கண்ணனுக்குக் கோகுலத்திலே மூன்று மணாட்டிமாரை ஸ்ரீதேசிகனு மருளிச் செய்தார்.—(9—91.)

'நிரபேக்ஷ இவைஷ நீளயா ரஸிக: பாலிகயா ஸராதயா।
ப்ருதக் அத்ர கிமேதத்ஸூச்யதே குஹக: கச்சிதஸௌ குலஸ்ய ந:.'

இங்கே பாலிகை யென்னப்பட்டவளொருத்தியுண்டென்பதைக் காண்க.

பாலிகா=சாலிகோபியா யிருக்கலாம். இவ்வாழ்வாரும், 'தொத்தார் பூங்குழல் கன்னி (3—1—1), கரும்பார் நீள்வயல் (3–1–9) முதலான பாசுரங்களிலே சிலரைக் குறிப்பிட்டருளினர். பாதுகாவல். பாது என்றாலும் காவலே யாம். ஆகப் பாதுகாவல் என்றது சிறந்த காவலைச் சொல்லும். அன்றி, பாது என்றது பங்காய் பங்குக்காவல்; ஒருவர் மாறி ஒருவராகச் செய்யும் காவலென்னலுமாம். (எ)

தன் மகள் ஆயர்சேரிக்கு அழைத்துச் செல்லப்பட்டதை அறிந்து அங்கே போய் ஊராரோடு கலந்து கண்ணாலம் நடக்குமோவென்று பார்த்து அது நடவாமலிருக்கத் திரும்பவும் தன்னூர் சேர்ந்து தோழியுடன் சொல்லிக் கொள்வதை யறிவிப்பன மேற்பாசுரங்கள்.

8. குடியிற்பிறந்தவர் செய்யுங்குணமொன்றுஞ் செய்திலனந்தோ
நடையொன்றுஞ்செய்திலன் நங்காய் நந்தகோபன்மகன்கண்ணன்
இடையிருபாலும்வணங்க விளைத்திளைத்தென்மகளேங்கிக்
கடைகயிறேபற்றிவாங்கிக் கைதழும்பேறிடுங்கோல்லோ. **(304)**

நங்காய் — தோழீ ?
நந்தகோபன் மகன் கண்ணன் — நந்தகோபருக்கு மகனாயிருந்தும் கண்ணன்
குடியில் பிறந்தவர் — பெரிய குடிக்களத்திலே பிறந்திருப்பவர்
செய்யும் குணம் — கல்யாணப்பெண்ணை மனைவிக்குச் செய்துவரும் சுபத்தை
ஒன்றும் — கொஞ்சங் கூட
செய்திலன் — செய்யவில்லை.
நடை — எல்லோரும் பொதுவாகச் செய்வதைக் கூட
ஒன்றும் செய்திலன்,
அந்தோ — கஷ்டம்.
(ஆகவே இனி) என் மகள்
(தயிர்கடைய ஏவப்பட்டு)
இடை — மருங்குலானது
இரு பால் உம் — இரண்டு பக்கங்களிலும்
வணங்க — (மாறி மாற்றி இழுக்கும் போது) வணங்கி வர
இளைத்து இளைத்து — மிகவும் தளர்ந்து
ஏங்கி — களைத்து
(ஆயினும் வெண்ணெய் வெளி வராததாலே)
கடை கயிறே — கடையுங் கயிற்றையே
பற்றி வாங்கி — இருகையாலும் பிடித்திழுத்து
கை தழும்பு ஏறிடும் கொல் — காய்த்துப்போன கையுடையாளாவாளோ ?

குணம். சிறப்பு. பெருங் குடியிற் செய்யும் சிறந்த வகையுமில்லை, சாதாரணமாக உலக நடையிலிருப்பதுமில்லை யெனத் தெரிவிக்க, நடையொன்றுமென்று தனியே யருளினது. இனி, குடியிற்பிறந்தவர் செய்யும் என்பதை நடையென்பதோடும் சேர்ப்பதாகில், அன்பு முதலிய குணமு மில்லை, அழைத்துத் தழுவது முதலிய நடையும் அல்லது பாணிக்ரஹணம் முதலிய நடையுமில்லை யென்னலாம். முன் சொன்னதே யமையும். பிறந்த வகத்திலே தயிர் கடைந்த இவளுக்குப் புக்ககத்திலே மட்டு மதில் என்ன கஷ்டம் என வேண்டா. இவள் ஒருக்கால் கோபஜாதியைச் சேராதவளாகலாம். அன்றிக்கே, இரண்டொரு மாட்டுத் தயிர் ஏதோ சில நாள் கடைந்ததாலே நந்தகோபன் மாளிகையிலுள்ள ஆநிரையின் தயிரெல்லாம் கடைவது சாத்தியமா? உண்மையில் திரு

மகள் போல வளர்க்கப்பட்டவளுக்குத் தயிர் கடையத்தான் தெரியுமோ? பெரும் பட்டமஹிஷியாவ ளென்றெதிர்பார்த்த விடத்திலே பல வேலைக்காரிகள் செய்வதை இவளொருத்தி செய்ய நேரிட்டால் ஏங்கி இளைத்து நொந்து கிடக்கும்படியா மெனவும் கொள்க. (அ)

கடைவது ஒருபக்கம் இருக்கட்டும். அதற்கு விடியற் காலத்திற்கு முன்னமே எழுந்து விழித்திருப்பது கூட கஷ்டமே யென்றும் இன்னமென்னென்ன படி நடத்துவானோ வென்றும் சொல்லி வருந்துகிறாள்——

9. வெண்ணிறத்தோய்தயிர்தன்னை வெள்வரைப்பின்முன்னெழுந்து
கண்ணுறங்காதேயிருந்து கடையவுந்தான்வல்லள்கோல்லோ
ஒண்ணிறத்தாமரைச் செங்கணுலகளந்தானென்மகளை
பண்ணறையாப்பணிகோண்டு பரிசறவாண்டிடுங்கோல்லோ. **(305)**

| | |
|---|---|
| என் மகள் | |
| வெள் வரைப்பின் முன் | கிழக்கு வெளுப்பதற்கு முன்னமே |
| எழுந்து | படுக்கையை விட்டு |
| கண் உறங்காதே இருந்து உம்தான் | தூக்கத்தையும் விட்டொழித்துட்கார்ந்து கொண்டே |
| வெண் நிறம் | வெளுப்புநிறம் உடைய |
| தோய் | கெட்டியாகத் தோய்ந்த |
| தயிர் தன்னை | -தயிரை யெல்லாம் |
| கடைய | கடைவதற்கு |
| வல்லள் கொல் | -வலிவுள்ளவளோ? |

| | |
|---|---|
| ஒள் நிறம் | (அப்போதலர்ந்ததாலே) அழகிய நிறமுடைய |
| தாமரை | தாமரைப் பூப்போலே |
| செம் | சிவந்த |
| கண் | திருக்கண்களை யுடைய |
| உலகு அளந்தான் | த்ரிவிக்ரமாவதாரம் செய்த கண்ணன் |
| என் மகளை | |
| பண் அறை ஆ | தகுதி குறைவாக |
| பணி கொண்டு | -வேலை வாங்கி |
| பரிசு அற | வெகுமதி யின்றி |
| ஆண்டிடும் கொல் | ஏவிக் கொண்டிருப்பானோ? |

வெண். பால் நன்றாகக் காய்ந்ததாலே தயிர் பழுப்பு நிறமாயிருக்கில் ஒருக்கால் வெண்ணெய் விரைவில் வெளிவரும். பார்வைக்குத் தயிர் நன்றாக விருக்கவேண்டுமென்று குறைவாகக் காய்ச்சினால் கடைவதில் ப்ரயாஸம் அதிகம்போலும். வெள்வரைப்பு. வரைப்பு = எல்லை. வெளுத்த எல்லை; இரவின் முடிவாகக் கீழ்வானம் வெளுத்தல்.

கடையவுந் தான். கடைவதிலுள்ள கஷ்டத்தை முன் பாசுரத்திலேயே கூறியிருப்பதால், இந்த உம்மைக்கும், தான் என்பதற்கும் இதன் விசேஷண மான இருந்து என்றவரையிலுள்ள வர்த்தத்திலே நோக்கு. ஆகவே அங்கே சேர்த்துப் பதவுரை கூறினம்.

ஒண்ணிறம். அப்போதலர்ந்த தாமரை அழுக்கும் காற்றும் படாததால் நிறம் பொருந்தி அழகாயிருக்கும். தூங்குமிவளைக் கண்ணன், முன்னே கண் திறந்தெழுந்து வேலைக்குக் கிளப்பிவிடுகிறானென இவ்வடைமொழியின் கருத்தாம். உலகளந்தான். உலகளந்தானுக்கு ஊரெல்லாம் வேலை இருக்கும். எல்லாத்திற்கும் இவளை ஏவிக்கொண்டிருந்தால் இவள் என் செய்யவல்லள் என்றபடி.

உண்மையில் அவன் அபிமானித்து வைத்துக்கொண்டிருக்கச் செய்தே விட்டுப்பிரிந்த வ்யஸனத்தாலே தாய் இங்ஙனம் குறைகூறினளென்க. (கூ)

இந்த ஒன்பது பாசுரங்களிலே தாய் சொன்னவற்றை, முதலில் தன் ஊரிலும், பிறகு வழியிலும், ஆயர்சேரியிலும், மறுபடி தன்னூரிலுமாகப் பிரித்துக்கொள்ளவேண்டுமென்பது தோற்ற வருளாநின்றுகொண்டு இத்திருமொழி கற்றால் பெறும் பலனையு மருளிச்செய்கிறார்.

**10.** மாயவன்பின்வழிசென்று வழியிடைமாற்றங்கள்கேட்டு
ஆயர்கள்சேரியிலும் புக்கங்குத்தைமாற்றமுமெல்லாம்
தாயவள்சொல்லியசொல்லைத் தண்புதுவைப்பட்டன்சொன்ன
தூயதமிழ்பத்தும்வல்லார் தூமணிவண்ணனுக்காளரே! (306)

| | |
|---|---|
| தாய் அவள் | கண்ணனால் கொண்டு போகப்பட்ட பெண்ணின் தாயானவள் |
| மாயவன் பின் | முன்னே பெண்ணுடன் மாயமாகப் போனவனுக்குப் பின்னே |
| வழி சென்று | அவன் போனவழியே போய் |
| வழி இடை | நடு வழியிலே |
| மாற்றங்கள் | அவர்கள் போன ப்ரகாரங்களை |
| கேட்டு | எதிரில் கண்டார் மூலமாகக் கேட்டு |
| ஆயர்கள் சேரியிலும் | அவர்கள் கடைசியாகச் சேர்ந்த திருவாய்ப்பாடிக்குள்ளும் |
| புக்கு | புகுந்து |
| அங்குத்தை | அங்கே நடந்தவையான |
| மாற்றமும் | யசோதை, நந்தகோபர், ஊரார், கண்ணன் இவர் நடத்தக்கூடும் ப்ரகாரங்களையும் |
| எல்லாம் | எல்லாமறிந்து திரும்பின பிறகு தனக்குத் தோன்றினவற்றையும் |
| சொல்லிய | அங்கங்கே தானே சொன்ன |
| சொல்லை | வாசகங்களை |
| தண் புதுவை | குளிர்ந்த ஸ்ரீவில்லி புத்தூரி லிருக்கும் |
| பட்டன் | பட்ட நாதன் (பெரியாழ்வார்) |
| சொன்ன | பாசுரமாக இயற்றின |
| தூய | பரிசுத்தமான |
| தமிழ் பத்தும் | தமிழ்ப் பாஷையிலுள்ள பத்துப் பாசுரங்களையும் |
| வல்லார் | கற்பவர் |
| தூ | பரிசுத்தமான |
| மணி | நீலமணியின் |
| வண்ணன் | நிறமும் ஸ்வபாவமு முள்ளவனுக்கு |
| ஆளர் | தாஸராவர். |

இப் பதவுரையிற் கண்ட படியே இப் பாசுரத்தில் ஸ்வரஸமாய்த்தோற்றும் பொருளாம். அதாவது—பெண்ணின் தாய் பெண்ணைக் காணுமே கண்ணனே கொண்டு போயிருக்கவேண்டுமென்று தீர்மானித்து இதனைக் கண்டுவரப்புறப்பட்டு வழியிலுள்ளாரை 'எங்கேபோனார்கள், எங்ஙனம் போனார்கள்' எனவெல்லாம் விசாரித்து, அவர்கள் போனவகைகளையெல்லாம் அறிந்து, அவர்கள் சேர்ந்த சேரியிலும் நுழைந்து, அவ்வூராருடன் பெண்ணிடம் அவர்கள் எங்ஙனம் நடந்துகொள்வார்கள் என்பதைப் பற்றிப் பேசியிருந்து திரும்பிவிட்டனள். ஆங்காங்கு அவள் சொன்ன சொற்கள் இத்தகையன வென்றதாம். திருவாய்மொழிப்பிள்ளையும் இந்த ரீதியிலே போயிருக்கிறார். ஆகவே இதற்குத் தக்கவாறு முன் பாசுரங்களிலே விபாகம் செய்து உரை கூறினம். இங்கு ஜீயருரை போயிருப்பது வேறுவிதம். அதாவது—தாய் வீட்டிலேயே இருந்தவளே

யன்றி எங்கும் போனுளல்லள். ஆகவே இப்பாட்டின் பொருளாவது பெண்ணு னவள் மாயவனைப் பின்தொடர்ந்து சென்று வழியிலே அவனோடு பலவிதமாக வழியிலுள்ளவற்றைப் பற்றியும் வேறுமாகப் பல கேட்டுக்கொண்டு திருவாய்ப் பாடியிலும் புகுந்தனள். இப்படியவள் புகுந்திருந்ததையும், பிறகு அங்குத்தை மாற்றங்களையும் தாய் வீட்டில் இருந்தபடியே ஊஹித்துச்சொன்னுளென்ற தாம். இப்போது மகள் என்று ஒரு பதத்தை முன்னமே சேர்த்துக்கொள்ள வேண்டும். புக்கு என்பதும் சொல்லிய என்பதும் ஸமானகர்த்ருகமாகாதாகை யாலே புக்கு என்பதை 'புகுந்து இருந்ததையும்' என்றவாறு அத்யாஹரித் துரைக்கவேண்டும்.

ப்ரபந்தரக்ஷையில் நல்லதோர்தாமரைப்பொய்கை யுரை முற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானுர் தேசிகன் திருவடிகளே சரணம்.

---

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானுர் தேசிகன் திருவடிகளே சரணம்.

பெரியாழ்வார் திருமொழி 3, 9.

# என்னுதன் தேவிக்கு.

இவ் வாழ்வார் முதலில் திருப்பல்லாண்டின் தொடக்கத்திலே, 'மல் லாண்ட திண்டோள் மணிவண்ணு' வென்று, கலியுகத்திலே விசேஷித்து ஆரா த்யனுக ஸ்ரீபாகவதாதி புராணங்களிலே புகழப்பெற்ற கண்ணனுக்குப் பல் லாண்டு பாடிப் பிறகு, 'இராக்கதர் வாழிலங்கை பாழாளாகப் படைபொரு தானுக்கு' என்று அவனுக்கு முன் அவதாரமான இராமபிரானைப் புகழ்ந்து, அதற்குப் பிறகுப் பல அவதாரங்களுக்கும் பொதுவாக, 'நமோ நாராயணுய வென்று நாமம் பல பரவி' என மொழிந்து எங்கும் தனக்குள்ள ஈடுபாட்டைத் திருப்பல்லாண்டிலே வெளியிட்டருளி, திருவாய்மொழியிலே நம்மாழ்வார் முன்னே சுருங்கவருளிச் செய்ததைப் பின்னே விவரிக்குமா போலே அதன்படி யதை விவரிக்க முன்வந்து, அந்தக் கண்ணனின் பூர்வாவஸ்தையாகிற கோபால பாலகவேஷத்தைப் பற்றி வெகுவாக இதுவரையில் அனுபவித்து, இனி இராமா வதாரத்தையும், மற்றும் பல விபவங்களையும், எம்பெருமானுடைய ஸௌலப் யத்திற்கெல்லையிலமான அர்ச்சாமூர்த்திகளைத் திருமாலிருஞ்சோலைமுதல், கீழே, 'திருக்கோட்டியர்கோன்,' 'வண்ணமாடங்கள் திருக்கோட்டியூர்' என்ற விடங்களிலே நடையாடின வர்ச்சையுள்பட, தொடங்கின கண்ணன் அடியிணை யெமக்குக் காட்டும் வெற்பான திருவேங்கடத்தெம்பெருமான் வரையிலாகவும் அனுபவிக்கப்போகின்றவராய், தனிப்பட அனுபவித்த க்ருஷ்ணுவதார சேஷ்டி தங்களுக்கும் தனிப்பட வனுபவிக்கப்போகிற ராமாவதார சேஷ்டிதங்களுக்கும் நடுவே, இங்குமங்குமடிவைத்துத் தமது சிந்தை நடமாடுவதை யோர் உந்தி விளையாட்டைக் கூறும் வகையிலே யருளிச்செய்கிறுர்.

உந்தியாவது மகளிர் விளையாட்டினொன்று. உந்துதல் = எழும்பல். அதே பாசுரந்தோறும் பற என்ற பதத்திற் கருதப்பட்டதாம். நிகமனப்பாசுரத்தில், 'உந்தி பறந்தவொளி யிழையார்கள்' என்றதிலிருந்து மகளிர் செய்யும் விளையாட்டென்பது விளங்கும். இது எழும்பி மேன்மேல் போய்க்கொண்டு கும்மி யடிக்கும் விளையாட்டாகலாமென்பது யுக்தமானதே. பாட்டின் அமைப்பும் கும்மியடிக்கற்குரியதாகும்.

உந்திபறக்குமிவர் எவரெனில், கோபிகளாகவே யிருக்கவேண்டுமென்றதொரு நிபந்தனைக்குக் காரணமொன்றுமில்லை. திருவாய்ப்பாடி ஸ்திரீகளும் திருவயோத்தி ஸ்திரீகளும் கலந்து உந்திபறந்தாரென்றாலும் குற்றமில்லை. கீழே ஆழ்வார் அசோதையாகவும், மற்றுமனேக ஆய்மகளிராகவும், நந்தகோபராகவும், கடைசியாக ஒரு கன்னிகையின் தாயாகவு மிருந்தாற்போல் கிருஷ்ணன் பெருமையைக் கூறும் மகளிராகவும் இராமன் பெருமையைக் கூறும் மகளிராகவுமிருந்து அருளிச்செய்கிறாரென்றிவ்வளவே கொள்ளற்பாலது. என்னாதன் என்று கண்ணனைத் தன் நாதனாகச்சொன்னவள், அவன் கோபீநாதனானபடியாலே, கோபியாயிருக்கலாமென்றில், இருந்தாலுமிருக்கலாம். ஒருவர் வெவ்வேறு ஸ்வபாவமுள்ள இருவகை ஸ்திரீகளாக எங்ஙனமாவதென்னில், புருஷரான ஆழ்வார் ஸ்திரீயாவதெங்ஙனம்? கவிபாவனையில் எதிலும் விரோதமொன்றுமில்லை யென்பதே உண்மையான ஸமாதானமாம்.

1. என்னாதன்தேவிக்கன்றின்பப் பூ வீயாதாள்
தன்னாதன்காணவே தண்பூமரத்தினை
வன்னாதப் புள்ளால் வலியப்பறித்திட்ட
என்னாதன் வன்மையைப்பாடிப்பற வெம்பிரான்வன்மையைப்பாடிப்பற. (307)

| | | | |
|---|---|---|---|
| என் நாதன் | எனது நாதனுடைய | மரத்தினை | பாரிஜாத விருக்ஷத்தை |
| தேவிக்கு | தேவியாரான ஸத்யபாமைக்கு | வலிய | ஸத்யபாமையின் வாக்கிற் கிணங்கி வலிதல் பெறவே |
| அன்று | அவள் நாதனோடு நரகாஸுரனை வதம் செய்து இந்திரபவனம்வந்தபோது | பறித்து | வேரோடு பிடுங்கி |
| | | வல் | வன்மையுடைய |
| | | நாதம் | த்வனியுடைய |
| இன்பம் | இனிமையான (அவளுக்கு இஷ்டமான) | புள்ளால் | பக்ஷிராஜனைக் கொண்டு |
| பூ | பாரிஜாதப் பூவை | இட்ட | ஸத்யபாமை யில்லத்தில் நட்டருளின |
| ஈயாதாள் தன் | கொடாதவளா(ய் தானே சூட்டிக் கொண்டவளா)ன இந்திராணியின் | என் நாதன் | எனது நாதனான கண்ணனுடைய |
| | | வன்மையை | பலத்தை |
| நாதன் | நாதனான இந்திரன் | பாடி பற | பாடிக்கொண்டு உந்தி விளையாட்டில் எழும்பு; |
| காணவே | பார்த்துக்கொண்டிருக்கும் போதே | எம்பிரான் | எமது ஸ்வாமியின் வன்மையை பாடி பற. |
| தண் பூ | குளிர்ந்தும் பூத்து மிருக்கிற | | |

நரகாஸுரஸம்ஹாரம் செய்துவிட்டு, அவன் ஏற்கனவே அபஹரித்திருந்த அதிதியின் குண்டலங்களை அவளிடம் கொடுத்துவரக் கண்ணபிரான் ஸ்வர்க்கலோகத்திற்கு ஸத்யபாமையோடு கருடன்மீது எழுந்தருளி தேவேந்திரனால் ஸத்கரிக்கப்பட்டபோது இந்திராணியானவள் மானிட ஸ்திரீக்குப் பாரி

ஜாதம் தகாதென்று ஸத்யபாமைக்குப் பூவைக் கொடாதே தான்மட்டும் சூட்டிக்கொண்டு அவமர்யாதை செய்ய, கண்ணன் பூலோகத்திற்குத் திரும்பும் போது நந்தனவன வாயிலேற வர; ஸத்யபாமையும் பாரிஜாத விருக்ஷத்தைக் கண்டு இந்திராணியின் செயலிலுண்டான உரோடத்தாலே, 'இதனை நம்மில்லத்திற் கொண்டு நடவேண்டும்' என, அங்ஙனமே பறித்துக் கருடன்மேல் வைத்துக்கொண்டு புறப்பட, இந்திராணியால் புத்திக்கலக்கம் பெற்ற தேவேந்திரன் அறைக்ஷணத்திற்கு முன்னம் கண்ணன் செய்த உபகாரத்தையும் மறந்து எதிரம்புகோத்து நின்றுப் படுதோல்வி யடைந்து பரிபவப்பட, மரத்தை ஸத்யபாமையின் இல்லத்திலே கொண்டு நட்டுக்கொண்டார். இப்படி ஸுராஸுர ஸர்வாதிகமான கண்ணனின் வன்மையைப் பாடி யாடவேண்டுமென்றபடி. கருடன் மரத்தைப் பறித்ததாகக் கூறுமே கண்ணன் பறித்துக் கருடன்மேல் வைத்ததாகப் புராணங்களிலுள்ளதற்கிணங்கப் பதவுரையிற் சொன்னோம். கருடனே பறித்ததாகக்கொண்டாலும் கொள்க. வன்னாதம். கருடனின் நாதத்திற்கு இனிமை போலே வன்மையு முண்டு. ஸர்வபாபஹர மது. ஆக அதன் நகம் மூக்கு முதலான அவயவங்கள் போலே நாதமும் கண்ணனுடைய சங்கநாதம் போலே சத்ருக்களைக் கலக்கி யழிக்க வல்லதெனக் கருதி இங்ஙன மருளினது. நாதம் வேதமாய் 'வேதாத்மா விஹகேச்வர:' என்றபடி வேதமயனான கருடனெனவு முரைப்பர். வேதத்திற்கு வன்மையாவது எக்காலத்திலுமழியாமை, நிலைத்த அர்த்தத்தை நிரூபிக்கும் தன்மை. வன்மையைக் கருடனுக்கே விசேஷணமாக்கவுங் கூடும். இவ் வரலாற்றை 1—10—9லும் காண்க.

கண்ணனையும் இராமனையும் கலந்து அனுபவிக்க வருளின இத் திருமொழியிலே முதலில் கண்ணனைக் கூறினது, இதுவரையில் கண்ணனையே வர்ணித்திருப்பதால் அதற்கிணங்கவும், மேற்றிருமொழியில் இராமபிரான் விஷயமாக வருளிச்செய்யப்போவதால் இத்திருமொழியிற் கடைசியில் அவனை நிறுத்தவேண்டியதற்கேற்பவும் அருளக் கருதி யெனத் தெளிக. (க)

அடுத்த பாசுரம் இராமபிரான் விஷயமாகச் சில மகளிர் சொல்வது. இங்ஙனம் மாறிமாறி மேலேவரும். இங்கு ஸ்ரீமத் ராமாயணத்தின் வரலாற்றின் க்ரமத்திற்கிணங்க மேன்மேல் இராமபிரான் விஷயமாகப் பாசுரங்கள் அமைந்திருக்கின்றன. அப்படிக் கண்ணன் சரித்ரத்திற்கு வரிசைக்ரமமாய் ஸங்க்ரஹமாய் அவன் விஷயமான பாசுரங்கள் இயற்றப்படவில்லையாகையாலே அந்தந்தப் பாசுரத்தின் பொருளைப் பார்த்து அதற்குத் தக்கவாறு ஏதேனும் ஸங்கதி அவரவர் ஆராய்ந்துகொள்வது.

**2.** என்வில் வலிகண்டு போவென்றெதிர்வந்தான்
தன்வில்லினோடுந் தவத்தை யெதிர்வாங்கி
முன்வில்வலித்து முதுபெண்ணுயிருண்டான்
தன்வில்லின் வன்மையைப்பாடிப்பற தாசரதிதன்மையைப் பாடிப்பற. **(308)**

(ஸீதையை மணந்து மிதிலையிலிருந்து வரும்போது வழியிலே)

| | | | |
|---|---|---|---|
| என் வில் | என்னிடமுள்ள வில்லின் | வலி | வன்மையை |
| | | கண்டு போ | பார்த்த பிறகு போவாயாக |
| | | என்று | எனச் சொல்லி |

| | |
|---|---|
| எதிர் வந் தான் தன் | எதிரிலே வழி மறுத்த பரசுராமனுடைய |
| வில்லினோடு | வில்லையும் |
| தவத்தை உம் | -அவர் தபஸ்ஸுக்களையும் |
| எதிர் | அவர் கண்ணெதிரிலேயே |
| வாங்கி | பறித்தவனும், |
| முன் | அதற்கு முன்னே |
| வில் | தன் வில்லை |
| வலித்து | வளைத்து |
| முது | பழமையுடைய |
| பெண் உயிர் | தாடகையின் உயிரை |

| | |
|---|---|
| உண்டான் தன் | கொண்டவனுமான இராமபிரானுடைய |
| வில்லின் | தநுஸ்ஸின் |
| வன்மையை | ஸுபாஹு முதலிய அஸுர ஸம்ஹார ஸாமர்த்தியத்தை பாடி பற; |
| தாசரதி தன்மையை | சக்ரவர்த்தித் திருமகனாயிருந்த வகையை பாடி பற. |

பாலகாண்ட விருத்தாந்தம் இங்கே சுருங்க வருளிச்செய்யப் பெற்றது. வாங்கி. இது வினையெச்சமாகில் மேலே அந்வயம்பெறாது. தாடகையின் உயிருண்டது முன்னானபடியாலே வாங்கியுயிருண்டானென்னவொண்ணாதன்றோ. ஆக 'இ' விகுதிபெற்ற பெயர்ச்சொல்லாம். கர்த்தாப்பொருள். வாங்கி = வாங்கினவன். வில்லை வாங்குவதாவது அவர் கையினின்று தன்கையிற் கொள்வது. தவத்தை வாங்குவது அவ்வில்லில் தான் தொடுத்த அம்பு வீணாகாமைக்காக அவர் கேட்டுக்கொண்டபடி அவர் தபோபலத்தால் சேர்த்துவைத்த வெல்லாப் பலன்களையும் அம்புக்கிரையாக்கி யழித்தது. முது முதுமை பழமை. வெகு காலமாக ஒருவராலும் அழிக்க முடியாதபடி திடமாய் உண்டு வளர்ந்தமையைச் சொன்னதாம்.

தாசரதிதன்மை. தசரதருடைய யாகத்திற்கு வந்த தேவதைகளின் ப்ரார்த்தனைக்கிணங்கி திருமால் அவதரித்து விச்வாமித்ரருடைய யஜ்ஞத்தைக் காக்கப் புறப்படும் வரையில் தசரதரோடு சேர்ந்து வாழ்ந்ததைப் போல், ஸீதையை மணந்து வந்தபிறகு பன்னிரண்டு வருஷகாலம் திருவயோத்தியில் அவரோடு கூடியிருந்தமையையும் குறிக்கக் கருதி இப் பதத்தைக் கடையில் ப்ரயோகித்ததென்க. அயோத்தியாகாண்டத்தின் கதையிலிருந்து தசரதரைப் பிரிந்தவராவர் இராமன். அதற்குமுன் தசரதரால் லாளநம் செய்யப்பட்டுத் தந்தைக்கு மகனாய் வாழ்ந்தாரெனச் சொன்னபடியாம். (௨)

பால்யாவஸ்தையிலே இராமபிரானுடைய வில்லின் வன்மை தோன்றும் விருத்தாந்தம் கீழே சொல்லப்பட்டதில் செறிந்தமணி முடிச்சனகன் சிலையிறுத்துச் சீதையை மணந்ததுமடங்கி நிற்கிறது. விவாஹத்திற்குத் தசரதர் ஆலோசிக்கும் ஸபையிலே விச்வாமித்ரர் வந்து அழைத்த பிறகு நடந்த விருத்தாந்தங்களல்லவோ அவை யாவும். அப்போது விச்வாமித்ரர் அழைத்ததும் உண்மையில் ஸீதாவிவாஹம் செய்துவைத்துத் திவ்ய தம்பதிகளைத் தர்சித்த பிறகே தாம் தேசாந்தரம் போகவேண்டுமென்று அவர் கருதினதாலென்றது ஸங்கற்பத்தால் விளங்கும். என்வில் என்றவிடத்தில் இது ஜநகரிடமிருந்த ருத்ரன் வில்லைப்போன்ற தன்றெனத் தோன்றவைத்ததாலும் ஸீதாவிவாஹம் குறிக்கப்பட்டதாம். இங்ஙனம் ஸீதாவிவாஹத்திற்குப் புறப்பட்ட இராமபிரானுடைய வன்மையைச் சிலர் பாட, 'ராகவத்வேபவத் ஸீதா ருக்மிணீ க்ருஷ்ணஜந்மநி' என்றபடி க்ருஷ்ணாவதார காலத்திலே ருக்மிணியாக அவ

தரித்த அவளைக் கைகொள்ள எழுந்தருளினபோது கண்ணன் காட்டியருளின அவன் வன்மையைப் பாடிப் பறந்தனர் சிலர். அதைச்சொல்வது மேற்பாசுரம்— இராமனுக்கு விவாஹம் வெகு பால்யத்திலே. கண்ணனுக்கு யௌவனம் நன்கேறினபிறகு. 'முன்னமே ராமனை விவாஹம் செய்துகொண்டதால் பாதிவ்ரத்யத்திற்கஞ்சி நம்மிடம் சேர விசையவில்லை. ஒருவனை மணந்துகொள்வதற்கு முன்னமே கொள்ளில் இசைவாள்' என்று ராவணாதிகள் நினைத்தனர் போலும். அங்ஙனமே உருப்பிணியானபோது சிசுபாலாதிகளாய் வந்து ப்ரயத்னம் செய்தனர். ஆகவே யிங்கே கண்ணன் தன் வன்மையைக் காண்பிக்க வேண்டியதாயிற்று.

**3.** உருப்பிணிநங்கையைத் தேரேற்றிக்கொண்டு
விருப்புற்றங்கேக விரைந்தெதிர்வந்து
செருக்குற்றான் வீரஞ்சிதையத் தலையைச்
சிரைத்திட்டான் வன்மையைப் பாடிப்பற தேவகிசிங்கத்தைப்பாடிப்பற. **(309)**

| | |
|---|---|
| உருப்பிணி நங்கையை | ருக்மிணிப் பிராட்டியை |
| தேர் | (தனது) தேரில் |
| ஏற்றிக் கொண்டு | கைப்பிடித்து ஏறவைத்துக்கொண்டு |
| அங்கு | அவள் ஏறினவிடத்திலே |
| விருப்பு உற்று | விரோதிகளை விரட்டுவது முதலான விருப்பத்தைப் பெற்று |
| ஏக | (த்வாரகைக்கு) எழுந்தருளும்போது |
| விரைந்து | வேகமாக |
| எதிர் வந்து | எதிரில் வழிமடக்கிப் போர் புரிய வந்து |
| செருக்கு உற்றான் | கர்வம் கொண்டவ(னை ருக்ம)னுடைய |
| வீரம் | பராக்ரமமானது |
| சிதைய | அழிந்த பிறகு |
| தலையை | அவன் தலையை |
| சிரைத்து இட்டான் | மொட்டையாக்கி நிறுத்தினவனை கண்ணனுடைய |
| வன்மையை | பராக்ரமத்தை |

பாடி பற; தேவசிங்கத்தை பாடி பற.

**உருப்பிணிநங்கையை.** ஆழ்வார் திருக்குமாரியான ஆண்டாளைப்போலவும், ஆயர்பாடியிலேயிருந்த ஆயர்சிறுமிகளைப்போலவும் கண்ணனுக்கே தன்னைப் பிறவி முதல் அறுதியிட்டு அதற்கு இடையூறு வந்ததை யறிந்தபோதே யோர் அந்தணர்மூலம் அறிவித்துத் தன்னைத்தானே அர்ப்பணம்செய்த அவளுடைய குணபூர்த்தியை யருளினதாம். **ஏற்றிக்கொண்டு.** விவாஹத்திற்கு முன்செய்யும் சடங்காக வேற்பட்ட குலதேவியாத்ரையென்ற கௌரியின் ஸேவைக்கான புறப்பாட்டை வ்யாஜமாகக் கொண்டு வெளிவந்து கௌரியைத் தர்சித்து வழியிலே திரண்டிருந்த ராஜக்கூட்டத்திலே கண்ணனைக் கண்டறிய நினைத்த அவளருகில் அமர்ந்து அவள் ஏற விரும்ப இவன் கை பிடித்தேற்றிக் கொண்டானென்றபடி. **விருப்புற்றங்கு.** சிசுபாலன் விவாஹம் சிறப்பாக நடக்கவேண்டுமென்று நினைத்துவந்து நின்ற ஜராஸந்தன் முதலான ராஜவீரர்கள் எல்லோரும் எதிர்த்தபோது அவர்களை ருக்மிணியினிடம் ஸரஸஸல்லாபம் செய்தவண்ணமே சுற்றத்தார் சிலைகளுக்கே போதாதபடியாக்கி அவர்கள் தாமே தோற்றோடும்படிசெய்ததையும், அப் போர் நடந்துகொண்டிருக்கும் போதே தன்னை யாரும் எதிர்க்கவில்லாரென்றெழுந்தருளினதையும் கருதினபடி. **செருக்குற்றான் இத்யாதி.** நடுவழியில் நேராகக் கண்ணனோடு போர்புரிந்து அவனை ஜயித்தாலல்லது குண்டினம் புகுரமாட்டேனென்று கர்வித்துப் பேசிக் கடுஞ்

சேனையுடன் கிளம்பி எதிர்வந்துநின்று தன்னாலான வரையில் போர் செய்து பார்த்து, கண்ணன் ஸர்வஸம்ஹாரம் செய்து தன்னைத் தனியாக நிறுத்தின பிறகும் தேரிலிருந்து குதித்துக் கத்தியும் கையுமாக ருக்மி நெருங்க அவன் கத்தியைப் பொடியாக்கி அவனையும் மாளவைக்கக் கருதினபோது, 'கூடப்பிறந்தவனைக் கொல்லவேண்டாம்' என்று அவனது ஸஹோதரியான பிராட்டியின் ப்ரார்த்தனைக் கிணங்கி யவனைக் கொல்லாமே மொட்டை யடித்துப் பரிபவப் படுத்தி விட அந்த ருக்மியும் மறுபடி குண்டினம் போகமாட்டாமே போஜகடமென்றவிடத்திலே அங்கே தங்கும்படி யாயிற்று. தேவகிசிங்கத்தை. கோகுலத்திலிருந்து மீண்டு வந்து தன்னைத் தேவகியின் புத்ரனாக நிரூபித்துக்கொண்ட பிறகு இவ் வரலாறு நடந்ததாகையாலே தேவகிசிங்கத்தை யென்றருளினார். அல்லாத விடத்திலே அசோதை தன் சிங்கத்தை யென வருள்வர். ௩.

பாலகாண்டவிருத்தாந்தம் முன்பே முடிந்தது. அயோத்தியாகாண்டவிருத்தாந்தத்தை யடுத்தபடி யருளிச்செய்கிறார்.

**4.** மாற்றுத்தாய்சென்றுவனம் போகேயென்றிட
ஈற்றுத்தாய்பின் றொடர்ந்தெம்பிரானென்றழ
கூற்றுத்தாய்சொல்லக் கொடியவனம்போன
சீற்றமிலாதானைப்பாடிப்பற சீதைமணாளனைப்பாடிப்பற. **(310)**

| | | | |
|---|---|---|---|
| மாறு தாய் | மாறுபாடு உள்ள தாயான கைகேயியானவள் | கூறு தாய் | கூடப் பாகம் பெற்றுள்ள தாயான ஸுமித்ரை |
| சென்று | கார்யஸித்தி யாக வழி விலகிச் சென்று | சொல்ல | இலக்குமணனைச்சொல்லும் முறையிலே சில வற்றைச் சொல்ல |
| வனம் ஏ போகு | 'காட்டிற்கே நீ போவாயாக' | கொடிய | பயங்கரமான |
| என்றிட | என்று ஆஜ்ஞை செய்ய | வனம் | காட்டிற்கு |
| ஈற்றுத் தாய் | பெற்ற தாயான கௌஸல்யை | போன | எழுந்தருளின |
| பின் தொடர்ந்து | அவளிடம் விடைகொள்ளும்போது கூடவே பின்னே வந்துகொண்டு, | சீற்றம் இலாதானை | கோபம் முதலான விகாரங்கள் இல்லாத இராம பிரானை |
| எம் பிரான்! | 'என் அப்பா!' | | பாடி பற; |
| | என்று அழ, | சீதை | ஸீதாதேவிக்கு |
| | | மணாளனை | ப்ரிய பர்த்தாவை |
| | | | பாடி பற, |

மாற்றுத்தாய். சீலத்தில் மாறுதலுள்ள தாய். பிதாவினிடத்திலும் மற்ற தாய்மார்களிடத்திலும் அவர்களைப்போலே நடந்துகொள்ளாமல் செருக்குற்று வேறுபாடுகொண்ட தாய். கைகேயிக்கு இயற்கையிலேயே கெட்ட குணமிருப்பது தூதர்கள் பரதனை அழைத்துவரச் சென்றவிடத்திலே அவன்சொற்களிலிருந்து விளங்கும். ஆயினும் அவள் இராமனிடத்தில் அபிமானத்தோடிருந்தது அவனுடைய குணசேஷ்டிதங்களாலே வசிகரிக்கப்பட்டதாலாம். அன்றி, முன்னம் நற்குணமுள்ளவளாயிருந்து பிறகு மந்தரையின் துர்போதனையாலே மாறுபாடு அடைந்தவள் என்னவுமாம். மந்தரையை ஒருவாறு வெகுமதித்து மாற்றிவிடலாம். இனி யவளாலும், மற்றும் யாராலும் எவ்வகையிலும் மாற்றமுடியாதென்றவாறு மாறிவிட்டவளென்றபடி. சென்று வழிதப்பிச்சென்று. தன் நிலை

யையும், தனக்கு ஸௌமங்கல்யத்தையும், ராஜ தர்மத்தையும், பூராவுலகையும் மதிக்காதபடி சென்றவள்; இரண்டு வரன்களைப் பெறும் வரையில் பிடிவாதத்தின் கடை சென்றவள்; இராமனிடமும், சொன்னதைச்செய்கிறேன் என்று ப்ரதிஜ்ஞை வாங்கும் வரை புத்தியைச் செலுத்தி யதைப் பெற்றவள். செல்லுதல்= கார்யஸித்தியாதல், அடைதல் என்றதுமாம். இனி, 'அயோத்தியை விட்டுச் சென்று வனமே போகு' எனவுமுரைக்கலாம். இதனால் சித்ரகூடம் வரை முதலிற் சென்றதும், பிறகு பரதன் ப்ரார்த்தனையையும் பாராதே நூற்றவள் சொற்கொண்டு தண்டகமே போனதும் சொல்லப்பட்டதாம். ஊரார் நிர்பந்தித்தாலும் ஒதுங்கி வனமே போவென்று அவள் சொன்னாள் போலும். 'வனம் சென்று அங்கே போகு' என்றவாறும் அன்வயம் கூறுகின்றனர். பின் தொடர்ந்து. எவ்வளவு தடுத்தும் பிடித்தது பிடியாயிருந்த இராமபிரானைப் பார்த்து, 'அப்பா! நானும் உன்னுடன் வந்து விடுகிறேன். இதுவரையில் நான் இங்கே பட்டது போதாதோ' என்றவாறெல்லாம் சொல்லி யழுதாள் அல்லளோ கௌஸல்யை. கூற்றுத்தாய்- கூறுவது பாகம். ஹவிஸ்ஸிலே பாகம் பெற்றாளென்பது மாத்திரமன்று. தசரதர் கைகேயியைப் போலே சிறந்து அபிமானிக்காமல் ஒருவிதமாய் நடந்துகொள்ளும் வகையிலே கௌஸல்யையோடு அவளுக்கடுத்த மஹிஷியான இவளுக்கு ஸமபாகம் உண்டு. ஆகவே கௌஸல்யைக்கும் இவளுக்கும் ராம லக்ஷ்மணர்களுக்குப் போலே சேர்க்கை யுண்டு. அதனாலே தங்களுடையவும் தங்கள் பிள்ளைகளுடையவும் ஸுகதுக்கங்களிலே இவ்விருவரும் ஸமபாகம் பெற்றவர். இப்படி கூற்றுத்தாயான ஸுமித்ரையானவள் இராமனைப் பார்த்து யாதொன்றும் மொழிந்தனளல்லளாகிலும், ஸீதாராமலக்ஷ்மணர்கள் மூவரும் சித்தஸங்நாஹமாகப் புறப்பட்டு தசரதரது மனைவிகள் எல்லோரிடமும் இராமன் விடைகொண்ட பிறகுக் கடைசியாகச் சக்ரவர்த்தியைத் தெண்டனிட்டு ப்ரதக்ஷிணமாய் கௌஸல்யையும் ஸேவித்துப் புறப்பட்டவுடனே, அருகிலிருந்த தன் தாயை இலக்குமணன் அடிபணிந்து விடைகொள்ள, அவளும் அழுதவண்ணமாய், எது ஹிதமோ அதிலே விருப்பம் கொண்டு, 'அப்பா! லக்ஷ்மணா! உனக்கும் இராமனிடமுள்ள அன்பை நோக்கும்போது உன்னை வநவாஸத்திற்காகப் பிறந்தவனல்லனென்னக் கூடுமோ? அன்பின் மிகுதியாலே எங்கும் இருக்கவேண்டும் ச்ரத்தையில் குறைபாடிராதபடி நடந்துகொள். போர் புரியும்படி வந்தாலும் பின் வாங்காதே. இராமனுள்ளவிடம் அயோத்தி. அவன் பிதா. சீதை தாய் என்றவாறு சொல்லி, அவச்யம் போ, என்று ஆதரம் தோற்றச் சொன்னாள். இதனால், 'இராமன் நின்றால், நில், போனால், போ' எனாநடுநிலையிற் சொன்னது தேறும். ஆக ஒரு தாய் போ, என்ன, பெற்ற தாய் வேண்டாமென்ன, அவளைப் போலே ஸுகதுக்கத்தில் பாகமுள்ள வொரு தாய், 'போனால், தம்பியோடு போ' என்ன வனம் சென்றான் என்றபடி. இங்கே ஸுமித்ரை இராமனைப் பார்த்துச் சொல்லாமலிருக்க அவள் சொன்னதாக வருளினது இதிஹாஸாந்தர புராணாந்தர கல்பாந்தரங்களிலிருப்பதைக் கொண்டென்று மயர்வற மதிநலமருளப்பெற்ற வாழ்வார் பெருமையைக் கண்டு கொள்ள வேண்டுமென்பர் ஜீயர். இங்ஙனமாவது கொள்க; இலக்குமணனோடு சொன்னதைக் கொண்டே பாசுரமமையு மென்றாவது கொள்க.

இங்கே, 'ஸுமித்ரா மஹாமஹோ சிவ நஃ' என்று லக்ஷ்மணனை ஸுமித்ரை போ போ என்று சொன்னவகையாலே, 'ஒருக்கால் இராமன் தன் இராஜ்யத்தைத் தானே ஆண்டிருக்க நசையுள்ளவனாயிருந்தால்கூட ஹிதைஷியான நீ, 'தமப்பனார் வரதானத்திற்குப் பயப்பட்டு யாசித்தபிறகு விட்டுவிடுவதே நலம்' அது தானே வரும்போது வரட்டும்' என்று விண்ணப்பிக்க வேண்டியிருக்க நிஷ்கல்மஷமாய் நசை யெள்ளளவுமிராத இராமனை நிறுத்த முயற்சி செய்வது ந்யாயமா? போவதே குணம். மேலும் ராமனிடத்திற் பரிவுள்ள நீ இங்கே நின்றால் பரதராஜ்யத்திற்கு ஏதேனும் கேடு வருமென நினைத்தேதேனும் த்ரோஹம் செய்யவும் கூடும். எதற்கும் போவதே நன்றென' விளக்குவதால் இராமனுக்கு அனுமதி செய்ததும் மீதாம். ஆக மூன்று திவ்ய மஹிஷிகளான தாய்மாரிலே ஒருத்தி நியமிக்க, ஒருத்தி நிஷேதிக்க, ஒருத்தி அனுமதிக்க அக் காட்டிற்கு க்லேசலேசமுமின்றி புறப்பட்டானென்றதாம்.

இங்கே மாற்றுத் தாயென்று ஸுமித்ரையையும், கூற்றுத்தாயென்று கைகேயியையும் சொல்லிற்றென நாலூர்பிள்ளையின் யோஜனையாம். அப்போது மாற்றுத்தாயென்றவிடத்தில் மாறு=ஒப்பு. தாய்க்குப் போலியான தாய் என ஸுமித்ரையையும், கூற்று என்று யமனைச் சொல்வதால் யமன்போன்ற தாயென கைகேயியையும் குறிக்குமென்பர்.

முந்துறமுன்னம் கைகேயியே வனம் போ வென்று நியமித்தவளாயிருக்க, அம் முறைமையிலே பாசுரத்திற்கும் பொருள் விளங்க, அதனை விட்டு நாலூர்பிள்ளை சொன்னதைக் கொள்வதில் நோக்கில்லாமையாலே ஜீயர், 'நாலூர்பிள்ளை வியாக்யாந ப்ரக்ரியை,' 'பிள்ளையிட்டருளின வ்யாக்யான ப்ரக்ரியை எனத் திருவாய்மொழிப்பிள்ளையின் உரை சரியான தென்பதை யுணர்த்தி, ஆயினும் நாலூர்பிள்ளை யென்றவர் (ஸுமநःகோலேசர்) நம்பிள்ளை ஸ்ரீபாதத்திலே கேட்ட சிறியாழ்வானப்பிள்ளை குமாரர் பக்கலிலே கேட்டவரானதாலும், ஆச்சான்பிள்ளையின் தமப்பனாராகையாலே பிள்ளைக்குப் பரமாசார்யனானபடியாலும் அவர் வ்யாக்யானத்தை முன்னே எழுதினதாகவும் கூறியுள்ளார்.

வனம் போகச் சொன்னது கைகேயியா, தசரதரா வென்னில், இருவரும் என்க. முதலில் நேர்படச் சொன்னது கைகேயியே. ஆனால் அவள் வரனைப் பெறும் வரை முயற்சிசெய்து பெற்றே சொன்னாள். அது சென்று என்னும் பதத்தின் கருத்திலுள்ளது. அந்த ஸந்தர்ப்பத்தில் பார்த்தவர்கட்கு (இராமனுள்பட), இவளே இங்ஙனம் சொல்லுகிறாளா, தசரதரும் இசைந்தாரா வென ஐயம் பிறக்கும்படிமட்டு மிருந்தது, ஆகவே, 'யத் ராஜாநம் அவோசஸ் த்வம் மமேச்வரதரா ஸதீ'='அவருக்கு மேற்பட ஆஜ்ஞாபிக்கும் அதிகாரம் உனக்கு என் விஷயத்திலே யிருப்பதாலே அவர் சொன்னாரென்னாமே நீயே உத்தரவிடலாம். செய்வது திண்ணம்' என்றார் கைகேயியைப் பார்த்து இராமன். உண்மையில் தசரதரும் இராமனிடம் அளித்த ராஜ்யத்தைத் திரும்ப யாசித்தார். இதனைச் சீதை ஸுந்தர காண்டத்திலே, 'ததஸ் து ஸ்தவிரோ ராஜா ஸத்யே தர்மே வ்யவஸ்தித:[1] ஜ்யேஷ்டம் யசஸ்விநம் புத்ரம் ருதந் ராஜ்ய மயாசத'

என விளக்கினள். ஸங்க்ஷேபராமாயணத்திலும், 'விவாஸயாமாஸ' 'பிதுர் வசந நிர்தேசாத்' என்னப்பட்டது. ஒன்று மாத்திரம் தசரதர் வேண்டினர். 'ஸுத்ருஷ்டி டாநீம்ராஜநீம்புத்ர மா ஶ்ரு ஸர்வதா-மாதரம் மாஞ் ச ஸம்பச்யந் வஸேமாமத்ய சர்வரீம். தர்ப்பித: ஸர்வகாமைஸ் த்வம் ச்வ: கால்யே ஸாதயிஷ்யஸி'. ஓர் இரவு அங்கே நின்று மறு நாள் போகலா மென்றதது. ஓரிரவில் அபிஷேக ஸங்கல்ப்பம் அழிந்தாற்போலே வரபூரண ஸங்கல்ப்பம் அழிந்தால் என் செய்வது என்று நினைத்துக் கைகேயி அறைநுடி கூட தாமதிக்கப் பொறுதிருந்ததைக் கண்டு உடனே விடை பெற்றுப் புறப்பட்டதாலே அந்த மனோரதமும் தசரதருக்கு நிறைவேறவில்லை. இன்றைத்தினம் புறப்படுவதால் பெறப்படும் சிறப்பு நாளைத் தினமாகில் கிடைக்கா தென்றார் இராமபிரான்.

கொடிய வனம். துஷ்ட மிருகங்களாலும் இராக்ஷஸர்களாலும் சூழப் பெற்றும் கல்லும் முள்ளுமாயும் உண்ணவு முறங்கவும் கூடாதபடியுமிருப்பதாலே மிகக் கொடியது. சீற்றமிலாதான். முறைப்படித் தனக்கானதுமாத்திர மன்றியே, முதனுள் தன்னைப் பெருந்திரளிலே யழைத்துத் தனக்கு அளிக்கப்பட்டதுமான இராஜ்யத்தை இத்தருணத்திலே இவர் நமக்கில்லை யென்கிறதா வென்றோ, தகப்பனார் சோகித்து விழுந்திருப்பதாலே அவர் அங்ஙனம் நினைக்கவில்லை. இவளே நம்மை விரட்டுகிறுளென்று அவள்மீதோ, கொஞ்சமும் கோபம் கொள்ளாமலிருந்த சிறப்பைச் சொன்னதாம். 'மநஸா பூர்வமாஸாத்ய வாசா ப்ரதிக்ருஹ்ய தவாந்' என்றபடி மனம் ஒத்து வாக்கினலும், 'செய்கிறே' னென்றார் அல்லது, மனத்தில் மட்டும் சினமும் வருத்தமும் கொண்டு, பேச்சிலே மட்டும் நயமாகச் சொன்ன ரென்பதில்லை யென்றபடி. வைராக்யமென்ற குணத்தோடு, அதற்கு அழிவு தேடும் லக்ஷ்மணர் முதலானோர் வார்த்தையில் கோபமும் கொள்ளாமலிருந்தது பெருஞ்சிறப் பெனவும் கருத்தாம். சீதைமணாளன். வனத்திற்குச் சீதையும் கூடப் புறப்பட்டு வந்ததும், மணந்ததுகூட வனம் புகுந்து பேருதவி செய்வதற்கென்பது மிங்கே கருதப்பெற்றனவாம். (௪)

தான் பல படியிலும் கஷ்டங்களைப் பெற்று தன்னைச் சார்ந்தவரின் மனோரதபூர்த்திக்கே பாடுபடுவ தென்ற குணத்தை இராமனிடம் சிலர் பாடினதைக் கேட்டவர் கண்ணனிடம் அதை ஒன்றுக்கிரண்டான உதாரணங்களைக் கொண்டு மூதலிப்பிக்கின்றனர்,—

5. பஞ்சவர்தூதனாய்ப் பாரதம் கைசெய்து
நஞ்சுமிழ்நாகங்கிடந்த நற்பொய்கைபுக்கு
அஞ்சப்பணத்தின்மேற் பாய்ந்திட்டருள்செய்த
அஞ்சனவண்ணனைப்பாடிப்பற அசோதைதன் சிங்கத்தைப்பாடிப்பற.(**311**)

இப் பாசுரமானது ஏறக்குறைய (1—9—3) 99-வது பாசுரமாகவே யமைந்திருப்பதாலே இதற்குப் பதவுரையை (134-ம் பக்கம்) அங்கேயே பார்த்துக் கொள்க. அஞ்ச என்பதற்கு, ஆயர் அஞ்சும்படி, அல்லது காளியன் அஞ்சும்படி, அல்லது ஆயர்கள் அஞ்சினபோது எனப் பொருளாம். அடியார்களிடமுள்ள

அபிமானத்தாலே தூது செல்வது போன்ற நீசத் தொழிலையும் செய்ய முன் வருவதும், அம் முகத்தாலும் ஸர்வருக்கும் அனுகூலமே செய்யக்கூடாதபோது பிறரை யழித்தாவது அடியார்க்கு அருள் செய்வதும், எவ்வளவு விரோதியானாலும் கடைசியாகப் பணிந்தால் முன் செய்தவைகளை யெல்லாம் மறந்து அவனுக்கும் அருள்புரிவது மாகிற குணங்கள் இங்கே குறிக்கப்பெற்றன. தூது செய்தது ஸர்வருக்கும் இங்கே க்ஷேமத்திற்காக. பாரதம் கைசெய்தது துர்யோதனாதிகளைக் கொன்றே யருள்செய்ய வேண்டியிருந்ததால். கோபர்களைப் போலே காளியனுக்கு மருள்செய்தான், அவன் அஞ்சி அடைக்கலமானபடியால். இங்கே அருள் செய்த என்றதற்குக் கோபர்களுக்கருள் செய்தது மாத்திரத்தில் நோக்கெனக் கொண்டு மேற்பாசுரத்திலே காளியனை யருளினதை யருளிச்செய்வதாகச் சொல்வது யுக்தமாகும். (ரு)

அயோத்தியா காண்டத்தில் பூர்வபாகத்தின் பொருள் கீழே சுருக்கப் பெற்றது. இனி மேற்பாகத்தின் பொருளைச் சுருக்கியுணர்த்து இராமனைப் பாடிப் பறப்பது பணிக்கப்படுகிறது—

6. முடியொன்றிமூவுலகங்களுமாண்டு, உன்
அடியேற்கருளென்றவன் பின்றொடர்ந்த
படியில்குணத்துப் பரதநம்பிக்கன்று
அடிநிலையீந்தானைப்பாடிப்பற வயோத்தியர் கோமானைப்பாடிப்பற. (312)

DEC 1954 MADRAS

| | |
|---|---|
| அன்று | = அப்போது,—(அண்ணா! நீ) |
| முடி ஒன்றி | திருவபிஷேகத்தை சிரஸ்ஸிலே பொருத்தப் பெற்று |
| மூ உலகங்கள் உம் | மூன்று லோகங்களையும் |
| ஆண்டு | பரிபாலனம் செய்துகொண்டு |
| உன் அடியேற்கு | உனது தாஸனான எனக்கு |
| அருள் | அனுக்ரஹம் செய்க |
| என்று | என ப்ரார்த்தித்துக்கொண்டு |
| அவன் பின் தொடர்ந்த | சித்ரகூடம் சேர்ந்திருந்த இராமனைப் பின்னே வந்து பணிந்த |
| படி இல் | ஒப்பற்ற |
| குணத்து | கல்யாண குணமுடைய |
| பரதன் நம்பிக்கு | பரதனாகிய பக்தனுக்கு |
| அடி நிலை | ஸ்ரீ பாதுகைகளை |
| ஈந்தானை | ராஜ்யமாள வருளின ஸ்ரீராமனை பாடி பற; |
| அயோத்தியர் கோமானை | - அயோத்யா வாஸிகளுக்கு நாதனை பாடி பற. |

தந்தை யிறந்ததாலே அராஜகமாய்ப் போன அயோத்திக்கு எழுந்தருள வேணும். அன்னை செய்த தவறை மன்னிக்க வேண்டும். ஒரு க்ஷணமும் அரசு புரிவதை யான் அங்கீகரியேன். யான் உன் அடியேனா யிருக்க, நீர் ஸ்வாமியாய் அரசனாக வேண்டியிருக்க, என்னை யான் அரசனாகவும் உம்மை என் ப்ரஜையாகவும் பாவிப்பதென்றால் இதற்கு மேற்பட விருக்கும் குற்றமெது? ஸ்வதந்த்ராத்மப்ரமமே பொல்லாதது. அத்தோடு பெருமானை ப்ருத்யனாக்கித் தன்னை ஸ்வதந்த்ரனாக வைத்துக்கொண்டால் இதற்கு மேல் என்ன அதர்மம் இருக்கிறது? 'தேவகார்யார்த்தமாகக் காட்டிலே சில காலம் இருக்க வேண்டி யிருப்பதால் அந்தக் காலத்திற்கு நீ அரசனாயிரு' என்பதும் தகாது. நீர்

கொண்டே மூவலகங்களுமாள எங்கே வேண்டுமானாலும் எழுந்தருளலாமே அடியேன் அப்போது பார்த்துக்கொள்ள வியலும் என்றவாறு நிர்பந்தித்தது முன்னடிகளின் பொருள். படியில் குணத்து. இராமபிரான் இராஜ்யத்தை யிசைந்து, தாயும் தந்தையும் கேட்டதின் மேல் த்யாகம் செய்து விட்டார். பரதாழ்வானோ பலாத்காரமாகத் தாய்மார், ஆசார்யன் முதலாக அனைவரும் வேண்டியும் வேண்டாமென்றே உதறினார். இவர் குணத்திற்கு ஈடுண்டோ? பரதநம்பிக்கு. தந்தையின் வாக்கை ஸத்யமாக்க வேண்டுவது கடமையானபடியாலே பதினான்கு வருஷகாலம் பட்டாபிஷேகம் செய்துகொள்ள முடியா தென்ற உறுதியை அறிந்தும், தனக்குப் பேர் கெடாதபடி தன் பக்திக்குச் சிறப்பையே யளிக்கும் வகையிலே பாதுகையை எழுந்தருளப்பண்ணி அதற்கு அபிஷேகம் செய்து வைக்க முயன்ற பரதனுக்கு மேற்படவும் பக்தனுண்டோ.? பாதுகாப்ரபாவம் பரதாழ்வான் மூலமன்றோ புவனங்களிற் பரவிற்று. பரதனைச் சிங்காதனத்திலே வீற்றிருக்க வேண்டினர் அயோத்தியர். பரதனோ தனக்குத் தேவதையான பாதுகையைச் சிங்காதனமேற்றிவைத்தான். ஆகப் பாதுகை அயோத்தியர் கோவாயிற்று. கோ ஒன்றால் அரசனென்றபடி. அந்த அயோத்தியர் கோவிற்கும் மான்=மஹானாயிருப்பவன் இராமன். ஆக அவன் அயோத்தியர் கோமான். இப்படி அரசனுக்கு மேற்பட்டானை அரசனெனத் தட்டில்லையாகையாலே மேற் பாசுரத்திலே அயோத்திக்கரசனை யென ராமனைப் பணித்தருளினார். இங்ஙனம் கோவின் மான் கோமான் என்ற பொருளை, 'அம்பரமூடறுத்தோங்கி யுலகளந்த உம்பர் கோமானே' என்றவிடத்திலே உரையாளர் கூறுதொழிந்தாலும் கொள்வது தகும். இல்லையேல் அது பலதேவனுக்கு விளிச்சொல்லாகாமே பல தடுமாற்ற முண்டாம். அவ் வகை யிங்கும் பொருந்துவதாலே கோவிற்கு மானெனப் பிரித்தும் பொருள் கொள்க. (௬)

அயோத்தியாகாண்டத்தின் உத்தர பாகத்தை யெடுத்துப் பெருமை கூறினபோது காளியமர்த்தன மென்ற முன் சொன்ன விஷயத்திலே உத்தர பாகத்தை யெடுத்துப் பெருமை பாடிப் பறப்பது பணிக்கப்படுகிறது—

7. காளியன்பொய்கை கலங்கப்பாய்ந்திட்டு, அவன்
நீள்முடியைந்திலும் நின்றுநடஞ்செய்து
மீளவவனுக்கருள் செய்தவித்தகன்
தோள்வலிவீரமேபாடிப்பற தூமணிவண்ணனைப் பாடிப்பற. **(313)**

| | |
|---|---|
| காளியன் பொய்கை | காளியன் ஸகுடும்பமாய் நித்யவாஸம் செய்து வரும்படி ஆழமான மடுவே |
| கலங்க | கலங்கிவிடும்படி |
| பாய்ந்திட்டு | அதில் குதித்து |
| அவன் | அக்காளியனுடைய |
| நீள் | படம் விரித்து நீண்ட |
| முடி ஐந்திலும் | ஐந்து தலைகளிலும் |
| நின்று | மாறிமாறி அடி வைத்து |
| நடம் செய்து | ஒப்பற்ற நாட்யத்தைச் செய்து |
| மீள | பிறகு (அல்லது) அவன் மீள்வதற்காக |
| அவனுக்கு | அக் காளியனுக்கு |
| அருள் செய்த | க்ருபை பண்ணின |
| வித்தகன் | ஆச்சர்ய சேஷ்டிதனுடைய |
| தோள் வலி | தோளின் வன்மையையும் |
| வீரமே | மற்ற வீர்யத்தையுமே |
| | பாடி பற; |

| | | | |
|---|---|---|---|
| தூ | நிர்மலமான | வண்ணனை | நிறமுடையானை |
| மணி | இந்திர நீலக்கல்லின் | | பாடி பற. |

காளியன் கழுத்தும் தலையும் நெரிந்து குருதியைக் கக்கி அவஸ்தைப் படுகிறான். கண்ணனோ குதுகலித்து யாரும் கண்டறியாத சிறந்த நாட்யத்தை அத் தலைகளின் மேலே நின்றாடி தானொரு பெரும் நடனவித்தகனென்பதை வெளியாக்குகின்றான். அங்ஙனம் அவனை விரைவிலழிக்காமே அவஸ்தைப் படுத்தினது அவன் தெளிந்து சரணம் புகுவதற்கு உறுப்பாயிற்று. அதற்குப் பிறகு அருள் புரிந்தான். இப்படிக் கடைசியில் கூடாரையும் கூடும்படி செய்யும் தோள்வலிவீர மல்லவோ தொண்டர்கள் கொண்டாடும்படி யாம். பொய்கை பாய்ந்து அதில் வெகுகாலம் நீத்தல் செய்து, தன்னை முற்றிலும் சுற்றி யழுத்தின காளியனின் உடலை உதறித் தள்ளி அதன் மேற் பாய்ந்ததிலிருந்து அவன் தோள்வலியின் பெருமை விளங்கும். அதன் பிறகு தலைகளில் நடன வீரனாகி அருள் செய்து எங்குமவன் உயிரோடு வாழும்படி செய்ததில் பலவகை வீரத்தன்மை விளங்கும். (எ)

8. தார்க்கிளந்தம்பிக்கரசீந்து தண்டகம்
நூற்றவள்சொற்கொண்டு போகி நுடங்கிடை
சூர்பணகாவைச் செவியோடு மூக்கவள்
ஆர்க்கவரிந்தானைப்பாடிப்பற அயோதிக்கரசனைப்பாடிப்பற. (314)

| | | | |
|---|---|---|---|
| நூற்றவள் | நிலையாகப்பேசினவளுடைய | நுடங்கு இடை | துவளும் மத்தியத்தை யுடையளான |
| சொல் | இரு வரங்களாகிற சொல்லை | சூர்ப்பண காவை | சூர்ப்பணகையென்னும் ராக்ஷஸியின் |
| கொண்டு | அங்கீகரித்து | செவியொடு மூக்கு | காதையும் மூக்கையும், |
| தார்க்கு | ராஜசின்னமான மாலைக்குத் தகுதியான | அவள் ஆர்க்க | அவள் கதறும்படி |
| இள | இளம்பர்வத்தையுடைய | அரிந்தானை | (கத்தியால்) அறுத்தவனை பாடி பற; |
| தம்பிக்கு | தம்பியான பரதனுக்கு | | அயோத்திக்கு அரசனை பாடி பற. |
| அரசு ஈந்து | இராஜ்யமளித்து | | |
| தண்டகம் | தண்டகாரண்யத்திற்கு | | |
| போகி | போயிருந்து (அங்கே) | | |

தார்க்கு இத்யாதி; முடிசூடி மாலை யணிவதில் மட்டும் இளமையே யன்றி இராஜ்ய பரிபாலநஸாமர்த்தியத்திலே குறை யில்லை யென விளக்கத் தார்க்கிள வென்றதாம். அவசியமானால் அரசுபுரிவதிருக்கட்டும்; தார் நான் அணியேனென வவன் முடிவாம். அரசீந்து. பாதுகாராஜ்யமாகில் பரதராஜ்யமாகாமையாலே ஒரு வரன் அளிக்கப்படாதொழியாதோ வென்று ஆக்ஷேபம் பிறவாமைக்கு இங்ஙனம் அருளிச்செய்தார். பாதுகாராஜ்யமாயினும் பரதனே ராஜ்யசாஸனம் செய்துவருவதாலே அதிகாரதோரணிக்குக் குறையில்லை யென்றபடி.

நூற்றவள். ஏதோ சொன்னுளெனவாகாதபடி எழுதப்பட்ட க்ரந்தங்கள்போலே எப்போதைக்கும் நிலைத்து வெட்டொன்று துண்டிரண்டாய் திட

மாயிருந்தது அவள் பேச்சு. எவ்வளவோ ஆக்ஷேபம் செய்தும் அதையே யவள் ஸித்தாந்த மாக்கினுளாகையாலே நூற்றவளென்றது. நூல்=சாஸ்த்ரம்; க்ரந் தம். அன்றி, நூற்றவள்=நோம்பு நூற்றாற்போலே வரம் கோலினவள். நுடங்கு கிடை. சூர்ப்பணகையாவாள் முறம்போலகன்ற நகங்களுள்ளவள். அவள், 'வ்ருத்தமத்ய்யா மஹோதரீ' யென்றபடி யிருப்பவள். ஆகிலும் இராமன் வசப் படவேண்டு மென்றழகிய ரூபம் அப்போது கொண்டதாலே இங்ஙனமானுள். கீழே 2-7-5 லே இதன் விரிவு காண்க. 'ராக்ஷஸீ காமரூபிணீ' யெனவே ஸங்க்ஷேப ராமாயணமும்.

சூர்ப்பணகாவை. சூர்ப்பணகையை எனவேண்டும். வடமொழி விக ரிக்காமற் கிடக்கிறது. இதனுல் சூர் என்பது கொடுமையாய், பணம் என்பது ஐச்வர்யமாய், இத்தகையவை வளரும் கா=ஓர் உத்யானம் இவள் என்பது தோற்றவைத்தப்படிபோலும். இயற்கையாலும் ராவணுதிகளாலும் இவை இவ ளுக்கு அதிகமாயின். 'சூர்பணக்கா' என்னுமே சூர்ப்பணகா என்றது பெயர் தெரிய வாம். ஐயென்பது உருபுமயக்கம். ஆறும் வேற்றுமையின் பொருள் கொள்க.

அரிந்தானை. அறுத்தவன் இலக்குமணனுகிலும் இராமன் நியமிக்க அவன் செய்ததாலே இராமனே அரிந்ததாம். ஆர்க்க. அரிந்தபோதுமாத்திர மன்றி உடனே கரதூஷணுதிகளிடமும், கடைசியாக இராவணனிடமும் சென்று அவள் கதறும்படி யென்றதாம். கைகேயி, சூர்ப்பணகை இவ்விரு வரும் விரோதம் செய்தவர்களானுலும் ஒருத்தியை கௌரவிக்கவேண்டியிருந் தது; ஒருத்தியை மூக்கறுக்கவேண்டியிருந்தது. இதனுல் அர்த்தகாமங்களிலே நோக்கிராமை நன்கு விளங்கும். அயோத்திக்கரசனை. 'ந ஹ்ய ஹ்யோவ ந ஹ்யோவா ஸுவம் ராஜா ஜெந்ஸ' என முனிக்கணங்கள் மொழிந்தமையைக் கருதின படி. (அ)

9. மாயச்சகடமுதைத்து மருதிறுத்து
ஆயர்களோடு போ யாநிரைகாத்து, அணி
வேயின்குழலூதி வித்தகனுய்நின்ற
ஆயர்களேற்றினைப்பாடிப்பற ஆநிரைமேய்த்தானைப்பாடிப்பற. **(315)**

| | |
|---|---|
| மாயம் | அசுராவேசமுற்ற |
| சகடம் | வண்டியை |
| உதைத்து | மாயும்படி உதைத்து |
| மருது | மாயமருதமரங்களை |
| இறுத்து | முறித்து |
| ஆயர்களோடு | இடைப்பிள்ளைகளோடு |
| போய் | வனம் சென்று |
| ஆநிரை | பசுக்களின் கூட்டங்களை |
| காத்து | பலபடி ரக்ஷித்து |
| அணி | அழகிய |
| வேயின் குழல் | மூங்கிலினுலான ஊதுகுழலை |
| ஊதி | கீதங்கொண்டு வாசித்து |
| வித்தகனுய் | ஆச்சர்ய ரூபனுய் |
| நின்ற | நின்றருளின |
| ஆயர்கள் ஏற்றினை | கோபராஜனை |
| | பாடி பற; |
| | ஆநிரை மேய்த்தானை பாடி பற. |

மாயம் என்றது மருது என்றதோடும் சேரும். மாய என வினையெச்ச முமாம். மாயும்படி=அழியும்படி யென்க. இங்கே அடைவே படுத்திருந்த போதும், தவழ்ந்தபோதும், நடந்தபோதும், நின்றபோதும் செய்த செயல்கள்

சொல்லப் பெற்றன. ஊதிவித்தகனாய்நின்ற. வித்தகனாய் நின்றாதின என்றபடி. அன்றி, இவ்வளவு லீலைகளைச்செய்து எல்லோரையும் அனுக்ரஹித்ததற்கு மேலாக, 'வித்தகன் வேங்கடவாணன்' (1-5-3) என்றபடி திருவேங்கடத்திலே வித்தகனாய் ப்ரபத்தி பண்ணச்செய்துகொண்டு நின்றருளும் கண்ணனையென்னலுமாம். (கூ)

இனி யுத்தகாண்ட வ்ருத்தாந்தத்தை யருளிச்செய்கிறார். ஆரண்யகாண்டத்திற்குமேலுள்ள கிஷ்கிந்தாகாண்ட ஸுந்தரகாண்டங்களின் அர்த்தத்தை யருளிச்செய்யாவிட்டாலும் ஸேதுபந்த லங்காப்ரவேச ராவணஸம்ஹாரங்களை யருளினதாலே அவற்றிற்குக் காரணமான அதுவும் அருளினதாகக்கொள்க. முன்னமும், 'மின்னிடைச்சீதைபொருட்டா' (2-6-8) இத்யாதிகளிலே அது குறிக்கப்பட்டுள்ளது. அன்றி ஸீதையை யபஹரிக்க முயன்ற சூர்ப்பணகையின் பங்கத்தின்மேலே கரதூஷணாதிவதம்போலே ராவணாதிவதமும் தண்டகத்திலேயே நடவாமே காரார்கடலை யடைத்திட்டிலங்கை புக்கு நடத்தப்படவேண்டியதாயிற்றே யென ஸீதையின் பிரிவாற்றாமையைக் கருத்தில் கொண்டு வருந்தி அவ் வருத்தம் தோற்ற சூர்ப்பணகாபங்கத்திற்கு மேலே ராவணவதத்தையே யருளிச்செய்கிறாரெனலாம்.

**10.** காரார்கடலை யடைத்திட்டிலங்கைபுக்கு
ஓராதான் பொன்முடி யொன்பதோடொன்றையும்
நேரா வவன் றம்பிக்கே நீளரசீந்த
ஆராவமுதனைப்பாடிப்பற அயோத்தியர் வேந்தனைப்பாடிப்பற. **(316)**

| | |
|---|---|
| கார் ஆர் | கருமை பொருந்திய |
| கடலை | ஸமுத்திரத்தை |
| அடைத் திட்டு | மலைகளாலடைத்து வைத்து (ஸேதுபந்தம் செய்து) |
| இலங்கை | லங்காநகர ப்ராந்தத்திலே |
| புக்கு | புகுந்து |
| ஓராதான் | எதிரியின் திறலை விசாரியாத ராவணனுடைய |
| பொன் | அழகிய |
| முடி ஒன்பதோடு | ஒன்பது தலைகளோடு |
| ஒன்றை உம் | பத்தாவது தலையையும் |
| நேரா | எதிர்த்து; அறுத்து |
| அவன் தம்பிக்கே | அந்த ராவணன் தம்பியான விபீஷணனுக்கே |
| நீள் | நீண்டகால மிருக்கும் படியான |
| அரசு | இராஜ்யத்தை |
| ஈந்த | அளித்தருளின |
| ஆரா அமுதனை | திருப்தி பிறவாமே அனுபவிக்கப்படுமவனை |
| | பாடி பற; |
| அயோத்தியர் | அயோத்யா வாஸிகளுக்கு |
| வேந்தனை | அரசனை |
| | பாடி பற. |

காராரென்றது மிகவுமாழமான தெனக் குறிக்கவாம். இலங்கைபுக்கு. பதினான்கு வருஷகாலம் க்ராம நகரங்களிற் புகாமேயிருப்பவராகையாலே, 'இலங்கையின் அருகே வந்து சேர்ந்தார்' என்றே கருத்தாம். கூடவந்த வானரஸைன்யம் லங்கையிற் புகுந்ததே இவர் புகுந்ததென்னலுமாம். இங்ஙனமருளினது இராவணன் உண்மையில் அஞ்சியே ஒளித்திருந்தானெனத் தெளிவிக்க. ஓராதான். தனக்குமேற்பட்ட வலிவுற்ற வாலி பரசுராமாதிகளை வென்று, துர்கமான தன்

னிடமும் புகுந்து, போரிலே தன்னைத் தனியாக்கி, தன் மூலபலத்தையெல்லாம் நொடியிலே பொடியாக்கித் தனிவீரனும், கடலையும் வீபீஷணனையும் காத்தாற் போலே அடைக்கலம் புகுந்தால் அஞ்சலென்கிறவனுமானவனுடைய சக்தி கருணைகளை விசாரியாது பிடித்ததே பிடியாயிருப்பவன். பத்தையுமென்றுமே ஒன்பதோடொன்றையுமென்றது ஸீதாபஹார காலத்திலே ஸன்யாஸியாய் ஒரு தலையுடன் முதலில் தோன்றினவனுடைய அத்தலையையும் மறைத்துவைத்த மற்றைத் தலைகளையு மென்பதற்காக. அன்றி, ஒன்றுவது நின்றால் ஒருக்கால் வணங்குவனோ என்று பலகால் ஒவ்வொன்றாக அறுத்துப் பார்த்து அதிற் பயனில்லையென்று தெளிந்த பிறகு ப்ரம்மாஸ்திரத்தாலே ஒரு தலை விழும்போதே கூட ஒன்பதும் விழும்படி செய்தானென்றதுமாம். நேரா. செய்யாவாய்யாட்டின்படி வந்த வினையெச்சம். அறுத்து எனப்பொருளென்பர். அவன்தம்பிக்கே. ராவணனால் திக்கரிக்கப்பட்டவனுக்கே ராஜ்ய மளித்தான். தம்பி யென்பது தகாமைக்குக் காரணமாகாமே யிருந்த தென்னனுமாம். தம்பியாயிருந்தபோதிலும் கொடுத்தார் என்றபடி. ராக்ஷஸகுலத்தை ராக்ஷஸ னுண்டால்தான் குலதர்மம் கெடாதிருக்குமென்று தாமும் பெருமே, தம் தம்பிக்கு மளிக்காமே, மஹாராஜனையும் விட்டு அவன் தம்பிக்கே யளித்தார் என்னவுமாம். நீளரசு. இத்தகைய தர்மாத்மா ராக்ஷஸகுலத்திலே கிடைப்பதரிதாகையாலே தம் திருநாம முள்ளளவு நீடூழிகாலம் இராஜ்யமாளும்படி தீர்க்காயுஸ்ஸுடன் நியமித்தருளினாரென்றவாறு. ஆராவமுதனை. ராவணவதம் செய்தவாறே திரண்டுவந்த தேவதைகளுக்கும், மஹர்ஷிகளுக்கும், பிராட்டிக்கும் பரமபோக்யனாயிருந்ததும், விபீஷணாதிகளும் ஸுக்ரீவாதிகளும் விட்டிருக்கமாட்டாமே திருவயோத்திவரையில் தொடர்ந்தே வந்ததும், ஸாக்ஷாந்நாராயணனிவனென்று பகிரங்கமாய் ப்ரம்மாதிகள் பணித்ததாலே அமுதக்கடலிலே பள்ளிகொண்ட வாராவமுத மிதென எல்லோரும் அனுபவித்ததும் கூறினபடி. அன்றி ஆராத வருளமுதம் பெற்றவன், பரத்வாஜாதித்யவமுது பெற்றவன், பரதாதிகளுக்கு போக்யனானவனென்றதுமாம். அயோத்தியர்வேந்தனை யென்று ஸ்ரீ பட்டாபிஷேகத்தை யருளினபடி. (கo)

இங்ஙனம் கண்ணனையும் ராமனையும் கலந்தனுபவித்ததற்குப் பலச்ருதியான நிகமனப்பாசுரம்—

**11.** நந்தன்மதலையைக் காகுத்தனைநவின்று
உந்திபறந்த வொளியிழையார்கள் சொல்
செந்தமிழ்த் தென்புதுவை விட்டுசித்தன்சொல்
ஐந்தினோடைந்தும் வல்லார்க்கல்லலில்லையே. **(317)**

| | | | |
|---|---|---|---|
| நந்தன் மதலையை | (சிலர்) நந்த குமாரனையும் | ஒளி இழை யார்கள் | ப்ரகாசமான ஆபரணங்களை அணிந்த மங்கைகளுடைய |
| காகுத்தனை | (சிலர்) ககுத்த வம்சத்தி லவதரித்தவனையும் | சொல் | சொல்லின் பொருளை யுரைக்கும் |
| நவின்று | நன்கு பயின்று | தென் புதுவை | தெற்கிலுள்ள ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த |
| உந்தி பறந்த | உந்தி யென்ற விளையாட்டிலே குதிக்கும் | | |

| | | | |
|---|---|---|---|
| விட்டு சித்தன் | ஸ்ரீ விஷ்ணுசித்தனுடைய (பெரியாழ்வாருடைய) | ஐந்தினோடு ஐந்தும் | ஈரைந்து பாசுரங் களையும் |
| செம் தமிழ் | சுத்தமான தமிழ்ப் பாஷையில் அமைந்த | வல்லார்க்கு | கற்றவர்களுக்கு |
| சொல் | சொற்களான | அல்லல் ஏ இல்லை | துன்பம் கொஞ்சமு மில்லை, |

தேன். வடதேசத்தில் இரு திறத்தார் சேர்ந்து உந்தி பறந்ததைத் தென்தேசத்தில் ஆழ்வார் தமிழிலருளிச்செய்தாரென்றபடி. தென்-அழகு மாம். இங்ஙனம் கண்ணனனுபவத்திலேயே இழிந்த ஆழ்வாருக்கு ஸ்ரீராம னுடைய கல்யாணகுணாநுபவமும் ப்ராப்தமாயிற்று. இனி அதிலே ஈடுபட்டினிய ராவர். (கக)

ப்ரபந்த ரக்ஷையில் என்னாதன் தேவிக்கு உரை முற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

---

ஸ்ரீ:

ஆழ்வாரெம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

## பெரியாழ்வார் திருமொழி 3—10.

# நெறிந்த கருங்குழல்

கீழ் கிஷ்கிந்தாகாண்ட ஸுந்தரகாண்டங்களின் அர்த்தத்தை யருளிச் செய்யாததாலே அதையும் சுருக்கிச் சேர்த்தனுபவிக்கக் கோலி, 'இராம கதை பூராவும் அனுபவிப்பது யாருக்கும் ஸாத்யமாகாது. 'சதகோடி ப்ரவிஸ்தரம்' என்றபடி ப்ரம்மதேவன் அருளிச்செய்ததிற் கூட எல்லாம் விடாதபடி சொல்லி யிருக்கமுடியுமெனத் தீர்மானிக்கலாகாதபோது ஸ்ரீ வால்மீகி ராமாயணத்தில் விடப்பட்டவை பல விருக்குமென்பதில் ஐயமேது?' எனத்தோற்றும்படி மயர்வற மதிநல மருளப்பெற்ற தம்மனுபவத்திலுள்ளதையும் சேர்த்தருளி ஹநுமார் ஸீதாபிராட்டிக்கு அசோகவனத்திலடையாளம் சொன்ன வகையிலே சில வர்த்தங்களை யருளிச்செய்தினியராகிறார்.

இங்ஙனம் இராமாயணகதை பூராவும் அடையாள மாகக் கூடுமோ? மோதிரமருளினது முக்கியமான அடையாளம். அப்போது ஏதேனும் சொல் லியனுப்பியிருந்தால் அதுவு மடையாளம் என்னலாம். காகாஸுரவிருத்தாந்தம் அடையாளமாகக் குறையில்லை. ஆகிலும் பிராட்டி பெருமாளுக்குக் கூறி யனுப்பிய அடையாளம் அது என ஸ்ரீமத்ராமாயணத்திலே ஸ்பஷ்டமாய்த் திகழ, பெருமாள் பிராட்டிக்குக்கூறிய வடையாளமாக ஆழ்வார் அருளிச்செய்தது உப ஜீவ்யமான உபப்ரும்ஹணத்திற்கு முரண்பட்டதாகுமென்னில்—கேண்மின்.

இங்கு அடையாளமாவது, இவன் இராமதூதன், இராமனால் தகுந்தவனென்று தெளிந்தனுப்பப்பட்டவன் என்று சீதை தேறுவதற்காம் சின்னம். இராமனுடைய சரித்ரத்தைச் சுருக்கும் வ்யாஜத்திலே அவனுடைய கல்யாணகுணங்களிலே ஈடுபட்டால் இவன் மிக்க பற்றுதலுள்ள பாங்கான தூதனென்று இவள் தெளியலாகும். ஆகவே அசோகமரத்தின்மேல் உட்கார்ந்திருந்த ஹனுமான் தசரதவம்சத்தின் பெருமையைத் தொடங்கிச் சரித்ரத்தை முதன் முதல் மதுரமாகச் செவிபடச்செய்தார். அப்போது இவர் கூறின ஒவ்வோர் அம்சமும் இராமதூதரிவர் என்பதை விளக்கியது. ஆகவே இங்கு ஆழ்வாரும் அந்தந்த பூர்வவிருத்தாந்தத்தை அடையாளமாகச் சொன்னது பொருந்தும். இராமனும் தம் மோதிரத்தைக் கொடுத்ததுமாத்திரமின்றி ஸீதையிடம் சொல்லச் சிலவற்றை ஒருவாறு சொல்லியுமிருக்கக்கூடும். 'இக்ஷ்வாகூணாம் வரிஷ்டஸ்ய ராமஸ்ய விதிதாத்மந:' சுபானி தர்மயுக்தானி வசநானி ஸமர்ப்பயந்' (சு.-30-42) என்கிற ச்லோகத்திலே இராமன் சில வசனங்கள் சொல்லியனுப்பினதாகவும் வால்மீகி பகவான் அருளினார். இவற்றில் அடையாளங்களும் சேரும். காகாஸுரவ்ருத்தாந்தம் ஸீதை சொன்னதாக இராமாயணத்திலிருக்க இராமன் சொன்னதாக ஆழ்வார் அருளிச்செய்தது எங்ஙனமென்றதொன்றுமட்டும் நிற்கிறது. அதிலும் வெகு ஸூக்ஷ்மமாய் ஆராயவேண்டுவதுண்டு.

எங்ஙனமெனில், செவியுற்றுச் செவ்வனே கேண்மின். பிராட்டி ஹனுமாரிடம் அந்த விருத்தாந்தத்தைச் சொல்லும்போது நேரில் இராமனோடு சொல்லுகிற வண்ணம் தொடங்கி அவ்வண்ணமே முடிக்கிறவள் நடுவில் சிறிது தூரம் ஹநுமாரை விளித்து இராமனைப் பரோக்ஷமாக்கிச் சொல்வதாக இராமாயணத்திலே ச்லோகங்கள் அமைந்துள்ளன. அதாவது—'தவாங்கெ ஸமுபாவிசம்' என்று தொடங்கி 'லக்ஷிதாऽஹம் த்வயா நாத வாயஸேந ப்ரகோபிதா' என்றவரையுளதும், கடைசியில், 'மத்க்ருதே காகமாத்ரே து ப்ரஹ்மாஸ்த்ரம் ஸமுதீரிதம்' கஸ்மாத் யோ மாம் ஹரேத் த்வத்த: க்ஷமஸே தம் மஹீபதே' என்றதும் இராமனையே விளித்துச் சொன்னவை. நடுவில், 'பரிச்ரமாத் ப்ரஸுப்தா ச ராகவாங்கே ऽப்யஹம் சிரம்' என்று தொடங்கி ப்ரம்மாஸ்த்ரப்ரயோகம், காகசிக்ஷணம், ரக்ஷணமெல்லாம் இராமனுக்குச் சொல்லாமல் ஹனுமாருக்குச் சொன்னதாக விருப்பது கண்கூடு. இதெங்ஙனம் கூடுவதென்பதை யாராய்ந்தால் நடுவில் உள்ள அம்சம் இராமனே ஹநுமாரிடம் சொல்லியனுப்பிய பாகமென்றும், அதை இராமனுக்குச் சொல்லியனுப்பாதது தோற்ற அதனைப் பரோக்ஷமாகவே முழுவிருத்தாந்தம் கூறும்போது நடுவிலே ஸீதை சொன்னாளென்றும், காகாஸுரன் ஹிம்ஸித்ததற்கு முன்னுள்ள ஸந்தர்ப்பத்தை மட்டும் முன்னம் அடையாளமாக இவள் கூறி, கொஞ்சம் ஹிம்ஸித்த காகத்திற்கே ப்ரம்மாஸ்த்ர ப்ரயோகம் செய்த நீர், என்னை யடியோடு அபஹரித்து நிற்கும் ராவணனை யுபேக்ஷிக்கலாமோ என்று அவரைத் தீவ்ரமாகப் போர் செய்யத் தூண்டுவதற்காக மேலே மொழிந்தனள் என்றும் கொள்ளவேண்டும். இந்த ஸூக்ஷ்மத்தைக் கருதியே ஆழ்வார் இராமன்சொன்ன அடையாளத்திலே காகத்திற்கு ப்ரம்மாஸ்திரப்ரயோகத்தையும் சேர்த்தருளினாரென்க.

மல்லிகை மாமாலை கொண்டார்த்த விஷயத்தைப் பற்றி அதற்குண்டான இடத்திலே (2-வது பாசுரத்திலே) கூறுவோமாக—

1. நெறிந்தகருங்குழன்மடவாய் நின்னடியேன் விண்ணப்பம்
செறிந்தமணிமுடிச்சனகன்சிலையிறுத்து நினைக்கொணர்ந்தது
அறிந்தரசுகளைகட்ட வருந்தவத்தோனிடை விலங்க
செறிந்தசிலைகோடு தவத்தைச்சிதைத்ததுமோ ரடையாளம். (318.)

| | |
|---|---|
| நெறிந்த | சிலிர்த்த |
| கரு | கருமையான |
| குழல் | கூந்தலை யுடையளாய் |
| மடவாய் | மடப்பமுமுள்ள பிராட்டியே! |
| நின் | உனது |
| அடியேன் | தாஸனான என்னுடைய |
| விண்ணப்பம் | விஜ்ஞாபனமாவது— |
| செறிந்த | நெருங்கின |
| மணி | ரத்னங்களையுடைய |
| முடி | கிரீடம் தரித்த |
| சனகன் | ஜனக மஹாராஜன் (சுல்கமாய் வைத்திருந்த) |
| சிலை | ருத்ர தநுஸ்ஸை |
| இறுத்து | முறித்து |
| நினை | உன்னை |

| | |
|---|---|
| கொணர்ந்தது | பாணிக்ரஹணம் செய்து கொண்டதை |
| அறிந்து | கேள்வி யுற்று |
| அரசு களை கட்ட | ராஜகுலமாகிற களையைப் பறித்த |
| அரு தவத்தோன் | அருமையான தவம் செய்த பரசுராமன் |
| இடை | நடுவிலே |
| விலங்க | விலக்க (மறிக்க) |
| செறிந்த | மிகுந்ததான |
| சிலை | (அவன் கையில் இருந்த) வில்லை |
| கொடு | கொண்டு (அதனால்) |
| தவத்தை | அவனுடைய தபஸ்ஸை |
| சிதைத்ததும் | -அழித்ததும் |
| ஓர் அடையாளம் | என்னை ராமதூதனெனத் தெளிவிப்ப தொன்றாகு மென்றது. |

சுருண்டும் கருத்து முள்ள கூந்தலையுடைய பிராட்டியாரே! வ்யாமோஹங்கொண்ட ராவணனே வாநரமாய் வந்தொழிந்தானென்று நீர் உமது மடப்பத்திற்கிணங்க நினைக்கவேண்டா. இதுகாறும் இராமதூதனாயிருந்து இப்போது உம்மைக் கண்டவளவிலே உமது கற்பிலும் மற்ற மேன்மையிலு மீடுபட்டு உமக்கும் அடியேனாய் நின்ற வெனது விண்ணப்பத்தைக் கேட்டருளவேணும். நான் மரத்தில் இருந்தவண்ணமே பூர்வசரித்ரத்தை வர்ணித்தேனே. அதில், உம்மை மணம்புரிவதற்குச் சிவன்சிலைவளைப்பதைச் சுல்கமாகச் செய்திருந்ததாலே கோபித்துக் குவிந்து வந்த வரசர்கள் எல்லோரையும் வென்று செறிந்த மணிமுடியனாய் விளங்கின உமது பிதாவான ஜநகமஹாராஜனிட மனோரதம் பூர்த்தியாம்படி அச்சிலையை அவலீலையாயிறுத்து உம்மை இராமபிரான் மணம்புரிந்தழைத்துவரும்போது, பரசுராமனென்னும் பெருந்தவத்தோன், 'இதென்ன? இருபத்தொருகால் இங்குள்ள க்ஷத்ரியக்களைகளைப் பரமசாதுக்களான பயிர்களைக் காப்பதற்காகப் பறித்தெறிந்தபிறகும் இப்புவியில் இங்ஙனம் ப்ரபாவமுள்ள க்ஷத்ரியச்சிறுக்கனுண்டோ' வென்று வியந்து வழிமறித்துத் தன்கையில் கொணர்ந்த விஷ்ணுதனுஸ்ஸை நாணேற்ற முடியுமாவென்று வினவ, அக் கணமே உமது கொழுநனும் அதைக் கையிற்கொண்டு சரம் தொடுத்து, 'இதற்கெது குறி? சொல்லு'மென, அவன் தனது தவத்தையெல்லாம் அதற்கு இரையாக்கித் தன்னை விடுவித்துக்கொண்டிவரைப் புகழ்ந்து

ப்ரதக்ஷிணம் செய்து போனுனென யான் விஜ்ஞாபித்த வகையை யாராய்ந்து இதனையு மோர் அடையாளமாகக் கொள்வீராக வென்றபடி.

நெறிந்த. சுருண்டவென்றதாம். அன்றி, இராமனை விட்டுப் பிரிந்து ஸ்னுனமும் ஸம்ஸ்காரமு மின்றி யிருப்பதாலே நெறிப்புக்கொண்டவென்றது மாம். இப்போதும் கருமை குறையாமலிருப்பதைக்கொண்டு கருங்குழல் என்றது. செறிந்த-மிகுந்த; முன் இறுத்த சிவதனுஸ்ஸுக்கும் மேற்பட்டதான வென்றபடி. அதனுலே யன்றோ இதனைக் கொண்டு பரசுராமன் பரீக்ஷிக்க வந்து இதனைப் புகழ்ந்து பேசியது. 'செறிந்த=கிட்டின, தன்னுடையதாகையாலே தனக்குத் தகுந்த' வெனவு முரைப்பர். (க)

அடுத்தபடியாக அயோத்தியிலே பிராட்டியோடு பெருமாள் பன்னிரண்டு வருஷகாலம், பட்டாபிஷேகவார்த்தைக்கு முன்னே, பேராநந்தத்திலே யிருந்த படிகளிலொன்றை யடையாளமாகக் கூறும் பாசுரம்—

**2.** அல்லியம்பூமலர் கோதாயடிபணிந்தேன் விண்ணப்பம்
சொல்லுகேன் கேட்டருளாய் துணைமலர்க்கண்மடமானே!
எல்லியம்போதினிதிருத்தலிருந்ததோரிடவகையில்
மல்லிகைமாமாலைகொண்டங்கார்த்துமோ ரடையாளம். **(319.)**

| | |
|---|---|
| அல்லி | உள் இதழ்களாலே |
| அம் | அழகு பொருந்திய |
| பூ | பூக்களாலான |
| மலர் | மலர்ந்த |
| கோதாய் | மாலை போன்றவளே! |
| அடி பணிந்தேன் | திருவடிகளிலே தெண்டனிட்டுள்ள எனது |
| விண்ணப்பம் | விஜ்ஞாபனத்தை |
| கேட்டருளாய் | செவிசாய்த்துணர்ந்தருள வேணும்; |
| சொல்லுகேன் | சொல்லப்போகிறேன். |
| துணை | ஒன்றுக்கொன்று துணையான |
| மலர் | மலர் போன்ற |
| கண் | திருக்கண்களையுடைய |

| | |
|---|---|
| மடம் | மடப்பமுள்ள |
| மானே | மான் போன்றவளே! |
| அங்கு | அந்த அயோத்தியிலே |
| இனிது | போக்யமான |
| இருத்தல் | இருப்பிலே |
| இருந்தது | போகஸ்தானமாயிருந்ததான |
| ஓர் இட வகையில் | ஒப்பற்ற கிருஹத்திலே |
| எல்லி | இரவில் |
| அம் போது | அழகிய வேளையிலே |
| மல்லிகை மாமாலை கொண்டு | மல்லிகைகளாலான பெரிய மாலையினுலே |
| ஆர்த்ததும் | கட்டிவைத்ததும் ஓர் அடையாளம். |

விண்ணப்பம் என்றதற்குமேல், 'சொல்லுகேன் கேட்டருளாய்' என மிகவாகவருளினது, யாரும் கூறாததும் வேறுவகையிலறிய வியலாததுமாய் அபூர்வமானதோர் அந்தரங்கவடையாள மிது வென்ற கருத்தினுலாம். மல்லிகைமாலை கொண்டு பிராட்டி பெருமாளைக் கட்டினது இராமாயணத்திற் காணுத பொருள். இது மயர்வற மதிநலம்பெற்ற ஆழ்வார் தாமறிந்ததொன்றென்பர். இந்த உண்மையிலே திருப்தி பிறவாமை யென்பது ஆழ்வார்களின் மேன்மையையும் எம்பெருமான் மஹர்ஷிகளிடத்திற்காட்டில் அவர்களிடம் வைத்திருந்த ப்ரேமாதிசயத்தையும் நன்குணர்ந்தவர்களிடம் இருக்கமுடியாது. இதை விட்டு ஸாமான்யமான முறையிற் பார்த்தாலுமிது இராமாயணத்திலில்லையென்று உபேக்ஷிக்கக்கூடியதாகாது.

ஏனெனில், ஸீதையை மணந்து அயோத்திக்குச் சென்றபிறகு அங்கே, 'ராமஸ்து ஸீதயா ஸார்த்தம் விஜஹார பஹூந் ருதூந்' என்றபடி வெகு காலம் போகத்திலிருந்தது பாலகாண்டத்திலே பணிக்கப்பெற்றது. இது பன்னிரண்டு வருஷகாலமென்பது ஸுந்தரகாண்டத்திலும் ஸீதை சொல்வதிலிருந்து விளங்கும். அப்போது அனுபவித்த பலவித போகங்களுக்குக் குறிகோளாக இஃதொன்றை யருளிச்செய்தார். பல போகங்களையு மனுபவித்தது மோரடையாளமென்றே யருளினதாகுக. அன்றி, இங்கே 'ருதூந்' என்ற பதத்தினாலே வஸந்தம் முதலிய ருதுக்களுக்குத் தகுந்தபடி விஹாரங்கள் நடந்தது குறித்ததாம். எப்போதும் புஷ்பத்திலே பெரும் விருப்பம் கொண்டவள் ஸீதை. ஆகவே புஷ்பங்களைப் பறித்து அவளுக்கு வேண்டுவன அளித்து உவப்பித்துவந்ததும் அதனால் தோற்றும். 'குணைத் ரூபகுணைச்சாபி ப்ரீதிர் பூயோப்ய வர்த்தத' என்று இராமன் அவளுடைய ஸ்வரூபரூபகுணங்களாற் கட்டப்பட்டிருந்ததைச் சொல்லும்போது மால்யகுணத்தாலே கட்டப்பட்டதும் ஸமுச்சயிக்கப்படும். அந்தரங்க விஹாரத்திலே ஏதேனும் ப்ரணயகலஹம் பிறக்க அரசனை அவன்மனைவி மாலையால் கட்டுவதென்பது கவிகள்தாமும் வர்ணிக்கக் கூடியதொன்றாகும். இராமன் ப்ரணய கலஹத்திலே குதூஹலமுள்ளவரென்பது காகாசுரனுக்கு அவர் அதிக மிடம் கொடுத்தவகையிலும் காணலாம். 'புஞ்ஜாநா மாநுஷாந் போகாந் ஸர்வகாமஸம்ருத்திநீ,' என்றபடி எல்லா வனுபவங்களையும் குறையற நடத்தும் பிராட்டியும் ப்ரணய கோபத்தினாலேதேனும் செய்யுமியல்பினள்.

ஆழ்வாரின் திருமகளான கோதைப் பிராட்டி பெருமானை மாலையால் கட்டித் தன் வசமாக்கி யநுபவித்தது, 'ஸ்ரஜி நிகளிதம் யா பலாத்க்ருத்ய புங்க்தே' இத்யாதிகளிலே தெளிந்ததே. அதுவுமிங்கே, கோதாயென்றே ஸீதையை விளித்து, 'மாலைகொண்டங்கார்த்தது' என்றதால் குறித்தபடியாம். ஆத்மகுணத்தினாலும் ரூபகுணத்தினாலும் இராமன் கட்டப்பட்டிருந்தது எப்போதும்; மாலாகுணத்தாற் கட்டுப்பட்டது, எல்லியம்போதினிதிருத்தலிருந்ததோரிடவகையில். மாலையால் கட்டினபோதும் அவளுடைய குணமே கட்டுக்குக் காரணமாயிற்று. எங்ஙனமெனில்—ஸீதையின் அந்தப்புரத்திலே எல்லியம்போதினிதிருந்த இராமன், தம் மனோரதப்படி விரைவிலே ஸீதை விஹாரத்திற்கு வசப்படாமலிருக்கவே, ஆகில் நான் என் இடம் போய்ப் பள்ளிகொள்கிறேனென்று புறப்பட, பகலெல்லாம் பெரியோர்களின் பரிசர்யையி லீடுபட்டுத் தன்னைப் பிரிந்திருப்பது போதாதோ, இப்போதும் போவதோ வென்று பிரிவாற்றாமையாலே அவனை அவள் அங்கே கட்டிற்காலிலே ஒரு பெரிய மாலையெடுத்துக் கட்டிவைக்க இராமனும் அவளுடைய ப்ரேமபாசபந்தத்திற்குப் பரவசப்பட்டு, வெளியேபோவதும் அங்கே தாம் வேண்டின விஹாரத்தைப் பெறுவதுமின்றியே அந்த மாலாபந்த மஹாஸுகத்திலேயே மூழ்கிக் கிடந்தாரென்றவாறு ஏதேனுமொருபடி கருத்துரைத்தால் அவ்விருவருக்குமுள்ள அநுராகத்திற்களவில்லை யென்று விளக்கினதாம். (இப்படி மாலையால் கட்டுண்டதை யருளினது அந்தப் பன்னிரண்டு வருஷகாலம் அனுபவித்த போகங்களை யெல்லாம் அடையாளமாகக் குறிக்கும் நோக்கத்தினாலென்க.)

அல்லியம்பூமலர்கோதாயென்றதால் ஜனகமஹாராஜன் ஸீதையை அங்கங்கள் புஷ்டமாய் அழகுபடும்படி வளர்த்து சாஸ்திர மிசைந்த உசிதகாலத்திலே கொடுக்க, அதன்பிறகு அவள் இராமபோகாநுகுணமாய் வளர்ந்து விளங்கினது குறிக்கப்பட்டதாம். மலர் என்றதற்கு ‘விகஸிதமான’ என்று ஜீயர் உரைசெய்ததால் இது வினைத்தொகையென விளங்கும். ‘மலர்க்கோதா’ யெனவுமோதுவர். மடமானே என்று அவனை விட்டுப் பிரிய பயந்திருந்ததைக் குறித்தபடி. இனிதிருத்தல் என்பது பன்னிரண்டு வருஷகாலம் போகஸாம்ராஜ்யத்திலே பட்டாபிஷேகம் செய்யப்பட்டிருந்ததைக் கருதி யாம். இடவகையென்று வீட்டிற்குப் பெயர். இதனாலும் இது அயோத்தியிலெனத் தெளியலாகும். மா மாலை யென்று மாலைக்குப் பெருமையை யருளினது மாலையினுள்ளிருக்கும் கயிறு அவனது மெதுவான மேனியிலே படாதபடி கட்டினதைக் குறிக்கவென்க. (உ)

3. கலக்கியமாமனத்தனளாய்க்கைகேசிவரம்வேண்ட
மலக்கியமாமனத்தனனாய் மன்னவனும் மறாதொழியக்
குலக்குமராகாடுறையப் போவென்று விடைகொடுப்ப
இலக்குமணன்றன்னோடுமங்கேகிய தோரடையாளம். (320)

| | | | |
|---|---|---|---|
| கைகேசி | கைகேயியானவள் | மறுது ஒழிய | மறுக்கமாட்டாமே இடக்க, |
| கலக்கிய | மந்தரையால் கலக்கப்பெற்ற | குலம் குமரா | ‘உத்தம குலத்திற்குற்ற குமாரனே! |
| மா மனத் தனளாய் | மாற்ற வொண்ணாதபடி பெரிதான மனமுடையவளாயிருந்து | காடு உறைய போ | காட்டிலே வஸிக்கப் போவாயாக’ |
| வரம் | முன் அளித்திருந்த வரங்களை | என்று விடை கொடுப்ப | என உத்தரவிட |
| வேண்ட | தற்காலத்திற்குத் தக்கபடியாக்கி அபேக்ஷிக்க | இலக்கு மணன் தன்னோடு | லக்ஷ்மணனோடு |
| மன்னவனும் | -சக்ரவர்த்தியும் | அங்கு | காட்டிற்கு |
| மலக்கிய | சாஸ்த்ரவச்யதையாலே கலக்கப்பெற்ற | ஏகியது | சென்றது ஓர் அடையாளம். |
| மா மனத் தனனாய் | உதாரமான மனமுள்ளவனாயிருந்து | | |

குலக்குமரா வித்யாதி கைகேசி சொன்னதாகில், ‘உத்தமகுலத்திற் பிறந்த குமாரனுக்குத் தன் பிதாவுக்குப் பாபம் புகாதபடி பார்த்துக் கொள்வது கடமை. ஆக அவனை ஸத்யவாக்யனாக்கவேண்டு’மென்றதாம். கடைசியாகத் தசரதரும், ‘குலத்தில் சக்ரவர்த்தியாக விருக்கும்படி பிறந்தும் என்னால் காட்டிற் குச் செல்லும்படியாய் விட்டதே’ யென்று கதறியழுதவண்ணமே அனுமதி செய்தாராகையாலே அதனையும், ஸௌமித்ரை லக்ஷ்மணனுக்குச் சொன்னதையும் கூடக் குறித்ததாம். (ங)

4. வாரணிந்தமுலைமடவாய் வைதேவீ விண்ணப்பம்
தேரணிந்தவயோத்தியர்கோன் பெருந்தேவீகேட்டருளாய்
கூரணிந்தவேல்வலவன் குகனோடுங்கங்கைதன்னில்
சீரணிந்த தோழமை கொண்டதுமோ ரடையாளம். (321)

வார் அணிந்த — கச்சு தரித்துள்ள
முலை — ஸ்தனங்களையுடையவளாய்
மடவாய் — மடப்பமுமுடையவளே!
வைதேவீ — விதேஹராஜ் செல்வியே!
தேர் — தேர்களை
அணிந்த — அலங்காரமாகப் பெற்ற
அயோத்தியர் — அயோத்தியில் இருப்பார்க்கு
கோன் — நாதனை இராமபிரானுடைய
பெருதேவீ — பெருமை பொருந்திய தேவியே!
விண்ணப்பம் -(எனது) விஜ்ஞாபனத்தை
கேட்டருளாய்-செவியுற்றருள வேணும்—
கூர் அணிந்த -கூர்மை பொருந்திய
வேல் — ஆயுதங்களிலே
வலவன் — வல்லவனை
குகனோடு உம் — குஹன் என்பவ னோடும் கூட
கங்கை தன்னில் — கங்கையின் கரையில்
சீர் அணிந்த -சிறப்பிற்கிடமான
தோழமை — தோழனுகைகையை
கொண்டதும்-(ஸ்ரீராமன்) பெற்றதும்
ஓர் அடையாளமாம்.

வாரணிந்த என்றது பிராட்டிக்கு மரவுரி வேண்டாமென்று மறுத்து விதம்விதமான ஆடைகளை அளித்தமையைக் குறிக்கும். தேரணிந்த. இது திருத்தேரில் ஏறி காட்டிற்கு எழுந்தருளினதைக் காட்டும். அயோத்தியர் என்றது அங்குள்ளார் எல்லோரும் கூடவே புறப்பட்டதை யறிவிக்கும். பெருந்தேவி. லக்ஷ்மணனது தேவியைப் போலே நின்றுவிடாதபடி பெருமாள் படும் கஷ்டத்திலே தானும் பங்கெடுத்துப் பின்தொடரப் பிடிவாதம் செய்யவியன்ற பதிவ்ரதாசிகாமணி யெனப் பெருமையை யறிவிக்கச் சொன்னதிதல்லது இராமனுக்குப் பல தேவிகளிருப்பதாகவும் அவரிலே இவள் பெரியாளென்பதற்காகவுமன்று. மேலே 4-1-6ல், 'பல்லாயிரம் பெருந்தேவிமாரொடு' எனக் கண்ணன் மனைவிகள் எல்லோரையும் பெருந்தேவிமாராக வருளிச்செய்வர். பெருந்தேவனுடைய பத்நிகள் பெருந்தேவிமார். கூரணிந்தவேல் என்பது குகனே வேடர்களுக்கெல்லாம் அரசன் என்றும், 'ஸோஹம் ப்ரியஸகம் ராமம் சயாநம் ஸஹ ஸீதயா' ரக்ஷிஷ்யாமி தநுஷ்பாணி: ஸர்வதோ ஜ்ஞாதிபி: ஸஹ' என்று தான் கையும் வில்லுமாக விழித்திருந்து இரவில் இராமனைக் காப்பதாக லக்ஷ்மணனிடம் சொன்னானென்றும் தெரிவிக்கவாம். சீரணிந்த தோழமை. ஏற்கனவே ஸகாவான குகனைக் கட்டியணைத்து, அவன் வேடன், தான் சக்ரவர்த்தித் திருமகன் என்று பிரித்துப் பார்க்காமே மிக்க நீர்மையுடன் நடந்துகொண்டானகையாலே இது இவனுக்குச் சிறப்பாயிருந்தது. குகனோடும் என்றவிடத்தில் உம்மையால் அவனுடைய தாழ்மை தோற்றும். (௪)

5. மானமருமென்னோக்கி வைதேவீவிண்ணப்பம்
கானமருங்கல்லதர் போய்க் காடுறைந்த காலத்துத்
தேனமரும்பொழிற் சாரற் சித்திரகூடத்திருப்பப்
பான்மொழியாய் பரதநம்பிபணிந்தது மோரடையாளம். **(322)**

மான் — மானுக்கு
அமரும் — அமர்ந்துள்ள
மெல் — மென்மை பொருந்திய
நோக்கி — கண்களையுடையவளே!
வைதேவீ — வைதேஹியே!
விண்ணப்பம் — (எனது) விஜ்ஞாபனமாவது—,
பால் மொழியாய் — பால்போல் இனிதான பேச்சுடையவளே!
(நீங்கள்)
கான் — காட்டிற்கு
அமரும் — ஏற்பட்டுள்ள
கல் அதர் — கற்கள் நிறைந்த வழியாலே

| | |
|---|---|
| போய் | சென்று |
| காடு | காட்டிலே |
| உறைந்த காலத்து | வசித்த காலத்திலே |
| தேன் அமரும் | பூத்தேன் நிறைந்த |
| பொழில் | சோலைகளையுடைய |
| சாரல் | பக்கங்களையுடையதான |
| சித்திரகூடத்து | சித்ரகூடபர்வதத்திலே |
| இருப்ப | நிலைத்திருந்தபோது |
| பரதன் நம்பி | மஹா பக்தனை பரதாழ்வான் |
| பணிந்ததும் | இராஜ்யத்தைப் பெற ப்ரார்த்திக்க வந்து வணங்கினதும் |

ஓர் அடையாளமென்றதாம்.

பான்மொழியாய். வமி வஷூதி வெஶைஷீ ஹ ாஶாஂஸு நமாணி அ' மதிஂஶரஷ்ா நதீநாஂஅ வாஶவாநு விவியா நவி' என்றபடி வருத்தமொன்று மிராமே உத்ஸாஹத்துடன் பேசிக்கொண்டே காட்டிற் பிராட்டி சென்றனள் என்பதையும், சித்ரகூடத்திலே இராமனுடன் ஸரஸ ஸல்லாபத்தையும் கருதின படி. பான்மொழியாய்ப் பரதநம்பி யெனப் பாடமுண்டாகில் பரதநம்பி பால் போலி னிய பேச்சை யுடையனுக்கொண்டு பணிந்தது சொன்னதாம். ஜஹாஶ வஶதாஂ வாஃ' என்றுரே. 'ஷியாஹிஹாஷீ ஶயாஃ', 'ஸஂஸாாஶ்ரீஸ்ரீ வாக்ஷாநி ஷியாணி ஶயாாணி அ' என (6) ஆரண்ய காண்டத்திலு மருளினர். (ரு)

6\. சித்திரகூடத்திருப்பச் சிறுகாக்கைமுலைதீண்ட
அத்திரமேகொண்டெறிய வனைத்துலகுந்திரிந்தோடி
வித்தகனேயிராமா ஓ நின்னபயமென்றழைப்ப
அத்திரமேயதன்கண்ணை யறுத்ததுமோரடையாளம். (323)

| | |
|---|---|
| சித்திர கூடத்து | சித்திரகூட மலையிலே |
| இருப்ப | இருந்தபோது |
| சிறு | நீசமான |
| காக்கை | காகாசுரன் |
| முலை | ஸ்தநத்தை |
| தீண்ட | தீண்டிக் கீண்டபோது (இராமனும்) |
| அத்திரம் ஏ | ப்ரம்மாஸ்த்ரத்தையே |
| கொண்டு | புல்லில் மந்த்ரித்து |
| எறிய | காகத்தின் மேல்விட (அக் காக்கையும் மீள்வதற்கு) |
| அனைத்து உலகு உம் | எல்லா லோகங்களிலும் |
| ஓடி திரிந்து | வேகமாய் அலைந்து, |
| வித்தகனே | ஆச்சர்ய பராக்ரம முள்ளவனே! |
| இராமா | ஆச்ரிதரஞ்ஜகனே! |
| ஓ | ஓ மஹானே ! |
| நின் | உனது |
| அபயம் | கிருபை |
| என்று அழைப்ப | எனக் கூவி விண்ணப்பிக்க |
| அ திரம் ஏ | அந்த ஸ்திரமான அத்திரமே |
| அதன் கண்ணை | காக்கையின் கண்ணொன்றை மட்டும் |
| அறுத்ததும் | பறித்ததும் |

ஓர் அடையாளம்.

சிறு காக்கை. மூன்று லோகங்களிலும் ஒருகாலுக்கு ஒன்பது காலாகத் திரிந்தோடிவரும் காக்கை முதலில் காணப்படும்போது ஏதோ ஒரு சாதாரண காக்கை போல் காணலாயிற்றென்றபடி. அல்லது பக்ஷிஜாதியிலும் பெருங் குணமுள்ளவை பல விருக்க இது தன் உருவத்திற்கேற்பத் தமோகுணம் மிகுந்து நீசத் தொழிலிலே நின்றதென்றதுமாம். ஆகச் சிறுமையாவது நீசத்தன்மை. இந்திரன்புத்திரனை ஜயந்தனே காமுகனுய்க் காக்கையாகி வந்தானென்பர் சிலர். ஸ்ரீமத் ராமாயணத்திலுள்ளபடி பார்த்தால் வாநரஜாதியில் வாலி போலே இந்திரனுக்கிதோர் பிள்ளை காக்கையாய்ப் பிறந்து மாம்ஸ முண்ண விரும்பின தென்பது பொருந்துமென ஸ்ரீ ஸ்தோத்ர பாஷ்யத்திலே (63) ஸ்ரீ தேசி

கன் அருளிச் செய்தபடி. அழைப்ப. வாயைத் திறந்து இவ்வளவு கூறு விட்டா லும் கூறுமாறு தோற்றினது கொண்டிங்ஙன மருளினதாம். கூறிற்றெனவே கொள்ளினும் குற்றமில்லை. அத்திரமே என்ற விரண்டாம் பதத்திற்கும் அஸ்த்ரமே யென்றே பொருள் கூறுவர். அதுவே யென்னுமே அத்திரமே யென்றதற் கேற்பவும், அது ஏதேனும் கொஞ்சம் பெறாது விடாதெனத் தெரிவிக்கவும் அ திரமே எனப் பிரித்துரைத்தனம். முதலில் ஏ காரம் வெறும் புல் எறிந்தாற் போதா தெனப் பெரிய அஸ்தரமே எறிந்தானென்கிறது. இரண்டாவது ஏகாரம் உயிரைப் பறிக்க வந்ததே அப்படி ஸ்திரமாயிருந்தும் அவனுடைய கிருபைக்குட் பட்டு கண்ணைமட்டுமே பறித்து விலகிற்றென்கிறது.

ஸ்ரீமத் ராமாயணத்திலே ஸீதையே இந்த விருத்தாந்தத்தை இராம னுக்கு அடையாளமாகக் கூறினதாக வருளிச்செய்திருக்க ஆழ்வார் மாற்றி யருளினது எங்ஙனமென்பதற்குக் கல்பாந்தர புராணாந்தரங்களைக் கொண்டு நிர்வாஹம் செய்வதுண்டு. ஸ்ரீமத் ராமாயணத்தைக் கொண்டு மொருவிதம் கீழ் அவதாரிகையிலே கூறி விளக்கி யுள்ளோம். அங்கே காண்க. இப் பாசுர மமைந்த வகையாலே, பரதாழ்வான் வந்து போன பிறகு இது சித்ரகூடத்தில் நடந்த தெனத் தெரியலாகும். (சு)

7. மின்னொத்தநுண்ணிடையாய் மெய்யடியேன் விண்ணப்பம்
பொன்னொத்தமானொன்று புகுந்தினிது விளையாட
நின்னன்பின் வழிநின்று சிலைபிடித்தெம்பிரானேகப்
பின்னே யங்கிலக்குமணன் பிரிந்ததுமோரடையாளம். (324)

மின் — மின்னலுக்கு
ஒத்த — சமானமாய்
நுண் — ஸூக்ஷ்மமான
இடையாய் — இடையையுடையவளே!
மெய் அடியேன் — உண்மையான தாஸனாகிய எனது
விண்ணப்பம் — விஜ்ஞாபனமாவது—
(பல ரத்னங்கள் இழைத்த)
பொன் ஒத்த — பொன் போன்ற உருவமுடைய
மான் ஒன்று — மாயாம்ருகமானது
புகுந்து — ஆச்ரமத்தின் அருகே ப்ரவேசித்து
இனிது விளையாட — மனத்தைக்கவரும்படி துள்ளித் திரிந்தபோது
எம் பிரான் — எமது உபகாரகனான ஸ்ரீராமன்
நின் — இதனைக் கொணர்ந்தாக வேண்டுமெனப் பேரவா கொண்ட உமது
அன்பின் வழி — ஆசை போம் வழியிலே
நின்று — தாமும் ஆசை வைத்து
சிலை பிடித்து — வில்லை எடுத்துக்கொண்டு
ஏக — அதன் வழியே போய்விட
பின்னே — நீர் லக்ஷ்மணனையு மனுப்பும்படி அந்த மாயா மிருகம் கூச்சலிட்ட பிறகு
அங்கு — அந்த விஜநஸ்தானத்திலே
இலக்கு மணன் — உமக்குப் பாது காவலனான லக்ஷ்மணன்
பிரிந்ததும் — பிரிந்து ஸ்ரீராமனிடம் சென்றதும்
ஓர் அடையாளமென்றதாம்.

8. மைத்தகுமா மலர்க்குழலாய் வைதேவீ விண்ணப்பம்
ஒத்தபுகழ் வானரக்கோ னுடனிருந்து நினைத் தேட
அத்தகுசீரயோத்தியர்கோனடையாள மிவைமொழிந்தான்
இத்தகையாலடையாளமீதவன்கைமோதிரமே. (325)

| | |
|---|---|
| மை தகு | மைக்குச் சமமாய் |
| மா மலர் | ச்லாக்யமான புஷ்பங்களுக்குரியதுமான |
| குழலாய் | கூந்தலை யுடையவளே! |
| வைதேவீ | வைதேஹியே! |
| விண்ணப்பம் | அடியேனுடைய விஜ்ஞாபனமாவது—. |
| ஒத்த | ஸ்ரீராமனுக்குத் தோழனாகைக்கொத்த |
| புகழ் | குணத்திலும் செயலிலும் ப்ரஸித்தியுடைய |
| வானரர் கோன் | வாநர மஹாராஜனான ஸுக்ரீவன் |
| உடன் இருந்து | ஸ்ரீராம லக்ஷ்மணர்களோடு கலந்திருந்து |
| நினை | உம்மை |
| தேட | (எங்கள் மூலமாகத்) தேடத் தொடங்கினபோது |
| அ | அப்படிப்பட்ட (யான் நேரில் கண்ட) |
| தகு | ப்ரீந்த உமக்கொத்ததான |
| சீர் | ப்ரிவாற்றாமையால் ஏற்பட்ட குணங்கள் நிறைந்த |
| அயோத்தியர் கோன் | அயோத்தியிலிருப்பார்க்கதிபதியான ஸ்ரீராமன் |
| இவை அடையாளம் | இந்த அடையாளங்களை |
| மொழிந்தான் | நேரிலென்னிடம் சொன்னார். |
| ஈது | இதுவானது |
| அவன் கை | அவன் திருக்கையில் தரித்திருந்த |
| மோதிரம் | மோதிரமாய் |
| இ தகையால் | கையால் கொடுத்த வகையாலான |

அடையாளம்–அடையாளமாமென்றதாம்.

மாமலர். அசோக வனத்திலே மலரணிந்திராவிடினும் மலர்க்குரியதென்றபடியாம். அன்றி, [illegible] என மொழிந்து அநஸூயை யளித்த அழியா மணமுள்ள திவ்ய புஷ்பங்களணிந்திருப்பதை யருளினதாம்.

அயோத்தியர் கோன். உன்னை விட்டு அயோத்திக்குச் சென்றால் அங்குள்ளாரிடம் என் சொல்லுவதென வஞ்சி, அங்கே காத்திருக்கும் பரதனோடு சேர்ந்து அரசனாகவேண்டும் நாளுக்குள் உன்னைப்பெற விரும்பியுள்ளவனென்றபடி. இத்தகையால் இத்யாதி. 'வாயினால் மொழிந்த வடையாளங்களை இதுவரையிற் சொன்னேன். யான் உம்மிட மளிப்பதுபோல் என் கையிலே கொடுத்தருளின வகையிலே வந்த வடையாள மிந்த மோதிர' மென்றதாம். இத்தகையாலடையாள மென்பதை மேலோடு சேர்க்காமல் தனிவாக்கியமாக்கி, கீழ்ச் சொன்ன வடையாளங்கள் இத்தகையால்=கீழ்ச் சொன்ன ப்ரகாரத்தாலே வந்தவை யெனவு முரைப்பர்.

9. திக்குநிறை புகழாளன் தீவேள்விச்சென்றநாள்
மிக்கபெருஞ்சவை(பை)நடுவே வில்லிறுத்தான்மோதிரங்கண்டு
ஒக்குமாலடையாள மனுமானென்றுச்சிமேல்
வைத்துக்கொண்டுகந்தனளால் மலர்க்குழலாள் சீதையுமே. (326)

| | |
|---|---|
| திக்கு | திக்குகளில் |
| நிறை | நிறைந்த |
| புகழ் ஆளன் | கீர்த்தியை யுடைய ஜனக ராஜனுடைய |
| தீ வேள்வி | வைதிகாக்நியில் செய்யும் யஜ்ஞத்திற்காக |
| சென்ற நாள் | (மிதிலைக்குப்) போன போது |
| மிக்க பெரு சவை | மிகப்பெரிதான ஸபையின் |
| நடு வே | நடுவிலே |
| வில் | சிவ தனுஸ்ஸை |
| இறுத்தான் | நாணேற்ற இழுக்கும் போது முறித்தவனான ஸ்ரீராமபிரானுடைய |
| மோதிரம் | மோதிரத்தை |
| கண்டு | அவன் திருநாமத்தோடிருக்கப்பார்த்து, |
| அனுமான் | ஹனுமானே! |
| ஒக்கும் | முன் இருந்தபடியும் நீ அறிவித்தபடியும் ஒன்றாகும். |

| | |
|---|---|
| ஆல் | ஆம். |
| அடையாளம்-எல்லாம் | அடையாளங்களே |
| என்று | என்றுகூறி |
| உச்சிமேல் | தனது சிரஸ்ஸின் மீது (அதை) வைத்துக்கொண்டு |
| மலர் | புஷ்பம் அணியும் |
| குழலாள் | கூந்தலையுடைய |
| சீதை உம் | சீதாபிராட்டியும் |
| உகந்தனள் | மிகவும் ப்ரீதியடைந்தனள் |
| ஆல் | ஆச்சர்யம், |

திக்குநிறை புகழாளன். ஐச்வர்யப் பெருமையோடு பரதத்துவஜ்ஞானத்தை விசதமாகப் பெற்றுப் பரமைகாந்தியாயு மிருப்பதாலே எல்லோரும் அவன்யஜ்ஞத்திற்குப் பேராவலுடன் போம்படி யிருந்ததை யறிவித்தபடி. வில்லிறுத்தான் மோதிரம் இத்யாதி. 'ஹ்ருஷ்டா ராமமிவ ஸம்ப்ராப்தா' என்றபடி, வில் வளைக்கும் வலிவுள்ளவன் யாரும் கிடைக்காததால் வருந்தியிருந்த வளவிலே இராமபிரான் மோதிரம் அணிந்த திருக்கையால் வில்லை வளைப்பதைக் கண்டு, நமக்கு இந்த சுல்க்கம் ஏற்பட்டதாலன்றோ இவ்வளவு சீரும் திறலும் அழகும் பொருந்திய பர்த்தாவைப் பெறலாயிற்றென முன் உகந்தவளான இவள் இப்போது அந்த மோதிரத்தை அத்திருநாமத்தோடு கண்டமாத்திரத்திலே, அவன் திருக்கையும் அவன் எடுத்து முறித்த வில்லும் அவன் முழுத்திருமேனியும் முதன்முதல் கண்ட வண்ணம் கண் முன்னே தோற்ற, மறுபடி அவனைப் பெற்றேனென மகிழ்ந்தனள் என்றபடி. ஆல். முதலிலுள்ள இச்சொல்லுக்கு ஆம் எனப்பொருள். அல்லது அசையாம். அன்றி, இரண்டாவது சொல்லைப் போலே ஆச்சர்யமே பொருளாம். ஸீதை யாச்சர்யப்பட்டதை முதலிலருளி, தாம் ஆச்சர்யப்படுவதைப் பிறகு அருளினாரென வறிக.

ஒக்குமாலடையாளம் என்றதற்கு 'நீ முன்பு சொன்ன வடையாளங்களும் திருவாழி மோதிரத்திலடையாளமு மொக்கும்' என ஜீயருரை. அனுமான். இதுவரையில் ஐயப்பட்டிருந்த வெனக்கு இப்போது நீ அனுமானே என வுறுதி யேற்பட்டதென்றபடி.

சீதையும். அனுகூலரும் ப்ரதிகூலராகவே தோற்றும்படி பயந்திரா நின்ற அவளே நன்கு தெளிந்தனளென்றால் அனுமானுடைய சொல்லழகும் செயலழகும் அளவிட முடியா வென்றபடி.

**10.** வாராரும் முலைமடவாள் வைதேவிதனைக்கண்டு
சீராருந்திறலனுமன் தெரிந்துரைத்த வடையாளம்
பாராரும் புகழ்ப்புதுவைப் பட்டர்பிரான் பாடல்வல்லார்
ஏராரும் வைகுந்தத்திமையவரோடிருப்பாரே. **(327)**

| | |
|---|---|
| வார் ஆரும் | கச்சு நிறையும்படியுள்ள |
| முலை | ஸ்தனங்களை யுடையளாய் |
| மடவாள் | மடப்பமுமுள்ளவளான |
| வைதேவிதனை | விதேஹராஜச்செல்வியை |
| கண்டு | நேராகப்பார்த்துத் தெளிந்து |
| சீர் | குணங்களும் |
| திறல் | சக்தியும் |
| ஆரும் | நிறைந்துள்ள |
| அனுமன் | ஹநுமான் |
| தெரிந்து | இராமனிடமிருந்து நன்கு தெரிந்துகொண்டு |
| உரைத்த | விண்ணப்பித்த |
| அடையாளம் | அடையாளங்களைப் பற்றின, |
| பார் | பூமியில் |
| ஆரும் | நிறைந்துள்ள |
| புகழ் | கீர்த்தியுடையவரும் |
| புதுவை | ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்தவருமான |

பட்டர்பிரான்—பட்டநாதருடைய
பாடல் } இத்திருமொழிப் பாசுரங்களை
வல்லார் கற்றவர்கள்
ஏர் அழகு (போக்யதை)
ஆரும் நிறைந்த
வைகுந்தத்து ஸ்ரீவைகுண்டத்திலிருக்கும்
இமையவரோடு } நித்யஸூரிகளோடு
இருப்பார் சேர்ந்திருப்பவராவர்

சீராருந்திறல். சீர்திறல் ஆரு மென்ற வந்வயமே ஜீயர் கொண்டது. பெருமாளை யநுபவிப்பதே பேருகக் கொண்டு அவனை யாச்ரயித்த பிறகும் பொன்மானாகிய பொருளிலே பேராசை கொண்டு பெருமாளை யிழந்து பத்துத் தலை ராவணனாகிய விந்திரியங்களாலிழுக்கப்பட்டுக் கடல்சூழ்ந்த காட்டிலே புகுந்து தான் செய்த தவறுதலுக்குத் தவித்திருக்கும் ஸீதையென்னும் தன்னையாச்ரயித்துள்ள சேதநனைத் தன்னைச் சேர்ந்த ஹநுமானாகிற வாசார்யனைக் கொண்டு தேறவைக்கப் பெருமாள் செய்த வகைகளான அடையாளங்களைக் கற்று இவ்வழியிலே தத்துவ ஹித புருஷார்த்த நிலைகளைத் தெளிவுபட விப்பாசுரங்களிலிருந்து ஆராயுமவர் நித்யஸூரிகளின் நிலை பெற்று வாழ்வர்கள். ஸ்ரீதேசிகன் ஸங்கல்பஸூர்யோதயத்திலே, ‘[illegible]’ வென்று தொடங்கி யருளிச்செய்தது போன்றவற்றை இங்கே அநுஸந்திப்பது தகும். (௰)

இவ்வாறு இம் மூன்றும் பத்தில் கண்ணன் தாய்ப்பாலுண்ணும் பர்வம் தாண்டினதைத் தொடங்கி, கன்றின் பின் போக்கினது, திரும்பி வரும் கோலம் கண்டு களித்தது, கன்னிமார் காமுற்றது, கோவர்த்தனக்குடை பிடித்தது, குழலோசைவலையிற் சிக்கவைத்தது, மாலுறுகினது, கண்ணன் கொண்டது என்ற வகைவகையான அநுபவங்களை அவன் விஷயத்திலே பெற்றுகந்து, பிறகு மற்ற மூர்த்திகளையு மநுபவிக்க வாசை வைத்து, க்ருஷ்ணராம கதைகளைக் கொண்டு உந்திபறத்தலை யுரைத்து, இங்ஙனம் எம்பெருமான் ஒரு படியும் விடானென்ற தேற்றச்சிக்கு ஸீதைக்கனுப்பிய வடையாளங்களை உதாரணமாக்கி இதைத் தலைக்கட்டி யருளினார். இனித் தம் நிலையிலே நின்று எம்பெருமானைக் கண்டு களிக்க வாசைப்பட்டுப் பல அர்ச்சைகளிலே ஈடுபட்ட ருளிச்செய்யப் போகிறார்.

ப்ரபந்தரக்ஷையில் நெறிந்த கருங்குழல் உரை முற்றிற்று.

பெரியாழ்வார் திருமொழி மூன்றும்பத்து முற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:
ஆழ்வார் எம்பெருமானுர் தேசிகன் திருவடிகளே சரணம்.

## பெரியாழ்வார் திருமொழி நான்காம் பத்து. 1,

# கதிராயிரமிரவி.

கண்ணனைக் குழந்தைப்பருவம் தொடங்கி யளவு கடந்தனுபவித் தினி யரான வாழ்வார் அவ் வுருவத்திலுள்ள போக்யதை யவ்வண்ணமிருக்கச் செய்தே அவனுடைய ராமாவதாரத்தையும் கலந்து அனுபவித்து, பிறகு ராமாயண விருத்தாந்தத்திலே—பிரிந்து வருந்துமவரைப் பெறப் பெருமாள் பரிந்தலைந்து பெருமுயற்சி செய்து அருளும் வகையாகிய—ஸாரமான பாகத்தை யனுஸந் தித்து, இப்படி யோரவதாரம் விட்டு மற்ருேரவதாரத்திலே புகுந்து ஒரு வ்ய வஸ்தை யின்றி யிருந்தால் எதிலே போக்யதை கண்டதாகுமென நினைப்பார்க்கு உண்மைநிலையை விளக்குமாறு மேல் திருமொழி யருளிச்செய்கிருர். இதிற் கருதியுள்ள திங்ஙனமாகும்.

உபாயமாகப் பக்தியோகத்தை யநுஷ்டிக்க விழிந்து ஏதேனு மொரு மூர்த்தியிலே ஆழ்ந்தவர்கள், 'ஸ்நேஹோ மே பரமோ ராஜந் த்வயி நித்யம் ப்ரதிஷ்டித:. பக்திச்ச நியதா வீர பாவோ நாந்யத்ர கச்சதி' என்கிறபடியே எப்போதும் ஒரே மூர்த்தியை நினைத்துக்கொண்டேடுபட்டு த்யானத்தில் அதை ப்ரத்யக்ஷமாகக் காண வாவல் கொண்டிருப்பர். ஆனது பற்றியே ராமபக் தாக்ரேஸரரான சிறியதிருவடிக்குக் கண்ணன் ராமனுக விருந்து ஸேவை யளிக்கவேண்டியிருந்ததாகப் புராண வரலாறு.

இப்படி யிவர்கள் த்யானத்திற்கு ஒன்றையே இலக்காகக் கொண்டிருந்தா லும், இவ்வித பக்தியோகத்தி லிழியாத ப்ரபந்நர்களும், பக்தியோகத்தின் நிஷ்பத்தி பெற்றவர்களும், எம்பெருமானையே நினைத்து தேவதாந்தரத்தை நினையாராகிலும், எம்பெருமானுடைய எல்லா ரூபங்களிலும் ஈடுபட்டு நிற்பர். உலகில் சேதநர்களுடைய ரூபங்களும் குணங்களும் செயல்களும் எல்லாம் ஒரு வருக்குப் போக்யமாகா. சில காலங்களிலே சிலவற்றிலே சிலர்க்கு வெறுப்பு உண்டாவது இன்றியமையாததாம். தத்துவஜ்ஞானம் விசதமாக வுள்ளவ னுக்கு எம்பெருமான் போக்யமானுல் அவனுடைய ஸ்வரூபரூபகுண விபவ விஸ்தாரங்களிலே போக்யமாகாததொன்று இருக்கமாட்டாது. 'குணைய்த்தம் லோகே குணிஷு ஹி மதம் மங்களபதம் விபர்யஸ்தம் ஹஸ்திக்ஷிதிதரபதே தத் த்வயி புந:. குணு: ஸத்யஜ்ஞாந ப்ரப்ருதய உத த்வத்கததயா சுபீபூயம் யாதா இதி ஹி நிரணேஷ்ம ச்ருதிவசாத்' என்றபடி அவனுடைய ஸ்வரூபம் மங்களமா யிருப்பது பற்றி அத்தைச் சார்ந்தவை யாவும் மங்களமாகா நிற்கிறன வாகை யாலே அவனுடைய எவ்வவதாரமும் எச் செய்கையும் போக்யமாகவே யிருக் கும். பக்த ச்ரேஷ்டரான ப்ரஹ்லாதாழ்வானுக்கு பகவான் ப்ரியதமனுன

தாலே அவன் பிதாவான இரணியனது ஆகம் பிளந்து உதிரமளைந்தது கூட மிகப் போக்யமாய் நின்றதன்றோ? ஆக எம்பெருமான் எந்த ஸமயத்தில் எவ்வித தோற்ற மளித்தாலும் அது போக்யமாகவே இருக்குமாகையாலே ஆழ்வார்கள் ஓர் அர்ச்சையை யனுபவிக்கும் காலத்திலே மற்ற வர்ச்சைகள் விபவங்கள் போன்றவைகளையும் கலந்து அனுபவிப்பது. அது அவன் அவர்களுக்களித்த தோற்றத்தைத் தொடர்ந்து பிறந்ததாகும். இப்படிச் சிற்சில குணசேஷ்டிதங் களை யநுஸந்தித்துக்கொண்டு எம்பெருமானைக் காண வாஸசப்பட்டவர்களுக்கு வேறுவகையான குணசேஷ்டிதங்களோடு எம்பெருமான் கண்முன்னே நின்றால் அப்போதும் போக்யதைக்குக் குறையில்லை யாகையாலே எதிலும் ஒரேவிதமான மனப்பற்றுள்ள மஹாத்மாக்களிடம் எம்பெருமான் எல்லாவிதமாகவும் கலந்து நிற்பன். அர்ச்சையிலும் ஒரே மூர்த்திக்கு உத்ஸவத்திலே பல கோலங்கள் செய்து ஸேவிப்பது காண்க.

இது வன்றி, பக்தியோகத்திலிழிந்து ஒரு மூர்த்தியிலே நோக்குள்ளாரும் பல மூர்த்திகள் விஷயமான வரலாற்றையும் பரிவோடு கேட்பதும் கூறுவதும் செய்தால் அதுமூலமாக அந்தப் பரமாத்மஸ்வரூபத்திற்குள்ள ப்ரபாவங்களெல்லாம் தெரியலாவதால் பக்தி வளரா நிற்குமென்பதும், ஓரம்சத்திலே நாடினார்க்கும் ஸர்வாம்ச ஸாக்ஷாத்காரம் பிறகு வருமென்பதும் கொள்ளத்தகும். எனவே எல்லா விதத்திலும் எம்பெருமான் போக்யனென வருளுகிறாராயிற்று இத்திருமொழியில்.

அன்றி, இத்திருமொழியிலே ஓரவதாரத்தைக்குறித்து நாடுமவர்க்கு மற்றோரவதாரத்தைக்கொண்டும், அனேகமவதாரமெடுத்தவனைக் குறித்து நாடுகிறவர்க்கு அவற்றிலோர் அவதாரச்செயலைக்கொண்டும், எந்த அவதாரத்தை நாடுகின்றனரோ அதே அவதாரத்தைக்கொண்டும், பொதுவாக எம்பெருமானைக் குறித்து நாடினார்க்கு ஓர் அவதாரத்தைக்கொண்டும் மறுமொழி கூறப்படுகிறது. ஆகவே, எம்பெருமானுடைய ப்ரபாவங்களைக் கீழே பல படி யருளிச்செய்ததை யறிந்துவந்து அவதாரங்கள் பலவாயினும் அவதரிக்கும் எம்பெருமான் ஒருவனேயென நன்கே உணர்ந்து, அவனை ஸாக்ஷாத்கரிக்கவேண்டுமென்றும், அவனுக்குள்ள சிற்சில பெருமைகளைக் குறிப்பிட்டு அவற்றையும் காணவேண்டும் என்றும் நோக்கத்தோடு அவனை நாடுகிறவர்களைப் பார்த்து அப் பெருமைகள் சிறந்து விளங்கும் சிற்சில அவதார வரலாறுகளைக் கூறி, அவ் வண்ணமுள்ள எம்பெருமானைக் கண்டார் பலர் இருப்பதாலே அப் பெருமைகளோடு அவனைக் காண்பதரிதன்றென வருளிச்செய்கிறாரெனவு மறிக.

1, கதிராயிரமிரவி கலந்தெறித்தாலொத்த நீண்முடியன்
எதிரிற்பெருமையிராமனை யிருக்குமிடம் நாடுதிரேல்
அதிருங்கழற்பொருதோளிரணியனாகம் பிளந்தரியாய்
உதிரமளைந்தகையோடிருந்தானையுள்ளவா கண்டாருளர். (328)

| | |
|---|---|
| கதிர் | காந்தியாலே— |
| ஆயிரம் இரவிகலந்து | ஆயிரம் ஸூர்யன்கள் ஒன்று சேர்ந்து |
| எறித்தால் | ஒளிவீசினல் |
| ஒத்த | அதற்குச்சமமாயும் |
| நீள் முடியன் | ஸர்வலோகேச்வரனென்பதை யறிவிக்கும் நீட்சியுமுடைய கிரீடமணிந்தவனும் |
| எதிர் இல் பெருமை | நிகரற்ற மேன்மையுடையனுமான |
| இராமனை | கீழ் இராமனைச் சொல்லப்பட்ட எம்பெருமானை |
| இருக்கும் இடம் | அவனிருக்கும் இடத்திலே |
| நாடுதிர் ஏல் | விசதமாயறிய விரும்புகிறீர்களாகில், |
| அரியாய் | நரசிங்கமாயவதரித்து, |
| அதிரும் கழல் | ஒலிக்கும் வீரக்கழலைக் காலில் உடையவனும் |
| பொரு தோள் | போர்புரியும் தோள்கள் உடையனுமான |
| இரணியன் | ஹிரண்யகசிபுவினுடைய |
| ஆகம் | மார்பை |
| பிளந்து | (நகங்களால்) கிழித்து |
| உதிரம் | குழம்பி எழுந்த ரக்தத்தை |
| அளைந்த | விலக்க அளைந்த |
| கையோடு | திருக்கைகளோடு |
| இருந்தானை | எழுந்தருளியிருந்தவவனை |
| உள்ள ஆ | உள்ளபடியிலே |
| கண்டார் | தர்சனம் செய்தவர்கள் |
| உளர் | இருக்கின்றனர். |

கதிராயிரமிரவிகலந்தெறித்தாலொத்த நீண்முடியன். 'ஸஹஸ்ரகிரணராயிருக்கும் அனேகம் பாலாதித்யர்களையுருக்கி வார்த்த ப்ரகாசமோ' என்ற திருவாய்மொழிப்பிள்ளை வசனநடையில் ஆயிரம் என்பது கதிர் என்பதோடு சேருமென்றும், கலந்து என்றதாலே இரவிகள் பலவென்று சொல்லாமலே விளங்குமெனவும் கருத்துத் தோற்றுகிறது. 'ஸஹஸ்ர கிரணங்களான ஆயிர மாதித்யர்கள் சேர ப்ரகாசித்தாப் போலே யிருக்கும் தேஜஸ்ஸை யுடைத்தாய்' என்ற ஜீயருரையை நோக்குங்கால்—ஆயிரமென்பது இரவியென்பதோடு சேரும்; அதனுடைய கதிரும் ஆயிரமென்பது, தானே ஸித்திக்கும்; அல்லது ஆயிரம் என்பதைக் கதிர் என்பதோடும் சேர்த்து 'ஸஹஸ்ர கிரணங்களான' எனக்கொள்ளலாமெனத் தெரியலாகிறது. கதிர் என்பதோடு சேர்க்காமலே யுரைப்பது மாம்.

தேவநாயக பஞ்சாசத்திலே ஸ்ரீதேசிகன் அருளிச்செய்த,

தேவேச்வரத்வ மபி தர்சயிதும் க்ஷமஸ்தே
நாத த்வதேயஷ சிரஸா வித்ருத: கிரீட:'
ஏகீக்ருதத்யுமணிபிம்பஸஹஸ்ரதீப்தி:
நிர்மூலயந் மநஸி மே நிபிடம் தமிஸ்ரம்"

என்ற ச்லோகத்தை யுற்று அநுஸந்தித்தால், 'ஒன்று சேர்த்த ஸூர்ய பிம்ப ஸஹஸ்ரத்தின் தீப்தி யவ்வளவு தீப்தியுடைய கிரீட' மென்றதாலே ஆயிரம் என்பது இரவி என்பதோடு சேருமென்றதுபோல் கதிர் என்பது முடியென்பதோடு சேருமெனத் திருவுள்ளம் தோற்றுகிறது. இந்த ச்லோகத்தின் பொருளை யுட்கொண்டே ஜீயரும், 'போலேயிருக்கும் தேஜஸ்ஸை யுடைத்தாய்' என வுரைத்ததாகவும் கூறலாம். 'உருக்கி வார்த்த ப்ரகாசமோ' என்ற விடத்திலுமிங்ஙனமாராய்க. இதனல் நீட்சியை மேலே கூறுவார் இவ்வுவமை காந்திக்காகவென முன்னமே கதிர் என்றதால் வ்யக்தமாக்கினாராயிற்று. இப்படி கதிர் என்பதும் ஆயிரம் என்பதும் தனித்தனியே உண்மையில் வேறிடத்தில் அந்வயம் பெற்றாலும் சொற்சேர்க்கைப்போக்கினல் ஸஹஸ்ரகிரணரென்பதும் ஸ்புரிக்கும். அதையும் விடாமல் ஸ்புரிக்கச் செய்யவே ஸஹஸ்ரதீப்தியெனச்

சேர்த்தருளினர். இங்ஙனம் அந்வயார்த்தம் வேறாகினும் வேறு அர்த்தமும் ஸ்புரிப்பதை, 'செய்வாய் நீள் திருவேங்கடத்தெந்தாய் (2-7-3) என்றதிலும் காண்க.

இராமனைக் காணவேணுமென்று நாடுகிறீர்களே, என்ன வுங்கள் நோக்கம்? எம்பெருமானைக் கேட்டது போதாது. காணவும் வேண்டும். அவனைக் காணக்கூடுமோ வென்பதுதானே. இதுவொன்றும் கூடாததன்று. அவன் ஹிரண்யாஸுரஸம்ஹாரம் செய்தருளினபோது அவ் வத்புதமான காட்சியைக் கண்டவர் அனேகருண்டே என்றபடி. கீழ்ச்சிறிய திருவடி சொன்ன வடையாளங்களை அனுஸந்தித்தவுடன், அவற்றைக் கேட்டு இராமபிரானின் வரவை எதிர்பார்த்திருந்த பிராட்டியின் நிலைமையைப் பெருமாள் தெரிந்தெழுந்தருளி ராவணவதம் செய்து பிராட்டியுடன் அயோத்திக்கு எழுந்தருளித் திருவபிஷேகம் சாத்திக்கொண்டு ஸர்வேச்வரனாய் நிகரில்லாமல் விளங்கினது நினைவிலிருந்தபடியாலே 'எம்பெருமானை நாடுதிரேல்' என்னாமே 'நீண் முடிய னெதிரிற் பெருமை யிராமனை நாடுதிரேல்' எனச் சிறப்புடனருளினதாம்.

அன்றியும், ராவணாதிவதம் செய்து ராஜாதிராஜனாய் முடிசூடி, பிறகும் லவணாஸுராதிகளைத் தன் தம்பிமார்களைக்கொண்டு கொன்று எதிரிற் பெருமையாக விளங்கின இராமபிரான் இருக்குமிடம்=அதாவது அவனுக்கிருக்கும் பெருமையை உள்ளவா காணவேண்டும்—தம்பிமார்களையும், வாநராதிகளையும், வஸிஷ்ட விச்வாமித்ர அகஸ்த்யாதிகள் அளித்த ஆயுதபலங்களையும் அபேக்ஷியாமே உண்மையில் எதிரிற் பெருமையாய் விளங்கினமை காணவேண்டும்-என நாடுகிறீர்களாகில், அதையும் காணலாம். கண்டாருளர். எவ்விடத்திலென்னில், அவன் அழகியசிங்கமாய் அவதரித்த விடத்தில். வீரர்களையெல்லாம் வென்று, நானே கதிராயிரமிரவி கலந்தெறித்தா லொத்த நீண்முடியனென்று வீரக்கழலொலிக்க வெங்கும் திரிந்து, போர்புரிவாரைக் காணாதே பெருந்தினவெடுத்த தோளனான விரணியனை, ஒரு ஸஹாயமும் வேண்டாமே உள்ள வாயுதங்களையும் கொள்ளாமே தன் திருக்கை வுகிர்களைக் கொண்டே மார்பிற் பிளந்து மாய்த்தினதைக் கண்டவர்கள் அப் பெருமையுள்ள ப்ரகாரத்திலே அவனைக் கண்டவரல்லரோ வென்றதாம்.

ஆழ்வாருக்கு எம்பெருமானைக் காண்பதோடு, அவனைக் கண்டாரையும் அவனைக் கண்டு அவர் உகக்கும் தசையோடு ஸாக்ஷாத்கரிக்க வல்லமை யிருந்ததாலே கண்டாருளர் என வருளிச்செய்தபடி. அன்றி சிலர் கண்டேயிருக்க நாம் காணாதது அவ் வவதாரங்கள் நிகழ்காலத்திலில்லாமையாலே. நேரிற் காணாவிட்டாலும் கண்டார் உரைத்தால் கண்டதுபோல் விசதமா யறியலாமென்றதாம்.

இங்கே நாய்ச்சியார் திருமொழி (14) 'பட்டிமேய்ந்து' திருமொழி இத் திருமொழி நடையைப் பின்பற்றினதாகையால் இங்ஙனம் கருத்தாம்—எம்

பெருமானைத் தேடும் சிலரைக்கண்டு, நீங்கள் என்ன காணாமல் தேடுகிறீர்கள் என்ன, அவர்கள் சொல்லுகிறார்கள்,—'இப்படிப்பட்ட இராமன் எங்கே யென நாடுகிறோம்' என்று. அப்போழ்து சொல்லுகிறார், அவன் அங்கே அரியாய் இரணியனைப் பிளந்து உதிரமளைந்துகொண்டிருக்கிறானென்று அங்கே அவனைக் கண்டார் சொன்னார்; போய்க்காணுங்கோள் என்றவாறு. இங்ஙனம் எல்லாப் பாசுரங்களிலும் கொள்க. நேற்று இராமனை ஸேவித்தோம், அதற்கே மறு படியும் போகிறோமென்றார் அர்ச்சையில் அந்த ஸேவையிலீடுபட்ட சிலர். இராமன் இன்றைத்தினம் நரசிங்கமாகக் கோலம் கொண்டு ஸேவை யளிக்கிறார், காணுங்கோள் என்றனர் மற்றும் சிலர் என்னலுமாம்.

2. நாந்தகஞ்சங்கு தண்டு நாணொலிச்சார்ங்கந்திருச்சக்கரம்
ஏந்துபெருமையிராமனை யிருக்குமிடம் நாடுதிரேல்
காந்தள்முகிழ்விரற் சீதைக்காகிக் கடுஞ்சிலை சென்றிறுக்க
வேந்தர்தலைவன் சனகராசன்றன் வேள்வியிற் கண்டாருளர். **(329)**

| | |
|---|---|
| நாந்தகம் | நந்தகமென்னும் வாளையும் |
| சங்கு | பாஞ்சசன்னியத்தையும் |
| தண்டு | கௌமோதகியென்ற கதையையும் |
| நாண் ஒலி | நாணின் ஒலியோடுள்ள |
| சார்ங்கம் | சார்ங்கமென்ற வில்லையும் |
| திருச்சக்கரம் | திருவாழியையும் |
| ஏந்து | தரிக்கும் |
| பெருமை | பெருமையுடைய |
| இராமனை | ஸ்ரீராமனை |
| இருக்கும் இடம் நாடுதிரேல், | |
| காந்தள் முகிழ் விரல் | செங்காந்தள் அரும்பு போன்ற விரல்களையுடைய |
| சீதைக்கு | ஸீதாதேவிக்கு |
| ஆகி | தகுந்த வரனாக நின்று |
| வேந்தர் தலைவன் | அரசர்களில் ச்ரேஷ்டனான |
| சனகராசன் | ஜனகமஹாராஜனுடைய |
| வேள்வியில் | யாகத்திலே |
| சென்று | பார்க்கப்போய் |
| கடு சிலை | கடினமான வில்லை |
| இறுக்க | முறித்தபோது |
| கண்டார் உளர் | |

இராமனை இராமனாகக் காண்பதுமாத்திர மின்றி, நாந்தகம் முதலான திருவாயுதங்களைத் தரிக்கும் மஹாவிஷ்ணு இவன் என்கிற பெருமையோடு காணவேணுமாகில் காணலாம். அவன் சீதைக்கு வரனானதிலிருந்தே அவன் விஷ்ணுவென்பது கண்டதாம். அதுவுமன்றி, ஒருவருமசைக்க முடியாத சிவத நுஸ்ஸை எடுத்து முறித்ததாலே பரதேவதை யென்று போட்டிக்கு நிறுத்தப் படும் பசுபதிக்கு மேலானவ னென்று தெளிவு பெறக்கூடுமாகையாலுமிதாம். செங்காந்தள் முகிழ்விரற் சீதைக்காகி என்றதாலே பந்தார்விரலியாய் சீதை விளை யாடும்போது பந்து சிவதநுஸ்ஸுள்ள விடத்திலே புகுந்து கிடக்க, வில்லைத் தூக்கிப் பந்தை யெடுக்க மாட்டாமே யெல்லோரும் திகைக்க, பிராட்டி யவலீலை யாய் அதைக் கொஞ்சம் தூக்கிப் பந்தைக் கொண்டனள். அது கண்டே சனக மகாராசன் அங்ஙனம் ஒரு சுல்க்கம் வைத்தா னென்று புராணாந்தர வரலாறும் குறித்ததாகலாம். வேள்வியிற் கண்டார். பரதத்துவஜ்ஞானம் முதிர்ந்த மஹாநுபாவனின் வேள்விக்குச் சென்றார்க்குப் பரதேவதா நிர்ணயமும் திவ்ய தம்பதிகளுடைய தர்சனமும் கிடைக்கும்படி யிருந்தது. இப்படி ப்ரஜைகளுக் குத் தெளிவளிப்பவன் தானே வேந்தர்தலைவனாவான். (உ)

**3.** கோலையானைக்கொம்புபறித்துக் கூடலர்சேனைபொருதழியச்
சிலையால்மராமரமெய்ததேவனைச் சிக்கெனநாடுதிரேல்
தலையால்குரக்கினந்தாங்கிச் சென்றுதடவரைகொண்டடைப்ப
அலையார்கடற்கரைவீற்றிருந்தானை யங்குத்தைக்கண்டாருளர். **(330)**

| | | | |
|---|---|---|---|
| கோலை | தன்னுடைய கோலைக்காக நிறுத்தப்பட்டிருந்த | தேவனை | எம்பெருமானை |
| யானை | யானையான குவலயா பீடத்தினுடைய | சிக்கென | உறுதியாக |
| கொம்பு | தந்தங்களை | நாடுதிரேல் | காணவிரும்புகிறீராகில், |
| பறித்து | க்ருஷ்ணாவதாரத்திலே பிடுங்கிக்கொண்டு | குரங்குஇனம் | குரங்குக்கூட்டமானது |
| (அதற்குமுன் இராமாவதாரத்திலே) | | தட வரை | பெரிய மலைகளை |
| கூடலர் | பகைவராகிய கரதூஷணாதிகளுடைய | கொண்டு | எடுத்து |
| சேனை | சைன்யமானது | தலையால் | தங்கள் தலையால் |
| அழிய | அழியும்படி | தாங்கி | சுமந்து |
| பொருது | போர் புரிந்து | சென்று | கடலோரம் சென்று |
| சிலையால் | வில்லினால் (விடப்பட்ட பாணத்தினால்) | அடைப்ப | கடலை யடைத்தபோது |
| மராமரம் | (ஏழு) ஆச்சாமரங்களை | அலை ஆர் | அலைகள் நிறைந்த |
| எய்த | பிளந்த | கடல் | சமுத்திரத்தின் |
| | | கரை | கரைமீது |
| | | வீற்றிருந்தானை | எழுந்தருளியிருந்தவனை |
| | | அங்குத்தை | அந்த விடத்திலே |
| | | கண்டார் உளர். | |

பறித்து. பறித்தது க்ருஷ்ணாவதாரத்திலே யாகையாலே பறித்தது முன்னும் கரதூஷணாதிகளோடு பொருதது பின்னுமாகமாட்டா. ஆக பௌர்வாபர்யம் இங்கு விவக்ஷித மன்று. உக்தி பௌர்வாபர்யத்தைப் பொருளிலே யேற்றிச் சொன்னதுமாம். பறித்ததாக இங்கே முன்னே சொல்லப்பட்டுப் பொருததாகப் பின்னே சொல்லப்படும் என்றபடி.

ஆச்ரிதர்களுக்கு மஹா விச்வாஸமிருக்கும்படியும் அபராதிகளுக்கு அதிக பய முண்டாம்படியும் விசித்ரமான லீலைகளைச் செய்பவன் அவன் என்பது. க்ருஷ்ணனாய் அவதரித்தபோது மல்லரங்கத்தின் வாசலிலே குவலயாபீடத்தைக் கம்ஸன் நிறுத்தி வைக்க அதை வதைத்ததிலிருந்தும், ஜனஸ்தானத்திலே கரதூஷணாதிகளை நிலையாக விருக்கச்செய்து வடதிக்கிலிருந்தே தன்னிடம் யாரும் வரமாட்டாதபடி பார்த்திருந்த ராவணனுக்கு அச்சமுண்டாம்படி அவர்களை யழித்துப் பிராட்டியும் மஹர்ஷிகளும் மெச்சும்படி நடந்துகொண்டிருந்ததிலிருந்தும், வாலிவதமிவரால் செய்யமுடியுமா வென்று ஸந்தேஹ முற்ற ஸுக்ரீவனுக்காக ஏழு மராமரங்களைப் பிளந்ததிலிருந்தும் தெளிவாகும். இப்படியே மேலே நடக்கப்போம் கார்யத்திலே பூரணமான நம்பிக்கை யுண்டாம்படி முன்னே கார்யத்தை நடத்திவைக்கும் திறமையை எம்பெருமானிடத்திலே த்ருடாத்யவஸாயத்துடன் காணவேண்டுமாகில் ஸேதுபந்தத்திலே அதனைக் கண்டவ ருண்டாகையாலே அங்கே காண்க. அலை நிறைந்த கடலிலே அலையே கிளம்பாதபடி ஸமுத்ரராஜனை யடக்கி நடத்தி அங்கே வீற்றிருந்தபோது, ஸமுத்ரராஜன் சரணாகதனாம்படி பண்ணின அவன்பராக்ரமத்தைக் கண்ட வானரர்களுக்கு மேல் நடக்கப்போம் கார்யத்திலே எவ்வளவு மஹாவிச்வாஸம் பிறந்திருக்கும்? பெரிய பெரிய மலைகளை ப்ரயாஸமே யின்றி தனித்தனியே பறித்துத்

தலையில் தாங்கி மஹாஸமுத்ரத்தையே யடைக்கும் வீரவாநரர்களை யெல்லாம் ஏவிநிற்கும் மஹாவீரனுடைய ஸேதுபந்தவ்யாபாரத்தைக் கண்டபோது, காணமற் சீதையைக் கொண்டு போய்ப் பதுங்கியிருக்கும் ராவணனுக்கும் பிறந்த பயம் இவ்வளவென்று அளவிடக்கூடுமோ? இப்படி ஸீதையைப் பெற இராமன் செய்த செயலைக் கண்டபோது ஆச்ரிதரை யெம்பெருமான் ஒருபடியும் விடானென்றது தெளியலாகுமே. இதற்காகச் செய்த ஸேதுபந்தமே கண்ணுற் காணப்பட்டு மஹாபாதகங்களையும் போக்குகிறபடியாலே எம்பெருமானுடைய விந்த ஸேதுபந்த வியாபாரம் மிகவும் சிறந்ததாயிற்று. (௩.)

4. தோயம்பரந்தநடுவுசூழலிற்றொல்லை வடிவுகொண்ட
மாயக்குழவியதனைநாடுறில் வம்மின்சுவடுரைக்கேன்
ஆயர்மடமகள்பின்னைக்காகி யடல்விடையேழினையும்
வீயப்பொருதுவியர்த்துநின்றானை மெய்ம்மையேகண்டாருளர். (331)

| | | | |
|---|---|---|---|
| பரந்த தோயம் | பரவியுள்ள ஜலத்தின் (ஸமுத்ரத்தின்) | ஆயர் | ஆயரான கும்பருக்கு |
| | | மடம் | மடப்பமுள்ள |
| நடுவு | நடுவிலே | மகள் | மகளான |
| சூழலின் | சூழ்ச்சியாலே | பின்னைக்கு | நப்பின்னைக்கு |
| தொல்லை | பழமையான | ஆகி | வரனாகி |
| வடிவு | க்ஷீராப்திநாதனென்ற ரூபத்தை | அடல் | வலிவுள்ள |
| | | விடை ஏழினை உம் | ஏழு ரிஷபங்களையும் |
| கொண்ட | ஸ்வீகரித்திருந்த | | |
| மாயம் குழவி அதனை | மாயை கொண்ட சிசுவை | வீய | அழியும்படி |
| | | பொருது | போரிலமர்த்தி |
| நாடுறில் | நாடுவதில் பற்றுள்ளவராகில் | வியர்த்து | வேர்வையுண்டு |
| | | நின்றானை | நின்ற கண்ணனை |
| வம்மின் | வாருங்கள். | மெய்ம்மை ஏ | உண்மை நிலையிலேயே |
| சுவடு உரைக்கேன் | அடையாளம் சொல்லுகிறேன். | கண்டார் உளர். | |

ஸ்ரீவைகுண்டத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் தேவதைகளை யநுக்ரஹிக்கவேண்டுமென்ற சூழ்ச்சியாலே நடுஸமுத்ரத்திலே வடிவெடுத்து நின்றான். அந்த க்ஷீரஸமுத்ரசாயியின் வடிவும் அங்கிருந்து புதிதாகக் கிருஷ்ணவதாரம் செய்ததாலே பழைய வடிவாயிற்று. உண்மையிற் குழவியாயிராத எம்பெருமான் முதலில் சங்கசக்ராதி திவ்யாயுதங்களைத் தரித்துச் சதுர்புஜமாய் விசித்ரமான குழவியாகத் தோன்றி பிறகு எல்லாருடைய குழந்தை போலே மாயமாக மாறிவிட்டான். இப்படித் தனக்கில்லாத குழவியின் ரூபத்தைத் தானெடுத்து மாயையிற் சிக்கச் செய்யும் பெருமான் நப்பின்னைக்காக நடத்தின செயலில் அவனுடைய மாயை விளக்கமாகும். ஏழு ரிஷபங்களை யொருவருமடக்கமுடியாமலிருக்க அஸுரர்கள் புகுந்துள்ள அந்த ரிஷபங்களை அழித்து நமக்காக விப் பாடு படுகிறானென்று நப்பின்னை நினைக்கும்படி வடிவெல்லாம் வியர்த்து நின்றான். அப்ராக்ருதமான திருமேனியிலே வாட்டமும் சோர்வையும் வியர்ப்பும் மெய்யாக வுண்டோ? கிடையா. ஆகிலும் தனக்குள்ள அபிமானம் தோற்ற இல்லாததை யேறிட்டுக் காண்பிக்கிறானென்க.

தோயம் பரந்தநடு வென்பதை மாயக்குழவி யென்றதோடு சேர்த்து ஆலி லைப்பாலகனுனமையைச் சொன்னதாகவும் கொள்வர். வடிவுகொண்ட என்றதை வடிவைச் சுருக்கிக்கொண்ட என்றும், பரந்த என்றதற்குத் தோயம் எங்கும் பரந்தபோது என்றும் உரையும் செய்கின்றனர். திருவாய்மொழிப்பிள்ளை மாயக்குழவி யென்பதைக் கண்ணனென வுரைத்து பரந்ததோயநடுவாவது ஜம்பூத் வீபமென்றும் சூழ்லாவது அங்கே கண்ணனவதரித்த இடமெனவும் கூறினர். ஆலி லைப் பாலகனைக் கொண்டபோதும், எங்கும் பரந்த ஏகோதக ஸமுத்ரத்தின் நடு விலே வட்டவடிவமான ப்ரம்மாண்டத்தினுடைய பழமையான—அதாவது அதற்கு இயற்கையிலுள்ள—வடிவை அங்ஙனமே திருவயிற்றிலுட்கொண்ட மாயக்குழவியை யென வுரைக்கலாம். குழவியின் மாயமாவது சிறு வயிற் றிலே ப்ரம்மாண்டத்தின் பெரிய வடிவைத் திருவயிற்றுக்குத் தக்கபடி சிறி தாக்காது உள்ளதுள்ளபடியே வைத்துட்கொள்ளுவதால் தெரியலான அகடித கடநாஸாமர்த்தியம். இதன் விரிவை ஸ்ரீதேசிகனுடைய தத்வமுக்தாகலாபாதி ஸ்ரீஸூக்திகளிலே காண்க. ஆசார்யபாஷ்யதாத்பர்யத்திலு மிதனை விவரித்துள் ளோம். பொதுவாகச் சேராச்சேர்த்தி யிப்பாசுரத்தி லுரைக்கப்பட்டதென்க. மெய்ம்மையே கண்டார். உண்மையி லங்ஙனமில்லாததையே இருப்பதாக ப்ரீதிபரவசருக்குத் தோற்றவைக்கிறானெனவும் எம்பெருமான் எப்போதும் நிரவத்யன், நிர்தோஷன் எனவும் காண்பதே உள்ளபடி காண்பதாம். (௪)

5\. நீரேறுசெஞ்சடைநீலகண்டனும் நான்முகனும்முறையால்
சீரேறுவாசகஞ்செய்யநின்ற திருமாலைநாடுதிரேல்
வாரேறுகொங்கையுருப்பிணியை வலியப்பிடித்துக்கொண்டு
தேரேற்றிச்சேனைநடுவுபோர்செய்யச் சிக்கெனக்கண்டாருளர். (332)

| | |
|---|---|
| நீர் ஏறு | தன் திருவடியினின்று பெருகின கங்கை யேறிநின்ற |
| செம் சடை | சிவந்த ஜடையுடையனும் |
| நீலகண்டன் உம் | விஷமுண்டு கறுத்த கழுத்துடையனுமான சிவனும் |
| நான்முகன் உம் | ப்ரம்மாவும் |
| முறையால் | க்ரமப்படி |
| சீர் ஏறு வாசகம் | சப்தகுணமும் அர்த்தகுணமும் நிறம்பின ஸ்தோத்திரங்களை |
| செய்ய நின்ற | செய்து ஸ்துதிக்கும்படி திகழ்ந்த |
| திருமாலை | பிராட்டியினிடம் வியாமோஹமுள்ள பெருமானை |
| நாடுதிரேல் | காணவிரும்புகிறீராகில்; |
| வார் ஏறு கொங்கை | கச்சு ஏறியுள்ள ஸ்தனங்களையுடைய |
| உருப்பிணியை | ருக்மிணிதேவியை |
| வலிய | திடமாக |
| பிடித்துக் கொண்டு | பக்கங்களிலே பிடித்து எடுத்து |
| தேர் ஏற்றி | தனது தேரை ஸுகமாக ஏறச்செய்து |
| சேனை நடுவு | ருக்மியினுடைய சேனை நடுவிலே |
| போர் செய்ய | அவனோடு போர் செய்தபோது |
| சிக்கென | உறுதியாக |
| | கண்டார் உளர். |

இப் பாசுரத்திற்குத் திருமாலை யென்பதிலே நோக்கு. த்ரிமூர்த்திக ளென்று தன்னோடு ஸமர்களாகத்தோற்றும் சிவனும் பிரமனும் தங்கள் நிலையை நன்குணர்ந்து அவனை ஸ்துதி செய்கிறார்கள். என்னவாக வெனில், கீழ்ப் பாசுரங்களிலே சொன்ன படிகளிலும் பிறவான படிகளிலும். எங்ஙனே

யென்னில்—சிவன் செய்யும் வாசகமாவது. 'யானிப்படி வ்ரதங்கொண்டு செஞ்சடையாய் தபஸ்ஸில் இழிந்திருப்பது உன்னை யாராதிப்பதற்கன்றோ? இப்படியுள்ள தபோபலத்தாலே எனக்கெவ்வளவு சிறப்பிருந்தாலும் எல்லாம் உனது திருவடி பலத்தா லானதாலே உன் திருவடித் தீர்த்தம் இங்கே ஏறி நிற்கும்படியன்றோ நானிருப்பது. நீ திருமாமகளிடம் கொண்டுள்ள வ்யாமோஹத்தினாலே அமுதக்கடலைக் கடைந்து அவளைப் பெறப் பெருமுயற்சி செய்தபோது கடலினின்று கிளம்பின ஹாலாஹலமென்ற விஷத்தை உனது நியமனத்திற்கிணங்கி உனது ப்ரஸாதமெனக் கொண்டு அச்யுத—அனந்த—கோவிந்த நாமங்களைச்சொல்லி உண்டேனே. நீயும் அது என்னைப் பாதிக்காவண்ணம் கழுத்திலே நிறுத்திவைக்க நீலகண்டனானேனே. அப்படி கடைந்து நீ பிராட்டியைப் பெற்றதுமன்றி, அவளால் குழந்தைகளென்று கொண்டாடப்பெற்ற ஸநந்தநாதிகளை யவமதித்த உனது த்வாரபாலகர்கள் அவர்களால் சபிக்கப்பட அதனால் அஸுரராகத் தோன்றின அவ்வாசக்காப்பாரை முதலில் ஸம்ஹரித்தாய். பிறகு இராமாவதாரத்திலும் ஸீதையாயவதரித்த தேவியாரைப் பெற எனது வில்லை யிறுத்தாய். ராவணனாய்ப் பிறந்த வாசக்காப்பான் அவளை யபஹரித்தபோது மறுபடி மீட்பதற்காகவும் தலையால் குரக்கினம் தாங்கிச் சென்று தடவரை கொண்டடைப்பக் கடலிலே ஸர்வருக்கும் க்ஷேமமளிக்கும் ஸேதுவைக் கட்டி யருளினாய். இப்படிப் பிராட்டியினிடத்திலே வ்யாமோஹம் கொண்ட நீ பிராட்டியைப் போலே எங்களையும் ஸ்வீகரித்தனுக்ரஹிக்கவேணுமென்றவாறு. இங்ஙனம் நான்முகன் நான்கு முகங்களைக் கொண்டு நான்கு வேதங்களையோதி ஸ்துதித்ததைக் கொள்க. இவ்வண்ணமெம்பெருமானுக்குள்ள வ்யாமோஹத்தைக் காண வாசைப்படுகிறீர்களாகில், காண்பதில் கஷ்டம் கொஞ்சமுமில்லை. அதே வாசக்காப்பான் சிசுபாலனாய்ப் பிறந்து ருக்மிணியாயவதரித்த பிராட்டியைத் தானே மணம் செய்ய மஹத்தான ஏற்பாடு செய்து கண்ணாலமும் கோடித்துக் கைபிடிப்பதாகத் திண்ணார்ந்திருந்தபோது வருவது தெரியாமே வந்து விரோதிகள் நடுவே புகுந்து, தன் வரவை யெதிர்பார்த்து நிற்கும் பிராட்டியைத் தன் கையாற் பிடித்துத் தேரிலேற்றிப் பகைவரையெல்லாம் பொருது துறத்திப் பாணிக்ரஹணம் செய்துகொண்டதைக் கண்டாருளரே யென்றபடி.

முறையால். இவ்விருவரும் திருமாலுக்கு சேஷபூதர்களாகையாலே இவர்கள் ஸ்தோத்திரம் செய்வது முறைப்படியாம். திருமால் இவர்களை ஸ்துதி செய்தால் அது முறை தவறினதாகும். லோகாநுகரணத்திற்காகவும் சிலரை மோஹிப்பிக்கைக்காகவும் அது செய்யப்படுகிறது. சீரேறு. திருமாலுக்கு வாத்ஸல்ய ஸௌசீல்யாதி ஸர்வகுணங்களும் புஷ்கலமாயிருப்பதாலே அந்த ஸ்தோத்திரம் சீரேறினதாகிறது. வேறிடத்தில் வரும் ஸ்தோத்திரம் இல்லாத குணத்தை ஏறிட்டு வந்ததாகையாலே அர்த்தம் பொய்யானபடியாலே சீரற்றதே யாகும். வாசகம். ஆகவே உண்மைப் பொருள் விட்டு வேறு பொருள் கொள்ளவேண்டியிருப்பதால் மற்றவர் விஷயத்திலே அது வாசகமு மாகாது. செய்யநின்ற. ஸ்தவ்யனாய், அதாவது துதிக்கத்தகுந்தவனாய், ஸரளஹ்ருதயனாயிருப்பதாலே ஸ்தவப்ரியனாய் அப்போது அனுக்ரஹிக்க வ்யாமோஹித்து நிற்

கின்ற என்றபடி. வாரேறு. சிசுபாலாதிகளான துஷ்காமிகளின் கண்ணிற்படா தபடி கச்சினால் மறைக்கப்பட்ட வென்றபடி. சிக்கென. தகப்பனாரிசைந்தா லன்றி விவாஹம் செய்துகொள்வது நடவாதென்று சொல்லி, கொடுத்தும் பெறுதிருந்த இராமனுக்கு ஸீதையினிடத்திலே யுள்ள வ்யாமோஹம் வெளிப் படையாகாமலிருந்தது. இங்குக் கொடாமலே யிருக்க யாருக்கு மறிவிக்காதே கைக்கொண்ட கண்ணனிடத்திலே இது கண்கூடாகையாலே திடமாகக் கண்டாருளரென்றதாம். (ரு)

எம்பெருமானானவன், பெரியபிராட்டி, நப்பின்னைபோன்ற சிலரிடத் தில் வ்யாமோஹித்திருந்தால் ப்ரம்மருத்ராதிகள் தங்களிடத்திலேயும் அவ்வளவு பற்றுதல் வைக்க ப்ரார்த்திப்பது கூடுமோ வென்னவேண்டா. உலகத்தில் தானொருவனே புருஷனாய் ஸர்வசேதனரும் ஸ்த்ரீகளாய்த் தன்னிடத்தில்ஈடு படச் செய்கிறவ னவன் என விளக்கியருளுகிறார்—

6\. பொல்லாவடிவுடைப்பேய்ச்சிதுஞ்சப் புணர்முலைவாய்மடுக்க
வல்லானைமாமணிவண்ணனை மருவுமிடம்நாடுதிரேல்
பல்லாயிரம்பெருந்தேவிமாரோடு பௌவமேறிதுவரை
எல்லாருஞ்சூழச்சிங்காசனத்தே யிருந்தானைக்கண்டாருளர். (333)

| | |
|---|---|
| பொல்லா வடிவு உடை | தீங்கை விளைவிக்கும் வடிவை உடையளான |
| பேய்ச்சி | பூதனையானவள் |
| துஞ்ச | மாளும்படி |
| புணர் முலை | தானே இசைந்துவந்த ஸ்தனத்தை |
| வாய் | தனது முகத்தில் |
| மடுக்க | வைத்துக்கொள்ள |
| வல்லானை | ஸமர்த்தனை |
| மாமணி வண்ணனை | நீலமணியின் நிறமுள்ளவனை |
| மருவும் இடம் | அவன் பொருந்தின இடத்திலே |
| | நாடுதிரேல்—, |
| பௌவம் எறி | கடல் அலை வீசும் |
| துவரை | த்வாரகையிலே |
| பல் ஆயிரம் பெரு தேவி மாரொடு | பலவாயிரக்கணக்கான உயர்ந்த தேவிகளோடு |
| எல்லாரும் | பிரஜைகள் யாவரும் |
| சூழ | சூழ்ந்திருக்க |
| சிங்காசனத்து ஏ | ஸிம்ஹாஸனத்திலே |
| இருந்தானை | வீற்றிருந்தவனை கண்டார் உளர். |

ஸ்த்ரீகள் பொல்லாதவர்களாகில் அவர்களையும் புருஷரைப்போல் கொன்று, மாமணிவண்ணனான தன் திவ்ய ஸௌந்தர்யத்திலீடுபட்டு அபிமானிக் குமவருள்ளவிடத்திலே பொருந்தியிருக்கிற எம்பெருமானை அங்ஙனம் காண வாசைப்படுங்கள். அவன் நரகாஸுரனை நாசம் செய்து அவன் சிறையில் வைத்திருந்த சிறந்த கன்னிகைகளைத் தன் இடம் கொண்டுவந்து பதினாறாயிரம் பேரான அவர்களை மணந்து அவர்களோடும், முன்னமே மனைவிகளான ருக் மிணி முதலானோரோடும் சேர்ந்து, 'நமக்கு இத்தகைய பாக்யம் எப்போது கிடைக்குமோ' வென்று நினைத்து ப்ரஜைகளனைவரும் சூழச் சிங்காசனத்திலே கண்டவரிருக்கின்றனரே. ஆக அவனுக்கு எல்லாச் சேதநர்களிடத்திலும் பிராட் டியினிடத்திலே போல வ்யாமோஹமுண்டு. அந் நிலைக்கு வர நாம் முயற்சி கொள்ளவேண்டுவதே முக்கிய மென்றபடி. இங்கே மாமணி வண்ணனை என் பது 'பும்ஸாம் மோஹநரூபாய' என்றபடியுள்ள வவன் நிலையைக் காண

வாசையைக் குறிக்க வந்ததாகையாலே பாசுரத்திற்கு இப் பதத்தின் பொருளிலே நோக்கு. இங்கும், முன்னும் ஐ அசை யல்ல; இரண்டாம் வேற்றுமையுருபே. இடம் என்பதற்கு துவரை என்றவிடத்திற் போல் இடத்தில் எனப் பொருளாம். (சு)

இனி, சங்குசக்கரங்களோடு எம்பெருமானின் ஸேவையில் ஈடுபடுவதை யருளிச்செய்கிறார்.

7. வெள்ளைவிளிசங்கு வெஞ்சுடர்த்திருச்சக்கரமேந்துகையன்
உள்ளவிடம்வினவில் உமக்கிறை வம்மின் சுவடுரைக்கேன்
வெள்ளைப்புரவிக் குரக்குவெல்கொடித் தேர்மிசை முன்புநின்று
கள்ளப்படைத்துணையாகிப் பாரதம்கைசெய்யக்கண்டாருளர். (334)

| | | | |
|---|---|---|---|
| வெள்ளை | வெளுப்பான | உரைக்கேன் | சொல்லுகிறேன்— |
| விளி | அழைக்கின்ற | வெள்ளை புரவி | வெண்மையான குதிரைகளையுடையதும், |
| சங்கு | ஸ்ரீ பாஞ்சசன்னியத்தையும் | குரங்கு | வானரமாகிற |
| வெம் | உஷ்ணமான | வெல் | வெற்றிதரும் |
| சுடர் | கிரணங்களையுடைய | கொடி | கொடியை யுடையதுமான |
| திருச்சக்கரம் | ஸ்ரீ ஸுதர்சனாழ்வானையும் | தேர்மிசை | தேரிலே |
| ஏந்து கையன் | ஏந்தும் திருக்கைகளை யுடைய எம்பெருமான் | முன்பு நின்று | அர்ஜுனனுக்கும் எதிர் ஸேனைக்கும் முன்பாக அசையாமல் வீற்றிருந்து |
| உள்ள இடம் | இவ்வாயுதங்களின் வியாபாரங்களோடு எழுந்தருளியிருக்கும் இடத்தை | கள்ளம் படை துணை ஆக | கபடமான படையுடன் கூடின ஸஹாயமாயிருந்து |
| வினவில் | கேட்கிறீர்களாகில் | பாரதம் | பாரத யுத்தத்தை |
| வம்மின் | வாருங்கோள் | கைசெய்ய | நடத்தினபோது |
| உமக்கு | உங்களுக்கு | | கண்டார் உளர். |
| இறை சுவடு | ஸ்வல்பமான அடையாளம் | | |

எம்பெருமான் சங்க சக்கரங்களை உபயோகித்த விடம் தெரியவேண்டுமெனில் கேண்மின், பாரதயுத்தமே அதாம். நான் ஆயுதமெடுத்து ஸஹாயமாயிருப்பதில்லை யெனச் சொல்லிக் கபடமாகச் சங்கசக்கரங்களை உபயோகித்துத் துணை யானான். சங்கம் என் செய்யுமெனில், விளிசங்கு அன்றோ? ஆக யுத்தத்திலே அவரவர் சித்தமாய் நிற்கவேண்டிய நிலைமையை அழைத்துக் குறிக்கும். அவ்வளவு தான் உபயோகம் என்று நினைக்கக்கூடாது. அது ஒரு பெரிய திவ்யாயுத மன்றோ. 'பாஞ்சஜந்யம் ஹ்ருஷீகேசோ தேவதத்தம் தநஞ்ஜய:, ஸ கோஷோ தார்த்தராஷ்ட்ராணாம் ஹ்ருதயாநி வ்யதாரயத்' என்றபடி அதின் பேரரவம் காதில் விழுந்தவுடனே கூடாரின் ஹ்ருதயங்கள் பிளந்து போயினவே. இது போரில்லாத காலத்திலு முபயோகப் படுவதாலும், விளிப்பது போல் அபிநயித்துக் கபடமாய் பிறர்சேனையை யழிப்பதாலும் கள்ளப்படையாம். படையாவது ஆயுதம். சங்கம் சக்கரம் என்ற இரு படைகளின் ப்ரஸ்தாவம் முதலடியில் வந்ததாலே. அவை உபயோகிக்கப்பட்டது இங்கே குறிக்கப்படுவது பொருத்தமாகும். 'படைத்துணை சேனைக்குத் துணை' யெனவு முரைப்பர். இங்கே சங்கத்திற்குப் போல் சக்கரத்தின் உபயோகமும் கருதப்பட்டுள்ளது. (எ)

பெரி. தி-25.

பார்த்தஸாரதி திருக்கையில் சங்கு தரிப்பது தெரிந்த விஷயமானதாலும், த்ரோணாசார்யவதத்திற்காக, 'அச்வத்தாமா ஹத: குஞ்ஜர:' என்னும் போது கடைப் பதம் கேட்காதபடி சங்கை யூதினதன்றியே, போர்க்களத்திலே அதன் அரவத்திற்கு நிச்சலும் உபயோகமிருந்ததாலும், விளிசங்கை அவன் அங்கே எப்பொழுதும் வழங்கினது வ்யக்தமாயிற்று. ஆயுதங்களை யெடுக்காதவன் சக்கரத்தை வேறுவிதம் வழங்கினது அவ்வளவு ஸுலபமாய்த் தெரியக்கூடியதன்றாகையாலே அதனை மட்டும் விவரிக்க மேலே யொரு தனிப் பாசுர மருளிச் செய்கிறார். எனவே சுவடுரைக்கேன் என்பதின் விரிவாகவே முன் பாசுரத்தின் மேற்பாகமும் இந்த எட்டாம் பாசுரமும் அமைந்திருப்பதாலே இதிலே முன்பின் பாசுரங்களிற்போல், 'நாடுதிரேல்', 'வினவில்' என்றாற்போலே யருளுவதற்கு இடமில்லையாகையாலே அம் முறையை விட்டுப் பாசுர மியற்றியருளுகிறார்.

8. நாழிகைகூறிட்டுக் காத்து நின்ற வரசர்கள்தம் முகப்பே
நாழிகைபோகப் படைபொருதவன் தேவகிதன்சிறுவன்
ஆழிகொண்டன்றிரவி மறைப்பச் சயத்திரதன்றலையைப்
பாழிலுருளப் படைபொருதவன் பக்கமே கண்டாருளர். (335)

| | | | |
|---|---|---|---|
| படை பொருதவன் | பல வாயுதங்கள் பொருந்தினவனை (அல்லது) படை வகுத்துப் போர் புரிய மூல காரணமான | ஆழி கொண்டு | தன் திருவாழியை ஏவி |
| தேவகி தன் சிறுவன் | தேவகிபுத்ரனான கண்ணனவன், | அன்று | அர்ஜுனன் ஜயத்ரதவதத்திற்கு ப்ரதிஜ்ஞை செய்த அந்நாளிலே |
| நாழிகை கூறிட்டு | ஸூர்யாஸ்தமனத்திற்கு நாழிகை இவ்வளவுள வென்றடிக்கடி கூறுபாடிட்டுக்கொண்டு | இரவி | ஸூர்யனை |
| காத்து நின்ற | ஜயத்ரதனைப் பாதுகாத்திருந்த | மறைப்ப | அஸ்தமித்தவாறு செய்து விட்டபோது கண்ணுக்கிலக்காகவான) |
| அரசர்கள் தம் | கௌரவரைச் சார்ந்த ராஜாக்களின் | சயத்திரதன் தலையை | ஜயத்ரதனுடைய சிரஸ்ஸை |
| முகப்பு | முன்னிலையில் | பாழில் | ஆகாயத்தில |
| நாழிகை | அவர் கூறிவந்த நாழிகை | உருள | உருண்டு போம்படி |
| போக | போம்படி | படை பொருதவன் | ஆயுத ப்ரயோகம் செய்த வர்ஜுனனுடைய |
| | | பக்கம் ஏ | பக்கத்திலேயே (வெஞ்சுடர்த்திருச்சக்கரமேந்து கையனைக்) கண்டார் உளர். |

வெள்ளைவிளிசங்கேந்துகையனைத் தேர்மிசை முன்பு நின்று கள்ளப் படைத்துணை யாகியிருந்தபோது காண்பது கீழே கூறப்பட்டது. இங்கே வெஞ்சுடர்திருச்சக்கரமேந்துகையனையவ்வாறு காண்பது கூறப்படும். ஆயுதமெடுக்காமலிருப்பதாகச் சொல்லி யணிவகுத்துப் போர் நடத்தும் கண்ணன், தான் ஆயுதங் கையிற் கொண்டு வரவில்லை யாகிலும் எப்போதும் ஆயுதம் பொருந்தினவனாதலால் தான் நினைத்தபடி போரை நன்கு நடத்திவைப்பதற்காக, அபிமந்யுவின் அழிவுக்குக் காரணமான ஜயத்ரதனை அடுத்த நாள் அஸ்தமனத்திற்குள் கொல்லாவிடில் அக்னிப்ரவேசம் செய்துவிடுவேனென்ற அர்ஜுனனின் உக்ரமான ப்ரதிஜ்ஞையை யறிந்து கௌரவர்பக்ஷத்திலுள்ள வரசர்கள் வ்யூஹம் கட்டிப் போர்நடுவே ஜயத்ரதனைக் காணாதபடி காத்துக்

கொண்டு ஸூர்யாஸ்தமனத்தை யெதிர்பார்த்துக்கொண்டு நாழிகை கணக்கிட்டுக்கொண்டே போர் செய்துவந்தபோது, (கண்ணன்) தனது திருச்சக்கரத்தை யழைத்து, 'வெஞ்சுடரான நீ சூர்யனது கிரணங்களை யெல்லாம் பறித்துக்கொண்டு இருளை ஸ்ருஷ்டித்து அவனை மறைத்து இரவு வந்தாற் போல் செய்துவிடு' என நியமிக்க, திருச்சக்கரமும் அவ்வாறு செய்து சூர்யனை மறைக்க அரசர்களும் சூர்யாஸ்தமய மாய்விட்டதால் இனி யர்ஜுநன் அக்னி ப்ரவேசந்தான் செய்யவேண்டுமென்றுகந்திருக்க ஜயத்ரதனும் நிர்ப்பயமாய்த் தலை காண்பிக்க அக்கணமே சூர்யன் ப்ரகாசமானதும், அர்ஜுநன் அவனைத் தலை வாங்கினதும் நடவாநின்றனவே. ஆக அங்கே அவ் வர்ஜுநனின் பக்கலே நின்ற கண்ணனை அந்தத் திருவாழியானுகக் காண்பதென்றபடி.

பாழியில் ஆகாயத்தில். அர்ஜுனன் ஜயத்ரதனது தலையை யறுத்தவுடனே, 'அந்தத்தலையை பூமியில் நீ வீழ்த்தினால் உன் தலை நொறுங்கிப் போம். ஏனெனில், அவன் தகப்பனுன வ்ருத்தக்ஷத்ரன் தபோபலத்தாலே அங்ஙனம் சபித்திருக்கிறான். அவனிப்போது ஸ்யமந்தபஞ்சகத்திற்கு வெளியிலே தவம் புரிந்துவருகிறான். அவன் மடியிலேயே இது போய் விழவேண்டும்' என்று கண்ணனருள அர்ஜுநனும் தநுர்வித்யையில் தனக்குள்ள ஸாமர்த்தியத்தினாலே ஆகாயமார்க்கத்திலேயே பாணங்களைக் கொண்டே கீழும் மேலுமாகத் தகப்பனுள்ளவிடம் வரை வெகு ஆச்சர்யமாய் செலுத்தி அவன் மடியிலேயே அதை வீழ்த்தினான். அநுஷ்டானத்தில் இருந்த வ்ருத்தக்ஷத்ரன் அது முடிந்தெழுந்தபோது தலையும் கீழே விழத் தகப்பன் தலையே நொறுங்கிற்று என்ற வரலாற்றை (7—5—58)ல் மஹாபாரதத்திலே காண்க.

பாழ் என்பதற்குப் பழைய உரைகளில் பொருள் கூறவில்லை. பாழாவது பாழியென்பர் சிலர். ஜயத்ரதனைக் குழிவெட்டி நிறுத்தி மறைத்துக்கொண்டு, 'நீ சில நாழிகை காத்துவா, நான் சில நாழிகை காக்கிறேன்' என்று கூறிட்டு அதாவது பங்கிட்டுக்கொண்டு அரசர் காத்துவந்தாரென்றும், அர்ஜுனன் அக்னிப்ரவேசம் செய்ய முயன்ற சமயத்திலே அவனைக் காண ஜயத்ரதன் தலை நீட்டினதாகவும், அப்போது அர்ஜுனன் அவன் தலையை அக்குழியிலேயே புருளும்படி யறுத்துத் தள்ளினனென்று முரைக்கின்றனர். இவ்வித வரலாறு மஹாபாரத மூலமா, வேறுமூலமாக வந்ததா வென வாராய்க. இது நிற்க.

இப் பாசுரத்திலும் முன் பின் பாசுரங்களிற் போலே, தேடுகிறவர்கள், கண்டவர்கள் என விருவகையாகப் பிரித்துச் சொல்லுவது பெறப்படுவதற்காகத் தேவகி சிறுவன் என்பதற்கு மேல், 'உள்ள விடம் வினவில்' எனச் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்றனர் ஜீயர். இவ்வளவு க்லேசப்படாமல் கீழ் நாம் கூறினபடி கூறலாகாதோ வென வாராய்ந்தபோது திருவாய்மொழிப்பிள்ளை யத்யாஹார மின்றியே பொருளுரைத்தது காணலாயிற்று. அவர், 'கீழ் கள்ளப்டை யென்றதை வ்யக்தீகரிக்கிறார் இப்பாட்டால்' என அவதாரிகை கூறி அந்வயமும் அத்யாஹாரமிராமல் ஒருபடி கூறியுள்ளார். கள்ளப்படை யென்பதற்கு அவர் கொண்ட பொருள் வேறு.

இத்திருமொழியிலே ஒவ்வொரு பாசுரத்திலும் முன்னடிகளுக்கும் பின்னடிகளுக்கும் என்ன விதமான ஸம்பந்த மென்பதும் ஆராயப்பட வேண்டிய தொன்று. வெவ்வேறு அவதாரங்களையும் செயல்களையும் ஒரு தர்மியிலே அதாவது ஒரே பரமாத்மஸ்வரூபத்திலே அந்வயித்துக்கொடுப்பதற்காக விங்ஙனமருளிச் செய்ததென்னில், 'கொலையானைக் கொம்பு பறித்து' என்கிற பாசுரத்திலே தேடுகிறவர்களுக்கே ஈரவதாரங்கள் செய்தவனொருவனென்று தெரிந்திருப்பதால் அங்கே அதைச்சொல்வது வீணாகும். ஒரே அவதாரத்திலுள்ள செய்கைகளைச் சொல்லும் பாசுரங்களிலே என் சொல்வது? ஒரு தர்மியிலுள்ளது முன்னமே தெரியலாயிற்றே. இப் பாசுரத்திலே இரண்டாமடியிலும் படைபொருதவன் என்பதற்குத் திருவாழியைக் கொண்டு மறைத்தவன் என்று பொருள் கூறி ஜயத்ரதனை மறைத்து நாழிகை கூறிட்டவர் முன்னே ஸூர்யனை மறைத்த கண்ணனைத் தேடுகிறீர்களாகில், ஸூர்யனை மறைத்தபோது ஜயத்ரதனைக் கொன்ற வர்ஜுநன் பக்கலே கண்டாருள ரென்று அதே வ்ருத்தாந்தத்தைப் பேசி உத்தரமளிப்பதும் ஸ்வரஸமாகத் தோன்றவில்லை. ஆகையால் கீழே நாம் கூறியவாறு முன்பின் அடிகளுக்கேதேனும் ஒரு ஸம்பந்தத்தைப் புத்திமான்கள் பாசுரந்தோறும் ஆராய்வதும், இப் பாசுரத்திற்குத் திருவாய்மொழிப்பிள்ளை போன்வழியிலே யொருவாறு முன் பாசுரத்தோடு சேர்த்துப் பொருளுரைப்பதும் யுக்தமாம். 'உள்ளவிடம் வினவில்' எனச் சேர்ப்பது அவச்யமாகில், 'பொருத நாதனை நாடுதிரேல்' என்ற வாறே யருளிச்செய்திருக்கலாம்.

'படை பொருதவன் தேவகி தன் சிறுவன்' என்பதைச் செயப்படுபொருளாக்கிக் கண்டா ரென்றதோடும் சேர்க்கலாம். (அ)

9\. மண்ணும் மலையும் மறிகடல்களும் மற்றும்யாவுமெல்லாம்
திண்ணம் விழுங்கியுமிழ்ந்த தேவனைச்சிக்கென நாடுதிரேல்
எண்ணற்கரியதோரேனமாகி யிருநிலம் புக்கிடந்து
வண்ணக்கருங்குழல் மாதரோடு மணந்தானைக்கண்டாருளர். (336)

| | |
|---|---|
| மண் உம் | பூமியையும் |
| மலை உம் | மலைகளையும் |
| மறி கடல் கள் உம் | மறிப்பு உள்ள ஸமுத்திரங்களையும் |
| மற்றும் யாவும் | மேலுலகம் முதலான மற்ற அசேதநங்களையும் |
| எல்லாம் | சேதநர்களையும் |
| திண்ணம் | திடமாக |
| விழுங்கி | திருவயிற்றில் வைத்து |
| உமிழ்ந்த | ஸ்ருஷ்டி காலத்திலே வெளியாக்கின |
| தேவனை | ஜகத்வ்யாபாரலீலனான எம்பெருமானை |
| சிக்கென | திடமாக |
| நாடுதிர் ஏல் | காணத் தேடுகிறீர்களாகில், |
| எண்ணற்கு அரியது | நினைப்பதற்கு முடியாத = அளவற்ற பெருமை வாய்ந்த |
| ஓர் | ஒப்பற்ற |
| ஏனம் ஆகி | ஆதிவராஹமாய் அவதரித்து |
| இரு நிலம் | பெரிய பூமியை |
| புக்கு இடந்து | கடலிலே புகுந்து அண்டச் சுவரிலிருந்து பேர்த்து |
| வண்ணம் | அழகான |
| கரு | கறுத்த |

| | | | |
|---|---|---|---|
| குழல் மாதரோடு | கூந்தலையுடைய பூமியை அபிமானித்த பூதேவியாரோடு | மணந்தானை | விவாஹம் செய்துகொண்டவனை கண்டார் உளர். |

மறி கடல். மறிப்பு=தடுப்பு. தம் எல்லையை மீறாத என்றபடி. மறிதல் திரும்பலாய் அலைமோதும் கடலெனவுமாம். விழுங்கியுமிழ்ந்த வென்ற பதங்களாலே ப்ரளயத்திற்கும் ஸ்ருஷ்டிக்கும் காரணமென்று கூறி இப்படியுள்ள தேவனை=ஸ்ருஷ்டிஸ்திதிஸம்ஹாராந்த:ப்ரவேசநியமநாதிகளான லீலைகளை உடையவனை நாடுவதை யறிவிக்கவே ஸ்திதிகாரணமாக வவன் அவதரித்துச் செய்த வகை யொன்றைக் கூறி, காணலா மென்கிறார் மேலீரடிகளால். ஹிரண்யகசிபு ஸம்ஹாராவதாரத்தைத் தொடக்கத்திலே யருளி ஹிரண்யாக்ஷ ஸம்ஹாராவதாரத்தை முடிவிலே மொழிந்தருளினார். மாதரோடு. பூமியை யிடந்து மிதக்கவைத்து நிலைக்கச் செய்ததாலே அதற்கபிமானிதேவதையாயிருந்த பூமிப்பிராட்டியார் அந்த வராஹாவதாரத்திலே அவன் மணந்துகொள்ளும்படி அவதரித்தருளினார். அவ் வவதாரத்தை மாதரென்றது. மாதவென அழகுக்கும் ஆசைக்கும் பெயர். அழகும் அநுராகமுமே வடிவுகொண்டாற் போலிருந்த விப் பிராட்டியோடு என விங்கே பொருளாம். (கூ)

10\. கரியமுகிற்புரை மேனிமாயனைக்கண்ட சுவடுரைத்துப்
புரவிமுகம்செய்து செந்நெலோங்கி விளைகழனிப்புதுவை
திருவிற்பொலி மறைவாணன் பட்டர்பிரான் சொன்னமாலை பத்தும்
பரவுமனமுடைப்பத்தருள்ளார் பரமனடிசேர்வர்களே. **(337)**

| | | | |
|---|---|---|---|
| செம்நெல் | நல்ல நெற்பயிர்கள் | கரியமுகில் | நீலமேகத்திற்கு |
| ஓங்கி | உயர்ந்து வளர்ந்து | புரைமேனி | ஸமமான திருமேனியுடைய |
| புரவி முகம் செய்து | கதிர் முதிர்ந்து கீழ்நோக்கி வளைந்திருப்பதாலே குதிரை முகம் கொண்டவை போலிருந்து | மாயனை | ஆச்சர்ய லீலனான எம்பெருமானை |
| விளை | விளைதற்கிடமான | கண்ட சுவடு | ஸாக்ஷாத்கரித்ததற்கடையாளங்களை |
| கழனி | வயல்களை யுடைய | உரைத்து சொன்ன | விரித்து இயற்றின |
| புதுவை | ஸ்ரீ வில்லிபுத்தூரிலிருப்பவரும், | மாலை பத்தும் | இப் பத்துப் பாசுரங்களையும் |
| திருவின் பொலி | பாரமைகாந்திய ஸம்பத்தினாலே விளங்குமவரும், | பரவும் | ப்ரீதியோடு கற்கும் |
| மறை வாணன் | வேதார்த்த பரிசீலனத்திலே போது போக்குபவருமான | மனம் உடை | மனத்தை உடைய |
| பட்டர் பிரான் | பட்டநாதன் | பத்தர் உள்ளார் | பத்தரைச் சார்ந்தவர்கள் |
| | (பெரியாழ்வார்) | பரமன் அடி சேர்வர்கள் | எம்பெருமான் திருவடியை பெறுவர்கள். |

கழனிகள், நிமிர்ந்திருக்கமாட்டாமே நெறித்து வளைந்து குதிரைமுகம் போல் பொலிகின்ற பெருங்கதிர்கள் கொண்டு விளங்குவதெல்லாம் திருவிற்பொலி மறைவாணருக்கு அவ்வூர் வாஸஸ்தானமாயிருப்பது பற்றியாம். மறைவாணன் என்றவிடத்திலே இவர் கல்பஸூத்ர வ்யாக்யானம் செய்தருளினதாக ஸ்ரீ தேசிகன் அருளிச்செய்தது அநுஸந்திக்கத் தக்கதாம். பரமனடி சேர்

வர்கள். இவர்களுக்கு நரகாதிகளுக்கு ப்ரஸக்தியே யில்லையென்பதுமாத்திர மன்றி இந்த ஸம்ஸார மார்க்கங்களிலே கதாகதங்கள் செய்துழன்றிராமே எம்பெருமானுடைய பாதாரவிந்தங்களிலே பரிசர்யை செய்து பரமானந்தத் தைப் பெற்று விளங்குவது ஸுலபமாம்படி யிங்கும் கண்டார் காண்பிக்கப் பரமனடி கண்டு களிப்பரென்றபடி. (ய)

ப்ரபந்தரக்ஷையில் **4. 1.** கதிராயிரமிரவி உரை முற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

---

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

## பெரியாழ்வார் திருமொழி 4, 2.

# அலம்பா வெருட்டா

எம்பெருமானுடைய ஸ்வரூப ஸ்வபாவங்களைப் பல படி கேட்ட பிறகுச் சிற்சில பெருமைகளைச் சில வுதாரணங்களைக் கொண்டு விசதமாக்கிக்கொள்ள விரும்பினார்க்கு அப் பொருள் தெளியுமிடம் கூறி, நாம் காணமுடியாவிட்டா லும் கண்டார் மூலமே அறியப்படுவதால் விசதமாயறிந்தபடி யாமென்றருளினார். இப்படி யெம்பெருமானையும் அவன் பெருமைகளையும் ச்ரவண—மநந—த்யாந மூலமாக ஒருபடி தர்சிக்கலா மல்லது வேறு வகையாற் காண வியலாதாகிலும் சில வகையிலே நாம் கண்ணுற் காணும்படி அவ்வித அவதாரங்கள் செய்தவனே கோயில் கொண்டு அர்ச்சையாய் எழுந்தருளி யிருப்பதாலே கண்ணாலும் காணலா மெனக் கருதி இனி அர்ச்சைகளின் அநுபவத்திலீடுபட்டினியரா கிறார். வ்யூஹ—விபவ—அர்ச்சைகளிலே படிப்படியாய் பரனான அவனுடைய ஸ்வபாவங்கள் மறைக்கப்பட்டிருந்தாலும் ஆழ்வார்களைப் போன்ற ஒரு சிலருக்கு இங்கும் பூர்ணாநுபவமுண்டாகையாலே பரோக்ஷங்களான அவதாரங்களைவிட ப்ரத்யக்ஷமான அர்ச்சையிலே அவர்கள் இழிவது. மற்றவர் இழிவது, கூடின மட்டில் கொள்வதற்காக. அர்ச்சையிலேயே அவ்வவதாரப் பெருமைகளும் மற்றுமெல்லாம் தோற்றும். அன்புடன் இழிந்தவர்கள் தாங்கள் விரும்பினபடி கோலங்களைச் செய்து கண்டு களிக்கலாம். செய்யும் கோலங்கள் இத்தகை யவை யெனத் தெளிய அவதாராதி வரலாறுகளைக் கற்பதாம். எம்பெருமா னுடைய ரூபங்களிலே பரம் பரமபதத்தார்க்கு ஆனது. வ்யூஹம் ஸ்ருஷ்டி ஸ்திதி—ஸம்ஹாரங்களை வகுத்துக்கொண்டு நடத்த விருப்பது. விபவங்கள் ஒரு காலத்தில் ஒரு தேசத்தார்க்காகத் தோன்றுமவை. ஹார்த்தம் ப்ரபலமான ஜ்ஞானமும் சக்தியுமுள்ள ஒவ்வொருவனும் படாத பாடு பட்டுத் தனித்தனியே தன்னுள்ளே யனுபவிக்கக்கூடியது. அர்ச்சைகளே நமக்காக வேற்பட்டவை. குழாங்களாகக் கூடியிருந்து கண்டுகக்கலாம், ஆக நாமிட்ட வழக்காய் நின்ற

ளும் அர்ச்சைகளே நமக்கு ஸுலபமானவை. எனவே அவற்றின் மேன்மையைக் கண்டு அவற்றிலுமீடுபட்டு இவ்வாழ்வார் திருமாலிருஞ்சோலை தொடங்கித் திருவேங்கடம் வரையிலாக அனுபவத்தை ப்ரபந்தித்தருளுகிறார்.

திவ்ய தேசங்கள் சிறந்து திகழ்வது தென்தேசத்திலே. ஆகவே பூமிப்பிராட்டி நித்யவாஸம் செய்வது இவ்விடத்திலாம். அதனால் அவளுடைய திருமேனியிலே இரு ஸ்தனங்களாக விளங்காநிற்பவை திருமாலிருஞ்சோலையும் திருவேங்கடமும். ஸ்திரீகளுக்கு முக்கியமான லக்ஷணம் ஸ்தனங்களாம். அவற்றின் ஸம்ச்லேஷத்திலே விசேஷ நோக்குள்ள எம்பெருமான் இவ்விரண்டிடங்களிலே சிறப்புடன் விளங்குகிறான். இதனை, 'தென்னனுயர்பொருப்பும் தெய்வவடமலையுமென்னுமிவையே முலையா வடிவமைந்த' என வருளிச்செய்தார். அதனால் இவற்றிலொன்றை முதலிற்றொடங்கி, மற்ற விடங்களிலுள்ள அர்ச்சைகளையும் இவைகளின் நடுவில் நிறுத்தி, சில வடதேசத்தர்ச்சைகளையும் விசேஷித்துகந்து திருவேங்கடத்தோடு தலைக்கட்டி யருளப்போகா நின்றவராய் இரு திருமொழிகளிலே திருமாலிருஞ்சோலையிலுள்ள ஈடுபாட்டை எடுத்துரைத்தருளுகிறார். கோவர்த்தனமென்னும் கொற்றக்குடையை வர்ணித்தருளினாற் போலே இதனையும், முதலடிகளில் எழுந்தருளி யிருக்கும் எம்பெருமானின் பெருமையையும் மேலடிகளில் திருமலையின் பெருமையையும் கூறி வர்ணித்தருளுகிறார். ஆகவே இது இருவிதப் பெருமைகொண்டதாலே மாலிருஞ்சோலை யெனப்படுகிறது போலும். மால்=பெருமை. இருமை=பெருமை. மிக்க பெருமையுடைய சோலையாகத் திகழும் மலை மாலிருஞ்சோலை. மால். வ்யாமோஹமாய் மனத்தைக் கவரும் பெருஞ்சோலையென்பதுமாம்.

1. அலம்பாவெருட்டாக்கொன்று திரியுமரக்கரைக்
குலம்பாழ்படுத்துக் குலவிளக்காய் நின்றகோன்மலை
சிலம்பார்க்கவந்துதெய்வ மகளிர்களாடுஞ்சீர்ச்
சிலம்பாறுபாயும் தென் திருமாலிருஞ்சோலையே. (338)

| | | | |
|---|---|---|---|
| அலம்பா | ஆரவாரித்து | தெய்வ மகளிர்கள் | தேவ ஸ்திரீகள் |
| வெருட்டா | பயமுறுத்தி | சிலம்பு ஆர்க்க | தங்கள் காலணிகள் ஒலிக்க |
| கொன்று | கொலைசெய்து | வந்து | நடந்து வந்து |
| திரியும் | நிர்பயமாய்நடக்கும் | ஆடும் | நீராடும்படியான |
| அரக்கரை | ராக்ஷஸரை | சீர் | குணங்களையுடைய |
| குலம் | கூட்டமாக | சிலம்பாறு | நூபுரகங்கை |
| பாழ்படுத்து | அழித்து | பாயும் | பாயா நிற்கும் |
| குலம் | மநுவம்சத்திற்கு | தென் | தெற்கிலுள்ள |
| விளக்காய் | ப்ரதீபமாய் | திருமாலிருஞ் சோலை | மேன்மை பொருந்திய மாலிருஞ் சோலையாம். |
| நின்ற | நிலைத்து விளங்கின | | |
| கோன் | நாதனை ராமனுடைய | | |
| மலை | மலையானது—, | | |

கீழ்த் திருமொழியில், 'எதிரிற்பெருமை யிராமனை இருக்குமிடம் நாடுதிரேல்' எனத்தொடங்கி இராமபிரானுடைய ப்ரபாவ விசேஷத்தைக் கேட்டதாக வைத்து ஹிரண்யாஸுர வதம் செய்தவகையைக் கூறி மேன்மேல் அதன்படியிலே அவனுடைய கல்யாண குணங்களைக் காட்டியருளி, இப்போது அவனை நேரிற்காண வாசைப்பட்டு அவனிருக்குமிடமான ஒரு திவ்ய தேசத்

தையே தேடுகிறீர்களாகில் அது திருமாலிருஞ்சோலை யென்கிறோமென்று உபதேசித்தப்படி யெனப் பாசுரமமைந்தபடியிலே அந்வயம் கொண்டதால் தேறிற்று.

இராமபிரான் விபவத்தில் எழுந்தருளி யிருந்த மலை யொன்றுண்டு. அதாவது நந்தனவனம் போலே புஷ்பித்த சோலைகள் நிறைந்த சித்ரகூடம். அது வடக்கிலுள்ளது. இப்போது அவன் எழுந்தருளி யிருப்பது இந்தத் தென்திருமாலிருஞ்சோலை. அங்கே பாயும் நதி மந்தாகினி (ஆகாச கங்கை). இங்கே நூபுரகங்கை. திரிவிக்ரமாவதாரத்திலே பெருமாள்திருவடியில் பிரமன் தீர்த்தம் சேர்த்தபோது அவனது திருக்கழலினின்று அதாவது திருவடியணியினின்று தனியே பெருகிவந்த கங்கை நூபுரகங்கையாம்.

அலம்பா, வெருட்டா, படுத்து. இம் மூன்றும் இறந்த கால வினையெச்சங்கள். அலம்புதல் = ஒலித்தல், ஆரவாரித்தல். தளும்புதல் என்ற பொருள் கொண்டால் தளும்பச் செய்தல், பார்ப்போர் மனத்தை யலையச் செய்தலெனப் பிறவினைப்பொருள் கொள்ளவேண்டும்படியா மென்று ஜீயர் உரைத்த இரண்டாம் பொருள் இதாம். படுத்தல் = செய்தல். குலம் என்றது, அவர்கள் கூட்டங் கூட்டமாய் வந்து போர் செய்ததைக் குறிக்கும். அலம்பா இத்யாதி விசேஷணம், நமக்கு மேல் யாருமில்லை யென நடந்த துஷ்ட.வரக்கரைப் பாழ்படுத்தினனல்லது வீபஷணாதிகளைப் போன்ற ராக்ஷஸ குலத்தாரை யழிக்கவில்லை யென்பதற்காக வாம். சிலம்பார்க்க. நடந்தே வந்து நீராடவேணுமென்று அவர்கள் நினைத்தனர் எம்பெருமானிடமுள்ள பக்தியாலும், அப்போதே இந் நீராட்டம் ப்ராயச்சித்தமாகு மென்கிற நோக்காலும். (க)

2\. வல்லாளன்தோளும் வாளரக்கன்முடியும், தங்கை
போல்லாதமூக்கும் போக்குவித்தான் போருந்தும்மலை
எல்லாவிடத்திலுமெங்கும் பரந்துபல்லாண்டோலி
செல்லாநிற்குஞ்சீர்த்தென் திருமாலிருஞ்சோலையே. (339)

| | |
|---|---|
| வல் ஆளன் | வலிய ஆண்மை யுடையவனின் |
| தோள் உம் | தோள்களையும், |
| வாள் | சந்த்ரஹாஸமெனத் தனிப்பேர் கொண்ட கத்தியையுடைய |
| அரக்கன் | ராக்ஷஸனுடைய |
| முடி உம் | தலைகளையும், |
| தங்கை | அவன் தங்கையான சூர்ப்பணகையின் |
| பொல்லாத | தீதான |
| மூக்கு உம் | மூக்கையும் |
| போக்குவித்தான் | அறும்படி செய்தவன் |
| பொருந்தும் மலை | மன்னி யிருக்கும் மலையானது— |
| எல்லா இடத்திலும் | திருமலையின் பரப் படங்கலும், |
| எங்கும் பரந்து | உலக மெல்லாம் வ்யாபித்து |
| பல்லாண்டு ஒலி | பல்லாண்டு பாட்டின் கோஷமானது |
| செல்லா நிற்கும் | போகும்படி யிருக்கும் |
| சீர் | பெருமையையுடைய தென் திருமாலிருஞ் சோலையே. |

வல்லாளன் தோளும் வாளரக்கன் முடியுமென்று பிரித்துக் கூறியிருந்தும் வல்லாளனை வாளரக்கனது தோளும் முடியுமெனச் சேர்த்துரை செய்கின்றனர். இராவணன் தோள்களைத் துணித்ததாக ப்ரமாணமுண்டோ வெனில்,

'தென்னிலங்கை மன்னன் சிரந்தோள் துணி செய்து' (2-6-9) என ஏற்கனவே யருளியுள்ளாரென்க. பிரித்துக் கூறினதற்கேற்ப வெவ்வேறு விரோதியைக் கொள்வது தகும். அப்போது பாணாஸுரனை வல்லாள னெனலா மென்பர். 'வாணனை யாயிரந்தோளும் பொழிகுருதி பாய' என வருளிச்செய்து முள்ளார். இராமனை தோள்களைத் துணித்ததைச் சொல்வது பொருத்தமாகும். இவர் விராதன் கபந்தன் என்ற விருவருடைய தோள்களையும் துணித்திருக்கிறார். கும்பகர்ணவதத்தில் முதன்முதல் தோள்களைத்தான் துணித்தது. பிறகே அவனுடைய பராக்ரமம் அடங்கிற்று. இங்கே ராவணன் சூர்பணகை யிருவரைச் சொல்லுமிடத்திலே கும்பகர்ணனைச் சொல்வது சாலப் பொருந்தும்.

போல்லாத மூக்கும். இதை யிங்கே சேர்த்தது அநாயாஸமாய் இவள்மூக்கைப் போக்கினதற்குச் சமானம் அவர்கள்தோள்முடிகளைப் போக்கினது மென்பதற்காக. 'மூக்கு முகத்திற்கழகை யளிப்பதாகையாலே அதனை யறுத்திருக்கலாம். அது பொல்லாத தென்பதெங்ஙன' மென்னில், ஹிதமாகச் சொன்னதைக் கேளாததாலே காதை யறுத்தார். அச்ச மடக்க மின்றிப் பேசினதாலே நாக்கை யறுத்திருக்கவேண்டும். வாயினுள் கை வைத்து நாக்கை யிழுத்து நறுக்குவதை அருவருத்து அதற்குப் பதிலாக மூக்கைப் போக்கினார், பேசும்போது நாக்குக்கு மூக்கு ஸஹாயமானதாலே. ஆகவே யன்றோ அவள் தெளிவாகப் பேச முடியாமல் பரிதவித்த தென்க.

'எல்லாவிடத்திலுமெங்கும்' என்று சொன்னதையே சொல்வது தகாதாகையாலே எல்லாவிடத்திலு மென்பதற்கு எல்லாரிடத்திலு மெனப் பொருளுரைப்பர். ஸேவிக்க வந்தவ ரெல்லோரும் பல்லாண்டு பாடுகின்றன ரென்றபடி. எங்கு மென்பதற்கு உலகமெங்கு மெனப் பொருள் கூறி பல்லாண்டொலி யெங்கும் பரந்து செல்லும்படியான சீரை எல்லாவிடத்திலும் = மலையின் பரப்படங்கலு முடையதான என வுரைத்தே, வந்தவரெல்லோரும் பல்லாண்டு கூறுவதும் இதனால் தேறு மெனலாம். (உ)

3. தக்கார் மிக்கார்களைச் சஞ்சலம் செய்யுஞ்சலவரைத்
தெக்காநெறியே போக்குவிக்கும் செல்வன் பொன்மலை
எக்காலமுஞ்சென்று சேவித்திருக்குமடியரை
அக்கானெறியை மாற்றுந்தண்மாலிருஞ்சோலையே. (340)

| | |
|---|---|
| தக்கார் மிக்கார்களை | ஸமரும் மேற்பட்ட வருமானவர்களை |
| சஞ்சலம் செய்யும் | அலையச் செய்யும் |
| சலவரை | பகைவரை |
| தெக்கு ஆம் நெறி ஏ | தெற்கான வழியையே |
| போக்கு விக்கும் | அடை விக்கும் |
| செல்வன் | திருமாலினுடைய |
| பொன் மலை | அழகிய மலையானது |

| | |
|---|---|
| எ காலம் உம் | எப்போதும் |
| சென்று | வந்து சேர்ந்து |
| சேவித்திருக்கும் | தொழா நிற்கும் |
| அடியரை | தாஸர்களை |
| அ கான் நெறியை | அந்தக்காட்டு வழியை |
| மாற்றும் | தவிர்க்கும் |
| தண் | சீதளமான |
| மாலிருஞ் சோலை | திருமாலிருஞ் சோலை யாம். |

தக்கார். முதலடிக்கு ஆச்ரித விரோதிகளை யெனப் பொருள். நிஸ்ஸமாப்யதிகனான எம்பெருமானுக்கு ஆச்ரிதர் ஸமராகையாவது அவனைப் போல் அநுக்ரஹம் செய்கை. மிக்காராகை யாவது நிக்ரஹிக்காமலிருக்கை. எம்பெருமான் ஈச்வரனானபடியாலே நிக்ரஹிக்கவேண்டி யிருக்கிறது. இந்த இரண்டு அம்சங்கள் உள்ளபோதே ஒருவன் ஸ்ரீவைஷ்ணவனென்ற பேர் பெறுவது. சலவர் பகைவர். சலம்=கபடம். தணியாக்கோபமுமாம். நல்லவர் போலேயிருந்து தீமை செய்பவர் சலவர்; தீமை செய்வது தெரியாதபடி நடந்து அதைச் செய்பவர். இல்வல-வாதாபிகள் அகஸ்த்யரை, ஆராதிக்க அழைத்தாற் போலழைத்து அழிக்கப்பார்த்தனர். ராவண மாரீசாதிகள் மாறுவேஷம் பூண்டு ஸீதையையும் அவளுக்குக் கொழுகொம்பான இராமனையும் சஞ்சலப்படுத்தினர். அஸுரர்களும் ராக்ஷஸர்களு மிருக்கட்டும்; மனிதர்களிலேயே பெரியோர்களைச் சஞ்சலப்படுத்தும் அதிகாரிகள் பலருளர். இவர்கள் தங்களுக்கென்ன வேண்டுமானாலும், கொள்ளக் குறைவிலன் வேண்டிற்றெல்லாம் தரும் செல்வனைக் கேட்டுப் பெறலாமே; ஆச்ரிதரை எதற்குப் பீடிப்பது? இவர்கள் நேராக எம்பெருமானுக்கு விரோதம் செய்யாவிடினும், 'யஸ் தம் த்வேஷ்டி ஸ மாம் த்வேஷ்டி' என அர்ஜுநனை த்வேஷிப்பவனைத் தன்னை த்வேஷிப்பவனாகக் கண்ணன் அருளிச்செய்தபடி அவனுக்கு விரோதிகளாகிறார்கள். இவர்களைத் தெக்காநெறி போகச் செய்கிறான். எம்பெருமானம்புக்கிலக்கானவர்களுக்கு நற்கதியே யன்றி நரகமேதென்ன வேண்டா. தான் நேராகக் கொல்லாமல் துர்யோதநாதிகளைக் கொன்றாற் போலே கொல்லுவது முண்டன்றோ? இதற்காகவே யழகர் தெற்கில் நரகத்திற்குப் போகவைக்கும் யமன்நகரத்திற்கு கருகிலே யெழுந்தருளியிருப்பது, இதனைக் கண்ட பிறகாவது முன்புத்தியை மாற்றிக்கொண்டு அடைக்கலம் புகுவரோ என்ற நோக்கத்தால். அன்றி, அம்புக்கிரையாக்காமல், 'க்ஷிபாம்யஜஸ்ர மசுபாந் ஆஸுரீஷ்வேவ யோநிஷு' என்றபடி நரகத்தீக்கு எரிவிறகாக்குவது முண்டு. பகவத் பக்தர்களாயிருந்தே பாகவத த்வேஷிகளா யிருப்பார்க்கு நாராயண நாமோச்சாரணம் நரகத்தை விலக்காதோ வென்னில், நாமோச்சாரணத்தை விடப் பன்மடங்கதிகமான பெருமையையுடைய பக்தி யோகத்தையும் தடுத்து ப்ரம்மவிதபசாரம் தன் பலனைக் கொடுக்குமாகையாலே நிர்ப்பயமாயிருக்க வொண்ணாது. மேலுமவர்கள் ஸ்வர்கம் போனாலும் அவர்களுக்கு அது நரகமாம். பரமாத்மாவின் ஸ்தானத்திலே பற்றுடையார்க்குப்பிறவான பலன்களெல்லாம் நரகமே. அதற்குப் போம் வழியான பித்ருயாணமெனப்படும் தூமாதி மார்கத்தையும் (தக்ஷிணமார்க்கம்) தெற்காநெறி யென்றே ஸ்ரீ விஷ்ணுபுராணம் (2-8) கூறுகிறது. ஆக அவர்களை அர்ச்சிராதிமார்க்கம் போக விடமாட்டா னென்றதாயிற்று. இனி, தக்கார் இத்யாதிக்குச் சலவர்கள் தங்களைப் போல் ஸம்ஸாரிகளான படியாலே தக்காரும், பகவானை யாச்ரயித்தவரானபடியாலே மிக்காரு மானவர்களைச் சஞ்சலம் செய்தால் அவர்களை எனவுரை யாம். அக்கானெறி. அஸிபத்ரவனம் முதலான அந்த நரகமார்க்கம், அல்லது ஸம்ஸாரகாந்தாரம். 'துர்கஸம்ஸாரகாந்தார மபார மபிதாவதாம் ! ஏக: க்ருஷ்ண நமஸ்காரோ முக்திதீரஸ்ய தேசிக:' என்றபடி ஸம்ஸாரத்தைக் கானக வருளினது. அதைக் கடந்து பெறும் முக்தி யாகிற மஹாநந்தக் கடலுக்குக் கரையாம் மாலிருஞ்சோலை யென்னும் கண் திருமலை. (௩)

4. ஆனாயர்கூடி யமைத்த விழவை யமரர்தம்
கோனார்க்கொழியக் கோவர்த்தனத்துச் செய்தான்மலை
வானாட்டினின்று மாமலர்க் கற்பகத்தோத்திழி
தேனாறுபாயுந்தேன்திரு மாலிருஞ்சோலையே. (341)

| | |
|---|---|
| ஆன் ஆயர் | பசு மேய்க்கும் இடையர்கள் |
| கூடி | ஒன்று சேர்ந்து |
| அமைத்த | ஏற்படுத்தின |
| விழவை | பூஜோத்ஸவத்தை |
| அமரர் தம் கோனார்க்கு | தேவதைகளுக்கு நாதனை இந்திரற்கு |
| ஒழிய | சேராதபடி |
| கோவர்த்தனத்து | கோவர்த்தன மலைக்கு |
| செய்தான் மலை | சேரவைத்த கண்ணபிரானுடைய மலையானது |
| வான் நாட்டினின்று | தேவலோகத்திலிருந்து |
| மா மலர் | பெரிய பூக்களையுடைய |
| கற்பகம் தொத்து | கற்பக விருக்ஷத்தின் பூங்கொத்துக்களின் |
| இழி | கீழே பெருகி விழும் |
| தேன் | தேனாலான |
| ஆறு | நதியானது |
| பாயும் | ப்ரவஹித்துவரும் |

தென் திருமாலிருஞ் சோலையாம்.

ஆன் என்பது பசுக்களின் க்ஷேமத்திற்காக ஆயர்கள் இந்திரபூஜை யமைத்ததை விளக்கும். கோனாரென்ற பலர்பால் இந்திரனிடத்திலே யிருக்கும் பெருமையையும், கோவர்த்தனத்து என்ற அத்துச்சாரியை அசேதநமான மலையின் சிறுமையையும் குறிக்கும். அப்போதவர்கள் நீரைப்பெய்த குற்றத்திற்கு க்ஷமை கொண்டு இப்போதிங்கே தேனைப்பெருக்கி வருகிறார்கள் மலையில் நிச்சலும் புஷ்பவர்ஷம் செய்துகொண்டென வருளுகிறார் வானித்யாதியால். அன்றி, மலை வானுடளாவி யிருப்பதாலே அங்கிருந்திழியும் கற்பகத்தேன் அங்கே நேரிலுள்ள இந்தத் திருமலையிலே பெருகாநின்ற தென்னவுமாம். (ச)

5. ஒருவாரணம் பணிகொண்டவன் பொய்கையில் கஞ்சன்றன்
ஒருவாரண முயிருண்டவன் சென்றுறையும்மலை
கருவாரணம் தன்பிடிதுறந்தோடக் கடல்வண்ணன்
திருவாணைகூறத் திரியுந்தண் மாலிருஞ்சோலையே. (342)

பொய்கையில்-மடுவிலேயே

| | |
|---|---|
| ஒரு வாரணம் | முதலையினிடம் பிடிபட்ட கஜேந்த்ராழ்வானாகிய ஓரானையின் |
| பணி | கைங்கர்யத்தை |
| கொண்டவன்–பெற்றவனும், | |
| கஞ்சன் தன்–கம்ஸனுடைய | |
| ஒரு வாரணம் | குவலயாபீடமென்னுமோ யானையின் |
| உயிர் உண்டவன் | உயிரை வாங்கினவனுமான எம்பெருமான் |
| சென்று | எழுந்தருளி |
| உறையும் மலை | நித்யவாஸம் செய்தருளும் மலையானது—, |
| கரு | கறுத்த |
| வாரணம் | ஆண் யானையானது |
| தன் பிடி | தன்னுடைய பேடையானை |
| துறந்து | ப்ரணயகலஹத்திலே ஆணை விட்டு |
| ஓட | விலகிப்போனபோது |
| கடல் வண்ணன் | கடலின் நிறமுள்ள கண்ணனின் |
| திரு ஆணை | திவ்யாஜ்ஞையை (அழகர் மேலாணை யென்பதை |
| கூற | சொல்ல (பிறகு) |
| திரியும் | பேடையின் திரியுமிடமான |

தண் மாலிருஞ்சோலை யாம்.

ஆணும் பெண்ணு மான யானைகள் அனேகங்கள் அழகரிடம் பக்தியுடனிருந்து கூடி விளையாடுமிடமாம் மாலிருஞ்சோலையிலே ஓர் ஆண்யானையைப் பார்த்துப் பெண்யானையானது அங்கே பட்டிப்பிடிகள் அதிகமாயிருப்பதாலே,

இது வேறொரு பேடையோடு கலப்புண்டதென நினைத்துக் கோபித்து விலகிப் போனால் ஒரு படியிலும் அதன் கோபத்தைத் தணிக்கமாட்டாதபோது ஆண் யானையானது, 'எல்லாச் சாதிகளிலும் போலே நம் சாதியிலும் நல்லதைக் காப்பதும் கெட்டதை யழிப்பதுமே செய்வதை ஓரானையைக்காத்து ஓரானை யின் உயிருண்டதாலே யறிவிக்கும் அழகர்மேலாணை வைத்துச் சொல்லு கிறேன், போகக்கூடாது' என்று ஆணையிட அப் பிடியும் அழகரிடம்வைத்துள்ள கௌரவத்தாலே அதற்கிணங்கிக் கூடுகிற தென்றபடி யாம். இப் பாசுரத் தையுட்கொண்டே கூரத்தாழ்வானருளிச்செய்த ச்லோகமாவது—;

"[illegible]
[illegible]"

என்றதாம். இங்கே திருவாய்மொழிப்பிள்ளை திருவாணை யென்பது பெரிய பிராட்டியாராணையு மாகு மென்றார். 'திருவாணை நின்னாணை' என்றாற் போலே இங்ஙனம் கொண்டால், ப்ரணயகலஹம் பிறந்தபோது பிடியானது துறந்தோட, போகாமல் தடுக்கக் கடல்வண்ணன் ஆணை கூறும் கரு வாரணம். பிடியும் திருவாணை கூறி, 'நீ என்னை விட்டுத் தனியே போகக்கூடாது. போனதாலன்றோ இக் கலஹம் வந்த' தென்னும். இப்படி இரண்டும் கூற கருவாரணம் சேர்ந்தே திரியும் மலை யிது வென்னலாம். கருவாரண மென்பது திரியு மென்றதோடு சேரும். (௫)

6. ஏவிற்றுச் செய்வானேன்றெதிர்ந்து வந்தமல்லரைச்
சாவத்தகர்த்த சாந்தணிதோட் சதுரன்மலை
ஆவத்தனமென்றமரர்களும் நன்முனிவரும்
சேவித்திருக்குந் தென்றிருமாலிருஞ் சோலையே. (343)

ஏவிற்று — கஞ்சன் ஏவினதை யெல்லாம்
செய்வான் — செய்வதற்காக
ஏன்று — பொருந்தி (உத்ஸாஹத்துடன்)
எதிர்ந்து வந்த — எதிராகி வந்து பொருத
மல்லரை — மல்லயுத்தம் செய்பவரை
சாவ — அவர்கள் மாளும்படி
தகர்த்த — எலும்பு முறித்தழித்தவனும், (அப்படி புரண்டும் அழியாதபடி)
சாந்து — (கூனி யளித்த) சந்தனத்தை
அணி — அலங்காரமாக வுடைய
தோள் — திருத்தோள்களை யுடையவனும்,
சதுரன் — ஸமர்த்தனுமான கண்ணன்
மலை — எழுந்தருளி யிருக்கும் மலையானது
அமரர்களும் — தேவர்களும்
நல் முனிவரும் — உயர்ந்த மஹர்ஷிகளும்
ஆவத்தனம் — இது (ஆபத்தனம்) ஆபத்தான காலத்தில் உதவுவது
என்று சேவித்திருக்கும் — எனப் புகழ்ந்து பணிந்து வர்த்திக்கும்
தென் திருமாலிருஞ்சோலை யாம்.

கஞ்சனிடமஞ்சிப் புகழுடன் மரிப்பது நலமென வந்ததால் மல்லரை யழித்தான். அன்றி கஞ்சன் ஏவினாலும் தாங்கள் விவேகத்தினாலோ பயத்தி னாலோ விலகுவார்களாகில், சாகாதபடி தகர்த்து விடலாம். ஏவுவான் என் றெதிர்பார்த்துப் பொருந்திப் பொருததாலே அழிக்கவேண்டியதாயிற்று. மல்யுத்தத்திலே கட்டிப்புரண்டபோதும் இட்ட சந்தனமும் அழியாதிருந்த

தென்றால், இவனுக்குள்ள லாகவத்தை என்னென்று சொல்வது. ஆகவே சதுரன் என்றார். திருமேனியில் வியர்ப்பு கூட விசேஷமாகவில்லை யென வேண்டும். சாந்திட்டதைக் கண்ட பெண்கள் சாந்தழியக் கண்டால் வேறு பெண்களோடு சேர்ந்ததாகச் சங்கை கொள்வரென்று அழிக்காமல் வைத்திருந்தானென வுரைத்து ரஸிப்பது முண்டு. ஆவத்தனம். வேறு தனம் கிடைக்காதபோது செலவு செய்யச் சேமித்து வைக்கப்படும் பொருள். ப்ரதிகூலரைத் தகர்த்து, அனுகூலம் செய்திருந்தால் அதைக் கூனியின் சாந்தைப் போலே ஹ்ருதயத்திலே தரிக்குமவனாலே அநிஷ்ட நிவ்ருத்தியும் இஷ்டப்ராப்தியு முண்டாகையாலே அவனெழுந்தருளியிருக்கும் மலையி லிருப்பதே நமக்கு மஹத்தான தனமா மென்றிருப்பரென்றபடி. (௬)

7. மன்னர் மறுக மைத்துனன்மார்க்கொரு தேரின்மேல்
முன்னங்கு நின்று மோழையெழுவித்தவன் மலை
கொன்னவிற்கூர்வேற் கோன்நெடுமாறன் தென்கூடற்கோன்
தென்னன்கொண்டாடுந் தென்றிருமாலிருஞ்சோலையே. (344)

| | | | |
|---|---|---|---|
| மன்னர் | கௌரவர் முதலானோர் | கொல் நவில் | கொலையிலே பயிற்சியுடைய |
| மறுக | மனம் தளும்ப | கூர் வேல் | கூர்மையான ஆயுதத்தையுடையவரிலே |
| ஒரு தேரின் மேல் | அர்ஜுனன் தேரிலே | கோன் | ச்ரேஷ்டனும் |
| மைத்துனன் மார்க்கு | அத்தான்களான பாண்டவர்க்கு | நெடு மாறன் | பெருமை பொருந்திய மாறனென்பவனும் |
| முன் | முன்பக்கத்திலே | தென்கூடல் | அழகிய கூடலுக்கு |
| அங்கு | ஸாரதியிருக்கும் தட்டிலே | கோன் | அரசனும் |
| நின்று | இருந்துகொண்டு | தென்னன் | தென்னாட்டையுடையவனுமானவனால் |
| மோழை(யை) | கீழூற்றை | கொண்டாடும் | புகழப்பட்ட |
| எழுவித்தவன் | மேலெழச்செய்வித்தவனை கண்ணனுடைய | | தென் திருமாலிருஞ்சோலை யாம். |
| மலை | மலையானது | | |

ஜயத்ரதனைக் கொல்லப் போர் புரிந்துவரும் நாளிலே குதிரைகள் களைத்திருப்பதைக் கண்டு, 'அவற்றிற்கு விடாய் தீர்த்து வரவேணும். அதுவரை நான் கீழே நின்று தேரிலிருக்கும் எதிரிகளோடு பொருதுவருகிறே'னென்று அர்ஜுனன் கீழே யுத்தஸந்நத்தனாயிருக்க, கண்ணனுமதற்கு உவந்து, ஆகிலும் தண்ணீர்த்தாகம் கொண்ட குதிரைகளுக்கிங்கே அது கிடைக்கமாட்டாதே யென, உடனே அர்ஜுநனங்கே தானே ஓர் அஸ்த்ரத்தைப் பூமியிலே புகுரவிட்டுப் பூமிக்குள் பாயும் கீழூற்றை மேலெழச் செய்யக் கண்ணன் பிறகு தேரினின்றிறங்கிக் குதிரைகளைச் செவ்வனே களைப்பாற்றினான். இவ்விருவருடைய செயலைக் கண்டு இவர்களை வெல்ல நம்மாலாமோ வென மன்னரெல்லோரும் மனம் குழம்பினர். இங்கே இன்ன அஸ்திரம் எனக் கூறப்படவில்லை. கீழே பீஷ்மருக்குத் தாகம் தணியத் தீர்த்தமெழப் பர்ஜந்யாஸ்த்ரம் ப்ரயோகித்ததாக வுளது. இங்கே வாருணாஸ்த்ரம் ப்ரயோகித்ததாகவும் சொல்வர். கண்ணனே அஸ்த்ரப்ரயோகம் செய்தானென்பதில்லை. ஸ்ரீயருளுரையிலும், 'வாருணாஸ்த்ரத்தை விடுவித்து' எனவே யுளது. இங்கிதத்தாலே க்ருஷ்ணனுடைய

கருத்தை யுணர்ந்து, கீழே நின்றவனை எளிதிலே ஜயிக்கலாமென்று சூழ்ந்த மன்னர்கள் மறுகும்படி அர்ஜுனன் செய்ததாலே க்ருஷ்ணன் செய்விக்கச் செய்தானென்று கொள்ளவேண்டுமென்றே பாசுரத்திற்கும் கருத்தாம்.

பாண்டியதேசத்தரசனான கூடற்கோன் கூடலழகரிடமீடுபட்டிருந்தமை யைப் பேசி வுகந்தருளுகிறார் மேலிரண்டடிகளால். இவ் வரசனுக்கு மலயத் வஜ னெனப் பெயரென்றும், இவன் கங்காஸ்னானத்திற்காக வடதேச யாத்திரையாகப் போம்போது அழகர்மலைக்குமேல் அவன் தேர் ஓடாமல் நிற்கவே அதை யாராய்ந்து சிலம்பாற்றிலே ஸ்நாநம்செய்ய வழகர் நியமிப்பதை நன்குணர்ந்து அங்ஙனம் செய்து கங்கைக்குப் போவதை நிறுத்திக்கொண்டு மாலிருஞ்சோலையிலே மஹாபக்தி பண்ணிவந்தானென்றும் முன்னுரைகளிற் கூறப்பட்டுளது காண்க. (எ)

8\. குறுகாதமன்னரைக் கூடுகலக்கி வெங்கானிடைச்
சிறுகால்நெறியே போக்குவிக்குஞ் செல்வன் பொன்மலை
அறுகால் வரிவண்டுகளாயிர நாமஞ்சொல்லி
சிறுகாலைப்பாடுந்தென் திருமாலிருஞ்சோலையே. (345)

| | | | |
|---|---|---|---|
| குறுகாத | (கூடற் கோனைப்போல்) கிட்டி வராத | செல்வன் | ச்ரிய: பதியின் |
| மன்னரை | அரசரை, | பொன் மலை | அழகிய மலையானது |
| கூடு | அவர்களின் போகஸ்தாநாதிகளை | அறுகால் | ஆறு கால்களையுடைய |
| கலக்கி | உருகுலையச் செய்து | வரிவண்டுகள் | அழகிய வண்டுகள் |
| வெம் | அத்யுஷ்ணமான | ஆயிரம் நாமம் | எம்பெருமானுடைய நாம ஸஹஸ்ரத்தை |
| கான் இடை | காட்டு நடுவே | சொல்லி | கீர்த்தனம் செய்து |
| சிறு கால் நெறி ஏ | சிற்றடிப்பாதை வழியாலே | சிறு காலை | விடியற் காலத்தை |
| போக்குவிக்கும் | போகச்செய்யும் | பாடும் | திருப்பள்ளியெழுச்சிக்காகப் பாடி வர்ணிக்கும் |
| | | | தென் திருமாலிருஞ் சோலை யாம். |

கீழ்ச்சொன்னபடியிலுள்ள இருவித மன்னரில் கெட்டவரின் கதியை யிங்கருளினர். செல்வன். கையிலே செல்வத்தை வைத்துக்கொண்டு, குறுகினால் மறுபடி கொடுத்துவிடலாமென்று காத்துவருகிறான். குறுகாமலிருக்கவே, சீதோபசாரங்களாற் சிறந்த பெரிய ராஜமார்க்கங்களிலே பலவகை வாஹநங்களிலேறி விலாஸமாயிருந்தவர்களை அதற்குநேர் விரோதமாக இங்ஙனம் செய்கிறானென்றதாம். வண்டுகள் ஆயிரம் நாமம் சொல்வதெங்ஙனமெனில், அப்யாஸம் செய்ய ப்ரயத்னமுண்டாகில் அவற்றிற்கும் ஒருபடி அதற்குத் தக்கவாறு வாக்கு அமையுமென்க. அன்றி, சிறுகாலே சேவித்துத் திருப்பள்ளியெழுச்சிக்குப் பாடும் பரமைகாந்திகளை வரிவண்டுகளாக உருபித்ததென்க. அறுகாலாவது ஆறுபதங்களையுடைய த்வயமந்த்ரம். அதிலே நிஷ்டையுடையவரென்னலாம். அன்றி, ப்ராத:காலம், ஸங்கவம், மத்யான்னம், அபராண்ணம், ஸாயான்னம், இரவு என்ற ஆறுகாலங்களையும் எம்பெருமானின் ஆராதனத்திற்கே உடையவரான என்னலுமாம். வரி. அழகான. ஜ்ஞானத்திற்குத் தக்க அநுஷ்டாநமும் தாஸ்யவேஷமும் பொருந்தின என்றபடி. சிறுகாலைப்பாடும்.

சிறுகாலே பாடும் என்னுமே, பகரவொற்றின் மிகுதிக்கேற்பச் சிறுகாலை யென்றதாலிதை இரண்டாம் வேற்றுமையிற் கொள்க.. விடியற்காலத்தை அதற்குண்டான அடையாளங்களைச் சொல்லி வர்ணித்துதானே அவனை யெழுப்ப வேண்டும். ஆகக் காலத்தைப் பாடினதாகிறது. ஆயிர நாமம் சொல்லி யென்றதாலே இது வீண் விடியற்காலப் பாட்டாகாது. ஒவ்வொரு பாட்டிலும் அவனை விளிக்கும் அநேக நாமங்கள் பொதிந்து கிடப்பதும் ஆயிர நாமஞ் சொல்லி யென்றவிடத்தில் கருதப்பட்டதாம். (அ)

**9.** சிந்தப்புடைத்துச் செங்குருதிகொண்டு பூதங்கள்
அந்திப்பலிகொடுத் தாவத்தனஞ்செய்யப்பன்மலை
இந்திரகோபங்களெம்பெருமான் கனிவாயொப்பான்
சிந்தும்புறவில் தென்திருமாலிருஞ்சோலையே. **(346)**

| | |
|---|---|
| பூதங்கள் | பூதகணங்களால் |
| சிந்த புடைத்து | சிதறும்படி அடிக்கப்பட்டு |
| செம் குருதி | சிவந்த ரக்தத்தை |
| கொண்டு | எடுத்துவந்து |
| அந்தி பலி | மாலையில்எம்பெருமானுக்கு நைவேத்யமாக |
| கொடுத்து | ஸமர்ப்பித்து |
| ஆவத்தனம் | ஆபத்திலுதவும் தனமாக |
| செய் | செய்யப்பெற்ற |
| அப்பன் | ஸர்வஸ்வாமியான எம் பெருமானின் |

| | |
|---|---|
| மலை | மலையானது |
| எம்பெருமான் | அழகருடைய |
| கனி | கொவ்வைக்கனி போன்ற |
| வாய் | திருப்பவளத்திற்கு |
| ஒப்பான் | ஒப்புமையுடன் கூடிய |
| இந்திர கோபங்கள் | மாரி காலத்தில் வெளிவருமொருவித பூச்சிகள் |
| சிந்தும் | சிதறுமிடமான |
| புறவு | காடுகளுக்கு |
| இல் | இடமான |

தென் திருமாலிருஞ்சோலை யாம்.

கீழ்ச்சொன்னபடி வெங்கானிடை சிறுகால் நெறியே போக்கின குறுகாமன்னரின் கதியென்ன? புலி முதலிய துஷ்ட ப்ராணிகளுக்கும் பூத கணங்களுக்கும் இறை யாவதே. அழகர்திருமலை போன்ற விடங்களிலிருக்கும் பூதங்கள் ஆஸ்திக்யம் மிகுந்தவையாய் அவ்வித துஷ்ட ஜீவன்களைத் தாங்கள் தேசமெங்கும் திரியும்போது கண்ட விடங்களிலேயே சிதற வடித்து உதிர மெடுத்து, 'யதந்ந: புருஷோ பவதி ததந்நா: தஸ்ய தேவதா:' என்றபடி தங்களுக்கேற்பட்ட வாஹாரத்தைத் தங்களுக்கும் ஸ்வாமியான எம்பெருமானுக்கு நைவேத்யம் செய்யவேண்டியது அவசியமாகையாலே அவ்விதம் ஆராதனை செய்து உட்கொண்டு, 'நமக்கு வேறுவிதமான ஆஹாரத்திற்கு வழியிராத ஸமயத்திலே இத் துஷ்ட ஜீவன்களை நமக்குக் கிட்டுவித்தவனென்ற நன்றியாலே ஆபத்தனமாக அப்பனைக்கொண்டாடும். அப்படிப்பட்ட ஸ்வாமியின் மலை யிது. இப்படிப் பலியாயுள்ள ருதிர பிந்துக்களோ, அவற்றை ஸ்வீகரிக்கும் எம்பெருமானின் திருப்பவளமே தானோ வென்னலாம்படி யெங்கும் இந்திரகோபங்கள் (ஜம் ஜ ஹொவைங்கள்) சிதறிக் கிடக்கும் காடுகள் கொண்ட திருமலையிதென்றபடி..

செய்யப்பன் மலை. 'செய் என்பதை மலைக்கு விசேஷண மாக்காமல் அப்பனுக்கு விசேஷண மாவதாகக் கொண்டால் எல்லாப் பாசுரங்களிலும் முதலிரண்டடிகளிலே எம்பெருமானின் பெருமையும் மேலிரண்டடிகளிலே மலையின் மேன்மையும் மொழிவதற்குப் பொருந்தியிருக்கும். ஆகவே எந்த

விடத்திலே யுள்ள பூதங்களும் எங்குள்ள ப்ராணிகளையும் மிவ்வாறு பல் கொடுத்தாலு மெல்லாம் சொல்லப்படலாம்.

ஒப்பான். ஒப்பு ஆன். மூன்றனுருபு. புறவில் புறவு இல். பெயர்ச் சொல். (௯)

10. எட்டுத்திசையுமெண்ணிறந்த பெருந்தேவிமார்
விட்டுவிளங்க வீற்றிருந்த விமலன் மலை
பட்டிப்பிடிகள் பகடுறிஞ்சிச்சென்று மாலைவாய்த்
தெட்டித்திளைக்குந் தென்திருமாலிருஞ்சோலையே. (347)

| | | | |
|---|---|---|---|
| எட்டு திசையும் | தன்னைச்சுற்றி த்வாரகையில் ஸபையில் எல்லாப் பக்கங்களிலும் | மலை | திருமலையானது |
| எண் இறந்த | எண்ணிக்கை யற்ற | பட்டி | கள்ளத்தனமாய் திரியும் |
| பெரு தேவிமார் | மஹாபாக்யசாலிகளான தேவிகள் | பிடிகள் | பெட்டையானைகள் |
| விட்டு விளங்க | வெளிவிட்டு விளங்கும் போது | மாலைவாய் | மாலையில் |
| வீற்றிருந்த | ஸர்வோத்தமனாய் எழுந்தருளியிருந்த | சென்று | ஆண் யானை உள்ளவிடம் போய் |
| விமலன் | நிர்மலனான ஸ்ரீக்ருஷ்ணன் எழுந்தருளியிருக்கும் | பகடு | (ஆண்யானைகளோடு) |
| | | உறிஞ்சி | ரஸாநுபவம் பண்ணி |
| | | தெட்டி | முதிர்ச்சிபெற்று |
| | | திளைக்கும் | விளையாடுமிடமான தென்திருமாலிருஞ்சோலை யாம். |

எட்டு திசையும். எல்லாத் திசையிலும் எல்லா வூரிலு மெனப் பொருளென்று. பல்லாயிரம் பெருந்தேவிமாரொடு (4—1—6) என்றபடி எம்பெருமானைச் சூழ்ந்து த்வாரகையி லிருந்தமையைச் சொன்னதாம். விட்டு விளங்குதல் வெளிவிட்டு விளங்குதல்=மிகுந்த மகிழ்ச்சியாலே தம் மேனி யொளியை வெளியே பரப்பவிட்டு விளங்குதல். அன்றி, கண்ணனைக் கண்டு களித்திருப்பதன்றி மற்றவற்றை விட்டுவிட்டு விளங்கி நிற்கை; தங்களுக்குள் ஒருத்திக் கொருத்தி பொறாமை, வெறுப்பு முதலிய துர்குணங்களை விட்டு ஸ்ரீ பூமி நீளை முதலான தேவிகள் ஸ்ரீ வைகுண்டத்திலே யொத்து உவந்திருக்குமா போலே ஒன்றாகி விளங்குவது. வேறொருத்தியுடன் சேர்க்கையால் தனது ஸுகத்திற்கும் ஐச்வர்யத்திற்கும் குறை நேரிடும்படி ஹேயமாய் அல்பமான சக்தி ஸம்பத்துள்ள கணவனாகில் பொறாமை முதலிய பொல்லாக் குணங்க ளுண்டாம். இவன் விமலனாயிற்றே. அகில ஹேய ப்ரத்யநீகனாய் அநந்த ரூப சக்தி வ்யாபாராதிகளை யுடைய ப்ரிய ஸார்வபௌமனைப் பெற்றோர்க் கென்ன குறை ? இப்படிப்பட்ட ஈடுபாடுள்ள பெருந்தேவியாரின் ப்ரியதமனான பெருமான் எழுந்தருளி யிருக்கு மிடத்தில் பட்டிப் பிடிகள் பகடு தேடித் திரிகிறதென்றால் இது தெளிவற்றுத் திண்டாட வைக்கும் கர்மங்களின் போக்கென்று அவன் ஸம்பந்தத்திற்கு அனைவரும் ஆசைப்படவேண்டு மென்றபடி. மாலைவாய். மாலை=அந்திப்போதுமாம்; இரவுமாம். வாய் ஏழனுருபு.

11. மருதப்பொழிலணி மாலிருஞ்சோலை மலைதன்னைக்
கருதியுறைகின்ற கார்க்கடல்வண்ணனம்மான்றன்னை
விரதங்கொண்டேத்தும் வில்லிபுத்தூர்விட்டுசித்தன்சொல்
கருதியுரைப்பவர் கண்ணன்கழலிணை காண்பர்களே. (348)

| | |
|---|---|
| மருதம் பொழில் | மருதமரங்களாலான வநத்தை |
| அணி | அலங்காரமாகவுடைய |
| மாலிருஞ் சோலை | திருமாலிருஞ்சோலை யெனப்படுகிற |
| மலைதன்னை | திருமலையை |
| கருதி | விரும்பி |
| உறைகின்ற | அங்கே மன்னியிருக்கும் |
| கார் கடல் வண்ணன் | கருங்கடல் நிறத்தனனை |
| அம்மான் தன்னை | (ஸ்வாமியை) அந்த மஹா புருஷனை |
| விரதம் கொண்டு | பாரமைகாந்த்யத்தைச் சிறப்பாகப் பெற்று |
| ஏத்தும் | ஸ்தோத்திரம் செய்யும் |
| வில்லிபுத்தூர் விட்டுசித்தன் | ஸ்ரீவில்லிபுத்தூரில் தோன்றின ஸ்ரீவிஷ்ணுசித்தனுடைய (பெரியாழ்வாருடைய) |
| சொல் | சொல்லான திருமொழியை |
| கருதி | கருத்தில் கொண்டு |
| உரைப்பவர் | ஓதிவருமவர் |
| கண்ணன் | அந்த எம்பெருமானுடைய |
| கழல் இணை | திருவடிகளிரண்டை |
| காண்பார் | ஸாக்ஷாத்கரிப்பார்கள். |

விரதம் கொண்டு. பட்டிப்பிடிகள் போலன்றி பெருந்தேவிமார்களைப் போலே பாதிவ்ரத்யம் கொண்டு. தேவதாந்தர ஸம்பந்தம், ப்ரயோஜநாந்தர ஸம்பந்த மென்ற தோஷ மொன்று மில்லாத பரமைகாந்தியா யிருந்தென்றபடி. இப்படி முதிர்ந்த சேஷத்வஜ்ஞான முடையவரானதாலே இவர்க்கு மங்களாசாஸனம் செய்வதே யியற்கையாய் அமைந்தது. கருதியுரைப்பவர் கண்ணன் கழலிணை காண்பார் என்றது மேல்திருமொழிமுடிவிலும் சேரும்.

ப்ரபந்தரக்ஷையில் பெரியாழ்வார் திருமொழி 4, 2
அலம்பாவெருட்டாவுரை முற்றிற்று.
ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

---

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

## பெரியாழ்வார் திருமொழி 4, 3.

# உருப்பிணி நங்கை.

கீழ்த்திருமொழியிலே திருமாலிருஞ்சோலைமலையை மாலுடன் சேர்த்தனுபவித் தினியராகித் திருமொழிகற்றார்க்குப் பலனையும் கூறி வேறிடம் மனத்தைச் செலுத்தி எம்பெருமானுள்ள இடம் நாடுமாழ்வாரின் மனத்தினின்று மலை யகலாமல், 'திருமாலிருஞ் சோலைமலை யென்றேனென்னத் திருமால் வந்தென்னெஞ்சு நிறையப் புகுந்தா' னென்றபடி அழகனோடு அமர்ந்து விளங்க, மறுபடியும் அதனனுபவத்திலேயே ஈடுபட்டவராய், இப்படித் தாம் விட்டும் விடாதே யுறைந்துள்ள விவனுக்கு அழகன் என்றும், மாலலங்காரனென்றும் திருநாமங்கள் தகுமென்று அத் திருநாமங்களையு மநுஸந்தித்துக்கொண்டு ஸுந்தரபாஹு என்ற மற்றொரு திருநாமத்திற் கேற்ப அவன் புஜங்களின் ஸௌந்தர்யத்தை விரோதிகளைப் பொருதழிப்பதற்கும் ஆயிரக்கணக்கான மங்கைமார்களை அணைத்து ஆனந்திப்பிக்கிறதற்கும் பொருந்தி யிருக்கும் வகை

யிலே யனுபவிக்க விசைந்து, கீழ் அவதார க்ரமத்தைக் கொண்டு முதலில் இராமனாகவும் பிறகு கண்ணனாகவும் அனுபவித்தார் இங்கே தாம் ப்ரபந்தத்தில் தொடக்கத்திலிருந்து அனுபவித்த க்ரமத்திலே முன்னே கண்ணனாகவும், பின்னே இராமனாகவும், மற்றும் பலவுரு கொண்டவனாகவும் அனுபவித்துக் கொண்டு திருமலையைச் சோலைகளை வர்ணித்துச் சிறப்பித்தினியராகிறார்.—

1. உருப்பிணிநங்கை தன்னைமீட்பான் தொடர்ந்தோடிச்சென்ற
உருப்பனையோட்டிக்கொண்டிட்டுறைத்திட்ட வுறைப்பன்மலை
பொருப்பிடைக்கொன்றை நின்றுமுறியாழியுங்காசுங்கொண்டு
விருப்பொடுபொன்வழங்கும் வியன்மாலிருஞ்சோலையதே. (349)

| | |
|---|---|
| உருப்பிணி | ருக்மிணி என்கிற |
| நங்கை தன்னை | கண்ணனையே காமுற்று குணபூர்ணையாயிருந்த வளையே |
| மீட்பான் | கண்ணன் கொண்டுபோகாதபடி திருப்பிக்கொள்வதற்காக |
| தொடர்ந்து | கொண்டுபோம் கண்ணன் தேரைப் பின்பற்றி |
| ஓடி சென்ற | ஓடிவந்த |
| உருப்பனை | உருப்பிணியின் தமையனான ருக்மியை |
| ஓட்டி | தோற்பித்து |
| கொண்டு | கைக்கொண்டு |
| இட்டு | தன் தேரிற் கட்டி |
| உறைத்திட்ட | பரிபவப்படுத்தின |
| உறைப்பன் | உக்ரமுள்ளவனுடைய |
| மலை | மலையானது, |
| பொருப்பு இடை | மலை நடுவில் |
| நின்று | வெகுதூரத்திலும் தெரியும்படி வளர்ந்து நின்று |
| கொன்றை | கொன்றை மரங்கள் |
| முறி | தளிர்கள் முதலானவையான |
| ஆழி உம் காசு உம் | மோதிரமும் காசு (மாலை)களும் |
| கொண்டு | வைத்துக்கொண்டு |
| விருப்பொடு | ஆசையோடு |
| பொன் வழங்கும் | பொன்னை யளிப்பவை போலிருக்கப்பெற்ற |
| வியன் | ஆச்சரியமான |
| அதே | முன்சொன்னதேயான மாலிருஞ்சோலையாம். |

திருமலையிலுள்ள கொன்றை மரங்களின் பூவும் தளிரும் தூரத்தில் பார்ப்போர்க்குப் பளபள வெனப் பொன்னாகவே தோற்ற மளிப்பதால் ஆழியும் காசும் கொடுக்க மலை எல்லோரையும் அழைக்கிறது போலிருக்கு மென்றதாம். உருப்பிணி நங்கைக்கு உருப்பன் வண்மை வரிசை யிடாவிடினும் அவளோடு எம்பெருமான் எழுந்தருளும்போது மாலிருஞ்சோலையே யெல்லாம் வழங்கிற்று போலும். பொன் என்பதை ஆழி யென்பதோடு சேர்த்து, முறிபொன் ஆழி= முறிந்த பொன்மயமான மோதிர மென வுரைப்பது முண்டு. பூவிலுள்ள நரம்பும் இதழும், ஆழியும் காசும் போலிருந்தன வென வாவது கொள்க. மாலிருஞ் சோலையதே. முன் திருமொழியிலே சொல்லப்பட்டு, மறுபடி சொல்லப்படுவதாலே முன் போல் 'மாலிருஞ்சோலையே' என்றதோடு நிற்காமல் இத் திருமொழியில் அது என அதிகமாகச் சொன்னதாம். (க)

2, கஞ்சனுங்காளியனுங்களிறு மருதுமெருதும்
வஞ்சனையின்மடிய வளர்ந்தமணிவண்ணன்மலை
நஞ்சுமிழ்நாகமெழுந்தணவி நளிர்மாமதியை
செஞ்சுடர்நாவளைக்குந் திருமாலிருஞ்சோலையதே. (350)

| | |
|---|---|
| கஞ்சன் உம் | கம்ஸனும் |
| காளியன் உம் | காளிய நாகமும் |
| களிறு உம் | குவலயாபீடமும் |
| மருது உம் | யமளார்ஜுநங்களும் |
| எருது உம் | அரிஷ்டாஸுரனும் |
| வஞ்சனையின் | தங்கள் த்ரோஹத்தாலே |
| மடிய | தாங்களே மடியும்படி |
| வளர்ந்த | (திருவாய்ப்பாடியிலே) வளர்ந்துவந்த |
| மணிவண்ணன் | நீலமணி நிறத்தனனை கண்ணனது |
| மலை | மலையானது, |
| நஞ்சு | விஷத்தை |
| உமிழ் | கக்காநிற்கிற |
| நாகம் | ஸர்ப்பமானது |
| எழுந்து | தலையை நிமிர்த்து |
| தளிர் | குளிர்ந்த |
| மா மதியை | பூர்ணசந்திரனை |
| அணவி | கிட்டி |
| செம் | சிவந்த |
| சுடர் நா | உஷ்ணமான நாக்கினாலே |
| அளைக்கும் | தொடுமிடமான |

அதே திருமாலிருஞ்சோலை யாம்.

நஞ்சு இத்யாதியால், திருமாலிருஞ்சோலை மாமதிமண்டல மளாவி யிருக்கிறதென அதன் உயர்ச்சியை உரைத்தபடி யாம். நாகம் நாவால் அணைவது மாமதியின் அமுது தனக்கு ஆஹாரமா மெனக் கருதியுமாம்; இயற்கையாலுமாம். செஞ்சுடர் சிவந்த தேஜஸ்ஸை யுடைய எனவு முரைப்பர். சுடர் நா அக்னிஜ்வாலை போன்ற நா எனவு மாம். (உ)

3. மன்னுநரகன்தன்னைச்சூழ் போகிவளைத்தெறிந்து
கன்னிமகளிர்தம்மைக் கவர்ந்தகடல்வண்ணன்மலை
புன்னைசெருந்தியொடு புனவேங்கையுங்கோங்கும்நின்று
பொன்னரிமாலைகள் சூழ்பொழில் மாலிருஞ்சோலையதே. (351)

| | |
|---|---|
| மன்னு | நிலைபெற்றிருந்த |
| நரகன் தன்னை | நரகாசுரனை, |
| சூழ் | அவனுடைய சுற்றுப்புறம் (நகரப்ராகாரம்) |
| போகி | போய்ச்சேர்ந்து |
| வளைத்து | சூழ்ந்து பொருது |
| எறிந்து | (திருவாழியால்) அறுத்துப்போகட்டு |
| கன்னி | கன்னிகைகளாயிருந்த |
| மகளிர் தம்மை | (அவனால் காவலிடப்பட்ட) ஸ்திரீகளை |
| கவர்ந்த | கைப்பற்றின |
| கடல்வண்ணன் | கடலின் நிறமுள்ள கண்ணனது |
| மலை | மலையானது, |
| புன்னை செருந்தியொடு | புன்னை மரங்களும் செருந்தி மரங்களும் |
| புனம் வேங்கை உம் | வயலிலுண்டாம் வேங்கை மரங்களும் |
| கோங்கும் | கோங்கு மரங்களும் |
| நின்று | பூத்து மாலையார்படி நின்று |
| பொன்னரி மாலைகள் | பொன்னரி மாலையென்னு மாபரணம்போலே |
| சூழ் | சூழுமிடமான |
| பொழில் | தோட்டங்களையுடைய |

அதே மாலிருஞ்சோலை யாம்.

மன்னு. நரகாசுரன் ஸ்திரப்ரதிஷ்டிதனா யிருந்தமை ஸுக்ரீவனாலும் அவன் பிராட்டியைத் தேடத் தன் வீரர்களை யனுப்புங்காலத்திலே கூறப்பட்டுள்ளது. சூழ்போகி யென்றதற்கு 'விசாரித்து' எனவும் பொருளுரைப்பர். (௩)

4. மாவலிதன்னுடைய மகன்வாணன்மகளிருந்த
காவலைக்கட்டழித்த தனிக்காளைகருதும்மலை
கோவலர்கோவிந்தனைக் குறமாதர்கள் பண்குறிஞ்சிப்
பாவொலிபாடிநடம் பயில்மாலிருஞ் சோலையதே. (352)

| | |
|---|---|
| மாவலி தன்னுடைய | மஹாபலியினுடைய |
| மகன் | ஜ்யேஷ்ட புத்ரனை |
| வாணன் | பாணாஸுரனுடைய |
| மகள் | பெண்ணான உஷைக்கு |
| இருந்த | ஏற்பட்டிருந்த |
| காவலை | காவல்களை |
| கட்டழித்த | முற்றிலும் முறியடித்த |
| தனி காளை | ஒப்பற்ற யுவாவான கண்ணன் |
| கருதும் | விரும்பியிருக்கும் |
| மலை | மலையானது, |
| கோவலர் கோவிந்தனை | இடையரைச்சேர்ந்த கோவிந்தனைப்பற்றி |
| குறமாதர்கள் | குறத்திகள் |
| குறிஞ்சி பண் | குறிஞ்சி ராகத்திலே |
| பா | பாட்டுக்களை |
| ஒலி பாடி | சிறந்த த்வனியுடன் பாடி |
| நடம் பயில் | ஆட்டத்தை அப்யஸிக்கு மிடமான |

அதே மாலிருஞ்சோலை யாம்.

காவலைக் கட்டழித்த. கண்ணன் பேரனான அநிருத்தனோடுதான் கூடியிருந்ததாகச் சொப்பனம் கண்ட உஷையென்னும் பாணாஸுரனுடைய பெண்ணானவள் தனது தோழியான சித்ரலேகை யெழுதின பல சித்ரங்களிலே தன்னோடு இருந்தவனுடைய சித்திரம் இதுவென்று காண்பிக்க, சித்ரலேகையும் யோக பலத்தாலே யவனை உஷையிடம் ரஹஸ்யமாய் கொண்டு சேர்க்க, அங்கே அநிருத்தன் உஷையோடு கலந்திருப்பதைக் காவலர் மூல மறிந்த பாணன் அநிருத்தனைச் சிறையிட்டுவிட, நாரதர் மூல மிதை யறிந்த கண்ணன் காவலை யழித்து உஷையுடன் சேர்த்து அநிருத்தனை யழைத்து வரச் சென்று பாணாஸுரனோடு பொருது அவன் நகரத்திற்கு மதிளா யிருந்த அக்நி தேவனையும், பாணனுக்கு ஸஹாயமாய் விநாயக ஸுப்ரஹ்மண்யாதிகளான தன் கணங்களோடு வந்து போர் புரிந்த ருத்ரனையும் பரிபவப்படுத்தி, ருத்ர னனுப்பிய ஜ்வரபூதத்தை வைஷ்ணவ ஜ்வரத்தைக் கொண்டு வதைத்து, பாணனது ஆயிரங்கைகளிலே நாலைத் தவிர்த்து மற்றவற்றை மிக்க ரக்ததாரை பெருகத் திருவாழியாலே துண்டித்தெறிந்து, ஸபரிவாரனாக பாணன் பணிந்த பிறகு அவனை விட்டு அவன் அளித்த வரிசை வண்மைகளோடு உஷையுடன் பேரனை யழைத்து வந்தானென்ன வரலாறுனபடியாலே சிவன் வரையிலான காவலையு மிங்கே அழித்ததாகக் கொள்க.

தனிக்காளை. யுவாவான பேரனை மீட்டுவந்த பாட்டனின் யௌவனம் தனிப்பட்டதே யாம். (௪)

5. பலபலநாழஞ்சொல்லிப் பழித்தசிசுபாலன்றன்னை
அலவலைமைதவிர்த்த வழகனலங்காரன்மலை
குலமலைகோலமலை குளிர்மாமலைகொற்றமலை
நிலமலைநீண்டமலை திருமாலிருஞ்சோலையதே. (353)

| | |
|---|---|
| பல பல | மிகப்பலவான |
| நாழும் | இல்லாப்பழிகளை |
| சொல்லி | பேசி |
| பழித்த | வைத |
| சிசுபாலன் தன்னை | சிசுபால னென்பவனை |
| அலவலைமை | அலைகடல்போல் ஆரவாரிப்பதிலிருந்து |
| தவிர்த்த | விடுவித்து |
| அழகன் | ஸர்வநேத்ரமநோஹரனாய் |
| அலங்காரன் | அலங்கராங்கள் பெற்றுமுள்ள கண்ணனின் |
| மலை | மலையானது, |
| குலம் மலை | குடிவாழ்வுக்குரிய மலையும் |
| கோலம் மலை | அழகுபொருந்திய மலையும் |
| குளிர் | குளிர்ந்த |
| மா மலை | பெரியமலையும் |
| கொற்றம் மலை | ஜயம் பெற்ற மலையும் |
| நிலம் மலை | மூலைத்து விளைதற்கிடமான மலையும் |
| நீண்ட மலை | நீட்சியுள்ள மலையுமான |

அதே திருமாலிருஞ்சோலை யாம்.

'கேட்பார் செவி சுடு கீழ்மை வசவுகளே வைத' பழம் பகைவனான சிசுபாலனை, அவன் சொன்னது பொருது பொருதப் புறப்பட்டவரைத் தடுத்துத் தானே திருவாழியால் தலைகீண்டு திருவடியிலே சேர்த்துக்கொண்ட வகையிலே அவனை அலவலைமையிலிருந்து தவிர்த்தருளினன் கண்ணனென்பதைத் தர்ம புத்ரருடைய ராஜஸூய விருத்தாந்தத்திலே காண்க. நாழமாவது பழி=அர்த்தமில்லாத வசவு. நாழி யென்பது உள் துளையுள்ள பொருளைக் கூறுவதுபோல், நாழ், நாழம் என்ற பதங்கள் உள்ளே ஒன்றுமில்லாத, உண்மையற்ற சொல்லைக் கூறுவன வாகலாம்.

அலவலைமை. இதன் பொருளை 2—1—2-லும் காண்க

குலமலை - தொண்டக்குலத்தார் வாழத்தகுந்த மலை. குலபர்வதங்கள் எட்டுண்டு. அவற்றைப் போன்றதெனவு மாம்.

சிசுபாலன் பற்பல நாழங்களைச் சொன்னதற்குப் பதிலாகக் கேட்பார் செவி குளிரும்படி கேசவன் கீர்த்தியைப் பலபலவாக அடுக்கிக் கூற வாசைப்பட்ட ஆழ்வார், பாசுரத்தின் பின்னடிகள் மலையின் பெருமையைக் கூறவந்ததாலே அது அவன்மலையானபடியாலே அதற்கே பல பெருமைகளை யடுக்கிப் பேசுகின்றவராய் அவனையும் அழகனலங்காரனென வர்ணித்தருளினர். அழகன் என்பதற்கு ராஜஸூய ஸதஸ்ஸிலே சேர்ந்திருந்த தேவர்கள் மனிதர்கள் யாவருக்கும் கண்ணையும் மனத்தையும் கவர்ந்து ஸர்வேச்வரத்தன்மைக்குரிய திருமேனியின் லக்ஷணங்கள் அமைய விளங்கினவன் எனப் பொருள். அலங்காரன் என்பதற்கு பாண்டவர் பக்தியோடு ஸமர்ப்பித்த அக்ரபூஜையை யங்கீகரித்துப் புதிய பூஷண பீதாம்பரங்களாலே யலங்காரம் பெற்றவனெனப் பொருள். வேறு பதங்களை விட்டு இங்ஙனம் கூறினது திருமாலிருஞ்சோலையெம்பெருமானுக்குள்ள அழகர், மாலலங்காரர் என்ற திருநாமங்களை யநுஸந்திக்க வாம். அவ்வண்ணனை கண்ணனானபடியாலே இவருக்கும் இந்த நாமங்கள் போலும்.

குலமலை=குலாசலம்; கோலமலை=சித்ரகூடம்; குளிர்மாமலை=இமாலயம்; கொற்றமலை=கோவர்த்தனம், நிலமலை=மேருபர்வதம்; நீண்டமலை=வடவேங்கடமென்றுரைத்து எல்லாப் பெருமையு மிந்த மாலிருஞ்சோலை பெற்றுள்ளதென்னலுமாம். (ரு)

6. பாண்டவர்தம்முடைய பாஞ்சாலி மறுக்கமெல்லாம்
ஆண்டங்குநூற்றுவர்தம் பெண்டிர்மேல்வைத்தவப்பன்மலை
பாண்டகுவண்டினங்கள் பண்கள்பாடி மதுப்பருகத்
தோண்டலுடையமலை தொல்லைமாலிருஞ்சோலையதே. (354)

| | | | |
|---|---|---|---|
| பாண்டவர் தம்முடைய | பாண்டவர்களின் மனைவியான | மறுக்கம் எல்லாம் | எல்லா மனக்குழப்பத்தையும் |
| பாஞ்சாலி | த்ரௌபதியினுடைய | ஆண்டு | பரிசீலித்து |

| | |
|---|---|
| அங்கு | அவ்விடத்திலே யிருந்த |
| நூற்றுவர் தம் | துர்யோதனன் முதலான நூறு கௌரவர்களுடைய |
| பெண்டிர் மேல் | பார்யைகளிடத்திலே |
| வைத்த | நிலையாக்கின |
| அப்பன் | ஸ்வாமியான கண்ணனது |
| மலை | மலையானது, |
| பாண் தகு | பாட்டிற்குத் தகுதியுற்ற |
| வண்டு | வண்டுகளின் |
| இனங்கள் | கூட்டங்கள் |
| பண்கள் | இராகங்களை |
| பாடி | பாடிப் பறந்துவந்து |
| மது | தேனை |
| பருக | பருகும்படி |
| தோண்டல், உடைய | (சோலைகளை வளர்க்கும்) நீரூற்றை யுடைய |
| மலை | மலையான |
| தொல்லை | பழமையான |

அதே திருமாலிருஞ்சோலை யாய்,

பாஞ்சாலி யென்றதே போதுமாயிருக்கப் பாண்டவர் தம்முடைய என்றது ஒருவர்க்கு ஐவராக பர்த்தாக்கள் இருந்தும் மறுக்க முற்றாளென்றும், அவர்கள்தம் எதிரிலேயே மறுக்க முற்றாளென்றும் குறிக்கவாம். ஆண்டு. 'இந்தப் பெருந்திரளிலே சூதாட்டத்திற்கும் அதுமூலம் இராஜ்யத்தைக் கைப்பற்றுவதற்கும் முன் நின்றவர் நூற்றுவரே. இவரில் ஒருவன் இருந்தாலும் த்ருதராஷ்ட்ரன் தன் மகனொருவனே யரசனாகவேண்டுமென நினைப்பான். இவர்களை யழித்தாலல்லது இவள்மறுக்கம் நீங்கா' தென்று பரிசீலித்து என்றபடி. அன்றி, அசாஸ்த்ரீயமான சூதாட்டத்திலே அக்ரமமாக வைத்த பந்தயத்தைக்கொண்டு பாண்டவர்களோடு பாஞ்சாலியை தாஸ்யத்திலே நிறுத்த நினைத்தமட்டிலே நிற்காமல் ரஜஸ்வலையான அவளைத்தொட்டு நடுஸதஸ்ஸுக்கு இழுத்துவந்து ஆடை யவிழ்த்து அவமதிப்பதைப் பார்த்துப் பொறுத்திருந்த பெருந்திரளானது இவள் கூச்சலிட்டுக் கேட்டுக்கொண்டபோதும் பேசாமேயிருந்ததைக் கண்டு கதியற்று, 'ஹா க்ருஷ்ண! த்வாரகாவாஸ! க்வாஸி யாதவநந்தந! இமாமவஸ்தாம் ஸம்ப்ராப்தாம் அநாதாம் கிமுபேக்ஷஸே' என்று விட்டுக்கதறினதைக் கேட்டு, 'ஐயோ! இவள் தன்னை அநாதையென்று சொல்லிக்கொள்ளும்படி மறுக்கமுற்றாளே; துகிலுரிந்த துச்சாஸனனோடுவாசியற இவளுக்குத் தங்களை நாதர்களாக நினைத்த நூற்றுவரை யழித்து அவர்கள் பெண்டிர்களை உண்மையில் அநாதைகளாக்கவேண்டு' மென்று பரிசீலித்து என்னலுமாம். இதனால் பாஞ்சாலி மறுக்கத்தை அப் பெண்டிர்மேல் வைத்தது எங்ஙனமென்பதும் தெளியலாகும். எல்லாமாண்டங்கு என்றவிடத்தில் மாண்டங்கு எனவும் பிரிக்க. மாண்டங்கு=மாண் தங்கு. மாண்=மாட்சிமை. அது தங்கிய நூற்றுவரென்றதாம்.

பாண்டகு. பிறந்தது முதல் பாடி வருவதாலே இயற்கையிலே யுண்டான தகுதி யிவற்றிற்கே யாம். மலை யென்று மறுபடியருளினது மலையிலே தோண்டல் தோன்றுமென்பதை விளக்க வாம். முன் பலகால் கூறினர்க்கு ஒரு காலாவது அதிகம் கூறாமே நிற்கக் கூடாமையாலு மாம். தொல்லை. க்ருத்ரிமமாக ஏற்படுத்தின க்ரீடாசைல மன்றிது. அநாதியாயுள்ளது. ஆகவே தோண்டலுடையதாயிருக்கிறதென்றதாம். அன்றி, எம்பெருமானுடைய நிவாஸமாய்விட்டதாலே திருவநந்தாழ்வானென்று சொல்லவேண்டியிருப்பதால் அவர் அநாதியாயிருப்பதாலே இதைத் தொல்லை யென்றதென்பர். (கூ)

7. கனங்குழையாள்பொருட்டாக்கணை பாரித்தரக்கர் தங்கள்
இனங்கழுவேற்றுவித்த வெழில்தோளெம்மிராமன்மலை
கனங்கொழிதெள்ளருவிவந்து சூழ்ந்தகன்ஞாலமெல்லாம்
இனங்குழுவாடும்மலை யெழில்மாலிருஞ்சோலையதே. (355)

| | |
|---|---|
| கனம் குழையாள் பொருட்டா | பொன்மயமான காதணியுடைய பிராட்டியை மீட்பதற்காக (போரிலே) |
| கணை | அம்புகளை |
| பாரித்து | பரப்பி |
| அரக்கர் தங்கள் | ராக்ஷஸர்களுடைய |
| இனம் | கூட்டத்தில் |
| கழு | கழுகுகளை |
| ஏற்றுவித்த | ஏறச்செய்த |
| எழில் | அழகும் வலியுமுள்ள |
| தோள் | தோள்களையுடைய |
| எம் இராமன் | எமது இராமபிரானின் |
| மலை | மலையானது, |

| | |
|---|---|
| கனம் | பொன்னை |
| கொழி | பக்கங்களில் ஒதுக்குகிற |
| தெள் | தெளிந்த |
| அருவி | ஆறுகளிலே |
| அகல் | அகன்ற |
| ஞாலம் எல்லாம் | பூமியிலுள்ளோர் எல்லோரும் |
| வந்து சூழ்ந்து | வந்து சேர்ந்து குவிந்து |
| இனம் குழு | குடும்பம் குடும்பமாகக் கூட்டமாக |
| ஆடும் மலை | நீராட்டம் செய்யும் மலையான |
| எழில் | அழகிய |

அதே மாலிருஞ்சோலை யாம்.

சனம் குழையாள். இராமனை விட்டுப் பிரிந்த வ்யஸனத்தாலே பாதியை வழியில் எறிந்து பாதியை அசோகமரக்கிளையில் வைத்து ஆபரண மில்லாமேயிருக்கும் ஸீதை யாபரணங்களோடு தன்னிடம் சேர்ந்து விளங்கவேண்டு மென்று சரங்களைப் பாரித்தா ரென்றதாம். கழு என்பதற்கு சூலம் எனப் பொருள் கொண்டு ராக்ஷஸர்களைச் சூலத்திலேற்றினதாகச் சொல்லி; பிறகு 'கழுகேற்றுவித்த' என்ற பாடமாகில், கழுகு என்ற பறவைகளை யேற்றுவித்த என உரைக்கலா மென்றனர். உண்மையாக நடந்ததையே கூறுவதற்காக கழு என்று அம்பையே இலக்கணையால் கொண்டனர் ஜீயர். கழு என்பதற்கே கழுகு என்ற பொருளுண்டாகையாலே உள்ள பாடமே அப்பொருள் பெறும். 'கழுகேற்றுவித்த' என்ற பாடத்தில் சூலமென்றதுபோன்ற பொருள் தோன்ருதென்பது தான் விசேஷம். இனம் குழு என்ற விரு பதங்களை யருளினது அந்தந்த சாதி குலங்கள் தனித்தனியே இனமினமாகக் கூடி மொத்தத்தில் பெருங் கூட்டமாயிருப்பதை யறிவிக்க வாம். (எ)

8. எரிசிதறுஞ் சரத்தாலிலங்கைய(யி)னைத்தன்னுடைய
வரிசிலை வாயிற்பெய்து வாய்க்கோட்டந் தவிர்த்துகந்த
அரையனமரும்மலை யமரரோடு கோனுஞ்சென்று
திரிசுடர்சூழும்மலை திருமாலிருஞ் சோலையதே. (356)

| | |
|---|---|
| எரி | அக்னியை |
| சிதறும் | இறைக்கும் |
| சரத்தால் | பாணத்தினாலே |
| இலங்கையனை | லங்காதிபதியை (ராவணனை) |
| தன்னுடைய | தன்னுடைய |
| வரி | நாண் கட்டின |
| சிலை வாயில் | வில்லுள்ளே |

| | |
|---|---|
| பெய்து | போக்கி |
| வாய் கோட்டம் | (அவனது) வாக்கின் மாறுபாட்டை |
| தவிர்த்து | போக்கி |
| உகந்த | மகிழ்ந்த |
| அரையன் | ராஜாதிராஜனை ராமன் |
| அமரும் | எழுந்தருளியிருக்கும் |
| மலை | மலையானது, |

| | |
|---|---|
| அமரரொடு | தேவர்களுடன் |
| கோன் உம் | அவர்களின் நாதனை இந்த்ரனும் |
| திரி சுடர் (உம்) | முச்சுடரும் |
| சென்று சூழும் | வந்து சூழப்பெற்ற |
| மலை | மலையான |

அதே திருமாலிருஞ்சோலை யாம்.

இலங்கையிலை என்ற பாடத்தை ப்ரதானமாகக் கொண்டு லங்கா நகரத்தை என வுரைத்தனர். ஆகுபெயராக்கி லங்கேச்வரனை எனவு முரைப்பர். இலங்கையனை என்ற பாடாந்தரமே ருஜுவானது. இப்போது வாய்க்கோட்டமென்ற விடத்தில் ராவணனுடைய வாயெனப் பொருள் எளிதில் கிடைக்கும். வாய்க்கோட்டமாவது—'இராமன் தன்னூருக்குள் தூர்க்கத்தைக் கடந்து வருவதும், தன்னை வெல்லுவதும், ஸீதையை மீட்பதும் நடவா. தானே அவனைக் கொல்ல வல்லவன்' என வஹங்கரித்துச் சொன்னது. 'ந நமேயம்' ஒருவரையும் வணங்கேன் என்று சொன்னதெனவு முரைப்பர். வரிசிலை. வரிதல் கட்டுதல். வரியென்பதற்குக் கோடு, நீளம் எனவும் பொருள்களுண்டு. அவையுமாம். திரி சுடர், திரியும் சுடரான ஸூர்ய சந்த்ரர்களுமாம்; முச்சுடரென்னனப்படும் அக்நி சூர்ய சந்த்ரர்களுமாம். (அ)

9\. கோட்டுமண்கோண்டிடந்து குடங்கையில் மண்கோண்டளந்து
மீட்டுமதுண்டுமிழ்ந்து விளையாடு(ம்)விமலன்மலை
ஈட்டியபல்பொருள்களெம்பிரானுக் கடியிறையென்று
ஓட்டருந்தண் சிலம்பாறுடை மாலிருஞ்சோலையதே. (357)

| | |
|---|---|
| கோடு | தன் கொம்பால் |
| மண் | பூமியை |
| கொண்டு | ஸ்பர்சித்து |
| இடந்து | அண்டபித்தியிலிருந்து பிரித்தும், |
| குடங்கையில் | உள்ளங்கையில் |
| மண் | பூமியை |
| கொண்டு | ப்ரதிக்ரஹித்தும், |
| அளந்து | திருவடிகளால் அளந்தும், |
| மீட்டும் | மறுபடியும் |
| அது | அந்த மண்ணை |
| உண்டு | ப்ரளயத்தில் உட்கொண்டும், |
| உமிழ்ந்து | ஸ்ருஷ்டியிலே வெளிப்படுத்தியும் |
| விளையாடும் | ஜகத்வ்யாபாரலீலைகளைச் செய்யும் |
| விமலன் | நிர்தோஷனை பரம புருஷனின் |
| மலை | மலையானது, |
| ஈட்டிய | 'திரட்டப்பட்ட |
| பல் | பலவகையான |
| பொருள்கள் | இவ்வஸ்துக்கள் |
| எம்பிரானுக்கு | எமது ஸ்வாமிக்கு |
| அடி இறை | திருவடியிற் சேர்க்கப்படும் உபஹாரமாம்' |
| என்று | என நினைத்து |
| ஓட்டரும் | ஓடிவரும் |
| தண் | குளிர்ந்த |
| சிலம்பாறு | சிலம்பாறு என்ற நதியை |
| உடை | உடைய |

அதே மாலிருஞ்சோலை யாம்.

கோட்டு மண்கோண்டிடந்து. மண் இடந்து கோட்டில் கொண்டு எனவு முரைப்பர். மீட்டும். மறுபடியும் என்றது, கொண்டிடந்தது, கொண்டளந்தது என்ற விளையாட்டுக்கள் போல பின்னும் சில விளையாட்டுக்கள் செய்தானெனக் கருத்தாலாம். அன்றி, உண்டுமிழ்வதைப் பல கால் செய்கிறான் ஸ்ருஷ்டிப்ரளயங்கள் பல வாகையாலென்ற கருத்தாலுமாம். ஈட்டிய. எம்பெருமானுக்குபஹாரமாமென்று தானே அருகிலுள்ள பொருள்களைத் திரட்

டிக் கொள்வது போலும் என உத்ப்ரேக்ஷை. 'சந்தொடு காரகிலும் சுமந்து தடங்கள் பொருது வந்திழியும் சிலம்பாறு' என நாய்ச்சியார் திருமொழி யாம். 'கனங்கொழி' யெனக் கீழே சொன்னது போன்ற பொருள்களையும் கொள்க. அடியிறை.' அடியுறை' என்ற பாடமாகில், திருவடியைச் சேர்ந்த பொருள் எனப் பொருளாம். ஓட்டரும். இப்பதம் கீழே 1—9—1-லும் வந்துளது. (கூ)

**10.** ஆயிரந்தோள்பரப்பி முடியாயிரமின்னிலக
ஆயிரம்பைந்தலைய வனந்தசயனனாளும்மலை
ஆயிரமாறுகளும் சுனைகள் பலவாயிரமும்
ஆயிரம்பூம்பொழிலுமுடை மாலிருஞ்சோலையதே. (358)

| | | | |
|---|---|---|---|
| ஆயிரம் | -ஓராயிரமான | சயனன் | } பள்ளிகொண்டிருக்கும் பெருமான் |
| பை | -படம் விரித்த | ஆயிரம் ஆறுகளும் | } அநேக ஆறுகளையும் |
| தலை | -தலைகளையுடைய | சுனைகள் ... உம் | } பலவாயிரம் ஊற்றுக் குளங்களையும் |
| அனந்தன் | -ஆதிசேஷன் மேல்——, | ஆயிரம் | -ஆயிரக்கணக்கான |
| ஆயிரம் தோள் | பலவாயிரக் கணக்கான தோள்களை | பூ | -பூத்த |
| பரப்பி | -விரித்துக்கொண்டு, | பொழில் உம் | -சோலைகளையும் |
| ஆயிரம் முடி | ஆயிரக்கணக்கான திருமுடிகள் | உடை | -உடையதான அதே மாலிருஞ்சோலை யாம். |
| மின் | -(திருவபிஷேகத்தின்) (காந்தியோடு) | | |
| இலக | -ப்ரகாசிக்க | | |

ஆயிரம். இரண்டா மடியிலுள்ள ஆயிரமென்ற பதம் நீங்கலாக மற்ற ஆயிரமென்ற பதங்களுக்கு அனந்தமான=கணக்கில்லாத எனவே பொருள். ஆக முடி ஆயிரமானபோது தோள்கள் ஈராயிரமாக வேண்டுதற்குக் குறை யில்லை. இவ்வளவு பெரிய திருமேனிக்குத் தக்கவாறு மாபெரிய உருவம் கொண்டதாலே ஆதிசேஷனை அனந்தனென்கிறது போலும். மின். நம்மாழ் வாரும் 'பலநாயிற்றின் கோள்' என்றது காண்க. (ய)

இப்படி ஸஹஸ்ரம் சிர்ஷாதிகளை யுடைய பெருமான் பள்ளி கொண் டதை நினைத்த போது, 'நாளும் வாய்க்க நங்கட்கு நளிர்நீர்க் கடலைப் படைத் துத் தன் தாளும் தோளும் முடிகளும் சமனிலாத பல பரப்பி, நீளும் படர் பூங்கற்பகக்காவும் நிறைபன்னாயிற்றின் கோளுமுடைய மணி மலை போற் கிடந் தான் தமர்கள் கூட்டமே' (தி—8—10—8) என நம்மாழ்வார் அருளிச் செய்த மலையாகவே யவனை யருளி நிகமிக்கிறார்.

**11.** மாலிருஞ்சோலையென்னும் மலையை யுடைய மலையை
நாலிருமூர்த்திதன்னை நால்வேதக்கடலமுதை
மேலிருங்கற்பகத்தை வேதாந்தவிழுப்பொருளின்
மேலிருந்தவிளக்கை விட்டுசித்தன் விரித்தனவே(னே) (359)

| | |
|---|---|
| மாலிருஞ் சோலை என்னும் | திருமாலிருஞ் சோலை யென்னப்பட்ட |
| மலையை | திருமலையை |
| உடைய | வாஸஸ்தானமாக வுடைய |
| மலையை | மலைபோன்றவனும், |
| நால் இரு மூர்த்தி தன்னை | எட்டு உருவ முள்ளவனும், |
| நால் வேதம் | நான்கு வேதங்களாகிற |
| கடல் | ஸமுத்திரத்தினின்று தோன்றின |
| அமுதை | அமிருதமானவனும், |
| மேல் இரு கற்பகத்தை | மேன்மையும் பெருமையு முடைய கற்பக விருக்ஷமானவனும், |
| வேதாந்தம் விழுப் பொருளில் | வேதாந்தத்தின் உயர்ந்த பொருளான நித்ய விபூதியிலே |
| மேல் | மேலாக |
| இருந்த | விளங்கும் |
| விளக்கை | ஜ்யோதிஸ்ஸ்வரூபமான அழகரை |
| விட்டு சித்தன் | ஸ்ரீ விஷ்ணு சித்தன் (பெரியாழ்வார்) |
| விரித்தன | விரிவாக அனுஸந்திக்க மொழிந்த விவற்றை |

கருதி யுரைப்பவர்கள் கண்ணன்
கழலிணை காண்பர்களே.

இத் திருமொழியும் முன் திருமொழியைப் போல் திருமாலிருஞ்சோலை யெம்பெருமான்விஷயமாகையாலே முன் திருமொழி நிகமத்திற் கூறிய பலனே இதற்கும் சேருமெனக் கருதித் தனிப்பலன் கூறுமே அதையே யிங்கே சேர்த்துக் கொள்ளுமாறு அருளிச் செய்தாரென்க. திருமொழியின் பொருளறிகையே கற்கைக்குப் பலனெனத் திருவுள்ளம் கொண்டு பலன் கூறவில்லை யென்பர்: இது எங்கு முள்ள பலனே யாம். பாசுரத்திலும் உத்தேச்ய விதேயங்களுக்குப் போதுமான பதங்களிராததாலே சேர்க்க வேண்டியது அவசியமாகையாலே முன் திருமொழி நிகமத்திலிருந்து சேர்ப்பது பொருந்து மென்க. 'விஷ்ணு சித்தன் விரித்தனனே' எனவும் சிலரின் பாடமாம். மலையையுடையமலை. மலையிலிருக்கும் மலை. மலைக்கும் ஆதாரமான மலை. சலியாமை, பெருமை, பூமிக்கு ஆதாரமாகை, போக்யங்கள் நிறைந்திருக்கை முதலான குணங்களைக் கொண்டு திருமாலை மலை யென்றது. நாலிரு மூர்த்தி யென்றது திருமாலிருஞ்சோலையிலே எட்டு அல்லது ஆறு எண்ணிக்கை கொண்ட மூர்த்திகள் இருப்பதாகக் கருதியாகலாம். 'ப்ரக்ருதி புருஷ கால வ்யக்த முக்தா யதிச்சா மநுவிததி நித்யம் நித்ய ஸித்தை ரநேகை:' என ஆளவந்தாரருளிச் செய்தபடி ஆறு வஸ்துக்களை சரீரமாக உடையவன் என்னலுமாம். ப்ரக்ருதி, காலம், நித்யவிபூதி, தர்மபூத ஜ்ஞான மென்ற நான்கையும், பத்தன், பந்தமில்லாதவனென விருவகையான ஜீவரையும் மூர்த்தியாக வுடையவன் என்னவுமாம். தேவ திர்யங் மனுஷ்ய ஸ்தாவர முக்த நித்ய மூர்த்தி யென்னலுமாம். அஷ்டாக்ஷரமூர்த்தி யென்னலுமாம். கீழே கிருஷ்ணனையும் இராமனையும் வர்ணித்திருப்பதாலே ஸங்கர்ஷண க்ருஷ்ண ப்ரத்யும்ந அநிருத்தர்கள், ராம லக்ஷ்மண பரத சத்ருக்நர்கள் என்ற நாலிரு மூர்த்தி யென்னலுமாம். வாஸுதேவ ஸங்கர்ஷண ப்ரத்யும்நாநிருத்தரென்ற வ்யூஹமான வொரு நான்கும், பர விபவ ஹார்தார்ச்சா ரூபங்களான மற்ற நான்குமான எட்டு மூர்த்தி யுடையவ னென்னலுமாம். ஸத்யத்வ—ஜ்ஞாநத்வ – அநந்தத்வ–அமலத்வ – ஜகத்காரணத்வ – மோக்ஷப்ரதத்வ–ச்ரிய:பதித்வங்களாகிற எட்டு ஆகாரமுள்ளவ னென்னலு மாம். இருமை பெருமையாய் இத் திருமொழியில் முன் கூறின கிருஷ்ணன், ராமன், ஆதிவராஹன், அநந்தசயனன் என்ற நான்கு பெருமையுள்ள மூர்த்திகளை யுடையவ னென்னலுமாம்.

இப்படி அர்த்தமய னென்பதை யருளி, சப்தமய னென்பதை யருளுகி ருர் நால் வேதக்கடலமுதை யென்று. 'பாராசர்யவசஸ்ஸுதா முபநிஷத்துக் தாப்தி மத்யோத்ருதா' மென ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச் செய்தது இதனை யுட் கொண்டே யாம். வஅஸூஹஸூதாஹெ-உதாத்பய-ஃழ என வங்கே உரைத்தனர். ப்ரம்ம ஸூத்ரத்திற்கு அர்த்தம் ப்ரம்மமே. அதே நால் வேதக் கடலமுது. அமு தம் கடைவதற்கு முன் கடலெங்கும் பரவியிருந்ததுபோல் எம்பெருமான் எல்லா வேத சப்தத்திலுமிருப்பவன். ஸர்வவேத ப்ரதிபாத்யன். அதில் ப்ரதான மாயிருப்பதாலே அமுதாம். இப்படி அமுதாய் போக்யமா யிருப்பதோடு போகங்கள் அனைத்தும் அருளவல்லனுகையாலே கற்பகத்திற்கு மேற்பட்ட கற் பகமென்கிருர். இக் கற்பகத்திற்குப் பெருமையாவது வெகு க்ஷுத்ரங்களான பலன்களைக் கொடுப்பதுடன் இந்த்ர ருத்ர ப்ரஹ்மாதி பதங்களையும் கொடுக்க வல்லதாகுகை. மேன்மையாவது தன்னைத் தந்த கற்பகமென்னும்படி நிற்கை. வேதாந்தத்தில், 'வ்ருக்ஷ இவ ஸ்தப்தோ திவி திஷ்டத்யேக:' என்றது கற்பகமென்ற போதே மனத்தில் நடமாடவே அருளிச் செய்கிருர் வேதாந்த இத்யாதியை. வேதாந்தத்திற்கு ப்ராக்ருத வஸ்துக்களும் பொருளாம். விழுப்பொருள் = மேன்மைபெற்ற பொருளாவது அப்ராக்ருத பூமி போன்றது. அங்கே விளங்கும் விளக்கிது. இதுவும், 'யத: பரோ திவோ ஜ்யோதிர் தீப்யதே விச்வத: ப்ருஷ் டேஷு—அநுத்தமேஷு உத்தமேஷு லோகேஷு' என வோதப்பட்டது. அவ்வளவுயர்ந்த விடத்திலே நித்யமாயிலங்கும் விளக்கானதாலே உலகடங்கவு மொளி வீசுகின்றது.

இங்கே மலையை யுடைய மலை யென்றதாலே கார்ய மல்லாத ஸ்திரமான வற்றிற்கு மாதாரமான வொரு ஸித்தவஸ்துவெனச் சொல்லி, மேலே மூன்று விசேஷணங்களாலே அதற்கு லக்ஷணங்கள் அமைந்திருப்பதையும், சாஸ்த்ர யோநி அது என்பதையும், பரமபுருஷார்த்த மென்பதையு மடைவாக வருளி, இப்படி சாரீரக சாஸ்திராரம்பத்திலே உபோத்காதமாய் அமைந்த நாலு ஸூத்ரங்களின் அர்த்தத்தை வெளியிட்டு, பிறகந்த சாஸ்திரத்திலே ஸமந்வயாத் யாயம் தொடங்கிப் பூராவிலும் சேதநாசேதந ஸகலவிலக்ஷணமாக, வேதாந் தங்களைக் காண்பித்து அருளின வர்த்தத்தை வேதாந்த விழுப்பொருளின் மேலிருந்த விளக்கை யெனச் சுருக்கியருளினு ரெனப் பலவாறு இப்பாசுரத்திற்குப் பொருளை யாராய்க. (கக)

ப்ரபந்தரக்ஷையில் பெரியாழ்வார் திருமொழி (4-3)

உருப்பிணிநங்கை உரை முற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானுர் தேசிகன் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:
ஆழ்வார் எம்பெருமானுர் தேசிகன் திருவடிகளே சரணம்.

# பெரியாழ்வார் திருமொழி 4-4.

# நாவகாரியம்

திருமாலிருஞ்சோலையழகரைத் திருமொழி யிரண்டினால் அநுஸந்தித்து, இனி பாகவதாதிஷ்டிதமான திவ்ய தேசத்திற்கு மற்ற திவ்ய தேசத்தைக் காட்டிலும் ஏற்றமுண்டென்றும், அவர்களோடுள்ள சேர்க்கையாலே திருமுக மலர்ச்சி கொண்ட திருமாலின் ஸேவை பெற்றோர்க்கு அவன் திருவடியிணை காண்பது மாத்திரமே யன்றி, கைங்கர்யம் செய்துகக்கும் தசை யாமென்று மறிவிக்கத் திருவுளம் கொண்டு அக்காலத்திலே அபிமானதுங்கர் முதலான அனேக பாகவதர்கள் திரண்டிருந்த திருக்கோட்டியூ ரெம்பெருமானின் அநுபவத்தி லிழிந்து, பகவத் விஷயத்திலேயே பற்றற்றவர்களைப் பரிஹஸித்தும், பற்றுள்ளாரைப் புகழ்ந்தும் கூறும் முகத்தாலே ஒவ்வொருவனுக்கும் தன்னைப் பாகவதனாக்கிக் கொள்ள உத்ஸாஹத்தை யூட்டி யருளுகிறார்.—

1. நாவகாரியஞ்சொல்லிலாதவர் நாடோறும் விருந்தோம்புவார்
தேவகாரியம்செய்து வேதம் பயின்றுவாழ் திருக்கோட்டியூர்
மூவர்காரியமுந்திருத்து முதல்வனைச் சிந்தியாதவப்
பாவகாரிகளைப் படைத்தவனெங்ஙனம் படைத்தான்கோலோ (360)

| | | | |
|---|---|---|---|
| நா | நாவுக்கு | திருக்கோட்டியூர் | கோஷ்டபுரத்திலே எழுந்தருளி யிருக்கும் |
| அகார்யம் | அகார்யமான | மூவர் காரியம் உம் | ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் மூன்றையும் |
| சொல் | சொற்கள் | திருத்தும் | ஒழுங்காக நடத்தும் |
| இலாதவர் | சொல்லாதவரும் | முதல்வனை | மூலபுருஷனான நாராயணனை |
| நாள் தொறும் | ப்ரதிதினமும் | சிந்தியாத | கேட்டு மனனம் செய்யாத |
| வேதம் பயின்று | வேதாப்யாஸம் செய்துகொண்டு | பாவகாரிகளை | பாவத்தையே செய்பவரை |
| தேவர் காரியம் | யாகங்களையும் | படைத்தவன் | ஸ்ருஷ்டித்தவன் |
| செய்து | செய்துகொண்டு | எங்ஙனம் | எதற்காகத்தான் |
| விருந்து | அன்னதானத்தை | படைத்தான் கொல் | ஸ்ருஷ்டித்தானோ தெரியவில்லையே |
| ஓம்புவார் | பேணிவரும்பெருமான ஸ்ரீ வைஷ்ணவர்கள் | | |
| வாழ் | வாழுமிடமான | | |

'நாவுக்கு அகார்யமான' என்றதற்குச் சொல்லவொண்ணாத எனப் பொருள். விதிநிஷேதயோ பலீயாந். விதியை விட நிஷேதம் பலீயஸ்ஸு. அதாவது செய் என்றதைச் செய்யாம லிருப்பதைவிட, வேண்டாமென்பதைச் செய்வது மிகத் தவறாகும். ஆகவே அக்ருத்யம் செய்யாதவ ரென்று முந்துற முன்னம் கூறி, க்ருத்யங்கள் செய்வதைப் பிறகு கூறினார். தாநம், யஜநம், ஸ்வாத்யாயம் என்ற மூன்று மடைவே மேலே சொல்லப்பட்டன. 'யஜ்ஞ

த்யயநம் தாநமிதி' என்று வேத மிவற்றை முக்யமாய் க்ருஹஸ்த தர்மமாக வோதிற்று. இங்கே அபிகமந—உபாதான—இஜ்யா—ஸ்வாத்யாயங்கள் சொல்லப் பெற்றன என்றதுமாம். க்ருத்யாக்ருத்யங்களைத் தெளிந்து சாஸ்த்ரத்திற்குட் பட்டிருந்து பகவத் கைங்கர்யம் செய்பவனே ஸ்ரீ வைஷ்ணவனுவான். மூவர் காரியமும் என்றதற்கு பிரமன், விஷ்ணு, சிவன் என்ற மூவரின் கார்யமும் எனவே பொருள். இங்ஙனமாகில் விஷ்ணு வேறு, முதல்வன் வேறு எனத் தேறு மென்னவேண்டா. விஷ்ணுவும் நாராயணனும் ஒருவனுகையாலே விஷ்ணுவின் கார்யத்தை முதல்வன் திருத்தினதானுலும்; பிரமன் ருத்ரன் என்றவரின் காரியம் நாராயணன் திருத்தினவை யாகாவென்று நினையாமைக்காக மூவர் காரியமும் திருத்து மென்றது. விஷ்ணுவினது போல் இதரர்கள் க்ாரியம் திருத்துவது மிவனே. ஏனெனில், அவர்களுக்கும் அந்தர்யாமியாய் ஸ்ருஷ்டி கர்த்தாவான முதல்வனுயிற்றே இவன் என்றபடி. இங்கே விஷ்ணுவை க்ரஹிப்பது கூடாததாக வைத்து மூவரென்பதற்கு ப்ரம்ம-ருத்ர—இந்திரர்களுடைய எனப் பொருளு முரைப்பர். சிந்தியாத. திருக்கோட்டியூர் எம்பெருமான் என்றே சிந்திக்கவேண்டு மென்பதில்லை. எம் மூர்த்தியிலாவது முதல்வனைச் சிந்தித்தால் போது மென்க. பாவகாரிகளை. சிந்தியாதது பாவத்தினுலேயே யாமாகையாலே இவர்கள் முன்னே பாவம் செய்தவர்க ளென்பது திண்ணம். இவர்களை ஏன் படைக்க வேண்டும்? படைக்கின்றவனும் முதல்வனு மொருவனுகையாலே நம்மைச் சிந்தியாதவனை நாம் ஏன் படைக்கவேண்டு மென்று அவன் சிறிது ஆலோசிக்கலாகாதா? ஒருக்கால் இவர்கள் ராக்ஷஸ அஸுரப் பிறவிகளிற் பிறந்து மேன்மேல் பீடிக்கப்படட்டு மெனத்தான் படைத்தானே? அல்லது அப்போதும் ஏதாவது ஒரு ஸுக்ருதம் இடைப்படலா மென ஆவல் கொண்டு தான் படைத்தானே வென்றதாம். (க)

எதற்காகப் படைத்தா னென்ருல் தாயர்வயிற்றுக்குப் பெருநோய்க்காக வென்கிருர்—

2. குற்றமின்றிக்குணம்பெருக்கிக் குருக்களுக்கனுகூலராய்
சேற்றமொன்றுமிலாத வண்கையினுர்கள்வாழ்திருக்கோட்டியூர்
துற்றியேழுலகுண்ட தூமணிவண்ணன்றன்னைத் தொழாதவர்
பேற்றதாயர் வயிற்றினைப்பெருநோய் செய்வான்பிறந்தார்களே. (361)

| | |
|---|---|
| குற்றம் இன்றி | தோஷமற்று |
| குணம் பெருக்கி | குணங்களை மேன்மேல் வளர்த்துக்கொண்டு |
| குருக்களுக்கு | குரு எனச்சொல்லப் பட்டவர்க்கு |
| அனுகூலராய் | ஏவிற்றுச் செய்து வருமவராயிருந்து |
| செற்றம் | கோபம் |
| ஒன்றும் | கொஞ்சமும் |
| இலாத | இல்லாதவர்களாய் |
| வண் கையினுர்கள் | தானம் செய்யும் கையுடையார்கள் |
| வாழ் | வாழுமிடமான |
| திருக்கோட்டியூர் | கோஷ்டீபுரத்திலே எழுந்தருளி யிருக்கும் |
| ஏழு உலகு | ஏழுலோகங்களையும் |
| துற்றி | ஒன்ருகச் சேர்த்து |
| உண்ட | உட்கொண்ட |
| தூ மணி வண்ணன் தன்னை | சுத்தமான நீலமணி நிறத்தனுன கண்ணனை |
| தொழாதவர் | ஸேவியாதவர்கள் |
| பெற்ற | தங்களைப்பெற்றெடுத்த |
| தாயர் வயிற்றினை | தாய்மாரின் வயிற்றை |
| பெரு நோய் | பெருத்த நோயுடையதாக |
| செய்வான் | ஏ செய்வதற்காகவே |
| பிறந்தார்கள் | பிறந்தவர்களாம், |

குற்றமில்லாமை=சமதமாதிகள் பெற்றிருக்கை; குணம்பெருக்கை= ஜ்ஞானபக்தியாதிகளை விருத்தி செய்கை. அன்றி, குருக்களிடத்திலே தோஷ க்ரஹணமின்றி அவர்கள் குணங்களை யெங்கும் புகழ்ந்து பேசிக்கொள்வ தென்றதாம். குருக்களாவார் மாதா, பிதா, ஆசார்யன் முதலானோர். பெரு நோய் செய்வான். உலகில் புத்திரனைப் பெறுவது, தாங்கள் நரகம் புகாமே நற்கதி பெறுவதற்குப் புத்திரன் அநுகூலமாக நற்செய்கைகளை நடத்துவான் என்ற நோக்கத்தாலுமாம்; பிறந்து ஒரு ஜீவன் க்ஷேமம் பெறக்கடவன் என்ற பெரு மனதுடனுமாம். அப் பலன் உண்டாகில் பெரு நோய் பாராட்டப் படாதே போம். மேல்வரும் சுகத்திற்காக முன்பெறும் துக்கம் பொறுக்கப்படு மன்றோ? அப்பலனில்லையாகில் நோய்பட்டதை நினைத்துப்பின்னும் வருத்தப் படும்படியேயாமாகையால் இங்ஙன மருளினது.

முன் பாசுரத்திலே சிந்தனம் வேண்டுமென்றார் இங்கே காயிக வ்யாபா ரமான ஸேவை வேண்டு மென்றார். (உ)

பெற்ற தாயர் வயிற்றினைப் பெரு நோய் செய்வான் பிறந்தார்கள். (மா ஜநி ஷ்ட ஸ நோ வம்சே ஜாதோ வா த்ராக் விபத்யதாம், ஆஜந்மமரணம் யஸ்ய வாஸுதேவோ ந தைவதம்). பிறப்பு முதல் இறப்பு வரையிலுள்ள காலத்திலே ஒரு பொழுதும் வாஸுதேவனைப் பரதேவதையாக நினையாத சீவன் நம் வம்சத் திலே பிறக்கவே வேண்டாம். பிறந்தாலும் பிறந்தவுடனே இறந்து போகட்டும் என்று முன்னோர் வெறுத்த வகையிலே அழிய வேண்டியிருக்க, அந்தோ அள வில்லாமல் உண்டு வளரா நின்றார்களே என வருந்துகிறார்.

3. வண்ணநன்மணியும் மரகதமுமழுத்தி நிழலெழும்
திண்ணைசூழ் திருக்கோட்டியூர்த் திருமாலவன்றிரு நாமங்கள்
எண்ணக்கண்டவிரல்களாலிறைப் பொழுதுமெண்ணகிலாதுபோய்
உண்ணக்கண்டதம் ஊத்தைவாய்க்குக் கவளமுந்துகின்றார்களே. (362)

நல் வண்ணம் — மரகதத்திற்குப் பரபாக மாம்படி நல்ல நிற முள்ள
மணி உம் — ரத்னங்களையும்
மரகதம் உம் — மரகதக்கற்களையும்
அழுத்தி — இழைத்திருப்பதாலே
நிழல் — ஒளி
எழும் — வீசா நின்ற
திண்ணை — வெளி மேடைகளாலே
சூழ் — சூழப்பெற்ற
திருக்கோட்டியூர் — கோஷ்டீபுரத்தில் எழுந்தருளி யிருக்கும்
திருமால் அவன் — ச்ரிய: பதியானவ னுடைய
திரு நாமங்கள்-திருநாமங்களை
எண்ண கண்ட — எண்ணுவதற்காகத் தோன்றியுள்ள
விரல்களால் — தம் கைவிரல்களினாலே
இறை பொழுதும் — நொடிப் பொழுதும் கூட
எண்ணகிலாது — எண்ண மாட்டாமே
போய் — விஷயாந்தரங்களிலே புகுந்து நின்று
தம் — தங்களுடைய
உண்ணக் கண்ட — உண்ண முன் வந்துள்ள
ஊத்தை — துர்கந்தமான
வாய்க்கு — வாயினுள்
கவளம் — திரளைகளை
உந்துகின்றார்கள் — தள்ளுகின்றார்கள்
ஏ — அஹோ கஷ்டம்.

திருவினுடையவும் திருமாலினுடையவும் நிறங் கொண்ட மாணிக்கங்க ளும் மரகதங்களும் பகைத்தொடையாகப் பதிக்கப் பெற்றிருப்பதாலே பிராட்டி யுடன் பெருமானை யுடையன போலே தோற்ற மளித்து, வெளியூர்களிலிருந்து

யேவார்த்திகளாய் வருமவரை வீற்று விச்ரமித்துக்கொள்ள அழைப்பது போலே நிழலெழும் திண்ணைகளைத் திருமாளிகைதோறு முள்ளதாலே பரமோப காரகமாயுள்ள திருக்கோட்டியூருக்குத் தக்கபடி, திருவுக்கு வசப்பட்டுத் திகழும் திருநாராயணனுடைய திருநாமங்களை ஜபிப்பதற்காகவே வாயையும், ஜப காலத்திலே கணக்கெண்ணுவதற்காகவே விரல்களையு மிறைவன் ஸ்ருஷ்டித்திருப்பதால், எப்பொழுது மதிலே ஈடுபட்டு அதற்கு சேஷ பூதமாய் தேஹதாரணம் செய்வதற்காக இறைப்பொழுது ஏதேனும் எம்பெருமான் அமுது செய்தவற்றிலே உசிதமாய் உண்பதற்கும் அவற்றை யுபயோகப் படுத்திக்கொள்வதே யுக்தமென்று தெளிந்து நடந்துகொள்ள வேண்டி யிருக்க, நேர்மாறாக இறைப்பொழுதுகூட ஜபத்திற்கு வாயையும் எண்ணுவதற்கு விரல்களையும் விடாமல் எப்பொழுதும் விஷய போகங்களுக்கேற்ப வளர்வதே பெரிதாக வைத்து உண்பதற்கே வாயையும் அங்ஙனமுண்பதாலே அஜீர்ண மேற்பட்டு துர்க்கந்தமான வாயிலே மேன்மேலாகப் பல வாஹாரப் பெருந்திரளைகளை யெடுத்துத் தள்ளுவதற்கே விரல்களையும் பயன்படுத்துகின்றனரே. இதற்கேதேனும் பரிஹாரமுண்டோ வென்றபடி. எண்ணகிலாது. இவர்கள் புறம்பே போய் வீணே உண்பதே இப்படி எண்ணமுடியாதபடி மேன்மேலிவர்களைக் கெடுத்துவருகிற தென்றபடி. திருநாமங்களை எண்ணுவது முக்கியமென விங்கே வருளினதாம். (௩)

உண்ணும் கவளங்களைக் கீழே கூறி, அவற்றுடன் பருகுநீரும் உடுக்கும் கூறையும் கூடப் பாவம் செய்துள்ளன வென்கிறார்.

4. உரகமெல்லணையான்கையிலுறைசங்கம்போல் மடவன்னங்கள்
நிரைகணம்பரந்தேறுஞ் செங்கமலவயல் திருக்கோட்டியூர்
நரகநாசனைநாவிற்கொண்டழையாத மானிடசாதியர்
பருகுநீருமுடுக்குங்கூறையும் பாவம்செய்தனதாங் கோலோ. (363)

| | | | |
|---|---|---|---|
| உரகம் | ஸர்ப்ப ரூபமாய் | திருக் கோட்டியூர் | கோஷ்டிபுரத்திலே (எழுந்தருளியிருக்கும்) |
| மெல் | மிருதுவாயுள்ள | நரக நாசனை | நரகத்தையழிக்கும் நாராயணனை |
| அணை யான் | படுக்கையையுடைய சேஷசாயியினுடைய | நாவில் கொண்டு | நாவினால் உச்சரித்து |
| கையில் | திருக்கையில் | அழையாத | கூவாத |
| உறை | இருக்கின்ற | மானிட சாதியர் | சாதியில் மனிதரானவர்கள் |
| சங்கம் போல் | ஸ்ரீ பாஞ்சசன்னியம் போலேயிருக்கும் | பருகும் | குடிக்கும் |
| மடம் | மடப்பமுமுள்ள | நீர் உம் | தண்ணீரும் |
| அன்னங்கள் | ஹம்ஸபக்ஷிகள் | உடுக்கும் | தரிக்கும் |
| நிரை | வரிசையாக | கூறை உம் | வஸ்திரங்களும் |
| கணம் | கூட்டமாக | பாவம் செய் தனதாம் | பூர்வஜன்மத்திலே பாவம் செய்தவைகளேயாம். |
| பரந்து | வ்யாபித்து | கொல் ஓ | மிக்க வருத்தம். |
| ஏறும் | ஏறப்பெற்ற | | |
| செம் கமலம் | சிவந்த தாமரைப் புஷ்பங்கள் நிறைந்த | | |
| வயல் | கழனிகளையுடைய | | |

உரகமெல்லணையான். எம்பெருமானுக்குப் படுக்கையாகவாம் நித்ய ஸூரி பாம்பாக உருவெடுத்தது மென்மை, மணம், தண்மை, தூய்மை யென்ற குணங்களைக் கொள்வதற்காக. பாம்பாயிருந்தால் படுக்கை அதை பிறர் தொட

மாட்டாராகையாலே பரிசுத்தமாயிருக்கும். கையிலுறைசங்கம். வயல்களிலே வளர்ந்தெழுந்து மலர்ந்துள்ள கமலங்கள் எம்பெருமானின் திருக்கைகள் போலவும், அவற்றிலே ஒழுங்குபட வரிசையாக வீற்றிருக்கு மன்னங்கள் அவன் திருக்கையிலுள்ள ஸ்ரீபாஞ்சசன்னியம் போலவும் காட்சியளிக்கின்றனவென் றபடி. நரகநாசனை இத்யாதி. 'நாராயணேதி நாமாஸ்தி வாகஸ்தி வசவர்த்திநீ ததாபி நரகே கோரே பதந்தீத்யேததத்புதம்.' அவன் திருநாமத்தை நன்கு உரைக்கத்தக்க வயக்தவாக்கான மானிட சாதியிற் பிறந்து வைத்தும் இப்பிறப் பின் அருமையறியாமே அவன் பேரைக் கூறுமே வீணே நரகத்திற்கு நாற்றங் காலாக விதை ஆக்கி வைக்கின்றனரே யென்று வருந்தினபடி. பாவஞ் செய்தன. வ்யஷ்டிஸ்ருஷ்டியிலுள்ள வஸ்துக்களெல்லாம் பலவகையானவுடல் பெற்றுள்ள சீவர்களே யென்பதை வேதமூலமாய் வேதார்த்த ஸங்க்ரஹாதிகளிலே எம்பெரு மானுர் விளக்கியுள்ளார். ஆக அன்னமும் நீரும் கூறையும் கூட சீவர்களே யாம். இவற்றில் சிலவை பகவத் பாகவதர்களுக்கு உபயோகப்படுவதும் மற்றவை மற்றவருக்காகியிருப்பதும் அவை பூர்வ ஜன்மத்தில் செய்துள்ள ஸுக்ருத துஷ்க்ருதங்களடியாக வேறுபட்டவையாம். 'ஆபகா: க்ருதபுண் யாஸ்தா: பதிமிந்யச்ச ஸராம்ஸி ச! யேஷு ஸ்நாஸ்யதி காகுத்ஸ்தோ விகாஹ்ய ஸலிலம் சுசி (2-48). 'அஹம் கதம்போ பூயாஸம் குந்தோ வா யமுநாதடே' 'ச்ம சானே ஜாயதே வ்ருக்ஷ: கங்கக்ருத்ரோபஸேவித:' 'நஷ்டசௌசே வ்ரதப்ரஷ்டே விப்ரே வேதவிவர்ஜிதே! தீயமாநம் ருதத்யந்நம் கிம் மயா துஷ்க்ருதம் க்ருதம்.' இத்யாதிகளை யாராய்க. இவ் வஸ்துக்கள் ஸத்புருஷர்களுக்கு உபயோகப் பட்டால் இவற்றிற்கு மேலே வரும் ஜன்மம் மேன்மை பொருந்தியதாம். அல்லாதபோது துஷ்ட ஸம்ஸர்க வசத்தாலே மறுபடியும் துர்கதியாம். தாம் கோலோ. கோல் என்பது வருத்தத்தைக் குறிக்கும். அன்றி, அவர்கள் உப யோகித்த வஸ்துக்கள் பாவஞ்செய்தனவேயாம். உபயோகப்படவேண்டும் வஸ்துக்களை அவர்களுக்காகாதபடி விலக்கிப்பார்க்கவேண்டும். விலக்கக்கூடு மாகில் பாவஞ் செய்யாதவை யெனலாம்; இல்லையேல் செய்தனவே என ஞயப்பட்டு கோல் எனவுமருளினரென்க. (௪)

ஆக அஸத்துக்களுக்குள்ள அன்னாதிகளை யபஹரிப்பதே நலம். ஆழி யானை அழையாதவர்கள் ஆடுமாடுகளுக்கொப்பானவர்களாகையாலே அவர்கள் புல்லைத் தின்பதே ப்ராப்தமானது. தின்ன வியலாதே என வேண்டா. திணித்து வந்தால் நாளடைவில் தெரியவரும். இல்லையேல் பூமிக்கு மிகப் பாரமா யிருந்து பிறரையழித்துத் தாமும் அழியும்படியா மென வருளுகிறார்.

5. ஆமையின் முதுகத்திடைக்குதி கொண்டு தூமலர் சாடிப்போய்
தீமைசெய்திளவாளைகள் விளை யாடு நீர்த்திருக்கோட்டியூர்
நேமிசேர்தடங்கையினானை நினைப்பிலாவலிநெஞ்சுடை
பூமிபாரங்களுண்ணுஞ் சோற்றினைவாங்கிப் புல்லைத்திணிமினே. (364)

| | | | |
|---|---|---|---|
| இளை | இளர் வயதிலுள்ள | ஆமையின் | (நீரிலுள்ள) ஆமைகளி னுடைய |
| வாளைகள் | பெரிய மீன்கள் | | |

| | |
|---|---|
| முதுகு | முதுகில் |
| இடை | நடுவிலே |
| குதிகொண்டு | குதித்துக்கொண்டும் |
| தூ மலர் | நல்ல புஷ்பங்களை |
| சாடி | உதைத்துக்கொண்டும் |
| போய் | ஓடி |
| தீமைசெய்து | இவ்வகைத் தீம்புகளைச் செய்து |
| விளையாடு | விளையாடிவருமிடமான |
| நீர் | ஜலஸம்ருத்தியையுடைய |
| திருக் கோட்டியூர் | கோஷ்டீபுரத்தில் (எழுந்தருளியிருக்கும்) |
| நேமி சேர் தட கையி னானை | திருவாழியாழ்வான் சேர்ந்துள்ள விசாலமான திருக்கையுடைய பிரா |

| | |
|---|---|
| | னைப் பற்றிய |
| நினைப்பு | நினைவு |
| இலா | எப்போதுமிராத |
| வலி | கடினமான |
| நெஞ்சு | மனத்தை |
| உடை | உடையவர்களாய் |
| பூமி பாரங்கள் | பூமிக்குச்சுமையுமான பாவகாரிகள் |
| உண்ணும் | உண்பதற்கு வாயிலிட்ட |
| சோற்றினை | அன்னத்தை |
| வாங்கி | வாயிலிருந்து விலக்கி (அதற்குப்பதிலாக) |
| புல்லை | மாட்டுக்குணவான புல்லை |
| திணிமின் | அடையுங்கோள். |

முதற் பாசுரத்திலே பகவத் கைங்கர்யபரரையும், இரண்டாம் பாசுரத்திலே ஆசார்ய கைங்கர்யத்தில் ஈடுபட்டவரையும் பிரித்துக் கூறியருளி அங்குள்ளவர் முகத்தாலே அவ்வூரின் பெருமையை விளக்கி, மூன்றும் பாசுரத்திலே திருமாளிகைகளைக்கொண்டு துதித்து, நான்காம் பாசுரத்திலே வயல்களையிட்டு வர்ணித்து, ஐந்தாம் பாசுரத்திலே நிலவளம் போலே நீர்வளமும் நிரம்பினதென வருளினாரென்க.

முதுகத்து. அத்து—அசைச்சொல்; அல்லது சாரியை. உலகில் இளவயதிலிருப்பவர் தீமைசெய்வது இன்றியமையாததது. நீர்வளமுள்ள திருக்கோட்டியூரில் (முன் பாசுரத்திற் சொன்னபடி) நிலத்திலே வஸித்து நீரிலே மலர்களிலேறி நிற்கும் அன்னங்களைப்போலன்றியே நீரிலேயே நித்யவாஸம் செய்யுமாமைகளின் வலிய முதுகின்மேல் குதித்து அப்போது மலர்ந்த புஷ்பங்கள் அடிபட்டுதிர்ந்து விழும்படி விளையாடும் வாளைகள் செய்வது தீமையன்றோ? ஆகிலுமிதனால், ஆமைக்கு முதுகு வலிதாயிருப்பதாலே, வலியொன்றுமில்லை. மலர்களின் வீழ்ச்சியாலே நீருக்கு மணமே மிகும். இங்ஙனம் அபகாரமிராது உபகாரமுண்டாம் வகையிலே சில தீமைகளிருந்தால் பொறுத்துவிடலாம். அங்ஙனமின்றியே தங்களுக்கும் பெருந்தீங்குக்கு இடமாய், பூமிபாரங்களானவர்களைப் பொறுக்கமுடியாதென வுணர்ந்து எம்பெருமான் தனது திருக்கையிலுள்ள திருவாழியைத் தங்கள்மேல் ஏவும்படி நின்று, அவனுடைய குணங்களையும் வ்யாபாரங்களையும் நெஞ்சால் நினைக்காமல் வீண் துணிவு கொண்டு வளர்கின்றவர்களுக்கு நாம் செய்யும் உபகாரம் யாதெனில், அவர்கள் உண்ணும் சோற்றைப் பறித்துப் பதிலாகப் புல்லைத் திணிப்பதே. புல்லைக்கடித்த பிறகு பொருதழிக்கப்படுவதுண்டோ? பசுக்களாய் சாஸ்திரத்திற்கு வச்யமாகாத ஜாதியிற் சேர்ந்தபிறகு சிக்ஷிப்பதுமுண்டோ? ஆக அவர்களும் மீளலாம். அவர்களுண்ணும் சோறும், 'மிண்டர்பாய்ந்துண்ணும் சோற்றை விலக்கி நாய்க்கிடுமினிரே' என்றபடி உபகாரமான நாய்க்குணவாய் நின்று தன் பாவத்தைப் போக்கிக்கொள்ளு மென்றபடி. (ரு)

இங்ஙனம் ஆதியானுக்கடிமையின்றி திரிவாரை வெறுத்து இனி அடியாரிடத்திலே அடிமைப்பட்டிருக்கவேண்டுமென வருளுகிறார்.

6. பூதமைந்தொடுவேள்வியைந்து புலன்களைந்து பொறிகளால்
ஏதமொன்றுமிலாத வண்கையினார்கள் வாழ்திருக்கோட்டியூர்
நாதனை நரசிங்கனை நவின்றேத்துவார்களுழக்கிய
பாததூளி படுதலாலிவ்வுலகம் பாக்கியஞ் செய்ததே. (365)

| | |
|---|---|
| பூதம் ஐந்தொடு | பஞ்ச மஹா பூதங்களும், |
| ஐந்து வேள்வி | பஞ்ச மஹா யஜ்ஞங்களும், |
| ஐந்து புலன்கள் | சப்தம் முதலிய விஷயங்கள் ஐந்தும் |
| பொறிகள் ஆல் | இந்திரியங்களுமாகிய இவற்றால் (வரும்) |
| ஏதம் | குற்றம் |
| ஒன்றும் | கொஞ்சமும் |
| இலாத | இல்லாதவர்களும் |
| வண் கையினர் கள் | உதாரமான கைகளையுடையருமான ஸ்ரீவைஷ்ணவர்கள் |
| வாழ் | வாழ்வதற்கிடமான |
| திருக் கோட்டியூர் | கோஷ்டீபுரத்திற்கு |
| நாதனை | நாதனும் |
| நரசிங்கனை | நரசிங்கனுமான எம்பெருமானை |
| நவின்று | நன்குணர்ந்து |
| ஏத்துவார்கள் | ஸ்தோத்ரம் செய்பவர் |
| உழக்கிய | மிதிப்பதால் கிளம்பிய |
| பாதம் தூளி | திருவடிகளில் பட்ட தூளிகள் |
| படுதலால் | ஸம்பந்திப்பதால் |
| இ உலகம் | இந்த லோகமானது |
| பாக்கியம் | ஸுக்ருதத்தை |
| செய்தது | பண்ணினதாம். |

பூதமைந்து என்றதாலே பஞ்சபூதங்களாலான சரீரத்தைச் சொன்னதாம். பொறிகள் ஐந்து என்றமையால், 'இந்த்ரியாணி தசைகஞ்ச பஞ்ச சேந்த்ரியகோசரா:' என்கிறபடி புலன்களைந்தைக்குறிக்குமிடத்திலும் ப்ரமாணஸித்தங்களான பதினொரு இந்திரியங்களையும் கருதினதாம். இனி, பூதம் வேள்வி புலன் என்று அடைவே த்ரவ்யம், க்ரியை, குணம் என்றவற்றைக் குறித்ததுமாம். அவைஷ்ணவர்களுக்குப் போலே "ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் பத்தராயிருக்கும்போது சரீரம், இந்திரியம், விஷயம், வைதிக வ்யாபாரங்கள் எல்லாம் இருந்தே தீரும். ஆகிலும் அவற்றைச் சரியான முறையிலே, அவைகளை ஸ்ருஷ்டித்த எம்பெருமான் திருவுள்ளப்படி உபயோகப்படுத்துவதாலே இவர்களுக்கு ஏதமொன்றுமில்லை. மோக்ஷத்திற்காகவன்றி வேறு பலனுக்காக அவற்றை உபயோகித்தால் ஏதமுண்டு. பகவானைப்போல அல்லது அதற்கு மேலாகவும் பாகவதர்களை ஆராதிக்கவேண்டியது அவச்யமாகையாலே அது விஷயத்திலே உபயோகியாமையும் ஏதமாம். இப்படி குற்றமொன்றுமில்லாததாலே ஏதமொன்றுமிலாத என்றது. இப்படி வேறு பலனைக் கோலாமலிருப்பதைச் சொன்னதிலிருந்து, தேவதாந்தரங்களைக்குறித்தும் தேவதாந்தர பக்தர்களுக்காகவும் இவற்றைப் பயன்படுத்துவதில்லை யென்றதும் சொன்னதாம். நித்யநைமித்திகங்களை யநுஷ்டிக்கும்போது தேவதாந்தரங்களைக் குறிக்கும் வைதிக பதங்களை ஸ்ரீவைஷ்ணவர்கள் சொல்வது அவசியமே. ஆகிலும் ஸர்வாந்தர்யாமியான ச்ரிய:பதியையே அப்பதங்களின் பொருளாக இவர்கள் ஒருவகையில் கொள்வதே ப்ராமாணிகமாகையால் அவற்றால் தேவதாந்தரங்களை இவர்கள் ஆராதிப்பதில்லை. இவ் வுண்மைநிலையறிந்து அநுஷ்டிப்பதாலே ஏதமொன்றுமிலாதாராவர் இவர். இப்படி மோக்ஷார்த்தமாக அநுஷ்டிப்பதையும் தவிர்த்து ப்ரபந்நர்களாய் பரமபதத்திலுள்ள முக்தர்களைப்போலே இவர்களும் ப்ரீதிபரவசராய் சேஷி யுகப்பதே புருஷார்த்தமெனக் கருதி கைங்கர்ய

மாக வனுஷ்டிப்பவராய் பகவத் பாகவதப்ரவணராகில் அப்போதே ஏதமொன்றுமிலாதவராவர். சிலர் தேவதாந்தர ஸம்பந்தம் நேரிட்டுவிடுமோ வென்றஞ்சி வேள்விகளை யனுஷ்டியாது விட்டொழிப்பர். அதூ சரீரேந்திரியங்களிருந்தால் விஷயாந்தரங்களிலே மூளும்படியாமென்றஞ்சி ஆத்மஹத்தி செய்வதோடொக்கும். ஆக விவேகிகளாயிருப்பவர் உள்ளதைத் தகுந்த முறையில் உபயோகிக்கத் தெரிந்துகொள்ளவேண்டுமே தவிர, தவிர்க்க நினைப்பது தகாதென உபதேசிக்கின்றார், வேள்வியை யிங்கு சேர்த்தருளினாரென்க. நாதனை நரசிங்கனை யென்று அவ்வூரில் எழுந்தருளியிருக்கும் சொக்கநாராயணரையும் தெக்காழ்வாரையும் கருதினதாகக் கொள்வர். பாததூளி படுதலால் இத்யாதி—'ஜயந்தி புவநத்ராணபதபங்கஜரேணவ:'. 'நிர்தநாந் சரதோ லோகே வ்ருத்யர்த்தமிஹ ஸாத்விகாந் நாவமந்யேத, தைர்லோகம் பவித்ரீகுருதே ஹரி:. யே பாவயந்தி தரணீம் சரணை: பாஞ்சகாலிகா: தர்சநாத் ஸ்பர்சநாத் தேஷாம் க்ருதார்த்தா: ஸர்வதேஹிந:'' என்றவாறு ஸ்ரீசாண்டில்யஸ்மிருதியில் உள்ளதையும் காண்க. (௬)

ஆஜ்ஞாகைங்கர்யம் செய்வதைக்கொண்டு திருக்கோட்டியூரிலுள்ளாரைத் துதித்து பாகவதப்ராவண்யத்தை யுபதேசித்தருளினார் கீழ். அநுஜ்ஞாகைங்கர்யத்தைக் கொண்டு இங்கே புகழ்ந்தருளுகிறார்—

7. குருந்தமொன்றொசித்தானொடுஞ்சென்று கூடியாடிவிழாச்செய்து
திருந்துநான்மறையோரிராப்பகலேத்தி வாழ்திருக்கோட்டியூர்
கருந்தடம்முகில் வண்ணனைக்கடைக்கொண்டு கைதொழும் பத்தர்கள்
இருந்தவூரிலிருக்கும் மானிடரேத்தவங்கள் செய்தார்கொலோ. **(366)**

| | | | |
|---|---|---|---|
| குருந்தம் ஒன்று | அசுரன் புகுந்த வொரு குருந்த மரத்தை | திருக் கோட்டியூர் | கோஷ்டீபுரத்தில் (எழுந்தருளி யிருக்கும்) |
| ஒசித்தானொடு | முறித்தவனை கண்ணபிரானோடு | கரு தட முகில் | கறுத்தும் பருத்துமுள்ள மேகத்தின் |
| சென்று | அநுயாத்ரையாகச் சென்று | வண்ணனை | ஸ்வபாவமுள்ள பிரானை |
| கூடி | குழாங்களாகச் சேர்ந்து | கடைக் கொண்டு | திடமான அத்யவஸாயத்துடன் |
| ஆடி | அனுபவத்தி லீடுபட்டுக் கூத்தாடி | கை தொழும் | அஞ்சலி செய்து நிற்கும் |
| விழா | உத்ஸவத்தை | பத்தர்கள் | பக்தர்கள் |
| செய்து உம் | நடத்தியும் | இருந்த | வஸித்து வரும் |
| திருந்து | செவ்வைப்படுகின்ற | ஊரில் | ச்ரீ க்ராமத்திலே |
| நான் மறையோர் | நான்கு வேதங்களையு மோதினவர் | இருக்கும் | வாஸம் செய்யும் |
| இரா பகல் | இரவிலும் பகலிலும் | மானிடர் | மனிதர்கள் |
| ஏத்தி | கண்ணனைத் துதித்து | ஏ தவங்கள் | எவ்விதமான தபஸ்ஸுக்களை |
| வாழ் | ஆத்மதாரணம் செய்யுமிடமான | செய்தார் கொல் ஓ | முன்னே செய்திருப்பார்களோ ஆராயவேண்டும். |

குருந்தமொன்று. கோபிகளின் ஆடைகளையபஹரித்த காலத்திற் போலே கண்ணன் ஏறி விளையாடும் குந்த மரங்கள் அனேகமுண்டு. கன்றுகளைக் காக்கும் கண்ணன் ஒரு வத்ஸாஸுரனை வதம் செய்ததுபோல் குந்தவிஹாரியான அவன் ஒரு குந்தாஸுரனையும் கொன்றிருக்கிறானென்க. இதனை, 'சாயக்

குருந்தமொசித்ததமியற்கு' (6-6-8) என நம்மாழ்வாருமருளிச் செய்தார். **திருந்து.** இது நான்மறையோருக்கு விசேஷணம். முன் பாசுரத்திற் சொன்ன படி பஞ்சமஹாயஜ்ஞாதி நித்ய கர்மாநுஷ்டானத்தோடு நின்றுவிடாமல், 'மத்கர்மக்ருத் மத்பரம:' என்றபடி அநுஜ்ஞாகைங்கர்யத்திலுமீடுபட்டபிறகே அவர் செவ்வைப்படுகின்றார் என்றதாம். இதனை நான்மறைக்கு விசேஷண மாக்கி, 'மறைக்குத்திருத்தமாவது, பகவத் ஸ்வரூபாதிகளை யுள்ளபடி யுரைத்த' லெனவு முரைப்பர். அப்போது அவற்றை விசதமாகச் சொல்லும் வேத பாகங்களைப் பாராயணம் செய்து அர்த்தாநுஸந்தானம் செய்வதை யருளின தாகலாம். நான்மறையோரென்றது, தாங்கள் கற்ற மறைகளை விழாவில் உப யோகிக்கின்றமையை யறிவிப்பதற்காம், **கடைக்கொண்டு.** ககரம் இரட்டித் துள்ள 'கடைக்கொள்ளல்' என்ற பதத்திற்கு உறுதியாகக்கொள்ளலெனப் பொருள். பலாந்தர தேவதாந்தரங்களை விட்டு அவனையே ப்ராப்யமாயும் ப்ராபக மாயும் திடமாக அத்யவஸித்ததைச் சொன்னதாகுக. இக்கொள்கை கடை யானது. ஒருக்காலும் மாறாதது. ஆகையாலே கடைக்கொள்ளல் எனப்படலாம். 'கடைக்கொண்டு. தனக்கு நைச்யத்தை யநுஸந்தித்து' எனவு முரைக்கின்றனர். பகவத்தாஸ்யத்தின் எல்லைநிலமான பாகவததாஸ்யத்தையும் கொண்டு, அதற்கு விரோதமின்றியே எனவு முரைக்கலாம். **இருந்தவூரிலிருக்கும்.** வெறுமனே அங்கு இருப்பதற்கே எவ்வளவோ தவம் செய்திருக்கவேண்டும். இருந்தால் அவர்களுடைய தர்சநமும் நேரும். அதனால் ஒருக்கால் அவர்களிடம் செல்ல வும் நேரும். காலக்ரமத்தில் திருத்தமும் பெறுவர். **கோல்.** தவங்கள் இத் தகையனவை யென தெளியாமையைக்கொண்டு இப்பதமருளினதாம். (எ)

திருக்கோட்டியூரிலுள்ள பக்தர்களுக்குள்ளே அக்ரகண்யராய்த் தம் காலத்திலே யெழுந்தருளியிருந்து பாண்டியவரசனையும் ப்ரஜைகளையும் பர வாஸுதேவனுக்காளாக்கின மஹாபாகவதரைக் கொண்டு அவ்வூரைத் துதித்து அடியார்களின் பெருமையை யருளுகிறார்.—

**8.** நளிர்ந்தசீலன் நயாசலனபிமானதுங்கனை நாடோறும்
தெளிந்தசெல்வனைச்சேவகங்கொண்ட செங்கண்மால் திருக்கோட்டியூர்
குளிர்ந்துறைகின்ற கோவிந்தன் குணம்பாடுவாருள்ளநாட்டினுள்
விளைந்ததானியமுமிராக்கதர் மீதுகொள்ளகிலார்களே. **(367)**

| | | | |
|---|---|---|---|
| நளிர்ந்த சீலன் | குளிர்ந்த ஸ்வபாவ முடையவனும், | கொண்ட | ஸ்வீகரித்தவனும், |
| நய | நீதியிலே | செய் கண் | செந்தாமரைக் கண்ணனும், |
| அசலன் | நிலைபெற்றவனும், | மால் | ஆச்ரிதரிடத்தில் மோஹம் கொண்டவனும், |
| அபிமான துங்கனை | அபிமானத்தாலே உயர்ந்தவனும் | திருக் கோட்டியூர் | கோஷ்டீ புரத்திலே |
| நாள் தொறும் | தினந்தோறும் | குளிர்ந்து உறைகின்ற | உகந்து நித்யவாஸம் செய்பவனுமான |
| தெளிந்த | தெளிவு பெற்ற | கோவிந்தன் | கோவிந்தனுடைய |
| செல்வனை | கைங்கர்யத்திற்காம் ஸம்பத்தையுடையனு மான நம்பியை | குணம் | திவ்ய குணங்களை |
| | | பாடுவார் | பாடுகின்றவர்கள் |
| சேவகம் | கைங்கர்யம் செய்பவனாக | உள்ள | வஸியா நிற்கும் |

| | |
|---|---|
| நாட்டின் உள் க்ராமங்களிலே விளைந்த உற்பத்தியான தானியம் உம்-தானியத்தைக்கூட | இராக்கதர் ராக்ஷஸர்கள் மீது கொள் ளகிலார்கள் } அபஹரிக்க மாட்டார்கள், |

திருப்பல்லாண்டிலே, 'அல்வழக்கொன்றுமில்லா வணி கோட்டியர் கோன் அபிமானதுங்கன் செல்வனைப் போலத் திருமாலே நானு முனக்குப் பழவடியேன்' என இந்த செல்வநம்பியைப்புகழ்ந்துள்ளார். இவர் ஸர்வ பூதாநுகூலராகையாலே் நளிர்ந்த சீலர். ஆகிலும் நீதிநெறி தவறாது நடக்கும்படி அரசனுக்கு ஆஜ்ஞையிட்டுச் சிக்ஷிக்கவேண்டியவரைச் சிக்ஷைக்குட் படுத்துகிறவராகையாலே நயாசலர். [நயாசலனென வடமொழித்தொடர். இல்லையேல் நயவசலன் எனவாம்.] ஆகவே பகவத் பாகவதர்கள் இவரை அபிமானித்திருப்பதாலே அதனாலே பெருமையுற்றவராய் அபிமானதுங்க ரென பிருதம் பெற்றவர். துங்காபிமானனென்றால், தான் அபிமானமுள்ளவ னென்றதாம். அபிமானதுங்கனென்றபோது பிறர் செய்யுமபிமானத்தாலே துங்கனென்பது உசிதமாம். 'தான் ஸாத்விகச்செருக்குடையனாகையாலே அபிமானதுங்கன்' எனவும் கூறுவர். செல்வம் நாடொறும் தெளிவதாவது அமார்க்கத்தாலே அடையப்படாமலும், அபாத்திரத்திலே அளிக்கப்படாமலு மிருக்கை. மேன்மேல் ஜ்ஞான ஸம்பத்தின் தெளிவுமாம். சேவகம் என்ற பதத்தின் பொருளான அடிமையாகிய ஸம்பத்தையே செல்வ மென்பதின் பொருளாகவும் கூறுவர். நாடோறும் சேவகங்கொண்ட எனவும் அந்வயிக்கலாம். இச்செல்வநம்பி தன்னை நன்கு ஆராதித்துவருவதாலே, அவர் பிறரை அபிமா னிப்பதாலும் அபிமானதுங்கனும்படி அவர் அபிமானத்திற்கிலக்கானவரை யெல்லாம் தன் செந்தாமரைக்கண்ணாலே வ்யாமோஹித்துக் குளிர கடாக்ஷித் துக்கொண்டு இவ்விடத்திலே நித்யவாஸம் செய்து கோவிந்தனாயிருப்பான் பரமபதநாதன்.

இப்படிப்பட்ட நயாசலனுள்ளவிடத்திலே ராக்ஷஸர் திருட முடியுமோ? வயல்வெளிகளிலே யாரும் பாராதபோது இராக்காலத்திலே, ராக்ஷஸர்கள் இராப்பொழுதில் கதாகதம் செய்பவராய் இராக்கதரெனப்பெயர் பெற்றவரா யினும் அங்கே ஒன்றும் செய்யவியலாது. அந்தத்தானியங்களைத் தீண்டின மாத்திரத்திலே அவர்கள் உருமாய்ந்துவிடும்படி அவற்றிற்குப் பெருமையு முண்டு. பிறர்களுக்கென்றே பெரியோர்கள் பயிரிடும் தானியமாகையாலே நாம் கொள்ளலாகாதென்று அவர்களுக்கும் நற்புத்தி அப்போழ்துண் டாய்விடும்போலும். அங்குள்ள ராக்ஷஸர்க்கும் தைவபக்தி யுண்டாம். மீது என்பதற்கு அதிகமெனப்பொருள். ஸர்வ பூதங்களுக்கும் பலியாக அவர் கள் அளிப்பதிலே இராக்கதருக்கும் பாகமுண்டு. அக்ரமமாக அதற்குமேல் கொள்ளமாட்டிலர். 'வயல்களிலே விடப்பட்டு இறைந்துள்ளவற்றுக்கு மேலா கக்கொள்ளமாட்டிலர் என்றபடியுமாம். மேலும் பாகவதர்கள் 'கரவாது மாற்றிலி சோறிடு' (10) வதாலே கொள்ளை கொள்ளவேண்டுவதென்? (அ)

9. கொம்பினார் பொழில்வாய்க்குயிலினம்கோவிந்தன் குணம்பாடுசீர்
செம்பொனார்மதில்சூழ் செழுங்கழனியுடைத்திருக்கோட்டியூர்
நம்பனைநரசிங்கனைநவின்றேத்துவார்களைக்கண்டக்கால்
எம்பிரான்றனசின்னங்களிவரிவரென்றாசைகள் தீர்வனே. (368)

| | |
|---|---|
| கொம்பின் | (கொம்பினால்) கிளைகளால் |
| ஆர் | நிறைந்த |
| பொழில்வாய் | சோலைகளிலே |
| குயில் இனம் | குயில்களின் கூட்டத்தின் |
| கோவிந்தன் குணம் பாடு சீர் | கோவிந்தனுடைய குணங்களைப் பாடும் இரைச்சலையுடையதும், |
| செம்பொன் ஆர் | சுத்தமான பொன் பொருந்தியுள்ள |
| மதில் | மதிட்சுவர்களாலே |
| சூழ் | சூழப்பெற்றதும், |
| செழு | செழுமை (ஸாரம்) உள்ள |
| கழனி | வயல்களை |
| உடை | உடையதுமான |
| திருக் கோட்டியூர் | கோஷ்டீ புரத்தின் |
| நம்பனை | கடவுளான |
| நரசிங்கனை | லக்ஷ்மீ ந்ருஸிம்மனை |
| நவின்று | அநுஸந்தித்து |
| ஏத்துவார்களை | துதிப்போர்களை |
| கண்டக் கால் | தர்சனம் செய்வேனாகில் |
| இவர் இவர் | இவரெல்லோரும் |
| எம்பிரான் தன | பெருமானுடையவைகளான |
| சின்னங்கள் | லக்ஷணங்கள் |
| என்று | என்று நினைத்து |
| ஆசைகள் | எனது மநோரதங்களை |
| தீர்வன் | பூர்த்தி செய்து கொள்வேன். |

பாடுசீர். சீராவது ஒலி, இரைச்சல். அன்றிக்கே பாடு=பாடுமிடமான என்று திருக்கோட்டியூருக்கு விசேஷணமாக்கி, 'சீர்ச்செம்பொன்' என்று சேர்த்து சீர்=சீரான எனவுமுரைப்பர். நம்பன்=கடவுள். அவனே நம்பக் கூடியவன். மற்றவருக்கு புத்திமாற்றமும், சக்தியின்மையுமுண்டு. சின்னங்கள். எம்பெருமானைவிட்டு எம்பெருமான் சின்னங்களிருக்குமோ? ஆக அவர்களுள்ளவிடமெல்லாம் எம்பெருமான் எழுந்தருளியிருப்பது திண்ணம். சின்னங்களாவன அவனுடைய கல்யாணகுணங்களும், அவனுடைய பரிஜன பரிச்சதங்களான அநந்தகருடவிஷ்வக்ஸேந சங்கசக்ரகௌஸ்துபாதிகளும். (கூ)

10. காசின்வாய்க்கரம் விற்கிலும் கரவாது மாற்றிலிசோறிட்டுத்
தேசவார்த்தை படைக்கும்வண்கையினார்கள் வாழ்திருக்கோட்டியூர்
கேசவாபுருடோத்தமா கிளர்சோதியாய் குறளாவென்று
பேசுவாரடியார்களெந்தம்மை விற்கவும் பெறுவார்களே. (369)

| | |
|---|---|
| காசின் வாய் | ஒருபொன் காசு பெறுவதிலே |
| கரம் விற்கிலும் | ஒரு கைதான்னியம் விற்கும் காலத்திலும் |
| கரவாது | மறைக்காமல் |
| மாறு இலி | ப்ரத்யுபகாரம் இல்லாத |
| சோறு | அன்னத்தை |
| இட்டு | (பசித்தவர்க்கெல்லாம்) அளித்து |
| தேசம் வார்த்தை | தேசத்திற்குரிய வார்த்தைகளை |
| படைக்கும் | உடையரான |
| வண் கையினார்கள் | உதாரமான கையுடைய பெரியார் |
| வாழ் | வாழுமிடமான |
| திருக் கோட்டியூர் | கோஷ்டீ புரத்தின் |
| கேசவா | ப்ரம்மருத்ராதிபதியே! |
| புருடோத் தமா | ஷாட்குண்டம் நிரம்பிய புருஷனே! |
| கிளர் சோதியாய் | ஓங்கா நிற்கும் ஜ்யோதிஸ் உடையவனே! |
| குறளா | ஸ்ரீ வாமன மூர்த்தியே! |

| | | | |
|---|---|---|---|
| என்று பேசுவார் | என்றவாறு பகவந்நாம ஸங்கீர்த்தனம் செய்பவரான | விற்கவும் | பிறர்க்கு விலைக்கு விற்பதற்கும் |
| அடியார்கள் எம் தம்மை | தாஸர்கள் எங்களை | பெறுவார்கள் | அதிகாரம் பெற்றிருப்பார்கள். |

காசு கொடுத்தால் கைநெல் கிடைக்கும்படியான துர்ப்பிக்ஷத்திலும், 'இதற்கு மேலும் துர்ப்பிக்ஷம் வந்தால் என் செய்வ'தென்று தங்களுக்கே வைத்துக்கொள்ளாமல், 'நமக்கு ஈச்வரன் இப்போது கொடுததிருப்பது இந்த மஹாதானம் செய்வதற்கே' என்றுணர்ந்து வஞ்சனையின்றி வாசியின்றி எல்லாரும் எம்பெருமானின் விபூதியென்று தெளிந்து தயை மிகுந்து பசித்தவர்க்கெல்லாம் போதுமானபடி விலைக்கு வாங்கியோ வீட்டிலுள்ள தானியத்தைக் கொண்டோ வேண்டிய சோறிட்டு அத்தேச காலோசிதமாக விச்வாஸ வார்த்தைகளையும் கூறி தேசம் பரந்த பெருங்கீர்த்தி பெற்றிருக்கும் மஹோதாரர்களான பரம பாகவதர்கள் வாழ்ந்து வருமிடமாம் திருக்கோட்டியூரென முன்னடிகளின் பொருள். சோறிட்டு என்றதற்கு விருந்தோம்புவதுமட்டும் பொருளன்று. 'சோறு' என்றும், 'இட்டு' என்றுமிருப்பதாலே ஸர்வ விஷயம். ஸ்ரீயுருரையில் விரிவு காண்க. தேசவார்த்தை. தேசோசிதமான ஹிதவார்த்தைகளென்றும், தேசங்களில் பரவும் வார்த்தை, அதாவது கீர்த்தியென்றும் பொருளாம்.

திருக்கோட்டியூரென்றதை கேசவா என்பதோடு சேர்க்கில் இப்படிப்பட்ட திருக்கோட்டியூரிலுள்ள கேசவனே என்று பூராவும் விளிச்சொல்லில் சேரும். அடியார்கள் என்பதோடு சேர்க்கில் கோஷ்டீபுரத்திற்கு அடிமை செய்பவரென்றதாம். வண்கையினர்கள் வாழ்திருக்கோட்டியூரடியார்கள்' என்றதால் ஹரிபக்தர்களிடத்திலே தாஸ்யம் பெற்றது கூறப்பெற்றதாம். பேசுவாரென்றதாலே ஹரிதாஸ்யமும் சொல்லிற்றும். புருஷோத்தமா. 'உத்தம: புருஷஸ்த்வந்ய: பரமாத்மேத் யுதாஹ்ருத:' யோ லோகத்ரயமாவிச்ய பிபர்த்யவ்ய ஈச்வர:॥' என்றபடி ஷாட்குண்யமுள்ளவன் புருஷோத்தமன். கிளர்சோதியாய் என்று பரமபதநாதனுய் அப்ராக்ருததிவ்யரூபனுன பரவாஸுதேவனைக்கூறியருளி அவதார ரூபங்களை குறளா என்று குறித்தருளினர். விற்கவும் பெறுவார்கள். 'ஹரிபக்ததாஸ்யரஸிகா: பரஸ்பரம் க்ரயவிக்ரயார்ஹதயா ஸமிந்ததே' என ஸ்ரீதேசிகனுமருளிச்செய்தார். தாங்கள் செய்யும் பகவத் பாகவத கைங்கர்யத்திற்கு த்ரவ்யம் வேண்டியிருந்து நம்மைச் சில பாகவதர்கள் விற்பதும், தங்களுக்கு அவ்வித கைங்கர்யங்களைக் கூட இருந்து நடத்த வேலைக்காரர் வேண்டியிருந்து சிலர் வாங்குவதுமுண்டாகில் அதற்கு நாம் பவ்யப்பட்டு இருவரையுமுகப்பித்து நிறம் பெறவேண்டும். வேலைசெய்வது மாத்திரம் கூலிக்கு வேலையாகவாகாதபடி புருஷார்த்தமென்று பேரவாவிற் பிறந்ததாக வேண்டும். விற்கவும் பெறுவார்களென்பதற்கு சிலர் விற்க சில் பெறுவார்கள் எனவும் பொருளாம். இது பகவச்சேஷத்வத்திற்குப் பரையான காஷ்டை, முடிவு. (௧0)

முதலைந்து பாசுரங்களிலே அடிமையற்றவரையும், பின் ஐந்து பாசுரங்களிலே அடியாரையும் பிரித்துக்கூறி இத்திருமொழியின் பலனையருளுகிறுர்.

11. சீதநீர் புடைசூழ் செழுங்கழனியுடைத் திருக்கோட்டியூர்
ஆதியானடியாரையும் அடிமையின்றித் திரிவாரையும்
கோதில்பட்டர்பிரான் குளிர்புதுவைமன் விட்டுசித்தன்சொல்
ஏதமின்றியுரைப்பவரிருடீகேசனுக்காளரே. (370)

| | |
|---|---|
| சீதம் நீர் | குளிர்ந்த ஜலத்தாலே |
| புடை | சுற்று பக்கங்களில் |
| சூழ் | சூழப்பட்டதும், |
| செழு | செழுமை (ஸாரம்) உள்ள |
| கழனி | வயல்களை |
| உடை | உடையதுமான |
| திருக் கோட்டியூர் | கோஷ்டீபுரத்தில் (எழுந்தருளி யிருக்கும்) |
| ஆதியான் | பரமகாரணமான பெருமானுக்கு |
| அடியாரை உம் | தாஸரா யிருப்பவரையும் |
| அடிமை இன்றி | அந்த தாஸ்யம் பெருமலே |
| திரிவாரை உம் | (பசுக்களைப்போல்) திரிகின்றவரையும் பற்றிய |
| கோது இல் | குற்றமற்றவனும் |
| பட்டர்பிரான் | பட்டநாதனும் |
| குளிர் புதுவை | குளிர்ந்த ஸ்ரீவில்லிபுத்தூருக்கு |
| மன் | நிர்வாஹகனுமான |
| விட்டு சித்தன் | விஷ்ணுசித்தனு(பெரியாழ்வாரு)டைய |
| சொல் | சொற்களான இத்திருமொழியை |
| ஏதம் இன்றி | குறை யில்லாமல் |
| உரைப்பவர் | ஓதுகின்றவர் |
| இருடீ கேசனுக்கு | ஹ்ருஷீகேசனுக்கு |
| ஆளர் | தாஸர்களாவர். |

சூழ் என்பதும் திருக்கோட்டியூருக்கு விசேஷணம். குளிர் என்றதால் புதுவையும் திருக்கோட்டியூருக்கு ஸமமென்றதாயிற்று.

ப்ரபந்தரக்ஷையில் பெரியாழ்வார் திருமொழி 4, 4

நாவகாரிய முரை முற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானர் தேசிகன் திருவடிகளே சரணம்.

---

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானர் தேசிகன் திருவடிகளே சரணம்.

## பெரியாழ்வார் திருமொழி—4, 5

# ஆசைவாய்

அர்ச்சைகளின் அநுபவத்தி லிழிந்த ஆழ்வார் திருக்கோட்டியூரெம்பெருமானிடத்திலே ஈடுபட்ட பிறகு கங்கைக் கரையிலுள்ள கண்டமென்னும் கடிநகரிலே யெழுந்தருளி யிருக்கும் புருஷோத்தமனின் அநுபவத்திலிழியப் போகிறார். நடுவில் இரண்டு திருமொழிகளில், மனிதராகப் பிறந்தவர் தமது ஆயுளுக்குள்ளே நாராயணனைக் கீர்த்தனம் செய்தாகவேண்டுமென்றும், ஆகவே அவனது திருநாமத்தை மக்களுக்கிடவேண்டுமென்றும் அடைவே யருளிச்செய்கிறார். இவை கீழ்த் திருமொழியிலே, 'கேசவா புருடோத்தமா கிளர்

ஜோதியாய் குறளா வென்று பேசுவார்' என்று நாமஸங்கீர்த்தனம் செய்பவரைத் துதித்திருப்பதாலே அந்த ஸங்கீர்த்தனத்திற்குள்ள மஹிமையை யொருவாறு தெரிவிக்கக் கருதினதால் வந்தவையாம். இதனைக் குறிக்கவே முதற் பாசுரத்திலே, 'கேசவா புருடோத்தமா' வென்று முன்னருளியதை யநுவதித்தபடி யென்க.

1. ஆசைவாய்ச்சென்ற சிந்தையராகியன்னை யத்தனேன்புத்திரர்பூமி
வாசவார்குழலாளென்று மயங்கி மாளுமெல்லைக்கண் வாய்திறவாதே
கேசவாபுருடோத்தமா வென்றுங்கேழலாகிய கேடிலீயென்றும்
பேசுவாரவரெய்தும் பெருமை பேசுவான்புகில்நம்பரமன்றே. **(371)**

| | |
|---|---|
| ஆசை வாய் | ஆசைக்கிடமான விடத்திலே |
| சென்ற | போயுள்ள |
| சிந்தையர் ஆகி | மனத்தை யுடையவரா யிருந்து |
| என் | எனது |
| அன்னை | தாய், |
| அத்தன் | தந்தை, |
| புத்திரர் | பிள்ளைகள், |
| பூமி | க்ஷேத்ரம், |
| வாசம் | வாசனை வீசும் |
| வார் | நீண்ட |
| குழலாள் | கூந்தலை யுடைய மனைவி |
| என்று | என்றவாறு |
| மயங்கி | அந்தந்த விஷயத்திலே வ்யாமோஹங்கொண்டே யிருந்துவிட்டு |
| மாளும் எல்லைக் கண் | சாக வேண்டும் கடைசி க்ஷணத்திலே |
| வாய் திறவாதுஏ | (பேச வாய் கூட்டமுடியாதபடி) வாய் திறந்து விடாமல், முன்னமே |
| கேசவா புருடோத்தமா என்றும் | கேசவனே, புருஷோத்தமனே யென்று முன் சொன்னவாறும், |
| கேழல் | ஆதிவராஹமாய் |
| ஆகிய | அவதரித்த |
| கேடு இலீ | அழிவில்லாதவ(அச்யுத)னே |
| என்றும் | என்றுஞ் சொலும் |
| பேசுவார் அவர் | பேசும் அம் மஹான்கள் |
| எய்தும் | அடையப்போகிற |
| பெருமை | பெருமையை |
| பேசுவான் | பேசுவதற்கு |
| புகில் | புறப்பட்டால் |
| நம் பரம் அன்று. | (பேசிமுடிப்பதென்பது) நம்மால் பரிக்கக்கூடியதாகாது. |

ஆசைவாய். ஆசைக்கு இடமானவை அன்னை இத்யாதியாகச் சொல்லப்பட்ட விஷயங்கள். பிறந்தவுடன் அன்னைமீது ஆசை; குமாரதசையில் தனக்கறிவை யளிக்கும் அத்தன்பேரில் ஆசை; பிறகு மனைவிமீது. புத்திரர்கள் பிறந்த பிறகு இருவர்களின் ஆசையும் அவர்களிடத்திலே போம். பிறகு தங்களுக்கும் அவர்களுக்குமாகச் சேமித்து வைக்கப்படும் ஐச்வர்யத்திலே ஆஸ்தை மிகும். இந்த க்ரமத்தை, 'மாதா பிதா யுவதயஸ் தநயா விபூதி:' என்ற ஆளவந்தார்ஸூக்தியிலே காணலாம். இங்கே, 'வாசவார்குழலாள்' என்று கடைசியில் அருளினது யௌவனத்தில் பிறந்த மனைவிமோஹம் புத்திரர்கள் பிறந்தாலும் முடிவுவரையில் விடாததொன்றானதால். தனது ஆத்மாவில் அவளொரு பாதியன்றோ? பரலோகத்திலும் தன்னோடு சேரக்கூடியவளவள். சிலர் புத்திரர்கள் பிறந்த பிறகும் வேறு மனைவியையும் மணந்து கொள்வதுண்டு. ஆகையால் கடைசியிலிவளை யருளினதாம். மனைவி யென்னுமே வாசவார்குழலாளென்றது அவளிடத்திலே அதிக மோகத்திற்கிடமிருப்பதை யுணர்த்தவாம். அன்னையத்தனென்றபிறகு என் என்றது தாய் தந்தைகளிடத்தில் மோஹம்

பெரி. தி-30.

கடைவரை நீடிப்பதில்லை யெனக் குறிக்கவாம். வாய்திறவாதே என்பதற்கு மேற்பாசுரங்களில் அருளிச்செய்யும் வகையிலே, போங்காலத்தில் கூட்டமுடியாதபடி வாய் திறந்துவிடுவதற்கு முன்னே எனப் பொருள். மாளுமெல்லைக்கண் வாய்திறக்கும் வரை அன்னை முதலான விஷயங்களில் மயங்கியிருந்துவிடாதே எனக் கருத்தாம். 'அன்னை முதலானோரை அழைத்துக்கொண்டிராதே' எனவுமுரைப்பர். அப்போது, மாளுமெல்லைக்கண் 'அன்னையத்தன்—— என்று மயங்கி வாய்திறவாதே' என அந்வயம் கூறுவது யுக்தம். கேழலாகிய கேடிலீ. ஜீவர்களைப் போலே கர்மாதீனமாய் அவன் பிறப்பதில்லை. ஆக அவன் வராஹாதிரூபமாய் அவதரித்தாலும் அவனுக்கொருவித குறைவும் கிடையாதாகையாலே கேடில்லாதவன். 'ஜந்ம கர்ம ச மே திவ்யம்' என்றன்றோ அவதார வைலக்ஷண்யம் சொல்லப்பட்டது. தன் ஆத்மாவாகத் தன்னால் நினைக்கப்பட்ட மஹாத்மாக்களுக்குக் கேடு விளையாதபடிக்கு அவதரிக்கிறானாகையாலே அவர்கள், கேடில்லாதபோது தானும் கேடில்லாதவனாகிறானென்றதுமாம். பேசுவாரவர். அவர் = முன்திருமொழியிலும் ப்ரமாணங்களிலும் ப்ரஸித்தரானவர். அன்றி, பேசினபிறகு மாளுமெல்லைக்கண் வாய்திறந்தவரென்க. (க.)

'பேசுவான்புகில் நம்பரமன்றே' என்று அது அபாரமென வருளினதை விளக்குவதற்காக மேற்பாசுரங்கள். முன்னடிகளிலே மரணதசையிலுள்ள அசக்தியைப் பலவாறாகக் கூறி, பின்னடிகளிலே பிற் காலத்தில் நற்கதிக்கு நடத்தவேண்டியதையும் அதன் பலனையும் அருளிச்செய்வர்.

2. சீயினாற்செறிந்தேறிய புண்மேற்செற்றலேறிக் குழம்பிருந்தெங்கும்
ஈயினாலரிப்புண்டுமயங்கி யெல்லை வாய்ச்சென்று சேர்வதன்முன்னம்
வாயினால் நமோநாரணாவென்று மத்தகத்திடைக் கைகளைக்கூப்பிப்
போயினாற்பின்னையித்திசைக்கென்றும் பிணைகோடிக்கிலும் போகவொட்டாரே.

| | |
|---|---|
| சீயினால் | சீ பிடித்ததாலே |
| செறிந்து | மிகுந்து |
| ஏறிய | எங்கும் பரவின |
| புண் மேல் | புண்ணின் மேற் பாகத்திற்கூட |
| செற்றல் | (உள்ளிருந்து வெளிவரவிருக்கும் புழு பூச்சிகளால்) ஹிம்ஸை |
| ஏறி | மிகுந்து |
| குழம்பு இருந்து | புண் நீராகாரமாயிருந்து |
| எங்கும் | அதுவுள்ள விடமெல்லாம் |
| ஈயினால் | வெளியிலிருந்து வந்தட்காரும் ஈ கொசுகுகளினால் |
| அரிப்பு உண்டு | தினவு கொண்டு (பாதைப்பட்டு) |
| மயங்கி | மூர்ச்சித்து |
| எல்லைவாய் | ஆயுள்முடிவிலே |
| சென்று சேர்வதன் முன்னம் | போய்ச் சேருவதற்கு முன்னே |
| வாயினால் | (வாக்கு ஸ்வாதீனமாயிருக்கும் போதே) அதனால் |
| நமோ நாரணா என்று | நமோ நாராயணாய என்பதில் இங்ஙனம் அக்ஷரம் சிதைவாகவாவது சொல்லி |
| மத்தகத்திடை | சிரஸ்ஸின்மேல் |
| கைகளை கூப்பி | இரு கைகளையும் அஞ்ஜலியாகச் சேர்த்துவைத்து |
| போயின் ஆல் | சரீரத்தை விட்டானேயாகில் |
| பின்னை | மறுபடியும் |
| பிணை கொடுக்கில் உம் | ஈடு கொடுத்தால் கூட |
| என்றும் | ஒரு நொடி காலம் கூட |
| இ திசைக்கு | இந்தத்திக்குக்கு = ப்ரக்ருதி மண்டலத்திற்கு |
| போகவொட்டார் | போவென்று ஸம்மதித்து விடமாட்டார்கள். |

சேற்றலேறி. ஈயிருந்து முட்டையிட்டு எனவு முரைப்பர். மத்தகத்திடை. கூப்பின கையை மத்தகத்தில் வைப்பதால், என்னை ரக்ஷிக்கும் பரத்தை என்னிடம் சுமத்த வேண்டாமென்பதும், தான் அத்யந்ததாஸ னென்பதும் விண்ணப்பித்ததாம். கூப்பிப்போயினால். போவது ஸித்தம். நம: என்று கூப்பிப் போனால் போகவேண்டுமிடம் அதாவது பரமபதம் போய்ச்சேரலாம். கூப்பிப் போனவன் 'பத்தாஞ்ஜலிபுடா ஹ்ருஷ்டா நம: இத்யேவ வாதிந:' என்றபடி கூப்பின கையனாகவே நம: என்றும் சொல்லிக்கொண்டே நிற்பான். பிணைகோடுக்கிலும். கௌஸ்துபஸ்தாநீயனாய் எங்கும் பரவின ஒளியுடன்கூடி ஜ்ஞானானந்தமயனான இவனுக்கு ஈடு ஒன்றும் கிடையாது. நித்ய ஸூரிகள் ஏற்கனவே அவன் சொத்தாக நின்றுவிட்டதால் அவர்களைப் புதிதாக ஈடு செய்வது எங்ஙனம்? அவர்களோ, பிராட்டிமாரோ சில விலக்ஷணானந்தகரமான அத்புத வ்யாபாரங்களை இவன் இருந்து பெறவேண்டும் ஆனந்தத்திற் கீடாகக் காண்பிப்பதானாலும் எம்பெருமான் இவனை விடவொட்டான். பெரிய பிராட்டியாரும் அதற்கு ஸம்மதியார். அங்குள்ள பரிஜநங்களிலெவ்வொருவருங்கூட இவனை விட்டிருக்க வொப்பார்கள். அவர்களெவ்வொருவருக்கும் ஏதேனும் ஈடு குறித்தாலும் அவர்களும் அங்கீகரியார். ப்ரக்ருதிமண்டலத்திலே ஒருவருக் கனேகர் சுச்ரூஷை செய்துகொண்டிருக்க அவரிலொருவன் சிறிதுகாலம் விட்டுப் போக முயன்றால் மற்றவர் அவனை இதுதான் ஸமயமென்று விலக்க நினைத்து வெகு ஸஹாயம் செய்வார்கள். அங்ஙனன்றே அங்குள்ளாரிருப்பு. இதனைக் குறிக்க, போகவொட்டாரே எனப் பன்மையாகக் கூறியருளினார். பிணைகோடுக்கிலும் என்கிற உம்மையினால் இவன்தானும் ஸர்வகர்மங்களும் கழிந்து மஹானந்தத்தில் மூழ்கியிருக்கிறானாகையாலே ஈடு கொடுத்து விட்டுவர ஸம்மதிக்கவே மாட்டானென்றதும் குறிக்கப்பெற்றது. (உ)

முதற் பாசுரத்திலே நாமஸங்கீர்த்தனத்தை யருளினார். 2-வது பாசுரத்திலே மந்த்ரோச்சாரணம், அஞ்ஜலிபந்தம் என்கிற வாசிக காயிக வ்யாபாரங்களை யருளிச்செய்தார். மேலே மாநஸவ்யாபாரத்தை யருளிச் செய்கின்றார்.—

3, சோர்வினாற்பொருள் வைத்ததுண்டாகிற் சொல்லுசொல்லென்று சுற்றுமிருந்து
ஆர்வின(னா?)விலும் வாய்திறவாதேயந்தகாலமடைவதன்முன்னம்
மார்வமென்பதோர் கோயிலமைத்து மாதவனென்னும் தெய்வத்தைநாட்டி
ஆர்வமென்பதோர் பூவிடவல்லார்க்கரவதண்டத்திலுய்யலுமாமே. (373)

| | | | |
|---|---|---|---|
| சோர்வினால் | யாருக்கும் தெரியாத வகையால் | வாய் திறவாதே | வாயைத்திறந்து சொல்ல முடியாமல் |
| பொருள் | சொத்து | அந்தம் காலம் | மரண காலத்தை |
| வைத்தது உண்டாகில் | வைத்திருந்தால் | அடைவதன் முன்னம் | பெறுவதற்கு முன்னே |
| சொல்லு சொல்லு என்று | சொல்லென்று பலமுறை | மார்வம் என்பது | ஹ்ருதயமெனப்படும் |
| சுற்றும் இருந்து | பக்கந்தோறும் உட்கார்ந்து | ஓர் | ஒப்பற்ற |
| | | கோயில் | ஆலயத்தை |
| | | அமைத்து | நிமிர்த்தியமைத்து |
| ஆர் வினவிலும் | இஷ்டமானவர் எவர் கேட்டாலும் | மாதவன் என்னும் | ஸ்ரீமந்நாராயணனெனப் படும் |

| | |
|---|---|
| தெய்வத்தை | பரதேவதையை |
| நாட்டி | மனதால் நன்கு விஷயீ கரித்து |
| ஆர்வம் என்பது | பக்தி என்கிற |
| ஓர் பூ | ஒப்பற்ற பூவை |
| இட | சூட்ட |
| வல்லார்க்கு | வல்லமையுள்ளார்க்கு |
| அரவதண் டத்தில் | யமபாதைகளினின்று |
| உய்யலும் | தப்பி உஜ்ஜீவிப்பதும் |
| ஆம் | ஸித்திக்கும். |

சோர்வு களவு: பிறர்க்குத் தெரியாதபடி ஒளிப்பது. சுற்றுமிருந்து. எல்லா பந்துக்களும் ஸமயம் பார்த்துத் தனியாகவோ சேர்ந்தோ தகுந்தபடி பொருளைப் பெற விரும்பி வினவச் சுற்றுப்புறங்களிலுட்கார்ந்திருந்து. ஓர் கோயில். இது எல்லோர்க்கும் பொதுவான ஒரு கோயிலன்று. அவரவர்க்குத் தனியே யுள்ளது. பூஜிப்பவர், ஸேவிப்பவர் போன்ற பலரை எதிர்பார்த்துப் பலவித தோஷங்களுக்கிடமுமான வெளிக்கோயில்களைப்போல் அலைந்து பெற வேண்டியதன்றிது. அமைத்து. ஏற்றுதய புண்டரீகம் முன்னமே யிருப்ப தானாலும் தலை கீழாயிருக்குமதை நிமிர்த்திக்கொள்வதே இங்கு அமைப்பதாம். நாட்டி. ஹார்தனான எம்பெருமான் பிராட்டியோடு அங்கே ஸ்வயமே ப்ரதிஷ்டை பெற்றிருந்தாலும் அவனைத் தன் மனத்துக்கு இலக்காக்கிக்கொள்வதே நாட்டுவதாம்.

அரவதண்டத்தில். அரவம் பாம்பு. அதனால் தண்டிப்பது, அதைக்கடிக்க விட்டு வதைப்பது. அல்லது அரவம் பேரொலி. பேரொலியிட்டழும்படி தண்டிப்பது. யமபாதனை யென்றபடி. அன்றி, வல்வினையாகிற அரவு பாம்பு அதுள்ள அதன் அண்டம் உலகம் அரவதண்டம். அதிலும் உய்யலாமென்றபடியாம். பாம்போடொரு கூரையிலே பயின்றவிடத்திலு முய்யலா மென்றவாறு. (௩.)

அஷ்டாக்ஷர மந்த்ரமே வேண்டுமென்பதில்லை. அதின் முதலிலுள்ள ப்ரணவமே முழு மந்த்ரமாக வமையும். அதனை ஒரு மாத்திரை, இரண்டு மாத்திரையாக உச்சாரணம் செய்தால் பூலோகத்திலும் மேலுள்ள ப்ராக்ருத லோகத்திலுமுள்ள பலன் கிடைக்கும். மூன்று மாத்திரையாக உச்சாரணம் செய்து எம்பெருமானைப் பற்றினார் பரமபதத்திலே பரவாஸுதேவனைப் பெறுவர் என ப்ரச்நோபநிஷத்தில் ஓதினத்தைக் கருதி யருளுகிறார்——

4. மேலெழுந்ததோர் வாயுக்கிளர்ந்து மேல்மிடற்றினையுள்ளெழவாங்கிக்
காலுங்கையும் விதிர்விதிர்த்தேறிக் கண்ணுறக்கமதாவதன்முன்னம்
மூலமாகியவொற்றையெழுத்தை மூன்றுமாத்திரையுள்ளெழவாங்கி
வேலைவண்ணனைமேவுதிராகில் விண்ணகத்தினில் மேவலுமாமே. (374)

| | |
|---|---|
| ஓர் வாயு | அது-ப்ராண வாயுவானது |
| மேல் எழுந்து | மேல்மூச்சாக வந்து |
| கிளர்ந்து | விருத்தியடைந்து (ஆகவே) |
| மேல் மிடற்றினை | மேல் தொண்டையை |
| உள் எழ வாங்கி | உள்ளே போம்படி தள்ளி யிருக்க |
| காலும் கையும் | கால்களும் கைகளும் |
| விதிர் விதிர்த்து ஏறி | அதிக நடுக்கமுற்றிருக்க |
| கண் உறக்கம் அது | அந்த நித்திரை (தீர்க்கநித்திரை) |
| ஆவதன் முன்னம் | நேர்வதற்கு முன்னமே (இங்கே) |

| | | | |
|---|---|---|---|
| மூலம் ஆகிய | வேதங்களுக்கும் காரண மான | வேலை வண்ணனை | கடல்நிறத்தனான பரவாஸுதேவனை |
| ஒற்றை எழுத்தை | ஓர் அக்ஷரமான ப்ரணவத்தை | மேவுதிர் ஆகில் | பற்றுகிறீர்களானல் |
| மூன்று மாத்திரை உள் எழ | மூன்று மாத்திரைகள் அதனுள் திகழும்படி | விண் அகத்தினில் | பரமபதத்திலே |
| வாங்கி | உச்சரித்து | மேவலும் ஆம் | அவனைப்பற்றலும் கூடும். |

மேலெழுந்ததோர் வாயு என்றதற்கு உதானவாயு எனப் பொருளுமாம். அந்த வாயுவுக்கு மரணகாலத்திலே உபயோகம் ஓதப்பட்டுள்ளது.

முதலடி முற்பகுதியில் ப்ராணவாயு கெட்டிருப்பதும், மேற்பகுதியில் ப்ரணவோச்சாரணத்திற்கு ஸ்தானம் கெட்டிருப்பதும், இரண்டாமடியில் கர்மேந்திரியஜ்ஞானேந்திரியங்களின் கேடும் சொல்லப்பெற்றன. ப்ராணாதிகள் உடலைவிட்டுக் கிளப்புவது ஆரும்பாசுரத்திலே சொல்லப்படும். மூன்று மாத்திரை. ஒரு மாத்திரையாக உச்சரித்தால் இவ்வுலகிற் பலனும். இரண்டு மாத்திரையாகில் ஆமுஷ்மிகமான ஐச்வர்யங்கள். வைகுந்தமென்னும் விண்ணுலகில் அவனைக்கண்டு களிப்பதென்பது மூன்று மாத்திரையிருந்தால்தானென உபநிஷத்திலேயே வ்யக்தமாம். மேவலும். உம்மை இவ்வுலகத்தில் உபாஸன காலத்திலுண்டான மேவலோடு நிற்காமல் பிறகு மகிழ்ந்து என விளக்கவாம். (௪)

5. மடிவழிவந்து நீர்புலன் சோர வாயிலட்டியகஞ்சியும் மீண்டே
கடைவழிவாரக்கண்டமடைப்பக் கண்ணுறக்கமதாவதன்முன்னம்
துடைவழியும்மைநாய்கள் கவரா சூலத்தாலும்மைப் பாய்வதுஞ்செய்யார்
இடைவழியில் நீர்கூறையுமிழவீ ரிருடீகேசனென்றேத்தவல்லீரேல் (375)

| | | | |
|---|---|---|---|
| புலன் | இந்திரியத்தினின்று | இருடீகேசன் என்று | ஹ்ருஷீகேசனவன் என்று சொல்லி |
| நீர் | மூத்திரநீரானது | ஏத்த வல்லீர் ஏல் | துதிக்க வல்லவர்களாக நீங்கள் ஆனல் |
| மடிவழி | மடியின்வழியாக | நாய்கள் | யமனுடைய நாய்கள் |
| வந்து | வெளியில்வந்து | உம்மை | உங்களை |
| சோர | பெருகவும், | துடை வழி | துடைகளிலே |
| வாயில் அட்டிய | வாயில்வார்த்த | கவரா | கவ்வமாட்டா; |
| கஞ்சி உம் | நீராஹாரமும் | உம்மை | உங்களை |
| மீண்டே | திரும்பியே | உம் | யமபடர்களும் |
| கடை வழி | கடைவாய் வழியாக | சூலத்தால் | சூலாயுதத்தால் |
| வார | வந்து விழும்படி | பாய்வது செய்யார் | குத்தமாட்டார்கள்; |
| கண்டம் | கழுத்தை | நீர் | நீங்கள் |
| அடைப்ப | (கபமானது) அடைக்கவும், | இடைவழியில் | நடுவழியில் |
| கண் உறக்கம் அது | தீர்க்க நித்திரையானது | கூறை உம் இழவீர் | வஸ்திரத்தை இழக்கவும் மாட்டீர்கள். |
| ஆவதன் முன்னம் | வருவதற்கு முன்னே | | |

வல்லீரென்ற பாடமாகில் வல்லவர்களே என விளிச்சொல்லாம். புலன். நீர் என்றதன் சேர்த்தியாலே இன்ன இந்திரியமெனத் தெரியவரும். இப்பதத்தைச் சொன்னதும் இந்திரியம் அஸ்வாதீனமாய் பெருகும்படி யிருப்பதைக் குறிக்கவாம். கண்டமடைப்ப. கண்டத்தை யடைப்பது கபம். அதனால்தான்

கஞ்சி உட்புகாதே திருர்புவது துடைவழி இத்யாதியால் யமயாதநா ப்ரகாரங்கள் சில சொல்லப்பட்டன. (ரு)

**6.** அங்கம்விட்டவை யைந்துமகற்றி யாவி மூக்கினிற் சோதித்தபின்னை
சங்கம்விட்டவர் கையைமறித்துப் பையவே தலைசாய்ப்பதன்முன்னம்
வங்கம்விட்டுலவுங் கடற்பள்ளி மாயனை-மதுசூதனைமார்பில்
தங்கவிட்டுவைத் தாவதோர்கர்மஞ் சாதிப்பார்க்கென்றுஞ்சாதிக்கலாமே.(**376**)

| | | | |
|---|---|---|---|
| அவை ஐந்தும் | பஞ்சப்ராணன்களும் | வங்கம் | அலைகள் |
| அங்கம் | உடலை | விட்டு உலவும் | ஏராளமாகப்புரளும் |
| விட்டு அகற்றி | விட்டு ஒதுக்கி யிருக்க | கடல் | ஸமுத்திரத்தில் |
| அவர் | சொல்லு சொல்லென்று சுற்றுமிருந்தவர் | பள்ளி | படுக்கையையுடைய |
| ஆவி | ப்ராணனை | மாயனை | ஸர்வஜ்ஞனாய் ஆச்சர்யனுமான |
| மூக்கினில் சோதித்த பின்னை | மூக்கில் கைவைத்துப் பார்த்து இல்லையென்றுணர்ந்த பிறகு | மதுசூதனை | மதுசூதனனை |
| சங்கம் விட்டு | நெருங்குவதைவிட்டு | மார்பில் | ஹ்ருதயகமலத்தில் |
| கையை மறித்து | உள்ளங்கையைத் திருப்பித் தூக்கிவிரித்து | தங்கவிட்டு | த்யானித்து |
| பையவே | மெள்ளவே | ஆவது ஓர் | தாம் செய்யக்கூடிய ஒப்பற்ற |
| தலை | தங்கள் தலையை | கர்மம் | ப்ரபத்தியை |
| சாய்ப்பதன் முன்னம் | கவிழ்த்துக்கொள்வதற்கு முன்னமே | சாதிப்பார்க்கு | அனுஷ்டித்தவர்க்கு |
| | | என்றும் | எப்பொழுதும் |
| | | சாதிக்கல் ஆம் | அவன் கைங்கர்யத்தை அனுஷ்டித்து வருதல் கூடும். |

அகற்றி. ப்ராணன்கள் தாரவிலகுவதே அவைகள் அங்கத்தை அகற்றினதாம். அன்றி, அங்கம் என்பதை விட்டு என்பதோடுமட்டும் அன்வயித்து, அகற்றி என்பதற்கு அகன்று எனத் தன் வினையில் வந்த பிறவினையாகப் பொருள் கொள்க. அல்லது அகற்றி. அங்கத்தை ஜீவ ஸம்பந்த மிராமற் செய்து என்க. அவர். அன்னை, அத்தன் புத்திரர், வாசவார்குழலாள், மற்றும் பொருள் பெறுமவரென்ற ஐந்து வகையானவர். சங்கம் விட்டு. கையை மூக்கில் வைத்து ப்ராண பரீக்ஷை செய்து தெளியும்வரை இவர், சோர்வினுற் பொருள் வைத்ததுண்டாகிற் சொல்லு சொல்லென்று வினவினதற்கு மறுமொழி யேதேனும் வருமெண வெதிர்பார்த்துப் பிறகே விலகின ரென்றதாம். கைமறித்து தாங்கள் பொருள் பெறுததாலும், அன்பரை யிழந்தோமே யென்கிற துக்கத்தினாலும் வாய்திறந்து சொல்லமாட்டாமே இங்கிதத்தாலே ஏனையோர்க்கிவ் வாபத்தைக் குறிக்கின்றனர்.

வங்கமாவது கப்பலென்பது முண்டு. மதுசூதனன் ஏகோதக சமுத்ரத்திலே மதுகைடப ஸம்ஹாரம் செய்தருளின ஸ்ரீஹயக்ரீவன். ஓர் கர்மம். அதிகாரத்துக்குத் தக்க உபாயம் "ப்ரகாசச்ச கர்மண்யப்யாஸாத்" என்கிற ஸூத்ரத்திற்போலே இங்கு கர்மபதம் மாநஸஜ்ஞான விசேஷத்தைச் சொல்லும். என்றும் சாதிக்கலாமே என்று பொதுவாக வருளிச்செய்த சப்தரீதியால் ப்ரபத்தி எல்லா பலனையும் கொடுக்கக்கூடியதாகையாலே கோரின பலனை யெல்லாம் ஸாதிக்கலாமென வுணர்த்தினதாம்.

"ஸாத்யபக்திஸ்து ஸா ஹந்த்ரீ ப்ராரப்தஸ்யாபி பூயஸீ" என்றபடி ப்ராரப்தத்தையும் போக்கி பக்திக்கும் மேற்பட விருந்து எப்பொழுது முதல் மோக்ஷம் கேட்டாலும் கொடுக்கவல்லதாகையாலே எப்பொழுது வேண்டுமானாலும் மோக்ஷத்தை ப்ரபத்தியால் ஸாதிக்கலாமென்று அருளினதுமாம். (௲)

7. தென்னவன்றமர்செப்பமிலாதார் சேவதக்குவார் போலப்புகுந்து
பின்னும்வன்கயிற்றாற் பிணித்தெற்றிப் பின்முன்னாகவிழுப்பதன்முன்னம்
இன்னவனினையானென்றுசொல்லி யெண்ணியுள்ளத்திருளறநோக்கி
மன்னவன்மதுசூதனனென்பார் வானகத்துமன்றுடிகள்தாமே. (377)

| | | | |
|---|---|---|---|
| சேவதக் குவார்போல | சேங்கன்றுகளை பீஜமர்தனம் செய்பவர்போல | இன்னவன் | இந்த ஸ்வரூபமுடையவன் |
| செப்பம் இலாதார் | இணக்கம் இல்லாத, வேண்டுகோளுக்கிணங்காத | இனையான் | இத்தன்மையன் |
| தென்னவன் தமர் | தென் திக்கு மன்னனான யமனின் படர்கள் | என்று சொல்லி எண்ணி | என்று ப்ரவசனமும் த்யானமும் பண்ணி |
| புகுந்து | சாகுமிடத்திலேயுள்ளே நுழைந்து | இருள் அற | அந்தகாரம் போம்படி |
| பின்னும் | அத்தோடு நிற்காமல் | உள்ளத்து | ஹ்ருதயத்திலே |
| வன் | திடமான | நோக்கி | ஸாக்ஷாத்கரித்து |
| கயிற்றால் | பாசங்களாலே | மன்னவன் | ஸர்வஜகந்நாதனானவன் |
| பிணித்து | கட்டி | மதுசூதனன் | மதுவென்றவனை ஸம்ஹரித்த எம்பெருமானை |
| எற்றி | இடித்து, குற்றி | என்பார் | என்பவர் |
| பின்முன்னாக | பின்னும் முன்னுமாக | வானகத்து | பரமபதத்திலே |
| இழுப்பதன் முன்னம் | இழுப்பதற்கு முன்னே; | மன்றுடிகள் தாமே | தாங்களே மிக்க கைங்கர்ய ருசியுள்ளவராயிருப்பர். |

தென்னவன். தெற்குக்கு மாத்திரம் நாதனானவனைச் சேர்ந்தவர் செய்யும் தீம்பெல்லாம் அத்தென்னவனுக்கும் மற்றுமனைத்தாருக்கும் மன்னவனையாச்ரயித்தபோது நெருங்கமாட்டா. செப்பமிலாதார். எவ்வளவு கேட்டுக்கொண்டாலும் தென்னவன்தமராகையாலே தண்டிக்க அதிகாரமேயல்லது தயைபுரிய விது தருணமன்றென்றிருப்பவரென்றபடி. சேவதக்குவார். சேக்குக் கால் பிடிப்பவரும் புகுந்து வன்கயிற்றாற் பிணித்தெற்றி முன்னும் பின்னுமிழுப்பவரே. பின்முன்னாக வென்பதற்குத் தலைகீழாக வென்றும் பொருளுரைப்பர். மூக்கும் பல்லும் முகமும் முசடும் பல்லும் தகரும்படி முகம் கீழ்ப்பட வென்றனர் ஜீயர். இன்னவன் என்று ஸத்யத்வ ஜ்ஞானத்வாதி ஸ்வரூப நிரூபக தர்மங்களைக் கருதினதாம். இனையானென்று பக்தி வித்யைகளுக்குத் தனித்தனியே வகுத்துள்ள குணங்களைக் கணிசித்ததாம். சொல்லி என்று ப்ரவசனத்தைச் சொன்னது மனனத்தைக் குறிப்பிட, இருளற. ஸாக்ஷாத்காரம் பிறந்தால், 'ஷிதந்தே ஸர்வஸம்சயா:' என்றபடி அஜ்ஞானமெல்லாம் போம். ஸாக்ஷாத்காரம் பூர்வோத்தர புண்ய பாப விநாச ச்லேஷங்களுக்குக் காரணமாகையாலே ஸம்வகர்மங்களும் அழிவதும் இருளற்றிருக்கையாம். மதுசூதனன் வானகத்து மன்றுடிகள் என்றதால், 'ஜாயமாநம் ஹி புருஷம் யம் பச்யேத் மதுஸூதந:. ஸாத்விக: ஸ து விஜ்ஞேய: ஸ வை மோக்ஷார்த்த சிந்தக:' என்ற ஸ்ம்ருதி நினைக்கப்பெற்றதாம். ப்ரபத்தியைச் சொல்லும் முன் பாசுரத்திலும் மதுசூதபதம் ப்ரயோகிக்கப்பெற்றது. மன்றுடிகள்தாமே என்றதும், பிணைகொடுக்கிலும் போக

வொட்டாரேயுள்ள அவ்வானகத்திலே இவர்களும், வேண்டாமென்றாலும் விடாமல் அடிமைக்கு ஆசைப்பட்டிருப்பரென்று மறிவிக்கவாம். இனி சொல்லியென்று உபதேச க்ரஹணமும், எண்ணி என்று மநநமும், நோக்கி என்று ஸாக்ஷாத்கார ஸமாநாகாரமான பரபக்தியும், என்பார் என்று பரஜ்ஞானமும், மன்ருடிகளென்று பரமபக்தியும் அருளப்பெற்றனவாம். பரஜ்ஞானமாவது உபய விபூதி நாதனை உள்ளபடி பரிபூர்ணமாகச் சிறிதுகாலம் அவன் அநுக்ரஹத்தாலே ஸாக்ஷாத்கரிக்கை அப்போது அவனை விட்டு அரைநொடியும் தரிக்கமாட்டாதே ஆணையிட்டழைத்து வீடுபெற விவன் துடிப்பன். அது பரமபக்தி. இருளற வென்றதால், 'தேஷாமேவாநுகம்பார்த்த மஹமஜ்ஞாநஜம் தம:' என்றவிடத்திலே 'விஷய ப்ராவண்ய ரூபம் தம:' என்று ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச்செய்ததையும் கொள்க. (எ)

**8.** கூடிக்கூடியுற்றார்களிருந்து குற்றம்நிற்கநற்றங்கள்பறைந்து
பாடிப்பாடியோர் பாடையிலிட்டு நரிப்படைக்கொருபாகுடம்போலே
கோடிமூடியெடுப்பதன்முன்னம் கௌத்துவமுடைக் கோவிந்தனோடு
கூடியாடியவுள்ளத்தரானாற் குறிப்பிடங்கடந்துய்யலுமாமே. **(378)**

| | | | |
|---|---|---|---|
| உற்றார்கள் | பந்துக்கள் | கோடி | புதுத்துணியால் |
| கூடி கூடி | ஆண்களும் பெண்களும் தனிக்கூட்டமாகக்கூடி | மூடி | பிணத்தை மறைத்து |
| இருந்து | தீர்க்ககாலம் நிலத்திருந்து | எடுப்பதன் முன்னம் | எடுப்பதற்கு முன்னே |
| குற்றம் நிற்க | செத்தவர் செய்த பிழைகள் பலவிருக்க ஒன்று கூடக் கூறாமல் | கௌத்துவம் உடை | ஜீவாபிமாநியான கௌத்துவத்தை ஹ்ருதயத்தில் வைத்துள்ள |
| நற்றங்கள் | பல நற்செய்கைகளை | கோவிந்தனோடு | எம்பெருமானோடு |
| பறைந்து | பறையடித்தாற்போலே கோஷித்து | கூடி | கலந்து |
| பாடி பாடி | பல பாட்டுகளையும் கட்டி யலற்றி பிறகு | ஆடிய | அநுபவத்திலீடுபட்டுள்ள |
| ஓர் பாடையில் இட்டு | பிணத்துக்குத்தகுந்தபடியுள்ள பாடையிலே வைத்து | உள்ளத்தரானால் | மனத்தையுடையாராகவானால் |
| நரிப்படைக்கு | நரிக்கூட்டத்திற்கு | குறிப்பிடம் | குற்றநற்றங்களைக் குறிக்குமிடமான ப்ராக்ருதி மண்டலத்தை |
| ஒரு பாகுடம் போலே | ஓர் உபஹாரம் போலே | கடந்து | விட்டுப்போய் |
| | | உய்யலும் | உஜ்ஜீவிப்பதும் |
| | | ஆம் | கூடும். |

[நற்றங்கள். நன்மை என்னுமே நற்றமெனவொரு பதம் செய்து குற்றமென்ற பதத்தைப் பின்பற்றி ப்ரயோகித்ததும், உண்மையில் அவையும் நன்மைகளல்ல. குற்றத்தைச் சார்ந்தனவே. நன்மையாக்கிப் புகழ்கின்றனரெனக் குறிக்கவாம்.] நரிப்படைக்கொரு பாகுடம்போலே. 'உற்றார்களிவனைக்கொண்டாடித் தீயிலிடக்கொண்டுபோனாலும் உவர்கள் நினைப்பதென்னவெனில், இவன் செய்துள்ள குற்றங்களுக்கு இவனை உயிரிருக்கும் போதொன்றும் செய்யமாட்டிலும் உடலையாவது தீயில் ஸம்ஸ்கரியாமே நடுக்காட்டிலெறிந்து நரிகளை நமஸ்கரித்து நீங்கள் சின்னம் பின்னமாக்குங்கோளென்றால் இவனால் வதைக்கப்பட்டாரின் மனம் கொஞ்சம் குளிர்ந்து இவன பாபங்களும் சிறிது கழியலாமென்றவாறு' எனக் கருதினர் இஃதருளினர் போலும். பாகுடம். இது

வடமொழியிலுள்ள ஹூஹூதம் என்ற சொல்லின் விகாரமென்பதை இசையச் செய்திலும் இத் தமிழ்ப்பதத்திற்கு அரசிறை=கப்பம், உபஹாரமென்றே பொருளாம். ஜீயர் பாகுடம் பாகுக்குடமென்றதும் இப்பொருளைக் கருத்திற் கொண்டே யோர் உதாரணம் சொன்னதாகுக. கௌத்துவமுடைக்கோவிந்தனோடு. ஒவ்வொரு ஜீவனையும் மார்பில் வைத்தணைத்துக்கொள்ளத் தான் ஆசைப் பட்டிருப்பதைக் கோவிந்தனாய் கண்ணனாயுள்ளபோது காண்பித்ததன்றியே ஜீவாபிமானியான கௌஸ்துபத்தை எப்போதும் மார்விலணிந்துக் காண்பிக்குமவனென்றபடி. ஆடிய. 'ஏஷ ப்ரஹ்ம ப்ரவிஷ்டோஸ்மி க்ரீஷ்மே சீதமிவ ஹ்ரதம்' என்றபடி அவ்வானந்தமடுவிலே மூழ்கின என்றபடி. அன்றி, ஆடிய= கூத்தாடிய என்றதுமாம். குறிப்பிடம். பரமபதத்தில் எல்லோரும் எல்லாம் ஸாக்ஷாத்கரித்தவர்கள். அவர்கள் செய்வது மொத்தம் நன்மையே. ஆகையாலே அங்கே யார் என்ன செய்தாரென்பதைக் குறிக்கவேண்டியதில்லை. ப்ரக்ருதி மண்டலத்திலே கர்மானுகுணமாகப் பலன்களைப் பெறுவிக்க அவற்றை தர்மராஜன்போன்றவரைக்கொண்டு குறிக்கவேண்டியிருப்பதாலே இது குறிப்பிடமாம். இது கீழே குற்றம் நற்றங்களென்றருளினதிலிருந்து தெளியத்தக்கது. இங்ஙனன்றி, பாபங்களை யனுபவிக்கக் குறிக்கப்பட்ட இடம் அதாவது யமலோகமே குறிப்பிடமென்பர் சிலர். ஜீயர் அனுபவ விநாச்யமான தேசம் குறிப்பிடமென்றார். உய்யலும். அநிஷ்ட நிவ்ருத்தி மாத்திரமின்றி பரிபூர்ண ப்ரஹ்மாநுபவ கைங்கர்ய ஸாம்ராஜ்யமாகிற இஷ்ட ப்ராப்தியுமுண்டென்றபடி. (8)

9. வாயொருபக்கம் வாங்கிவலிப்ப வார்ந்தநீர்க்குழிக் கண்கள் மிழற்றத்
தாயொருபக்கந் தந்தையொருபக்கந் தாரமொருபக்க மலற்றத்
தீயொருபக்கஞ் சேர்வதன்முன்னஞ் செங்கண்மாலொடுஞ் சிக்கெனச்சுற்றம்
ஆயொருபக்கம் நிற்கவல்லார்க்கரவ தண்டத்திலுய்யலுமாமே. (379)

| | |
|---|---|
| வாய் | அலத்தும் வாயானது |
| ஒரு பக்கம் | ஒரு பக்கத்திலே |
| வாங்கி | இழுக்கப் பெற்று |
| வலிப்ப | வலிக்கும்படியும், |
| கண்கள் | அழும் கண்கள் |
| வார்ந்த நீர் | பெருகும் கண்ணீரை |
| குழி | குழியில் கொண்டனவாய் |
| மிழற்ற | கலங்கும்படியும் |
| தாய் ஒரு பக்கம் | பெற்ற தாய் ஒரு புறமும் |
| தந்தை ஒரு பக்கம் | தகப்பன் வேறொரு பக்கமும் |
| தாரம் ஒரு பக்கம் | மனைவி மற்றொரு புறமும் இருந்து |
| அலற்ற | கதறி அழும்போது |

| | |
|---|---|
| ஒரு பக்கம் | இன்னுமொரு பக்கத்திலே |
| தீ | நெருப்பானது |
| சேர்வதன் முன்னம் | சேர்வதற்கு முன்னே |
| செங்கண் | -செந்தாமரைக் கண்ணனான |
| மாலொடு உம் | மிக்க வ்யாமோஹம் கொண்டவனோடும் |
| சிக்கென | உறுதியாக |
| சுற்றம் ஆய் | பந்துவாயிருந்து |
| ஒரு பக்கம் நிற்க | தனித்துப் பிரிந்து நிற்பதற்கு |
| வல்லார்க்கு | வல்லமையுள்ளவர்கட்கு |
| அரவ தண்டத்தில் | யம தண்டனையினின்று |
| உய்யல் உம் | -உஜ்ஜீவிப்பதும் |
| ஆம் | கூடும். |

இத்திருமொழியிலே யாழ்வார், 'கிடைக்காத மானிட சரீரத்தைக் கொண்டு தன்னை உய்விக்கச் செய்யவேண்டியதைச் செய்துகொள்ளாம

லிருக்கவேண்டாம். இது அந்த்யம். இதற்குக்கேடு நேர்ந்துவிட்டால் பிறகு பரிஹாரம் கிடையா'தென உபதேசிக்கின்றவராய் மரிக்குமியல்புடைய வுடலுக்கு மேன்மேல் வரும் கேட்டை அடைவாக வருளிச்செய்கிறார். 'மாளும் வரையில் விஷயங்களில் மயங்கி யிருக்கவேண்டாம். உடலில் உதிரம் கெட்டு விரணங்கள் உண்டாகில் என்ன செய்யமுடியும்? பிறகு வாயடைத்துவிடும். மேல்மூச்சு யதிகமாய் இந்திரியங்களும் கெட்டுவிடும். கஞ்சியுமுட்கொள்ள முடியாதபடி கண்டமடைக்கும். பஞ்சப்ராணன்களும் கிளம்பிவிடும். யமபடர்கள் பிடித்தால் விடமாட்டார்கள். பாடையிலிடப்பட்டுப் போகவேண்டுமே தவிர பிழைக்க வழியில்லை. யார் என்ன அலத்தினாலும் தீயினிற் சாம்பலாதீ வேண்டியதுதான். ஆகையால் '[illegible]' என்றதை முன்னமே நினைத்து முக்கியமானதைச் செய்துகொள்ள வேண்டும்' என்கிறார். இப்படி மேன்மேலுள்ள நிலைமையைச் சொல்லிவரும் ப்ரகரணத்திலே பாடையிலிடப்பட்டுச் சுடுகாட்டுக்குச்சென்று தீய்க்கிறையாம் தருணத்திலே பிணத்திற்கு வாய்வலிப்பதும் கண்ணீர் சொரிந்து கண்கலங்குவதும் கூடாதாகையாலே இப்பாசுரத்தில் முதலடியிற் சொன்னது மாளுமவரைப்பற்றியதன்று; அலத்தும் தாய் முதலானோரைப் பற்றியதென வாராய்க. சிதையில் தீயை யொருபக்கம் மகன் நின்று சேர்க்கும்போது தலைப்பக்கம் தாயும், உடலினொரு பக்கம் தகப்பனும், கால்பக்கம் தாரமும், வெகுகாலமாய் அலத்துவதால் வாய் கோணக் கோண இழுக்கப்பட்டாலும் கண் அலமந்து போனாலும், விடாமல் அலத்துகிறார்களென்றபடி. சிக்கென. உறுதியாய். அவனே ஸர்வவித பந்து. இந்த பந்துத்வமே எப்போதைக்குமுள்ளதென்றபடி. இதற்கு விரைவாயென்றும் பொருளுண்டு. சிக்கனவென்று மோதுகின்றனர். ஒரு பக்கம் நிற்க. 'அர்த்த காமபரா யூயம் நாராயணபரா வயம். நாஸ்தி ஸங்கதிரஸ்மாகம் யுஷ்மாகஞ் ச பரஸ்பரம். வயந்து கிங்கரா விஷ்ணோ: யூயமிந்த்ரிய கிங்கரா:' என்றபடி விஷயப்ரவணரான ஸம்ஸாரிகளை விட்டொருபக்கமாய் நிற்க. பக்கமாவது பக்ஷம், அதாவது பக்ஷமாக வென்றனர் சிலர். ஸம்ஸாரிகளோடுள்ள உறவைக் கலசாதே' என ஜீயருரை. அரவ தண்டத்தில். 3-ம் பாசுர வுரையில் காண்க. (௯)

**10.** செத்துப்போவதோர் போதுநினைந்து செய்யும்செய்கைகள் தேவபிரான்மேல்
பத்தராயிறந்தார்பெறும் பேற்றைப் பாழித்தோள் விட்டுசித்தன் புத்தூர்க்கோன்
சித்தம்நன்கொருங்கித் திருமாலைச் செய்த மாலையிவைபத்தும் வல்லார்
சித்தம்நன்கொருங்கித் திருமால்மேற் சென்றசிந்தை பெறுவர்தாமே. **(380)**

| | | | |
|---|---|---|---|
| செத்துப் போவது | மரண மடையும் | பெறும் பேற்றை | அடையும் புருஷார்த்தமான |
| ஓர் போது | காலமொன்றை | திருமாலை | ச்ரிய: பதியைப்பற்றி |
| நினைந்து | முன்னமே நினைத்து | பாழி தோள் | வலிவான தோட்களையுடையவரும் |
| தேவபிரான் மேல் | தேவனான திருமால் விஷயத்திலே | புத்தூர் கோன் | ஸ்ரீவில்லிபுத்தூருக்கு நிர்வாஹகருமான |
| செய்கைகள் | நாம ஸங்கீர்த்தநாதிகளை | விட்டு சித்தன் | ஸ்ரீ விஷ்ணுசித்தன் (பெரியாழ்வார்) |
| செய்யும் பத்தராய் | அனுஷ்டிக்கும் பக்தர்களாயிருந்து | சித்தம் | மனதானது |
| இறந்தவர் | மரணமடைந்தவர் | | |

| | | | | |
|---|---|---|---|---|
| நன்கு | செவ்வனே | | ஒருங்கி | பதிந்து |
| ஒருங்கி | ஒருபடிப்பட்டிருக்க | | திருமால் மேல் | ச்ரிய: பதியின் மேலே |
| செய்த | இயற்றிய | | சென்ற | நடவா நிற்கிற |
| இவை பத்து மாலை உம் | இந்தப் பத்துப் பாசுரங்களையும் | | சிந்தை | மநநாதிகளை |
| வல்லார் | வல்லவர்கள் | | தாமே பெறுவர் | தாங்களே பெற்றிருப்பார்கள். |
| சித்தம் நன்கு | | | | |

முதலடியில் செய்யுஞ் செய்கைகள் என்பதை நினைந்து என்பதோடு சேர்த்து. 'செத்துப்போகிற காலத்திலே யமபடர் செய்யும் செயல்களை நினைத்து எனப் பொருளுரைப்பர். இப்போது ஏழாவது பாட்டின் விஷயத்தைமட்டும் சொன்னதாகும். 'சாகும் காலத்தை நினைத்து' என்றால் ஒவ்வொரு பாசுரத்தின் முன்னடிகளிற் சொன்னதைக் குறித்ததாம். செய்யுஞ் செய்கைகள் என்று ஒவ்வொரு பாட்டிலும் பின்னடிகளிலே செய்ய வேண்டுவனவாகச் சொல்லப் பெற்றவைகளைக் குறித்ததாம். சித்தம் நன்கொருங்கித் திருமாலை யென்றதற்கு, 'சித்தத்தைத் திருமாலினிடத்திலே ஒருப்படுத்தி' எனவு முரை செய்வர். பாழித்தோள் என்றது எல்லை வரையில் விஷயங்களிலே மயங்கிக் கிடந்து கடைசியாக பகவத்விஷயத்திலே இழியுமவரைப் போலன்றி, நல்ல யௌவன காலத்திலேயே, 'க்ருஹீத இவ கேஶேஷு ம்ருத்யுநா தர்மமாசரேத்' என்றபடி போங்காலம் இது என்று நிர்ணயிக்க வொண்ணாதென்று தெளிந்து தாமுமநுபவித்துத் தம்மைப் போல் எல்லோரையும் திருமால்மேல் சென்ற சிந்தை பெற்று விஷ்ணு சித்தராகச் செய்வதற்குரிய பாசுரங்களையு மியற்றும்படி பக்தராயிருப்பதைத் தெரிவிக்க. ஸம்ஸாரத்தை வென்ற மிடுக்கையுடைய தோள்களை யுடையவரெனவு முரைப்பர். அப்போது தோள்வலத்தாலே ஸம்ஸாரத்தை வெல்லாவிடினும் அதை வென்றதாலே தோள்பூரித்ததெனவேண்டும். (எ)

இத்திருமொழியில் பின்னடிகளில், நாமஸங்கீர்த்தனம், திருவஷ்டாக்ஷர ஜபம், அஞ்ஜலிபந்தம், பக்தியால் ஹ்ருதயத்தில் ஆராதிப்பது, ப்ரணவார்த்தமாக அநுஸந்திப்பது, அவனுடைய அனுக்ரஹத்தாலே இந்திரிய ஜயத்தைக் கோருவது, அவனிடம் ப்ரபத்தியை யநுஷ்டிப்பது, பக்தியை யநுஷ்டிப்பது, உபாயாநுஷ்டான காலத்திற்குப் புறம்பான காலங்களிலும் பக்தி பரிவாஹமாக அவனுடைய ஸம்ஸீலனமே செய்வது, அவனையே ஸர்வவித பந்துவாக்கி இதர பந்துக்கள் முதலானோரிடத்தினின்று விலகுவது என்ற பக்தரின் செய்கைகள் வேண்டுமென்றுபதேசித் தருளினார். இதனால் நாம ஸங்கீர்த்தநாதிகள் மேன்மேலுள்ளவற்றை முன்னிட்டு மோக்ஷோபாயங்களென்பதும் குறிக்கப் பெற்றதாம். ப்ரபத்திமாத்திரம் பக்தியை யனுஷ்டிக்க வியலாதவற்கும் மோக்ஷஸாதனமென்பது அப்பாசுர நடையிலேயே நன்கு தெளியலாம்.

ப்ரபந்தரக்ஷையில் பெரியாழ்வார் திருமொழி **4, 5**

ஆசைவாய்ச் சென்ற உரை முற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:
ஆழ்வார் எம்பெருமானுர் தேசிகன் திருவடிகளே சரணம்.

# பெரியாழ்வார் திருமொழி—4, 6

# காசுங்கறையுடை

முன் திருமொழியிலே நாமஸங்கீர்த்தனத்தின் பெருமையைப் பணிக்கக் கோலி அது பரமபதம் பெறும்வரையில் வேண்டுவனவற்றை விளைவிப்பதை யுணர்த்தியருளினர். இனித் தனியே யவன்திருநாமத்தைச் சொல்ல முயற்சியின்றியே தம் மக்களை அவன்திருநாமத்தை யிட்டழைத்தாலும் போதுமெனக் கருதிப் பேரிடும்போது அவன் பேரையே யிடுங்கோள் என வருளுகிறுர்.—

ப்ரளயத்தை முன்னே யோதி ஸ்ருஷ்டியைப் பின்னே வேதமோதுமா போலே, முன் திருமொழியிலே மரண விஷயத்தைக்கூறி இங்கே பிறப்பு விஷயம் பணித்தது.

1. காசுங்கறையுடைக்கூறைக்கு மங்கோர்கற்றைக்கும்
ஆசையினலங்கவத்தப் பேரிடுமாதர்காள்
கேசவன்பேரிட்டு நீங்கள் தேனித்திருமினே
நாயகன்நாரணன்தம்மன்னைநரகம்புகாள். (381)

| | | | |
|---|---|---|---|
| காசு(க்கு)ம் | ஆபரணத்திற்கும் | மாதர்காள் | ஸ்திரீகளே! |
| கறை உடை | கறையைத் தலைப்பில் உடைய | | நீங்கள் |
| கூறைக்கும் | ஆடைக்கும் | கேசவன் | கேசவனுடைய |
| அங்கு | அவ்விடத்திலே | பேர் இட்டு | பெயரை வைத்து |
| ஓர் கற்றைக்கும் | ஒரு கற்றைத் தானியத்திற்கும் | தேனித்து | இனித்து |
| ஆசையினல் | ஆசைப்பட்டு | இருமின் | ஸத்தையைப் பெறுங்கோள். |
| அங்கு | அவ்விடத்தைச்சேர்ந்த | நாயகன் | ஸர்வர்க்கும் நாதனை |
| அவத்தம் | அவத்யமுள்ள சேதநா சேதநங்களின் | நாரணன் தம் | நாராயணனுயுள்ள மக்களுடைய |
| பேர் | பெயரை | அன்னை | தாயானவள் |
| இடும் | பிள்ளைக்கு வைக்கும் | நரகம் | நரகத்தில் |
| | | புகாள் | நுழையமாட்டாள். |

பிறந்தகத்திலுள்ளார்க்கு இஷ்டமானதேதேனும் பெயர் வைத்தால் அவர்கள் மெச்சி நமக்கு ஆடையும் ஆபரணமும், வருஷந்தோறும் ஊணுக்குத் தானியம் விளையும் நிலமு மளிப்பார்களென்று அவ்வற்ப பலன்களில் ஆசை வைத்து அப்பெயரை யிடாதீர்கள். அந்தப் பலனைத் தருமலனும் ப்ரம்ம ருத்ராதிகளுக்கு மதிபதியான நாராயணனே. ஆகையால் அவன்பெயரைப் பிள்ளைக்கிடுங்கோள். நாராயணன் பெயரைச் சொல்லி யழைக்கப்படுமிப் பிள்ளைக்குத் தாயானவள் அப்பெயருக்குள்ள மேன்மையாலும், அப்படியழைக்கும்போது பிள்ளையினிடத்திலே யுண்டாம் ப்ரம்ம திருஷ்டியாலும் நரகமென்கிற பெருந்

துயரிலிருந்து விடப்படுவாள்- நரகபூமியிற் புகுவதுமின்றி நிலை பெறுவாள். இல்லையேல் அவத்தப் பேரிடுவதானால், அப்போது சில பலன் தோற்றினாலும் அவத்யமே முடிவிலாம். ஆக எம்பெருமான்திருநாமத்தையே யிடுங்கோ ளென்றபடி.

காசு மென்றவிடத்திலும் கூறைக்கு மென்றுள்ள வேற்றுமையுருபைக் கூட்டுக. காசு பண மெனவு முரைப்பர். அங்கு என்னும் பதங்களிரண்டை யும் அசைச்சொல்லாக்காமே ஏதேனும் பொருள் கொள்ள வேண்டுமென்றே முன்னோர் கருதி யிருப்பதால் கூடும் பொருளை யொருபடி யுரைத்தனம்.

அங்கு. பலவகைப் போகங்கள் உள்ள விடத்திலே; அங்கு=பல அவத்தப் பேர்கள் நிரம்பின விடத்திலே எனவும் கொள்ளலாம். இங்கு என்னுமே அங்கு என்றது ஆழ்வாருடைய மனதுக்கு நாராயணனைச் சேர்ந்ததே கிட்டினதும், புறம்பானது வெகுதூரத்திலுள்ளதுமாகையாலென்க. சிற்சில அவத்தப் பெயர் கொண்டவர்கள் ஏதோ ஸுக்ருத வசத்தாலே ஊணு முடையும் அணியுமெல்லா முடையரா யிருப்பதைக் கண்டு அப்பெயருக்குள்ள மேன்மை யது என ப்ர மித்து அப்பெயரிடுகிறீர்களே. அதற்கும் இதற்கும் ஸம்பந்தமென்ன ? அப் பெயர் பூண்டவர்களாவது நம் பெயரை வைத்தார்களே யென்று மகிழ்ந்து நன்மை விளைப்பவர்களா? அவர்களுக்கும் உங்களுக்கும் எவ்வளவோ தூரமிருக் கிறதே. அவர்கள் அவத்யமுள்ளவரானபடியாலே இதைத் தெரிந்து செய்யும்படி பிழைத்தும் தழைத்துமிருப்பதில் கூட நிச்சயமில்லையே யெனவும் பொருளாம்.

மாதர்காள் எனப் பிரிப்பது கூடும்: மேலே நங்கைகாள் என வருளுகின்று ராகையால். அவ்விடத்தில் போல விங்கும் ஆதர்காள் எனவும் பிரிக்கலாம். அதற்கு அறிவில்லாதவர்களே எனப் பொருள். மாதர்காள் என விருந்தால், காசு கூறை இத்யாதிக்கும் பொருந்தி யிருக்கும். மாதர்களுக்கு இவ்வகை யாசை வரு வது இயல்பென்று குறித்ததுமாம். மேலே தமப்பனை விட்டுத் தம்மன்னையை நினைத்து அருளினதற்கும் ஒத்திருக்கும். பேரிடுவதைப் புருஷரை விடப் பெரும் பாலும் மாதர்களே நடத்துவது வழக்கம். தேனித்து. கேசவன் பேரிட்டாலும் இவ்வற்ப பலன்களுக்குக் குறைவில்லை யெனக் கருதினபடி. நாயகன் நாரணன் என்பதை முன் வாக்யத்திலே கேசவன் என்பதோடு சேர்க்காம லுரைப்பதே ஸ்வரஸமாம். தேனித்திருமினோ; ஏனெனில் நாராயணன் நாயகன் எனத் தனி வாக்யம். உண்மையில் மேற்பாசுரங்களிற் போல நாரணன் தம்மன்னை யெனச் சேர்ப்பதே பொருந்தும். ஆக மேலே நானுடை, நலமுடை என்றவைபோல் நாயகன் என்பது நாராயணனுக்கு விசேஷணமாம். நாயகன் நாராயணன் என் பதற்கு நாயகனான நாராயணன் பெயரிடப் பெற்றவருடைய அல்லது அவ்வித நாராயணனைக் பாவிக்கப்பட்டவருடைய எனப் பொருள். தம்மன்னை. தம் மனை. தமப்பனென்றது போல் இது ஒரே சொல்லாம். அல்லது நாராயணன் உண்மையில் ஒருவனானபடியாலே ஒருமையிலே ப்ரயோகித்து இங்கு அவ்வொ ருவனாக ஆனவர்களைக் குறிப்பதைத் தெரிவிக்க தம் எனப் பன்மையாக வருளினு ரெனலாம். நாராயணனைவர்களுடைய என விதன் பொருள். நாராயணநு

கையாவது அவன் பெயர் பூணுவதும் அவனாக பாவிக்கப் படுகையும். இங்ஙன் பெயர் வைத்தால் ராமக்ருஷ்ணாத் யவதாரங்களிலே அன்னைகளான கௌஸல்யை, தேவகி, யசோதை முதலானோரைப் போலே எல்லோரும் பெருமை பெறுவரென்க.

இங்கு நாரணன் என்பதற்கு நாராயண என்கிற பெயரை யுடையவனென மட்டும் பொருளன்று; கேசவாதி நாமங்களையு மிட வருளிச் செய்வதால். ஆக முன் சொன்னதே பொருளாகுக. இங்கு பகவந்நாமங்களைப் போலே பிராட்டி, நித்யஸூரிகள், ஆசார்யர்கள் போன்றவரின் பெயர்களும் கருத்திலுள்ளனவே. அவத்தப் பேரிடுமென்று கர்மவச்ய ப்ராக்ருத நாமங்களை யல்லவோ விலக்கியருளினர். ஆகையால் வேறு பேர்களு மிடலா மாகையாலே ஸ்திரீகளுக்கு நாராயணன் பேரை யிடாவிடினும் குற்றமில்லை யென்க. (க)

2\. அங்கோருகூறை யரைக்குடுப்பதனாசையால்
மங்கியமானிடசாதிப் பேரிடுமாதர்காள்
செங்கணெடுமால் சிரீதராவென்றழைத்தக்கால்
நங்கைகாள் நாரணன்றம்மன்னை நரகம்புகாள். (382)

| | |
|---|---|
| அங்கு | மானிடப் பேரிடுமிடத்திலே (பெற்று) |
| அரைக்கு | இடையில் |
| ஒரு கூறை | ஒரு வஸ்த்ரத்தை |
| உடுப்பதன் ஆசையால் | உடுக்க ஆசைப்பட்டு |
| மங்கிய | அழிவுற்ற |
| மானிடம் சாதி | மனுஷ்ய சாதியாருக்குள்ள |
| பேர் | பெயர்களை |
| இடும் | வைக்கும் |
| ஆதர்காள் | அறிவிலிகளே! |
| நங்கைகாள் | ஹிதம் சொன்னால் கேட்கும் குணபூர்த்தியுள்ளவர்களே! |
| செங்கண் | 'புண்டரீகாக்ஷனே! |
| நெடுமால் | விஷ்ணுவே! |
| சிரீதரா | ஸ்ரீதரனே!' |
| என்று அழைத்தக்கால் | என்றவாறு (பேரிட்டு) அழைத்தானால் |
| நாரணன் | தம்மன்னை நரகம் புகாள். |

அரைக்கு ஒரு கூறை. அவத்தப் பேரிட்டாலும் அடையப்போவது ஒரு கூறை தானே. இரண்டாவதற் கென் செய்வது? அளவற்ற வஸ்திரங்களை விதம்விதமாக த்ரௌபதிக்கு அநாயாஸமா யளித்த நெடுமாலை நாடினால் வேண்டுமானாலிதற்குக் குறையென்? பிற் காலத்திற்கும் பேறு பெரிதாம். அழைத்தக்கால் என்பதற்கு நீங்கள் அழைத்தீர்களாகில் என்பதைவிட, அன்னையானவள் அழைத்தால் என்ற பொருள் நான்காமடியோடு நன்கு சேரும். பெற்றவள் பின்னிட்டு அழைப்பதற்குத் தகுந்த பேர்களை யிடுங்கோள். இடும் மூன்று பேர்களும் அவனுடையனவாகவே இருக்க வேண்டுமென்று செங்கண் இத்யாதி மூன்று நாமங்களை யருளினபடி. பல பிள்ளைகளைக் கருதியுமாம். (உ)

3\. உச்சியிலெண்ணெயுஞ் சுட்டியும்வளையுமுகந்து
எச்சம்போலிந்தீர்காளேன் செய்வான் பிறர்பேரிட்டீர்.
பிச்சைபுக்காகிலு மெம்பிரான்றிருநாமமே
நச்சுமின் நாரணன்றம்மன்னைநரகம்புகாள். (383)

எச்சம் — ஸந்தானத்தினுலே
பொலிந்தீர்காள் — அபிவிருத்தி யடைகிற வர்களே!
என் செய்வான் — எதற்காக
உச்சியில் — குழந்தையின் (உச்சித்) தலையில் (தடவ)
எண்ணெய் உம் — எண்ணெயையும்,
சுட்டி உம் — நெற்றிச் சுட்டியையும்,
வளை உம் — கைவளைகளையும்
உகந்து — பெறுவதே பெரிதாக மதித்து

பிறர் பேர் — நாராயணன் தவிர மற்றவர் பேர்களை
இட்டீர் — பிள்ளைக்கு வைத்தீர்கள்?
பிச்சை புக்கு ஆகிலும் — பிச்சைக்குப் புகுந்தே ஜீவிப்பதானாலும்
எம்பிரான் — நமது உபகாரகனானவனுடைய
திருநாமமே — திருநாமங்களையே
நச்சுமின் — (இடுவதற்கு) விரும்புங்கள்.
(ஏனெனில்)
நாரணன் தம்மன்னை நரகம் புகாள்.

எச்சம் பொலிந்தீர்காள். நீங்கள் ஸந்தானங்களைப் பெற்று விளங்கா நிற்கிறீர்களே. இப் பெருமை யுங்களுக்கேற்பட்டது பிறர் பேரினால் வந்த தன்றே. ஆக உங்களுக்கு இப்பெருமையளித்த எம்பிரான் உங்கள் யோக க்ஷேமத்தை நடத்தமாட்டானோ? 'உத்பத்தி ஸ்திதி நாசாநாம் ஸ்த்திதள சிந்தா குதஸ்தவ' என்றபடி பிறப்பித்தவன் பரமல்லவோ பாதுகாப்பும். ஆக உச்சியிலெண்ணெய் முதலிய மிக வற்பமான சிலவற்றைப் பெற்றால் எல்லாம் பெற்றதாக நினைத்து ஏன் தகாத பேர்களை யிட்டுவைக்கிறீர்கள். இது அழைக்கு மன்னைக்கும் அனர்த்தத்திற்கிடமாம். ஆக நாராயணன் திருநாமத்தையே நச்சுங்கள். 'யாச்ஞா மோகா வரமதிகுணே நாதமே லப்தகாமா' என்று மஹாகவி சொன்னபடி பிறர்பேரால் வரும் பெருமை சிறுமையே யாம். இதைவிடப் பிரான்பேர் கொண்டு பிச்சை யெடுப்பதே பாங்கானது என்றபடி. தங்கள் பலனுக்காகப் பிறர் பேரிடுவதை முன் பாசுரங்களிலே வேண்டாமென்றார். இப் பாசுரத்திலே குழந்தைக்குக் கிடைக்குமவற்றிலே நசையாலு மந்நாமம் பேரிட வேண்டா மென்றார். (ந.)

4\. மானிடசாதியில்தோன்றிற் றோர்மானிடசாதியை
மானிடசாதியின்பேரிட்டால் மறுமைக்கில்லை
வானுடைமாதவா கோவிந்தா வென்றழைத்தக்கால்
நானுடை நாரணன்றம்மன்னை நரகம்புகாள். (384)

மானிடம் சாதியில் — மனுஷ்ய ஜாதியிலே
தோன்றிற்று — பிறந்துள்ள
ஓர் — பசுபூதலானவைக்கில்லாத யோக்யதையுள்ள
மானிடம் சாதியை — மனுஷ்ய ஜந்துக்கு
மானிடம் சாதியின் — தமக்கு ஸமரான மனுஷ்யரின்
பேர் இட்டால் — பெயரை வைத்தால்
மறுமைக்கு — ஆமுஷ்மிக பலனுக்கு
இல்லை — வழியில்லை.

வான் உடை — பரலோகத்திற்கும் ஸ்வாமியான
மாதவா — ச்ரிய:பதியே!
கோவிந்தா — பூமிக்கும் சேர்ந்த கோவிந்தனே!
என்று — என்றவாறு
அழைத்தக்கால் — பிள்ளையை அழைத்தானால்
நான் உடை — அஹமர்த்தமான ஆத்மாவுக்கு ஸ்வாமியான
நாரணன் — நாராயணனுடைய
தம்மன்னை — பிள்ளைகளின் தாய்
நரகம் புகாள்.

'தர்மோசோத்படகர்மகோடிநிபிடோப்யாதேசவச்ய: க்ருத:' என்று ஸ்ரீ தேசிகன் அருளிச்செய்தபடி, கூடும் கூடாதென்பவற்றை உபதேசமுகமாகக்

கேட்டறிந்து மறுமைக்கு வழியநுஷ்டிக்க வல்ல மானிட சாதியிற் பிறவி யரிது. இப்படிப் பிறக்கும் மானிடஜந்து மனிதரைவிட்டு வேறிடத்தில் இப் பிறவி பெற முடியுமா ? ஆகவே மானிட ஜாதியான உங்களிடம் பிறக்கிறது. இனி அதற்கும் அதனைப் பெற்றோர்க்கும் மறுமைக்குத் தக்கபடி நீங்கள் நடக்கவேண்டியிருக்க, உங்களோடு சேர்ந்து ஒழுகுசங்கலியிலே கட்டுண்டு இன்ப துன்பங்களுக்கிடமாக நிற்கும் மானிடரின் பேரையே அதற்கு இடுகிறீர்களே. இதனால் இம்மைகூட பூர்த்தியாகக் கிடையாது. மறுமைக்கு ப்ரஸக்தியே யில்லை. நாரணன்பேரிட்டாலோ வென்னில், அவனே வானுடையவன், வானுக்கு ஸ்வாமி. ஆக மறுமைக்குக் குறைவில்லை. அவனே கோவிந்தன் = பூமியையுமடைந்தவன், பூமிதேவிக்கு நாதன், பூமியை யிடந்து ஸ்தாபித்தவன், பூமியில் அவதரிப்பவன் என்றவாறு பலவகை ஸம்பந்தமுள்ளவன். ஆக இம்மையை மட்டும் அவனளிக்காமல் யார் அளிப்பர் ? ஆக வவன்பேரையிடுங்கள் என்றபடி. வானுடைமாதவா. 'வைகுண்டே து பரே லோகே ச்ரியா ஸார்த்தம் ஜகத்பதி: ஆஸ்தே' என்றது காண்க. வைகுண்ட மாதவனென்றவாறு பேரிடக் கருதி இங்ஙனம் விளித்ததாம். நான் உடை என்பதற்கு என்னுடைய என ஜீயருரை. திருவாய்மொழிப் பிள்ளை இதற்கு ஒரு விசேஷதாத்பர்யம் கொள்வது உசிதமென நினைத்து, 'அஹமர்த்தத்தை யுடையவனான நாராயணன்' என்றார். ஆக நான் என்று சொல்லப்படும் ஸர்வஜீவாத்மாக்களுக்கும் ஸ்வாமி யவன். ஆகவே நாராயணன். 'நாரஸ்த்விதி ஸர்வபும்ஸாம் ஸமூஹ: பரிகீர்த்தித:' என்றபடி ஜீவராசிகளெல்லாம் நாரங்களல்லவோ. ஆக எசமான்பேரை விட்டு ஏனையோரின் பேரை யேன் இடுகிறீர்களென்றவாறு கருத்தாம். ஆக நான் என்று ஸர்வ ஆத்மாக்களையும் குறித்ததாம். ஆழ்வார் தம்மை மட்டுமே 'நான்' என்று குறித்தருளினதாகக் கொண்டால் தமக்கு நாரணனிடத்திலுள்ள ஈடுபாட்டைத் தெரிவித்தருளினாரென வேண்டும். (௪)

5. மலமுடையூத்தையிற் றோன்றிற்றோர் மலவூத்தையை
மலமுடையூத்தையின் பேரிட்டால் மறுமைக்கில்லை
குலமுடைக்கோவிந்தா கோவிந்தாவென்றழைத்தக்கால்
நலமுடைநாரணன்றம்மன்னை நரகம்புகாள். (385)

| | |
|---|---|
| மலம் உடை | பலவகை மலங்கள் நிறைந்த |
| ஊத்தையில் | மாம்ஸாதிமயமான உடலில் |
| தோன்றிற்று | பிறந்ததான |
| ஓர் மலம் ஊத்தையை | மலமுடை யுடலிற் பிறந்த தொன்றுக்கு |
| மலம் உடை ஊத்தையின் | மலங்களைக் கொண்டவோர் உடலின் |
| பேர் இட்டால் | பேரை வைத்தால் |
| மறுமைக்கு | வருபிறப்பில் நன்னிலைக்கு |
| இல்லை | வழியில்லை. |
| குலம் உடை | குலத்தை யுடையனான |
| கோவிந்தா | கோவிந்தனே ! கோவிந்தா ! |
| என்று | என்றவாறு |
| அழைத்தக்கால் | அழைத்தானால் |
| நலம் உடை | நற்குணங்களையுடைய |
| நாரணன் | நாராயணனை |
| தம் மன்னை | பிள்ளைகளின் தாய் நரகம் புகாள். |

ஓர். மலவூத்தையிற் பிறந்த மலவூத்தையானது தன் கர்மத்திற்குத் தகுந்த அழுக்குகளோடு தன்னைப் பிறப்பிக்கும் வஸ்துவிலுள்ள அழுக்குகளை

யும் கொண்டதாலே ஒப்பற்ற தூர்கந்தம் கொண்டதென்றபடி. பொருள் இப்படிப்பட்டதாகிலும் பேராவது நிமலனுடையதா யிருக்கக்கூடாதோ? மலமுடையூத்தையின் பேரையே எனிடவேண்டு மென்கிறார் இரண்டாமடியால். ஊத்தையின்பேர். அப்பேர்தானும் அங்கே அவ்வூத்தைமட்டிலே வழங்கப்படுகிறதல்லது உள்ளிருக்கும் ஆத்மாவிலன்று. அவ்வளவு நீசமான பேரது. குலமுடை. குலம் விளங்கப்பிறந்தவனிவன். எம்பெருமானும் ப்ராக்ருத குலங்கள் விளங்கும்படி பற்பல அவதாரம் கொள்வதால் குலமுடையவன். நலமுடை. கோவிந்த னென்ற திருநாமத்தின் அர்த்தத்தை யாராயும்போது நாராயணனுடைய பல நலங்கள் தோன்றும். அதனால் மலப் நீங்கினதோடு நிற்காமல் நலமும் பெறலாமாகையாலே நரகமேதென்றபடி. (ரு)

6. நாடுநகருமறிய [நாட்டு?] மானிடப்பேரிட்டுக்
கூடியழுங்கிக்குழியில் வீழ்ந்துவழுக்காதே
சாடிறப்பாய்ந்ததலைவா தாமோதராவென்று
நாடுமின் நாரணன்றம்மன்னைநரகம்புகாள். (386)

| | | | |
|---|---|---|---|
| நாடும் | நாட்டிலுள்ளாரும் | வழுக்காதே | அதற்கும் கீழ்வழுகாதபடி |
| நகர் உம் | நகரத்திலுள்ளாரும் | சாடு | சகடாஸுரன்மேல் |
| அறிய | அறியும்படி பகிரங்கமாய் | இற | அது முறியும்படி |
| நாடு மானிடர் | சூத்ர மானிடருடைய | பாய்ந்த | காலால் தாக்கின |
| பேர் | இட்டு, | தலைவா | ச்ரேஷ்டனே ! |
| கூடி | அவர்களோடு கலந்து | தாமோதரா | தாமோதரனே ! |
| அழுங்கி | (அதிலேயே ஆதரவால்) பதிந்து | என்று நாடுமின் | என்றவாறு பெயரிட விரும்புங்கள். |
| குழியில் வீழ்ந்து | அதோகதியாக விழுந்து | | நாரணன் தம்மன்னை நரகம் புகாள். |

நாட்டு மானிட என எட்டாம் பாசுரத்திற் போல் பாடமும் காண்கிறது. அது மோனை யின்பத்திற் கொத்ததாம். நாட்டு மானிடர் பேரிடாமல் மனுஷ்யாவதாரம் செய்து சாடிறப் பாய்ந்த தாமோதரன் கண்ணன் பேரிடுங்களென்றபடி. நாடு நகருமறிய வென்பது முன்னோர் கருதியுள்ளபடி பேரிட்டு என்றவிடத்திலேயே சேரக்கூடும். நாடுமின் என்றதோடும் சேரும். சூத்ரமனிதரின் பெயர் வைப்பதை நாடு நகருமறிய இவ்வளவு ஆடம்பரத்துடன் நடத்த வேண்டுமா ! இப்படி நடத்தினால்தான் அந்த மானிடருக்கு உங்களிடம் அபிமானமுண்டாமென்று பார்க்கிறீர்கள். அதனாலுண்டாம் கேட்டை நீங்கள் உணரவில்லையே. அவர்களோடு கூடி அவர்களிட்ட வழக்காயிருப்பதே புருஷார்த்தமாக நினைத்து அவர்கள் செய்விக்கும் பாபங்களையும் அவர்களின் முகமலர்ச்சிக்காகச் செய்து, பிரேரிப்பித்த அவர்களைக் காட்டிலும் நேரில் செய்தவுங்களுக்குப் பாபம் அதிகமாகையாலே அவர்கள் விழும் குழிக்கும் கீழே வீழ்ந்து, 'பாபம் ப்ரஜ்ஞாம் நாசயதி க்ரியமாணம் புந: புந:। நஷ்டப்ரஜ்ஞ: பாபமேவ புநராரபதே நர:' என்கிற கணக்கிலே அளவற்ற பாபங்களைச் செய்து அங்கு நின்றும் வழுகிப்போய், 'மாமப்ராப்யைவ கௌந்தேய ததோ யாந்த்யதமாம்

பெரி. தி-32.

கதிம்' எனப் புருஷோத்தமன் பணித்தபடி யாய்விடவேண்டாம். அஸுர ராக்ஷஸஸம்ஹாரம் செய்து ஆச்ரிதரிடம் அடங்கி நடந்துவரும் ஸூஜந ஸார்வபௌமனின் பேரை யிட்டழையுங்கள். இதை யெல்லோரு முணரும் படி இங்ஙனம் நாடு நகருமறியச் செய்யுங்கள் என்றபடி. வழுக்காதே என்றது தன் வினையிற் பிறந்த பிறவினை யென்று கொண்டால் யுக்தமாம். (௬)

நான்காவதும் ஐந்தாவதுமான பாசுரங்களிலே யடைவாக, நல்லதும் கெட்டதும் கலந்த மானிட சாதிக்குள்ள குணத்தையும் தோஷத்தையும் நன் குணர்ந்து மறுமையைப் பெறும்படி பெயரிடவேண்டு மென்றருளி, ஆறும் பாசுரத்திலே மானிடப் பேரிட்டால் வரும் கேடுகளையும் விளக்கி யருளினர். இவ் வளவு அனர்த்தங்களுள்ளபோது கொஞ்சமும் இவ்விசாரமின்றி யெல்லாம் பெற்று ஏழ்மை நீங்கினர்போலே நிர்பரராய் நிர்பயராய் எங்ஙனமிவர் இருக்கின் றனரோ வென வியந்து மேற்பாசுர மருளிச்செய்கிறார்———

7. மண்ணிற்பிறந்து மண்ணாகும் மானிடப்பேரிட்டு, அங்
கெண்ணமொன்றின்றி யிருக்குமேழை மனிசர்காள்
கண்ணுக்கினிய கருமுகில்வண்ணன்நாமமே
நண்ணுமின் நாரணன்றம்மன்னை நரகம்புகாள். (387)

| | |
|---|---|
| மண்ணில் பிறந்து | மண்ணினின்று உண்டாகி |
| மண் ஆகும் | மண்ணிலேயே லயமாய்விடும் |
| மானிடர் | மனிதர்களுடைய |
| பேர் இட்டு | பேரை வைத்து |
| அங்கு | அவ்வளவிலே |
| எண்ணம் ஒன்று | நாம் பெறவேண்டும் நன்மைகளை இதனல் பெற்ரோமா வென்ருரு விக விசாரமும் |
| இன்றி | இல்லாமல் |
| இருக்கும் | நிர்பயமா யிருக்கும் |
| ஏழை | நன்மைபெற பாக்யமற்ற |
| மனிசர்காள் | ஆபாஸ மனிதர்களே! |
| கண்ணுக்கு | -கண்களால் பார்க்க |
| இனிய | ப்ரியமான |
| கருமுகில் | கரிய மேகத்தின் |
| வண்ணன் | நிறமுள்ள எம்பெருமானின் |
| நாமம் ஏ | திரு நாமத்தையே |
| நண்ணுமின் | இட விரும்புங்கள். |
| | நாரணன் தம்மன்னை நரகம் புகாள்- |

ப்ராக்ருத மனிசரின் பேரை விட்டு அப்ராக்ருத திவ்ய மங்கள விக்ரஹ முள்ளவன் பேரை யிட்டால் மண்ணாகிவிடாது மேன்மையான ரூபமெடுத்து மறுமை சேரும்படி ஏழ்மை நீங்கி விளங்கலாமென்றபடி. (௭)

8. நம்பிநம்பியென்று நாட்டுமானிடப் பேரிட்டால்
நம்பும்பிம்பமெல்லாம் நாலுநாளிலழுங்கிப்போம்.
செம்பெருந்தாமரைக்கண்ணன் பேரிட்டழைத்தக்கால்
நம்பிகாள் நாரணன்றம்மன்னை நரகம்புகாள். (388)

| | |
|---|---|
| நம்பிநம்பி என்று | நம்பி என்றவாறு |
| நாடு மானிடர் பேர் இட்டால் | க்ஷுத்ரமனிதருக்கு வைத்திருந்த பெயரை (பிள்ளைக்கு) வைத்தால் |
| நம்பு உம் பிம்பும் எல்லாம் | அதிலுண்டான நம்பிக்கை முதலானவை |
| நாலு நாளில் | -சில தினங்களுக்குள்ளே |
| அழுங்கி போம் | -மங்கிவிடும். |

| | | | |
|---|---|---|---|
| நம்பிகாள் | குலம் நிறைந்தவர்களே! | பேர் இட்டு | திருநாமங்களை வைத்து |
| செய்பெரு | சிவந்து பெருத்துமுள்ள | அழைத்தக் கால் | அழைத்தால் |
| தாமரை | தாமரை யிதழ்போன்ற | | |
| கண்ணன் | திருக்கண்களை யுடையனுடைய | நாரணன் தம்மன்னை நரகம் புகாள், | |

ஆஸ்திக்யம், ஆத்மகுணம், அநுஷ்டானம் போன்றவை நிறம்பி யிருப்பாளொருவனை நம்பியென்றழைத்தால் அப்பதத்திற்குப் பொருளுண்டு. அங்ஙனல்லாத நீசனுன நாட்டு மனிதனிடத்திலே தற்காலத்திலொருவிதமாய்ச் சேர்ந்துள்ள செல்வச் சிறப்பையும் செல்வாக்கையுங் கண்டுகந்து அவனுக்கு வைக்கப்பட்டிருப்பதாலே நம்பியென்ற பெயருக்கும் பெருமை வந்ததாக நினைத்து அப்பெயரைப் பிள்ளைக்கிடுகிறீர்களே. அவன் பக்கல் அந்த நம்பி என்னும் பதத்திற்குப் பொருள் உண்டோ? அவனுக்குப் பிம்பி யென்று பேர் வைத்தால் அது எப்படி பொருளற்றதோ, அங்ஙனமே இப் பேரும். ஆகையால் அதனால் ஏதோ சிறப்பைப் பெறலாமென்ற வுங்கள் நம்பிக்கையும் நாலு நாளில் பிம்பிக்கையாய்விடும். ஆகையால் செந்தாமரைக் கண்ணனுடைய பெருங்கடாக்ஷத்திற்குப் பாத்ரமாம்படி யவன்பேரை யிடுங்கள். அப்போது பிள்ளை சிறந்த புருடனு யுலகில் விளங்கி உண்மைநம்பி யாவான். நீங்களு மங்ஙனம் பேரிட்டதாலே நம்பிகளாகலா மென்றபடி. நாட்டு மானிடனல்லாத நம்பி யாவான் புருஷோத்தமனுன செந்தாமரைக் கண்ணன் ஸ்ரீராமபிரான். கண்ணனை முன்னமே யருளியுள்ளார். பிம்பி என்ற பதத்திற்குக் கோவை யென்ற பொருளுண்டாகிலும் இங்கு அது அப் பொருளில் வந்ததன்று. நம்பி யென்பதற்கு அங்கே பொருளில்லை யென்பதைக் குறிப்பதற்காக உகை வழக்கையடியொத்திக் கூட ப்ரயோகித்த தொன்றது. பிம்பியைப் போல் நம்பியும் இவன் விஷயத்தில் பொருளில்லாப் பதமென்றதாம். இங்ஙனமே நம்பும் பிம்புமென்ற விடத்திலும். நம்பு. நம்பிக்கை, அல்லது விருப்பம். உங்கள் நம்பு நிலைநிற்காது. அந்த நாட்டு மானிடப்பேர் தானே பெருமையைக் கொடுக்க வல்லதா? அந்நாட்டு மனிதன் தான் இது கண்டு களித்துக் கொடுப்பது என்ன நிச்சயம்? அவனுக்கும்தான் அவ் வாழ்வு எத்தனை நாளிருக்கும்! ஏதேனு மவன் கொடுத்தாலும் இவ்வுலகில் உயிரோடிருக்கும் நாலுநாள்வரையில் தானே அதற்குப் பலனுள்ளதுபோல் தோற்றும். பிறகென்னவாகு மென்பதையும் பாருங்க ளென்றபடி. நம்பும் என்பதற்கு நம்பி என்னும் பெயருக்கடியான முதன்மையும் என்வும் பொருளுரைப்பர். (அ)

முகில்வண்ணன் பேரிட்டால் இம்மைக்கும் குறையில்லை யாகையாலே குணலமாடித் திரியலாமென வருளுகிறுர்

**9.** ஊத்தைக்குழியிலமுதம் பாய்வதுபோலுங்கள்
மூத்திரப்பிள்ளையை யென்முகில்வண்ணன்பேரிடடுக்
கோத்துக்குழைத்துக் குணலமாடித்திரிமினே
நாத்தகுநாரணன்றம்மன்னை நரகம்புகாள். **(389)**

| | | | |
|---|---|---|---|
| ஊத்தை | துர்கந்தமான | பாய்வது போல் | பாய்த்துவது போலே |
| குழியில் | பள்ளத்தில் | | |
| அமுதம் | அம்ருதத்தை | உங்கள் | உங்களுடைய |

| | | | |
|---|---|---|---|
| மூத்திரம் பிள்ளையை | மூத்திர ஸ்தானத்துப் பிள்ளைக்கு | குணுலை ஆடி | —கொக்கரித்துக் கொண்டு |
| என் முகில் வண்ணன் | எனது மேக வர்ணனை பிரானுடைய | திரிமின் | எங்கும் ஸஞ்சரியுங்கள். |
| பேர் இட்டு | பெயரை வைத்து | நா தகு | நாவுக்கு விஷயமாகத் தகுந்த |
| கோத்து | கை கோத்துக் கொண்டு | நாரணன் தம்மன்னை | நாராயணனை பிள்ளையின் தாய் |
| குழைத்து | மனதை இளகுவித்து | | நரகம் புகாள் |

ஊத்தைக்குழியிலுள்ள துர்க்கந்தத்தைப் போக்கப் பல வழிகளிருக்கலாம். அவற்றில் அமுதம் மிகச் சிறந்தது. அது துர்கந்தத்தைப் போக்கி அக்குழியைச் சுத்தமாக்கி ஸ்பர்சிக்கத்தக்கதாக்கும். அதுபோல் மூத்திரப் பிள்ளைக்கு முகில்வண்ணன்பேருமாம். ஊத்தைக்குழியில் அமுதம் பாய்ந்தால் தானும் அசுத்தமாய் போக்யமாகாதபடி போம். அங்ஙனமன்று முகில்வண்ணன்பேரென்றனர் ஜீயர். உலகில் த்ருஷ்டாந்தமென்பது ஏதேனுமொரு ஒப்புமையைக்கொண்டுதான் கூறப்படும். உண்மையில் ஊத்தையுடன் கலந்த அமுதம் உட்கொள்ளமுடியாதது போல் இப்பிள்ளையென்ற பொருளுடன் கூடி முகில்வண்ணன் பேரும் உபாஸனத்திற்குதவாது. மூத்திரப்பிள்ளை. தாய்தந்தைகளின் மூத்ரேந்திரியம் வழியாகப் பிறந்தபடியாலே பிள்ளையை மூத்திரமாகவே பாவிக்கலாம். என் முகில்வண்ணன். மூத்திரப்பிள்ளையோடு உங்களுக்குள்ள ஸம்பந்தம் போனற ஸம்பந்தமே எனக்கும் முகில்வண்ணனோடிருப்பதென ஆழ்வாரின் திருவுள்ளம். இவர் தாம் யசோதையாகித் தம்பிள்ளையாகவே கண்ணனைக் கொண்டு இப்ரபந்தம் அருளிச்செய்கின்றாரல்லரோ; முகில்வண்ணனையே பிள்ளையாகக் கருத வுங்களா லியலாவிட்டாலும் அவன் பேரையாவதுங்கள் பிள்ளைக்கிட்டுக் கோத்துக் குழைத்துக் குணலையாடலாமென்றபடி. கோத்துக் குழைத்து என்பதற்கு, 'கூடிக்கலந்து' எனத் தன்வினைப் பொருளையும் கொள்வர். நாத்தகும். நாவைப் பெற்றதற்கு ப்ரயோஜனம் நாராயணனைக் கீர்த்தனம் செய்வதே யென்றபடி. நாத்தகுமென்பதைத் தனி வாக்யமாகப் பிரித்து உங்கள் நாவானது தகுதியுறும் எனவும் பொருளுரைப்பதுண்டு. (௯)

**10.** சீரணிமால் திருநாமமே யிடத்தேற்றிய
வீரணிதோல்புகழ் விட்டுசித்தன்விரித்த
ஓரணியொண்டமிழ்ஒன்பதோ டொன்றும்வல்லவர்
பேரணிவைகுந்தத் தென்றும்பேணியிருப்பரே. **(390)**

| | | | |
|---|---|---|---|
| சீர் | கல்யாணகுணங்களுக்கு | தொல் புகழ் | (ஸ்வயமே ஸர்வவேத ஸாக்ஷாத்காரம் செய்ததாலே பழமையான கீர்த்தியையுடையருமான |
| அணி | ஆபரணமாயுள்ள | | |
| மால் | பேரிட்ட மாத்திரத்திலே பேராவல் கொண்ட பிரானுடைய | விட்டு சித்தன் | ஸ்ரீ விஷ்ணு சித்தர் (பெரியாழ்வார்) |
| திருநாமம் ஏ | திருநாமங்களையே | | |
| இட | பிள்ளைகளுக்கிடும்படி | விரித்த | அர்த்தம் விரிவாம்படி யருளினவையும்— |
| தேற்றிய | நன்றாய் தெளிவிக்கு மவையும்— | ஓர் அணி | ஓதினவர்க்கு ஒப்பற்ற அலங்காரமும் |
| வீரம் அணி | பரமதப் போரில் ஜயம தரும் வீர்யத்தை அலங்காரமாக வுடையரும் | ஒண் தமிழ் | செந்தமிழிலமைந்த வையுமான |

| | | | |
|---|---|---|---|
| ஒன்பதோடு | ஒன்பது பாசுரங்களோடு சேர்த்து | வைகுந்தத்து | —ஸ்ரீ வைகுந்தத்திலே |
| ஒன்றும் | நிகமனப் பாசுரத்தையும் | என்றும் | ஒழிவில் காலமெல்லாம் |
| வல்லவர் | கற்றவர் | பேணி | விரும்பி வழிபட்டு |
| பேர் அணி | பெருமழகு வாய்ந்த | இருப்பர் | அழியாமல் நிலைபெறுவர் |

வீரணி. வீரமென்றது வீரெனக் குறைந்திருக்கிறது. பரமதபங்கம் செய்து பரதத்துவஸ்தாபனம் பண்ணிக் கிழி யறுத்த வாழ்வாரின் வீரம் ப்ரஸித்தமானதே. இந்திரியங்களையும் அரிஷட்வர்கமெனப்படும் காம க்ரோத லோப மோஹ மத மாத்ஸர்யங்களையும் ஜயித்த வீரமுமாம். தோல்புகழ். அத்யயன மின்றி பகவத் கடாக்ஷத்தாலே ஸகல வேதங்களையும் ஸாக்ஷாத்கரிக்கையாலும், கல்ப்பஸூத்ராதிகளுக்கு வியாக்கியானம் செய்தருளினதாலும் பூர்வ காலத்திய மஹர்ஷிகளுக் குண்டான புகழ் இவருக்கு முண்டென்க.

ப்ரபந்தரக்ஷையில் பெ. தி, 4, 6 காசுங்கறையுடை யுரை முற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானுர் தேசிகன் திருவடிகளே சரணம்.

---

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானுர் தேசிகன் திருவடிகளே சரணம்.

## பெரியாழ்வார் திருமொழி 4-7.

# தங்கையைமூக்கும்

---

கீழிரண்டு திருமொழிகள், 'பேசுவாரடியார்கள்' என்று திருநாமங்களைப் பேசுவதை யருளிச் செய்ததன்மேல் சொல்ல நேர்ந்தன வென்று முன்னமே சொல்லப்பெற்றது. இனி, முதலில் தொடங்கின அர்ச்சாவிஷயமான தம்மீடு பாட்டை மேலுமருளிச் செய்யப்போகின்றவராய் வடதேசத்திலே திருக்கண்டமென்றும் கடிநகரிலுள்ள புருஷோத்தமனை யிங்கனுபவித்தினியராகிறார். முதன்முதல் 'சிலம்பார்க்க வந்து தெய்வமகளிராடுஞ் சிலம்பாறு பாயு' மென்றவுடனேயே வடக்கிலுள்ள கங்கை ஆழ்வார் மனத்தில் நின்றது. அக் கங்கையின் கரையிலுள்ள திவ்யதேசத்தினின்று மனதைத் திருப்பினபடியாலே அங்கேயே 'தென் திருமாலிருஞ் சோலையே' எனத் தேன் என்னும் பதத்தையு மருளினர். இங்ஙனம் திருமாலிருஞ்சோலையையும் பிறகு திருக்கோட்டியூரையும் புகழ்ந்தார் கடைசியில், 'திருக்கோட்டியூர் கேசவா புருடோத்தமா' என்று 'வண்ணமாடங்கள் சூழ் திருக்கோட்டியூர் கண்ணன் கேசவ நம்பி'யைப் புருடோத்தமனென்ற போதே முன் நினைத்த கங்கைக்கரையில் திருக்கண்டநகரிலுள்ள புருடோத்தமன் மனத்தில் எழுந்தருளி நின்றான். கங்கைக் கரையிலே காசியிலேயுள்ள ஆதிகேசவன் மனத்திலிருந்தாலும் அங்கே ப்ரஸித்தி பெற்றுள்ள விச்வேச்வரனை நடராஜனருகிலுள்ளவனிடத்திற் காட்

டில் புருஷோத்தம ரூபத்திலே ஆழ்வாருக்கு ஈடுபாடு அதிகமென்ன வேண்டும். இவர்தாமே, 'வடதிசை மதுரை' எனத் தொடங்கிப் பல திவ்ய தேசங்களி லிருப்பவனும் இப்புருஷோத்தமனே யென வருளப் போகிறார்.

திருக்கண்ட நகரிலே ஒரு காலத்திலே மழையின்மையாலே மிகத் தவித்து நின்ற ஜனங்கள், 'இதற்கு என் செய்யவேண்டு' மென அலைந்திருக்கும் தருணத்திலே அங்கிருந்த மன்னனுக்குப் புருஷோத்தமன், 'இவ்வாழ்வாரை யழைத்து வந்தீர்களாகில் மழை பெய்யு' மென்று சொப்பனத்தி லருளிச் செய்ததாகவும், அதுபடியே யவர்கள் வந்து எழுந்தருள ப்ரார்த்தித்ததாகவும், ஆழ்வாரும் அவ்வெம்பெருமானை மங்களாசாஸனம் செய்ய வெழுந்தருளினதாகவும், பிறகு கங்கை கரைபுரண்டு போம்படி மழை பெய்ய வங்குள்ளார் மனம் பூரித்த தென்றும் சில ஸம்ப்ரதாய மறிந்த பெரியோர்கள் [1]சொன்னதை அடியேன் கேள்வியுற்றுள்ளேன். அதுவும் இப் புருஷோத்தமனை யிவ்வாழ்வார் சிறப்பாக வனுபவித்ததற்குக் காரணமாகலாம்.

ஆகவே முன் சொன்னபடி திருக்கோட்டியூர் கேசவனுக்குப் பிறகு இப் புருஷோத்தமனை நினைத்து அவனைப் புகழும் வ்யாஜத்திலே வடதேசத்தி லெழுந் தருளியுள்ள மூர்த்திகளை யெல்லாம் ப்ரஸ்தாவித்துப் பிறகுத் தென்தேசத்தில் தாமீடுபட்ட மூர்த்திகளி லிழியப் போகின்றவராய் கங்கைக்கரைமேற் கைதொழ நின்ற திருக்கண்ட நகர தேவதையான புருஷோத்தமனைப் புகழ்ந்தருளக் கோலி அவன் ஸம்பந்தத்தினா லேற்றம் பெற்ற அத் திவ்யதேசத்தையே ப்ரதானமாக்கிப் புகழா நின்றருளுகிறார். பாசுரந்தோறும் முதலடிகளில் புருடோத்தமனுக்கும் பின்னடியாலங்குப் பாயும் கங்கைக்கு முள்ள பெருமையைப் பணித்து அந்நக ரைச் சிறப்பிக்கிறார். அதிலே முதற்பாசுரத்திலே ஸ்ரீராமபிரானாக அவனை பாவித்தருளுகிறார். இதுவும், 'செம்பெருந்தாமரைக் கண்ணன்' என்று ஸ்ரீராம பிரானை நினைத்திருந்ததாலும், 'என் முகில்வண்ணன் பேரிட்டு' என்றடுத்த பாசு ரத்திலே சொல்லப்பட்டவன் 'நீலமேகப் பெருமாள்' என்ற மற்றொரு பெயர் கொண்ட இப்புருஷோத்தமனானதாலுமாம்.

1. தங்கையைமூக்குந் தமையனைத்தலையுந் தடிந்தவெந்தாசரதிபோய்
எங்குந்தன்புகழாவிருந்தரசாண்ட வெம்புருடோத்தமனிருக்கை
கங்கைசங்கை யென்றவாசகத்தாலே கருவினைகளைந்திடகிற்கும்
கங்கையின்கரைமேற் கைதொழநின்ற கண்டமென்னுங்கடிநகரே. (391)

| | |
|---|---|
| எம் தாசரதி | எமது சக்ரவர்த்தித் திருமகனாய் |
| போய் | வனத்திற்குச் சென்று |
| தங்கை மூக்கு ஐ உம் | இராவணன் தங்கையான சூர்ப்பணகையின் மூக்கையும் |
| தமையன் தலை ஐ உம் | அவள் தமையனை அவனுடைய தலைகளையும் |
| தடிந்த | அறுத்தவனும், |
| போய் | மறுபடியும் அயோத்தி சென்று |
| எங்கும் | எல்லா வுலகிலும் |
| தன் புகழ் ஆ இருந்து | தனது கீர்த்தி ரூபமாக இருந்து |
| அரசு ஆண்ட | பதினோராயிரம் வருஷம் இராஜ்யம் ஆண்டவனுமான |

1. ஸ்ரீ. உ. வே. திருக்கள்ளம் திருவேங்கடாசார்ய ஸ்வாமி

| | | | |
|---|---|---|---|
| எம் புருடோத்தமன் | எமது புருஷோத்தம மூர்த்தியின் | கிற்கும் | வல்லதான |
| இருக்கை | இருப்பிடமானது—, | கங்கையின் | கங்கா நதியின் |
| கங்கை கங்கை என்ற வாசகத்தாலே | கங்கை கங்கை யெனத் தன் பெயர் (சொன்ன) மாத்திரத்திலே | கரைமேல் | கரையிலேயே |
| கடு | கொடிய | கை தொழ | கைகளால் ஸேவிக்கும்படி |
| வினை | பாபங்களை | நின்ற | நிலைத்துள்ளதான |
| களைந்திட | போக்க | கண்டம் என்னும் | திருக்கண்டமெனப் படும் |
| | | கடி | சிறப்புள்ள |
| | | நகர் ஏ | நகரமே யாம். |

தங்கையை இத்யாதிகளிலுள்ள வேற்றுமையை மாற்றி யந்வயித்துக் கொள்க. தாசரதி. தாசரதியாய் அவதரித்தது ராவண ஸம்ஹாரத்திற்காக. மனிதனா யிருந்துதானே அவனைத் தடிய வேண்டியிருந்தது. ஆகவே தன்னை, 'ஆத்மாநம் மாநுஷம் மந்யே ராமம் தசரதாத்மஜம்' எனத் தசரதன்மகனாய் மனிதனாக, ராவண ஸம்ஹாரம் செய்துள்ளதை ஹேதுவாகக் கொண்டு அநுமானம் செய்தருளினான் புருஷோத்தமன். எங்கும் தன் புகழ். 'ராமோ ராமோ ராம இதி ப்ரஜாநாமபவந் கதா:' என்னப்பட்டதன்றோ? புருடோத்தமன். அந்த திவ்ய தேசத்தெம்பெருமானுக்கு நீலமேகப் பெருமாள் என்றும் புருஷோத்தமனென்றும் பெயராம். தனிக் கோவில்நாச்சியார் புண்டரீகவல்லி, மங்களவிமானம், மங்கள தீர்த்தம், பரத்வாஜ மஹர்ஷிக்கு ப்ரத்யக்ஷ மெனவும் கூறுகின்றனர். எம்பெருமானுடைய புருஷோத்தமன் என்ற பெயரின் பொருளானது, 'உத்தம: புருஷஸ்த்வந்ய: பரமாத்மேத் யுதாஹ்ருத: 'யோ லோகத்ரயமாவிச்ய பிபர்த்யவ்ய ஈச்வர:' என்று கீதையிலே விவரிக்கப்பட்டது. கர்மவச்யரும் அகர்மவச்யருமாய் இருவகையான புருஷர்களுக்கும் மேற்பட்டவனாக இப் புருஷோத்தமனுக்கு ஜ்ஞானம், சக்தி, பலம் ஐச்வர்யம், வீர்யம், தேஜஸ்ஸு என்ற ஷாட்குண்யமுள்ளதாலு மிப்பெயர் என்றது இந்த கீதாச்லோகத்தை யூன்றி நோக்குங்கால் விளங்கும். இராமபிரான் புருஷோத்தமனானது மற்றொருவிதமான ஷாட்குண்யத்தாலு மென இராமாயணத்தினின்று விளங்கா நிற்கிறது. 'ஆந்ருசம்ஸ்ய மநுக்ரோச: ச்ருதம் ஸத்யம் தம: சம: ராகவம் சோபயந்த்யேதே ஷட்குணா: புருஷோத்தமம்' என்றாரல்லரோ. இங்ஙனம் உள்ள புருஷோத்தமன் உறையுமிடமிது.

கங்கைகங்கை என இருதரம் சொன்னது. ஹம்ஹா ஹம்ஹேதி யஹுாஉ யொஜநா நாம் ஸஹெஸ்ஷவி ஷூி ஹெதா-ஷ்ாஸிதம்ஷஜி வாவெம்ஜநுத்ருயாஜி-உகழ. ஹம்ஹா ஹம்ஹெதி ஹம்ஹெதி ஹெய: த்ரீவாயும்த்ரீ ரீஸிதழ ஸ-உஙஸஹெஹ ஸஷ்ாவெம் ஹஜி ஜநூத்ருயாஜி-உகழ என்றபடி மூன்றுதரம் அப் பதத்தைச் சொல்ல வேண்டுமெனத் தெரிவிப்பதற்காக. மேலுலகிலிருந்து இது கீழே பூமிக்கு வந்து சேர்ந்ததாலே 'ஹாம்ஹதா' என்றதாய் 'கங்கா' என்னப்பட்டதாம். தன்னை யடைந்தவனைத் தகுந்த இடத்தை அடைவிப்பதாலும் கங்கையாம். நாம் ஸ்நானம் செய்யும் தீர்த்தங்கள்தோறும் கங்கை யென்ற பாவனை செய்யவேண்டு மென்பதும் இருதரம் ப்ரயோகித்தாலே குறிக்கப்பெற்றதாம். இதனைத் தெளிவிப்பதற்காகவே, கங்கைகங்கை என்ற வாசகத்தாலே என்றதற்கு 'கங்கையினுடைய கங்கையென்னும் சொல்லால்' என்று

சிலர் உரை கூறினர் போலும். கண்டமென்னும். 'த்ரிவ: க்ராந்தி: வணு:ச' என்று மஹாகவி சொன்ன கணக்கிலே இது வைகுண்டத்தினின்று புருஷோத்தமனுக்காக இங்கு வந்து சேர்ந்த ஒரு கண்ட மென்னலாம். கற்கண்டு போலே ஸர்வபோக்யமா யுள்ளதெனலாம். கைதொழுமவரின் வினைகளை யெல்லாம் கண்டிப்பதாலும் கண்டமிதென்னலாம். கங்கையானது கடுவினை யெனப்படும் சில பாபங்களை மட்டும் களையும். கண்டமென்னும் நகரோ வென்னில், கையால் தொழுதபோதே, ஸஞ்சிதம், ப்ராரப்தம் என்னப்படும் எல்லா வினைகளையும், புண்யம், பாபம் என்ற இரு வகை வினைகளையும் கோலினபடி கண்டிக்கு மென விதற்குள்ள சிறப்புங் கடி என்றதாலே குறிக்கப்பெறும். (க)

இராமாவதாரத்துக்கு முன்னிருந்த வாமனாவதாரத்தைக் கொண்டு வர்ணித்தருளுகிறார்—

**2.** சலம்பொதியுடம்பில் தழலுமிழ்பேழ்வாய்ச் சந்திரன் வெங்கதிரஞ்ச
மலர்ந்தெழுந்தணவு மணிவண்ணவுருவின் மால்புருடோத்தமன்வாழ்வு
நலந்திகழ்சடையான் முடிக்கொன்றைமலரும் நாரணன்பாதத்துழாயும்
கலந்திழிபுனலாற் புகர்படுகங்கைக் கண்டமென்னுங் கடிநகரே. **(392)**

| | |
|---|---|
| சலம் | ஜலத்தை |
| பொதி | பொதிந்துள்ள |
| உடம்பு இல் | உருவத்தையுடைய |
| சந்திரன் | சந்திரனையும் |
| தழல் | அக்னியை |
| உமிழ் | கக்கும் |
| பேழ் | பெரிய |
| வாய் | வாயை யுடைய |
| வெம் கதிர் | உஷ்ணமான ஸூர்யனையும் |
| அஞ்ச | அவர்கள் பயப்படும்படி |
| மலர்ந்து | பரந்து |
| எழுந்து | வளர்ந்து |
| அணவும் | கிட்டின |
| மணி வண்ணன் | நீலமணி நிறமுள்ள |
| உருவின் | திருமேனியையுடைய |
| மால் | வ்யாமோஹமுள்ள |
| புருடோத்தமன் வாழ்வு | புருஷோத்தமன் வாழுமிடமானது, |
| நலம் | நன்மையாலே |
| திகழ் | ப்ரகாசிக்கும் |
| சடையான் | ஜடாதாரியான சிவனுடைய |
| முடி | முடியிலுள்ள |
| கொன்றை மலரும் | கொன்றைப் பூவுடனும் |
| நாரணன் | த்ரிவிக்ரமனுடைய |
| பாதம் | திருவடியில் ஸமர்ப்பிக்கப்பட்ட |
| துழாய் உம் | திருத்துழாயுடனும் |
| கலந்து | சேர்ந்து |
| இழி | கீழ்நோக்கி ப்ரவஹிக்கும் |
| புனலால் | ப்ரவாஹத்தால் |
| புகர் படு | அழகு பெற்ற |
| கங்கை | கங்காநதியையுடைய |

கண்ட மென்னும் கடி நகரேயாம்

சலம் இத்யாதி. ஒன்றுக்கொன்று விருத்தங்களான சீதோஷ்ணங்களையே உருவாகக் கொண்ட சந்த்ர ஸூர்யர்கள் கூடத் தங்களாலுண்டாம் பாதை யொன்றும் பெறுமே தங்களையே பாதிக்கும் போல் வளரும் இம் மூர்த்தி யாதோ ? எத்தகையதோ ? இதனால் தங்களுக்கென்ன வாகுமோ வென வஞ்சினரென்றபடி. நலம் திகழ் 'ஊர்த்வம் வியந்தே ந சிவ: சிவோऽபூத்' என்றபடி பிரமதேவன் திருத்துழாயுடன் ஸமர்ப்பிக்க எம்பெருமான திருவடியிலிருந்து ப்ரவஹிக்குமிதனை சிரஸா வஹித்து சிவனாகவேண்டு மென நினைத்தானாகையாலே சிவன் நலம் பெற்றான். (உ)

3. அதிர்முகமுடையவலம்புரி குமிழ்த்தியழலுமிழாழிகொண்டெறிந்தங்கு
எதிர்முகவசுரர்தலைசளையிடறு மெம்புருடோத்தமனிருக்கை
சதுமுகன்கையிற் சதுப்புயன்தாளிற் சங்கரன்சடையினிற்றங்கிக்
கதிர்முகமணிகொண்டிழிபுனற் கங்கைக் கண்டமென்னுங்கடிநகரே. (393)

| | |
|---|---|
| அதிர் | தீவ்ரமாய் த்வநியா நின்றுள்ள |
| முகம் உடைய | வாயையுடைய |
| வலம் புரி | வலம்புரிசங்கான ஸ்ரீபாஞ்சசன்னியத்திலே |
| குமிழ்த்தி | காற்று நிறையும்படி கொப்பளித்து |
| அழல் | அக்னியை |
| உமிழ் | கக்கும் |
| ஆழி | ஸ்ரீ ஸுதர்சன ஆழ்வானை |
| கொண்டு | திருக்கையில் தகுந்தபடி யமைத்து |
| எறிந்து | ப்ரயோகித்து |
| அங்கு | போர்க்களங்களிலே |
| எதிர்முகம் | எதிர்ப்புள்ள முகமுடைய |
| அசுரர் | அசுரர்களின் |
| தலைகளை இடறும் | தலைகளைத் துண்டிக்கும் |
| எம் புருடோத்தமன் இருக்கை(யானது) | |

| | |
|---|---|
| | (முதலில்) |
| சதுமுகன் | பிரமதேவனின் |
| கையில் | கைக் கமண்டலுவிலும் |
| சதுப்புயன் தாளில் | (அவன் பாத்யமாகச் சேர்த்த பிறகு) சதுர்புஜனை த்ரிவிக்ரமனின் திருவடியிலும் |
| சங்கரன் சடையினில் | (பிறகு பகீரதனுக்காக இழியும்போது) சிவனின் ஜடையிலும் |
| தங்கி | சிறிதுகாலம் இருந்து |
| கதிர் முகம் | ஒளிக்கு இடமான |
| மணி கொண்டு | இரத்தினங்களுடன் |
| இழி | கீழ் நோக்கி ப்ரவஹிக்கும் |
| புனல் | ப்ரவாஹத்தை யுடைய |
| கங்கை | கங்கையை யுடையதான |
| கண்டமென்னும் கடிநகரே, | |

முன் பாசுரத்திலே க்ரமமாகக் கூறப்படாதொழிந்தது இப்பாசுரத்திலே சதுமுகன் இத்யாதியாலே நன்கு விளக்கப்பட்டது.

இவ்விரண்டாம் பகுதியிலே பிரம்மதேவன் தன் கமண்டலுவிலிருந்து த்ரிவிக்ரம மூர்த்தியின் திருவடியில் தீர்த்தம் சேர்த்தது சொல்லப்படுவதால் முன்பகுதியும் அந்த த்ரிவிக்ரமாவதார தசையிலே பெருந் திருவடியா லளப்பது கூடாதென்று எதிர்த்து வந்த பலியின் பரிஜநங்களைப் பற்றியதாம். அங்குச் சக்ராயுதத்தைக் கொண்டு பலரைக் கொன்றதும் ஸம்பாவிதமே. இல்லையேல், வேறு சமயங்களிலே பஞ்சாயுதங்களை ப்ரயோகித்து அஸுரஸம்ஹாரம் செய்ததை வாமநாவதாரத்திற்கு முன்பு உபேந்த்ராதி ரூபங்களிலே கண்டிருப்பதால் மேற்பாசுரத்திலே வாளால் வதைத்தை யருளினது போல் இப்பாசுரத்தில் அத்தகைய சங்கசக்கிரங்களின் பணி பணிக்கப்பட்டதாகலாம். ஆக முக்காலத்திலு மிடறுவதைச் சொல்வதால் இடறும் என்றதும் பொருந்தும். சங்கரன். சடையில் தான் ச்ரத்தையோடு சுமந்ததாலே தனக்குத்தான் சங்கரனுனன். பிறகு கீழே இழிவித்ததாலே பிறர்க்கும் ஸுகமளித்துச் சங்கரனுன். தங்கி. சதுர்முகன் கையிலிருந்த கமண்டலுவிலும், சங்கரன் சடையிலும் போல் சதுர்ப்புஜன் திருவடியிலும் எங்கோ விறற் சந்தில் தங்கிக்கிடக்கவேண்டிய கங்கையைச் சதுர்ப்புஜன் சதுர்வித புருஷார்த்தங்களையும் தேவதிர்யங்மநுஷ்யஸ்தாவரரூபமான சதுர்வித ஸ்ருஷ்டிக்கும் அளிக்க நினைத்து ஸர்வார்த்தமாக இதைத் தன் திருவடியிலிருந்து பெருக்கவைத்தான் போலும். சதுப்புயன். இருபுஜ வாமனனுயிருந்து சதுர்புயத்ரிவிக்ரமனுனவன். (௩)

பெரி. இ–33.

சங்கசக்கிரங்களாற் செய்த உபகாரத்தை யுரைத்த பிறகு நாந்தக மென்னும் வாளை வீசிச் செய்ததை மேற்பாசுரத்தில் அருளுகிறார். இதன்மேல் மற்ற வாயுதங்களை யெல்லாம் குறித்து அவன் செய்ததைப் பணிப்பர். அதிலே பலராம பரசுராமாத்யவதாரங்களும் கருதப்பட்டவையாம்.

4. இமையவரிறுமாந்திருந்தரசாள வேற்று வந்தெதிர்பொருசேனை
நமபுரநணுக நாந்தகம்விசிறுநம் புருடோத்தமனகர்தான்
இமவந்தந்தொடங்கி யிருங்கடலளவு மிருகரையுலகிரைத்தாடக்
கமையுடைப்பெருமைக்கங்கையின் கரைமேற்கண்டமென்னுங்கடிநகரே (394)

| | |
|---|---|
| இமையவர் | தேவர்கள் |
| இறுமாந்து இருந்து | நம்மை எதிர்ப்பார் யாரென்று இறுமாப்புடன் அலக்ஷ்யமாயிருந்து |
| அரசு ஆள | மூவுலகும் ஆண்டுவர |
| ஏற்று | அவர்களை யெழுப்பி |
| வந்து | உட்புகுந்து |
| எதிர்பொரு | எதிர்த்து யுத்தம் செய்யும் |
| சேனை | அஸுர ஸேனையை |
| நமன் புரம் | யமனின் நகரத்திற்கு |
| நணுக | போய்ச்சேரும்படி (அவ்வப்போது) |
| நாந்தகம் | தனது வாளை |
| விசிறும் | வீசுகின்ற |
| நம் | நமது |
| புருடோத்தமன் | புருஷோத்தமனுடைய |
| நகர்தான் | நகரமானது |
| இமவந்தம் தொடங்கி | இமயமலையினின்று |
| இரு | பெரிய |
| கடல் அளவும் | ஸமுத்ரம் வரையில் |
| இரு கரை | இருபக்கத்துக்கரைகளிலும் |
| உலகு | உலகிலுள்ளோர் யாவரும் |
| இரைத்து | ஆரவாரித்துக் கங்கையின் மஹிமையைக்கூறி |
| ஆட | நீராடும்போதும் |
| கமை உடை | பொறுமையையுடைய |
| பெருமை | உருவிலும் குணங்களிலும் பெருமைபொருந்திய |
| கங்கையின் | கங்கையினுடைய |
| கரைமேல் | கரையிலே விளங்கும் |
| | கண்டம் என்னும் கடிநகரே. |

இமவந்த மித்யாதிக்கு இமயமலையினின்று புறப்பட்டுக் கடலில் போய் விழும்வரையில் நெடுகனுமெனப் பொருளாகுக. கமையுடைப் பெருமை. கமை = க்ஷமை = பொறுமை. அதாவது உட்புகுந்த உலகினைப் பூராவும் பரிக்ரமமில்லாமையும், கலக்க மில்லாமையும், இவர்கள் பாவத்தை யெல்லாம் போக்க முடியுமோ வென்று ஐயப்படாமையும். இதை யுடையது கங்கையின் பெருமை. கமையும் பெருமையு முடைய (கமை பெருமை உடை) என அந்வயமுமாம். கமையால் பெருமையுடை எனவு முரைப்பர். (௪)

5. உழுவதோர்படையுமுலக்கையும் வில்லு மொண்சுடராழியுஞ்சங்கும்
மழுவோடுவாளும்படைக்கலமுடைய மால்புருடோத்தமன்வாழ்வு
எழுமையுங்கூடியீண்டியபாவ மிறைப்பொழுதளவினிலெல்லாம்
கழுவிடும்பெருமைக் கங்கையின்கரைமேற் கண்டமென்னுங்கடிநகரே. (395)

| | |
|---|---|
| உழுவது | உழக்கருவியாகிய |
| ஓர் | ஒப்பற்ற |
| படை உம் | கலப்பையையும் |
| உலக்கை உம் | உலக்கையையும் |
| வில் உம் | வில்லையும் |
| ஒண் | அழகியதும் |
| சுடர் | அக்னிமயமுமான |
| ஆழி உம் | திருவாழியையும் |
| சங்கு உம் | ஸ்ரீ பாஞ்சஜன்யத்தையும் |
| மழுவொடு | கோடாலியையும் |
| வாள் உம் | கத்தியையும் |

| | |
|---|---|
| படை கலம் | ஆயுதங்களாகவுள்ள ஆபரணங்களாக |
| உடைய | பெற்றுள்ள |
| மால் | ஆச்ரிதவ்யாமோஹமுமுள்ள |
| புருடோத்தமன் | புருஷோத்தமனுடைய |
| வாழ்வு | வாழ்க்கைக்கு இடமானது, |
| எழுமை உம் | ஏழ்பிறப்பிலும் |
| கூடி ஈண்டிய | ஒன்றுகூடித்திரண்டுள்ள |
| பாவம் எல்லாம் | எல்லாப் பாவத்தையும் |
| இறை பொழுது அளவினில் | ஒரு நொடிப்பொழுதிற்குள்ளே |
| கழுவிடும் | கழுவிடுதற்குரிய |
| பெருமை | பெருமையையுடைய |

கங்கையின் கரைமேல் கண்டம் என்னும் கடிநகரே.

உழுவதோர் படை. படையென்பதற்குப் பல பொருள் உள. இங்கே கலப்பை யென்ற பொருளைத் தெளிவிக்க உழுவது என்ற விசேஷண மாம். இதுவும் உலக்கையும் எம்பெருமானுக்கு ஆயுதங்களாயிருந்தது பலராமாவதாரத்திலே கண்டதாகும். மழு ஆயுதமானது பரசுராமாவதாரத்திலாம். 'படைக்கலமாவது ஆயுத' மென்னக் கூடுமாகிலும் படை யென்றே ஆயுதத்தை யுரைத்துக் கலமாவது ஆபரண மெனத்தகும். ஆச்ரிதர்க்கு என்ன அவத்யம் வருமோ வென்று அதிசங்கையாலே மால்புருடோத்தமன் இவ்வளவு திருவாயுதங்களோடு எழுந்தருளினன். ஏழேழு பிறப்புக்களிலும் குவிந்த வினைகளை யெல்லாம் களையும் கங்கைக் கரையிலே ஆச்ரிதர்க்கு விரோதம் செய்வார் யாரு மில்லாமையாலே இவ்வாயுதங்களெல்லாம் ஆபரணங்களாகவே விளங்கின வென்றபடி. (ரு)

6\. தலைப்பெய்துகுமுறிச்சலம்பொதிமேகஞ் சலசலபொழிந்திடக்கண்டு
மலைப்பெருங்குடையால் மறைத்தவன்மதுரை மால்புருடோத்தமன்வாழ்வு,
அலைப்புடைத்திரைவாயருந்தவமுனிவ ரவபிரதங்குடைந்தாடக்
கலப்பைகள்கோழிக்குங்கங்கையின் கரைமேற் கண்டமென்னுங்கடிநகரே.

**(396)**

| | |
|---|---|
| சலம்பொதி | நீர்கொண்ட |
| மேகம் | மேகங்கள் |
| தலைப்பெய்து | கிட்டி |
| குமுறி | கர்ஜித்து |
| சலசல | சலசலவென்று |
| பொழிந்திட கண்டு | வர்ஷித்தத்தள்ளின போது பார்த்து |
| மலை | (கோவர்த்தன) மலையென்ற |
| பெரு குடையால் | பெரிய குடையினாலே |
| மறைத்தவன் | தடுத்தவனான |
| மதுரைமால் | வடமதுரையில் வ்யாமோஹித்தவதரித்தருளின |
| புருடோத்தமன் | புருஷோத்தமனுடைய |
| வாழ்வு | வாழுமிடமானது— |
| அலைப்பு உடை | எங்குமலைத்தலையுடைய |
| திரைவாய் | அலைகளிலே |
| அரு தவம் முனிவர் | அருமையான தவங்களைப் புரிந்த மஹர்ஷிகள் |
| அவபிரதம் | யாகத்தின் முடிவில் செய்யும் ஸ்நானச்சடங்கை |
| குடைந்து ஆட | அவகாஹித்துச்செய்யும் போது |
| கலப்பைகள் | அவர்களின் யாகக்கருவிகளை |
| கொழிக்கும் | தூக்கித்தள்ளுகிற |

கங்கையின் கரைமேல் கண்டம் என்னும் கடிநகரே.

இப் பாசுரமும் மேலிரண்டு பாசுரங்களும் அப்புருஷோத்தமனைக் கண்ணனாகக் கொண்டாடுபவையாம். மறைத்தவன் என்ற விடத்திலே, 'மறுத்தவன்' எனவும் படிப்பர். மறைத்தவன் என்ற பாடமே குடைக்கு அந்ரு

மென்ற பெயரின் பொருளான அாதிந மென்னும் கார்யத்தைக் குறிப்பதாகு மாகையால் முன்னேரிசைந்த பாடமாகும். கலப்பைகள். கலப்பை யெனப் பொதுவாக உபகரணங்களுக்கும் பெயர். கலப்பை முதலான கருவிகள் எனவு முரைப்பர். (௬)

திருவாய்ப்பாடியில் செய்த செயல்களில் ஒன்றை யருளிச்செய்து அங்கு நின்று திருமதுரைக்கு எழுந்தருளினபோதங்குச் செய்தருளினதை யநுஸந்தித் தருளுகிருர்.

7. விற்பிடித்திறுத்து வேழத்தைமுறுக்கி மேலிருந்தவன்றலைசாடி
மற்பொருதெழப்பாய்ந் தரையனையுதைத்த மால் புருடோத்தமன்வாழ்வு
அற்புதமுடையவைராவதமதமு மவரிளம்படியரொண்சாந்தும்
கற்பகமலருங்கலந்திழிகங்கைக் கண்டமென்னுங்கடிநகரே. (397)

வில் — (கம்ஸனுடைய யாகசாலை யில் பூஜையிலிருந்த) வில்லை
பிடித்து இறுத்து — எடுத்து முறித்து
வேழத்தை — (மல்லரங்கத்தின் வாயி லிலே தடுத்து நின்ற குவலயாபீடமென்ற) யானையை
முறுக்கி — துதிக்கையை முறுக்கித் தள்ளி
மேல் இருந்தவன் — அதன்மேலிருந்த யானைப் பாகனுடைய
தலை — தலையை
சாடி — சிதரவுதைத்து
மல் — மல்லர்களோடு
பொருது — அவர்களழியும்படி போர்செய்து
எழ — அங்கிருந்து உயர எழுந்த போது
பாய்ந்து — கம்ஸனைக்குறித்துக் குதித்து
அரையனை — அரசனையிருந்த கம்ஸனை
உதைத்த — உதைத்தருளின
மால் — பக்தவத்ஸலனை
புருடோத்தமன் — புருஷோத்தமனுடைய
வாழ்வு — வாழுமிடமானது
அற்புதம் உடைய — திருக்கண்டநகரைக் கண்ட வுடனே அற்புத ரஸமுடையதான
ஐராவதம் — (ஸேவிக்கவந்த தேவேந்தி ரனின் வாஹனமான) ஐராவதத்தின்
மதமும் — மதஜலமும்
அவர் — அந்தத்தேவரின்
இள — இளமைபொருந்திய
படியர் — உருவமுள்ள ஸ்திரீகளின்
ஒண் — அழகிய
சாந்தும் — நெற்றிச்சாந்தும்
கற்பகம் மலரும் — (அவர்கள் வைத்திருந்த) கற்பகப்பூவும்
கலந்து இழி — சேர்ந்துவர ப்ரவஹிக்கும்
கங்கை — கங்கையையுடைய
கண்டம் என்னும் கடிநகரே.

அற்புதம். எம்பெருமானின் திவ்ய நகரமாகிய திருக்கண்டத்தின் காட்சி யிலே ஐராவதத்திற்கு ஆச்சரிய முண்டாயிற்று. அதனல் மதஜலம் மிகுதியாக ப்ரவஹித்தது. இளம்படியர். படியாவது உருவம். தேவஸ்திரீகள் எப்போ தும் இளம்படியரானபடியாலே முதிர்ந்தோரைப்போல் திருமண் திருச்சூர்ணங் களை யணியாமே காமிநிகளாய் ஒண்சாந்தணிந்திருப்பர் போலும். (எ)

மதுரையை விட்டு த்வாரகையில் எழுந்தருளி யிருந்தபோது குருக்ஷேத் ரத்திலே செய்ததை யருளிச்செய்கிருர்.

8. திரைபொருகடல் சூழ்திண்மதிள்துவரை வேந்து தன்மைத்துனன்மார்க்காய்
அரசனையவியவரசினையருளு மரிபுருடோத்தமனமர்வு
நிரைநிரையாகநெடியனயூபம் நிரந்தரமொழுக்குவிட்டு, இரண்டு
கரைபுரைவேள்விப் புகைகமழ்கங்கைக் கண்ட மென்னுங்கடிநகரே. (398)

| | | | |
|---|---|---|---|
| திரை பொரு | அலைகளை எறிகின்ற | புருடோத்த மன் | புருஷோத்தமன் |
| கடல் | ஸமுத்ரத்தாலே | அமர்வு | நிலைத்துள்ள இடமானது, |
| சூழ் | சூழப்பெற்றதும் | நெடியன | நீண்டுள்ள |
| திண் | திடமான | யூபம் | யூபஸ்தம்பங்களை |
| மதிள் | மதிட்சுவருள்ளதுமான | நிரை நிரை ஆக | கூட்டம் கூட்டமாக |
| துவரை | த்வாரகைக்கு | நிரந்தாம் | இடைவிடாமல் |
| வேந்து | வேந்தனும், | ஒழுக்கு விட்டு | ஒழுகச்செய்து |
| தன்மைத்துனன்மார்க்கு ஆய் | தனது அத்தையின் மகன்களான பாண்டவர்க்கு அனுகூலனாய் | இரண்டு கரை | இரண்டு பக்கத்திலுள்ள கரைகளும் |
| அரசன் | துர்யோதனன் | புரை | இழைத்ததான |
| அவிய | அழியும்படி | வேள்வி புகை | யாகங்களிற்கிளர்ந்த புகையாலே |
| அரசினை | ராஜ்யத்தை | கமழ் | பரிமளிக்கப்பட்ட |
| அருளும் | அனுக்ரஹித்தவனும், | கங்கை | கங்கையையுடைய |
| அரி | ப்ராணதார்த்திஹரனாய் பூபாரஹரனுமான | | கண்டம் என்னும் கடிநகரே. |

திரை பொருதல்=அலைவீசல். இனி, திரையாகிற கைகளாலே தானே பகைவரோடு போர் செய்கின்ற கடலென்னலுமாம். வேந்து. தன் பக்தர்கள் அரசாளாமல் கஷ்டப்படும்போது தான் இங்ஙனம் வேந்தனாயிருப்பது அவனுக்கு இருப்பாகவே தோன்றுது அனுகூலித்தானென்றபடி. அரசனை. ஐ சாரியை. அரசனான துர்யோதனன் அழிந்து இவர்கள் முழுமையாக அரசாள வேண்டுமென வருளினானென்றதாம். ஒழுக்கு விட்டு. ஒழுக்கு=ஒழுகல், உயர்ச்சி. விடுதல்=தாங்குதல். யூபங்களின் உயர்ச்சியைத் தாங்கி யனுமதித்து. யூபங்கள் நாட்டப்பெற்று என்றதாம். இருகரைகளும் யூபங்களைச் சமந்து வேள்விப்புகையைப் புரைத்தன. அத்தகைய புகையால் சூழப்பெற்றது கங்கை எனப்பொருள். யூபம் ஒழுக்குவிட்டு யூபங்கள் ஓட எனக் கொண்டு கங்கையானது நெடியன யூபங்களை நீரிலே அடித்துப் போவதைச் சொன்னதாகவும் கொள்வர். கரைபுரை என்றதற்குக் கரைகள் ஒத்து என வுரை செய்வர். கரைபுரை என்றதைப் புரைகரை எனமாற்றி ஒன்றோடொன்று ஒத்துள்ள கரைகளிலே என்று பொருள் கருதி இங்ஙனம் கூறினர் போலும். வேறுவகையினு முரைக்கலாம்—யூபங்களின் ஒழுக்கு விட்டு உயர்ச்சியைக் கடந்து, இரண்டு கரை புரை=இரு கரைகள் போலிடை விடாமற்கிளர்ந்துள்ள வேள்விப் புகையால் சூழப்பெற்ற வென்றவாறு. (அ)

ஸ்ரீ வைகுண்டமென்ற திவ்ய நகருக்கொப்பாகப் பல திவ்ய தேசங்கள் வடதிசையிலுள்ளன வென்றங்குள்ள எம்பெருமான்களையும் அனுபவிக்க வாவல் கொண்டு அவர்களையும் ஒருங்கே திருக்கண்டங் கடிநகரிலே புருஷோத்தமனாகவே யனுபவித்தினியராகிறார்.—

9. வடதிசைமதுரைசாளக்கிராமம் வைகுந்தந்துவரையயோத்தி
இடமுடைவதரியிடவகையுடைய வெம்புருடோத்தமனிருக்கை
தடவரையதிரத் தரணிவிண்டிடியத் தலைப்பற்றிக்கரைமரஞ்சாடிக்
கடலினைக்கலங்கக் கடுத்திழிகங்கைக் கண்டமென்னுங்கடிநகரே. (399)

| | | | |
|---|---|---|---|
| வடதிசை | வடக்கு திக்கிலுள்ள | வரை | மலைகள் |
| மதுரை | ஸ்ரீமதுரையையும் | அதிர | நடுங்கும்படியும் |
| சாளக்ராமம் | சாளக்ராமக்ஷேத்ரத்தையும் | தரணி | பூமியானது |
| வைகுந்தம் | வைகுந்தமாகவேயிருந்த | விண்டு | பிளந்து |
| துவரை | த்வாரகையையும் | இடிய | உள்ளே விழும்படியும் |
| அயோத்தி | அயோத்திமாநகரையும் | கரை | கரைகளிலுள்ள |
| இடம் உடை | விசாலமான | மரம் | மரங்களை |
| வதரி | ஸ்ரீ பதரிகாச்ரமத்தையும் | தலை பற்றி | நுனிவரையில் ஆக்ரமித்து |
| இடவகை உடைய | (வீடு) இருப்பிடமாக வுடைய | சாடி | அடித்துக்கொண்டும் |
| எம் புருடோத்தமன் | எமது புருஷோத்தமன் | கடல் | ஸமுத்ரமும் |
| இருக்கை | இருக்கும் இடமானது— | கலங்க | குழம்பிவிடும்படியும் |
| தட | பெரிய | கடுத்து | வேகம்கொண்டு |
| | | இழி | ஓடிவருகிற |
| | | கங்கை | கங்கையையுடைய |
| | | | கண்டம் என்னும் கடிநகரே, |

வடதிசை யென்றது மதுரை யென்றதோடு போல சாளக்ராமம் முதலிய வற்றோடும் சேரும். ஆனால் தென்மதுரையை நீக்க மதுரைக்கு விசேஷண மாவது போல் சாளக்கிராமம் முதலானவற்றிற்கு விசேஷணமாகாது. அவை யெல்லாம் வடக்கில் தவிர வேறெங்கு மில்லை யல்லவோ. ஆயினும் மதுரை சாளக்கிராமம் முதலிய க்ஷேத்திரங்களைக் குறித்தது மற்றும் வடதிசையிலுள்ள க்ஷேத்ரங்களை யெல்லாம் கொள்வதற்காக வெனத் தோற்ற வடதிசை யென வருளினது. இல்லையேல், சேர்த்தியைக்கொண்டே மதுரை யென்பதும் வட மதுரையெனத் தெளியலாம். வைகுந்தம் துவரை. ஸ்ரீத்வாரகையானது மற்ற க்ஷேத்ரங்கள் போலன்றியே கண்ணனால் தானுள்ளவரையில் நடுக்கடலில் த்வீப மாக அமைக்கப்பட்டுப் பிறகு கடலிலேயே கரைந்துவிட்டதென்று அது நித்ய ஸூரிகளோடு நித்ய விபூதியிற் போல் பரிவாரத்துடன் அவன் மட்டு மெழுந் தருளி யிருக்க வானதால் அதை வைகுந்தமாக்கிச் சிறப்பாகக் கூறினதாம். அந்த த்வாரகையை வைகுந்தமென்றே கொண்டு இப்போதுள்ள த்வாரகையை த்வாரகை யெனத் தனியே அருளினதுமாம். இனி, வைகுந்தமென்று ஸ்ரீவை குண்ட மென்ற அப்ராக்ருத தேசத்தையே குறிப்பதுமாம். அப்போது இவை யெல்லாம் அதற்கு ஸமான மெனத் தெரிவித்ததாம். கடலினை. இங்கு இரண் டாம் வேற்றுமைக்குப் பொருளில்லை. ஆயினும் அது கடலுங்கூட என அதிச யத்தை குறிக்க வந்தது போலும். சாடி யென்பதைக் கடலினை யென்பதோடு சேர்த்து ஸமுத்ரத்தையு மடித்துள்ளே கடுத்துப் புகுந்ததெனவாவது கொள்க. (௯)

**10.** மூன்றெழுத்ததனை மூன்றெழுத்ததனால் மூன்றெழுத்தாக்கி மூன்றெழுத்தை
ஏன்றுகொண்டிருப்பார்க்கிரக்கநன்குடைய வெம்புருடோத்தமனிருக்கை
மூன்றடிநிமிர்த்து மூன்றினிற்றோன்றி மூன்றினில்மூன்றுருவானான்
கான்றடம்பொழில்சூழ்கங்கையின் கரைமேற்கண்டமென்னுங்கடிநகரே, (400)

| | | | |
|---|---|---|---|
| மூன்று எழுத்து அதனை | மூன்று வேதங்களுக்கு மூலமான மூன்று அக்ஷரங்கள் உள்ள, பல படி ப்ரஸித்தமான ப்ரணவத்தை | மூன்று எழுத்ததனால் | நிகமம், நிருக்தம், வ்யாகரணமென்ற மூன்று வகை அக்ஷர சாஸ்திரங்களாக வான இலக்கணத்தைக் கொண்டு |

| | |
|---|---|
| மூன்று எழுத்து ஆக்கி | சிறந்த பொருள்கொண்ட மூன்றெழுத்துள்ளதாக்கி |
| மூன்று எழுத்தை | அவ்வர்த்தங்களோடு அம் மூன்றக்ஷரங்களை |
| என்று கொண்டு | இசைந்து |
| இருப்பார்க்கு | ஸத்தை பெற்றவர்களிடத்திலே |
| இரக்கம் நன்கு உடை | பூர்ணவேதவித்துக்களிடத்திற்போல் தயையை நன்றாக உடைய |
| எம் புருடோத்தமன் | எமது புருஷோத்தமன் |
| இருக்கை | இருக்குமிடமானது — |
| மூன்று அடி | த்ரிவிக்ரமாவதாரத்திலே மூன்றடிகளை |
| நிமிர்த்து | சீர்படுத்தி |
| மூன்றினில் | பூமி, அந்தரிக்ஷம், ஸ்வர்கமென்ற மூவுலகங்களிலும் |
| தோன்றி | விளங்கி |
| மூன்றினில் | உலகளப்பதற்கும் உபேந்த்ரனுவதற்கும் பாதாளத்தில் மாவலி கண்டு களிப்பதற்குமாக |
| மூன்று உருவானன் | தகுந்தபடி மூன்று ஆகாரங்களைக்கொண்ட நாராயணனுடைய. |
| கான் | வனமான பதரிகாச்ரமாதிகளிலுள்ள |
| தட | விசாலமான |
| பொழில் | சோலைகளை |
| சூழ் | சூழ்ந்திழிகின்ற |

கங்கையின்கரைமேல் கண்டம் என்னும் கடிநகரே.

மூன்றெழுத்ததனை. அகரம், உகாம், மகரம் என்ற மூன்று அக்ஷரங்களும் மூன்று வ்யாஹ்ருதிகளைப் போலே மூன்று வேதங்களினின்று எடுக்கப்பட்டன வென்றது மனுஸ்ம்ருதி. இப்படிப்பட்ட ப்ரணவமானது வேதங்களுக்குக் காரணமானதென்று வேதார்த்த ஸங்க்ரஹத்திலே எம்பெருமானார் அருளிச் செய்தார். இதன் மேன்மையையும் அவ்வக்ஷரங்களுக்கு அநேகம் பொருள் உண்டென்பதையும் மாண்டுக்யம் அதர்வசிகை முதலான பல ப்ரமாணங்களிலே காண்க. மூன்றெழுத்ததனால். அதர்வநாராயணத்தில் அகாராதிகளான அக்ஷரங்கள் பிரித்தறிவிக்கப் பெற்றன. நிருக்தம் போலே வ்யாகரணமும் இவ்வக்ஷரங்களை வ்யுத்பாதனம் செய்ய ஆதரிக்கப்படும். மூன்றெழுத்ததனாலென்பதற்கு நிருக்தமென்ற மூன்றக்ஷரங்கள் கொண்டதினால் அதாவது மூன்றக்ஷரங்கள் கொண்ட நிருக்தபதத்தின் பொருளான ஓர் அங்கத்தினாலென்று முறை செய்வர்.

மூன்றுமடி முன் பாசுரங்களிலே கங்கைக்குச் சிறப்பைக் கூறுவதாகவே யமைந்தமையால் இங்குமது அன்னமாவதே பொருந்தும். ஆகையால் இந்த அடியை முன்னடியில் இருக்கை யென்ற பதத்திற்கும் முன்னே யுள்ள புருடோத்தம னென்ற பதத்தோடு இயைத்து மூன்றுருவானனை புருடோத்தமனிருக்குமிடமென வுரைப்பது ஸ்வரஸமாகாது. இந்த அடி கங்கையையே நேராகச் சொல்வதாகக் கொள்வதும் கூடவில்லை. மூன்றடி நிமிர்த்து = இமயமலை, தர்மதேவதை, அண்டகடாஹத்திற் கப்பாலுள்ள ஜலம் என்ற மூன்று காரணங்களால் தன்னை வளர்த்தி, மூன்றினில் தோன்றி = ஸ்வர்கம், ஆகாசம், பூமி யென்ற மூவுலகங்களிலே தோன்றி, மூன்றினில் மூன்றுரு = இமயமலையினில் பிந்துஸரஸ்ஸின் மேற்கிலும் கிழக்கிலும் பகீரதனோடு பாதாளத்திற்குக் கடல்வழியே போவதற்காகவும் மூன்று வகையாகப் பிரிந்த வுருவமுள்ள கங்கையென வெல்லாம் கூறக் கூடுமாகிலும் ஆனன் என்பது இணங்கவில்லை. இனி, ஆனன் உலக க்ஷேமத்திற்கு ஆன எம்பெருமானுடைய கான் என்றே, மூன்றினில் மூன்றுருவானன் என்பதை மட்டும் எம்பெருமான் விஷயமாக்கி ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்

ஹாரங்களிலே ப்ரம்ம விஷ்ணு ருத்ரர்களாகவும் ப்ரத்யும்நாநிருத்த ஸங்கர்ஷண ரூபியாகவு மானவனுடைய கான், நடுக்கடலிலும் நடுவுலகிலும் நாகப்ருஷ்டத்திலுமாக மூவுருவானனுடைய கான் என்றாற்போலவோ கொண்டாலும் கொள்க. கான் என்பது மணமாய் மணமுள்ள தடம் பொழில் எனவுரைப்பர். உருவானன் என்பதை மேலே சேர்ப்பதற்கேற்ப அவனுடைய கான் காடு எனவுரைத்தனம். பதரிநாராயணனுடைய தபோவனம் வாயிலாக ப்ரவஹித்து ஹரித்வாரத்திலே பூமியில் கங்கை யிழிவதால், இவ் விஷயமே முன் பாசுரத்திலே 'தடவரை யதிரத் தரணி விண்டிடிய' எனக் கூறப்பட்டதால் அவனுடைய காடு எனத் தகும்.

இங்கு முன்னடியில் ப்ரணவத்தை யருளிச்செய்திருப்பதால், இவ்வாழ்வாருக்கு, 'நாடுநகரமு நன்கறிய நமோநாராயணாய வென்றுநாமம் பல பரவி' என்றபடி திருவஷ்டாக்ஷரத்திலே நோக்கு அதிகமானபடியாலே மூன்றுமடியைத் தகுந்தாற்போல் கொள்வது கூடு மெனக்கருதி போலும் இங்கு வேறுவிதம் முன்னோர் உரைத்தது. அதாவது—மூன்றடிநிமிர்த்து, ப்ரணவத்தை திருவஷ்டாக்ஷரத்தில் அதன்மேலுள்ள விரு பதங்களோடு கூட்டி மூன்று பதமாக வளர்த்தி, மூன்றினில் = அம்மூன்று பதங்களிலும் தோன்றி = பொருள்கள் மூன்றையும் (அநந்ய சேஷத்வம், அநந்யசரணத்வம், அநந்யபோக்யத்வமாகிற மூன்றையும்) தோன்றுவித்து, மூன்றினில் = அப்பொருள்கள் மூன்று விஷயத்திலும் மூன்று உருவானன் = ப்ரதிஸம்பந்தியாகி சேஷித்வம், சரண்யத்வம், ப்ராப்யத்வ மென்ற மூன்றாகாரங்களுள்ளவனானன் என்றதாம். இதில் அடி என்பதற்குப் பதமென ப்ரதிபதமாகையாலே பதசப்தம் தானும் சப்தத்தைச் சொல்வதாலே அடி யென்பதற்கும் சொல் என்ற பொருளைக்கொண்டனர் போலும். தோன்றி என்ற தன்வினையைப் பிறவினையாக்கினர். ஆக இது ஸ்வரஸமாய்த் தோன்றும் பொருளன்று. ஆகிலும் இங்ஙனமுரைத்தாலும், உருவானனுடைய கானென மேலடியிற் சேர்ப்பது பொருந்தும். திருவஷ்டாக்ஷரத்திற்கு பதரீநாராயணனே ரிஷியானதால் அவனை யிங்ஙனம் கூறி அவனுடைய கானென்றால் சாலப் பொருத்தமுண்டு. ஸ்ரீபதரீநாராயண விஷயமாகவேயோ, வேறு விஷயமாகவோ ஸ்வரஸமாகப் பெறக்கூடிய பொருள் வேறு கூடுமாகிலும் கொள்க. (௧௦)

**11.** பொங்கொலிகங்கைக்கரைமலிகண்டத்துறை புருடோத்தமனடிமேல்
வெங்கலிநலியாவில்லிபுத்தூர்க்கோன் விட்டுசித்தன்விருப்புற்றுத்
தங்கியவன்பால்செய்தமிழ்மாலை தங்கியநாவுடையார்க்குக்
கங்கையிற்றிருமாற்கழலிணைக்கீழே குளித்திருந்தகணக்காமே. **(401)**

| | | | |
|---|---|---|---|
| வெம் | கொடிய | கங்கை | கங்காநதியின் |
| கலி | கலியினாலே | கரை | கரையிலே |
| நலியா | ஹிம்ஸிக்கப்படாத | மலி | சிறப்புவாய்ந்த |
| வில்லிபுத்தூர் | ஸ்ரீவில்லிபுத்தூருக்கு | கண்டத்து | திருக்கண்ட நகரிலே |
| கோன் | நிர்வாஹகரான | உறை | நித்யவாஸம் பண்ணும் |
| விட்டுசித்தன் | ஸ்ரீவிஷ்ணுசித்தர், | புருடோத்தமன் | ஸ்ரீ புருஷோத்தமனுடைய |
| பொங்கு | மிகவாகக்கிளர்ந்ததும் | | |
| ஒலி | கோஷிப்பதுமான | அடிமேல் | திருவடிகளில் |

| | | | |
|---|---|---|---|
| விருப்பு உற்று | ஆசையைப்பெற்று | திருமால் | ச்ரிய:பதியினுடைய |
| தங்கிய | நிலைபெற்ற | இணை | ஒன்றுக்கொன்று ஸமமான |
| அன்பால் | பக்தியால் | கழல் | திருவடிகளின் |
| செய் | செய்த | கீழே | கீழ்ப்புறத்திலே |
| தமிழ் மாலை | தமிழ் பாஷையிலுள்ள இப்பாசுரங்கள் | கங்கையில் | கங்காநதியிலே |
| தங்கிய | ஓதப்பட்டு நிலைத்த | குளித்து | ஸ்னானம் செய்து |
| நா | நாக்கை | இருந்த கணக்கு ஆம் | நித்யவாஸம் செய்வதற்குச் சமநிலையாம். |
| உடையார்க்கு | உடையவர்களுக்கு | | |

தனிக் கங்கையில் ஸ்னானாதிகள் செய்வதற்கே விசேஷபலன்களுள. தனியே எம்பெருமானடிக்கீழ் இருந்து கைங்கர்யம் செய்வதற்கு மங்களமே. ஏற்கனவே எம்பெருமான் திருவடியினின்று பெருகின கங்கை அவ்வெம்பெருமானடிக்கீழே திருக்கண்டத்திலே ஓடிவந்தெழ அப் புருஷோத்தமனுடைய ஸம்பந்தத்தாலே மிகச் சிறப்பு வாய்ந்துள்ளது. அத்தீர்த்தத்திலே குளித்து அவனுடைய திருவடிதொழுது நிலைத்திருந்தால் அதன் பலனை யென்னென்று கூறிமுடிப்பது. அத்தகைய பலனுண்டு அப்புருஷோத்தமனையும் அக் கங்கையையும் பற்றிப் பிறந்த இத்திருமொழியைக் கற்றவர்க்கென்றபடி. வெங்கலி நலியா, தங்கிய வன்பால் என்றதிலிருந்து திருக்கண்டத்தில் கலியின் கொடுமை கெடும்படி அத்திறமையுள்ள இவ்வாழ்வார் சிறிது காலம் தங்கியிருந்ததும், அங்ஙனம் தங்கினதாற் கிளர்ந்த அன்பாலே இத் திருமொழி பிறந்ததும் தோற்றும்.

ப்ரபந்தரக்ஷையில் பெ. தி. 4. 7. தங்கையை மூக்கும் உரை முற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

---

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

## பெரியாழ்வார் திருமொழி—4, 8

# மாதவத்தோன்

இப்படி அர்ச்சாவதாரங்களில் ஈடுபடும் ஆழ்வார் திருக்கண்டம் கடிநகர் முதலான வடதிசைத் திருப்பதிகளை யனுபவித்துத் திரும்பவும் தம் தென்தேசமெழுந்தருளி திருவரங்கத்தைக் கண்டபோதே எல்லாத் திவ்ய தேசங்களைக் காட்டிலும் அதற்குள்ள ஏற்றத்தை யாராய்ந்து அதனையே யனுபவித்தினியராகிறார். திருக்கண்டம் முதலான விடங்களிற் காணாத ஏற்றம், இது பகவான் எழுந்தருளியிருக்குமிடமானது மட்டு மன்றி, ஜ்ஞாநாநுஷ்டாநாதிகள் நிறைந்த வைதிக ச்ரோத்ரிய பரமைகாந்திகள் குழாம் குழாமாகக் குழுமியிருப்பதாம். இதனை முதலிரண்டு பாசுரங்களிலேயே வெளியிட்டருளினார். எம்பெருமா

னாலேயே ஆராதிக்கப்பெற்ற அர்ச்சை யெழுந்தருளி யிருப்பது மற்றோரேற்றம். இதனை, திருவாளன் திருப்பதிமேல் என்று கடைப்பாசுரத்திலே குறித்தருளினார். இனி கங்கையிற் புனிதமான காவிரி யென்னும் கனகநதி சூழ்வது, பிரமதேவனுடைய ஸத்யலோகத்திலிருந்தெழுந்தருளின அர்ச்சை விளங்கா நிற்பது என்பன போன்ற வேற்றங்களு மிங்கே கண்டவையாம்.

1. மாதவத்தோன்புத்திரன்போய் மறிகடல்வாய்மாண்டானை
ஓதுவித்ததக்கணையா வுருவுருவேகொடுத்தானூர்,
தோதவத்தித்தூய்மறையோர் துறைபடியத்துளும்பியெங்கும்
போதில்வைத்ததேன்சோரியும் புனலரங்கமென்பதுவே. (402)

| | | | |
|---|---|---|---|
| போய் | ப்ரபாஸ க்ஷேத்திரத்திற்குச் சென்று | தோத வத்தி | தோய்த்த வஸ்திரங்களை யுடையரும் |
| மறி | கீழ்மேலாக அலை மோதும் | தூய் | பரிசுத்தமானவருமான |
| கடல்வாய் | ஸமுத்ரத்திலே | மறையோர் | வேத வித்துக்கள் |
| மாண்டான் | இறந்த | துறை | துறைகளிலே |
| மா தவத் தோன் புத்தி ரன் ஐ | மஹா தபோநிஷ்டரான ஸாந்தீபினியின் புத்திரனை | படிய | அமர்ந்து நீராடுவதால் |
| | | துளும்பி | எழும்பி (ஆகவே) |
| | | எங்கும் | எல்லா விடங்களிலும் |
| உரு உரு ஏ | இறக்கும் போதிருந்த உருவாகிய உருவுடனேயே | போதில் | பூக்களில் |
| | | வைத்த | அமையப்பெற்ற |
| ஓது வித்த தக்கணை ஆ | வித்யைகளைத் தனக்கு ஓதுவித்ததன் பலனான குரு தக்ஷிணையாக | தேன் | தேனை |
| | | சோரியும் | பொழியும் |
| | | புனல் | (காவிரி) ப்ரவாஹத்தை யுடைய |
| கொடுத்தான் ஊர் | அளித்த கண்ணபிரான் எழுந்தருளி யிருக்குமிடமானது— | அரங்கம் என்பது ஏ | திருவரங்கமென்னும் திருப்பதியேயாம். |

கண்ணபிரான் ஸாந்தீபினி முனிவரிடம் வேதம் முதலிய வித்யைகளைக் கற்றபிறகு குருதக்ஷிணை யளிக்கக் கருதினபோது, அம்முனிவர் தம் பத்னியின் ப்ரேரணையாலே, கண்ணன் எல்லாமளிக்கு மிறைவனென் றறிந்தவராகையாலே, கடலில் மாண்ட தம் புத்ரனையே மீண்டும் பெற வாசைப்பட, அங்ஙனமே கண்ணனும் ப்ரபாஸக்ஷேத்ரம் சென்று ஸமுத்ரராஜனைக் கேட்க, அவன் ஸமுத்ரத்தி லிருந்த பஞ்சஜந னென்னும் அஸுரன் விழுங்கினதாக விண்ணப்பிக்க, அசுரனைக் கொன்று அவன் வயிற்றில் காணாமே யமபுரம் சென்று யமனால் கொடுக்கப்பெற்று அப்புத்திரனை மீட்டளித்தான் (ஸ்ரீபாகவதம் 10–45) என்ற வரலாறு முன்னடிகளில் கூறப்பெற்றது.

போய். எங்கும் போகாமே பிறப்பகத்தே மாண்டாரை மீட்டதும், பிறவாமல் கர்ப்பத்திலே உயிரிழக்க விருந்தவனைக் காத்ததும் மேலே கூறப்படும். இங்கே வெளியே சென்றபோது மாண்டவனை மீட்டது கூறப்படுகிறதென்க. இனி, புத்திரன்போய் என்பதற்கு அப்படிப்பட்டவரின் புத்திரனாகியும் எனவு முரையாம். எனவே 'ஸாந்தீபினி' என்னாமே மாதவத்தோன் என்றது. அன்றி, தென்தேசம் பரமைகாந்திகளுக்கிடமானது போல் வடதேசமும் பெருமான் பிறக்கவும் கற்கவும் கூடும் மாபெருந்தவத்தோருக்கிடமான தென்று கொண்டாடினதுமாம். மறி. அலை மோதி மாண்டானென்பதை இது குறிக்கும்.

உருவுருவே. வேறு உருவில் கொடுத்தால் முன் புத்ரனைக் கொடுத்ததாகப் பெற்றோரும் பிறரும் நினையார். அவ்வண்ணமான வுருவிலே வேறு ஜீவனைக் கொடுத்தால் அதை மாதவத்தோனானபடியாலே முனிவனறிந்து ப்ரீதி பெறான். ஆகவே மாண்டவனையே அவ்வுருவிலேயே கொடுத்தது.

தோதவத்தி. யௌதவஸ்த்ர என்ற வடமொழித் தொடரா மிது. தோத என்பது மட்டும் வடமொழிச்சிதைவென்னலுமாம். தூய். காவிரியில் நீராட்டத்தாலே இவர்கள் தூய்மை பெருவதில்லை. ஏற்கனவே பரிசுத்தரான இவர்களால் அதற்கே தூய்மை. மறையோருக்குத் தூய்மையாவது மறையில் சொன்ன காம்யங்களை விட்டு ஸாரதமத்திலே நிஷ்டை பெற்றிருக்கை. இவ்வளவால் நீராடுவதுமட்டு மின்றி காவிரிக்கரையிலே சுத்தமான வஸ்த்ரங்களைத் தரித்து நித்ய கர்மாநுஷ்டானம் செய்வது சொன்னதாகும்.

போதில் வைத்த. புனலின் சிறப்பாலே பூக்கள் பருத்து வளர்ந்து நிரம்பத் தேன் பெறுகின்றன. ஆக போதில் தேனை வைத்தது புனலேயாம். மாண்ட புத்திரனையும் மீண்டளிக்கும் வகையில் மாதவத்தோனிடம் மனம் செலுத்திய கண்ணன் மாதவத்தோர் மன்னுமிடத்தை விட்டு வேறிடத்திலிருப்பானோ? மஹா பாகவதரிருக்குமிடத்தை தானே ப்ரமாணங்கள் பெரிய புண்ய க்ஷேத்ரங்களெல்லா மிதென்கிறன. ஆகத் திருவரங்கமே பெருமானூரென்றபடி. (க)

2. பிறப்பகத்தே மாண்டொழிந்த பிள்ளைகளை நால்வரையும்
இறைப்பொழுதில் கொணர்ந்து கொடுத்தொருப்படுத்த வுறைப்பனூர்
மறைப்பெருந்தீவளர்த்திருப்பார் வருவிருந்தையளித்திருப்பார்
சிறப்புடையமறையவர்வாழ் திருவரங்கமென்பதுவே. (403)

| | | | |
|---|---|---|---|
| பிறப்பு அகத்து ஏ | ஸூதிக்ருஹத்திலேயே | மறை | வேதத்தில் ஓதப்பட்ட |
| மாண்டு ஒழிந்த | செத்துப்போன | பெரு தீ | வைதிக கர்மங்கள் செய்யத் தக்க அக்னிகளை |
| நால்வரை | நான்கு | வளர்த்து இருப்பார் | ஹோமாதிகளை நன்கு செய்து வளர்ப்பாரும், |
| பிள்ளைகளை உம் | (வைதிக) புத்திரர்களையும் | வரு விருந்தை | அளிக்கநேர்ந்த விருந்தையெல்லாம் |
| இறை பொழுதில் | நுட்பமான காலத்திற்குள்ளேயே | அளித்திருப்பார் | செய்தே நிலைபெறுபவரும் |
| கொணர்ந்து | பரமபதத்தினின்று கொண்டுவந்து | சிறப்பு உடைய | பாரமைகாந்த்யம் பொலிந்த |
| கொடுத்து | வைதிகனிடம் சேர்த்து | மறையவர் | ச்ரோத்ரியர்களுமானவர்கள் |
| ஒருப்படுத்த | ஒருமனப்பட்டிருக்கச் செய்த | வாழ் | வாழ்ந்து வரும் |
| உறைப்பன் | கார்யத்தில் அழுத்தமுள்ள அல்லது க்லேசத்தைப் பொறுத கண்ணனுடைய | திருவரங்கம் என்பது ஏ | திருவரங்கம் என்ற திருப்பதியே யாம். |
| ஊர் | இருப்பிடமானது— | | |

வைதிக புத்திரர்களைக் கொணர்ந்த வரலாறு ஸ்ரீபாகவதத்திலே (10-89) உள்ளது, கீழ் உய்ய வுலகில் (1–6–7)-ல் விவரிக்கப்பட்டிருப்பது காண்க. உறைப்பன். வைதிகன் சொன்ன தூஷணைகளையும், அவன் துயரத்தையும், அவற்றை நீக்கிக் காக்க வந்த அர்ஜுநன் தன் பிரதிஜ்ஞைப்படி செய்யமாட்

டாமே அக்னிப்ரவேசம் செய்ய நினைக்க அந்த க்லேசத்தையும் பொருக்காதவன். முன்பாசுரத்திலே ச்ரோத்ரிய பரமைகாந்திகளுடைய ஸ்நாந ஸந்த்யா கர்மங்களைக் கூறி, மேலுள்ள ஆன்னிகத்தை இங்கே குறித்தருளினார். மறை இத்யாதியால் பகவதாராதந வகைகளும் வரு இத்யாதியால் பாகவதாராதனங்களும், மேலே ஸ்வாத்யாய காலத்திற் செய்வது போன்றனவும் பணிக்கப் பெற்றன. விருந்தை யென்னுமே வருவிருந்தை என்றது விருந்து செய்ய நேர்ந்தவற்றில் ஒன்றையும் விடாமற் செய்ததை விளக்கவாம். ஆகவே இப்பதத்திற்கு, வந்த விருந்தினருக்கெனப் பொருளை ஏற்றவேண்டா. இப்பாசுரத்திலும் மஹா பாகவதர் வாழ்ந்திருப்பதாலே திருவரங்கத்திற்கேற்ற மறிவிக்கப்பெற்றது.

**3.** மருமகன்றன் சந்ததியையுயிர் மீட்டுமைத்துனன்மார்
உருமகத்தேவீழாமே குருமுகமாய்க்காத்தானூர்
திருமுகமாய்ச்செங்கமலம் திருநிறமாய்க்கருங்குவளை
பொருமுகமாய் நின்றலரும் புனலரங்கமென்பதுவே. **(404)**

| | | | |
|---|---|---|---|
| மருமகன் தன் | தங்கையின் புதல்வனான அபிமன்யுவினுடைய | ஊர் | இருப்பிடமானது— |
| சந்ததியை | சந்தானமான பரிக்ஷித்தை | செம் கமலம் | செந்தாமரைப் பூக்கள் |
| உயிர்மீட்டு | அச்வத்தாமனின் அஸ்திரத்தால் அழியாதபடி பிழைக்கச் செய்து, | திருமுகமாய் | எம்பெருமானின் திருமுகமாகவும் |
| மைத்துனன்மார் | அத்தையின் மகன்களான பாண்டவரை | கரு குவளை | நீலோத்பலங்கள் |
| உரு மகத்தே | பெரிய பலியிலே | திருநிறமாய் | அவனது திருமேனி நிறமாகவும் |
| வீழாமே | விழுந்தழியாதபடி | பொரு முகமாய் நின்று | பொருந்தும் வகை பெற்று |
| குரு முகமாய் | —வ்யாஸபகவான் மூலமாக | அலரும் | மலர இடமான |
| காத்தான் | ரக்ஷித்த கண்ணபிரானுடைய | புனல் | காவிரியாற்றையுடைய |
| | | அரங்கம் என்பது ஏ | திருவரங்க மென்ற திருப்பதியே யாம், |

அச்வத்தாமாவானவன் அபாண்டவாஸ்த்ரப்ரயோகம் செய்தபோது அர்ஜுனன் கண்ணபிரானின் பிரேரணையால் பதிலஸ்திரம் ப்ரயோகித்துவிட்டபோது, இதனால் பன்னிரண்டு வருஷ க்ஷாமம் வந்து ப்ரஜைகள் பாதிக்கப்படுவரென்று வ்யாஸாதிகள் சொல்லவே அர்ஜுநன் அஸ்த்ரத்தை உபஸம்ஹாரம் செய்ய விசைய, வ்யாஸர் அச்வத்தாமாவிற்கும் அவனது அஸ்த்ரத்தை உபஸம்ஹரிக்கவும் அவன் தலையில் இருந்த சிறந்த மணியைப் பாண்டவரிடம் அளித்துவிடும்படியும் உபதேசம் செய்தார். அச்வத்தாமா அதற்கு இணங்கினவனும் இணங்காதவனுமாகி பாண்டவரை விட்டுப் பாண்டவரின் சந்ததியைக் குறித்து அவ்வஸ்த்ரத்தை ஏவினான். ஸுபத்ரையின் நாட்டுப் பெண்ணான உத்தரையின் கர்ப்பத்தை மட்டும் விட்டுவிடும்படி கண்ணன் கேட்டுக்கொண்டும் அச்வத்தாமா அதை இசையவில்லை. ஆகில் நீ அஸ்த்ரத்தால் அழித்தாலும் நான் பிழைப்பித்துக்கொள்ளுகிறேன் என ப்ரதிஜ்ஞை செய்தார் கண்ணன். இவ்வரலாறு மஹாபாரதத்திலே ஸௌப்திக பர்வாவில் (13-16) விவரிக்கப்பட்டுள்ளது. அங்ஙனமே மருமகன்தன் சந்ததியை உயிர் மீட்ட வரலாறு அநுகீதாபர்வத்திலே விஸ்தாரமாயுள்ளது. குருமுகமாய். வ்யாஸரின் உபதேசம் இங்கே கருதப்பட்டது. சந்ததியை உயிர் மீட்க ஸங்கல்

பித்தபோது பாண்டவரைக் காத்தது கூடும்படி ஒருபடி உரையிட்டோம். இனி, அவர்கள் செய்த அப்பெரிய யுத்தமகத்திலே அவர்களுக்கு ஆதிமுதல் அநேக ஸந்தர்ப்பங்களில் தானே குருவாகி நின்று ஹிதோபதேசம் செய்ததும் கருதப்பெற்றதாம். உருமகத்தே என்பதை உருமு அகம் உருமகம் எனப் பிரித்து, பயமாகிற பள்ளம் அதாவது நாம் பிழைப்பது எப்படியென்ற பய மாகிற படுகுழி, அதில் பாண்டவர்கள் விழாதபடி வ்யாஸோபதேச மூலமாய் அச்வத்தாமாஸ்த்ரத்தினின்று காத்தா னெனவு முரையாம். மைத்துனன்மார் உருவானது மகத்தில் வீழாமே எனவு முரைப்பர். பொருமுகமாய். போட்டி யிட்டுக்கொண்டென்னவுமாம். (௩)

4. கூன்தொழுத்தை சிதகுரைப்பக் கொடியவள்வாய்க்கடிய சொற்கேட்டு
ஈன்றெடுத்ததாயரையு மிராச்சியமுமாங்கொழிய,
கான்தொடுத்த நெறிபோகிக் கண்டகரைக்களைந்தானூர்
தேன்தொடுத்தமலர்ச் சோலைத் திருவரங்கமென்பதுவே. **(405)**

| | | | |
|---|---|---|---|
| கூன் தொழுத்தை | கூனியான (விசவியான) அடிமைக்காரியானவள் | ஆங்கு ஒழிய | அங்கே விலகும்படி |
| சிதகு | (ராமாபிஷேகத்திலுள்ள) குற்றங்களை | கான் | காட்டிற்கு |
| உரைப்ப | பன்னிச் சொன்னதின் பேரில் | தொடுத்த | உருவாக்கப்பட்ட |
| கொடியவள் | க்ரூரையாகவான கைகேயியின் | நெறி | வழியிலே |
| வாய் | வாயிற் பிறந்த | போகி | சென்று |
| கடிய | க்ரூரமான | கண்டகரை | துஷ்டரை |
| சொல் | சொல்லை | களைந்தான் | ஸம்ஹரித்த ஸ்ரீராமபிரானின் |
| கேட்டு | இசைந்து | ஊர் | இருப்பிடமானது— |
| ஈன்று எடுத்த | பெற்று வளர்த்த | தேன் | தேனை |
| தாயர் உம் | தாயான கௌஸல்யையும் | தொடுத்த | மேன்மேல் சேர்க்கும் |
| இராச்சியம் உம் | அரசன் இசைந்த ராஜ்யமும் | மலர் | புஷ்பங்களையுடைய |
| | | சோலை | வனங்களையுடைய |
| | | திருவரங்கம் என்பது ஏ | திருவரங்கத் திருப்பதியேயாம். |

தாயரை. ஐ-அசை. கான் கொடுத்த நெறி. ஊரிலிருந்து கானகத் திற்குப் போக உருவாக்கின வழி; கானகமானது தன் நடுவே மரஞ்செடி கொடிகளின் இடையிலே இயற்கையில் அமைத்த பல வளைவுகள் கொண்ட வழி; காட்டிலே தடையான மரங்களை வெட்டித் தானும் லக்ஷ்மணனும் உருவாக்கின வழி. காடுகள் அடர்ந்துள்ள வழி என்னவுமாம். கண்ட கரைக் களைவதற்குக் கானகம் முன் சென்றவன், கண்டுகளிக்க விருக்கும் பாகவதருடன் கலந்திருக்கத் தேன் தொடுத்த மலர்ச் சோலைத் திருவரங்கக் கானில் கண்வளர்ந்தான். (௪)

*மீண்டும் இராமவிருத்தாந்தத்தை யருளிச் செய்கிறார்—*

5. பெருவரங்களவைபற்றிப் பிழக்குடைய இராவணனை
உருவரங்கப்பொருதழித்திவ்வுலகினைக்கண்பெறுத்தானூர்
குரவரும்பக்கோங்கலரக் குயில்கூவும் குளிர்பொழில்சூழ்
திருவரங்கமென்பதுவே யென்திருமால் சேர்விடமே. **(406)**

| | |
|---|---|
| பெரு வரங்கள் அவை பற்றி | தேவாதிகளாலும் கொல்ல வியலாதபடி அத்தகைய வரங்களைக் கொண்டு |
| பிழக்கு உடைய | பிழை செய்யும் |
| இராவணனை | லங்கேச்வரனை, |
| உரு | அவனது பரிஜனங்களும் பத்துத்தலைகளுமான உருவானது |
| அரங்க | அழியும்படி |
| பொருது | போர் செய்து |
| அழித்து | கொன்று |
| இ உலகினை | இந்த வுலகையும் |
| கண் | அறிவை |
| பெறுத்தான் | பெறுவித்த பிரானுடைய |
| ஊர் | திருப்பதியானது— |
| என் | எனது |

| | |
|---|---|
| திரு | செல்வப் பெண்ணான ஆண்டாளிடம் |
| மால் | மோஹித்த பிரானின் |
| சேர்வு இடம் | வாஸஸ்தான மாய், |
| குருவு | குருவ மரங்கள் |
| அரும்ப | அரும்பு விட |
| கோங்கு | கோங்கு மரங்கள் |
| அலர | மலர்களை யிட |
| குயில் | குயில் பக்ஷிகள் |
| கூவும் | களித்துக் கூவுமிடமான |
| குளிர் | குளிர்ந்த |
| பொழில் | சோலைகளால் |
| சூழ் | சூழப்பட்ட |
| திருவரங்கம் என்பது ஏ | திருவரங்க மென்பதேயாம். |

கண் பேறுத்தான். எவ்வித வரங்களைப் பெற்று எவ்வளவு உயர்வி லிருந்தாலும் துஷ்டன் கடைசியில் கெடுவானென்றும் ஸநாதநதர்மநெறி தவறாமல் எல்லோரும் நடக்கவேண்டு மென்றும் அறிவைப் பெறுவித்தான். அன்றி, இப்படிப்பட்ட இராவணனைக் கொன்ற விவன் ஸாக்ஷாத் ஸ்ரீ மஹா விஷ்ணு, ஸீதை பெரிய பிராட்டியார் என வறிவைத் தன் செயலாலும் ப்ரம மாதிகளின் ஸ்தோத்திரத்தாலும் விளங்கவைத்தானென்றதுமாம்.

என்திருமால் சேர்விடமே என்று தமக்குத் திருவரங்கத்திலே பிறந்த ஈடுபாட்டுக்கு ஒரு காரணத்தைச் சிறப்பித்ததாம். (ரு)

6. கீழுலகிலசுரர்களைக்கிழங்கிருந்து கிளராமே
ஆழிவிடுத் தவருடையகருவழித்தவழிப்பனூர்
தாழைமடலூடுரிஞ்சித்தவளவண்ணப்பொடியணிந்து
யாழினிசை வண்டினங்களாளம்வைக்குமரங்கமே. (407)

| | |
|---|---|
| கிழங்கு | வேர்க்கிழங்கு போன்ற பாகம் |
| இருந்து | மிகுந்து நின்று |
| கிளராமே | மீண்டும் முளையாதபடி |
| கீழ் உலகில் | பாதாள லோகத்திலுள்ள |
| அசுரர்களை | அசுர ஜாதியைக் குறித்து |
| ஆழி | திருவாழியை |
| விடுத்து | ப்ரயோகித்து |
| அவருடைய | அவ்வஸுரர்களுடைய |
| கரு | கர்ப்பத்தையும் |
| அழித்த | அழித்தருளின |
| அழிப்பன் | ஸம்ஹார கர்த்தாவான ஹரியினுடைய |
| ஊர் | திருப்பதியானது, |

| | |
|---|---|
| தாழை மடல் ஊடு | தாழம்பூக்களின் நடுவே |
| உரிஞ்சி | தேய்த்துக்கொண்டு நடமாடி |
| தவளம் வண்ணம் பொடி | வெண்ணிறமான அதன் பொடிகளை |
| அணிந்து | உடலடங்கலும் தரித்து |
| யாழின் | வீணையின் |
| இசை | பாட்டிசையை யுடைய |
| வண்டு இனங்கள் | பலவகை வண்டின் கூட்டங்கள் |
| ஆளம் வைக்கும் | ஆலாபனை செய்யும் |
| அரங்கம் ஏ | ஸ்ரீரங்கமே யாம். |

இப்பாசுரம் தேவாஸுரயுத்தம் முதலான ஸந்தர்ப்பங்களிலே உபேந்த்ரன் முதலான அவதாரங்களைக்கொண்டு அசுரரை யழித்ததைச் சொல்லுகிறது. வண்டினங்கள். சிறப்புடைய மறையவரோடொத்து திர்யக்கான வண்டுகளும்

எம்பெருமானிடம் ஈடுபட்டிருக்குமிடம் திருவரங்கமென்றதாம். அன்றி, அவன் மாசின்மலரடிக்கீழ் எம்மைச் சேர்விக்கும் வண்டுகளான மஹான்களைச் சொன்னதுமாம். (௬)

7. கொழுப்புடைய செழுங்குருதி கொழித்திழிந்துகுமிழ்த்தெறிய
பிழக்குடையவசுரர்களைப் பிணம்படுத்தபெருமானூர்
தழுப்பரியசந்தனங்கள் தடவரைவாயீர்த்துக்கொண்டு
தெழிப்புடையகாவிரிவந்தடிதொழும் சீரரங்கமே. (408)

| | |
|---|---|
| பிழக்கு | பிழைகளைச் செய்வதை |
| உடைய | இயல்பாகக்கொண்ட |
| அசுரர்களை | அசுரஜாதியை, |
| கொழுப்பு உடைய | மதர்ப்பும் மாம்ஸமும் சேர்ந்த |
| செழு குருதி | செழுமை பொருந்திய ரக்தமானது |
| கொழித்து | மேன்மேல் எழுந்து |
| இழிந்து | கீழேப்ரவஹித்து |
| குமிழ்த்து எறிய | குமிழ்களை யுண்டாக்கி எறியும்படி |
| பிணம் படுத்த | பிணமாகத் தள்ளின |
| பெருமான் | எம்பெருமானுடைய |
| ஊர் | கோயிலானது, |
| தழுப்பு அரிய | தழுவுவதற்கு முடியாத (மிகப் பருத்த) |
| சந்தனங்கள் | சந்தன மரங்களை |
| தட வரை வாய் | விசாலமான மலைகளிலிருந்து |
| ஈர்த்துக் கொண்டு | பெயர்த்து இழுத்துக் கொண்டு |
| தெழிப்பு உடைய | இரைச்சலை யுடையதான |
| காவிரி | காவேரி நதியானது |
| வந்து | கிட்டி வந்து |
| அடி தொழும் | திருவடியை வணங்குமிடமான |
| சீர் | கல்யாண குணங்கள் நிறைந்த |
| அரங்கம் ஏ | ஸ்ரீரங்கமே யாம். |

தழுப்பரிய சந்தன மரங்களை மலைகளிலிருந்து ஈர்த்து இரைந்துவரும் காவிரிக்கு ஒப்பாகவிருக்கும், கொழுப்புகளைத்தள்ளிக்கொண்டு குமிழெறிந்து அசுரர்களின் உடல்களினின்று கிளர்ந்திழியும் ரக்தப்ரவாஹமென்க. (௭)

8. வல்லெயிற்றுக்கேழலுமாய் வாளெயிற்றுச்சீயமுமாய்
எல்லையில்லாத்தரணியையு மவுணனையுமிடந்தானூர்,
எல்லியம்போதிருஞ்சிறைவண்டெம்பெருமான்குணம்பாடி
மல்லிகைவெண்சங்கூதும் மதிளரங்கமென்பதுவே. (409)

| | |
|---|---|
| வல் எயிறு | வல்லமையுள்ள கொம்பையுடைய |
| கேழல் ஆய் உம் | ஆதிவராஹமாகவும் |
| வாள் எயிறு | ஒளிவீசும் பற்களையுடைய |
| சீயம் ஆய் உம் | சிங்கமாகவும் அவதரித்த (அடைவாக) |
| எல்லை இல்லா | வெகு விசாலமான |
| தரணியை உம் | பூமியையும் |
| அவுணனை உம் | ஹிரண்யாசுரனையும் |
| இடந்தான் | கீண்ட பெருமானுடைய |
| ஊர் | திருப்பதியானது— |
| எல்லி போது | இராத்திரி காலங்களில் |
| இரு சிறை | திடமான சிறகுகளையுடைய |
| வண்டு | வண்டுகள் |
| எம்பெருமான் | பகவானுடைய |
| குணம் | குணங்களை |
| பாடி | கானத்துடன் சொல்லி |
| மல்லிகை | மல்லிகைப் புஷ்பங்களாகிற |
| வெண் சங்கு | வெண்மையான சங்குகளை |
| ஊதும் | ஊத இடமாய் |
| மதிள் | ப்ராகாரங்களையுடைய |
| அரங்கம் என்பது ஏ | ஸ்ரீரங்கமே யாம். |

ஸம்ஹரிக்கப்பட்ட ஹிரண்யாக்ஷஹிரண்யகசிபுகளின் சேர்த்தியைக் கொண்டு ஸ்ரீ வராஹநரஸிம்ஹாவதாரங்களை யிங்கே சேர்த்தருளினது.

தரணியையிடந்தா னென்றபோது அண்டபித்தியினின்று பூமியைப் பெயர்த்தெடுத்தானெனவும், அவுணனை யிடந்தானென்றபோது ஹிரண்யாசுரனைக் கிழித்தானெனவும் பொருளைக்கொள்க. எல்லையில்லாத் தரணியைப் பெயர்த்தெடுக்க எயிற்றுக்கு வலிமை யதிகம் வேண்டுமாகையாலே வல்லெயிற்று என்றார். அதுபோல் சியத்தின் எயிறு ஹிரண்யாஸுரனைக் கிழிப்பதற்கு உபயோகிக்கப்படவில்லை யாகையாலே அது அழுக்கற்று ஒளிவீசி விளங்கிற்றென விளக்க வாளெயிற்று என வருளினார். ஆகில் அவனைக் கிழிக்க உபயோகிக்கப்பெற்ற உகிரைச் சொல்லாமே எயிற்றை எதற்குச் சொல்வதெனில், இது 'ഹിരണ്യദംഷ്ട്രോ ബഭൌ സ നഖശ്രീഃ' என்கிற ச்ருதியிற் போலாகக் கடவது. அங்கு 'മശകാർത്ഥോ ധൂമഃ (கொசுக்காகப்புகை) என்றாற்போலே ஹிரண்யனுக்காக வான பற்களையுடைய பெருமானென்ற பொருள் பெரியோர் அருளினதாம். அதன் கருத்து யாதெனில், வரபலம் பெற்றிருந்த அவுணனை வேறு ஆயுதங்களைக் கொண்டு வெல்லமுடியாதென்று தன் திருமேனியிலுள்ள எயிறு உகிர் முதலானவற்றை அதற்குத் தக்கபடி யமைத்துக்கொண்டான். உகிர்களாலேயே இஷ்டம் பூர்த்தியானதால் பற்களுக்கு வேலை யிராமற்போயிற்று. ஆகிலும் அவை யதற்காம்படி அமைந்திருந்தன. அவுணனும் அப்பற்களைப் பார்த்தமாத்திரத்திலே பயந்தொழிந்தானென விதனால் தெளிவித்தபடி. ஆக எயிறு கார்யம் செய்யாவிடினும் ஸ்வரூப யோக்யதையை நன்கு பெற்றுள்ளதென்க.

எல்லியம். அம்=அசைச்சொல். அல்லது எல்லி=இரவைச்சேர்ந்த அம்=அழகியபோது. இருஞ்சிறை என்று நரகத்திற்கும் பெயர். அதுபோல் கடினமான சிறையிலகப்பட்ட எனப்பொருள்கொண்டால், நரகத்தில் பாதைப்பட்டவர்கள், இனி நாம் நாராயணநாமகுணகீர்த்தனம் செய்து மீளவேண்டுமென நினைப்பதுபோல் வண்டுகள் மலர்ந்து குவிந்த புஷ்பங்களினுள் அகப்பட்டு மீண்டும் மலர்ந்தபோது பாடிப்பறந்து மல்லிகைப் பூக்களிலும் ரீங்காரம் செய்தபோது அவை எம்பெருமானின் குணம்பாடி வெண்சங்கு ஊதினவண்ணமேயிருந்ததென்னலாம். இருஞ்சிறையில் அகப்பட்டிருந்தபோது வண்டுகள் பாடினதாகக் கொள்வதில் ப்ரயாஸமுண்டு. ஏனெனில், வண்டுகள் திரியும்போதே சப்தம் உண்டாகு மல்லது அசையாமலிருந்தபோதன்று. வண்டுகள் வாயால் சப்திப்பதில்லை. ஸஞ்சார காலத்தில் அவற்றின் விரித்த சிறகுகளில் காற்றுப் புக அவை பாடுகின்றனபோல் தோன்றுமெனவும் கூறுவதுண்டு. அதற்கேற்றவாறு இருஞ்சிறை யென்பதற்குத் திடமான சிறகு உடைய எனப் பொருளே தகும். இப்படியுள்ள வண்டுகள் எம்பெருமான்குணம் பாடுவதாகக் கொள்வதெங்ஙனமென்னில், கஜேந்திராழ்வானைப் போலே பூர்வஜந்மத்திலே எப்பெருமானிடம் ஈடுபட்ட மஹான்களில் சிலர் ஒரு காரணமாக அரங்கத்தில் வண்டுகளாகப் பிறந்தால் பூர்வவாஸனையாலே எம்பெருமானுடைய குணங்களைப் பாட முயல்வதும், அதற்குத் தக்கவாறு உடலமைப்பு இல்லையாகையாலே அக்ஷரங்களை உச்சரிக்க வியலாதபோதும் மனத்தில் அப்பாட்டுக்களை நினைத்து அவற்றிற்குத் தக்கவாறு தாங்கள் உலாவிக்கொண்டு

பாட்டை யமைப்பதும், வீணை, வேய்ங்குழல் முதலான வாத்யங்களை வாசிக்கும் போது பிறர், இப்போது இந்தப்பாட்டு பாடப்படுகிறதென்று அறியுமாபோலே, இவைகள் கருதின பாட்டை பிறர் பராமரிப்பதும் கூடும். அன்றி, சாமான்ய வண்டுகளின் ஏதேனுமொரு சப்தமானாலும் இனிய அவ்வோசைக்குத் தக்கவாறு சொற்களை யமைத்துப் பாட்டுக்களைக் கட்டி யனுபவிக்கும் சக்தி வாய்ந்த, ஆழ்வாரைப் போன்ற மஹாகவிகளான பக்தர்களு முளரென்க. ஸப்தப்ராகாரங்களைச் சிறப்பாகவுள்ளதாகையாலே மதிளரங்க மெனப்படுகிறது. (அ)

**9.** குன்றாடுகொழுமுகில்போல் குவளைகள்போல் குரைகடல்போல்
நின்றாடுகணமயில்போல் நிறமுடையநெடுமாலூர்,
குன்றூடுபொழில்நுழைந்து கொடியிடையார்முலையணவி
மன்றூடுதென்றலுலாம் மதிளரங்கமென்பதுவே. **(410)**

| | |
|---|---|
| குன்று | மலைகளிலே |
| ஆடு | ஸஞ்சரிக்கும் |
| கொழு | கொழுத்த, நீர் கொண்ட |
| முகில் போல் | மேகத்தைப் போலும், |
| குவளைகள் போல் | கருங்குவளைகளைப் போலவும், |
| குரை | ஒலிக்கின்ற |
| கடல்போல் | ஸமுத்ரத்தைப்போலவும், |
| நின்று ஆடும் | (மேகத்தைக் கண்டு) நின்று தோகையைவிரித்து) ஆடும் |
| மயில் கணம் போல் | மயில்களின் கூட்டம் போலவும் |
| நிறம் உடைய | கரிய நிறம் கொண்ட |
| நெடு மால் | ஆச்ரித வ்யாமோஹம் அதிகம் உடைய பெருமானின் |
| ஊர் | திருப்பதியானது, |
| குன்று ஊடு | மலைகளின் நடுவிலே |
| பொழில் | சோலைகளிலே |
| நுழைந்து | புகுந்து (பரிமளத்தை பரித்துக்கொண்டு) |
| மன்று ஊடு | நாற்சந்தி நடுவிலே |
| கொடி இடை யார் | கொடி போன்ற இடையுடைய ஸ்த்ரீகளின் |
| முலை | ஸ்தனங்களை |
| அணவி | கிட்டி |
| தென்றல் | தென்றல் காற்று |
| உலாம் | உலாவுமிடமாய் |
| மதிள் | மதிள்கள் நிறைந்த |
| அரங்கம் என்பதுவே | ஸ்ரீரங்கமே யாம். |

எம்பெருமான் ஆச்ரிதரிடத்தில் அதிக வ்யாமோஹ முடையவனானதாலே முகிலைப் போல் தாபத்தைப் போக்கி அம்ருதத்தை வர்ஷிப்பவன்; குவளைகளைப் போல் மேன்மை மிகுந்தவன்; குரைகடல்போல் ஆச்ரிதரக்ஷணத்திலே ஆரவாரிப்பவன்; கோபிகாதிகளைப் போன்ற ப்ரியவஸ்துவைக் கண்டால் மேகத்தைக் கண்ட மயில் போல் மிகவும் களித்துக் கூத்தாடுபவனென்க. இவையெல்லாவற்றிற்கும் இவன் நிறத்தில் ஒப்புமை யென்பது தெரிந்ததே. குரை கடல். ஒலிக்கும்போது அலைகள் மோதாநிற்கும். அப்போது அது அதிக நிறம் பெறும். கணமயில். கணம் க்ஷணம்: உத்ஸவம்: களிப்பு. அது உள்ள மயிலென்பதுமாம். குன்றூடு இத்யாதி. அரங்கனை யடிபணிய ஸ்திரீகளும் புருஷர்களும் திரண்டுவரும்போது கொடியிடையார் இடை யொடிந்துவிடும்போலே முலைக்குன்றுகளைச் சுமந்து நெடுந்தூரம் நாற்சந்திநடுவிலே களைத்தோடி வருவதைக் கண்டு இந்த பாகவதோத்தமைகளுக்கு ஏதேனும் சுச்ரூஷை செய்து ஸத்தை பெறவேண்டுமென்று பேராவல் கொண்டு தென்றலானது குன்றுகளின் பொழில்களில் நுழைந்து பரிமளத்துடன் வந்து அவர்களுடைய ஸ்தனங்களின் அருகில் உலாவி அவர்களுக்குண்டான வியர்ப்பையும் களைப்பையும் விலக்குகிறதென்று தெளிக. உலாம். உலாத்தல் உலாவுதல். (கூ)

**10.** பருவரங்களவைபற்றிப் படையாலித்தெழுந்தானைச்
செருவரங்கப்பொருதழித்த திருவாளன்திருப்பதிமேல்
திருவரங்கத்தமிழ்மாலை விட்டுசித்தன்விரித்தனகொண்டு
இருவரங்கமெரித்தானை யேத்தவல்லாரடியோமே. **(411)**

| | |
|---|---|
| அவை | அப்படிப்பட்ட |
| பரு | பருமை பொருந்திய |
| வரங்கள் | வரங்களை |
| பற்றி | பெற்றிருப்பதைக் கொண்டு |
| படை | சேனையுடன் |
| ஆலித்து | களித்து |
| எழுந்தானை | கிளர்ந்த ராவணனை |
| செரு | போரானது |
| அரங்க | முடிந்து விடும்படி |
| பொருது | போர் செய்து |
| அழித்த | வதம் செய்தருளின |
| திருவாளன் | ஸீதாபதிக்கும் |
| திருப்பதி | திருப்பதியான |
| திருவரங்கம் மேல் | ஸ்ரீரங்கத்தின் பேரில் |
| விட்டு சித்தன் | விஷ்ணு சித்தனால் (பெரியாழ்வாரால்) |
| விரித்தன | விரிக்கப்பட்ட |
| தமிழ் மாலை | தமிழ்ப் பாசுரங்களை |
| கொண்டு | ஆதரித்து ஸ்வீகரித்து; |
| இருவர் | மதுகைடபர்களின் |
| அங்கம் | உடலை |
| எரித்தானை | அழித்த எம்பெருமானை |
| ஏத்த வல்லார் | துதிக்க வல்லமை பொருந்ினவர்க்கு |
| அடியோம் | தாஸர்களாவோம். |

செருவரங்க. அவனுடைய முழுப்படையையும் மூலபலத்தையும் அழித்து அவனை யழித்ததாலே அவனுக்குப் பிறகு அவனிடம் பரிவாலே செருச் செய்ய வருவார் இராதபடியாயிற்றென்றபடி. திருவாளன் என்றதால் ஸீதை யைப் பெற்றதைப் பணித்ததாம். திருவாளன் திருப்பதி யென்பதற்கு அவனுடைய இருப்பிடம் எனப் பொருள் பொருந்துமாகிலும், அவனுக்கும் திருப்பதி யென்றபோது அவன் ஆராதித்த அரங்கனார் எனச் சிறப்பித்ததாகுமென்று அங்ஙன முரைத்தது. கண்ணன்முதலானோரிருப்பிட மிது என்பது போல் இராமனிருப்பிடமென்பதும் கீழே 4, 5 பாசுரங்களிற் கூறப்பெற்றதாகையாலே இங்கு மற்றவற்றை விட்டு அதனைமட்டும் மீண்டும் சொல்வதைவிட விசேஷமாக வொரு பொருள் கொள்வதே சாலப்பொருந்து மென்க. அடியோமே. விஷ்ணு சித்தனது தமிழ்மாலையைக்கொண்டேத்தவல்லாருக்கு விஷ்ணுசித்தர் அடிய ராகக் கூடுமோவென வேண்டா. விஷ்ணுசித்தரின் சிஷ்யர்களைப்போல் விஷ்ணுசித்தருக்குச் சமரும் பெரியோரும் கூட அவர்தமிழ்மாலையைக் கொண்டு ஏத்துவதில் குற்றமொன்றுமில்லை. ஏத்தும் ஸஹ்ருதயர்கள் கருதின அர்த்த விசேஷங்களைக் கண்டு இவரே அவர்களுக்கடியராகலாம். ஆக விஷ்ணுசித்தனாகிய நான் விரித்த தமிழ்மாலை கொண்டவருக்கு நானும் என்னைச் சேர்ந்த நீங்களும் அடியோமென்றருளினாரென்க. இத்தகைய பாசுரத்தை வெண்ணெய் விழுங்கியிலும் (2. 9. 11) காண்க. (ய)

திருவரங்கத் தமிழ்மாலை யென்றவிடத்தில் திருவரங்கமெனப் பிரித்து சீரில் சேர்ப்பது யுக்தம். இல்லையேல் திருவரங்க நகரைப்பற்றியே பிறந்த தமிழ்மாலை யெனவேண்டும். மேற்றிருமொழி இங்ஙனமன்றென்பதை மேலே (2) காண்க.

ப்ரபந்தரக்ஷையில் பெரியாழ்வார் தி. **4, 8** மாதவத்தோன் உரை முற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

## பெரியாழ்வார் திருமொழி 4-9.

# மரவடியை

வடதிசைத் திருப்பதிகளைப்போலின்றி வைதிகச்ரோத்ரியபரமைகாந்திகள் பெருந்திரளாக வஸித்திருப்பதாலே திருவரங்கம் சிறந்ததென்றவாறெல்லாம் கீழே யருளிச்செய்து, இனி, தென்னாடும் வடநாடும் தொழ நின்றதென்று வேறு வகையிலும் சிறப்பைக் கருதி மறுபடியும் திருவரங்கத் திருப்பதிமேல் ஒரு திருமொழி அருளிச் செய்கிறார். இங்கும் முதலிரண்டு பாசுரங்களினின்றே வடநாடும் தென்னாடும் நன்கு தொழுவது தோற்றும்.

1. மரவடியைத்தம்பிக்குவான்பணயம் வைத்துப்போய்வானோர்வாழ
செருவுடையதிசைக்கருமம் திருத்திவந்துலகாண்டதிருமால்கோயில்
திருவடிதன்திருவுருவும் திருமங்கைமலர்கண்ணும்காட்டிநின்ற
உருவுடையமலர்நீலம்காற்றாட்ட வோசலிக்குமொளியரங்கமே. (412)

| | |
|---|---|
| தம்பிக்கு | தனது தம்பியான பரதாழ்வானுக்கு |
| மரம் அடியை | மரத்தால் செய்யப்பெற்ற தன் திருவடிநிலையை (பாதுகையை) |
| வான் | பெரிதான |
| பணயம் | அடகாக |
| வைத்து | வைத்தளித்து |
| போய் | தண்டகாரண்யம் புகுந்து |
| வானோர் | தேவர்கள் |
| வாழ | (அவதார ப்ரயோஜநம் பெற்று) வாழும்படி |
| செரு உடைய | போரை உடைய (போர் புரிய அரக்கர் தங்கியிருந்த) |
| திசை | தென் திசையில் |
| கர்மம் | அப் போர் புரிவதாகிற வேலையை |
| திருத்தி | செவ்வனே நடத்தி |
| வந்து | பிறகே அயோத்திக்கு வந்து |
| உலகு ஆண்ட | ராஜ்ய பரிபாலனம் செய்தருளின |
| திருமால் | ச்ரிய: பதியின் |
| கோயில் | திருக்கோயிலானது,— |
| உரு உடைய | மிகப் பெரியனவும், |
| திருவடி தன் | ஸர்வ ஸ்வாமியான எம்பெருமானுடைய |
| திரு உரு உம் | அழகிய நிறத்தையும் |
| திருமங்கை | பெரிய பிராட்டியாரின் |
| மலர் | மலர்ந்த |
| கண் உம் | திருக்கண்களையும் |
| காட்டி | நினைக்கச் செய்து |
| நின்ற | எப்போதும் விளங்குமவையுமான |
| நீலம் மலர் | கருங்குவளைகள் |
| காற்று ஆட்ட | காற்று அசைவிக்கும் போது |
| ஓ சலிக்கும் | தமக்கு அந்த பாக்யம் நேர்ந்ததற்காகக் களித்து ஓவென்றசையுமிடமாய் |
| ஒளி | உஜ்ஜ்வலமுமான |
| அரங்கம் ஏ | ஸ்ரீரங்கமே யாம். |

அரங்கத்தில் காவிரிப்புனலின் சேர்க்கையால் நீல மலர்கள் நிகரற்று விளங்காநிற்கின்றன. அவற்றைக் காணும்போது கீழே, 'குவளைகள் போல்' என்றபடி திருமாலின் திருவுருவும், திருமங்கையின் திருக்கண்ணும், அவற்றிற்கொத்திருப்பதாலே நினைவுக்குவந்து மனதில் நிலைபெறுகின்றன. இங்ஙனம்

திருவடி யென்று அவனை நினைத்த போது அவன் திருவடியும், அவன் திருவின் கண்ணுக்கிணங்கி திருவடிநிலையைத் தம்பிக்கு வான்பணையம் வைத்துப் போனதும் நினைவுறும். ஆகவே மரவடியை இத்யாதியை இங்கே அநுஸந்தித்தருளினது.

மரவடி. மரத்தினால் செய்யப்பெற்ற அடி=பாதுகை. அது முதலில் மரக்கட்டையினின்று பிறந்ததாகிலும் அதற்கு ஏற்பட்ட மேன்மை எத்தகையது? இராமனை வேண்டும் தம்பிக்கு இராமனுக்குப் பதிலாக வான்பணையமாக வைக்கத் தகுதியுற்றதாயிருந்தது. உலகில் ஒருவர் தாம் நேரில்போய் நடத்தமுடியாதபோது தம் சிஷ்யன், புத்ரன், பரிஜநம் போன்றோரை யனுப்பியும் நடத்துவதுண்டு. அங்ஙனமன்று இராமன் பாதுகையை யநுமதித்தது. அங்ஙனிருந்து ராஜ்ய பரிபாலனம் செய்ய சத்ருக்நாதிகளும், மந்த்ரி முதலானோருமாக வநேகர் அயோத்தியிலேயே யுள்ளனர். பின் என் எனில்—தனக்கு மேற்பட்ட மேன்மை தங்கிய வஸ்துவை யளித்தாலன்றி திரும்பமாட்டானென்று இராமன் கருதி, 'என்னால் இப்போது வரமுடியாது. பதினாலு வருஷம் கழித்து நான் எனது ப்ராதாவுடன் ப்ருதிவிக்கு உத்தமபதியாக ஆகிறேன். ஆக என் செய்ய வேண்டுமோ, சொல்லுங்கோள்' என்னும் வகையிலிருக்க, ரிஷிகளும் வானோரின் வாழ்க்கையை வேண்டி இராமனை விடும்படி பரதாழ்வானிடம் சொல்ல, பரதாழ்வானும், 'என்னால் ராஜ்யம் பரிபாலிக்க முடியாது. இராமனுக்குக் குறையாத மேன்மையுடையவர் உண்டாகில் இராமனை விடலா' மென்றிருக்க, வஸிஷ்டமஹர்ஷியும், இராமனுக்கு மேற்பட்ட மேன்மை பொருந்தின வஸ்துவைக்கொண்டு பரதனுக்கு ஸமாதானம் செய்ய நினைத்து, '𑌏𑌤𑍇 𑌪𑍍𑌰𑌯𑌚𑍍𑌛 𑌸𑌂𑌹𑍃𑌷𑍍𑌟𑌃 𑌪𑌾𑌦𑍁𑌕𑍇 𑌹𑍇𑌮𑌭𑍂𑌷𑌿𑌤𑍇। 𑌏𑌤𑍇 𑌹𑌿 𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑌸𑍍𑌯 𑌯𑍋𑌗𑌕𑍍𑌷𑍇𑌮𑌂 𑌵𑌿𑌧𑌾𑌸𑍍𑌯𑌤𑌃' என இராமனைக் கேட்டுக்கொண்டார். 'நீர் காட்டில் ஸஞ்சரிக்க அநுகூலமாகக் கொண்ட இந்தப் பாதுகைகளைக் கொடுத்துவிடும். உம்மை பூமண்டலத்தை ஆள்வதற்கு மஹாராஜனாகும்படி ப்ரார்த்தித்தனம். இப்பாதுகைகள் இவ்வுலகமொன்றே யன்றி எல்லாவுலகுக்கும் யோகம் க்ஷேமம் என்கிற எல்லாப் பலன்களையும் செய்யும்' என வதன் பொருள். இப்படி இராமனுக்கு மேற்பட்டது கிடைக்குமாகில் இராமவிரஹத்தை யொருவாறு ஸஹிக்கலாமென்று பரதனும், '𑌅𑌧𑌿𑌰𑍋𑌹𑌾𑌰𑍍𑌯 𑌪𑌾𑌦𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌪𑌾𑌦𑍁𑌕𑍇 𑌹𑍇𑌮𑌭𑍂𑌷𑌿𑌤𑍇' பாதுகைகளில் ஏறிநின்று அநுக்ரஹித்து அவற்றை யளியுமென வேண்டினார். அங்ஙனமே ஏறி இறங்கி அளித்தருளினார் இராமன். கையாலெடுத்துக் கொடுக்கத்தக்கது மற்றது. இது அவர்காலாலெடுத்தளிக்கத்தக்கது. இராமவிக்ரஹமே ஒன்று செய்வித்து இராமனுடைய சக்தியைப் பெறுவித்து எழுந்தருளப் பண்ணிக்கொள்ளலாம். அதை விட இதே மேலாக பரதனும் நினைத்தார். இராமன் காட்டிற்குப் போவதில் தனக்குச் சிறிதும் இஷ்டமில்லையென்பதை இவர் ஜனங்களுக்குத் தெரிவிப்பதற்கு இது அநுகூலமாயு மிருந்தது. 'காட்டிற்குப் போகவேண்டாம்; திரும்புமென ஆனமட்டும் வேண்டினான். அவர் கேட்கவில்லை. போகக்கூடாதென்று, போவதற்குக் கருவியான பாதுகைகளையும் பறித்து வந்தான். வேறென்ன செய்யக்கூடும்' என வெல்லோரும் புகழ்வார்களிப்போது. இராமனை விட இராம

னின் அநுக்ரஹம் பெற்றவர்களுக்கு சக்தி யதிகம். '𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌭𑌵𑌤𑌿 𑌵𑌾 𑌨𑍇𑌤𑌿 𑌸𑌂𑌶𑌯𑍋𑌽𑌚𑍍𑌯𑍁𑌤𑌸𑍇𑌵𑌿𑌨𑌾𑌮𑍍 । 𑌨 𑌸𑌂𑌶𑌯𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌤𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌪𑌰𑌿𑌚𑌰𑍍𑌯𑌾𑌰𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌮𑍍' என்று பகவானை யாச்ரயிப்பதைவிட பாகவதரை யாச்ரயிப்பதில் சிறப்புரைக்கப்பட்டது. '𑌜𑍍𑌞𑌾𑌨𑍀 𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑍈𑌵 𑌮𑍇 𑌮𑌤𑌮𑍍', '𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑌾𑌨𑍀𑌹𑌿 𑌨 𑌮𑍇 𑌭𑌕𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌣𑌶𑍍𑌯𑌤𑌿', '𑌮𑌮 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌭𑌕𑍍𑌤𑍇𑌷𑍁 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌰𑌭𑍍𑌯𑌧𑌿𑌕𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍' இத்யாதிகளையும் காண்க. இப்படி யவன் அனுக்ரஹத்தாலேற்பட்ட மேன்மையும் அவனுக்கும் மேற்பட விருக்கிறது. சூர்யன் தன் ப்ரபையாலே போல, அதனால் தானேற்றம் பெறவேண்டுமென அவனது ஸங்கல்ப்பமாம். ஆகவே இராமராஜ்யத்தை விட பாதுகாராஜ்யம் பழுதற்றுப் பெரிதாக விளங்கிற்று. இப்படி இராமனுக்கு மேற்பட்டதாகையாலே இதை இராமன் பணையமாக வைத்தார். இவ் வுலகுக்கு இந்த இராமனைப்போல் ஒவ்வோர் உலகுக்கும் ஒவ்வோர் இராமனிருந்தால் அத்தனை இராமன்களுக்கும் இது ஈடாகக் கூடியது. ஸர்வலோகங்களுக்கும் யோகக்ஷேமங்களைக் கொடுப்பது இது என்றூரே வஸிஷ்டர். ஆகவே இது வான்பணையம். இதை வால்மீகி பகவானும், '𑌸 𑌤𑌤𑌃 𑌶𑌿𑌰𑌸𑌾 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌂 𑌪𑌾𑌦𑍁𑌕𑍇 𑌤𑌤𑌃', '𑌰𑌾𑌮𑍇𑌣 𑌹𑌿 𑌮𑌯𑌿 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑍋 𑌨𑌿𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌤𑌃 𑌸𑍌𑌹𑍃𑌦𑌾𑌦𑌯𑌮𑍍' என்று ந்யாஸ பதத்தை விட்டு ஸம்ந்யாஸ பதத்தாலே சிறப்பித்து வெளியிட்டருளினர். மரவடியோடு புறப்பட்ட இராமனுடைய மரவடியை வாங்கி வந்ததாலே, 'தண்டகாந் ப்ரவேக்ஷ்யே' என்ற இராமஸங்கல்ப்பம் பலிக்கக்கூடாதென்று தான நினைத்திருப்பதை பரதாழ்வான் வெளியிட்டதாயிற்று. இதுதான் இவருக்கு மிகக் கீர்த்தியையும் கொடுக்குமது. இங்ஙனம் வான்பணையமாய் இராமனுக்கு மேற்பட விளங்கின பாதுகையின் ப்ரபாவத்தை வெகு விசதமாக வெளியிட்டு, இவ்வாழ்வாருடையவும் ஸ்ரீ வால்மீகியினுடையவும் கருத்துகளைக் கசடற நமக்கு ஸ்ரீ தேசிகன் பாதுகாஸஹஸ்ரத்திலே பரக்க விரித்துள்ளார். அங்குள்ள 105, 106, 108, 113, 114, 116, 153, 175 ச்லோகங்களை ஆழ்ந்து அநுஸந்தித்துக் கண்டுகொள்வது. (க)

'அர்ச்சாவதாராநுபவத்தில் இழிந்த தேவரீர் முதன்முதல் திருமாலிருஞ்சோலையை இரு திருமொழிகளாலே வர்ணித்தருளினபோது அது விஷயமாகவே பல திருமொழிகள் அருளிச்செய்யத் திருவுள்ளமென நினைத்தோம். பிறகு வேறு திவ்ய தேசங்களிலீடுபட்டுப் பாசுரங்களை யியற்றக் கேட்டு அவ்வற்றிலொன்றுக்கும் ஒரு திருமொழிக்கு மேல் பாசுர மியற்றாததால் திருமாலிருஞ்சோலை யெம்பெருமானிட மீடுபாடு தேவரீருக்கு அதிகமென நினைத்தோம். இப்போது திருவரங்கத் திருப்பதிமேல் ஒன்றுக்கு மேலாகத் திருமொழி யியற்றுவதென்' என்கிற வினவிற்கு விடை யளிக்க விரும்பி, திருவரங்கத்தில் கண்வளரு மெம்பெருமான் ஆச்ரிதவாத்ஸல்யத்தை அதிசமாக ஆவிஷ்கரித்திருப்பதாலே அவன்திருப்பதியைப் பற்றி அதிகம் கூறுவது தகு மென வுணர்த்தும் திருவுள்ளமுள்ளவராய் அரங்கனைப் புகழ்ந்தருளுகிறார். ஆகவே இவ்விரண்டாம் பாசுரம் முன் பின் பாசுரங்களைப் போல் அரங்கமே என்றவாறு முடியாமல் வேறு வகையில் அமைக்கப்பெற்றது. இங்ஙனமொரே ரீதியில் பாசுரங்கள் இங்கு அமையாததாலே இத்திருமொழி

யில் முன்திருமொழியைப் போலல்லாமல் வேறு மாறுதல்களும் மேலே சில பாசுரங்களில் கொள்ளப்பெற்றன. முன் திருமொழிப் பாசுரங்களெல்லாம் முன்னே பெருமானுக்கும் பின்னே திருவரங்கத்திற்கும் அடைமொழி கூறி, 'அவனது ஊர் திருவரங்கமே' என்று ஒரே விதம் அமைக்கப்பெற்றது. இங்கே 3, 10 பாசுரங்கள் அங்ஙன மில்லை காண்மின்.

**2.** தன்னடியார்திறத்தகத்துத் தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேல்
என்னடியாரதுசெய்யார் செய்தாரேல்நன்று செய்தாரென்பர்போலும்
மன்னுடையவிபீடணற்காய் மதிளிலங்கைத்திசைநோக்கிமலர்க்கண்வைத்த
என்னுடைய திருவரங்கற்கன்றியும் மற்றொருவர்க்காளாவரே. **(413)**

| | |
|---|---|
| தாமரை யாள் ஆகிலும் | ஸாக்ஷாத் பெரிய பிராட்டியாரே யானாலும் |
| தன் | தனது |
| அடியார் திறத்து அகத்து | ஆச்ரிதர் விஷயத்தினுள் |
| சிதகு | குற்றத்தை |
| உரைக்கும் ஏல் | சொல்லும் பக்ஷத்தில், |
| என் அடியார் | 'என்னை யாச்ரயித்தவர்கள் |
| அது | குற்றத்தை |
| செய்யார் | செய்யமாட்டார். |
| செய்தார் ஏல் | ஒருக்கால் செய்தார்களானால் |
| நன்று | நல்லதை |
| செய்தார் | செய்தனர்' |
| என்பர் போலும் | என வருளுபவர் போல் தோற்றமளிப்பவரும், |
| மன் உடைய | செல்வம் பெருமைகளையுடைய |
| விபீடணற்கு | விபீஷணனுக்கு |
| ஆய் | அனுகூலராகத்தாமேயாய் |
| மதிள் இலங்கை | மதிள் சூழ்ந்த லங்கா நகரமுள்ள |
| திசை | திசையான தெற்கு திக்கை |
| நோக்கி | குறித்து |
| மலர் | செந்தாமரை மலர் போன்ற |
| கண் | திருக்கண்களை |
| வைத்த | வைத்தருளுபவருமான |
| என்னுடைய திருவரங்கற்கு | எனது ரங்கநாதருக்கு |
| அன்றி உம் | அல்லாமல் கூட |
| மறு ஒருவர்க்கு | வேறு யாருக்காவது |
| ஆள் | அடிமையாக |
| ஆவரே | விவேகிகள் ஆகக் கூடுமோ? |

தண்டதரனாய் எம்பெருமான் குற்றத்தைக் கூறுவதும், தாமரையாள் அதற்குப் பரிஹாரம் செய்வதும் ப்ரஸித்தம். இதனால் எம்பெருமான் ஸ்வபாவமாக வாத்ஸல்ய மில்லாதவனென வேண்டா. திருவரங்கத்திற் பாருங்கோள், எம்பெருமான் அங்ஙனல்லன். அடியார் திறத்திலே சிதகுரைத்தால், இல்லை யென்கிறவன். விபீஷணன் சரணாகதி செய்யும்போது வானர வீரர்கள் அவனுக்குச் சிதகுரைத்தவண்ணம் யாரேனு முரைத்தால் மறுக்கிறானென்பது மட்டுமன்று. எந்தப் பிராட்டி புருஷகாரமாயிருந்து, அகன்றவர்களையும் அடியார்களாக்குகின்றாளோ, அவளே சிதகுரைத்தால் கூட மறுக்கிறவன். அபராதத்தை மறைத்து அனுக்ரஹிக்கும் ஸ்வபாவமே யுள்ள தாமரையாள் குற்றம் சொல்வதென்பதுண்டோ ? கிடையாது. அவளே சொன்னால் கூட இசையமாட்டானென்றிவனுடைய குணாதிசயத்திலே இதற்கு நோக்கு. பத்து மாத காலம் பலபடி துன்பங்களுக்காளான பிராட்டி விபீஷணன்மேல் ஏதேனும் சொன்னால், அநுபவஸ்தையானபடியாலே இவள் சொல்வது உண்மையாயிருக்குமென்று இவன் நினைப்பானென வேண்டா. ஆசரிதர் விஷயத்திலே குற்றத்

தைக் கூறினால் வாநரவீரர்களோடு இவனோடு வாசியில்லை யென்க. இத்தகைய வாத்ஸல்யம் இவனுக்குண்டாகில் புருஷகார மெதற் கென்ன வேண்டா. புருஷகார பலத்தாலே யாச்ரயித்தபிறகே இத்தகைய வாதஸல்யத்திற்கு ஆவிர்ப்பாவம், ஜீவனுக்கு முக்தி தசையில் ஸ்வரூபாவிர்பாவம் போலே. திறத்தக்கது. ‘அகத்து’ என்பது அடியாரைச் சார்ந்தாரையும் கொள்வதற்காம்.

என்னடியார் இத்யாதி. இங்கு இருவகைக் கருத்தைக் கொள்க. முதலாவது-ஆச்ரிதர் செய்த சில செயல்களை யெடுத்துக் கூறி, ‘இவன் இன்னவிதமான செயலுள்ளவன். இது குற்ற’ மென்று உரைத்தால், என்னடியார் குற்றம் செய்யார். இங்ஙனம் செய்தார்களே யென்னில், இச் செயல் குற்ற மன்றே; நற்றமே யென்பான் எம்பெருமான். ‘விபீஷணனை யோக்யனாக நினைக்க வேண்டாம். ஹநுமானுக்கு வாலில் நெருப்பு வைக்க இவனும் உடந்தையானவனாயிற்றே. இவன் யோக்யனாகில் ராவணன் என்னை இலங்கைக்குக் கொணர்ந்த தத்க்ஷணமே தண்டகாரண்யத்தில் உமக்கு ஏன் இவன் தெரிவிக்கலாகாது’ என்றவாறு சொன்னால் எம்பெருமான் இங்ஙனம் சொல்வானாம்.—‘ஹநுமானுக்கு உயிர் மீட்க முயன்றவனல்லனோ விபீஷணன். அக்னியை வாலில் வைத்தாலும் அவன் அழியானென்று தெரிந்து தான் பொறுத்திருந்தான். அப் பொறுமைதானு மில்லையாகில் அரக்கர்கள் அப்போதே ஹநுமானை அழிக்கத் திரண்டு விடுவார்களே. அப்போது நானே நேரில ராவணாதிகளைக் கொன்று உன்னைக் கொள்வது கூடிடுமோ? விபீஷணன் தண்டகாரண்யம் வந்து சொல்லக்கூடாதா என்கிறாயே. அங்கிருந்த கோதாவரியும், வநதேவதைகளும், ரிஷிகளும், தேவர்களும் ஏன் இதை யப்போதே சொல்லியிருக்கக் கூடாது? வாலி யழிந்து ஸுக்ரீவராஜ்யம் ஏற்படவேண்டு மென நினைத்த தைவம் அதற்கு இடம் கொடுக்கவில்லை. ஒருக்கால் ஹிதோபதேசம் செய்து தமையன் புத்தியைத் திருப்ப முடியுமோ வென்று கடைசி வரையில் அவன் பார்த்திருந்ததில் என்ன குற்ற மிருக்கிறது’ என்றவாறு. இது போன்றனவும் பிறவும் கொள்க. இங்ஙனம் ஒவ்வோர் ஆச்ரிதன் விஷயத்திலும் காண்க. இந்த ஆச்ரிதன் ப்ராம்மணனாயிருந்து போர் புரிந்தான். இவன் க்ஷத்ரியனாயிருந்து வியாபாரத்தி லிழிந்தான் என்றவாறு குற்றம் சொன்னால், இவை யெல்லாம் ‘ஸுவை ஹூ நஜைாஶாவ்ரு.த்திஃ’ என்கிறபடி குற்றங்களாகா என்பான் என்றவாறு மறிக. இப்போது செய்தாரேல் என்பதற்கு, குற்றம் செய்தார்களாகில் எனப் பொருளில்லை. நீ சிதகாக நினைத்த இச் செயலைச் செய்தாரென்னில், இச் செயல் குற்ற மன்று, நன்று என்றதாம்.

அது என்பதற்கு சிதகு எனப் பொருளாகையால், அது செய்தாரேல்=சிதகே செய்தார்களாகிலும் எனவே உரைப்பதாகில், நன்று செய்தாரென்பதற்கு நன்று போன்றதைச் செய்தார்; இவர்கள் செய்த குற்றம் பிறர் செய்யும் குற்றம் போல் பெருந்தீங்கை விளைப்ப தொன்றன்றாகையாலே சரியான குற்றம் செய்தாரல்லர் எனப் பொருளாம். அதாவது—இவர்கள் செய்த குற்றம், ப்ராமாதிகத்திற்குப் பலன் கிடையாதாகையாலே, குற்றமில்லை. புத்திபூர்வமான பாபமானாலும், ‘ஜுவ-ஊஉ-ஃணஃ ஒூவஷுஷ’ என்கிறபடி விபரீத

பலன் விசேஷித்திராது. ப்ராயச்சித்தம் செய்துகொள்வாராகில், நன்று செய்தார்; ப்ராயச்சித்தத்தாலே பரிஹரிக்கப்படுவதையே=வீர்ய மற்றதையே செய்தாரென்றபடி. இதுதான் இரண்டாவது கருத்து.

'நன்று செய்தாரென்பது புத்தி பூர்வமாகச் செய்யும் பாபமும் நன்றேயென்றபடி' யென்பது பின்னுள்ளார் சிலரின் கூற்று. பூர்வாசார்யர் யாரும் இதை இசைந்தாரல்லர். ஜீயரும் ப்ராமாதிகத்தையும், மடலூர்தல், காமன் காலில் வீழ்தல் முதலானவற்றையுமே கூறினர். எம்பெருமான் விஷயத்திலே பிறந்த வியாமோஹம் விஞ்சிப்போய், தகும் தகாதென்பதை விமர்சிக்கும் தசை மீறி உன்மத்தாதி தசையிலே நின்று எம்பெருமானைப் பெறுவதற்காக தேவதாந்தரயஜநம் முதலானவற்றைச் செய்தால் அவை ஸ்வப்நாதிகளில் வரும் குற்றங்கள்போலே ப்ராமாதிகதுல்யங்களென அவர் கருத்து.

நன்று என்பதற்கு, 'எம்பெருமானுக்கு மிக்க உகப்பானதையே' என ஏன் பொருள் கொள்ளக்கூடாதெனில்—விஹிதமான தர்மம் தானே நன்றாகும். விதிக்கப்படாத இது உகப்புக்காவதெப்படி? இங்ஙனம் பிறர் விஷயத்திலே குற்றமாகத் தோன்றினது இவர் விஷயத்திலே நன்றாகில், இவ்வித நிஷித்த கர்மங்களிலே தத்கால பலனும் எம்பெருமானுகப்பும் சேர்ந்து வருவதாலே அடியார் இவற்றை விடாமற் செய்தேவருவாராகையாலே, என்னடியாரது செய்யார் என்ன வொண்ணாது. ஆகையால் இது குற்றமே. ஆக நன்று என்பதற்கு பெருங்குற்றமல்லாதது எனவே பொருள். இது போலும் என்கிற மேற்பதத்தாலும் விளங்கும். எங்ஙனமெனில், 'நன்று செய்தா ரென்பர்போலும்' என்றதாலே நன்று செய்தாரென்று உண்மையிலிவர் அருளமாட்டாரென்பது தெளிவாகிறது. ஆக, ஏன் நன்றென நினைக்கவும் மாட்டா ரென்றால், 'அறியாதவன் குற்றத்தை நன்றென்று தெரியாமற் கொள்ளலாம்; தெரிந்தவனும் பிறரை மோஹிப்பிக்க அங்ஙனம் சொல்லக்கூடும். ஸர்வஜ்ஞனும் வத்ஸலனுமானவன் இப்படி விபரீதமாக நினைக்கவும் சொல்லவும் மாட்டா' னென்றே விடை கூறவேண்டும். ஆகையால் போலும் என்பதும் குற்றம் நன்றாகாதென விளக்குகிறது. இது தான் 'தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத்' என வால்மீகியாலும் அங்கீகரிக்கப்பட்டது. இது சரணாகதிக்கு முன் செய்த குற்றமாகில் இவ் வுபாயமே இதை யழிக்கும். பின் செய்யப்பட்ட தொன்றாகிலும் பலமான தீங்கில்லை யென்றபடி. இப்பாசுரத்தில் இவ் வர்த்தமெல்லாம் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்திலே ப்ரபாவவ்யவஸ்தாதிகாரத்திலே ஸங்க்ரஹிக்கப்பட்டுள்ளது. 'நன்று செய்தார் போலு மென்பர்' எனவு மந்வயம் செய்கின்றனர் சில பெரியோர். அப்போது நன்றன்றென்பது நன்கு விளங்குமே. மேலும், 'நன்று செய்தார் போலும் என்பர்' என்பதற்கு நன்று செய்தார் என்று சொல்லுமவர் சொல்லுகிறப் போலே 'ஓம் காண்', 'இருக்கட்டும் காண்' எனவாம் உதாஸீந வார்த்தைகளை மேன்மேல் குற்றம் கூறாமைக்காகச் சொல்லுகிறாரென வுரை செய்வர். இதனால் நன்று செய்தார் என்று பெருமான் சொல்வதேயில்லை யென்பது தெளிவு. போலும் என்பது பொருளில்லாத பத மொன்றென்றால் இது ஸர்வ ஸம்ப்ரதாயவிருத்த மென்பதைக் கீழே 3—8—5-ல் காண்பித்துள்ளோம்.

ஆச்ரயித்தவர்கள் பெருமாளுக்கும் தாமரையாளுக்கும் இருவருக்கும் அடியாராகையாலே ‘நம்மடியார்’ என வேண்டியிருக்க, என்னடியார் என்றது எங்ஙனமென்னில், தாமரையாளாகிலும் என்பதிலிருந்து தாமரையாளோ, வேறு யாரேனுமொருவரோ யாராகிலும் எனப் பொருள் கொள்ள வேண்டியிருப்ப தால் பிறரோடு பேசும்போது, நம்மடியா ரென வொண்ணுதாகையாலே அங்ஙன மருளவில்லை. அதுவே யன்றி, ‘உன்னடியார்களாகில் செய்வார்; என்னடியார் செய்யார்’ என்று பிராட்டியிடம் சொல்வதன்று. அல்லது மேலே சொல்வதுமாம்.

எம்பெருமானில் அவளுக்கு அந்தர்பாவத்தைை வைத்து, ‘ஶ்ரிய꞉ ஶ்ரீஶ்ச ஸர்வேஷாம் ந வைஷ்ணவ꞉’ இத்யாதி ப்ரமாணங்கள் எம்பெருமான் பெயரை யிட்டுக் குறித்திருப்பதாலும் என்னடியார் என்றது. நம்மடியாரென்றால், ‘உன்னடியாரும் சிதகு செய்யார்; என்னடியாரும் சிதகு செய்யாரெனப் பிரித்துச் சொல்வதும்ாம். அது கூடாதென்று என்னடியார் என்றதென்றாலும்— உன்னை முன் சரணமடைந்து உனக்கு அடியாரானவர்கள் கூட என்னை யாச்ர யிக்காதவரையில் குற்றவாளிகளாக பாவிக்கப்படலாம். என்னடியார்களாகவு மாய்விட்டால் முன்போல் சிதகுள்ளவராகார். அடியாரென்று சொன்னாயே. பிறகு சிதகுள்ளவரென்னலாமோ. பிறர் செய்யுமளவில் அது சிதகாகுமோ வெனக் கருத்துரைக்கலாம். சிதகு என்னுமே அது என்றது தன் வாயால் அங்ஙனம் கூறக் கூட இஷ்டப்படாததா லென்க. என் என்பதைப் பிரித்து என்=என்ன? அடியாரது செய்யா ரென்னலுமாம். அடி யென்பதை ‘அரே மைத்ரேயி’ என்னுமா போலே மனைவிக்கு விளிச்சொல்லாக்கி, ‘என் நீ சொல்லுகிறாயடி !? யார் அது செய்யார் ? ‘ந கச்சிந்நாபராத்யதி’ என்பதை நீயே மறந்தாயோ எனவு முரைக்கலாம். நன்று செய்தார் என்பதற்கு, நன்று=நல் லதை, குற்றத்திற்குப் பரிஹாரமாம் நல்ல ப்ராயச்சித்தத்தைச்செய்தார் எனவு முரையாம்.

தன்னடியார், என்னடியார், திருவரங்கற்கு என்று ஒருமையை முன்னும் பின்னும் கொண்ட ஆழ்வார் என்பார்போலும் எனப் பன்மையாக வருளினது அழிக்கவொண்ணாத வாத்ஸல்யத்தை யநுபவித்த க்ஷணத்திலே, ஸ்வாமியான அவனிட முண்டான விசேஷ கௌரவத்தைக் குறிக்கவாம்.

இலங்கைத்திசை நோக்கி. எண்ணற்ற மற்ற மஹான்கள் நிறைந்த வட திசைக்குப் பின்பு காட்டி அபராதிகளுக்கான இலங்கையை நோக்குவதென் என்றால் என்னடியார் அது செய்யார் என்பான் போல், விபீஷண ஸம்பந்தம் பெற்றிருப்பதாலே ஸகல ராக்ஷஸரையும் தன்னடியாராக வைத்து அவர்களி டத்திலே குளிர்ந்த கடாக்ஷத்தை யளிக்கு மிவனுடைய வாத்ஸல்யத்தை வர்ணித்துதான் முடியுமோ ? உண்மையில் இவர் நோக்கியுள்ளாரேயன்றி நன்று செய்தாரென்பாரல்லர். ஆகிலும் வைத்த கண்வைத்தபடியே யிருப்ப தால் என்பார் போலிருக்கிறதென உத்ப்ரேக்ஷை யெனவுமறிக. என்பார்போல்

என்னுமே ‘ என்பார் போலும் ’ என்ற உம்மையானது சொல்லக்கூடாத தையும் சொல்லுவார் போலிருக்கிறது இவருக்குள்ள வாத்ஸல்யத்தைப் பார்த்தா லெனத் தெளிவிக்கிறது.

என்னுடைய திருவரங்கற்கு. இலங்கைத் திசை நோக்கினது விபீடணர்க்கா யென்றே நினைக்கவேண்டாம். இலங்கை நோக்கி என்னுமே, ‘ இலங்கைத்திசை நோக்கி ’ என்றேனே. ஸ்ரீ வில்லிபுத்தூரிலுள்ள என் புதல்வியான ஆண்டாளுக்காகவும், அது நிமித்தமாக எனக்காகவும் கூட இவன் இத்திசை நோக்குகின்றானென நினைக்கிறேன். ஆகத் திருவரங்கன் என்னுடையவனென்றபடி. இதனை ஸ்ரீ தேசிகன் கோதாஸ்துதியிலே, ‘ யத்ரைவ ரங்கபதிநா பஹுமாநபூர்வம் நித்ராலுநாபி நியதம் நிஹிதா: கடாக்ஷா:’ என வருளிச்செய்தார். ஆண்டாள் அவதரிக்கும் திக்கென்று அதிலே அவனுக்குண்டான வ்யாமோஹ மிவ்வளவு. இப்படி யரக்கரையும் அடியாரென்று கடாக்ஷித்துக்கொண்டு, எனது திக்கிலே இவ்வளவு நோக்குள்ளவனுமான அரங்கனை யன்றி மற்றொருவர்க்காளாவது கூடாதாகையாலே திருவரங்கம் விஷயமாகவே மீண்டும் திருமொழி தொடங்கினேனென விதனை லருளிச்செய்தபடி. (உ)

மற்றொருவர்க்காளாவரே யென்பது கூடுமோ? பரமபதத்திலே ஒழுவில் காலமெல்லாமுடனாய் நின்று வழுவிலா வடிமை செய்யவேண்டும் நாம் பரமபத நாதனுக்கன்றோ ஆளாகவேண்டுவதென்னில்—பரமபதத்திலேற ஏணி வைப்பவனும், ஏறின பிறகு மீண்டுமிறங்காதபடி ஏணியை வாங்குகிறவனு மிவனுமொருவனாகையாலே இவனுக்காளாவது அவனுக்காளாவதே யென வருளிச் செய்கிறார்—

3\. கருளுடைய பொழில்மருதும் கதக்களிறும் பிலம்பனையும் கடியமாவும்
உருளுடையசகடினையும் மல்லரையுமுடையவிட்டோசைகேட்டான்,
இருளகற்றுமெறிகதிரோன் மண்டலத்தூடேற்றிவைத்தேணிவாங்கி
அருள்கொடுத்திட்டடியவரை யாட்கொள்வானமருமூரரங்கமே. (414)

| | | | |
|---|---|---|---|
| கருள் உடைய | இருளை யுடைய | அடியவரை | தாஸரானவர்களை |
| பொழில் | சோலைகள் நிறைந்த | இருள் | இருளை |
| மருது உம் | மருதமர மிரண்டையும், | அகற்றும் | விலக்கும் |
| கதம் | கோபம் கொண்ட | எறி கதிரோன் | ஒளிக்கும் கிரணங்களை யுடைய சூரியனின் |
| களிறு உம் | குவலயாபீடத்தையும் | மண்டலத்து ஊடு | மண்டலத்தின் நடுவிலே |
| பிலம்பனை உம் | ப்ரலம்பாஸுரனையும் | ஏற்றி வைத்து | அர்ச்சிராதி மார்க்கத்தாலே புகச் செய்து |
| கடிய | கொடுமை யுடைய | ஏணி | ஏற்றுவதற்காக வைத்த ஏணியை |
| மா உம் | கேசி என்ற குதிரையையும் | வாங்கி | இறங்கிவிடாதபடி அப்புறப்படுத்தி |
| உருள் உடைய | சக்ரங்களை யுடைத்தாயிருந்த | அருள் கொடுத்திட்டு | அப்ராக்ருத சரீரம், ப்ராம்மகுணாவிர்பாவம் முதலானவற்றை யநுக்ரஹித்து, |
| சகடினை உம் | சகடாசுரனையும் | | |
| மல்லரை உம் | மதுரையில் மல்லர்களையும் | | |
| உடையவிட்டு | உடைத்து, பிளந்து | | |
| ஓசை கேட்டான் | உடையும் போதுண்டான ஓசையைக் கேட்டுகந்தவனும், | | |

| | | | |
|---|---|---|---|
| ஆள் கொள் வான் | கைங்கர்ய ஸாம்ராஜ்யம் பெற்றவராகச் செய்ப வனுமான எம்பெருமா னுடைய | ஊர் | திருப்பதியானது |
| | | அணி அரங்கம் ஏ | அழகிய ஸ்ரீரங்கமே யாம். |

ஏணிவாங்கி. இதனால் மோக்ஷம்போனவரை வேண்டினாலும் திரும்ப அனுப்புவதில்லை யவனென்றதாயிற்று. ஏணியாவது அர்ச்சிராதிமார்க்கத்திலே போவதற்காக ஏற்பட்ட ஸூக்ஷ்மசரீரம். விரஜையில் அது கழிந்த பிறகு ப்ரக்ருதிஸம்பந்தம் பூராவும் விலகுகிறது. இவன் திரும்ப நினைத்தாலும் ஏணியில்லையாகையாலே இறங்கமுடியாது. பிறகு அப்ராக்ருதசரீரம் கிடைத்ததும் அஷ்டகுணாவிர்பாவம் பெற்றுவிடுகிறானாகையாலே இவனே இறங்கான். (௩)

4. பதினாறுமாயிரவர்தேவிமார் பணிசெய்யத்துவரையென்னும்
அதினாயகராகிவீற்றிருந்த மணவாளர்மன்னுகோயில்,
புதுநாண்மலர்க்கமல மெம்பெருமான்பொன்வயிற்றிற்பூவேபோல்வான்
பொதுநாயகம்பாவித்திறுமாந்து பொன்சாய்க்கும்புனலரங்கமே. (415)

| | | | |
|---|---|---|---|
| பதினாறு ஆம் ஆயிரவர் | பதினாறும் ஆயிரங்களின் எண்ணிக்கையுள்ள | எம்பெரு மான் | எம்பெருமானுடைய |
| தேவிமார் | தேவிகள் | பொன் வயிற்றில் | அழகிய திருவயிற்றில் உள்ள |
| பணி செய்ய | தொண்டு செய்ய அனுகூல மாக | பூ போல் வான் ஏ | நாபி கமலம் போலவேயாவ தற்காக |
| துவரை என் னும் அதில் | த்வாரகை யென்னும் அபூர்வ நகரிலே | பொது நாய கம் | நீரிலுண்டாம் புஷ்பங்கள் எல்லாவற்றிற்கும் மேலானமையை (தமக்கு) |
| நாயகராகி | அவர்களுக்கு நாதனாகி | பாவித்து | ஏற்றுக்கொண்டு |
| வீற்றிருந்த | எழுந்தருளியிருந்த | இறுமாந்து | கர்வித்தெழுந்து |
| மணவாளர் | அங்ஙனமே ஸர்வநாயக னானவன் | பொன் சாய்க்கும் | மற்றவற்றின் அழகை அழிக்கப்பெற்ற |
| மன்னு | நித்யவாஸம் செய்யும் | புனல் | நதியையுடைய |
| கோயில் | கோயிலெனப்பட்டது—, | அரங்கம் ஏ | ஸ்ரீரங்கமேயாம். |
| புது | புதிய | | |
| நாள் மலர் கமலம் | ஸமயத்தில் மலர்ந்த தாமரை மலர்கள் | | |

போல்வான். வான் என்பது இடைச்சொல் லென்னலுமாம். காவிரிப் ரவாஹம் நிறைந்து வருவதாலே எங்கும் தாமரைகள் செழுமையுடன் பச்சை வண்ணனைப் போல் படர்ந்திருக்க, நீருக்குமேல் நெடுந்தூரம் நீண்ட பெருந் தண்டுகளிலே பருத்து மலர்ந்து பொலியும் தாமரைப்பூக்களைப் பார்த்தால், ஒவ்வொன்றும் எம்பெருமானின் நாபிக்கமலத்துக்குத் தன்னையே ஸமமாக நினைத்து இறுமாப்புடன் எழுந்து மற்றவற்றின் அழகைக் கீழ்ப்படுத்தி விளங்குகிறதாகத் தோற்ற மளிக்கின்றது. கண்ணபிரானின் தேவிமார்களான பதினாறு யிரம் பேருடைய திருமுக மண்டலங்கள் போலே விளங்கும் இவ்வகைக் கமலங்கள் நிறைந்த வரங்கமே அந்தக் கண்ணபிரான் மன்னும் கோயிலாமென்றபடி. (௪)

அழகியமணவாளனைத் துவரைமணவாளனாக அநுஸந்தித்தபோது துவரையில் நடந்த செய்தி நினைவுக்கு வர அதனைக் கொண்டு புகழ்ந்து பாசுர மருளுகிறார்.—

5. ஆமையாய்க்கங்கையாயாழ்கடலாயவனியாயருவரைகளாய்
நான்முகனாய்நான்மறையாய் வேள்வியாய்த்தக்கணையாய்த்தானுமானான்,
சேமமுடைநாரதனார்சென்றுசென்றுதுதித்திறைஞ்சக்கிடந்தான்கோயில்,
பூமருவிப்புள்ளினங்கள்புள்ளரையன்புகழ்குழறும்புனலரங்கமே. (416)

| | |
|---|---|
| ஆமை ஆய் | (தன்யமும் ஆச்சர்யமுமான வஸ்துவைக்காணும் நாரத முனிவர்க்கு முதலில்) ஓர் ஆமையாய் |
| கங்கை ஆய் | பிறகு கங்காநதியாய் |
| ஆழ் கடல் ஆய் | ஆழ்ந்த சமுத்திரமாய் |
| அவனி ஆய் | பூமியாய் |
| அரு வரைகள் ஆய் | அருமையான மலைகளாய் |
| நான்முகன் ஆய் | சதுர்முகனாய் |
| நான் மறை ஆய் | நான்கு வேதங்களாய் |
| வேள்வி ஆய் | யஜ்ஞமுமாகி |
| தக்கணை ஆய் தான் உம் ஆனான் | தக்ஷிணையாக இருந்து கொண்டு விஷ்ணுவாகவுமானவனும் (ஆகவே) |
| சேமம் உடை | தம் தத்துவஜ்ஞான நிலைக்கு இதனால் ப்ரதிஷ்டை பெற்ற |

| | |
|---|---|
| நாரதனார் | நாரதமுனிவர் |
| சென்று சென்று | கூர்ம கங்கா ஸமுத்ராதிகளிடம் சென்றார்போலே அடிக்கடி சென்று கிட்டி |
| துதித்து | நீயே ஆச்சரியனும் தன்யனும் என்றாற்போலே ஸ்துதி செய்து |
| இறைஞ்ச | வணங்கும்படி. |
| கிடந்தான் | பள்ளிகொண்டவனுமான பெருமானுடைய |
| கோயில் | கோயிலானது, |
| பூ | புஷ்பங்களில் |
| மருவி | பொருந்தியிருந்து |
| புள் இனங்கள் | பக்ஷி ஜாதிகள் |
| புள் அரையன் | பக்ஷிராஜனான கருடனின் |
| புகழ் | கீர்த்தியை |
| குழறும் | அவ்யக்தாக்ஷரமாகப் பேசுமிடமாய் |
| புனல் | நதியையுடைய |
| அரங்கம் ஏ | ஸ்ரீரங்கமே யாம். |

இப்பாசுரத்திலே ஆழ்வார் ஹரிவம்சத்தில் 159-வது அத்யாயத்திலேயுள்ள கதை யொன்றைச் சுருக்கி யருளியுள்ளார் என்பது முன்னோர் வ்யாக்யானங்களினின்றே விளங்கும். அவ்வரலாறாவது—துர்யோதநாதிகளின் யாகத்திலே திரண்டிருந்த அரசர்களெல்லோரும் கண்ணபிரான் துவரைநகரில் எழுந்தருளியிருக்கும் ஆச்சரியத்தையும் வைபவத்தையும் கேட்டு நேரில் காண ஆசைப்பட்டு துர்யோதநாதிகளுடனும் பாண்டவர்களுடனும் வந்து துவரையில் கண்ணனால் தக்கவாறு கௌரவிக்கப்பெற்று அவருடன் வீற்றிருக்கும் காலத்திலே நாரதமுனிவர் உள்ளே புகுந்து கண்ணனைக் குறித்து, 'நீரே ஆச்சரியமானவரும் தன்யரும். உலகில் வேறு யாரு மில்லை' யென விண்ணப்பிக்க, கண்ணனும், 'ஆம். நானே தக்ஷிணைகளோடு ஆச்சரியனும், தன்யனும்' என மறுமொழி கூற, முனிவரும், 'அடியேனுக்கு வேண்டியதை யறிவித்துவிட்டீர். போய் வருகிறேன்' என்று புறப்பட்டார். அப்போதங்குள்ள அரசர்களுக்கு, அவர்களிருவரின் வார்த்தைகளுக்கும் பொருள் விளங்கவில்லை. அதனால் அவர்கள் கண்ணனை, 'இதென்ன' என்று கேட்டனர். அவரும் நாரதரை, 'நீரே கூறும்' என்றார்.

அப்போது நாரதர் மொழிந்ததாவது, 'அரசர்களே! நான் கங்கையில் வெகு நாளாக மூன்று காலங்களிலும் ஸ்நாநம் செய்துகொண்டிருந்து ஓர் அழகிய ஆமையைப் பார்த்தேன். 'நீயே ஆச்சரியனும் தன்யனு' மென்றேன்.

அது, 'என்னைப்போல் பல ஜந்துக்களை யுடைய கங்கையே அத்தகையது' என்றது. கங்கையைப் பார்த்துக் கூறினேன். அது நதிகளெல்லாம் விழும் கடலைக் காண்பித்தது. அது கடல் சூழ்ந்த பூமியையும், பூமி தனக்கு ஆதாரமான மலைகளையும், மலைகள் தங்களை ஸ்ருஷ்டிசெய்த நான்முகனையும், நான்முகன் தன் முகங்களிலுள்ள வேதங்களையும், வேதங்கள் அவற்றின் பொருளான வேள்வியையும், வேள்வி தன்னால் ஆராதிக்கப்படும் இம் மஹாபுருஷனையும் அடைவே குறித்தன. ஆகவே இது இங்கே முடிவு பெறுகிறதாவென்று தெரிந்து கொள்ளயான், 'ஸூர்ய: ஸமுத்ரோ தேவாநாம் ஸ்வம் ஸமாஸேஷாத்த:। யந்த்ரஸ்வாமீ மஹா பாஹோ ஹோகே நாநேத்ராணீ கஸ்யந' என்றிங்ஙனம் விண்ணப்பம் செய்தேன். நான் யஜ்ஞங்களைக்கேட்டுத் தெரிந்து இங்கே வந்துள்ளேனென்பதை எனக்கு விளங்கச் செய்யுமாறு இக்கண்ணபிரானும் தக்ஷிணையோடு சேர்ந்து நான் ஆச்சர்யனும் தன்யனுமென மறுமொழி கூறினர். 'யஜ்ஞங்களுக்கு தக்ஷிணை முக்யமானது, நானும் முக்கியமானவன்' என்றபடி. இப்படி எம்பெருமான் ஆமை முதலாக அனேக உருக்களிலும் தன் சுத்த ரூபத்திலுமிருந்து ஆச்சர்யனும் தன்யனுமாயிருக்கிறான் என்று தீர்மானித்துக்கொண்டேன்' என்றவாறு.

இதனைக் குறிக்கும் ச்லோகங்களைப் பூர்வரின் உரையிலும், நேராகப் புராணத்திலும் காண்க. இங்கே புராணத்தில் கண்ணனே கூர்மாதிரூபனென்ன இராவிடினும், 'உன்னிடமுள்ள ஆச்சர்யத்தன்மையும் தன்யத்தன்மையுமே கூர்மாதிகளில் ஓரம்சமாக எனக்குத் தோன்றிற்றாகையாலே அவையும் நீ' என இங்கே உட்கருத்து.

**சென்று சென்று துதித்து** என்பது கீழுக்கும் சேரும். ஆனால் அந்வயம் மட்டும் மேலே யாம். அடிக்கடி அரங்கனைப் பழைய வரலாற்றைக் கூறியும், பல படியாகவும் நாரதர் துதித்திறைஞ்சுகிறாரென்றபடி.

**புள்ளரையன் புகழ்குழறும்.** எம்பெருமான்குணங்களைப் புகழ்வதோடு நிற்காமல் வேதவேத்யனான பெருமானுக்கு வாஹனமாய் வேதரூபியாய், தங்கள் சாதியிற் சிறந்து ஸ்ரீரங்கத்தில் சிறப்பாக விளங்கும் பெரியதிருவடி மூலமாகப் பெருமானைக்கிட்ட நினைத்து அவருடைய புகழையும் கூறுகின்றன பக்ஷிகள். ஆனால் அவை பக்ஷிகளாகையாலே அக்ஷரங்கள் வ்யக்தமாகாமலிருப்பது இயல்பு. (ரு)

**6.** மைத்துனன்மார்காதலியை மயிர்முடிப்பித்தவர்களையேமன்னராக்கி
உத்தரைதன்சிறுவனையுமுய்யக்கொண்டவுயிராளனுறையுங்கோயில்,
பத்தர்களும்பகவர்களும்பழமொழிவாய்முனிவர்களும்பரந்தநாடும்
சித்தர்களும்தொழுதிறைஞ்சத் திசைவிளக்காய்நிற்கின்றதிருவரங்கமே. **(417)**

| | | | |
|---|---|---|---|
| மைத்துனன் மார் | அத்தையின் பிள்ளைகளான பாண்டவர்களின் | முடிப்பித்து | துர்யோதநாதிகளை மாள வைத்து முடியச்செய்து |
| காதலியை | மனைவியான த்ரௌபதியை | அவர்களை ஏ | அந்த மைத்துனன்மாரையே |
| மயிர் | துர்யோதநாதிகளைக் கொன்றாலன்றி முடிப்பதில்லையென அவிழ்த்திருந்த கூந்தலை | மன்னர் ஆக்கி | முழுப் பூமி யாளு மரசராக முடிசூட்டி |

(பின்னும் அவர் வம்சமே ராஜ்யம் ஆள்வதற்காக)
உத்தரை தன் — அபிமன்யுவின் மனைவியினுடைய
சிறுவனை உம் — குமரனான பரிக்ஷித்தையும்
உய்ய கொண்ட — உயிருடன் இருக்கத் திருவுளங்கொண்ட
உயிராளன் — எல்லோர்க்கும் ஆயுள் வ்யவஸ்தை செய்யுமெம்பெமான் (அல்லது) ஸர்வ ஜீவேச்வரன்
உறையும் — நித்யவாஸம் செய்யும்
கோயில் — கோயிலெனப்படுவது—,
பத்தர்களும் — பக்தியோக நிஷ்டர்களும்
பகவர்களும் — ப்ரபந்நர்களும்
பழமொழி வாய் — வேதவாக்குகளான
முனிவர்களும் — ரிஷிகளும்
பரந்த நாடும் — எங்கும் வ்யாபித்துள்ள பாமரர்களும்
சித்தர்களும் — சித்தர் முதலிய தேவயோநிகளும்
தொழுது — தூரத்தில் தெண்டனிட்டு
இறைஞ்ச — நெருங்கி வந்து ஸேவிக்க
திசை விளக்கு ஆய் — திக்கு தோறும் ப்ரகாசமாய்
நிற்கின்ற — நிற்குமிடமான
திருவரங்கம் ஏ — ஸ்ரீரங்கமே யாம்.

**7.** குறட்பிரமசாரியாய் மாவலியைக்குறும்பதக்கி யரசுவாங்கி
இறைப்பொழுதில்பாதாளம்கலவிருக்கைகொடுத்துகந்த எம்மான் கோயில்,
எறிப்புடையமணிவரைமேலிளஞாயிறெழுந்தாற்போலரவணையின்வாய்
சிறப்புடையபணங்கள்மிசைச்செழுமணிகள்விட்டெறிக்கும்திருவரங்கமே.(418)

குறள் பிரம சாரி ஆய் — வாமன ப்ரம்மசாரியாயவதரித்து
மா வலியை — மஹாபலியின்
குறும்பு — பொல்லாங்கை
அதக்கி — (கசக்கி) நீக்கி
அரசு — மூவுலகாள்வதை
வாங்கி — பறித்து
இறை பொழுதில் — நொடிப்போதில்
பாதாளம் — பாதாளத்தில்
கலவு இருக்கை — கலந்துகொண்டு வஸிப்பதை
கொடுத்து — ஏற்படுத்தி
உகந்த — ஸந்தோஷித்த
எம்மான் — நம்பெருமானுடைய
கோயில் — கோயிலானது—,
எறிப்பு உடைய — ப்ரகாசமுள்ள
மணி வரை மேல் — மணிமயமான மலையின் சிகரத்தில்
இளம் ஞாயிறு — பால ஸூர்யன்
எழுந்தால் போல் — உதித்தாற்போல்
அரவு அணையின் வாய் — படுக்கையான ஆதிசேஷனின்
சிறப்பு உடைய — சிறந்த
பணங்கள் மிசை — படங்களின்மேல்
செழு மணிகள் — செழுமை பொருந்திய ரத்னங்கள்
விட்டு எறிக்கும் — ஒளிவிட்டு ப்ரகாசிக்கும்
திருவரங்கம் ஏ — ஸ்ரீரங்கமே யாம்.

கலவிருக்கையாவது பந்துக்களையும் பகவானையும் அநுபவித்துக் கொண்டு ஆனந்தமாயிருக்கை. (எ)

**8.** உரம்பற்றியிரணியனையுகிர்நுதியாலொள்ளியமார்புறைக்கவூன்றி
சிரம்பற்றிமுடியிடியக்கண்பிதுங்க்வாயலற(ர)த்தேழித்தான்கோயில்
உரம்பெற்றமலர்க்கமலமுலகளந்தசேவடிபோலுயர்ந்துகாட்ட
வரம்புற்றகதிர்ச்செந்நெல்தாள்சாய்த்துத்தலைவணக்கும்தண்ணரங்கமே. (419)

உரம் — ஹ்ருதயத்தை
பற்றி — தொட்டு
ஒள்ளிய — ப்ரகாசமான
மார்பு — அவனது மார்பானது
உறைக்க — அழுந்தும்படி
இரணியனை — ஹிரண்யாஸுரனை

| | |
|---|---|
| உகிர் நுதியால் | நகங்களின் முனைகளால் |
| ஊன்றி | அமுக்கி |
| முடி | கிரீடம் |
| இடிய | உடையும்படியும் |
| கண் | கண்கள் |
| பிதுங்க | பெயர்ந்து கிளம்பும்படியும் |
| சிரம் | அவன் தலையை |
| பற்றி | பிடித்துக்கொண்டு |
| வாய் அலற | —வாய் கதறும்படி |
| தெழித்தான் | —பிளந்தவனுடைய |
| கோயில் | கோயிலானது—, |
| உரம் பெற்ற | திண்மை பொருந்திய |
| மலர் கமலம் | மலர்களாயுள்ள தாமரைகள் |
| உலகு அளந்த | மேலுலகமளந்தபோதுள்ள |
| சே அடி போல் | சிவந்த திருவடியைப்போல் |
| உயர்ந்து காட்ட | உயர வளர்ந்து தோன்றும்படி |
| வரம்பு உற்ற | முடிவடைந்த |
| கதிர் | கதிர்களையுடைய |
| செந்நெல் | செந்நெற்பயிர்கள் |
| தாள் | தண்டுகளை |
| சாய்த்து | சாயவைத்து |
| தலை வணக்கும் | நுனியைத்தாழவைக்கும் |
| தண் அரங்கம் ஏ | குளிர்ந்த ஸ்ரீரங்கமே யாம். |

வயல்களிலெங்கும் காவிரிநீர் நிறைந்திருப்பதாலே செந்நெலோடு தாமரையும் சேர்ந்து வளர்கின்றன. செந்நெல்கதிர் முதிர்ந்தபிறகு நுனி வணங்கித் தாளும் மடிந்துவிடும். முன் செந்நெல்நடுவே மறைந்திருந்த தாமரைப் பூக்களெல்லாம், செந்நெற்பயிர்போல் சாயாமல் திடமாய் உயர்ந்தபடியே காணப்படுகின்றன. அப்போது அவை நீண்டு மேல்நோக்கியுள்ள தண்டில் நிற்பதாலே மேலுலகளந்த மாதவன் திருவடிபோல் தோற்ற மளிக்கின்றன வென்றபடி. அலர என்ற பாடத்தில் அலர்தல்—விரிதலாம். (அ)

9\. தேவுடையமீனமாயாமையாயேனமாயரியாய்க்குறளாய்
மூவுருவிலிராமனாய்க்கண்ணனாய்க்கற்கியாய் முடிப்பான்கோயில்,
சேவலோடுபெடையன்னம் செங்கமலமலரேறியூசலாடிப்
பூவணைமேல்துதைந்தெழுசெம்பொடியாடிவிளையாடும் புனலரங்கமே. **(420)**

| | |
|---|---|
| தேவுடைய | திவ்ய குணங்களை உடைய |
| மீனமாய் | மத்ஸ்யமாகவும் |
| ஆமையாய் | கூர்மமாகவும் |
| ஏனமாய் | வராஹமாகவும் |
| அரியாய் | நாரஸிம்ஹமாகவும் |
| குறளாய் | வாமனனாகவும் |
| மூ உருவில் இராமனாய் | மூன்று ரூபங்களாலே ராமனாகவும் (பரசுராம, ரகுராம, பலராமனாகவும்) |
| கண்ணனாய் | க்ருஷ்ணனாகவும் |
| கற்கியாய் | கல்கியாகவும் தசாவதாரம் செய்து |
| முடிப்பான் | ஸாதுபரித்ராணாதிகளை நடத்திவைப்பவனுடைய |
| கோயில் | கோயிலானது—, |
| சேவலொடு | ஆண் ஹம்ஸமும் |
| பெடை அன்னம் | ஹம்ஸஸ்திரீயும் |
| செம் கமலம் மலர் | செந்தாமரைப்பூவில் (நீரிலிருந்து) |
| ஏறி | சேர்ந்து ஏறியிருந்து |
| ஊசலாடி | ஊஞ்சலாடி |
| பூ அணை மேல் | புஷ்பமாகிற படுக்கையின் மேல் |
| துதைந்து | ஒன்றோடொன்று நெருங்கி |
| எழு செம் பொடி | அதில் எழுந்த பொடிகளை |
| ஆடி | தரித்து |
| விளையாடும் | விளையாடிக்கொண்டிருக்கும் |
| புனல் | நதியையுடைய |
| அரங்கம் ஏ | ஸ்ரீரங்கமே யாம். |

சே அடி சேவடி என்றாற்போலே தே உடைய தேவுடைய எனப்புணர்ச்சியில் வகரம் பெறப்படுமாகையால் எம்பெருமானுடைய தசாவதாரங்களும் க்ருபாமாத்ரத்தாலேற்படுகிறது சொல்லப்பட்டது. ‘ஸ்ருஷ்டா ஸஹ ஹ்ருஷீகேசேந தேவ்யா காருண்யரூபயா’ என்கிறபடி க்ருபாரூபியான பெரியபிராட்டி

யாரின் அவதாரமும் சேர்ந்திருப்பதைச் சொன்னதுமாம். இவ்விருவரின் அவதாரத்தைக் கருதினதாலேயே, மேலே சேவலோடு பெடையன்னமெனப் பணிக்கலாயிற்று. தே=கிருபை. தேவு=தேஜஸ்ஸு. என்னலுமாம். உருவில். ஏதுப் பொருளில் வந்த ஐந்தாம் வேற்றுமை. உருவின் எனவும் படிப்பர்.

10. செருவாளும்புள்ளாளன் மண்ணாளன்செருச்செய்யும்நாந்தகமென்னும்
ஒருவாளன்மறையாளனோடாதபடையாளன்விழுக்கையாளன்
இரவாளன்பகலாளனென்னையாளனேழுலகப்பெரும்புரவாளன்
திருவாளனினிதாகத்திருக்கண்கள்வளர்கின்றதிருவரங்கமே. (421)

| | |
|---|---|
| செரு ஆளும் | போர் நடத்தும் |
| புள் ஆளன் | பக்ஷிராஜனை வாஹனமாக ஆள்கிறவனும் |
| மண் ஆளன் | உலகங்களை ஆள்கிறவனும் |
| செரு செய்யும் | போரை நடத்துகிற |
| நாந்தகம் என்னும் | நந்தகமென்னப்படும் |
| ஒரு வாளன் | ஒப்பற்ற கத்தியையுடையவனும் |
| மறை ஆளன் | வேதங்களை ப்ரவர்த்திக்கிறவனும் |
| ஓடாத படை ஆளன் | எதிரிகளைக்கண்டு பின்னே ஓடாத சேனையாள்கிறவனும் (அதனால்) |
| விழுக்கு ஐ ஆளன் | கொழுப்புள்ள ஈச்வரர்களுக்கெல்லாம் ஈச்வரனும் |
| இரவு ஆளன் | ராத்திரியை யாள்கிறவனும் |
| பகல் ஆளன் | பகலை யாள்கிறவனும் |
| என்னை ஆளன் | என்னை யாள்கிறவனும் |
| ஏழு உலகம் பெரு புரவு ஆளன் | ஏழு லோகங்களிலும் பெரிய கொடையாளனுமான |
| திரு ஆளன் | ச்ரிய:பதி |
| இனிதாக | ப்ரியமாக |
| திருக்கண்கள் வளர்கின்ற | நித்ரை செய்தருளும் |
| | (கோயிலானது) |
| திருவரங்கமே | ஸ்ரீரங்கமே. |

விழுப்பொருளாவது சிறந்த பொருளென்றாற்போலே விழுக்கையாவது சிறந்த புஜம், அல்லது சிறப்பான கொடை எனவுமுரையாம். அப்போது புரவாளன் என்பதற்கு புரங்களை ஆள்கிறவன் என்றவாறு பொருளாம். இரவாளன் பகலாளன் என்பதற்கு ப்ரளயத்தையும் ஸ்ருஷ்டியையும், அஜ்ஞானத்தையும் ஜ்ஞானத்தையும் ஸங்கற்பிக்கிறவன் என்னலுமாம்.

இப்பாசுரம் ஏதேனுமொரு பதத்தைச் சேர்க்காதபோது தனிவாக்யமாகாதாகையாலே 'கோயிலானது' என்றாற் போல் ஏதேனும் சேர்த்துக் கொள்க. இல்லையேல், மேற்பாசுரத்தில் சோயில் என்ற வரையில் இத்துடன் சேர்த்து ஒரு வாக்யமாக அமைக்க. அங்கே தென்னாடும் என்பது முதலே, முன்பதங்களைச் சேர்க்காமலே கூட, ஒரு வாக்யமெனக் கருதலாம் போலும்.(ய)

11. கைந்நாகத்திடர்கடிந்தகனலாழிப்படையுடையான்கருதுங்கோயில்,
தென்னாடும்வடநாடும்தொழநின்றதிருவரங்கத்திருப்பதியின்மேல்
மெய்ந்நாவன்மெய்யடியான்விட்டுசித்தன்விரித்ததமிழுரைக்கவல்லார்,
எஞ்ஞான்றுமெம்பெருமானிணையடிக்கீழிணைபிரியாதிருப்பர்தாமே. (422)

| | |
|---|---|
| கை | சிறந்த தும்பிக்கையை யுடைய (தூக்கிக் கூவின) |
| நாகத்து | கேஜந்த்ராழ்வானின் |
| இடர் | ஆபத்தை |
| கடிந்த | அ'ழித்த |
| கனல் | அத்யுஷ்ணமான (ஜ்வாலாமாலியான) |
| ஆழி படை | திருவாழியென்னும் ஆயுதத்தை |
| உடையான் | உடையவனை பெருமான் |
| கருதும் | திருவுள்ள முகந்த |
| கோயில் | கோயிலாம், |
| தென் நாடு உம் | தென் தேசமும் |
| வட நாடு உம் | வடதேசமூம் |
| தொழ நின்ற | வாசி யற வணங்கும்படி உயர்ந்துள்ள |
| திருவரங்கம் திருப்பதி யின் மேல் | திருவரங்கமென்னும் திவ்யதேசம் விஷய மாக |
| மெய் நாவன் | உண்மை உரைக்கும் நாக்கை யுடையனும் |
| மெய் அடியான் | உண்மை அடிமை செய்ப வனுமான |
| விட்டுசித் தன் | ஸ்ரீ விஷ்ணுசித்தன் (பெரியாழ்வார்) |
| விரித்த | நன்கு செய்துள்ள |
| தமிழ் | தமிழிலான திருமொழியை |
| உரைக்க | அப்யஸிக்க |
| வல்லார் | வல்லமை யுள்ளவர்கள் |
| எ ஞான்றும் | எப்போதும் |
| எம்பெரு மான் | எம்பெருமானுடைய |
| இணை அடி கீழ் | ஒன்றுக்கொன்றே ஒத்த திருவடி யிரண்டின் கீழே |
| இணை பிரியாது | இசைவு அழியாமல் |
| இருப்பர் தாம் | இருப்பவராவர். |

தென்னாடும் வடநாடும் தொழநின்ற. அரங்கன் தற்காலம் எழுந்தருளி யிருக்கும் தென்னாட்டிலுள்ளார்போலே வடநாட்டிலுள்ளாரும் வாசியறத் தொழாநிற்கின்றனர். அதற்கு இவருடைய மேன்மையும், அயோத்யாபதிக ளும் அவரில் இராமனும் ஆராதித்த அர்ச்சையானமையும் காரணமாம். மெய்ந் நாவன். எப்பொழுதுமே மெய்யே சொல்லும் நாவுடைய இவரது திருவரங்கத் திருமொழிகளில், 'சிறிதும் கற்பனை கிடையாது. எல்லாம் உண்மை' யென்ற சிறப்புண்டு என்றபடி. முன் திருமொழியிலே பாகவதர்கள் திரண்டுள்ள திருவரங்கத்தைப் பற்றிய தமிழ்மாலைவல்லார்க்கு பாகவததாஸ்யமென்ற பல னைக் கூறி, இத் திருமொழி தொடங்கினதும், 'திருவரங்கற்கன்றியும் மற்றொரு வர்க்காளாவரே' என்றருளி மேற்பாசுரத்திலே அதனை விவரித்து மருளினர், அங்ஙனம் திருவரங்கற்காளாவதை யிசைவதை யிவ்விரண்டாந் திருமொழியை யப்யஸித்துப் பெறுங்கோளென நிகமத்திலுபதேசித்தருளினரென்க. (கக)

ப்ரபந்தரக்ஷையில் பெரியாழ்வார் திருமொழி **4-9.** மரவடியை உரை முற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானர் தேசிகன் திருவடிகளே சரணம்.

---

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானுர் தேசிகன் திருவடிகளே சரணம்.

## பெரியாழ்வார் திருமொழி—4, 10

# துப்புடையாரை.

இப்படித் திருவரங்கத் திருப்பதியில் சிறந்திடுபட்ட ஆழ்வார், இருள கற்று மெறி கதிரோன் மண்டலத் தூடேற்றி வைத்தேணிவாங்கும் அத்திருவ ரங்கனையே, 'கடைத்தசையில் நீ என்னைக் காக்கவேண்டும்' எனத் தம் கரண களேபரங்கள் குணப்பட்டிருக்கும் காலத்திலேயே கவனத்துடன் கோரி யருளுகிருர்.—

1. துப்புடையாரையடைவதெல்லாம்சோர்விடத்துத்துணையாவரென்றே
ஒப்பிலேனுகிலும்நின்னடைந்தேன் ஆனைக்குநீயருள்செய்தமையால்
எய்ப்பென்னைவந்துநலியும்போதங்கேது நானுன்னைநினைக்கமாட்டேன்
அப்போதைக்கிப்போதேசொல்லிவைத்தேனரங்கத்தரவணைப்பள்ளியானே. (423)

| | |
|---|---|
| அரங்கத்து | ஸ்ரீரங்கத்தில் |
| அரவு அணை | ஆதிசேஷனுகிற படுக்கையில் |
| பள்ளி யானே | பள்ளிகொண்டுள்ள பெருமானே! |
| துப்பு உடை யாரை | ஸாமர்த்யம் நிறைந்த வரை |
| அடைவது எல்லாம் | உலகில் யார் சரண மடைவதும் |
| சோர்வு இடத்து | தாங்கள் சக்தியற்றிருக் கும் விஷயத்தில் |
| துணை ஆவர் | ஸஹாயமாயிருப்பர் |
| என்று ஏ | என்கிற உறுதியாலன்றே? |
| ஒப்பு இலேன் | பாபிகளில் நான் நிகரற்றவன் |
| ஆகிலும் | ஆனுலும் |
| நீ ஆனைக்கு | நீ கஜேந்த்ராழ்வானுக்கு |
| அருள் செய் தமையால் | ஓடிவந்து அனுக்ரஹம் செய்ததால் (சரணுகதிப்ரபாவம் தெரிந்து) |
| நின் | உன்னை |
| அடைந்தேன் | சரணமாகப் பற்றினேன். |
| எய்ப்பு | பலவீனமானது |
| வந்து | வந்து சேர்ந்து |
| என்னை | மரணமடையும் தருவாயி லிருக்கும் என்னை |
| நலியும்போது | வருத்தும்போது |
| அங்கு | பலர் பல கேட்கு மவ்வி டத்திலே |
| நான் உன்னை | அஸ்வாதீனனுன நான் அப்ரத்யக்ஷனுன உன்னை |
| ஏதும் | சிறிதும் |
| நினைக்க மாட்டேன் | நினைக்க ஸாத்யமாகாது. |
| அப்போ தைக்கு | அந்த ஸமயத்திற்கு பதிலாக |
| இப்போது ஏ | ஸ்வாதீனயாயுள்ள இந்த ஸமயத்திலேயே |
| சொல்லி வைத்தேன் | உன் திருநாமங்களைச் சொல்லி இது அப்போது உபயோகப்படு மென் மென்றிருக்கிறேன் |

சரணுகதியென்பது இந்தப்பலனைத்தான் கொடுக்கும், இதைக்கொடுக் காது என வரம்பு கிடையாதே. ஆகவே கடைத்தசையில் சொன்னுல்வரும் பலனை அப்போது சொல்ல முடியாத எனக்கு அப்போது என் சொல்லை யெதிர்பாராமல் தரவேண்டுமென்று இப்போது நினைத்து நான் நாமத்தைச்

சொல்லி வேண்டிக்கொண்டால் நீ அதை மறுக்கமுடியுமோ? உனக்கு அதில் ஸாமர்த்தியமில்லையா? நான் அப்போது சோர்வுற்றவனென்பதில் தான் ஐய முண்டோ? ஆனால் நீ என்னை, 'மஹாபாபியாயிற்றே நீ' என்னலாம். அதனால் தான் உன்னை நானடைந்தது. எவ்வளவோ நற்குணங்கள் உள்ள கஜேந்த்ராழ்வானைக் கூட அவனுடைய மற்ற வியாபாரங்களோ, அமரர்களோ காக்க முடியவில்லை. அவனுடைய அவ்வற்பமான பாபங்களையே பிறர் போக்கமுடியாத போது என்னுடைய இத்தகைக் கொடிய பாபங்களைக் களைய யார் வல்லார்? ஆகவே களைகண் மற்றிலேன் துப்புடைய வுன்னையே தொழுது நின்றேன். அப்போதைக் கிப்போதே சொல்லிவைத்தேன். அப்போது நான் உன்னை நினைக்காவிட்டாலும், 'ௐஹம் ஸ்மராமி மத்3ப4க்தம் நயாமி பரமாம் க3திம்' என்கிற கணக்கிலே நீயே நினைத்து என் ப்ரயத்னமின்றியே உன் தயையினாலேயே உன்னை நான் அனுபவிக்கும் வண்ணம் செய்தருளுவாய். இப்போது சொன்னதை நீ உன் மனதில் வைத்துக்கொள். 'ஊணம் ஷூவ ஜஸிவ ஹெ ஹுூ டிய ஜூாவலைவ உதி' என்கிறவனாயிற்றே நீ. ஆகவே வைத்தேன் என்கிறேனென்றபடி.

இங்கே துப்புடையாரை, துணையாவர் என்கிற பன்மையை ஒருமையாக்கி, படர்க்கையையும் விட்டு, 'எல்லாம் சோர்விடத்து = எல்லா இந்திரியங்களும் துர்பலமான சரமதசையிலே, ஸாமர்த்தியமுள்ள உன்னை யடைவது, துணையாவாய் நீ என்றதாலே' என வுரைக்கின்றனர். ஒப்பு இலேன். சக்தியுள்ள யோகிகளோடு நான் ஒப்பில்லாதவன். ஆகிலும் = அப்படி முக்யோபாயம் செய்ய மாட்டாதவனாகிலும் உன்னைச் சரணமடைந்தேன், இதுவு முபாயமென்று கஜேந்த்ரமோக்ஷத்திலே கண்டதால் எனவுமுரைக்க. 'ஆனைக்கு நீ' எனவும், 'ஆனைக்கும் நீ' எனவும் பிரிக்கலாம். சாஸ்த்ரவச்யமல்லாத சாதியிற் பிறந்த ஆனைக்கே ப்ரபத்திசாஸ்த்ரார்த்தம் பலிக்குமாகில் எனக்கு ஏன் பலியாதென்றது. (க)

அப்போதென்னை நீ சொன்ன வுனக்கென்ன பலன் என்றெம்பெருமான் வினவ, 'சொன்னால் வரும் பலன் தூமணிவண்ணனான உனக்காளாவது. அது போக; சொல்லாமலிருந்தால் வரும் தீங்கு மிகப்பெரிது. யமபடர்களப் போதென்னை இழுத்துச்செல்வார்களே. ஆகவே நீ என்னை யருள்வாய்' என விளக்க மேற்பாசுரங்கள்—

**2.** சாமிடத்தென்னைக்குறிக்கொள்கண்டாய் சங்கொடுசக்கரமேந்தினனே,
நா மடித்தென்னை யனேக தண்டஞ் செய்வதாநிற்பர்நமன்றமர்கள்,
போமிடத்துன்திறத்தெத்தனையும்புகாவண்ணம் நிற்பதோர்மாயைவல்லை,
ஆமிடத்தேயுன்னைச்சொல்லிவைத்தே னரங்கத்தரவணைப்பள்ளியானே! **(424)**

சங்கொடு — ஸ்ரீ பாஞ்சசன்னியத்தையும்
சக்கரம் — திருவாழியையும்
ஏந்தினனே! — திருக்கைகளில் கொண்டவனே!

அரங்கத்தரவணைப் பள்ளியானே!
சாம் இடத்து என்னை — நான் மரணமடையும் போது என்னை
குறிக்கொள் — நினைத்துக்கொள். (இல்லையாகில்)

| | |
|---|---|
| நமன் தமர்கள் | யமனைச்சேர்ந்த கிங்கரர்கள் |
| நா மடித்து | சினந்து நாக்கை மடித்துக் கொண்டு |
| என்னை | எனக்கு |
| அனேகம் தண்டம் | பல தண்டனைகளை |
| செய்வதா நிற்பர் | செய்யும் வகையிலே சித்தமாயிருப்பர். |
| போம் இடத்து | அவர்களுடன் நான் போனால் (நீயும்) |
| உன் திறத்து | உன் விஷயத்திலே |
| எத்தனையும் | சிறிதளவும் |
| புகா வண்ணம் நிற்பது | மனம் ப்ரவேசிக்காதபடி செய்யும் |
| ஓர் | ஒப்பற்ற |
| மாயை | மாயையை |
| வல்லை | ஸ்ருஷ்டிக்க வல்லவனாவாய். (ஆகையால்) |
| ஆம் இடத்தே | இப்போது சொல்லலாம் போதே |
| உன்னை சொல்லி வைத்தேன் | அதற்காக உனது நாமங்களைச் சொல்லி வைத்தேன். |

யமபடர்கள், மரணகாலத்திலே நாராயணத்யான ஸங்கீர்த்தனம் செய்பவர்களிடமிருந்து விலகுவர். மற்றவரைத் தாக்குவர். ஆகையால் அப்போது முன் சொன்னதைத் தெரிவித்து அவர்களை விலக்கவேண்டுமென்றபடி. இதை அஜாமிளோபாக்யானத்தில் காண்க.

கண்டாய் என்பது இடைச்சொல். உன்னைச்சொல்லிவைத்தேன் என்பதற்கு, 'உன்நாமமெல்லாம் சொல்லினேன்' என்று மேற்பாசுரத்திற் சொன்னபடியே பொருள் கொள்க. திருப்பல்லாண்டு தொடங்கி இதறுதியாகச் சொன்மாலைகளைச் சொல்லி வைத்ததுமாம். 'சாமிடத் தென்னைக் குறிக்கொள்' என்று சொல்லிவைத்தேனெனப் பொருளன்று. இது அப்போது சொல்லவிருக்கும் சொல்லன்றாகையால் அப்போதைக்கிப்போது சொல்லும் சொல்லில் இது சேராது. குறிக்கோள் என்று சொல்லுக்குப் பலனை பிரார்த்தித்தபடி. (உ)

3. எல்லையில்வாசல் குறுகச்சென்றால் எற்றிநமன்றமர்பற்றும்போது
நில்லுமினென்னுமுபாயமில்லை நேமியுஞ்சங்கமுமேந்தினனே!
சொல்லலாம்போதேயுன் நாமமெல்லாம் சொல்லினேனென்னைக்
குறிக்கொண்டென்றும்
அல்லற்படாவண்ணங்காக்கவேண்டு மரங்கத்தரவணைப் பள்ளியானே! **(425)**

| | |
|---|---|
| அரங்கத்தரவணைப்பள்ளியானே! | |
| எல்லையில் வாசல் | வீட்டின் முதலிலிருக்கும் வாயிலானது |
| குறுக | கதவைச் சிறிது சார்த்துவதாலே சிறுக |
| எல்லையில் சென்றால் | மரணதசைக்கு நெருங்கினால் (ஸமயம் பார்த்து) |
| நமன்தமர் | யமபடர்கள் |
| எற்றி | அடித்து |
| பற்றும் போது | பிடிக்கும்போது |
| நில்லும் | விலகி நில்லுங்கோள் |
| என்னும் | என்று சொல்லும் |
| உபாயம் | வழி |
| இல்லை | கிடையாது. |
| நேமி உம் | திருவாழியையும் |
| சங்கம் உம் | ஸ்ரீபாஞ்சசன்னியத்தையும் |
| ஏந்தினனே | திருக்கைகளில் கொண்டவனே! |
| சொல்லல் ஆம் போதே | சொல்ல முடிந்த இக்காலத்திலேயே |
| உன் நாமம் எல்லாம் | உனது திருநாமங்கள் யாவற்றையும் |
| சொல்லினேன் | வாய் திறந்து உச்சரித்தேன். |
| என்னை | இப்படிக்கொத்த அடியேனை |
| குறிக்கொண்டு | ஸமயத்தில் ஜ்ஞாபகம் வைத்து |
| என்றும் | எல்லாத் தசையிலும் |
| அல்லல் படா வண்ணம் | வருத்தப்படாத படி. |
| காக்க வேண்டும் | ரக்ஷித்தருளவேண்டும். |

எல்லையில் இத்யாதி. மரணமடையும் தருவாயிலுள்ளவனை நடையிற் கொண்டுவிட்டு கடைவாயிலின் கதவைச் சிறிது சாத்துவது வழக்கம். அது இங்குரைக்கப்பட்டது. 'எல்லையில் மரணமடைந்தபோது வாசல் யமபுர வாசல் குறுக இவன் சென்றால்' எனவு முரைப்பர். (௩)

4. ஒற்றைவிடையனும் நான்முகனுமுன்னையறியாப் பெருமையோனே
முற்றவுலகெல்லாம் நீயேயாகி மூன்றெழுத்தாயமுதல்வனேயோ
அற்றதுவாணாளிவற்கென்றெண்ணி யஞ்சநமன்றமர்பற்றலுற்ற
அற்றைக்கு நீயென்னைக்காக்கவேண்டு மரங்கத்தரவணைப் பள்ளியானே(**426**)

| | | | |
|---|---|---|---|
| ஒற்றை | தனிமையான ஒப்பற்ற | ஆய | ஆன |
| விடையன் உம் | விருஷபத்தை வாஹன மாகவுடைய ருத்ரனும் | ஓ முதல் வனே | ஸர்வகாரணமான பர வாஸுதேவனே ! |
| நான்முகன் உம் | பிரமனும் | இவற்கு | இவனுக்கு |
| உன்னை அறியா | உன்னை யறியாதபடிக் குள்ள | வாழ் நாள் | உயிருடனிருக்கவேண்டும் நாள் |
| பெருமை யோனே | பெருமை யுடையவனே! | அற்றது | ஆய்விட்டது |
| நீயே | அந்தர்யாமியான நீயே | என்று எண்ணி | என்று கணக்கிட்டு |
| உலகு எல் லாம் | எல்லா லோகங்களுமாக | அஞ்ச | எல்லோரும் அஞ்சும்படி |
| முற்ற | ஒன்றுவிடாமல் | நமன் தமர் | யமபடர்கள் |
| ஆகி | ஆனவனாய் | பற்றல் உற்ற அற்றைக்கு | பிடிக்கும் அந்த நாளிலே |
| மூன்று எழுத்து | த்ரிமூர்த்திகளையும் த்ரிவ்யூஹங்களையும் சொல்லும் மூன்று ப்ரணவா க்ஷரங்களாகவும் | | நீ என்னை காக்கவேண்டும். |

யமபடர்களிடம் பயப்படும் நீ, நித்ய ப்ரளயத்தை நடத்தும் நமனுக்கு மேலானவனாய் நைமித்திகம், ப்ராக்ருதம் எனப்படும் அவாந்தரப்ரளய மஹா ப்ரளயங்களை நடத்தும் ஸம்ஹார தேவதையான ருத்ரனை யாச்ரயித்து உன்னை மீட்டுக் கொள்ளலாமே என்று வினவ, இப் பாசுரத்தாலதற்கு மறுமொழி மொழிந்தனர். அந்த ருத்ரனுக்கும், அவனுக்குத் தந்தையான பிரமனுக்கும் புத்திக்கெட்டாத பெருமை யுடையவன் நீ. த்ரிமூர்த்திகளும் ஸமர்களென்றும், த்ரிமூர்த்திகளு மொன்றென்றும் நினைப்பார் வேதாந்த மறியாதவராவர். உத்க்ருஷ்டம், நிக்ருஷ்டம், சேதநம், அசேதநம் என்றாற் போலுள்ள பேதங்களிருக்க அவை யெல்லாம் நீயே யென்கிற வேதவாக்யங்களுக்கும், ருத்ரனும் பிரமனும் நீயே யென்கிற வாக்யங்களுக்கும் யாதொரு வாசியும் கிடையாது. நீ ஸர்வாந்தர்யாமி. த்ரிமூர்த்திஸாம்யம் சொல்வதும், ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களென்னும் உலகத்தைச் சேர்ந்த மூன்று கார்யங்களைப் பிரித்து ஸமமாகக் கொண்டதாலே ரகுயதுவம்சங்களி லவதரித்த ராமக்ருஷ்ணர்களான உன்னை முன்னும் பின்னுமுள்ள அரசரோடு ஸமமாக நினைத்தாற் போலே விஷ்ணுவாய் அவதரித்த உன்னை ஸமமாக நினைத்ததால் வந்த மோஹத்தினாலானதத்தனை. அம்மூவுருவுக்கும் அவற்றிற்கு முன்னே தோன்றி ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களை நடத்தும் ப்ரத்யும்நாதி வ்யூஹங்களுக்கும் வாசகமாய் மூன்று வேதங்களின் ஸாரமுமான மூன்றெழுத்தாக வுமிருந்து ஸர்வகாரண

மாய் பரமபதத்திலே நித்ய முக்த ஸேவ்யனாய் விளங்கும் பரவாஸுதேவ னாயிற்றே நீ. உன்னை யாச்ரயிக்காமல் மோக்ஷம் பெறமுடியுமோ வென முன் னிரடிகளின் கருத்து. 5–3–6. 'எருத்துக் கொடியுடையானு' மென்ற பாசுரத் தையு மிங்கனுஸந்திக்க. (ச)

ருத்ரனுக்கு யமன் வச்யனாயிருப்பது, உலகில் ராஜஸேவையி லிறங்கின வர்களில் மேலதிகாரிக்குக் கீழதிகாரி வச்யனாயிருப்பது போன்றதாகும். அது நடுவே சிறிது காலம் ஏற்பட்டது. நீயே அந்த ருத்ரனுக்கும் தந்தையான பிர மனையும், ருத்ரவச்யனான யமனையும் ஸ்ருஷ்டித்தவனாகையாலே ஸர்வாவஸ்தை யிலும் உனக்கே யமன் வச்யனாவான். பிரமனையும் அவன் மூலமாக வுலகையும் நீயே ஸ்ருஷ்டித்தவனாகையால், 'யமனை ஸ்ருஷ்டித்தவன் பிரமனே யாவான். நீ யாகாய்' என்று சிலர் நினைப்பதும் பிசகு என்றருளிச் செய்கிறார்—

**5.** பையரவினணைப்பாற்கடலுள் பள்ளிகொள்கின்ற பரமமூர்த்தி
உய்யவுலகுபடைக்கவேண்டி உந்தியில்தோற்றினாய் நான்முகனை,
வையமனிசரைப் பொய்யென்றெண்ணிக் காலனையுமுடனேபடைத்தாய்
ஐயவினியென்னைக்காக்கவேண்டு மரங்கத்தரவணைப்பள்ளியானே. (427)

| | |
|---|---|
| பால் கடலுள் | க்ஷீரஸமுத்ரத்திலே |
| பை | (மேலே விரித்த) படங்களை யுடைய |
| அரவின் | ஆதிசேஷனின் |
| அணை | படுக்கையான பாகத்தில் |
| பள்ளி கொள்கின்ற | சயனித்தருளும் |
| பரமமூர்த்தி | திவ்ய மங்கள விக்ரஹ முள்ளவனே! (அதற்கு முன் ஏகோதகப்ரளய ஸமுத்ரத்திலே) |
| உய்ய | ஜீவராசிகள் உஜ்ஜீவிப்ப தற்காக |
| உலகு | லோகங்களை |
| படைக்க | நீ ஸ்ருஷ்டிக்க |
| வேண்டி | கருணை கொண்டு (அதற்கு த்வாரமாக) |
| நான்முகனை | பிரமனை |
| உந்தியில் | உனது திருவயிற்றில் (நாபிக்கமலத்தில்) |
| தோற்றினாய் | ஸ்ருஷ்டி செய்தவனே! |
| வையம் | உலகத்திற் பிறந்த |
| மனிசரை | மனித ஜாதியரை |
| பொய் | தப்பு (செய்பவர்) |
| என்று எண்ணி | என்று தீர்மானித்து (அவர்களை சிக்ஷிக்க) |
| உடனே | கூடவே |
| காலனை உம் | நமனையும் |
| படைத்தாய் | ஸ்ருஷ்டித்தவனே! |
| ஐய | என் அப்பனே! |
| | அரங்கத்தரவணைப் பள்ளியானே! |
| இனி | இப்படி தெளிந்து நான் நாமங்களைச் சொன்ன பிறகு |
| | என்னை காக்கவேண்டும் |

பரமமூர்த்தி என்பது விளிச்சொல்லாம். தோற்றினாய், படைத்தாய் என் பன வினைமுற்றுமாம். (ரு)

**6.** தண்ணனவில்லை நமன்றமர்கள் சாலக்கொடுமைகள் செய்யாநிற்பர்
மண்ணொடுநீருமெரியுங்காலும் மற்றுமாகாசமுமாகிநின்றாய்
எண்ணலாம்போதேயுன்நாமமெல்லாமெண்ணினே னென்னைக்குறிக்
கொண்டென்றும்,
அண்ணலே நீயென்னைக்காக்கவேண்டு மரங்கத்தரவணைப்பள்ளியானே! (428)

| | |
|---|---|
| மண்ணொடு | ப்ருதிவியாகவும் |
| நீர் உம் | ஜலமாகவும் |
| எரி உம் | தேஜஸ்ஸாகவும் |
| கால் உம் | காற்றாகவும் |

ஆகாசம் உம் — ஆகாசமாகவும்
மற்றும் — பஞ்சபூத சரீரத்தைச் சேர்ந்த ப்ராணேந்த்ரியாதிகளாகவும்
ஆகி நின்றாய் — பிறந்து நிற்பவனே!
அண்ணலே — ஸ்வாமியே!
அரங்கத்தரவணைப் பள்ளியானே!
நமன் தமர்கள் — யமபடர்கள்
சால — மிகவும்
கொடுமைகள் — தீங்குகளை
செய்யா நிற்பர் — செய்துகொண்டேயிருப்பார்.
(அவர்களுக்கு)
தண்ணனவு — (குளிர்ச்சி) சாந்தமென்பது
இல்லை — கிடையாது.
(ஆகவே)
எண்ணல் ஆம் போதே — ஜபிக்க முடிந்தபோதே
உன் — உனது
நாமம் எல்லாம் — திருநாமங்கள் (மந்த்ரங்கள்) எல்லாவற்றையும்
எண்ணினேன். — ஜபியா நின்றேன்.
என்னை குறிக்கொண்டு — என்னை மறந்துவிடாமல்
என்றும் — எப்போதும்
நீ என்னை காக்கவேண்டும்.

தண்ணெனவு எனவும் பாடம். பொருளொன்றே. மரணமடையும் காலத்திலே பஞ்சபூதங்களும் ப்ராணேந்திரியங்களும் பிரிந்துவிடுகின்றன. ஜீவனை ஹிம்ஸிக்க யமகிங்கரர்கள் வெகு உக்ரமாகிறார்கள். ஆகவே இப்போதே உன் நாமங்களை எண்ணினேனென்றபடி. எண்ணுவது நினைப்பதுமாம். (சா)

7. செஞ்சொல்மறைப் பொருளாகிநின்ற தேவர்கள்நாயகனே யெம்மானே
எஞ்சலிலென்னுடையின்னமுதே யேழுலகுமுடையாயென்னப்பா
வஞ்சவுருவின்நமன்றமர்கள் வலிந்துநலிந்தென்னைப் பற்றும்போது
அஞ்சலமென்றென்னைக்காக்கவேண்டு மரங்கத்தரவணைப்பள்ளியானே. **(429)**

செம் சொல் — அழகிய சொற்களையுடைய
மறை — எல்லா வேதங்களுக்கும்
பொருள் ஆகி நின்ற — முக்யமான அர்த்தமாகி விளங்கும்
தேவர்கள் நாயகனே — தேவாதி தேவனே!
எம்மானே — எனது ஸ்வாமியே!
என்னுடை
எஞ்சல் இல் — குறை வற்ற
இன் — இனிய
அமுதே — அம்ருதமே!
ஏழு உலகு உம் — ஈரேழு லோகங்களையும்
உடையாய் — உடையவனே!
என் அப்பா — எனது தந்தையே!
அரங்கத்தரவணைப் பள்ளியானே!
வஞ்சம் — வஞ்சனையான
உருவு இன் — உருவமுடைய
நமன் தமர்கள் — யமபடர்கள்
வலிந்து — பலாத்கரித்து
நலிந்து — வருத்தி
என்னை
பற்றும் போது-பிடிக்கும்போது
அஞ்சல் — அஞ்சேல் = பயப்பட வேண்டாம்
என்று — என்று தெரிவித்து
என்னை காக்கவேண்டும்.

செஞ்சொல். சொல்லுக்குச் செம்மையாவது—தேவதைகளையும், அந்தர்யாமியான பரமாத்மாவையும் அவ்வவ்வதிகாரிக்குத் தகுந்தபடி சொல்லி அதற்குத் தக்க பலனையு மளிக்க வல்லமை; புருஷதோஷ மற்றிருக்கை; பொருளறியாதார்க்கும் பாராயண மாத்திரத்திலே பலனளிக்கை; எல்லாக்கல்பங்களிலும் எம்பெருமானின் திருவுள்ளத்தை உரைத்து நிற்கை போன்ற குணம். எஞ்சலித்யாதி. நான் உன் திருநாமங்களைச் சொல்லிக் கூவுவது, நமன் தமர்கள் நலிவதை நீக்குவதற்கு மாத்திர மன்று; அமுதவெள்ளமான உன் அனுபவத்திலுள்ள அவாவினாலும், அதனாலேயே சொல்வதும் சுவைத்திருப்பதாலுமெனக் கருத்தாம். அஞ்சலம். அம் சாரியை. (எ)

நமன்தமர்கள் சாலக் கொடுமைகள் செய்வதை உதாஹரியா நின்று கொண்டு, நீ காப்பது உபயவிபூதிகளுடன் உன்னை யனுபவிப்பிக்கிறது மாக வேண்டு மென்ற திருவுளங்கொண்டு அருளுகிறார்—

8. நானேதுமுன்மாயமொன்றறியேன் நமன்றமர்பற்றி நலிந்திட்டிந்த
ஊனேபுகேயென்று மோதும்போதங்குன்னை நானொன்று நினைக்கமாட்டேன்;
வானேய்வானவர்தங்களீசா மதுரைப்பிறந்த மாமாயனேயென்
ஆனாய்நீயென்னைக்காக்கவேண்டு மரங்கத்தரவணைப்பள்ளியானே. (430)

| | |
|---|---|
| வான் ஏய் | பரமபதத்தில் பொருந்திய |
| வானவர் தங்கள் | நித்ய முக்தர்களுக்கு |
| ஈசா | நாதனே ! |
| மதுரை | வடமதுரையில் |
| பிறந்த | அவதரித்த |
| மா மாயனே | ஆச்சர்ய சக்தியை மிக வுடையனே ! |
| என் ஆனாய் | எனது யானையானவனே ! என் மாமாயனே யானவனே |
| அரங்கத்தரவணைப் பள்ளியானே ! | |
| நான் | அடியேன் |
| ஒன்று | ஒன்றான, தனிப்பட்ட |
| உன் மாயம் | உன் ஆச்சர்ய சக்தியை |
| ஏதும் | சிறிதும் |
| அறியேன் | அறிகிறேனில்லை. |
| நமன் தமர் | யமபடர்கள் |
| பற்றி | பிடித்து |
| நலிந்து | வருத்தி |
| இட்டு | தள்ளி |
| ஏ | ' அடே ! |
| இந்த ஊனே | பாபிஷ்டமான இந்த உடலிலேயே |
| புகு | ப்ரவேசித்திரு ' |
| என்று மோதும் போது | எனச் சொல்லி நாரக சரீரமொன்றுக்கு நெட்டினபோது |
| அங்கு | அந்த கோரமான இடத்திலே |
| ஏதும் | சிறிதும் |
| நான் உன்னை | |
| நினைக்க மாட்டேன் | நினைக்க சக்தியுள்ளவனாகேன். |
| நீ என்னை காக்கவேண்டும். | |

ஊனே புகே. இந்த 'ஏ' இரண்டுக்கும் பொருளுண்டு, புகேய் என்று கொண்டு புகு, ஏய், எனவும் பிரிக்கலாம். ஏய்=பொருந்து என்றதாம். (அ)

மதுரைப் பிறந்த மாமாயனே என்று விளித்ததின் கருத்தை விளங்கச் செய்யக் கருதி யருளிச் செய்கிறார்.—

9. குன்றெடுத்தாநிரைகாத்தவாயா கோநிரைமேய்த்தவனே யெம்மானே
அன்றுமுதலின்றறுதியா வாதியஞ்சோதி மறந்தறியேன்
நன்றும்கொடியநமன்றமர்கள் நலிந்துவலிந்தென்னைப்பற்றும்போது
அன்றங்கு நீயென்னைக்காக்கவேண்டு மரங்கத்தரவணைப்பள்ளியானே. (431)

| | |
|---|---|
| குன்று எடுத்து | கோவர்தன மலையைத் தூக்கி ஏந்தி |
| ஆ நிரை | பசுக்கூட்டங்களை |
| காத்த | ரக்ஷித்த |
| ஆயா | ஆயனே ! (கோபனே) |
| கோ நிரை | பசுக்கூட்டங்களை |
| மேய்த்தவனே-தானே மேய்த்து வந்தவனே ! | |
| எம்மானே | எனது மஹானே ! |
| அரங்கத்தரவணைப்பள்ளியானே ! | |
| அன்று முதல் | அந்த க்ருஷ்ணவதாரானுபவத்தி லிழிந்தது முதல் |
| இன்று அறுதி ஆ | அரங்கனே என்றழைக்கும் இந் நாள் வரையிலாக |
| ஆதியம் சோதி | ஆதிமூலமான ஜ்யோதிஸ்ஸான உன்னை |
| மறந்து அறியேன் | நான் மறந்ததாக எனக்குத் தெரியவில்லை. |
| நன்றும் | மிகவும் |
| கொடிய | க்ரூரர்களான |
| நமன் தமர்கள் | யமபடர்கள் |
| நலிந்து | வருத்தி |
| வலிந்து | பலாத்காரமாக |

| | | | |
|---|---|---|---|
| என்னை பற்றும் போது, அன்று | என்னைப் பிடிக்கும் அந் நாளிலே | அங்கு | அந்த விடத்திலேயே |
| | | | நீ என்னை காக்கவேண்டும். |

அன்று முதல். திருப்பல்லாண்டு தொடங்கி ஸ்ரீ க்ருஷ்ணனாய் நீ அவதரித்ததை வர்ணித்தனுபவிக்க வாரம்பித்தது முதல். அன்றி, நானே முன் அசோதையாகப் பிறந்திருந்து இப்போது விட்டுசித்தனாய் வந்துதித்தேன். நீ மதுரையிற் பிறந்து மாமாயனாய் என்னிடம் வந்து சேர்ந்தாயே, அப்போது உன் அனுபவத்திலிழிந்த நான் இன்றுவரை உன்னை மறந்திலே னென்றதுமாம். (௯)

நமன்தமரின் கொடுமைகளினின்று காக்கவேண்டுமெனக் கோரும் இத் திருமொழிக்கு தூமணிவண்ணனுக்காளாவதைக் கோருவதிலே தாத்பர்யமெனக்காட்டா நின்றுகொண்டு பலனருளிச் செய்கிறார்.—

**10.** மாயவனைமதுசூதனனை மாதவனைமறையோர்களேத்தும்
ஆயர்களேற்றினை யச்சுதனை யரங்கத்தரவணைப்பள்ளியானை
வேயர்புகழ்வில்லிபுத்தூர்மன்விட்டுசித்தன் சொன்ன மாலைபத்தும்
தூயமனத்தனராகிவல்லார் தூமணிவண்ணனுக்காளர்தாமே. **(432.)**

| | | | |
|---|---|---|---|
| மாயவனை | ஆச்சர்ய குணாதிகளை யுள்ளவனும், | விட்டு சித்தன் | ஸ்ரீ விஷ்ணு சித்தன் (பெரியாழ்வார்) |
| மது சூதனனை | மதுவை ஸம்ஹரித்தவனும், | சொன்ன | இயற்றின |
| மாதவனை | ச்ரிய: பதியும், | மாலை பத்து உம் | இப்பத்துப் பாசுரங்களையும் |
| மறையோர்கள் | வேதமோதினவர்களால் | தூயமனத்தனர் ஆகி | சுத்தமான மனமுடையராய்க்கொண்டு |
| ஏத்தும் | ஸ்தோத்ரம் செய்யப்பெற்ற | வல்லார் | அப்யஸித்தவர் |
| ஆயர்கள் ஏற்றினை | கோபர்ஷபனும் (கோப ச்ரேஷ்டனும்) | தூமணி வண்ணனுக்கு | நல்ல நீலமணி நிறத்தானுக்கு |
| அச்சுதனை | ஆச்ரிதரைவிடாதவனுமான | ஆளர் தாமே. | எப்போதும் தாஸர்களாகவே யிருப்பர். |
| அரங்கத்தரவணைப் பள்ளியானை | | | |
| வேயர் | வேயர் குலத்தவரால் | | |
| புகழ் | புகழப்பெற்ற | | |
| வில்லி புத்தூர் மன் | ஸ்ரீ வில்லிபுத்தூருக்கு ஸ்வாமியான | | |

எஞ்ஞான்று மெம்பெருமானிணையடிக் கீழிருக்க வாசையைப் பெற முன் திருமொழியை யருளிச்செய்து, இதர வைராக்யத்தோடு அவ்விசைவுற்றார் இத்திருமொழியை யப்யஸித்து அவனுக்கு ஆளாகலாமென விங்கே வருளினாரென்க.

மூன்றும்பத்தின் முடிவிலே இராம விருத்தாந்தத்திலே நின்ற ஆழ்வார், ராமாத்யவதாரங்களை யெடுப்பானவனொருவனென்று அவனையே பல வுருவங்களிலே ஸேவிக்க விசைந்து, ஆகவே அர்ச்சைகளிலிழிந்து, திருமாலிருஞ்சோலை, திருக்கோட்டியூர், திருக்கண்டமென்ற திவ்ய தேசங்களையும், அவன்பெயரைக் கொள்ளும் பாகவதர்களையும் புகழ்ந்து, கடைசியாகத் திருவரங்கத் திருப்பதியிலே தமக்குச் சிறந்த பக்தி யுள்ளதை வெளியிட்டு, 'ஸதைவ ஸ்ரீரங்கே ஸுகமாஸ்வ' என்கிறபடி வயது முதிர்ந்தோரைத் தன் அருகில் வைத்துக் கொண்டு தன்

தாளிணைக் கீழ் சேர்த்துச் சேம மளிக்கும் பெரிய பெருமாளான அரங்கனையே காலத்திற் காக்கும்படி கேட்டுக்கொண்டு தாம் ஸ்வஸ்தமாயிருக்கும் தசையி லேயே யவன் திருநாமங்களைச் சொல்லித் தேற்ற முற்றவரானார். இனி, இந் நான்கு பத்துக்கள் கொண்ட இத் திவ்ய ப்ரபந்தத்தை முடிக்கப் போகா நின்று கொண்டு நைச்யாநுஸந்தானம் செய்தருளி அதன் பிறகு எம்பெருமான் இவரிடத்திற் செய்தருளின அநுக்ரஹ வகைகளையும் வாயாறச் சொல்லி யவனை யேத்தி முடித்தருளுவர்.

ப்ரபந்தரக்ஷையில் பெரியாழ்வார் தி. **4, 10** துப்புடையாரை உரை முற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

---

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

## பெரியாழ்வார் திருமொழி 5-ம் பாகம் தி. 1.

# வாக்குத்தூய்மை

செஞ்சொல்மறைப்பொருளாகி நின்றவனும், ஒற்றைவிடையனும் நான்முகனு மறியாப் பெருமையோனுமான தேவர்கள்நாயகனின் மேன் மையை யாராய்ந்தபோது ஆழ்வாருக்குத் தம்முடைய ஜ்ஞானசக்திகள் மிக வற்பங்களாகத் தோன்றின. ஆகவே தம் ப்ரபந்தமும் அஸாரமானதென வைத்து, ஆகிலு மங்கீகரித்தருள வேணுமென்று நைச்யாநுஸந்தானத்தி லிழிந்த வராய், நண்ணி நான் உன்னை யேத்தும் நன்மைக்கிடரைக் களைந்தருள்வா யென்கிறார் இத்திருமொழியில்.

1. வாக்குத்தூய்மையிலாமையினாலே மாதவாவுன்னைவாய்க்கொள்ளமாட்டேன்.
நாக்குநின்னையல்லாலறியாது நானதஞ்சுவனென்வசமன்று.
மூர்க்குப்பேசுகின்றானிவனென்று முனிவாயேலுமென்நாவினுக்காற்றேன்.
காக்கைவாயிலுங்கட்டுரைகோள்வர் காரணாகருளக்கொடியானே. **(433.)**

| | |
|---|---|
| காரணா | ஸர்வகாரணமானவனே! |
| கருளன் கொடியானே | கருட த்வஜனே! |
| மாதவா | ச்ரிய: பதியே! |
| வாக்கு | வாக்குக்கு |
| தூய்மை | வேண்டும் சுத்தி |
| இலாமையினாலே | இல்லாததாலே |
| உன்னை | தேவரீரை |
| வாய்க் கொள்ள | ஸப்யமாய் துதிக்க |
| மாட்டேன். | சக்தியுள்ளவனல்லேன். |

| | |
|---|---|
| நாக்கு | (அடியேனுடைய) நாக்கானது |
| நின்னை அல்லால் | தேவரீரைத் தவிர (வேறொன்றையும்) |
| அறியாது. | தெரிந்து கொண்டதன்று. |
| நான் | அடியேன் |
| அஞ்சுவன். | பயப்படுவன். |
| | (ஆனால்) |
| அது | அந்த நாக்கானது |
| என் வசம் அன்று. | அடியேனுக்கு ஸ்வாதீனமாக இல்லை. |
| இவன் | 'இந்த விட்டுசித்தன்

| | |
|---|---|
| மூர்க்கு | மூர்க்கத்தனமாக |
| பேசுகின்றான் | அஸம்பத்தமாகப் பிதற்றுகிறான்' |
| என்று முனி வாய் ஏலும் | என நினைத்து தேவரீர் கோபிப்பீரானாலும் |
| என் நாவினுக்கு | அடியேனுடைய நாக்குக்கு |
| ஆற்றேன் | தணித்தலைச் செய்யேன். (ஏனெனில்). |
| காக்கை வாயிலும் | (இனிமையற்ற) காக்கையின் கூவுதலிலும் |
| கட்டுரை | நல்ல வார்த்தையை |
| கொள்வர் | (உலகில்) க்ரஹிக்கின்றனர். |

இனிய கவி பாடுவதற்கு எவ்வளவோ வாக்குத்தூய்மை வேண்டும். அது இல்லையாகையாலே தேவரீர் விஷயமாய் ஸப்யமா யொன்றும் சொல்ல முடியவில்லை. ஆகில் உம் யோக்யதைக்குத் தகுந்தபடி உலகில் வேறு ஒருவரைப் பற்றி நீர் ஏதேனும் பாடிப் பேசலாமே யென்னில், அடியேனுடைய நாக்குக்குத் தேவரீரைத் தவிர்த்து ஒன்றுமே தெரியாதே. ஆனால் உத்க்ருஷ்டரை நிக்ருஷ்டமாகச் சொல்லிக் குற்றத்துக்கு ஏன் ஆளாகிறீரென்னில், அடியேனுக்கும் அது விஷயத்தில் அச்சமிருக்கிறது. அப்படியாகில் அச்சமுள்ள நீர் ஏனிப்படிப் பாடினீ ரென்னில், நாக்கு அடியேனுக்கு அதீனமாக இல்லையே. என்ன நீர் பேசுவது மூர்க்கத்தனமா யிருக்கிறதே. அறிவும், செய்கையும் அசேதனத்துக்கு நேரில் உளவோ? சேதனன் ஸ்வதந்த்ரன். கரணகளேபரங்கள் அவனுக்கு அதீனங்கள். அவன் அறிந்து ஆவலுற்று அனுஷ்டிக்க இழிந்தபிறகு அவை வ்யாபரிக்கின்றன. ஆக நாக்கே என்னை யறிந்து உம் வசமின்றிப் பேசுகிறதென்பது மூர்க்கத்தன மென்னில், இவ்வளவு தேவரீர் முனிவதை நினைத்தும் அடியேன் அஞ்சுகிறேன். ஒருவிதத்தில் அவை சேதனனுக்கு அதீனங்களானாலும் ஒவ்வொரு சேதனனும் அவனவனுக் கேற்பட்ட கரணகளேபரங்கள் எத்தன்மையனவோ அதற்குத் தக்கபடி தானே ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகள் செய்யக்கூடும். அவற்றிற்குள்ள ஸாத்விக ராஜஸ தாமஸ விசேஷங்களுக்கேற்றவாறு தானே அவன் நடந்தாக வேண்டும். ஆக தேவரீர் முனிவது கூடாதென நினைக்கிறேன். ஒருக்கால் இது தேவருக்கு த்ருப்திகரமாயிராதென்ற விவேகம் அடியேனுக்கு ஏற்பட்டதை அடியேன் நிலைநிறுத்திக் கொண்டு அவ்வித நாக்கை யடக்கலா மென்றே வைத்துக்கொள்வோம். ஆனாலும் அதற்கு அடியேன் ஸம்மதிக்கவில்லை. காக்கை கத்துவது கடூரமாகத் தானிருக்கும். குயில் போல் இனிது கூவ அதற்கு இயலாது. ஆகிலும் அக் காக்கைக் குரலிலும், 'இது பந்துக்கள் நம்மகம் புகப்போவதை நமக்குத் தெரிவிக்கிறது' என்று கேட்டுக் களிப்பாருளரே. காக்கை அவ்விஷயம் தெரிந்து கத்தாவிடினும் அதினின்று நலம் கொள்கின்றனர். அதுபோல் அடியேனுடைய வாய்க்கொள்ளாதபேச்சும் அடியேனுக்கு தேவரீரிடத்திலுள்ள அநந்ய பக்தியை யறிவிப்பதால் குணமாகவே கருதப்படவேண்டும். எனக்குத் தெரியாதபடி சில நலமு மிங்கிருக்கக் கூடும். இதற்கு மேலும் தேவரீர் முனிவதானால், காரணா! ஸர்வத்துக்கும் காரணமான தேவரீருடைய ஸங்கல்ப்ப மிராமலா அடியேன் இப்பேச்சுப் பேசினேன். இல்லையே. அடியேனுக்கும் அடியேனுடைய கரணகளேபரங்களுக்கும் எல்லாவற்றிற்கும் அந்தர்யாமியான தேவரீர் திருவுள்ள மின்றி அடியேன் ஒன்றும் செய்யவில்லை யாகையாலே அவ்விதம் கொண்டு பொறுத்தருளவேணு மென்றபடி. **நான்** அது என்னும் பதங்களுக்கு, மேலே யதாஸங்க்யமந்வயம். (க)

காரணா வென்று விளித்துப் பொறுத்தருளவேணு மென்று கருதின தையே விளங்க வைக்கிறார்.—

**2.** சழக்குநாக்கொடுபுன்கவி சொன்னேன் சங்குசக்கரமேந்து கையானே
பிழைப்பராகிலும் தம்மடியார்சொல் பொறுப்பது பெரியோர்கடனன்றே,
விழிக்குங்கண்ணிலேன் நின்கண்மற்றல்லால் வேறொருவரோடென்மனம்பற்றாது
உழைக்கோர்புள்ளி மிகையன்று கண்டாயூழியேழுலகுண்டுமிழ்ந்தானே. **(434)**

| | |
|---|---|
| சங்கு | திருச்சங்கையும் |
| சக்கரம் | திருவாழியையும் |
| ஏந்து | தரிக்கும் |
| கையானே | திருக்கைகளை யுடையவனே! |
| ஊழி | ப்ரளயத்திலே |
| ஏழ் உலகு | ஏழு லோகங்களையும் |
| உண்டு | திருவயிற்றில் வைத்து |
| உமிழ்ந் தானே | கல்பாரம்பத்திலே வெளிப் படுத்தினவனே ! |
| சழக்கு | குற்றம் (உள்ள) |
| நாக்கொடு | நாக்கைக் கொண்டு |
| புன் கவி | ஈனமான பாட்டுக்களை |
| சொன்னேன் | இயற்றினேன். |
| தம் அடியார் | அவரவர்களின் தாஸர்கள் |
| பிழைப்பர் ஆகிலும் | பிழையான சொற்களைச் சொல்வாராகிலும் |
| சொல் | அச் சொல்லை |
| பொறுப்பது | உபேக்ஷிப்பது |
| பெரியோர் | பெரியோர்களின் |
| கடன் அன்றே | கடமை யன்றோ ? |
| நின் கண் அல்லால் | உன் இட மன்றி |
| மற்று | வேறு |
| விழிக்கும் கண் | விழித்துப் பார்க்கும் இடம் |
| இலேன். | உடையே னல்லேன். |
| என் மனம் | எனது மனதானது |
| வேறு ஒருவ ரோடு | உன்னைச் சேராத வருடன் |
| பற்றாது. | ஸங்கம் பெறாது. |
| உழைக்கு | புள்ளி மானுக்கு |
| ஓர் புள்ளி | ஒரு புள்ளியானது |
| மிகை அன் று கண்டாய் | மிகுதி யாகாது. |

எனது நாக்குக்குச் சொல்வதற்கு வேண்டுவன நற்குணங்கள் இராத தாலே சழக்கே யுள்ளது. ஆகையால் கவியானது உத்க்ருஷ்ட மாயிராது. 'இப்படி பிழையைச் சொல்லலாமோ? இதற்கு முன் செய்த பிழைகளைப் போக்கப் பிழைகளையே செய்வதுதான் வழியோ' வென்னில், சொல்வது அடியார்களாகையாலே பிரேமை தங்கிய அவர்களது பிழையைப் பொறுப்பதுதான் பெரியோர்களுக்கு அழகு. இப்படிக் காணாத வஸ்துவான என்னைக் கண்டபடி சொல்வானேன்? காணுமவரிலே வேண்டுமானவரைக் கண்டு சொல்லுக்கிலக் காக்கலாமே யென்னில், நான் விழித்து ஊக்கத்துடன் பார்க்கும் இடமொன்று மில்லை. கண்டாலும் மனம் அங்கே செல்லாதாகையால் ஊக்கத்துடன் காண்ப தேது? (விழிக்கு மித்யாதிக்கு உனது கடாக்ஷம் தவிர வேறு ரக்ஷகமான கடாக்ஷ மெனக்கில்லை யெனவும் பொருளாம்.) ஆகில் நீர் குற்றமாகப் பேசிக் குற்றவாளியாவதை விட வெறுமனே யிருக்க ப்ரயத்னம் செய்யலாமே யென்னில், எத்தனையோ குற்றங்கள் செய்யுமெனக்கு இந்தக் குற்றமுந்தான் சேரட்டுமே. தொண்ணூற்றொன்பது துவரம்பருப்பு மென்பார்களே. ஆகிலும் எனக்கு அவத்யம் தோற்றும்படி பேசுவதால் எனக்குக் குறை வுண்டாகிறதே யென்னில், ஒற்றைவிடையனும் நான்முகனும் மற்ற மறையோர்களும் உன் பெருமை யறியாமலே எப்போதும் ஏத்தி வருகிறார்களே. அதனாலுனக் கேற்பட்ட அவத்யங்களுக்கு அளவில்லையே. அவைபோல் இவ்வத்யமும் ஒன்று இருக்கலாமே. உழைக்கோர் புள்ளி மிகையன்றே என்றபடி. (௨)

உம் கவி புன்கவி யென்று நீர் நினைப்பதற்குக் காரணம் யாது? உம்மை அடியாரென்று நான் எதனால் தெளிந்து பொறுப்பது என்கிற வினாவிற்கு விடை யளிப்பது மேற்பாசுரம் —

3. நன்மைதீமைகளொன்றுமறியேன் நாரணாவென்னுமித்தனையல்லால்
புன்மையாலுன்னைப் புள்ளுவம்பேசிப்புகழ்வானன்று கண்டாய்திருமாலே
உன்னுமாறுன்னை யொன்றுமறியேன் ஓவாதே நமோநாரணாவென்பன்
வன்மையாவதுன்கோயிலில் வாழும்வைட்டணவனென்னும்
வன்மைகண்டாயே. (435)

| | |
|---|---|
| திருமாலே | ச்ரிய: பதியே! |
| நாரணா என்னும் இத்தனை அல்லால் | அபப்ரம்சமாய் நாராணா என்று சொல்வதைத் தவிர |
| நன்மை தீமைகள் | நல்லவை கெட்டவைகளில் |
| ஒன்றும் | சிறிதும் |
| அறியேன். | அறிந்தவனல்லேன். |
| புன்மையால் | அற்பத்தனத்தால் |
| புள்ளுவம் | வஞ்சகமாக |
| பேசி | ஏதேனும் சொல்லி |
| உன்னை புகழ்வான் அன்று கண்டாய். | உன்னை ஏதேனும் பலனுக்காகத் துதிப்பவனல்லன் நான். |
| உன்னை உன்னும் ஆறு | உன்னை த்யானம் செய்யும் வகையில் |
| ஒன்றும் | சிறிதும் |
| அறியேன். | அறிந்தவனல்லேன். |
| ஓவாதே | ஒழியாமல், எப்போதும் |
| நமோ நாரணா என்பன். | திருவஷ்டாக்ஷரச் சொல்லைச் சொல்வேன். |
| வன்மை ஆவது | எனக்கு பலமாவது |
| உன் கோயிலில் | உனது திவ்ய தேசத்திலே |
| வாழும் | வாழ்ந்துவரும் |
| வைட்டணவன் என்னும் | வைஷ்ணவன் நான் என்கிற |
| வன்மை கண்டாய். | பலமே யாம். |

நன்மை இது, தீமை இது என்று ப்ரமாணங்களில் விதிநிஷேதங்களுக்கு விஷயங்களானவற்றி லொன்று மெனக்குத் தெரியாது. நாரணா வென்றோதுகிறேன். ஓதவேண்டுமாறு அறியாதவனாகையாலே, இங்ஙனம் ஓதுவது நன்மையா தீமையா என்பது கூட எனக்குத் தெரியாது. மந்த்ரஜபமே இவ்வழகிலிருக்க உன்னை உன்னுமாறறிவதேது? ஆக என் கவி புன்கவியாகத் தானே இருக்கவேண்டும். ஆகிலும் நான் அடியேன். ஏதேனும் இங்குற்ற அற்ப பலனுக்காக வஞ்சகமாகப் பேசி உன்னை நான் புகழவில்லையே. 'நாஸ்திகர்கூட அங்ஙனம் என்னிடம் ஏதேனும் கோரிப்புகழ்வதில்லையே. அதனால் அடியாராவாரோ' என்னில், அப்படிக்கொத்தவ னல்லேன். நமோ நாரயணா வென்கிறேனே; வைஷ்ணவனாயிருக்கிறேனே; உனது கோயிலே கதி யென்று சரணமடைந்திருக்கிறேனே. ஆகையால் அடியாரிற் சேர்ந்த வெனது பிழை பொறுக்கத்தக்க தென்றவாறு. ஓவாதே. ஓவுதல் = ஒழிதல். (௩)

வேறொருவரையும் நெருங்காமல், என்னையும் புள்ளுவம் பேசிப் புகழாமலிருந்தால் உமக்கு ஊணும் உடையும் கிடைப்பது எப்படி? நீர் இப்படியிருந்தாலும் நான் உம்மை ஸ்வீகரித்த பிறகுதானே உம்மை யடியாரென்னலாம் என்ன வேண்டாமென்கிறார்.—

4. நெடுமையாலுலகேழுமளந்தாய் நின்மலாநெடியாயடியேனை
குடிமைகொள்வதற்கையுறவேண்டா கூறைசோறிவைவேண்டுவதில்லை
அடிமையென்னுமக்கோயின்மையாலே யங்கங்கேயவை போதருங்கண்டாய்
கொடுமைக்கஞ்சனைக் கொன்றுநின்தாதை கோத்தவன்றளைக்
கோள்விடுத்தானே. (436)

| | |
|---|---|
| நின்மலா | அகிலஹேய ப்ரத்யநீகனே! |
| நெடியாய் | (விச்வரூபியாகவும் வளரும்) விஷ்ணுவே! |
| நெடுமையால் | நீண்டு வளர்ந்ததால் |
| ஏழு உலகும் | ஏழு லோகங்களையும் |
| அளந்தாய் | த்ரிவிக்ரமாவதாரத்தில் அளந்தவனே! |
| கொடுமை | கொடுங் கோன்மையுடைய |
| கஞ்சனை | கம்ஸனை |
| கொன்று | கொலைசெய்து |
| நின் | உனது |
| தந்தை | தகப்பனான வஸுதேவரால் |
| கோத்த | சேர்த்துக் கொள்ளப்பட்ட |
| வன் தளை | திடமான விலங்கினாலான |
| கோள் | தீமையை |
| விடுத்தானே | விடுவித்தவனே! |

| | |
|---|---|
| அடியேனை குடிமை கொள்வதற்கு | அடியேனைக் குலங்கரனாக ஸ்வீகரிப்பதற்கு |
| ஐயுற வேண்டா. | ஐய(ஸந்தேஹ)ப்பட வேண்டாம் |
| கூறை | உடுக்க வஸ்த்ரம் |
| சோறு | உண்ண அன்னம் |
| இவை | போன்றவைகளில் |
| வேண்டுவதில்லை. | எனக்கு அபேக்ஷையில்லை. |
| அடிமை என்னும் | உனக்கு தாஸனென்னப்பட்ட |
| அக் கோயின்மையால் | அந்த ஸ்வாதந்த்ரியத்தாலே |
| அங்கு அங்கு ஏ | பிறந்திருந்த விடமெங்குமே |
| அவை | கூறை முதலானவை |
| போதரும் கண்டாய் | தாமே கிட்டும். |

நீ நிர்தோஷனான ஸர்வேச்வரன். எங்கும் வியாபித்திருப்பவன். உலகம் உன்னுடையதென்பதைத் தெரிவிக்கவும் அதனை அனுக்ரஹிக்கவும் திருமேனியை வளர்த்தி அதனை யளந்தவன். கம்ஸாதிதுஷ்டநிக்ரஹம் செய்து சிஷ்டரான வஸுதேவாதிகளுக்கும் மறுபடி தீமைக்கிடமிராதபடி செய்தவன். இப்படிப்பட்ட நீ குடிகுடியாட் செய்ய விருக்கு மடியேனை யங்கீகரித்தருளவேணும். குடியாட்களை நிரந்தரமாக வைத்துக்கொண்டால் கூறை சோறு கொடுத்து வரவேண்டுமே என்றுலகத்தாரைப் போல் நினைக்கவேண்டாம். அடியேன் அத்தகையன ஒன்றும் கேட்பதாகவில்லை. ஆகில் உண்ணுமதும் உடை யுடுக்காமலு மிருக்கிறீரா வென்னவேண்டா. அடியேன் அவைகளைக் கேட்டாலும், கேட்காமலிருந்தாலும் நீ எனக்களிப்பது நிச்சயம். என்னை தாஸனென்று நான் சொல்லிக்கொண்டு கிட்டாமற் போனாலும், 'தாஸபூதா: ஸ்வத: ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந:' என்கிறபடி அநாதியாக நான் தாஸனாகையாலே இத்தனைப் பிறவிகளிலும் நீயே யளித்துவந்தாற் போல் இனியும் இருந்தவிடமெல்லாம் தக்கபடி யளித்தே வரப்போகிறாய். அப்படி கிடைக்கும் படிக்கு மேற்பட வேண்டாம். ஆனகையால் இம்மையிலும் மறுமையிலும் ஐச்வர்யங்களி லொன்றையும் அபேக்ஷியாமல், உன் கைங்கர்யத்திற்கு இடையில் அவகாசமளிக்காத கைவல்யத்தையும் கேளாமல் உன் திருவடிகளி லடிமைசெய்வதே வாழ்வாக நினைத்துள்ள அடியேனைக் குடிமை கொள்வதில் ஆலோசனை யொன்றும் செய்ய வேண்டாம். இப்படி யடியனான வென் புன்கவியைப் பொறுப்பது உன் கடமையா மென்றபடி.

கோ = அரசன்; இன்மை = இல்லாமை; கோயின்மை = ஸ்வாதந்த்ரயம். உன் அடிமைக்கு அழிவிராதபடி பாரதந்த்ரிய மில்லாமையை வஹித்தே அவைகளைப் பெறலாமென்றபடி. கோயின்மையாவது ராஜகுல மாஹாத்மிய மெனவு முரைப்பர். கோயின்மை = புருஷார்த்த மென்றனர் ஜீயர். (ச)

தோட்டமும் தாவும் வீடும் மாடுமெல்லாம் வைத்துக் காத்துக்கொண்டு 'நான் ஒன்றையு மபேக்ஷிப்பதில்லை யென்றீரே' யென்பதற்கு விடையளிக்கிறார்—

5. தோட்டமில்லவளாத்தொழுவோடை துடவையும் கிணறுமிவையெல்லாம்
வாட்டமின்றியுன் பொன்னடிக்கீழே வளைப்பகம் வகுத்துக்கொண்டிருந்தேன்.
நாட்டுமானிடத்தோடெனக்கரிது நச்சுவார்பலர் கேழலொன்றாகிக்
கோட்டுமண்கொண்டகொள்கையினானே குஞ்சரம்வீழக் கொம்போசித்தானே.
(437)

| | |
|---|---|
| கேழல் ஒன்று ஆகி | ஒப்பற்ற ஆதிவராஹமாயவதரித்து |
| கோடு | கோரப் பல்லினாலே |
| மண் | பூமியை |
| கொண்ட | இடந்து கொண்டு பலித்த |
| கொள்கையினானே | திருவுள்ளமுடையவனே! |
| குஞ்சரம் | குவலயாபீடமானது |
| வீழ | தள்ளப்பட்டுக் கீழே விழும்படி |
| கொம்பு | அதன் தந்தத்தை |
| ஓசித்தானே | (க்ருஷ்ணவதாரத்தில்) ஒடித்தவனே! |
| தோட்டம் | கொல்லையும் |
| இல்லவள் | மனைவியும் |
| ஆ | பசுவும் |
| தொழு | கொட்டகமும் |
| ஓடை | நீரோடையும் |
| துடவை உம் | —வயல்களும் |
| கிணறு உம் | தாவும் |
| இவை எல்லாம் | இவ்வகை வஸ்துக்களெல்லாம் |
| வாட்டம் இன்றி | ஒருவித சோர்வுமில்லாமல் |
| உன் | உனது |
| பொன் அடி கீழே | அழகிய திருவடியின் கீழிலேயே |
| வளைப்பு அகம் | சூழ்தலுக்காம் இடமாக |
| வகுத்துக் கொண்டிருந்தேன். | வகைப்படுத்தி வந்தேன். |
| நாடு மானிடத்தோடு | ப்ராக்ருத மனிதரோடு கலந்திருப்பது— |
| எனக்கு | அடியேனுக்கு |
| அரிது | கிடையாது. |
| நச்சுவார் | தொந்தரை செய்பவர் அல்லது நேசிப்பவர் |
| பலர் | பல பேர் உளர். |

எம்பெருமானே! 'ஆத்மா ராஜ்யம் தநஞ்சைவ களத்ரம் வாஹநாநி ச ஏதத் பகவதே ஸர்வம்' என்று ஜநக மஹாராஜர் நினைத்தது போல், என்னுடைய தோட்டம் முதலிய வஸ்துக்களையெல்லாம் உன் திருவடியைச் சூழ்ந்த வொவ்வோரிடமாகவே, உனக்கு ஸர்வவிதத்திலும் சேஷமாகவே இது வரையில் நினைத்திருந்தேன். ஆகையாலிவை யெல்லாம் உன் வஸதுக்களென்று காத்ததே யொழிய என்னுடையவை என்கிற எண்ணத்தினால் காத்திலேன். இப்படி வகுத்துக் கொண்டிருந்தேன் முன்னே. இப்போது என் தசை எங்ஙன மிருக்கிறதெனில், 'ஸூ꠰தாராஃ ஸூ꠰தக்ஷேஃ ஸூ꠰ஹியாஃ' என்கிறபடி உன் திருவடியைச் சேர்ந்த வொவ்வொரு பாகமே எனக்குத் தோட்டமும் மனைவியும் மற்றுமாகத் தோன்கிறது. உன் திருவடி யனுபவ மொன்றாலேயே அவை யெல்லாம் அநுபவித்து வரும் ஆனந்தத்திற்கு மேலான ஆனந்தம், அவை யெல்லாம் இதன் ஏகதேச மென்னலாம்படி ஆனந்த மேற்பட்டிருக்கிறது. முன்னமே நாட்டு மனிதரோடு சேராத எனக்கு இப்போது அது ஏது? இப்படி நான் இருந்தும் என்

னையும் ஒரு ப்ராக்ருத மனிதனுக்கி நச்சுவார் பலர். அதனுலென்ன? எனக்கு நீயே கூறையும் சோறுமாகக் கூட இருப்பவ னென்றபடி. நச்சுவார் பலர் என்பதற்கு என் இருப்பைக் கண்டு நேசிப்பவர் பலருண்டு. அவர்களோடு எனக்குக் கலப்பே யல்லது நாட்டு மானிடரோடில்லை யெனக் கருத்துப் பொருந்தும். நாட்டு மானிடத்தோடு கலப்பை நச்சுவார் பலர் உலகில் என வுரைப்பதுமுண்டு. நச்சுவார் பலர் கேழலொன்ருகி எனச் சேர்த்து, உன்னை நேசிக்கும் பலருக்கு நீ ஒரு சிறந்த வராஹமா யவதரித்து எனப் பொருள் கொள்வது யுக்தமாகிலும் கொள்க. (ரு)

இப்படி என்னடிக் கீழமர்ந்துள்ள வுனக்குப் பசியே கிடையாதோ வென விடையளிக்கிருர்—

6. கண்ணுநான்முகனைப்படைத்தானே காரணு கரியாயடியேன்நான்,
உண்ணுநாள்பசியாவதொன்றில்லை ஓவாதேநமோநாரணுவென்று,
எண்ணுநாளுமிருக்கெசுச் சாமவேதநாண்மலர்கொண்டுனபாதம்
நண்ணுநாளவை தத்துறுமாகி லன்றெனக்கவைபட்டினி நாளே. (438)

கண்ணு க்ருஷ்ணனே !
நான் முகனை –பிரமனை
படைத்தானே-ஸ்ருஷ்டித்தவனே !
காரணு } வ்யஷ்டிக்கும் ஸமஷ்டிக்கும் காரணமானவனே!
கரியாய் கரிய திருமேனியனே !
நான் அடியேன். } நான் உனது அடிமைக்காரன்.
எனக்கு
உண்ணு நாள் } ஆஹாரம் கிடைக்காத நாளில்
பசி ஆவது பசியைப் போன்றது
ஒன்று இல்லை-ஒன்றும் கிடையாது
நமோ நாரணு என்று } திருவஷ்டாக்ஷரத்தை
ஓவாதே இடைவிடாமல்
எண்ணு நாள்–ஜபிக்காத நாளும்,
அவை பிறரிடம் கண்டவையான

இருக்கு இருக்கென்னும்
எசுஸ் யஜுஸ் என்னும்
ஸாம ஸாம மென்னும்
மந்த்ரங்கள் கொண்ட
வேதம் வேதங்களையும்
நாள் மலர் காலத்துப் புஷ்பங்களையும்
கொண்டு தரித்துக்கொண்டு
உன உன்னுடையவையான
பாதம் திருவடிகளை
நண்ணு நாள் உம் } கிட்டாத காலும்
தத்துறும் ஆகில் } எனக்கு நேர்ந்து விடுமாகில்
அன்று அப்போது
அவை அந்த நாட்கள் எனக்கு
பட்டினி நாள். } பசியோடு வருந்தும் நாட்களாம்.

கரியாய். கரியவ னென்பதின் முன்னிலை கரியை. அதன் விளிச் சொல் கரியாய். இருக்கெசுஸ்ஸாமவேதம். மூன்று வேதங்களை மட்டுமே சொன்னதென்னென்னில், அதர்வவேதம் அபிசாராதிகளுக்கே முக்யமென்கிற கருத்தினுலென்னலாம். அன்றி, மந்த்ரம் ப்ராம்மண மென இருவகைப்பட்ட ஒவ்வொரு வேதத்திலும் மந்த்ரமானது செயல்களைச் செய்யும் காலத்திலே உபயோகப் படுவதனுல் சிறந்தது. அவ்வித மந்த்ரங்களே, இருக்கு, யஜுஸ், ஸாம என்று மூன்றுவகைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. நான்கு வேதங்களிலும் இவற்றைத் தவிர்த்து வேறு மந்த்ரங்களில்லை. ஆக இம் மூவகை மந்த்ரங்களுள்ள வேத மென்னும் பொருள் தரும் இச் சொல்லானது நான்கு வேதங்களையுமே கூறுகின்ற தென்க. வேதநாண்மலர். வேதங்களே நாண்மலர் என்னலாம். அல்லது வேதங்களும் நாண்மலர்களும் என்றதாம். இதனுல் திருவாராதன

காலத்தில் செய்யப்படும் 'மந்த்ரபுஷ்பம்' என்பது கூறப்பட்டதாம். நித்யநைமித்திக கர்மங்களுக்கும் ஆஜ்ஞாநுஜ்ஞா கைங்கர்யங்களுக்கும் ஆசௌசம், அநாரோக்யம் முதலிய சில காரணங்களால் இடையூறு நேருமாகில் அப்போது எனக்குப்பட்டினிநாளாகுமாகையாலே கடைவரையில் இடையூறின்றி எல்லாம் நடத்திவரும்படி நீ அநுக்ரஹிக்க வேண்டுமெனவும் இவர் கருத்து. நாளவை என்பதற்கு நாள்களானவையு மெனவு முரைகூடும். புநருக்தி வாக்யபேதங்க ளிராதபடி யுரைக்க. (சு)

இனி இரவிலிருக்கும் நிலையையு மறிவிக்கிறார்—

7. வெள்ளைவெள்ளத்தின்மேலொரு பாம்பை மெத்தையாக விரித்ததன்மேலே
கள்ளநித்திரைகொள்கின்றமார்க்கம் காணலாங்கொலென்னாசையினாலே
உள்ளம்சோரவுகந்தெதிர்விம்மி உரோமகூபங்களாய்க்கண்ணநீர்கள்
துள்ளம்சோரத்துயிலணைகொள்ளேன் சொல்லாய்யானுன்னைத்தத்துறுமாறே.
(439)

| | |
|---|---|
| வெள்ளை வெள்ளத்தின் மேல் | வெண்ணிற வெள்ளமான பாற்கடல் நடுவில் அதன் மேல் |
| ஒரு பாம்பை | பர்வதாகாரமான ஆதிசேஷனை |
| மெத்தை ஆக | கட்டில்மேல் பரப்பும் படுக்கையாக |
| விரித்து | பாந்திருக்கச் செய்து |
| அதன் மேலே | அப் பஞ்ச சயனத்தின் மேலே |
| கள்ளம் நித்திரை கொள்கின்ற | கபடமாக நீ துயில் கொள்ளும் (யோக நித்ரை செய்யும்) |
| மார்க்கம் | வகையை |
| காணலாம் கொல் | காண முடியுமோ |
| என் ஆசையினாலே | என வாசைப்பட்டு (நான் படுக்கப் போவதற்கு முன்னே உன் விஷயமாக யோகம் செய்யும்போது) |
| உள்ளம் | மனதானது |
| சோர | தளர்ந்து (உருக) |
| உகந்து | உன்னைக் கண்டு களித்து |
| எதிர் விம்மி | வெளியிலே தெரியும்படி பொருமி |
| உரோம கூபங்கள் ஆய் | மயிர்க்கூச்சுக்களும் மிகவாக |
| கண்ண நீர்கள் | ஆனந்தக் கண்ணீர்களும் |
| துள்ளம் | (கண்களினின்று) துளிகளாக |
| சோர | சொரிய, (யான்) |
| துயில் அணை கொள்ளேன். | நித்ரைக்காக அமைத்த படுக்கையில் படுப்பதேயில்லை. |
| யான் | இப்படிக் காணும் நான் |
| உன்னை தத்துறும் ஆறு | உன்னைக் கிட்டும் விரகை |
| சொல்லாய் | கூறுவாயாக. |

படுக்கப் போம்போது யோகத்தினால் பாற்கடலுள் பையத் துயிலும் பரமனைப் பார்த்து அவன் திருவடியில் தன்னைச் சேர்த்துப் படுக்கவேண்டு மென்ற முறைபடி யான் உன்னைக் காணவாசைப்பட்டு யோகம் செய்யும் போதெல்லாம் நீ கிருபையினால் நன்கெனக்குக் காட்சி யளிப்பதாலே மனம் தளர்ந்துகந்து, உன்னைக்கூடுமாறு காலம் குறுகாதோ வென்று விம்மி ஆனந்த மயிர்க்கூச்சு அங்கமெல்லாம் கிளர்ந்து நிற்கக் கண்ணீர் பெருக உன் அநுபவத்தை விட மனம் வராமல் இரவு பூராவும் உன்னையே ப்ரத்யக்ஷமாக ஸேவித்து வருகிறேன். இங்ஙனம் தோற்றமளிப்பதன்றி உண்மையிலேயே நீ நேரில் எழுந்தருளுவதும் உன்னை யான் தத்துறுவதும் வேண்டு மென்பது தவிர வேறு நோக்கமப்போ தெனக்குக் கிடையாது. இது இரவிலிருப் பென்றபடி. (எ)

உன்னைக் கிட்டாததோடு நன்கு உன்னைக் காணாம லிருக்கும் நான் உன்னையே நண்ணி யேத்தி நிற்கும்படி நீ அநுக்ரஹிக்க வேண்டு மென்கிறார்.—

பெரி. தி–39.

8. வண்ணமால்வரையே குடையாக மாரிகாத்தவனே மதுசூதா
கண்ணனே கரிகோள்விடுத்தானே காரணா களிறட்டபிரானே
எண்ணுவாரிடரைக்களைவானே ஏத்தரும் பெருங்கீர்த்தியினானே
நண்ணிநானுன்னை நாடொறுமேத்தும் நன்மையே யருள்செய்யெம்பிரானே (440)

| | |
|---|---|
| வண்ணம் மால் | அழகும் பெருமையுமுள்ள |
| வரை ஏ | (கோவர்த்தன) மலையே |
| குடை ஆக | (கையில்) குடைபோல் நிற்க |
| மாரி | மழையை |
| காத்தவனே | கோ கோபர்களிடம் விழாதபடி தடுத்தவனே! |
| மதுசூதா | மது சூதனனே! |
| கண்ணனே | ஸ்ரீ க்ருஷ்ணனே! |
| கரி | கஜேந்த்ராழ்வானுடைய |
| கோள் | கஷ்டத்தை |
| விடுத்தானே | நீக்கினவனே! |
| காரணா | ஸகல ஜகத்காரணமானவனே! |
| களிறு | குவலயாபீடமென்ற யானையை |
| அட்ட | அழித்த |
| பிரானே | உபகாரகனே! |
| எண்ணுவார் | நினைப்பவரின் |
| இடரை | துன்பத்தை |
| களைவானே | போக்குகிறவனே! |
| ஏத்து | எல்லோராலும் ஏத்தப்படும் |
| அரு | அருமையான |
| பெரு | மா பெரிய |
| கீர்த்தியினானே | கீர்த்திகளையுடையவனே! |
| எம்பிரானே | எனது உபகாரகனே! |
| | நான் உன்னை |
| நண்ணி | கிட்டி |
| நாள் தொறும் | ப்ரதிதினமும் |
| ஏத்தும் | ஸ்துதிப்பதாகிய |
| நன்மை ஏ | நன்னடத்தையையே |
| அருள் செய் | அனுக்ரஹிப்பாயாக. |

9. நம்பனேநவின்றேத்தவல்லார்கள் நாதனே நரசிங்கமதானாய்
உம்பர்கோனுலகேழுமளந்தா யூழியாயினாயாழிமுன்னேந்தி
கம்பமாகரிகோள்விடுத்தானே காரணாகடலைக்கடைந்தானே
எம்பிரானென்னையாளுடைத்தேனே யேழையேனிடரைக்களையாயே (441)

| | |
|---|---|
| நம்பனே | நம்பப்படும் கடவுளே! |
| நவின்று | அப்யஸித்து |
| ஏத்த | துதிக்க |
| வல்லார்கள் | ஸமர்த்தரானவர்களுக்கு |
| நாதனே | தக்க ஸ்வாமியானவனே! |
| நரசிங்கம் அது ஆனாய் | அப்படிப்பட்ட நரசிங்கமாக வவதரித்தவனே! |
| உம்பர் கோன் | தேவேந்திரனைச் சேர்ந்த |
| ஏழு உலகு உம் | ஏழு லோகங்களையும் |
| அளந்தாய் | த்ரிவிக்ரமாவதாரத்திலளந்தவனே! |
| ஊழி ஆயினாய் | ப்ரளயத்திலிருப்பவனானவனே! |
| முன் | யுக விசேஷத்திலே |
| ஆழி | திருவாழியை |
| ஏந்தி | திருக்கையில் கொண்டு (எழுந்தருளி) |
| கம்பம் | நடுக்கம் (உற்ற) |
| மா கரி | பெரிய கஜேந்த்ரனுடைய |
| கோள் | துயரத்தை |
| விடுத்தானே | நீக்கினவனே! |
| காரணா | ஸர்வ ஜகத்காரணமே! |
| கடலை | ஸமுத்ரத்தை |
| கடைந்தானே | மந்தரத்தை யிட்டு மதித்தவனே! |
| எம்பிரான் | எனது உபகாரகனே! |
| என்னை | அடியேனை |
| ஆள் உடை | அடிமையாக உடைய |
| தேனே | மிகவும் போக்யமானவனே! |
| ஏழையேன் | அகிஞ்சநனை எனது |
| இடரை | இடைஞ்சலை |
| களையாய் | நீக்குவாயாக. |

உம்பர் கோன். தேவேந்திரனுடைய ராஜ்யமான உலகை அஸுரனான மாவலி யபஹரித்திருக்க அதை மீண்டும் இந்திரனுக்கு அளிக்க வளந்தானென்றபடி. உம்பர் கோன் என்பதைத் தனியே எம்பெருமான் விஷயமான விளிச்சொல்லாகவும் கொள்க. ஏழையேனிடரை. நவின்றேத்த வல்லார்களான நித்ய முக்தர்களைப் போலே நானும் மிகவும் போக்யமான வுன்னிடத்திலே பரமானந்தத்துடன் அடிமை செய்த வண்ணமே யிருப்பதற்குத் தடையா யிருக்குமவற்றை யெல்லாம் நீயே களைந்தொழிக்க வேணும். நான் அகிஞ்சநன். வேறு வகையில் விரைவில் அவற்றை விலக்க என்னாலாகா தென்றபடி. (௯)

வாக்குத்தூய்மையும், நன்மை தீமைகளின் அறிவுமில்லாதவரும் ஏழையரும் கூட இத்திருமொழி கற்றால் எம்பெருமானிடத்தி லீடுபட்டு நண்ணியேத்தி பக்தியோகத்தை எதிர்ப்பாராமலே கோரின காலத்தில் மோக்ஷம் பெறுவரென்று இத் திருமொழி பலனை யருளிச் செய்கிறார்—

**10.** காமர்தாதைகருதலர்சிங்கம் காணவினியகருங்குழற்குட்டன்
வாமனனென்மரகதவண்ணன் மாதவன்மதுசூதனன்றன்னை
சேமநன்கமரும்புதுவையர்கோன் விட்டுசித்தன்வியன்தமிழ்பத்தும்
நாமமென்றுநவின்றுரைப்பார்கள் நண்ணுவாரொல்லை நாரணனுலகே(**442**)

| | |
|---|---|
| காமர் தாதை | மன்மதனுக்கு, நேசிப்பவர்க்குத் தகப்பனும், |
| கருதலர் | பகைவர்களுக்கு |
| சிங்கம் | சிங்கம் போன்றவனும், |
| காண | காண்பதற்கு |
| இனிய | ப்ரியமான |
| கரு | கருமை நிறமுள்ள |
| குழல் | திருக்குழல் (கூந்தல்) உடைய |
| குட்டன் | சிறுவனும், |
| வாமனன் | வாமனாவதாரம் செய்தவனும், |
| எல் | ஒளி பொருந்திய |
| மரகதம் வண்ணன் | பச்சைக்கல்லின் நிறமுடையனும், |
| மாதவன் | ச்ரிய: பதியும் |
| மது சூதனன் தன்னை | மதுசூதனனுமான பெருமானைப் பற்றி |
| நன்கு | நன்றாக |

| | |
|---|---|
| சேமம் | க்ஷேமம் |
| அமரும் | பெற்றிருக்கும் |
| புதுவையர் | வில்லிபுத்தூரில் வஸிப்பவருக்கு |
| கோன் | ஸ்வாமியான |
| விட்டுசித்தன் | விஷ்ணுசித்தன் (பெரியாழ்வார் இயற்றின) |
| வியன் | பெருமை பொருந்திய |
| தமிழ் பத்து உம் | பத்துப்பாசுரங்களையும் |
| நாமம் என்று | இவை எம்பெருமானின் நாமங்களென்று |
| நவின்று | அப்யஸித்து |
| உரைப்பார்கள் | ஓதுகின்றவர் |
| நாரணன் உலகு | அப்ராக்ருத லோகத்தை |
| ஒல்லை | விரைவிலே, வெகு ஜன்மங்களின்றியே |
| நண்ணுவார் | கிட்டுவார். |

காமர்தாதையென்று ப்ரத்யும்நனின் பிதாவான கண்ணனைக் குறித்தபடி. இனி, காமராவார் காதல்கொண்டவரென்றுகொண்டு கருதலர் போலல்லாமல் தன்னை நேசித்தவர்களுக்குத் தகப்பனாய் ஸர்வஹிதங்களையு மளிப்பவனென்னலுமாம்.

என்மரகதவண்ணனென்பதற்கு என்னுடைய மரகதவண்ணனெனப் பொருளே ஸ்வரஸமாய் தோற்றும். தாமே விஷ்ணுசித்தராயிருக்க, என் மரகதவண்ணனைப்பற்றிய விஷ்ணுசித்தன் பாசுரங்களை நவின்றுரைப்பார் என்று ஒரே வாக்யத்தில் தன்மையிலும் படர்க்கையிலும் சொல்வது அழகாகாதென நினைத்து ‘எல்மரகதவண்ண’னெனப் பிரித்தது. இல்லையேல், என் மரகதவண்ணனைப் பற்றி விஷ்ணுசித்தனான யான் சொன்ன தமிழென்று கொள்ளவேண்டும். (௰)

ப்ரபந்த ரக்ஷையில் பெரியாழ்வார் திருமொழி **5. 1.**
வாக்குத்தூய்மை உரை முற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

## பெரியாழ்வார் திருமொழி 5. 2.

# நெய்க்குடத்தை.

நண்ணுநாள் பட்டினி நாளாகையாலே நண்ணி நானுன்னை நாள்தொறு மேத்தும் நன்மையே யருள் செய்யென்று ப்ரார்த்தித்து, 'சொல்லாயுன்னைத் தத்துறுமாறே' என்று கேட்டு நின்ற ஆழ்வாரின் ஆழ்ந்த நிலையைக் கண்டு, பரமபதம், பாற்கடல் முதலான திருக்கோயில்களிற் போலே அவர் திருமேனி யுள்ளேயும் எம்பெருமான் நித்யவாஸம் செய்ய வுகந்து புகுந்தருளினான். அதனைக் கண்ட ஆழ்வார், இனி இந்த உடலை, சதகுப்பையும் சாக்கடையுமாய் குடியிருக்கக் கூடாத குப்பக்காட்டுப் பட்டியைப் போலன்றி பேரரசன் பரிந்துறையும் பட்டணமாகப் பாங்காக அமைக்கவேணுமென்றாவல் கொண்டு, பெருமானையும், பஞ்சாயுதங்களையும், மற்றும் அவன் பரிஜநங்களையும் பட்டினங்காவற் பொருட்டுப் பரவுகின்றவராய், அங்ஙனம் பாங்காகாதபடி செய்யும் நோய்களை நேரில் விளித்தழைத்து விரட்டுகிறார்—(ஸர்வத்துக்கும் ஸுகவாஸஸ்தானமாய் பரப்ரம்மமே பட்டணமென்றும், இவ்வுயர்ந்த ப்ரம்மம் உறைந்துள்ள உடலே ப்ரம்மபுரமென்றும், அதில் எளிதில் அறியவியலாதபடி பெரிய பொற்புதையல் போலே பரப்ரம்மம் மறைந்து விளங்குகிறதென்றும் சாந்தோக்யோபநிஷத்தில் தஹரவித்யையிலே, 'ஏதத் ஸத்யம் ப்ரஹ்மபுரம்.' 'அஸ்மிந் ப்ரஹ்மபுரே தஹரம் புண்டரீகம் வேச்ம', தத் யதா ஹிரண்யநிதி மக்ஷேத்ரஜ்ஞா:' இத்யாதி வாக்யங்கள் விளக்குகின்றன.)

1. நெய்க்குடத்தைப்பற்றியேறுமெறும்புகள் போல் நிர (றை)ந்தேங்கும்
கைக்கோண்டு நிற்கின்றநோய்காள் காலம்பெறவுய்யப்போமின்.
மெய்க்கோண்டுவந்து புகுந்து வேதப்பிரானார் கிடந்தார்
பைக்கோண்ட பாம்பணையோடும் பண்டன்று பட்டினங்காப்பே. (443)

| | | | |
|---|---|---|---|
| நெய் குடத்தை | நெய் வைக்கப்பெற்ற குடத்தை | நிற்கின்ற | நிலைபெற நினைத்திருக்கும் |
| பற்றி | ஆவலுடன் பிடித்து | நோய்காள் | வியாதிகளே ! |
| ஏறும் | நெய்யை உண்ண மேலே ஏறா நிற்கும் | காலம்பெற | பெற்ற இக்காலத்திலேயே |
| எறும்புகள் போல் | வரிசை வரிசையாகத் தொடர்ந்துள்ள எறும்புகளைப்போலே | உய்ய போமின் | வெளியேபோய் பிழையுங்கள். (இங்கினி தங்கினால் நீங்கள் உய்ய வியலாது) |
| எங்கும் நிரந்து | உடல்பூராக விதம் விதமாகப் பரவி | வேதம் பிரானார் | வேதத்தின் வாயிலாகத் தத்துவ ஹித புருஷார்த்தங்களை விளக்கியருளின வேதபுருஷர் |
| கைக்கொண்டு | தங்கள் வசமாக்கிக்கொண்டு | | |

| | | | |
|---|---|---|---|
| மெய்க் கொண்டு | (இது மன்னி வாழக்கூடுமிடமென்று) நம்பி | புகுந்து | ஹ்ருதய குஹையிலே நுழைந்து |
| பை கொண்ட | படங்களை விரித்துப் பூரித்துள்ள | கிடந்தார். | பள்ளிகொண்டுவிட்டார். |
| பாம்பு அணையோடு உம் | ஆதிசேஷனும் படுக்கையுடனும், படுக்கையில் கூடப் படுத்திருப்பவரோடும் | பண்டு அன்று. | இனிப் பழைய நிலையன்று. |
| வந்து | தன் இடம் விட்டு எழுந்தருளி | பட்டினம் காப்பு ஏ. | பட்டண ரக்ஷண வகையே இனி இருப்பது. |

எம்பெருமான் பிராட்டியோடு பள்ளிகொண்டிருக்கப் பாம்பணையோடெனது உள்ளத்திலே வந்து புகுந்துவிட்டான். உயர்ந்த தன் இடங்களை விட்டிங்கே வந்து புகுந்த பெருமானுக்கு அவற்றிற்கும் மேலாக இங்கே மன்னியிருக்கமுடியுமென்ற மெய்க்கொள்ளலுண்டென்பதில் ஐயமேது? அவன் எழுந்தருளினதைக் கண்டு அவனுடைய பரிஜநங்கள் என்னையும் எனது உடலையும் அவனது பட்டணமாகப் பரிஷ்கரிக்கத் தொடங்கிவிட்டார்கள். ராஜாதிராஜனான அவனுக்குத் தக்க பட்டணமாகு மிவ்வுடலிலே, நோய்காள்! நீங்கள் இனித் தங்கினீர்களாகில் வேரோடு உங்களைக் களைந்து விடுவார்கள். ஆகையால் நீங்களே விலகி உங்களுயிரைக் காத்துக்கொள்ளுங்கள். (பகவத் பாகவதத்வேஷிகளைப் போன்றாரிடத்திலே போனாலல்லது நீங்கள் உய்ய முடியாது) என்றபடி.

**நெய்க்குடத்தை.** நல்வேள்வி முதலானவற்றிற்காக நெய்வைத்த குடத்திலே எறும்புகள் ஏறினால் அவை நெய்யை யண்டாதபடி விலக்கப்படுமாபோலே உள்ளே எழுந்தருளின எம்பெருமானின் ஆராதனத்திற்குரிய உருக்களை யழிக்கவரும் நோய்களும் நீக்கப்படுமென்றபடி. மெய்க்கொண்டு. மெய்க்கொள்ளுதல் = நம்புதல். மெய் உடலாய் எனது உடலை, கொண்டு = திருவுள்ளம் பற்றி எனவுமுரைப்பர். பட்டினம். பட்டணம். 'அதாவது ஜீவாத்மா' என வுரைப்பதுமுண்டு. (க)

நோய்கள் ஆழ்வாரை நோக்கிப் பின்வருமாறு கூறின—"நாங்கள் நமன்தமரால் ஏவப்பட்டு இங்கே வந்துளோம். அவர்கள் எங்களைப் பார்த்து 'நீங்கள் இந்த விந்த உடலில் இவ்வகையாக ஆதிகாலம் தொடங்கியிருந்து வதைத்து வரவேணும். நாங்கள் இலச்சினை கொண்டுவந்து அவ்வுடலிலிட்ட பிறகு நீங்கள் ஒன்றித்து நலிந்து உயிரழிக்கவேண்டும்' என்றனர். ஆக நாங்கள் விலகிப் போனால் நமன்தமர்கள் எங்களுயிரை யிப்போதே மாளவைப்பார்களாகையாலே நாங்கள் விலகமாட்டிலோம். மேலும் உயயப்போகவேண்டுமிடமும் அறிகிலோம்." என்றவாறு. இதற்கு மறுமொழி யளித்தருளுகிறார்.—

2. சித்திரகுத்தனெழுத்தால் தென்புலக்கோன்பொறி யொற்றி
வைத்தவிலச்சினைமாற்றித்தூதுவரோடியொளித்தார்.
முத்துத்திரைக்கடற்சேர்ப்பன் மூதறிவாளர் முதல்வன்
பத்தர்க்கமுத னடியேன் பண்டன்று பட்டினங்காப்பே. (444)

| | |
|---|---|
| தூதுவர் ஓடி | யமதூதர்கள் விரைந்து, |
| சித்திர குத்தன் | சிறந்த கணக்கப்பிள்ளையான சித்ரகுப்தன் |
| எழுத்தால் | நேராக எழுதினதாலான, |
| தென் புலம் | தெற்கு திக்குக்கு |
| கோன் | ஸ்வாமியான யமனுடைய |
| பொறி | கையொப்பக்குறியை |
| ஒற்றி | பதியவைத்து |
| வைத்த | என்னுடலில் சேர்க்க ஏற்படுத்தின |
| இலச்சினை | முத்திரையை |
| மாற்றி | வேறொருவர் விஷயமாக மாற்றிக்கொண்டு |
| ஒளித்தார் | இருக்குமிடம் தெரியாத படிக்குச் சென்றனர். |

| | |
|---|---|
| முத்து திரை | முத்துக்களை எறியும் அலைகள் மோதும் |
| கடல் | சமுத்ரத்திலே |
| சேர்ப்பன் | சேர்ந்துள்ளவனும், |
| மூது அறிவு ஆளர் | முதிர்ந்த ஜ்ஞானமுள்ள நித்ய முக்தர்களுக்கு |
| முதல்வன் | நாயகனும், |
| பத்தர்க்கு | தன்னைப்பெற உபாய மநுஷ்டித்தவர்க்கு |
| அமுதன் | போக்யனுமான பகவானுக்கு |
| அடியேன் | தாஸனானேன். |

பண்டு அன்று; பட்டினம் காப்பே.

முதலடியை, வைத்த இலச்சினை யென்பதோடும் மாற்றி யென்பதோடும் சேர்க்க. யமனுடைய கார்யாலயத்திலே புண்ய பாபங்களைக் கணக்கிட்டு இறப்பின் காலத்தை எழுதிவரும் வேலைக்காரர்களிற் சிறந்தவனான சித்ரகுப்தனே எழுதி, யமனுடைய கையொப்பக்குறியையும் பதியவைத்து ஏற்படுத்தின முத்திரையை என்னுடலிலிட, அதைக்கண்டு நீங்கள் நலியவேண்டுமென நினைத்தோடிவந்தனர் நமன்தமர்கள், இங்கே விஷ்ணுகிங்கரர்கள் சூழ்ந்து உலாவுவதைக் கண்டு நடுங்கித் திரும்பச் சென்று அவ்விலச்சினையில் என் பெயரை யெடுத்து அநாதி விஸ்தாரமுள்ள இப்ரபஞ்சத்தில் தக்க நிலையிலுள்ள வேறொரு ஜீவன்பெயரால் அவ்விலச்சினையைச் சித்ரகுப்தன் எழுத்துடன் யமன்பொறி யொற்றி மாற்றி ஓடி ஒளிந்தனர். ஆக நோய்காள்! நீங்கள் இங்கே அவர்களை எதிர்பார்த்திருக்கவேண்டா. அவர்களே பயந்தோடின போது உங்களை யவர்கள் வதைப்பதேது? அவர்களிடம் சென்று வினவினால் இலச்சினைப்படி வேறிடம் உங்களுக்கு அவர்களே குறித்தளிப்பார்கள். அவர்களையும் அவர்களின் எசமான்களையும் போலாகாமல் அஜ்ஞானத்திற்கு ஒருபோதும் இடமாகாமலிருக்கும் நித்யஸூரிகளுக்கெல்லாம் நாதனாகவே யிருந்து, கடல்திரை மோதி யிட்ட முத்துக்களையே திருமேனி யெங்கும் திருவாபரணமாகப்பெற்று, அந்த மோதுதலையும் அறியாதவன்போலே யோகநித்ரையிலிழிந்துள்ள அமுதனுக்கு நானடியேனானபடியாலே அந்த நித்யஸூரிகளான விஷ்ணு கிங்கரர்கள் நிச்சலுமென்னைச் சூழ்ந்துள்ளபோது நமன்தமர் என்னை நெருங்கக்கூடுமோ வென்றபடி. (உ)

இனி நாங்கள் நமன்தமர்க்கடியராயிருந்துன்னைப் பீடிக்கமுடியாவிடினும் விஷ்ணுபக்தியிலிழிந்தவர்க்கும் பல பிறப்புப் பின்னுமுள்ளனவாகையாலும், இப் பிறப்பிலே அனுபவிக்கவேண்டும் வினைகள் பல விருப்பதாலும் உன்னை நலிய நிலாநின்றோம்' என்று நோய்கள் நுவல அதற்கு மறுமொழி யருளுகின்றார்—

3. வயிற்றில்தொழுவைப்பிரித்து வன்புலச்சேவையதக்கிக்
கயிற்றுமக்காணி கழித்துக்காலிடைப்பாசங்கழற்றி
எயிற்றிடைமண்கொண்ட வெந்தையிராப்பகலோதுவித்தென்னைப்
பயிற்றிப்பணிசெய்யக்கொண்டான் பண்டன்று பட்டினங்காப்பே. (445)

| | |
|---|---|
| எயிறு இடை | தனது கோரப்பல்லின் நடுவிலே |
| மண் கொண்ட | பூமியை யிடந்துவைத்துக் கொண்ட |
| எந்தை | எனது அப்பன் |
| இரா பகல் | இரவிலும் பகலிலும் |
| என்னை ஓதுவித்து | எனக்கு வேதார்த்த ரஹஸ்யங்களைக் கற்பித்து |
| பயிற்றி | உபாயாநுஷ்டானம் செய்வித்து |
| வயிற்றில் தொழுவை | ஒருவர் வயிற்றில் கர்ப்பத்தில் எங்கு மசையமாட்டாது விலங்கிடப்பட்டிருப்பதை |
| பிரித்து | விலக்கி (மறுபிறவியை நீக்கி), (இப்பிறவியிலும்) |

| | |
|---|---|
| வல் புலம் சேவை | வலிமையுள்ள இந்திரியரிஷபங்களை |
| அதக்கி | கால்பிடித்து வீர்யமற்றனவாகச் செய்து, (உடலில்) |
| கயிறு | நரம்புகளுடையவும் |
| அக்கு | எலும்புகளுடையவும் |
| ஆணி உம் | மேன்மையையும் |
| கழித்து | போக்கி (கொழுத்தெழாதபடி செய்து) |
| கால் இடை | இருகால்களின் நடுவிலுள்ள அங்கத்தில் |
| பாசம் | பற்றுதலை |
| கழற்றி | விலக்கி, |
| பணி செய்ய | இடையூறற்ற கைங்கர்யத்தை இங்கே செய்யும்படி |
| கொண்டான். | திருவுள்ள முகந்தருளினான். |

பண்டு அன்று ; பட்டினம் காப்பே,

பூமியை யிடந்தெடுத்து எயிற்றின் நுனியிலே நின்றால் ஒருக்கால் மீண்டும் வீழ்தலுறு மென்று எயிற்றிடையிலே வைத்துக்கொண்டு, அந்த பூமாதேவி ரஹஸ்யார்த்தத்தை உலகக்ஷேமத்திற்காக வினவினபோது வராஹ சரமச்லோக மென்ற ஸூக்தியாலே ரஹஸ்யத்தை வெளியிட்டருளினான், அவ் வர்த்தத்தை அவனிடமே இரவும் பகலும் பல நாள் சர்ச்சித்துத் தத்துவ ஹிதங்களிலே தெளிவு பெற்று நானும் ‘ அப்போதைக்கிப்போதே சொல்லி வைத்தேன் ’ என்று விண்ணப்பிக்கும்படி என்னைத் திருத்திப் பணிகொண்டான். ஆகவே எனக்கு மறுபிறவி கிடையாது. இப்பிறவி தன்னிலும் இந்த்ரிய விருடபங்கள் யதேச்சமாக விஹரிக்காதபடி அவற்றின் வீர்யத்தைக் குறைத்துத் தக்க நிலையில் நிறுத்தி யுள்ளான். உடலும் துஷ்ப்ரவ்ருத்தியில் மூளாதபடி அதன் நரம்பெலும்புகளின் வலிமையை விலக்கினான். ஆகவே காமாலயமான அங்கத்திலே கிடந்த பாசமும் கழன்றுவிட்டது. இனி துஷ்ட நடவடிக்கைகளால் நேரக்கூடிய வினைகளுக்கோ, வியாதிகளுக்கோ இடமேது ? இடையூறின்றி இங்கும் அடிமை செய்விக்கவும் எம்பெருமானைச் சரணம் புகுந்துள்ள நம்மிடம் நீங்கள் தங்க முடியாதென்றது எம்பெருமான் இந் நெஞ்சில் நிலைநின்றதினின்றே நன்கு விளங்காநின்றதே யென்றபடி. ஸ்ரீவராஹ சரம ச்லோகங்களையும் அவற்றின் பொருட் சுவையையும் தெளிய ஸ்ரீதேசிகன் அருளிச் செய்த ரஹஸ்யசிகாமணி என்ற ரஹஸ்ய க்ரந்தத்தைக் கற்க.

கயிற்றுமக்காணி. ஆணி யென்பதற்கு சரீரம் என்ற பொருளையு முரைப்பர். காலிடைப் பாசம் கழற்றி. இங்கே நான்கு வகையாக உரைசெய்வதுண்டு (1) முகம் கீழ்ப்பட விழும்படி காலிலே யமபடர் துவக்கின பாசத்தைக் கழற்றி, (2) கால் காற்றாய் ப்ராணவாயுவைக் கொண்டுள்ள பாசம்; அதாவது ஸூக்ஷ்ம சரீரம்; அதையும் அக்காணியான ஸ்தூல சரீரத்தைப் போலே கழற்றி, (3) காற்கட்டான ஸம்ஸாரத்தில் நசையை நீக்கி, (4) கால்களிடையிலுள்ள ஹரிணீ வராரம் (மான்குளம்பு) போன்ற அங்கத்திலே பற்றுதலைப் போக்கி என்றவை அவை. ஸ்த்ரீகள் இப்பாசுரத்தை யநுஸந்திக்கும்போது காலிடை யென்று புருஷ விஷயத்திலே பாசம் கழற்றினதைக் கொள்வதாம். (௩)

இப்போது வன்புலச்சேவை யதக்கினதாலே இனி பாபங்களைச் செய்யாவிடினும், விவேகம் பிறப்பதற்கு முன்னே செய்த வல்வினைகளின் பலனாகப் புகும் நோய்களை யனுபவித்துதானே யாகவேண்டு மென்ன, அவ்வினைகள் தாமும் செய்த ப்ராயச்சித்தத்தாலே மங்கிவிட்டதால் உங்களுக்குப் புகவிடமில்லை யென்கிறார்.

**4.** மங்கியவல்வினைநோய்காள் உமக்குமோர் வல்வினைகண்டீர்
இங்குப்புகேன்மின்புகேன்மினெளிதன்றுசண்டீர் புகேன்மின்.
சிங்கப்பிரானவனெம்மான் சேருந்திருக்கோயில்சண்டீர்
பங்கப்படாதுய்யப் போமின் பண்டன்று பட்டினங்காப்பே. **(446)**

| | |
|---|---|
| மங்கிய | ப்ராயச்சித்தம் செய்ததாலே மழுங்கிவிட்ட |
| வல்வினை | கொடிய பாபங்களின் (பலனாகக் கூடிய |
| நோய்காள் | நோய்களே! |
| உமக்கும் | எல்லோரையும் பீடிக்க வல்ல உங்களுக்கும் |
| ஓர் | ஒப்பற்ற |
| வல் வினை | .பலிஷ்டமான பொல்லாங்கை |
| கண்டீர் | கண்ணாரக் கண்டீர்கள், (ஆகையால்) |
| இங்கு | எம்பெருமான் உகந்த எனது உடலிலே |
| புகேன்மின் | புகவேண்டாம்; |
| | புகேன்மின்; |
| எளிது அன்று | இங்குப் புகுவது, நலிவது சாத்தியமாகாது; |
| | புகேன்மின். |
| அவன் | அப்படிப்பட்ட |
| எம்மான் | எனக்கு ஸ்வாமியான |
| சிங்கம் பிரான் | உபகாரகனான ஸ்ரீநரஸிம்ஹனானவன் |
| சேரும் | தானே வந்து சேரப்பெற்ற |
| திரு கோயில் | மேன்மை பொருந்திய கோயிலென்பதாக |
| கண்டீர் | நீங்களே கண்டு கொள்ளுங்கள். (ஆகையால்) |
| பங்கப்படாது | -புகுந்து பரிபவப்படாமல் |
| உய்ய போமின் | பிழைக்க வேறிடமோடுங்கள். |
| | பண்டு அன்று; பட்டினம் காப்பு ஏ. |

'க்ருஷ்ணாநுஸ்மரணம்பரம்' என்ற பெரும் ப்ராயச்சித்தத்தைச் செய்துவிட்டதாலே முன் செய்த வினைகளெல்லாம் ஒளியற்று மங்கிவிட்டன. ஆகவே அவற்றின் பலன்களான நீங்கள் என்னிடம் புகுதல் முடியாதது. மங்கிய என்பதற்கு ஆத்மாவை மங்கப் பண்ணுகிற என்றும் பொருள் உரைப்பர். மங்கிய என்பது நோய்களுக்கு அடைமொழியுமாம். வினைநோய்காள் என்று வினைகளையும் நோய்களையும் விளித்ததுமாம். உமக்கும். எங்களுக்கு மட்டுமே வல்வினை யென்று நினைத்தீர்கள். உங்களுக்கும் வல்வினை யுண்டு. புகேன்மின் புகேன்மின் என்று இருதரம் அருளினது ஒவ்வொன்றையும் பார்த்து என்னலாம். மூன்றாந்தரம் புகேன்மின் என்றது, புகத் தடை யுள்ளதை மேலே விளக்குவதற்காக மறுபடி அநுவதித்தது என்க. இனி ஒரு தரத்திற்கு மூன்று தரமாக, திடப்படுத்துவதற்காகச் சொன்னதாகவும் கொள்ளலாம். சிங்கப்பிரான். இவன் காதலர்சிங்கமானபடியாலும், நீங்கள் காதலரர்கையாலும் புகவேண்டாம். எல்லா திக்பாலகர்களையும், மேற்பட்டவரையும் வென்ற இரணியனையே கிழித்தெறிந்த சிங்கத்திற்கு அவரிலொருவனான யமனின் படரின் அடிமைகளான உங்களை யொழிப்பதில் ஏது ப்ரயாஸ மென்றபடி. திருக்கோயில். தம் ஆத்ம ஸ்வரூபத்தைத் திருக்கோயிலென்றா ரென்பது முண்டு. அவனை நான் ஸ்மரிப்பதே போதுமாயிருக்க அவன் இங்கே நிலைத்து ஆவிர்பவித்து முள்ளபோது

நோய்காள்! நீங்கள் இங்கே புகவொண்ணாதென்றபடி. 'இங்கு' என்று திருப்பல்லாண்டோடே அந்வய முடையா ரெல்லோரையும் கூட்டிக் கொள்ளுகின்றார் என்று பட்டர் அருளிச்செய்தன ரென்பர். (௪)

5. மாணிக்குறளுருவாய மாயனையென்மனத்துள்ளே
பேணிக்கொணர்ந்து புகுதவைத்துக்கொண்டேன் பிறிதின்றி
மாணிக்கப்பண்டாரம் கண்டீர்வலிவன்குறும்பர்களுள்ளீர்
பாணிக்கவேண்டா நடமின் பண்டன்று பட்டினங்காப்பே. (**447**)

| | |
|---|---|
| வலி வல் குறும்பர்கள் உள்ளீர் | கனத்தும் நீடித்து மிருக்கும் பொல்லாங்குகளைச் செய்யுமவர்களே! (வினை நோய்காள்!) |
| பிறிது இன்றி | —வேறு இல்லாமல், |
| மாணி | பிரம்மசாரியான |
| குறள் | வாமனனின் |
| உரு ஆய | உருவாக அவதரித்த |
| மாயனை | ஆச்சர்ய புருஷனை |
| பேணி | மிகவும் ஆதரித்து |
| கொணர்ந்து | அவனுள்ள விடத்தினின்று எழுந்தருளப்பண்ணி |
| என் | என்னுடைய |

| | |
|---|---|
| மனத்து உள்ளே | மனத்தினுள்ளேயே |
| புகுத வைத்துக் கொண்டேன் | புகுந்திருக்கும்படி செய்து கொண்டேன். |
| மாணிக்கம் பண்டாரம் | மாணிக்கங்களே பல சேர்ந்திருக்கு மிடம் இதுவென்று |
| கண்டீர் | அறியுங்கள். |
| பாணிக்க வேண்டா | நீங்கள் தாமதிக்க வேண்டாம். |
| நடமின் | வேறிடம் செல்லுங்கள். |
| | பண்டு அன்று; பட்டினம் காப்பே. |

பிறிதின்றி. ஒரு சமயம் எம்பெருமானை நினைப்பது; மற்றொரு சமயம் விஷயங்களில் மனம் வைப்பது என விருந்தால் நீங்கள் இங்கே தாமதிக்கலாம். அதில்லை யென்றபடி. எம்பெருமான் வேறிட மொன்றில்லாதபடி என் மனத்தினுள்ளேயே புகுந்திருக்கும்படி என்னவுமாம். 'பிறிதின்றி = வேற்றுமையில்லாமல்; அதாவது ஏகவஸ்து என்னலாம்படி' என்பர் சிலர். மாணிக்கப் பண்டாரம். 'உலகளந்த மாணிக்கம்' என்னப்பட்ட த்ரிவிக்ரமனின் இருப்பிடமிது என வுரைப்பர். இது முன்னடிகளிற் கூறப்பெற்ற தொன்றேயாம். எம்பெருமானையே ஜ்ஞாந சக்தியாதிகளான பல குணரத்நங்களுக்கு இடமாயிருப்பதாலே மாணிக்கப் பண்டார மென்கிறா ரென்னலுமாம். ஆக அந்த குணங்களையுள்ளவனுக்க கருகே குறும்பர்கள் நிற்க முடியாதென்றதாம். இங்கே ஊன்றி நோக்கும்போதொரு பொருள் தோற்றுகிறது——.

அஃதென்னவெனில்—இத் திருமொழியிலே அவதார விசேஷங்களை யடைவாகச் சொல்லி யிருப்பதை நோக்கவேண்டும். 'வேதப்பிரானார்' என்று மத்ஸ்யாவதாரத்தையும், 'முத்துத் திரைக்கடற் சேர்ப்பன்' என்று கூர்மாவதாரத்தையும், 'எயிற்றிடை மண் கொண்ட வெந்தை' என்று வராஹாவதாரத்தையும், 'சிங்கப் பிரானவனெம்மான்' என்று வாமநாவதாரத்தையும் வரிசைப்பட வருளி, மேற் பாசுரத்திலே, 'பெற்றங்கள் மேய்க்கும் பிரானார்' என்று க்ருஷ்ணாவதாரத்தையு மருளப் போகின்றவர் நடுவேயுள்ள மூன்று ராமாவதாரங்களையும் விட்டொழிவதற்குக் காரணம் யாது மில்லை. 'பரசுராமாவதாரம் ஆவேசாவதாரமாகையாலே முமுக்ஷுக்கள் உபாஸிக்க வேண்டிய அவதாரமன்று;

பலராமாவதாரமும் ஆதிசேஷாம்ச மாகையாலே முக்யமாகாது' என்றாலும், ராமாவதாரத்தை விடுவது ந்யாயமாகாது. ஆகவே மாணிக்கப் பண்டார மென்ற விடத்திலே அவ்வவதாரங்கள் கருதப்பட்டனவாகக் கொள்ளலாம். பண்டாரமாவது பல பொருள்கள் வைக்கப்படும் இடம்; ஹாண்டாரம். மூன்று ராமர்களென்கிற மாணிக்கங்களுக்கு இடமாகத் தம்மைச் சொல்லிக்கொண்டதாம். இனி ப்ராம்மண ரக்ஷணம், க்ஷத்ரிய ராஜ்ய ஸ்தாபனம், கோகுலத்தினரான வைச்யரை என்றும் விசேஷமாகப் பாராட்டினமை என்ற முப் பிரிவான குணமாணிக்கங்களுக்கும், அம் மூன்றவதாரங்கள் மூலமாக, இவ்வெம்பெருமான் பாண்டாரமாகின்றானென்னலுமாம்.

வலிவன் குறும்பர்கள். வலிவல் என்ற மீமிசைச் சொல் மிகவும் க்ரூரமானமையைக் கூறும். வலி என்று வெகு தீவ்ரமான வேதனையைக் கொடுப்பதையும், வல் என்று வெகு நாள் நீடித்திருப்பதையும் பிரித்துக் கூறினதுமாம். குறும்பர் என்று உயர்திணையாகக் கூறினது அவைகளால் வரும் தீங்குகளை நினைத்தபோது அவை வேண்டுமென்று புத்தி பூர்வமாகவே வெகு வாராய்ச்சியுடன் இவற்றை விளைவிக்கின்றன போல் தோற்றுவதாலே அவற்றிற்குச் சேதநத் தன்மையை யேறிட்டென்க. ஆகவே, 'ஐவர்குமைக்கும்,' 'உண்ணிலாவிய ஐவரால்' இத்யாதிகளைத் தழுவி இங்கும் இந்திரியங்களையே குறும்பர்களாகக் கூறினதாக வுரைப்பர். கீழே, 'வன்புலச் சேவை யதக்கி' என்று இந்த்ரியங்கள் நன்னிலையி லிருக்கின்றமையை யருளினதாலும், உயிருள்ள வரையில் இந்திரியங்களும் விட்டுப் பிரியாதவையானதாலே அவற்றை 'நடமின்' என்று விலகச் சொல்வது ஸ்வரஸமாகாததாலும், முன்னும் பின்னும் வினைநோய்களையே இத்திருமொழியில் விளித்திருப்பதாலும் இடையிலும் குறும்பர்கள் என்று அவற்றையே கொள்வது கூடுமென்க. (ரு)

6. உற்றவுறுபிணிநோய்காளுமக்கொன்றுசொல்லுகேன்கேண்மின்
பெற்றங்கள்மேய்க்கும்பிரானார் பேணுந்திருக்கோயில்கண்டீர்
அற்றமுரைக்கின்றேனின்னமாழ்வினைகாள் உமக்கிங்கோர்
பற்றில்லைகண்டீர் நடமின்பண்டன்றுபட்டினம்காப்பே. (448)

உற்ற — பொருந்தினவையும்,
உறு — மிகுதியான
பிணி — பாதைக்காகவுமான
நோய்காள் — நோய்களே!
உமக்கு — உங்களுக்கு
ஒன்று — ஒரு ஹிதத்தை
சொல்லுகேன் — சொல்லுகின்றேன்
கேண்மின் — உற்றுக் காதினால் கேளுங்கள்.
பெற்றங்கள் — பசுக்களை
மேய்க்கும் பிரானார் — மேய்த்து உபகாரம்செய்த ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா
பேணும் — விரும்பியுள்ள
திருக்கோயில் — சிறந்த வாஸஸ்தானம் (இது);
கண்டீர் — நேரிலே காணுங்கள், (நடமின்)
இன்னம் — இன்னமும்
ஆழ் — அழுந்தியுள்ள
வினைகாள் — நோய்களுக்குக்காரணமான பாவங்களே!
அற்றம் — அறுதியானதை
உரைக்கின்றேன் — சொல்லுகேன் (கேண்மின்)—
உமக்கு — உங்களுக்கு
இங்கு — எம்பெருமான் எழுந்தருளியிருக்குமிடத்திலே

| | |
|---|---|
| ஓர் பற்று இல்லை | ஒரு பிடிப்பும் கிடையாது. |
| கண்டீர் | தெரிந்துகொண்டீர்கள். |
| நடமின் | விரைந்து செல்லுங்கள். |
| | பண்டு அன்று; பட்டினம் காப்பே. |

முன் பாசுரங்களிலே முந்தின அவதாரங்களைக்கூறி, நோய்களை விலக்கி, இப்பாசுரத்திலே கண்ணபிரானைக் காண்பித்து நோய்களையும், நோய்களுக்குக் காரணங்களான வினைகளையும் விரைந்தோடிவிடும்படி விசதமாக வருளினார். நோய்களுக்குப் பற்று வினைகள். வினைகளுக்குப்பற்று இல்லை யென்று வினைகளை விரட்டியடித்து நோய்களைப் பற்றில்லாதவை யாக்கிப் போங்களென்றார். (௬)

இப்படி நோய்களையும் வினைகளையும் விளித்து விலகச் சொல்லும் முகத்தாலே அவைகளை விலக்கும்படி எம்பெருமானை ப்ரார்த்தித்து, அதுபடி யெம்பெருமான் அநுக்ரஹித்ததைக் கண்டு களித்தருளுகிறார்.—

7\. கோங்கைச்சிறு வரையென்னும் பொதும்பினில்வீழ்ந்துவழுக்கி
அங்கோர்முழையினிற்புக்கிட்டழுந்திக் கிடந்துழல்வேனை
வங்கக்கடல்வண்ணனம்மான் வல்வினையாயினமாற்றிப்
பங்கப்படாவண்ணம் செய்தான்பண்டன்றுபட்டினம்காப்பே. (449)

| | |
|---|---|
| சிறுவரை | சிறிய மலைபோன்ற |
| கொங்கை என்னும் | ஸ்தனம் என்னப்படும் |
| பொதும்பினில் | பொந்தில் |
| வீழ்ந்து | விழுந்து |
| வழுக்கி | அங்குநின்றும் வழுக்கலுற்று, |
| அங்கு | கொங்கைமுதலியனவுள்ள அந்தஸ்திரீபிண்டத்திலேயே |
| ஓர் | ஒப்பற்ற |
| முழையினில் | குஹையில் |
| புக்கு இட்டு | புகுந்து |
| அழுந்தி கிடந்து | விடாமற்பற்றி |
| உழல்வேனை | மேன்மேல் ஸம்ஸரிக்கப் போகின்ற என்னை |
| வங்கம் | அலைகள் நிறைந்த |
| கடல் | ஸமுத்ரத்தின் |
| வண்ணன் | வர்ணமுள்ளவனுன |
| அம்மான் | அந்த மஹாபுருஷன் |
| வல் | பலிஷ்டங்களான |
| வினை ஆயின | கர்மங்களாயிருக்குமவற்றை |
| மாற்றி | விலக்கி |
| பங்கப்படா வண்ணம் | அவற்றால் பரிபவப்படாமலிருக்கும்படிக்கு |
| செய்தான். | அநுக்ரஹித்தருளினான். |
| | பண்டு அன்று; பட்டினம் காப்பு. |

கோங்கைச் சிறுவரை. வைராக்ய முள்ளவர் கொங்கையைச் சிறுமலை யென்று கொண்டாடலாமோ வென்னில், இது கவிஸமயத்தாலே வந்த வார்த்தை யல்லது கொண்டாடினதன்றென்பர். ஆகிலும் மலைபோல் மேலே கிளர்ந்துள்ள கொங்கையைப் பொதும்பென்றது எங்ஙனமெனில், பொந்து போல் இதுவும் புருஷனைக் கீழே தள்ளும் ஸ்வபாவம் உள்ளதாகையாலே என மொழிவர். சிறுவரை போல் காணப்படும் கொங்கையில்கூட நெருங்கின பிறகு இரு கொங்கைகளின் நடுவிலே ஒரு பொந்து போன்ற ப்ரதேசம் கண்ணிற் படும். அந்த ப்ரதேசத்தோடு சேர்ந்த அந்த மார்பு முழுமையும் கொங்கை யென்னப்படுகிறது. அவ்வித மலையின்மேல் இருந்து அந்தப் பொந்தின் வழியாக அதன் கீழ்அவயவத்திலே சிற்றிடை நாபிக் கிணற்றிலே விழுந்து வழுக்கி முழையிற் புகுகின்றான் புருஷன். அதாவது அவற்றிலே க்ரமமாகக் கண்ணோட்

டம் வைத்துக் கிடக்கிறானென்றபடியென்க. வீழ்ந்து வழுக்கி. வழுக்கி வீழ்ந்து எனவும் கொள்வர். 386-ல் வீழ்ந்து வழுக்காதே என வருளினார். இப் பூர்வார்த்தத்திற்கு வேறு இரு யோஜனைகளுமுள. கோங்கை. முலை யிருக்கும் படியே! சிறுவரை சிறு அரை. சிறிய இடை இருக்குமழகே! என்னும் என்று கொண்டாடுகிறவனாய், அதனால் பொதும்பினில் இங்கே ஸ்திரீயின் அவயவமான குழியில் விழுந்து அதன் பலனாக அங்கே ஜந்மாந்தரத்திலே நரக மென்னுமோர் முழையினிற் கிடந்து ஸம்ஸரிக்கப் போகிறவனுமான என்னை யென வொரு யோஜனையாம். புருஷனாகிற பொதும்பினில் முதலில் வீழ்ந்து அவன் ஸ்திரீ ஸங்கம் செய்யும்போது.வழுக்கிக் கொங்கை யென்ற சிறு மலையுடையவள் என்னப்படும் அந்த ஸ்திரீயின் அவயவமான முழையினிற் புகுந்து கர்பவாஸம் செய்து ஸம்ஸரிப்பவனை யென்பது மற்றொன்றாம். இப்போது என்னும் என்பதற்கு அங்கு என்றதோடு அந்வயம். முன் யோஜனையில் உழல் வேனை என்றதோடு அந்வயமாம். என்னும் என்றவிடத்தில் என்றும் என்கிற பாடம் ஒன்றிருக்கலா மென்று கல்பிக்கப் பூர்வர்களின் உரை இடம் கொடுக்கவில்லை. அப்போது 'என்றும் சொல்லிக்கொண்டு' என்றவாறு வேறு பதத்திற்கு அத்யாஹாரமும் தோஷமாம்.

**வங்கக்கடல்வண்ணன்.** வங்கமானது கப்பலாய் எம்பெருமான் ஆச்ரிதர்களுக்குப் பவக்கடலைக் கடப்பதற்குக் கப்பலாயும், கடல்வண்ணனாயு மிருக்கிறானென்றபடி. அன்றி, வங்கம் திரையாய் அலைமோதின கடல்போல் கருநிறம் மேலிட்டிருப்பவ னென்னலாம். கடலானது வங்கங்கள் சூழ்ந்து விளங்குமா போலே எம்பெருமான் வங்கங்கள் போன்ற திவ்யாயுதங்களோடு சேர்ந்து விளங்கா நிற்கிறானெனவும் கொள்வதாம், (எ)

ஆசார்ய ஸம்பந்தத்தால் அஜ்ஞானம் விலகி ஜ்ஞானம் நிலை பெற்றாலன்றி வேறு வழியாலே இங்ஙனம் எம்பெருமானுடைய அபிமானம் கிடைப்பதில்லை. நமக்குள்ள பக்தியே தானே ஆசார்யாச்ரயண மில்லையேனும் எல்லாம் செய்யு மென்று நினைக்க வேண்டா என்று அறிவிக்கக் கருதித் தமக்கு மதனை யநுஸந்தித் தருளுகிறார்—

8. ஏதங்களாயின வெல்லாமிறங்கலிடுவித்தென்னுள்ளே
பீதகவாடைப்பிரானார் பிரமகுருவாகிவந்து
போதிற்கமல வன்னெஞ்சம் புகுந்துமென் சென்னித்திடரில்
பாதவிலச்சினைவைத்தார் பண்டன்றுபட்டினங்காப்பே. **(450)**

| | | | |
|---|---|---|---|
| பீதகம் ஆடை | பீதாம்பரத்தை யணிந்துள்ள | ஏதங்கள் ஆயின எல்லாம் | ஸமஸ்தங்களான அஜ்ஞான ஸம்சய விபரீத ஜ்ஞானங்களாம் குற்றங்களுக்கும் |
| பிரானார் | உபகாரகனான ஸர்வேச்வரன் | இறங்கல் | விலகிப் போவதை |
| பிரம்மம் குரு ஆகி வந்து | வேதவேதாந்தார்த்தோபதேசம் செய்யுமாசார்யனா யவதரித்துக் கிட்டி, | இடுவித்து | செய்வித்து, |
| என் உள்ளே | என் நெஞ்சில் நிலை நின்ற | போதில் | நல்ல ஸமயத்தில் (அல்லது) போது = விகாஸத்திற்கு இல் = இருப்பிடமான |

| | | | |
|---|---|---|---|
| வல் | உறுதியான | இலச்சினை பாதம் உம் | ஸ்ரீ பாதசிஹ்நத்தையும் |
| நெஞ்சம் கமலம் | ஹ்ருதய மென்னும் கமலத்திலே | வைத்தார் | வைத்தருளினர்; |
| புகுந்து | ப்ரவேசமும் செய்து | | பண்டு அன்று; |
| என் சென்னி- | எனது தலையாகிற | | பட்டினம் காப்பு. |
| திடரில் | மேட்டு ப்ரதேசத்தில் | | |

ஏதங்களாவன,—தேஹாத்மாபிமானம், ஸ்வதந்த்ராத்மாபிமானம், தேவதாந்தர பரத்வபுத்தி, அபேக்ஷையின்றி யிருந்தபோது எம்பெருமானே ரக்ஷிப்பான் என்கிற அபிமானம், பக்தியே உபாயமென்பது போன்றவைகள். பிரானர் என்பதாலே ஸதாசார்ய ஸம்பந்தத்திற்கு முன்னே தனக்குத் தாய், தந்தை, மற்றும் பெரியோர்கள் மூலம் அவன் செய்துள்ள உபகாரங்களை யநுஸந்தித்தபடி. பீதகவாடைப் பிரானர் பிரமகுருவாகி. குருவை ஸாக்ஷாத் ஸர்வேச்வரனாக பாவிக்காமல் மனிதனாக பாவிப்பது பெரிதோர் அபசார மென்றபடி. எம்பெருமான் தன்னிலையிலே நம்மைத் திருத்த மாட்டாதே ஆசார்யனாக அவதரிக்கின்றமையால் ஆசார்யனின் ப்ரபாவம் எம்பெருமானதை விட விஞ்சியிரா நிற்கும். எல்லாம் என்றது அவ்வவ ஜ்ஞானத்திற்கேற்ற செயல்களோடே விலக்கினதை விளக்கவாம். பிரமகுரு. ப்ரம்பமாவது சப்தப்ரம்மமான வேதாதி நூலும் பரப்ரம்மமும். ஜ்ஞான மெனவும் பொருளுரைப்பர். போதில். போது அறிவு; அதற்கு இல் = இருப்பிடமான ஹ்ருதய மெனவுமாம். கமலப் போதில் = ஹ்ருதயமென்னும் கமல மலரினுள்ள வன்னெஞ்சம் என்னவுமாம். வன்னெஞ்சமென்றது, வலிய நெஞ்சமுடைய கமல மென்று கமலத்திற்கு விசேஷணமுமாம்.

என் சென்னித்திடரில் பாதவிலச்சினை வைத்தான். 'பருப்பதத்துக்கயல் பொறித்த பாண்டியர் குலபதி போல்' என மேலே யருளிச் செய்யும் கணக்கிலே வேறு தேசத்தை வென்று வசப்படுத்தின வரசன் அத் தேசம் தன்னுடையதென்று தெரிவிக்க அங்கே த்வஜ ஸதம்பாதிகளில் தன் இலச்சினையை யிடுமா போலே, பீதகவாடைப் பிரானர் பற்பல பாடுகள் பட்டு வன்னெஞ்சம் புகுந்து பக்த்யாதியான உபாயத்திலே இழிய வைத்து, 'கூருணே துரிதேஷு மாமகேஷு ப்ரதிகாராந்தரதுர்ஜயேஷு விஹ்ந: । கவசாயிதயா த்வமெவ சார்ங்கீ விஜயஸ்தாந முபாச்ரிதோ விருஷாத்ரிம்' என்று தயாசதகத்திலே ஸ்ரீ தேசிகன் அருளிச்செய்தபடி யிருந்து வினைக ளென்ற எதிரிகளை யெல்லாம் வென்று இவ்வாத்மாவைத் தன் வசமாக்கி, அதற்கு அடையாளமாக, வானுலகிலுள்ள தேவர்களும் இதனைத் தெரிந்து, 'தஸ்மை தேவா பலி மாவஹந்தி' என்றபடி எம்பெருமானுடைய வஸ்து வென்று கௌரவித்திருக்க வேணுமென்று அவர்களும் காணும் சென்னியாம் மேட்டுப் ப்ரதேசத்திலே தன் ஸ்ரீ பாத விலச்சினை யிட்டருளினனென்றபடி. பாதவிலச்சினையை வைப்பது தன்னடியானெனத் தெரிவிப்பதற்காக. இங்கு ஹரிபாதாக்ருதியாக ஊர்த்துவ புண்ட்ரம் தரிப்பதும் தோற்றும், இது ஸத்கர்மங்களை யெல்லாம் செய்விப்பதற்கு உபலக்ஷணமாம் (குறிப்பாகும்). இதனல் மனச்சுத்தி யுண்டான பிறகு வெளி வேஷத்தினல் என்ன பயனென்று ஸதாசாரத்திலே ச்ரத்தை யற்றுக் கண்டபடி வளரும் கலிவேதாந்திகளைப் போலல்லாமல் நெஞ்சினில் அவனை நிறுத்தினதற்கு அடையாள

மாக, எல்லோரும் தன்னை வைஷ்ணவன் எனப் பேரிடும்படி அவன் பாதம் போன்ற புண்ட்ரத்தைத் தரித்து அது மூலமாக அநந்த ஸத்கர்மங்களையும் ஆனந்தத்துடன் செய்வதையே அவனுவக்கிறா னென்றவாறு கருத்துக் கொள்ளலாம். 'பீதகவாடைப் பிரானார் பிரம குருவாகி வந்து பாத விலச்சினை வைத்தார்' என்றதாலே ஆசாரியன் தமது திருவடிகளைச் சென்னியிற் சேர்த்தருளினது அநுஸந்திக்கப் படுகிற தெனவும் கொள்க. ஆக இப் பாசுரத்தை ஆசாரியன் திருவடிநிலையை சிரஸா வஹிக்கும் போது அநுஸந்திப்பது ச்ரேயஸ்கரமென வுணர்க. (அ)

இப்படிப் பட்டினங்காவற் பொருட்டுப் பரவு மாழ்வார் வினை நோய்களை விளித்து விரட்டிவிட்டு ஸ்ரீ பஞ்சாயுதங்கள் முதலானோரிடம் அந்தக் காவல் தன்னைப் பற்றிப் பணித்தருளுகிறார்—'எம்பெருமான் இங்கே எழுந்தருளி விட்டபடியாலே அவன் இங்கே பாங்காகப் பள்ளிகொள்ளும்படி அவன் பரிஜநங்களான நீங்கள் பார்த்துக் கொண்டால், நகரபாலகர்களாலே நன்கு காக்கப்பட்ட பட்டணம் போலே இந்த ப்ரம்மபுரமானது அவனுக்கேற்ற வகையிலே விளங்கு' மென்றவாறு. "புருடன் மணிவரமாகப் பொன்னா மூலப்ருக்ருதி மருவாக——அனைத்தும் காக்கின்றானே" என்றபடி அபிமானிகளான நித்ய ஸூரிகள் அவரவர்க்கு வகுக்கப்பட்ட வஸ்துக்களை அவனுக்கனுகூலமாம்படி காத்து வருகின்றன ரல்லரோ? ஆகவே அவர்கள் தம் உடலில் பள்ளி கொள்ளு மெம்பெருமானுக்குத் தக்கபடி யிது திகழும்படி ஸங்கல்ப்பிக்காமல் வெறுமனே இருந்து விட்டால், அவர்களுக்கு நியாம்யங்களான ப்ராக்ருத பரிஜனங்கள் தங்களுக்குத் தோன்றினபடி நடந்து இதனை ப்ரதிகூலமாக்கி விடுவ ரென்றஞ்சி எம்பெருமானிடமுள்ள பரிவாலே இங்ஙனம் பிரார்த்திக்கிறார்.—

9. உறகலுறகலுறக லொண்சுட ராழியே சங்கே
அறவெறிநாந்தகவாளே யழகிய சார்ங்கமே தண்டே
இறவுபடாமலிருந்த வெண்மரு லோகபாலீர்காள்
பறவையரையா வுறகல்பள்ளியறை குறிக்கொண்மின். **(451)**

| | |
|---|---|
| ஒண் | அழகிய |
| சுடர் ஆழியே | ஜ்வாலைகளுடனுள்ள ஸுதர்சநாழ்வானே! |
| | (ஒண்) |
| சங்கே | பாஞ்சஜந்யமே! |
| அற | சத்ருக்களின் அங்கங்கள் அறும்படி |
| எறி | வீசப்படும் |
| நாந்தகம் வாளே | நந்தக மென்னும் கத்தியே! |
| அழகிய | அழகிய (அவன் திருமேனி யளவு) நிற்கும் |
| சார்ங்கமே | சார்ங்கமென்னும் வில்லே! |
| | (அழகிய) |
| தண்டே | கௌமோதகி என்ற கத்தியே! |
| இறவு படாமல் | அழிவுக்கு உட்படாமல் |
| இருந்த | விளங்கா நிற்கும் |
| எண்மர் | எட்டுப் பேரான |
| உலோக பாலீர்காள் | திக்பாலகர்களே! |
| பறவை | பக்ஷிகளுக்கும் |
| அரையா | –அரசனை கருடாழ்வானே! |
| உறகல் | உறங்காமலிருங்கள். |
| | உறகல், உறகல ; |
| பள்ளி அறை | நம்பிரான் பள்ளி கொள்ளும் அறையான எனது உடலை |
| குறிக்கொள் மின் | குறிப்புடன் நோக்குங்கள். |
| உறகல் | உறங்கிட வேண்டாம். |

கீழ்ப் பாசுரங்களிலே ஈச்வரன் தமக்குக் காவலான படியைச் சொன்னார். இப்பாட்டிலே தாம் அவனுக்குக் காவலானபடியை யருளிச் செய்கிறா

ரென முன்னோர் செய்துள்ள விபாகமும் காண்க. எம்பெருமான் புகுந்த வளவிலே நோய்கள் நீங்கிப் போவது, அவனுக்குப் பரிஜனங்களாய் அவனுகந்த இடமெல்லாம் பரிஷ்கரித்து வருமவர்களின் மகிமையினாலே யென்றதிங்கே விவரிக்கப்பட்டது. இதற்குமடி அவ் வெம்பெருமானின் திருவுள்ள மென்றது தன்னடையே தெளியலாகும். உறகல். உறங்கல், உறங்கேல் என்ற பதத்தின் சிதைவாமிது. இது விரைவினாலும் அபாயம் நேருமோ என்ற அச்சத்தினாலும் சிதைந்ததெனக. ஒரு காலுக்குப் பலகால் பணித்தது அதிலுள்ள ஊக்கத்தையும், தாமதம் சிறிதும் கூடாதென்பதையும் குறிக்கும். 'உறக்கமாவது—'குணவித்தராய் நஞ்சுண்டாரைப் போலே தந்தாமை யறியாதிருத்தல், அனுபவத்திலே யிழிந்து கைங்கர்ய பரராயிருத்தல்' என்றனர் ஜீயர். இதனால் தங்களுக்கு நியம்யரானவர்கள் தங்கள் கருத்தை யறியாமே பிறவான ப்ராக்ருத சரீரங்களைப் போலே இந்த சரீரத்தையும் பாதித்திருக்காதபடி பார்த்துக் கொள்ளாம லிருந்து விடுவது கூடா தென்றதாயிற்று. இறவு படாம லிருந்த. இங்கு, 'இறவு படாமல் உறகல்' என்று எல்லோருக்கும் சேரும்படி அந்வயமும் சொல்வர். அப்போது இருந்த எனத் தனியே எண்மருக்கு விசேஷணமாம். அங்ஙனம் வாக்கிய அமைப்பு அழகியதாகா தென்று உள்ளபடியே சேர்த்து அந்வயமும் கொள்வர். முன்னோருரையாலும் உறகல் என்பதோடு இயைப்பது கூறப்படவில்லை. ஆக இதன் கருத்திங்ஙனமாகுக—பஞ்சாயுதங்கள் முதலான நித்ய ஸூரிகள் நித்ய ஸர்வஜ்ஞராகையாலே எம்பெருமான் திருவுள்ளப்படி நடப்பதில் தடை யில்லை. எட்டு திக்பாலர்கள் ப்ராக்ருதர்களாகையாலே பெருமானது அனுக்ரஹ மிராதபோது நாம் இறவுபட வேண்டி வருமென்பதை மறந்துறங்குவார்களாகில் என் செய்வதென்று கொண்டு, 'நீங்கள் இறவு படாமலிருக்க நேர்வது இவனுக் கனுகூலமாக நடந்து கொள்வதனாலே யன்றோ. ஆக உங்கள் நிலையை நினைத்தும் நீங்கள் உறங்காதிருக்க வேண்டு' மென்றதது. இனி முன்னும் பின்னும் நித்ய ஸூரிகளையே விளிக்கும் பரமைகாந்தியான பெரியாழ்வார் இடையிலும் அந்யர்களை விளிக்கவில்லை. எண்மர் என்றபோது ப்ராக்ருதரான இந்த்ரன், அக்னி போன்ற லோகபாலகர்களை நாம் எடுக்கக் கூடாதென்றே இறவுபடாம லிருந்த என வருளினா ரென்னலாம். அழிவுபடும் லோகபாலகர்களைக் காட்டிலும் வேறாய் அவர்களுக்கும் அபிமானிகளாய் எப்போதுமழிவுபடாம லிருக்கும் லோகபாலகர்களான நித்யர்களையே கொள்ளவேண்டு மென்றபடி. அவர்கள் கணாதிபதிகளாய் எட்டு திக்குகளிலுமுள்ள குமுதாதிகளான எண்மராகலாம்; அல்லது வேறு எவரேனு மாகலாம். பறவையரையா. இந்த இடம் நன்கு அமையவில்லை யென்று வேறிடம் எழுந்தருளப் பண்ணிக் கொண்டு பறக்காமல் இது பள்ளியரையாம்படி குறிக்கொள்; உறங்கேல் என்றபடி.

இவ்விரு பாசுரங்களி லருளிச் செய்தபடி பட்டினங் காவற் பொருட்டு தான் போலும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் சென்னியில் திருவடியிலச்சினையையும் தோள்கள் முதலான விடங்களிலே திருவாழி திருச்சங்குகள் அல்லது ஸ்ரீபஞ்சாயுதங்களையும் தரித்திருப்பது. (௬)

10. அரவத்தமளியினோடு மழகிய பாற்கடலோடும்
அரவிந்தப்பாவையுந்தானு மகம்படிவந்துபுகுந்து
பரவைத்திரைபல மோதப் பள்ளிகொள்கின்றபிரானைப்
பரவுகின்றான் விட்டுசித்தன் பட்டினங்காவற்பொருட்டே. (452)

| | |
|---|---|
| அரவு | ஆதிசேஷனாகிற |
| அத்து | செவ்வையான |
| அமளியினோடு உம் | படுக்கையுடனும், |
| அழகிய | அழகு நிறைந்த |
| பால் கடலோடு உம் | க்ஷீர ஸமுத்ரத்துடனும், |
| அரவிந்தம் பாவையும் தானும் | தாமரை மலரிலிருக்கும் பிராட்டியுடன் தானே |
| அகம்படி | தன் இட வகையிலே |
| வந்து புகுந்து | எழுந்தருளி ப்ரவேசித்து, |
| பரவை | கடலின் |
| பல திரை | பல அலைகள் |
| மோத | வீச |
| பள்ளி கொள்கின்ற | ஸுக நித்ரை செய்தருளும் |
| பிரானை | உபகாரகனை |
| விட்டு சித்தன் | ஸ்ரீ விஷ்ணு சித்தன் (பெரியாழ்வார்) |
| பட்டினம் | பட்டணமான தன் திருமேனியின் |
| காவல் பொருட்டு | காவலுக்காக |
| பரவுகின்றான் | விஸ்தரித்துத் துதி செய்கின்றான். |

அகம்படி. அகம்படியார் அந்தரங்க பரிஜநங்களென்னவுமாம்; படி உருவமாய் படி யகம் = என் உடலினுள்ளே என்னவுமாம்.

வினை நோய்களை விரட்டினதும், ஸ்ரீ பஞ்சாயுதங்கள் முதலான அந்தரங்க பரிஜனங்களை, 'உறங்கேல் குறிக்கொண்மின்' என்று கோரினதும், தன்னை விட்டுப் பிரியாத தாமரையாளும் தானுமாய் பரம சேஷிகளான தாங்களிருவர்க்கு மிகவும் போக்யமானதோர் இடத்திலே போல எனது உடலினும் உவந்து தனக்கு ஸுகவாஸஸ்தானமான பாற்கடலோடும் அங்கு அமைக்கப் பெற்ற அரவணை யோடுமே வந்து புகுந்து கண்வளர்ந்தருளும் பரம காருணிகனான பெருமானுடை ப்ரபாவத்தைப் பரக்கச் சொல்லி அவனைத் கோரினதெனவே கொள்ளவேண்டும். நோய்கள் நீங்குவதும் பரிஜனங்கள் பாதுகாப்பதும் எம்பெருமானுடைய ஸங்கல்பத்தாலே யாகவேண்டி யிருப்பதாலே அங்ஙனம் சொன்னதெல்லாம் அவனையே காத்துக்கொள்ளக் கோரினதேயாமென்றபடி. இப்படி இங்குற்ற நாளிலே இடையூறின்றி பணி செய்யத் தமக்கு பாக்ய மிருந்ததை யருளினாராயிற்று.

இக் கடைப் பாசுரங்களிரண்டினால் திருப்பல்லாண்டில் தொடங்கின அர்த்தத்தை ஆழ்வார் நிகமித்தருளுகிறதாகப் பெரியவாச்சான்பிள்ளையை யடியொத்தி ஜீயருரைத்ததைக் காண்க. இதனால் திருப்பல்லாண்டு தொடங்கி இது ஒரே ப்ரபந்த மென்பதும் நிர்விவாதமாய் நின்றது.

ப்ரபந்த ரக்ஷையில் பெரியாழ்வார் திருமொழி 5. 2.

நெய்க்குடத்தை உரை முற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

## பெரியாழ்வார் திருமொழி 5. 3.

# துக்கச்சுழலையை.

'திருமாலிருஞ்சோலைமலை யென்றேன் திருமால் வந்தென்னெஞ்சு நிறையப் புகுந்தான்' என்று தொடங்கி நம்மாழ்வார் அனுபவித்த வண்ணமே பெரியாழ்வாரும் அனுபவித்தருளுகின்றார். முதன் முதற் கண்ணனின் அனுபவத்திலிழிந்து பரம், வ்யூஹம், விபவம், ஹார்த்தம், அர்ச்சை யென்ற மூர்த்திகளிலே அர்ச்சையே அபராதங்களை யெல்லாம் பொறுத்து அனைவர்க்கும் பலனளிக்கும்படி நிலைத்திருக்கும் மூர்த்தியாகையாலே, கண்ணுறக் கண்டனுபவிக்கக்கூடும் அம் மூர்த்தி தன்னையே அனுபவிக்க வாசைப்பட்டு, அவ்வர்ச்சாமூர்த்திகளிலே திருமாலிருஞ்சோலையெம்பெருமான் விஷயமாகவே முதலில் திருமொழிகளை யருளினாரிவராகையாலே, எம்பெருமான் அம்மூர்த்தியையே யிவரது மனத்தில் நிற்கவைத்து இவருக்குப் பரம பக்தியை விளைவிக்க முன்வந்தான். ஆக இவர் அந்த எம்பெருமானையே மீண்டும் விளித்தருளுகின்றார்—

1. துக்கச்சுழலையைச் சூழ்ந்துகிடந்தவலையையறப்பறித்துப்
புக்கினிற்புக்குன்னைக் கண்டுகொண்டேனினிப் போகவிடுவதுண்டே.
மக்களறுவரைக் கல்லிடைமோத விழந்தவள்தன்வயிற்றில்
சிக்கேனவந்து பிறந்துநின்றாய் திருமாலிருஞ்சோலையெந்தாய். **(453.)**

| | |
|---|---|
| மக்கள் அறுவரை | தனது ஆறு பிள்ளைகளையும் |
| கல் இடை மோத | கற்பாறையின்மேல் (தன் உடன் பிறந்தான்) அறைந்து அழிக்கும்படி |
| இழந்தவள் தன் | கைவிட்ட தேவகியின் |
| வயிற்றில் | கர்ப்பத்திலே |
| சிக்கென | விரைவாக |
| வந்து | ப்ரவேசித்து |
| பிறந்து | ஆவிர்பவித்து |
| நின்றாய் | (அழியாதபடி யொளித்து வளர்ந்து) நின்றவனே! |
| திருமாலிருஞ்சோலை | திருமாலிருஞ்சோலை யென்ற திருப்பதியில் தோன்றியுள்ள |
| எந்தாய் | என் அப்பனே! |

| | |
|---|---|
| துக்கம் சுழலையை | துக்கமளிக்கும் சுழலுகைகளுக்கிடமான கரணகளேபராதிகளை |
| சூழ்ந்து கிடந்த | வ்யாபித்து ஒழியாமல் பற்றியிருந்த |
| வலையை | ராகத்வேஷாதிகளாகிற வலையை |
| அற | ஸவாஸநமாய் ஒழியும்படி |
| பறித்து | போக்கிக்கொண்டு |
| புக்கினில் | இனிய புக்ககத்தில் |
| புக்கு | புகுந்து |
| உன்னை கண்டு கொண்டேன் | உன்னை நேரில் கண்டு, பிடித்துக்கொண்டேன். |
| இனி | இதற்குப் பிறகு |
| போக | என்னை விட்டுநீங்க |
| விடுவது | உன்னை நான் விடுவதென்பது |
| உண்டே | உண்டோ? கிடையாது. |

கீழ்த்திருமொழியிலே இவர் பட்டினங் காவற்பொருட்டுப் பரவினதற் கிணங்கி எம்பெருமான், உற்ற வுறு பிணி நோய்கள் ஏதங்களாயின வெல்லாம் இரங்கலிடுவித்ததை இங்கே முதலடியிலே ஸங்க்ரஹித்தருளினரென்க. ஆகவே அவனை ஒரு நொடிப் பொழுதும் விடாதனுபவிக்க இவருக்கு முடிந்தது. **புக்கினில்.** இது புக்ககம் என்றது போலாம். இன் இல், இனிய இல். பிறந்த வகத்திலே பெண் இருந்தால் மணாளன் வருவதும் போவதுமாயிருப்பான்; நிலைத்து நில்லான். ஆக அவனைப் போகவிடும்படி யிருக்கும். புக்ககத்திற் போய்ச் சேர்ந்தால், அதுவும் ஸகல ஸம்பத்துக்களும் நிறைந்ததோர் இனிய இல்லானால்; அவன் உள்ளிருந்தபடியே எல்லாம் அனுபவிக்கக் கூடுமாகையாலே போகும்படி நேரிடாது; விடவும் வேண்டாம். பரவ்யூஹாதிகளான பல மூர்த்திகளோடு ஆங்காங்கு நின்ற எம்பெருமானுக்கு அவை யெல்லாம் இல்லங்களானாலும் நிலைத்திருக்க முடியும்படி யமையாததாலே இனிய இல்லாகவில்லை. திருமாலிருஞ் சோலையே யங்ஙனமாயிற்றென்றபடி. இனித் திருமாலிருஞ்சோலையையும் விட்டு ஆழ்வாரின் போதிற்கமல வன்னெஞ்சம் புகுந்து அவனிருக்குமிதுவே புக்கினில் என்னலு மாம். **கண்டு கொண்டேன்.** கண்டது மாத்திரமின்றி, கொண்டது மாயிற்றென்றபடி. **இனிப்போக விடுவதுண்டே.** இதுவரையில் தோன்றுவதும் மறைவதுமா யிருந்ததாலே நான் சழக்குநாக்கையுங் கொண்டு புன்கவி சொல்லிப் புலம்பும்படி யிருந்தது. இனி நீ அதன் பலனைப் பூர்ணநுக்ரஹம் செய்திட்டபடியாலே உன் அனுபவத்தை விட ப்ரஸக்தி யில்லை. ஒருக்கால் விடும்படி செய்விக்க மீண்டும் நினைத்தாலும், தூக்கச் சுழலையைச் சூழ்ந்து கிடந்த வலையை யறப் பறித்துவிட்டதாலே புண்ய பாபங்களான பந்தகங்களை உதறின பிறகு உன்னை யனுபவிப்பதை யிழப்ப தேதென்றபடி.

**மக்களி**த்யாதியால் தாம் கண்ணனைய் வர்ணித்திவ்வளவு சொன்ன தெல்லாம் இத்திருமாலிருஞ் சோலையப்பனை யென்றதாம். காலநேமி யென்ற வஸுரனோடு ஸம்பந்தம் உடையராய் ப்ரஹ்ம சாபத்தாலே பாதாளத்தில் இருந்த ஆறு அஸுரர்களை தேவகியின் கர்ப்பத்திலே பிறப்பித்துக் கம்ஸனாகிற அஸுரனைக் கொண்டே அவர்களை மாளவைத்து அசரீரி வாக்கின்படி தான் எட்டாவது கர்ப்பமாகப் பிறந்த கண்ணனே இவன். **சிக்கெனவந்து.** ஏழாவது கர்ப்பம் தரிக்கப் பெற்றதற்குப் பத்து மாஸத்திற்குப் பிறகு ப்ரஸவமும், பிறகு சிறிது காலமும் ஆன பிறகு வருவதென வெண்ணாதே அவ்வளவு தாமதத்தையும் பொறாது "ஸப்தமோ வைஷ்ணவோ கர்ப:" என்றபடி, 'எட்டாவது கர்ப்பம் கம்ஸனைக் கொல்வதாகத்தான் அசரீரிவாக்கு பிறந்தது; எட்டாவது பிள்ளை யென்னவில்லையே. ஆக ஏழாவது கர்ப்பம் அவன் பிள்ளையாகவே பிறந்தாக வேண்டு மென்பதில்லை' யெனத் திருவுளங்கொண்டு, தனக்கு நித்ய சேஷனான ஆதிசேஷனை ஏழாவது கர்ப்பத்தில் ப்ரவேசிப்பித்துச் சில மாஸங்களிலேயே அந்த கர்ப்பத்தை ரோஹிணி வயிற்றுக்குப் பிற்காலத்தில் தனக்கநுகூலமாம்படி யனுப்பிவைத்துச் சிக்கென வந்தாய். இதெல்லாம் தேவகியாரின் துயரத்தைத் தீர்ப்பதி லுனக்கிருந்த பரபரப்பைத் தெரிவிக்கின்றதே. அங்ஙனமே எனது துயரத்தையும் தீர்க்கப் பிறந்திருக்கும் நீ இனி மறைய வேண்டாம். நானும் எத்தனையோ மூர்த்திகளை மனத்தில் நிறுத்த முயன்றிழந்திருப்பது உனக்குத் தெரியுமென்றபடி. **பிறந்து நின்றாய்.** அழி

யாமல் அவள் பிள்ளையாகவே விளங்கா நின்றாய். இப்படி மிச்சமாய் நிற்பதற்காகவே உன்னை சேஷனென்று அவள் அழைத்தனள் போலும். இங்கே சேஷனென்றிவனை யழைத்ததைக் கூறும் ஸ்ரீ பாகவத ச்லோகத்திற்கு ஒரு சிறந்த பொருளை இப் பாசுரத்தின் பின்னடிகளுக் கிணங்க உரைக்கின்றோம்; கேண்மின்.

‘ நஷெ்டெ்ராகெ விவாரய-உாவஸாெ ந
உஹாஹஒெ தஷாதிஹ-அதம் ஹெதஷ-்ஷ
வ்ரூகெ உவ்ரூகூஂ காமுவெஜெ ந யாதெ
ஹவாெநகஃ ஶிஷ்ரூதெ பொஷஸஂஜ்ஞ꞉’ என்பது அந்த ச்லோகம்.

இதற்கு எல்லோரு மறிந்துள்ள பொருளாவது—சதுர்முகனின் ஆயுளான த்விபரார்த்த காலத்தின் முடிவிலே உலகமெல்லாம் அழிந்த பிறகு உலகத்திற்குக் காரணங்களான பஞ்சமஹாபூதங்களும் தங்கள் காரணங்களிலே லயித்துவிட, மஹதஹங்காராதிகளான வ்யக்தங்களும் மறைந்து அவ்யக்த மென்னும் தமஸ்ஸே நிற்க, அதுவும் உன்னோடு ஏகீபூதமாக, நீ யொருவனே மிகுந்து நின்றாயானதாலே நீ சேஷன்’ என்பதாம். இங்கு ஸந்தர்ப்பத்திற்குத் தக்க பொருள் ஒன்று தோன்றுகிறது. உலகில் பல பிள்ளைகள் பிறந்து இறந்துவிட்டால் பிறகு பிறக்கும் பிள்ளையைக் குப்பையில் வைத்துக் குப்பனென்று பெயரிடுவர் சிலர். அங்ஙனமே தேவகி பெயரிட்டு அதன் பொருளை விளக்குகிறாள்—த்வி என்பது இரண்டு. அவற்றிற்குப் பரமானது மூன்று. அம்மூன்றை அர்த்தமாய் அதாவது பாதியாயுடைய எண் த்விபரார்த்தம், அதாவது ஆறு. ஆக ஆறு எண்ணிக்கையில் முடிந்த பிள்ளைகள் போனபிறகு என்று முதற்பாதத்தின் பொருள். பிறகு ப்ரஹ்மாதி தேவர்கள் ஸர்வகாரணமான எம்பெருமானைச் சரணம் புகுந்து அவதரிக்க பிரார்த்தித்ததை இரண்டாமடி கூறும். பூதம் என்ற பதமானது சரீரத்துடன் கூடின சேதநனைச் சொல்வது. மஹத்தான சேதநர்கள் தேவர்கள். ஆதிபூத மென்கிற பதம் ‘எதஸ்ய மஹதோ பூதஸ்ய நிச்வஸிதம்’ என்றபடி காரணமான பரப்ரம்மத்தை, மஹாபுருஷனைச் சொல்லும். மூன்றாமடிக்கு, ‘ஆறு அழிந்த பிறகு வ்யக்தமான கர்ப்பமும் தான் இருக்க வேண்டிய காலம் முழுமையு மங்கே இராமல் வேகமாய், அவ்யக்தமாய் போனவிடம் தெரியாதபடி போய்விட்டபோது’ எனப் பொருளாம். ‘இப்படியான பிறகு பிறந்து நின்றது நீ ஒருவனே. ஆக உனக்கு சேஷனென்று பெயராகக் கடவது’ என்றனள் கடையடியில். இவ்வர்த்தத்தை யெல்லாம் தருவிக்கிறது மக்கள் இத்யாதியாலே இப்பாசுர மென்னலாம். (க)

நீ ஒரு பக்கம் நின்று நிறுத்தினால் வேறு பக்கமாய் விலகுகிறேன்; அல்லது என்னைப் போகவிடாதொழிந்தால், நான் இங்கேயே ஒளித்திருந்துவிடுகிறேனென்று அவன் கூறுவதாக வைத்துத் திருவாணையிட்டு அவனைத் தோற்றமளித்தவாறே இருக்கச் செய்கிறார்—

2. வளைத்துவைத்தே னினிப்போகலொட்டேன் உன்றனிந்திரஞாலங்களால்
ஒளித்திடில் நின்திருவாணைகண்டாய் நீயொருவர்க்கும் மெய்யனல்லை.
அளித்தெங்கும் நாடுநகரமுந்தம்முடைத் தீவினைதீர்க்கலுற்றுத்
தெளித்துவலஞ்செய்யுந் தீர்த்தமுடைத் திருமாலிருஞ்சோலையெந்தாய். (454.)

| | |
|---|---|
| நாடு உம் | எல்லா விடங்களி லிருப்பவர்களும் |
| நகரம் உம் | பட்டணங்களிலுள்ளவர்களும் |
| எங்கும் அளித்து | இந்த இடமடங்கலும் நெருங்கியிருந்து |
| தம்முடை | தங்களுடைய |
| தீவினை | கொடிய பாபங்களை |
| தீர்க்கல் | அழிப்பதை |
| உற்று | உத்தேசித்து |
| தெளித்து | ப்ரோக்ஷித்து |
| வலம் செய்யும் | ப்ரதக்ஷிணம் பண்ணப் பெற்ற |
| தீர்த்தம் உடை | சிலம்பாறு முதலான தீர்த்தங்களையுடைய |
| திருமாலிருஞ்சோலை | திருமாலிருஞ்சோலை யென்னும் திருப்பதியிலிருக்கும் |
| எந்தாய் | என் தந்தையே ! |
| வளைத்து வைத்தேன் | உன்னைச் சூழ்ந்துகொண்டு நடுவில் நிறுத்தினேன். |
| இனி | இதற்குப் பிறகு |
| போகல் ஒட்டேன் | நீ விலகுவதை ஸம்மதிக்க மாட்டேன். |
| உன் தன் | உன்னுடைய |
| இந்திர ஞாலங்களால் | இந்திர ஜால வித்தைகளாலே |
| ஒளித்திடில் | இங்கேயே மறைந்தாயாகில் |
| நின் திரு ஆணை | உன் பிராட்டியின் மேலாணை யிடுவேன். (அங்ஙனம் செய்தாலொழிய) |
| நீ | ஆச்ரிதர் கஷ்டத்தைக் காணாத நீ |
| ஒருவர்க்கும் | எப்படிப்பட்டவர்க்கும் |
| மெய்யன் | உண்மைத் தோற்றமுள்ளவனாகவே |
| அல்லை | இருப்பதில்லை. |

இந்திர ஞாலங்களால். ‘இந்த்ரோ மாயாபி: புருரூப ஈயதே’ என்ற ச்ருதி உன் இந்திர ஜாலத்தைச் சொல்லுகிறதே; அதை விட்டு இதென் ஒளிக்கு மிந்திர ஜாலம்? நின்திருவாணை. இதற்கு 4–2–5-ல் ‘கடல் வண்ணன் திருவாணை கூற’ என்ற விடத்திற்போல், ‘உன் மேலாணை’ என்றே பொருள் கொள்ளக் கூடும். ஆகிலும், திருவாய்மொழியில், ‘இனி நான் போகலொட்டேன் ஒன்றும் மாயம் செய்யே லென்னையே. மாயஞ் செய்யேலென்னை. உன் திருமார்வத்து மாலை நங்கை வாசஞ் செய் பூங்குழலாள் திருவாணை நின்னாணை கண்டாய்’ என்ற கணக்கிலே இங்கும், ‘இனிப் போகலொட்டேன் உன்தனிந்திர ஞாலங்களால் ஒளித்திடில் நின் திருவாணை கண்டாய்’ எனவருளிச் செய்திருப்பதாலே அங்கு முன்னமருளின திருவாணையையே இங்கும் கொள்வது நலம். திரு என்பது இப்போது பூரணமாகப் பொருள் பெற்றதாகிறது. பெருமாளும் தன்மே லாணையை விட பிராட்டிமேலாணையைப் பெரிதாக நினைத்திருக்கிறார். **‘ஜயா அ வீதயா தாவி ஸவேதாசஸ்ய ஸவ நடீ ந’** என்று பரதாழ்வானைக் குறித்தருளிச் செய்தாரே. ஆகவே பிராட்டியின்மேலாணை யெனப் பொருள் கொண்டது. திருவாய்மொழியில் பிறகு ‘நின்னாணை’ யென்றதும், முதலில் பிராட்டியின் மேலாணையாலே பவ்யப்பட்டுப் பிராட்டிக்குச் சமமாக ஆழ்வாரை யவன் ஆதரித்தான். அது கண்டு அதிக நேசம் செய்தென்னை யிப்படிக் கொண்ட பிறகும் மாயஞ் செய்திடில் நின்னாணை யென்று, தாம் பிராட்டிக்குச் சமநிலையிலே நின்ற பிறகருளினதாம். அப் பொருளையு மிங்கிசைந்தாலும் குற்றம் யாது மில்லை. நீ யொருவர்க்கும் மெய்ய னல்லை. ‘உம்மை நான் விடாமலிருக்கும் நிலையை நீர் பெற்றிருந்தாலொழிய இங்ஙன மாணையிட முடியுமோ? ஆக அந் நிலையை நீர் உணர்ந்தீராகில் ஆணை யெதற்கு’ என்ன வேண்டா. நீ என்னோடு கலந்து பரிமாறும் வகை யெல்லாம் கண்டுதானிருக்கிறேன். இப்படி நீ கலந்து பரிமாறின கோபிகாதிகளிட மெல்லாங்கூட நீ மெய்யனாகா தொழிந்தது எனக்குத் தெரிந்திருப்பதாலே ஆணையிட்டு வளைத்து நிற்க வேண்டிற்றென்றபடி. அளித்து இத்யாதி. அளித்து ரக்ஷித்து, உற்று ஒருப்பட்டு என்று தீர்த்தத்திற்கு விசேஷணமாகக் கொள்வர். அப்போது

'இருக்கிற' என வொரு பதத்தைச் சேர்த்து அதில் அவற்றை யந்வயித்துக் கொள்க. தெளித்து ஆரவாரித்து எனவு முரைப்பர். ப்ரோக்ஷித்து என்றது பெரியோர் பணித்த பொருள். (உ)

**3.** உனக்குப் பணிசெய்திருக்குந் தவமுடையே னினிப்போயொருவன்
தனக்குப்பணிந்துகடைத்தலைநிற்கை நின்சாயை யழிவுகண்டாய்
புனத்தினைக்கிள்ளிப்புதுவவிக்காட்டி யுன்பொன்னடிவாழ்கவென்று
இனக்குற வர்புதியதுண்ணுமெழின்மாலிருஞ்சோலையெந்தாய். (**455.**)

| | |
|---|---|
| இனம் குறவர் | குறவ ஜாதியர் |
| உன் பொன் அடி | உனது அழகிய திருவடிகள் |
| வாழ்க | நீடூழி வாழவேண்டும் |
| என்று | எனப் பல்லாண்டு பாடி, |
| புனம் | கொல்லைகளில் (விளைந்த) |
| தினை | தினைக் கதிர்களை |
| கிள்ளி | பறித்து (செய்த) |
| புது அவி | புதிய ஹவிஸ்ஸை |
| காட்டி | உனக்கு நைவேத்யமாக ஸமர்ப்பித்து |
| புதியது உண்ணும் | இது கிடைக்கவரிதென உண்கிற இடமான |
| எழில் | அழகு பொருந்திய |
| மாலிருஞ் சோலை | திருமாலிருஞ் சோலையில் (எழுந்தருளி யிருக்கும்) |

| | |
|---|---|
| எந்தாய் | என் தந்தையே! |
| உனக்கு | ஸர்வ ஸ்வாமியான உனக்கு |
| பணி செய்து இருக்கும் | கைங்கர்யம் செய்வதை யளிக்கும் |
| தவம் | உபாயத்தை |
| உடையேன் | செய்துள்ள யான் |
| இனி | இவ் விவேகம் பிறந்த பிறகு |
| போய் | உன்னை விட்டுப் போய் |
| ஒருவன் தனக்கு | வேறு ஜீவனுக்கு |
| பணிந்து | பரதந்த்ரனு யிருந்து |
| கடைத்தலை | (அவனது) வாசலில் |
| நிற்கை | நிற்பது |
| நின் சாயை | உனது நிறத்தின் |
| அழிவு கண்டாய் | அழிவாகும். |

'வளைத்து வைத்தேனினிப் போகலொட்டேன்' னென்னும் தசையிலிருக்கு மாழ்வாருக்கு இதுவரையில் நேரிடாததான அந்ய சேஷத்வம் அதாவது வேறொருவனுக்கு ஊழியம் செய்வதென்பது புக விடமேது? ஆக 'இனிப் போயொருவன் தனக்கு' இத்யாதியான பாசுரமென் என்ன வேண்டா. உன்னையே யனுபவித்து வருமெனக்கு நீ உன் விஷயமாக அந்திம ப்ரத்யத்தை யுண்டுபண்ணமற்போனல் அப்போது கடைத்தசையில் வரும் தோற்றமானது வேறு வஸ்து விஷயமாய் முடியுமே. பக்தி, ப்ரபத்தி யென்கிற உபாயங்கள் எல்லாப் பலன்களையு மளிக்கத்தக்கவை யல்லவோ. ஆக அந்திம ப்ரத்யமானது அந்ய விஷயத்திலாமாகில் 'யம்யம்வாபி ஸ்மரந் பாவம் த்யஜத்யந்தே கலேபரம், தம் தமேவைதி' என்கிற ந்யாயமாய் ப்ரம்மருத்ரேந்த்ராதிக்ஷுத்ர ஸ்தானங்களிற் புகுந்து அங்கே கடைத்தலை நிற்க வேண்டிவரும். ஆகவே நீ ஒளித்திருத்தல் கூடாதென விதன் கருத்து. நின்சாயை யழிவு. பிறர் வாசலில் நான் நிற்பது உனது கீர்த்திக்கும் மேன்மைக்கும் காந்திக்கும் அழிவுக்குக் காரணமாகும். இப்படி யநந்யகதிகளை விட்டானே என்று உன்னை உலகம் நிந்திக்க அவ் வகீர்த்தியைக் கண்டு உனக்கும் வருத்தமும் வைவர்ண்யமு முண்டாமென்றபடி.

புனமித்யாதி. சாதியிற் குறவராயிருப்பவர்கூடக் குடிகுடியாய் வேறு பலனைக் கோராமே பரமைகாந்திகளாய், 'உன் பொன்னடி வாழ்க' வென்று உன்னுடைய ஸம்ருத்தியே புருஷார்த்தமாய்க் கொண்டு உன் கைங்கர்யமே செய்து வரும்படி நற்புத்தியை யளிக்கும் திவ்யதேசத் தெம்பெருமானை நீ பரமைகாந்தியான என்னைப் பிறர்கடையில் நிற்கும்படி பிறக்க வைக்கலாகுமோ வென்றபடி

புனத்தினை யென்றது தங்கள் ப்ரயாஸ மின்றியே பயிரான தினை யென்பதற்காக. இவர்களுக்குப் புல்லினுலாக வேண்டிய தொன்று மில்லையாகையாலே அறுக்காமல் கதிர்களை மட்டும் கிள்ளிக்கொள்வது. புதுவவி. தானியம் விளைந்த புதிதிற் செய்த ஹவிஸ்ஸு. புதியதுண்கையாவது பகவத் ப்ரஸாதமாய்க் கிடைப்பதரிதென உண்ணுதல், பர்யுஷிதமாகாதபடி யுண்கை, பெருவிருந்துண்பது போல் பரிவுடனுண்கை யென்ற வாறும். (௩)

**4.** காதம்பலவுந்திரிந்துழன்றேற் கங்கோர்நிழலில்லை நீரில்லையுன்
பாதநிழலல்லால் மற்றோருயிர்ப்பிடம் நானெங்குங்காண்கின்றிலேன்
தூதுசென்றாய்குருபாண்டவர்க்காயங்கோர் பொய்ச்சுற்றம்பேசிச்சென்று
பேதஞ்செய்தெங்கும்பிணம் படுத்தாய் திருமாலிருஞ்சோலையெந்தாய். **(456.)**

| | |
|---|---|
| தூது சென்றாய் | பாண்டவ தூதனாகி துர்யோதனனிடம் சென்றவனே! |
| அங்கு | த்வாரகையில் (அல்லது) துர்யோதந ஸபையில் முதலில் |
| குரு | துர்யோதநாதிகளுக்கும் |
| பாண்டவர்க்கு | பஞ்சபாண்டவர்களுக்கும் |
| ஆய் | அனுகூல நிலையில் நின்று |
| பொய் சுற்றம் | உண்மையில்லாத ஸௌப்ராத்ராதி ஸம்பந்தத்தை |
| பேசி | இருப்பதாகச் சொல்லி |
| சென்று | துர்யோதநாதிகள் வழியே போய் |
| பேதம் செய்து | பேதோபாயத்தை நன்கு உபயோகித்து |
| எங்கும் | எல்லாச் சேனைகளிலும் |
| பிணம் படுத்தாய் | சூரர்களைப் பிணமாக்கினவனே! |

திருமாலிருஞ்சோலை எந்தாய்!

| | |
|---|---|
| பல காதம் உம் | எத்தனையோ காத தூரங்களிலும் |
| திரிந்து | அலைந்து |
| உழன்றேற்கு | ஆயாஸப்பட்டுள்ள எனக்கு |
| அங்கு | அலைந்த விடங்களிலே |
| நிழல் இல்லை | தங்க நிழலும் இல்லை; |
| நீர் இல்லை | அருந்த தண்ணீரும் இல்லை. ஆகையால் |
| உன் பாதம் | உனது திருவடிகளின் |
| நிழல் அல்லால் | நிழலன்றி |
| மறு | வேறு |
| ஓர் உயிர்ப்பு இடம் | உயிரளிக்கு மிட மேதேனுமொன்றும் |
| எங்கும் | எந்த வுலகிலும் |
| நான் காண்கின்றிலேன் | நான் காணவில்லை. |

உன் சாயை யழிவாகு மென்றோ மற்றொருவன் தனக்குப் பணிவது வேண்டா மென்கிறே னென்று நினைக்கவேண்டாம். எங்கு நான் போனாலும் எனக்கு உயிர் நிலைக்காதாகையாலும் அதை நான் வேண்டேன். மாடிவீடுகளிலோ, மரங்களின் கீழோ ஏதேனு மொரு நிழலிலே தங்கியும், தண்ணீரை யாவது அருந்தியும் உயிர் கொண்டிருப்பர் உலகில். எனக்கும் அவ்வண்ணம் நிழலும் நீரு மிருந்தாலே வாழலாம். வேறு நிழலும் நீரும் என்னுயிரைக் காக்க வல்லவை யல்லவே. உன் திருவடி நிழலும் உன் அனுபவமாகிய அமுதும் தான் என்னை யுயிர்ப்பிக்கு மவை யென்றபடி. காதமாவது கூப்பிடுதூரம் நான்கு கொண்ட தென்பர்.

தூது இத்யாதி. இங்கு, குருபாண்டவர்க்கு என்பதற்கு, குருவம்சத்திலே பிறந்த பாண்டவர்க்கு எனவுரை செய்வர். இது வீணாகும். ப்ரஸித்தமான பொருளை விடாது கருத்துக் கூறுவதே நன்று. பொய்ச்சுற்றம் பேசிச் சென்று பொய்யுறவைப் பாராட்டிக் கொண்டு என வுரைத்து, எம்பெருமான் உண்மையில் உறவு சுற்ற மொன்றில்லாதவனாகையாலே எனக் கருத்துரைப்பர். ‘உங்களோடு பாண்டவர்களோடு வாசி யில்லை’ என்றபடி யிவன் துர்யோதநாதிகளிடம் பேசினதாகக் காணவில்லை யென்றாலும், பாண்டவர்க்கும் கௌரவர்க்

கும் ஸௌப்ராத்ர மென்கிற பொய்ச் சுற்றத்தை முதலில் ஸாமதாநபேத தண்டங்களில் ஸாமோபாயத்தைப் பற்றினபோது பேசி, பிறகு 'ஐந்தூர் மட்டு மளித்தாற் போதும்; மற்றவை யெல்லாம் உங்களுக்கே' யென்று தாநோபாயத்திற்குச் சென்று, அதுவும் வீணானபோது பேதம் செய்தான் சபையிலென்று பாரதத்தில் கண்டதே யிங்குக் கூறப் பெறலாம். 'ஸாம ஆதௌ ப்ரயுக்தம் மே ராஜந் ஸௌப்ராத்ரமிச்சதா,—அபேதம் குருவம்ஶஸ்ய ப்ரஜாநாஞ்ச விவ்ருத்தயே— பாபேஷு பேதஶ்ச ப்ரயுக்தோ ... ஸங்கீர்த்திதம்—தாநம் அத ... வஶ்யாநி தேஷாம் வாசோஷாம் நாந்வயாம்' (உத்யோக பர்வம். 150) இத்யாதிகளைக் காண்க. 'உங்களோடு பாண்டவர்களோடு வாசியில்லை' என்ற வண்ணமே கொள்ளவேண்டுமானாலும் தூது செல்வதற்கு முன்னே கண்ணன் த்வாரகையி லெழுந்தருளி யிருந்தபோது, அவரை ஸஹாயமாக வழைக்க துர்யோதநனும் அர்ஜுநனும் ஒரே ஸமயத்தில் அங்குச் சென்று, தற்சமயம் நித்ரை செய்திருந்த கண்ணனின் தலைப்பக்கத்தில் துர்யோதனன் உட்கார்ந்தும் அர்ஜுநன் கால்கடையில் நின்று மிருந்தபோது விழித்துக்கொண்டு கண்ணன் முன்னே அர்ஜுநனையும், திரும்பினபோது பின்னே துர்யோதனனையும் கண்டு இருவரும் வந்ததென் என வினவ, துர்யோதனனும், 'பாண்டவரோடு எங்களோடு உமக்கு ஸம்பந்தத்தில் வாசியில்லை· ஆக முன்னே வந்த எனக்கே ஸஹாயம் செய்யவேண்' டுமென, அப்போது, 'நீ பாண்டவத்வேஷியானபடியாலே எனக்கும் த்வேஷி' யென்னுமே அவன் சொன்னதை யொருவாறிசைந்து, 'நீ வந்தது முன்னே, நான் அர்ஜுநனைப் பார்த்தது முன்னே. ஆகையால் இருவருக்கும் ஸஹாயம் செய்யவேண்டுமென்று சமமாகக் கூறி, நிராயுதபாணியான தான் ஒருவர் பக்கம், தனக்குச் சமரான போர்வீரர்கள் பல கோடி நாராயணர்களான கோபர்கள் மற்றொருவர் பக்கம் எனப் பிரித்து, பாலனாகையாலே அர்ஜுநன் முதலில் வேண்டியதைக் கொள்ளட்டும், மற்றொரு பாக முன்னுடைய தென வருள, அர்ஜுனன் தனிக் கண்ணனை மட்டுமே வேண்டுமென, துர்யோதனனும் மற்றொரு பாகத்தைக் கொண்டு மிக மகிழ்ந்தா (உத். 87.) னென்றதை இங்கே கொண்டுரைக்கலாம். இருவருக்கும் ஒரே சுற்றமுள்ளது போல் துவாரகையில் பேசி, பிறகு ஹஸ்திநாபுரம் சென்று பேதம் செய்து எனப் பொருள். தூது சென்றதற்கு முன் நடந்ததைக் கூறுவதால் அந்வயத்தி லிங்கு தோஷமொன்றுமில்லை. தூது சென்றாய் என்பது தூதுபோய் எனப்பொருள் பெறுது. இது விளிச் சொல். (௪)

யான் செய்யும் தவமானது உனக்குப் பணி செய்திருக்கும் தவமேயன்றி வேறு பலனுக்காகச் செய்யும் தவ மன்று. உன்னையே பரமப்ராப்யமாய் பரமபோக்யமாய்க்கொண்டு த்யானம் செய்து வருகிறே னென்பதை என் நிலையைக் கொண்டறியலாமே எனக் கருதித் தம் நிலையை யருளி இதே வாழ்வென்கிறார்—

5\. காலுமெழாக் கண்ணநீரும்நில்லா வுடல்சோர்ந்துநடுங்கி, குரல்
மேலுமெழாமயிர்க்கூச்சுமறாவெனதோள்களும் வீழ்வொழியா
மாலுகளாநிற்குமென்மனமே யுன்னைவாழத்தலைப்பெய்திட்டேன்
சேலுகளாநிற்கும்நீள்சுனை சூழ்திருமாலிருஞ்சோலையெந்தாய். (457.)

| | |
|---|---|
| சேல் | மீன்கள் |
| உகளா நிற்கும் | துள்ளி விளையாடிக் கொண்டிருக்கும் |
| நீள் | நீண்ட |
| சுனை | நீர்த் தேக்கங்களினால் |
| சூழ் | சூழப் பெற்ற |
| திருமாலிருஞ் சோலை | திருமாலிருஞ் சோலையில் (எழுந்தருளி யிருக்கும்) |
| எந்தாய் | என்னப்பனே ! |
| என | என்னுடைய |
| கால் உம் | கால்களும் |
| எழா | வைத்த இடத்தினின்று கிளம்புவதில்லை; |
| கண்ண நீரும் | கண்களில் உண்டாம் ஆனந்த நீரும் |
| நில்லா | நிற்பதில்லை; பெருகின படியே யிருக்கும்; |
| உடல் | சரீரமானது |
| சோர்ந்து | சோர்வை யுற்று |
| நடுங்கி | நடுங்குவதால் |
| குரல் உம் | கண்ட்ட த்வனியும் |
| மேல் எழா | வெளிக்கிளம்புவதில்லை; |
| மயிர் கூச்சு உம் | உடல் மயிர் செறித்தலும் |
| அரு | ஒழிவதில்லை; |
| தோள்கள் உம் | தோள் ப்ரதேசங்களும் |
| வீழ்வு ஒழியா | சக்தியற்று விழுந்துபோன வண்ண மிருக்கின்றன |
| என் மனம் ஏ | (இவற்றிற்கெல்லாம் (மூலமான) என் மனது கூட |
| மால் | வியாமோஹத்திலே |
| உகளா நிற்கும் | பாய்ந்து கிடக்கும். ஆதலால் |
| வாழ | வாழ்வதற்காகவே |
| உன்னை | உபாயோபேய பூதனான உன்னை |
| தலைப் பெய்திட்டேன் | கிட்டி விட்டேன். |

என்னையே யடைய வேண்டு மென்று நீ ரெண்ணினாலும் இதே பலனை என்னிடம் கேட்காமல் தேவதாந்தரங்களைக் கேட்டுப் பெறுவது நல்லது. ஏனெனில், அவர்கள் என்னைப் போலே தாமதியாமே விரைவிலே பலனளிக்கு மியல்பினர் என எம்பெருமான் சொல்வதாக வைத்து அதன் மேலருளுகிறார்—

6. எருத்துக்கொடியுடையானும் பிரமனுமிந்திரனும் மற்றும்
ஒருத்தருமிப்பிறவியென்னும் நோய்க்குமருந்தறிவாருமில்லை.
மருத்துவனாய்நின்ற மாமணிவண்ணா மறுபிறவிதவிரத்
திருத்தியுன்கோயில் கடைப்புகப்பெய் திருமாலிருஞ்சோலையெந்தாய். **(458.)**

| | |
|---|---|
| திருமாலிருஞ்சோலையெந்தாய் ! | |
| எருது கொடி உடையான் உம் | விருஷப த்வஜனும் (ருத்ரனும்) |
| பிரமன் உம் | சதுர்முகனும் |
| இந்திரன் உம் | தேவேந்திரனும் |
| மற்றும் | மற்றவரும் |
| ஒருத்தர் உம் | இவரில் ஒருவர் கூட |
| இ | இந்த |
| பிறவி என்னும் | ஜந்ம மெனப்படும் |
| நோய்க்கு | வியாதிக்கு |
| மருந்து | மருந்தா யிருப்பதை |
| அறிவாரும் இல்லை | அறிந்தவராகக் கூட ஆகார். |
| மருத்துவன் ஆய் நின்ற | வைத்யனாகவே ப்ரகாசிக்கும் |
| மாமணி வண்ணா | நீலமணி நிறத்தனனே! |
| மறு பிறவி | புநர் ஜந்மமானது |
| தவிர | போம்படி |
| திருத்தி | என்னைச் செவ்வைப் படுத்தி |
| உன் கோயில் | உனது நித்யவாஸஸ் தானத்தின் |
| கடை | வாசலில் |
| புக | புகும்படி |
| பெய் | அருள் புரிவாயாக. |

அறிவாருமில்லை யித்யாதி. சிலர் மருந்து செய்யவும் வைத்தியம் செய்யவும் ஸமர்த்தரல்லராயினும் இந்த நோய்க்கு இது மருந்தென வறிந்திருப்பர். அங்ஙனம் இப் பிறவி நோய்க்கு தேவதாந்தரம் ஸாமர்த்திய மற்றிருப்பது மாத்திரமின்றி மருந்தை யறிந்திருப்பது மில்லை. ஆகையால் க்ஷுத்ர பலன்களைப் பெறு

வார் போலே நானு மங்கே போய் பெறுவ தொன்றில்லை. நீயோ மருந்தறிந்தவ னென்பது மட்டு மின்றி மருத்துவனுகவு முள்ளவன். பிறவி நோய் பல விதமானது—ப்ராரப்தகர்மத்தை யிசைந்து ஸஞ்சிதகர்மத்தால் வரும் பிறவியை மட்டும் நோயென்று விலக்கப் பார்ப்பர் சிலர். ப்ராரப்தத்திலும் சில ஜந்மங்களை யிசையார் சிலர். மறுப் பிறவியே வேண்டா மென்பாரு முளர். அடுத்த க்ஷணத்திலே பரிபூர்ண ப்ரஹ்மாநுபவம் பண்ண வேண்டு மென்றே பேரார்த்தி கொண்டிருக்கும் பெரியாரு மிருப்பர். ஆக அந்தந்த நோய்க்குத் தக்க மருந்தை யளிக்கும் மருத்துவன் நீயே. இப்படி ஸாத்யோபாயத்தை நடத்திவைப்பதாலே நீ மருத்துவனு யிருப்பதோடு ஸித்தோபாய னுனபடியாலே மருந்தாயு மிருப்பவன். எனக்கு நீ செய்ய வேண்டுவ தென்ன வெனில், மறு பிறவி தவிரத் திருத்துவதே. இனி வேறு பிறவியைக் கொடுக்காமல் உனது கோயிலான பரமபதத்தின் வாசலில் என்னை இந்த ஜந்மத்திலே புகச் செய்ய வேண்டு மென்றபடி. (சு)

இது வரையிற் போல் இனியும் உனது தயவினுலேயே யெல்லா மாகவேண்டுமென்கிருர்—

7. அக்கரையென்னுமனத்தக் கடலுளழுந்தியுன்பேரருளால்
இக்கரையேறியிளைத்திருந்தேனை யஞ்சேலென்று கைகவியாய்
சக்கரமுந்தடக்கைகளும் கண்களும் பீதகவாடையொடும்
செக்கர்நிறத்துச் சிவப்புடையாய் திருமாலிருஞ்சோலையெந்தாய். (459.)

| | |
|---|---|
| செக்கர் | செவ்வானத்தினுடைய |
| நிறத்து | நிறத்துக் கொத்த |
| சிவப்பு | செந்நிறம் பொருந்திய |
| சக்கரமும் | திருவாழியையும் |
| தட கைகளும் | அகன்ற திருக்கைத் தலங்களையும் |
| கண்களும் | திருக்கண்களையும் |
| பீதகம் ஆடை ஒடும் | பீதாம்பரத்தையும் |
| உடையாய் | உடையவனே! |
| | திருமாலிருஞ்சோலை யெந்தாய்! |
| அக்கரை என்னும் | பாபம் எனப்படும் |

| | |
|---|---|
| அனத்தம் கடல் உள் | துக்க ஸமுத்திரத்திலே |
| அழுந்தி | சொருகப்பட்டு |
| உன் பேர் அருளால் | உனது மஹா க்ருபையாலே |
| இ கரை ஏறி | இந்தக் கரையில் ஏறுதலுற்று |
| இளைத்து இருந்தேனை | மேற்கரை யேறவில்லையே யென்று தவண்டிருக்கும் என்னை |
| அஞ்சேல் என்று | பயப்பட வேண்டா மென்று |
| | கை கவியாய் கை காட்டிக் கொள்வாயாக |

அக்கரை இத்யாதி. 'தர்மோசோத்படகர்மகோடி—' என்கிற ந்யாஸதிலக ச்லோகத்தை யிங்கே யனுஸந்திக்க. இக்கரையேறி. இக்கடலுக்குக் கீழ்க்கரை மேற்கரை என விரண்டு கரைக ளுள. எவ்வளவோ கர்மங்களிருந்தும், திர்யக் ஸ்தாவரங்களாகப் பிறக்காமல் ஹிதாஹிதம் அறியும் மானிடப் பிறவி பெற்று, அதிலும் அவைதிகமதம், வைதிகத்திலும் விபரீதமதம் என்னும் வலைகளிற் சிக்காதே ஸதாசார்ய ஸம்பந்தம் பெற்று ஸத்யமான தத்துவஹித புருஷார்த்த ஜ்ஞானத்தைப் பெற்று இங்ஙன மிருப்பதே இக் கரை யேறினது. இனி 'தமஸ: பாரம்' என்ற மேல் கரை யேறவேண்டும். அதுவும் இதுவரையில் போல உனது க்ருபையாலே யாகவேண்டும். இது வரையில் பேரருள் புரிந்த நீ இனி

எல்லாம் சிற்றருளாலேயே செய்ய வியலும். ‘ஸபி தெ ஸூத்ரவஶிஷோ ஹர:’. கைகவியாய். கைகவித்தலாவது அபயமுத்ரை பொருந்திய கையை, திருவடியிற் பணிந்து கீழே நிற்குமவனுக்கு நேராக, மேலே யிருக்குமவன் நீ தாழ்த்திக் காட்டுவது, அல்லது அஞ்சேலென்று = அபயமுத்ரை செய்து பிறகு அழைப்பது. அபயமுத்ரையைக் கீழிருப்பவனைக் குறித்துத் தாழ்த்தினலும், அவனுக்கு எதிராக அந்தக் கையின் கீழ் அடிபாகம் கீழாகவும் விரல்பாகம் மேலாகவு மிருப்பதாலே அபய முத்ரைக்குக் குறையில்லை. சக்கர மித்யாதியாலே சிவப்பை வர்ணித்தது அவனுக்குத் தன்னிடமுள்ள அநுராகத்தைக் குறிக்க. இக்கரை யென்று இராப் பகல்களின் சந்திபோன்ற பேர்கமோக்ஷாந்தராளத்தைச் சொன்னதும் செக்கர் நினைவுறவே, இங்ஙனம் வர்ணித்ததாம். தடக்கைகளு மென்று கைத்தலங்களைக் கூறினபடி; முழுக்கைகளை யன்று. (எ)

இனிப் பிறவி தவிருவதற்கு அருள்வதோடு இப்பிறவியிலும் என்னை விடாதிருந்து தோற்ற மளித்தவண்ண மிருக்கவேண்டு மென்கிறார்.

8. எத்தனைகாலமு மெத்தனையூழியு மின்றோடுநாளையேன்றே
இத்தனைகாலமும் போய்க்கிறிப்பட்டே னினியுன்னைப்போகலோட்டேன்
மைத்துனன்மார்களைவாழ்வித்து மாற்றலர்நூற்றுவரைக்கெடுத்தாய்
சித்தம்நின்பாலதறிதியன்றே திருமாலிருஞ்சோலையேந்தாய். (460)

| | |
|---|---|
| மைத்துனன் மார்களை | அத்தையின் பிள்ளைகளான பாண்டவர்களை |
| வாழ்வித்து | வாழ ஸங்கற்பித்து |
| மாற்றலர் | விரோதிகளான |
| நூற்றுவரை | துர்யோதநாதிகள் நூறு பேரையும் |
| கெடுத்தாய் | அழித்தவனே! |
| திருமாலிருஞ்சோலை யெந்தாய்! | |
| எத்தனை காலமும் | இந்தக் கல்பத்தின் இப்பிறவிக்கு முன் எத்தனையோ காலமும் |
| எத்தனை ஊழியும் | அதற்கு முன் எத்தனையோ கல்பங்களும் |
| (இப் பிறவியிலும்) | |
| இன்றொடு நாளை | இன்றைத்தினம் நாளைத்தினம் |
| என்றுமே | என்றவாறே |
| இத்தனை காலமும் | இதுவரையிற் சென்ற காலமும் |
| போய் | போன பிறகு |
| கிறிப்பட்டேன் | வழிப்பட்டுள்ள நான் |
| உன்னை | இவ்வளவு காலமு மிராமல் காணப் பெற்ற உன்னை |
| இனி | இதற்குமேல் |
| போகல் | என்னை விட்டுப் போவதற்கு |
| ஒட்டேன் | ஸம்மதிக்க மாட்டேன். |
| சித்தம் | எனது மனமானது |
| நின் பாலது | உன் விஷயமாகவே யுள்ளது |
| அறிதி அன்றே | நீ யறிகிறாய் அன்றோ? |

கிறிப்பட்டேன். கிறியாவது வழி. வழிப்பாடல் நன்னெறி பெற்றிருத்தல். கிறி வஞ்சக மெனக் கொள்ளில், முன்கால மெல்லாம் போய் இப்பிறவியிலும் இத்தனை காலமும் வஞ்சகப்பட்ட நான் என்ற நவயித்துக் கொள்க. அல்லது கிறிப்பட்ட நான் இத்தனை விதமான காலங்களும் போய் இனிப் போகலொட்டே னென்க. கிறியாவது மாய மென்றாலும் இங்ஙனமே அந்வயமாம். இங்கே எத்தனை காலமு மூழியு முண்டோ இத்தனைகாலமும் என்றவாறும் முன்னடி பின்னடிகளை யிணைப்பதுண்டு. சித்த மித்யாதி. எனக்கு விஷ்ணுசித்தனெனப் பெயரென்பது நாமரூப வ்யாகரணம் பண்ணு முனக்குத் தெரியுமே. (அ)

9. அன்றுவயிற்றிற் கிடந்திருந்தே யடிமைசெய்யலுற்றிருப்பன்
இன்றுவந்திங்குன்னைக் கண்டுகொண்டேனினிப் போகவிடுவதுண்டே
சென்றங்குவாணனையாயிரந்தோளுந்திருச்சக்கரமதனால்
தென்றிதிசைதிசைவீழச் செற்றாய் திருமாலிருஞ்சோலையெந்தாய். (461)

| | |
|---|---|
| அங்கு | அவ்விடத்திற்கு (சோணித புரத்திற்கு) |
| சென்று | போய் |
| திருச்சக்கரம் அதனால் | திருவாழியைக் கொண்டு |
| ஆயிரம் தோள் உம் | வாணனுடைய ஆயிரம் தோள்களும் |
| திசை திசை | அதது்ள்ள திக்குகளில் |
| தென்றி வீழ | சிதறி விழும்படி |
| வாணனை | பாணாஸுரனை |
| செற்றாய் | வதைத்தவனே! |
| திருமாலிருஞ்சோலை யெந்தாய்! | |
| அன்று | பிறப்பதற்கு முன் அந்த நாளிலே |
| வயிற்றில் | கர்ப்பத்தில் |
| கிடந்து இருந்து ஏ | படுத்திருந்து கூட |
| அடிமை செய்யல் | (உனக்கு) கைங்கர்யம் செய்வதையே |
| உற்று இருப்பன் | விரும்பி யிருந்த நான் |
| இன்று | இவ்வளவு நாள் கழித்து இப்போது |
| இங்கு வந்து | நீ இருக்குமிடம் வந்து சேர்ந்து |
| உன்னை கண்டு கொண்டேன் | உன்னைக் கண்ணாலும் மனத்தாலும் காணப்பெற்றேன்! |
| இனி போக விடுவது உண்டே | உண்டோ? |

கர்ப்பத்தி லிருக்கும்போதே எனக்கு, உனக்கடிமை செய்வதிலேயே விருப்ப மிருந்தது. அதுமுதல் அதே விருப்பத்தோடிருக்குமெனக்கு அதற்காக உன்னைக் காண்பதென்பது இவ்வளவு நாள் கழித்தே நேர்ந்துள்ளது. இவ்வளவு துர்லபமாயிருப்பதை யறிந்த நான் இனி விட்டிருப்பேனோ. அடிமை செய்ய அருள வேணுமென்றபடி. இன்று வந்திங்கு. இவர் திருமாலிருஞ்சோலை யெம்பெருமானை இதற்கு முன் பல கால் கண்டாராகிலும், 'புக்கினிற் புக்குன்னைக் கண்டு கொண்டேன்' என முன் அருளினபடி மனத்தாலே ஸாக்ஷாத்கரித்தது இங்கே கருதப்பட்டதாம். ஆயிரம் தோளும். நாலு தோள்களைக் கடைசியில் வீழ்த்தாமல் நிறுத்தினானாகிலும் அவையும் வீழ்ந்த தோள்களுக்கொத்து சக்தியற்று விழுந்த வண்ணமே கிடந்தன வென்க. (௯)

10. சென்றுலகங்குடைந்தாடும் சுனைத்திருமாலிருஞ்சோலைதன்னுள்
நின்றபிரானடிமேல் அடிமைத்திறம் நேர்படவிண்ணப்பஞ்செய்
பொன்றிகழ்மாடம் பொலிந்துதோன்றும் புதுவைக்கோன் விட்டுசித்தன்
ஒன்றினோடொன்பதும் பாடவல்லாருலகமளந்தான்தமரே. (462)

| | |
|---|---|
| உலகம் | உலகிலுள்ளார் யாவரும் |
| சென்று | அத் திருப்பதிக்குப் போய் |
| குடைந்து ஆடும் | அவகாஹித்து நீராடுகிற |
| சுனை | மலைக் குளங்களை யுள்ள |
| திருமாலிருஞ்சோலை தன்னுள் | திருமாலிருஞ்சோலை யென்ற திருப்பதியிலே |
| நின்ற | விளங்கா நிற்கும் |
| பிரான் | பரமோபகாரகனுடைய |
| அடிமேல் | திருவடி விஷயமாக, |
| நேர்பட | அவன் மனதிலே புகுந்து ஸங்கித்த போது |
| அடிமை திறம் | சாச்வதமாய் அவனுக் கடிமை செய்வதை |
| விண்ணப்பம் செய் | விஜ்ஞாபித்துச் செய்யப் பெற்ற— |
| பொன் திகழ் | ஸ்வர்ணமாகவே ப்ரகாசிக்கும் |
| மாடம் | உப்பரிகைகள் |

| | | | |
|---|---|---|---|
| பொலிந்து தோன்றும் | சிறப்பாகக் காணவிருக்கும் | ஒன்பதும் | கீழ்ப் பாசுரங்கள் ஒன்பதையும் |
| புதுவை | ஸ்ரீவில்லிபுத்தூருக்கு | பாட | காநம் செய்ய |
| கோன் | ஸ்வாமியான | வல்லார் | ஸமர்த்தர்கள் |
| விட்டுசித்தன் | ஸ்ரீவிஷ்ணுசித்த (பெரியாழ்வார்) னுடைய | உலகம் அளந்தான் தமர் | உலகமளந்த எம்பெருமானுக்கெப்போதும் தாஸராவர் |
| ஒன்றினோடு | இந்த நிகமனப் பாசுரத்தோடு சேர்ந்த | | |

இந்தப் பாட்டுக்கள் உலகம் சென்று குடைந்தாடும் சுனைத் திருமாலிருஞ்சோலைப் பிரான் விஷயமானவை. ஆக உலகமளந்த பெருமானின் அடிமையை யளிக்கும். இத் திருமொழிக்கு வழுவிலா வடிமை செய்வதைக் கோருவதில் நோக்கென்பதை 'அடிமை செய்ய வுற்றிருப்பன்' என முன் பாசுரத்திலே தெரிவித்தருளினாராகையாலே இங்கே அடிமைத்திறம் என்றது. புதுவைக்கோன். புதுவையிலிருந்து கொண்டே அவ் வெம்பெருமானை நெஞ்சில் நேர்பட இவர் ஸாக்ஷாத்கரித்து இங்ஙன மருளினாரென்க. (௰)

ப்ரபந்த ரக்ஷையில் பெரியாழ்வார் திருமொழி **5. 3.**

துக்கச்சுழலையை உரை முற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

---

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

## பெரியாழ்வார் திருமொழி 5. 4.

# சென்னியோங்கு.

எம்பெருமான், திருமாலிருஞ் சோலை யப்பனாய் ஸேவை யளித்தபோது, 'இனி உன்னை விடுவதில்லை. மறுப் பிறவி தவிரத் திருத்தி யருளவேணு' மென்று விண்ணப்பம் செய்யவே, முன் அர்ச்சாநுபவத்திற்கு இழிந்ததும் முதலில் திருமாலிருஞ்சோலைப் பிரானை யநுபவித்தாராயினும், அதற்கு முன்னே கண்ணனை விஸ்தாரமாக அனுபவித்தபொழுது அடிக்கடி, 'வித்தகன் வேங்கடவாணன்' (1–5–3,) 'வேங்கட வாணற்கோர் கோல் கொண்டுவா' (2–6–9,) 'நிச்சலும் தீமைகள் செய்வாய் நீள் திருவேங்கடத்தெந்தாய்' (2–7–3,) எனப் பலகால் திருவேங்கடத்திலே யிருக்கும் நம்மை நினைத்து வருகிறவர் இவர் அங்கே நாம் பொதுவான அபயப்ரதாந முத்ரையை விட்டு ப்ரபத்தியைப் பண்ணும்படி காண்பிப்ப தற்கேற்ப மறுபிறவி தவிரத் திருத்தக்கேட்பவராய் ப்ரபத்தியிலேயே யிழிந்திருக்கிறாராகையால் இப்போது அம்மூர்த்தியை அனுபவிப்பிக்க வேண்டு மென்று திருவுள்ளங் கொண்டு அங்ஙனமே ஸேவை தந்தருளினான்.

ஆழ்வார் தாமும் அவன் சுவடறிந்து யான் ஏற்கனவே ஆத்மாத்மீயங்களை யெல்லாம் உன்னுடையன வாக்கி, கேவலம் த்வதீயமேவ ஹ்யயா என்னும் உன் வாசகத்திற்கேற்ப, பரஸ்வீகாரம் செய்தருளின உனது தயையினால் எல்லாம் கிடைக்குமென்றதிலேயே நோக்குள்ளவனானேனே என விண்ணப்பிக்கிறார்—

1. சென்னியோங்கு தண்திருவேங்கடமுடையாய்! உலகு
தன்னைவாழநின்றநம்பீ தாமோதரா சதிரா
என்னையுமென்னுடைமையையு முன்சக்கரப்பொறி யொற்றிக்கொண்டு
நின்னருளேபுரிந்திருந்தே னினியென் திருக்குறிப்பே. (463.)

| | | | |
|---|---|---|---|
| ஓங்கு சென்னி | உயர்ந்திரா நிற்கும் கொடுமுடிகளை உடைய | என் உடைமையை உம் | என்னைச் சேர்ந்த வஸ்துவையும் |
| தண் | குளிர்ந்த | உன் | உனது |
| திருவேங் கடம் | திருவேங்கட மலையை | சக்கரம் | திருவாழியின் |
| உடையாய் | திருப்பதியாக உடையவனே ! | பொறி | திருவிலச்சினையை |
| | | ஒற்றி | இட்டு |
| உலகு தன்னை | உலகிலுள்ள எல்லாச் சேதநனையும் | கொண்டு | உனது கைங்கர்யத்திற்காகக் கொண்டு |
| வாழ | வாழ்விக்க | நின் | உனது |
| நின்ற | அடியிணையைக் காட்டி நின்றவண்ணமிருக்கும் | அருள் ஏ | தயையையே |
| நம்பீ | ஸகல கல்யாணகுண பூர்ணனே ! | புரிந்தி ருந்தேன் | விரும்பியிரா நின்றேன். |
| தாமோதரா | தாமோதரனே ! | இனி | இதற்குமேல் |
| சதிரா | சாதுர்யமுடையவனே ! | திருகுறிப்பு | சிறந்த அடையாளம் |
| என்னை உம் | எனது உடலையும் | என் | எதற்கு ? |

**சென்னியோங்கு.** ஏழு மலைகளானபடியாலே கொடுமுடிகள் பல வுள்ளன. தேவலோகத்திலிருந்து தேவர்களு மிறங்கி வருவதற்குப் போலவும், முடிகளிலே ஸஞ்சரித்து எல்லோரையும் கடாக்ஷிக்க அனுகூலமாகவும் ஆகாயமளாவி நிற்கின்றன இவற்றின் சிகரங்கள். **தண்** தயாராசியான அவனுடைய நித்யவாசத்தாலும், தயையே பல வடிவு கொண்டு ப்ரவஹிக்கிறாப் போலுள்ள பல தீர்த்தங்களாலும், காடுகளின் அடர்த்தியாலும் கோடைகாலத்திலும் குளிர்ந்திருக்குமிது. **திருவேங்கடம்.** வேமென்று வினையாய் அதைக் கொளுத்திவிடுவதால் வேங்கடமெனப்படுகிறது. ப்ரபத்தி யென்கிற ஸர்வாநுகூலமான உபாயத்தை உபதேசிப்பதாலே ஸர்வரும் வாழ நின்றவ னிவன். ஆகவே ஸௌலப்ய ஸௌசீல்ய வாத்ஸல்யாதி ஸகல கல்யாணகுண பரிபூர்ணன். தாமோதரனென்னும்படி ஸ்ரீ க்ருஷ்ணவதாரத்தில் யசோதையின் தாம்பாற் கட்டுண்டு ஏங்கி இளைத்து நின்று தான் பவ்யனாயிருப்பதைக் காண்பித்தவனே யன்றோ ஸர்வத்திலிருந்து முன்னை விடுவிக்கிறேன் சரணாகதிசெய் என்று அர்ஜுனனை வ்யாஜமாக்கி உபதேசித்தது. அதை, அனைவருக்குமாம் இந்த உபதேசமென்று விளக்குகிற இவன் அவனேயாவான். இவனும் உத்ஸவார்ச்சை வாயிலாக நிச்சலு மெல்லா மஹோத்ஸவங்களையும் கண்டருளுகின்றவனாய் எப்போதும் அர்ச்சகபராதீனஸ்திதியாய் கட்டுண்டபடியே யிருந்து தனது தாமோதரத்தன்மையைத் தெளிவுபடுத்துகிறான். **சதிரா.** மோக்ஷமென்னும் மஹா புருஷார்த்த மொன்றையே கொடுக்க நினைத்து

பற்றப் பலன்களைக் கேட்பவரிடம் கண்ணோட்டமிராமலிருந்தால் இக் கலியிலே கரை யேறுபவன் கிடைக்கமாட்டானென்று திடமாய் நினைத்து தேவதாந்தரங்கள் வாயிலாகத் தானளிக்குமெல்லாப் பலன்களையும் தானே நேரில் அவர்களைக் காட்டிலும் அதிவிரைவி லளிக்க முன் வந்து தன்னுடைய ஸ்ரீநிவாஸத்வத்தைத் திடமாக ஸ்தாபித்துக் கொண்டு அப் பலன்களைத் தான் கொடுப்பதாலே, விடாய்தீரக் கங்கையில் ஸ்நானம் செய்யப் பாபமும் கழிகிறாப் போலே பலாந்தரத்திற்காகப் பற்றினதினின்றே பிற்காலத்தில் வைராக்யமும் பிறக்க அனைவர்க்கும் அப் பேரின்பத்தையு மளிக்க இவ்வித விசித்ர நடனம் செய்யும் ஸமர்த்தகாருணிக ஸார்வபௌமனிவன். ஸ்ரீ தேசிகன் அருளிச்செய்த தயாசதகத்திலே எல்லாம் காண்க.

என்னையு மித்யாதி. பக்தியோக நிஷ்டர்களாகில் கடைத்தசையில், கண்டமடைப்பக் கருவிகளெல்லாம் கெட்டிருக்க எத்தனையோ ப்ரயத்னப்பட்டு உன்னைச் சித்தத்தில் நிறுத்த வேண்டியிருக்கும். யான் ப்ரபத்தியை யுன் திருவுள்ளப்படியனுஷ்டித்து அப்போதைக்கிப்போதே சொல்லிவைத்தே னென்றும் விண்ணப்பித்தவன். நீ என்னிடம் என்ன எதிர்ப்பார்க்க முடியும்? வாக்கு மனங்களில் ஒன்றையும் காணலாகாது. உடலில் ஏற்கனவே உன் சக்கரப்பொறி யொற்றிக் கொண்டது நிலைத்திருப்பதாலே அது தான் இப்போதுள்ள திருக்குறிப்பாகும். என்னைச் சேர்ந்த சேதநாசேதநங்களில் எல்லாத்திலுங் கூட இதை நீ காணலாம். ஆக நீ அதைக் கொண்டு எல்லாம் நினைத்துக் கேவல முன் தயையினாலே எனக் கெல்லா மருளவேண்டுமென்றபடி. திருகுறிப்பே. இப்போதுள்ள குறிப்பைக் காட்டிலும் மேன்மையான குறிப்பு வேறென்ன? இதே திருக்குறிப்பென்றதாம். (க)

இங்ஙன மனுஸந்தித்தவாறே திருவேங்கடமுடையான் தன்னுடைய திருவேங்கடத்தன்மையையும் பரிபூர்ணநுபவாமிருந்தையு மப்போதே யாழ்வாருக்கு நன்கு நிரூபித்தருளி, கருடாரூடனாய் அழைத்துப்போக விரைகின்றவனானான். அத் தசையை யனுஸந்தித் தினியராகிறார்.

2\. பறவையேறுபரம்புருடா நீயென்னைக்கைக்கொண்டபின்
பிறவியென்னுங்கடலும் வற்றிப் பெரும்பதமாகின்றதால்
இறவுசெய்யும் பாவக்காடு தீக்கொளீஇ வேகின்றதால்
அறிவையென்னுமமுதவாறு தலைப்பற்றி வாய்க்கொண்டதே. (**464.**)

| | | | |
|---|---|---|---|
| பறவை | பக்ஷிராஜனை பெரிய திருவடியை | பெரும் பதம் | அந்தப் பெரிய ஸ்தாநமானது |
| ஏறு | ஏறுகின்ற | ஆகின்றது | கிட்டிற்று ; |
| பரம்புருடா | பரமபுருஷனே ! | ஆல் | ஆச்சர்யம். |
| | நீ என்னை | | (எங்ஙன மிது தெரிகின்றதெனில்,) |
| கை கொண்டபின் | ஸ்வீகரித்த பிறகு | இறவு செய்யும் | (எனக்கு) அழிவைச் செய்வதற்கிருக்கும் |
| பிறவி என்னும் | புநர்ஜன்ம மெனப்படும் | பாவம் காடு | ஸஞ்சிதப்ராப்தபாபங்களாம் பெருங்காடு |
| கடல் உம் | பெரும் ஸமுத்ரமுங் கூட | தீ | காட்டுத்தீயை |
| வற்றி | வறண்டுவிட்டதால் | | |

| | |
|---|---|
| கொளீஇ | கொண்டு (தீயால் சூடப் பெற்று) |
| வேகின்றது ஆல் | வெந்து சாம்பலாகின்றதே. |
| அறிவை என்னும் | பூர்ணாநுபவமெனப்படும் |
| அமுதம் ஆறு | அம்ருதநதியானது |
| தலை பற்றி | தலைமட்டத்திக்கு மேல் பெருகி |
| வாய் கொண்டது ஏ | தடுமாற்றமன்றி ஆழ்ந்து ஸுகப்படுத்தும்விதம் பெற்றுள்ளதே. |

பறவை யேறு பரம்புருடா என்றதாலே பரமபுருஷன் பரமபதத்திற்கு அழைத்துப் போக விரைவது தெளிவித்ததாம். கடலும். வற்றாத கடலும் வற்றினது ஆச்சர்யம். பெரும் பதம் பரமபதம். அல்லது பரிபூர்ணானுபவத்தாலான கைங்கர்ய ஸாம்ராஜ்யம். பாவக்காடு தீக்கோளீஇ என்று வேங்கட சப்தத்தின் பொருளைக் கூறிற்று. வேம் = பாபம்; அதற்குக் கடமென்றால் அதனைத் தஹிப்பது. கொள் என்னும் வினையில் வரும் கொண்டு என்னும் வினையெச்சம் கொளீஇ என அளபெடையா யிருக்கிறது. (மாத்திரை நீண்டொலித்தல் பெற்றுள்ளது). இது தீப்பரவி கொளுத்துவதைக் கண்டுண்டான ஆச்சர்யத்தை நன்கு விளக்கும். அமுதவாறு என்பதனாலும் வேங்கடபதத்தின் மற்றொரு பொருளைக் குறித்தபடி. 'வெம் வாவம் கடதி இ ஹதீதி வெங்கட:' என்றது போல் 'வெஙா[illegible] ஸீஜம் [illegible] யஉவெஙவகுாக வெஙடா இதி ஸ்ரு-த:' எனவும் பிரஸித்த மன்றோ? ஸ்ரீ தேசிகனும், 'கடுவினையிருவினையுங் கடியும் வெற்பு—பொன்னுலகிற் போக மெல்லாம் புணர்க்கும் வெற்பு' என இதனை யருளிச் செய்தார். இப்படி அநிஷ்ட நிவிர்த்தி, இஷ்டப்ராப்தி என இரண்டு முரைக்கப்பெற்றன. தலைப்பற்றி வாய்க்சோண்டதே. கடலுள்ளே மூழ்கி மகிழும் மஹாமத்ஸ்யங்களைப் போலே யிருக்குமாறு செய்கின்றது இவ் வமுதவாறு என்றபடி. (உ)

3. எம்மனாவென்குலதெய்வமே யென்னுடைநாயகனே
நின்னுளேனாய்ப்பெற்ற நன்மை யிவ்வுலகினி லார்பெறுவார்
நம்மன்போலேவீழ்த்தமுக்கும் நாட்டிலுள்ள பாவமெல்லாம்
சும்மெனாதே கைவிட்டோடித்தூறுகள் பாய்ந்தனவே. (465.)

| | |
|---|---|
| எம் மனா | எம் மன்னா ! எமது மன்னவனே ! |
| என் குலம் | எனது குடிக்கெல்லாம் |
| தெய்வமே | எப்போதும் ஆராத்யனான பரதேவதையே ! |
| என்னுடை நாயகனே | எனக்கும் நாயகனா யிருப்பவனே ! |
| நின் உளேன் ஆய் | நான் உனது அபிமானத்திற்குள் இருப்பவனாகி |
| பெற்ற | இப்போதடைந்துள்ள |
| நன்மை | மா பலனை |
| இ உலகில் | இந்த லோகத்திலே |
| ஆர் பெறுவார் | யார்தாம் பெறமுடியும்? |
| | (அது யாதெனில்) |
| நம்மன் போலே | யமனைப் போலே |
| வீழ்த்து | கீழே தள்ளி |
| அமுக்கும் | மேலே அழுத்துவனவும் |
| நாட்டில் உள்ள | உலகத்தில் ப்ராணிகட்குளவுமான |
| பாவம் எல்லாம் | எல்லாப் பாவங்களும் |
| சும் எனாதே | நிச்சப்தமாய் |
| கைவிட்டு | அடியோடு விட்டு |
| ஓடி | வெகு தூரம் ஓடிப்போய் |
| தூறுகள் | பழிப்பவரிடம் |
| பாய்ந்தன | புகுந்துவிட்டன. |

எம்மனா என்பதற்கு விவரணமாம் என் என்குலதெய்வமே யென்னுடை நாயகனே என்றது. மனா என்பது மன்னா என்பதின் சுருக்கம். 'யமேஷீகா தூலமக்நௌ ப்ரோதம் ப்ரதூயேத', ஜ்ஞாநாக்நி: ஸர்வகர்மாணி பஸ்மஸாத் குருதே' என்கிறபடி யெல்லாம் தீயினால் கொளுத்தப்படுவதைக் கீழே யருளினார். இங்கே 'தஸ்ய புத்ரா தாயமுபயந்தி ஸுஹ்ருத: ஸாதுக்ருத்யாம், த்விஷந்த: பாபக்ருத்யாம், என்கிறபடி பாபங்களெல்லாம் ப்ரம்மவித்துக்களின் சத்ருக்கள் பக்கல் புகுந்து விடுகின்றன வென்கிற அர்த்தத்தை யருளிச் செய்கிறார் நம்மனித்யாதியால். நமன் என்பது நம்மன் என எதுகைக்காக இரட்டித்துக்கிடக்கிறது. நாட்டிலுள்ள பாவமெல்லாம். இவ்வுலகினிலார்பெறுவார்' என்று தம்மை மட்டும் இப்பேறுபெற்றதாகச் சொல்லி இப்போது எல்லோருடைய பாவமும் ஓடினதாகச் சொல்லுவது கூடுமோ வென்னில், நாட்டிலுள்ளாரனைவருடைய பாவங்களும் போயின வென விங்கே பொருளன்று. அதற்கிங்கே ப்ரஸக்தியு மில்லை. ஆக நாட்டிலுள்ள என்பதற்கு ஆங்காங்கு ப்ரஸித்தங்களான எனப் பொருளாம். உலகத்தில் எத்தனை விதங்களாகப் பாபங்கள் ப்ரஸித்தங்களோ, அத்தகையவை யெல்லாம் அநாதிகாலமாக என்னைச் சேர்ந்திருந்தன. அவை யெல்லாம் வேறிடம் புகுந்தன வென்றபடி. தூறு என்பதற்குச் செடி என்கிற பொருள் போலே பழித்தல், நிந்தித்தல் எனவும் பொருளுண்டு. தூறுதல் (நிந்தித்தல்) என்கிற வினையின் முதனிலையான இது வினைமுதலான நிந்திப்பாரை இங்கே சொல்லும். 'தூறு என்கிறது ஸம்ஸாரிகளை' யென்கிற திருக்கோட்டியூர்நம்பியின் பாசுரத்திற்கும் இங்ஙனமே கருத்தாம். அன்றி, பாவமெல்லாம் என்கிற ஸ்வாரஸ்யத்தாலே புண்ய பாபங்களிரண்டையு மெடுக்கவேண்டியிருப்பதாலே அது போலே தூறு என்றதும் நிந்திப்பாரை மட்டுமன்றி பொதுவிலே ஸம்ஸாரிகளைச் சொல்லுமிங்கு. ஆக, சத்ரு மித்ரர் இருவரையும் கொள்க வென அமர் திருவுள்ளமாம். இவ்விரண்டடிகளை நிர்யாணாதிகாரத்திலே ஸ்ரீதேசிகனா மெடுத்தருளினது காண்க.

கீழ்ப் பாட்டிலே 'பாவக்காடு—' என்று சொன்ன அநிஷ்ட நிவிர்த்தியை யொருபடி விவரித்தாப்போலே, 'அமுதவாறு' என்று கூறின இஷ்ட ப்ராப்தியை மேற்பாட்டிலே விவரித்தருளுகிறார்.—

**4.** கடல்கடைந்தமுதங்கொண்டு கலசத்தை நிறைத்தாப்போல்
உடலுருகிவாய்திறந்து மடுத்துன்னை நிறைத்துக்கொண்டேன்
கொடுமைசெய்யுங்கூற்றமுமென் கோலாடிகுறுகப்பெறா
தடவரைத்தோட்சக்கரபாணீ சார்ங்கவிற்சேவகனே. **(466.)**

| | | | |
|---|---|---|---|
| தட வரை தோள் | பெரிய மலைகள் போன்ற தோள்களை யுடையனும், | உன்னை | இப்படிப்பட்ட உன்னை, |
| சக்கரம் பாணீ | திருக்கையில் திருவாழியைக்கொண்டவனுமானவனே ! | கடல் கடைந்து | பாற்கடலை நீ கடைந்து |
| சார்ங்கம் வில் சேவகனே | சார்ங்கமெனப்படும் வில்லையுடைய மஹாவீரனே ! | அமுதம் கொண்டு | அதனின்று அமுதத்தை வெகு ப்ரயாஸப்பட்டுப் பெற்று |
| | | கலசத்தை | அம்ருதகலசத்தை |

| | |
|---|---|
| நிறைத்தாப் போல் | நிறைத்துக்கொண்டது போலே |
| உடல் உருகி | (உன்னிடமுள்ள அன்பால்) எனது சரீரம் உருகிவிட |
| வாய் திறந்து | தர்மபூதஜ்ஞானத்தை (அல்லது) மனத்தை விரித்து |
| மடுத்து | உட்கொண்டு |
| நிறைத்துக் கொண்டேன் | நிரப்பிக்கொண்டேன். |
| | (ஆகையால்) |
| கொடுமை செய்யும் | பாவத்திற்குச் சிக்ஷை செய்பவரும் |
| கூற்றமும் | யமன்களும் |
| என் கோல் | எனது செங்கோலின்படி |
| ஆடி | ஆடுகின்றவர்களாய் |
| குறுகப்பெறா | கிட்டி நிற்கமாட்டார்கள். |

உடல் உருகி. அன்பு மிகுதியாலே உடல் உருகிவிடும். மிகச் சைதில்யமும் பெறும். கண்ணனின் கீதத்திற்குக் கல்லும் கரையுமே; அது போல. வாய் திறந்து. உடலுருகின பிறகு வாயேது என்னவேண்டா. உறுகுவது என்றதாலே மிகத் தளர்ச்சியைச் சொன்னதாம். அல்லது இங்கே வாயென்று தர்ம பூத ஜ்ஞானத்தைக் குறித்ததாம். இனி, 'ஷிஹணயெ ந வாதெ்ரண ஸதூஸா விஷிதம் ஊவழ' என்ற விடத்தில் முகம் என்பது போலே இங்கே வாய் என்பது மனத்தைக் குறிக்கு மென்னலாம். ஆக விஷ்ணுசித்தரான இவர் சித்தத்தில் விஷ்ணு நிறைந்திருப்பது சொன்னதாப். மனத்தில் நிறைத்துக் கொள்வதாவது, இவன் தவிர மற்றொன்றுக்கு மனத்தில் இடம் கொடாமை, இவனையே யநுபவிக்கை. என் கோலாடி. 'தஸெ்ஷ ஷெவா ஸஶ்ரீஊவஹஷி' என்கிற கணக்கிலே ம்ருத்யுவும் இவரைக் கண்டு நடுங்குவான். கோலாடி என்பதற்குச் செங்கோல் செல்லுமிடங்களில் எனவுமுரை செய்வர். பதவுரையில் ஆடி என்பதை, ஆடுதல் என்பதின் கர்த்தாப்பொருளில் 'இ' விகுதி பெற்று வந்த சொல்லாகக் கொண்டு பொருள் கூறினம். தட வரை இத்யாதி. இப்படி சௌர்ய வீர்யசாலியானவனுள்ளவிடத்திலே கூற்றம் குறுக முடியுமோ. கூற்றமெனப் பல யமன்களைக் கருதி, பெறு என்று பலவின்பாலை யாதரித்ததெனலாம். இல்லையேல், பெருது என்பதின் கடைக்குறை யெனல் வேண்டும். யமனை யசேதநமாக வைத்து அஃறிணையாகப் பணித்ததென்க. (ச)

**5.** பொன்னைக்கொண்டுரைகல்மீதே நிறமெழவுரைத்தாற்போல்
உன்னைக்கொண்டென் னாவகம்பால் மாற்றின்றியுரைத்துக்கொண்டேன்.
உன்னைக்கொண்டென்னுள்வைத்தே னென்னையுமுன்னிலிட்டேன்
என்னப்பா வென்னிருடீகேசா வென்னுயிர் காவலனே. **(467.)**

| | |
|---|---|
| என் அப்பா | என் தந்தையே! |
| என் இருடீகேசா | எனது இந்திரியங்களை நியமிக்கிறவனே! |
| என் உயிர் | எனது ஆத்மஸ்வரூபத்திற்கு |
| காவலனே | ரக்ஷகனாயிருப்பவனே! |
| பொன்னை | ஸுவர்ணத்தை |
| கொண்டு | கையிலெடுத்து |
| உரைகல் | தரம்பார்க்க அதை யுரைக்க விருக்கும் கல்லிலே |
| நிறம் எழ | அதன் மாற்று விளங்கும் படி |
| உரைத்தால் போல் | உரைப்பது போலவே |
| உன்னை | (பொன் போன்ற) உன்னை |
| கொண்டு | மனத்திற் கொண்டு |
| நா அகம் பால் | நாக்கினுள்— |
| மாற்று இன்றி | உவமையில்லாமல் |
| | உரைத்துக்கொண்டேன். உன்னை |

| | | | |
|---|---|---|---|
| கொண்டு | ச்ரவணமநநாதிகளுக்கு விஷயமாக்கி | என்னை உம் | (உன் தாஸனை) என்னையும் |
| என்னுள் | என் மனத்தினுள் | உன்னில் | உனது திருவடிகளில் |
| வைத்தேன் | நிறுத்தினேன். | இட்டேன் | ஸமர்ப்பித்தேன். |

கீழே, 'வாய் திறந்து மடுத்துன்னை நிறைத்துக்கொண்டேன்' என்ற விடத்தில் நான் வாய் திறந்து உன்னைக் கவிபாடிப் புகழ்ந்ததாலே உன்னை மனத்தில் நிறைத்துக்கொள்ள வாய்த்தது என்பதும் கருத்திலுள்ளதென்பது இங்கே விளங்கும். நிறமெழ வுரைத்தாற்போல். உரைகல்லில் அழுத்தியுரைக்காத போது பொன்னின் தரம் தெரியவராது. ஆகவே நிறம்பட வுரைத்தல் வேண்டும். உன்னைக்கொண்டென்பதற்கு ஆசார்யன்மூலமாக ச்ரவணமும், பிறகு மனனமும், முன்னும் பின்னும் அர்ச்சைகளில் தர்சனமும் செய்து எனப் பொருள். இவ்வளவிராதபோது நாவகம்பால் நன்குரைத்துக்கொள்ள மாட்டாது. இவ்வளவுடன் செய்யும் உரைத்தல் மாற்றின்றி யிருக்கும்.

இங்கே மாற்றின்றி என்பதற்கு மாற்றழியும்படி, கௌரவஹானி வரும்படி எனப் பொருள்கொண்டு, அதற்குத் தக்கபடி முதலடியில் உரைகல் என்பதற்குக் கெட்ட உரைகல் என்றும், நிறமெழ என்பதற்கு நிறமறிவதற்காக என்றும் ப்ரயாஸப்பட்டுப் பொருள் கொள்ளவேண்டிய அவசியமொன்றுமில்லை. 'பெற்ற நன்மை யிவ்வுலகினிலார் பெறுவார்' என்று ஸாத்விகப் பெருமை கொள்ளும் ஸந்தர்ப்பத்திலே முன்பின் ரீதிக்குச் சேராத நைச்யாநுஸந்தானத்திற்கு அவகாசமு மில்லை. பெரியோருரையிலும் கடைசியாக, மாற்றின்றி என்பதற்கு, 'ஒன்றும் தப்பாதபடி' என உரை செய்திருப்பதால் ஸ்வரஸமான பொருளே கொள்ளத்தக்கது. அதாவது ச்ரவணாதிகளில் குறையிருக்குமாகில் தவறுதலாய்ப் பலபடி மாற்றிச் சொல்ல நேர்ந்துவிடும். அதனால் பல மாறுதல்கள் வரும். அப்படியில்லாமல் நல்ல உரைகல்லில் செம்பொன்னை நிறம்பட உரைத்தாற்போல் என் நாவகம்பால் நன்குன்னை யுரைத்துக் கொண்டேனென்றதாம். அதனால் பொன்னை யுரைகல்லி லுரைத்தற்காகப் பொன் குறையாதது போல் நீயு மிதனால் குறைவதில்லை. நிறம்பட உரைத்து உரைகல்லை பஹிரங்கமாக வைத்திருக்கும் வியாபாரிகளிடம் வந்து நிறம் கண்டு பொன்னைப் பலர் கொள்ளுமாபோலே என்னாவகம்பால் மாற்றின்றி உரைக்கப்பெற்ற எனது ப்ரபந்தமாகிற இந்த வுரைகல்லுரைத்தலைக் கண்டு பலர் ஹிரண்மய புருஷனை உனது தரத்தை நன்குணர்ந்து உன்னைப் பெற்று ப்ரகாசமாய் விளங்கும்படியாயிற்று. இப்படிப் பிறர்க்கு அநுகூலமானது மட்டுமின்றி எனக்கு மிது பெரும் பூஷணமாயிற்று. இதனாலன்றே உன்னைக் கொண்டென்னுள்ளே வைக்கும் தரமெனக்கு வாய்த்தது. ஆகப் பொன்னை யுரைத்துப் பார்த்துக்கொண்டு அகத்தினுள் வைத்துக்கொள்ளுமாபோலே உன்னை யுரைத்து உன் குணமறிந்து உன்னை என்னுள்வைத்தேன் என்றவாறு குறித்ததாம். என்னையு முன்னி லிட்டேன் என்பதற்கு உனது ஸாம்யத்தை எனக்கு ஸம்பாதித்துக்கொண்டேனெனவும் பொருளாம். என்னப்பா இத்யாதியால் கீழே தாம் செய்ததாகச் சொன்னவற்றில் தமக்கு ஸ்வதந்த்ரகர்த்ருத்வமில்லை யென விளக்குகிறார். ச்ரவணாதிகளால் உன்னைக்கொண்டேனென்றால், அது நீ அப்பனாயிருந்து அத்

தனை யறிவை யுண்டுபண்ணினதால். மாற்றின்றி உரைத்துக்கொண்டதும் உன்னை என்னுள் வைத்ததும் நீ ஹ்ருஷீகேசனாய் எனது இந்த்ரியங்களை யங்ஙனம் நியமித்ததாலே. என்னை யுன்னிலிட்டதும் நீ காவலனென்பதை யுணர்த்திவைத்ததாலே யென்றதாம். எல்லாவற்றிற்கும் எல்லா விளிச்சொற்களுக்கும் ஸம்பந்தம் கூடுமாகிலும், ஒவ்வொன்றில் ஒவ்வொன்று ப்ரதானமாகும். (ரு)

**6.** உன்னுடைய விக்கிரமமொன்றொழியாமலெல்லாம்
என்னுடைய நெஞ்சகம்பால் சுவர்வழியெழுதிக்கொண்டேன்
மன்னடங்கமழுவலங்கைக்கொண்ட விராமநம்பீ
என்னிடைவந்தெம்பெருமா னினியெங்குப்போகின்றதே. (**468.**)

| | |
|---|---|
| மன் | க்ஷத்ரியர்கள் |
| அடங்க | க்ஷத்ரியருக்கே போர் செய்ய பலமுள்ளதென்ற மதம் நீங்கி யடக்கம் பெற |
| மழு | பரசு என்னு மாயுதத்தை |
| வலம் கை | வலக்கையில் |
| கொண்ட | வைத்து விளங்கின |
| இராம நம்பீ | கல்யாணகுணபூர்ணனை (பரசு) ராமனே! |
| எம்பெருமான் | எமக்கு ஸ்வாமியே! |
| உன்னுடைய | உபய விபூதி விசிஷ்டனை உன்னுடைய |
| விக்கிரமம் | செய்கைகள் |
| எல்லாம் | எல்லாவற்றையும் |
| ஒன்று ஒழியாமல் | பரவ்யூஹாதிகளான மூர்த்திகளில் சேதநாசேதநங்களான விபூதிகளிலொன்றையும் விடாமல் |
| என்னுடைய | உனது அநுக்ரஹம் பெற்ற என்னுடைய |
| நெஞ்சு அகம்பால் | மனத்தினுள்ளே |
| சுவர்வழி | சுவரில் சித்திரமெழுதும் வகையிலே (அழியாதபடி) |
| எழுதிக்கொண்டேன் | எழுதிவைத்துக் கொண்டேன். (ஆகையால்) |
| என்னிடை | என்னிடத்திற்கு |
| வந்து | நீ வந்த பிறகு |
| இனி | இதற்குமேல் |
| எங்கு | எவ்விடம் |
| போகின்றது | போவதாகும். |

மூன்று காலங்களிலுள்ள வெல்லாவற்றையு மொன்றுவிடாமல் நான் மனத்தில் நிறுத்திக்கொண்டபிறகு நீ எவ்விடம் போனாலும் அவ்விடம் தானும் உன்னோடே என் மனத்திலிருப்பதாலே என்னை நீ விடுவது விடப்பட்டதென்றபடி. (சா)

இப்படி மனம்போலே உடலும் வாக்கும் உன் அநுக்ரஹம் பெற்றன வென மீண்டும் விண்ணப்பித்து, இப்படி ஸர்வப்ரகாரத்தாலும் உனக்கென்னை சேஷமாக்கிக்கொண்டாயே யென்று க்ருதஜ்ஞராகிறார். இதனால், என்னையு முன்னிலிட்டேன்' என்கிற பாகத்தை விவரித்தபடி. முன் பாசுரத்திலே உன்னையு மென்னுள் வைத்தேன்' என்பது விவரிக்கப்பட்ட தன்றோ?

**7.** பருப்பதத்துக் கயல் பொறித்த பாண்டியர் குலபதிபோல்
திருப்பொலிந்தசேவடி யென் சென்னியின்மேற் பொறித்தாய்
மருப்பொசித்தாய் மல்லடர்த்தாயென் றென்றுன் வாசகமே
உருப்பொலிந்த நாவினேனையுனக்குரித்தாக்கினையே. (**469.**)

| | |
|---|---|
| பருப்பதத்து | பர்வதத்தின்மேலே |
| கயல் | தன் சின்னமான மகரத்தை (மீனை) |
| பொறித்த | ரேகையாக எழுதிட்டவனை |
| பாண்டியர் குலம் பதி போல் | பாண்டியதேசத்தரசரின் குலத்திற்கு அதிபதியானவன்போலே |
| திரு பொலிந்த | ஸகலஸம்பத்தும் ஸம்ருத்தமாயுள்ள |
| சே அடி | சிவந்த உன் திருவடிகளை |
| என் | அடியேனுடைய |
| சென்னியின் மேல் | சிரஸ்ஸிலே |
| பொறித்தாய் | அடையாளமாக வைத்தருளினவனே ! (நீ), |
| மருப்பு | '(குவலயாபீடத்தின்) தந்தத்தை |
| ஒசித்தாய் | ஒடித்தவனே ! |
| மல் | (சாணூர முஷ்டிகாதி)' மல்லர்களை |
| அடர்த்தாய் | நெருங்கி அழித்தவனே ! |
| என்று என்று | என்றவாறு பலபடியாக |
| உன் வாசகமே | உனது கீர்த்திகரங்களான திருநாமங்களேயான |
| உரு | ரேகைகளாலே |
| பொலிந்த | விளங்கா நிற்கும் |
| நாவினேனை | நாக்கையுடைய என்னை |
| உனக்கு | ஸர்வஸ்வாமியான உனக்கு |
| உரித்தாக்கினை | சேஷபூதனுக்கிக்கொண்டாய். |

ஒரு பாண்டிய தேசத்தரசன் தேசாந்தரத்தை ஜெயித்து அது தனக்கு வசமாயிற்றென்பதை நன்கு விளக்க அங்கே பெரிய மலையின் கொடுமுடியிலே தனது சின்னமான மீனைப் பொறித்திருந்தான். அதனை யிங்கே த்ருஷ்டாந்தமாக அருளியுள்ளார். அந்தப் பருப்பதமானது மஹாமேரு என்றும் அப் பாண்டியவரசனும் மலயத்வஜ னென்பவனென்றும் உரையில் உரைத்துள்ளனர். இதற்கு ஆதாரமாக, 'வஷஸ்ரவஸஷதஃ ஸ்ரீமாந் ஊநத்ரிஷெந மஹாஸுஃ। தஸ்ய வஷெஷ்ரா மஹாஸெர மீயா அயுகெதஷாஷு॥ ஸ விஜிதஸ் நூவாநு ஸவஷாநு ஜெஸாதஷகுஷிணவாஸுஷுஹாநு ஜெஸள ஸ நாமஅிஹள அ ஸ்ரிவிசுவா நூவஸ்தஃ' என்கிற ச்லோகங்களையு முதாஹரித்துள்ளனர். சரித்திரவாராய்ச்சியாளர், இவ்வரசன் எக்காலத்தியவன்; வெகு காலத்துக்கு முன் இருந்த ஓரரசனின் சரித்திரமே யாமா வீது ' என்றவாறெல்லாம் ஆராயக் கடவர். இந்த த்ருஷ்டாந்தத்தாலே தனக்கு வச மல்லாத தேசத்தின் மஹா ராஜனொருவன் ஜயிக்கப்படும் ப்ரயாஸத்திற்கு மேலாயிற்று உனக்கு என்னை வசப்படுத்துவது என வருளினு ராயிற்று. இதனை 5–2–8-ல் விவரித்துள்ளோம். முன்னடிகளிரண்டினுல், உடலை யவன் வசமாக்கிக்கொண்டது உரைக்கப் பெற்றது. இப்படிப் பீதகவாடைப் பிரானுன நீ பிரமகுருவாகிவந்தும், பாதவிலச்சனை வைத்து மென்னை அனுக்ரஹித்ததற்குக் காரணமும் கார்யமு மாயிற்று எனது நாக்கு உன்னையே யெப்போது மழைத்துவந்த தென்கிறூர் மருப்பித்யாதியால். வாசகமேயுருப்பொலிந்த அவ்வாசகங்களை யெப்போதும் ஆதரித்து அநுஸந்திப்பதாலே சப்தாநுகாரயந்தரத்தட்டிலே சப்தரேகை விழுமாபோலே என் நாவில் அந்த வாசகங்களின் ரேகைகள் விழுந்து கிடக்கின்றன. ஆக உன் சேவடியைச் சென்னியிற்போல் உன் வாசகங்களை யென் நாவில் நீ பொறித்ததாயிற்று. மனச்சுவரில் விக்கிரம மெல்லா மெழுதிவைத்திருப்பதை முன்னமே சொன்னேன். இவ்வாறு கரணத்ரயமும் உன்னலே உனக்கேயானதைக் கண்டுகந்து இதையே காரணமாக்கி நீ யென்னை உனக்குரித்தாக்கினை. ஆக, 'என்னையுமுன்னிலிட்டேன்' என்பதற்கு உனக்கு நான் நித்ய சேஷனேனெனவே பொருள் அல்லது உன்னில் என்னை அந்தர்பவிக்கச்செய்து நீயும்

நானு மொன்றாகும்படி செய்தேனென்பதன்று. உன்னோடு பரமஸாம்யத்தைப் பெற்று உன்னை விட்டுப் பிரியாதபடியிருந்து உன் சேஷவிருத்தியாலே நிலை நின்றேனென்றபடி. இப்பாசுரத்தை ஆலயங்களில் ஸ்ரீசடாரியை ஸாதிக்கும் போது அநுஸந்திப்பது ஸம்ப்ரதாயமாம். (எ)

என்னை யுனக்கே யுரித்தாக்கினையென்றார். இனி என்னையே யுனக்குரித் தாக்கினையென்கிறார் மேற்பாசுரங்களால்.

8. அனந்தன்பாலுங்கருடன்பாலு மைதுநொய்தாகவைத்தென்
மனந்தனுள்ளே வந்துவைகி வாழச்செய்தாயெம்பிரான்
நினைந்தெனுள்ளேநின்று நெக்குக் கண்களசும்பொழுக
நினைந்திருந்தே சிரமந்தீர்ந்தேன் நேமிநெடியவனே. (**470**)

| | |
|---|---|
| எம்பிரான் | எனக்கு மஹோபகாரியே! |
| நேமி | திருவாழியை யுடையனாய் |
| நெடியவனே | மேலாக வளர்ந்தவனே! |
| | நீ, |
| அனந்தன் பால் உம் | ஆதிசேஷனிடமும் |
| கருடன் பால் உம் | பெரிய திருவடியினிடமும் சேர்த்தியை |
| ஐது நொய்து ஆக வைத்து | அதிஸ்வல்பமாக்கி |
| என் மனம் தன் உள்ளே | எனது மனத்தி னுட்புறத் திலேயே |
| வந்து வைகி | புகுந்து பொருந்தி |
| வாழ செய்தாய் | எனக்கு நல்வாழ்க்கையை யருளினாய். |

| | |
|---|---|
| | நானும் |
| என் உள்ளே | எனது ஹ்ருதயத்திலேயே |
| நின்று | உன் பக்கல் நின்று |
| நினைந்து | (உன்னை) அனுபவித்து |
| நெக்கு | உருகி |
| கண்கள் | கண்களிலிருந்து |
| அசும்பு | ஆனந்தக்கண்ணீர் |
| ஒழுக | பெருகிவர |
| நினைந்திருந்தே | எல்லாவிடத்தைவிட என்னிடமுள்ள அபிமானத்தை நினைத்தபடியே |
| சிரமம் | ஆயாஸ மெல்லாம் |
| தீர்ந்தேன் | விட்டொழிந்தேன். |

'இவ்வுலகினிலார் பெறுவார்' என்றார் கீழ், இப்போது நித்யஸூரிகளைக் காட்டிலும் என்னிட முனக்கன்பு அதிக மென்கிறார். ஆழ்வார்மனத்தி னுள்ளே எழுந்தருளியிருக்கு மெம்பெருமானுக்குப் பெரியதிருவடியைப் பார்க்கும்போது, இவன் எங்கோ நம்மை அழைத்துப்போக வருகிறானென்று அவரிடம் வெறுப்பு உண்டாகிறது. ஆதிசேஷனைக் கண்டால், 'இவனைப் பாதுகையாகக் கொண்டால் ஸஞ்சரிக்க வேண்டியதாகும்; படுக்கையாகக்கொண்டால் ஆழ்வாரின் ஹ்ருதய கமலத்தோடு நமக்கு நேராக ஸ்பர்சித்திருப்பது கிடையாததா' மென்று வெறுப்பாகும். இப்படி யிவர்களையே விட்டவனுக்கு அநந்த கருட விஷ்வக்ஸேநாதிகளில் மற்றவரை விடுவது நிர்விவாதமாம். வாழச்செய் தாய்; பெரியபிராட்டியாரிடத்திலே போலவோ மேலாகவேயோ என்னிடத்தி லுனக்கு அபிமானம். ஆக எனது வாழ்க்கை ஸுகவாழ்க்கை யென்றபடி. நெக்கு. நெகுதல் உருகுதல். அனுபவத்தாலே நெஞ்சு உருகினபடி. உள் உருகி மேலே வழியுமாபோலே யிருக்கும் கண்களசும்பொழுகுவது. நினைந்திருந்தே என்றவிடத்தில் 'நனைந்திருந்தே' என்ற பாடமிருக்குமா வென வாராய்க. (அ)

9. பனிக்கடலிற்பள்ளிகோளைப்பழகவிட்டோடிவந்தென்
மனக்கடலில் வாழவல்ல மாயமணாள நம்பீ
தனிக்கடலே தனிச்சுடரே தனியுலகேயென்றென்று,
உனக்கிடமாயிருக்கவென்னையுனக்குரித்தாக்கினையே. (471.)

| | |
|---|---|
| பனி | குளிர்ந்ததான |
| கடலில் | திருப்பாற் கடலிலே |
| பள்ளி கோளை | திருப்பள்ளி கொள்வதை |
| பழக | பழகியிருக்க |
| விட்டு | விட்டுவிட்டு |
| ஓடிவந்து | விரைவாக வந்து |
| என் மனம் கடலில் | எனது சித்தமாம் ஸமுத்ரத்திலே |
| வாழவல்ல | வாழ்வதில் வல்லமை பெற்ற |
| மாயம் | ஆச்சர்ய சக்தியுள்ள |
| மணாளன் | மணவாளனை |
| நம்பீ | கல்யாணகுண பூர்ணனே ! |
| தனி கடல் ஏ | ஒப்பற்ற பாற்கடல் என்ன |
| தனி சுடர் ஏ | ஒப்பற்ற ஆதித்ய மண்டலமென்ன |
| தனி உலகு ஏ | ஒப்பற்ற பரமபதமென்ன |
| என்று என்று | என்றவாறு ப்ரஸித்தங்களான |
| இடம் | திவ்யஸ்தானங்கள் |
| உனக்கு இருக்க | எப்போதும் உனக்காகவேயிருக்கும்போது |
| என்னை | இப்படிப்பட்ட என்னை |
| உனக்கு உரித்தாக்கினை | உனக்குத் தகுந்த வாஸஸ்தானமாக்கிக்கொண்டாய் |

முதலடிகளால் பெரியபிராட்டியாருக்கு மணவாளனை நீ அவளை விட்டு என்னை யனுபவிக்க ஆசைப்பட்டு அவளுடைய ஸ்தானத்தை விட்டு எனக்கு மணவாளனாய் நான் இருக்கும் ஹ்ருதய ஸமுத்ரத்திற்கு ஓடிவந்துளாயென்றதாம். மேலடிகளில் 'ஸஹஸ்ராரெ ஹம்ஸ நக்ஷத்ரெயெத் நாகஸ்யப்ருஷ்டே' என்கிற ச்ருதி ப்ரஸித்தமான எல்லா ஸ்தானங்களையும் விட்டு வந்தது வரையப் பெற்றது.

சோதியாயுள்ள வுனக்குப் பனிக்கடல் பிடிக்காமலிருந்தாலும், வைச்வாநராக்நி சேர்ந்துள்ள வெனது ஹ்ருதயத்திலே வரவேண்டுமென்பதேன். தனிச்சுடர் முதலான சோதிர்மயமான இடங்களிலே யிருக்கலாமே. ஆகையால்என்னிடமுள்ள அன்பே என்னை யுரித்தாக்கினதற்குக் காரணமென்றதாம். (கூ)

என்விஷயத்திலே யன்பு மட்டுமின்றி, எல்லா விடங்களைவிட என் இடமே பெரிதெனவைத்தும் பெரியபிராட்டியாரை விடாமல் கூடவே யழைத்துவைத்துக்கொண்டு என்னை யபிமானித்திருக்கிறு யென வருளுகிறூர்.—

10. தடவரைவாய்மிளிர்ந்து மின்னுந்தவளநெடுங்கொடிப்போல்
சுடரொளியாய் நெஞ்சினுள்ளே தோன்றுமென்சோதி நம்பீ
வடதடமும் வைகுந்தமும் மதிள்துவராவதியும்
இடவகைகளிகழ்ந்திட்டென்பாலிடவகைகொண்டனையே. (472)

| | |
|---|---|
| தட வரை வாய் | பெரிய மலையின் மேல் |
| மிளிர்ந்து | ஒளிவிட்டு |
| மின்னும் | பிரகாசியா நிற்கும் |
| தவளம் | சுத்தமான |
| நெடு | நீண்ட |
| கொடி போல் | ஒரு கொடியைப் போல |
| என் நெஞ்சின் உள்ளே | எனது ஹ்ருதயத்திற்குள்ளே |

| | |
|---|---|
| சுடர் ஒளி ஆய் | தேஜஸ்ஸூம் ப்ரபையு மாய் |
| தோன்றும் | ஆவிர்பவித்துள்ள |
| சோதி | ஸ்வயம் ஜ்யோதிஸ்ஸான |
| நம்பீ | கல்யாணகுண பூர்ணனே! |
| வட தடம் உம் | வடக்கேயுள்ள விசால மான பாற்கடலும் |
| வைகுந்தம் உம் | ஸ்ரீவைகுண்டமும் |
| மதிள் | மதில்கள் சூழ்ந்த |
| துவராவதி உம் | துவாரகையு மான |
| இடவகைகள் | இடங்களை |
| இகழ்ந்திட்டு | நல்ல இடங்களல்ல வென்று விட்டு |
| என் பால் | என் இடமான |
| இடவகை | ஸ்தானத்தை |
| கொண்டனை | ஸ்வீகரித்தருளினாய். |

சுடர் ஒளியாய் 'ஹாஸஸெண வூஹா யயா' என்றபடி யவனை விட்டுப் பிரியாமல் சுடரான அவனுக்கு ஒளியாய் விளங்கும் பெரியபிராட்டியாரோடு வந்தருளினதால் அந்தச் சேர்த்தியிலே சுடரொளியாய்த் தோன்றியுள்ளானென்க. சோதி யென்று அவனுடைய ஸ்வயம்ப்ரகாசமான திவ்யாத்மஸ்வரூபமும் நம்பீ யென்று அவன் கல்யாணகுணங்களும் தோன்றினது தெரிவிக்கப்பெற்றது. வடதட மித்யாதி. ப்ராக்ருத தேவர்களை யனுக்ரஹிக்க வேற்பட்ட பாற்கடலும், நித்ய தேவர்களோடு விளங்க இருக்கும் வைகுந்தமும், தேவாம்சங்களானவர் சூழ்ந்திருக்கும் துவராவதியும் இவ்வாழ்வாரின் நெஞ்சிடவகைக்கு நிகரில்லை யென அவன் உவந்தான். அதற்குக் காரணம் பரோபகாரமாகத் தன்னை வெளியிடும் திவ்ய ப்ரபந்த மருளிச்செய்யும்வகையி லிது அமர்ந்ததேயாம். (ய)

இத் திருமொழிக்கும், திருப்பல்லாண்டு தொடங்கி பிள்ளைக்கவி வகையிலே தாமருளிச்செய்த இம் முழு ப்ரபந்தத்திற்கும் பலனை யருளிச்செய்கிறார்—

11. வேயர்தங்கள் குலத்துதித்த விட்டுசித்தன்மனத்தே
கோயில்கொண்ட கோவலனைக் கொழுங்குளிர் முகில்வண்ணனை
ஆயரேற்றை யமரர்கோவை யந்தணர்தமமுதத்தினைச்
சாயைபோலப்பாடவல்லார் தாமு மணுக்கர்களே. (473)

| | |
|---|---|
| வேயர் தங்கள் | வேயர்களுடைய |
| குலத்து | திருவம்சத்திலே |
| உதித்த | தோன்றியுள்ள |
| விட்டு சித்தன் | ஸ்ரீவிஷ்ணுசித்த (பெரியாழ்வா)ருடைய |
| மனத்து ஏ | மனத்தையே |
| கோயில் | சிறந்த ஸ்தானமாக |
| கொண்ட | ஸ்வீகரித்தருளின |
| கோவலனை | கோபாலனும், |
| கொழு | கொழுத்த |
| குளிர் | குளிர்ந்த |
| முகில் வண்ணனை | மேகத்தின் வண்ணமுடைய திருமேனி யுடையனும், |
| ஆயர் | இடையர்களுக்கு |
| ஏற்றை | விருஷபமானவனும் |
| அமரர் | நித்யஸூரிகளுக்கு |
| கோவை | நாதனும், |
| அந்தணர் தம் | பிராம்மணர்களுக்கு |
| அமுதத்தினை | திவ்யாம்ருதமுமாய் இருக்கும் எம்பெருமானை |
| பாட வல்லார் தாம் உம் | இந்தப் பாசுரங்களைக் கொண்டு பாடவல்லமை பொருந்தியவர்கள் கூட |
| சாயை போல | நிழல் போலவே |
| அணுக்கர்கள் | விடாமல் அணுகியிருக்கப் பெறுவர்கள். |

இத் திருமொழியிலே ஆழ்வார் விஷ்ணுசித்த னென்ற தம் பெயர் பொருள் பெற்றிருப்பதை விரித்தருளினார். சித்தத்தில் விஷ்ணுவே எப்பொழுது மிருப்பதை, 'மடுத்தன்னை நிறைத்துக்கொண்டேன்' என வருளினார். விஷ்

ணுவானவன் சித்தத்திலேயே யிருக்கிறு னென்பதை; 'தனிக்கடலே', 'வடதடமும்' இத்யாதிகளிலே வெளியிட்டருளினுர். விஷ்ணு என்ற பதத்திற்கு எங்கும் வியாபித்தவன் எனப் பொருளாகையாலே அவனுடைய ஸர்வப்ரகாரமான வ்யாப்தியை யாராயும்போது எல்லாம் அப் பதத்திலே தோன்றுமாகையாலே அதற்கேற்ப, உன்னுடைய விக்கிரம மொன்ருெழியாம லெல்லாம் என்னுடைய நெஞ்சகம்பால் சுவர் வழி யெழுதிக்கொண்டேன் என வருளினுர். இவற்றை யெல்லாம் கடைப்பாசுரத்திலே சுருக்கக்கருதி, அவன் தம்மனத்தே கோயில் கொண்டதாலே தாம் விஷ்ணுசித்தன் எனக் குறித்தருளி, 'எவனவன் கோயில் கொண்டவன்' என்றதற்கு, கோவலனை என்று தொடங்கி அமுதத்தினை யென்றவளவாக அவனுடைய ஸர்வப்ரகாரங்களையும் ஸங்க்ரஹித்தருளினுர். முன்னே 'ஒன்றினுடொன்பதும்' என்ற வண்ணம் இங்கு அருளாமல் பொதுவிலே, பாடவல்லார் என வருளினதாலே முழு ப்ரபந்தமும் இங்கே கருதப்பெற்றதுமாம். ஆகவே, கோவலனை என்று முதலில் கோபால விஷயமாகத் தொடங்கினதைக் கருதி ப்ரயோகித்து, அறிவையென்னு மமுதவாறு தலைப்பெய்து வாய்க்கொண்டதே என இத்திருமொழியிலே யருளினதைக் கருதி 'அமுதத்தினை' என்ருர். அவனுடைய அறிவே அமுதாய் அதிக ப்ரியமாவ தென்பது அதில் விஷயமாயுள்ள அவன் அத்யர்த்த ப்ரியமாய் அமுதாயிருப்பதா லன்ருே? இதை யறிவிக்க இவனை யிங்கே அமுதென்றது.

அன்றி, இப்ரபந்தத்தில் நான்கு பத்துக்களான பிறகு மேற்பாகம் நைச்யாநுஸந்தான பூர்வமாய் ப்ரபந்தத்தின் நிகமனமானதால் இதற்கு முன் நாலாம் பத்தின் முடிவிலே துப்புடையாரையில், 'செஞ்சொல் மறைப் பொருளாகி நின்ற——எஞ்சலி லென்னுடை யின்னமுதே', 'மறையோர்களேற்று மாயர்களேற்றினை' இத்யாதியைக் கணிசித்து இங்கே அர்தணர்தம்மமுதத்தினை என்றது என்னலாம். ஆழ்வார் மனத்தில் எழுந்தருளின பிறகே கோவலன் கொழுமையும் குளிர்ச்சியும் கொண்ட முகிலைப் போன்றமையாம் புகரைப் பெற்றதென வறிவிக்க, கோயில் கொண்ட கோவலன் என்றதற்குப் பிறகு கொழுங்குளிர் இத்யாதி. ஆயரேற்றை யமரர்கோவை யென்று ஸௌசீல்யத்திற்கும் பாரத்வத்திற்கும் எல்லையைக் குறித்தருளினுர். இப்படிப்பட்ட ஸர்வேச்வரன் ஸர்வ வேதாந்தத்திற்கும் பொருளானவ னென்கிறது அந்தணர்தம் மமுதத்தினை யென்றது. அந்தமாவது வேதாந்தம். அதை அணவுமவர் அந்தணரென்று உரைக்கின்றனர். ப்ராம்மணர் என்பதும் ப்ரம்மநிஷ்டர் என்ற பொருள் பெற்றுப் பிறகு ஜாதியையே சொல்வது போல் இப் பதமும் சாதியையே சொல்வதாணுலும் இங்கு அதன் முக்கியார்த்தத்தை விடாது கொள்க.

சாயை போலப் பாட வல்லார் என்பதற்கு நிழல் குளிர்த்தி யானதாலே குளிரப்பாடவல்லார் எனப் பொருள் கொள்வது ஸ்வரஸ மாயிராததால், பாடவல்லார், சாயை போல வணுக்கரே என வன்வயம் எம்பாரருளிச் செய்ததாம். எதுகை நோக்கிப் பாசுரத்திலே சாயை போல என்றது முன்னம் ப்ரயோகிக்கப்பட்டது. எம்பெருமானை அவனது நிழல்போலே அநுகரித்து விடாமலிருப்பர்கள் என்றபடி. ஒருவனுடைய நிழலானது அவன் நின்ருல் நிற்கும், உட்கார்ந்

தால் உட்காரும், போனால் போகும், விடாமலனுகியிருக்கும். இத்தகைய அநுகாரத்தைக் கொண்டு இவர்களை அவன்சாயை போன்றவரென்றது. 'ஸநாக்ஷ தேஷஸாத்அ' என்றது ப்ரம்மஸூத்ரம். அவனுடைய பரமஸாம்யத்தைப் பெற்று அவனுடனே அங்கு மிங்கும் கூடி நடமாடிக் களித்திருப்பர்; அதற்கு முன் இங்கு மவனையனுபவித்தவ் வண்ணமே யிருப்ப ரென்றதாம். தாமும் என்ற உம்மை தம்மைப்போல் பிறருமென்பதைக் குறிக்கும்.

ப்ரபந்தரக்ஷையில் பெரியாழ்வார் திருமொழி 5, 4 சென்னியோங்கு
உரை முற்றிற்று.

இங்ஙனம் திவ்ய ப்ரபந்த மியற்றி நைச்யாநுஸந்தானம் செய்து தமக்குள்ள நிஷ்டையை ஆழ்வார் விண்ணப்பிக்க, எம்பெருமானு மிவர்ஹ்ருதயத்திலே ஆவிர்பவிக்க, அவனுக்குப் ப்ரீதிகாம்படி தம் திருமேனியைப் பாதுகாக்க நோய்களை விரட்டி யவனைப் பரிபூரணமாக ஸாக்ஷாத்கரித்து, அவன் தன்னிடங்க ளெல்லாவற்றிற்கும் மேலாக ஆழ்வார் மனத்தை யபிமானிக்க அதனையு மனுபவித்து, அவனுடைய வாத்ஸல்யாதிசயத்தி லீடுபட்டு மனம் கனிந்து மகிழ்ந்தெல்லாம் மொழிந்தருளினர். இவ்வருளிச் செயலைப் பாட வல்லாரும் இவரைப்போலவே எம்பெருமானை எல்லாப் படிகளிலு மனுபவித்து எங்கு மென்று மின்புறுவ ரென்க.

ஸாக்ஷி வமஸ தகஸாவக: ஸெஷிவாத்
ஸாத்தியவரிவர்ஹ ஸ்ரீபரேந்த்ராதிஹாவ:।
பபாவசவாத்ம்ஜவா ஹொதயாசவாத்
ஸாந்த்தஸி வா நாயொ பந்தஸிஹந்நாய:॥

ஸ்ரீமத்ருஷணாந் வதாஸ்ஜம்பு:
ஸ்ரீமத்ருஷணாந் தயா தவொய:।
ஸ்ரீவிஷ்ணுசித்தகவி தஜ ஜவாக்ஷரகூதாம்
ஸ்ரீவீராரவவஸாயீ: ஷுவணொ வத்தா நீக:॥

**ப்ரபந்தரக்ஷையில் பெரியாழ்வார் திருமொழி**
**உரை முற்றிற்று.**

பெரியாழ்வார்திருவடிகளே சரணம்.

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன்திருவடிகளே சரணம்.

ஸ்ரீமதே ரங்கராமாநுஜ மஹாதேசிகாய நம:

**சுபமஸ்து.**

இத் திவ்யப்ரபந்தவிஷயமாக ஸ்ரீ தேசிகன்
அருளிச்செய்த பாசுரமாவது—(பிரபந்தசாரம். கூ)

பேரணிந்த வில்லிபுத்தூரானிதன்னாற்
பெருஞ்சோதிதனிற்றோன்றும் பெருமானே முன்
சீரணிந்தபாண்டியன்றன் னெஞ்சுதன்னிற்
றியக்கறமால் பரத்துவத்தைத் திறமாச் செப்பி
வாரணமேன் மதுரைவலம் வரவேவானின்
மால்கருட வாகனனுய்த் தோன்ற வாழ்த்தும்
வரணிபல்லாண்டுமுதற் பாட்டு நாநூற்
றெழுபத்தோன்றிரண்டுமெனக்குதவு நீயே.

என்கிறதாம். இங்கு இரண்டும் எழுபத்தோன்றுமாய் பல்லாண்டு முதலுள்ள பாட்டு என அன்வயம். 'பல்லாண்டு', 'அடியோமோடும்' என்ற இரண்டும் எப்பொழுதும் சேர்த்தே அனுஸந்திக்கப்படுமென்றதை யறிவிக்க, எழுபத்திமூன்று என்னுமே, இரண்டெனப் பிரித்தருளினதாம்.

ஸ்ரீதேசிகன் திருவடிகளே சரணம்.

சுபமஸ்து.

ஸ்ரீ:

(திருப்பல்லாண்டுள்பட)

# பெரியாழ்வார் திருமொழி யகராதி.


| | பக்கம் | | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|---|---|
| அக்கரை | 527 | ஆனிரை | 210 | என்குற்றமே | 178 |
| அக்காக்காய் | 209 | இடவணரை | 317 | என்சிறு | 92 |
| அங்கமலக்கண் | 254 | இந்திரனோடு | 220 | என்வில் | 356 |
| அங்கமலப்போது | 167 | இமையவர் | 456 | என்றும் | 278 |
| அங்கம்விட்டவை | 436 | இருக்கொடு | 227 | என்னாதன் | 355 |
| அங்கொடு | 444 | இருங்கை | 66 | என்னிது | 139 |
| அஞ்சன | 270 | இருட்டில் | 153 | ஏடுநிலத்தில் | 31 |
| அஞ்சுடர் | 284 | இருமலைபோல் | 167 | ஏதங்களாயின | 514 |
| அடியோமோடும் | 27 | இன்பமதனை | 226 | ஏவிற்று | 402 |
| அடைந்திட்டு | 124 | உச்சியில் | 444 | ஏழைபேதை | 333 |
| அட்டுக்குவி | 302 | உடுத்துக் | 40 | ஐயபுழுதி | 330 |
| அண்டக்குல | 34 | உடையார் | 83 | ஒருகாலில் | 129 |
| அண்டத்தமரர்கள் | 218 | உந்தியெழுந்த | 196 | ஒருமகள் | 347 |
| அண்டத்தமர்பெரு | 350 | உய்யவுலகு | 100 | ஒருவாரணம் | 401 |
| அதிருங்கடல் | 67 | உரகமெல் | 421 | ஒற்றை | 491 |
| அதிர்முகம் | 455 | உரம்பற்றி | 484 | ஒன்றுமறி | 345 |
| அப்பங்கலந்த | 185 | உருப்பிணிநங்கைதன்னை | 408 | ஒன்றேயுரை | 202 |
| அம்மைத்தட | 304 | | | ஓடவோட | 168 |
| அரவணையாய் | 161 | உருப்பிணிநங்கையை | 358 | ஓடுவார் | 48 |
| அரவத்தமளி | 518 | | | ஓதக்கடலில் | 87 |
| அரவில் | 313 | உழந்தாள் | 63 | கச்சொடு | 89 |
| அலம்பா | 397 | உழுவதோர் | 456 | கஞ்சனும் | 408 |
| அல்லியம்பூ | 372 | உறகலுறகல் | 516 | கஞ்சன்கறு | 225 |
| அல்வழக்கு | 42 | உறியைமுற்றத்து | 51 | கஞ்சன்புணர் | 184 |
| அவ்வவ்விடம் | 274 | உற்ற வுறுபிணி | 512 | கஞ்சன்தன் | 164 |
| அழகிய பைம் | 79 | உனக்குப்பணி | 523 | கடல்கடைந்து | 534 |
| அழகியவாயில் | 195 | உன்னுடைய | 537 | கடியார் | 282 |
| அளந்திட்ட | 123 | உன்னையும் | 111 | கடுவாய் | 306 |
| அனந்தன் | 539 | ஊத்தைக்குழி | 449 | கண்டகடல் | 140 |
| அன்று வயிற்றில் | 529 | எட்டுதிசையும் | 406 | கண்டார் | 198 |
| அன்னமும் | 114 | எண்ணெய் | 186 | கண்ணா | 502 |
| ஆசைவாய் | 431 | எத்தனை | 528 | கண்ணில் | 223 |
| ஆட்கொள்ள | 124 | எந்தம்பிரான் | 85 | கண்ணை | 180 |
| ஆமையாய் | 582 | எந்தை | 36 | கதிராயிரம் | 382 |
| ஆமையின் | 422 | எந்தொண்டை | 74 | கத்தக்கதித்து | 144 |
| ஆயர்குலத் | 132 | எந்நாள் | 41 | கரியமுகில் | 395 |
| ஆயிரந்தோள் | 415 | எம்மனா | 533 | கருங்கண் | 327 |
| ஆய்ச்சியர் | 250 | எரிசிதறும் | 413 | கரும்பார் | 263 |
| ஆய்ச்சியன்று | 149 | எருதுகளோடு | 215 | கருவுடை | 211 |
| ஆலத்திலை | 204 | எருத்துக்கொடி | 526 | கருளுடைய | 480 |
| ஆற்றிலிருந்து | 244 | எல்லையில் | 490 | கலக்கிய | 374 |
| ஆனாயர் கூடி | 401 | எழிலார் | 87 | கழல்மன்னர் | 136 |

| | பக்கம் |
|---|---|
| கள்ளச்சகடு | 225 |
| கறந்தநல் | 186 |
| கறுத்திட்டு | 201 |
| கற்பகக்காவு | 148 |
| கற்றினம் | 193 |
| கனங்குழை | 413 |
| கன்றினை | 187 |
| கன்றுகளில்லம் | 222 |
| கன்றுகளோட | 183 |
| கன்னலிலட்டுவ | 240 |
| கன்னற்குடம் | 127 |
| கன்னிநன் | 280 |
| காசின்வாய் | 428 |
| காசுங்கறை | 442 |
| காடுகளூடு | 281 |
| காதம்பலவும் | 524 |
| காமர்தாதை | 505 |
| காயமலர் | 108 |
| காயுநீர் | 153 |
| காரார் கடலை | 367 |
| காரார்மேனி | 269 |
| காரிகையார் | 179 |
| கார்மலிமேனி | 188 |
| காலுமெழா | 525 |
| காளியன் | 364 |
| காறைபூணும் | 339 |
| கானார்நறும் | 88 |
| கிடக்கில் | 56 |
| கிண்கிணி | 144 |
| கிழக்கில் | 194 |
| கீழுலகில் | 468 |
| குடங்கள் | 216 |
| குடியில் | 351 |
| குடையும் | 277 |
| குண்டலம் | 245 |
| குமரிமணம் | 346 |
| கும்மாய | 259 |
| குரக்கின | 122 |
| குருந்தம் | 425 |
| குழலிருண்டு | 328 |
| குறட்பிரம | 484 |
| குறுகாத | 404 |
| குற்றமின்றி | 419 |
| குன்றாடு | 471 |
| குன்றெடுத்தா னிரை காத்த பிரான் | 294 |
| குன்றெடுத்தா னிரை காத்தவாயா | 494 |
| கூடிக்கூடி | 438 |
| கூன்தொழுத்தை | 467 |
| கேசவனை | 239 |
| கேட்டறியாதன | 286 |
| கைத்தலத்துள்ள | 340 |
| கைந்நாக | 486 |
| கையுங்காலும் | 52 |
| கொங்கும் | 200 |
| கொங்கைச்சிறு | 513 |
| கொங்கைவன் | 157 |
| கொடியேறு | 312 |
| கொண்டதாள் | 51 |
| கொண்டல் | 234 |
| கொம்பினார் | 428 |
| கொலையானை | 386 |
| கொழுப்புடைய | 469 |
| கோட்டுமண் | 414 |
| கோளரியின் | 101 |
| சக்கரக்கையன் | 94 |
| சங்கின்வலம் | 86 |
| சத்திரமேந்தி | 146 |
| சலமாமுகில் | 310 |
| சலம்பொதி | 454 |
| சழக்குநாக்கொடு | 498 |
| சாமிடத்து | 489 |
| சாலப்பன்னிரை | 297 |
| சித்திரகுத்தன் | 507 |
| சித்திரகூட | 376 |
| சிந்தப்புடைத்து | 405 |
| சிந்துரப்பொடி | 298 |
| சிந்துரமிலங்க | 296 |
| சிறியனென்று | 97 |
| சிறுவிரல்கள் | 325 |
| சீதக்கடல் | 60 |
| சீதநீர் | 430 |
| சீமாலிகன் | 217 |
| சீயினால் | 432 |
| சீரணிமால் | 450 |
| சீரொன்று | 203 |
| சீலைக்குதம்பை | 279 |
| சுரிகையும் | 292 |
| சுருப்பார் | 80 |
| சுற்றிநின்று | 295 |
| சுற்றுமொளி | 93 |
| செக்கரிடை | 126 |
| செங்கமலக் | 113 |
| செங்கமலப்பூ | 134 |
| செஞ்சொல் | 493 |
| செண்பக | 219 |
| செத்துப் | 440 |
| செந்நெலரிசி | 237 |
| செந்நெலார் | 57 |
| செப்பாடுடைய | 308 |
| செப்பிள | 155 |
| செப்போது | 222 |
| செம்பெரும் | 323 |
| செருவாளும் | 486 |
| சென்றுலகம் | 529 |
| சென்னி | 531 |
| சேப்பூண்ட | 154 |
| சொல்லில் | 241 |
| சோத்தம் | 174 |
| சோர்வினால் | 433 |
| ஞாலமுற்றும் | 342 |
| தக்கார் | 399 |
| தங்கையை | 452 |
| தடம்படு | 248 |
| தடவரைவாய் | 540 |
| தண்டொடு | 96 |
| தண்ணனவு | 492 |
| தத்துக் | 156 |
| தந்தம் | 163 |
| தம்மாமன் | 348 |
| தலைப்பெய்து | 457 |
| தழைகளும் | 290 |
| தள்ளி | 250 |
| தன்முகத்து | 91 |
| தன்னடியார் | 476 |
| தன்னேராயிரம் | 257 |
| தாய்மார் | 266 |
| தாரித்து | 121 |
| தார்க்கிளம் | 325 |
| தாழியில் | 98 |
| தாழைதண் | 252 |
| திக்குநிறை | 378 |
| திண்ணக் | 191 |
| திண்ணார் | 287 |
| திரண்டெழு | 326 |
| திருவுடைப்பிள்ளை | 233 |
| திரைநீர் | 131 |

| | பக்கம் |
|---|---|
| திரைபொரு | 458 |
| தீயபுந்திக் | 165 |
| தீயிற்பொலி | 37 |
| துக்கச்சுழலையை | 519 |
| துப்புடையாயர் | 109 |
| துப்புடையாரை | 488 |
| துன்னியபேர் | 141 |
| தூமிலாமுற்ற | 119 |
| தெருவின்கண் | 213 |
| தென்னவன் | 437 |
| தென்னிலங்கை | 208 |
| தேவுடைய | 485 |
| தேனுகனாவி | 249 |
| தேனுகன் | 320 |
| தொடர் | 125 |
| தொத்தார் | 267 |
| தோட்டம் | 501 |
| தோயம் | 387 |
| நச்சுவார் | 142 |
| நந்தன் | 368 |
| நம்பனே | 594 |
| நம்பிம்பி | 448 |
| நம்முடை | 103 |
| நல்லதோர் | 344 |
| நளிர்ந்த | 426 |
| நன்மணி | 272 |
| நன்மை | 499 |
| நாடுநகரும் | 447 |
| நாடூழ நம் | 334 |
| நாந்தகமேந்திய | 145 |
| நாந்தகஞ்சங்கு | 385 |
| நாவகாரியம் | 418 |
| நாவலம் | 315 |
| நாழிகை | 392 |
| நாள்களோர் | 69 |
| நாறிய | 135 |
| நானேதும் | 494 |
| நீரேறு | 388 |
| நெடுமையால் | 500 |
| நெய்க்குடத்தை | 506 |
| நெய்யிடை | 38 |
| நெறிந்த | 371 |
| நோக்கி | 74 |
| பக்கங்கரும் | 130 |
| பஞ்சவர் | 362 |
| ,, | 309 |
| படங்கள் | 309 |
| படர்பங்கய | 129 |
| பட்டங்கட்டி | 336 |
| பணைத்தோள் | 62 |
| பதகமுதலை | 158 |
| பதினாறும் | 481 |
| பத்துநாளும் | 54 |
| பரந்திட்டு | 121 |
| பருப்பதத்து | 537 |
| பருவம் | 76 |
| பருவரங்கள் | 472 |
| பலபலநாழம் | 410 |
| பல்லாண்டு | 25 |
| பல்லாண்டென்று | 44 |
| பல்லாயிர | 224 |
| பள்ளத்தில் | 192 |
| பறவையேறு | 532 |
| பற்றார் | 283 |
| பற்றுமஞ்சள் | 271 |
| பனிக்கடலில் | 540 |
| பன்மணி | 118 |
| பன்றியும் | 285 |
| பன்னிரு | 276 |
| பாண்டவர் | 411 |
| பாலகனென்று | 96 |
| பாலைக்கறந்து | 236 |
| பாலொடுநெய் | 112 |
| பிண்டத்திரளை | 195 |
| பிறங்கிய | 64 |
| பிறப்பகத்தே | 465 |
| பின்னைமணாளனை | 189 |
| புட்டியில் | 120 |
| புவியுள் | 323 |
| புள்ளினை | 213 |
| புற்றரவு | 288 |
| பூணித்தொழுவு | 188 |
| பூதமைந்து | 424 |
| பெண்டிர் | 166 |
| பெருப்பெருத்த | 341 |
| பெருமாவுரலில் | 69 |
| பெருவரங்கள் | 467 |
| பேசவும் | 337 |
| பேணிச்சீர் | 49 |
| பேயின்முலை | 190 |
| பேய்ச்சிமுலை | 184 |
| பையரவின் | 492 |
| பொங்குவெண் | 332 |
| பொங்கொலி | 462 |
| பொத்தவுரலை | 147 |
| பொல்லாவடிவு | 390 |
| பொற்றிகழ் | 206 |
| பொன்போல் | 258 |
| பொன்னரை | 117 |
| பொன்னியல் | 133 |
| பொன்னைக் | 535 |
| போதமர் | 228 |
| போதர்கண்டாய் | 237 |
| போய்ப்பாடு | 170 |
| போரொக்க | 138 |
| மங்கியவல் | 510 |
| மச்சொடு | 212 |
| மடிவழி | 435 |
| மண்ணில் | 448 |
| மண்ணும் மலையும் கடலும் | 77 |
| மண்ணும் | 394 |
| மத்தக்களிற்று | 65 |
| மத்தளவும் | 106 |
| மரவடியை | 473 |
| மருட்டார் | 264 |
| மருதப்பொழில் | 401 |
| மருமகன்தன் | 466 |
| மலமுடை | 446 |
| மலைபுரை | 152 |
| மன்னர் | 403 |
| மன்னன்றன் | 197 |
| மன்னுநரகன் | 409 |
| மாணிக்கக்கி | 116 |
| மாணிக்கங்கட்டி | 82 |
| மாணிக்குறள் | 511 |
| மாதவத்தோன் | 464 |
| மாயச்சகட | 366 |
| மாயவனை | 495 |
| மாயவன் | 353 |
| மாலிருஞ் | 415 |
| மாவலிதன் | 409 |
| மாவலிவேள்வி | 252 |
| மாற்றுத்தாய் | 351 |
| மானமரும் | 375 |
| மானிடசாதி | 445 |
| மிக்கபெரும் | 139 |
| மிடறுமெழு | 275 |

| | பக்கம் | | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|---|---|
| மின்னனைய | 165 | வண்டமர் | 73 | வார்காது | 181 |
| மின்னிடை | 207 | வண்டுகளித்து | 242 | வாவென்று | 181 |
| மின்னுக்கொடி | 127 | வண்ணக்கரு | 273 | வாழாட்பட்டு | 30 |
| மின்னொத்த | 377 | வண்ணநன் | 420 | வாளாவாகில் | 266 |
| முடியொன்றி | 363 | வண்ணப் | 171 | வானத்தில் | 307 |
| முத்தும்மணி | 61 | வண்ணமாட | 47 | வானத்தெழுந்த | 253 |
| முப்போதும் | 261 | வண்ணமால் | 504 | வானவர்தாம் | 104 |
| முலையேதும் | 176 | வந்தமதலை | 67 | வானிளவரசு | 318 |
| முற்றிலும் | 79 | வயிற்றில் | 508 | விண்கொள் | 75 |
| முன்னரசிங்கம் | 322 | வருகவருக | 231 | விண்ணின் | 300 |
| முன்னலோர் | 128 | வலங்காதின் | 299 | விண்ணெல்லாம் | 175 |
| மூத்தவை | 148 | வல்லாளன் | 398 | விற்பிடித்து | 458 |
| மூன்றெழுத்து | 460 | வல்லான் | 160 | வெண்கலப்பத்திரம் | 146 |
| மெச்சூது | 151 | வல்லினுண் | 291 | வெண்புழுதி | 130 |
| மெய்திமிரும் | 89 | வல்லியெற்று | 469 | வெண்ணிறத் | 352 |
| மெய்யென்று | 178 | வழுவொன்றும் | 303 | வெண்ணெயளைந்த | 182 |
| மேலெழுந்தது | 434 | வளைத்து | 521 | வெண்ணெய் விழுங்கி | 229 |
| மைத்தகுமா | 377 | வள்ளி | 275 | | |
| மைத்தடம் | 99 | வன்பேய் | 311 | வெள்ளைவிளி | 391 |
| ,, | 72 | வாக்குத்தூய்மை | 496 | வெள்ளை வெள்ள | 503 |
| மைத்துனன் | 483 | வாயிற்பல்லும் | 331 | வேடர்மற | 349 |
| மையார்கண் | 260 | வாயுள் | 53 | வேயர்தங்கள் | 541 |
| வஞ்சனையால் | 90 | வாயொரு | 439 | வேலிக்கோல் | 199 |
| வடதிசை | 459 | வாரணிந்தகொ | 169 | வைத்தநெய்யும் | 162 |
| வட்டுநடுவே | 143 | வாரணிந்தமுலை | 374 | வையமெல்லாம் | 172 |
| வணநன்று | 173 | வாராரும் | 379 | | |


பெரியாழ்வார் திருமொழி அகராதி முற்றிற்று.